# PHARMACOPŒIA OF INDIA

BY

EDWARD JOHN WARING M. D.

TRANSLATED

BY

DANIEL W. CHAPMAN

MEDICAL PRACTITIONER,

REVISED BY THE LATE

SAMUEL F. GREEN, M. D.

---

JAFFNA:

Printed for the American Ceylon Mission.

Strong and Asbury Printers.

1888.

Digitized By Roja Muthiah Research Library

# முகவுரை.

இந்நூலின் கையெழுத்துப்பிரதியொன்று, சில வருஷங்களுக்கு முன்னமே அமரிக தேசத்திற் போயிருந்த கிறீன் வைத்தியரிடம் அனுப்பப்பட்டது. அவர் அங்கே சீவனோடிருந்த காலத்தில் அதைத் தாமே வாசித்துத்திருத்தி அப் பிரதியைத் தம்மிடம் வைத்துக்கொண்டு தமது திருத்தங்களை வேறே கடுதாசியில் எழுதி இங்கே வைத்திருந்த ஆதாரப்பிரதியின் பக்கங்கள் வரிகளையுங் குறித்துக் காட்டிக் கொஞ்சங் கொஞ்சமாக அனுப்பி வைத்தார். இவைகள் பன்னீராயிரம் மைல் தாண்டிச் சேமமாக இங்கே வந்து சேர்ந்தவுடன் ஆதாரப் பிரதியிற் சேர்க்கப்பட்டன.

கிறீன் வைத்தியராற் பிரசுரஞ்செய்யப்பட்ட வைத்திய நூல்களுக்கு இது ஈருந்தமாய்த் தோற்றுகின்றது. கடைசியில் தோற்றனாலும் மிக முக்கியமான வாகடங்களுள் இதுவுமொன்று. இதின் தோற்றத்தை மிஷன்கீழ்த் தமிழிற் கற்ற வைத்தியரும் நாட்டு வைத்தியர் பலரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

காலத்துக்குக் காலம் அனுப்பப்பட்ட திருத்தக் கடதாசிகள் இவ்வளவு தூரமான வழியிலே மோசம்போகாமல் காத்துத்தந்த கர்த்தராகிய இயேசு இப் புத்தகம் தமிழ்நாட்டாருக்கு நன்மையாய் முடியும்படி அதை ஆசீர்வதிப்பாராக.

த. வி. ச.

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

# PREFACE.

A copy of the manuscript of this Volume was a few years ago sent to America, where it was revised by the late Dr. Green, who devoted his life mainly to the object of popularizing medical science in Tamildom. His corrections and comments, sent from time to time as the work advanced, have been carefully considered, and the manuscript corrected accordingly. Thus the whole text has his approval.

This Volume completes the series of medical works which Dr. Green undertook to prepare. Although last in publication it is not the least in importance. The contents of this volume form one of the most important branches of medical science. Its appearance has been for some years anxiously looked for by the vernacular medical graduates and native practitioners, but various causes have delayed its publication until now.

May the Lord Jesus, who has prospered the undertaking thus far, make this volume a blessing to the Tamil people.

*Jaffna Ceylon 1888.*

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

# தாவர பதார்த்தசாரம்.

# VEGETABLE MATERIA MEDICA.

## 1 வகுப்பு துவிகதிலீதங்கள். Dicotyledons.

### ரனன்குலாசியங்கள்.

### RANUNCULACEAE.

#### அகனீதம். ACONITUM NAPELLUS.

வாசம். Habitat. இந்தப்பூண்டு நடுயுரோப்பம் ஆசியத்திலும் வட இந்துவிலும் உண்டாகின்றது.

வாகடபகுதிகள். Officinal parts. கவது. காய்ந்தகிழங்கு. இதை மாரிகாலத்துலாவது இலை உதிர்காலத்தில் தளிர் அரும்பமுன்னாவது கிண்டியெடுக்கவேண்டும் (1). இதின் லட்சணங்கள்: நீளம் பெரும்பாலும் இரண்டுமூன்று இஞ்சு, அடிக்கிழங்கின் மொத்தம் நடுவிரலுக்கு மிஞ்சுவதரிது, வால்காலானது, நிறம் கருங்கபிலம், உள் வெண்மை. ஒரு சிறுத்துண்டை மெல்ல, நெடுநேரம் உறைப்பும் விறைப்பும் உண்டாகும். உவது பச்சிலைகளும் அரும்புகளும். இவை பிறித்தனியிற் செய்கைபண்ணப்படும் பூண்டிலிருந்து பூக்கள் மூன்றிலொரு பங்கு மலர்ந்திருக்கும் பருவத்தில் சேர்க்கப்படும். இலை அழுத்தம், ஐவிரலிபோலப் பிரிந்திருக்கும். சப்ப உறைக்கும். பூக்கள் ஏராளமும் ஒழுங்கீனமும் கரு நீலநிறமுமாய் அடர்ந்த குலைகளாகவிருக்கும். சத்து, அகனிதசம்[1] என்னும் அல்கலைவமே[2].

தன்மை. Properties. வீறான சௌதீவம்[3], அனுடைன்[4], தாபக்கினி[5]. பெருந்தேய[6]த்திற் கொடியநஞ்சாகும்.

உபயோகம். Uses. பலவகையான நறல்சி[7], ஏர்ப்பு. தீவிர[8] காலிக[9] வாதம், குவாதம்[10], எரிசிப்பிலசு[11] என்னு நோய்களுக்கும். துடிப்புக் சதித்த இதய வியாதிகளுக்கும் இது உவப்பான மருந்து. என்றாலும் இதின் செயலை விழிப்பாய்ப் பார்க்கவேணும்.

கிழங்கின் ரசிதங்கள். Preparations of the root. அகனீதரஞ்சம். Tincture of Aconite. கொள். அகனீதக்கிழங்கு, பருக்கன் பொடியாக,

---

1 Aconitia. 2 Alkaloid. 3 Sedative, அவசாதனி. 4 Anodyne, அனுசக்கினி. 5 Antiphlogistic. 6 Dose, பிரமாணம். 7 Neuralgia. 8 Acute. 9 Chronic. 10 Gout. 11 Erysipelas.

(1) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

இரண்டரை அஞ்சு[1]; திட்டசீது[2] அரைநாழியாகிய இருபது அஞ்சு. அடைத்த சீசாவில் பதினைந்து அஞ்சுசீதில் அகனீதக் கிழங்கை இரண்டுநாளைக்கு ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். பிறகு ஓர்சியந்தனி[3]யில் வார்த்து வடியவிடவும். நீர் வடிந்தபின் மிச்சமாயிருக்கிற ஐந்து அஞ்சு சீதையும் விட்டு வடிக்கவும். சக்கையைப் பிழிந்து வடித்து, இரண்டு நீர்களையும் கலந்து அரைநாழியாகப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

இந்த ரஞ்சம்[4] தபுளின் வாகடத்திற் சொல்லிய அகனீசரஞ்சத்தில் நாலிலொரு பங்கு பெலனுள்ளது. லண்டன் வாகடத்திற் சொல்லிய அகனீதரஞ்சத்தில் மூன்றிலொருபங்கு பெலனுள்ளது. இதில் ஒரு அன்சு காய்ந்த கிழங்கில் 54½ கிறேனுக்குச் சரி.

**தேயம். Dose.** ஐந்து முதற் பதினைந்து துளி.

**அகனீத லினிமேன். Liniment of Aconite.** கொள். அகனீதக் கிழங்கு, பருக்கன் பொடியாக இருபது அன்சு; கர்ப்பூரம், ஒரு அன்சு; திட்டசீது, போதியது. அகனீதப் பொடியைக் கொஞ்சச் சீதால் நனைத்து அடைத்த பாத்திரத்தில் மூன்றுநாளூறவிட்டு, பிறகு சியந்தனியில் ஏற்றி இன்னுஞ் சீதை விட்டு அரைநாழிக்கு வருந்தனையும் கர்ப்பூரத்தை அடக்கிய ஏனத்துக்குள்ளே மெல்ல மெல்ல வடிக்கவும்.

இந்த ரசிதம் வெளிப்பிரயோகத்திற்கு மாத்திரமேயுதவும். வாதநோய், நுறல்சி[5]நோய்களுக்கு மெத்த உவந்தது. வழுந்துண்ட தோலிலாவது சளிச்சவ்விலாவது இதை இடப்படாது. இதில் ஒரு அன்சு, காய்ந்த கிழங்கில் ஒரு அன்சுக்குச் சரி.

**அகனீதசம். Aconitia.** இது அகனீதக் கிழங்கிலிருந்தெடுபட்ட ஓர் அல்கலைவம்[6]. வெண்மையும் பெரும்பாலும் மாவாகிய அமாவ[7]முமான உரப்பதார்த்தம்; 150 பங்கு தண்ணீரிலும் 50 பங்கு வென்னீரிலுங் கரையக்கூடியது; அலக்கா[8]விலும் ஈத[9]ரிலும் அதிகமாய்க் கரையும். சிவத்த லிற்மசுக்கு[10] வீறுன அல்கலைத்தோற்றமாய்க் காட்டும். அமிலங்க[11]ளைத் தடஸ்திக்[12]கும். அவைகளை விட்டுக் கார அல்கலைகளாற் பிரிந்து அடையும். ஆயினும் அமோனகாபனசு[13]க்காவது சோடம்[14] பதாசி[15]களின் துவிகாபனசு[16]களுக்காவது பிரிந்தடையாது. சூட்டுக்கு உருகிப் புகைநிறச் சுவாலைகொண்டு எரியும். தாராளமாய்க் காற்றுப்பட்டெரிந்தால் சேடம்காணாது. தோலில் இதை உரைஞ்ச எரித்து பின்பு நெடுநேரமாய் விறைக்கும். இது மெத்த வீறுன நஞ்சு. உள்ளுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

**அகனீதசவன்கேன். Aconitia Ointment.** கொள். அகனீதசம், எட்டுக் கிறேன்[17]; ஒலீவதேலம்[18], அரைத்திறாம்[19]; பூதகிடியம்[20] ஒரு அன்சு. அகனீதசத்தை தேலத்தோடு அரைத்துக் கிடியத்தையும் கூட்டி நன்றாய்ச்சேர்க்கவும்.

நுறல்சி நோய்களுக்கு இது உவந்த பூச்சு.

**இலைகள் பூக்குலைகளின் ரசிதம். Preparation of the leaves and tops.**

**அகனீத வெசிறத்து. Extract of Aconite.** கொள். பச்சையான அகனீத இலைகள் பூக்குலைகள், நூற்றுப்பன்னிரண்டு இறுத்தல். இவைகளைக் கல்லுரலில் இட்டுத் துவைத்துச் சாற்றைப் பிழிந்து 130 பாகை சூடுவரையில் மெல்ல மெல்லக் காய்ச்சி, காரிக்கம்புடவையில் வடித்துப் பச்சை

---

1 Ounce. 2 Rectified spirit. 3 Percolator. 4 Tincture. 5 Neuralgia. 6 Alkaloid. 7 Amorphous. 8 Alcohol. 9 Ether. 10 Litmus. 11 Acid. 12 Neutralise. 13 Carbonate of Ammonia. 14 Soda. 15 Potash. 16 Bicarbonate. 17 Grain. 18 Olive Oil. 19 Drachm. 20 Prepared Lard.

Digitized By Roja Muthiah Research Library

யான நிறப்பதார்த்தத்தை வேறுக்கவும். அல்புமினை உறைவிப்பதற்கு வடிந் தநீரை 200 பாகை சூட்டிற் காய்ச்சித் திரும்பவும் வடிக்கவும். இப்படி வடித்த நீரை மெல்லிய பாணியாக நீர்மத்திகத்தில் வறட்டி முன்பிரித்துவை த்திருந்த பச்சைநிறப் பதார்த்தத்தையும் அதோடு சேர்த்து முழுவதையும் ஓயாமற் கலக்கி எசிறுத்து குளிகையாகத் தகுந்தபதமாய்வருந்தனையும் 140 பாகைக்கு மிஞ்சாத சூட்டில் வறட்டிக்கொள்ளவும்.

தேயம். Dose. ஒரு கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்கும். இந்த ரசிதத்தின் பெலன் எப்போதுஞ் சந்தேகம். உஷ்டண தேசங்களில் இது சுறுக்குப் பழுதாகும்.

## *வீறகனீதம். நாவி, ACONITUM FEROX.

வாசம். Habitat. இது கேவால்[2] தொடங்கிச் சிக்கிம்[3]வரைக்குமுள்ள மத்திம உஷ்டண கீழ் அல்பின் இமயமலைத் தொடரில் 10,000 அடி முதல் 14,000 அடி உயரத்தில் உண்டாகும்.

வாகடபகுதி. Officinal part. இமயத்திலுண்டாகும் இந்த இனத்தின தும் அகனீதத்தின் மற்றும் இனங்களினதும் காய்ந்த கிழங்கு வட இந்து வின் கடைகளில் நாவி (2) என்று சொல்லி வழங்கப்படும். இது இரண்டு மூன்று இஞ்சுநீளமும் அடியில் அரைஇஞ்சு ஒருஇஞ்சு பருமையுமுள்ளது, சற்றே சங்குவடிவானது, திரைந்த கருந்தோலால் மூடுண்டிருக்கும். முறி மினுக்கமும் ராளமு[4]மாயிருக்கும், சிலவேளை மெழுகுபோன்றிருக்கும். நிறத்தில் வெளுப்பு முதல் கருங் கபிலம் வரைக்கும் வித்தியாசப்படும். சில வகை,வெண்மையும் சுபஞ்சுபோலவுமிருக்கும். உரப்பானவைகளைப் பார் க்க(3)இவை அதி வீறுள்ளவைகளாம். மணமில்லை; சுவை தொடக்கத்திற் சற்றே கசப்பு, பிறகு நாக்கிலுந் தொண்டையிலும் ஒருவகையான விறை ப்பு நிற்கும். இதின் சத்து அகனீதசம்.

தன்மைகளும் உபயோகங்களும். Properties and Uses. யுரோபத் தின் அகனீதத்தைப்போலவே(4).

ரசிதங்கள். Preparations. அகனீதசம் எடுப்பதற்கும் அகனீதலினி மென் செய்வதற்கும் இந்தக் கிழங்கை வழங்குவது நயம். யுரோபத்தின் இனத்தைப்பார்க்க இதில் அகனீதசத்தின் வீதம் மெத்த அதிகம். இது அதி வீறுனதாகையால் உள்ளே கொடுக்கும் அகனீதரஞ்சத்தை இதிலே செய்யப் படாது.

## *அதிவிடயம். ACONITUM HETEROPHYLLUM.

இது அகனீதத்தின் ஓர்வகை.

வாசம். Habitat. இது இமயமலையில் மத்திம உஷ்டணமான மேற்குப் பகுதியில் 8000 அடி முதல் 13000 அடி உயரத்தில், இந்துநதி தொடக்கம் குமையன்வரைக்கும் இருக்கும்.

வாகடபகுதி. Officinal part. காய்ந்தகிழங்கு. இது ஒன்று ஒன்றரை இஞ்சுநீளமும் காலேஅரைக்கால்முதல் அரைஇஞ்சு கனமுமுள்ளது. உண்

---

1 Albumen. 2 Gurhwal. 3 Sikkim. 4 Resinous.

(2) (3) (4) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

டையுங் கூருமானது. நெடும்பாடான சுருக்குகளேயும் வேர்த்தழும்புகளே யுமுடைய மெல்லிய நரைநிறமான தோலால் மூடப்பட்டது. குறுக்கே வெட்ட உள்ளே நல்ல வெள்ளேயும் நொருக்கலுமான மாப்பதார்த்தம் அடங்கியிருக்கிறதாகத் தெரியும். கிழங்குக்கூடே நெடும்பாட்டுக்குத் தும்புகள் ஓடியிருக்கும், அவற்றிற்கு இறுதியாகிய ஐந்து ஆறு மறுக்கள் நிரையுள் நிரையாக அதின் மையத்தைச் சுற்றியிருக்கும். இது மணமற்றது, உறைப்பில்லாதது, கைப்பான சுவையையுடையது, அகனீதசம் இதில் இல்லை; இதற்குரிய கைப்பினல் அதிவிடயம் என்று கடைகளில்விற்கும் மற்றுங் கிழங்குகளிலிருந்து இதை லகுவிற் பகுத்தறியலாம்.

தன்மைகள். Properties. இது தொணிகம்[1] அந்திபிருடி[2]. இதிலே அகனீதசமாவது வேறு நஞ்சுச்சத்தாவது இல்லை. இதை விக்கினமின்றி உள்ளுக்குக் கொடுக்கலாம்.

உபயோகம். Uses. பெலவீனப்படுத்தும் நோய்களிலிருந்து சுகப்படுகையிலும் முறைச்சுரங்களிலும் தடவை தடவையாய் வரும் மற்றுஞ்சுரங்களிலுங் கொடுக்க இது ஆமான மருந்து (5).

தேயம். Dose. தொணிகமாக ஐந்துமுதற் பத்துக்கிறேன் வரைக்கு நாள் மூன்றுமுறையுண்ணலாம். அந்திபிருடியாக வேர்ப்பொடியில் இருபதுமுதல் முப்பது கிறேன்வரைக்கு நாள் மூன்றுநாலு தரம் காய்ச்சல் இல்லாத நேரத்திலும் காய்ச்சல் உள்ள நேரத்திலும் கொடுக்கலாம். இதுவே உத்தமமான முறை.

## *கப்தீஸ்பூடு. COPTIS TEETA.

வாசம். Habitat. இது அசம்தேசத்துக்குக்கிழக்கேயுள்ள மிஷ்மீ மலைகளிலுண்டாகிறது.

வாகடபகுதி. Officinal part. இதின் காய்ந்த வேர் இரண்டொரு அன்சு கொள்ளத்தக்க சிறுத்த பிரப்பம்பெட்டிகளில் அசம்தேசத்திலிருந்து வங்காளத்துக்கு ஏற்றப்படும். இது தென்னீர்க்களவு பருமையும் இரண்டொரு இஞ்சு நீளமுமுள்ளது. ஒரு தலைப்பிற் சுருங்கின வேர்த்தண்டுகளாகவிருக்கும். வெளிப்பக்கம் பெரும்பாலும் ஒப்பமற்றதும் வளையமான புருவங்களுள்ளதுமாயிருக்கும். அடிகளிற் குறுத்த முள்முனைகளாகிய வேர்க்கூந்தலின் அடிகள் உண்டு. வெளிப்பக்கம் மஞ்சட்கபில[3]நிறம். உள்ளுக்கு நல்ல பொன்மஞ்சள்நிறம். முறிக்க மையத்திலிருந்து கிரணித்த[4]தன்மை காணப்படும். இதின் சுவை நெடுநேரநிற்குங் கசப்பு. சப்பினல் உமிழ்நீரை மஞ்சளநிறமாக்கும். இதிற் தனிக்கமில[5]மாவது கலிக்கமில[6]மாவது இல்லை. தண்ணீரிலும் அலக்காலிலுங் கரையக்கூடிய ஓர் மஞ்சட் கசப்புச் சத்து இதில் நிரம்ப உண்டு.

தன்மை. Property. சுத்தக் கசப்பான தொணிகம்.

உபயோகங்கள். Uses. பெலவீனத்துக்கும் சுரம் முதலான பெலவீனப்படுத்தும் நோய்களிலிருந்து சுகப்படும்போதுக்கும் அசத்துவ குன்மத்துக்கும் லேசான முறைச்சுரங்களுக்கும் இது மெத்த உபயோகமாய்க் காணப்பட்டது(6)

---

1 Tonic, ஓசதி. 2 Antiperiodic, சுரமாற்றி. 3 Yellowish brown. 4 Radiated. 5 Tannic acid. 6 Gallic acid.

(5) (6) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். Dose. வேர்ப்பொடியிற் பத்துமுதற் பதினைந்துகிறேன் நாள் மூன்றுமுறைகொடுக்கவும்.

ரசிதங்கள். Preparations. கப்தீசிரஞ்சம். Tincture of coptis. கொள். கப்தீஸ்வேர், பருக்கன்பொடியாக இரண்டரைஅன்சு; புரூவுசீது[1] ஒருநாழி; அடைத்த பாத்திரத்தில் எழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கி, வடித்து அரைநாழியாக்கப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். Dose. அரை முதல் இரண்டுதிரும்[2].

கப்தீசின்வூசம். Infusion of coptis. கொள். கப்தீஸ் வேர், பருக்கன்பொடியாக ஐந்து திரும்; கொதிவெந்நீர் அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் இரண்டுமணிநேரமூறவிட்டு வடிக்கவும்.

தேயம். Dose. ஒன்றுமுதல் இரண்டு அன்சு[3] நாள் மூன்றுமுறை.

அவாகடச்சரக்கு. Non Officinal.

தலிக்துரம் வோலியுலோசம். Thalictrum foliolosum இது இமயமலையின் கீழ்ப்பகுதியிலுள்ளது. இதின் வேரை அம் மலைநாட்டார் பீலைசாறி[4] என்பார். குமையன் மலைகளிலிருந்து மொமீரியம்[5] என்ற பேருடனது ஏற்றியனுப்பப்படுகின்றது. ஈர்க்களவு பருமையான தும்புள்ள துண்டுகளாக வரும். வெளி கருங் கபிலநிறம். உள்ளுக்கு மஞ்சள்நிறம். அல்க்காலி[6]லும்தண்ணீரிலும் கரையக்கூடிய மஞ்சளநிறமான கைப்பெசிருத்திவு[7] இதிலிருந்து பிரியும். தண்ணீரிற் கரைந்தது அயபிரபுவுப்புக்கு[8]க் கறுக்காது. தொணிக[9]மும் சற்றே பேதிக்குணமும் இதிற் கலந்திருக்கும். தீவிர நோய்களில்நின்று சுகப்படுகையிலும் லகுவான முறைச்சுரங்களிலும் அசத்துவ[10]குன்மத்திலும் இது உபயோகமாய் காணப்பட்டது. வேர்த்தூளின் தேயம் ஐந்து முதற் பத்துக் கிறேன். ஜென்சனெசிருத்தைப்போல் எத்தனம்பண்ணின இதின எசிருத்தின் தேயம் இரண்டு மூன்று கிறேன் நாள் மூன்றுமுறை.

கருஞ்சீரகம். Nigella Sativa. இந்தப் பூண்டின்கொட்டைகள் இந்து தேசத்தின் மிகுதியான பகுதிகளிற் கிடைக்கும். மற்றும் காமினதிகள்[11] கிடையாதவிடத்தில் இதை வாயுவைக் கழிக்க வழங்கலாம். கருஞ்சீரகக் கொட்டை நாலரை அன்சுக்கு புரூவுசீது ஒருநாழிவீதமாகச் செய்த கருஞ்சீரகரஞ்சம் வங்காள[12]பார்மகூபீய[13]த்துக்குரியது. பேதிக்கும் பானங்களுக்குச் சேர்க்கும்படி இதில் அரைத்திரும் ஒரு திரும் தேயம் அதிற் குறிக்கப்பட்டிருக்கின்றது.

## மக்னோலியாசியங்கள்.

## MAGNOLIACEAE.

### அண்ணசுப்பூ. ILLICIUM ANISATUM.

வாசம். சீனம்.

வாகடபகுதி. அண்ணசுப்பழம். ஏறக்குறைய ஒன்றேகால் இஞ்சு பரு

---

1 Proof spirit. 2 Drachm. 3 Ounce. 4 Pila-Jari அதாவது பீதசேவ். 5 Momeeree. 6 Alcohol. 7 Bitter Extractive. 8 Persalt of Iron. 9 Tonic, ஔசதி. 10 Atonic 11 Carminative, வாயுக்கினி. 12 Bengal. 13 Pharmacopoeia.

Digitized By Roja Muthiah Research Library

மையானது. சுற்றிச் சுற்றியிருக்கும் எட்டு அறைகள் வரைக்கு உள்ளது. இவைகள் ஒடுங்கி வெளியிற் றிரைந்து உள்ளுக்கு ஒப்பமாய் மேல்விளிம் பாற் றிறக்கும். அழுத்தமும் முட்டைவடிவமுமான கொட்டைகள் ஒவ் வொன்று ஒவ்வொரு அறையிலுமுண்டு. இவைகள் அனிசைப் போன்ற நல்ல சுகந்த மணமும் இனிப்பும் புளிப்புமான சுகந்த சுவையுமுள்ளவை கள். திஸ்திலி[1]த்தெடுக்கிற அத்திரதேலை[2] அதிகமாய் அடக்கியிருப்பதினு லேயே அண்ணாசுப்பழம் வாகடத்துக்குரியதாகும். வியாபாரத்தில் வரும் அனிசுத் தேலில்[3] மிகுதியான பங்கு அண்ணாசுத்தேலே. அண்ணாசுத்தேல் நிறமற்றது அல்லது வெண்மஞ்சள் நிறமானது. அனிசின் மணமும் காரமா னஇனிய சுவையுமுடையது. 50 பாகை குட்டில் உறையும்.

நன்மைகள். ஸ்தொமாகி[4] காமினதி[5]. வயிற்றுப்பொருமல் வயிற்றுவலி க்கு இது உவப்பாகும்.

தேயம். அத்திரதேலில் இரண்டுமுதல் ஐந்துதுளி.

### அவாகடச்சரக்கு Non Officinal.

சம்பகம்[6]. Michella Champaca. செண்பகம். இந்தமரத்தினது கச ப்பான சுகந்த பட்டையின் தன்மைகள் வடஅமரிகத்திலுள்ள கிளாகமக் னோலி[7]யென்ற மரத்தின் பட்டையின் தன்மைகளைப்போலிருக்கும். இது மோறிசுநீவின் முறைச்சுரப் பரிகரிப்பில் லாவியற் வைத்தியரால் சித்தியாய் வழங்கப்பட்டது. இதில் ஒரு அன்சுக்குத் தண்ணீர் அரைநாழி வீதமாகச் சேர்த்துச் செய்த இன்வூச[8]மாகவும்; ஒருஅன்சுக்கு அரைநாழியாகக் காய்ச் சின கொதிவெந்நீர் ஒருநாழிவீதமாகச் சேர்த்துச் செய்த திகாத்த[9]மாகவும் சுரத்தின் மும்முரத்துக்கு முன்னும் பின்னும் மும்மூன்று மணிநேரம் இர ண்டு அன்சு தேயமாக அதை அவர் கொடுத்தார். இந்தப் பட்டையை இன் னும் அதிகமாய்ச் சோதிக்கவேண்டியது அவசியமாய்க் காண்கிறது. வாச னையுள்ள பூக்களுக்காக இம்மரம் அதிகமாய் வளர்க்கப்படுகிறதாதலால் இந் துவின் எப்பகுதியிலும் இது லகுவிற் கிடைக்கும்.

## மேனிஸ்பேர்மாசியங்கள்,

## MENISPERMACEAE.

### களும்புக் கிழங்கு. CALUMBA.

வாசம். இது கிழக்காபிரிகத்தில், ஈபு சம்பேசி யென்ற இடங்களுக்கி டையிலுள்ள காடுகளிலுண்டாகும்.

வாகடபகுதி. கிழங்கு. தட்டையும் வட்டிப்பும், ஏறக்குறைய இரண்டு இஞ்சுபருமையும்,இரண்டுமுதல் நாலு லீன்[10]தடிப்பும், மையப்பகுதியில்மெ ல்லிதும் மெதுவும், நரையான மஞ்சள்நிறமும், சொற்ப மணமும், மெத்தக் கைப்பான சுவையுமுள்ள குறுக்குச் சீவல்களாக இதுவரும். இதின் திகா த்தம் ஆறினபின் இயோத[11]நீர் சேர்க்கக் கறுக்கும். இதின் இன்வூசத்தில்

---

1 Distill. 2 Volatile oil. 3 Anise oil. 4 Stomachic, கிரமணி. 5 Carminative, வாயுக்கினி. 6 சம்பகம். 7 Magnolia glauca. 8 Infusion. 9 Decoction. 10 Line, 11 Iodum.

Digitized By Roja Muthiah Research Library

அயசல்வசு[1],அந்திமனிதாத்தரகம்[2],செலதின்[3]என்பவை தோன்றக்கூடிய ஓர் மாறுதலையும் உண்டாக்கமாட்டாதாகையால் தனிக்கமிலம்[4] கலிக்கமிலம்[5] இதில்இல்லையென்றறியலாம். கிரிஸதலிக்க[6]க்கூடிய கலம்பின்[7]என்ற கைப்பான ஓர் சத்தும் பெர்பெரினம்[8] என்ற கைப்பான தடஸ்த[9] சத்தும் இதில் உண்டு.

அவுஷததன்மைகள். இது நயந்த தொனிகமும்[10]ஸ்தொமாகி[11]யுமாகும்.

உபயோகம். பொதுவானபெலவீனம் அசத்துவகுன்மம்[12]இரைப்பையபூர்சி கருப்பிணிகளிற் காணும் வாந்திகளிலும் தியறீயம்[13] திசந்தெரி[14]யின் பிற்கூற்றிலும் இது மெத்த நயமாய்க்கண்டது.

தேயம். கிழங்குத்தூளில் ஐந்துமுதல் இருபதுகிறேன் நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கவும்.

ரசிதங்கள். Preparations. களும்பின்லூசம். Infusion of Calumba. கொள். நறுக்கின களும்புக்கிழங்கு, அரை அன்சு; தண்ணீர் பத்து அன்சு; மூடின பாத்திரத்தில் ஒருமணிநேரம் ஊறவிட்டு வடிக்கவும்.

தேயம். ஒன்றுமுதல் இரண்டு அன்சு.

களும்பிரஞ்சம். Tincture of Calumba. கொள். களும்புக் கிழங்கு, பருக்கன்தூளாகநறுக்கி இரண்டரைஅன்சு; புருவுசீது[15] அரைநாழி. அடைத்த ஓர் பாத்திரத்தில் பதினைந்து அன்சு சீதில் களும்பையிட்டு நாற்பத்தெட்டுமணிநேரம் ஊறவைத்து இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். பின்பு சியந்தனி[16]யில் விட்டு நீரை வடியவைக்கவும். வடிந்தபின் மிச்சமானஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். பிறகு சக்கையை நசுக்கிப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய புருவுசீதுசேர்க்கவும்.

தேயம். முப்பது துளிமுதல் இரண்டு திறும்வரைக்கு.

களும்பெசிறத்து. Extract of Calumba. கொள். களும்புக் கிழங்கு, தூளாக வெட்டி ஒரு இறுத்தல்; தண்ணீர் இரண்டுநாழி; களும்பை ஒரு நாழி தண்ணீரில் பன்னிரண்டு மணிநேரத்துக்கு ஊறவைத்து வடித்து நசுக்கவும். அவ்வளவு தண்ணீரில் மறுபடியும் ஊறவைத்து முன்போல வடித்து நசுக்கவும். நீர்களைக் கலந்து குளிகையாகத் தகுந்த பதமான எசிறுத்தாய் வருந்தனையும் நீர்மத்திகத்தின் சூட்டில் வறட்டவும்.

தேயம். மூன்றுமுதற் பத்துக்கிறேன்.

## பறைரக்கோடி. PAREIRA BRAVA.

வாசம். இது பூமியின் இரண்டு பாதிகளின் உஷ்ணர்தப்பகுதிகளடங்கலும் உண்டாகும்.

வாகடபதுதி. காய்ந்தவேர். திரண்ட சப்பையான துண்டுகளாக நெடும்பாட்டுக்குக் கிழிந்தாவது முழுதாயாவது அரைமுதல் நாலு இஞ்சு பருமையாயும் நாலு இஞ்சு முதல் நாலு அடி நீளமாயும் இதுவரும். பட்டை நரைக்கபிலநிறம்; நெடும்பாட்டுக்குச் சுருக்குவிழுந்தது; குறுக்கே வளையம் வளையமான புருவங்கள் உள்ளது; மையம் கண்ணறைகள்நிறைந்த பீதநரையான

1 Sulphate of Iron. 2 Antimony tartarate. 3 Gelatine. 4 Tannic acid. 5 Gallic acid. 6 Crystallize. 7 Calumbin. 8 Berberina. 9 Neutral. 10 Tonic, தொனி. 11 Stomachic ஸ்தொமகி. 12 Atonic Dyspepsia. 13 Diarrhoea. 14 Dysentery. 15 Proof spirit. 16 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

மரத்தடி. இதின் வெட்டிய தலைப்பில் ஒன்றுளொன்றுய்நிற்கும் வளையங்களும் இவைகளைக் குறுக்கிட்டுச்செல்லும் வரிகளுங் காணும். சுவை, முதலில் இனிய சுகந்தம், பின்பு அதிக கசப்பு.

அவுஷததன்மைகள். மெல்லிய தொனிகம்[1], தியுரீசம்[2]. சனனசலஉறுப்புகளின் சளிச்சவ்வுகளில் துவராகவும் சார்தனியாகவும் சேஷ்டிக்கும்.

உபயோகம். தீவிரகாலிக சலப்பைத்தாபிதத்தின் பிற்கூற்றிலும் சளி அதிகமாய்க் கக்கும் சலப்பைக்கதாரிலும்[3] இதுவழங்கப்படும்.

ரசிதங்கள். Preparations. பரைரதிகாக்தம். Decoction of Pareira. கொள். பரைரவேர் துண்டுதுண்டாக வெட்டி, ஒன்றரை அன்சு; தண்ணீர்அரைநாழி. மூடிய பாத்திரத்தில் பதினைந்துமினி[4] வரைக்கு அவித்துவடித்து வடி[5]யில்நிற்கும் சக்கையின்மேல் அரைநாழி யளக்கப் போதியதண்ணீர் வார்த்துக்கொள்ளவும்.

தேயம். ஒன்று முதல் மூன்று அன்சு.

பரைரவேசிறத்து Extract of Pareira. கொள். பரைரவேர், பருக்கன்துளாக ஒரு இறுத்தல்; கொதிவெந்நீர், ஒருகலன்[6] அல்லது போதியது; பரைரவேர்த்தூளை அரைநாழி தண்ணீரில் ஒருநாளைக்கு மென்சூடேற்றி ஊறவிட்டு சியந்தனி[7]யில் இட்டு இன்னுந் தண்ணீர்விட்டு ஒரு கலனுக்கு வருந்தனையும் அல்லது சாரம் இறங்குந்தனையும் மெல்ல மெல்ல வடியவிடவும். வடிந்த நீர் குளிகையுருட்டத் தகுந்தபதமாய் இறுகுந்தனையும் நீர்மத்திக[8]த்தில் அதை வறட்டவும்.

தேயம். பத்துமுதல் இருபதுகிறேன்.

பரைரநீரேசிறத்து. Liquid Extract of Pareira. கொள். பரைரவேர், பருக்கன்துளாக, ஒரு இறுத்தல்; கொதிவெந்நீர் ஒரு கலன் அல்லது போதியது. திட்டசீது[9] மூன்றுஅன்சு. பரைரவேர்த்தூளை அரைநாழிதண்ணீரில் ஒருநாள் ஊறவிட்டுப் பிறகு சியந்தனியில் வைத்து இன்னும் வெந்நீர்விட்டு ஒரு கலன் நீர் கூடுந்தனையும் அல்லது சாரம் இறங்குந்தனையும் நீரை மெல்ல மெல்ல வடியவிடவும். அந்த நீர் பதின்மூன்று அஞ்சாக வற்றுந்தனையும் நீர் மத்திகத்தில் வறட்டி ஆறினபின் சீதைச் சேர்த்துக் கடுதாசியில் வடிக்கவும்.

தேயம். அரைமுதல் இரண்டு திறும்.

## *காக்காய் கோல்லி. COCCULUS INDICUS.

வாசம். இது இலங்கை, மலையாளம், திருவாளங்கோடு, கொங்கணதேசங்களின் மலைக்காடுகளிலும் ஒரிசாவில் காசி அசம் வரையிலும் உண்டாகும்.

வாகடபகுதி. பழவற்றல். இது மிளகிலும் சற்றே பரிது. கொள்ளுவடிவானது; கருங் கபிலநிறம்; சுருங்கினது. இரணை ஓட்டுச்குள்ளமைந்த நெய்ப்புங்கைப்புமுள்ள கொள்ளுவடிவான பீதநிறக்கொட்டையை உடையது. இந்தக் கொட்டையில் பிக்ருதாக்சின் என்ற கிரிஸ்தலிக்கக்கூடிய ஓர் சத்துண்டு. அது கொடிய நஞ்சு.

1 Tonic, ஓசதி. 2 Diuretic, அமூத்தி. 3 Catarrh. 4 Minute. 5 Filter. 6 Gallon. 7 Percolator. 8 Water bath. 9 Rectified spirit. 10 Picrotoxin.

Digitized By Roja Muthiah Research Library

அவுஷதநன்மைகள். உள்ளே கொடுக்கக்கூடாது. பூச்சிகளைக் கொல்வதற்கு இது கைகண்டமருந்து. ஆகையால் பேன்கொல்லியாய் வழங்கும் பின்வருந்தைலத்தில் இது வீறுன கூறுகின்றது.

காக்காய்கோல்லியன்கேன். Ointment of Cocculus Indicus. கொள். காச்காய்கொல்லிக் கொட்டைகள், எண்பது கிறேன்; பூதக்கிடியம்[1] ஒரு அன்சு. கொட்டைகளை உரலில் நன்றுய் இடித்து கிடியத்தோடு தீர்ப்பாய்ச் சேர்க்கவும்.

இந்தத் தைலம் நஞ்சு; தோல் வழுந்தின இடத்தில் அதைப் பூசப்படாது.

## * சீந்தில். GULANCHA.

வாசம். இது வங்காளம், அசா், பாகார், தெக்கணம், ஓரிசம், கருநாடகம், மலையாளம், மைசூர் தேசங்களிலும் இந்துவின் மற்றும் உஷ்டணதேசப்பகுதிகளிலும் வளரும்.

வாகடபகுதி. வேரும் தண்டும். இவைகளில் கைப்புப் பதார்த்தம் அதிகமாயும் அடர்ந்துமிருக்கிற கோடைகாலத்தில் இவைகள் சேர்க்கப்படும். கடைகளில் வருவது திரண்ட மரத்தண்டின் காய்ந்த குறுக்குத்துண்டுகளே. இத் துண்டுகளின் பருமை கால் இஞ்சு முதல் இரண்டு இஞ்சு வரைக்கும், நீளம் அரை இஞ்சு முதல் இரண்டு இஞ்சுவரைக்கும் இருக்கும். இவைகள், விசேஷமாய் இளமையான தண்டுகளின் துண்டுகள், அதிகஞ் சுருங்கியிருக்கும். அழுத்தமும் உருவொளியுமான சுருங்கின பட்டை இவைகளை மூடியிருக்கும்; நாட்செல்ல இது திரைந்து மங்கும். அனேகந் துண்டுகளின் வெளிப்பக்கத்திற் காய்போன்ற திடல்கள் இருக்கும். கண்ணறைகள் நிறைந்த உட்பகுதியில் கிரணித்த வரிகள் தோற்றமாய்க்காணும். மணமில்லை; சுவை மெத்தக் கைப்பு. இதின் இன்ஷூசம் அயபிரபுவுப்புக்குக் கறுக்காது.

அவுஷத தன்மைகள். தொணிகம்[2], அந்திபிருடி[3], தியுறீசம்[4].

உபயோகம். இலேசானமுறைச்சுரங்களிலும் சுரங்களுக்கும், வதக்கும் மற்றும் நோய்களுக்கும் பின் காணும் பெலவீனத்திலும் பரோபதஞ்ச[5] நோய்களிலும் காலிகவாதத்திலும் இதால் அதி நயங்கண்டிருக்கிறது.(7)

ரசிதங்கள். Preparations. சீந்திலிரஞ்சம். Tincture of Gulancha. கொள். சிறிதாய் நறுக்கிய சீந்தில் நாலு அன்சு; புரூவுசீது[6] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவைத்து இடைக்கிடை குலுக்கி, வடித்து அரைநாழியாகப் போதிய சீது சேர்க்கவும்.

தேயம். ஒருதிரும் இரண்டு திரும்.

சீந்திலின்வூசம். Infusion of Gulancha. கொள். சிறிதாய்வெட்டிய சீந்தில், ஒரு அன்சு; தண்ணீர், பத்து அன்சு. அடைத்த பாத்திரத்தில் இரண்டு மணிநேரம் ஊறவைத்து, வடிக்கவும்.

தேயம். ஒன்று முதல் மூன்று அன்சு, நாள் மூன்றுமுறை.

சீந்திலேசிறத்து. Extract of Gulancha. கொள். சிறிதாய் வெட்டி நசுக்கிய சீந்தில் ஒரு இருத்தல்; தண்ணீர் இரண்டுநாழி. சீந்திலை ஒருநாழிதண்ணீரில் பன்னிரண்டு மணிநேரம் ஊறவைத்து, வடித்துப் பிழியவும்.

---

1 Prepared Lard. 2 Tonic. 3 Antiperiodic. 4 Diuretic, அமூரிதி. 5 Secondary syphilis. 6 Proof spirit.

(7) அனுபந்தம் பார்.



Digitized By Roja Muthiah Research Library

அவ்வளவு தண்ணீரில் மறுபடியும் ஊறவைத்து, முன்போல வடித்துப் பிழியவும். இரண்டு நீர்களையுங் கலந்து வடித்து, குளிகையாகப் போதிய பதமான எசிருத்தாயிறுகுந்தளையும் நீர்மத்திகத்தின் சூட்டில் வறட்டவும்.

தேயம். நாள் பத்துமுதல் முப்பது கிறேன் பிரித்துக்கொடுக்கவும். இது சுதேசிகள் செய்யும் வீறுகுறைந்த அசுத்த எசிருத்தைப் போன்றது. அது ஒன்றுமுதல் மூன்று கிரும் தேயமாக, சுரங்களிலிருந்து சுகப்பட்டுவருகையிலும் பிளிகை வியாதி முதலியவைகளிலும் தொணிகமாக அவர்களால் மெத்த உவக்கப்படுகின்றது.

அவாகடச்சரக்கு. Non-Officinal.

**மரமஞ்சள்.** Coscinium fenestratum. இது இலங்கை மலையாளங்களின் காடுகளில் உண்டாகும். தென் இந்துவின் கடைகளில் மரமஞ்சள் என்றுங் கிடைக்கும். நீளமுங் குறளுமான தேறுகளாகவிருக்கும். பருமை ஒரு இஞ்சுமுதல் நாலு இஞ்சு. மெல்லிய வெண்பட்டையையுடையது. குறுக்கே வெட்டினுல் கண்ணறைகள் நிறைந்து கிரணித்த[1] வரிகள் உள்ளதாயும் ஏக மைய வளயங்கள் இல்லாததாயுங்காணப்படும். தேறு நல்ல பச்சைமஞ்சள் நிறமும் சுத்தக் கைப்புச் சுவையுமுள்ளது. சில வருஷங்களுக்கு முன்னே இது இலங்கையிலிருந்து களும்புத்தேறு என்று இங்கிலந்துக்கு ஏற்றப்பட்டு பெறின்சு என்பவரால் சோதித்துக் கூறுபடுத்தப்பட்ட சோதனையிற் பெர்பெரின்[2] அதில் அடங்கியிருக்கிறதாய்க் காணப்பட்டது. வாறிங்கென்பவர் திரிவேந்திரம் தருமவிசிகத்தில்[3] இதை வெகுவாய்ப் பரிசோதித்தார். சுத்தக் கைப்பான தொணிகம்[4] தேவையான வேளைகளில் களும்பு கிடையாதிருந்தால் இதை வழங்குவது நயமென்று தீர்த்தார். இதின் இன்வூசம்[5] ரஞ்சங்[6]கள் களும்பின் இன்வூசம் ரஞ்சங்களைப் போன்ற பெலனுடையனவாகக் கொடுக்கப்படும். இதை மலிவும் சித்தியுமான தொணிகமாக இந்துதேச வைத்தியர் வழங்கிவருவது மிகத் தகும்.

Cissampelos hernandifolia. ஓஷான்சியென்பவர் நீமுக என்ற வங்காளப்பெயரால் இந்தக் கொடியை விதந்து பேசுகிறார். ஆயினும் வாலிக்கரால் இப்படியழைக்கப்பட்ட இக்கொடியானது இந்துவடங்கலும் மெத்தப்பொதுவாயிருக்கிற பரைரக்கொடியென்று கூக்கர், தம்சன் வைத்தியர்கள் காட்டியிருக்கிறார்கள்.

**காட்டுக்கொடி.** Cocculus villosus. இதுவும் இதற்கு இனமாய் இந்துவின் பல பகுதிகளிலுமுள்ள வேறு பல கொடிகளும் சீந்திலின் கசப்பையும் தொணிகத்தன்மையையுமுடையன.

## பேபேரிடியங்கள்.

## BERBERIDEAE.

### பொடுவிலப்பூடு. PODOPHYLLUM.

**வாசம்.** ஐக்கமரிகம் அடங்கலும் இது உண்டாகும்.

**வாகடபகுதி.** காய்ந்த வேர்த்தண்டு. இது பல அளவான நீளமும், ஏறக்குறைய இரண்டு லீன் தடிப்புமுள்ள துண்டுகளாக வரும். பட்டை

1 Radiated. 2 Berberine. 3 Hospital, ஆஸ்பித்தல். 4 Tonic. 5 Infusion. 6 Tincture.

Digitized By Roja Muthiah Research Library

நெடும்பாடான சுருக்குகள் உள்ளதும், கருஞ் செங்கபில நிறமானதும். உள்ளே வெண்மை; நொறுநொறுக்கலானது; வெண்கபில வேர்க்கூந்தல்கள் தொடுத்திருக்கும். இதின் தூள் பீத நரைநிறம்; மணம் இனிமை. சுவை கசப்பும், சற்றே கார்ப்பும், உவட்டுமானது. இதில் இருந்து ராளம் எடுக்கப்படுவதால் மாத்திரம் இது வாகடத்துக்குரித்தாகிறது.

ரசிதம். Preparation. பொடுவிலராளம். பொடுவிலின். Resin of Podophyllin. கொள். பொடுவிலவேர் பருக்கன் தூளாக ஒரு இறுத்தல்; திட்டசீது[1] ஒன்றரைநாழி, அல்லது போதியது; தண்ணீர் போதியது; ஐருகுலோறிக்கமிலம்[2] போதியது. சியந்தனிப்பதால்[3] பொடுவிலவேரின் சாரத்தைச் சீதால் வாங்கி, இந்த ரஞ்ச[4]த்தை ஸ்திலிலில்[5] இட்டு அதிலுள்ள சீதின் மிகுதிப்பங்கையும் வாங்கவும், தண்ணீரோடு, அதில் இருபத்துநாலில் ஒருபங்கு ஐருகுலோறிக்கமிலஞ் சேர்த்து ரஞ்சத்தைத் திஸ்திலித்தபின் எஞ்சுநீரை அதிலும் மும்மடங்கு அமிலநீருக்குள்ளே மெல்ல மெல்ல வார்த்து, ஓயாமற் கலக்கவும். ராளம் அடைவதற்கு இந்தக் கலவையை ஒருநாள் நிற்கவிடவும். அடைந்த ராளத்தை வடியில்இட்டு திஸ்திலித்தநீரால்[6] கழுவி அடுப்பில் உலர்த்தவும். இலட்சணங்கள். இது வெண்பச்சைக் கபில மாவாகும். திட்டசீதிலும் அமோன[7]நீரிலுங் கரையும். திட்டசீதிற் கரைந்தது, தண்ணீருக்கும், அமோனநீரிற் கரைந்தது அமிலங்[8]களுக்கும் அடையும். சுத்த ஈத[9]ரில் ஏறக்குறைய முழுதுங் கரையும்.

தன்மைகள். விரேசனி, பித்தக்கினி[10]. சிறுத்தேயமாக நாட்படக் கொடுத்தால் அல்திறவம்[11].

உபயோகம். மலவரட்சியிலும், காலிக[12]ஈரல்நோய்களிலும்,விசேஷமாய் ஈரலின் தொழிற்குறைவு கஞ்செஸ்தங்[13]களிலும் குவாதம்[14] வாதம், சிவ்விசு[15] நோய்களிலும் இதால் நயங்கண்டிருக்கிறது.

தேயம். பித்தக்கினி விரேசனியாக ஒரு கிறேன் இரண்டு கிறேன். இளம்பேதியாக அரைக்கிறேன் ஒருகிறேன்; அல்திறவமாக பன்னிரண்டில் ஒருபங்கு முதல் எட்டில் ஒருபங்கு கிறேன், நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

பொடுவிலத்தின் இன்னொருவகை இமயமலையில் உள்ளது. அதின் தன்மைகள் ஆராயப்படத்தகும்.

## * இந்துபாபேரி. INDIAN BARBERRY.

வாசம். இதில் மூன்று இனமுண்டு; இந்த இனங்களெல்லாம் இமயமலையின் மத்திமோஷ்டண வறண்ட பகுதிகள் அடங்கலும் உண்டு. அவைகளில் (B. Aristata)என்ற இனம் இப்பாற் சென்னையின் உயர்ந்த மலைகள் வரையிலுமுள்ளது.

வாகடபகுதி. வேர்ப்பட்டை. இதிற் கைப்புப் பதார்த்தம் பின்கோடையில் அதிகப்படுமாதலால் அப்போதே இது சேர்க்கப்படும். வேர் பச்சையாயிருக்கும்போது பட்டையை உரித்துச் காயப்போடவேண்டும். இது வெண்மையும் மெதுவுமானது; மணம் மெத்தவில்லை; பசைப்பான கைப்

1 Rectified spirit. 2 Hydrochloric acid. 3 Percolation. 4 Tincture. 5 Still. 6 Distilled water. 7 Ammonia. 8 Acid. 9 Ether. 10 Cholagogue. 11 Alterative, பரிணமி. 12 Chronic. 13 Congestion. 14 Gout. 15 Syphilis.

Digitized By Roja Muthiah Research Library

புச் சுவையுடையது. பேர்பேரின்[1]என்ற கிரிஸ்தலி[2]க்கக்கூடிய கைப்புப் பதார்த்தம் இதில் உண்டு.

**தன்மைகள்.** தோணிகம்[3], அந்திபிருடி[4], சுவேதனி[5]. (8)

**உபயோகம்.** முறைச்சுரங்கள், ரீமீஷ[6] சுரங்களிலும், பிரதானமாய்ச் சுரங்களின்பின்காணும் பெலவீனத்திலும் இது உச்சித மருந்தாகும். இதின் எசிருத்து[7] கண்ணோ முதலான நயனரோகங்களிற் தானிகமாய் இடப்படும்.

**ரசிதங்கள். Preparations. இந்துபாபேரிரஞ்சம். Tincture of Indian Barberry.** கொள். இந்துபாபெரி வேர்ப்பட்டை நறுக்கிப் பன்னிரண்டு அஞ்சு; புரூவுசீது[8] ஒருநாழி. அடைத்தபாத்திரத்தில் ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி அரித்து[9] பிழிந்து வடித்து ஒருநாழியாகப் போதிய சீது சேர்க்கவும். களும்பிரஞ்சத்தைப்போலச் சியந்தனித்தும்[10] இதை எடுக்கலாம்.

**தேயம்.** அந்திபிருடியாக மூன்று முதல் ஆறுதிரும் கூலப்பன்(9)தொடங்கமுன் கொடுக்கலாம். தொணிகமாக முப்பது துளிமுதல் இரண்டு திரும்வரைக்கு நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கலாம்.

**இந்துபாபேரியின்னூசம். Infusion of Indian Barberry.** கொள். இந்துபாபெரி வேர்ப்பட்டை துண்டுகளாக நறுக்கி, அரை அஞ்சு; கொதிவெந்நீர், பத்து அஞ்சு; மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டு வடிக்கவும்.

**தேயம்.** ஒன்றரை முதல் மூன்று அஞ்சு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

**இந்துபாபேரியெசிறுத்து. Extract of Indian Barberry.** கொள். இந்துபாபெரி வேர்ப்பட்டை துண்டுகளாக நறுக்கி ஒரு இருத்தல்; புரூவுசீது இரண்டுநாழி. வேர்ப்பட்டையை ஒருநாழி சீதில் ஒருநாள் ஊறவிட்டுப் பின்பு சியந்தனியில் இட்டு மிச்சமான சீதை மெல்ல மெல்ல வார்த்து சீதைத் திஸ்திலி[11]த்தெடுத்து எசிருத்தைக் குளிகைப்பதமாய் வறட்டவும்.

**தேயம்.** நாளுக்கொருமுறை இருபதுமுதல் முப்பதுகிறேன் கொடுக்கலாம்.

இந்துபாபெரியின் அந்தந்த இனங்களின் மரத்திலும் பட்டையிலும் இருந்து செய்யப்படுவதாகிய (Rasot) என்ற நீரான ஓர் எசிருத்து கடைகளில் விலைப்படும். இது சுரக்கினியாகவும் கண் வியாதிகளில் (10) இடுமருந்தாகவும் சுதேசிகளால் மெத்த மதிக்கப்படும். இதில் அதிக வீதமான அசுத்தங்கள் உண்டு. சுத்தமான வகைகள் கிடையாதிருந்தால் இதை அரைமுதல் ஒருதிரும் தேயமாக வழங்கலாம். ஆகிலும் இதை அலக்காலிற் கரைத்தால் அசுத்தங்கள் அதிற் கரையாமல் சுத்த எசிருத்து கரையும். இக் கரைவைக் குளிகைப்பதமாய் வறட்டலாம்.

---

1 Berberine. 2 Crystalize. 3 Tonic. 4 Antiperiodic. 5 Diaphoretic. 6 Remittent. 7 Extract. 8 Proof spirit. 9 Strain. 10 Percolate. 11 Distill.

(8) (9) (10) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

## பபாவிருசியங்கள்.

## PAPAVERACEAE.

### செங்கசகசா. RED POPPY.

வாசம். *யுரோபமும் மத்திம ஆசியமும்.*

வாகடபகுதி. *அல்லிகள்*[1]. *நல்ல சிவப்புநிறமும் கசகசாவின் மணமுமுடையன.*

ரசிதம். Preparation. செங்கசகசாச்சிரூபம். Syrup of Red Poppy. *கொள். பச்சையான செங்கசகசாவிதழ்கள், பதின்மூன்று அன்சு; சுத்தசர்க்கரை, இரண்டேகால் இருத்தல்; தண்ணீர் அரைநாழி அல்லது போதியது; திட்டசீது இரண்டரை அன்சு. தண்ணீரை நீர்மத்திகத்திற் காய்ச்சும்பொழுது இதழ்களைப் படிப்படியாய் அதற்குள்ளே போட்டு அடிக்கடி கலக்கிப் பின்பு பாத்திரத்தை இறக்கிப் பன்னிரண்டு மணிநேரம் ஊறவிடவும். பிற்பாடு நீரைப் பிழிந்து வடித்துச் சர்க்கரையைச் சேர்த்துச் சூடுகொட்டிக் கரைக்கவும். பாணி ஏறக்குறைய ஆறினபின் மூன்றுஇருத்தல் பத்துஅன்சு நிறுக்கத்தக்கதாய்ச் சீதையும் வற்றிய தண்ணீர்அளவு தண்ணீரையும் அதனோடு சேர்க்கவும். பாணி 1.330 என்ற விசேஷ இருவிதம்*[2] *உடையதாயிருக்கவேண்டும்.*

தேயம். *ஒருதிரும். இது நிறங்கொடுப்பதற்கு மாத்திரம் வழங்கப்படும். அதிகாங்கையில் சுறுக்கு நொதிக்குமாகையால் செய்தவுடனன்றி உஷ்டணதேசங்களில் இது வழங்கத் தகுந்ததல்ல.*

### கசகசா. WHITE POPPY.

வாசம். *தென்கிழக்கு யுரோபமும் மேற்கு ஆசியமும்.*

வாகடபகுதி. *காய்ச்சிக் கொட்டையெடுத்த முற்றற்கோதுகள். இவை உண்டையாயும் இரண்டு மூன்று இஞ்சு பருமையாயுமிருக்கும். காம்பற்றதும் சக்கரமயமுமான ஸ்திக்மத்தை*[3] *மேற்பகுதியில் உடையவைகள். உருசி அவினின் உருசி. உயிர்க் கசகசாவின் காயிலிருந்தே அவின் எடுக்கப்படும்.*

தன்மை. *செரதிவம்*[4], *அனுடைன்*[5].

உபயோகம். *தாபிதங்கள்*[6], *கன்றல்கள், சுளுக்குகள், வேதனையுள்ள மற்றும் ஊறுகளில் இது வமன்ருஷ*[7]*மாக நொந்தபகுதிக்கு அணைக்கப்படும்.*

ரசிதங்கள். Preparations. கசகசாத்திகாக்தம். Decoction of Poppies. *கொள். கசகசாக்காய் நசுக்கி, இரண்டு அன்சு; தண்ணீர் முக்கால்நாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி வரைக்கு அவித்து, வடிக்கவும். வடித்தநீர் அரைநாழியளக்கப் போதிய தண்ணீரை வடியிலுள்ள சக்கையின்மேல் வார்த்து வடிக்கவும்.*

*இது சாந்தியான வமன்ருஷமாக வெளியில் அணைக்கப்படும்.*

கசகசாவேசிறத்து. Extract of Poppies. *கொள். காய்ந்து கொட்*

---

1 Petal, பூவிதழ். 2 Specific gravity. 3 Stigma. 4 Sedative, சாந்தனி. 5 Anodyne, அனுசக்கினி. 6 Inflammation, 7 Fomentation.

Digitized By Roja Muthiah Research Library

டையெடுத்துப் பருக்கன் தூளாக்கிய கசகசாக்காய் ஒரு இருத்தல்; திட்டசீது இரண்டு அஞ்சு; கொதிவெந்நீர் போதியது. கசகசாக்காயை ஒருநாழி வெந்நீருடன் கலந்து ஒருநாளூறவிட்டு இடைக்கிடை கலக்கவும். சியந்தனியில் இட்டு இன்னும் வெந்நீர் வார்த்து, ஒரு கலன்சேருந்தனையும் அல்லது சாரம் முழுவதும் இறங்குந்தனையும் மெல்ல மெல்ல வடியவிடவும். வடிந்த நீரை அரைநாழியாய் வற்றுந்தனையும் நீர்மத்திக[1]த்தில் வறட்டவும். ஆறினபின் சீதை[2]ச் சேர்க்கவும். இந்தக் கலவைநீரை ஒருநாள் நிற்கவிட்டு பின்பு தெளிந்தநீரை வடித்து வேருக்கி, எசிருத்துக் குளிகைப்பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில் வறட்டவும்.

தேயம். இரண்டுமுதல் ஐந்து கிறேன்.

கசகசாச்சிரூபம். Syrup of Poppies. கொள். காய்ந்து கொட்டை நீக்கி பருக்கன்பொடியாக்கின கசகசாக்காய் முப்பத்தாறு அன்சு; திட்டசீது பதினாறு அஞ்சு; சுத்த சர்க்கரை நாலு இருத்தல்; கொதிவெந்நீர் போதியது. கசகசாப்பொடியை இரண்டு நாழி வெந்நீரிற் கலந்து ஒருநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். பிறகு சியந்தனியில் இட்டு, இன்னும் வெந்நீர்வார்த்து, இரண்டு கலன்[3] சேருந்தனையும், அல்லது சாரம் இறங்குந்தனையும் நீரை மெல்ல மெல்ல வடியவிடவும். வடிந்த நீரை ஒன்றரை நாழியாய் வற்றுந்தனையும் நீர்மத்திகத்தில் வறட்டவும். நன்றாய் ஆறினபின் சீதைச்சேர்த்து அக்கலவையைப் பன்னிரண்டு மணிநேரம் நிற்கவிட்டு வடிக்கவும். சீதைத் திஸ்திலித்து[4], சேஷமான நீரை ஒருநாழியாக வறட்டிப் பிற்பாடு சர்க்கரையைச் சேர்க்கவும். சிறூபம் ஆறரை இருத்தல் நிறுக்கவும் 1.320 என்ற விசேஷகிருவிதம்[5] உடையதாகவும்வேண்டும்.

தேயம். ஒருதிரும். கூடவுங் கொடுக்கலாம். இது சூட்டுக்குச் சுறுக்கு நொதிக்குமாகையால் காங்கையான தேசங்களிற் புதிது புதிதாய்ச் செய்தாலன்றி உதவாது.

அவின். Opium. இது உயிர்க் கசகசாப் பூண்டின் காயைக் கீறிவிட, வடிந்து இறுகின சாறு. இது நாலு அன்சுமுதல் இரண்டு இருத்தல் நிறையுள்ள பல வடிவான கட்டிகளாக, கசகசா இலையால் மூடி வரும். பெரும்பான்மையாய் ஓர்வகைச் சுக்கான் கீரைநெற்றிற் பொதிந்துவரும். அவின் புதிதாயிருக்கும்போது பசைப்புள்ளதாய் ஒப்பமற்றதாய்ச் சற்றே ஈரிப்பாய்ப் பிய்ந்து செங்கருமையாயிருக்கிறது. விரலால் ஒப்பமாய் அழுத்தமினுங்கும். ஓர்வகை மணமும் உவட்டிப்பான கைப்புச் சுவையுமுடையது.

இத்தன்மைகள் துருக்கியிலுள்ள சிமிர்ண அவினுக்கே உரியன. பிரதானமாய்ப் பிறித்தனில் வழங்கும் அவின் இதுவே. கிழக்குத்தேச வைத்தியர் வழங்குவதும் யுரோப வியாபாரத்தில் அருமையுமான இந்துஅவினுக்கு இத்தன்மைகள் ஒவ்வா. இந்து அவினிற் பலவகையுண்டு. அவைகளுள் முக்கியமானவைகளாவன:

1. * பற்ன தோட்ட அவின். Patna Garden Opium. 2. * மாளவ அவின். Malwa Opium. இவைகளுள் முதல்வகை மருந்துக்கென்றுமாத்திரம்செய்யப்படுவது. அது அப்பிரகப்படலங்களில் மூடி அரை இஞ்சு தடிப்பான கபிலமெழுகாற் போர்க்கப்பட்டு இரண்டுமுதல் நாலுஇருத்தல் சனமானசதுரக்கட்டிகளாகவரும். இது வைரமானது. குளிர்காலத்தில் நொருங்கும். நிறங்

1 Water bath. 2 Spirit. 3 Gallon. 4 Distill. 5 Specific gravity.

Digitized By Roja Muthiah Research Library

கபிலமும் மணம் வீறுமாயிருக்கும். இதிலிருந்து அதி வீதமான மாவியம் எடுக்கப்படும். நூற்றுக்கு ஏழு எட்டுப் பத்துவீதமாய்த்தானும் மாவியம் எடுக்கப்படும். மாளவ அவினிற் பலவகையுண்டு. அவைகளுள் முக்கிய மானவை இரண்டு வகை. ஒருவகை வெளிப்போர்வையில்லாமல் ஏறக்குறைய ஒன்றரை இருத்தல் பாரமுள்ளதாய் வெளியில் மங்கலான கருமைநிறமும் உள்ளே கறுப்பும் மெதுவுமாய் வட்டித்த சில்லுகளாகவிருக்கும். மணம் சிமிர்ண அவினின் மணம்போலிருந்தும் வீறு குறைந்ததாய்ச் சற்றே புகைமணங் கலந்திருக்கும். சுவை கொடுமையாய் நிற்கிற கைப்பு. இதில் நூற்றுக்கு மூன்றுமுதல் ஐந்து வீதமாய் மாத்திரம் மாவியம் வரும். மற்ற வகை மாளவ அவினின் உச்சிதமானது. இது உருண்டைகளாக அல்லது சிறுச் சில்லுகளாக வரும். கசகசா அல்லிகளின் பருக்கன் துண்டுகளால் மூடப்பட்டிருக்கும். பத்து அஞ்சு பாரமுள்ளது. நிறம் உள்ளே கருங்கபிலம். தன்மை ஏகத்துக்கொரேமாதிரியானது. மணமும் சுவையும் முந்தினவகையைப் போலவே. இதில் நூற்றுக்கு ஏழு எட்டுப் பங்கு மாவியம் எடுக்கலாம். இந்து அவினின் மற்றும் வகைகள் இமயமலேஅவின் (11), கந்தீச அவின், குச்சு அவின் முதலியவைகள். இவை வித்தியாசமான வீறுள்ளவைகளாதலால் முந்தினவகையினின்று அரிதாய் மருந்துக்கு வழங்கப்படும். அவினிலுள்ள மாவியத்தின் (12) வீதத்தைக் கண்டுபிடிப்பதே அதற்கு நிச்சயமான சோதனை. மருந்துக்கு உவந்த மெதுவான அவினில் மாவியம் நூற்றுக்கு 6முதல் 8 பங்கென்று பிறித்தனிவாகடம்காட்டுகின்றது.

கெமிஸ்த கூட்டுகள். Chemical Composition. அவினில் மெகனிக்கமிலம்[1] என்ற ஓர் சுய அமிலமும் மாவியம்[2] கோதியின்[3] பபாவிரின்[4] பரமாவியம்[5] என்ற நாலு அல்கலே[6]வங்களும், நாகுதின்[7] நாஸின்[8] மெகனின்[9] ஒபியனின்[10] பாவிருக்சின்[11] என்னும் தடஸ்த கிரிஸ்தலிக்கக்கூடிய பதார்த்தங்களுமுண்டு. மேலும் அதிலே சில ராளங்[12]களும் பிசினும் நிணமும் எசிருத்திவுப்[13] பதார்த்தங்களும் கூச்சுக்கும்[14] சொற்பமான அத்திரஎண்ணெய்யும்[15] அநிந்திர உப்பு[16]களும் உண்டு. இப்பதார்த்தங்களுள் மாவியமும் கொதியினும் நாகதிகமு[17]செரதீவமு[18]மாகும்; நாகுதின் தொணிக[19]மும் அந்திபிருடி[20]யுமாகும். மற்றுங் கூறுகளின் செயல் தெரியவில்லே. என்றாலும் ராளம் சத்துள்ளதாகத் தோன்றுகின்றது.

தன்மைகள். Properties. அவுஷத தேயங்களில் அவினின் முதன்மையான செயல் ஸ்திமூல[21]மே. இரண்டாவதான செயல் நாகதிகம்; அனுடைன்[22] அந்திஸ்பசி[23]. இது பிரதானமாய்க் கோர்த்தகசேருமைய[24]த்திற்சேஷ்டித்து, அதில்நின்று தோன்றும் நரம்புகள் வழியாய் உடம்பின் உறுப்புகள் ஒவ்வொன்றிலும் கூடக்குறையத் தாக்கும். இது வெயர்வையைமாத்திரம் அதிகப்படுத்தி மற்றெந்த விசர்க்கத்தை[25]யுங் குறைக்கும். அதிதேயமாகில் வீருன நஞ்சாகும்.

---

1 Meconic acid. 2 Morphia. 3 Codea. 4 Papaverine. 5 Paramorphia. 6 Alkaloid. 7 Narcotine. 8 Narceia. 9 Meconine. 10 Opianine. 11 Porphyroxine. 12 Resin. 13 Extractive. 14 Caoutchouc. 15 Volatile oil. 16 Inorganic salt. 17 Narcotic, கிரகி. 18 Sedative, சாந்தனி. 19 Tonic, ஓசதி 20 Antiperiodic. 21 Stimulant. 22 Anodyne. 23 Antispasmodic, கருசக்கினி. 24 Cerebro-spinal centre. 25 Secretion.

(11) (12) அனுபந்தம் பார்.

உபயோகம். Uses. அவினின் உபயோகங்கள் அனேகமும் முக்கிய மும். தாபிதத்[1]தில் விசேஷமாய் வசாசவ்[2]வின் தாபிதத்தில், இது தனித்தாவது கலமல்[3] அந்திமனி[4]யோடும் மற்றும் மருந்துகளோடுங் கலந்தாவது அதிகமாய் வழங்கப்படும். அசத்துவ[5]த்தால் மரணநேரிடும் நோய்களைப்பார்க்க மூடம் அல்லது அசுவாசத்[6]தால் மரணநேரிடுஞ் சார்புள்ள தாபிதநோய்கள் வேறுநோய்களில் இது வழங்கப்படுவதரிது என்பது பொதுவிதி. பரியந்திரதபம்[7] முதலிய முந்தினவகையானநோய்களில் இது முதற்றரமருந்து. சுரங்களில் விசேஷமாய்ப் பிற்கூற்றில் இது தனித்தாவது அந்திமனி, கர்ப்பூரம் முதலியவற்றோடு கலந்தாவது, தசிரங்கள் நரம்புகளின் கிளர்ச்சியைத் தணித்து நித்திரையை வருவிக்க மெத்த உவந்ததாகும். ஆகிலும் கண்ணின் கயனைத்துவாரம்[8] மெத்தச் சுருங்கியிருக்கையில் இது பொதுவாய் இணங்காது. வருத்தமான ஸ்பச[9] நோய்களில் அவினை அதிபிரமாணமாய்த் திரும்பத் திரும்பக் கொடுக்கப் பெரும்பாலும் உடனேசுகங்காணும். வயிற்றுறுப்புகளின் பலவகையான சரோக நிலைமைகளாகிய இரைப்பைப்புண், கன்சர்ப்புண்[10], காலிககஸ்திரீது[11], கஸ்திரல்சி[12], சிரா[13]வாந்தி, அனுதாபவாந்தி, தியரீயம்[14], திசந்தெரி[15], வங்கவலி[16], இறுகியவளி[17], குடலடைப்பு முதலியநோய்களில் இதைக்கொடுப்பதால் மெத்த நயங்காணும். சனன சலஉறுப்புகளின்நோய்களாகிய சலப்பைத்தபம்[18] சலப்பைச்சலை[19] சலபாதையின்ஸ்பசச்[20]சுருக்குகளிலும், மெனுறீயம்[21], திஸ்மெனுறீய[22]த்திலும், கருப்பையழற்சி, கருப்பைத்தபம்[23], முதலிய நோய்களுக்கும் இது உவப்பான மருந்து. வர்ப்பு, தீவிரவாதம்[24], கம்பதியக்கம்[25], என்பவைகளுக்கும், அவின் முதல்மருந்தாகக் கொள்ளப்படும். வாந்திபேதிக்கும் இது கொடுக்கப்படும். ஆயினும் நயங்காண்பது சந்தேகம். கன்சர்புண்கள் காதனப்புண்க[26]ளில் அவின் சடக்குழப்பத்தைத் தணிப்பதால் தானிகமான குணங்களிலும் நயங்காட்டும். வெளியிற் போடுவதற்குப் பலவகையான வாதம் நறல்சி[27] வருத்தமான மற்றும் நோய்களிலுங் கண்ணோவிலும் கண்ணின் மற்றும் வியாதிகளிலும் இது மிக உவந்தது.

தேயம். Dose. காரியத்துக்குத் தக்கதாய் அவின் காற்கிறேன் முதல் இரண்டுகிறேன் வரைக்குங் கூடவுங்கொடுக்கப்படும். வருத்தமான அனேகம் நோய்களில் அவினுற் காணும் சகாயத்தின் அளவே அதின்தேயத்தைக் குறிப்பதற்கு அறிகுறி. சிலவேளைகளில் அதிகமான அவினை மோசமின்றித் தாங்குவார்கள்.

ரசிதங்கள். *Preparations of Opium. அவினேசிறந்து. Extract of Opium, கொள். அவின் மெல்லிய சீவலாக ஒரு இருத்தல்;

---

1 Inflammation. 2 Serous. 3 Calomel. 4 Antimony. 5 Asthenia. 6 Aphonia. 7 Peritonitis. 8 Pupil. 9 Spasmodic. 10 Cancer. 11 Chronic gastritis. 12 Gastralgia. 13 Nervous. 14 Diarrhoea. 15 Dysentery. 16 Colica pictonum. 17 Strangulated hernia. 18 Cystitis. 19 Cystirhoea. 20 Spasmodic. 21 Menorrhoea. 22 Dysmenorrhoea. 23 Metritis. 24 Acute rheumatism. 25 Delirium tremens. 26 Gangrene. 27 Neuralgia.

*பிறித்தன் பாமகுபீயத்திலிருந்தெடுக்கப்பட்ட இந்த ரசிதங்களுக்கு துருக்கிஅவின் சேர்க்கவேணும். இந்தஅவினுக்குஇணக்கமாக இவைகளிற் சில மாற்றப்படவேண்டுமெனபது பரீட்சையால்விளங்கும்.

Digitized By Roja Muthiah Research Library

தண்ணீர் மூன்று நாழி. அவினை ஒருநாழி தண்ணீரில் ஒருநாள் ஊறவை த்து நீரைப் பிழிந்தெடுக்கவும். சேஷமாயிருக்கிற அவினைத் திறமானகளியா க்கி மறுபடியும் ஒருநாழி தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்துப் பிழிந்தெ டுக்கவும். மூன்றாம்முறையும் இப்படியே செய்து நீர்களைக் கலந்து கம்ப ளியில் வடித்து, குளிகையாகத் தகுந்த பதமான எசிறுத்தாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில் வறட்டவும்.

தேயம். அரைமுதல் இரண்டுகிறேன். தூளாக்கின அவினைப்பார்க்க இது குறைந்த ஸ்திமுலம், நயந்த செரதீவம்.

அவின்நீரேசிறுத்து. Liquid Extract of Opium. கொள். அவினெ சிறுத்து, ஒருஅன்சு; தண்ணீர் பதினாறு அன்சு; திட்டசீது நாலு அன்சு. அவினெசிறுத்தைத் தண்ணீரில் ஒருமணிநேரம் ஊறவிட்டு அடிக்கடி கலக் கிப் பிறகு சீதையுஞ் சேர்த்து வடிக்கவும். வடித்தநீர் அரைநாழி அளக்க வேணும்.

தேயம். பத்துமுதல் நாற்பது துளி. இதில் ஒருஅன்சில் ஏறக்குறைய இருபத்திரண்டு கிறேன் அவினெசிறுத்து இருக்கும். அவினிரஞ்சத்திலும் இது அரைக்காற்பங்கு வீறு கூடினது.

அவினிரஞ்சம். Tincture of Opium. லாடனம். கொள். அவின் பருக்கன் தூளாக, ஒன்றரை அன்சு; புருவுசீது[1] அரைநாழி, மூடிய பாத்திர த்தில் ஏழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கி, தெளித்துப் பிழிந்து வடித்து, அரைநாழியாகப் போதிய புருவுசீது சேர்க்கவும்.

தேயம். ஐந்து முதல் நாற்பது துளி. இதில் ஒரு அன்சிலே அவினின் கரையும் பதார்த்தம் முப்பத்துமூன்று கிறேன் அடங்கியிருக்கும். அதா வது பதினைந்து துளியில் ஒருகிறேன் அவின்வரைக்கு இருக்கும். இதை யாவது மற்றும் அவின் ரசிதங்களையாவது குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக் கும் கொடுப்பதில் மெத்த அவதானம் வேண்டும்.

அவினமோனரஞ்சம் Ammoniated Tincture of Opium. கொள். அவின் பருக்கன்தூளாக, நூறு கிறேன்; குங்குமப்பூத்தூள், பெஞ்சோயிக் கமிலம், வகைக்கு, நூற்றெண்பது கிறேன்; அனிஸதைல், ஒருதிறும்; அ மோனகரநீர், நாலுஅன்சு; திட்டசீது பதினாறு அன்சு. நன்றாயடைத்தபா த்திரத்தில் இவைகளை ஏழுநாள் ஊறவிட்டு, இடைக்கிடைகுலுக்கி வடித்து நசுக்கி வடித்து அரைநாழியாகப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

தேயம். அரைமுதல் ஒருதிறும். இதில் ஒரு அன்சில் ஐந்து கிறேன் அவின்வரைக்கு இருக்கும்.

அவின்வைன். Wine of Opium. கொள். அவினெசிறுத்து, ஒருஅ ன்சு; இடித்த கறுவாப்பட்டை கராம்புகள், வகைக்கு ஏழுபத்தைந்து கிறே ன்; செரிவைன் அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட் டு இடைக்கிடை குலுக்கி வடிக்கவும்.

தேயம். பத்துமுதல் நாற்பது துளியுங் கூடவுங் கொடுக்கலாம். இதில் ஒரு அன்சில் அவினெசிறுத்து இருபத்திரண்டு கிறேன்வரைக்குஇருக்கும். 1864 ம் ஆண்டின் பிறித்தனி வாகடத்திலும் எதின்பரு தபுளின் வாகடங்க ளிலும் குறிக்கப்பட்ட அவின்வைனைப்பார்க்க இது காற்பங்கு பெலன்கூடி னது. லண்டன்வாகட அவின்வைனில் ஐந்திலொருபங்கு பெலன்குறை

---

1 Proof spirit.



Digitized By Roja Muthiah Research Library

ந்தது; அவின்நீரெசிருத்தின் பெலனுக்குச் சரிவந்தது. இது கண்ணோமு தலிய நயனரோகங்களில் இம்மருந்தாக வழங்கப்படும்.

அவின்கூட்டுச்சூரணம். Compound Powder of Opium, கொள். அவின்தூள் ஒன்றரை அன்சு; மிளகுதூள் இரண்டு அன்சு; சுக்குத்தூள், ஐந்து அன்சு; கறுவிக்கொட்டை[1]த் தூள், ஆறு அன்சு; திரககந்துத்[2]தூள் அரைஅன்சு. இவைகளை நன்றாய்க் கலந்து, மெல்லிய அரிப்பெட்டியில் அரித்து, கடைசியாய்க் குழியம்மியிற்போட்டு மெதுவாய் அரைத்து அடைத்த சீசாவில் வைக்கவும்.

தேயம். இரண்டுமுதல் ஐந்துகிறேன். இதிற் பத்துக்கிறேனில் ஏறக்குறைய ஒருகிறேன் அவின் இருக்கும்.

அவின்லேகியம். Confection of Opium. கொள். அவின்கூட்டுச் சூரணம், நூற்றுத்தொண்ணூற்றிரண்டு கிறேன்; சீனிகம்[3], ஒருஅன்சு. கல.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேன். இதில் ஏறக்குறைய நாற்பது பங்கில் ஒருபங்கு அவின் இருக்கும்.

அவின்வில்லை. Opium Lozenges. கொள். அவினெசிருத்து எழுபத்திரண்டு கிறேன்; தொலூரஞ்சம்[4] அரைஅன்சு; சுத்தசர்க்கரை மாவாக, பதினாறு அன்சு; அகசிப்பிசின்[5]மாவாக இரண்டு அன்சு; அதிமதுர வெசிருத்து[6]. ஆறுஅன்சு; தண்ணீர் போதியது. அதிமதுரவெசிருத்தை நீர்மத்திரகத்திற் சூடாக்கிக்கொண்டு கொஞ்சத்தண்ணீரால் இளக்கி, அவின் எசிருத்தோடும் தொலூரஞ்சத்தோடும் சேர்க்கவும். இந்தக் கலப்புச் சரியானபதத்துக்கு வந்தபின் அதைக் கல்த்தட்டிற் போட்டு முதலே ஒன்றாக அரைத்த சர்க்கரையையும் பிசினையும் இதோடு சேர்த்து நன்றாய்க் கலக்கவும். இந்தத் திரளையை 720 வில்லையாகத்தட்டி மட்டான சூட்டில் உலர்த்தவும்.

தேயம். ஒன்றுமுதல் ஆறு வில்லை. ஒவ்வொரு வில்லையிலும் அவினெசிருத்துப் பத்திலொருபங்கு கிறேன் இருக்கும்.

அவினேனீமம். Enema of Opium. கொள். அவினிரஞ்சம்[8]அரைத்திரும்; அமைலமுசிலாகு[9]அல்லது தடித்த கஞ்சித்தெளிவு இரண்டுஅன்சு.கல.

அவின் லினிமேன். Liniment of Opium. கொள். அவினிரஞ்சம்[9] சபுலினிமென்[10] வகைக்கு இரண்டு அன்சு.கல.

வாதத்துக்கும் வருத்தமான மற்றும் நோய்களுக்கும் இது மெத்த உவப்பான பூச்சு.

அவின்பற்று. Opium Plaster. கொள். அவின், மாவாக ஒருஅன்சு; இராளப்பற்று[11], ஒன்பது அன்சு. இராளப் பற்றை நீர்மத்திரகத்தில் உருக்கியபின் அவினைக் கொஞ்சங்கொஞ்சமாய்ச் சேர்த்துத் தீர்ப்பாய்க் கலக்கவும்.

அவின்லினிமென் உதவக்கூடிய நோய்களுக்கே இதுவும் உதவும்.

மேலே சொன்ன ரசிதங்களிலன்றி, இபிகாக் ஸ்குவிற்[12] குளிகை, வங்கவின்குளிகை, சபுக்[13]கூட்டுக்குளிகை, கிரீதவவின்சுகந்த சூரணம்[14], இபிகாக் கூட்டுச்சூரணம், கினுக்[15]கூட்டுச்சூரணம், பூரக்கூட்டிரஞ்சம்[16]. மாசவவினன்கென்[17], வங்கக் கூட்டுத்தலஸ்தம்[18], இவைகளிலும் அவின் சேரும்.

---

1 Caraway. 2 Tragacanth. 3 Syrup. 4 Tincture of tolu. 5 Gum acacia. 6 Extract of liquorice. 7 Water bath. 8 Tincture opium. 9 Mucilage of amylum. 10 Soap liniment. 11 Resin plaster. 12 Pill of Ipecac with squill. 13 Soap. 14 Aromatic powder of chalk with opium. 15 Kino. 16 Compound tincture of camphor. 17 Ointment of gall and opium. 18 Compound lead suppository.

Digitized By Roja Muthiah Research Library

அவினின் மற்றும் ரசிதங்கள். Other Medicinal Preparations of Opium. மாவியவைருகுலோறசு. Hydrochlorate of Morphia. இதைக் குறிக்குஞ் சின்னம் கா$^{17}$ ஐ$^{19}$ நீஅ$^{3}$ ஐகு, $^{3}$ஐ$^{2}$அ. இது பட்டுப் போல் மினுக்கமும், வெண்மையுமாய் வசையத்தக்க ஊசிபோன்ற கிரிஸ்தல்[1]களாகவிருக்கும். பரமாணு படுவதால் மாறுதல் அடையாது; தண்ணீரிலும் சீதிஉலுங் கரையும். தண்ணீரிற் கரைத்துக் காடிக்காரஞ்சேர்க்கத் தயிர்போன்ற வெண்ணடையல் விழும். இதின் பெலன் 200 பங்கு தண்ணீருக்கு 1 பங்கானல், அயபிரகுலோறிர[3] நீர் சேர்க்கக் கடுமையான நீலநிறங்கொள்ளுமானலும் கொஞ்ச நேரத்துக்கு மாத்திரம் நிற்கும். இதை வீருன நீதுரிக்கமில[4]த்தில் நனைக்க மஞ்சட்சிவப்பாகும். அயபிரகுலோறிரநீர் சேர்க்கப் பச்சை நீலநிறமாகும். சூட்டுக்குச் சேஷமின்றி ஆவியாய்விடும். இந்த உப்பில் இருபது கிறேனை அரை அன்சு வெந்நீரிற் கரைத்து மிகச் சொற்பமான அமோனம் சேர்க்க, ஆறும்போது கிரிஸ்தலான அடையல்விழும். இந்த அடையலைச் சொற்ப தண்ணீரிற் கழுவிக் காற்றில் உலர்த்த 15.18 கிறேன் நிறுக்கும்.

தன்மைகளும் உபயோகமும். அவினிரஞ்சத்தைப் போலவிருக்கும். அதைப்பார்க்க இதினல் நாடிநாளங்களில் உண்டாகுங் கிளர்ச்சியும், தலையிடி, கிறுதி, சோகம், மலவரட்சிகளும் குறைவு. ஆதலால் இது நயமென்று கொள்ளப்படும். என்றலும் மாவியமும் அதின் உப்புகளும் நயம் வருவியாத அனேக கருமங்களில் அவினல் நயங்காணும். நரம்பழற்சியைத் தணிக்கிறதற்கும் உடம்பைச் சாந்தப்படுத்துகிறதற்கும் இது விசேஷமாய்த் தகுந்தது. பெருந்தேயங்களில் இது வீருன கிராக நஞ்சு. உடம்பிலே தோலிற் குற்றிப் புகட்டினல் இதின்முழுச்செயலும் சீக்கிரத்திற் காணும்.

தேயம். அரைக்காற் கிறேன்முதல் ஒருகிறேன்வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். Preparations. மாவிய வைருகுலோறசு நீர். Solution of Hydrochlorate of Morphia. கொள். மாவியவைருகுலோறசு, நாலு கிறேன்; கிருசவைருகுலோறிக்கமிலம்[5], எட்டுத் துளி; திட்டசீது[6]இரண்டு திரும்; தண்ணீர் ஆறுதிரும். ஐருகுலோறிக்கமிலத்தையும், சீதையும், தண்ணீரையும், ஒன்ருய்க் கலந்து, மாவியவைருகுலோறசை அந்தக் கலவையிற் கரைக்கவும்.

தேயம். பத்து முதல் அறுபது துளி. இதில் ஒரு திருமில் அரைக்கிறேன் மாவியவைருகுலோறசு அடங்கியிருக்கும். இது லண்டன் வாகடத்திற் சொல்லப்பட்ட மாவியவைருகுலோறசு நீரில் அரைப்பெலனுனது.

மாவிய வில்லை. Morphia Lozenges. கொள். மாவியவைருகுலோறசு இருபது கிறேன்; தொலூரஞ்சம்[7] அரைஅன்சு; சுத்த சர்க்கரைமா, இருபத்துநாலு அன்சு; அகசிப்பிசின்மா[8] ஒரு அன்சு; அகசி முசிலாகு[9], போதியது; திஸ்திலித்த தண்ணீர் அரைஅன்சு. மாவியவைருகுலோறசைத் தண்ணீரில் கரைத்து, தொலூரஞ்சத்தையும் முசிலாகையும் ஒன்ருகவும், பிசினையும் சர்க்கரைமாவையும், பின்னென்ருகவும் கலக்கவும். முதற்கலவையிரண்டையுங் கலந்து அவைகளோடு பிந்தின கலவையையுஞ் சேர்த்து ஒரேதி

---

1 Crystal. 2 Spirit. 3 Perchloride of iron. 4 Nitric acid. 5 Dilute hydrochloric acid. 6 Rectified spirit. 7 Tincture of tolu. 8 Gum acacia. 9 Mucilage.

Digitized By Roja Muthiah Research Library

ரிஸையாக்கி, 720 வில்லைகள்செய்து சூடான காற்றறையில் மட்டான அனலில் உலர்த்தவும்.

ஒவ்வொரு வில்லையிலும் மாவியவைருகுலோறசு முப்பத்தாறில் ஒருபங்கு கிறேன் இருக்கும்.

மாவியஇபிகாக்குவில்லை. Morphia and Ipecac Lozenges. கொள். மாவியவைருகுலோறசு, இருபது கிறேன்; இபிகாக்குத் தூள், அறுபதுகிறேன்; தொலூரஞ்சம், அரை அன்சு; சுத்தசர்க்கரை மா, இருபத்துநாலு அன்சு; அகசிப்பிசின்மா, ஒரு அன்சு, அகசிமுசிலாகு, போதியது; நிஷ்திலித்த தண்ணீர் அரை அன்சு. தோலூரஞ்சத்தையும் முசிலாகையும் ஒன்றாகக் கலந்தபின் அவற்றோடு மாவியவைருகுலோறசைத் தண்ணீரிற்கரைத்துச் சேர்க்கவும். இக்கலவையை இபிகாக்கு, பிசின், சர்க்கரைமா, மூன்றும் நன்றாய்ச் சேர்ந்த கலவையோடு சேர்த்து எல்லாவற்றையும் ஓர்திரஸையாக்கி, 720 வில்லையாகப் பிரித்து சூடான பரமாணுவுள்ள அறையில் மட்டான அனலில் உலர்த்தவும். ஒவ்வொரு வில்லையிலும் மாவியவைருகுலோறசு, முப்பத்தாறிலொருபங்கு கிறேனும் இபிகாகு பன்னிரண்டிலொருபங்குகிறேனும் அடங்கியிருக்கும்.

இந்த வில்லையையும் இதற்கு முன் சொல்லப்பட்ட வில்லையையும் வாயிலிட்டுக் கரையவிட, இருமலுடன் தொண்டை மிடற்றின் அழற்சிகள் தணியும். காரியத்துக்குத் தக்கதாய் ஒருநாளைக்குப் பத்துமுதல் இருபதுவில்லை வழங்கலாம்.

மாவியதலஸ்தம். Morphia Suppositories. கொள். மாவியவைருகுலோறசு, ஆறுகிறேன்; கிடியபெஞ்சோவசு[1], அறுபத்துநாலுகிறேன்; வெண்மெழுகு, இருபதுகிறேன்; தியுரோமநெய்[2], தொண்ணூறு கிறேன். மெழுகையும் தியுரோம நெய்யையும் மென்சூட்டில் உருக்கவும். மாவியவைருகுலோறசைக் கிடியபெஞ்சோவசோடு முதலே உரலில் இட்டு அரைத்துக்கொண்டு, முன்னுருக்கப்பட்டவற்றோடு சேர்த்து மறுபடியெல்லாவற்றையுந் திறமாய்க் கலக்கவும். இக்கலவையை நீராயிருக்கையில் பதினைந்துகிறேன் கொள்ளக்கூடிய தகுந்த குகைகளில் வார்க்கவும். அல்லது அதைஆறவிட்டுப் பன்னிரண்டு சமபங்குகளாக வெட்டித் தலஸ்தத்துக்கு வசதியான வால்காலான அல்லது வேறுசாங்கமாக்கிக்கொள்ளவும்.

ஒவ்வொரு தலஸ்தத்தில் மாவியவைருகுலோறசு அரைக்கிறேன் இருக்கும். இத் தலஸ்தத்தைக் கடைக்குடல், கருப்பை சலப்பைகளினதும் அயற்பகுதிகளினதும் நோய்களில் கடைக்குடலுக்குள்ளே புகுத்த மெத்தச் சகாயமுண்டாகும். உள்ளே செலுத்துகையில் அபானத்தைச் சுருக்கும் பேசிக்கு அப்பால் அதைக் கவனமாய்ச் செலுத்திவிடப்பார்க்கவேணும்.

மாவியவசிதகு. Acetate of Morphia. இதற்குச் சின்னம. கா17 ஐ19 நீஅ3 கா2 ஐ4 அ3. இது தண்ணீரிலும் சீதிலும்[3]கரையக்கூடிய வெண்தூள். இதின் கரைவில் பதாசியை[4]விட, அடையும் அடையல் மிஞ்சிய அல்கலை[5]யாற் கரையும். நீதுரிக்கமில[6]மும் அயபிரகுலோறிர[7]மும் மாவியவைருகுலோறசி[8]ற் போலவே இதிற் சேஷ்டிக்கும். இந்த உப்புக்குச் சல்வுரிக்கமிலஞ்[9]சேர்க்கக் காடியான ஆவி கக்கும்.

தேயம். எட்டில் ஒருபங்கு கிறேன் முதல் அரைக்கிறேன் வரைக்குங் கொடுக்கலாம். கூடவுங் கொடுக்கலாம்.

1 Benzoated Lard. 2 Oil of Theobroma. 3 Spirit. 4 Potash. 5 Alkali, 6 Nitric acid. 7 Perchloride of iron. 8 Hydrochlorate of morphia. 9 Sulphuric acid.

Digitized By Roja Muthiah Research Library

ரசிதம். Preparation. மாவியவசிதசு நீர். Solution of Acetate of Morphia. *கொள். மாவியவசிதசு நாலு கிறேன்; கிருசஅசிதிக்கமில ம்*[1] *எட்டுத்துளி; திட்டசீது*[2] *இரண்டு திரும்; தண்ணீர் ஆறுதிரும். அமிலம் சீது தண்ணீர் மூன்றையும் ஒன்றாகக் கலந்து அக்கலவையிலே மாவியவ சிதசைக் கரைக்கவும்.*

தேயம். *பத்துமுதல் அறுபதுமினிம்*[3]. *இந்த நீர் இரண்டு திரூமில் மா வியவசிதசு ஒருகிறேன் அடங்கியிருக்கும். லண்டன் வாகடத்திற் குறித் த மாவியவசிதசுநீரைப் பார்க்க இதில் அரைப்பங்கு மாவியம் இருக்கும்.*

*நாருதீன். Narcotine. *இது அவினில் நூற்றுக்கு 1 முதல் 8 வீதமாக அடங்கியிருக்கிற கிரிஸ்தலிக்கக்கூடிய தடஸ்த*[5]*பொருள். நிறம் மணம் சு வையற்றது. முத்துப்போல் மினுக்கமானது. தட்டை ஊசிகளாக இருக் கும். தண்ணீரிலாவது பதாசி*[6]*நீரிலாவது கரையாது. திட்டசீதிற் கரையு ம். ஈதரில்*[7] *இன்னும் அதிகமாய்க் கரையும். கிருசஅமிலங்க*[8]*ளோடுசேர்த் தால் மெத்தக் கசப்பான நீர்களாகும் இந்த நீர்கள் கிரிஸ்தல் உப்பை ஈ வதுமில்லை, அயபிரகுலோறிரசு*[9]*ஞ் சேர்க்கும்போது நீலமாவதுமில்லை.*

தன்மை. *தொணிகம்*[10], *அந்திபிரூடி*[11]. *இது சுத்தியானல் மயக்குந் தன் மை சற்றுமிராது. பெருந்தேயத்திற் சுவேதனி.*

உபயோகம். *முறைச்சுரங்களிலும், பொதுவான பெலவீனத்திலும் வி சேஷமாய் நெடுநாட் பால்கொடுத்ததாலுண்டான பெலவீனத்திலும், கடுமை யான சுரங்கள் தாபித*[12]*வியாதிகளில்நின்று சுகப்படுகையிலும் கீழைத்தேச ங்களில் இது மெத்த நயந்த மருந்தாய்ப் பிரயோகிக்கப்படுகின்றது(13).*

தேயம். *தொணிகமாக அரை முதல் ஒருகிறேன், நாள் மூன்றுமுறை. அந்திபிரூடியாக இரண்டு முதல் மூன்று கிறேனைத் தண்ணீரிற் சொற்ப ஐ ருகுலோறிக்கமிலம் அல்லது சல்வுரிக்கமிலம் விட்டுக்கரைத்து நாள் மூன் றுமுறை கொடுக்கலாம்.*

## அவாகடச்சரக்கு Non Officinal.

பிரமதண்டு, குருக்கஞ்செடி. Argemone Mexicana. *இது அமரிக உஷ்டண தேசங்களுக்குரிய செடி. இப்போ இந்து அடங்கலும் உண்டு. இதின் கொட்டைகளைப் பிழிய ஓர் திர*[13]*எண்ணெய்வரும். மேற்கிந்திய வைத்தியர் இளம்பேதியாக இதை வெகுகாலம் வழங்கிவந்தார்கள் (14). ஒஷானசி பண்டிதர் இதற்கு மாறாகச் சொன்னதால் அதை விட்டுவிட்டார் கள். ஆகிலும் சற்காலம் வங்காளத்திலுள்ள பலவைத்தியர் இதின் தன்மை களைப்பற்றிப் பண்ணிய ஆராய்வுகளால் அரைத்திரும் தேயங்களில் இது இளம்பேதியாகச் சேஷ்டிக்கிறதென்றும், அதின்செரநீவ*[14]*தன்மையால் அது குடல்வலியைத் தணிக்கிறதென்றுங் காணப்பட்டது. இதின் தேயம்சொ ற்பமாயும் செயல் இளக்கமாயுமிருப்பதால் இதைவழங்குவது நியாயமாகும். பழையதானல் இதின் செயல்குறையும். பழையதைப் பார்க்கப் புதிதாய்ச் செய்தஎண்ணெயின்செயல் அதிகமாயும் ஒழுங்காயும்இருக்கும். எர்பிசுக்*[15] *கரப்பனுக்கும் மற்றும் வகையான தோல் வியாதிகளுக்கும் இதையிட் டால் அது அவைகளை மெத்தச் சார்தப்படுத்துமென்று பனவியர் வைத்திய*

---

1 Dilute acetic acid. 2 Rectified spirit. 3 Minim. 4 Crystallize. 5 Neutral. 6 Potash. 7 Ether. 8 Dilute acids. 9 Perchloride of iron. 10 Tonic. 11 Antiperiodic. 12 Inflammation. 13 Fixed oil. 14 Sedative, சாந்தனி. 15 Herpes.

(13) (14) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

ரும் பிறரும் சொல்லுகிறார்கள். இச்செடியிற் பிழிந்த பசைப்பான மஞ்ச ள்நிறச்சாற்றை மந்தமான கெட்ட புண்களுக்கு இடல் மெத்த நயமென்று சுதேசிகள் பாராட்டுகிறார்கள். இதை இப்படி வழங்கி மெத்த நயங்கண் டோமென்று வம்பாயிலுள்ள தைமக்கு வைத்தியர் சொல்லுகிறார். சுதேசிக ள் கண்ணோவில் இந்தச் சாற்றைக் கண்ணுக்கு இடும் வழக்கம் மோசமான து. கெமிஸ்த தன்மை அவுஷததன்மை இரண்டிலும் இந்தச் செடியை ஆ ராய்வது தகும்.

கூர்மிகனுசிப்பூடு, நீபால்மிகனுசிப்பூடு. Meconopsis aculeata and M. Nipalensis. இந்த இரண்டு பூண்டுகளும் இமய மலையிலுள்ளவைகள். இவைகள் வீறான மயக்குந் தன்மையும் நச்சுத்தன்மையு முடையவைகள். விசேஷமாய் வேரே இப்பெயர்ப்பட்டதென்றும் சிலர் எண்ணுகிறார்கள். ஆயினும் கூர்வகையின் வேரினது அலர்காலெகிருத்[1]தில் ஒருதிருமை ஒஷா னசியர் ஓர் நாய்க்குக் கொடுத்தபோது ஓர்செயலுங்காணப்படவில்லை. எனி னும் இது இன்னும் ஆராயப்படவேண்டியது.

கோவன் கறிடலிஸ் கிழங்கு. Corydalis Govaniana. இது இமயமலை யிலுள்ள ஓர் தாவரம். இதின் வேரில் கறிடலின்[2] என்ற கிரிஸ்தலி[3]க்கக்கூ டிய ஓர் சத்தை ஒஷானசியர் கண்டுபிடித்தார். இது முத்துப்போன்ற கிரி ஸ்தல்களாகவிருக்கும். அமிலங்க[4]ளிற் கரைந்து உப்புகளாகும். இந்த உ ப்புகள் கிரிஸ்தலியாமல், மெத்தக் கசப்பாயிருக்கும். இருபது கிறேனைக் கரைத்து நாய்களுக்குக் கொடுத்தபோது ஒரு வருத்தமுமுண்டாகவில்லை. இதை இன்னும் ஆராய்ந்தால் தொணிக்[5]மும் அந்திபிருடி[6]யுமாய்க்காணுமெ ன்று ஒஷானசியர் நம்புகிறார்.

## குருசிவிரங்கள்.

## CRUCIFERIAE.

### அமுருசிப்பூடு. HORSE RADISH.

**வாசம்.** யுரோபம், வடஅமரிகத்தின் எப்பகுதியிலும் செய்கைபண்ண ப்படும்.

**வாகடபகுதி.** பச்சைக் கிழங்கு. இது நீண்டு திரண்டு அரை இஞ்சுமு தல் ஒருஇஞ்சு பருமையாயிருக்கும். அடி குறுத்த பல காம்புகளாகவிரிந் திருக்கும். உட்பகுதி வெண்மை. சுவை காரமானது, மணமுள்ளது. இதைத் திஸ்திலித்தால்[7] மெத்தக்காரமான மணமும் சுவையுமுள்ள ஓர் அத் திர[8] எண்ணெய்வரும்.

**தன்மைகள்.** ஸ்திமுலம்[9], சுவேதனி[10], தியுறீசம்[11]. வெளியிற் பூச அழற் றிக் கொப்புளங்கொள்ளும். சப்ப உமிழ்நீர் பெருகும்.

---

1 Alcoholic extract. 2 Corydalin. 3 Crystal. 4 Acid. 5 Tonic, ஓசதி. 6 Anti-periodic, சுரமகற்றி. 7 Distillation. 8 Volatile oil. 9 Stimulant. தீவனி. 10 Diaphoretic. 11 Diuretic. அமுரிதி.

Digitized By Roja Muthiah Research Library

உபயோகம். அசத்துவ[1]மான நீர்க்கோவை வியாதிகள், காலிகவாதம்[2], ஸ்கேவி[3] முதலியவற்றுக்கு இது உண்மருந்தாகும். தானிகமாக பற்கொதிக்கு இதை மெல்லுவார்கள். இளக்கத்தாலுண்டாகுங் குரற்கனப்பில் கார்கிள்[4]லாக வழங்கப்படும்; சோர்வுமுதலியவற்றில் ஸ்திமுல பூச்சாக அல்லது களியாக வழங்கப்படும்.

ரசிதங்கள். Preparations. அமுறுசிக்கூட்டிஸ்பிறிது. Compound Spirit of Horse radish. கொள். துரிவின அமுருசிக்கிழங்கு, துவைத்த கைச்சற் றோடந்தோல், வகைக்கு இருபது அன்சு; துவைத்த சாதிக்காய், அரை அன்சு; புரூவுசீது[5], நாலுநாழி; தண்ணீர் ஒருநாழி; கலந்து மட்டான சூட்டில் நாலுநாழி திஸ்திலிக்கவும்.

தேயம். ஒன்று முதல் இரண்டு திரும். அமுருசிக் கிழங்குக்கு முருங்கைவேர்ப்பட்டை நல்ல பதிலாகும்.

## கடுகு. MUSTARD.

இதில் கருமை வெண்மையென்று இரண்டுவகை உண்டு.

வாசம். யுரோப்பம். பூமியின் மற்றும் பல பகுதிகளிலும் இது அதிகமாயுண்டு.

வாகடபகுதி. இரண்டு இனக் கடுகையுங் கலந்து தூளாக்கின கலவை. இது பசுமையான மஞ்சள்நிறமும் கார்ப்பும், கைப்பும் நெய்ப்புத்தன்மையும் காரமான சுவையுமுள்ளது. காய்ந்திருக்கையில் மணமில்லை. ஈரமாயிருக்கையிலோ காரமும் உறைப்பும் நாசி கண்களுக்கு மெத்த அழற்சியுமான ஓர்வகை மணம் வீசும். அவித்துக் குளிர்ந்த கடுகுநீர் இயோத ரஞ்சத்தால் நீலநிறமாகாது.

தன்மை. வெளியில் இட்டால் ருபிவாஷன்[6] தோலோடணைந்தபடி வெகுநேர மிருக்க விட்டால் கொப்புளிக்கும். உணவோடுசொற்ப அளவாக உட்கொண்டால் சீரணியாகும். ஒரு தேய்க்கரண்டி முதல் மூன்று தேய்க்கரண்டி வீதமாக கால்நாழி தண்ணீரிற் கரைத்துக் குடித்தால் விக்கினமின்றி விரைவில் வாந்திக்கும்.

உபயோகம். சுரவியாதிகள் தாபித வியாதிகளின் பிற்கூற்றில் மும்முரந்தணிந்திருக்கையிலும் உட்கஞ்செஸ்தம்[7] கருச[8]நூறல்சி[9], வாத நோய்கள், கோர்த்தகசேருமண்டலத்தின்[10] சரோக[11]நிலைமைகள் முதலியவற்றிலும் எதிரழற்சி[12]யும் திறீவதி[13]யும் தேவையாயிருக்கையில் கடுகுப்பற்று மெத்த உவப்பான வெளிமருந்தாகும். வெறியிலும் உடம்பின் பெலனைக் குறைக்காமல் இரைப்பையை வெறுமையாக்கவேண்டியிருக்கிற பிற கருமங்களிலும் இது வமனியாகக் கொடுக்கப்படும்.

ரசிதம். Preparation. கடுகுப்பற்று. Sinapism. கொள். கடுகுத்தூள், லீனமா, வகைக்கு இரண்டரை அன்சு; தண்ணீர் அல்லது இளவெந்நீர் பத்து அன்சு. லீனமாவைத் தண்ணீரோடு படிப்படியாய்க் கலந்து ஓயாமற் கலக்கிக்கொண்டு கடுகுத்தூளையுஞ் சேர்க்கவும்.

லீனமா இல்லாதிருந்தால் நெல்லரிசிமா சேர்க்கலாம். அல்லது அதை முற்றாய் விட்டுவிடலாம். பற்றுப் போட்டபின் எரியும்போதாவது தோல் நல்லாய்ச் சிவந்தஉடனாவது அதை எடுக்கவும்.

---

1 Atonic. 2 Chronic rheumatism. 3 Scurvy. 4 Gargle. 5 Proof spirit. 6 Rubefacient, சோணதி. 7 Congestion, சஞ்சயம். 8 Spasmodic. 9 Neuralgia. 10 Cerebro-spinal system. 11 Morbid. 12 Counter-irritant. 13 Derivative.

Digitized By Roja Muthiah Research Library

கடுகுத்தேல். Oil of Mustard. இது கருங்கடுகிலுள்ள திரவெண்ணெய்யை[1] பிழிந்தெடுத்தபின் அதைத் தண்ணீரோடு டிஸ்டிலித்[2]தெடுத்த எண்ணெய். இது நிறமற்றது, அல்லது சொற்பமஞ்சள்நிறமுள்ளது; விசேஷ கிருவிதம்[3] 1.015; அலக்காலி[4]லும் ஈதர்[5]ரிலும் தாராளமாயும் தண்ணீரிற் சொற்பமாயுங் கரையும். காரமான மணமுள்ளது; உறைப்பும் எரிவுமான சுவையுடையது. தோலில் இட சீக்கிரத்திற் கொப்புளிக்கும்.

கடுகுக்கூட்டு லினிமேன். Compound Liniment of Mustard. கொள். கடுகுத்தேல், ஒருதிராம்; மெசீரியவீதரெசிருத்து[6], நாற்பதுகிரேன்; பூரம் நூற்றிருபதுகிரேன்; ஆமணக்குத்தேல், ஐந்துதிராம்; திட்டசீது நாலுஅன்சு. மெசீரிய வெசிருத்தையும், பூரத்தையும் சீதிற் கரைத்து, கடுகுத்தேலையும் ஆமணக்குத்தேலையுங் கூட்டவும்.

வாதங்கள் சோர்வுகளுக்கு இது நல்ல ஸ்திமுல பூச்சு.

## *இந்துக் கடுகு. INDIAN MUSTARD.

வாசம். இது இந்துவின் எப்பகுதிகளிலுமுண்டாக்கப்படும்.

வாகடபகுதி. கொட்டை. இது இந்துதேசக் கடைகளில் வழங்குவது. நிறம் கருஞ்சிவப்பு. வெண்கடுகு கருங்கடுகின் தன்மைகள் இதற்குமுண்டு. அவைக்காக இதை வழங்கலாம். பிரதானமாய்க் கடுகுப்பற்றுக்கு உத்தமமாகும். இவைகளிலுள்ள திர எண்ணெய்யைப் பிழிந்துதள்ளினுல் இவைகளின் காரமதிகரிக்கும். பழையதானுற் காரம் மெத்தக் குறையும்; ஆகையாற் புதுக்கடுகை வழங்கவேண்டும்.

# கப்பரிடியங்கள்.

# CAPPARIDEAE.

### அவாகடச்சரக்கு. Non Officinal.

வேளை. Gynandropsis pentaphylla. இது இந்துவிலுள்ள வாடிக்கையான பூண்டு. பெருங்காயத்தைப் போன்ற மணமுடையதாயும் அதில் இதமாயுமிருப்பதால் இது அந்துஸ்பசி[7] யாகுமென்று சிறி ஜோன்சு சொல்லுகிருர். இதின் இலைகளைத் துவைத்து அணைக்கத் தோல் சிவந்து கொப்பளிக்குமென்றும் கொப்புளப்பற்றின் வருத்தமில்லாமல் அதினுற் காணும் சகாயம் பெரும்பாலும் இதினுற்காணுமென்றும் வைத்தர் சொல்லுகிருர், காதுவாதைக்கு இதின்சாறு பேர்பெற்ற மருந்தென்று இந்துக்களும் இப்பூண்டுவளரும் மேற்கிந்துவின் குடிகளும் இதைக் கொண்டாடுவார்கள். இதின் கொட்டை கடுகுக்கொட்டைக்குப் பதிலாக வழங்கப்படுகிறதென்றும் அதிலிருந்து நல்ல எண்ணெய் பிழியுமென்றும் சாற்று வைத்தியர்சொல்லுகிருர்.

---

1 Fixed oil. 2 Distill. 3 Specific gravity. 4 Alcohol. 5 Ether. 6 Etherial Extract of Mezereon. 7 Antispasmodic சுருசுக்கினி.

Digitized By Roja Muthiah Research Library

## கனேலாசியங்கள்.

## CANELLACEAE.

### வெண்கனேலம். CANELLA ALBA.

வாசம். *மேற்கிந்து.*

வாகடபகுதி. *பட்டை. இது சுருள்சுருளாக அல்லது உடைந்த துண்டுகளாக வரும். கடுமையும் வெண்மஞ்சள் நிறமுமானது. உட்பக்கத்தின் நிறம் சற்றே வெண்மைகொண்டது. கராம்புபோல் சுகந்த மணமும் மிளகுபோல் உறைப்பான சுவையுமுடையது. இதின் வீறு ஓர் அத்திர*[1] *எண்ணெயிலும் கைப்பான எசிருத்திவிலும்*[2] *ராளத்திலு*[3]*ம் அடங்கியிருக்கிறது.*

தன்மைகள். *சுகந்த ஸ்திமுலம்.*

உபயோகம். *இது முக்கியமானதல்ல. பெரும்பாலும் மற்றுஞ் சரக்குகளோடு சேர்த்து, பெலவீனம், குன்மம்*[4]*, ஸ்சேவி*[5] *முதலிய நோய்களுக்குக் கொடுக்கப்படும்.*

தேயம். *தூளாகப் பத்து முதல் முப்பது கிறேன்.*

ரசிதம். *இது வரியாத்து வைனில்*[6] *ஓர் கூட்டாகச்சேருகின்றது.*

## பிக்சினியங்கள்.

## BIXINEAE.

### *சால்முக்கிரம் CHAULMUGRA.

வாசம். *இது மலாய், கிழக்கிந்துதேசக் காடுகளில் வடக்கு அசம் வரைக்கும் அப்பால் இமயமலையின் அடிநெடுக மேற்கே சிக்கீம் வரைக்கும் உண்டு.*

வாகடபகுதி. *கொட்டைகள். இவைகளின் நீளம் ஒரு இஞ்சுவரைக்கிருக்கும். முட்டை வடிவம். ஒன்றோடொன்று நெருங்கி வளர்வதினால் நசிந்த சாங்கங் காட்டும். ஒவ்வொரு கொட்டைக்கும் நரைக் கபிலநிறமும் அழுத்தமுமான நொருக்கல் ஓடு உண்டு. ஓட்டுக்குள்ளே எண்ணெயுள்ள அல்புமின்*[7] *இருக்கும். அதில் மூன்று நரம்புகளையுடைய இதய வடிவான கொதிலீரம்*[8] *அடங்கிய முளையுண்டு. கொட்டைகளைப் பிழிய எண்ணெய்வரும். இந்த எண்ணெய் சற்றே துர்க்கந்த மணமும் சுவையுமுடையது. கடையில்வருமெண்ணெய் பெரும்பாலும் அசுத்தமானது.*

தன்மைகள். *அல்திறவதொனிகம்*[9] *பெருந்தேயமாகில் வமனி*[10]*.*

உபயோகங்கள். *குஷ்டத்துக்கு இது உச்சிதமானது. ஸ்துருமம்*[11] *குட்டைக்கரப்பன்கள், வாதம் இவைகளுக்கும் இது நயமாகக்கண்டது.*(15)

---

1 Volatile. 2 Extractive. 3 Resin. 4 Dyspepsia. 5 Scurvy. 6 Wine of Rhubarb. 7 Albmen. 8 Cotyledon. 9 Alterative tonic. 10 Emetic. 11 Struma.

(15) அனுபந்தம் பார்.



Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** கொட்டையைத் தூள்செய்து ஆறு கிறேன் எடுத்து குளிகையாக்கி நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். இந்தப் பிரமாணத்தில் மும்மடங்கு நால்மடங்கு வரைக்கும் அல்லது உவட்டிப்புக்காணுமட்டும் படிப்படியாய்க் கூட்டிக்கொடுக்கலாம். உவட்டிப்புக் காணும்போது தேயத்தைக் குறைக்கலாம், அல்லது மருந்தைக் கொஞ்சநாளைக்கு நிறுத்தலாம். இதுவே உத்தமமான முறை. எண்ணெய்யின் தேயம் ஐந்து ஆறு துளி. தூளைப்போல இதையும் படிப்படியாய்க் கூட்டிக் கொடுக்கலாம். எண்ணெய் தானிகஸ்திமுல[1]மாகவும்வழங்கப்படும். தூளை வங்காள வாகடத்துக்குரிய பின்வரும் அன்கெளுக வழங்கலாம்.

**சால்முக்கிரவன்கேன்.** Chaulmugra Ointment. சால்முக்கிர கொட்டைகளைப் போதிய அளவாக எடுத்து ஓட்டை அகற்றிப்போட்டுப் பசையாக அரைத்துத் தகுந்த பதமாய்வரப் போதிய தனியன்கென்[2] சேர்க்கவும். இது தோல்வியாதிகள் பலவுக்கு விசேஷமாய் ஏர்பிசு[4] தீனியம்[5] என்பவைகளுக்கு பிரயோகிக்கப்படும்.

## அவாகடச்சரக்குகள். Non-officinal.

**நீரடிமுத்துமரம்.** Hydrocarpus inebrians. இது மலையாளம், திருவாளங்கோடு, இலங்கைகளுக்கு உரிய மரம். என்ஸ்லி சொல்லுகிறபடி இதின்கொட்டைகள் சால்முக்கிரகொட்டைகளைப்போன்றவைகள். அவைகளிலும் இவைகள் சிறியவைகள். இவை ஒரு தலைப்பிற் சற்றே கூரானவைகள். நமுங்கற்ற நெடும் வரைகளை உடைய முரணான பருக்கன் ஓட்டால் மூடப்பட்டிருக்கும். பச்சைக்கொட்டை உவட்டிப்பான மணமும் நெய்ப்பும் சற்றே காரப்பான சுவையுமுள்ளது. இதிற் பிழிந்தெடுத்த எண்ணெய் குஷ்டத்துக்கு அவுஷதமென்று சுதேசிகள் பாராட்டுகிறார்கள். இதையொத்த சால்முக்கிரக்கொட்டை அனுகூலம்பெற்றிருக்கிறபடியால், பிரதானமாய் அது கிடையாத இடங்களில் இதைக் கொடுத்துச் சோதிப்பது நல்லது. இதின் தேயம் அரைத்திறாம். நாள் இரண்டுமுறையென்று என்ஸ்லி சொல்லியிருக்கிறார். குறைந்த தேயத்திற் தொடங்கிப் படிப்படியாய்க் கூட்டிக்கொடுப்பதே புத்தி.

**தாளிசபத்திரி.** Flacourtia Cataphracta. இந்தச்செடியின் சிறு இலைகளும் தளிர்களுமே இந்து பதார்த்தசாரத்துக்குரியவைகள். அரைத்திறாம் தேயத்தில், இது வயிற்றுக் கழிச்சல், பெலவீனம் முதலியவற்றுக்கு அவுஷதமாக அதிகமாய் வழங்கப்படுகின்றது. இது நயமோ என்பதைப்பற்றிச் சுதேசிகளே சாட்சி.

**தனகு.** Cochlospermum Gossypium. இதிலிருந்து குத்திரப் பிசின் எடுக்கப்படும். இந்தப் பிசின் வடமேற்கு மாகாணங்களில் திரககந்துப்பிசினுக்குப் பதிலாய் வழங்கப்படும். இது அற்பமான சரக்கு.

---

1 Local stimulant. 2 Simple ointment, 3 Heipes, 4 Tinea.

Digitized By Roja Muthiah Research Library

## போலிக்கலியங்கள்.

## POLYGALEAE.

### சேனிகம். SENEGA.

வாசம். ஐக்கமரிகம்.

வாகடபகுதி. காய்ந்தவேர். இது கிளைத்த மூலவேரையுடைய முடிச்சுகளுள்ள வேர்த்தண்டு; தென்னீர்க்கிலும் பருமையுள்ளது. திருகிப் புருவம் விழுந்தது. பட்டை மஞ்சட்கபிலநிறம். ஓர்வகையான உவட்டுமணம். சுவை முதல் இனிப்பு, பிறகு கார்ப்பும் உறைப்புமாகி வாயூறப்பண்ணும். உட்பகுதி மரத்தது. சுவை வீறுஅற்றது. பொலிக்கலிக்கமிலம்[1] என்ற கார்ப்பான சத்திலேயே இதின் வீறு இருக்கும்.

தன்மைகள். ஸ்திமுலம்[2], எக்ஸ்பெக்தறம்[3], தியுறீசம்[4], எம்மெனகக்கு[5]; பெருந்தேயத்தில் வமனி[6], விரேசனி[7].

உபயோகம். சுவாசப்பைகளின் மத்திம[8] காலிக[9] நோய்களுக்கும் ஒழுங்கற்ற செயலாற் குறிக்கப்பட்ட இதயத்தின் கரணக்குழப்பங்களுக்கும் சுரங்களின் பின்வரும் நீர்க்கோவைக்கும் அமெனுறீய[10]ம் திஸ்மெனுறீய[11]ங்களுக்கும் இது நல்லது.

தேயம். வேர்த்தூளில் பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன்.

ரசிதங்கள். சேனிகவின்வூசம். Infusion of Senega. கொள். துவைத்த செனிகவேர், அரை அன்சு; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேர மூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் இரண்டுமுறை கொடுக்கலாம். நெருக்கமாயுங் கொடுக்கலாம்.

சேனிகரஞ்சம் Tincture of Senega. கொள். செனிகவேர் பருக்கன்தூளாக இரண்டரை அன்சு. புரூவுசீது[12] அரைநாழி. அடைத்த பாத்திரத்திற் செனிகவேரைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். பிறகு சியந்தனி[13]யில் விட்டு நீர் வடிந்தபின் மிச்சமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிக்கவும். அப்பால் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழியாகப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். அரைத் திரும் முதல் இரண்டு திரும் வரைக்கு. இது ஸ்திமுல, எக்ஸ்பெக்தற, தியுறீசக் கலவைகளுடன் உவப்பாகச் சேரும்.

### கிரமேரி. KRAMERIA. RHATANY.

வாசம். பெரூ, பொலீவியம்.

வாகடபகுதி. காய்ந்த வேர். இது ஏராளமானநீண்டு திரண்ட வைரக்கிளைகளை உடையதாயிருக்கும். பருமை ஏறக்குறைய ஒரு இஞ்சு. வெளிப்பக்கஞ் சொறியுங் கபிலச் சிவப்புநிறமும்; உள்ளே மஞ்சட் சிவப்புநிறம். கடுந்துவர். உமிழ்நீரைச் சிவப்பாக்கும். இதின்தன்மைகள் தனின்[14] மிகு

---

1 Polygalic acid. 2 Stimulant. 3 Expectorant, கிட்டேவனி. 4 Diuretic, அமுரிதி. 5 Emmenagogue, ருதுபிரேசி. 6 Emetic. 7 Cathartic. 8 Subacute. 9 Chronic. 10 Amenorrhoea. 11 Dysmenorrhoea. 12 Proof spirit. 13 Percolator. 14 Tannin.

Digitized By Roja Muthiah Research Library

வதாலாகும். அது 100 க்கு 38 முதல் 42 வீதமாய் இதிலடங்கியிருக்கும்.

**தன்மைகள்.** கடுமையான துவர், தொணிகம்[1].

**உபயோகம்.** காலிக[2] வயிற்றுக்கழிச்சலுக்கும் விபல[3] இரத்தப்பெருக்குகளுக்கும் இது உள்ளே கொடுத்து நயங்கண்டது. லுகறியம்[4], பீனசம், கண்ணோ, அபான ஒடு முதலிய நோய்களுக்குந் தானிகமாயிட நல்லது.

**தேயம்.** வேர்த்தூளில் பத்து முதல் இருபது கிறேன்.

**ரசிதங்கள்.** Preparations. **கிரமேரியின்வூசம்.** Infusion of Krameria. கொள். இடித்த கிரமேரி வேர், அரை அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேர மூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு, நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

**கிரமேரியிரஞ்சம்.** Tincture of Krameria. கொள். இடித்த கிரமேரி வேர் இரண்டரை அன்சு; புரூவுசீது அரைநாழி; அடைத்த பாத்திரத்தில் கிரமேரி வேரைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனியில் இட்டு நீர் வடிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். பிறகு சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டுநீர்களையுங் கலந்து, அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** அரைத் திரும் முதல் இரண்டு திரும்.

**கிரமேரியேசிறத்து.** Extract of Krameria. கொள். கிரமேரிவேர் பருக்கன்தூளாக ஒரு இறுத்தல்; திஸ்திலித்த தண்ணீர் போதியது. கிரமேரிவேரை முக்கால்நாழி தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்துப் பிறகு சியந்தனியில் ஏற்றி, ஆறு நாழி நீர் வடியுந்தனையும் அல்லது கிரமேரி வேரின் சாரமிறங்குந்தனையும் திஸ்திலித்த தண்ணீர் விடவும். வடிந்த நீரை, நீர்மத்தியில் வறட்டவும்.

**தேயம்.** ஐந்து முதல் இருபது கிறேன்.

நூகிறனுடம், பிரசில் தேசங்களிலுண்டாகிற சவனில் கிரமேரி உச்சிதமானதென்று சிலர் எண்ணுகிறார்கள்,

## அவாகடச் சரக்குகள். Non-Officinal.

**துறேதலரியடுப்போலிக்கலம்.** Popygala Crotalarioides. **தேலிவியடுப்போலிக்கலம்.** P. Telephioides. இவைகளுள் முதலாவது இமயமலையிலுள்ளது. மற்றது சென்னையிலுள்ளது. சலதோஷம் முதலிய கதார்[5]நோய்களுக்குச் சுதேசிகள் இவைகளை மருந்தாக வழங்குகிறார்கள். இவைகளைச் சோதித்தால் நல்லது.

---

1 Tonic, துசதி. 2 Chronic. 3 Passive. 4 Leucorrhoea. 5 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

## தாமரிஸ்னியங்கள்.

## TAMARISCINEAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

சிறுசவுக்குமரம். Tamarix Gallica. *இது இந்துதேசமடங்கலு முள்ளவோர் சிறுச் செடி. சுதேசிகளாற் கயர்மருந்தாக வழங்கப்படுகிற ஓர்வகை மாசக்காய் இதில் உண்டு. இந்தக் காயின் கயர்த்தன்மையைப் பற்றி ஸ்தக்சு பண்டிதர் மெத்த விதந்து பேசி இதின் பெலஞன கஷாயத்தை நாற்றமான அழுகும் புண்களுக்கும் அரையாப்புக்கும் இடுவது திறமென்று தமது பரீட்சையாற் சொல்லியிருக்கிருர், இந்தக் காய்களிலுள்ள தனிச்சகமிலம் கலிச்சமிலங்களின் செயலைப்பற்றியே இவை சேஷ்டிக்கின்றன. திசந்தெரி[1] தியரீயங்க[2]ளுக்குச் சுதேசிகள் இவைகளை உள்ளுக்குங் கொடுக்கிருர்கள். இந்தச் செடியில் ஓர்வகை மன்ஞவும் உண்டு. ஆயினும் இது இந்துவில் எடுக்கப்படுவதுமில்லை; கடைகளில்வருவதுமில்லை.*

சிவப்புச் சிறுசவுக்குமரம். Tamarix Orientalis, *இதிலும்மாசக்காய் உண்டு. இது முந்தினதைப் போன்றதாயினும் அதிற் சிறியது. இதுவும் துவராக வழங்கப்படும். இதின் பட்டை கைப்பும் துவரும் தொணிகமுமாகும்.*

## கற்றீவிரங்கள்.

## GUTTIFERAE.

### சியாம் மக்கிமரம். கம்போச்சு. GAMBOGE TREE OF SIAM (16)

வாசம். *சியாம் தேசம்.*

வாகடபகுதி. *பிசின் ராளம்[3]. இது திரண்ட தடிகளாக வரும். கபில நிறமும் அழுத்தமும் மினுக்கமுமான முறிகளாக இலகுவில் முறியும். தண்ணீர் பூச இந்த நிறம் மஞ்சளாகும் இது மணமற்றது, கார்ப்பான சுவையுள்ளது. கொதிநீரிற் கரைத்து ஆறின இதின் இமல்ச[4]மானது இயோத[5]நீருக்குப் பச்சையாகாது. இதிலே கம்போச்சிக்கமிலம்[6] என்ற ஓர் ராளம் அமைந்திருக்கும். இதின் வீறு இந்த ராளத்தைப் பற்றியது. இதின் உத்தம இனங்களில் இந்தச் சத்து 100 க்கு 71 பங்கு முதல் 74 பங்கு வரைக்கு இருக்கும்.*

தன்மை. *இது ஓர் நயமான நீர்அடிக்கும் விரேசனி[7]. அந்தெல்மிந்தி[8].*

உபயோகங்கள். *நீர்க்கோவைகளுக்கு இது பேர்பெற்ற மருந்து. மேலும் கடுமையான மல வறட்சிக்கும் அமெனுறீயத்துக்[9]கும் நல்லது. கிருமி கொல்லியாகவும் வழங்கப்படும்.*

---

1 Dysentery 2 Diarrhoea. 3 Gum-resin. 4 Emulsion. 5 Iodine water. 6 Gambogic acid, 7 Hydragogue Cathartic. 8 Anthelmintic,கிருமிகொல்லி. 9 Amenorrhoea.

(16) *அனுபந்தம் பார்.*

Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** ஒரு கிறேன் முதல் நாலு கிறேன் வரைக்கு மாவாக அரைத்துக் கொடுக்கவும். இதை இப்படித் தனியே கொடுக்கும்போது வாந்தி முன்னுக்குத் தோன்றாமற் தடுப்பதற்குப் பதாசிகாபனசு[1] வன்சபு[2] அல்லது கலமலோடு[3] சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

**ரசிதம். Preparation. கம்போச்சுக் கூட்டுக்குளிகை. Compound Gamboge Pill.** கொள். கம்போச்சு ஒரு அன்சு; பபாடுசகை[4], ஒரு அன்சு; சறுவாககூட்டுச் சூரணம், ஒரு அன்சு; வன்சபுத்தூள் இரண்டு அன்சு; சிறாபம்[5] போதியது. கம்போச்சையும் சகையையும் தனித்தனியாய் அரைத்துத் தூளாக்கிக் கறுவாக்கூட்டுச் சூரணத்தோடு சேர்த்து அவற்றோடு சிறாபத்தைக் கலந்து எல்லாவற்றையும் ஒன்றாய்ப் பிசைந்து திரளையாக்கிக்கொள்ளவும். பபாடுசகைக்குப் பதிலாக இந்துச்சகை சேர்க்கலாம்.

**தேயம்.** ஐந்து முதற் பத்துக் கிறேன்.

## *இந்துமக்கிமரம். முக்கிமரம். INDIAN GAMBOGE TREE.

**வாசம்.** மைசூர் கருநாடகங்களிலும் சென்னையின் மற்றும் பகுதிகளிலும் உள்ளது.

**வாகடபதார்த்தி.** பிசின்ராளம்[6]. இது சியாம்மக்கியைப் போன்றது. ஆயினும் அதைப் போலத் திரண்ட துண்டுகளாக வராமல் பல பருமையும் பல சாங்கமுமான கட்டிகளாக வரும். இது தண்ணீரிற் சுறுக்குக் கரைந்து இமல்ச[7]மாகும். கிறிஸ்திசன் பண்டிதர் இதைச் சோதனைசெய்து இதிலே கம்போச்சிக்கமிலம்[8]என்ற ராளம் 100 க்கு 77 பங்கு முதல் 80 பங்கு வீதமாயிருக்கக் கண்டார். இதின் வீறு இந்தச் சத்திலேயே இருக்கிறது போலும்.

**தன்மைகளும் உபயோகங்களும்.** சியாம்மக்கியின் தன்மை உபயோகங்களுக்குச் சரி. நீர்க்கோவை கடுமையான மலவரட்சி முதலியவற்றின் பரிகரிப்பில் அதற்குப் பதிலாக இதை வழங்கலாம். (17)

**தேயம்.** மூன்று நாலு கிறேன்; பதாசிதுவிதாத்தரசோடு[9]கலந்து கொடுப்பதே உத்தமம்.

## *கோகமரம். KOKUM BUTTER TREE.

**வாசம்.** மலையாளம், கொங்கணம் என்ற தேசங்களிலும் சென்னையின் மற்றும் பகுதிகளிலும் காட்டுச் சோலைகளில் உள்ளது.

**வாகடபதார்த்தி.** கோகநெய்[10]. இது அதின் கொட்டைகளிலிருந்து எடுக்கப்படுகிறது. எடுக்கும்வகையாவது: கொட்டைகளைச் சிலநாளைக்குவெய்யிலிலிட்டுக் காயவைத்துத் துவைத்துத் தண்ணீரில் அவிக்க எண்ணெய் பிறக்கும். ஆறவிடும்போது கட்டியாக இறுகும். இதைச்சுத்தமாக்க, நொருக்கலும் வெண்மஞ்சள் நிறமும் தண்மையும் குளிர்ந்த சுவையுமுள்ளதாகும். வாயிலிடும்போது வெண்ணெய்யைப் போல் உருகி, சிறியஐசுக்[11]கட்டி வாய்க்குட் கரைந்தாற் போன்ற குளிர்ச்சியை நாக்கிற் பிறப்பிக்கும்.

---

1 Carbonate of Potash. 2 Hard soap. 3 Calomel. 4 Barbadoes aloes. 5 Syrup. 6 Gum-resin. 7 Emulsion. 8 Gambogic acid. 9 Bitartrate of Potash. 10 Kokum Butter. 11 Ice.

(17) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

இது 98 பாகை சூட்டில் உருகும். கொட்டையிலிருந்து 100 க்கு 10 வீதமாய் எண்ணெய் வரும்.

ரசிதங்களும் உபயோகங்களும். இந்த உறைந்த நெய்யிலிருந்து அஞ்சென்கள், துலஸ்தங்கள் செய்வதற்கும் மற்றுஞ் சிகிச்ச பிரயோகங்களுக்கு வழங்குவதற்குமாக அது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. புண்கள், உதடுகள் கைகள் முதலிய பகுதிகளின் வெடிப்புகளுக்கு இது பூசப்படும். இது திமிநெய்க்கு நல்ல பதிலென்று தைமக்த வைத்தியர் சொல்லியிருக்கிறார்.(18)

அவாகடச் சரக்கு. Non-Offinal.

மங்குஸ்தீன் மரம். Mangosteen. இந்த மரத்தின் மதுரமான பழத்தின் தோல் நல்ல துவரானது. சிமித்தர் இதிற் செய்து கண்ட சோதனைப்படி தனினும்[1] ராளமும்[2] மங்குஸ்தீன்[3]என்ற கிரிஸ்தலிச்[4]கக் கூடிய பதார்த்தமும் இதிலே அடங்கியிருக்கும். திசந்தெரி[5]யின் பிற்கூற்றிலும் சுதேசிகளுக்குண்டாகும் காலிக தியறியத்திலும்[6] வாறிங் வைத்தியர் இதைப் பின்வருமுறையே கொடுத்து நயங்கண்டிருக்கிறார் கொள். காய்ந்த மங்குஸ்தீன் தோல், இரண்டு அன்சு; கொத்தமல்லி,சீரகம் வகைக்கு ஒன்றரைத் திரும்; தண்ணீர் ஒரு நாழி. கலந்து அரைநாழியாகுந்தனையும் மெல்லமெல்லக் காய்ச்சவும்.

தேயம். நாலு அன்சு, நாள் இரண்டுமுறை அவினிரஞ்சத்தோடு[7]சேர்த்தாவது சேராமலாவது கொடுக்கலாம். கழிச்சலுக்கு இது கைகண்ட மருந்தென்று ரீன் வைத்தியர் சொல்லுகிறார். திசெந்தெரிக்கு இதாற் காணும் நயம் குறைவென்று அடோய்சன் என்ற உதவிச் சத்திரீகன் நினைக்கிறார். இதின் வீறான கஷாயம்[8] நல்ல துவர்ப்பான பூச்சுமருந்தாகும் என்று வேற்சுவைத்தியர் சொல்லுகிறார்.

புன்னை. Calophyllum Inophyllum. இந்துவடங்களுமுள்ள இந்தமரத்தின் கொட்டைப் பருப்பிலிருந்து நல்ல மணமுள்ளவோர் திரவெண்ணெய் பிழியும். இதை வாதத்துக்கு நல்ல பூச்சென்று சுதேசிகள் மெத்த மதிக்கிறார்கள். பட்டையிலிருந்து ராளம்போன்ற வோர் பதார்த்தம் பொசியும். இதைப் பழைய சிகிச்சை வாகடர் சொன்ன, தாகமவகராளமென்று தவறாய் நினைத்தார்கள். இது சசந்தைப் போன்றதென்றும் மந்தவிரணங்களுக்கு இட நல்ல மருந்தென்றும் வங்காள வாகடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. சரியான கிழக்கிந்துத் தாகமவகம் சென்னையைச் சேர்ந்த மலையாளம் முதலிய பகுதிகளுக்குரிய Calopyllum Calaba என்ற ராளமரத்திலிருந்து வருகிறதென்று வின்லி சொல்லியிருக்கிறார்.

நாகசாப்பூ. Nagesa Flowers. இச்சரக்கு மெசுவ வெறீயம் Mesua Ferrea நெட்டிலைக்கலிசாக்சியன் Calysaccion longifolium என்ற மரங்களின் காய்ந்த, வாசனைப் பூக்களே. இந்தப் பூவுக்குச் சொற்ப தீவன தன்மை உண்டென்று எண்ணுகிறார்கள். ஆயினும் வாசனைக்காகவும் பட்டுகளைச் சாயங்காய்ச்சுவதற்காகவும் இப்பூக்கள் பிரதானமாய் வழங்கப்படும். மருந்துக்குக் கூடிய வீறு சொற்பம். மெசுவ வெறீயத்தின் கொட்டை

1 Tannin. 2 Resin. 3 Mangostine. 4 Crystallize. 5 Dysentery. 6 Diarrhoea. 7 Tincture of Opium. 8 Decoction.

(18) அனுபந்தம்பார்.

...LAI ADIGAL ...

Digitized By Roja Muthiah Research Library

யிற் பிழிந்த எண்ணெய்யானது வட கருநாடகத்துச் சனங்களால் வாதத்துக்குப் பூச்சு மருந்தாக மெத்த வழங்கப்படுகிறதென்றும் பட்டையும் வேரும் உத்தமமான கைப்புத்தொனிகம் என்றும் ராசு வைத்தியர் அறிவித்திருக்கிறார். இவை இன்ஃபூசம்[1] திகாத்தம்[2]களாக வழங்கப்படும்.

## திப்தேருகார்பியங்கள்.

## DIPTEROCARPEAE.

### * கர்ச்சமரம். GURJUN TREE.

**வாசம்.** வங்காளம் முதற் தெனசரிம் வரைக்குமுள்ள கீழிந்துவின் காடுகளில் உள்ளது.

**வாகடபகுதி.** மரத்திற் கீறிச் சூடுகொட்டும்போது வடிகிற பல்சம்[3]போன்ற பொசிவான தேலராளம்[4]. இது தண்ணீரிலும் இலேசான சொற்பநீர்த்தன்மையுடையது. கருஞ்சிவப்புநிறங் கொண்டது. மேல்வளத்திற் பச்சையான மங்கற்தோற்றமுள்ளது. ஒலிவெண்ணெயின்[5] தடிப்புள்ளது. கபேவ[6]த்தைப்போன்றிருந்தும் அதிலும் வீறு குறைந்த மணமும் சுவையுமுள்ளது. சீசாவில் இட்டு 270 பாகை சூடுகொட்டக் கலங்கித் தடிக்கும். இதைச் சம்பங்கு பெஞ்சொலோடு[7] குலுக்க,கலங்கலான நீராகும்.

**தன்மை.** சளிச்சவ்வை[8]யும் பிரதானமாய்ச் சன்னமுரி[9] உறுப்புகளின் சளிச்சவ்வையும் அருட்டும் ஸ்திமுலம்[10]; தியுறீசம்[11].

**உபயோகம்.** கனுறீயத்[12]துக்கும் பெரும்பாலும் கபேவம் கொடுக்கப்படும் மற்றும் நோய்களுக்கும் இது வாய்ப்பாகக் கண்டது. (19)

**தேயம்.** அரைத் திறும் முதல் ஒருதிறும்[13] வரைக்குத் தனித்தாவது இமல்சத்திலாவது[14] நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**குங்குலியமரம். Shorea robusta.** இந்த மரத்தின் ராளமே வங்காளக் கடைகளில் டாமர் என்று வருவது. ஒஷானசியர் தெரிந்துபார்த்த வகைகள் நல்ல உருவொளியும் நிறமற்றவைகளுமாயிருந்தன. கடைகளிற் பெரும்பாலும் விற்பதோ, வெண்மை முதல் கருங் கபிலநிறம் வரைக்கு வித்தியாசப்படும். இதற்கு சுவை மணம் இல்லை. அலக்காலிற் சொற்பங்கரையும். ஈதரில் ஏறக்குறைய முழுதுங் கரையும். தார்ப்பந்தீனிலும் திரவெண்ணெய்களிலும் தாராளமாய்க் கரையும். இது திரவெண்ணெய்களோடு சேர்ந்து பிளாஸ்தர்களாகும். இதின் உத்தம வகைகள் யுறோப வாகடத்திற்சொன்ன பைன் குங்குலியங்களுக்குச் சரிவந்தது. கடைகளில் வருகிற கருங்குங்குலியத்தின் ஒருபகுதி இந்த வகுப்புக்குரிய இன்னொரு மரத்திற் பொசிவது.

---

1 Infusion. 2 Decoction. 3 Balsam. 4 Oleo-resin. 5 Olive oil. 6 Copaiva. 7 Benzole. 8 Mucous membrane, 9 Genito-urinary. 10 Stimulant. 11 Diuretic, 12 Gonorrhoea, 13 Drachm. 14 Emulsion,

(19) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளைக்குன்றிகம். Vateria Indica. தென்னிந்துவின் கடைகளில் வருகிற வெள்ளை டாமர் இதிலேயே பொசிவது. இதின் வகைகள் நிறம், வாசனை, இறுக்கங்களில் மெத்த வித்தியாசப்படும். சில சொற்ப பச்சை நிறமும், உரப்பும் ஏகத்துவ[1]முமானது. உடைந்தாற் பளபளக்கும். வேறு சிலவோ, வெண்மஞ்சள்நிறமாய்ச் சிற்றறைகளை அடக்கியிருக்கும். எடுக்கும் முறையைப்பற்றியும், பொசியும் மரத்தின் வயசைப்பற்றியுமே இந்த வித்தியாசங்கள் தோற்றும். இது பிரவையானவெளிச்சங்கொண்டு எரிந்து நல்ல வாசனை வீசும். சொற்பமாய்ப் புகைக்கும். சூட்டினாலுஞ், சொற்பமாய்க் கர்ப்பூரஞ் சேர்ப்பதாலும் அலக்கா[2]லிற் கரையும். மென்சூட்டில் மெழுகு எண்ணெய்களோடு சேர்ந்து உத்தமமான ராளவன்கெ[3]ணும். வாகட குங்குலியத்துக்கு இது பதிலாகும். பழத்தை நசித்துக் காய்ச்ச, தாவர நெய் என்ற இறுக்கமான எண்ணெய் வரும். காலிகவாதத்[4]துக்கும் வருத்தமான வேறு சில நோய்களுக்கும் இது பேர்பெற்ற பூச்சுமருந்து. அன்தென்[5]கள் தைலங்களுக்கு இதைத் தாரக[6]மாகக் கொள்ளலாம்.

வாசனையோபீயம். Hopea Odorata. பிரமதேசத்தில் உண்டாகிற இந்த மரத்தில் வாசனையான ஓர் ராளம் பொசிகிறது. இந்த ராளத்தின் மாவே பிரமதேசத்தாருக்குள்ளே பேர்பெற்ற ஸ்திப்திகு[7]. இதின்செயல் மிகாணிக[8] தன்மையாய் மாத்திரமே இருக்கும்.

## மல்வாசியங்கள்.

## MALVACEAE.

### பருத்திச்செடி. COTTON PLANT.

வாசம். இது பூமியின் உஷ்டண மத்திமோஷ்டண பகுதிகளில் அதிகமாய்ச் செய்யப்படும்.

வாகடபகுதி. அந்தந்த வகையான பருத்திக்கொட்டையிலுள்ள மயிர். இதுவே பருத்திப்பஞ்சு. இதிற் குழலுள்ள வெண்மயிர்கள் இருக்கும். காயும்போது தட்டையாகும். இப்படியிருக்கையில் தண்ணீரில் அமிழ்த்திச் சூக்குமாட்சி[9]யாற் பார்த்தால் இவைகள் இடைக்கிடை குறுக்கு வரிகளாற் குறிக்கப்பட்ட பொருத்துகளுள்ள ஒடுக்கமுந் தட்டையுமான, தனித்தனி நாடாக்கள் போலத் தோற்றும்.

தன்மை உபயோகம். வைத்தியத்திற் பருத்திப்பஞ்சின் முதற்பிரயோசனம் வேக்காட்டுக் காயங்களுக்கு இடுவதே. பரமாணுபடாதபடி காத்துச் சமமான அனலைப் பேணிக்கொள்வதால் அக்காயங்களுக்கு இதால் நயமுண்டாகும். இந்நயத்தைப் பற்றி உதர்த்தம்[10] தாபிதங்[11]கொண்ட இடங்களுக்கும் இது இடப்படும்.

ரசிதங்கள். Preparations. வெடிப்பஞ்சு. Gun cotton. கொள். பருத்

1 Homogenity. 2 Alcohol. 3 Resin-ointment. 4 Chronic rheumatism. 5 Unguents. 6 Base. 7 Styptic, ஸ்தம்பனி. 8 Mechanical, யாந்திரிக. 9 Microscope. 10 Erysipelas, எரிசிபலச. 11 Inflammation.



Digitized By Roja Muthiah Research Library

திப்பஞ்சு, ஒரு அன்சு; சல்வுரிக்கமிலம்[1] நீதுரிக்கமிலம்[2] வகைக்கு ஐந்து அன்சு. குழியம்மியில் அமிலங்களைக் கலந்து அக்கலவையிற் பருத்திப்ப ஞ்சை அமிழ்த்தி, அது நன்றாய் நனையுந்தனையும் ஆடித்தடியால் மூன்றுமினி வரைக்குக் கலக்கவும். பிற்பாடு பஞ்சைத் தண்ணீருள்ளவோர் பாத்திரத் திற் போட்டு ஆடித்தடியால் நன்றாய்க் கலக்கவும். அத் தண்ணீரை ஊற் றிவிட்டுப் பஞ்சின்மேல் இன்னுந் தண்ணீர்வார்த்து திரும்பக் கலக்கவும். ஊற்றிய தண்ணீரோடு பாரிதகுலோறிரம்[3] சேர்க்க அடையல் விழுவதொழி யுந்தனையும் இப்படியே தண்ணீர்சேர்த்தல் கலக்குதல் தெளித்தல்களைத் திரு ம்பத் திரும்பச் செய்யவும். அப்பால் பஞ்சுத் திரளையை வடிதாளில் உண த்தி நீர்மத்திகத்தில்[4] வறட்டவும். சோதனை. ஈதரும்[5] திட்டசீதும்[6] சேர் ந்த கலவையில் தீவிரமாய்க் கரையும். சூட்டுக்குச் சேஷமின்றி வெடிக் கும்.

கலோடியம். Collodium. கொள். வெடிப்பஞ்சு, ஒரு அன்சு; ஈதர் முப்பத்தாறு அன்சு; திட்டசீது, பன்னிரண்டு அன்சு. ஈதரையுஞ் சீதை யுங் கலந்து வெடிப்பஞ்சை அவைகளோடு சேர்க்கவும். சிலநாளைக்கு வை த்திருந்து, அடையல் இருந்தால், தெளிந்த நீரைத் தெளித்தெடுத்து நன்றாய டைத்த சீசாக்களில் வைக்கவும். இது இலேசிற் தீபற்றி எரியக்கூடிய ஈ தர் மணமுள்ள நிறமற்ற நீர். பரமாணுவிற் திறந்துவைக்கக் காய்ந்து தண் ணீர் சீதுகளிற் கரையமாட்டாத மெல்லிய உருவொளியுள்ள சவ்வாகிவிடும்.

உபயோகம். வெட்டுக்காயங்கள், புண்கள், தோல்வியாதிகள், உதடுக ள் முலைக்காம்புகளிற் காணும் வெடிப்புகள், வேக்காடுகள், உதர்த்தம்[5] மு தலியவற்றுக்குக் கலோடியம் பெரும்பாலும் இடப்படும். இது சுத்தமாயி ருக்கையில் வெடிக்கக்கூடியதாயிருப்பதே இதைப் பூசுவதற்குப் பெரிய த டை. இத் தடை பின்னே வரும் மருந்தினால் அதிகப்பற்றுக்கு நீங்கும்.

ரசிதம். சவட்கலோடியம். Flexible Collodium. கொள். கலோடி யம், ஆறு அன்சு; கனடபல்சம், நூற்றிருபது கிறேன்; ஆமணக்கெண்ணெ ய் ஒருதிரும். கலந்து நன்றாயடைத்த சீசாவில் வைக்கவும்.

## வண்டுக்காய். OKRA.

வாசம். மேற்கிந்து தீவுகள்; மத்திமோஷ்டணதேசங்களடங்கலும் தீனு க்காக இது அதிகமாய்ச் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. முற்றாத பச்சைக் காய்கள். இவை நாலு ஆறு இஞ்சு நீ ளமும், அடியில் ஒரு இஞ்சு பருமையுமாய் நுனியொடுங்கிச் சுருக்குகளு டையதாயிருக்கும். மயிர் விசேஷமாய்ப புருவங்களிலுள்ளதாயுமிருக்கும். புருவங்களின் தொகை அறைகளின் தொகைக்குச் சரியாய் ஐந்து முதல் எட்டுவரைக்கிருக்கும். ஒவ்வொரு அறையிலும் அழுத்தமான உருண்ட கொட்டைகள் ஒரு நிரை யிருக்கும். அதற்குள்ளே மணம் சுவையற்ற பா ணி கனக்க நிற்கும். கொட்டையிலும் பூண்டின் மற்றெப்பகுதியிலும் பி சுபிசுப்பான வழுவழுப்பு அதிகமாயுண்டு.

தன்மைகள். இதுநல்ல இமாலியம்[8] திமல்சம்[9] தியுறீசம்[10].

உபயோகங்கள். கதார்[11] நோய்களுக்கும், சலக்கடுப்புக்கும், சலச்சிறு

1 Solphuric acid. 2 Nitric acid. 3 Chloride of Barium. 4 Water bath. 5 Ether. 6 Rectified spirit. 7 Erysipelas. 8 Emollient. சுரத்தனி. 9 Demulcent, சமனி. 10 Diuretic, அமுரிதி. 11 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

ப்புச்கும், வெட்டைக்கும், இமாலியம், திமல்சம் தேவையான மற்றும்நோய்களுக்கும் இதைத் தைரியத்துடன் கொடுக்கலாம்.

ரசிதம். வண்டுக்காய்த்திகாக்ஷம். Decoction of Okra. கொள். முற்றாத பச்சை முனைகள், குறுக்காய்ச் சீவி, மூன்று அன்சு; தண்ணீர் முக்கால்நாழி. அரைநாழியாய் வற்றுந்தனையுங் காய்ச்சிச் சீலையில் வடித்துச் சுவைக்குப் போதிய இனிப்புச் சேர்த்துக்கொள்ளவும்.

தேயம், மூன்று முதல் ஆறு அன்சு; தாராளமாகவுங் குடிக்கலாம். சூடான இந்தத் திகாக்ஷத்தின் ஆவியை உறிஞ்சுதல், இருமல், தொண்டையழற்சி, குரற்கம்மல்களையும், தொண்டை மிடற்றின் மற்றும் நோய்களையுந் தணிப்பதற்கு மெத்த உவப்பானது. பச்சைக் காய்கள் கிடையாதிருந்தால் காய்ந்தவைகளை வழங்கலாம்.

கிப்சன் வைத்தியரும் வேறு பேர்களுஞ் சொல்லுகிறபடி பச்சைக் காய்களைத் துவைத்தால் நல்ல சாந்தியான பாப்பை[1]யாகும்.

## அவாகடச் சரக்குகள். Non-Officinal.

மலைதாங்கி. Sida acuta. இந்தப் பூண்டின் வேரில் பாணித்தன்மையும் கைப்புத் தன்மையுங் கலந்திருக்கும். கற்குத்தாவில் இதைச் சோதித்துப் பார்த்தஅளவில், இன்வூச[2]மாக இதைக் கொடுக்கும்போது இது வெயர்வையை அதிகப்படுத்திப் பசியைக் கிளப்பி வேறுஞ் சில காரியங்களில் விலைபெற்ற கைப்புகளுக்கு நல்ல பதிலாகுமென்று காணப்பட்டது. இதை இன்னுஞ்சோதித்துப்பார்ப்பதுநல்லது. சைட(Sida) என்ற வகுப்பைச்சேர்ந்த மற்ற இனங்களின் வேர்களும் பிரதானமாய் மயிர்மாணிக்கவேரும் வாதநோயின் பரிகரிப்புக்குச் சுதேசிகளுக்குள்ளே பெயர்பெற்றிருக்கின்றன.

பூவரசமரம். Thespesia Populnea. இதின் பழங்களில் பிசுபிசுப்பான மஞ்சள்நிறச் சாறு நிரம்ப உண்டு. தென்னிந்துவின் சனங்களுக்குள்ளே சிரங்குக்கும் மற்றும் சருமநோய்களுக்கும் இந்தச் சாறு நல்ல பூச்சுமருந்தாகின்றது. இதைப் பூசுவதோடு இந்த மரத்தின் பட்டை அவித்த கஷாயத்தால் நோய்த்த பகுதிகளை நாடோறுங் கழுவிவருவார்கள். வாறிங்கு வைத்தியர் இந்த மருந்தைப் பலமுறைகளிற் சோதித்துப் பார்த்தபோது சிலரில் இதால் நயங்கண்டது. அனேகரிலோ நயங்காணவில்லை.

சப்பாத்துப்பூ. Hibiscus Rosa Sinensis. கருஞ்சிவப்பு நிறமான இந்தப் பூவிதழின் பிழிந்த சாறு கடுதாசியிற் பூச நீலச் சிவப்புநிறங்கொடுக்கும். இப்படி எத்தனப்படுத்தின கடுதாசி கெமிஸ்த சோதனை[3]யில் லிற்மஸ்தாளு[4]க்கு நல்ல பதிலாகும் என்று வைத்தர் சொல்லுகிறார். கொஞ்சக் காலத்தின்பின் மட்டான வீறுள்ள அமிலந்[5]தானும் இந்தத் தாளில் செயல் காட்டாதாகையால் இந்தத் தன்மை திறமாய்க் காட்டுவதற்கு, தேவையான ஒவ்வொருமுறையும் அதைப் புதிதாய்ச் செய்துகொள்ளவேண்டும். இந்தப் பூவிதழின் இன்வூசம், காய்ச்சல்களுக்கு நல்ல திமல்ச[6] பானமாகுமென்று முடீன் செறீவு சொல்லுகிறார்.

முள்ளிலவு. Bombax Malabaricum. இது இந்துவின் சிலபகுதிகளிலுள்ளது. இந்த மரத்துக்கு சுதேச வாகடங்கள் கூறும் இரண்டு சரக்குகள் உரியவைகளென்று சொல்லியிருக்கிறார்கள். இது தப்பிதம். 1 Mucherus என்ற கயரானவோர் பிசின். இது மங்கலும் கருமையுமான முடிச்சுப்போ

---

1 Poultice. 2 Infusion. 3 Chemical test. 4 Litmus paper. 5 Acid. 6 Demulcent.

Digitized By Roja Muthiah Research Library

ன்ற துண்டுகளாக வரும். சில, மாசக்காய்போற் தோற்றமுள்ளவைகளா யும் மணமற்றவைகளாயும், கடுங் கயரான சுவையுள்ளவைகளாயுமிருக்கும். இதிலே அதி பிரமாணமான தனிக்கமிலங்[1] கலிக்கமிலங்[2]கள் உண்டு. கய ர்கள் வேண்டிய நோய்களுக்கு இதை உபயோகமாய் வழங்கலாம். இத்த ன்மையில் இது வங்காளத்திலேயுள்ள புரசு(Butea) என்ற மரத்தின் கோவுக் குக் கீழ்த்தரமானதென்று அ. ச. டதா் சொல்லுகிறார். இது என்னமரத்திற்பி றந்ததென்று தெரியாது. 2 கடைகளில் வருங் காய்ந்த சிறிய கிழங்குகள். இவை சுருங்கியவைகளாய்த் தென்னீர்க்களவு பருமையும் ஒரு இஞ்சு இர ண்டு இஞ்சு நீளமும் வெளியில் மங்கல்நிறமுமாய் மணம் ருசியற்று பிசுபி சுப்புள்ளவைகளாயிருக்கும். இவை ஏககதிலீதன்[3]என்ற பூண்டுவகுப்பை ச்சேர்ந்தனவென்று இவைகளின் நெசவினால் விளங்குகின்றது; ஆகையா ல் இம்மரத்தின் கிழங்கல்ல. நிலப்பனைக்கிழங்கைப் பார்க்கவும். சுதேசிகளு க்குள்ளே இந்தக் கிழங்குகள் மெத்தப் பேர்பெற்றிருக்கும். என்றாலும் விசே ஷித்த வீறுள்ளன என்பதைப்பற்றி இன்னுஞ் சந்தேகம்.

பப்பரப்புளி. Adansonia digitata. இது ஆபிரிகதேசத்துக்குரியமர ம். தற்காலத்தில் இந்துவின் பல பகுதிகளில் வளர்க்கப்படுகின்றது. இது திசந்தெரி[4]க்குப் பேர்பெற்ற மருந்தாகையால் கவனிக்கப்படத் தகுந்தது. விறுங்கு வைத்தியர் தமது சொந்த அனுபவத்தைப்பற்றியே இதற்குச் சாட் சியாயிருக்கிறார். இதின் கொட்டையைச்சூழ்ந்திருக்கிற நல்ல புளிப்பான களியே மருந்தாக வழங்கப்படுவது. இக்களியாற் சுறுக்கு நயங்காணுதிரு ந்தால் பழத்தின் ஓட்டைத் தண்ணீரோடு சேர்த்தரைத்துப் பசையாக்கிக் கொடுக்கலாம். களியைக் கொடுத்துப்பார்த்த அற்சின்சன்வைத்தியர், இதி ன்செயல், கயர்த்தன்மையைப்பற்றியதல்ல, இதின் குளிர்ச்சி, அமூரிதி[5]த்தன் மையைப் பற்றியதென்கிறார். இந்த மரத்தின்பட்டை முறைச்சுரங்களின் பரிகாரிப்பிற் கினியத்[6]துக்குப் பதிலாகத் துசாசேன் என்பவரால் வழங்கப் பட்டது. அவர் இதை வெந்நீர் அரைநாழிக்கு துவைத்த பட்டை ஒரு அ ங்க வீதமாக அவித்து மூன்றிலொன்றாக வற்றினபின் கொடுத்தார். அதி தேயமாகக் கொடுத்த கினியத்துக்கு மாறாத சில காய்ச்சல்கள் இதற்கு மாறி னதை அவர் கண்டார். இந்த மரத்தின் தன்மைகள் நல்லாய்க் கவனிக்கப் படத் தகுந்தவைகளென்று கிப்சன் வைத்தியர் சொல்லுகிறார்.

## ஸ்தேர்குலியாசியங்கள்.

## STERCULIACEAE.

### தியுபுரோமம். THEOBROMA.

வாசம். உஷ்டண அமரிகதேசம்.

வாகடபகுதி. தியுரோமநெய். இது கொட்டைகளை அரைத்து அவித் துப் பிழிந்தெடுத்தபின், உறைந்த எண்ணெய். இது கொழுப்பின் தடிப்பு ம் வெண்மஞ்சள்நிறமும், சகுலாத்து[7]ப்போன்ற மணமும், குளிர்ந்த நல்ல

1 Tannic acid. 2 Gallic acid. 3 Monocotyledon. 4 Dysentery. 5 Diuretic. 6 Quinia. 7 Chocolate.

Digitized By Roja Muthiah Research Library

சுவையுமுள்ளது. அதின் முறிவு அந்நிய பதார்த்தம் ஒன்றுந் தோன்றாமல் சுத்தமாயிருக்கும். பரமாணுபடுவதால் பாண்டல் பிடியாது. 122 பாகை சூட்டில் உருகும்.

தன்மைகள் உபயோகங்கள். இது இமாலியம்[1] பிரதானமாய் மற்றும் மருந்துகளுக்குத் துணையாகச் சேரும். இது தனிக்கமில தலஸ்தம்[2]; இரச தலஸ்தம், மாலிய[3]தலஸ்தம், வங்ககூட்டுத் தலஸ்தங்களிற் சேருகின்றது.

## லீனியங்கள்.

## LINEAE.

### லீனம். LINUM USITATISSIMUM. FLAX.

வாசம். தென்யுரோபம்; யுரோபத்தின் பலபகுதிகளிலும், ஆசிய வட அமரிக தேசங்களிலும் இது அதிகமாய்ச் செய்யப்படும்.

வாகடபகுதி. லீனக்கொட்டைகள். இவை நீள வட்டமும் தட்டையுமாய் விளிம்பும் ஒரு தலைப்புங் கூராய், வெளிப்பக்கம் அழுத்தமும் மினுக்கமும் கபிலநிறமுமாய் உள்ளே வெண்மஞ்சள் நிறமாய் மணமற்று வழுவழுப்பான எண்ணெய்ச் சுவையுடையனவாயிருக்கும்

தன்மை. இமாலியம், திமல்சம்[4], போஷணி[5].

உபயோகங்கள். சுவாச உறுப்புகள், சனன சல[6] உறுப்புகளின் சளிச்சவ்வுக[7]ளினதும் மற்றுஞ் சளிச்சவ்வுகளினதும் அழற்சி தாபிதங்களுக்கு[8]இது வழங்கப்படும்.

ரசிதங்கள். லீனவின்வூசம். Infusion of Linseed. கொள். இடித்த லீனக்கொட்டை நூற்றறுபது கிறேன். நறுக்கிய அதிமதுர வேர், ஒரு திறும்; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் நாலு மணிநேரம் ஊறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். இரண்டு முதல் நாலு அன்சு. அல்லது விரும்பிய அளவுக்குக் குடிக்கலாம். எலுமிச்சம்பழச்சாறும்[9] சர்க்கரையுஞ் சேர்த்தால் அதிகம் உருசிகொடுக்கும்.

லீனப்பாப்பை. Linseed Poultice. கொள். லீனமா, அல்லது லீனக்கொட்டையை அரைத்து அதிலுள்ள திரவெண்ணெ[10]ய்யை நீக்கியமா, நாலு அன்சு; ஒலீவெண்ணெய், அரை அன்சு; கொதிவெந்நீர் பத்துஅன்சு. லீனமாவை வெந்நீரோடு படிப்படியாய்ச் சேர்த்துக் கலக்கிக்கொண்டு எண்ணெய்யையுஞ் சேர்க்கவும்.

இது ஓர் நல்ல சாந்தியான பாப்பை.

லீனதேலம். Linseed oil. இது சூடில்லாமல் லீனக்கொட்டையைப் பிழிந்தெடுத்த எண்ணெய். இது பிசுபிசுப்பும், மஞ்சள்நிறமும், சொற்ப மணமும், நெய்ச்சுவையுமுள்ளது.

லீனக்கொட்டையை 200 பாகை சூட்டில் அவித்தபின் பிழிந்தெடுத்த லீன எண்ணெய்யே பெரும்பாலும் கிடைக்கக்கூடியது. இது கருமைநிற

---

1 Emollient, சாந்தனி. 2 Tannic acid Suppository. 3 Morphia. 4 Demulcent, திமலி. 5 Nutrient. 6 Genito-urinary. 7 Mucous membrane. 8 Inflamation. 9 Lime Juice. 10 Fixed oil.

Digitized By Roja Muthiah Research Library

மும் அதிக மணமும் சுவையுமுடையது. அரை அன்சு ஒரு அன்சு தேய த்தில் இது விரேசனியாகும். ஆயினும் இதை உள்ளுக்குக் கொடுப்பது அரிது. வேக்காட்டுக் காயங்களுக்குரியவோர் லினிமெனில்[1]சேருவதே வைத்தியத்தில் இதின் விசேஷ உபயோகம்.

## சைகுவிலியங்கள்.

## ZYGOPHYLLEAE.

### குவயக மரம். GUAIACUM TREE.

வாசம். மேற்கிந்து தீவுகள்.

வாகடபதார்த்தங்கள். 1 இந்த மரத்தின் சிராய். இது பெரிய குற்றிகளாக வரும். மெத்த வைரமானது, குறுக்கே வெட்டிப் பார்த்தால், மையத்தை நோக்கும் வரிகள் துலாம்பரமாய்த் தோற்றுது. மரத்தின் வெளிப்பங்கு வெண்கபிலநிறம். உட்பங்கு கரும்பச்சையான கபிலநிறம். மருந்துக்கு வேண்டிய குவயகச்சிராய், சீவல்களாக வரும். இவைகள் நீதுரிக்கமிலத்[2]துக்கு நீலநிறங்கொடுப்பதால் இவைகளை மற்றும் மரச் சிராய்களினின்று பகுத்தறியலாம். 2 அதின் ராளம். இது அடி மரத்திற் கீறுவதாலும் சூடு காட்டுவதாலும் இயல்பாய்ப் பொசியும். இது கபிலநிறமான பருங் கட்டிகளாக வரும். ஒடிந்தாற் பளபளக்கும். விளிம்புகள் உருவொளியாயிருக்கும். சுவை முதலிற் சற்றே கைப்பு, மறுபடி உறைப்பு, பிறகு தொண்டையில் எரிந்துகொண்டுநிற்கும். மணம் சற்றே பல்சம்[3]போன்றமணம். சூடுகொட்டினுல் அல்லது மாவாக்கினுல் சுகந்த மணம் வீசும். இதைத் திட்டசீதிற் கரைத்துப் பச்சையான புடேது[4]க்கிழங்குச் சீவலின் உட்பக்கத்திற் பூசும்போது தெளிந்த நீலமுண்டாகும்.

தன்மை. ஸ்திமுலம்[5], சுவேதனி[6], அல்திறவம்[7], எம்மெனகாக்கு[8].

உபயோகம். சிவ்லிசு[9], வாத குவாத[10]நோய்களுக்கு இது வெகுகாலமாகப் பேர்பெற்ற மருந்து. திஸ்மெனூறீயம்[11] அமெனூறீயங்க[12]ளுக்கும் கருப்பையின் மற்றுநோய்களுக்கும் இது சத்தியுள்ளது. மேலும் தன்சிற்றபம்[13] திவ்தீரி[14],புறங்கறீயம்[15], சருமரோகங்கள் முதலியவற்றுக்கு இது கொடுத்து நயங்கண்டது.

தேயம். ராளத்தில் பத்துமுதல் முப்பது கிறேனை உண்டையாக அல்லது இமல்சமாகக்[16] கொடுக்கலாம்.

ராளத்தின் ரசிதங்கள். குவயமிஸ்துர். Guaiacum Mixture. கொள். குவயக ராளம் தூளாக, அரை அன்சு; சுத்த சர்க்கரை அரைஅன்சு; அகசிப்பிசின்மா[17] கால்அன்சு; கறுவாநீர் அரைநாழி, குவயகராளத்தைச் சர்க்கரை பிசினேடு கலந்து அரைத்துக் கறுவாநீரைப் படிப்படியாய்ச் சேர்க்கவும்.

தேயம். அரை முதல் இரண்டு அன்சு; நாள் இரண்டு மூன்றுமுறை

---

1 Liniment. 2 Nitric acid. 3 Balsam. 4 Potatoe. 5 Stimulant. 6 Diaphoretic. 7 Alterative. 8 Emmenagogue. 9 Syphilis. 10 Gout. 11 Dysmenorrhoea. 12 Amenorrhoea. 13 Tonsilitis. 14 Diphtheria. 15 Bronchorrhoea. 16 Emulsion. 17 Gum Acacia.

Digitized By Roja Muthiah Research Library

கொடுக்கலாம். ஒவ்வொரு அன்சு கலவையிற் பதினொரு கிறேன் ராளம் இருக்கும்.

துவயகவமோனரஞ்சம். Ammoniated Tincture of Guaiac. கொள். குவயகராளம், மாவாக நாலு அன்சு; அமோன சுகந்த சீது[1] அரைநாழி. நன்ருயடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு வடித்துப் பிறகு அரைநாழியாகப் போதிய அளவுக்கு அமோன சுகந்த சீதைக் கூட்டவும்.

தேயம். அரை முதல் ஒரு திருமை முசிலாகு[2] சேர்த்து இமல்சமாக்கி நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கவும். சுவேதனி[4]யெமெனகாக்காக[5] கொடுப்பதற்கு இதுவே உத்தமமான முறை. குவயகராளம் கலமற்கூட்டுச்குளிகை[6]யிலும் ஓர் கூறுகச் சேருகின்றது.

துவயகச்சிராயின் ரசிதம். சார்சகூட்டுத் திகாச்சத்[7]தில் மாத்திரமே குவயகச்சிராய் ஓர்கூறுகச் சேருகின்றது.

அவாகடச்சரக்கு Non-Officinal.

நெருஞ்சி. Tribulus lanuginosus. இந்தப் பூண்டின் எல்லாப் பகுதிகளும் விசேஷமாய் இதின் காய்கள் தியுறீசமாகத்[8] தென்னிந்துவிற் பேர்கேட்டிருக்கின்றன. வாறிங்கு பண்டிதர் இதைச் சோதனைசெய்தபோது சிலரிற் சிறுநீரை அதிகமாயூறச்செய்ததெனக் கண்டார். சிலரிலோ அதால் ஒருசெயலுந் தோன்றவில்லை. இதைக் கொடுக்கும் முறையாவது; நெருஞ்சிக்காய், துவைத்து, இரண்டு அன்சு; மல்லி[9] இரண்டு திரும், தண்ணீர் அரைநாழி. கால்நாழியாய் வரக் காய்ச்சிச் சீலையில் வடித்து ஒருநாள் வரையிற் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொடுக்கலாம். காய்களையும் வேரையும் நெல்லரிசியோடு போட்டுக் கஞ்சியாகக் காய்ச்சிக் கனக்கக் குடிப்பதே சுதேசிகள் வழங்கும் பின்னொருமுறை. இப்படிக் குடிக்கும் நீர்தானே மருந்தொன்றுமில்லாமல் தியுறீசமாகச் சேஷ்டிக்கப் போதியது.

# ருதாசியங்கள்.

# RUTACEAE.

## அறுதம். RUE.

வாசம். தென் யுறோபம்; அமரிகத்திலும் மற்றுமிடங்களிலும் இதுசெய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. பூண்டு முழுவதும், மெத்தக் கெட்ட மணமும், கைப்பும் உவட்டுமான சுவையுமுடையது. ஓர் அத்திர வெண்ணெய்[10]யும், ஓர் கைப்பெசிருத்திவு[11]மே இதின் சத்துகளாகும்.

தன்மை. ஸ்திமுல[12]மும், அந்தெல்மிந்தியும்[13]. ஸ்திமுலமாய்ச் சராயுமண்டலம்[14], நரம்புமண்டலங்க[15]ளிலேயே இது விசேஷமாய்ச் சேஷ்டிக்கும். தேயம் அதிகப்பட்டால் இது ஓர் மயற்கழற்சி[16] நஞ்சாகும்.

---

1 Aromatic spirit of Ammonia. 2 Mucilage. 3 Emulsion, 4 Sudorific. 5 Emmenagogue. 6 Compound pill of calomel. 7 Compound decoction of Sarsae. 8 Diuretic, அமுரிதி. 9 Coriander. 10 Fixed oil. 11 Bitter extractive. 12 Stimulant, தீவனி 13 Anthelmintic, கிருமிகொல்லி. 14 Uterine system. 15 Nervous system. 16 Narcotico-irritant poison.

Digitized By Roja Muthiah Research Library

உபயோகங்கள். இஸ்தேரி[1] அமெனுறீயங்க[2]ளுக்கும் மற்றுங்கருப்பை நோய்களுக்கும் இது முற்காலத்தில் பேர்பெற்ற மருந்து. எபிலெப்சி[3]யும் குழந்தைகளின் வலிப்புகளுக்கும் வாயுப்பொருமல் வலி முதலியநோய்களுக்கும் இது கொடுக்கப்பட்டது. தற்காலத்திலோ இதின் பிரயோகம் அரிது.

ரசிதம். அறுதத்தேலம். Oil of Rue. இது பச்சிலைகள்காய்களிலிருந்து திஸ்திலி[4]க்கப்படும். இது வெண்மஞ்சள் நிறமும் கெட்ட மணமும் காரமான கைப்புச் சுவையுமுள்ளது.

தேயம். இரண்டு முதல் ஐந்து துளியைச் சர்க்கரையோடும் தண்ணீரோடுஞ் சேர்த்து அரைத்துக் கொடுக்கலாம்.

இதற்கு நெருங்கிய இனமான அர்வதா[5] என்ற பூடு இந்துவின் மிகுதியான பகுதியிலே தோட்டங்களிற் செய்யப்படும். அறுதம் உதவும் நோய்களுக்கு மசமதிய வைத்தியர் இதை மெத்த மதிக்கிறார்கள். அறுதப் பூட்டுக்கு இது பூரண பதிலாகும்.

## கஸ்பாரி மரம். CUSPARIA.

வாசம். தென்னமரிகத்தின் உஷ்டண பகுதியின் சோலைகள்.

வாகடபகுதி. பட்டை. இது ஓரங்கள் கோலிய நேரிய துண்டுகளாக வரும். தடிப்பு அரை லீன்[6]முதல் ஒரு லீன் வரைக்கிருக்கும். விளிம்புகள் சிவப்பட்டிருக்கும். வெளித்தோல் புள்ளிவிழுந்து கபிலம் அல்லது மஞ்சள்நரை நிறமாயிருக்கும். உட்பக்கம் மஞ்சட்கபிலமாயும் படலம்படலமாயுமிருக்கும். மெத்த ஒடியலானது. கைப்புஞ் சற்றே சுகந்தமுமானது. வெட்டுவாயைக் கண்ணாடியாற் பார்த்தால் வழக்கமாய் வெள்ளைப் புள்ளிகளும் நுண்வரிகளும் தோன்றும். உட்பக்கத்தை நீதுரிக்கமில[7]த்தாற் தொட்டால் இரத்தம்போற் சிவப்பாய் வராது.

தன்மை. இது சுகந்தமான தொணிகம்[8]. அந்திபிருடி[9].

உபயோகம். தாழ்ந்த அசத்துவ[10]மான நச்சுக் காய்ச்சல்களுக்கு இது அதிகமாய் வழங்கப்படும். ஆயினும் இதின் நயம் சந்தேகம். இந்தக் காய்ச்சல்களுக்குப் பின்னும் ஆளை இளைக்கப்பண்ணும் மற்றும் வியாதிகளுக்கும் பின்னே காணும் பெலவீனத்துக்கு இது மெத்த உவப்பு. அசத்துவ குன்மத்தி[11]லும் தியறீயத்தின்[12] பிற்பாதங்களிலும், திசந்தெரி[13]யிலும் பொதுவான பெலவீனத்திலும் இதால் நயமுண்டாகும்.

தேயம். பட்டைத்தூளில் பத்துமுதல் நாற்பது கிறேன் கொடுக்கலாம். இதை இன்வூசமாகக் கொடுப்பதே உத்தமம்.

ரசிதம். கஸ்பாரியின்வூசம். Infusion of Cusparia. கொள். கஸ்பாரிப்பட்டை பருக்கன் தூளாக அரை அன்சு; 120 பாகை சூடான வெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டு மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு, இரண்டு அன்சு.

---

1 Hysteria. 2 Amenorrhoea. 3 Epilepsy. 4 Distill. 5 Indian rue. 6 Line. 7 Nitric acid. 8 Tonic. 9 Antiperiodic. 10 Atonic. 11 Dyspepsia. 12 Diarrhoea. 13 Dysentery.

Digitized By Roja Muthiah Research Library

# தியாஸ்மியங்கள்.

# DIOSMEAE.

## பூக்கு. BUCHU.

வாசம். தென்னாபிரிகம்.

வாகடபகுதி. காய்ந்த இலைகள். இவைகள் அழுத்தமானவைகள். ஓரக் கருக்குகளிலும் நுனியிலும் தெளிந்த புள்ளிகளையுடையன. வீறான மணமும் உறைப்பான கர்ப்பூரச் சுவையுமுள்ளவைகள். இவைகளில் மூன்றுவகையுண்டு. 1 முக்கால் இஞ்சு நீளமாய்த் தோல்போன்று முட்டைவடிவாய்ச் சுருண்ட கூழையான நுனியும், கூரான முருந்து போன்ற அகலமான பற்களுமுள்ளதாயிருக்கும். 2 ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமாயும், நீள வட்டமாயும், நுனி நீண்டு அடி கூழையாய் ஓரம் நுண்ணிய கருக்குகளுடையதாய் ஐந்து நரம்புள்ளதாயுமிருக்கும். 3 ஒரு இஞ்சு முதல் ஒன்றரை இஞ்சு நீளமாய் நுனி நீண்டொடுங்கியும் கூரான நுண்ணிய கருக்கோரமாயும் மூன்று நரம்புள்ளதாயுமிருக்கும். இவ்விலையின் சத்துகள் அத்திர எண்ணெய்[1]யும் தியாஸ்மின்[2] என்ற கைப்பான எசிறுத்திவு[3]மே.

தன்மை. சுகந்த[4] ஸ்திமுலம்[5], தொணிகம்[6]; சலஉறுப்புகளில் விசேஷ செயல்காட்டும்போல.

உபயோகம். பிருக்க[7] ரோகங்கள், சலபாதை[8]யின் அழற்சி, காலிகசலப்பைத்தபம்[9], புரஸ்தகோளத்தின்[10] நோய்கள், வாதம், குன்மம், இவைகளுக்குக் கொடுக்கப்படும்.

தேயம். இலைத்தூள் இருபது முதல் முப்பது கிறேன். பின்வரும் ரசிதங்களாகக் கொடுப்பதே உத்தமம்.

ரசிதங்கள். பூக்கின்வூசம். Infusion of Buchu. கொள். பூக்கிலை,துவைத்து அரை அன்சு; கொதுவெர்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு, நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

பூக்கிரஞ்சம். Tincture of Buchu. கொள். பூக்கிலை பருக்கன் தூளாக இரண்டரை அன்சு; புரூவுசீது[11] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் பூக்கிலையைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறவைத்து இடைக்கிடை குலுக்கவும். பிறகு சியந்தனி[12]யில் இட்டு நீர் வடிந்தொழிந்தபின் மிச்சமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். பிற்பாடு சக்கையை நசுக்கி, வடித்து இரண்டு நீர்களையுங்கலந்து அரைநாழியாகப் போதிய புரூவுசீது சேர்த்துக்கொள்ளவும்.

தேயம். ஒரு திறும் முதல் இரண்டு திறும்.

---

1 Volatile oil. 2 Diosmin. 3 Bitter extractive. 4 Aromatic. 5 Stimulant. 6 Tonic. 7 Kidney. 8 Urethra. 9 Chronic Cystitis. 10 Prostate gland. 11 Proof spirit. 12 Percolator.



Digitized By Roja Muthiah Research Library

# ஔரந்தியசியங்கள்.

# AURANTIACEAE.

## தோடை. ORANGE TREE.

இதிற் தேன்தோடை, கைச்சற்தோடையென்று இரண்டு வகையுண்டு.

**வாசம்.** இந்து, சீனம்; பழத்துக்காகவே இது அதிகமாய்ச் செய்கைபண்ணைப்படும்.

**வாகடபகுதி.** பழத்தின் காய்ந்த வெளித்தோல்; இது கரு மஞ்சள் நிறமான மெல்லிய சீவல்களாக வரும். வெண்மையான உட்தோல் இதோடுமெத்தச் சேர்ந்திராது. காரமான கைச்சற்சுவையும் நற்கந்தமும் இதற்குண்டு. கைச்சற்தோடந்தோலுக்கே இத்தன்மைகள் தோற்றமாயுண்டு. அதுவே மருந்துக்கு நயமென்று எடுத்துக்கொள்ளப்படும்.

**தன்மை.** ஸ்தொமாகி[1], தொணிகம்[2].

**உபயோகம்.** அசத்துவகுன்மம்[3], பசியின்மை, பெலவீனம் முதலியவற்றுக்கு இது கொடுக்கப்படும். ஆயினும் தனியே கொடுப்பதரிது.

**ரசிதங்கள். தோடந்தோலின்வூசம்.** Infusion of Orange Peel. கொள். கைச்சற் தோடந்தோல் சிறுத் துண்டுகளாக வெட்டி, அரை அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்திற் பதினைந்து மினிநேரம் ஊறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் நாலு அன்சு.

**தோடந்தோற் கூட்டின்வூசம்.** Compound Infusion Orange Peel. கொள். கைச்சற் தோடந்தோல் சிறுத்துண்டாக வெட்டி, கால்அன்சு; பச்சையான சம்பந்தோல்[4] துண்டு துண்டாக வெட்டி, அறுபது கிறேன் இடித்த கராம்பு முப்பதுகிறேன்; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்திற் கால்மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. இதுவும் முன்வந்த இன்வூசமும் இணக்கமான ஸ்தொமாகிகள். உப்பு விரேசனிகள் முதலிய வேறு மருந்துகள் கொடுப்பதற்கு இவை நல்ல அனுபானமாகும்.

**தோடந்தோலிரஞ்சம்.** Tincture of Orange Peel. கொள். கைச்சற் தோடந்தோல், துண்டுதுண்டாக வெட்டித் துவைத்து, இரண்டுஅன்சு; புரூவுசீது[5]அரைநாழி. மூடிய பாத்திரத்தில் எழுநாள் ஊறவிட்டு, இடைக்கிடை குலுக்கி, சீலையில் வடித்து மறுபடி நசுக்கிப் பிழிந்து வடித்து அரைநாழியாகப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**.தேயம்** ஒரு திரும் முதல் இரண்டு திரும்.

**தோடந்தோற் சிறுபம்.** Syrup of Orange Peel. கொள். தோடந்தோலிரஞ்சம், ஒரு அன்சு; சிறுபம் எழுஅன்சு. இரண்டையுங் கலக்கவும்.

**தேயம்.** ஒரு திரும்.

**தோடம்பூநீர்.** Orange Flower Water. தோடம்பூவில்திஸ்திலித்த நீர்[6], சிரா[7]நோய்கள் இஸ்தேரி[8] நோய்களில் அந்திஸ்பசி[9]யாகவும் சாந்தனியா

---

1 Stomachic, ரேசனி. 2 Tonic. ஓசதி. 3 Atonic Dyspepsia. 4 Lemon peel. 5 Proof spirit. 6 Distilled water. 7 Nervous. 8 Hysteria. 9 Anti-spasmodic, கருசக்கினி.

Digitized By Roja Muthiah Research Library

கவும் இரண்டொரு அன்சு தேயமாய்க் கொடுக்கப்படும். சுத்தமானால் இது நிறமற்றதாகவும், ஐருசல்வுரிக்கமில[1] வாயுவினால் மாறுதலடையாமலுமிருக்கும்.

தோடம்பூச்சிரூபம். Syrup of Orange Flower. கொள். தோடம்பூநீர், எட்டு அன்சு; சுத்த சர்க்கரை மூன்று இருத்தல; தண்ணீர் பதினறு அன்சு, அல்லது போதியது. சர்க்கரையைத் தண்ணீரிலிட்டுச் சூட்டாற் கரைத்துச் சீலையில் வடித்து, ஆறும்போது தோடம்பூநீரைச் சேர்க்கவும். பாணி நாலரை இருத்தல் வரத்தக்கதாய்த் தண்ணீர் தேவையானாற் போதியளவு கூட்டவும். அதின் விசேஷகுருவிதம்[2] 1.330 ஆயிருக்கவேணும்.

இது வாசனைக்காகப் பெரும்பாலும் வழங்கப்படும்.

இந்த ரசிதங்களிலன்றி சென்சன் கூட்டின்ஊசம்[3], சென்சன்மிஸ்தூர்[4], சென்சன்கூட்டிரஞ்சங்க[5]ளிலும், கைச்சற்தோடந்தோல், ஓர்கூருகச்சேருகின்றது.

## சம்பம். LEMON TREE.

வாசம். இந்து, சீனம்; உஷ்டண தேசங்களில் இது அதிகமாய்ச் செய்யப்படும்.

வாகடபகுதிகள். 1 பழத்தின் வெளித்தோல். 2 தோலின் அத்திரவெண்ணெய். 3 பழச்சாறு.

தோலின்தன்மை. ஸ்தொமாகி[6], காமினதி[7].

உபயோகம். தோடம்பழத் தோலைப் போலவே. இது விசேஷமாய் வாசனைக்காக வழங்கப்படும்.

ரசிதங்கள். சம்பந்தோலிரஞ்சம். Tincture of Lemon Peel. கொள். பச்சையான சம்பந்தோல் மெல்லிதாய்ச் சீவி, இரண்டரை அன்சு; புருவுசீது அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் எழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கிச்சீலையில் வடித்து நசுக்கிக் கடுதாசியில் வடித்து, அரைநாழியாகப் போதிய புருவுசீது சேர்க்கவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திரும்.

சம்பந்தேல். Lemon Oil, தருவிய சம்பந்தோலைத் திஸ்திலித்தாவது பிழிந்தாவது இந்த எண்ணெய் எடுக்கப்படும். இது வெண்மையான மஞ்சள்நிறமும், நல்ல மணமும், அனலான கைப்புச் சுவையுமுள்ளது.

இரண்டு துளி நாலு துளி தேயத்தில் இது காமினதி. ஆயினும் இத்தன்மைக்காய் இது வழங்கப்படுவதரிது. அமோன சுகந்தசீதிலும்[8] பதாசிய வியோதிர சபு வினிமெனிலும்[9] இது ஓர் கூருகச் சேருகின்றது. சில வகையான கண்ணோவுக்கு இது பூச்சுமருந்தாக வழங்கப்படும். ஆயினும் நயங்காண்பது சந்தேகம்.

சம்பஞ்சாறு. Lemon Juice. சம்பம்பழத்தைப்பிழிந்து சீலையில் வடித்தசாறு. இது சற்றே மங்கலும்,மஞ்சள்நிறமும் கார்ப்பான புளிப்புச்சுவையும், நல்ல மணமுமுள்ளது. இதின் சராசரியான[10] விசேஷகுருவிதம் 1.039.

சம்பஞ்சாற்றில் ஒருஅன்சுக்கு 32 கிறேன் வீதமாகச் சிதிறிக்கமில[11]மும், அத்தோடு முசிலாகும்[12] எசிருத்திவும்[13] அடங்கியிருக்கும். செடுகவைத்திரு

1 Hydro-sulphuric acid gas. 2 Specific gravity. 3 Compound Infusion of Gentian. 4 Mixture. 5 Tincture. 6 Stomachic. 7 Carminative. வாயுக்கினி. 8 Aromatic spirit of Ammonia. 9 Liniment of Iodide of Potassium and Soap. 10 Average. 11 Citric acid. 12 Mucilage. 13 Extractive.

Digitized By Roja Muthiah Research Library

க்தால் இது கூறுபடக்கூடியது. அப்படிக் கூறுபடுவதைத் தடுப்பதற்கு வீருணபிரண்டியை[1] 100 பங்குக்குப்பத்துப்பங்குவீதமாய்க்கூட்டவும்,வடித்து முசிலாகைப் பிரிக்கவும்வேண்டும். இதிலும்நல்லவழி பின்னுமொன்றுண்டு. சாற்றைப் பிழிந்தபின் அதிலுள்ள உறையக்கூடிய பதார்த்தம் பிரியுந்தனையும் அதைக் கொஞ்சநேரம் நிற்கவிட்டு, பிறகு வடித்துச் சீசாக்களில்விட்டு மேலே வாதுமை எண்ணெய்யையாவது[2]இனிமையானவேறேதும் எண்ணெய்யையாவது ஒரு படையாய் நிற்கவிட்டு அடைக்கவும்.

**தன்மைகள்.** நயந்த ஸ்கேவிக்கினி[3] குளிர்மையானது, முதன்மையாய் அபால்கலி[4], இரண்டாவதாய் அபாமிலி[5].

**உபயோகங்கள்.** ஸ்கேவி[6]வராமற் காப்பதற்கும், அதை மாற்றுவதற்கும் இது முதல் மருந்து. தண்ணீர் கலந்து இனிப்பாக்கின சம்பச்சாறு காய்ச்சல் தாபித[7] நோய்களுக்கு ஓர் உத்தமமான குளிர்ந்த பானமாகும். தீவிர[8] வாதத்துக்கும் வாதகுவாதத்துக்கும்[9]உஷ்டண தேசங்களிலுண்டாகும்சிலவகையான தீவிரதிசந்தெரி[10].தியறீயம்[11] முதலியநோய்களுக்கும் இதுசித்தியாய் வழங்கப்பட்டது. மயக்கழற்சி நஞ்சுகள்[12] சிலவற்றுக்கு இது பெரும்பாலும் நல்ல மாற்றுமருந்தாகும்.

**தேயம்.** இரண்டுதிரும்[13]முதல் ஒருஅன்சு[14] வரைக்குங் கூட்டவுங் கொடுக்கலாம். தீவிரவாதத்தில் இரண்டொரு அன்சு நாலு ஆறு மணிக்கு ஒரு முறை கொடுக்கலாம்.

**ரசிதர், சம்பஞ்சிரூபம்.** Syrup of Lemon. சொள். பச்சையான சம்பந்தோல், இரண்டு அன்சு; சீலையில் வடித்த சம்பஞ்சாறு, அரைநாழி; சுத்த சர்க்கரை இரண்டேகால் இருத்தல். சம்பஞ்சாற்றைக் கொதிக்கத்து வங்குந்தனையுங் காய்ச்சி அதைச் சம்பந்தோலோடு மூடிய பாத்திரத்தில் ஆறுந்தனையும் நிற்கவிட்டு வடித்து, வடித்தநீரிற் சர்க்கரையை மென்சூட்டிற் கரைக்கவும். வரும் பாணி மூன்றரை இருத்தல் நிறுக்கவும். 1.34 என்ற விசேஷகிருவிதம்[15] உடையதாயிருக்கவும் வேண்டும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும். அதி காங்கையில் இது சுறுக்கில் கொதிக்குமாகையால் உஷ்டண தேசங்களில் வழங்க மெத்தத் தகுந்ததல்ல. தேவையானவேளைகளில் புதிதாய்ச்செய்துகொள்ளவேணும்.

**சித்திரிக்கமிலம்.** Citric acid. இது சம்பஞ்சாறு அல்லது எலுமிச்சஞ்சாற்றிலிருந்து செய்த ஓர் கிரிஸ்தலான[16]அமிலம். இதைக் குறிக்குஞ் சின்னம். ஐ$_3$ கா$_6$ ஐ$_5$ அ$_7$ ஐ$_2$ அ. இது நிறமற்றதும் ரம்பம்[17]என்ற முதல் வடிவத்தை உடையதுமான கிரிஸ்தல்களாக விளையும். தண்ணீரில் மெத்தக் கரையக்கூடியது. திட்டசீதிற்[18]கொஞ்சமாய்க் கரையக்கூடியது. சுத்த ஈதரிற்[19]கரையமாட்டாது. கிரிஸ்தல்கள் முக்கால்வாசி தண்ணீரிலும் அரைவாசி கொதிவெந்நீரிலுங் கரையும். தண்ணீரிற் கரைந்தகரைவு உவப்பான புளிப்புச் சுவையுடையது. முப்பத்துநாலுகிறேன் சித்திரிக்கமிலத்தை ஒரு அன்சு தண்ணீரிற் கரைத்தால் வீறிலும் புளிப்புத்தன்மையிலும் எலுமிச்சம் பழச்சாறுபோலாகும். வைத்திருந்தால் அச் சாற்றைப் போலக் கூறுபட்

---

1 Brandy. 2 Almond oil. 3 Antiscorbutic. 4 Antalkali. 5 Antacid. 6 Scurvy. 7 Inflammation. 8 Acute. 9 Rheumatic gout. 10 Dysentery. 11 Diarrhoea. 12 Narcotico-irritant poison. 13 Drachm. 14 Ounce. 15 Specific gravity. 16 Crystalline. 17 Rhomb. 18 Rectified spirit. 19 Ether.

Digitized By Roja Muthiah Research Library

டுப் பாண்டல்கட்டும். தண்ணீர்க்கரைவு ஐருசல்வுரிக்கமில[1] வாயுவாற் கருமையடையாது. பதாசியசிதசு[2]நீருக்காவது, பாரிதகுலோறிர[3] நீருக்காவது இதை அதிகமாய்ச் சேர்க்க அடையல்விழாது. குளிர்ந்த சுண்ணும்புத்தண்ணீருடன்[4] இதைச் சொற்பமாய்ச் சேர்த்தால் இது அதை மங்கலாக்காது. கிரிஸ்தல்களைப் பரமாணுவில் எரித்தாற் சாம்பல்விழாது. திஸ்திலித்த[5]நீரிற் கரைக்கப்பட்ட எழுபதுகிறேன் சிதிறிக்கமிலமானது சோடபருமவிலயனத்தில்[6] 100 கிறேன் அளவாற் தடஸ்திக்கப்படும்[7].

தேயம். பத்துமுதல் முப்பது கிறேன்.

நுரைபானங்கள் குளிர்ச்சிப்பானங்கள் செய்வதற்கே சிதிறிக்கமிலம் பரிகாரத்தில் பிரதானமாய் வழங்கப்படும். ஒரு அன்சு சிதிறிக்கமிலத்தைப் பதினாறு அன்சு தண்ணீரிற் கரைத்து, சிலதுளி சம்பந்தேல் விட்டு வாசனைப்படுத்தினால் அது செயற்கையான[8] சம்பஞ்சாறு ஆகும். நுரைபானங்கள் செய்வதிற் தடஸ்தகலவை[9] உண்டாவதற்கு அமிலமும்[10] தாரகமுஞ்[11] சேரவேண்டிய வீதங்களாவன.

| | 20 கிறேன் | சிதிறிக்கமிலம் | அல்லது சம்பஞ்சாறு. | பூரிக்கும்.[15] |
|---|---|---|---|---|
| பதாசிதுவிகாபனசு[12] | | 14 கிறேன். | 3½ திரும். | |
| அமோன[13]காபனசு | | 24 கிறேன். | 6 திரும். | |
| சோட[14]துவிகாபனசு | | 17 கிறேன். | 4 திரும். | |

## * எலுமிச்சை. LIME TREE.

வாசம். இந்துவிலும் மற்றும் உஷ்டண தேசங்களிலும் இது வழக்கமாய்ச் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. பழம். இது சம்பம்பழத்தைப் போன்றது. ஆயினும் சிறியதும் தோல் மெல்லிதும் அழுத்தமுமாயிருக்கும். வாசனையிற் குறைவு. இதின் சாறு சம்பஞ்சாற்றைப் போன்ற கார்ப்பான புளிச்சுவையுள்ளது. அதின் கூறுகளே இதிலும் உண்டு. ஆயினும் அக்கூறுகளின் வீதம் இதிலே சற்று வித்தியாசம். இதிற் சிதிறிக்கமிலம் அதிக வீதமாயும் முசிலாகு குறைந்தவீதமாயும் இருக்கும். சம்பஞ்சாறு என்று இங்கிலந்துக்கு ஏற்றுமதி பண்ணப்படுஞ் சாறு மிகுதியாய் எலுமிச்சம்பழத்திலிருந்தே எடுக்கப்படும்.

தன்மைகளும்உபயோகங்களும். சம்பம்பழத்தைப் போன்றவைகளே. இதின் சாறு அதைப்போலக் குளிர்மை. ஸ்கேவிக்கு[17] மாற்றுமருந்து. உஷ்டணதேச வைத்தியர் பலர் இதையே நல்லதென்று எடுத்துக்கொள்ளுகிறார்கள். எலுமிச்சம்பழச்சாறு உஷ்டண தேசங்களில் கிட்டத்தட்ட எல்லாப்பகுதிகளிலும் கிடைக்கும். பேணிவைத்த சாற்றைப்பார்க்க இதேஅதிக திறமானது. சம்பச்சாற்றைப்பார்க்க எலுமிச்சம்பழச்சாற்றில் சிதிறிக்கமிலத்தின் வீதம் அதிகமாதலால் சிதிறிக்கமிலம் எடுப்பதற்கு இச்சாற்றை வழங்கலாம்.

---

1 Hydro-sulphuric acid gas. 2 Acetate of Potash. 3 Chloride of Barium. 4 Lime water. 5 Distilled. 6 Volumetric solution of soda. 7 Neutralize. 8 Artificial. 9 Neutral compound. 10 Acid. 11 Base. 12 Bicarbonate of Potash. 13 Ammonia. 14 Soda. 15 Saturate. 16 Mucilage. 17 Scurvy.

Digitized By Roja Muthiah Research Library

## வில்வம். AEGLE MARMELOS. BAEL.

**வாசம்.** இது இந்துவடங்கலுமுள்ள மேட்டுச் சோலைகளில் உண்டு. இந்துக்களுடைய பரிசுத்த மரங்களிலொன்றாகையால் கோயில்களுக்குக் கிட்டப் பெரும்பாலும் வளர்க்கப்படும்.

**வாகடபகுதி.** காய்ப்பழம். இது உண்டையாயுர் தோடம்பழம் அளவு பருமையும் அழுத்தமுமாயும் வைரமான ஓடுள்ளதாயுமிருக்கும். உள்ளுக்குப் பத்துப்பதினைந்து அறைகள் இருக்கும். இந்த அறைகளுக்குள்ளே கொட்டைகளன்றி மெத்தப் பிசினியான உருவொளியுள்ள சளியுமிருக்கும். பழம் சற்றே தர்ப்பந்தீன்[1] போன்ற பழுதற்ற மணமும் சுவையுமுடையது. அதிலே தனிக்கமிலமும்[2] ஓர் அத்திரஎண்ணெய்யும்[3] கைப்பான ஓர் சத்தும் பெருபல்சத்தின்[4] மணத்தையொத்த பல்சம்போன்ற ஓர் சத்தும் அடங்கியிருக்கும்(20). ஓடும் அத்துடன் ஒட்டிய காய்ந்த சதையும் கொட்டைகளும் சேர்ந்த காய்ந்த வற்றற் துண்டுகளாக இது இங்கிலந்துக்கு ஏற்றப்படும். ஓடு ஒன்றரை லீன்[5] வரைக்குத் தடிப்புள்ளது. இது நரைநிறமான வெளித்தோலால் மூடுண்டிருக்கும். உட்பக்கமும் காய்ந்த சதையும் சிவப்புநிறம். சதையை நனைக்கப் பாணிபோலாகும்.

**தன்மை.** இது கழிச்சலைக் கட்டுகிறதாகவும் மலச்சிக்கை இளக்குகிறதாகவும் பரீட்சையால் விளங்கியிருக்கிறபடியால் குடலின் சளிச்சவ்விலே இது சற்றே தீவனச் செயல்உடையதாயிருக்கவேணும். குடலின் இந்த இரண்டு சீர்களிலும் இது குடலைப் பெலப்படுத்துகிறதுபோலத் தோன்றுகின்றது.(21)

**உபயோகம்.** அசத்துவமான[6] தியறீயம்[7] திசந்தெரி[8]களுக்கும் இந்தநோய்களின் பிற்கூற்றிற்கும் குடற்பிசகுகளுக்கும் வாடிக்கையான மலவரட்சிக்கும் இது மெத்த நயப்பான மருந்து.

**ரசிதங்கள்.** *வில்வக்கலவை. Bael Mixture. கொள். வில்வப்பழத்தின் மெதுவும் பிசினியுமான உள்ளுடனீர், இரண்டு அன்சு; தண்ணீர் நாலுஅன்சு. இவற்றைத் திறமாய்க் கலந்து சர்க்கரை இரண்டு அன்சாவது ருசிக்குப் போதிய அளவாவது சேர்க்கவும்.

இதை ஐசு[9] சேர்ப்பதாலாவது வேறு வகையாயாவது செயற்கையாய்க் குளிராக்கினால், பழத்தின் வாசனையையுடைய சுவையான பானமாகும். நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கலாம். கனிந்த பழத்திற் செய்தால் கழிச்சலைக் கட்டுகிறதல்லாமல் மலவரட்சியை இளக்கவுங்கூடிய தன்மையுள்ளது. நோயாளியின் பெலன் மெத்தக் குன்றி இரைப்பையழற்சியாகும்போது இந்தக் கலவை சிலவேளை இணங்காது. அப்போது இதைக் கொஞ்சங்கொஞ்சமாய் இடைக்கிடை கொடுக்கவேணும். வாந்தித்தால் வில்வ எசிறுத்தைக்[10] கொடுத்துப் பார்க்கலாம்.

* வில்வவெசிறுத்து. Extract of Bael. மெல்லிய ஒப்பமான ஓடுள்ள நன்றாய்க் கனிந்த வில்வம்பழங்களைத் தெரிந்து, சதையை எடுத்துப் பாத்திரத்தில் வைத்து அதை மூடப் போதிய அளவு தண்ணீர் விட்டு இரண்டு மணிநேரத்துக்குக் கலக்கி உரப்பான காரிக்கம்புடைவையில் வடிக்கவும்

---

1 Turpentine. 2 Tannic acid. 3 Essential oil. 4 Peru Balsam. 5 Line. 6 Atonic. 7 Diarrhoea. 8 Dysentery. 9 Ice. 10 Extract.

(20) (21) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

வடியுநீர் சுவையற்றசா ரந்தனையும் திரும்பத் திரும்ப இப்படியே வடித்துப் பாணிப்பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்தின்மேல் வறட்டவும்.

நயந்ததென்று சொல்லப்பட்டிருக்கிற இந்தப் பாணி பழத்துக்குரிய சுகந்தம் எல்லாவற்றையும் அமைத்திருக்கும். மேலே சொல்லியபடி கனிந்த பழத்திற் செய்த எசிரூத்தைப்பார்க்கக் காய்ப்பழத்திற்செய்தது கெடுகவிருக்குமாம்.

தேயம். அரைத் திரும் முதல் ஒருதிரும், நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம். நெருக்கமாயுங் கொடுக்கலாம்.

வில்வநீரேசிறத்து. Liquid Extract of Bael. கொள், வில்வம்பழம் ஒரு இருத்தல்; தண்ணீர் ஆறுநாழி; திட்டசீது[1] இரண்டு அன்சு. வில்வம்பழத்தை இரண்டுநாழி தண்ணீரிற் பன்னிரண்டு மணிநேர மூறவிட்டு நீரைத் தெளித்தெடுத்துக்கொண்டு மிச்சமான தண்ணீரில் இன்னும் இரண்டுமுறை ஒவ்வொரு மணிநேரமூறவிட்டு தெளித்துச் சக்கையைப் பிழியவும். கலந்த நீர்களைக் கம்பளத்தில் வடிக்கவும். பதினறு அன்சாக வறட்டி ஆறினபின் திட்டசீதைச் சேர்க்கவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திரும். இங்கிலந்துக்கு ஏற்றப்படும் வில்வப் பழ வற்றலில் செய்யப்படும் நீரெசிரூத்தானது இந்துவிலே புதியபழத்திற் செய்யப்படுவதைப் பார்க்கச் சத்துக் குறைந்ததுபோல.

## * மிளகரணை. TODDALIA.

வாசம். இது மலையாளம், சோழமண்டலம், மைசூர், கொங்கண் தேசங்களிலும், சென்னையின் மற்றும்பகுதிகளிலும் வேலியோரங்கள் காடுகளில் உண்டாகின்றது.

வாகடபகுதி. வேர்ப்பட்டை. வேர் கனத்துக் கிளைத்துச் சில இஞ்சு பருமையாகிக் கைப்பும் காரமும், சுகந்தமுமான பட்டையையும் மஞ்சள் நிறமும் தடிப்பும் மெதுவுமான வெளித்தோலையும் உடையதாகும். உட்பகுதி வெண்மையான மர வைரம். இது காய்ந்திருக்கும்போது மணம் சுவையற்றதாகும்.

தன்மை. சுகந்தமான[2] தொணிகம்[3], ஸ்திமுலம்[4], அந்திபிரூடி[5].

உபயோகம். தேகப் பெலவீனத்துக்கும் காய்ச்சலிலும் பெலவீனப்படுத்தும் மற்றும் நோய்களிலும் நின்று சுகப்படுபவர்களுக்கும் இது நயந்த மருந்து. Lopez root என்ற நாமத்துடன் யுரோபதேசத்திற் கழிச்சலுக்கு நல்ல மருந்தென்று இது ஒருகாலத்திற் கீர்த்திபெற்றிருந்தும் வழங்காமற்போயிற்று. ஆயினும் இந்துதேசத்திற் பச்சையாய்க் கிடைக்கக்கூடியதாயிருப்பதால் இதை இன்னுஞ் சோதித்துப்பார்ப்பது நலம்.(22)

ரசிதங்கள். மிளகரணைரஞ்சம். Tincture of Toddalia. கொள், மிளகரணை வேர்ப்பட்டை துவைத்து இரண்டரை அன்சு; புரூவுசீது அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கித்தெளித்து பிழிந்து வடித்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும். களும்பிரஞ்சம் செய்யும் முறையாகவும் இதைச் செய்யலாம்.

---

1 Rectified spirit. 2 Aromatic. 3 Tonic. 4 Stimulant. 5 Antiperiodic சுரமீசாரி, 6 Proof spirit.

(22) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒன்றரைத் திரும் முதல் மூன்று திரும் வரைக்கு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

மிளகரணையின்ஹூசம். Infusion of Toddalia. கொள். மிளகரணை வேர்ப்பட்டை பருக்கன் தூளாக ஒரு அன்சு; கொதிநீர் பத்துஅன்சு. இவற்றை மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டுத் தெளிக்கவும்.

தேயம். ஒரு அன்சு அல்லது இரண்டு அன்சு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

## அவாகடச்சரக்கு. Non-Officinal.

விளாத்தி. Wood apple Tree. இம்மரம் இந்துதேசமடங்கலு முள்ளது. இதிலிருந்து ஓர் பிசின் தாராளமாய் வடியும். இங்கிலந்துக்கு ஏற்றப்படும் கிழக்கிந்து அகசிப்பிசினில் இது கலந்திருக்கிறதென்று பரைரர் எண்ணுகிறார். இது உருவொளியுஞ் செங்கபிலநிறமுமான பல சாங்கமுள்ள உண்டையான கட்டிகளாக வரும். தண்ணீரிற் போட்டாற் கபிலநிறமான சுவையற்ற பாணியாகும். அகசிப்பிசின் பாணியைப்போல் இது ஒட்டும். அகசிப்பிசினுக்குப் பதிலாக இந்தப் பிசினை வழங்கலாம். விளாங்காய்க்கஷாயம் நல்ல துவரென்றும் விளாம்பழம் ஸ்கேவிக்கினி[1]என்றும் வுட்டென்பவர் சொல்லியிருக்கிறார். இது தன் செயலில் வில்வத்தைப் போன்றது. தர்ப்பந்தின்[2] மணத்தை அதிகமாயுடையதாதலால் அதினுஞ் சுவைகெட்டது. இதின்குருத்திலைகள் அனிஸ்கொட்டையைப்[3]போன்ற நல்லமணமுள்ளவைகள், இவை அதிகமாய் ஸ்தொமாகி[4] காமினதி[5] யாக சுதேசிகளால் வழங்கப்படும்,

சந்தச்சைலவலாதமரம். Zanthoxylum alatum. சந்தச்சைலகஸ்திலிமரம். Z. Hastile சந்தச்சைலபுரேங்கமரம் and Z, Budrunga. இம்மூவகை மரங்களும் இமயமலை காசியமலைகளில் வளரும். இவைகளின் பழத்தன்மைகளைக்குறித்துச் சுதேச பதார்த்தசார வாகடங்கள் பேசுகின்றன. இவைகளின் சுகந்தமான காரமணத்தைக்கொண்டு இவை ஸ்தொமாகி காமினதியாகுமென்று நிதானிக்கலாம்,

இதில் முதல் மரத்தின் பழத்தை ஸ்தெனேசு வைத்தியர் கூறுபடுத்தி அதிலே சுகந்தமான[6] ஓர் அத்திர[7]வெண்ணெய்யைக் கண்டுபிடித்தார். இது சுத்தமாயிருக்கையில் தர்ப்பந்தின் எண்ணெய்யோடு கூடிய ஓர் இசமிற[8] ஐருகாபன்[9] பதார்த்தம். மேலும் ஓர் ஸ்தியரப்தினைக்[10]கண்டுபிடித்தார். இது பழுங்களைத் திஸ்திலித்த[11]நீரில் மிதந்துகொண்டிருக்கும். சுத்தமற்ற அத்திரவெண்ணெய்யிலிருந்தும் இதைப் பிரிக்கலாம்.

சீமையழவனை. Peganum Harmala. சிந்து பஞ்சாப்பு தேசங்களிலுள்ள இந்தப் பூண்டு வீறான கெட்ட மணமும் கைப்புச் சுவையுமுடையது. இது தன்செயலிற் கஞ்சாவுக்குக்கிட்டியதென்று லன்றறர் வைத்தியர் நினைக்கிறார். இதின்விதைகள் ஸ்திமுலம்[12] எமெனகாக்கு[13] அந்தெல்மிந்தி[14] யாகக் கீழ்த்தேச வாகடங்களில் வெகுகாலமாகப் பேசப்பட்டிருக்கின்றன. இவைக்குச் சொற்ப மயக்குத்தன்மையும் உண்டென்கிறார்கள். இவைகளைக்கொடுக்கச் சிலருக்குப் புன்சிரிப்புடன் கூடிய அலட்டுக்காணு

---

1 Antiscorbutic. 2 Turpentine. 3 Aniseseed, 4 Stomachic. 5 Carminative.வாயுக்கினி. 6 Aromatic 7 Essential. 8 Isomeric. 9 Hydro-carbon. 10 Stearopten. 11 Distils. 12 Stimulant. 13 Emmenagogue. 14 Anthelmintic.

Digitized By Roja Muthiah Research Library

மென்று கெம்வர் சொல்லுகிறார். இந்த விதைகளின் செயலைப்பற்றி மேலாராய்வுகள் வேண்டும்.

கருவேம்பு. Murraya Konigii இந்தச் சிறியமரம் இந்துவின் பல பகுதிகளிலுமுள்ளது. சுதேசிகள் இதின் பட்டை, வேர், இலைகளை, தொணிகம்[1] ஸ்தொமாகிக[2]ளாக அதிகமாய் வழங்குவார்கள். ரோசு சாற்று என்ற வைத்தியர்கள் இத்தன்மைகளில் இவை திறமென்று சாட்சியிட்டிருக்கிறார்கள். இலகுவிற் சீரணிப்பதற்கு இதின் இலைகளைக் கறிகளுக்குச் சேர்ப்பார்கள்.

## சிமருபியங்கள்.

## SIMARUBEAE.

### குவசிமரம். QUASSIA TREE.

வாசம். மேற்கிந்துத்தீவுகள்.

வாகடபகுதி. மரச்சிராய்; தொடையளவுக்கு மேற்படாத வெவ்வேறு பருமையான குற்றிகளாக, ஏற்றுமதிபண்ணப்படும். வெளிப்பகுதி அழுத்தமான நொருக்கற் பட்டையால் மூடப்பட்டிருக்கும். சிராய் வைரமும், உரப்பும் வெண்மஞ்சள்நிறமும் கடுமையான சுத்தக் கைப்பும் உள்ளது. கடைகளில் சீவல்களாகவும் இருக்கும். கடுமையான கைப்புச் சுவையால் இதை மற்றும் மரச்சிராய்களிலிருந்து பகுத்தறியலாம். இதின் கஷாயம் அயபிரவுப்புக்[3]கள் சேர்ப்பதாற் கறுக்காது. இதிலே குவசின்[4] என்ற கைப்பான தடஸ்த[5] சத்து அமைந்திருக்கும்.

தன்மைகள். இது சுத்தக் கைப்பான தொணிகமும் ஸ்தொமாகியுமாகும்.

உபயோகங்கள். பெலவீனத்துக்கும் சுரவியாதிகளிலிருந்து சுகப்படுபவர்களுக்கும் அசத்துவகுன்மத்துக்கும் இது உத்தமமானமருந்து. முறைச்சுரங்களுக்கும் இது நல்லது. ஆயினும் கைப்பான மற்றும் தொணிகங்களைப் பார்க்கத் திறமல்ல. இதின் கஷாயத்தைக் கடைக்குடலுட் புகட்டத் தாணப்புழுக்கள் கழலும்.

ரசிதங்கள். குவசியின்வூசம். Infusion of Quassia. கொள். குவசிச் சிராய் அறுபது கிறேன்; தண்ணீர் பத்து அன்சு. மூடியபாத்திரத்தில் அரைமணிநேரமூறவிட்டுத் தெளிக்கவும்.

தேயம். அன்சு இரண்டொன்று. நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். அயவுப்புகளுக்கு இது நல்ல அனுபானமாகும்.

குவசிரஞ்சம். Tincture of Quassia. கொள். குவசிச் சிராய் சீவல்களாக முக்கால் அன்சு; புரூவுசீது[6] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கி தெளித்துப் பிழிந்துவடித்து அரைநாழியாகப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். முப்பது துளிமுதல் இரண்டு திரம்.

---

1 Tonic. 2 Stomachic, Gastric. 3 Persalt of iron. 4 Quassine. 5 Neutral. 6 Proof spirit.



Digitized By Roja Muthiah Research Library

**குவசியேசிறத்து.** Extract of Quassia. கொள். தருவின குவசிச் சிராய் ஒரு இருத்தல்; திஸ்திலித்த[1] நீர் போதியது. குவசியை எட்டு அன்சு தண்ணீரிற் பன்னிரண்டு மணிநேர மூறவிட்டு, பிறகு சியந்தனியில்[2]ஏற்றி, இன்னுந் தண்ணீர்விட்டு, குவசியின் சாரம் இறங்குந்தனையும் நீரை மெல்ல மெல்ல ஒழுகவிடவும். நீரை வறட்டி அது மெத்தத் தடிப்பாகமுன் வடித்து, பிற்பாடு பாணி குளிகைக்குத் தகுந்தபதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில்[3] வறட்டவும்.

**தேயம்.** மூன்று முதல் ஐந்து கிறேனைத் தனித்தாவது லோகதொணிக[4]ங்களோடு கலந்தாவது கொடுக்கலாம்.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**குவசிவேம்பு.** Nima Quassioides. இந்த மரம் இமயமலையிலுள்ளது. இதின் வேர் மேற்கிந்துக் குவசியைப் போலக் கைப்பு என்று ரைல் பண்டிதர் சொல்லுகிறார். இது அதற்குப் பதிலாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதின் பட்டை இமயமலையினின்று வங்காளத்துக்கு ஏற்றப்பட்டு அங்கே வறங்கி (Pharangi) என்று விலைப்படும். வேரின் கைப்பு இதற்குஉண்டு. இதின்னும் ஆராயப்படத் தகுந்தது.

**பெருமரம்.** Ailanthus Malabarica. இது இலங்கை, மலையாளம், கொங்கணங்களிலுள்ள பெரிய மரம். இதின் பட்டையைக் கீற மட்டிப்பால் என்ற சுகந்தமான ஓர் பிசின் ராளம்[5]வரும். இது தூபவருக்கமாகவும் மருந்தாகவும் வழங்கப்படும். விசேஷமாய் வயிற்றுக்கடுப்புக்கு மருந்தாகும். சுவாசக்குழலின் நோய்களுக்கு இதுநல்ல ஸ்திமுல[6]மென்று கிப்சன் வைத்தியர் நினைக்கிறார். இப் பட்டை மெத்தத் தடிப்பும் முரணுமானது. அதின் சுவை சற்றே கைப்பான நற்சுவை. தோற்றத்தில் ராளம்போன்ற பளிங்கையொத்த சிவத்த மணிகள் இதிற் திணிந்திருக்கிறதாக வைத்தர் கண்டார். ஆயினும் இவைகள் ராளம்போல் எரியவுமில்லை, சீதிலாவது தண்ணீரிலாவது கரையவுமில்லையாதலால் இவைகள் இனிமேல் நிதானிக்கப்படவேண்டிய நூதன கெமிஸ்த கலப்புள்ளவைகளென்று அவர் அனுமானிக்கிறார். இந்தப் பட்டையையும் பிசின்போன்ற இதின் பொசிவையும் இன்னும் ஆராய்வது நல்லது.

**சவுக்குமரம்.** Ailanthus excelsa. இது கருநாடகம் தொடங்கி இமயமலையின் அடிவரைக்குமுள்ள மேட்டுச்சோலைகளிலுண்டாகும் பெரிய மரம். இதின் நற்சுவையுள்ள சுகந்தமான பட்டை குன்மநோய்களுக்குச் சுதேசிகளால் வழங்கப்படுகிறதென்று என்ஸ்லி சொல்லுகிறார். சர்க்கார்களில் இந்தப்பட்டை வீறான சுரக்கினி[7]யாகவும் பெலவீனத்துக்கு தொணி[8]கமாகவுங் கொள்ளப்படுகிறதென்று வைத்தர் சொல்லுகிறார்.

**நேட்டிலையுறுகோமமரம்.** Eurycoma Longifolia. இது மலாக்காயிலுள்ள ஓர் சிறுமரம். அக்சுலி என்பவர் மூன்றுநாலு வருஷங்களாக இந்த மரத்தின் வேர்த் திகாக்கத்தை[9] முறைச்சுரத்துக்கு மருந்தாகக் கொடுத்துவந்தோமென்றும் கினியத்தை விட இதிலும் நிச்சயமான மருந்தைத் தாம் அறியவில்லையென்றும் எழுதியிருக்கிறார்.

---

1 Distilled. 2 Percolator. 3 Water-bath. 4 Metallic Tonic. 5 Gum-resin. 6 Stimulant. 7 Febrifuge. 8 Tonic, ஔசதி. 9 Decoction.

Digitized By Roja Muthiah Research Library

## பேர்சிருசியங்கள்.

## BURSERACEAE.

### சசமரம். MYRRH TREE.

வாசம். அரபிதேசம்.

வாகடபகுதி. மரத்தில் வடியும் பிசின் ராளப் பொசிவு. இதையே சசம்[1]என்பது. இது பல பருமையுள்ள உண்டைக் கட்டிகளாக வரும். சற்றே உருவொளியும் செம்மஞ்சள் அல்லது செங்கபில[2]நிறமுமானது. ஒடிந்தபக்கம் ஒழுங்கீனமும் சற்றே நெய்ப்புமாயிருக்கும். மணம் நல்ல சுகந்த மணம். சுவை காரமும் கைப்புமானது. தண்ணீர், அலக்கால்[3], ஈதர்[4]வீற் சொற்பம்மாத்திரங் கரையும். தண்ணீர் விசேஷமாய்ப் பிசினைக் கரைக்கும். அலக்காலும் ஈதரும் ராளத்தையும் எண்ணெய்யையுங் கரைக்கும்.

தன்மைகள். ஸ்திமுலம்[5], எக்ஸ்பெக்துறம்[6], எம்மெணகக்கு[7].

உபயோகங்கள். அமெனுறீயம்[8], குலொறோசி[9]க்கும் அசத்துவமான மற்றுங் கருப்பைரோகங்களுக்கும், சுவாசப்பையின் நோய்களுக்கும் விசேஷமாய் வயோதிகரின் ஈளைக்கும், சீரண உறுப்புகளின் சீர்க்கேடுகள் சிலவற்றுக்கும் இது நல்ல மருந்து. தானிக[10] மருந்து அல்லது வெளிமருந்தாக வாய்த்தொண்டையின் நோய், நாட்பட்ட விரணங்கள்[11] முதலியவற்றுக்கு இது மிகுதியாய் வழங்கப்படும்.

தேயம். பத்துமுதல் இருபது கிறேனைத் தூளாக அல்லது குளிகையாகக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். சசாஞ்சம். Tincture of Myrrh. கொள். சசம் பருக்கன்தூளாக இரண்டரை அன்சு; திட்டசீது[12] அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதிற் சசத்தை இரண்டுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கிப் பிற்பாடு சியந்தனி[13]யில் இட்டு அடைசி நீர் வடிந்தொழிந்தபின், சேஷமான ஐந்து அன்சுசீதையும் வார்த்து வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

தேயம். அரைத்திரும்முதல் ஒருதிரும். கார்கில்[14] முதலியவற்றிற் தண்ணீர் கலந்து வழங்கப்படும்.

சகைக்கூட்டுத்கிகாக்கம்[15] சகை சசக்குளிகை[16] இங்குக்கூட்டுக்குளிகை[17] வரியாத்துக்கூட்டுக்குளிகை[18] அயகூட்டுக்கலவை[19] இவைகளிலும் சசம் சேருகின்றது.

### எலெமிமரம். ELEMI TREE.

வாசம். இந்துதேசம், இலங்கை, கிழக்குத் தீவுகள்.

---

1 Myrrh. 2 Brown. 3 Alcohol. 4 Ether. 5 Stimulant. 6 Expectorant. 7 Emmenagogue. 8 Amenorrhoea. 9 Chlorosis. 10 Local. 11 Ulcer. 12 Rectified spirit. 13 Percolator. 14 Gargle. 15 Compound decoction of Aloes. 16. Aloes and Myrrh pill. 17 Compound pill of Assafoetida. 18 Compound Rhubarb pill. 19 Compound iron mixture.

Digitized By Roja Muthiah Research Library

**வாகடபகுதி.** எலெமியென்ற இறுகின ராளம்[1]. இது பிரதானமாய் மனிலதேசத்திலிருந்து இங்கிலந்துக்கு ஏற்றுமதிபண்ணப்படும். இது மெதுவான நெய்ப்புள்ள ஒட்டக்கூடிய கட்டியாக வரும். காலஞ்செல்ல இறுகி ராளம்போலாகும். வெண்மஞ்சள் நிறமும் சுகந்தமான சீரகம்போன்ற மணமுமுடையது. திட்டசீதில் ஏறக்குறைய முழுதுங் கரையும்.

இந்த விபரம் மனில எலெமிக்கே ஒக்கும். இது சிலதன்மைகளில் பிறேசில் எலெமிக்கும் மெக்சிகு எலெமிக்கும் வித்தியாசமானது.

**தன்மை.** சொற்பமாய்த் தர்ப்பந்தீனை[2]ப் போன்ற ஸ்திமுலம்[3]; உள்ளே கொடுக்கப்படுவதில்லை.

**உபயோகங்கள்.** நாட்பட்ட கெட்ட புண்களுக்குப் பின்வரும் அன்கென்[4] நல்ல பூச்சு.

**ரசிதம். எலேமியன்கேன்.** Ointment of Elemi. கொள். எலெமி கால் அன்சு; தனியன்கென், ஒரு அன்சு. உருக்கி கம்பளத்தில் வடித்து, இறுகுந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

எலெமிப் பருப்பிலிருந்து சாந்தியான ஓர் எண்ணெய் வரும். இதை வாதுமை எண்ணெய்க்குப் பதிலாக வழங்கலாம். வாதுமைக் கலவைக்குப் பதிலாக எலெமிப் பருப்பை இமல்ச[5]மாக்கி வழங்குவது நல்லதென்று வேற்சு வைத்தியர் சொல்லியிருக்கிறார். இது சொற்ப விரேசனத்தன்மையுடையதாயிருப்பதினால் மாத்திரமல்ல, யுரோபத்திலிருந்து வரும் வாதுமைக்கொட்டை கெடுகவிருந்தாற் பெரும்பாலும் பழுதாகிப்போகிறதாதலாலும் இந்தவில் வழங்க இதையே அவர் நயமென்று எடுத்துக்கொள்ளுகிறார்.

## * குந்துருக்க மரம். OLIBANUM TREE.

**வாசம்.** இது காடவு முனைக்கு மேற்காகச் சொமாலிக் கரையிலுள்ளது.

**வாகடபகுதி.** குந்துருக்கம் என்ற பிசின்ராளம்[6]. இது உருண்ட நீளக் கட்டிகளாக வரும். இது சற்றே மங்கலும் நொருக்கலும், வெண்மஞ்சள் நிறமும் கார்ப்பும் சொற்ப சுகந்த சுவையும் பல்சம்போன்ற ராளமணமுமுள்ளது. சுடுகொட்ட மணம் திறமாய் வீசும். அலக்காலுட் தாழ்க்க மங்கலாகும்.

**தன்மை.** தர்ப்பந்தீன் போன்ற ஸ்திமுலம். உட்கொண்டால் இதின்செயல் சளிச்சவ்விலே[7] விசேஷமாய்ச் சுவாசப்பைகளின் சளிச்சவ்விலே காட்டும்.

**உபயோகங்கள்.** மத்திமபுறங்கீதிலும்[8] காலிகமான[9] சுவாசப்பைநோய்களிலும் புறங்குறீய[10]த்திலும் காலிக லறிஞ்சீதிலும்[11] இதை உள்மருந்தாய்க் கொள்ளலாம். புகையுங் காட்டலாம். இரண்டிலும் நயமுண்டானது. தானிகமாய்ப்[12] பிளவை[13], புண்கள், சிலந்திகள் முதலியவற்றிற்கு இது ஸ்திமுலமாகும் (23)

**தேயம்.** பதினைந்து கிறேன் முதல் இரண்டு திறும் வரைக்குக் கொடுக்கலாம்.

---

1 Resin. 2 Turpentine. 3 Stimulant. 4 Ointment, தைலம். 5 Emulsion. 6 Gum-resin. 7 Mucous membrane. 8 Subacute Bronchitis. 9 Chronic. 10 Bronchorrhoea. 11 Laryngitis. 12 Locally. 13 Carbuncle.

(23) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

ரசிதம். குந்துருக்கவன்சேன். Olibanum Ointment. கொள். குந்துருக்கம், நல்லெண்ணெய் அல்லது சுசகசாவெண்ணெய். வெண்மெழுகு, வகைக்கு ஒரு அன்சு. மென்சூட்டில் உருக்கி வடித்துக்கொள்ளவும்.

அவாகடச் சரக்கு. Non-Officinal.

குக்குலு. Bdellium. இது ஓர் பிசின்ராளம். இது சிந்துவுக்குரிய முகுல்க்குக்குலு Balsamodendron Mukul என்றும் சுணைக்குக்குலு B. Pubescens என்றுஞ் சொல்லப்படுகிற இரண்டுமரங்களிலிருந்து பிறக்கும். இது கருஞ்சிவப்புநிறமான திரண்ட கட்டிகளாக வரும். சசத்தைப்[1]பார்க்கஙிப்பானது; அதைப்போல் நொருக்கல் அல்ல; கைச்சூட்டுக்குத்தானும் இளகும்; சுவை கைப்பும் சற்றே கார்ப்புமானது; மணம் நல்ல மணமல்ல. குக்குலுவின் அவுஷதத்தன்மைகள் சசத்தின்தன்மைகளுக்குக் கிட்டமுட்டச்சரி. இதுமலிந்த சரக்காகையால் சசத்துக்குப் பதிலாக இதை வழங்கலாம். இதின் தைலம் நாட்பட்ட கெட்ட புண்களை அருட்டிச் சுத்தப்படுத்துவதற்கு மெத்த நயமென்று நூத்தன் வைத்தியர் விதந்துபேசுகிறார். தெல்லியிலுண்டாகும் புண்களுக்கு இதைக் கெந்தகம், காசுக்கட்டி[2], வெண்காரம்[3] என்பவற்றோடு கலந்து இடுதல் வழக்கம். இது புண்களை அருட்டிச் சுகசீருக்கு உரப்பண்ணுகிறதென்று சொல்லுகிறார்கள்.

கறுப்பு டாமர். Black Dammer, இது Canarium Strictum என்ற மரத்திலிருந்து பிறக்கும். இது தென் இந்துவில் வழங்குஞ் சரக்கு. இது பிரவையும் மினுக்கமுமான கட்டிகளாக வரும். வெளிச்சத்திற் பிடித்து ஊடே பார்த்தால் சற்றே உருவொளியும் கபிலமான[4]நல்ல சிவப்புநிறமுமாய்த் தோற்றும். ஏகத்துவமானது[5]. கண்ணுடிபோல் உடையும். கொதிஅலக்காலில்[6]அரைக்கரைவாசி கரையும். தர்ப்பந்தீன்[7]எண்ணெயில் முற்றாய்க் கரையும். பேர்கன்றிராளத்துக்கு[8] இது பதிலாகுமென்று பிடி வைத்தியர் சொல்லி இது சேருஞ் சில விதிகளையுங் கற்பித்திருக்கிறார்.

## மேலியாசியங்கள்.

## MELIACEAE.

### *வேம்பு. NIM OR MARGOSA TREE.

வாசம். இது இந்துஅட்டங்கலுமுள்ளது. வளவுகளிற் பெரும்பாலும்வளரும்.

வாகடபகுதிகள். 1 பட்டை. 2 பச்சை இலைகள். மரத்தின் வயசுக்கும் பருமைக்குந் தக்கதாய்ப் பட்டை தோற்றத்தில் வித்தியாசப்படும். மூன்று நாலு வயதுக்கு மேற்பட்ட அடிமரத்தின் பட்டை கால்இஞ்சு[9], அரை இஞ்சு கனமுள்ளதாய்த் தடிப்பான பொருக்கால் மூடுண்டிருக்கும். சிறுக்கொப்புகளின் பட்டையோ அழுத்தமாயும் மங்கலான கருஞ்சிவப்பாயும் நெடும்பாட்டுக்குச் சாம்பல்நிற வரிகளுள்ளதாயும் இருக்கும். இவ்வரிகள்

---

1 Myrrh. 2 Catechu. 3 Borax. 4 Brown. 5 Homogeneous. 6 Alcohol. 7 Turpentine oil. 8 Burgundy resin. 9 Inch.

Digitized By Roja Muthiah Research Library

ஒன்றுக்கொன்று இஞ்சில் எட்டிலொரு பங்கு முதல் பன்னிரண்டிலொரு பங்களவாய்த் தள்ளியிருக்கும். பட்டையின் உட்படலம் பச்சையாயிருக்கையில் வெண்மை. வெளிப்பக்கத்தைப்பார்க்க உட்பக்கங் கடுங்கைப்பு. வெளிப்பகுதி அதிகங் கயர்ப்புள்ளது. இதிலே மாகுசின்[1] என்ற கிரிஸ்தலிக்கக்[2]கூடிய சத்தும் கதிசின்[3] என்ற கயர்ச்சத்தும் அமைந்திருக்கும். (24)

தன்மைகள். பட்டை கயரும் தொணிகமும்[4] அந்திபிருடியுமாகும்[5]. இலைகள் ஸ்திமுலமாகும்[6].

உபயோகங்கள். முறைச் சுரங்களுக்கும் தடவை தடவையாய் வரும் மற்றுஞ் சுரங்களுக்கும் பொதுவான பெலவீனத்துக்கும், காய்ச்சலாதிநோய்களில்நின்று சுகப்படுபவர்களுக்கும் பட்டை கொடுத்ததால் நயங்கண்டது. (25) புண்களுக்கும் மாறுமல் நிற்கும் சருமநோய்களுக்கும் சொற்பஸ்திமுலம் தேவையாயிருக்கும்போது வேப்பிலை நல்ல தானிக[7]மருந்தாகும்.

தேயம். பட்டை மாவில் ஒருதிறும்[8] நாள் மூன்றுநாலுமுறை கொடுக்கலாம்.

ரசிதங்கள். வேப்பம்பட்டைத்திகாக்தம். Decoction of Nim Bark. கொள். வேப்பம்பட்டையின் உட்பகுதி. துவைத்து, இரண்டு அன்சு; தண்ணீர் முக்கால் நாழி. பதினைந்து மணிநேரத்துக்கு அவித்துச் சூடாயிருக்கையில் வடித்துக்கொள்ளவும்.

தேயம். அந்திபிருடியாக ஒன்றரை அன்சு முதல்மூன்று அன்சைக் காய்ச்சல் முறை வருவதற்கு முன் ஒன்றைவிட்டொவ்வொருமணிநேரங்கொடுக்கவும். தொணிகமாக ஒரு அன்சு முதல் இரண்டு அன்சை நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். இந்தக் கஷாயம் உஷ்டணகாலத்திற்சுறுக்குப் பழுதாய்ப் போகுமாகையால் தேவையான வேளைகளிற் புதுக்கப் புதுக்கச் செய்துகொள்ளவேண்டியது.

வேப்பம்பட்டை ரஞ்சம். Tincture of Nim Bark. கொள். வேப்பம்பட்டையின் உட்பங்கு துவைத்து, இரண்டரை அன்சு; புருவுசீது[9]அரை நாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கித் தெளித்துப் பிழிந்து வடித்து அரைநாழியாகப் போதிய சீதுசேர்க்கவும். களும்பிரஞ்சத்தைப் போலச் சியந்தனித்தும்[10] இதைச் செய்யலாம். (களும்பிரஞ்சம் பார்.)

தேயம். தொணிகமாக அரை முதல் இரண்டு திறும்.

வேப்பிலைப் பாப்பை. Poultice of Nim Leaves. கொள். பச்சை வேப்பிலை போதியது. துவைத்து இளஞ்சூடான வெந்நீர் சேர்த்து மெதுவாக்கிக்கொள்ளவும்.

சீர்கெட்ட புண்களுக்கு இது நல்ல தீவன பாப்பை. (26) இதால் நோவும் அழற்சியும்உண்டானல் சரிபங்குஅரிசிமாவாவது லீனமாவாவது[11] இலையோடு கூட்டிக்கொள்ளலாம்.

வேப்பங்கொட்டையின் கைப்பான எண்ணெய் வாதத்துக்குப் பூச்சாகவும் கிருமிகொல்லி[12]யாகவும் சுதேசிகளால் மெத்த மதிக்கப்படுகிறதாதலால்

---

1 Margosine. 2 Crystillizable. 3 Catechin. 4 Tonic. 5 Antiperiodic. 6 Stimulant. 7 Local. 8 Drachm. 9 Proof-spirit. 10 Percolate. 11. Linseed meal. 12 Anthelmintic.

(24) (25) (26) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

இத்தன்மைகளைப்பற்றி அதை ஆராய்ந்தறிவது நல்லது. அது பூச்சிகளைக் கொல்லுமென்றும் அன்றர் வைத்தியராற் சொல்லப்பட்டிருக்கிறது.

## *சேம்மரம். ROHUN TREE.

வாசம். மலையாளம், கொங்கணம், மத்தியஇந்துவின் மலைச்சோலைகள்

வாகடபகுதி. பட்டை. இது நாருள்ளதாய் இறுக்கமான தடித்த துண்டுகளாக வரும். கறை நிறமும் கைப்பான கயர்ச்சுவையுமுள்ளது. இதிலே அதிகவீதமான தனிக்கமிலம்[1] கலிக்கமிலங்க[2]ளும் கைப்பான ஓர் அமாவ[3]சத்தும் அடங்கியிருக்கும்.(27)

சோதனை. பட்டையின் உட்பக்கத்துக்கு நீதுரிக்கமிலம்[4] இட்டால் அது நல்ல சிவப்பாகாது. சேம்பட்டைக்குப் பதிலாகக் காஞ்சிரம்பட்டை வங்காளக் கடைகளில் வருமாதலால் நஞ்சான அந்தப் பட்டையிலிருந்து இதைப் பகுத்தறிவதற்காக இந்தச் சோதனை இங்கே சொல்லப்படுகிறது.

தன்மைகள். துவர், தோணிகம்[5], அந்திபிருடி[6].

உபயோகங்கள். முறைச் சுரங்களுக்கும் பொதுவான பெலவீனத்துக்கும் திசந்தெரி[7] தியறீயங்க[8]ளின் பிற்கூற்றுக்கும் துவர்கள் வேண்டிய மற்றும் நோய்களுக்கும் இது கொடுத்து வாய்த்தது. (28)

தேயம். பட்டைத் தூளில் ஒருதிறும் நாள் இரண்டுமுறை கொடுக்கலாம். இதுவே உத்தமமான முறை.

ரசிதங்கள். சேம்பட்டைத் திகாக்தம். Decoction of Rohun. கொள். துவைத்த சேம்பட்டை, ஒன்றரை அன்சு; வெந்நீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பதினைந்து மினிநேரம் அவித்து, இறுத்து, இறுத்த நீர் அரைநாழியளக்கப் போதிய வெந்நீரைப் பட்டையில் வார்த்து எடுத்துக்கொள்ளவும். ஓக்[9] பட்டைத் திகாக்தத்துக்கு இது பதிலாகும். கார்கில்கள்[10], புகட்டல்கள்[11], எனீமங்களுக்கு[12] உவந்தது.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

மலைவேம்பு. Melia Azedarach. இது அமரிக தேசத்துக்குரியது. ஆயினும் இந்துவின் பல பகுதிகளிற் செய்கைபண்ணப்படுகிறது. இந்தச் சிறிய மரத்தின் வேர்ப்பட்டை அமரிகத்திற் அந்தெல்மிந்தியாக[13]ப்பேர்பெற்று ஐக்கமரிக சிகிச்சை வாகடத்தின் உப இடாப்பிற் சேர்ந்திருக்கின்றது. இது கைப்பும் உவட்டுச் சுவையுமுடையது. கொதிவெந்நீர் இதின் சத்தை வாங்கும். ஒருநாழி தண்ணீரில் நாலு அன்சு வேர்ப்பட்டையைப் போட்டு அரைநாழியாய் வர அவித்து இது கொடுக்கப்படும். பிள்ளைகளுக்கு இந்தத் திகாக்தத்தை அரை அன்சு தேயமாக மூன்று மணிநேரத்துக்கொருமுறை இரைப்பைக்குடலிற் பிரட்டுக்காணுந்தனையுங் கொடுக்கலாம். சிலநாளாகக் காலைமாலையில் ஒவ்வொரு தேயங்கொடுத்துப் பிற்பாடு சுள்ளாப்பான விரேசனங்கொடுப்பது இன்னொருமுறை. அதி தேயத்தில் இது மயக்கத்தை உண்டாக்குகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

---

1 Tannic acid. 2 Gallic acid. 3 Amorphous. 4 Nitric acid. 5 Tonic. 6 Antiperiodic. 7 Dysentery. 8 Diarrhoea. 9 Oak bark. 10 Gargle. 11 Injection. 12 Enema. 13 Anthelmintic, கிருமிகொல்லி.

(27) (28) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

மயக்கம் உண்டானாலும் மோசமில்லாமல் மாறிப்போகும். பட்டை காய்ந்தால் அதின் வீறு மெத்தக் குறையும். இதின் பச்சைக் காய்கள் இலைகளுக்கு நஞ்சுத்தன்மை உண்டென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

தூணுமரம். Cedrela Toona. இந்த மரத்தின் பட்டை கடுங் கயரானது. மற்றுங் கயர் மருந்துகள் கிடையாத வேளையில் இதை வழங்கலாம். குழந்தைகளின் காலிகதிசந்தெரிக்கு[1] வேற்சு வைத்தியர் இந்தப் பட்டையின் எசிருத்தை[2]க் கொடுத்து நயங்கண்டார். இதற்கு அந்திபிருடித்[3]தன்மை உண்டென்று புளூட், கெனடி வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது நல்ல அந்திபிருடியென்று ரோசு வைத்தியரும் சின்கனத்துக்குப்[4] பதிலாகுமென்று நூத்தன் வைத்தியருஞ் சொல்லியிருக்கிறார்கள்.

தேயம். காய்ந்த பட்டைக் கஷாயத்தில் நாள்தோறும் ஒருஅன்சு; பட்டைத் தூள் பலவகையான புண்களுக்குக் கயராய் இடுவதற்கு மெத்தத் திறமென்று கெனடி வைத்தியர் கண்டார்.

கடற்றென்னை. Xylocarpus Granatum. இம்மரம் இந்துவிலும் அயற்தேசங்களிலும் தாழ்வும் நொதியுமான பகுதிகளில் உண்டாகும். பட்டையும் மரத்தின் மற்றும் பகுதிகளும் மெத்தக் கைப்புந் துவருமுடையன. இது நல்ல துவரான தொணிகமாகுமென்று துணியலாம். மலாயர் இதை வாந்திபேதி, வயிற்றுவலி, கழிச்சல்களுக்கும் மற்றும் குடல் நோய்களுக்கும் அதிகமாய் வழங்குவார்கள்.

## சேலஸ்திரினியங்கள்.

## CELASTRINEAE.

அவாகடச்சரக்குகள். Non-officinal.

வாலுளுவை. Celastrus Paniculata, இந்தச் செடியின் கொட்டை கடைகளில் வரும். இது கறைக் கபிலநிறம், முட்டை வடிவம், ஐந்திலொருபங்கு இஞ்சு நீளம், கடுதாசியில்நசுக்கிவிட அதில் எண்ணெய்ப்பிடிக்கும்; மிளகளவு பருமையும் மூன்று இதழ்களுள்ளதுமான பழத்தின் சேஷம் கொட்டையுடன் பெரும்பாலுங் கலந்திருக்கும். சுதேசிகள் இந்தக் கொட்டையிலிருந்து கருமையான ஓர் புகையெண்ணெயைத் திஸ்திலித்தெடுப்பார்கள். இதுவே வாலுளுவைத் தேல். இது பெரிபெரிக்கு[5] உத்தமமான மருந்தென்று கொர்குலச்சு வைத்தியர் சொல்லியிருக்கிறார். இதைப் பத்துமுதல் பதினைந்துதுளி தேயத்தில் நாளிரண்டு முறை கொடுத்தால் வீறான ஸ்திமுல[6]மாகும். இது ஸ்திமுலமாகச் சேஷ்டித்தபின் சில மணிநேரமாகக் களையில்லாமற் தாராளமாய் வெயர்க்கும். கொர்குலச்சுவைத்தியர் புகழ்ந்தஅளவு நயங்காணாதிருந்தாலும் இதைக் கொடுத்த சிலருக்கு நயஞ் சந்தேகமின்றிக்கண்டது. சிலரிலோ வாய்க்கவில்லை. இந்த நோயின் தொடக்கத்துக்கும் விறைப்பும் சோர்வுமான குணம் மேலாடிநிற்கும் பேர்களுக்குமே இது விசேஷமாய்த் தருந்தென்று தோற்றுகிறது.

---

1 Chronic dysentery. 2 Extract. 3 Antiperiodic. 4 Cinchona. 5 Beri-beri. 6 Stimulant, தீவனி.

Digitized By Roja Muthiah Research Library

# ரம்னியங்கள். RHAMNEA.

## ரம்னஸ்செடி.

## COMMON BUCKTHORN. RHAMNUS CATHARTICUS.

வாசம். இது பிறித்தனிலும் யுரோப்பத்தின் மற்றும் பகுதிகளிலுமுள்ளது.

வாகடபகுதி. பழத்தில் உடன்பிழிந்த சாறு.

தன்மை. இது நீரடிக்கும் பேதி.

உபயோகம். இது நீர்க்கோவைகளுக்குங் கடுமையான மலக்கட்டுக்குஞ் சுள்ளாப்பான விரேசனம் வேண்டிய மற்றும் நோய்களுக்குங் கொடுக்கப்படும்.

ரசிதம். ரம்னஸ் சிறுபம். Syrup of Rhamnus. கொள். ரம்னஸ் சாறு, இரண்டு நாழி; சீவினஇஞ்சி, துவைத்தபிமெந்தம்[1], வகைக்கு முக்கால் அன்சு; சுத்த சர்க்கரை ஐந்து இறாத்தல் அல்லது போதியது; திட்டசீது[2] ஆறு அன்சு. சாற்றை ஒன்றேகால் நாழியாகுந்தனையும் காய்ச்சி இஞ்சி, யையும் பிமெந்தத்தையுஞ் சேர்த்து, மென்சூட்டில் நாலுமணிநேரம் ஊறவிட்டு இறுக்கவும். ஆறினபின் சீதைச் சேர்த்து, அக்கலவையை இரண்டு நாள் நிற்கவிட்டு பிற்பாடு நீரைத் தெளித்து அதின் விசேஷகிருவிதம் 1·32 ஆய் வரத்தக்கதாய்ச் சர்க்கரையை மென்சூட்டிற் கரைக்கவும்.

தேயம். ஒரு திறாம். இது பிறித்தனி வாகடத்திற் குறித்த தேயம். பரைரர், கிறிஸ்திசன் முதலியவர்களுடைய வாகடங்களில் இதின் தேயம் அரை அன்சு முதல் ஒரு அன்சு என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. வெக்கையான பரமாணுவில் இது சுறுக்கு நொதித்துப் பழுதாகுமாகையால் உஷ்ண தேசங்களில் வழங்க இது உவந்த தல்ல.

# அம்பெலிடியங்கள்.

# AMPELIDEAE.

## திராட்சக்கொடி. GRAPE VINE.

வாசம். இது மத்திமோஷ்டண ஆசியத்திலுள்ளது. பூமியின் மத்திம பகுதிகள் அடங்கலிலும் இது செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி வெயிலிலாவது நெருப்பிலாவது காயவைத்த திராட்சப் பழவற்றல். இந்த வற்றல்கள் திரைந்து சுருங்கி, நசிந்து அழுத்தமாய்ச் சர்க்கரையாவது உப்பாவது பூத்திராமல் நல்ல வாசனையாயிருக்கும். சதை மெதுவும் அதிகம் இனிப்புமாயிருக்கும்.

---

1 Pimento. 2 Rectified Spirit.



Digitized By Roja Muthiah Research Library

**தன்மை உபயோகம்.** இது திமல்சம்[1]; பெரும்பாலும் சுவைக்காக வழங்கப்படும்.

**ரசிதங்கள்.** ஏலக்கூட்டிரஞ்சம்[2] நிலவாகைக்கூட்டிரஞ்சம்[3] முதலியவற்றில் திராட்சப்பழ வற்றல் ஓர் கூறுகச் சேருகின்றது.

**தாத்தரிக்கமிலம்.** Tartaric Acid. இது திராட்சப்பழச் சாறு நொதிக்கையில் அடைந்த உப்பாகிய பதாசியமிலதாத்தரசி[4]லிருந்தெடுத்த கிரிஸ்த[5]லான அமிலம். இதைக் குறிக்குஞ் சின்னமாவது : ஐ$_{2}$ கா$_{4}$ ஐ$_{4}$ அ$_{6}$. இது நிறமற்ற சாய்வான ரம்ப பிரிசங்[6]களாக விளையும். வீறான அமிலச்சுவையுள்ளது. தண்ணீரிலுந் திட்டசீதி[7]யிலுஞ் சுறுக்குக் கரையும். இந்த இரண்டு கரைவில் எதற்காவது, சொற்ப பதாசியசிதசு[8] சேர்க்க, வெண்மையான கிரிஸ்தலடையல்[9] உண்டாகும். தண்ணீரிற்கரைந்த எழுபத்தைந்து கிறேன்[10] தாத்தரிக்கமிலம் தடஸ்த[11]மாவதற்குச் சோடபருமவிலயனத்தில்[12] 1000 கிறேன் அளவு வேண்டும். இந்த அமிலத்தின் தண்ணீர்க்கரைவு ஐருசல்வுரிக்கமிலத்தால்[13] மாறுதல் அடையாது. சுண்ணசல்வசு[14] அல்லது அமோனக்சலசின்[15] விலயனத்தோடு கலக்கும்போது அடையல்விழாது. இதைப் பரமாணுவில் எரிக்கச் சேஷம் காணுது; அல்லது மெத்தச் சொற்பமாய்க் காட்டும்.

**தன்மை உபயோகம்.** இது குளிர்மையானது. காய்ச்சல் முதலியவற்றுக்குக் குளிர்ந்த பானங்கள் செய்வதிற், சிதறிக்கமிலத்துக்குப்[16]பதிலாக இது வழங்கப்படும். நுரைபானங்கள் செய்வதற்கு இது பெரும்பாலும் உபயோகமாகும்.

| | |
|---|---|
| தாத்தரிக்கமில கிரிஸ்தலில் இருபது கிறேனை | |
| கிரிஸ்தலான பதாசிதுவிகாபனசு[17] | 27 கிறேன். |
| வியாபாரப்பதாசிகாபனசு[18] | 22 கிறேன். |
| அமோனவைரசுச்சார்த்தகாபனசு[19] | 15½ கிறேன். |
| கிரிஸ்தலான சோட[20]காபனசு | 38½ கிறேன். |
| வியாபாரச் சோடதுவிகாபனசு | 28 கிறேன். |

பூர்த்திக்கும்[21].

இப்பிரமாணங்களின்படிசெய்யும் பானங்கள் குளிர்மையாய்த் தாகத்தைத் தணிப்பதுமாத்திரமல்ல, நுரைக்கையிற் குடிக்கும்போது காபனிக்கமில[22]த்தைக் கக்கிவிடுவதால் உவட்டிப்பையும் இரைப்பையழற்சியையுந் தணிக்கும்.

**தேயம்.** பத்து முதல் முப்பது கிறேன்.

திராட்சம் முதலியவற்றின் சாற்றிலிருந்து வரும் ரசிதங்களாகிய அலந்கால், வைன், காடி, என்பவைகள், நொதிப்பால் எடுக்கும் பதார்த்தங்களுடன் பின்னே சொல்லப்படும்.

---

1 Demulcent, சமசி. 2 Compound tincture of Cardamoms. 3 Senna. 4 Acid Tartrate of Potash 5 Crysta. 6 Rhombic prism. 7 Rectified Spirit. 8 Acetate of potash. 9 Crystalline deposit. 10 Grain. 11 Neutral. 12 Volumetric solution of Soda. 13 Hydro-Sulphuric acid. 14 Sulphate of Lime. 15 Oxalate of Ammonia. 16 Citric acid. 17 Bicarbonate of Potash. 18 Carbonate of Potash. 19 Hydrated Sesquicarbonate of Ammonia. 20 Soda 21 Saturate. 22 Carbonic acid.

Digitized By Roja Muthiah Research Library

# அனகாடியாசியங்கள்.

# ANACARDIACEAE.

## மஸ்திகுமரம். MASTICH TREE.

வாசம். தென்யுரோப்பம், வடஆபிரிகம், லெவந்துக் கடற்கரை.

வாகடபகுதி. மரத்தைக் கீறப் பொசியும் மஸ்திகு என்ற ராளம்[1]. இது நொருங்கக்கூடிய மஞ்சள்நிறமான சிறுத்த நீண்ட உண்டைகளாக வரும். ஒடிந்த இடத்தில் மினுங்கும். சப்ப மெதுவும் கம்பியாய் இழுபடக்கூடியதுமாகும். சுகந்தம் சொற்பமாய் வீசும். சூடுகாட்ட உரைஞ்ச இந்த மணம் அதிகப்படும். இதிலே சொற்ப வீதமான அத்திர[2] வெண்ணெய்யும், அலக்காலிற்[3] கரையக்கூடிய மஸ்திகிக்கமிலம்[4] என்ற ஓர் ராளம் நூற்றுக்கு ஏறக்குறைய 90 வீதமும், குளிர்ந்த அலக்காலிற் கரையமாட்டாததும் சுடு அலக்காலிற் கரையக்கூடியதுமான மஸ்திசின்[5] என்ற பின்னொரு ராளம் நூற்றுக்குப் பத்து வீதமுமாய் அமைந்திருக்கும்.

தன்மைகள். தர்ப்பந்தீன் போன்ற ஸ்திமுலம்[6] அமுரிதி[7].

உபயோகம். இதுஉள்மருந்தாகக் கொடுக்கப்படுவதரிது. இது அவிபட்ட தண்ணீர் குழந்தைகளின் கழிச்சலுக்கு நல்லதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதை ஈதரிற்[8] கரைத்துப் பருத்திப் பஞ்சிற்றோய்த்துக் கோறைப் பல்லுக்குள்ளே வைக்கப் பற்கொதி பெரும்பாலும் மாறும்.

தேயம். பத்துமுதல் முப்பது கிறேன்.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

கிஞ்சுக்பிஸ்தகிமரம். கபூல்பிஸ்தகிமரம். Pistacca Khinjuk and P. Cabulica. பெலுகிஸ்தான் அவ்கனிஸ்தானிலுள்ள இந்தச் சிறிய மரங்கள் இரண்டும் தெறிபிந்த மரத்துக்கு இனமானவைகள். இவைகளிலிருந்து ஓர் ராளம் பொசியும். இது அத்தேசங்களில் மாத்திரமல்ல சிந்து, பார்சிய தேசங்களிலும் மஸ்திகுக்குப் பதிலாய் வழங்கப்படுகின்றது. கைப்பு மஸ்திகு என்று சொல்லப்படுகிற குந்துருக்கத்திலிருந்தும் மஸ்திகுவிலிருந்தும் இதைப் பகுத்தறிவதற்கு இதை இனிய மஸ்திகு என்று பார்சியர் குறித்தெழுதியிருக்கிறார்கள். இந்த மரங்களில் முதலாவதில் ஓர் மாதிரியான மாசக்காய் உண்டாகும். இது நாட்டு வாகடங்களிற் சேர்ந்திருக்கின்றது. இது அத்திப் பழம்போல் முட்டை வடிவும், அரைஇஞ்சுவரைக்கு நீளமும் செங்கபிலநிறமுமான காய். இது உள்ளே குழாயாயிருக்க ஓடு மெல்லிதும் நொருக்சலும் உருவொளியுமாயிருக்கும். சுவை புளிப்பும் துவரும் சற்றே தர்ப்பந்தீன் போலுமாம்.

கற்கடகசிங்கி. Rhus succedanea. இது இமயமலையின் மத்திமோஷ்டண பகுதிகளிலுள்ள மரம். இதின் கொப்புகளில் பூச்சிகள் குற்றிவனரும் கொம்புபோன்ற காய்களைப்பற்றி இது கற்கடகசிங்கியெனப்பட்டது.

---

1 Resin. 2 Volatile. 3 Alcohol. 4 Mastichic acid. 5 Masticine. 6 Stimulant, தீவனி. 7 Diuretic தியுரீசம 8 Ether.

Digitized By Roja Muthiah Research Library

இந்தக் காய்கள் பரிதும் உட்குழாயானவைகளும் மெல்லிய சுவருடையவைகளும் பெரும்பாலும் நீண்டு திரண்டவைகளுமாய் இருதலைப்பிலும் ஒடுங்கிக் கூராயிருக்கும். இவை சிலவேளை சுட்டுவிரலின் நீளமும் பருமையுமாயத் திருகி ஒழுங்கீனமாயிருக்கும். இவைக்குத் துவர்த்தன்மை தொணிகத்[1]தன்மைகள் உண்டென்று சுதேசிகள் சொல்லுகிறார்கள்

மாமரம். Mango tree. இது இந்துதேசமடங்கலுமுண்டாகும். இதின் கொட்டையின் பருப்பை மாத்திரமே இவ்விடத்திற் கவனிக்கவேண்டியது. இது இந்துவில் மாத்திரமல்லப் பிறேசிலிலும் அந்தெல்மிந்தி[2]யாக வழங்கப்படுகின்றது. கெர்க் பதிரிக்கு வைத்தியர் தனது பரிகாரத்தில் மாங்கொட்டைப்பருப்பு மாவை அந்தெல்மிந்தியாக இருபது முப்பது கிறேன் தேயத்தில் கீரைப்பாம்புக்குக் கொடுத்துச் சித்திபெற்றேறுமென்கிறார். இன்னும் அவர் இதிலே அதிவீதமாய்க் கலிக்கமிலம்[3] இருக்கிறதென்றும் இரத்தம் பாயும் மூலமுளை[4]க்கும் மெனுறீயத்துக்கும்[5] கொடுத்துக் கைகண்டோமென்றுஞ் சொல்லுகிறார். இந்தமருந்து மேலும் பரிசோதிக்கப்படவேண்டியது.

காட்டுழந்திரி. Cashew tree. இது இந்து முதலிய உஷ்டண தேசங்களின் கடற்கரைகளில் மிகுதியாயுண்டு. இதிலிருந்து அதிக அளவான பிசின் வடியும். ஆயினும் இந்தப் பிசின் மருந்துக்காவது வேறொன்றுக்காவது மெத்த உபயோகமானதல்ல. கொட்டையின் ஓட்டுப் படலங்களுக்கிடையில் காரமான கறுப்புநீர் சொற்பமுண்டு. அதிலே காடல்[6] என்ற காரமான தைலச்சத்தும் அனகாடிக்கமிலம்[7] என்ற ஓர் அமிலமும் அடங்கியிருக்கும். இந்த நீருக்கு ருபிவாஷ[8] கொப்புள[9]த்தன்மைகள் உண்டு. ஆயினும் சேங்கொட்டையின்[10] நீருக்குள்ள தடைகள் இதற்குமுண்டு. இதின் பருப்பைப் பிழிய மெல்லிய எண்ணெய்வரும். இதைச் சிகிச்சை[11]யில் வழங்கலாம். பழத்தைப் பிழிந்த சாற்றிலிருந்து மலையாளக்கரைகளில் நல்ல சீது[12] திஸ்திலிக்[13]கிறார்கள். இது வம்பாயிலும் மற்றுமிடங்களிலும் கிடைக்கக் கூடியது. இது தனக்கேயுரிய ஓர்வகை மணமுள்ள நல்ல சீது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றும் ஸ்திமுலங்கள்[14] கிடையாதவிடத்தில் இதை ஸ்திமுலமாக வழங்கலாம்.

சேங்கொட்டை. Marking nut. இக்கொட்டையின்ஓட்டுப்படலங்களுக்குள்ளே இருக்கிற பிசுபிசுப்பான கறுத்தச்சாறு அடையாளம் போடுவதற்கு மையாக வழங்கப்படும். இது கடுங்காரமானது. சுதேசிகள் கொப்புளங்கொள்ளும் மருந்தாக இதை வழங்குவார்கள். இதை இப்படி வழங்குவது குற்றம். சொற்ப இடத்திற்றானும் இந்தச் சாறு பட்டதால் மெத்த மோசமுண்டானது. கொப்புளங்கொள்ள இதைப் போட்டதினல் புண்ணுண்டாய் ஒரு ஆளுக்கு மரணம் நேரிட்டதாக எழுத்திலிருக்கின்றது. மையாக இதை வழங்குவதிலும் மெத்த அவதானந் தேவை. காரமான இந்தச் சாற்றின் ஆவி வீசினதால் சிலருக்கு முகம் முதலிய பகுதிகளில் எரிசிப்பிலசு[15] உண்டானது. சிலருடைய உடம்பில் இது லகுவிற் பிடிக்கும். இதைப் போட்டதாலுண்டான வீக்கமுங் காய்ச்சற் குணங்களும் உப்பு மருந்துகளை உள்ளுக்குக் கொடுப்பதாலும் அந்த இடத்துக்கு வங்கநீர்[16] இடுவதினலும்

1 Tonic. ஓசதி. 2 Anthelmintic, கிருமிகொல்லி. 3 Gallic acid. 4 Piles, 5 Menorrhoea. 6 Cardol. 7 Anacardic acid. 8 Rubifacient, சோணதி. 9 Vesicant. 10 Marking nut. 11 Pharmacy. 12 Spirit, ஸபிரிதம். 13 Distil. 14 Stimulant, தீவனி. 15 Erysipelas, உதிர்த்தம். 16 Liquor plumbi.

Digitized By Roja Muthiah Research Library

செவ்வையாய் மாறுமென்று கிறைல்சு வைத்தியர் சொல்லுகிறார். சேங்கொட்டையை அரைத்துக் கருப்பைவாய்க்கு[1] இடுதல், கருவை அழிப்பதற்கு நாட்டுப்பெண்கள்செய்யும் சூட்சமென்று நூற்றன்வைத்தியர் சொல்லுகிறார்.

Melanorrhoea Usitatissima.—இது கங்கைநதிக்கப்பாலுள்ள இந்துதேசப்பகுதியில் உண்டாகிற பெரிய மரம். இதின் எப்பகுதியிலுமிருந்து தடித்த பிசுபிசுப்பான நரைநிறமுள்ள தர்ப்பந்தீன்[2] போன்ற நீர் வடியும். பரமாணுவில் வைக்க இந்த நீர் கறுப்பாகும். பிரமதேசக் கறுப்புவாணிசு[3] என்பது இதுவே. பிரமர் இதை வேலைகளில் மாத்திரமல்லக் கீரைப்பாம்புக்கு மருந்தாகவும் வழங்குவார்கள். இது மெத்தச் சத்துள்ளது; அந்தெல்மிந்றி[4]யாக இதைச் சமபங்கு தேனுடன்சேர்த்து லேகிய[5]மாக்கிக் கொஞ்சமணித்தியாலம் சூட்டில் வைத்தபின் கொடுப்பார்கள். இந்த லேகியத்தின் தேயம் ஆளின் வயதுக்குத் தக்கதாய் ஒன்று இரண்டு மூன்று பெருங்கரண்டி. இதைக் கொடுத்தபின் சில மணி நேரத்தால் ஆமணக்கெண்ணெயில் ஒரு தேயங்கொடுக்கக் கீரைப்பாம்பு செத்து விழும். இந்த மருந்து கிருமிக்கு நஞ்சென்று இதினால் விளங்கும். இந்த மருந்து மெத்த உவட்டிப்பானதாயும் அதிதேயமாய்க் கொடுக்கவேண்டியதாயுமிருத்தல் இதை வழங்குவதற்குப் பெரிய தடைகளாகும். ஆயினும் இதின் சத்து ஓர் அத்திரவெண்ணெய்யில் இருப்பதாகத் தோற்றுகிறபடியால் அது சுத்தமாய்க் கிடைத்தால் சோதித்துப் பார்க்கத் தகுந்தது. புதிய சாற்றைக் கையாளுவதாற் சிலருக்கு எரிசிப்பிலசு[6]வீக்கம் உண்டாகும். தேக்கங்கஷாயம்[7] பூச அவ்வீக்கம் மாறும்.

ஒதியமரம். Odina wodier. இது இந்துதேசமடங்கலுமுள்ள பெரிய மரம். இதின் பட்டை மெத்தக் கயரானது. இதின் கஷாயத்தைக் கரப்பன்களுக்கும் நாட்பட்ட புண்களுக்கும் பூச்சுமருந்தாக கெர்க் பதிரிக்கு வைத்தியர் வழங்கினார். இந்தக் கஷாயம் வாய்தொண்டை கொப்பளிக்கிறதற்கு உத்தமமானதென்று போசு வைத்தியர் சொல்லுகிறார். இந்த மரத்திலிருந்து அதிக அளவான பிசின் வடியும். இந்துவின் சிலவிடங்களில் இது எற்றுமதிபண்ணுவதற்காகச் சேர்க்கப்படும். இதற்குங் கயர்த்தன்மையுண்டுபோற் தோற்றுகின்றது. இந்தப் பிசினைப்பற்றி ஸ்துவடு வைத்தியர் நல்ல விவரம் சொல்லியிருக்கிறார்.

## மோரிங்கியங்கள்.

## MORINGEAE.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

முருங்கை. Moringa pterygosperma. இதின் வேர் அமுரூசி[8]வேரைப் போன்ற காரப்பான சுவை மணமுடையது. பச்சை வேரைத் தோலில் இடச் சிவந்து கொப்புளிக்கும். ஆயினும் இதாலுண்டாகும் எரிவு, இதை வழங்குவதற்குத் தடையாகும். கடுகுப்பற்றின் வீறு அதிகப்படுவதற்

---

1 Os uterus. 2 Turpentine. 3 Varnish. 4 Anthelmintic. கிருமிகொல்லி.
5 Electuary. 6 Erysipelas, உதிர்த்தம். 7 Infusion of teak.
8 Armoracia.

Digitized By Roja Muthiah Research Library

கு முருங்கைவேர்ப்பட்டைச் சாற்றைச் சேர்ப்பது நல்லதென்று வைத்தர் பண்டிதர் சொல்லுகிறார். வேற்சுவைத்தியரும் இப்படியே சொல்லுகிறார். உள்மருந்தாகக் கொடுத்தால் இதற்கு ஸ்திமுல[1] அமுரிதித்[2]தன்மைகள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது அமுரூசிவேருக்குப் பூரணமான பதிலென்று பிடி வைத்தியர் எண்ணுவது சரி. தொண்டை கம்மலுக்குக் கொப்புளிக்க இதின் வேர்க்கஷாயம் நல்லதென்று சாற்று வைத்தியர் சொல்லுகிறார். இதை வழங்குவதற்குச் சிகிச்சா வாகடத்தில் இரண்டு முறைகளுண்டு. 1 முருங்கைக்கூட்டுச் சீது. கொள். நறுக்கிய முருங்கை வேர், தோடந்தோல், வகைக்கு இருபது அன்சு; துவைத்த சாதிக்காய், ஐந்துதிரும்; புருவுசீது ஒரு கலன்; தண்ணீர் ஒருநாழி. கலந்து ஒரு கலன் திஸ்திலிக்கவும். இரண்டு முதல் நாலு திரும். தேயத்தில் இது ஸ்திமுலம். 2 முருங்கைக்கூட்டுக்கஷாயம். கொள். நறுக்கிய முருங்கைவேர், இடித்த கடுகு, வகைக்கு ஒரு அன்சு; கொதிவெந்நீர் அரைநாழி. மூடிய பாத்திரத்தில் இரண்டு மணிநேரத்துக்கு ஊறவைத்து இறுத்து முருங்கைக்கூட்டுச் சீதில் ஒரு அன்சு சேர்க்கவும். இரண்டொரு அன்சு தேயத்தில் இது நல்ல ஸ்திமுலமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதின் கொட்டையிலிருந்து ஓர் திரமான[3]மெண்ணெண்ணெய் வரும். இது (Moringa aptera) என்ற இனமான முருங்கையிலிருந்து வரும் எண்ணெய் போன்றது. இந்த மரத்தின் இலை, பட்டை, பூ, பிசின் முதலியவற்றையும் சுதேசிகள் மருந்துக்கு வழங்குவார்கள். இவைகளைப்பற்றி நம்பிக்கையான காரியம் ஒன்றுந் தெரியவில்லை.

## லெகுமினோசியங்கள்.

## LEGUMINOSAE.

### அகசிப்பிசின்மரம். ACACIA VERA.

வாசம். அரபிதேசத்திலும் ஆபிரிகத்திற் செனிகல் தொடங்கி எகிப்து வரைக்கும் இருக்கும்.

வாகடபகுதி. அடி மரத்திலிருந்து வடியும் பிசின். இது அகசிப்பிசின் என்றும் அரபிப்பிசின் என்றுஞ் சொல்லப்படும். இது விசேஷமாய் ஆபிரிகத்திலுள்ள கோடவன் என்ற பகுதியிற் சேர்க்கப்பட்டு அலெக்சந்திரிதுறைமுகம் வழியாய் இங்கிலந்துக்கு ஏற்றுமதிபண்ணப்படும். இது அரைஇஞ்சு ஒரு இஞ்சு நீளமுள்ள, நிறமற்ற, முட்டைவடிவான துண்டுகளாக வரும். அனேக நுண்ணிய வெடிப்புகளிருப்பதால் இவை மங்கலாகவாவது மினுக்கமான சின்னங்களாகவாவது இருக்கும். நொருக்கலும் மெதுவும் வழுவழுப்புமுள்ளது. அலக்கா[5]லிற் கரையாது; தண்ணீரிற் கரையும். இதின் கரைவோடு ஈயவதவசிதகு[5]சேர்க்க மங்கலும் வெண்மையுமான களியாய்வரும். அகசிப்பிசின் மாவுக்கு இயோதநீர்[6]இன்னும் சேர்க்க அதுநீலமாகாது.

பாபெரி, செனிகல், கிழக்கிந்து முதலிய இடங்களிலுண்டாகி அந்தந்த இடப்பெயரால் அழைக்கப்படுகிற சிலவகையான அகசிப்பிசின் வியாபார

1 Stimulant. திவனி. 2 Diuretic. தியுறீசம் 3 Fixed. 4 Alcohol. 5 Subacetate of lead. 6 Iodine water.

Digitized By Roja Muthiah Research Library

த்தில் வரும். இவைகளுள் மிகுதியானவைகள் கீழ்த்தரமானவைகள். இவைகள் இன்னின்ன மரத்தில் வடியும் பிசின் என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

தன்மைகள். இது திமல்சம்[1], இமாலியம்[2]. இது பெரும்பாலும் மற்றும் மருந்துகளுக்குத் துணையாகக் கொள்ளப்படும். விசேஷமாய் நீரில் கனத்த பொடி பற்பங்களை மிதக்கப்பண்ணுவதற்காகவே.

உபயோகங்கள். கதார்[3] நோய்கள், சுவாச உறுப்புகள் சனன சல உறுப்புகளின் அழற்சி, கழிச்சல் முதலிய வியாதிகளில் இது மற்று மருந்துகளுக்கு நல்ல துணைமருந்தாகும்.

கிரீதக் கலவை[4], குவயகக்[5]கலவை, வாதுமைக்கூட்டுச்சூரணம்[6], திரககந்து[7]கூட்டுச்சூரணம், இவைகளிலும் வாகட வில்லை[8]கள் எல்லாவற்றிலும் அகசிப்பிசின் ஓர் கூறாகச் சேருகின்றது.

ரசிதங்கள். அகசிழசிலாது. Mucilage of Gum Acacia. கொள். அகசிப்பிசின், பருக்கன் தூளாக, நாலு அன்சு; தண்ணீர் ஆறு அன்சு; பிசினையும் தண்ணீரையும் மட்சாடிக்குள்ளிட்டு மூடிப் பிசின் கரையுந்தனையும் இடைக்கிடை கலக்கவும். கரைந்தபின் தேவையாகில் மெல்லிய புடைவையில் வடித்துக்கொள்ளவும்.

தேயம். நாள்வீதம் மூன்று தொடங்கி ஆறு அன்சு; அல்லது விரும்பியமட்டுங் குடிக்கலாம்.

இந்து தேசத்தில் கருவேல்[9] மரத்திலிருந்து அதிகமான பிசின் எடுப்பார்கள். இது மிகுதிபற்றி மெத்தக் கீழ்த்தரமானதாய் அசுத்தங்களோடு கலந்திருக்கும். இதைப்பார்க்க விளாம்பிசின் அகசிப்பிசினுக்கு உவப்பான பதிலாகும்.

## * வோதலைமரம். CATECHU ACACIA.

வாசம். இது இந்து அடங்கலும் சோலைகளிலுண்டாகும்.

வாகடபதுதி. மர வைரத்திலிருந் தெடுக்கும் ஓர் ௭ஸிருத்து[10]. இது கருங் காசுக்கட்டி யெனப்படும். இது படலம் படலமாய்ச் சேர்ந்த கட்டிகளாக வரும். சிலவேளை முரணுன இலைகளிற் சுற்றப்பட்டு இருக்கும். இது கருங்கபிலநிறமும், மினுக்கமும், பாரமும், கைப்பும், மெத்தத் துவர்ப்புமானது. இதின் சத்துக்கள் ஓர் வகையாண் தனினும்[11] கதிசினு[12]மே. இந்துதேசக் கடைகளில் வேறு மாதிரியான காசுக்கட்டிகளும் வரும்.

தன்மை. கடுங் கயர்.

உபயோகங்கள். குடலின்சளிச்சவ்[13]வின் இளக்கத்தைப்பற்றி யுண்டாகுங் கழிச்சலுக்கு இது மெத்த உவப்பானது. மேலும் இது முறைச்சுரங்கள், ஸ்கேவி[14]முதலிய நோய்களுக்கு நயமென்று கொடுக்கப்பட்டது (29). உமிழ்நீர்ப் பெருக்கு, முரசு கரைதல், புண்படல், உண்ணுக்குநீட்சி, தனசில்[15]வீக்கம்முதலியவற்றுக்குத் தானிகமாய் வழங்கப்படும். லுகறீயத்துக்கும்[16] அசத்துவ மெனுறீயத்துக்கும்[17] புகட்டப்படும்.

---

1 Demulcent. சமனி. 2 Emollient. சாந்தனி. 3 Catarrh. 4 Mistura Creta. 5 Guaiac. 6 Compound powder of Almond. 7 Tragacanth. 8 Lozenge. 9 Babool tree. 10 Extract. 11 Tannin. 12 Catechin. 13 Mucous membrane. 14 Scurvy. 15 Tonsil, லசுனம். 16 Leucorrhoea. 17 Atonic Menorrhoea.

(29) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். தூளிற் பத்தத் தொடங்கி இருபது கிறேன். இந்த மாதிரியா ய்க் கொடுப்பதரிது.

ரசிதங்கள். காசுக்கட்டியின்ஊசம். Infusion of Catechu. கொள். காசுக்கட்டி பருக்கன்தூளாக நூற்றறுபதுகிறேன்; இடித்த கறுவாப்பட்டை முப்பது கிறேன்; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் அரை மணிநேர மூறவிட்டு இறுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு.

காசுக்கட்டியிரஞ்சம். Tincture of Catechu. கொள். காசுக்கட்டி ப ருக்கன் தூளாக, இரண்டரை அன்சு; இடித்த கறுவாப்பட்டை, ஒரு அன் சு; புரூவுசீது[1] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு இ டைக்கிடை குலுக்கிப் பிழிந்து இறுத்து வடித்து, அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். அரைத்திரும் முதல் இரண்டு திரும். கிரிதக்கலவைக்[2]கும் ம ற்றும் துவர்ச் கலவைகளுக்கும் இது நல்ல கூட்டு.

காசுக்கட்டிக் கூட்டுச்சூரணம். Compound Powder of Catechu. கொ ள். காசுக்கட்டி தூளாக, நாலு அன்சு; கீனுத்தூள்[3], கிரமேரி[4] வேர்த்தூள், வகைக்கு இரண்டு அன்சு; கறுவாப்பட்டைத்[5] தூள், சாதிக்காய்த்[6]தூள், வ கைக்கு ஒரு அன்சு. எல்லாவற்றையும் நன்றாய்க் கலந்து மெல்லிய அரிப் பெட்டியில் அரித்துக் கடைசியில் குழி அம்மியிற் போட்டு மெதுவாய் அ ரைத்து அடைப்புள்ள சீசாவில் இட்டு வைக்கவும்.

தேயம். பதினைந்து முதல் முப்பது கிறேன் கொடுக்கலாம். இது சுக ந்தமான நல்ல துவர்;

## கபேவ மரம். COPAIFERA MULTIJUGA.

வாசம். அமரிக தேசத்தின் உஷ்டணப் பகுதியில் விசேஷமாய்ப் பிற சிலில் உண்டாகும். இதில் ஒரு இனம் மேற்கிந்துத் தீவுகளில் உள்ளது.

வாகடபகுதி. அடி மரத்திற் கீற வடியும் ஓர் தேல ராளம்[7]. இது உரு வொளியும் தண்ணீரைப்பார்க்க லேசும் ஒலீவெண்ணெய்[8]அளவு தடிப்பும், வெண்மஞ்சள் நிறமும், தனக்கேயுரிய வாசனையும், காரமான சுகந்த உவட் டெச்சுவையுமுடையது. சமபங்கு பெஞ்சோலில்[9]முற்றாய்க் கரையும். 270 பாகை சூடளவுக்குக் காய்ச்சினபின்னும் களியாகாது. விலூறசம்[10] என் னும் ஒளியெறிதல் இல்லாததுபோலும்.

தன்மைகள். இது தர்ப்பந்தீன்[11] போன்ற ஸ்திமூலம். விசேஷமாய்ச் ச ளசல உறுப்புகளின் சளிச்சவ்விற்[12] சேஷ்டிக்கும்.

உபயோகங்கள். கனூறீய[13] நோய்க்கு இது உத்தமமான அவுஷதம். மே லும் வெட்டைவாதம், லுகறீயம்[14],மூலமுளை[15], காவிகசலப்பைத்தபம்[16],புறங் குறீயம்[17], காவிகபுறங்கீது[18] இவற்றுக்கும் அதிகங் கபங்கக்கலோடு கூடிய மற்றும் சுவாச நோய்களுக்கும் இது நயந்த மருந்து.

---

1 Proof spirit. 2 Chalk mixture. 3 Kino. 4 Krameria. 5 Cinnamon bark. 6 Nutmeg. 7 Oleo-resin. 8 Olive oil 9 Benzole. 10 Fluorescence 11 Turpentine. 12 Mucous membrane. 13 Gonorrhoea, வெட்டை. 14 Leucorrhoea. 15 Piles, 17 Chronic Cystitis, 18 Bronchorrhoea. 19 Bronchitis.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். இருபது துளிமுதல் ஒரு திருமை நாள் இரண்டு மூன்றுமுறை இமல்சத்தி[1]லாவது தண்ணீரில் மிதக்கவிட்டாவது கொடுக்கவும.

ரசிதம். கபேவ வெண்ணெய். Oil of Copaiva. இது கபேவதேலராளத்திலிருந்து திஸ்திலித்தெடுக்கப்படும். இது நிறமற்றதாய் அல்லது வெண் மஞ்சள் நிறமாய், கபேவத்தின் மணம் சுவையையுடையதாயிருக்கும்.

தேயம். ஐந்து முதல் இருபது துளி, நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். கபேவம் கொடுக்கப்படும் நோய்களுக்கு எல்லாம் இதைக் கொடுக்கலாம்.

## புளியமரம். TAMARIND TREE.

வாசம். இப் பெரிய மரம் ஆபிரிக தேசத்துக்குரியது. இக்காலம் உஷ்டண தேசங்கள் எங்கும் வளருகின்றது.

வாகடபகுதி. பழப்புளி. பழங் கனியமுன் கருஞ் சிவப்புநிறமாயும் மெத்தப் புளிப்புமினிப்புமாயுமிருக்கும். மருந்துக்கென்று சர்க்கரையிற் பேணிவைத்த பழம், கருமையாயும் இனித்த புளிப்பாயுமிருக்கும். பழத்துக்குள்ளே பெலஞன தும்புகளும் தனித்தனிச் சவ்வுட் சுற்றப்பட்ட மினுக்கமுள்ள கறுத்தக் கொட்டைகளுமிருக்கும். சிதிறிக்[2], மலிக்[3], தாத்தரிக்[4], கென்ற அமிலங்கள் இருப்பதைப்பற்றியே இதிற் புளிப்பிருப்பது. தாத்தரிக்கமிலம் பதாசி[5]யோடு சேர்ந்து பதாசிதுவிதாத்தர[6]சாசுவுமிருக்கும். செப்புப் பாத்திரங்களிற் சமைத்தால் புளியுடன் செம்பிலும் ஒருபங்கு சேர்ந்திருக்கும். அப்படிச் செம்பு சேர்ந்த புளியுடன் மினுக்கமான இரும்புத் துண்டொன்றை ஒரு மணித்தியாலத்துக்கு அணைத்துவைத்தால் செம்பு அந்த இரும்பில் அடையும்.

தன்மை. இளம்பேதி, குளிர்மையானது. காய்ச்சல் நோய்கள், தாபித[7] நோய்களுக்குக் குளிர்ச்சியான பானங்கள் இதிற் செய்துகொடுத்தால் பெரும்பாலும் இணக்கமும் நயமுமாயிருக்கும்.(30)

ரசிதம். நிலவாகை லேகியத்திற் பழப்புளி சேருகின்றது.

## கோன்றை மரம். PURGING CASSIA.

வாசம். இது உஷ்டண இந்துவின் சோலைகளில் ஆதியாயுள்ள மரம். இப்போ உஷ்டண தேசங்கள் எல்லாவற்றிலும் உண்டாக்கப்படுகிறது.

வாகடபகுதி. காயின் களி. இது கருநிறமும் பிசுபிசுப்பும் இனிப்பும் சற்றே அரோசியமான மணமுமுடையது. காய்கள் திரண்டு, சற்றே வளைந்து இரண்டொரு அடி நீளமும் மினுக்கமான கருமை நிறமுமாய் இரண்டு பாதிக் கோதுகளுஞ் சந்திக்குமிடத்தில் நெடும்பாடான இரண்டு புருவம் உள்ளதாயிருக்கும். கோது மெல்லிதும் வன்மையும் நொருக்கலுமானது. உள்ளறை ஏராளமான மெல்லிய குறுக்குப் பிரிவுகளால் சிற்றறைகளாகப் பிரிந்திருக்கும். இந்தச் சிற்றறைகள் ஒவ்வொன்றுக்குள்ளே வன்மையும் தட்டையும் நீள வட்டமுமான கொட்டை ஒவ்வொன்று, களியாற் சூழப்பட்டுக் கிடக்கும்.

---

1 Emulsion. 2 Citric acid. 3 Malic, 4 Tartaric. 5 Potash 6 Bitartrate of Potash. 7 Inflammation.

(30) அனுபந்தம்பார்.



Digitized By Roja Muthiah Research Library

ரசிதம். பூதக்கோன்றைக்களி. Prepared Cassia. கொன். கொன்றைக்காய் உரலிற் றுவைத்து, ஒரு இருத்தல்; தண்ணீர் அதை மூடப் போதியது. ஆறு மணிநேரமூறவிட்டு இடைக்கிடை கலக்கி, மெதுவான களியை மயிர் அரிப்பெட்டியில் வடித்து லேகியத்தின் பதமாய் வறட்டிக்கொள்ளவும்.

தன்மை. இது சிறு தேயத்தில் இளம்பேதி, பெருந்தேயத்திற் கடும்பேதியாகும். இதைத் தனியே கொடுத்தால் வாயுப்பொருமலுங் கடுப்புமுண்டாகுமாகையாற் காமினதி[1]களோடு சேர்த்துக் கொடுக்கவேணும். இதைத் தின்றிருக்கையிற் சிறுநீர் சிலவேளை கருங் கபிலநிறங்கொள்ளும்.

உபயோகம். மல வரட்சிக்கும் விரேசனந் தேவையான பேர்களுக்கும் இதைக் கொடுத்தால் வாய்க்கும்.

தேயம். இளம்பேதியாக ஒரு திரும் முதல் இரண்டு திருமும், விரேசனியாக, ஒரு அன்சு முதல் இரண்டு அன்சுங் கொடுக்கலாம். கொன்றைக்களி நிலவாகை லேகியத்திலும் ஓர் கூறாகும்.

கொன்றை மரத்தின் வேர் கடும்பேதியாகச் சேஷ்டிக்கிறதைத் தாம் கண்டோமென்று ஏர்வைன் வைத்தியர் சொல்லியிருக்கிறார்.

## நிலவாகை. SENNA PLANT.

வாசம். இதில் வட்டிலை, கூரிலை, நெட்டிலை, என மூன்று இனமுண்டு. இவைகளில் முதலாம் இனமும் மூன்றும் இனமும் ஆபிரிக தேசத்தின் உஷ்டணமான கிழக்குப் பகுதிக்கும் அரபி தேசத்துக்கும் இந்துவில் சிந்து பஞ்சாப்பு முதல் கருநாடகம் வரைக்கும் உரிய பூண்டுகள். மூன்றும் இனம் எகிப்திலும் நுபியத்திலும் மாத்திரமுண்டு. மூன்று இனங்களும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. காய்ந்த இலைகள். முதலாம் இரண்டாம் இனங்களையடக்கிய சூரத்துநிலவாகையின் லட்சணங்களாவன: இலைகள் கூர் அல்லது வட்டித்த வடிவம். ஏறக்குறைய ஒரு இன்சு நீளமானவைகள். அடி ஒருபக்கத்தில் ஒடுங்கியிருக்கும். நொருக்கலும் நரைப்பச்சை நிறமுமானது. தனக்கேயுரிய சொற்பமணமும், சொற்பமாய்ப் பாணிபோன்ற இனிய சுவையுமுடையது. இதோடு பெரும்பாலும் (Solenostemma Argel) என்ற செடியின் இலை, பூ, காய்களைக் கள்ளமாய்க் கலந்துவிடுகிறார்கள். சமமீனமாய்ச் சரிந்த இதின் அடியினாலும் கைப்பின்மையினாலும் இதை இதிலுந் தடித்த விறைத்த (S. Argel) என்றதின் இலையல்லவென்றறியலாம். திண்ணேவேலி நிலவாகையின் லட்சணங்களாவன: இலைகள் இரண்டு இஞ்சு நீளமும் அயில் வடிவுங் கூருமானவைகள்; அடியிற் சமவீனமாய்ச் சாய்ந்திருக்கும். வசையக் கூடியது. முழுமையும் பச்சையாய்க் கலப்பற்றிருக்கும். மணஞ் சுவை சூரத்து நிலவாகையைப் போலவே.

தன்மை. இது விக்கினமற்ற அநுகூலமான பேதி. பிள்ளைகள், முதியோர், மெல்லிய பெண்களுக்கு இணக்கமானது.

உபயோகம். மலவரட்சிக்கும் விரேசனந் தேவையான நோயாளருக்கும் இது உவந்ததென்று வெகுகாலமாகப் பேர்பெற்றிருக்கின்றது.

---

1 Carminative, வாயுக்கினி.

Digitized By Roja Muthiah Research Library

ரசிதங்கள். நிலவாகையின்வூசம். Infusion of Senna. கொள். நிலவாகையிலை, ஒரு அன்சு; காய்ந்த சுக்குச்[1]சீவல், முப்பது கிறேன்; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேர மூறவிட்டு இறுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. இந்தக் கஷாயத்தோடு பாலுஞ் சர்க்கரையுஞ் சேர்த்துச் சூடாய்க் குடித்தால் வாடிக்கையான தேயித்தண்ணீர்போல் உருசிக்கும். பிள்ளைகளுக்கு இப்படிக்கொடுப்பதே லகு.

நிலவாகைக்கூட்டுக் கலவை. Compound Mixture of Senna. கொள். மக்னீசிசல்வசு[2] என்ற பேதியுப்பு, நாலுஅன்சு; அதிமதுரவெசிருத்து[3], அரை அன்சு; நிலவாகைரஞ்சம்[4], இரண்டரை அன்சு; ஏலக்[5]கூட்டிரஞ்சம்,பத்துத்திறும்; நிலவாகையின்வூசம் போதியது. மக்னீசி சல்வசையும், அதிமதுரவெசிருத்தையும் நிலவாகையின்வூசத்திற் பதினாலு அன்சில் மென்சூட்டாற் கரைத்துப் பிற்பாடு ரஞ்சங்களையும் அரைநாழியாகப் போதியநிலவாகையின்வூசத்தையும் சேர்க்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் ஒன்றரை அன்சு.

நிலவாகை ரஞ்சம். Tincture of Senna. கொள். காய்ந்த பருக்கனுக நொருக்கின நிலவாகையிலை, இரண்டரை அன்சு; கொட்டை நீக்கிய திராட்சப்பழவற்றல், இரண்டு அன்சு; துவைத்த கறுவிக்கொட்டை[6] அரைஅன்சு; இடித்தகொத்தமல்லி[7] அரைஅன்சு; புரூவுசீது[8] அரைநாழி. நிலவாகையையும் மற்றுஞ் சரக்குகளையும் மூடிய பாத்திரத்தில் பதினைந்து அன்சு சீதில் இரண்டு நாளைக்கு ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். பிற்பாடு சியந்தனியில் ஏற்றி நீர் வடிந்தொழிந்தபின், சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். வடிந்தபின் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டுநீர்களையுங்கலந்து அரைநாழியாகப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். ஒரு திறும் முதல் மூன்று திறும். லவண விரேசனங்களுக்கும் மற்றும் விரேசனக் கலவைகளுக்கும் இது நல்ல கூட்டு.

நிலவாகை லேகியம். Confection of Senna. கொள். காய்ந்த நிலவாகையிலை மாவாக்கி, ஏழு அன்சு; கொத்தமல்லிமா, மூன்று அன்சு; அத்திப்பழம்[9]பன்னிரண்டு அன்சு; பழப்புளி,ஒன்பதுஅன்சு; கொன்றைக்களி[10], ஒன்பது அன்சு; புரூணம்[11], ஆறு அன்சு; அதிமதுரவெசிருத்து, முக்கால் அன்சு; சுத்தசர்க்கரை முப்பது அன்சு; தண்ணீர் போதியது. மூடிய பாத்திரத்தில் அத்திப்பழத்தையும் புரூணப் பழத்தையும் இருபத்துநாலு அன்சு தண்ணீரில் நாலு மணிநேரம் மென்சூட்டில் அவிக்கவும். பிறகு முந்தினஅளவுக்கு வரத்தக்கதாய் இன்னுந் தண்ணீர் கூட்டினபின் பழப்புளியையுங் கொன்றைக்களியையுஞ் சேர்த்து இரண்டு மணிநேரம் இளஞ்சூட்டில் ஊறவிட்டு நனைந்த பழங்களின் களியை மயிர் அரிப்பெட்டியிற் போட்டுப் பிசைந்து ஊடே செல்லவிட்டுக் கொட்டைகள் சவ்வுகள் முதலியவற்றை வேறுக்கவும். வடிந்த களியோடு சர்க்கரையையும் அதிமதுரவெசிருத்தையும் சேர்த்து அவைகளை மென்சூட்டாற் கரைக்கவும். இந்தக் கலவை சூடாயிருக்கையில், ஒன்றாகக் கலந்த நிலவாகை மாவையும் கொத்தமல்லிமாவையும் அதோடு படிப்படியாய்ச் சேர்த்து முழுவதையுந் திறமாய்க் கலந்து பிறந்த லேகியத்தை வறட்டியாவது அதற்குத் தண்ணீர் சேர்த்தாவது எழுபத்தைந்து அன்சு நிறுக்கப்பண்ணிக்கொள்ளவும்.

---

1 Ginger. 2 Sulphate of Magnesia. 3 Extract of Liquorice. 4 Tincture of Senna. 5 Cardamom. 6 Caraway fruit. 7 Coriander. 8 Proof Spirit. 9 Figs. 10 Cassia. 11 Prunes.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒன்று முதல் இரண்டு திரும். இது வெகுகாலம் பேர்பெற்ற நல்ல சுக விரேசனி. கெந்தகம், பதாசிதுவிதாத்தரசு, முதலிய மருந்துகளுக்கு இது பலமுறையும் அனுபானமாகக் கொள்ளப்படும்.

## எமதக்சிலமரம்.

## HAEMATOXYLON CAMPECHIANUM. LOGWOOD TREE.

வாசம். இது மத்திய அமரிகத்திலும் மேற்கிந்திய தீவுகளிலும் இயல்பாயுண்டாகிற பெரிய மரம். இந்துவிலுமுண்டாக்கப்படுகிறது.

வாகடபகுதி. மரத்தின் வைரம். இது வெளியிற் கருமையும் உள்ளே கருஞ் சிவப்பு நிறமுமான குற்றிகளாயாவது துண்டுகளாயாவது வரும். சொற்பமான நற்கந்தமும் இனிய சுவையுமுள்ளது. ஒரு துண்டு சிராயை ச்சப்ப உமிழ்நீர் கருஞ் சிவப்புநிறமடையும். இதிலே தனிக்கமில[2]மும் ஓர் ராள[3]மும் எமதக்சிலின்[4] என்ற நீதுருச[5]முள்ள கிறிஸ்த[6]லான் ஓர்வகை நிறப் பதார்த்தமும் அமைந்திருக்கும்.

தன்மை. துவர், தொணிகம்.

உபயோகம். காலிக[7]மான அல்லது அசத்துவ[8]மான கழிச்சலுக்கு விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கு நயங்கொண்ட மருந்து. தானிக[9]மாக இது லுகரீய[10]நோய்க்குப் புகட்டப்படும். கன்சர்ப்[11] புண்ணுக்கு இதின் எசிருத்தை[12]த் தைலமாகப் பூச நாற்றமும் நீர்ப்பெருக்கமுங் குறையும்.

ரசிதங்கள். எமதக்சிலதிகாக்தம். Decoction of Logwood. கொள். நறுக்கின எமதக்சிலச் சிராய் ஒரு அன்சு; கறுவாப்பட்டை பருக்கன் தூளாக, அறுபது கிறேன்; தண்ணீர் அரைநாழி. எமதக்சிலச் சிராயைத் தண்ணீரிற் பத்துமினி[13]நேரமாக அவித்துப் பிற்பகுதியிற் கறுவாப்பட்டையைச் சேர்க்கவும். இந்தக் கஷாயத்தை இறுத்து இறுத்தநீர் அரைநாழியளக்கப் போதியதாய் வரத்தக்க தண்ணீரைச் சக்கையின்மேல் வார்க்கவும்.

தேயம். ஒரு அன்சுமுதல் இரண்டு அன்சு.

எமதக்சிலவெசிறத்து. Extract of Logwood. கொள். நறுக்கின எமதக்சிலச் சிராய் ஒரு இருத்தல்; கொதிவெந்நீர் ஒருகலன். சிராயை வெந்நீரில் ஒருநாளைக்கு ஊறவிட்டு பாதியளவாய் வற்றுந்தனையும் அவித்து, வடித்து நீர்மத்திகத்தில் வைத்து தடியால் இடைக்கிடை கிளறிக்கிளறி வறட்டிக்கொள்ளவும். இதற்கு இரும்புப்பாத்திரம் வழங்கப்படாது.

தேயம். பத்துமுதல் முப்பதுகிறேன்.

## * களற்சி. BONDUC.

வாசம். இது உஷ்டணதேசம் எவற்றிலும் உண்டாகும்.

வாகடபகுதி. கொட்டை. இது சற்றே ஒழுங்கீனமான முட்டைவடிவாய் அரையே அரைக்கால் இஞ்சு முதல் அரை இஞ்சு பருமையுள்ளது. அழுத்தமும் வெண்மையும் சயநிறமுமாய்க் கைப்புச்சுவையுள்ள அமைல[15]

1 Potash Bitartrate. 2 Tannic acid. 3 Resin. 4 Hematoxylin. 5 Nitrogen. 6 Crystal. 7 Chronic. 8 Atonic. 9 Locally. 10 Leucorrhoea. 11 Cancer. 12 Extract. 13 Minute. 14 Gallon. 15 Amylum.

Digitized By Roja Muthiah Research Library

மான வெண்விலசத்தை[1] அடக்கியிருக்கும், இதிலே ஓர்திரவெண்ணெய்[2]யும் ராளமும்[3] கைப்பான ஓர் சத்தும் அமைந்திருக்கும் (31)

தன்மை. தொணிகம்[4], அந்திபிருடி[5].

உபயோகம். விசேஷமாய்ச் சுதேசிகளுக்குண்டாம் முறைச்சுரங்களுக்கு இது கொடுத்து மெத்த அனுகூலப்பட்டது. பெலவீனத்துக்குந் தொணிசங்கள் வேண்டிய நோயாளருக்கும் இது கொடுத்து நயங்கண்டது (32)

தேயம். பத்து முதற் பதினைந்து கிறேன் நாள் இரண்டு முறை கொடுக்கலாம்.

ரசிதங்கள். களற்சிக்கூட்டுச் சூரணம். Compound Powder of Bonduc.

கொள்· களற்சிக்கொட்டை ஓடு கழற்றித் தூள்செய்து ஒரு அன்சு; மிளகுதூள் ஒரு அன்சு· இரண்டையுந் திறமாய்க்கலந்து நன்றாயடைத்த சீசாவில் வைக்கவும்.

தேயம். பதினைந்து தொடங்கி முப்பது கிறேன், நாள் மூன்று முறை கொடுக்கவும்.

## பெருபல்சமரம். PERU BALSAM TREE.

வாசம். இது மத்திய அமரிகத்தின் மேற்குக் கரையிலுள்ள பல்சங்கரையென்றழைக்கப்படும் அகசற்ல துறைமுகந் தொடங்கி விபதாட்டு வரைக்குமுண்டாகும்.

வாகடபகுதி. அடிமரத்தில் பட்டையைக் கருக்கி உரித்தபின் வடியும் தேலராளம்[6]. இதுவே பெருபல்சம் எனப்படுவது. இது செங்கபில்[7]நிறம் அல்லது கருமை நிறமுள்ள பாணிப்பதமான நீராகவிருக்கும். பல்சமணமும் கார்ப்பான சொற்ப கைப்புச் சுவையுமுள்ளது. மெல்லிய படலத்தில் உருவொளியுள்ளது. ஐந்து பங்கு திட்டசீதிற்[8] கரையும். தண்ணீரோடு கலக்கும்போது பருமையிற் குறையாது.

தன்மை. சொற்ப ஸ்திமுலம்[9], எக்ஸ்பெக்துறம்[10].

உபயோகம். தொலூபல்சம்[11] வழங்கப்படும்நோய்களுக்கு இதைக் கொடுக்கலாம். ஆயினும் இதின் வழக்கம் குறைவு. சூட்டிலுறக்கும் இதின் ஆவியைச் சுவாசித்தல் காலிக புறங்கீதுக்கும்[12] மற்றுஞ்சுவாச வியாதிகளுக்கும் நயமாகக் கண்டது, புதிய வெட்டுக்காயங்கள் மந்த[13],காதனப்[14] புண்கள் மூலைக்காம்புப் புண் முதலியவற்றுக்கும் காதுச்சலை[15]க்கும் தலைமொட்டைக்கும்[16] இது தானிகமாக[17]இடப்படும்.

தேயம். பத்துத் துளி முதல் பதினைந்து துளியை இமல்சத்திற்[18] கொடுக்கவும்.

## தோலூ பல்ச மரம். TOLU BALSAM TREE.

வாசம். நூகிறனடம்.

வாகடபகுதி. அடி மரத்திற் கீறப் பொசியும் தடித்தநீர். இதுவே தொலூ

---

1 Nucleus. 2 Fixed oil. 3 Resin. 4 Tonic. 5 Antiperiodic. 6 Oleo-resin. 7 Reddish-brown. 8 Rectified Spirit. 9 Stimulant. 10 Expectorant. 11 Tolu-balsam. 12 Chronic Bronchitis. 13 Indolent. 14 Phagedenic. 15 Otorrhoea. 16 Baldness 17 Locally. 18 Emulsion.

(31) (32) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

பல்சம் என்னப்படுவது. இது பொன் நிறமும் பெருபல்சத்தைப்பார்க்க வீறு குறைந்த சுகந்தமான பல்ச மணமும் நல்ல இனிய சுவையுமுள்ள மெதுவும் பிசுபிசுப்புமான கட்டி. காலஞ்செல்ல இது வைரமும் நொருக்கலும் பருபருக்கையான கிரிஸ்தற்[1] தோற்றமும் அடையும். இது திட்டசீதில்[2] முற்றாய்க் கரையும்.

தன்மை. சொற்ப ஸ்திமுலம்[3], எக்ஸ்பெக்துறம்[4].

உபயோகங்கள். தாபித[5]மில்லாமற் சுவாசக்குழல்களிலுண்டாகும் காலிக நோய்களுக்கு இது உள்ளே கொடுத்து நயங்கண்டது. இந்த வகையான நோய்களில் இதின் ஆவியைச் சுவாசிப்பதும் நல்லது.

தேயம் பத்துத் தொடங்கி இருபது கிறேன்.

ரசிதங்கள். தோலூரஞ்சம். Tincture of Tolu. கொள். தொலூபல்சம் இரண்டரை அன்சு; திட்டசீது போதியது. மூடிய பாத்திரத்திற் தொலூ பல்சத்தைப் பதினைந்து அன்சு சீதில் அது கரையுந்தனையுமாவது ஆறு மணி நேரத்துக்காவது ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். பிற்பாடு வடித்து அரைநாழியாகப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

தேயம். இருபது துளி தொடங்கி நாற்பது துளி கொடுக்கவும். கபங்கக்குகிற மற்று மருந்துகளுக்கு இது நல்ல கூட்டு. இதில் ஒவ்வொரு அன்சில் 54½ கிறேன் பல்சம் அடங்கியிருக்கும்.

தோலூச்சிறுபம். Syrup of Tolu. கொள். தொலூபல்சம், ஒன்றே கால் அன்சு; சுத்த சர்க்கரை இரண்டு இறுத்தல்; தண்ணீர் அரைநாழியல்லது போதியது. நுகைவாய் மூடிய பாத்திரத்தில் தொலூபல்சத்தைத் தண்ணீரில் அரைமணிநேரம் கொதிப்பித்து இடைக்கிடை கலக்கவும். பிற்பாடு அடுப்பால் இறக்கி, அந்த நீர் பதினாறு அன்சு அளக்கிறதற்குத் தண்ணீர் சேர்க்கவேணுமாகிற் சேர்க்கவும். நீர் ஆறினபின் அதை வடித்துச் சர்க்கரையைக் கூட்டி ஸ்தீம் மத்திகம்[7] அல்லது நீர் மத்திகத்தின்[8] உதவியாற் கரைக்கவும். வரும் பாணி மூன்று இறுத்தல் நிறுக்கவும், 1·330 என்ற விசேஷகிருவிதம்[9] உடையதாகவும் வேண்டும்.

தேயம். ஒரு திறம்[10] முதல் இரண்டுதிறம். உஷ்டணத்தில் இலகுவாய் நொதிக்காத சிறுபங்கள் சிலவற்றில் இது ஒன்று.

சாம்பிராணிக்கூட்டிரஞ்சம்[11], அவின்வில்லை, மாவியஇபிகாக்வில்லை[12], மாவியவில்லை, தனிக்கமில[13]வில்லை இவைகளிலும் தொலூபல்சம்சேருகின்றது.

## வேங்கை மரம். INDIAN KINO TREE.

வாசம். இது இலங்கையின் சோலைகளிலும், சென்னையின் எப்பகுதிகளிலும், வடக்கே பாகாரிலுள்ள ராசமால் மலை வரைக்குமுண்டாகும்.

வாகடபகுதி. அடி மரத்திற் கிறப் பொசிந்திறுகின சாறு. இது கீனு என்னப்படும். இது பளபளப்பும், கருஞ் சிவப்பு நிறமுமான சதுரித்த சிறுத்துண்டுகளாக வரும். விளிம்புகள் தெளிந்த நற்சிவப்புநிறம். இது மணமற்றது, கடுந்துவரானது. இதைச் சப்ப உமிழ்நீர் இரத்தம்போலச் சிவக்கும். இதலே ஓர்வகையான தனின் கதிசின்[14] என்ற இரண்டு சத்துக்கள் உண்டு.

---

1 Crystal. 2 Rectified Spirit 3 Stimulant. 4 Expectorant. 5 Inflammation. 6 Chronic. 7 Steam bath. 8 Water bath. 9 Specific Gravity. 10 Drachm. 11 Compound Tincture of Benzoin. 12 Morphia and Ipecac Lozenge. 13 Tannic acid. 14 Catechin..

Digitized By Roja Muthiah Research Library

தன்மைகள். இது ஓர் உத்தமமான துவர் மருந்து.

உபயோகங்கள். காசுக்கட்டியின் உபயோகங்களைப் போலவே. ஆயினும் இதின் செயல் அதிலுஞ் சாந்தமானதால் பிள்ளைகளுக்கும் நொய்யபெண்களுக்கும் அதிகம் உவந்தது.

தேயம். கீனுத் தூளில் பத்து முதல் முப்பது கிறேன் கொடுக்கலாம். கூடவுங் கொடுக்கலாம்.

ரசிதங்கள். கீனுரஞ்சம். Tincture of Kino. கொள். கீனு பருக்கன் தூளாக இரண்டு அன்சு; திட்டசீது[1] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கி வடித்து, அரைநாழிக்குப்போதிய திட்டசீது சேர்க்கவும்.

தேயம். முப்பது மினிம் முதல் இரண்டு திறாம் வரைக்குங் கொடுக்கலாம். துவர்க்கலவைகளுக்கு இது நல்ல கூட்டாகும்.

கீனுக்கூட்டுச் சூரணம். Compound Powder of Kino. கொள். கீனுத்தூள், மூன்றேமுக்கால் அன்சு; அவின்தூள், கால் அன்சு; கறுவாப்பட்டைத் தூள் ஒரு அன்சு. மூன்றையும் திறமாய்க் கலந்து, மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக் கடைசியில் குழியம்மியிற் போட்டு மெதுவாய் அரைத்து அடைத்த சீசாவிற் போட்டு வைக்கவும்.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேன். இருபது கிறேனில் ஒரு கிறேன் அவின் இருக்கும். பைறோசிக்கும்[2] அதிக நீரூறுதலோடு கூடிய குன்மத்துக்கும்[3] இது நல்ல மருந்து.

காசுக்கட்டிக் கூட்டுச் சூரணத்திலும்[4] கீனு ஓர் கூறாகச் சேருகின்றது.

செம்பிசின். Red Gum. மேற்கு ஔஸ்திராலியிற் செங்கீனு அத்தேசமடங்கலும் பரம்பியிருக்கின்ற யுகலிப்தஸ்[5] என்ற மரத்தின் சில இனங்களில் உண்டாகிறது. சட[6] தன்மைகளிலும் அவுஷத தன்மைகளிலும் இது கீனுவைப் போன்றது. மாடின் என்பவர் இந்துக்களின் கழிச்சலுக்கும், விசேஷமாய் யுறோபருக்குண்டாகும் காலிகதிசெந்தெரிக்கும்[7] இதைக்கொடுத்து மெத்த நயந்ததென்று கண்டு, பிறித்தனி வைத்தியத்தில் இதைச் சேர்த்திருக்கிறார். காசுக்கட்டியையும் கீனு[8]வையும்பார்க்க இது குறைந்த துவர் என்றும் கூடின திமல்ச[9]மென்றும் அவர் எண்ணுகிறார். இந்த மரம் மிகுதியாய் மேற்கு ஔஸ்திராலியிலுண்டு. அங்கே உத்தியோகஸ்தராயிருந்த வைத்தியர் சிலர் இதை விதந்துபேசுகிறார்கள். இதின் தேயம் தூள் அல்லது சிறாபமாக[10] ஐந்துமுதற்பத்துக் கிறேன. இந்துவில் நீலகிரிமலைகளிலும் மற்றும் உயர்ந்த பகுதிகளிலும் யுகலிப்தசின் சில இனங்கள் வளர்க்கப்பட்டிருப்பதால் இந்தச் சரக்கு இந்துவைத்தியர்க்கு அதிபிரயோசனமாகும்.

## செஞ்சந்தன மரம். RED SANDAL WOOD TREE.

வாசம். இது சோழமண்டலக் கரையையடுத்த மலைகளிலுண்டாகும்.

வாகடபகுதி. சிராய். இது உரத்த கனத்த துண்டுகளாகவாவது சிராயாகவாவது வரும். வெளிப்பக்கங் கருங் கபிலம், உள்ளே கருமையுஞ்

---

1 Rectified Spirit. 2 Pyrosis. 3 Dyspepsia. 4 Compound powder of Catechu. 5 Eucalyptus. 6 Physical. 7 Chronic Dysentery. 8 Kino. 9 Demulcent. 10 Syrup.

Digitized By Roja Muthiah Research Library

சிவப்புங்கலந்து பலவர்ணமுமாயிருக்கும். இதின் தூள் இரத்தம் போன்ற சிவப்பு. சொற்ப மணமும் சற்றே கைப்புச்சுவையும் உடையது. இதிலே சந்தலின்[1] என்ற நிறப்பதார்த்தம் அடங்கியிருக்கும்.

தன்மைகளும் உபயோகங்களும். லவந்தர் கூட்டிரஞ்சத்தில்[2] நிறப்பதார்த்தமாக மாத்திரம், இது வாகடத்தில் வழங்கப்படும். ஏலக்[3]கூட்டிரஞ்சம் சின்கனக்[4]கூட்டிரஞ்சங்கள் முதலியன செய்வதிலும் இதைக் கக்கசுக்குப்[5] பதிலாக நிறப்பதார்த்தமாய் இந்துவில் வழங்கலாம்.

சுதேசிகளுக்குள்ளே இது துவராக அதிகமாய் வழங்கப்படும். இதிற் சொற்ப தனிக்கமிலம்[6] கலிக்கமிலங்கள்[7] அடங்கியிருப்பதைப்பற்றி இத் தன்மையை உடையதாய் இது இருந்தாலும் உள்மருந்தாகக் கொடுப்பதற்குத் தகுந்ததாகத் தோன்றவில்லை.

## வைசுதிக்மகோடி. PHYSOSTIGMA VENENOSUM.

## CALABAR BEAN PLANT.

வாசம். கலபாவிலும் மேற்கு ஆபிரிகத்தின் மற்றும் பகுதிகளிலுமுள்ளது.

வாகடபகுதி. கொட்டை. இது ஒரு இஞ்சு நீளமும் முக்கால் இஞ்சு அகலமுமுள்ளதாய்க் கருஞ்சிவப்பு அல்லது சாம்பல்நிறமுள்ள உரத்த வைரித்த நொருக்கலான மினுக்கமுள்ள ஓடுள்ளதாயிருக்கும். கொள்ளுவடிவான இக்கொட்டை தட்டையான இரண்டு பக்கங்களையும் குவிவான ஓரம் நெடுக ஓடி ஒரு அந்தத்திலுள்ள துவாரத்தில் முடிகிற ஓர் வரையையுமுடையது. ஓட்டுக்குள்ளே இரண்டு குத்திரங்க[8]ளாலான பருப்பு இருக்கும். இது ஏறக்குறைய 46 கிறேன் நிறையுள்ளது. வன்மையும் வெண்மையுமானது, மாவாக்கப்படக்கூடியது, பயறு முதலியவற்றின் சுவையுள்ளது; கைப்பாவது, கார்ப்பாவது, சுகந்த மணமாவது அற்றது. அலக்கால்[9]இதின் சத்தை முற்றாய் வாங்கும். தண்ணீர சொற்பமாய் வாங்கும்.

தன்மைகள். கசேரு நரம்புகளிற்[10] பிடிக்கிற வீறுள செரதீவம்[11]. அதி தேயத்திற் கால்களைச் சோரப்பண்ணி நாடியைக் குறைத்து மரணத்தை வருவிக்கும். தேயம் இன்னும் அதிகப்பட்டால் இதயத்தைச் சோரப்பண்ணும். இது பெரிய நஞ்சு. கண்ணுக்கு இட்டால் நயனத்துவாரத்தை[12]ச் சிக்கரத்திற் சுருங்கப்பண்ணும்.

உபயோகங்கள். ஈர்ப்புக்கும், கொரீயத்துக்கும்[13], கசேரு நரம்புகளின் உணர்ச்சி அதிகப்பட்ட மற்றுஞ் சிரரோகங்களுக்கும் இது உள்மருந்தாகக் கொடுக்கப்படும். கண்ணின் வியாதிகள் ஊறுகளுக்கு இடப்படுவதே இதின் முக்கியமான உபயோகம்; இவைக்கு இது மெத்த உவந்தது.

தேயம். கொட்டை மாவில் ஒரு கிறேனிற் தொடங்கிச் செயலுக்குத் தக்கதாய்ப் படிப்படியாய்க் கூட்டி நாலுகிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதம் வைசுதிக்மவேசிறத்து. Extract of Calabar Bean. கொள். வைசுதிக்ம கொட்டை பருக்கன்தூளாக ஒரு இறுத்தல்; திட்டசீது இரண்டு

---

1 Santalin. 2 Compound Tincture of Lavander. 3 Cardamom. 4 Cinchona. 5 Coccus. இருமிஞ்சிப்புழு. 6 Tannic acid. 7 Gallic acid. 8 Cotyledon. 9 Alcohol. 10 Spinal Nerve. 11 Sedative. 12 Pupil. 13 Chorea.

Digitized By Roja Muthiah Research Library

நாழி. மூடிய பாத்திரத்திற் கொட்டைத் தூளை அரைநாழி சீதில் இரண்டுநாளைக்கூறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். பின்பு சியந்தனி[1]யில் இட்டு நீர் வடிந்தொழிந்தபின் சக்கையின்மேற் சேஷமான சீதை மெல்ல மெல்ல வடியும்படி வார்த்துவிடவும். சக்கையைப் பிழிந்து, பிழிந்த நீரைச் சியந்தனித்த நீரோடு சேர்த்து வடித்து, சீதின் மிகுதியான பங்கைத் திஸ்திலித்த கற்றி மீந்திருப்பதைப் பாணிப்பதமாய் வரத்தக்கதாய் நீர் மத்திகத்தில் வறட்டிக்கொள்ளவும்.

தேயம். பதினறிலொருபங்கு கிறேன் முதற் காற்கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். கண்ணின் நயனை[4]த் துவாரத்தைச் சுருங்கப்பண்ணுவதற்கு வைசுதிக்ம எசிருத்திற் சொற்பத்தை கிலேசரினிற்[5] கரைத்து மெதுவான மயிர்க்கூசியால்[6] கண்ணுக்கு இடலாம். வைசுதிக்மவிரஞ்சத்தி[7]லூறிய செலதின்[8] தாளும் ஊறுதாளும் சாய்ப்புகளில் விலைப்படும். இந்த மருந்தைவேண்டிய நயன ரோகங்களுக்கு இடுவதற்கு இவைகள் வசதியானவைகள்.

## * பூனைக்காலி. COWHAGE.

வாசம். இது மேற்கிந்துவிலும் இந்துவிலும் உண்டாகும்.

வாகடபகுதி. காயிலுள்ள மயிர்கள். காய் கருமை நிறமாயும் நீண்டு தட்டையாயும், சொற்பமான இரண்டு வளைவுகளையுடையதாயும் இரண்டு மூன்று இஞ்சு நீளமாயும் பெலனுன கபிலநிறச் சுணைகளாகிய மயிர்களால் அடர்த்தியாய் மூடப்பட்டுமிருக்கும். சூக்குமாட்சியில்[9] வைத்துப் பார்க்கும் போது இந்த மயிர்கள் முட்பன்றியின் முட்கள் போற் தோன்றும். நுனிப்பகுதியில் கருக்கு விழுந்திருக்கும்.

தன்மைகள். இவைகள் கிருமிகளிற் குற்றி அவைகளைக் கொல்லும்.

உபயோகங்கள். கீரைப்பாம்பை விழுத்துவதற்கு இது விசேஷமாய் வழங்கப்படும். தானப்புழுவுக்கும் இதை வழங்கலாம். ஆனலும் அவ்வளவு நயமல்ல.

தேயம். இதை தெறீயகம்[10], சர்க்கரைப்பாணி[11], அல்லது தேனிற் சேர்த்து லேகியமாய்க்கொடுப்பது உத்தமம். பூனைக்காலிக்காயை இந்த அனுபானங்களொன்றில் தோய்த்துவைத்து அது லேகியப்பதமாய் வருந்தனையும் அந்த மயிர்களை வழித்தெடுக்கவும். இதில் வளர்ந்தவர்களுக்கு ஒரு பெரிய கரண்டியும், குழந்தைகளுக்கு ஒரு சிறுக்கரண்டியும் இரண்டு மூன்று நாட் காலமே கொடுக்கலாம். பிறகு சுள்ளாப்பான ஓர் விரேசனங் கொடுக்கக் கிருமிகள் பெரும்பாலும் விழும்.

## * முருக்கு. BUTEA FRONDOSA.

வாசம். இது இந்துதேசமடங்கலுமுண்டு.

வாகடபகுதி. மரத்திற் கிறப் பொசியும் பிசின். இது மிளகிற் குறைந்த பருமையான ஒழுங்கற்ற மினுக்கமுள்ள துண்டுகளாக வரும். நரைநிறமான பட்டையின் துண்டுகள் இவைகளோடு ஒட்டியிருக்கும். இது

1 Percolator. 2 Distil. 3 Water bath. 4 Pupil. 5 Glycerine. 6 Soft-brush. 7 Tincture of Physostigmatis. 8 Gelatine. 9 Microscope. 10 Treacle. 11 Syrup.



Digitized By Roja Muthiah Research Library

நல்ல பவள நிறமுங் கயர்ச்சுவையுமுள்ளது. தண்ணீரிலும் அலக்காலிலும்[1] கரையும். பூரணமாயல்ல. தனிக்கமிலம்[2] கலிக்கமிலங்[3]கள் இருப்பதைப் பற்றியே இதற்குக் கயர்த்தன்மை உண்டு.

தன்மைகளும் உபயோகங்களும். கீனுவைப்[4]போலவே. அதற்குப் பதிலாக இதை வழங்கலாம். (33)

ரசிதங்கள். கீனுவின் ரசிதங்களைப் போலவே.

இதைப்போல ஒரு பிசின் Butea Superba விலிருந்தும் Butea parviflora விலிருந்தும் ஊறும். இரண்டையும் சுதேசிகள் மருந்தாக வழங்குவார்கள். கயர் மருந்துச் செயல் இவைக்குண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

## *குன்றிமணி. INDIAN LIQUORICE PLANT. ABRUS.

வாசம். இது உஷ்டண தேசங்கள் எல்லாவற்றிலும் உண்டாகின்றது.

வாகடபகுதி. வேர். இது அரை இஞ்சு முதல் ஒரு இஞ்சு பருமையும் பல அளவான நீளமுமுள்ளதாய் வரும். வெளியில் வெண்கபிலம்; உள்ளே மஞ்சள்நிறம்; மணமற்றது; அதிமதுர வேர் போன்ற இனிப்பான வாணிச்சுவையுள்ளது.(34)

தன்மைகளும் உபயோகங்களும். அதிமதுரத்தைப் போலவே. அதற்கு இது வாய்ப்பான பதில்.

ரசிதங்கள். குன்றிமணி எசிறத்து. Extract of Abrus. அதிமதுரவெசிறுத்தைப் போலவே இது செய்யப்படும்.

## * வேர்க்கடலை. GROUND NUT PLANT.

வாசம். இது உஷ்டண் தேசங்களெல்லாவற்றிலும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. பருப்பிற் பிழிந்தெடுத்த எண்ணெய். இது வேர்க்கடலைத்தேலம். இது தெளிந்ததும் வெண்மஞ்சள் நிறமுமானது. ஏறக்குறைய மணமற்றதாய், சாந்தமான சுவை பொருந்தியிருக்கும். .916 என்ற விசேஷகுருவிதம்[5]உடையது.

தன்மைகளும் உபயோகங்களும். இந்த எண்ணெய் சிகிச்சை[6]முதலிய முகாந்தரங்களுக்கும், மற்றுங் காரியங்களுக்கும் ஒலிவெண்ணெய்க்கு[7] உவப்பும் மலிவுமான பதிலாகும்.(35)

## அதிமதுரப்பூடு. LIQUORICE PLANT.

வாசம். இது யுரோப தேசத்தின் தென்பகுதியிலுள்ளது. இங்கிலந்திலும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. வேர் எனப்படும் நிலத்தண்டு. இது ஒரு இஞ்சுக்குக் குறைந்த மொத்தமான நீண்ட திரண்ட கவரான துண்டுகளாக வரும். வைரமானது, வசையத்தக்கது; வெளியில் நரையான சிவப்புநிறம், உள்ளே மஞ்சள்நிறம். சற்றே ஒவ்வாத மணமும், இனிப்பும், வழவழப்பும் சற்றுக் கார்ப்புமுடையது. இதைத் தண்ணீரில் ஊறப்போட்டு அதோடு தண்ணீர்

---

1 Alcohol. 2 Tannic acid. 3 Gallic acid. 4 Kino. 5 Specific Gravity. 6 Pharmacy. 7 Olive oil.

(33) (34) (35) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

கலந்த சல்வுரிக்கமிலஞ்[1] சேர்க்க அடையல் காணும். கிலேசியன்[2] என்ற இதற்குரிய ஓர் சத்திலும் அதிமதுரச் சர்க்கரை[3]யிலுமே இதின் இனிப்புத் தங்கியிருக்கும்.

தன்மை. இது திமல்சம்[4], இமாலியம்[5].

உபயோகம். இருமலுக்கும் தொண்டையிலும் சுவாசப்பையின் சளிச்சவ்விலுமுண்டாகும் கதார்[6] நோய்களுக்கும், சலக்கடுப்பு சலவெரிவு முதலியவற்றுக்கும் இது உவந்தது.

ரசிதங்கள். அதிமதுரவெசிறத்து. Extract of Liquorice. கொள் அதிமதுரவேர்பருக்கன் தூளாக, ஒரு இறுத்தல்; தண்ணீர் இரண்டுநாழி. அதிமதுரவேரை ஒருநாழி தண்ணீரில் பன்னிரண்டு மணிநேரமூறவைத்துத்தெளித்துப் பிழிந்து, சக்கையைச் சேஷமான தண்ணீரில் ஆறுமணிநேரமூறவைத்துத் தெளித்துப் பிழியவும். தெளித்த நீர்களைக்கலந்து 212 பாகை சூட்டுக்கு வருந்தணையும் காய்ச்சி, கம்பளத்தில் வடித்து, குளிகைக்குத் தகுந்தபதமாக நீர்மத்திகத்[7]தில் வறட்டவும்.

தேயம். விரும்பியமட்டுங் கொடுக்கலாம். நிலவாகை, சகை[8], அமோனவைருகுலோறசு[9], முதலியவற்றின் கைப்பை மறைக்கிறதற்கு இது அதிகமாய் வழங்கப்படும்.

லீனவின்வூசம்[10]சார்சகூட்டுத் திகாக்தம்[11] என்பவைகளில் அதிமதுரவேர் சேரும். சகைக்கூட்டுத் திகாக்தம், நிலவாகைலேகியம், தார்ப்பந்தீன்[12]லேகியம், சகைரஞ்சம்[13] அவின் வில்லை, நிலவாகைக் கூட்டுக்கலவை, இவைகளில் அதிமதுரவெசிறுத்துச் சேருகின்றது.

## திரககந்துச்செடி. TRAGACANTH SHRUB.

வாசம். இது அனதோலியம், ஆமீனியம், வடபார்சியம் என்னுமிடங்களிலுண்டாகும்.

வாகடபகுதி. திரககந்துப் பிசின். இது அடியிலும் கொப்புகளிலும் பொசியும். வெண்மஞ்சள் நிறமும் பெலனுங்கொண்டது. வசையத் தக்கது. 120 பாகை சூட்டில் லேசாய் மாவாக்கப்படும். தண்ணிரில் மெத்தச் சொற்பமாய்க் கரையும். ஆயினும் களியாக வீங்கும். இயோதரஞ்சம்[14] பட இது செந்நீலநிறமாகும். இது சுவறின தண்ணீருக்கு திட்டசீது[15] சேர்ப்பதால் அடையல் விழாது.

தன்மைகள். இமாலியம், திமல்சம்.

உபயோகங்கள். சளிச்சவ்வின்[16]அழற்சிக்கு விசேஷமாய்ச் சுவாசஉறுப்புக்கள் சனனசல உறுப்புகளுக்குரிய சளிச்சவ்வின் அழற்சிக்கு இது நல்லது. அதி சேஷ்டையுள்ள மருந்துகளுக்கு அனுபானமாவதே இதின் விசேஷம்.

ரசிதங்கள். திரககந்து முசிலாது. Mucilage of Tragacanth. கொள், திரககந்துப்பிசின், அறுபது கிறேன்; தண்ணீர் பத்துஅன்சு. அரைநாழிகொள்ளத்தக்கவோர் சீசாவுக்குட் தண்ணீரையும் பிசினையும் இட்டுச் சிலமினி

---

1 Sulphuric acid. 2 Glycion. 3 Liquorice sugar. 4 Demulcent. சாமகி. 5 Emollient. சாந்தனி. 5 Catarrh. 7 Water bath. 8 Aloes. 9 Hydrochlorate of Ammonia. 10 Infusion Lini. 11 Compound Decoction of Sarsae. 12 Turpentine. 13 Tincture of Aloes. 14 Tincture of Iodine. 15 Rectified spirit. 16 Mucous membrane.

Digitized By Roja Muthiah Research Library

நேரமாகத் திறமாய்க் குலுக்கி பிறகு சற்று வேளையாற் பிசின் கரையுந்த ளையும் குலுக்கிப் பாணியாக்கிக்கொள்ளவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் மூன்று அன்சு, கனத்த தூள்களைக் கல வைகளில் மிதக்கப்பண்ணுவதற்கு இது சிலவேளை வழங்கப்படும்.

**திரககந்துக்கூட்டுச்சூரணம்.** Compound Powder of Tragacanth. கொள். திரகந்துப் பிசின்மா, அகசிப்பிசின்மா[1], அமைலமா[2], வகைக்கு ஒரு அன்சு; சுத்த சர்க்கரை மா, மூன்று அன்சு. ஒன்றாய்ச் சேர்த்து நன் றாயரைக்கவும்.

**தேயம்.** கனத்த தூள்கள் முதலிய மற்றும் மருந்துகளுக்கு அனுபான மாகப் பாணியை உடனே செய்துகொள்வதற்கு இது மெத்த வசதியான சூரணம். ஒரு அன்சு தண்ணீரில் இதிற் பதினைந்து இருபது கிறேன் க ரைக்கப் பாணி போதிய தடிப்புக்கொள்ளும். அபின் லேகிய[3]த்திலும் அ பின் கூட்டுச் சூரணத்தி[4]லும் திரகந்துப்பிசின் ஓர் கூறாகும்.

## ஸ்கோபாரி. SCOPARIUS. COMMON BROOM.

**வாசம்.** இது பிறித்தனிலும் யுரோபத்தின் மற்றும் பகுதிகளிலும் உண்டாகும்.

**வாகடபகுதி.** பச்சையுங் காய்ந்ததுமான தளிர்கள். இவைகள் கரும் பச்சை நிறமும் அழுத்தமுமான நேரிய கூருள்ள உரத்த தளிர்கள். சுவை கைப்பும் உவட்டுமானது. நசிக்க ஒருவகையாய் மணக்கும். இவைகளில் தங்கள் வீறுக்கு இடமாக ஸ்கொபாரின்[5] என்ற ஓர் தடஸ்த சத்தும் ஸ்பாட் டியம்[6] என்ற நீரான அத்திர[7] அல்கலேவமும்[8] அடங்கியிருக்கும்.

**தன்மைகள்.** அமுரிதி[9], இளம்பேதி. பெருந்தேயத்தில்கடும்பேதி, வமனி[10].

**உபயோகங்கள்.** நீர்க்கோவை நோய்களுக்கு இது மெத்த நயம். அமு ரிதி வேண்டிய மற்றும் நோய்களுக்கும் இது உதவும்.

**தேயம்.** காய்ந்த தளிர்களில் இருபது கிறேன் முதல் முப்பது கிறே னைத் திகாக்தமாகக் கொடுக்கலாம்.

**ரசிதங்கள். ஸ்கோபாரிச் சாறு.** Juice of Broom. கொள். ஸ்கொ பாரிப் பச்சைத் தளிர், ஏழு இருத்தல்; திட்டசீது[11] போதியது. தளிர்களை உ ரலிற் துவைத்துச் சாற்றைப் பிழிந்து மூன்றுபங்கு சாற்றுக்கு ஒருபங்கு வீத மாய்த் திட்டசீது சேர்த்துக்கொள்ளவும். ஏழுநாள் வைத்திருந்து வடித்துக் குளிர்ந்த இடத்தில் வைக்கவும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும்.

**ஸ்கோபாரித் திகாக்தம்.** Decoction of Broom. கொள். காய்ந்த ஸ் கொபாரித் தளிர் ஒரு அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி[12] வரைக்கு அவித்துச் சீலையில் வடித்து, வடிந்தநீர் அரைநாழிய ளக்கப் போதியதாய் இன்னும் வெந்நீரை வடியிலுள்ள சக்கையின்மேல் வா ர்க்கவும்.

**தேயம்.** இரண்டு முதல் நாலு அன்சு.

---

1 Gum Acacia. 2 Amylum. 3 Confection of Opium. 4 Compound powder of Opium. 5 Scoparin. 6 Spartia. 7 Volatile. 8 Alkaloid. 9 Diuretic, திவுரீசம். 10 Emetic. 11 Rectified spirit 12 Minute.

Digitized By Roja Muthiah Research Library

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

கருவேல்மரம். Acacia Arabica. இது இந்துவில் மிகுதியாயுண்டு. இதின் பட்டை பருத்த தடித்த துண்டுகளாக வரும். பருக்கன் நாருள்ளதாயும் கருஞ் சிவப்பான நிறமுள்ளதாயுமிருக்கும். இது கடுங் கயரானது. ஓக்[1]பட்டைக்குப் பதிலாக வழங்கலாம். இத்தன்மையில் இது நல்லதென்று மெகிறீகர் வைத்தியர் நினைத்து இதின் திகாச்தம் அபானப் பிதுக்கத்துக்கு[2]நயந்த பூச்சென்று கண்டார். கருவேலம்பட்டைத் திகாச்தம் தானிக[3]துவராக விசேஷமாய் லுகறீயத்து[4]க்கு நல்லதென்று தெல்பிரூது வைத்தியர் சொல்லுகிறார். இதின் குருத்திலைகளைத் துவைத்துப் பாப்பையாக்கி நீர்வடியும் புண்களுக்கு இட்டால் அது உத்தமமான கயர்மருந்தும் ஸ்திமூலமுமாகுமென்று ரூமசேண்போசு என்ற உதவிச் சத்திரீகன் சொல்லுகிறார். சுதேசிகள் சொல்லுகிறபடி இந்த மரத்தின் தன்மைகள் உபயோகங்களைப்பற்றியும் இதின் பேறுகளைப்பற்றியும் தாகஸ்தர் எழுதிப் பிரசுரஞ்செய்திருக்கிறார். இந்த மரத்தில் வடியும் பிசினைப்பற்றி முன்னமே அகசியின்கீழ்ச் சொல்லப்பட்டது. அகசியின் வேறனேக இனங்களின் பட்டைக்கு விசேஷமாய் பிய்வேல்[5], சீமைவெள்வேல்[6], வெள்வேல்[7], கைப்பகசி[8], லெபெக்ககசி[9] என்பவற்றின் பட்டைக்கு கருவேலம்பட்டையின் கயர்த்தன்மைகள் கூடக்குறையவுண்டு. பிய்வேலிலும் லெபக்ககசியிலும் வடியும்பிசின் திறமானதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சீமையகத்தி. Cassia Alata. இந்தச் செடி வண்டுகொல்லியென்றும் சொல்லப்படும். இது சிறப்பான நிமிர்ந்த பெரிய மஞ்சள் நிறமான பூக்கொப்புகளையுடையது. இது மேற்கிந்திய தீவுகளிலிருந்து கொண்டுவரப்பட்டு இப்போ இந்துவடங்கலும் பரம்பியிருக்கின்றது. சுதேசிகள் இதின் இலை, தோல் வியாதிகளுக்குப் பூச உத்தமமென்று இதைப் பலஇடங்களில் உண்டாக்குகிறார்கள். இலைகள் இத்தன்மையான சத்தையுடையவென்ற நம்பிக்கை மேற்கிந்து, பிறசீல், மொரீசு, யாவகம் முதலிய உஷ்டண தேசங்களிலும் இருப்பவர்களுக்குள்ளுண்டு. விசேஷமாய்ப் படர்தேமலுக்கு[10] இவை நயமென்றதை மகென்னர் ஆதர் வைத்தியர்கள் முதலானோர் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த வகுப்பான நோய்களில் இவை காட்டுஞ்செயலைப்பற்றி, பிடி, வன்சொமறின், ஸ்துவாடு, றீன் வைத்தியர்கள் எழுதியிருக்கிறார்கள். நாட்பட்ட இந்த நோய்களிலல்ல, அவை புதிதாயுண்டாகும்போதுதான் இந்த இலைகளால் பொதுவாய் நயமுண்டாகிறதாகத் தோற்றுகின்றது. படர்தேமலுக்குக் கைகண்டமருந்தாய் வழங்கும் பின்வரும் அன்கென் செய்முறை வங்காள சிகிச்சவாகடத்திலுள்ளது. சீமையகத்தி, பச்சை இலை, போதிய அளவாயெடுத்துப், பசையாகஅரைத்துச் சமநிறையான லாடன்கெஞேடு[11]கெட்டியாய்ச் சேர்த்துக்கொள்ளவும். இதிலுந் திறமான முறை இலையை அரைத்துக் கொஞ்ச எலுமிச்சம் சாறு விட்டுப் பசையாகச் சேர்த்து, நோய்த்த இடத்திற் திறமாய்ப் பூசித் தேய்த்துவிடுதலாம். இது பெரும்பாலும் மெத்த வாய்க்கும். இலைகளை உட்கொள்ள மெல்லிய

---

1 Oak. 2 Prolapsus ani. 3 Local. 4 Leucorrhoea. 5 Acacia Farnesiana. 6 A. Feruginea. 7 A. Leucophaea. 8 A. Amana. 9 A. Lebbek. 10 Ringworm. 11 Lard ointment.

Digitized By Roja Muthiah Research Library

பேதியாகும். சாய்ந்த இலைகளிற் செய்த ரஞ்சம்[1] நிலவாகை[2]யைப் போலச் சேஷ்டிக்கிறதென்று வுட் என்பவர் சொல்லுகிறார். பச்சை இலையிற் செய்த ஓர்வசிருத்து[3] கலுசிந்தெசிருத்து[4]க்கு நற்பதிலாகுமென்று பளனியாண்டி வைத்தியர் சொல்லுகிறார். இவைகளை இன்னுஞ் சோதிப்பது நல்லது. பொன்னுவரை[5] நாத்தந்தகரை[6] ஊசித்தகரை[7] இவைகளின் இலைகளுக்கும் இப்படியான தன்மைகள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஊசித்தகரை இலையை எலுமிச்சஞ் சாற்றோடு அரைத்துப் பூசுதல் இந்து வைத்தியருக்குள்ளே படர்தாமரைக்கு உத்தமமருந்தென்று என்ஸ்லி பண்டிதர் சொல்லியிருக்கிறார். பொன்னுவரையிலைக் கஷாயத்தைப் பள்நீதர் வைத்தியர் கொடுத்து நயந்த பேதியென்று கண்டார். அகத்தியிலைக்[8]கஷாயமும் இவ்விதமாய்ச் சேஷ்டிக்கிறதென்று அவர் கண்டார். பளுவி வைத்தியரும் இதை உறுதிப்படுத்தி இதின்பட்டை கைப்பான தொணிகம்[9] என்றுஞ் சொல்லுகிறார்.

**கருங்காணம்.** Cassia Absus. இந்தப் பூண்டு வட ஆபிரிகத்திலும் இந்துவிலுமுண்டாகும். இதின் விதையைப் பற்றி இந்து எகிப்துப் பதார்த்த சாரங்கள் பேசுகின்றன. சீழ்க் கண்ணோவுக்கு நன்மருந்தென்று பேர்பெற்றிருக்கின்றது. இந்த விதையை மெல்லிய மாவாக்கி அதில் ஒரு கிறேன் வரைக்குக் கண் மடலுள் இடுவார்கள். பிருசல்சுத் தேசத்தில் 1822 ம் ஆண்டு பரம்பின சீழ்க்கண்ணோவிற்[10] கார்பவுர் வைத்தியர் இந்தப் பிரயோகத்தைச் செவ்வையாய்ச் சோதித்துப் பார்த்ததாற் கண்ட பேறுகள் இதின் நயத்தை உறுதிப்படுத்தின. சென்னபட்டின நயனமடாதிபதியாகிய சிமிது வைத்தியர், கதார்க்கண்ணோ[11]வுக்கும் கிறனுல[12] மடலுக்கும் இது மோசமான மருந்தென்றும் இதை இடுவதால் மெத்த உபாதியுண்டாகிறதென்றும் எழுதியிருக்கிறார். கடைகளில் வரும் இந்தக் கொட்டைகள் மினுக்கமான கறுப்பும் சற்றே தட்டையும் நீண்ட வட்டிப்பும் ஆறிலொருபங்கு இஞ்சு நீளமுமாய் ஒரு தலைப்பிற் கூர்கொண்டு கைப்புச் சுவையுள்ளதாயிருக்கும்.

**ஆவிரை.** Cassia auriculata. இந்துவுக்குரிய இந்தப் பூண்டின் கொட்டைகள் கருங்காணத்தைப் போலக் கண்ணோவுக்கு இட நல்ல மருந்தாகும். கடுமையல்லாத கண்ணோவுக்கு இவைகள் உவந்தவைகளென்பது கெர்க் பதிரிக்கு வைத்தியரது எண்ணம். இவைகள் அழுத்தமும் தட்டையுமான கொட்டைகள். மூன்று முனைகொண்ட வட்டிப்பும் மழுங்கிய நுனியுமுள்ளன. நிறம் சில கருஞ்சிவப்பு; சில கரும்பச்சை. இவை மணம் சுவையற்றவைகள். பட்டை கடுங் கயருள்ளது. கார்கில்கள்[13]எனீமங்கள்[14] முதலிய பிரயோகங்களில் ஒக்பட்டைக்குப்[15] பதிலாக இதை வழங்கிறோமென்றும் பிறதேசத்தால் ஏற்றிவரும் ஒக் பட்டைக்கு இது பதிலாகுமென்றும் கெர்க் பதிரிக்கு வைத்தியர் சொல்லுகிறார். கொட்டை பட்டை இரண்டையும் இன்னுஞ் சோதிக்கவேண்டும். இந்துவின் சில பகுதிகளில் துவைத்த ஆவிரைப்பட்டையோடுதெண்ணீர் கலந்த சர்க்கரைப்பாணிசேர்த்து, நொதிக்கவைத்து, ஒருவகையான சீது நீர்[16] செய்வார்கள்.

---

1 Tincture. 2 Senna. 3 Extract. 4 Extract of Colocynth. 5 Cassia sophora. 6 Cassia occidentalis. 7 Cassia tora. 8 Agate grandiflora. 9 Tonic, ஔஷதி. 10 Purulent ophthalmia. 11 Catarrhal opthalmia. 12 Granular lid. 13 Gargle. 14 Enema. 15 Oak-bark. 16 Spirituous liquor.

Digitized By Roja Muthiah Research Library

வத்தேக்கு. Sappan Wood. இது சென்னை மலையாளத்தின் சோலைகளில் நிற்கும் மரம். இதின் சிராய் சாயத்துக்கு வழங்கப்பட்டாலும், தனிக்கமிலம்[1], கலிக்கமிலங்களை அதிகமாய் அடக்கியிருப்பதால் நயந்த கயரென்றும் எமதக்கிலஉசிராய்க்குப் பதிலாகுமென்றும் வங்காள வாகடங் கூறுகின்றது. எமதக்கில வெசிருத்து[4]ச் செய் முறையைப்போல இதிலும் எசிருத்துச் செய்யலாம். இதின் தேயம், பத்துமுதற் பதினைந்து கிறேன், நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

சூமக்கு. American Sumach. இது எதிர் பூமியிலிருந்து கொண்டுவரப்பட்டும் இப்போ இந்துவிற்கு உரித்தாய்விட்டது. கோதுகளில் அதிக அளவான தனின்[5] அடங்கியிருக்கும். கோதில் 100 க்கு 60 முதல் 65 பங்கு அசுத்த தனிக்கமிலமாயும் மிச்சப் பங்கு தும்புகளும், அமைலமும்[6], பிசினுமாகவும் இருக்கும். காய்ந்த கொட்டை நீங்கிய நெற்றின் தூள், வெண்மஞ்சள்நிறம். சுத்த கயர்ச்சுவையுடையது. வியாபாரத்தில் வரும் தனினுக்கு மெத்தச் சரியானது. காணிஷ் வைத்தியர் இந்தத் தூளை அந்திபிருடி[7]யாக முறைச்சுரக்காரர் தொண்ணூற்றுநாலு பேருக்கு நாற்பது கிறேன் துவங்கி அறுபது கிறேன் வரைக்குக் கொடுத்தார். அவர்களில் அனேகருக்குக் காய்ச்சல் கடுமையாயிருந்தும் இந்த மருந்தால் மெத்த நயங்கண்டது. இந்தக் கொட்டை நீங்கிய நெற்றின் கஷாயம்[8] இரத்தஞ் சிந்தும் மூலமுளைகளுக்குப் புகட்ட நல்லதென்று அஸ்வல்டு வைத்தியர் சொல்லுகிறார். கயராகவும் அந்திபிருடியாகவும் இந்தச் சரக்கை இன்னுஞ் சோதிப்பது நல்லது.

புங்கமரம். Pongamia Glabra. இம் மரம் இந்துவின் அனேகவிடங்களிலுள்ளது. இதின் கொட்டையிலிருந்து ஓர் எண்ணெய் பிழிந்தெடுக்கப்படும். இதைச் சிரங்கு ஏர்பிசு[10]முதலான குட்டைக்கரப்பனுக்கும் மற்றுஞ் சரும நோய்களுக்கும் பூச்சு மருந்தாய்ச் சுதேச பதார்த்தசாரம் விதந்து பேசுகின்றது. இந்த நோய்களுக்கு இதைவிட நயந்த மருந்து தாவரவகைகளில் இல்லையென்று கிப்சன் வைத்தியர் சொல்லுகிறார். வாதத்துக்குப் பூச்சாகவும் இந்த எண்ணெய் அதிகமாய் வழங்கப்படும். இதின் இலட்சணங்களைப் பற்றிச் சில குறிப்புகளை குடோசு வைத்தியர் எழுதியிருக்கிறார்.

முருக்கு. Butea frondosa. இந்த மரத்தின் கொட்டைகளை அந்தெல்மிந்தி[11] யென்றுவிசேஷமாய் மகமதிய வைத்தியர் மெத்தப் பாராட்டுகிறார்கள். கடையில் வரும் இக் கொட்டை கருஞ்சிவப்புநிறமும் ஒன்றேகால்முதல் ஒன்றேமுக்கால் இஞ்சு நீளமுமாய் மெல்லிதும் தட்டையும் வட்டிப்புமாயிருக்கும். சுவை மணம் ஏறக்குறைய இல்லை. கொஞ்சக் காலத்துக்கு முன் இறந்த பற்லர் வைத்தியர் இத்தன்மையில் இதின் நயத்தைப்பற்றி மெத்தச் சார்பாய்ப் பெசியிருக்கிறார். இதைச் சோதித்துப் பார்த்த வைத்தியஉத்தியோகஸ்தர் எழுதின எழுத்துக்களும் இதை உறுதிப்படுத்தின. இதிலே மெத்தப் பரீட்சையுள்ள அஸ்வல்டு வைத்தியர் இக் கொட்டைகளைத் தண்ணீரில் ஊறவைத்து ஓடுகளைக் கவனமாய் உடைத்துப்போட்டுப் பருப்பைக்காயவைத்து மாவாக்கிக்கொடுக்கும்படி சொல்லுகிறார். இந்த மாவை இருபது கிறேன் தேயமாக மூன்றுநாளைக்கு நாள் மூன்றுமுறையாகக் கொடுத்து நாலாம் நாளில் ஆமணக்கெண்ணெய் ஒருதேயம் கொடுக்கவேணும். இப்

1 Tannic acid. 2 Gallic acid. 3 Hematoxylum. 4 Extract. 5 Tannin. 6 Amylum or starch. 7 Antiperiodic. 8 Decoction. 9 Piles. 10 Herpes. 11 Anthelmintic,

Digitized By Roja Muthiah Research Library

படிக்கொடுத்த ஒரு ஆளில் 125 கிரைப்பாம்பு விழுந்ததென்றும் இன்னொரு ஆளில் எழுபது எண்பது விழுந்ததென்றும் அஸ்வல்டு வைத்தியர் சொல்லுகிறார். கிருமியைக் கொல்லுஞ் செயலைக் காட்டாத வேளைகளில் இது பேதிமருந்துபோலாகும். இதன்றிப் பெருந்தேயத்தில் இது வாந்திக்கக்கூடியதென்று கீஸ் வைத்தியரும் பிருக்கங்[1]களை அழற்றக்கூடியதென்று சிமிது வைத்தியரும் சொல்லுகிறார்கள். இந்த அவக்குணங்களினிமித்தம் இதைத் தாறுமாருய்க் கொடாதபடி பளனியாண்டி வைத்தியர் எச்சரித்திருப்பதுசரி. இந்தத் தூள் கிருமிகளைக் கொல்லுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதைப் பதனமாய் வழங்குமுறையைப் பற்றி இன்னுமறியவேணும். கொட்டையை இடித்துப் பசையாக்கிப் பூசுதல் படர்தேம[2]லுக்குச் சிலவேளை நயமாகுமென்று அஸ்வல்டு வைத்தியர் சொல்லுகிறார்.

காக்கணங்கோடி. Clitorea ternatea. சிறப்பான இந்த ஏறு கொடியின் கொட்டைகளுக்கு பேதிக்குந் தன்மையுண்டு என்கிறார்கள். வறுத்த கொட்டையைத் தூளாக்கித் திரும் தேயமாகக் கொடுத்துச் செவ்வையாய்ப் பேதித்ததாகச் சாற்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். திமக்கு வைத்தியரும் இவ்வித சாட்சிசொல்லுகிறார். இதை இரண்டுமடங்களவான பதாசியமிலதாத்தர[3]சோடு கலந்துகொடுத்தல் நலமென்று இந்த இரண்டுபேருஞ் சொல்லுகிறார்கள். இதின் செயல் இலகுவும் விக்கினமற்றதுமாய்த் தோற்றுகின்றது. இந்துவின் எப்பகுதியிலும் இதைச் சொற்பசெலவோடு சம்பாதிக்கலாமாகையால் இன்னும் ஆராய்வது நல்லது. இதின்வேர்ப்பட்டையைக் கஷாயமாக்கி இரண்டொரு திரும் தேயத்தில் குடித்தால் சலப்பை[4] சலபாதை[5]யின்அழற்சிக்குச் சாந்தியாகுமென்று முடீன்செறீவெண்பவர் தமது சொந்த அனுபவத்திலிருந்து மெத்த விதந்துபேசுகிறார். அத்தோடு அமுரிதியாகவும் சிலவேளைகளில் இளம்பேதியாகவும் இதுசேஷ்டிக்கும். இதின் பூக்களின் சிறுபம்[7] வாய்ப்பான கிறப்பதார்த்தமாகுமென்று ஹேறன்ஸ் வைத்தியர் சொல்லுகிறார்.

கிசாரிப்[8]பூண்டு. Lathyrus Sativus. இது வடக்கிந்துவிலிருக்கும் ஓர் பூடு. இதின் விதையை வழக்கமாய்ச் சாப்பிட்டுவரச் சிலவேளை கால்கள் சோரும். வங்காளத்தைச் சேர்ந்த ஓர் சில்லாவில் குடிசனங்களுள் ஏறக்குறைய நூற்றுக்கு நாலுபேர் வீதமாய் இச்சோர்பினால் வருந்தினார்கள். இக்குணத்தைப்பற்றி வியப்பான காரியங்களை ஏர்விங், கின்லக் கேர்க்கு வைத்தியர்கள் அறிந்தெழுதியிருக்கிறார்கள்.

கடலை. Cicer arietinum. இந்துவடங்கலும் இந்தப் பூடு அதிகமாய்ச் செய்கைபண்ணப்படும். இதின் கொட்டைகள் மாடு முதலிய மிருகங்களுக்குத் தீனாகும். அடிக்கொப்புகள் இலைகள் முதலிய பகுதிகளிலுள்ள மயிர்களிலிருந்து புளிப்பான ஓர் நீர் வடியும். இந்த நீரிலே அக்சலிக்கமில[9]மும், அசிதிக்[10]கமிலமும்ஒருவேளை மலிக்[11]கமிலமும் அடங்கியிருக்கும். இந்தப் பூண்டுக்கே உரிய இன்னொரு அமிலமும் இதில் இருக்கிறதென்று திஸ்பன் சொல்லுகிறார். இந்த அமிலத்தையும் இதின் உபயோகங்களையும் இதைச் சேர்க்கும் வகையையும் பற்றிய குறிப்புகள், கிரிஸ்தி, ஹேறன், எஸ்லி, திறேறி என்ற வைத்தியர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றன. இது காய்ச்

---

1 Kidney. 2 Ringworn. 3 Acid tartrate of potash. 4 Bladder. 5 Urethra. 6 Diuretic. திபுரீசம். 7 Syrup. 8 Kisari. 9 Oxalic acid. 10 Acetic, 11 Malic.

Digitized By Roja Muthiah Research Library

சல் முதலியவற்றுக்குக் குளிர்மையான மருந்தென்று சுதேசிகளால் வழங்கப்படும். இந்நோக்கத்துக்கு இது நயமாயிருக்கக்கூடும். இது தெக்கணத்துப் போட்டுக்கீசரால் திஸ்மெனுறீய[1]த்துக்கு வேது மருந்தாக வழங்கப்படும். பச்சைப் பூண்டு போட்டப்பட்ட கொதி வெந்நீர் மேல் நோயாளியை நன்றாய்ப் போர்த்து இருத்துவார்கள். காடி[2]யிட்டு வேது விடுவதில் இது இன்னொரு முறையென்று வால்கர் வைத்தியர் சொல்லுகிறார்.

அல்காகி மறோரம். Alhagi Maurorum. இது ஆபிரிகம், மேற்காசியத்தின் காடுகளுக்குரிய ஓர் செடி. இது வடக்கிந்துவிலும் தெக்கணத்திலும் உண்டு. இதின் தண்டுகளிலிருந்து இனிப்பான பாணியாகிய ஓர்வகை மன்னு பொசியும். இது அஷ் மன்னு[3]வின் அவுஷத தன்மைகளை உடையதென்கிறார்கள். இலை காம்பு முதலிய அசுத்தங்களோடு கலந்த கருஞ் சிவப்பான சிறுச்சிறு வாலுண்டை[4]களாக இது வரும். இது உண்டாகும் வகை சேர்க்கும்வகையைப்பற்றி நயந்த சில குறிப்புகளை ரூபறன் என்பவர் பிரசுரப்படுத்தியிருக்கிறார். ஆயினும் மருந்தாக இதின் செயலைப்பற்றி அவைகளில் விளங்கிக்கொள்ளக்கூடியது சொற்பம். நாமறிந்த வரையில் இது விசேஷமான சரக்கல்ல.

## ரோசாசியங்கள்.

## ROSACEAE.

### செவ்வுரோசை. RED ROSE.

வாசம். தென்யுரோபம். இது தோட்டங்களில் எங்குமுண்டாக்கப்படும்.

வாகடபகுதி. மலராத பூவின் காய்ந்த இதழ்கள். நிறம் நேர்த்தியான நீலச் சிவப்பு. காய்ந்தபிறகும் இந்த நிறம் நிற்கும். சுவை கைப்பும் சற்றே புளிப்பும் துவருமானது. வாசனை மிகுந்திருக்கும். பூக் காய, வாசனை வீசும்.

தன்மை உபயோகங்கள். சொற்ப தொணிக[5]முந் துவருமானது. விசேஷமாய்ப் பின் வரும் முறை இரண்டில் மருந்துகளுக்கு அனுபானமாய் வழங்கப்படும்.

ரசிதங்கள். ரோசையமிலவின்வூசம். Acid Infusion of Roses. கொள். செவ்வுரோசையிதழ்கள், தூளாக்கி, கால்அன்சு; கிருச சல்வுரிக்கமிலம்[6] ஒரு திறும்; கொதிவெந்நீர் பத்து அன்சு. அமிலத்தைத் தண்ணீரோடு கலந்து, ரோசை இதழ்களையிட்டு அவற்றை மூடிய பாத்திரத்தில் அரைமணிநேரமூறவிட்டு சீலையிற் தெளிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. லவண விரேசனங்கள், கினியம் முதலிய மருந்துகளுக்கு இது நல்ல அனுபானம்.

ரோசைலேசியம். Confection of Roses. கொள். செவ்வுரோசை இதழ்கள், ஒரு இறுத்தல்; சுத்த சர்க்கரை மூன்று இறுத்தல். உடன் கொய்த

1 Dysmenorrhoea 2 Vinegar. 3 Ash-manna. 4 Tears. 5 Tonic, சுரநி.
6 Diluted Sulphuric acid.



Digitized By Roja Muthiah Research Library

செவ்வுரோசை இதழ்களைக் கல்லுரலில் துவைத்துக் களியாக்கிச் சர்க்கரையையுஞ் சேர்த்து நன்றாயரைத்துக்கொள்ளவும்.

**தேயம்.** ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்குச் சொற்ப துவராகும். குளிகைகள், லேகியங்கள் செய்வதில் யானம்[1]ாய் இதைச் சேர்ப்பதன்றித் தனிய கொடுப்பதரிது. இரசகுளிகை[2]யிலும் மற்றும் வாகடக்குளிகைகளிலும் இது சேருகின்றது.

## நாயுரோசை. DOG ROSE.

**வாசஸ்.** இது யுரோப்பத்திலும் மற்றும் மத்திமோஷ்டண பூமிப்பகுதிகளிலும் வேலியருகில் நிற்கும்.

**வாகடபகுதி.** கனிந்தபழம். இது ஒரு இஞ்சு அல்லது அதற்குக் கூடின நீளமும், அண்ட வடிவும் நல்ல சிவப்புநிறமும் அழுத்தமும் மினுக்கமுமானது. சற்றே புளிப்புள்ள இனிய நற்சுவையுடையது.

**தன்மைகள், உபயோகங்கள்.** பின் வரும் லேகியத்தில் இது ஓர் கூறுவதினால் மாத்திரம் இது வாகடத்துக்குரியதாகின்றது. இவ்விலேகியம் பலமுறையும் எவ்வகையான லேகியத்துக்கும் குளிகைக்கு எத்தனமான திரவியங்களுக்கும் தாரக[3]மாக வழங்கப்படும்.

**ரசிதம்.** நாயுரோசைலேகியம். Confection of Dog rose. கொள். நாயுரோசைக்கனி, கொட்டைகள் நீக்கி, ஒரு இறாத்தல்; சுத்த சர்க்கரை இரண்டு இறாத்தல். கனிகளைக் குழியம்மியில் நசித்தரைத்து, அரிப்பெட்டியில் அரித்துச் சர்க்கரையையுங் கூட்டி நன்றாய்ச் சேர்க்கவும்.

## நூறல்லிரோசை. CENTIFOIL ROSE.

**வாசஸ்.** இது பூமியடங்கலும் தோட்டங்களிற் செய்கைபண்ணப்படும்.

**வாகடபகுதி.** நன்றாய் மலர்ந்த பச்சை இதழ்கள்; இவைகள் இனிப்பும் கைப்பும் சற்றே துவருமான சுவையும் மெத்த வாசனையுமுடையவைகள். சுவையும் வாசனையும் லேசில் பிரிந்து தண்ணீரிற் சேரும்.

**தன்மைகள், உபயோகங்கள்.** மெல்லிய பேதி. இவைகளிற் திஸ்திலி[4]க்கும் நீரின் நிமித்தமாக மாத்திரம் இவை வாகடத்துக்குரித்தாகின்றன.

**ரசிதங்கள்.** ரோசைநீர். Rose water. கொள். நூறல்லி ரோசையின் பச்சையான இதழ்கள், பத்து இறாத்தல். அல்லது உப்புப்போட்டுப் பேணிவைத்த இதழ்களில் இதற்குச் சரிவந்த நிறை; தண்ணீர் இரண்டுகலன்[5]. இதைத் திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும். இது வாசனையுள்ளதாகையால் அதிகமாய் லோஷன்[6]கள், கலூறியங்க[7]ளுக்கு யானமாக வழங்கப்படும்.

**ரோசைத்தேல்.** Attar of Rose. இது தமஸ்கு ரோசையிலிருந்து விசேஷமாய்த் துருக்கையிற் செய்யப்படும். காசிப்பூரிலுஞ் சொற்பஞ் செய்யப்படும். இது செய்யப்படும் விதத்தைப்பற்றியும் பிந்தின இடத்தில் ரோசை நீர் செய்யப்படும் விதத்தைப்பற்றியும் பூரணவிவரம் ஜாக்சன் வைத்தியராற் சொல்லப்பட்டிருக்கின்றது, இத் தேலின் வாசனை வெகுவாய்க் கமழுமாதலால் சிற்சில அஞ்செனங்கள் பூச்சு மருந்துகளின் நாற்றத்தை மறைப்பதற்குத் தகுந்தது.

---

1 Excipient 2 Mercurial pill. 3 Basis. 4 Distil. 5 Gallon. 6 Lotions. 7 Collyriums.

Digitized By Roja Muthiah Research Library

## குசோ. KOUSSO.

வாசம். இது அபிசினியா நாட்டிலுள்ளது.

வாகடபகுதி. காய்ந்த பூக்களும் துளிர்களும். பூக்கள் சிறுத்துக் கருஞ்சிவப்பு நிறமாய் மயிருள்ள தாள்களில் பொறுத்திருக்கும். கலிசின்[1] புறப்பங்கு ஐந்தாகப் பிரியும். ஒவ்வொரு பிரிவும் நீண்ட வட்டிப்பாயும் வலைப்பின்னல்போல் கூந்தல் ஓடியுமிருக்கும். நிலவாகையைப் போல் உவட்டிப்பும் சற்றே கார்ப்புமானது. இதில் ஓர் அத்திர எண்ணெய்[2]யும் கைப்புங் காரமுமான ராளமும்[3], தனினும்[4] குசீன்[5] என்ற ஓர் கிரிஸ்தற் சத்தும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது அந்தெல்மிந்திக்[6].

உபயோகம். நீளியப்புழு[7]வைக் கொல்வதற்குக் கைகண்ட மருந்து. புழுவைக் கழிப்பதற்கு, பிறகு ஓர் விரேசனங் கொடுக்கவேண்டும்.

தேயம். வளர்ந்தவர்களுக்கு அரை அன்சு கொடுக்கவும். ஏழு தொடுத்துப் பன்னிரண்டு வயதான பிள்ளைகளுக்கு இரண்டரைத் திருமும், மூன்றுமுதல் ஏழு வயதான பிள்ளைகளுக்கு இரண்டு திருமும்,மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு திரும் முதல் ஒன்றரைத் திருமுங் கொடுக்கவும். இதை இன்வூச[8] மாக்கியும் தேனோடு சேர்த்து லேகியமாக்கியுங் கொடுக்கலாம்.

ரசிதம். குசோவின்வூசம். Infusion of Kousso. கொள். குசோ பருக்கன்தூளாக அரை அன்சு; கொதிவெந்நீர் நாலு அன்சு. மூடிய பாத்திரத்திற் பதினைந்து மினிட் நேரத்துக்கு ஊறவைக்கவும்.

இவ்வளவும் வளர்ந்த ஒரு ஆளுக்கு ஒரு தேயமாகும். தூளோடு தண்ணீர் முழுவதையும் ஒருமிக்க வெறுவயிற்றிற் குடிக்கவும், சிலமணி நேரத்தால் விரேசனம் சாப்பிடவும் வேணும்.

## தேன் வாதுமை. SWEET ALMOND TREE.

## கைப்பு வாதுமை. BITTER ALMOND TREE.

வாசம். இவை பாபெரி, சீரியம் என்னும் தேசங்களில் உண்டு. யுரோபத்திலும் மத்திம ஆசியத்திலும் உண்டாகும.

வாகடபகுதி. 1 தேன் வாதுமைப் பருப்பு. இது ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமானது; அயில் போற் கூருள்ளது, தெளிந்த, கறுவாப்போலக் கருஞ்சிவப்பு நிறமான, தோலுள்ளது. கார்ப்பற்ற இனிய வாசனையும் சுவையுமுடையது. தண்ணீர் விட்டுத் துவைக்கும் போது கைப்பு வாதுமையின் மணம் வீசாது. 2 கைப்பு வாதுமைப் பருப்பு. இது தோற்றத்திற் தேன் வாதுமைப் பருப்புப் போன்றது. ஆயினும் அதிலும் அகலமும் குறளுமானது. கைப்புச் சுவையுள்ளது. கொஞ்சத் தண்ணீர் சேர்த்தரைக்கும் போது தன் சொந்த மணத்தை வீசும்.

தன்மை உபயோகம். தேன் வாதுமை இமாலிய[9]மும் போஷணியுமா

---

1 Calyx. 2 Volatile oil. 3 Resin. 4 Tannin. 5 Kuoseine. 6 Anthelmintic, கிருமிகொல்லி. 7 Taenia. 8 Infusion. 9 Emollient, சாந்தனி.

Digitized By Roja Muthiah Research Library

கும். கைப்பு வாதுமை அதிலிருந்து பிழிந்தெடுக்கும்எண்ணெய்க்காக வா கடத்திற் சேர்க்கப்பட்டது.

ரசிதங்கள். வாதுமைக்கூட்டுச் சூரணம். Compound Powder of Almonds. கொள். தேன்வாதுமைப்பருப்பு, எட்டு அன்சு; சுத்தசர்க்கரை மா, காலு அன்சு; அகசிப்பிசின்மா[1] ஒரு அன்சு. வாதுமைப்பருப்பின் தோலை இலகுவில் உரிக்கத்தக்கதாய் வருந்தனையும் அதை வெந்நீரிற் போடவும். தோல் நீக்கப்பட்டு வெண்மையாக்கினபின் மெல்லிய சீலையால் ஒற்றியுலர்த்தி குழியம்மியில் இட்டு மென் களியாகுந்தனையும் மெல்ல அரைக்கவும். பின் சர்க்கரை இரண்டையும் ஒன்றாகக் கலந்து வாதுமையோடு படிப்படியாய்ச் சேர்த்து முழுவதையும் பருக்கன் சூரணமாய் அரைத்து நுகைவாய் அடைத்த சாடியில் இட்டுவைக்கவும்.

வாதுமைக்கலவை. Almond Mixture. கொள். வாதுமைக்கூட்டுச்சூரணம், இரண்டரை அன்சு; திஸ்திலித்த[2] நீர், அரைநாழி. சூரணத்துக்குச் சொற்ப தண்ணீர் விட்டு மெல்லிய பசையாக அரைத்துப் பிற்பாடு சேஷமான தண்ணீரையுஞ் சேர்த்து மெல்லிய புடைவையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. எக்ஸ்பெக்துறங்கள்[3] குளிர்மையான லவண மருந்துகள் முதலியவற்றுக்கு இது நல்ல அனுபானம்.

வாதுமைத் தேலம். Almond oil. இது தேன் வாதுமைப் பருப்பையாவது கைப்பு வாதுமைப் பருப்பையாவது பிழிந்தெடுக்கும் எண்ணெய். இது வெண்மஞ்சள் நிறமுள்ளது. ஏறக்குறைய மணமற்றது. அல்லது மணமிருக்கில் வாதுமைக்குரியதாய்ச் சொற்பமானது. காரசாரமற்ற எண்ணெய்ச்சுவையுள்ளது.

இது இமாலிய[4]மும், இளம்பேதியுமாகும். வாகடத்துக்குரிய அன்கென்கள்[5] சிலவற்றில் இது சேருகின்றது.

## லாறுசேருசிமரம். CHERRY LAUREL.

வாசம். இது சின்ன ஆசியத்துக்குரியது. மத்திம யுரோபமடங்கலும் தோட்டங்களில் உண்டு.

வாகடபகுதி. இலை; அண்ட வடிவ அயிற்சாங்கமானது. ஐதான கருக்குள்ளது. அடியிற் சிறுக் கணுக்களை உடையது. அழுத்தமும் மினுக்கமும் நல்ல பச்சை நிறமுமானது. பெலத்த காம்புள்ளது. கசக்கினுலொழிய மணம் வீசாது. கசக்கும்போது இனிய மணம் வீசும். இந்த மணம் விசேஷமாய் இலையின் அரும்புகளில் இருக்கும், சுவை கைப்புஞ் சுகந்தமுஞ் சற்றே துவருமானது. இலையின் வீறு அதிலே ஐருசையனிக்கமிலத்தை[6] ஓர் கூறாக அடக்கிய அத்திர எண்ணெய்[7] யைச் சார்ந்தது. இந்த எண்ணெய், இலையிலே இயல்பாயிராமல் அவைகளைக் கசக்கி ஈரிப்பில் வைக்கும்போது பல சத்துக்கள் ஒன்றிலொன்று சேஷ்டிப்பதாலாக்கும் பிறக்கின்றது.

தன்மை. இது வீறுள்ளதாயினும் நிச்சயமற்ற செரதிவம்[8]. பெருந்தேயத்திற் கொடிய நஞ்சு. இலைகளைப்பார்க்க இலையரும்புகள் அதிகம் சத்துள்ளவைகள்.

---

1 Gum Acacia. 2 Distilled. 3 Expectorant. 4 Emollient. 5 Unguent. 6 Hydrocyanic acid. 7 Volatile oil. 8 Sedative.

Digitized By Roja Muthiah Research Library

உபயோகம். *சிரா[1]நோய்கள் ஸ்பச[2]நோய்களுக்கு இது பிரயோகிக்கப்பட்டது. இதால் உண்டாகக் கூடிய நலமெல்லாம் கிருசவைருசையனிக்கமிலத்[3]தால் விக்கினமின்றி நிச்சயமாய் உண்டாகக்கூடும் இந்த இலைகளைத் துவைத்து வேதனை தணிபபதற்குச் சிலவேளை வெளியில் அணைப்பார்கள். ஆயினும் தோல் வழுந்தப்பட்ட அல்லது புண்பட்ட பகுதிக்கு இட்டால் மோசமுண்டாகவுங் கூடும்.*

தேயம். *இலைமாவில் நாலு கிறேன் முதல் எட்டுக்கிறேன் கொடுக்கலாம். இதைக் கொடுப்பதரிது.*

ரசிதங்கள். லாறுசேறசி நீர். Laurel water. *கொள். பச்சையான லாறுசெறுசியிலை, ஒரு இருத்தல்; தண்ணீர் ஒன்றேகால் நாழி. இலைகளைத் துண்டித்து உரலில் இட்டு நசித்து அந்தத் தண்ணீரில் ஒருநாளைக்கு ஊறப் போடவும். பிற்பாடு அரைநாழி நீரைத் திஸ்திலி[4]த்து, வருவதைக் குலுக்கிக் கடுதாசியில் வடித்து அடைத்த சீசாவிற் பேணிவைக்கவும்.*

தேயம். *ஐந்து முதல் முப்பது துளி. இதிலே ஐருசையனிக்கமிலம் வித்தியாசமான அளவாய் அடங்கியிருக்குமாகையால் இதை அவதானமின்றி வழங்குவது மோசத்துக்கு இடமாகும்.*

கிருச வைருசையனிக்கமிலம். Diluted Hydrocyanic acid. *இது ஐகா நீ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுவதாகிய ஐருசையனிக்கமிலமானது நிறைப்படி நூற்றுக்கு இரண்டு பங்கு வீதமாய்த் தண்ணீரிற் கரைந்திருக்கும் நீர்.*

*இதை லாறுசெறுசியிலைகளைத் திஸ்திலித்தெடுக்கும் நீரிலிருந்தும் அவைகளின் அத்திரவெண்ணெய்[5]யிலிருந்தும், கைப்புவாதுமையெண்ணெய்யிலிருந்தும் மற்றும் வாதுமைப்பருப்புகளிலிருந்தும் போமியங்க[6]ளின் கொட்டைகளிலிருந்தும் எடுக்கலாம். ஆயினும் மருந்துக்கு சல்வுரிக்கமிலத்தோடு பதாசியபீதபுருசியசும்[7] தண்ணீரும் சேர்த்துத் திஸ்திலித்து இதை எடுப்பார்கள்.*

லட்சணங்களும் சோதனைகளும். *இது தனக்கே உரிய ஓர்வகை மணமுள்ள நிறமற்ற நீர். இதின் விசேஷகிருவிதம்[8] 0.997. லிற்மஸ் தாளிற் சிவப்புநிறம் சொற்பநேரம் நிற்கத்தக்கதாய், அதைச் சற்றே சிவப்பாக்கும். பிலாடினப்[9] பாத்திரத்திலே இதிலொரு திறமை வறட்டினால் சேஷம் நில்லாது. அயசல்வசு[10] நீர், அயபிரசல்வசு[11] நீர் இரண்டையுங் கலந்து அதிற் சொற்பத்தைக் கிருசஐருசையனிக்கமிலத்தோடு சேர்த்துப் பிற்பாடு பதாசி நீருங்[12] கலந்து, கடைசியில் ஐருகுலோறிக்கமிலத்தாற்[13] புளிப்பாக்கினால் புருசியநீல[14]மாகும். இந்த அமிலத்தைப் பாரிய குலோறிர[15]த்தோடு கலந்தால் அடையல் உண்டாகாது. வெள்ளி நீதுர[16]சோடு சேர்த்தாலோ கொதிக்குஞ் சாரதித்த[17] நீதுரிக்கமிலத்தில்[18] முற்றாய்க்கரையக்கூடிய வெண்ணடையல் விழும். 270 கிறேனோடு, சோட நீர்[19] சேர்த்து அல்கலை[20]யானபின் நிலைபரமான அடையல்உண்டாகத் துவங்குவதற்கு வெள்ளிநீதுரசின்பருமவிலய[21]*

---

1 Nervous. 2 Spasmodic, கரு. 3 Dilute Hydrocyanic acid. 4 Distil. 5 Volatile oil. 6 Pomeae. 7 Yellow Prussiate of Potassium. 8 Specific gravity. 9 Platinum. 10 Sulphate of Iron. 11 Persulphate of Iron. 12 Liquor Potash. 13 Hydrochloric acid. 14 Prussian blue. 15 Chloride of Barium. 16 Nitrate silver. 17 Concentrated. 18 Nitric acid. 19 Soda Water. 20 Alkali. 21 Volumetric solution.

Digitized By Roja Muthiah Research Library

ணத்தில் 1000 கிறேன் அளவு சேர்க்கவேணும். இது சுய அமிலத்தில் நூற்றுக்கு இரண்டு பங்குக்குச் சரி.

எதின்பரு சிகிச்சா வாகடத்திற் சொல்லப்பட்ட ஐருசையனிக்கமிலத்தில் உள்ள வீதத்தில் அரைவாசிக்கு அதனமாய் இதில அமிலம் அடங்கியிருக்கின்றது. இது பெலனில், லண்டன், தபுளின் சிகிச்சா வாகடங்களிற் சொல்லப்பட்ட கிருசவைருசையனிக்கமிலத்துக்குச் சரியானது.

தன்மைகள். இது வீருன செரதீவம்[1]. அனுடைன்[2]; பருந்தேயத்திற் சீக்கரமான கொடிய நஞ்சு.

உபயோகங்கள். சுவாசக் குழற் சளிச்சவ்[3]வின் அழற்சியான கதார்[4]நிலைமைகளுக்கும் குக்கல்[5] ஈழை[6] அஞ்சீனபெக்துசு[7] சுவாசப்பையின் ஸ்பச[8] நோய்கள் சிலவற்றுக்கும் பலமுறையுங் கொடுத்து நயங்கண்டது. சத்தியோடு கூடிய குன்மத்து[9]க்கும் குக்கித்தாபிதத்[10]துக்கும், குத்துக்கும் பைரோசிச்கும்[11] இது நல்லமருந்து. இதய ஙிபோஷத்துக்கு[12] விசேஷமாய் அது கடுமையான நெஞ்சிடியோடு கூடிநிற்கும்போது இது உவந்ததாய்க் கண்டது. மேலும், குவாதம்[13], வாதம்[14], சபல இரத்தப்பெருக்கு[15], கொரீயம்[16], ஏர்ப்பு[17] முதலியவற்றுக்கும் நயமாய்க்கண்டது. தோல் வியாதிகளின் அழற்சி வருத்தத்தைத் தணிப்பதற்குத் தண்ணீரிற்கலந்து லோஷ[18]னாகப் பூசப்படும். ஆயினும் தோல் வழுந்திய பகுதிக்காவது இடம்படவாவது இதைப் பூசுவது மோசம்.

தேயம். இதில் இரண்டு முதல் எட்டுத் துளியைத் தண்ணீரிற் கலந்து கொடுக்கலாம். பூசுவதற்கு எட்டு அன்சு தண்ணீருக்கு கிருசவைருசையனிக்கமிலத்தில்[19] ஒரு திரும் முதல் இரண்டு திரும் கலந்துகொள்ளலாம்.

ரசிதம். ஐருசையனிக்கமில சுவசனம். Inhalation of Hydrocyanic acid. கொள். கிருசவைருசையனிக்கமிலம், பத்துமுதற் பதினைந்துதுளி; தண்ணீர் ஒரு திரும். ஏற்ற பாத்திரத்திற் கலந்து அதிற் கிளம்பும் ஆவியைச் சுவாசிக்கட்டும்.

## புருணமரம். PRUNUS DOMESTICA. PLUM TREE.

வாசம். மத்திம தேசங்களடங்கலும் தோட்டங்களில் இது வளர்க்கப்படும்.

வாகடபகுதி. புருணம்[20] என்ற பழவற்றல். இது ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமும், முட்டை வடிவமும் திரைந்ததும் கறுப்பான நிறமும் இனிய சுவையுங் கொண்டது.

தன்மை உபயோகங்கள். இது திமல்சம்[21], சுகவிரேசனி. மருந்துக்குத் தனியே வழங்கப்படுவதரிது. இது லேகியங்க[22]ளுக்கு இணக்கமான நல்ல அனுமருந்து. திலவாகை லேகியத்தில் ஓர் கூறுகின்றது.

### அவாகடச் சரக்கு. Non-Officinal.

தவிஞ்சு. Quince. இந்தச் சிறுமரம் தென் யுரோபங் தொடங்கி, பார்

---

1 Sedative. 2 Anodyne, 3 Mucous membrane. 4 Catarrh. 5 Whooping cough. 6 Asthma. 7 Angina Pectoris. 8 Spasmodic. 9 Dyspepsia. 10 Gastritis. 11 Pyrosis. 12 Hypertrophy. 13 Gout. 14 Rheumatism. 15 Active Haemorrhage. 16 Chorea. 17 Tetanus. 18 Lotion, 19 Diluted Hydrocyanic acid. 20 Prunum, 21 Demulcent. 22 Confection,

Digitized By Roja Muthiah Research Library

சியத்திலும் இமயமலைப்பகுதி நேபாளம் வடக்கிந்துவின் மற்றும் பகுதிகளிலும் உண்டாகிறது. இதின் கொட்டை சடைகளில் வழக்கமாய் வரும். கால்இஞ்சு நீளமும், தட்டையும் நீண்ட வட்டிப்பும் செங்கபில[1]நிறமுமாய் ஒரு தலைப்பிற் கூர்கொண்டிருக்கும். ஒரே பழத்துள் ஒவ்வொரு அறையிற் பத்துப் பதினைந்து கொட்டைகள் பெரும்பாலும் ஒருமிக்க ஒட்டிக்கொண்டிருக்கக் காணலாம். கொட்டைகளை வெந்நீரிற் போட அவைகளின் தோலில் ஓர்வகைப் பாணி பிடிக்கும். இதைச் சைதனின்[2] என்பார்கள். இந்தக் கொட்டைகள் திமல்சம்[3] தொணிக[4]மென்றும் உயிர்தருமருந்[5]தென்றும் கிழக்குத்தேசமடங்கலும் மகமதியரால் மெத்த மதிக்கப்படுகின்றன. தாபிதத்[6]தோடு கூடிய திசெந்தெரி[7]க்கு இக்கொட்டைகளின் திகாக்தங்கொடுக்க மெத்த நயப்படுமென்று நூற்றன் பண்டிதர் சொல்லுகிறார். மலம் அழற்றாதபடிக்கு இதின் வழுவழுப்பு சளிச்சவ்வை[8] மூடிக் காத்துக்கொள்ளுகிறது போலும். கனூரியநோய்க்கும்[9] இது நல்ல திமல்சமாகக் காணப்பட்டது.

## லைதிறாரியங்கள்.

## LYTHRARICAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

மருதோன்றி. Lawsonia alba. இது மத்திம இந்துவின் வறண்ட காடுகளிலுள்ள செடி. இதின் இலைகளுக்காக இது கீழ்த்தேசமடங்கலும் செய்கை பண்ணப்படும். நகங்களை நிறப்பித்தல் முதலியவற்றுக்காகச் சுதேசிகளுள் எக்குலத்தவர்களும் இதின் இலைகளை வழங்குவார்கள், அவுஷத தன்மைகளுக்காகவும் இவைகள் மதிக்கப்படும். பெர்தொலெற்று என்பவர் இவைகளிற் கலிக்கமிலம்[10] இருக்கிறதாகக் கண்டிருக்கிறார். ஆகையால் துவர்மருந்தாக இவைகள் சற்றே பிரயோசன முள்ளவைகளா யிருக்கவேணும். இந்துக்களுக்குள்ளே பெரும்பாலும் உண்டாகும் "கால்எரிவு,, என்ற நோய்க்கு இது உத்தமமான பூச்சென்று அவர்கள் பாராட்டுவார்கள். வெகுநாளைக்கு மாறாமல்நின்ற ஒரு ஆளுக்கு இதாற் சுகமுண்டானதென்று கிறீர்சன் வைத்தியர் சொல்லுகிறார். வேறனேக மருந்துகளால் யாதொரு நயமுங் காணாதிருந்த சிலருக்கு இந்த மருந்தைப் பூச உண்டான எரிவினால் அவ்வேளைக்கு மெத்தச் சகாயமுண்டானதை வாறிங்கு பண்டிதர் பிரமதேசத்திலிருந்த போது கண்டார். பச்சைஇலைகளை காடி[11]சேர்த்துப் பசையாக அரைத்து உள்ளங்காலுக்குப் பாப்பையாக அப்புவதே இதை வழங்கும் முறையாம். துவைத்த இலைகளை எரியுமிடத்துக்குப் பூசிப் பெலனாய்த் தேய்த்ததாற் சில நோயாளருக்கு அதிக சுகமுண்டானது. மற்றும் மருந்துகளைப் போல இதாலும் பெரும்பாலும் அவ்வேளைக்கன்றி மற்றும்படி சுகமுண்டாகாதிருக்கக்கூடும். நசிவுகள், சுளுக்குகள் மற்றும் ஊறுகளுக்குப் பெரும்

1 Reddish brown. 2 Cydonin. 3 Demulcent. சாமகி. 4 Tonic. 5 Restorative, 6 Inflammation. 7 Dysentery. 8 Mucous membrane 9 Gonorrhoea. 10 Gallic acid. 11 Vinegar,

Digitized By Roja Muthiah Research Library

பாலும் இந்த இலைகளைத் துவைத்துப் பாப்பை[1]யாகக் கட்டுவார்கள். அல்லது இவ்விலைகளை அவித்து அக்கஷாயத்தில் தோய்த்துப் பிழிந்த சீலையை அணைப்பார்கள்[2]. இலைகள் பூக்களிற் செய்த ஓர் எசிருத்து[3] குஷ்டத்துக்குக் கொடுக்கப்படும்.

கல்லுருவி. Ammannia Vesicatoria. இப்பூண்டு இந்துவிலுள்ளது. இதின் இலைகள் மெத்தக் காரமானவைகள். கொப்புளங் கட்டும் மருந்தாகவே சுதேசிகள் இவைகளை அதிகமாய் வழங்குவார்கள். ஒஷானெசி பண்டிதர் சோதித்துக் கண்டபடி இவைகளாற் கொப்புளங் கொள்வதற்குச் செல்லுநேரம் அதிகமாயும் வருத்தங் கடுமையாயுமிருப்பதால் இவைகளை வழங்குதல் சரியல்ல. கந்தாரிசை[4]ப்பார்க்க இவைகளாலுண்டாகும் வருத்தம் அதிகம். சேஷ்டிக்குங் கெதியிலும் நிச்சயத்திலும் இவைகள் கொடிமூலிநக்குக் கீழ்மையானவைகள். இந்த இலைச்சாற்றை உள்ளுக்குக் கொடுத்துக் கடுமையான பிளிகை வியாதியைப் பரிகரிக்கும் ஒரு முறையை பலனுத போல் வைத்தியர் சொல்லியிருக்கிறார். ஆயினும் இதாலுண்டாகும் வருத்தங் கொடியதென்றும் அந்நோய் மாறுவது சந்தேகம் என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இது தகுந்த மருந்தாகத் தோன்றவில்லை.

## கம்மேலிடியங்கள்.

## HAMAMELIDEAE.

### ஸ்தைரக்ஸ் பல்சமரம். STYRAX BALSAM TREE.

வாசம். சின்ன ஆசியம்.

வாகடபகுதி. பட்டையில் வடியும் ஓர் பல்சம்[6]. திட்டசீது[7] கலந்து சீலையால் வடிக்க இது சுத்தமாகும். இது பூதஸ்தைரக்கசு[8] என்னப்படும். இது சற்றே உருவொளியாய்க் கருமஞ்சள் நிறமும் இறுகின தேனின் தடிப்புங்கொண்டு வீறுன நல்ல வாசனையும் சுகந்த[9] சுவையுமுடைய பாணியான ரானமாகும். சோதனைக்குழ[10]லில் இட்டு ஆவிமத்திசத்[11]திற் காய்ச்ச இது மெல்லிதாகும். ஈரிப்பைக் கக்காது. பதாசிதுவிக்குரோமசு[12] நீரும் சல்வுரிக்கமில[13]முங்கலந்து காய்ச்ச, இது பெஞ்சோலைரிரத்தின்[14] மணம் வீசும். இதிலே ஸ்தைரல்[15] என்ற ஓர் அத்திரஎண்ணெய்யும், ஸ்தைரசின்[16] என்ற கிரிஸ்தலிக்கக்[17]கூடிய சத்தும் சினமிக்கமில[18]மும் அடங்கியிருக்கும்.

தன்மைகள். இது ஸ்திமுலம்[19], எக்ஸ்பெக்துறம்[20].

உபயோகங்கள். இது காலிக புறங்கீது[21] வயோதிகருக்கு உண்டாகும் காலிக இருமல், ஈளை இவைக்கு உவந்தது. கனுறீயம்[22] லுகறீயத்துக்கும்[23] இவைபோன்ற நோய்களுக்கும் கபேவத்துக்குப் பதிலாக இது வழங்க

---

1 Poultice. 2 Fomentation. 3 Extract. 4 Cantharides. 5 Plumbago rosea, செப்புச்சித்திரமூலம். 6 Balsam. 7 Rectified spirit. 8 Prepared styrax. 9 Aromatic. 10 Test tube. 11 Vapor bath. 12 Bichromate of potash. 13 Sulphuric acid. 14 Hydride of Benzoyle. 15 Styrol. 16 Styracine. 17 Crystallizable. 18 Cinnamic acid. 19 Stimulant. 20 Expectorant. 21 Chronic Bronchitis. 22 Gonorrhoea. 23 Leucorrhoea.

Digitized By Roja Muthiah Research Library

ப்பட்டிருக்கிறது. நாட்பட்ட கெட்ட புண்களுக்கு இது நல்ல ஸ்தி மூலமாகும்.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேனைக் குளிகையாயாவது இமல் சமாயாவது கொடுக்கலாம்.

ரசிதங்கள். பூதஸ்தைரக்சு, சாம்பிராணிக்கூட்டிரஞ்ச[2]த்தில் ஓர்கூறாக ச் சேருகின்றது.

அவாகடச்சரக்கு. Non-Officinal.

நன்தாயுக்கு மரம். Liquidambar Altingia. இது யாவகத்திலுள்ள ஓர் பெரிய காட்டு மரம். தெனசரிம் நாடுகளில் விசேஷமாய் மெர் குவிக்கு முப்பது மைல் தூரத்திலுள்ள பன்லோவிலும் இது உண்டு. பிரமதேசத்திலுள்ள ஸ்தைரக்ஸ் மரமும் இதுதான். இதிலிருந்து வாசனையுள்ள பல்சம்[3]போன்ற நீர் வடியும். இதில் இரண்டு வகையானவைகள் பிரமதேசத்திலுண்டு. ஒன்று தெளிந்தது, வாசனையுள்ளது, வெண்மஞ்சள் நிறமானது; பட்டையிற் கீற இது வடியும். மற்றது தடிப்புங் கருமையும் மங்கலும் தர்ப்பந்தீன்[4] மணமுமுள்ளது. அடி மரத்திற் துளைக்க, அடிமரத்தைச் சுற்றி நெருப்பாற் காய்ச்ச, இது வடியும். வாறிங்கு பண்டிதர் இந்த இரண்டு இனத்தின் மாதிரியெடுத்து சென்னைபட்டின மருந்துச் சரக்கு ஆராய்வோருக்கு, 1851 ம் ஆண்டு அனுப்பினர். மார்காற்றர் இதைக் கூறுபடுத்தி ஸ்தைரலை[5] ப்போன்ற ஓர் அத்திரஎண்ணெய்[6]யும் ஸ்தைரசின்[7] போன்ற ஓர் பதார்த்தமும் அதில்அடங்கியிருக்கக் கண்டார். ஆயினும் இவைகளின் கூட்டோ வித்தியாசமாயிருந்ததெனக் கண்டார். வாறிங்கு பண்டிதர் இதை எக்ஸ்பெக்துற[8]மாகச் சோதித்துப்பார்த்தும் அதிற் திருத்தியான பேறு ஒன்றையுங் காணவில்லை. இது பிரயோசனமுள்ள மருந்துச் சரக்கல்லப்போற் தோற்றுகிறது.

## கோம்பிரிதாசியங்கள்.

## COMBRETACEAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

தான்றிமரம். Belleric Myrobalans Tree. கடுமரம். Chebulic. Myrobalans Tree. இந்த இரண்டுமரங்களும் இந்துவின் காடுகளில் உண்டாகும். இவைகளின்கனிகளே தான்றிக்காயும் கடுக்காயுமாம். யுறோப்வைத்தியத்தில் இவைகள் அறியப்படாதிருந்தாலும் இந்து பதார்த்தசாரத்தில் விதந்து பேசப்படுகின்றன. இந்த நூலைப் பிரசித்தஞ்செய்த வாறிங்கு பண்டிதர் கடுக்காயைச் சோதனைசெய்து பார்த்தார். ஆறு கடுக்காய் இடித்துச்செய்த கிஷாயம் குடிக்கக் கடுப்பு உவட்டு முதலிய அவக்குணங்களின்றி நாலு ஐந்து முறை திறமாயும் விக்கினமின்றியும் பேதித்ததென்று கண்டார். கொஞ்சக் கறுவா சேர்க்க இம்மருந்து சுவைகொள்ளும். இந்துவடங்கலும் இந்தக் காய்கள் சொற்ப கிரயத்துக்குக் கிடைக்கும். மற்றும் பேதிமருந்துகள் கிடையா

1 Emulsion. 2 Compound Tincture of Benzoin. 3 Balsam. 4 Turpentine. 5 Styrol. 6 Volatile oil. 7 Styracine. 8 Expectorant.



Digitized By Roja Muthiah Research Library

நவேளைகளில் இம் மருந்தைக் கொடுக்கலாம். பேதித்தன்மையிருந்தாலும் துவர்ச்சத்து அதிகமாய் இவைகளிலுண்டு. இதினால் இவைகள் வேலைவித்தைகளில் உபயோகமாவதுமன்றி, லோஷன்[1], புகட்டல்[2] முதலிய மருந்துகளில் மாசக்காய்க்குப் பதிலாகும். இரத்தம்பாயும் மூலமுளைகளுக்கும் சிலவகையான யோனிக் கழிச்சல்களுக்கும் கடுக்காயை அவித்துப்புகட்டுவது நல்லதென்று அஸ்வல்டு வைத்தியர் சொல்லுகிறார். கடுக்காய் முட்டைவடிவும் ஒருஇஞ்சு ஒன்றரை இஞ்சு நீளமுமானது. சில கீழ்த் தலைப்பில் ஒடுங்கியிருக்கும். நெடும்பாட்டுக்குத் தோற்றமற்ற வரைகளும் ஐந்து ஆறு பக்கங்களுமுள்ளவைகளாய் அழுத்தமான மஞ்சட் கபிலத் தோலையுடையது. தோலுக்குள்ளே துவரான சதையும் அதற்குள்ளே பருத்த முரணான ஒரே அறையுள்ள கொட்டையுமிருக்கும். இளம் கடுக்காய்களைக் கருங்கடுக்காயென்று முன்னோர் எழுதியிருக்கிறார்கள். இவைகள் சுருங்கிக் கறுத்திருக்கும். நீளம் மூன்றிலொரு பங்கு இஞ்சு முதல் முக்கால் இஞ்சுவரைக்கிருக்கும். ஒடிவு மினுங்கும். மெத்தத் துவரான சுவையுள்ளது. காலிகீசன் ராசா இவைகளுக்கு விரேசனத்தன்மையோடு காமினாதி[3], தொணிக[4]த் தன்மைகளுமுண்டென்று எண்ணி இவற்றை மெத்தப் பாராட்டுகிறார். இத்தன்மையினிமித்தந் துவைனிங்கென்பவரும் இதை மெத்த நயந்து பேசி இவ்வளவு பிரயோசனமான மருந்து யுரோப தேசத்திற் பலவகையான பாண்டுநோய்க்கு மெத்த அரிதாய் வழங்கப்படுவதையிட்டு ஆச்சரியப்படுகிறேன் என்கிறார். பிளிகை[5] பருத்திருந்த ஒரு ஆளுக்கு இதால் நயங்கண்டதாகவும் அவர் சொல்லியிருக்கிறார். கடுவிலையில் ஏதோ ஒரு பூச்சி குற்றி இடும் முட்டைக்கு உறையான காயைக் கடுக்காய்ப்பூ என்பார்கள். இவைகளைத் துவரென்று சுதேசிகள் மெத்த மதிப்பார்கள். சில வருஷங்களுக்கு முன்னே திண்ணைவேலியிலிருந்த காண்சு குரு, வாறிங்கு வைத்தியருக்கு இவைகளைப்பற்றி அறிவித்தார். அவர்தாமே இவைகளைச் சோதித்து சுதேசிகளுக்குண்டாகும் வயிற்றுக் கழிச்சல் கடுப்புகளிலும் விசேஷமாய்க் குழந்தைகளுக்குண்டாகும் கடுப்பிலும் இவைகளின் நயத்தைப்பற்றிப் பாராட்டுகிறார். இதின் தேயம் ஒரு வயசுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மும்மூன்று மணிக்கொருமுறை ஒரு கிறேன். அனேக பிள்ளைகளுக்கு இதாற் சுகமுண்டானதை அவர் கண்டோமென்று சொல்லுகிறார். தான்றிக்காயைப்பற்றி அதிகந் தெரியாது. சுதேசிகள் வாடிக்கையாய் அதின்பருப்பைத் தின்பார்கள். இப் பருப்பு வெறித்தன்மையுள்ளதென்று வங்காள சிகிச்சை நூலிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிக அளவாய் உட்கொண்டால் மயக்கு நஞ்சுகளின் குணங்கள் இவைகளாலுண்டாகுமென்று ராடக்கு வைத்தியர் கண்ட நாலு உதாரணங்களால் விளங்குகின்றது. அந்த நாலுபேரில் ஒருவருக்கும் மரணம் வராவிட்டாலும் ஒவ்வொருவரிலுந்தோற்றின குணங்கள் பயங்கரமானவைகள். இதின் நெற்று வேலை வித்தைகளிற் கயராக அதிகமாய் வழங்கப்படும்.

**இந்து வாதுமைக்கோட்டை.** Terminalia Catappa. Indian Almond. இந்துதேசம் அடங்கலுஞ் செய்கைபண்ணப்படுகிற சிறப்பான வாதுமைமரத்தின் கொட்டைப் பருப்பிலிருந்து கார்ப்பற்ற எண்ணெய் நூற்றில் ஐம்பதுக்கு அதிகமான வீதமாய் வரும். இது சீமை வாதுமைஎண்ணெ

---

1 Lotion, தாவனி. 2 Injection. 3 Carminative, வாயுக்கினி. 4 Tonic, ஊசதி. 5 Spleen.

Digitized By Roja Muthiah Research Library

ஷியைப்போலிருப்பதால் அதற்குப் பதிலாக வழங்கப்படலாம். இதைப் பற்றிச் சிமிதர் 1843 ம் ஆண்டு கவனித்தார். இதை வைத்திருக்க ஸ்டியரின்[1] அதிகவீதமாய் இதில் அடைந்ததைக் கவனித்து வியப்பாய் எழுதியிருக்கிறார். சுதேசிகள் செய்யுமுறையாயெடுத்த எண்ணெய்யை நெடுக வைத்திருக்க அது கலங்கலாகும். இந்த வாதுமையின் பருப்பைச் சீமை வாதுமைப் பருப்புக்குப் பதிலாக வழங்கலாம். இதின் பட்டையிலும் துவருண்டு. கறுப்பு மருதமரத்[2]தின் பட்டையிலும் இத்துவர் அதிகமாயுண்டு. அதைத் திகாக்த[3]மாக்கி அசத்துவக் கழிச்சலுக்கு[4] உள்ளே கொடுப்பதும் அபலமான மந்தப் புண்களுக்கிடுவதும் நல்லதென்று ரோசுவைத்தியர் எழுதியிருக்கிறார். துவைத்த பட்டை இரண்டு அன்சுக்குத் தண்ணீர் அரை நாழி வீதமாய் விட்டு அவித்த இத் திகாக்தத்தின் தேயம் நாள் மூன்று தரம் இவ்விரண்டு அன்சு.

இரங்கூன் மல்லி. Quisqualis Indica. இது பிரமதேசம் மலாயநாடுகள் முதலிய இடங்களிலுள்ள படர்கொடி. இது இரங்கூன் மல்லியென்ற நாமத்துடன் இந்துதேசமடங்கலும் தோட்டங்களிற் செய்கைபண்ணப்படும். இதின் பழம் ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளம்; நீள வட்டமானது; இரண்டு தலைப்பிலுங் கூரானது; தோற்றமான ஐந்து பக்கங்கள் உள்ளது. இதின் ஓடு மெல்லிதும் நொருங்கக்கூடியதும் சிறந்த கருஞ்சிவப்பு நிறமுமானது. அதற்குள்ளே எண்ணெயுள்ள பருப்பிருக்கும். மலாக்காய்ப் பகுதிகளில் இக்கொட்டைகள் அந்தெல்மிந்தி[5]யென்று வெகுகாலம் பேர்பெற்றிருந்தன. இவைகள் இத்தன்மையுடையவைகளென்று சிங்கப்பூரிலிருந்த அக்சுலி, காடன் என்பவர்கள் 1833 ம் ஆண்டு வெளியரங்கப்படுத்தினார்கள். இவைகளைப்பற்றி இவர்கள் சொன்ன சாட்சிகள் மெத்தப் பெலப்பானவைகள். இக்கொட்டைகளில் ஐந்து ஆறை அரைத்துத் தேனோடாவது இனிய பழக்களி[6]யோடாவதுசேர்த்து லேகியமாக்கிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கீரைப்பாம்புகள் விழும். நாலு ஐந்து கொட்டைக்கு அதிகமாய்க் கொடுத்தால் வலி முதலிய அவக்குணங்கள் கிளம்பக்கூடுமென்று பூற்றன் என்பவர் சொல்லுகிறார். இவைகளின் பேரில் இன்னுஞ் சோதனைசெய்வது நல்லது.

## மேர்தாசியங்கள்.

## MYRTACEAE.

### கயபுட்மரம், CAJUPUT TREE.

வாசம். இது மலாயநாட்டிலும் அதின் அயலான தீவுகளிலும் வட அவுஸ்திராலியத்திலும் உண்டாகும்.

---

1 Stearine. 2 Terminalia tomentosa. 3 Decoction, கஷாயம். 4 Atonic Diarrhoea. 5 Anthelmintic, கிருமிகொல்லி 6 Jam.

Digitized By Roja Muthiah Research Library

**வாகடபகுதி.** இலைகளிற் திஸ்திலி[1]க்கப்படும் எண்ணெய். இது கயபுட்டேல் எனப்படும். இது மெத்தச் சலனமுள்ள உருவொளியான நீர். வெளிறற் பச்சை நீலநிறமுடையது. வீறுன நற்கந்தமும், சுகந்த பூரச்சுவையுங் கொண்டது. இதை ருசிக்க வாயிலே குளிரான உணர்ச்சி நிற்கும்.

**தன்மைகள்.** இது செறியும்ஸ்திமுலம்[2], அந்திஸ்பசி[3], சுவேதனி[4]; வெளியிற் பூச ருபிவாஷன்[5].

**உபயோகங்கள்.** சுரங்களின் பிற்காலுக்கும் அசத்துவ[6]வகைகளுக்கும் சோர்வுகள் வாதங்களுக்கும் சீவகரணங்கள் குன்றிய மற்று நோய்களுக்கும் இது கொடுத்து நயங்கண்டது. இது வாந்திபேதிக்கு வியக்கப்பட்டும் சாட்சி போதாது. வாயுப் பொருமலோடுகூடிய வயிற்றுவலி, இரைப்பையிலுண்டாகும் வருத்தமான வலி, இஸ்தேரி[7] முதலியவற்றுக்கும் இது உவந்தது. வாதம், நறல்சி[8] வருத்தமான மற்றும் வெளிநோய்களுக்கும் சோர்வு முதலியவற்றுக்கும் இது நல்ல பூச்சு மருந்தாகும்.

**தேயம்.** ஒரு துளி முதல் ஐந்து துளி.

**நேர்வான லினிமெனில்[9]** இது ஓர் கூறாகச் சேருகின்றது.

**ரசிதம். கயபுட்சீது.** Spirit of Cajuput. கொள். கயபுட்டெண்ணெய், ஒரு அன்சு; திட்ட சீது[10] நாற்பத்தொன்பது அன்சு. கல.

**தேயம்.** முப்பது துளி முதல் அறுபது துளி கொடுக்கலாம். 1864 ம் ஆண்டுப் பிறித்தனிச் சிகிச்சா வாகடத்திற் சொல்லப்பட்ட இந்தப் பெயருடைய மருந்துக்கு இது ஐந்திலொருபங்கு வீறுள்ளது.

## இலவங்கமரம். கராம்புமரம். CLOVE TREE.

**வாசம்.** இது மலாக்காயிலுண்டாகும். கிழக்கிந்து மேற்கிந்துவிலும் மோறிஷஸ், பூர்பன், சான்சிபாரிலும் செய்கைபண்ணப்படுகின்றது.

**வாகடபகுதி.** மலராத காய்ந்த பூமுகைகள். இவையே கராம்பு. இவை ஏறக்குறைய அரை இஞ்ச நீளமும், கருமை நிறமும், தசைப்பும் கனப்புமாய்த் திரண்டு நீண்டு, நாலு அரும்புகளையும் ஒரு உண்டையையுந் தாங்கியிருக்கும். வீறுன சுகந்த மணமும் கைப்புங் காரசாரமுமான சுவையுமுள்ளது. நகத்தாற் கிள்ள எண்ணெய் கசியும், ஓர் அத்திரவெண்ணெய்[11]யும் கறியுவிலின்[12] என்ற ராளம்[13]போன்ற கிரிஸ்தற்[14]பதார்த்தமுமே இதின் சத்துக்கள்.

**தன்மைகள்.** இது சுகந்தமான ஸ்திமுலம்[15], காமினதி[16].

**உபயோகம்.** மற்றும் மருந்துகளுக்குச் சுகந்தக் கூட்டாவதே இதின் பிரதான பிரயோகமாயினும் இதின் இன்ஹூசம் அல்லது அத்திரஎண்ணெய் அசத்துவகுன்ம[17]த்துக்கும் இரைப்பையழற்சி[18]க்கும் விசேஷமாய்க் கருப்பிணிகளின் வாந்திக்கும் உவப்பாகும்.

**ரசிதங்கள். கராம்பின்ஹூசம்.** Infusion of Cloves. கொள். இடித்த

---

1 Distil. 2 Diffusible Stimulant. 3 Antispasmodic. 4 Diaphoretic. 5 Rubefacient. 6 Adynamic. 7 Hysteria. 8 Neuralgia. 9 Liniment of Croton. 10 Rectified spirit. 11 Volatile Oil. 12 Caryophyllin. 13 Resin. 14 Crystal. 15 Aromatic stimulant. 16 Carminative. 17 Atonic Dyspepsia. 18 Gastric Irritation.

Digitized By Roja Muthiah Research Library

கராம்பு, கால் அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் அரைமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் நாலு அன்சு கொடுக்கலாம்.

கராம்புத்தேலம். Oil of Cloves. கராம்பைத் திஸ்திலித்[1]தெடுக்குமெண்ணெய். இது புதிதாயிருக்கையில் நிறமற்றது, பிறகோ, படிப்படியாய்க் கருஞ்சிவப்புநிறமடையும். கராம்புக்குரிய மணம், காரம் சுவை யாவுமிதற்குண்டு. தண்ணீரிற் தாழும்.

தேயம். இரண்டு துளிமுதல் ஆறு துளியைச் சர்க்கரையில் விட்டாவது இமல்ச[2]மாக்கியாவது கொடுக்கலாம். ஒருதுண்டு பருத்திப் பஞ்சை இதில் நனைத்து அடைசப் பற்கொதி பலமுறையும் சுகப்படும்.

கிரீத சுகந்த பற்பம்[3] தோடங்கூட்டின்னூசம்[4] அயசுகந்த கலவை[5] அவின்வைன்[6] இவைகளிற் கராம்பு ஓர் கூறாகும். கலுசிந்துக் கூட்டுக்குளிகை[7] கலுசிந்தயசீயமசுக்குளிகை[8] ஸ்கமுனிலேகியம்[9] இவைகளிற் கராம்புத்தேல் ஓர் கூறாகச் சேருகின்றது.

## பிமேந்தம். PIMENTO.

வாசம். இது மேற்கிந்துவிலும் தென்னமரிகத்தின் உஷ்டணபகுதியிலும் உண்டாகும்,

வாகடபகுதி. காய்ந்த சிறுக் காய்கள்; இவை சிறு மிளகளவு பருமையாய்க் கறுத்து அழுத்தமற்று, பற்களைத் தாங்கி, உள்ளே மஞ்சள் நிறமாய்க் கருமையான இரண்டு கொட்டைகளை அடக்கியிருக்கும். தன் மணமுஞ்சுவையுமுடையது, சுகந்தமுங் கார்ப்புங்கொண்டது. இவைகளின் சத்து ஓர் அத்திரஎண்ணெய்[10]யில் இருக்கும்.

தன்மைகள். சுகந்த ஸ்திமுலம்[11], காமினதி[12].

உபயோகம். மற்று மருந்துகளுக்குச் சுகந்த கூட்டாவதே இதின் பிரதான பிரயோகமாயினும் இதின் கஷாயம் அல்லது அத்திரஎண்ணெய் அசத்துவகுன்ம[13]த்துக்கும் இரைப்பையழற்சி[14]க்கும் விசேஷமாய்க் கருப்பிணிகளின் வாந்திக்கும் உவப்பாகும்.

ரசிதங்கள். பிமேந்ததேல். Oil of Pimento. இது காய்களிலிருந்து திஸ்திலித்தெடுக்கப்படுவது. புதிதாயிருக்கையில் நிறமற்றது; அல்லது சொற்பஞ் சிவப்பு. காலஞ்செல்லக் கபிலநிற[15]மாகும். பிமெந்தத்தின் மணம் சுவையுடையது. தண்ணீரிற் தாழும்.

தேயம். ஒரு துளி முதல் ஐந்து துளி கொடுக்கலாம்.

பிமேந்த நீர். Pimento Water. கொள். இடித்த பிமெந்தம், பதினொரு அன்சு. தண்ணீர் இரண்டு கலன். திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. மற்று மருந்துகளுக்கு இது நல்ல அனுபானம்.

ரம்னஸ் சிறாப[16]திற் பிமெந்தம் ஓர்கூறுகின்றது.

---

1 Distil. 2 Emulsion. 3 Aromatic powder of Chalk. 4 Compound Infusion of Orange. 5 Aromatic mixture of Iron. 6 Wine of opium. 7 Compound pill of Colocynth. 8 Colocynth and Hyoscyamus pill. 9 Confection of Scammony. 10 Volatile oil. 11 Stimulant. 12 Carminative. 13 Atonic Dyspepsia. 14 Gastric Irritation. 15 Brown. 16 Syrup of Rhamnus.

Digitized By Roja Muthiah Research Library

அவாகடச் சரக்குகள். Non-Officinal.

வெள்ளைக் கோய்யா மரம். White Guava Tree. இதின் பழம் சித்திப்பானது. இதின் பட்டை, விசேஷமாய் வேர்ப்பட்டை துவரானது. வேற்சு வைத்தியர் குழந்தைகளின் காலிக[1] கழிச்சலுக்கு இதைக் கொடுத்து மெத்த அனுகூலமடைந்தார். அவர் வேர்ப்பட்டையில் அரை அன்சுக்கு ஆறு அன்சு தண்ணீர் வீதமாக விட்டு மூன்று அன்சாய் வருந்தவையும் அவித்து, அதில் அரை அன்சு ஒரு அன்சு தேயமாக நாள் மூன்று நாலு முறை கொடுத்தார். பிள்ளைகளின் அபானப்பிதுக்கத்[2]துக்கு இடுவதற்கும் இக்கஷாயம் நயந்ததென்று அவர் கண்டார். இந்தப் பட்டையின் கயர்த்தன்மையைப் பற்றிப் பராம், லூனன், ரைத்தர், ஒபிளேற் காசுவீல்டு முதலிய பண்டிதர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சிவப்புக் கோய்யா மரம். Red Guava Tree. இதின் பட்டைக்கும் துவர்த்தன்மை இருந்தாலும் இது அவ்வளவாய் வழங்கப்படவில்லை. மோரீசு தீவின் மாரக[3] வாந்திபேதியில், சிவப்புக்கொய்யா இலைத் திகாக்தம், சத்தி கழிச்சலைத் தடுப்பதற்குப் பெரும்பாலும் வழங்கப்பட்டதென்று போதன் என்பவர் சொல்லியிருக்கிறார்.

நாகம். Syzigium Jambolanum. இது இந்துவின் பல பகுதிகளில் உண்டாகும். இதின் பட்டைக்குத் துவர்த்தன்மை உண்டு. வங்காளத்திலே காலிககழிச்சலுக்கு இதின் திகாக்தம் அதிகமாய் வழங்கப்படும். இதின்பேரில் ராமசேண்போசு வைத்தியர் சொன்னதற்குச் சார்பாக பொகானத்போசு வைத்தியரும் சாட்சியிட்டிருக்கிறார். இதின் கனிந்த பழச்சாற்றிற் செய்த சிறாபம்[4] நல்ல ஸ்தோமாகி[5]யென்றும் காலிக கழிச்சலுக்குத் திறமான துவராகச் சேஷ்டிக்கிறதென்றும், இவர் சாட்சியிட்டிருக்கிறார்.

## கிறனுதியங்கள்.

## GRANATEAE.

### மாதளைச்செடி. POMEGRANATE TREE.

வாசம். இது வட ஆபிரிகத்திலும் மேற்காசியத்தில் மேற்கு இமயமலை வரையிலும் இருக்கும்.

வாகடபகுதி. 1 வேர்ப்பட்டை. இது வெளியில் நரை மஞ்சள் நிறமும் உள்ளே மஞ்சள் நிறமுமான துண்டுகள் அல்லது சுருள்களாக வரும், லேசாக ஒடியும். சொற்ப மணமும் துவரான சொற்ப கைப்புச்சுவையுமுடையது. 2 பழத்தின் காய்ந்த கோது. இது வன்மையும் அழுத்தமும்

1 Chronic. 2 Prolapsus anus. 3 Epidemic. 4 Syrup. 5 Stomachic.

Digitized By Roja Muthiah Research Library

ஒரு லீன்[1]வரை தடிப்புமாய்ப் பல வடிவான குடைந்த துண்டுகளாக வரும். வெளியிற் செங்கபில நிறமும் உள்ளே மஞ்சள்நிறமுமுடையது; மணமற்றது; கைப்பான துவர்ச்சுவையுள்ளது. இக் கோதிலும் வேர்ப்பட்டையிலும் தனின் அதிகமாய் அடங்கியிருக்கும்.

தன்மை. வேர்ப்பட்டை அந்தெல்மிந்தி[2]. பழத்தோல் துவர்.

உபயோகம். தீனியப் புழு[3]வைக் கொல்லுவதற்கு வேர்ப்பட்டைமெத்த நயந்தது. ஆயினும் இதற்கு விரேசனத் தன்மையில்லாதபடியால் செத்த புழுவைக் கழிப்பதற்கு ஓர் விரேசனந் தேவை. தியறீயத்[4]துக்கும் விசேஷமாய் இந்துக்களுக்குண்டாகுந் தியறீயத்துக்கும் திசந்தெரி[5]யின் பிற்கூற்றுக்கும் துவர் மருந்து தேவையான மற்றும்நோய்களுக்கும் பழத்தோல் கொடுத்து நயங்கண்டது.

ரசிதங்கள். மாதளைவேர்த் திகாக்தம். Decoction of Pomegranate Root. கொள். பச்சையான மாதளைவேர்ப்பட்டை, நறுக்கி, இரண்டு அன்சு; தண்ணீர் ஒருநாழி. அரைநாழியாகுந்தனையுங் காய்ச்சிச் சீலையில் வடித்து தேவையானால் வடியின்மேலுள்ள சக்கையிலுந் தண்ணீர் வார்த்து வடித்தநீரை அரைநாழியாக்கிக்கொள்ளவும்.

தேயம். அந்தெல்மிந்தியாக இரண்டு அன்சு; வெறு வயிற்றிற் குடிக்க வேணும், இந்த அளவாக அரைமணிக்கொருமுறையாய் ஆறுமுறை குடித்தபின் ஓர் விரேசனங் குடிக்கவேணும்.

*மாதளங்கோதுத் திகாக்தம். Decoction of Pomegranate Rind. கொள். காய்ந்த மாதளங்கோது இடித்து, இரண்டு அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்தில் பதினைந்து மினி நேரம் அவித்து, வடித்து, வடித்தநீர் அரைநாழியாகப் போதிய அளவு தண்ணீரை வடியிலுள்ள சக்கையின்மேல் வார்த்துக்கொள்ளவும்.

தேயம். ஒரு அன்சு முதல் ஒன்றரை அன்சு கொடுக்கலாம். கார்கில்[6]கள், புகட்டல்கள்[7] முதலியவற்றுக்கு இது நல்ல துவர்மருந்து. கராம்புமுதலிய சுகந்தங்க[8]ளைச் சேர்த்தால் நன்றாய்க் குடிக்கலாம். இந்துக்களுக்குண்டாகுங் கழிச்சலுக்கு அவினோடு கலந்துகொடுத்தால் மெத்த உவப்பாகும்.(36)

## குகேபிதாசியங்கள்.

## CUCURBITACEAE.

### கலுசிந்து. COLOCYNTH PLANT.

வாசம். இது தென் யுரோபத்திலும், வட ஆபிரிகம், அரபி, இந்துவின் நாடுகளிலும்உண்டாகும்.

வாகடபகுதி. தோலுரித்துக் கொட்டையெடுத்துக் காய்ந்த பழச்சதை. இது லேசு, சுபஞ்சு போன்றது, வெண்மஞ்சள் நிறமுங் கடுங் கைப்புமா

---

1 Line. 2 Anthelmintic. 3 Taenia. 4 Diarrhoea, கழிச்சல். 5 Dysentery. 6 Gargle. 7 Injection. 8 Aromatic.

(36) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

கும். கலுசிந்தின்[1] என்ற கைப்பான ராளம்[2] போன்ற பதார்த்தமே இதின் சத்து.

தன்மை. இது ஓர் நீரடிக்கும் பேதி.

உபயோகம். மல வரட்சிக்கும், ஈரல், குடல்களின் கஞ்செஸ்தத்[3]துக்கும், நீர்க்கோவை நோய்களுக்கும் விரேசனம் வேண்டியதான மற்று நோய்களுக்கும் இது பக்குவமான மருந்து. ஆயினும் இதைத் தனியே கொடுப்பதரிது. பின்வருங் கூட்டுகளில் ஒன்றே உத்தமம்.

தேயம். இரண்டு முதல் எட்டுக்கிறேன்.

ரசிதங்கள். கலுசிந்துக்கூட்டுடைசிறத்து. Compound Extract of Colocynth. கொள். கலுசிந்துச் சதை, ஆறு அன்சு; சொகோத்திரசகை யெசிருத்து[4] பன்னிரண்டு அன்சு; ஸ்கமுனி ராளம்[5] நாலு அன்சு; வன்சபு[6] மாவாக, மூன்று அன்சு; ஏலம் மாவாக ஒரு அன்சு; புரூவுசீது[7] ஒரு கலன். கலுசிந்தைப் புரூவுசீதில் நாலுநாள் ஊறவைத்துப் பிழிந்து, சீதைத் திஸ்திலித்தகற்றினபின் சகையெசிருத்து, சபு, ஸ்கமுனி மூன்றையுஞ்சேர்த்துக் குளிகைப்பதமாய் வரத்தக்கதாய் நீரமத்தி[8]கத்தில் வறட்டிக் கடைசியாய் ஏலத்தைச் சேர்க்கவும்.(37)

தேயம். மூன்றுமுதற் பத்துக்கிறேன்.

கலுசிந்துக் கூட்டுக்குளிகை. Compound Pill of Colocynth. கொள். கலுசிந்துச்சதை, தூளாக ஒரு அன்சு; பபாடுசகை[9], தூளாக இரண்டு அன்சு; ஸ்கமுனி[10] தூளாக இரண்டு அன்சு; பதாசிசல்வசு[11] தூளாக கால் அன்சு; கராம்புத் தேல், இரண்டு திரும்; தண்ணீர் போதியது. தூள்கள் எல்லாவற்றையுங் கலந்து, கராம்புத்தேலையுஞ் சேர்த்து, தண்ணீர் விட்டரைத்துத் திரளையாக்கிக்கொள்ளவும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன். இது விக்கினமில்லாத சுள்ளாப்பான பேதி.

கலுசிந்தயசீயமசுக்குளிகை. Pill of Colocynth and Hyoscyamus. கொள். கலுசிந்துக் கூட்டுக்குளிகை, இரண்டு அன்சு; அயசீயமஸ் எசிருத்து[12] ஒரு அன்சு. சரியாய்க் கலந்து திரளையாக்கிக்கொள்ளவும்.

தேயம். கலுசிந்துக் கூட்டுக்குளிகையின் பிரமாணமாய்க் கொடுக்கலாம் இதோடு சேர்ந்த அயசீயமசு இதின் அழற்சியைத் தணித்துச் சாந்தியாகும்.

## எலதீரிக்கோடி. SQUIRTING CUCUMBER.

வாசம். மத்தித்தராத் தேசங்களில் உண்டாகிறது.

வாகடபகுதி. பிழிந்த பழச்சாற்றின் அடையல். இதுவே எலதீரியம்[13] அல்லது எலதீரிய வெசிருத்து எனப்படும். இது ஏறக்குறைய ஒரு லீன்[14] தடிப்பும் பச்சை நரைநிறமும், கார்ப்பும் கைப்புமுடையதாய் நொருங்கக்கூடிய சற்றே வளைந்த லேசான வில்லைகளாகவரும். நொருங்கினால் நுண்ணிய மாவாகும். அமிலங்கள்[15]பட நுரைக்காது. கொதிக்குந் திட்ட

1 Colocynthin. 2 Resin. 3 Congestion. 4 Extract of Socotrine Aloes. 5 Resin of Scammony. 6 Hard Soap. 7 Proof Spirit. 8 Water bath. 9 Barbadoes Aloes. 10 Scammony. 11 Sulphate of Potash. 12 Extract of Hyoscyamus. 13 Elaterium. 14 Line. 15 Acid.

(37) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

ரீதில்[1] பாதியளவுக்குக் கரையும். இந்தக் கரைவைச் சாரதித்து[2] சூடான பதாசு[3]நீரோடு சேர்த்தால் ஆறும்போது நூற்றுக்கு இருபது பங்கு குறையாத அளவான எலதீரின்[4] என்னுஞ் சத்து, நிறமற்ற கிரிஸ்தல்க[5]ளாக விளையும். எலதீரின் நுண்ணிய வரியுள்ள பளபளப்பான பிரிச[6]கிரிஸ்தல்களாக எடுக்கப்படும். இவை ரம்ப[7] அடியுள்ளவைகள். பரமாணுவில் நிறக்கும், மணமில்லை, கைப்பான காரச் சுவையுண்டு. மேலும் இதில் ஓர் ராளக[8]மும் கைப்பான ஓர் சத்தும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது வீருன நீரடிக்கும் பேதி.

உபயோகம். நீர்க்கோவை[9] நோய்களுக்கு விசேஷமாய் இதய வியாதியோடு தொடுத்ததாயுண்டாகும் நீர்க்கோவைக்கு இது நயந்த மருந்து. அங்கவிகிர்தியிலும்[10] மூளையின் மற்றுநோய்களிலும் இது குடலைச் சுத்திசெய்வதினுல் மாத்திரமல்ல இரத்தோட்டத்தை அதிகரிக்கப் பண்ணுவதினுலும் உபயோகமாகும்.

தேயம். மாகாணிக் கிறேன் முதல் அரைக்கிறேன் வரைக்கும், பேதி காணுந்தனையும் நாலு மணிக்கொருமுறை கொடுக்கலாம். இதாலுண்டாகக்கூடிய முறுக்கு உவட்டைத் தடுப்பதற்குக் கொஞ்ச மிளகாய்த்தூளாவது அயசீயமசெசிருத்[11]தாவது சேர்த்துக் கொடுக்கலாம். எலதீரினின் தேயம் மாகாணிக்கிறேன்; திட்டசீதிற் கரைத்துக் கொடுக்கப்படும்.

## அவாகடச்சரக்குகள். Non-officinal.

காட்டுத்துமட்டி. Cucumis trigonus. மலைத்துமட்டி. C. Hardwickii. இவைகளுட் காட்டுத்துமட்டி மேற் கங்கையின் சமபூமியிலுண்டாகும். மற்றது மேற்கு இமயத்தின் அடிவாரத்திலுண்டாகும். வாகடக் கலுசிந்து[12]க்குரிய விரேசனத்தன்மை இவைக்குள்ளதாம். ஆயினும் இவ்வெண்ணம் சந்தேகமென்று கிப்சன் வைத்தியர் சொல்லுகிருர். இதை நிதானிப்பதற்குச் சோதனைகள் வேண்டும். இந்தப் பூண்டுகளின் வேர்த் திகாக்தம்[13] விரேசனியாக வழங்கப்படுகிறதென்று நூற்றன் என்பவர் கூறுகிருர். பழத்தின் களியைப்பார்க்க இவ் வேரின்செயல் லகுவென்றும் அழற்சி குறைவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கோம்புப் புடல். Trichosanthes nervifolia. T. dioica. இது தீனுக்காக இந்து அடங்கலுஞ் செய்கைபண்ணப்படும் ஓர் பூண்டு. இதின் காயிற் செய்த அலக்காலெசிருத்து[14] நல்ல பேதியென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை மூன்று கிறேன் முதல் ஐந்து கிறேன் பிரமாணமாக மூன்று மணிக்கொருமுறை பேதியாகுந்தனையும் கொடுக்கவேணும். இதின் வேர்க்கிழங்கு எலதீரி[15]யத்தைப் போல நீரடிக்கும் பேதியாய்ச் சேஷ்டிக்குமென்றும் அதற்குத் பதிலாக இதை வழங்கலாமென்றும் களிலல்டி என்பவர்சொல்லுகிருர். நீடித்த நோயால் வருந்தின உடம்புக்கு இந்தப் பூண்டு, பெலன்கொடுக்கக் கூடிய சுத்தக் கைப்பு என்றும், அவர் கூறுகிருர். பவுசெர் வைத்தியர் இதைத் தாமே சோதித்துப்பார்த்து இது ஓர் சுரக்கினி[16]யென்றும், தொணிகம்[17] என்றும் கூறுகிருர். முற்காலத்து இந்துவைத்தியர் குஷ்டரோக[18] பரிகரிப்புக்கு இதில் மெத்த நம்பிக்கைவைத்தார்கள்.

---

1 Rectified Spirit. 2 Concentrate. 3 Potash. 4 Elaterin. 5 Crystal. 6 Prism. 7 Rhombic. 8 Resin. 9 Dropsy. 10 Apoplexy. 11 Extract Hyoscyamus. 12 Colocynth. 13 Decoction. 14 Alcoholic Extract. 15 Elaterium. 16 Febrifuge. 17 Tonic, தசதி. 18 Leprosy.



Digitized By Roja Muthiah Research Library

கடாத்திரிக்குசாந்திஸ்கோடி. Trichosanthes Cordata. கோரட்டை. T. Palmata. இவைகளுள் முந்தினதின் கிழங்கை கிழக்கங்காளத்தார் நல்ல தொணிகம் என்று பாராட்டுவார்கள். களும்பு[1]க்குப் பதிலாக இதையே வழங்குவார்கள். கோரட்டைப் பழத்தோலிற் கைச்சற்சுவையிருப்பதால் அதிலே தொணிக அல்லது விரேசனத்தன்மைகள் உண்டோவென்று நிதானிப்பதற்கு ஒஷானசியர் அதிலே சில சோதனைகள் செய்தார். ஆயினும் நாள் மூன்றுமுறையாய் மூன்று கிறேன் கொடுத்தபோதும் யாதொரு செயலுந் தோன்றவில்லை. இதின் பழம் நஞ்சென்றும் காகங்களைக் கொல்லுவதற்கு வழங்கப்படுகின்றதென்றும் ரக்சுபேகர் சொல்லுகிறார்.

ஆகாசகருடன். Bryonia Epigoea. இப்பூண்டு இந்துவின் பல பகுதிகளிலுமுள்ளது. இதின் பெரிய கிழங்குகள் பச்சையாயிருக்கையிற் தேணிப்புக்[4] கிழங்கைப்போலிருக்கும். ஆயினும் இவைகள் அதிகம் கூரானவைகள். மிதந்த கூளையமான வெண்மைப் புருவங்கள் இவைக்குண்டு. சுவை கைப்பும் வழுவழுப்பும் சொற்ப புளிப்புமுள்ளது. சுதேசிகள் இதை உச்சிதமான அல்திறவதொணிக[5]மாக மதித்துச் சிவ்விசு[6] நோய்க்கும் திசந்தெரியின் பிற்கூற்றுக்குங் கொடுப்பார்கள். தெக்கண தேசத்தார் இதைப் பாம்புகடிக்கு நல்ல உள்மருந்தென்றும் வெளிமருந்தென்றும் மதிக்கிறார்கள். மைசூர் தேசத்தாரும் அவ்வாறு வழங்குகின்றார்களென்று பிதிபண்டிதர் 1861 ௵ வாறிங்கு பண்டிதருக்குக் காட்டினார். ஆயினும் இப்படி நயங்கண்டதற்குச் சாட்சியில்லை. புதுச்சேரியிலிருந்த விபீனர் இதிலே கைப்பும் மஞ்சள் நிறமுமான கிரிஸ்தற் பதார்த்தமிருந்ததாகக் கண்டார். இதின் கிழங்கிலே ஆராயப்படத் தகுந்ததன்மைகள் இருக்கின்றனவென்று ஏன்ஸ்லியர் புத்தியாய்ச் சொல்லியிருக்கிறார்.

பூசணி. Cucurbita Pepo. இதின் கொட்டைகள் தீனியப் புழுவைக் கொல்ல நல்லதென்று அமரிக வைத்தியர் பலர் சாட்சியிட்டிருக்கிறார்கள். தோலுரித்த கொட்டையில் இரண்டு அன்சை இமல்ச[7]மாக்கிக் காலமே வெறுவயிற்றிற் கொடுத்து இரண்டொரு மணி நேரத்தால் ஒரு தேயம் ஆமணக்கெண்ணெய் கொடுப்பதே முறை. கொட்டையிற் பிழிந்த எண்ணெயை அரை அன்சு தேயத்தில் இரண்டு மணிநேரத்துக்கொருமுறையாக இரண்டொருமுறை கொடுத்துப் பிற்பாடு ஓர் விரேசனங் கொடுப்பதும் சரியே. குளிர்மையான தேசங்களில் உண்டாக்கப்படும் பூசணிக் கொட்டைகளைப் பார்க்க உஷ்டண தேசங்களிலுள்ள பூசணியின் கொட்டைகள் திறமாகையால் இந்துதேசத்தில் இந்த மருந்தைச சோதித்துப் பார்ப்பது நல்லது. பிரம இந்து தேசங்களில் உண்டாக்கப்படும் பேர்ப்பூசணி[8]க் கொட்டையின் அந்தெல்மிந்திவ[9]த் தன்மைக்குச் சார்பாக, ரீன் வைத்தியர் எழுதியிருக்கிறார். தேயம் அரை முதல் ஒரு அன்சு; சர்க்கரையோடாவது தேனோடாவது சேர்த்துக் கொடுக்கலாமென்று அவர் சொல்லுகிறார். தீனியப்[10]புழுவுக்கே இது விசேஷமாய் நல்லதாகக் காணப்பட்டது. இதைக் கொடுத்துப் பத்துப்பன்னிரண்டு மணியின்பின் இப்புழு பெரும்பாலுங் கழலும்.

பேய்ப்பீர்க்கம். Luffa amara. இச்கொடியின் எப்பகுதியும் மிகக் கைப்பு. இது நல்ல கைப்பான தொணிகம்[11]என்றும், இதின் பச்சைத் தாளை அரைநாழி கொதிநீருக்கு இரண்டு திரும்வீதமாயிட்டு ஊறிய இன்

1 Calumba. 2 Turnip. 3 Alterative Tonic. 4 Syphilis. 5 Dysentery. 6 Crystal. 7 Emulsion, 8 Cucurbita Maxima 9 Anthelmintic. 10 Taenia. 11 Tonic.

Digitized By Roja Muthiah Research Library

லூசத்தை[1] இரண்டொரு அன்சு தேயமாக நாள் மூன்று நாலுமுறை கொடுக்க நல்ல அமூரிதி[2]யாகுமென்று கிறீன் வைத்தியர் குறித்திருக்கிறார். நீதுரைரு குலோறிக்கமில[3]த்தோடு இதை அவர் கலந்துகொடுத்து நச்சுவாயுகாரணமாகப் பிளிகை[4] ஈரல்[5] பருத்துண்டாகும் நீர்க்கோவைக்கு இது உபயோகமானதென்று கண்டார். இதின் பழத்துக்குக் கடுமையான விரேசன வமனித்தன்மைகள் உண்டென்று ரக்ஸ்பேகர் சொல்லியும் இவர் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. பிளிகை நோய்களுக்கும் விசேஷமாய் நச்சுக்காற்றினால் அந்த உறுப்புப் பருத்தலுக்கும் இது நல்ல மருந்தென்று திகன்சன் புகழுகிறார். இதாற் சுகப்பட்ட பேர்களையுங் குறித்திருக்கிறார். குழந்தைகளுக்கு மேற்சொல்லிய இன்லூசத்தை ஒரு திறும் தேயமாக நாள்மூன்றுநாலுமுறை கொடுக்கும்படி கற்பிக்கிறார்.

## பபயாசியங்கள்.

## PAPAYACEAE.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**பப்பளிச்செடி.** Carica Papaya. Papaw tree. இது பூமியின் மேற்குப் பாதிக்குரிய செடியாயினும் இப்போ பெயர்க்கப்பட்டு இந்துவிலும் மற்றும் உஷ்டண தேசங்களிலும் உண்டாகிறது. இதின் காயிலுள்ள பாலுக்கு அந்தெல்மிந்தித்[6] தன்மையுண்டென்று பதினேழாம் நூற்றாண்டில் ஞென்றிசு என்பவர் முதன்முதற் கவனித்தார். இந்துவில் 1810 ம் ஆண்டு விளெமிங்குபண்டிதர் இதைக் கவனித்து இத்தன்மைகளுக்குச் சார்பாகக் கொசீனி என்பவர் கருத்தாய் எழுதியிருப்பவைகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். மேலும் இதற்கு உறுதியான அத்தாட்சி இச்செலவு போதன் என்பவராற் காட்டப்பட்டது. இவைகளால் இதின் அந்தெல்மிந்தித்தன்மை உண்மையென்று சரியாய் முடிவுகட்டலாம். இந்த மருந்தை வழங்குபவர்கள் மொறீசிற் காலஞ்சென்ற லெமாச்சன் வைத்தியர் பிரயோகித்த முறையைக் கைக்கொள்வது நல்லது. அம்முறையாவது; கொள்; பப்பளப்பால், தேன்,வகைக்கு, அரை அன்சு; திறமாய்க் கலந்து பிறகு கொதிவெந்நீர் ஒன்றரை இரண்டு அன்சு வரைக்குப் படிப்படியாய்ச் சேர்த்து சூடு குறைந்தபின் ஒருமிக்கக் குடித்து, இரண்டு மணிநேரத்தின்பின் ஒரு தேயம் ஆமணக்கெண்ணெயோடு போதிய எலுமிச்சஞ்சாறுவது, வின்னுரியாவது சேர்த்துக் குடிக்கவும். தேவையாகில் இப்படி இரண்டு நாள் அடுத்துக் குடிக்கலாம். இது வளர்ந்தோர்க்குப் பிரமாணம். ஏழுவயசுக்கும் பத்துவயசுக்குமிடையான பிள்ளைகளுக்கு இதில் அரைவாசியும், மூன்று வயசுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இதில் மூன்றத்தொரு பங்குங் கொடுக்கலாம். இதால் வயிற்று முறுக்குண்டானால் சர்க்கரை சேர்த்துக்குடுலுட் புகட்டத் தணியும். மேலே சொன்ன தேயம் சரியென்றெடுத்தால் பாலை அந்தெல்மிந்தியாக இருபது துளிமுதல் அறுபது துளி தேயத்தில் ஓஷானசியர் கொடுத்து யாதொரு பலனுங் காணாததற்கு நியாயம் அவர்

---

1 Infusion. 2 Diuretic. 3 Nitro-hydrochloric acid. 4 Spleen. 5 Liver.
6 Anthelmintic, கிருமிகொல்லி.

Digitized By Roja Muthiah Research Library

தைப் போதியளவாய்க் கொடாததே. கீரைப் பாம்பை விழுத்துவதற்கு இது பிரதானமாய் வாய்க்கும். நீனியப்[1]புழுவிலோ இது பிடிப்பதரிதாம். பாலுக்கன்றிக் கொட்டைகளுக்கும் அந்தெல்மிந்தித்தன்மை உண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கடுகு ஏலங்களைப் போல இதுவும் கார்ப்பான சுவையுள்ளது. ஆயினும் இதின் சித்தி நிச்சயமல்ல. இக்கொட்டைக்கு வீறான எம்மெனகக்குத்[2] தன்மையுண்டென்ற நம்பிக்கை தென்னிந்தியாவிலுள்ள எக்குலத்துப் பெண்களுககுள்ளும் அதிகமாயுண்டு. கெர்ப்பஸ்திரிஇதிற் கொஞ்சந் தின்றாலுங் கருவழிதல் நடக்குமென்று அவர்கள் சொல்வார்கள். இந்துதேச அறிவிப்புகள்[3]அனேகத்தில் இந்த நம்பிக்கை குறிக்கப்பட்டிருக்கின்றது. இச்செடியின் பாலைக் கருப்பைவாயிற் பூசியே கருவை அழிப்பார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. பப்பளிச்செடியின் எம்மெனகக்குத் தன்மையைப்பற்றி அத்தாட்சிகள் இன்னுந் தேவை. விறைப்பான இறைச்சியை மெதுவாக்குந் தன்மையும் பப்பளிச்சாற்றுக்கு உண்டென்று சொல்லுவார்கள். அதைக் கவனிப்பது இந்த நூலுக்கு உரியதல்ல. உகர், வைத்தர், தாவி, என்பவர்களும் இதின்பேரில் விரிவாய்ப் பேசியிருக்கிறார்கள். பின்னும் இதை ஆராய்வுசெய்வதே சரி.

## உம்பெலிவிரங்கள்.

## UMBELLIFERAE.

### கறுவிப்பூடு. CARUM CARUI. CARAWAY PLANT.

வாசம். இது யுரோப்பம் மத்திம ஆசியம் அடங்கலும் பள்ளங்கள் புற்றரவைகளில் உண்டாகும். இமயத்தின் உயர்ந்த பகுதிகளிலும் மிகுதியாய் உண்டு.

வாகடபகுதி. கொட்டை. இது பெரும்பாலும் இரண்டு பாதிகளாகப் பிளக்கும். இவைகள் இரண்டு லீன்[4] நீளமும் வளைவும் கபில[5]நிறமுமாய் இரு தலைப்பிலும் ஒடுங்கி, நீளப்பாட்டுக்கு ஓடிய வெண்மையான ஐந்து வரிகளுள்ளவைகளாயிருக்கும். நல்ல சுகந்த மணமும் கார்ப்பான சுவையுமுடையன. ஓர் அத்திர[6] எண்ணெய்யே இதின் சத்து.

தன்மைகள். ஸ்தொமாகி[7], காமினதி[8].

உபயோகங்கள். வயிற்றில் வாயுப் பொருமலுக்கும், வாயுப்பொருமல் வலிக்கும், அசத்துவ[9]குன்மத்துக்கும்[10]வயிற்றில் முறுக்கு குத்துகளுக்கும் இது நல்லது.

அவின் லேகியம்[11], மிளகுலேகியம், அவின் கூட்டுச் சூரணம், ஏலக்கூட்டிரஞ்சம்[12], நிலவாகை[13]ரஞ்சம், இவைகளில் இக்கொட்டை ஓர்கூறாகச் சேருகின்றது.

ரசிதங்கள். Preparations. கறுவித்தேல். Oil of Caraway. இது கறுவிக்கொட்டையிலிருந்து திஸ்திலிக்கப்படும்[14] எண்ணெய். இது நிறமற்

---

1 Taenia. 2 Emmenagogue. 3 Report. 4 Line. 5 Brown. 6 Volatile. 7 Stomachic. 8 Carminative. 9 Atonic 10 Dyspepsia. 11 Confection of opium. 12 Compound Tincture of Cardamom. 13 Senna. 14 Distil.

Digitized By Roja Muthiah Research Library

றதாய் அல்லது வெண்மஞ்சள் நிறமாய்ச் சுகந்த மணமும் காரமான சுவை யுமுடையதாயிருக்கும்.

தேயம். இரண்டு முதல் ஆறு துளியைச் சர்க்கரையில் விட்டாவது இமல்சமாக்கியாவது[1] கொடுக்கலாம். இது ஸகமுனிலேகியத்திலும்[2] பபா டேசைக்[3] குளிகையிலுஞ் சேருகின்றது.

கறுவிநீர். Caraway Water. கொள். இடித்த கறுவிக்கொட்டை ஒ ருஇறாத்தல்; தண்ணீர் இரண்டு கலன். திஸ்திலித்து ஒருகலன் நீர் எடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. இது நயந்த காமினதி[4]. விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கு உவந்தது. லவணம்[5] விரேசனங்கள் முதலிய வற்றுக்கு இதுநல்ல அனுபானம்.

சீமைச் சீரகம். Carum Nigrum. இதின் கொட்டை குனூரிலிரு ந்து இந்துவுக்குக் கொண்டுவரப்பட்டுக் காமினதியாக வழங்கப்படுகின்ற து. இது கறுவிக்கொட்டைக்கு வித்தியாசமானதாகத் தோற்றவில்லை.

## *ஓமம். CARUM AJOWAN. OMUM PLANT.

வாசம். இது உஷ்டண ஆபிரிகத்தில் ஆதியாயுண்டானதுபோல. இந் துவில் அதிகமாய்ச் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. கொட்டை. இது கால் இஞ்சு நீளமுள்ளதும் ஒடுங்கிய தும் இரண்டுதலைப்பிலும் கூருமான நுண்ணிய உம்பலீர்க்[6] கொட்டையாக வரும். லென்சாற்[7] பார்த்தால் நுண்ணிய புடைப்புகள் பரவியிருக்கிறதாக க்காணும். மெத்தச் சுகந்தமானது. கசக்கும்போது வீறுன மணம் வீசும். சொற்ப கைப்பும் கடுங் கார்ப்புமான சுவையையுடையது. இதின் சத்து இதின் அத்திர[8]தேலமே.

தன்மைகள். நல்ல ஸ்திமுலம்[9], காமினதி, அந்திஸ்பஸ்[10]. (38)

உபயோகங்கள். வாயுப்பொருமல், வாயுக்குத்து, அசத்துவகுன்மம்[11], க ழிச்சல்களுக்கு இது நல்ல மருந்து. இந்த நோய்களுக்கு மாத்திரமல்ல, வா ந்திபேதிக்கும் நல்லதென்று பேர்பெற்றது. ஆயினும் வாந்திபேதிக்கு இ தாலுண்டாகக்கூடிய நயம் மெத்தச் சொற்பம்.

ரசிதங்கள். Preparations. ஓமத்தேல். Oil of Omum. இது ஓமக் கொட்டையிலிருந்து திஸ்திலிக்கப்படும் எண்ணெய். புதிதாயிருக்கையில் நிறமில்லை; சுறுக்குச் சற்றே மஞ்சள்நிறமடையும். கொட்டையின் மண மும் உறைப்பும் கார்ப்புமான சுவையும் இதற்கும் உண்டு. இதின் விசே ஷகிறாவிதம்[12] எறக்குறைய 0.880.

தேயம். ஒரு துளி முதல் மூன்று துளியைச் சர்க்கரையில் விட்டாவ து இமல்சமாக்கியாவது கொடுக்கலாம்.

ஓமநீர். Omum Water. கொள். இடித்த ஓமக்கொட்டை இருபது அன்சு; தண்ணீர் இரண்டுகலன். திஸ்திலித்து[13]ஒரு கலன் சேர்க்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு. இது நல்ல காமினதி. ஆ மணக்கெண்ணெய் முதலிய அரோசியமான மருந்துகளின் சுவையை மறை ப்பதற்கும் அவைகளால் உண்டாகும் உவட்டு முறுக்கைத் தணிப்பதற்கும் இது நல்லது.

---

1 Emulsion. 2 Confection of Scammony. 3 Barbadoes Aloes. 4 Carminative. வாயுக்கினி. 5 Saline. 6 Umbelliferous, குடைபோன்ற. 7 Lens. 8 Volatile. 9 Stimulant. 10 Antispasmodic. 11 Atonic Dyspepsia. 12 Specific Gravity. 13 Distil.

Digitized By Roja Muthiah Research Library

தெக்கணம் சிந்து முதலிய பகுதிகளில் ஓமக்காவுல்[1] என்ற ஓர் கிரிஸ்தற்[2] பதார்த்தம் விலைப்படும். இச்செலவிலிறந்த ஸ்தக்கு வைத்தியர் இதை முதற் கவனித்து, மத்திய இந்துவில் உசீனிலும் மற்றும் இடங்களிலும் ஓமக்கொட்டையிலிருந்து இது செய்யப்படுகிறதென்றும் திஸ்திலித்த ஓமநீரில் இது வலிய உண்டாகிறதென்றுஞ் சொல்லுகிறார். ஸ்தெனோசு வைத்தியர் இதைச் சோதித்து இது கா$_{44}$ ஜ$_{34}$ அ$_{10}$ என்ற சின்னத்தை உடைய ஸ்தியரப்தின்[3]என்றும், தைம்[4] மசுரம்[5] என்ற பூண்டுகளின் தேலத்தின் மணத்தை ஒத்த ஓர்வகைக் கார்ப்பான மணத்தை யுடையதாய்தண்ணீரிலும் கனத்ததாய் 127 பாகை சூட்டில் உருகும் என்றுங் கண்டார்.

## அனீசு. ANISE.

இப்பூண்டு தென் யுரோபம் லிவாந்துக்கரை முதலிய இடங்களுக்கு ஆதியாயுரியது. இதின் கொட்டையிலிருந்து திஸ்திலித்தெடுக்கும் அத்திரஎண்ணெய்யின் நிமித்தமாகவே இது வாகடத்துக்குரியதாகின்றது. இந்த எண்ணெய், தன்மைகள், லட்சணங்கள் உபயோகங்களில் அண்ணூசுப்பூவிலிருந்து திஸ்திலித்தெடுக்கும் எண்ணெய்யைப் போன்றது.

**ரசிதம்.** Preparation. அனீசேசென். Essence of Anise. கொள். அனீசுத்தேல், ஒரு அன்சு; திட்டசீது[6] நாலு அன்சு. கல.

**தேயம்.** பத்து முதல் இருபதுதுளி. இது நல்ல காமினதி[7]. தபுளின் சிகிச்சாவாகடத்திற்[8]சொல்லிய அனீசெசெசினிலும் இதுஇருமடங்குவீறுள்ளது.

## பெருஞ்சீரகம். FOENICULUM VULGARE. FENNEL.

**வாசம்.** இது தென் யுரோபத்திலுள்ளது. பெரும்பாலுஞ் செய்கைபண்ணப்படும்.

**வாகடபகுதி.** கொட்டை. இது ஏறக்குறைய மூன்று லீன் நீளமும், ஒரு லீன் அகலமும், பிறை வடிவுமாய்ச் சற்றே வளைந்து சொண்டுள்ளதாகஇருக்கும். வெண் கபிலநிறமாய் நீளப்பாட்டில் எட்டுப் புருவங்களுள்ளது. பக்கப் புருவங்கள் இரண்டும் இரணையானவைகள். சுகந்த மணமும் சுவையுமுள்ளது. இதின் சத்து இதின் அத்திர[9] எண்ணெய்யில் இருக்கும்.

**தன்மைகள்.** ஸ்தொமாகி[10], காமினதி.

**உபயோகங்கள்.** வயிற்றில் வாயுப்பொருமலுக்கும் வாயுப்பொருமல் வலிக்கும் அசத்துவகுன்மத்துக்கும்[11] வயிற்றில் முறுக்கு குத்துகளுக்கும் இது நல்லது.

**ரசிதம்.** Preparation. பெருஞ்சீரக நீர். Fennel Water. கொள். பெருஞ் சீரகம் இடித்து, ஒரு இருத்தல்; தண்ணீர் இரண்டு கலன். திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும்.

---

1 Ajavain-ka-Phul. 2 Crystal. 3 Stearopten. 4 Thyme. 5 Marjorum. 6 Rectified Spirit. 7 Carminative. 8 Dublin Pharmacopœa. 9 Volatile. 10 Stomachic. 11 Atonic Dyspepsia.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒன்று முதல் மூன்று அன்சு. இது நல்ல காமினதி, ஸ்தேசமாகி. பிரதானமாய் மற்றும் மருந்துகளுக்கு இது அனுபானமாக வழங்கப்படும்.

யுரோப்பப் பெருஞ்சீரகத்தின் தன்மை லட்சணங்கள் எல்லாம் இந்துவிலுள்ள பெருஞ்சீரகத்துக்கும் உண்டு.

## அணீதம். சதகுப்பி.
## ANETHUM GRAVEOLENS. COMMON DILL.

வாசம். இது தென் யுரோப்பத்திலுள்ளது. இங்கிலந்துவிலும் இந்துவிலுஞ் செய்கைபண்ணப்படும்;

வாகடபகுதி. அணீதக்கொட்டை. இது முட்டை வடிவும் தட்டையும் எறக்குறைய ஒன்றரை லீன்[1] நீளமுமானது. விளிம்பு வெளிறின சவ்வுபோலிருக்கும். சுகந்த மணமும் கார்ப்புமான சற்றே கைச்சற்சுவையுமுள்ளது. இதின் சத்து இதின் அத்திர[2]வெண்ணெய்யே.

தன்மை. ஸ்தோமாகி. காமினதி.

உபயோகம். வயிற்றில் வாயுப்பொருமலுக்கும் வாயுப்பொருமல் வலிக்கும் அசத்துவஜுன்மத்துக்கும் வயிற்றில் முறுக்கு குத்துகளுக்கும் இது நல்லது. ஆயினும் இது கறுவியிலும் இதமான சுவையும் சித்தியான செயலுமுடையது.

ரசிதங்கள். அணீதத்தேல் Oleum Anethi. இது அணீதக்கொட்டையிலிருந்து திஸ்திலித்[3]தெடுக்கும் எண்ணெய், இது வெளிறின மஞ்சள்நிறமும் காரமான இனிய சுவையுமுடையது.

தேயம். இரண்டு முதல் ஐந்து துளியைச் சர்க்கரையில் விட்டாகது இமல்சு[4]மாக்கியாவதுகொடுக்கலாம்.

அணீதநீர். Aqua Anethi. கொள். அணீதக்கொட்டை. இடித்தது ஒரு இருத்தல்; தண்ணீர் இரண்டு கலன்[5]. திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும்.

தேயம். இரண்டு திராம் முதல் ஒரு அன்சு. கூடவுங் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு வாய்ப்பொருமல் முதலியவற்றைத் தணிப்பதற்கு இது உத்தமமான வாயுக்கினி.

சோயிக்கீரை. Anethum Sowa. சுகந்தமான இதின் பழத்துக்காக இது இந்துவின் பல பகுதிகளிற் செய்கைபண்ணப்படும். கடைகளில் இதைச் சோயி என்று சொல்லி விற்பார்கள். அணீதக் கொட்டையில்நின்று பகுத்தறிதற்குரிய லட்சணங்கள் ஒன்றும் இதற்கில்லை. யுரோப அணீதத்துக்குரிய அவுஷத தன்மைகள் இந்துவிலுண்டான இப்பூண்டுக்கு முண்டு. இதை அதற்குப் பதிலாக வழங்கலாம்.

## கொத்தமல்லி. மல்லி. CORIANDER.

வாசம். யுரோபம்; இந்துவிலுஞ் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. காய்ந்த கொட்டை. இது உண்டை வடிவும் வெண் மிளகளவு பருமையுங் கொண்டது, மூக்குள்ளது, நுண்ணிய புருவங்கள் உ

1 Line. 2 Volatile. 3 Distil. 4 Emulsion. 5 Gallon.

Digitized By Roja Muthiah Research Library

டையது, மஞ்சட் கபிலநிறமுள்ளது, நல்ல சுகந்த வாசனையுஞ் சுவையுமு டையது. இதின் சத்து அதின் அத்திர[1]வெண்ணெய்யில் இருக்கும்.

**தன்மை உபயோகம்.** கருவி[2]யைப் போலவே. இது நிலவாகைலேகி யம்[3], ஜென்சன்மிஸ்துர்[4], வரியாத்துச்சிறுபம்[5], வரியாத்திரஞ்சம்[6], நிலவா கை ரஞ்சம், இவைகளில் ஓர் கூறாகச் சேருகின்றது.

**ரசிதம். மல்லித்தேல். Oil of Coriander.** இது கொட்டையைத் திஸ்திலித்தெடுக்கும் எண்ணெய். இது மஞ்சள் நிறமும் மல்லிக்குரிய வீ றுன மணமுமுடையது.

**தேய**ம். இரண்டு துளி முதல் ஐந்து துளியைச் சர்க்கரையில் விட்டா வது இமல்ச[7]மாக்கியாவது கொடுக்கலாம்.

இது நிலவாகைச் சிறுப[8]த்தல் ஓர் கூறாகச் சேருகின்றது.

## இங்குப்பூடு. பெருங்காயப்பூடு.

## ASAFOETIDA PLANT.

**வாசம்.** இது கிழக்குப் பார்சியம், துருக்கிஸ்தான், ஆபுகனிஸ்தான்களி லும் இமயத்தின் ஆக மேற்குப்பகுதியிலும் உண்டாகும்.

**வாகடபகுதி.** பச்சைப் பூண்டின் வேரைக் கீற வடிவதாகிய பிசினிரா ளம்[9]. இதுவே பெருங்காயம். இது கொஞ்சப் பகுதிக்கு வாலுண்டைக ள் திரண்டதாய் ஒழுங்கற்ற கட்டிகளாக வரும். கசிவாயாவது காய்வாயா வது இருக்கும். புதிதாய் வெட்டிய அல்லது முறித்த கட்டியின் நிறம் மங் கல் வெண்மையாயிருந்து படிப்படியாய்த் தாமிரச்சிவப்பாகி[10], கடைசியில் மங்கல் மஞ்சளாயாவது செங்கபில[11]மாயாவது மாறும். சுவை கைப் புங் கார்ப்புமானது, மணங் கெட்ட நாற்றம், உள்ளியைப் போல் நெடுக நாறும், திட்டசீதில்[12] ஏறக்குறைய முற்றாய்க் கரையும். இதற்குரிய மணம் இதின் அத்திரவெண்ணெய்யிலுள்ளது.

**தன்மை.** வீறுன அந்திஸ்பசி[13], ஸ்திமுலம்[14], அந்தெல்மிந்தி[15].

**உபயோகம்.** ஈளை. குக்கல். அஞ்சீனபெக்துசு[16],வாயுப்பொருமல் வலி முதலிய ஸ்பச[17]நோய்களுக்கு இதுநயந்ததாயிருப்பதுபோல இஸ்தெரி[18]க்கு ம அதைச் சார்ந்த நோய்களுக்கும் இது உவப்பான மருந்து. பிள்ளைகளு க்குண்டாகும் நுமோனி[19] புறங்கீதின்[20] பிற்கூற்றில் இதால் மெத்த நயங்கா ணும். கீரைப்பாப்பு குடலில் இருப்பதால் அனுதாபமான சிரா[21]குணங்கள் தோன்றுமாகில் இதை அந்தெல்மிந்தியாகக் கொடுக்கலாம்.

**தேயம்.** ஐந்து முதல் இருபது கிறேனைக் குளிகையாகவாவது இமலச மாகவாவது கொடுக்கலாம்.

**ரசிதங்கள். இங்கிரஞ்சம். Tincture of Asafoetida.** கொள். பெரு ங்காயம், சிறுத்துண்டுகளாக, இரண்டரை அன்சு. திட்டசீது[22], போதியது. அடைத்த பாத்திரத்தில் பெருங்காயத்தைப் பதினைந்து அன்சு சீதில் ஏழு

---

1 Volatile. 2 Carawy. 3 Confection of Senna. 4 Gentian mixture. 5 Syrup of Rhubarb. 6 Tincture of Rhubarb. 7 Emulsion. 8 Syrup of Senna. 9 Gum resin. 10 Purple. 11 Brown. 12 Rectified spirit. 13 Antispasmodic. 14 Stimulant. 15 Anthelmintic. 16 Angina pectoris. 17 Spasmodic, 18 Hysteria. 19 Pneumonia. 20 Bronchitis. 21 Nervous, 22 Rectified spirit.

Digitized By Roja Muthiah Research Library

நாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். பிறகு வடித்து அரை நாழி தேறப் போதியளவு சீனைச் சேர்த்துக்கொள்ளவும்.

தேயம். அரைத் திரும் முதல் ஒரு திரும் கொடுக்கலாம்.

இங்குக்கூட்டுந் துளிகை. Compound Pill of Asafoetida. கொள். இங்கு, கல்பனம்[1], சசம்[2] வகைக்கு இரண்டு அன்சு; இக்குப்பாணி[3] நிறையின்படி ஒரு அன்சு. எல்லாவற்றையும் நீர்மத்திச[4]த்தில் ஒருமிக்கக் காய்ச்சி எசத்துக்கொரேபதமாய் வருந்தனையுங் கலக்கிக்கொள்ளவும்.

தேயம். ஐந்து முதற் பத்துக் கிறேன். இது ஓர் நயந்த மருந்து. விசேஷமாய் இஸ்தேரிப் பெண்களுக்குண்டாகுங் குன்மத்துக்கு நல்லது.

இங்கேனீமம். Enema of Asafoetida. கொள். இங்கு முப்பது கிறேன்; தண்ணீர் நாலு அன்சு. இங்கைக் குழியம்மியில் இட்டுத் தண்ணீரைப் படிப்படியாய் விட்டு இமல்ச[5]மாசத்தக்கதாய் அரைத்துக்கொள்ளவும்.

இஸ்தேரி[6], வாயுப்பொருமல் வலி, குழந்தைகளின் வலிப்பு முதலிய நோய்களுக்கு இது நல்ல ஸ்திமுலமும்[7] அந்திஸ்பசியு[8]மாகும். பெருங்காயத்தை உண்ணக்கூடாதிருக்கும் வேளைகளில் இப்படிச் செலுத்தலாம். இளம்பிள்ளைகளுக்கு அவரவர் வயசுக்குத்தக்கதாய் இதிற் கால்வாசி அரைவாசி செலுத்தலாம்.

சகை[9] யிங்குக் குளிகையிலும் இங்கமோனரஞ்சத்திலும்[10] பெருங்காயம் ஓர் கூறுகச் சேருகின்றது.

இங்குப் பூண்டின் பிசினிராளம் மாத்திரமல்ல அதின் கனியும் பார்சியம் ஆபகனிஸ்தான் தேசங்களினின்று இந்துவுக்கு ஏற்றப்பட்டு சுதேச வைத்தியர்களால் அதிகமாய் வழங்கப்படுகின்றது. இங்குப் பூண்டின் இலைகளும் விதைகளும் சுவேதனி[11], காமினதி[12]களாக வழங்கப்படுகின்றனவென்று ஏர்வின் பண்டிதர் சொல்லுகிறூர்.

## அமுனீயகப்பூடு. கமநாயகம்.

## DOREMA AMMONIACUM. AMMONIACUM PLANT.

வாசம். இது பார்சியத்தில் உண்டாகும்.

வாகடபகுதி. பூண்டின் தாளில் வடியும் பிசினிராளம். இது வாலுண்டைகளாகவும் திரள்களாகவும் வரும். வாலுண்டைகள் இரண்டு லீன்[13] முதல் நாலு லீன் பருமையானவைகள். வெளிறின கறுவாப்போற் கபில[14]நிறமுள்ளவைகள். உடைந்தவிடத்து அழுத்தமும் மினுக்கமும் மங்கல்வெள்ளையுமாகும். வாலுண்டைகள் கூடியே கட்டியாகும். இக்கட்டிகள் குளிராயிருக்கையில் வன்மையும் நொருக்கலுமாகும். சூடுபடவோ சுறுக்கு இளகும். சொற்ப மணமுண்டு; கைப்புங் கார்ப்பும் உவட்டுமான சுவையையுடையது; தண்ணீரோடு சேர்த்து அரைக்கப் பால்போல் இமல்சமாகும். இதின் சத்து இதின் அத்திர[15]எண்ணெய்யிலும் ராளத்தி[16]லுமே இருக்கும்.

தன்மை. ஸ்திமுலம், எக்ஸ்பெச்துறம்[17].

உபயோகம். வயோதிகத்தில் உண்டாகும் கதார்க[18]ளுக்கும், ஸ்பச

---

1 Galbanum. Myrrh 3 Treacle, தெறியகம். 4 Water-bath. 5 Emulsion. 6 Hysteria. 7 Stimulant. 8 Antispasmodic 9 Aloes. 10 Tincture of Asafoetida and Ammonia. 11 Sudorific. 12 Carminative. 13 Line. 14 Brown. 15 Volatile. 16 Resin. 17 Expectorant கிசேட்கனி 18 Catarrh.



Digitized By Roja Muthiah Research Library

ஈளைக்[1]கும். விசேஷமாய் இஸ்தெரி[2]ப்பெண்களுக்குண்டாகும் ஈளைக்கும், அசத்துவ[3]வகையான மற்றுஞ் சுவாசநோய்களுக்கும் இது கைகண்ட மருந்து.

தேயம். பத்துமுதல் இருபது கிறேனைக் குளிகையாக்கியாவது இமல்ச[4]மாக்கியாவது கொடுக்கலாம்.

ரசிதங்கள். அமுனியக மிஸ்துர். Ammoniacum Mixture. கொள். அமுனியகம், பருக்கன் தூளாக, கால் அன்சு; தண்ணீர் எட்டுஅன்சு. தண்ணீரைப் படிப்படியாய் அமுனியகத்துக்கு விட்டு அக்கலவை பால்போல் வருந்தனையும் அதை அரைத்து மெல்லிய புடைவையில் வடிக்கவும்.

தேயம். நாலு திறும் முதல் ஒரு அன்சுவரைக்குக் கொடுக்கலாம். இது நயந்த எக்ஸ்பெக்துறம்[5]. விசேஷமாய் ஸ்குவி[6]லோடும் அதின் வகுப்பைச் சேர்ந்த மற்றும் மருந்துகளோடுங் கலந்து கொடுத்தால் நயமாகும்.

இரசவமுனியகபிலாஸ்தர். Plaster of ammoniacum with mercury. கொள். அமுனியகம், பன்னிரண்டு அன்சு; இரசம் மூன்று அன்சு: ஒலிவெண்ணெய்[7] ஒருதிறும்; உச்சிக்கந்திக எட்டுக் கிறேன். எண்ணெய்யைச் சூடாக்கி அத்தோடு கந்தியைப் படிப்படியாய்ச் சேர்த்து அவைகள் சேருந்தனையுங் கலக்கவும். இந்தக் கலவையோடு இரசத்தையுஞ் சேர்த்து, இரசந் தோன்றாமல் மறையுந்தனையும் அரைக்கவும். கடைசியில் அமுனியகத்தையும் உருக்கிச் சேர்த்து முழுவதையும் நன்றாய்க் கலக்கிக்கொள்ளவும்.

பொருத்துநீர்க்கோவை, காலிகயரையாப்பு[9], கழலைகள், சிவ்விசு[10]வாதம் இவற்றிற்கு இது நல்ல பற்று.

கல்பனப்பிலாஸ்தர்[11], ஸ்குவிற்கூட்டுக்குளிகை[12], இபிகாக்ஸ்குவிற்குளிகை[13] இவைகளிலும் அமுனியகஞ் சேருகின்றது.

## கல்பனப் பூடு. FERULA GALBANIFLUA. GALBANUM PLANT.

வாசம். பார்சியம்.

வாகடபகுதி. பிசினிராளம். இந்துவிலும் லிவாந்திலுமிருந்து இது இங்கிலந்துக்கு ஏற்றப்படும். இது பயறளவு பருமையான ஒழுங்கீனமான வாலுண்டைகளாக வரும். பெரும்பாலுந் திரண்டு பச்சை மஞ்சள்நிறமும் உருவொளியுமுள்ள கட்டிகளாகவிருக்கும். வீறான கெட்ட நாற்றமும் காரமான கைப்புச் சுவையுமுள்ளது. இந்த நாற்றமுஞ் சுவையும் ஓர் அத்திர வெண்ணெய்யைப்பற்றியெனலாம்.

தன்மை. ஸ்திமுலய்[14], அந்திஸ்பசி[15], எக்ஸ்பெக்துறம்.

உபயோகம். பெருங்காயத்தைப் போலவே. ஆயினும் அதைப்பார்க்க இதின் செயல் சாந்தமானது. இது பற்றாக மந்தக் கழலை[16]களுக்குங்காலிக[17]மான சுவாச நோய்களில் நெஞ்சுக்கும் ஸ்திமுலமாக இடப்படும்.

தேயம். பத்து முதல் இருபது கிறேனைக் குளிகை அல்லது இமல்சமாக்கிக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். கல்பனப்பிலாஸ்தர். Galbanum Plaster. கொள். கல்பனம் ஒரு அன்சு; அமுனியகம்[18] ஒருஅன்சு; மஞ்சள் மெழுகு ஒரு அன்சு; வங்கபற்று[19] எட்டு அன்சு. கல்பனத்தையும் அமுனியகத்தையும் ஒன்றாயுரு

---

1 Spasmodic Asthma 2 Hysteria. 3 Asthenic. 4 Emulsion 5 Expectorant. கிசேட்டனி. 6 Squill. 7 Olive oil. 8 Sublimed Sulphur. 9 Chronic bubo. 10 Syphilis. 11 Galbanum plaster. 12 Compound pill of squill. 13 Pill of Ipecac and Squill. 14 Stimulant தீவனி. 15 Antispasmodic. 16 Indolent Tumor. 17 Chronic. 18 Ammoniacum. 19 Lead plaster.

Digitized By Roja Muthiah Research Library

க்கிச் சீலையில் வடிக்கவும், அப்பால் இவைகளை முதலே ஒன்றாயுருக்கின வங்கபற்றோடும் மெழுகோடுஞ்சேர்த்து முழுவதையுந் திறமாய்க் கலக்கவும்.
இங்குக் கூட்டுக் குளிகையிலுங் கல்பனஞ் சேருகின்றது.

## கோனியப் பூடு. CONIUM. SPOTTED HEMLOCK.

வாசம். இது யுரோபத்திலும் மத்திம ஆசியத்திலும் உண்டாகும். இங்கிலந்திலும் பொதுவாயுண்டு.

வாகடபகுதி. 1 கோனிய இலைகளும் இளங் கிளைகளும். காட்டிலுள்ள இப் பூண்டுகள் காய்க்கத் துவங்கும்போது இவைகள் சேர்க்கப்பட்டுப் பத்திரமாய் உலர்த்தப்படும். பச்சை இலைகள் கவர்மேற் கவராகி கருந் தாமிரப் புள்ளிகளையுடைய அழுத்தமான காம்பிற்றோன்றியிருக்கும். காய்ந்த இலைகள் நல்ல பச்சைநிறமும் சுய மணமுமுடையவைகளா யிருக்கும். இலையைக் காரப்பதாசி[1]யோடு அரைக்கக் கோனியத்தின் மணம் பெலனாய் வீசும். 2 காய்ந்த கனி. இது அக்கம்பக்கத்திற் பதிவையுடைய, நீண்ட, ஒரு தலைப்பில் சற்றே கூரிய உண்டை. ஒவ்வொரு பாதியிலும் கருக்கையுள்ள ஐந்து புருவங்கள் ஓடியிருக்கும். இந்தக் கனியை மாவாக்கிப் பதாசிநீர்விட்டு அரைக்க, கோனிய மணம் வீறாய் வீசும். கனி இலை இரண்டினதும் சத்து இவைக்குரிய கோனியின்[2] என்ற அத்திர[3]தேல[4] அல்கலைவ[5]த்தில் அடக்கியிருக்கும்.

தன்மை. நாசதிகம்[6], அனுடைன்[7], அந்திஸ்பசி[8]. அதிதேயத்தில் நஞ்சு.

உபயோகம். இருமல்கள், சுவாசக்குழற்கிளைச் சளிச்சவ்வி[9]ன் அழற்சி, வாதம், நறல்சி[10]நோய்கள், இரைப்பைப் புண் முதலியவற்றுக்கு இது உவந்தது. கன்சர்[11]நோய்க்கு தானிக[12]மாகவும் உள்மருந்தாகவும், இதின் நயஞ் சந்தேகமானாலும் இது அதிகமாய் வழங்கப்படும். ஸ்துருமத்துக்கு[13] இது உத்தமமென்று முற்காலத்தில் பேர்பெற்றிருந்தது. ஸ்துருமம்,சிவ்லிசு[14] காதனப்புண்களின் வருத்தத்தைத் தணிப்பதற்கு கோனியவிலைப்பாப்பை நல்லது.

தேயம். பொடியாக்கிய இலையை இரண்டு கிறேன் முதல் எட்டுக்கிறேன்வரைக்குக் கொடுக்கலாம்.

இலையின் ரசிதங்கள். கோனியவேசிறத்து. Extract of Conium.

கொள். கோனியப்பூண்டின் பச்சை இலைகளும் இளந்தளிர்களும் நூற்றுப் பன்னிரண்டு இறுத்தல். குழியம்மியில் நசுக்கிச் சாற்றைப் பிழிந்து படிப்படியாய் 130 பாகை வரைக்கும் சூடாக்கிப் பச்சைநிறப் பதார்த்தத்தை வேறாக்கும்படி காரிக்கம் சீலையில் வடிக்கவும். வடித்த சாற்றிலுள்ள அல்புமின்[15] உறையத்தக்கதாக அதை 200 பாகை சூட்டுக்கு வரக் காய்ச்சி மறுபடியும் வடிக்கவும். வடித்த நீர் மெல்லிய பாணியாய் வரத்தக்கதாக அதை நீர்மத்திகத்தில் வறட்டிப் பிறகு முன் வேறாயெடுத்த பச்சைநிறப் பதார்த்தத்தைச் சேர்த்து முழுவதையும் ஓயாமற் கலக்கி அது குளிகைப்பதமாய் வருந்தனையும் 140 பாகைக்கு மேற்படாத சூட்டில் வறட்டவும்.

தேயம். இரண்டு முதல் ஆறு கிறேன். கூடவுங் கொடுக்கலாம். வெகுகாலத்துக்கு வைத்திருப்பதால் விசேஷமாய் உஷ்டண தேசங்களில் இது தன் சத்தை இழந்துவிடும்,

---

1 Caustic Potash. 2 Conein. 3 Volatile. 4 Oleaginous. 5 Alkaloid. 6 Narcotic, விசம். 7 Anodyne. 8 Antispasmodic. 9 Mucous membrane. 10 Neuralgia. 11 Cancer. 12 Local. 13 Struma. 14 Syphilis. 15 Albumen.

Digitized By Roja Muthiah Research Library

**கோனியக்கூட்டுக் குளிகை.** Compound Pill of Conium. *கொள். கோனியவெகிறுத்து, இரண்டரை அன்சு; இபிகாக்குத்[1]தூள், அரை அன்சு; இக்குப் பாணி[2] போதியது. கோனியவெகிறுத்தையும் இபிகாக்கையுங் கலந்து குளிகைத் திரளையாகப் போதியளவாய் இக்குப்பாணி சேர்க்கவும்.*

**தேயம்.** *ஐந்து முதற் பத்துக் கிறேன்.*

**கோனியசுவசனம்.** Inhalation of Conium. *கொள். கோனியவெகிறுத்து, அறுபது கிறேன்; பதாசிநீர்*[3] *ஒரு திறும்; தண்ணீர் பத்துத் திறும். கல. இந்தக் கலவையில் இருபது துளியை ஓர் சுபஞ்சிற் தோய்த்து ஓர் பாத்திரத்திலிட்டு அதின் மேற் செல்லும் வெந்நீரின் ஆவியைச் சுவாசிக்கவும்.*

*சுவாசபாதை[4]யின் அழற்சி இருமல்முதலியவற்றுக்கு இதுநல்லசெரநீவம்[5].*

**கோனியச்சாறு.** Juice of Conium. *கொள். பச்சையான கோனிய இலை, எழு இறாத்தல்; திட்டசீது[6] போதியது. கோனியஇலையைக் குழியம்மியில் நசுக்கிச் சாற்றைப் பிழிந்து மூன்று அன்சு சாற்றுக்கு ஒரு அன்சு வீதமாய்ச் சீது சேர்த்து எழுநாள் நிற்கவிட்டு வடித்துக் குளிர்மையான இடத்தில் வைத்திருக்கவும்.*

**தேயம்.** *அரைத் திறும் முதல் ஒரு திறும். உள்ளே கொடுப்பதற்கு இது உசிதமான ரசிதம்.*

**கோனியப்பாப்பை.** Conium Poultice. *கொள். கோனிய இலை மாவாக ஒரு அன்சு; லீனமா[7], மூன்று அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. கோனிய மாவையும் லீனமாவையுங் கலந்து தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்து ஓயாமற் கலக்கவும்.*

*நோவுள்ள வீக்கங்கள் புண்களுக்கு இட இது நல்லது.*

**கோனியக்கனியின் ரசிதம். கோனியவிரஞ்சம்.** Tincture of Conium. *கொள். கோனியக் கனி, இடித்து இரண்டரை அன்சு; புரூவ்சீது[8] அரை நாழி. அடைத்த பாத்திரத்தில் கோனியக் கனியைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். பிறகு சியந்தனி[9]யில் வற்றி நீர்வடிதல் ஒழிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடித்து அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்த இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவ்சீது சேர்க்கவும்.*

**தேயம்.** *இருபது மினிம்[10]முதல் அறுபது மினிம்.*

## சம்புற்பூண்டு. SUMBUL PLANT.

**வாகடபகுதி.** *காய்ந்த கிழங்கு. இது ருசியத்திலும் இந்துவிலுமிருந்து வரும். இரண்டரை இஞ்சு முதல் ஐந்து இஞ்சு அகலமும் முக்கால் இஞ்சுமுதல் ஒன்றரை இஞ்சு தடிப்புமுள்ள வட்டித்த சீவல்களாக வரும். பட்டை முரணுன கருங் கபில நிறமாய், குறுத்த தடித்த மயிர்கள் பரவியிருக்கும். உட்பகுதி கண்ணறை உள்ளதாய் லகுவிற் பிரிபடக்கூடிய ஒழுங்கற்ற சிராய் சேர்ந்திருக்கும். இது கஸ்தூரியையொத்த வீறுன மணமுடையது. சுவை தொடக்கத்தில் இனிமையாகிச் சற்று வேளையால் கைப்பும் பல்சம்[11]போன்றதுமாகும். ருசிய சம்புற் கிழங்கைப்பார்க்க இந்துவிலுள்ளது அடர்த்தியான செசவும் உரப்பும் இறுக்கமும் சிவப்புநிறமுமுடையது.*

---

1 Ipecac. 2 Treacle. 3 Solution of Potash. 4 Air passage. 5 Sedative. 6 Rectified Spirit. 7 Linseed meal. 8 Proof spirit. 9 Percolator. 10 Minim. 11 Balsum.

Digitized By Roja Muthiah Research Library

தன்மை. நேவின்ஸ்திமுலம்[1], அந்திஸ்பசி[2].

உபயோகம். இஸ்தெரி[3], எபிலெப்சி[4], சோர்வுகளுக்கும் பெலவீனத்தோடு கூடிய மற்றும் நேவின் நோய்களுக்கும் இது நல்லது. மேலும் உடல் கெட்ட சன்னிச்சுரங்கள் அசத்துவமான திசந்தெரி[5] தியறீயம்[6] காலிக[7] சுவாசநோய்கள் குலொரோசி[8] திஸ்மெனுறீயய்[9] விசாதகம்[10] இவற்றுக்கும் இது நல்லமருந்து.

தேயம். பத்துமுதல் இருபது கிறேன் தூள் கொடுக்கலாம்.

ரசிதம். சம்புலிரஞ்சம். Tincture of Sumbul. கொள். சம்புல்வேர், பருக்கன்தூளாக இரண்டரை அன்சு; புரூவுசீது[11] அரைநாழி. அடைத்தபாத்திரத்தில் சம்புல்வேரைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். பிற்பாடு சியந்தனியில்[12] இட்டு நீர் வடிந்தொழிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்துச் சியந்தனிக்கவும். பிற்பாடு சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழி தேறப் புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். பத்துமுதல் முப்பது மினிம்[13].

இந்தக் கிழங்கு ஜடாமாசியல்ல. இந்துச் சம்புல் என்பது ஜடாமாசிக்குள்ள பார்சிய இந்தியப் பேர்களுளொன்று.

## வல்லாரை. HYDROCOTYLE ASIATICA.

### INDIAN PENNY-WORT

வாசம். இது இந்துவடங்கலுமுண்டாகும்.

வாகடபகுதி. இலைகள். இவை ஒரு அருகில் குடை வடிவையுடைய நீண்ட வட்டிப்பாயும் கருக்குள்ளவைகளாயும் அரை இஞ்சும் அதற்கு மேற்பட்ட நீளமாயுமிருக்கும். பச்சையாயிருக்கையில் மணமில்லாமல் கசக்கும்போது ஓர்வகையான சுகந்த மணம் வீசும். சுவை காரமும் கைப்பும் அரோசியமுமானது. வல்லாரின்[14] என்ற வெளிறல் நிறமுள்ள கைப்புங் கார்ப்புமுடைய அத்திர எண்ணெய்யே[15] இதன் சத்து. காய்ந்த இலையைப் பகுத்தறியக்கூடிய மணமாவது சுவையாவது அதற்கு இல்லை.

தன்மை. அல்திறவதொணிகம்[16], தானிக[17]மாயிட்டால் ஸ்திமுலம்.

உபயோகம். திமிர் குஷ்டத்தில் இதை வழங்கினதால் நயங்கண்டது. ஆயினும் இதற்கு இது விசேஷ மருந்தென்று சிலர் சொல்லியிருப்பது தகாது. (39). உபசிவ்விசு[18]க்கும் விசேஷமாய்த் தோலும் அதனடுத்த ஆனையத்திசு[19]வும் பிரதானமாய் நோய்த்திருக்கையில் இது அதிக உபயோகமாகுமென்று காணப்பட்டது. மற்றும் புண்களுக்கும் சரும நோய்களுக்கும் இது தகுந்த உண்மருந்தும் பூச்சுமருந்துமாகும்.

ரசிதங்கள். வல்லாரைத்தூள். Powder of Hydrocotyle. கொள். பச்சையான வல்லாரை இலை போதியது. காம்புகளைக் களைந்தபின் இலைகளை மட்டான நிழலிலுலர்த்திவைத்துத் தீர்ப்பாய்க் காயப்பண்ணிக் காய்ந்

---

1 Nervine stimulant. 2 Antispasmodic. 3 Hysteria. 4 Epilepsy. 5 Dysentery. 6 Diarrhoea. 7 Chronic. 8 Chlorosis. 9 Dysmennorrhoea. 10 Hypochondriasis. 11 Proof spirit. 12 Percolator. 13 Minim. 14 Vellarine. 15 Volatile oil 16 Alterative Tonic. 17 Local. 18 Secondary syphilis. 19 Cellar tissue.

(39) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

தபின் மாவாக அரைத்து நன்றாயடைத்த சீசாவிற் போடவும். மூப்பது இறாத்தல் பச்சை இலையை இப்படி ஆயத்தப்படுத்தினால் மூன்று நாலு இறாத்தல் தூள் வரும். இத்தூள் வெண்மையான பச்சைநிறமும் சொற்பமான இனிப சுகந்தமுமுடையது. இந்த இலையின் சத்தாகிய அத்திர[1]எண்ணெயை வெய்யிலும் நெருப்பும் அகற்றிப்போடுமாகையால் அவைகளில் உலர்த்தப்படாது.

**தேயம்.** ஐந்து முதல் எட்டுக் கிறேனை நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். மந்தமான புண்களின்மேல் இதைத் தூவ, அவை சுகசீரடையும்.

**வல்லாரைப்பாப்பை.** Hydrocotyle poultice. கொள். பச்சையான வல்லாரை இலை போதியது. துவைத்துத் தண்ணீர்விட்டு இளக்கிக்கொள்ளவும்.

சிவ்விசப் புண்களுக்கும் மற்றும் புண்களுக்கும் இது நல்ல தீவன பாப்பையாகும்.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

**பொன்றேரிமச்செடி.** Dorema aureum. இது வட பெலுகிஸ்தானிலுள்ள ஓர் செடி இதிலே கைப்பும் வெண்மையுமான ஓர் பிசின் ஊறும். இப்பிசின் அமுனியக[3]த்தைப் போன்றது. செடி பெரும்பாலும் நாலு முழம் உயரம். கிளைத்து மலர்ந்த அதின் தலைப்புக்குரிய பொன் நிறத்தாற் தோற்றமாய்த் தெரியும். இதிலூறும் பிசினைப்பற்றி இன்னும் விபரம்வேண்டும்.

**அசமதாகம்.** Carum Roxburghianum. இப்பூண்டின் குடைபோன்ற சதைத்த சிறுக் கொட்டைகளை ஸ்தொமாகி[4], காமினதி[5]யென்று சுதேசிகள் மதிக்கிறார்கள். ஓமத்தின் தன்மைகள் சந்தேகமற இவைக்குண்டு. ஆயினும் அதைப்போல் இது யுரோப வைத்தியரால் சோதிக்கப்படவில்லை. சுகந்தத்தில் இது ஓமத்துக்குக் குறைந்தது.

**சீரகம்.** Cumin. Cuminum Cyminum. இக் கொட்டை லந்தன்பார்மகுபீய[6]த்தில் வாகடச் சரக்காகின்றது. இது இந்துவடங்கலும் கடைகளிற் கிடைக்கும். கறிச்சரக்காக அதிகமாய் வழங்கப்படும். இதற்குரிய கைப்புச்சுவையும் சுகந்த மணமும் இதின் அத்திர எண்ணெய்யிற் தங்கும். இக்கொட்டை எண்ணெய்இரண்டுக்கும் கொத்தமல்லி[7] சதகுப்பி[8]களுக்குரிய காமினதித் தன்மைகள் உண்டு. சுதேசிகளால் அதிகம் மதிக்கப்பட்டாலும் இவை யுரோபரால் மருந்தாக வழங்கப்படுவதரிது. இந்த வகுப்பைச் சேர்ந்த வேறு மருந்துகள் இல்லாதவிடத்தில் இவைகளை வழங்கலாம்.

## அரலியாசியங்கள்.

## ARALIACEÆ.

### அவாகடச் சரக்கு. Non-Officinal.

**நேபாளஜின்செங்கிழங்கு.** Panax Pseudo-ginseng. இந்தப் பூண்டு நேபாள தேசத்துக்குரியது. வாலிக்கு பண்டிதர் இதை முதன்முதல் விவரி

---

1 Volatile. 2 Syphilis. 3 Ammoniacum. 4 Stomachic சீரணி. 5 Carminative வாயுபேதி. 6 Pharmacopoea, 7 Coriander, 8 Dill.

Digitized By Roja Muthiah Research Library

த்துச் சித்திரித்தார். மெய்யூர்ஜின்செங்பூண்டும் இதைப் போன்றது. சீன ருக்குட் பெயர்பெற்ற ஜின்செங் பூண்டின் கிழங்கைப் போன்றது. இப் பூண்டின் அவுஷதத் தன்மைகள் உபயோகங்களைப்பற்றிபொன்றும் நிச்சய மாய்த் தெரியாது. ஆயினுஞ் சீனத்திலுள்ள பூண்டைப்போலிருப்பதால் அல்திரவதொணிகமான இதின் கிழங்கைச் சோதித்து இதின் கயத்தையறி வது நல்லது.

## லோறந்தாசியங்கள்.

## LORANTHACEAE.

*அவாகடச் சரக்குகள்.* Non-Officinal.

புல்லுருவி. Viscum monoicum. இதிற் பல இனமுண்டு. ஒரு இனம் சற்றுச்கு தேசத்துக்கு அயலில் காஞ்சிர மரத்தில் உண்டாகின்றது. அம்மரத்தைப் போல நச்சுத்தன்மைகள் இதின் இலைகளுக்குண்டு. இதைப் பற்றி ஒஷானசி பண்டிதர் 1837 ம் ஆண்டு ஆராய்ந்து இலைத்தூளில் ஸ்திரிச்னின்[2] புருசின்[3] என்ற சத்துக்கள் இருக்கக் கண்டார் ஒஷானசி பண்டிதர் வாறிங்கு பண்டிதருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் வீரனுன ஓர் யுரோப மாலுமி வால்மிளகுத் தூளென்று இந்த இலைத்தூளில் அரைத்திருமை வகை மோசமாய்த் தின்றதினுல் ஒரு மணிவேளைக்குள்ளே செத்தானென்று எழுதி யிருக்கிறார். இதை ஸ்திரிச்னினுக்குப் பதிலாக வழங்கலாமென்று ஸ்து வாட்டு வைத்தியர் சொல்லுகிறார். ஆயினுங் கூட்டைப் பற்றிப் பூரண மாய் விளங்காததும் சேர்க்குங்காலம் விதம் முதலியவற்றைப் பற்றிச் சத்துக்கள் விகற்பப்படுவதுமாகிய இந்த நச்சுப் பூண்டைக் கொடுப்பதைப்பார்க்க ஸ்திரிச்னிநீர் முதலிய நன்றுயறிந்த ஒரே வீறுள்ள மருந்தை வழங்குவது சூதானம். நீலகிரி மலைகளிற் காஞ்சிர மரத்திற் படரும் புல்லுருவியென்ற நச்சினத்தைப் பற்றிச் சுபிருன் என்பவர் விபரித்துப் பிரசுரஞ்செய்திருக்கிறார்.

## கப்ரிவோலியாசியங்கள்.

## CAPRIFOLIACEAE.

### சம்பூகச்செடி. SAMBUCUS NIGRA. COMMON ELDER.

வாசம். இது யுரோபம் மேற்கு ஆசியங்களில் உண்டாகும்.

வாகடபகுதி. பூக்கள். இவை சிறியவை. வெண்ணிறமும் வாசனையுமுடையவைகள். அடர்த்தியான குலைக்கொத்துகளாகவிருக்கும்.

தன்மை உபயோகம். திஸ்தில நீர் செய்வதில் மாத்திரம் இது வழங்கப்படும்.

ரசிதம். சம்பூகநீர். Sambucus Water. கொள். பச்சையான சம்பூகப்பூ, பத்து இறுத்தல்; தண்ணீர் இரண்டு கலன். திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும்.

---

1 Alterative tonic. 2 Strychnine. 3 Brucine.

Digitized By Roja Muthiah Research Library

இது மற்றும் மருந்துகளுக்கு விசேஷமாய் லோஷன்களுக்கு அனுமருந்தாக வழங்கப்படும். இது மெல்லிய ஸ்திமுலம்.

## ரூபியாசியங்கள்.

## RUBIACEÆ.

### கலிசாயசின்கனம். CINCHONA CALISAYA.

**வாசம்.** பொலீவியம் தென் பெருவின் மலைச் சோலைகளில் தெக்கணாட்சம் 13ம் பாகைக்கும் 16ம் பாகை 30 கலைக்குமிடையிலும் குடதேசாந்தரம் 68ம் 72ம் பாகைகளுக்கு இடையிலும் இம்மரம் உண்டாகும். இந்துவிலும் இது செய்யப்படுகின்றது. (40)

**வாகடபகுதி.** பட்டை. இது பீதச் சின்கனபட்டையென்றும் சொல்லப்படும். இது பொருக்கற்ற தட்டையான துண்டுகளாகவும் அரிதாய்ப் பொருக்கால் மூடுண்ட சுருள்களாகவும் வரும். ஆறு முதற் பதினெட்டிஞ்சு நீளமாயும் ஒன்றுமுதல் மூன்று இஞ்சு[1] அகலமாயும் இரண்டு முதல் நாலு லீன்[2] தடிப்பாயும் உரப்புங் கனப்புமாயுமிருக்கும. வெளிப்பக்கங் கபிலநிறமாய் விசாலமான ஆழமற்ற நெடும் பள்ளங்கள் உடையது. உட்பக்கம் மங்கலான மஞ்சள்நிறமும் நாருமுள்ளது. குறுக்கே முறித்தால் குறுத்த நுண்ணிய தும்பு தோற்றும். இதின் தூள் கறுவாப்போலக் கபிலமஞ்சள்நிறமும் சற்றே சுகந்தமும் நெடுக்கைப்புமுள்ளது. சோதனை 100 கிறேன் பட்டையை நுண்ணியமாவாக்கி பத்துத்துளி ஐருகுலோறிக்கமிலம்[3] விட்டுப் புளிப்பாக்கின திஸ்திலித்த[4] தண்ணீர் ஒரு அன்சிற் கால்மணிநேரம் அவித்து இருபத்துநாலுமணிநேரம் ஊறவிடவும். முழுவதையும் சிறியவோர் சியந்தனி[5]யில் இட்டு நீர் வடிந்தொழிந்தபின் மேற்படி புளிப்பாக்கின தண்ணீரில் ஏறக்குறைய ஒன்றரை அன்சையாவது நீர்நிறமில்லாமல் இறங்குந்தனையுமாவது விடவும். சியந்தனித்த நீரின் புளிப்பைக்கெடாமல் பார்த்து அதின்நிறம் முழுவதும் நீங்குந்தனையும் அசற்கு ஈயவுதவசிதசுநீர்[6] சேர்க்கவும். அதை வடித்துச் சொற்ப தின்திலநீராற் கழுவவும். வடிந்தநீருக்குக் காரப்பதாசி[7]யில் முப்பத்தைந்து கிறேன் வரைக்கு அல்லது முதலேயுண்டான அடையலை மறுபடி கரையப்பண்ணக் கூடியவரைக்குச் சேர்க்கவும். பிற்பாடு சுத்த ஈதரில்[8] ஆறுதிரும் சேர்க்கவும். சிறமாய்க் குலுக்கி ஈதரை வேறாக்கியபின் முறைக்கு மும்மூன்று திரும் ஈதர் விட்டு இரண்டு முறையாவது, விட்ட ஈதரில் ஒரு துளியை வறட்ட அதிலே யாதொரு அடையலுந் தோன்றமற்போகுந்தனையுமாவது இப்படியே குலுக்கியெடுக்கவும். கடைசியில் ஈதர்க்கரைவுகள் எல்லாவற்றையுங் கலந்து கப்சுல்[9] என்ற பாத்திரத்தில் வறட்டவும். ஏறக்குறையச் சுத்தமாயும் சேஷமாயும் வருங்கினியம்[10] காய்ந்தபின் இரண்டுகிறேனுக்குக் குறையாமல் நிறுக்கவும், கிருசசல்வுரிக்கமில[11]த்திற் சுறுக்குக்கரையவும் தக்கதாயிருக்கவேண்டும்.

---

1 Inch. 2 Line. 3 Hydrochloric acid. 4 Distilled. 5 Percolator. 6 Subacetate of Lead. 7 Caustic Potash. 8 Ether. 9 Capsule. 10 Quinia. 11 Diluted sulphuric acid.

(40)) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

தன்மைகள். வீருன அந்திபிருடி[1]. தொணிகம்[2], துவர். முதலிரண்டு தன்மைகளும் கினியமிருப்பதைப்பற்றியே. மூன்ருந் தன்மை சின்கனதணிக்கமிலத்தையும்[3] செஞ்சின்கணிக்கமிலத்தையும்[4] பற்றியேயாகும்.

உபயோகம். இதின் உபயோகத்தைப் பற்றிப் பின்வருங் கினியசல்வசின்கீழும் இதின் மற்றுமிரசிதங்களின்கீழும் சொல்லப்படும்.

தேயம். பொடியாக்கிய பட்டையில் பத்துமுதல் அறுபதுகிறேனும் கூடவுங் கொடுக்கலாம். ஆயினும் இவ்விதமாக வழங்குவது அரிது.

இந்த மரத்தின் இலைகளுக்கும் சின்கனத்தின் மற்றுமினங்களின் இலைகளுக்கும் தொணிகதன்மையும் சற்றேஅந்திப்பிருடித்தன்மையுமுண்டு.(41)

ரசிதங்கள். கினியசல்வசு. Sulphate of Quinia. இது பீதச்சின்கனபட்டையிலும் வெண்சின்கன பட்டையிலுமிருந்து செய்த ஓர் அல்கலைவச்[5] சல்வசு[6]. இதைக்குறிக்குஞ் சின்னம் (க$_{20}$ ஐ$_{24}$ நீ$_2$ அ$_2$,) $_2$ஐ$_2$ கேஅ$_4$ 7ஐ$_2$ அ. இதின் லட்சணங்களாவன: இது ஊசிச்சாங்கமான பட்டுப்போன்ற வெண் கிரிஸ்தல்[7]களாகவும் கடுமையான கைப்புச் சுவையுள்ளதாகவுமிருக்கும். தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும். என்ருலும் அத்தண்ணீரைச் சாடையான நீலநிறமாக்கும். இந்தக் கரைவோடு பாரிதகுலோறிரம்[8] சேர்க்க நீதுரிக்கமிலத்[9]திற் கரையாதவோர் வெண்ணடையல் விழும். முதற் குலோற நீர்[10] சேர்த்து மறுபடி அமோனம்[11]சேர்க்க அது சிறப்பான மரகதப் பச்சை நிறங் கொள்ளும். சோதனைகள். இது சுத்தமான சல்வுரிக்கமிலத்திற்[12] கரைந்து சொற்ப மஞ்சள்நிறங் காட்டும். சொற்ப சூடுகாட்ட நிறத்தில் வேறொரு மாறுதலுமுண்டாகாது. இதிற் பத்துக் கிறேனும் கிருசசல்வுரிக்கமிலத்திற் பத்துத் துளியும் தண்ணீர் அரை அன்சும் சேர்ந்தால் நல்ல கரைவாகும். அதில்நின்று அமோனம் ஒரு வெண்ணடையலை விழுத்தும். முழுவதற்கும் அரை அன்சு ஈதர்[13] சேர்த்துக் கலக்க இந்த வெண்ணடையல் மறுபடி கரையும். கலங்கின நீர் ஒய்ந்து இரண்டு படையாகப் பிரியும்போது யாதொரு கிரிஸ்தற்பதார்த்தமும் உண்டாகாது. இந்த உப்பில் 25 கிறேனை 212 பாகை குட்டில் உலர்த்த, உள்ள தண்ணீர் வற்றுவதால் 3.6 கிறேன் குறையவேண்டும்.

தன்மைகள். மேலேகண்ட பீதச் சின்கனபட்டையின் தன்மைகளே இதற்குமுண்டு. தொணிகமாகவும் அந்திபிருடியாகவும் இதின் செயல் அதைப் பார்க்கப் பெலனுங் கெதியுமானது. துவர்த்தன்மை அதிலும் இதிற்குறைவு.

உபயோகம். தடவை தடவையாய் வரும் எவ்வகைக் காய்ச்சல்களுக்கும் இது முதல்மருந்து. முறைக் காய்ச்சல்களுக்கு இது மெத்த வாய்க்கும். பித்தசுரம் பீதசுரங்களுக்குத் தொடக்கத்தில் அதிதேயமாய்க் கொடுத்தால் சிலவேளை நயந்தோன்றினும் முறைக்காய்ச்சலுக்குப் போல் நயமல்ல. விடாச்சுரங்களுக்கு இது அவ்வளவு நயமல்ல. ஆயினுஞ் சன்னிச்சுரங்களுக்குச் சிறுபிரமாணமாக மினிறலமிலங்க[14]ளோடு கலந்து கொடுத்து வாய்த்ததுண்டு. எச்சந்திமங்களின்[15] பிற்காலில் ஆளின் பெலனைத் தாங்குவதற்கு இது உவப்பு. பிளிகை[16] பருத்திருப்பதாகிய காய்ச்சற்கட்டிக்கு வி

1 Antiperiodic, சாமவிகாரி. 2 Tonic, ஔசதி. 3 Cincho-tannic acid. 4 Cinchonic acid. 5 Alkaloid. 6 Sulphate. 7 Crystal 8 Chloride of Barium. 9 Nitric acid. 10 Chlorine water. 11 Ammonia. 12 Sulphuric acid. 13 Ether. 14 Mineral acid. 15 Exanthemata. 16 Spleen.

(41) அனுபந்தம்பார்.

சேஷமாய் அது நச்சு வாயுகாரணமாக அப்படியானால், சுள்ளாப்பான விரேசனத்தோடு கினியத்தைப் போல நிச்சயமான மருந்து இல்லை. வாதநோய்கள், நறல்சி[1] நோய்களுக்கு விசேஷமாய் அவை தடவைத்தன்மைகொள்ளும்போது, இது பெரும்பாலும் உவப்பாகும். மற்றும் வியாதிகளுள் குறுப்பு[2], கூவுஞ்சுவாசம்[3], தக்கல்[4] நமோனி[5]யினதும்பிளுறீதி[6]னதும்பிற்கால்கள், அசத்துவா[7]நமோனி, சுவாசப்பையழுகல், கண்ணோ[8], இரிசீது,[9] ஸ்துருமத்[10]தோடு கூடிய மற்றும் நயனரோகங்கள், எரிசிப்பிலசு[11], எட்டிகாறி[12], திசந்தெரி[13], தியறீயம்[14], விசேஷமாய் நச்சுக்காற்றுக் காரணமான திசந்தெரி தியறீயம், அழுகல், முககாதனி[15], ஏர்ப்பு, கசம் என்பவற்றுக்கு இதால் நயங்கண்டது. அவினைத் தவிரக் கினியத்தைப்போல எத்தனையோ தறுவாய்களுக்குக் கூடும் மருந்து இல்லையெனத் துணியலாம்.

தேயம். தொணிகமாக[16] ஒரு கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்கு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம். அந்திபிருடி[17]யாகக் காய்ச்சல் விட்ட நேரங்களில் மூன்று முதல் பத்துக் கிறேன் திரும்பத் திரும்பக் கொடுக்கலாம். அல்லது காய்ச்சல் முறையின் தொடக்கத்திலாவது வெயர்வைக்காலின் முடிவிலாவது இருபது கிறேனையாவது கூடவாவது ஒரே முறையிற் கொடுக்கலாம். இதைக் கிருசசல்வுரிக்கமிலஞ்[18]சேர்ந்த நீரிற் கரைத்துக் கொடுப்பது உத்தமம். இதின் கைப்பை மறைக்கவேண்டில் அல்லது இரைப்பை அழற்சிப்பட்டிருக்கிற் குளிகையாக்கிக் கொடுக்கலாம். இதைக் குடலுட் புகட்டும் போதும் தோலுக்குள்ளாவது தோலிலாவது செலுத்தும்போதும் நயங்காணும். ஆயினும் வாயினாற் செல்வதைப் போலச் செயல் கெதியாயாவது ஒரே சீராயாவது இராது. வெறு வயிற்றிற் தின்றால் செயல் தீவிரமாயும் நிச்சயமாயுங் காட்டும்.

கினியத்தின் ரசிதங்கள். கினியரஞ்சம். Tincture of Quinia. கொள். கினிய சல்வசு, நூற்றறுபது கிறேன்; தோடந்தோல் ரஞ்சம்[19] அரைநாழி. கினியசல்வசை ரஞ்சத்திலே மென்சூட்டிற் கரைத்து அடைத்த பாத்திரத்தில் மூன்றுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி பிற்பாடு வடிக்கவும்.

தேயம். அரைத்திரும் முதல் இரண்டு திரும். ஒவ்வொரு திருமிலும் ஒருகிறேன் கினியசல்வசு இருக்கும்.

கினியவைன். Wine of Quinia. கொள். கினியசல்வசு, இருபது கிறேன்; சிதிறிக்கமிலம்[20] முப்பதுகிறேன்; தோடம்வைன்[21], அரைநாழி. முதற்சிதிறிக்கமிலத்தையும் பிறகு கினியசல்வசையும் தோடம் வைனிற் கரைத்து அடைத்த பாத்திரத்தில் மூன்றுநாளூறவிட்டிருந்து இடைக்கிடை குலுக்கிப் பிற்பாடு வடிக்கவும்.

தேயம். அரை அன்சு முதல் ஒரு அன்சு கொடுக்கலாம். ஒவ்வொரு அன்சிலும் ஒரு கிறேன் கினியம் அடங்கியிருக்கும்.

கினியக்குளிகை. Pill of Quinia. கொள். கினியசல்வசு, அறுபதுகிறேன்; நாயுரோசைலேகியம்[22]இருபதுகிறேன். ஒன்றாய்ச்சேர்த்துத் திரளையாக்கவும்.

தேயம். இரண்டு முதற் பத்துக்கிறேன் கொடுக்கலாம். இதில் நாலு கிறேனில் மூன்று கிறேன் கினியமிருக்கும்.

---

1 Neuralgia, 2 Croup. 3 Crowing Inspiration. 4 Hooping cough. 5 Pneumonia. 6 Pleurisy. 7 Asthenic, 8 Opthalamia, 9 Iritis. 10 Struma. 11 Erysipelas. 12 Urticaria. 13 Dysentery. 14 Diarrhoea. 15 Cancrum oris, 16 Tonic. 17 Antiperiodic சமவிசாரி. 18 Sulphuric acid. 19 Tincture of orange peel. 20 Citric acid. 21. Wine of orange. 22 Confection of Dog rose

அயகினியசித்திறசி[1]லுங் கினியம் ஒருகூருகச் சேருகின்றது.

பீதச்சின்கனபட்டையின் ரசிதங்கள். பீதச்சின்கனபட்டைத்திகாக்தம். Decoction of Yellow Cinchona. கொள். பீதச் சின்கனபட்டை, பருக்கன்தூளாக, ஒன்றேகால் அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்து மினி[2]வேளைக்கு அவித்து, ஆறினபின் நீரை வடித்தெடுத்துக்கொண்டு, வடித்த நீர் அரைநாழியாய் வரத்தக்க அளவு வெந்நீரை வடியிலுள்ள சக்கையில் வார்க்கவும்.

தேயம். ஒரு அன்சு இரண்டு அன்சு கொடுக்கலாம்.

பீதச்சின்கனவின்வூசும். Infusion of Yellow Cinchona. கொள். பீதச்சின்கனபட்டை பருக்கன்தூளாக அரை அன்சு; கொதிவெந்நீர், பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டு மணிநேரமூறவிட்டு வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு கொடுக்கலாம். இதுவும் இதற்கடுக்க முன் வந்த ரசிதமும் நல்ல தொணிகங்க[3]ளாகும். கிருச சல்வுரிக்கமில[4]த்திற் சிலதுளி சேர்ப்பதால் இவைகளின் செயல் அதிகப்படும். தொண்டைப்புண், ஸ்கேவி[5] முதலிய காரணம்பற்றிய பல்லீற்றுக் கரைதல் முதலியவற்றுக்குக் கொப்பளிக்க இவை உதவும்.

பீதச் சின்கனாஞ்சம். Tincture of Yellow Cinchona. கொள். பீதச் சின்கன பட்டை, பருக்கன் தூளாக நாலு அன்சு; புருவுசீது[6]அரைநாழி. அடைத்த பாத்திரத்திற் சின்கன பட்டையைப் பதினேழு அன்சு சீதில் இரண்டுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். அப்பாற் சியந்தனி[7]யில் இட்டு நீர் வடிந்தொழிந்தபின், சேஷமாயிருக்கிற ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, வடித்த நீர்களைக் கலந்து அரைநாழி தேறச் சீது சேர்க்கவும்.

தேயம். அரைத் திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம். மற்றுந் தொணிக மருந்துகளுக்கு இது நல்ல கூட்டு.

பீதச்சின்கனநீரேசிறத்து. Liquid Extract of Yellow Cinchona. கொள். பீதச் சின்கன பட்டை, பருக்கன் தூளாக, ஒரு இருத்தல்; தில்திலித்த[8] நீர் போதியது; திட்டசீது[9] ஒருஅன்சு. சின்கனபட்டையை ஒருநாழி தண்ணீரில் ஒருநாள் ஊறவிட்டு இடைக்கிடை கலக்கி, அப்பாற் சியந்தனியில் இட்டு ஆறுநாழி சேருந்தனையுமாவது சாரமற்றுப் போகுந்தனையுமாவது தண்ணீர் வார்த்து வடிக்கவும். வடித்தெடுத்த நீர் அரைநாழியாய் வருந்தனையும் அதை 160 பாகைக்குக் கதிக்காத சூட்டில் வறட்டிக் கடுதாசியில் வடித்து அந்த நீர் மூன்று அன்சாய் வருந்தனையுமாவது அல்லது அதின் விசேஷகிருவிதம்[10] 1.200 ஆய் வருந்தனையுமாவது வறட்டவும். ஆறினபின் ஒயாமற் கலக்கிக் கலக்கிச் சீதைச் சேர்க்கவும். அதின் விசேஷகிருவிதம் 1.100 வரையில் இருக்கவேணும்.

தேயம். பத்து முதல் முப்பது துளியை நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

## வெண்சின்கனம். PALE CINCHONA.

வாசம். இது கலம்பியத்தின்[11] தென்மேற்கு மூலையிலுள்ள லக்ச[12]மலைச்

---

1 Ferriet Quinia citras. 2 Minute. 3 Tonic. 4 Dilute sulphuric acid. 5 Scurvy. 6 Proof spirit. 7 Percolator. 8 Distilled. 9 Rectified spirit. 10 Specific gravity. 11 Columbia. 12 Loxa.

Digitized By Roja Muthiah Research Library

சோலைகளில் கடல்மட்டத்துக்கு மேலே 5,700 அடி முதல் 7,700 அடி உயரத்தில் 64 பாகை முதல் 68 பாகை தாபபதத்தில்[1] உண்டாகும். இந்துவிலும் இலங்கையிலுஞ் செய்கைபண்ணப்படுகின்றது.

வாகடபகுதி. பட்டை. இதின் லட்சணங்களாவன: அரை லீன்[2] முதல் ஒரு லீன் தடிப்புள்ள ஒற்றைச் சுருள்களாயாவது இரணைச் சுருள்களாயாவது வரும். இவை ஆறு இஞ்சு[3] தொடக்கம் பதினைந்து இஞ்சு நீளமாயும் இரண்டு லீன் முதல் எட்டு லீன் பருமையாயும் நொருக்கலாயுமிருக்கும். லகுவில் நெடும்பாட்டுக்குக் கிழியும். குறுக்கே குறுக முறியும். வெளிப்பக்கம் கபிலமுஞ் சுருக்குமாயாவது நரையும் ஒட்டிய பாசிப்புள்ளிகளுமுள்ளதாயாவது இருக்கும். சிலவேளை ஏராளமான குறுக்குக் கமர்களுமுண்டு. உட்பக்கஞ் செங்கபிலமாயாவது செம்மஞ்சளாயாவது இருக்கும். இதின் தூள் வெண்கபில நிறமும் சற்றே கைப்புங் கடுந் துவருமானது. சோதனை. பட்டைத் தூளில் 200 கிறேனைப் பீதச் சின்கன பட்டைச் சோதனையிற் சொன்ன முறையாய் ஆயத்தப்படுத்தி அதிலே சேர்த்த ஈத[4]ருக்குப் பதிலாகக் குலோறுவாம்[5] சேர்த்தால் ஒரு கிறேனுக்குக் குறையாத அளவு அல்கலேவங்கள்[6] பிறக்கவேண்டும்.

தன்மை, உபயோகம், தேயங்கள். பீதச் சின்கனபட்டை போலவேயாகும்.

ரசிதங்கள். சின்கனக்கூட்டிரஞ்சம். Compound Tincture of Cinchona. கொள். வெண் சின்கனபட்டை, பருக்கன்தூளாக இரண்டு அன்சு; கைச்சற் தோடந்தோல், நறுக்கித் துவைத்து, ஒரு அன்சு; சேபந்தாரி[7] வேர், துவைத்து அரைஅன்சு; குங்குமப்பூ[8], அறுபதுகிறேன்; கிரிமிஞ்சிப்புழு[9], தூளாக முப்பது கிறேன்; புரூவுசீது[10] அரைநாழி. சின்கன பட்டையையும், உரமான மற்றுஞ் சரக்குகளையும் அடைத்த பாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதோடு இட்டு இடைக்கிடை குலுக்கிக் குலுக்கி இரண்டுநாளூறவிடவும். அப்பாற்சியந்தனி[11]யில் வார்த்து நீர் வடிந்தொழிந்தபின், சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து, பிழிந்த நீரை வடித்து நீர்களை ஒன்றாக்கி, அரைநாழிதேறப் புரூவுசீது கூட்டவும்.

தேயம். தொணிக[12]மாகவும் ஸ்தொமாகி[13]யாகவும்அரைத்திறாம் முதல் இரண்டு திறாங் கொடுக்கலாம்.

அயகூட்டுக்கலவையிலும் வெண்சின்கனபட்டை ஓர்கூறாகச்சேருகிறது.

## செஞ்சின்கனம். RED CINCHONA.

வாசம். இது ஈக்குடா தேசத்திலுள்ள கிம்புருசு மலையின் மேற்குச்சாரலில் உண்டாகும். குவாயகிலிலிருந்து இங்கிலாந்துக்குப் பெரும்பாலும் ஏற்றப்படும். இந்துவிலும் இலங்கையிலுஞ் செய்யப்படும்.

வாகடபகுதி. பட்டை. இது தட்டையான அல்லது கவிந்த துண்டுகளாகவுஞ் சிலவேளை சுருள்களாகவும் வரும். வெளித்தோலால் மூடப்பட்டிருக்கும். நீளம் சில இஞ்சு முதல் இரண்டு அடிவரைக்கும் அகலம் ஒரு இஞ்சுமுதல் மூன்று இஞ்சுவரைக்கும், கனம் இரண்டு லீன் முதல் ஆறு லீன் வரைக்கும் வித்தியாசப்படும். இறுக்கமுங் கனமுமானது. வெளிப்ப

1 Temperature. 2 Line. 3 Inch. 4 Ether. 5 Chloroform. 6 Alkaloids. 7 Serpentary. 8 Saffron. 9 Cochineal. 10 Proof spirit. 11 Percolator. 12 Tonic. 13 Stomachic, சோரணி.

Digitized By Roja Muthiah Research Library

க்கங் கபிலம் அல்லது செங்கபிலமானது. பாசி பிடித்திருப்பதால் அரிதாய் வெண்மையாகும். நெடும்பாட்டுக்குச் சுருக்குவிழுந்திருக்கும். பலமுறையிலுஞ் சிறுச்சிறுக் கணுவுள்ளது. குறுக்குக் சமர்கள் நிறைந்திருக்கும். உட்பக்கஞ் சிவப்பு. ஒடிந்த ஓரஞ் செங்கல்லுப்போலிருக்கும். குறுக்குமுறிவில் மெல்லிய சிராய் தெரியும். தூள் செங்கபிலநிறமானது; சுவை கைப்புந் துவருமாகும். சோதனை. 100 கிறேன் பட்டையை பீதச் சின்கனபட்டைச் சோதனையிற் சொன்ன முறையாய் ஆயத்தப்படுத்து அதிற் சொன்ன ஈதர்[1]க்குப் பதிலாக குலோறுவாம்[2] சேர்த்தால் 1.5 கிறேனுக்குக் குறையாமல் அல்கலேவங்கள்[3] பிறக்கவேணும்.

தன்மை, உபயோகம், தேயங்கள். பீதச் சின்கன பட்டை போலவேயாகும்.

மேற்சொன்ன சின்கன வகைகளிலிருந்தும் இன்னுஞ் சில வகைகளிலிருந்தும் கினிய[4]த்தோடு சின்குனின்[5], சின்குனிதின்[6], கினிதின்[7] என்ற இன்னும் மூன்று அல்கலேவங்கள் வெவ்வேறுவீதமாய்ப் பிறக்கும். வெண் சின்கனத்திலேயே சின்குனின் அதிகம்போற் தோற்றுகிறது. இந்த அல்கலேவங்களின் அந்திபிருடி[8]த் தன்மைகளை ஆராய்வதற்கு இந்தியாவில் நியமிக்கப்பட்ட கமிஷனர்[9] அவற்றைப் பரிசோதித்து அவை உச்சிதமானவையென்று முடித்தார்கள். அந்திபிருடியாக இவைகளொவ்வொன்றிலும் ஏகசகடான தேயமாய் எட்டுக் கிறேன் முதற் பத்துக் கிறேன் கொடுக்கலாம். தொணிகமாக[10] இரண்டு கிறேன் முதல் ஐந்து கிறேன் கொடுக்கலாம். (41a)

## இபிகாக்குப்பூடு. IPECAC. IPECACUANHA.

வாசம். இது பிறசீல் தேசத்தில் தக்கணட்சம்[11] 8 பாகைக்கும் 20 பாகைக்கும் இடையில் நிழலான பகுதிகளில் உண்டாகும்.

வாகடபகுதி. வேர். இது மூன்று நாலு இஞ்சு நீளமும் தென்னீர்க்களவு பருமையுமான துண்டுகளாக வரும். முறுகி இடைக்கிடை முடிச்சுவிழுந்திருக்கும். நிறம் பலவர்ணமான கபிலநிறம். இதில் இரண்டு பகுதிகளுண்டு. சதையான சத்துள்ள வெளிப்பகுதி நொருக்கலானது. மெல்லிய தடிபோன்ற மையப்பகுதி வெண்மையானது. இதின் தூள் வெண்கபிலநிறமும் சொற்ப உவட்டு மணமும், சற்றே கார்ப்பான கைப்புச் சுவையுமுள்ளது. இதிலுள்ள சத்து எமிசிதம்[12] எனப்படும். அது சுத்தமாயிருக்கையில் வெண்மையும் புழுதியும் மணமற்றதும், சற்றே கைப்புச்சுவையும், அல்கலேத்தன்மையுமுடையது,

தன்மைகள். இது வமனி[13], சுவேதனி[14], எக்ஸ்பெக்துறம்[15]; சிறுபிரமாணத்தில் அல்திறவம்[16]. இபிகாக்குத் தூளைத் தைலத்திற் சேர்த்து தோலுட் தேய்த்துவிட்டால் எதிரழற்சி[17]யாகச் சேஷ்டித்து, அந்திமனிதாத்தரக[18] தைலத்தைப் பூசினாற் போலப் பருக்கள் தோன்றச்செய்யும்.

உபயோகம். திசந்தெரி[19]க்கு இது வாய்த்த மருந்து. இந்த நோய்க்கு முப்பது நாற்பது கிறேன் இபிகாக்குக் கொடுப்பதாகிய பரிகரிப்பு இக்கா

---

1 Ether. 2 Chloroform. 3 Alkaloid. 4 Quinia. 5 Cinchonine. 6 Cinchonidine. 7 Quinidine. 8 Antiperiodic. 9 Commissioner. 10 Tonic. 11 South Latitude. 12 Emetia. 13 Emetic. 14 Diaphoretic, தியவுறேசி. 15 Expectorant, கிசேட்வனி. 16 Alterative, பரிணமி. 17 Counter irritant. 18 Tartarate of Antimony. 19 Dysentery.

(41a) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

லத்தில் மெத்தச் சித்திபெற்று வருகின்றது(42). தியறீயத்து[1]க்கும் சிலவகையான குன்மத்துக்கும் விசேஷமாய் ஈரலின் தொழிற்பிசகு அல்லது மந்திப்போடு தொடுத்திருக்கையில் இது நல்லது. எக்ஸ்பெக்துறனாக, இது சுதார்கள்[2], காலிகபுறங்கீது[3], ஈளை, கசம், குக்கலின் தொடக்கம் முதலியவற்றுக்குக் கொடுக்கப்படும். இரத்தப்பெருக்குகளுக்கும் விசேஷமாய்க் கருப்பை இரத்தப்பெருக்குக்கும் பெரும்பாட்டுக்கும் இது நயந்தது. சமியாப் பதார்த்தங்களை வாந்திக்கச் செய்வதற்கு இது நிச்சயமாயும் பதனமாயுஞ் சேஷ்டிக்கும். அந்திமனிதாத்தரகம்[4] கொடுத்தபின் காண்கிற சோகம் அளவு இதாலுண்டாகாது. பிள்ளைகளுக்கும் பெலவீனருக்கும் இது விசேஷமாய் உவந்தது. சலசீடம்[5], நாட்பட்ட நெஞ்சுநோய்கள் முதலியவற்றிற்கு இது எதிரழற்சியாக உடப்படும். இரண்டுதிரும் இபிகாக்குத்தூளும், இரண்டு திரும் ஒலீவெண்ணெய்[6]யும், நாலு திரும் லாடு[7]ஞ் சேர்த்து, நாள் இரண்டொருமுறை தோலுட் தேய்க்க அழற்சியுண்டாகும். இத்தூளை நனைத்துப் பசையாக்கி ஏதும் விஷப் பூச்சிகள் குற்றின இடத்துக்கு அணைக்க, அழற்சி உபாதி பெரும்பாலுந் தணியும்.

**வேர்த்தூளின் தேயம்.** வமனி[8]யாகப் பதினைந்து கிறேன் முதல் முப்பது கிறேன கொடுக்கலாம். வெந்நீர் குடிக்க இதின செயல் அதி திருத்தியும் லேசுமாய் நடக்கும். உவட்டிக்கவும் சனிகக்கவும் ஒரு கிறேன் முதல் மூன்றுகிறேனும் அல்திறவ[9]மாக கால்முதல்அரைக்கிறேனுங்கொடுக்கலாம்.

**ரசிதங்கள். இபிகாக்குவைன்.** Wine of Ipecac. கொள். இடித்த இபிகாக்குவேர். ஒரு அன்சு; செரிவைன்[10] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கிச் சீலையில்வடித்துப் பிழிந்து வடித்து அரைநாழி தேறப் போதிய செரிவைன் கூட்டிக்கொள்ளவும்.

**தேயம்.** வமனியாக மூன்று முதல் ஆறு திரும். எக்ஸ்பெக்துறம்[11] சுவேதனி[12]யாக ஐந்து முதல் நாற்பது துளி. சிறுபிள்ளைகளுக்குச் சத்திக்குந்தனையும் ஒரு திரும் தேயத்தில் அரைமணிநேரத்துக் கொருமுறை திரும்பத் திரும்பக் கொடுத்தால் நல்ல வமனியாகும். ஒவ்வொரு அன்சிலும் இபிகாக்கு வேரின் கரையும் பங்கு 22 கிறேன் அடங்கியிருக்கும்.

**இபிகாக்குக்கூட்டுச்சூரணம்.** Compound Powder of Ipecac. கொள். இபிகாக்குத் தூள், அரை அன்சு; அவின்தூள் அரை அன்சு; பதாசிசல்வசுமாவாக நாலு அன்சு. மூன்றையுந் திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக் கடைசியில் உரலிற்போட்டு மெதுவாய்க் குழியம்மியில் அரைத்து அடைத்த சீசாவிற் போட்டு வைத்துக்கொள்ளவும்.

**தேயம்.** ஐந்துகிறேன்முதற் பதினைந்து கிறேன். வாதம், நறல்சி[13]நோய்கள், திசந்தெரி[14]. தியறீயம், கல்லடைசல் முதலியவற்றிற்கு நல்லசெரதீவமும்[15]சுவேதனியுமாகும். பத்துக்கிறேனில் ஒருகிறேன்அவின்இருக்கும்.

**இபிகாக்ஸ்குவிற்குளிகை.** Pill of Ipecac with Squill. கொள், இபிகாக்குக்கூட்டுச் சூரணம், மூன்று அன்சு; ஸ்குவிற்தூள், அமுனீயகத்தூள்[16], வகைக்கு ஒருஅன்சு; இக்குப்பாணி[17] போதியது. தூள்களைக் கலந்து இக்குப்பாணியையுஞ் சேர்த்துத் திரளையாக்கிக்கொள்ளவும்.

---

1 Diarrhoea. 2 Catarrh. 3 Chronic Bronchitis. 4 Tartarate of Antimony. 5 Hydrocephalus. 6 Olive oil. 7 Lard, நிடியம். 8 Emetic, எமிசி. 9 Alterative. 10 Sherry wine. 11 Expectorant, கிசேட்வனி. 12 Diaphoretic, சுவேதனி. 13 Neuralgia. 14 Dysentery. 15 Sedative, சந்தனி. 16 Ammoniacum. 17 Treacle சேதீபகம்.

(42) அனுபந்தம் பார்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன். காலிசஇருமல் முதலி யவற்றுக்கு இது நல்ல எக்ஸ்பெக்துறம்.

இபிகாக்குவில்லை. Ipecac Lozenges. கொள். இபிகாக்குத்தூள்,நூற்றெண்பது கிறேன்; சுத்த சர்க்கரை மாவாக, இருபத்தைந்து அன்சு; அகசிப்பிசின் மா[1] ஒரு அன்சு; அகசி முசிலாகு[2] இரண்டு அன்சு; திஸ்திலித்தநீர்[3] ஒரு அன்சு, அல்லது போதியது. தூள்கள் எல்லாவற்றையுங் கலந்து சரிபதமான திரளையாய்வரத்தக்கதாய்ப் பிசின்பாணியையுந் தண்ணீரையுஞ்சேர்க்கவும். 720 வில்லைகளாகத் தட்டி மட்டான சூடுள்ள அறையில் உலர்த்தவும்.

தேயம். ஒன்று தொடக்கம் மூன்று வில்லை. ஒவ்வொரு வில்லையிலும் இபிகாக்குக் காற்கிறேன் இருக்கும்.

கோனியம்[4]க்கூட்டுக்குளிகையிலும் மாவிய இபிகாக்குவில்லையிலும் இபிகாக்குச்சேரும்.

## கம்பீர்ச்சேடி. GAMBIR PLANT.

வாசம். இது மலாயுவிலும் அடுத்ததீவுகளிலும் உண்டாகும்.

வாகடபகுதி. இதின் இலைகள் தளிர்களிலிருந்து வடியும் வெண் காசுக்கட்டியென்ற ஓர் பிசின். இது சதுரக் கம்பிகளாகவும், அக் கம்பிகள் ஒன்றித்த சிப்பங்களாகவும் வரும். கட்டிகள் ஒரு இஞ்சு பருமையும் வெளியிற் கபிலநிறமும் உள்ளேவெண்மையான செங்கல்நிறமுமாயிருக்கும். மண் கட்டிபோல் இலகுவில் உடையும். சுவை கைப்புங் கடுந்துவர்ப்பும்வழவழப்புமாய்ப் பிறகு சொற்ப இனிப்புக் கொடுக்கும். சோதனைகள். கொதிநீரில் முற்றாய்க் கரையும். ஆறினபின் இயோதம்[5] சேர்க்க நீலநிறமடையாது.

தன்மை, உபயோகம், ரசிதங்கள். கொதலை[6] மரத்திலிருந்து எடுக்குங் கருங் காசுக்கட்டியைப் போலவே. ஆயினும் அதைப்பார்க்க இது அதிகஞ் சுறுக்குக் கரையும்.

ரசிதம். காசுக்கட்டி வில்லை. Catechu Lozenges. கொள். வெண் காசுக்கட்டி, தூளாக எழுநூற்றிருபது கிறேன். சுத்த சர்க்கரை மா, இருபத்தைந்து அன்சு; அகசிப் பிசின்மா, ஒரு அன்சு; அகசிமுசிலாகு, இரண்டு அன்சு; திஸ்திலித்த நீர் போதியது. காசுக்கட்டி, சர்க்கரைமா, பிசின் மா மூன்றையுங் கலந்து தகுந்த திரளையாகத் தக்கதாய் முசிலாகுந் தண்ணீருஞ் சேர்க்கவும். 720 வில்லைகளாகத் தட்டி வெப்பமான அறையில் மட்டான அனலில் உலர்த்தவும்,

தேயம். ஒரு வில்லையாவது கூடவாவது நாளிற் பலமுறை வழங்கலாம். ஒவ்வொரு வில்லையிலும் ஒரு கிறேன் காசுக்கட்டி இருக்கும். வாயிலிட்டு மெல்லக் கரையவிட்டால், குரற்கம்மலுக்கும் தொண்டை உண்ணாக்கு லசுணம்[7] இளகுதலுக்கும் பல்லீற்று இளகல் புண்களுக்கும் வாயவியலுக்கும் நல்லது. தியறீயம்[8] பைறோசி[9]க்கும், துவர் மருந்து வேண்டிய மற்ற நோய்களுக்கும் இவைகளை வழங்கலாம்.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

உயர்சின்கனம். விலாரி. Hymenodictyon Excelsum. Cinchona excelsa. இது இந்துவில் வடசர்க்கார்ச் சோலைகளிலும் சென்னையின் மற்றும் பகுதிகளிலும் வளரும் பெரியமரம். பட்டையின்உட்பகுதி சின்கன[10]

---

1 Gum Acacia. 2 Mucilage, பிசின்பாணி. 3 Distilled. 4 Conium. 5 Iodum. 6 Acacia Catechu. 7 Tonsil. 8 Diarrhoea. 9 Pyrosis. 10 Cinchona.

Digitized By Roja Muthiah Research Library

த்துக்குரிய கைப்புத் துவர்ப்பு உடையது. சப்பினவுடன் இதின் கைப்புச் சுறுக்குத் தோன்றாது ஆயினும் மேற்தொண்டையில் நெடுக நிற்கும். பட்டையின் மெதுவான வெளிப்பகுதிக்குச் சுவை மெத்த இல்லை. இந்த மரத்தின் வகுப்பையும் இதின் பட்டையின் தன்மைகளையும் பார்க்குமிடத்து இது நயந்த மருந்தாகக் கூடுமென்று விளங்கலாம். இந்துவுக்குரிய அந்திஃரூடி[1] மருந்துகளை இனிமேல் ஆராயுமிடத்து இந்தப் பட்டையை முதற் கவனிப்பது தகும்.

வட்டவிலைச்சால்மரம். Nauclea Ovalifolia. இது கிழக்கு வங்காளத்திலுள்ள காட்டுமரம். இதின் பட்டைக்குச் சின்கனத்துக்குச் சரியான கைப்பு உண்டாம். அப்பகுதியார் தங்களுட் காணும் காய்ச்சல் கழிச்சல்களுக்கு இதை வழங்குவார்கள். இதை இன்னும் ஆராய்வது நலம்.

மருக்காளஞ்சேடி. Randia dumetorum .இது இந்துவின் மிகுதியான பகுதிகளில் உண்டாகும். இதின் காய் வமனத்தன்மை யுடையதாதலாற் சுதேசிகளால் மெத்த மதிக்கப்படுகிறது. இதின் உபயோகத்தைப் பற்றிப் பிதிவைத்தியர் பின்வரும் முறையை இந்நூல் சம்மிற்றிமாருக்கு எழுதியிருக்கிறார். மருக்காளங்காய் கொட்டைப்பாக்களவு பருமையும் உருண்டையுமானது. இரண்டு அறைகளும் பல கொட்டைகளும் உள்ளது. கலிசின்[2]விளிம்பு, மூடியாய் நிற்கும். இதற்கு ஓர்வகையான இனிய உவட்டுமணமுண்டு. சிலநாளைக்கு வைத்திருந்த பழத்தில் மணம் அதிகப்படும். மைசூரிலிருக்கும் வறிய சனங்கள் இந்தப் பழத்தை வமனியாய் வழங்குவது வாடிக்கை. இது நிச்சயமாயுங் கெதியாயுஞ் சேஷ்டிக்குமாம். நானும் இதைப் பலமுறைகளிற் கொடுத்துப் பதினைந்து மினிவரையில் வாந்தியெடுக்கக் கண்டேன். இதின் தேயம் நன்றாய் நசித்த ஒரேபழம். தேவையானால் திரும்பவுங் கொடுக்கலாம். இது அழற்றும் வமனி போலத் தோன்றுகின்றது. இந்தப் பழத்தை முன் கற்குத்தாவிலே சோதித்தவரையில் வமனியாக இதை மெத்த நம்பப்படாதென்று ஒஷானசி பண்டிதர் நினைத்தார். வயிற்றுக் கழிச்சலில் உவட்டிப்பை உண்டாக்குவதற்கு இதின் வேர்ப்பட்டைக் கஷாயம் சுதேசிகளால் வழங்கப்படுகிறதென்று ஏன்ஸ்லி சொல்லுகிறார். இதின் காய்களைத் துவைத்துத் தண்ணீரிற் போட அதிலுள்ள மீன்கள் வெறித்துச் சாகவுங்கூடுமென்றும் இதினால் அந்த மீன்களை ஆகாதென்று விடுகிறதில்லையென்றும் ரக்சுபேகர் சொல்லியிருக்கிறார்.

கும்பை. Gardenia lucida and gummifera. இந்துவின் பலபகுதிகளிலுள்ள இந்த மரத்தினின்று ஓர் ராளம்[3]வடியும். அது சற்றே பச்சை நிறமான கட்டிகளாகவிருக்கும். அதிலே ராளத்தோடு, பட்டை, தடி முதலிய அசுத்தங்களுங் கலந்திருக்கும். இந்த ராளத்தால் மூடப்பட்ட மரத்தடிகளுங் கடைகளில் விலைப்படும். மணம் ஓர்வகையான கெட்ட மணம். புண்களில் ஈகள் விழாமற் காப்பதற்கு இது வைத்தியசாலைகளில் உபயோகமாய்க் காணப்பட்டது. அந்திஸ்பசி[4]யாகவும் சுதேசிகளால் இது அதிகமாய் வழங்கப்படும். ஆயினும் உண்மருந்தாக இதின் உபயோகத்தைப்பற்றி ஒன்றும் நம்பிக்கையாய்த் தெரியாது. சிதகங்கிலுள்ள சனங்கள் கும்பைக் காயை விரேசனி, கிருமிகொல்லிகளாக வழங்குகிறார்களென்று ரக்சுபேகர் சொல்லியிருக்கிறார்.

---

1 Antiperiodic, [illegible] 2 Calyx. 3 Resin. 4 Antispasmodic.

Digitized By Roja Muthiah Research Library

மஞ்சிட்டி. Rubia Cordifolia. இதின் வேர், சாயங்காய்ச்சுவதற்கு அநேகமாய் வழங்கப்படும். இதில் மூன்று திரும்[1] வரைக்கு ஒருநாளிற் பலமுறை உட்கொண்டால் அது நரம்புமண்டல[2]த்தில் அதிகமாய்த் தாக்கி அந்நேரத்துக்கு அலட்டு முதலிய குணங்களை உண்டாக்குமென்றும் சராயுமண்டலத்[3]தைக் குழப்புமென்றும் பிளேவர்வைத்தியர் சொல்லியிருக்கிறார். மகமதியப்பெண்கள் பிரசவித்திருக்கையில் துவாலை குறைவாயிருந்தால் இந்த வேர்க்கஷாயத்தைச் குடிப்பார்களென்று ஏன்ஸ்லிபண்டிதர் சொல்லுகிறார்.

கீரிபுரண்டான். Ophiorhiza Munghos. இது இந்துவின் பல பகுதிகளிலுள்ள சிறிய பல வாட்டைப் பூண்டு. இதின் வேர் கடுங் கைப்பானதென்றும் தொனிக[4]மாய்ச் சோதிக்கப்படத் தகுந்ததென்றும் ரைற்று வைத்தியரும் மறுபேருஞ் சொல்லியிருக்கிறார்கள். பாம்புகடி விசர்நாய்கடி முதலியவற்றுக்கு நல்ல மருந்தென்று சுதேசிகளுக்குள்ளே இது மெத்தப் பேர் பெற்றிருந்தாலும் அதைப்பற்றி நம்பிக்கையானதொன்றுந் தெரியாது.

## வலீரியானியங்கள்.

## VALERIANEAE.

### வலீரியன் பூடு. VALERIAN.

வாசம். யுரோப்பம் அடங்கலும் ஈரிப்பானஇடங்களில் இது உண்டாகும்.

வாகடபகுதி. வேர். இது இரண்டுமூன்று இஞ்சு நீளமுள்ள ஏராளமான கூந்தல்களையுடைய குறுத்த, வெண்மஞ்சள் நிறமான, வேர்த்தண்டுகளாக வரும். கைப்புச் சுவையும் உறைத்த மணமுமுடையது. புது வேரின் மணம் நல்லதாயிருந்து, நெடுநாள் வைத்திருக்க நாற்றமாகும். வலீரியந் தேல்[5] என்ற ஓர் அத்திர[6]எண்ணெய்யே இதின் சத்து. மேலும் இதிலே வலீரல்[7] என்ற ஓர் தேலச்சத்தும் அடங்கியிருக்கும். இச்சத்துப் பரமாணுவிலே அச்சிரிப்[8]பதால் வலீரியனிக்கமில[9]மாக மாறும்.

தன்மைகள். ஸ்திமுலம்[10], அந்திபிருடி[11].

உபயோகம். இஸ்தேரி[12] நோய்க்கும் அதைச்சார்ந்த நோய்களுக்கும் இது உவந்த மருந்து. விசேஷமாய் இதின் வகுப்பைச் சேர்ந்த மற்றும் மருந்துகளோடு கலந்து கொடுத்தால் உவப்பு. எபிலெப்சி[13] கொரீயம்[14] என்ற நோய்களுக்கும் அந்த இனமான நோய்களுக்கும் இது அந்திஸ்பசி[15]யாக வழங்கப்படும். ஆயினும் நயங்காண்பது சந்தேகம். ஸ்திமுலமாக இது சுரங்களின் பிற்கால்கள், அசத்துவமான தாபிதங்கள்[16] முதலியவற்றுக்கு நயமென்று கண்டது.

தேயம். வேர்த்தூளில் இருபது முதல் நாற்பது கிறேன் கொடுக்கலாம். ஆயினும் இந்தவிதமாய் இதைக் கொடுப்பதரிது. கொடுப்பதற்கு உத்தமமான இதின் அத்திர தேலில் மூன்று துளி முதல் ஐந்து துளிவரைக்குக் கொடுக்கலாம்.

---

1 Drachm. 2 Nervous system. 3 Uterine system. 4 Tonic. 5 Valerian oil. 6 Volatile. 7 Valerole. 8 Oxidation. 9 Valerianic acid. 10 Stimulant. 11 Antiperiodic. 12 Hysteria. 13 Epilepsy. 14 Chorea. 15 Antispasmodic. 16 Inflammation.

17

Digitized By Roja Muthiah Research Library

**ரசிதங்கள்.** **வலீரியன் இன்பூசம்.** Infusion of Valerian. *கொள். இடித்த வலீரியன் வேர், நூற்றிருபதுகிறேன்; கொதிவெந்நீர், பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேர மூறவிட்டுத் தெளிக்கவும்.*

**தேயம்.** *ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு; அந்திஸ்பசக்[1] கலவைகளுக்கு இது ஓர் நல்ல கூட்டு.*

**வலீரியன் ரஞ்சம்.** Tincture of Valerian. *கொள். வலீரியன்வேர், பருக்கன் தூளாக. இரண்டரை அன்சு; புரூவுசீது[2] அரைநாழி. அடைத்தபாத்திரத்தில் வலீரியன் வேரைப் பதினைந்து அன்சு சீதோடு இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். பிறகு சியந்தனி[3]யில் இட்டு நீர் வடிந்தொழிந்தபின், மிச்சமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவம். அப்பாற் சக்கையைப் பிழிந்து அந்த நீரையும்வடித்து முன் வடித்த நீரோடு சலந்து அரைநாழிக்குப் போதிய சீதைக் கூட்டிக்கொள்ளவும்.*

**தேயம்.** *ஒரு திரும் முதல் இரண்டு திரும் கொடுக்கலாம்*

**வலீரியன் மோனரஞ்சம்.** Ammoniated Tincture of Valerian. *கொள். வலீரியன் வேர் பருக்கன்தூளாக இரண்டரை அன்சு; அமோனசுகந்தசீது[4], அரைநாழி. நன்றாய் அடைத்த சீசாவில் எழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி, அப்பால் வடித்து, பிழிந்து வடித்து அரைநாழிக்குப்போதிய அமோனசுகந்தசீது சேர்க்கவும்.*

**தேயம்.** *முப்பது மினிம்[5] முதல் ஒரு திருங் கொடுக்கலாம். பலவகையான இஸ்தேரிக்கு[6] இது நல்ல அந்திஸ்பசியாகும்.*

### *அவாகடச்சரக்குகள்.* Non-officinal.

**இமயவலீரியன்.** **Valeriana Hardwickii.** *இது இமயமலையின் உஷ்டணப் பகுதிகளிலுள்ள பூடு. வீறுன மணமுள்ள இதின் வேர் நேபாளத்திலும் வடஃகிந்துவிலும் மருந்துக்கு வழங்கப்படும். முற்காலத்தார் சொன்ன* Syrian Nard *என்பது இதின் வேராயிருக்கவேணுமென்று அடம்ஸ் வைத்தியர் சொல்லுகிறார். அந்திஸ்பசியாக இதை ஆராய்வது நல்லது.*

**ஜடாமாசி.** **Nardostachys Jatamansi.** *இது இமயமலையிற் குமையூன் தொடங்கிச் சிக்கிம் வரைக்கும் உண்டாகிற பூடு. இதின் வேர் பெருமபயற்றங்காயளவு பருமையான குறுந் துண்டுகளாக வரும். இதின் ஒரு தலைப்பிலாவது முழு நீட்டிலுமாவது பருக்கனான கறுத்த மயிர்போன்ற கூந்தல்கள் நிறைந்திருக்கும். இது பச்சூலி[7]த் தளிரையொத்த சுகந்த[8]மணமும் சுகந்த கைப்புச் சுவையுமுடையது. முன்னுள்ளோர் ஜடாமாசியென்றது இதைத்தானென்று ஜோன்ஸ பண்டிதரும் ரோயல் பண்டிதரும் இதின் வேரையிட்டு மட்டிட்டார்கள். வலீரிய[9]னுக்குரிய அந்திஸ்பசத் தன்மைகள் இதற்குண்டென்று இதின் மணம் சுவை முதலியவற்றைக்கொண்டு எண்ண ஏதுவாகும். ஒஷானசி பண்டிதர் தாம் பண்ணிய சோதனைகளைக்கொண்டு இது பூரணமாய் வலீரியனுக்குப் பதிலாகுமென்கிறார். எபிலெப்சி[10] இஸ்தேரி வலிகளுக்கு இந்தியர் இதை வழங்குவார்களென்று வீரி சொன்னதாக என்ஸ்லி குறித்திருக்கிறார். இந்த வகுப்பான நோய்களுக்கு இது செயலுள்ள மருந்தென்று எண்ண நியாயமுண்டு. சசருதம் என்ற ஆகப் பழய இந்திய வாகடத்தில் எபிலெப்சிக்குச் சொன்ன ஓர் மருந்திலே இது*

---

1 Antispasmodic. 2 Proof spirit. 3 Percolator. 4 Aromatic spirit of Ammonia. 5 Minim. 6 Hysteria. 7 Patchouli. 8 Aromatic. 9 Valerian. 10 Epilepsy.

Digitized By Roja Muthiah Research Library

கூடுகின்றது. ஜடாமாசி வேர் ஐந்து அவுன்சும் புருவுசீது[1] ஒருநாழியும் வீதமாகச் செய்த ரஞ்சம்[2] வங்காள வாகடத்துக்குரியது. அதின் தேயம் ஒரு திரும் முதல் இரண்டு திரும். அந்த நல்ல சரக்கை யின்னும் சோதிப்பது உத்தமம். இந்துதேசமடங்கலும் எக் கடைகளிலும் இதைச் சொற்ப கிரயத்துக்கு வாங்கலாம். கடைகளில் விற்கு மிச்சரக்கு மிகுதியாய்ப் பூச்சி தின்று பழுதாய்ப் போகிறபடியால் சோதனைக்கு நல்ல சரக்காய் வாங்க வேணும்.

## கம்பசிதங்கள்.

## COMPOSITAE.

### சீமைச்சாமந்திப் பூடு. CHAMOMILE.

வாசம். இது யுரோபம் அடங்கலும் வெளியான மக்கிகொண்ட மைதானங்கள் பொதுவான இடங்களில் உண்டாகும். இந்துவின் சில பகுதிகளிலுஞ் செய்யப்படும்.

வாகடபகுதி. பூக்கள். இவை ஒற்றையாயாவது இரட்டையாயாவது இருக்கும். ஒற்றையினத்தில் மஞ்சள் நிறக் குழலும் வெண் நிறக் கச்சும் போன்ற சிறிய பூக்கள் இருக்கும். இரட்டை இனத்தில் வெண்நிறக் கச்சுப்போன்ற சிறிய பூக்கள் மாத்திரம் இருக்கும். இவைகள் எல்லாம் கிண்ணம்போன்ற தகடான ஓர் மூலையினின்று கிளம்பும். இரண்டு இனங்களும் விசேஷமாய் ஒற்றை இனம் கைப்பும் மெத்தச் சுகந்தமுமானவைகள். இதின் சத்துக்கள் பின்னால் வரும் அத்திரஎண்ணெய்யும் கைப்பான ஓர் எசிருத்திவுமே.

தன்மை. ஸ்திமூல[3] தொணிகம்[4], காமினதி[5].

உபயோகம். பெலவீனம், இஸ்தேரி, குன்மம், இவைகளுக்கும், சீரண உறுப்புகளினது அல்லது பொதுவாய் உடம்பினது தத்துவம் குறைந்திருப்பவர்களுக்கும் இது உதவும். முன்னே இது முறைச்சுரங்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் சின்கன[6]மும்மற்றும் வீறுன அந்திபிருடி[7]களும் இதற்குப் பதிலாகக் கொள்ளப்படுகின்றன.

ரசிதங்கள். சாமந்தியின்வூசம். Infusion of Chamomile. கொள். சாமந்திப்பூ, அரை அன்சு; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில், பதினைந்து மினி[8] நேரம் ஊறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் ஒன்றரை அன்சு வரைக்கு நாள் இரண்டுமூன்று முறை தொணிகமாய்க் கொடுக்கலாம். வமனி மருந்துகளின் செயலுக்கு உதவியாக இந்தக் கஷாயம பெரும்பாலும் இளஞ்சூட்டிற் கொடுக்கப்படும். சுளுக்கு முதலியவற்றுக்கு வமன்ருஷ[9] மாகவும் வழங்கப்படும்.

சாமந்தித்தேல். Oil of Chamomile. இது சாமந்திப் பூவிற் திஸ்திலிக்கும் எண்ணெய். புதுக்கச் செய்த எண்ணெய் வெண்ணீலநிறமாயாவது பச்சை நீலநிறமாயாவது இருக்கும். படிப்படியாய் மஞ்சள் நிறமடையும். பூக்களுக்குரிய மணமும் சுகந்த சுவையும் இதற்கு உண்டு.

தேயம். ஒருதுளி முதல் ஐந்து துளியைச் சர்க்கரையிலாவது இமல்ச[10]

---

1 Proof spirit. 2 Tincture. 3 Stimulant. 4 Tonic, 5 Carminative, வாயுக்கொல்லி. 6 Cinchona, 7 Antiperiodic, 8 Minute, 9 Fomentation, 10 Emulsion.

Digitized By Roja Muthiah Research Library

த்திலாவது விட்டுக் கொடுக்கலாம். குன்மத்தோடு கூடிய வாயுப்பொருமலுக்கும் வாயுப் பொருமலைப்பற்றிய குத்துக்கும் இதைவிட நயந்த மருந்து அரிது.

சாமந்திமேசிறுத்து. Extract of Chamomile. கொள். சாமந்திப்பூ, ஒரு இருத்தல்; சாமந்தித்தேல், பதினைந்து மினிம்; தண்ணீர் ஒரு கலன். தண்ணீர் அரைவாசியாய் வருந்தனையும் சாமந்திப் பூவை அவித்து, சீலையில் வடித்து வடித்த நீர் குளிகைக்குத் தகுந்த பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில்[1] அதை வறட்டிக் கடைசியில் சாமந்தித் தேலைச் சேர்க்கவும்.

தேயம். ஐந்து முதற் பத்துக் கிறேன். குன்மம் முதலிய நோய்களுக்குக் கொடுக்க மற்றும் தொணிகங்களுக்கு இது நல்ல துணைமருந்து.

[சாமந்திப்பூ இந்திய கடைகள் மிகுதியானவற்றில் வரும். யுரோப சாமந்திப் பூவுக்கு இது நல்லபதிலாகும்.]

## சந்துனின்பூடு. SANTONICA.

வாசம். ருசியம் என்பதே எண்ணம்.

வாகடபகுதி. சிறுக் கொட்டையைப் போன்ற மலராத பூமுகைகள். இவைகள் ஒரு லீனுக்குக் கதித்த நீளமும் அரை லீன் அகலமும், நுண்ணிய நெல்மணிச் சாங்கமுமாய் இரு தலைப்பும் மழுங்கி வெண் பச்சையான கபிலநிறங்கொண்டு அழுத்தமாயிருக்கும். இவைகள் பச்சையான நடுப்புருவமுள்ள நுண்ணிய கவிந்த சுருண்ட மடல்களையும் அவைகளுக்குள்ளே குழலான நாலு ஐந்து பூக்களையும் அமைத்திருக்கும். மணம் வீறுனது; சுவை கைப்பும் கர்ப்பூரம் போன்றதுமாகும். சோதனை. பூமுகைகள் உருண்டையல்ல, மயிருள்ளவைகளுமல்ல. இதினுல் இதை வல்காரி ஆர்திமீசி[2] அப்சிந்திய ஆர்திமீசி[3] என்ற பூண்டுகளின் பூமுகையல்லவென்று அறியலாம். இதின் சத்துப் பின்வருஞ் சந்துனின் என்ற கிறிஸ்த[4]லான தடஸ்த[5] பொருளே.

தன்மை. அந்தெல்மிந்தி[6].

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திருமை ஒரு இரவும் மற்றநாட்காலமேயுங் கொடுத்து நாலைந்து மணித்தியாலமானபின் விரேசனங் கொடுக்கவேணும்.

ரசிதம். சந்துனின். Santonin. இதைக் குறிக்குஞ்சின்னம் கா[15] ஐ[18] அ[3]. இது சந்துனின்பூண்டிலிருந்தெடுக்குங் கிறிஸ்தலான தடஸ்தசத்து. இது நிறமற்ற தட்டையான ரம்பம்[7] என்ற வடிவையுடைய பிரிசங்[8]களாகவிருக்கும். சற்றே கைப்புள்ளது, மட்டானசூட்டுக்கு உருகி குடிபோகக்கூடியது, சொற்பசூட்டிற் பஸ்மமாகும். தண்ணீரிற் கரைவதரிது. கொதிநீரிற் சொற்பமாய்க் கரையும். குலோறுவா[9]மிலுங் கொதிக்கிற திட்டசீதி[10]லும் தாராளமாய்க்கரையும். வெய்யிற்படமஞ்சள்நிறமடையும். கிருசமினிறலமிலங்க[11]ளிற் கரையாது. பரமாணுவோடு செஞ்சூடுபட இது முற்றுய் அழிந்துபோகும்.

தஸ்மை. அந்தெல்மிந்தி.

உபயோகம். கீரைப் பாம்புகளைக் கொல்லுவதற்கு இது சீக்கரத்தில்

1 Woter-bath. 2 Artemisia Vulgaris. 3 A. Absinthium. 4 Crystal. 5 Neutral. 6 Anthelmintic, கிருமிகொல்லி. 7 Rhomb. 8 Prism. 9 Chloroform, 10 Rectified spirit, 11 Diluted Mineral acid.

Digitized By Roja Muthiah Research Library

நன்ருய்ச் சித்திக்கும். இக் கிருமிகள் குடலில் இருப்பதைப்பற்றியுண்டாகிற கொரீயம்[1] இஸ்தேரி[2] யென்ற நோய்களுக்கும் குழப்பமான மற்றும் வலிகளுக்கும் இது உவந்தது. இதைத் தின்றபின் பார்வை மஞ்சள்நிறமாவதைப் பிடித்து அமரோசி[3]க்கும் மற்று நயனரோகங்களுக்கும் இது வழங்கப்பட்டாலும் நயமுண்டாகவில்லை. முறைச் சுரங்களுக்குக் கினியத்[4]துக்குப் பதிலாக இது கொடுக்கப்பட்டாலும் நயங்கண்டது சந்தேகம்.

தேயம். நாலுவயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இரண்டு கிறேன் முதல் நாலு கிறேன் கொடுக்கலாம். பன்னிரண்டு வயசுக்கு மேற்பட்டவர்களுக்கு ஆறு முதல் எட்டுக்கிறேன் கொடுக்கலாம். சமபங்கு சர்க்கரையோடாவது, சர்க்கரைப் பாணியோடாவது கலந்து கொடுக்கவும். ஒரு இரவும் மற்றநாட் காலமேயும் ஒவ்வொரு தேயங் கொடுத்துச் சில மணிவேளையால் ஒரு தேயம் ஆமணக்கெண்ணெய் கொடுப்பதே உத்தமமான முறை.

## ஆணிகப்பூடு. ARNICA MONTANA.

வாசம். யுரோப்பத்தின் மையப்பகுதி தென்பகுதி மலைகளில் இப்பூடு உண்டாகும்.

வாகடபகுதி. வேர். இது ஒரு இஞ்சு முதல் மூன்று இஞ்சு நீளமும், இரண்டு மூன்று லீன் பருமையுமாய்த் திரண்டு முறுகின வேர்த் தண்டுகளாக வரும். காய்ந்து விழுந்த இலைகளின் தழும்புகளால் முரணும். ஏராளமான நீண்ட மெல்லிய கூந்தல் இதில் இருக்கும். ஓர்வகை மணமும் காரமான சுவையுமுடையது. ஆணிசின்[5] என்ற ஓர் அல்கலைடு[6]மும் சைதிஸி[7]னைப் போன்ற கைச்சற்காரமான ஓர் எசிறுத்திவு[8]மே இதின் சத்துக்கள்.

தன்மைகள். ஸ்திமுலய்[9]. அதிதேயத்தில் மயக்கழற்சி[10] நஞ்சு. வெளியிற்பூசினுற் செரதீவ[11]மும் ரிசோல்வெனு[12]மாகும்.

உபயோகங்கள். சோர்வுகள், சன்னிச்சுரங்கள், அசத்துவ திசந்தெரி[13], அமரோசி, முதலிய நோய்களுக்கு இது நயந்ததென்று கொடுக்கப்படும். ஆயினும் பிறித்தனி வைத்திய முறைப்படி சுளுக்குகள், நசிவுகள், நோக்களுக்குப் பூச்சுமருந்தாக மாத்திரம் இதின் ரஞ்சத்தை வழங்குகிறார்கள்.

தேயம். வேர்த் தூளில் ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் கொடுக்கலாம்.

ரசிதங்கள். ஆணிகரஞ்சம். Tincture of Arnica. கொள். ஆணிகவேர், பருக்கன் தூளாக, ஒரு அன்சு; திட்டசீது[14], அரைநாழி. மூடியபாத்திரத்தில் ஆணிக வேர்த்தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப் போட்டு இடைக்கிடை குலுக்கவும். பிற்பாடு சியந்தனி[15]யில் வார்த்து நீர் வடிந்தொழிந்தபின் மிச்சமாயிருக்கிற ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய சீதைக் கூட்டவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திருங் கொடுக்கலாம். வெளிப்பூச்சே இதின் முக்கியமான வழக்கம்.

---

1 Chorea. 2 Hysteria. 3 Amaurosis. 4 Quinia. 5 Arnicine. 6 Alkaloid. 7 Cytisin. 8 Extractive. 9 Stimulant. 10 Narcotico-irritant. 11 Sedative, சாந்தனி. 12 Resolvent. 13 Dysentery. 14 Rectified spirit. 15 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

## தரக்சகப் பூடு. TARAXACUM.

வாசம். இந்தப் பூடு யுரோப மடங்கலும் மத்திம ஆசியத்திலும் உண்டாகும். இமய மலையடங்கலும் மிகுதியாயுண்டு. இந்துவிற் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. வேர். இது மாசி முதற் புரட்டாசி வரைக்குங் கிண்டப்படும். இது மூல வேர்ச் சாங்கமானது, அழுத்தமானது, வெளியிற் கருங்கபிலநிறம், உள்ளுக்கு வெண்மை, இலகுவில் முறியும். முறிக்க, மணமற்ற கைச்சலான பால் இதில் வரும். காற்றுப் பட இந்தப் பால் வெண்கபிலநிறமாகும். அதின் இலைகள் பிடித்திருக்கில் அவை வாள்போன்று மெத்த அழுத்தமாயிருக்கும்.

தன்மை. அல்திறவ தொனிகம்[1], பித்தக்கினி[2].

உபயோகம். அசீரணத்துக்கும், காலிகமான ஈரல்நோய்களுக்கும் விசேஷமாய் ஈரலின் தொழிற்சுணக்கம், கஞ்செஸ்தம்[3], செங்கண்மாரிகளுக்கும், இது கொடுத்து நயங்கண்டது. குடற்பிசகு ஈரற்பிசகுகளோடு கூடிய காலிகமான சருமநோய்களுக்கும் இது நல்லது.

ரசிதங்கள். தரக்சகதிராக்தம். Decoction of Taraxacum. கொள். காய்ந்த தரக்சக வேர் நறுக்கி இடித்து ஒரு அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி நேரம் அவித்து வடித்து வடித்த நீர் அரைநாழியாய் வரப் போதிய திஸ்திலித்த[4] நீரை வடியிலுள்ள சக்கையின் மேல் வார்க்கவும்.

தேயம். இரண்டு முதல் நாலு அன்சு கொடுக்கலாம்.

தரக்சகவெசிறுத்து. Extract of Taraxacum. கொள். பச்சைத் தரக்சக வேர், நாலு இருத்தல். வேரைத் துவைத்துப் பிழிந்து சாற்றை அடையவிட்டுத் தெளிந்த நீரை 212 பாகை சூட்டிற் காய்ச்சிப் பத்துமினி வரைக்கு அச்சூட்டிலிருக்க விட்டிருந்து சீலையில் வடித்துக் குளிகைக்குத் தகுந்த பதமாய் வருந்தனையும் 160 பாகைக்குக் கதிக்காத சூட்டில் நீர்மத்திகத்[5]தில் வறட்டவும்.(43)

தேயம். பத்து முதல் முப்பது கிறேன். நாள் மூன்று நாலுமுறைகொடுக்கலாம். அதிகமாகவுங் கொடுக்கலாம்.

தரக்சகச் சாறு. Juice of Taraxacum. கொள். பச்சைத் தரக்சகவேர், ஏழு இருத்தல்; திட்டசீது[6] போதியது. தரக்சக வேரைக் கல்லுரலிற் துவைத்துச் சாற்றைப் பிழிந்து மூன்று பங்கு சாற்றுக்கு ஒருபங்கு வீதமாய்ச் சீதுசேர்த்து ஏழுநாள் வைத்திருந்தபின் வடித்து குளிர்மையான இடத்திற் பேணவும்.

தேயம். ஒரு திரும் முதல் மூன்று திருங் கொடுக்கலாம்.

## லக்தூகம் LACTUCA VIROSA. LETTUCE.

வாசம். இப்பூண்டு யுரோபத்திலுண்டாகும்.

வாகடபகுதி. பூக்கும்பூடு. பின்னால் வரும் எசிருத்து இதிலிருந்தெடுப்பதால் இது வாகடபகுதியாகின்றது.

---

1 Alterative tonic. 2 Cholagogue. 3 Congestion சஞ்சயம். 4 Distilled. 5 Water-bath. 6 Rectified spirit.

(43) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

ரசிதம். லக்தூகவெசிறுத்து. Extract of Lettuce. கொள். பூக்கிற லக்தூகப் பூடு, நூற்றுப் பன்னிரண்டு இறாத்தல். கல்லுரலிற் றுவைத்துச் சாற்றைப் பிழிந்து, 130 பாகை வரைக்கும் படிப்படியாய்க் காய்ச்சி, பச்சையான நிறப் பதார்த்தத்தைக் காரிக்கம்புடைவையில் வடித்து வேறாக்கவும். வடித்த நீரை அல்புமினை[1] உறைவிப்பதற்கு 200 பாகை சூட்டிற் காய்ச்சி மறுபடியும் சீலையில் வடிக்கவும். அப்பால் அது மெல்லிய பாணிப் பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்[2]தில்வறட்டி, அதின்பின் முன் வேறாயெடுத்துவைத்த பச்சையான நிறப்பதார்த்தத்தையுங் கூட்டி முழுவதையுந் திறமாய்க் கலக்கி குளிகைக்குத் தகுந்த பதமாய் வருந்தனையும் 140 பாகைக்குக் கதிக்காத சூட்டில் வறட்டவும்

தன்மை. தண்மையான செரதிவம்[3], அனுடைன்[4], அந்திஸ்பசி[5].

உபயோகம். கசம். புறங்கிது[6], ஈளை, குக்கல்களில் இருமலைத் தணிப்பதற்கு இது வழங்கப்பட்டும் நயங்கண்டது சந்தேகம். மேலும் வாதம் பைத்தியம் விந்துக்கழிச்சல், நீர்க்கோவை முதலியவற்றுக்கும் இது கொடுக்கப்படும்.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேன்.

[கற்குத்தாவிற் செய்த ஓர் லக்தூகவெசிறுத்தைத் தாம் சோதித்துப் பார்த்ததாகவும் ஆறு கிறேன் தேயத்தில் அது நல்ல அனுடைனாகிறதாகவும் ஒஷாணசி பண்டிதர் சொல்லியிருக்கிறார். இந்துவில் இச் சரக்கின் பிரயோகத்தைப்பற்றி கிறகம் பண்டிதர் நயப்பான சில குறிப்புகள் சொல்லியிருக்கிறார்.]

## அக்கிராக்காரம். PELLITORY OF SPAIN.

வாசம். இது வட ஆபிரிகத்திலுண்டாகும். அங்கிருந்து தென் யுரோபத்துக்குங் கொண்டுபோகப்பட்டது.

வாகடபகுதி. வேர். இது மினுக்கமான கறுத்தப் புள்ளிகள் விழுந்த தடித்த கபிலநிறப் பட்டையால் மூடப்பட்டதாய்ச் சின்ன விரலளவு நீளம் பருமையுள்ள துண்டுகளாக வரும். ராளம்[7] போல முறியும். உள்ளே மையம் நோக்கிய வரைகள் காணும். சப்பினால் நா, உதடுகளிற் சுணைத்துக்காரும். இதின் சத்து பைரீத்திரின்[8] என்ற காரமான ராளத்திலிருக்கும்.

தன்மை. ஸ்திமுலம்[9]; தோலில் அணைத்தால் அழற்றிச் சிவக்கப்பண்ணும்.

உபயோகம். பற்கொதி, உண்ணாக்கு, தன்சில்கள் இளகுதல் சிலவகையான குரலின்மை, நாச்சோர்வு இவைகளுக்கு இதைத் தானிக[10]மாயிட்டால் நயங்காணும்.

ரசிதம். அக்கிராக்காராஞ்சம். Tincture of Pellitory. கொள். அக்கிராக்காரவேர், பருக்கன் தூளாக, நாலு அன்சு; திட்டசீது[11] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் அக்கிராக்கார வேரைப் பதினைந்து அன்சு சீதிலே போட்டு இடைக்கிடை குலுக்கி இரண்டுநாளூறவிடவும். அப்பாற் சியந்தனி[12]யில் இட்டு நீர் ஒழுகித் தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

---

1 Albumen. 2 Water-bath. 3 Sedative. 4 Anodyne. 5 Antispasmodic. 6 Bronchitis. 7 Resin. 8 Pyrethrin. 9 Stimulant. 10 Local 11 Rectified spirit. 12 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

இது விசேஷமாய் பற்கொதிமுதலியவற்றுக்கு இடப்படும்.

[அக்கிராக்கார வேர் இந்துவின் பெரிய கடைகளில் மிகுதியானவற்றில் வரும். இது அரபியிலிருந்து பம்பாய்வழியாய் வந்திருக்கவேணும்.]

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**காட்டுச்சீரகம்.** Vernonia anthelmintica. இது இந்துவடங்கலும் கிராமங்களையடுத்த காட்டிடங்களில் உண்டாகும். எக்கடைகளிலும் வாடிக்கையாய்க் கிடைக்கும். இதின் கொட்டை அரைக்கால் இஞ்சு நீளமும் கருங் கபிலநிறமுமாய் ஐதான வெண்மயிரால் மூடப்பட்டுத் திரண்டு, அடி கூராயிருக்கும். வெளிறலான புருவங்கள் பத்துவரையில் நெடும்பாட்டுக்குண்டு. சுருங்கின கபில்நிறமான தகடாகிய வேரர் வளையம் நுனியிலிருக்கும். சுவை உவட்டிப்பான கைப்பு. இக்கொட்டை கீரைப்பாம்பைக் கொல்லுமென்று சுதேசிகளுக்குள்ளே பெரும்பெயருண்டு. இதைக் கொடுக்கக் கீரைப்பாம்புகள் செத்துக் கழியுமென்று சொல்லப்பட்டிருப்பதால் இவைகளில் அது விசேஷமாய்ச் சேஷ்டிக்கிறதென்று விளங்குகின்றது. இடித்த கொட்டையில் ஒன்றரைத் திரும்வரைக்குத் தேனிற் குழப்பி, இரண்டு தேயமாக்கிச் சிலநாளிகைக்கு முன்னும் பின்னுமாய்க் கொடுத்து பிற்பாடு ஓர் விரேசனங் கொடுப்பதே முறை. இடித்த கொட்டையில் பத்துமுதல் முப்பது கிறேனைக் கஷாயங்காய்ச்சிக் கொடுத்தால் கீரைப் பாம்பைக் கொல்லுவதற்கு நிச்சயமான நல்ல மருந்தாகுமென்று ரோசுவைத்தியர் சொல்லுகிறார். இத்தன்மையை இன்னுஞ் சோதிப்பது நல்லது. திருவாளங்கோட்டில் இக் கொட்டையை எலுமிச்சஞ் சாறுவிட்டுப் பசையாயரைத்துப் பேன்கொல்லியாய் வழங்குவார்கள். கிப்சன் வைத்தியர் இதைத் தாமே சோதித்துக் கண்டவரையில் இருபது இருபத்தைந்து கிறேன் தேயத்தில் நல்ல தொணிக[1]மும் ஸ்தொமாகி[2]யுமாகுமென்று எண்ணுகிறார். இதற்கு அமுரிதித்தன்மை[3]யுமுண்டென்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

**மாசிபத்திரி.** Artemisia Indica. இது இந்துவின் மலைகளிற் சாதாரணமாயுண்டாகும் பூடு. வல்காரி ஆர்தமீசி[4]ப் பூண்டின் மணஞ் சுவைக்கு வித்தியாசமல்லாத இதின் வீறான சுகந்த மணமும் கைப்புச் சுவையும், இதற்கு ஸ்தொமாகித்தன்மை தொணிகத்தன்மைகள் உண்டென்று காட்டும். இப்பெயர்ப்பட்ட தன்மை இதற்குண்டென்று தென்னிந்துவின் சனங்கள் எண்ணுகிறார்களென என்ஸ்லிபண்டிதர் சொல்லியிருக்கிறார். பெலவீனத்தோடுகூடிய சிராநோய்கள்[5] ஸ்பச[6] நோய்களுக்கு இதின் இலைகளும் தளிர்களும் கொடுக்கப்படுகின்றனவென்றும் காதனப்[7] புண்களுக்கு இவற்றின் கஷாயம் வமன்ருஷ[8]மாய் வழங்கப்படுகிறதென்றும் வைற் பண்டிதர் சொல்லுகிறார். இலைகள் மொகைகளின் கஷாயம் நல்ல லேசான ஸ்தொமாகி தொணிகமென்று ஸ்துவாட்டு பண்டிதர் சொல்லுகிறார்.

**கூரிலைப்பேர்திலோசம்.** Berthelotia lanceolata. இது சிந்து பஞ்சாப்புக்கும் மத்திய இந்துவின் மழை குறைந்த பகுதிகளுக்குமுரிய பூடு. இதின் இலை சுகவிரேசனி. இது கிலவாகைக்கு உத்தம பதிலாகுமென்று

---

1 Tonic. 2 Stomachic. 3 Diuretic. 4 Artemisia Vulgaris. 5 Nervous. 6. Spasmodic. 7 Phagedenic ulcer. 8 Fomentation.

Digitized By Roja Muthiah Research Library

காலஞ்சென்றுபோன வல்கனர் சொல்லியிருக்கிறார். இது பெருகளர்வா[1]வின் இலையைப் போலத் தோற்றும்.

பெரும்பூநோதோனி. Notonia grandiflora. இது சென்னையிற் கல்மேட்டிலுண்டாகும். இதிலே செண்டுநோதோனி N. Corymbosa என்றது பல பூவுள்ள ஒருவகை. இது ஐருவோபி[2]யென்ற பயங்கர நோய்வராமற் றடுக்கும் மருந்தென்று 1860 ஆண்டு கிப்சன் வைத்தியரால் வெளிவிடப்பட்டது. இதைக் கொடுக்கும் வகையாவது: பச்சையான காம்புகளில் நாலு அஞ்சு வரைக்கு எடுத்து அரைநாழி தண்ணீரில் ஒரு இரவைக்கு ஊறவிட்டுப் பிழிந்தால் பிசுபிசுப்பான சாறு கொஞ்சம் வரும். அதை அந்தத் தண்ணீரோடு கலந்து கொடுக்கவும். இன்னுங் கொஞ்சச் சாற்றை மாவோடு சேர்த்துத் திரளையாக்கி அன்று சாயங்காலங் கொடுக்கவும். இந்த மருந்துகளை இப்படி மூன்றுநாளைக்கு அடுத்துக் கொடுக்கவும். விசர்நாய் கடித்த பலருக்கு இந்த மருந்து கொடுத்துச் சோதிக்கப்பட்டதென்று, கிப்சன் வைத்தியர் அதிகார ஏவலின்படி எழுதினவற்றால் விளங்குகின்றது. ஆயினும் விசர்நாய் கடித்த அனேகருடைய காயத்துக்குக் காரமும் போட்டபடியால் அந்நோய் வராமற் காப்பதில் இம்மருந்தின் சித்தி எவ்வளவென்று பகுத்தறிவது பிரயாசம். இன்னுஞ் சோதித்தால் அறியலாம்.

ககாலிக்கிலைனிப்பூடு. Cacalia Kleinia. இந்தப் பூண்டிலிருந்துண்டாகிற சரக்கே குசபான் என்னும் பேருடன் கடைகளில் விலைப்படுவதென்று ஏன்ஸ்லி பண்டிதரும் அவருக்குப் பின் இந்தியபதார்த்தசாரத்தை எழுதியிருப்பவர்களும் எண்ணுகிறார்கள். இதில் இரண்டு பிழையிருக்கவேணும். 1 லீனியஸ் சொல்லுகிற C. Kleinia என்பது இந்துவில் அல்லக் கனேரித் தீவிலுள்ள ஓர் பூண்டு. 2 குசபான் என்ற இலையும் பூவுமான சரக்கு முடீன்செறீவு என்பவராற் கம்மிற்றிமாருக்கு அனுப்பப்பட்டபோது அது எகியம் என்ற மரத்திலுண்டாகிறதென்று வைற்று தம்சன் பண்டிதர்கள் அதைப்பற்றி நிதானித்தார்கள்.

அயப்பனை. Eupatorium Ayapana. இது தென்னமரிகத்துக்குரிய பூண்டு. இந்து, யாவம், இலங்கைகளின் பல பகுதிகளில் உண்டாக்கப்பட்டிருக்கின்றது. சொற்ப வேற்றுமையுடன் அயப்பனையென்ற பிரேசிற் பெயராற் பொதுவாய் வழங்கும். பூண்டு முழுவதும் சொற்ப கைப்புத் துவர்ப்புச் சுவையுடன் கூடிய சுகந்த முடையது. இதின் சயத்தைப்பற்றி முன்கொண்டிருந்த பெருமெண்ணங்கள்ஒழிந்தன. ஆயினும் இது நல்ல ஸ்திமூலம்[3] தொணிகம்[4] சுவேதனி[5] யென்று நம்ப நியாயமுண்டு. மோரீசு தீவிலுள்ள மருந்துப் பூண்டுகளுள் இதுவும் முதன்மையானதாய், குன்மம் மற்றுங் குடல்கள் சுவாசப்பைகளின் நோய்களுக்குக் கஷாயமாக அங்கே நாள்தோறும் வழங்கப்பட்டதாக புதானர் எழுதியிருக்கிறார். அத்தீவில் 1854 ம், 1856 ம் ஆண்டுகளில் உண்டாகிப் பரம்பிய வாந்திபேதியில் தேக அனல் மந்த இரத்தோட்டம் முதலியவற்றை அருட்டுவதற்கு இது அதிகமாய் வழங்கப்பட்டது. பாம்பு கடிக்கு மாற்றாக இது உள்ளுக்கும் வெளிக்கும் வழங்கிச் சித்திபெற்றதாம். இதின் துவைத்த இலை, நாற்றமான கெட்ட புண்களுக்குத் தாமறிந்தவரையில் உத்தமமருந்தென்று ஏன்ஸ்லி சொல்லியிருக்கிறார். புதானரும் நயமென்கிறார். இலையின் திகாக்தம்[6] வமன்றூஷ[7]த்

1 Salvadora Indica, 2 Hydrophobia 3 Stimulant, தீவனி. 4 Tonic 5 Diaphoretic. 6 Decoction. 7 Fomentation.

18

Digitized By Roja Muthiah Research Library

துக்கு நல்லது. இந்தப் பூண்டு நயந்ததானாலும் அசட்டைபண்ணப்பட்டிருக்கிறதுபோற் தோற்றுகின்றது.

**கோஷ்டம்.** Aplotaxis auriculata. இது இமயமலையின் வடமேற்குப் பகுதிகளிலுண்டாகும் பூடு. முன்னுள்ளோர் கஸ்தஸ் அரபிகசு என்று சொன்னது இதைத்தானென்று வல்கனர் முதன்முதற் காட்டினார். ரையில் வைத்தியரும் இந்துக் கடைகளில் இதை முன்னமே மட்டிட்டிருந்தார். ராசவறம் என்ற இடத்தில் அவின் உண்டாக்கப்படமுன் இந்த வேர் ஸ்திமுல[1]மாக அதிகமாய்ப் புகைக்கப்பட்டதென்றும் இப்படிப் புகைக்கையில் மஸ்தாகிறதென்றும், புகைக்கிறதற்காக முன்னே சீனத்துக்குக் கனமாய் ஏற்றப்பட்டதென்றும், ஏர்வின் பண்டிதர் சொல்லியிருக்கிறார். இதின் வாசனை, சீலைக் கட்டுகளைப் பூச்சியரியாமற் காக்கும்.

**சாமந்தி.** Chrysanthemum Roxburghii. இது இந்துதேசமடங்கலுந் தோட்டங்களில் உள்ள பூடு. இதின் காய்ந்த பூவைச் சப்ப நாவில் ஒருவகையாய் உறைக்கும். இப் பூக்கள் மருந்துகளிற் சீமைச் சாமந்திப் பூவுக்குப் பதிலாகுமென்று தல்செல், கிப்சன் பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இதின் வேர் அக்கிராக்கார[2] வேரைப் போல உறைக்கும்; அதற்காக இதை வழங்கலாம். தெக்கண தேசத்தார் கனுநீய நோய்க்கு இப்பூண்டை மிளகோடு கூட்டிக் கொடுக்கிறார்கள்.

**பெருந்பிளுமீயப்பூடு.** Blumea grandis. இது பிரமதேசத்திலுள்ள பாழ்நிலங்களில் ஏராளமாயுண்டாகும். சில வருஷங்களுக்கு முன்னே ஒற்லியென்பவர் இதிலிருந்து நூறு இருத்தலுக்கதிகமான கர்ப்பூரம் எடுத்தார். அது சீனதேசத்திலிருந்து வருங் கர்ப்பூரத்துக்குச் சரியானதென்று கற்குத்தாவிலுள்ள அதிகாரிகள் தீர்த்தார்கள். ரீன வைத்தியர் பிரமதேசத்தில் இப்பூண்டைச் சோதித்துப்பார்த்தவரையில் அவ்வளவு கர்ப்பூரம் இதிலிருந்து வரக்கூடியது சந்தேகமென்கிறார்.

**பிளுமீயபல்சப்பூடு.** Blumea balsamifera. மலாக்கா இலங்கைத்தீவுகளிலும் இந்தவின் பல பகுதிகளிலுமுள்ள இந்தப் பூண்டு வீறான கர்ப்பூரமணமும் கார்ப்பான சுவையுமுடையது. சூடான இதின் கஷாயம் அதிகமாய் வேர்க்கப்பண்ணுமென்றும், யாவகர் சீனருக்குள்ளே இது எக்ஸ்பெக்துற[3]மாய்ப் பெரும்பாலும் வழங்குகின்றதென்றும், அஷ்வீல்டு வைத்தியர் சொல்லியிருக்கிறார். சமறங்கில் வைத்தியஞ் செய்கிற யுரோப வைத்தியர் சிலர் தாங்கள் கதார்[4] நோய்களுக்கு இதை வழக்கமாய்க் கொடுத்திருக்கிறோமென்று அஷ்வீல்டருக்குச் சொல்லியிருந்தார்கள். கொச்சின்சீனத்தில் இது ஸ்தொமாகி[5] அந்திஸ்பசி[6] எம்மெனகக்காக[7] வழங்குகிறதென்று லூறைரு சொன்னார்.

**கரிசலாங்கண்ணி.** Eclipta prostrata. இது இந்துவடங்கலும் ஈரமான இடங்களிலுள்ள பூண்டு. இதின் வேருக்கு விரேசன வமனத்[8]தன்மைகள் உண்டாம். ஈரல் பிளிகை[9]களின் நோய்களுக்கும் நீர்க்கோவைக்கும் இது கொடுக்கப்படுகிறதென்று சிமிது வைத்தியரும் வுட்டரும் முடீன்செறீவு, ஐயாசுவாமியென்ற சுதேச வைத்தியருங் குறித்திருக்கிறார்கள். வுட்டர் தாம் இதின் தன்மையைப்பற்றி அறிந்தவரையில் ஈரல் நோய்களுக்குத்

1 Stimulant, தேலி. 2 Pyrethrum. 3 Expectorant கிசேட்வனி. 4 Catarrh. 5 Stomachic, சோசனி. 6 Antispasmodic, 7 Emmenagogue, 8 Emetic. 9 Spleen,

Digitized By Roja Muthiah Research Library

தரக்சக[1]த்தைப்பார்க்க இது அதிகம் உபயோகமானதாய்க் காணப்படுமென் கிறார். சாற்றைப் பிழிந்துகொடுப்பதே உத்தமமான முறையாகும்.

## லோபீலியாசியங்கள்.
## LOBELIACEAE.
### லோபீலிப்பூடு. LOBELIA.

வாசம். வட அமரிகத்திற் கனடம் துவங்கி கருலீனம் வரைக்கு இது உண்டாகும்.

வாகடபகுதி. பூக்கும்பூடு. இது பெரும்பாலும் நீண்ட சதுரமான கட்டுகளாக இங்கிலந்துக்கு ஏற்றப்படும். இதின் லட்சணங்களாவன: தாள் கோணம் விழுந்தது; இலைகள் முட்டை வடிவும், கருக்கானதும், கீழ்வளத்தில் மயிருள்ளதுமாய்க் காம்பிலே மாறி மாறி ஒன்றைவிட்டொன்று ஒழுங்காய் நிரைந்திருக்கும். பொத்தி முட்டைவடிவாய் ஊதிப் பத்துப் புருவங்கள் உள்ளதாயிருக்கும். மணங் கேட்ட உவட்டு மணம். சுவை கார்ப்பும் எரிவுமானது. இதின் சத்துக்கள் ஓர் அத்திர[2]எண்ணெய்யும் லோபீலின்[3] என்ற கார்ப்பான அல்கலைப்[4] பதார்த்தமுமே. இவைகளைத் தவிர இதிலே கார்ப்பான ஓரிராள[5]மும் லோபீலிக்கமிலம்[6] என்ற ஓர் அமிலமும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது வமனி[7] செரநீவம்[8], சுவேதனி[9], எக்ஸ்பெக்துறம்[10], அந்திஸ்பசி[11]. பெருந்தேயத்தில் வீறுன மயக்கழற்சி[12]நஞ்சு.

உபயோகம். ஸ்பசசுவை[13], அஞ்சீனபெக்துசு[14], குக்கலின்காலிகபாதம்[15], காலிகபுறங்கீது[16], நுமோனி[17]இவற்றில் இது இருமல் முட்டைத் தணித்துச் சளியை இளக்கி மெத்த உபயோகமானதாகும்.

தேயம். இலைத் தூளில் ஒரு கிறேன் முதல் ஐந்து கிறேன் கொடுக்க செரநீவம், சுவேதனி, எக்ஸ்பெக்துறமாகும். பதினைந்து முதல் இருபது கிறேன் கொடுக்க வமனியாகும். வமனியாகச் சேஷ்டிக்கு நிச்சயத்திலும் பதனத்திலும் இது இபிகாக்குக்குக்[18]குறைந்தது.

ரசிதங்கள். லோபீலிரஞ்சம். Tincture of Lobelia. கொள். லோபீலிப்பூடு பருக்கன் தூளாக இரண்டரை அன்சு; புருவுசீது[19]அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் லொபீலியைப் பதினைந்து அன்சு சீதிற்போட்டு இடைக்கிடை குலுக்கி, இரண்டுநாளைக்கு ஊறவைத்துப் பிற்பாடு சியந்தனி[20]யில் இட்டு நீர் வடிந்தபின் மிச்சமான ஐந்து அன்சு சீதையும் விட்டுவடிக்கவும். பிற்பாடு சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புருவுசீது சேர்க்கவும்.

தேயம். எக்ஸ்பெக்துறம் செரநீவமாகப் பத்துமுதல் முப்பது மினிம்[21]; அந்திஸ்பசி வமனியாக ஒரு திரும் முதல் இரண்டு திருமைக் காரியத்துக்குத்தக்கதாய் இரண்டு மூன்று மணிநேரத்துக்கொருமுறை கொடுக்கலாம்.

லோபீலிஈதரிரஞ்சம். Etherial Tincture of Lobelia. கொள். லொபீலிப் பூடு பருக்கன் தூளாக, இரண்டரை அன்சு; ஈதர்சீது[22], அரைநாழி.

---

1 Taraxacum. 2 Volatile. 3 Lobelin. 4 Alkaline 5 Resin. 6 Lobelic acid. 7 Emetic. 8 Sedative. 9 Diaphoretic. 10 Expectorant, சிசேட்வனி 11 Antispasmodic. 12 Narcotico-irritant. 13 Spasmodic Asthma. 14 Angina pectoris. 15 Chronic Stage. 16 Bronchitis. 17 Pneumonia. 18 Ipecac. 19 Proof spirit. 20 Percolator. 21 Minim. 22 Spirit of Ether.

Digitized By Roja Muthiah Research Library

அடைத்த பாத்திரத்தில் எழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கிச் சீலையில் வடித்து, பிழிந்து வடித்து அரைநாழிக்குப் போதிய ஈதர்சேர்த்து சேர்க்கவும்.

தேயம். பத்துமுதல் முப்பதுமினிம்; ஸ்பச ஈளை[1]க்கு இது மெத்த உவந்தது.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

லோபீலிநீத்திப்பூடு. Lobelia nicotianaefolia. இது இலங்கை தென்னிந்துவின் மலைகளிலுள்ள நச்சுப் பூடு. மராட்டியர் இதைப் போக்குநல்[2] என்கிறார்கள். இதின் கொட்டை மெத்தக் காரப்பானது. இதின் இலைக்கஷாயத்தைச் சுதேசிகள் அந்திஸ்பசி[3]யாய் வழங்குகிறார்களென்று உதவிச்சத்திரீகன் அ. ச. நூகி குறித்திருக்கிறார். இப்பூண்டையும் இதின் தன்மைகளையும் பற்றி இன்னும் அறியவேண்டும்.

# எரிகாசியங்கள்.

# ERICACEÆ.

## யூவவூர்சி. UVA URSI.

வாசம். இது யுரோப்பம் ஆசியம் வடஅமரிகம் என்னுந் தேசங்களில் மலையுச்சிகளில் உண்டாகும்.

வாகடபதுதி. காய்ந்த இலைகள். இவை முட்டைவடிவும் தடிப்பும் மினுக்கமும் முக்கால் இஞ்சு நீளமுமானவைகள். கீழ்ப்பக்கம் பின்னல்போன்றிருக்கும். புள்ளிவிழுந்திராது. விளிம்பு கருக்குள்ளதல்ல. சுவை கடுந்துவர்ப்பு. இடித்தாற் காய்ந்த புல்மணஞ் சொற்பம் வீசும். இதின் கஷாயத்தோடு அயபிரகுலோறிரங்[4] கூட்ட நீலக் கறுப்பான அடையல்விழும். இலையிற் தனிக்கமிலங்[5] கலிக்கமிலங்க[6]ளும் ஓர் அத்திர எண்ணெய்[7]யும் இருப்பதோடு ஆபுதின்[8]என்ற கிறிஸ்தற்[9]பதார்த்தமும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது துவரும் அமுரிதி[10]யுமாகும்.

உபயோகம். சனன சல உறுப்புகளின் அழற்சிக்கும் காலிக[11]சலப்பைத்தாபிதம், சிஸ்திறீயம்[12], கடுமையானகனுறீயம்[13], கிலீற்று[14]களுக்கும், லுகறீயம்[15], மெனுறீயங்க[16]ளுக்கும் இது நயமாகக் கண்டது.

தேயம். இலைத்தூளில் பத்துமுதல் முப்பது கிறேன் கொடுக்கலாம்.

ரசிதம். யூவவூர்சியின்வூசம். Infusion of Uva Ursi. கொள், யூவவூர்சியிலை இடித்து, அரைஅன்சு; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டு மணிநேரமூறவிட்டு இறுத்தெடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு நாள் இரண்டு மூன்று முறைகொடுக்கலாம்.

---

1 Spasmodic Asthma. 2 Boke-Nul. 3 Antispasmodic. 4 Perchloride of Iron. 5 Tannic acid. 6 Gallic acid. 7 Volatile Oil. 8 Arbutine. 9 Crystal. 10 Diuretic. திடிப்ரேசி. 11 Chronic. 12 Cystirrhoea. 13 Gonorrhoea. 14 Gleet. 15 Leucorrhoea. 16 Menorrhoea.

Digitized By Roja Muthiah Research Library

## சபுதாசியங்கள்.

## SAPOTACEAE.

### அவாகடச் சரக்கு: Non-Officinal.

இலுப்பை. காட்டிலுப்பை. Bassia longifolia and B. latifolia. இந்த இரண்டு மரங்களும் இந்துவின் மிகுதியான பகுதிகளில் நிற்கும். இவைகளிலிருந்து உறையக்கூடிய தடித்தவோர் எண்ணெய்யும் ஓர் சீதும்[1] வரும். கொட்டையைப் பிழிய எண்ணெய் வரும். பூக்களிலிருந்து சீது திஸ்திலிக்கப்படும்[2]. எண்ணெய் பெரும்பாலும் தடித்ததும் கனத்ததுமாகும். திறந்தபடி வைத்தால் சுறுக்குப் பழுதாகுமாகையால் சவுக்காரஞ் செய்வதற்கு இது தகுந்ததேயன்றி மருந்துகளுக்கு உதவாது. 95 பாகை காங்கையிலும் இது உறைந்து கட்டியாகும். காட்டிலுப்பைப் பூவிலிருந்து திஸ்திலிக்கப்படும் சீது வீறான புகைமணமுடையது. சற்றே விஸ்கியைப் போன்றது. சொற்ப காரமும் நாற்றமுமானது. நாட்சென்றால் இந்த மணமற்றுப்போகும். புதிதாய்த் திஸ்திலிக்கப்பட்ட சீது நஞ்சாகி இரைப்பையை அழற்றி வேறு கெட்ட குணங்களையுமுண்டாக்கும். தண்ணீர் கலந்த சீதை அதிகமாய் வழங்கினோமென்று அ. ச. டதர் குறித்திருக்கிறார். ரம்[3] என்ற நீர் சீரணத்தைக் குழப்புகிற அளவாக இது குழப்பமாட்டாதென்பதும் தன்மையிலும் உடம்பைப் போஷிப்பதிலும் இது பீரை[4]ப்போன்றது என்பதுமே அவர் எண்ணம். ரைற்று வைத்தியர் எண்ணமும் அப்படியே. இது வீறான செறியும் ஸ்திமுல[5]மென்பது பிரத்தியட்சம். காலத்தால் பக்குவமானால் பிரண்டி[6]யும் மற்றும் ஸ்திமுலங்களுங் கிடையாத அவசியத்துக்கு இதை வழங்கலாம். இதின் பிண்ணாக்கு வமனியாக வழங்கப்படும். ஊமத்தை நஞ்சூட்டப்பட்ட சிலருக்கு இது கொடுக்கப்பட்டதென்று சாற்று வைத்தியர் சொன்னார். அதற்கு இது தகுந்த மாற்றுப்போல் விளங்குகின்றது.

புல்வமரம். Fulwa tree. இது இமயமலையின் மத்திம உஷ்டண பகுதிகளில் உள்ள மரம். இதற்குப் புல்வம் என்றது இந்துஸ்தானிப்பெயர். இதின் கொட்டையைப் பிழிய புல்வநெய் என்ற இறுகின எண்ணெய்வரும். இது லாட்டின் தடிப்புள்ளது. ஏறக்குறைய மணமற்றது; வெண்மையானது; 95 பாகைக்குக் குறைந்த சூட்டில் உறைந்திருக்கும். 120 பாகையில் முற்றாய் உருகும். நெடுக வைத்திருக்க இலுப்பெண்ணெய், காட்டிலுப்பெண்ணெய்யைப் போலப் பாண்டல் பிடியாது. வாதநோவுக்கும் மற்றும் நோக்களுக்கும் பூச இது உத்தமமென்று மதிக்கப்படுகின்றது. இன்னும் இதைச் சோதிப்பது நல்லது.

மோகடம். Mimusops Elengi. இது வாசமுள்ள புஷ்பங்களுக்காகச் செய்கைபண்ணப்படுகிறது. இந்த மரத்தின் பட்டைக்குத் துவரான தொனிக[7]த்தன்மையுண்டென்று அஷ்வீல்டர் சொல்லியிருக்கிறார். யாவக

---

1 Spirit, ஸ்பிறித. 2 Distill. 3 Rum. 4 Beer. 5 Diffusible Stimulant. 6 Brandy. 7 Tonic.

Digitized By Roja Muthiah Research Library

ரால் இது அதிகமாய் மதிக்கப்படும். ஈரங்களிலும் பொதுவான பெலவீனத்திலும் இது உபயோகமானதென்று அஷ்வீல்டரே சொல்லியிருக்கிறார். வாயவியலுக்கு இதின் திகாக்தத்தால் ஆசமனிப்பது[1] நல்லதென்று பலனுத போசு வைத்தியர் சொல்லுகிறார். இதின் புஷ்பங்களிற் திஸ்திலிக்கு[2]நீர்ஸ்திமுலம்[3] மருந்தாகவும் கந்தவருக்க[4]மாகவும் தென்னிந்துவின் சனங்களுக்குள்ளே வழங்கப்படுகின்றது.

## எபேனுசியங்கள்.

## EBENACEAE.

### * தும்பிலிக்காய். DIOSPYROS EMBRYOPTERIS.

வாசம். இந்துவின் காடுகள் அடங்கலும் இது உண்டாகும்.

வாகடபகுதி. காய். இது சிறு அத்திப் பழமளவு பருமையும் மங்கலான மஞ்சள் நிறமுமானது. தேமலாயிருக்கும். மாவால் மூடப்பட்ட எட்டுக் கொட்டைகளையுடையது. இதிற் பிசுபிசுப்பும் மெத்தத் துவருமான சாறு நிறைந்திருக்கும்.

தன்மை. கடுந்துவரானது.

உபயோகம். பிறகே தும்பிலி எசிறுத்தின்கீழ்ச் சொல்லப்படும்.

ரசிதம். தும்பிலியேசிறத்து. Extract of Diospyros. கொள். தும்பிலிக்காய் போதியது; துவைத்துப் பிழிந்து நீர்மத்திகத்[5]தில்வறட்டி, அடைத்த சீசாக்களிற் பேணி வைக்கவும்.

இந்த எசிறுத்து செங்கபிலநிறமான வசையத்தக்க தகடுகளாக விருக்கும். தண்ணீரிற் சுறுக்குக் கரையும்; இது உத்தமமான துவர்; தியறீயம்[6], காலிக திசந்தெரி[7]களுக்கு மெத்த உபயோகமானது. இதில் இரண்டு திருமை அரைநாழி தண்ணீரிற் கரைத்து லூகறீயத்துக்கு[8]ப் புகட்டுவது நயம். (44)

தேயம். ஒன்றுமுதல் ஐந்துகிறேனை நாள் மூன்றுமுறை கொடுக்கலாம்.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

கருங்காலி. Indian Ebony. இது மலேயாளக்கரை சோளமண்டலக்கரைகளிலுள்ளது. இதின்பட்டைக்குத் தொணிகத்[9]தன்மை, துவர்த்தன்மைகள் உண்டென்றும் அசத்துவ[10]கழிச்சல் குன்மம் பெலவீனத்தைப் பற்றிய நோய்களுக்கு மெத்த உவப்பானதென்றும், ரோசு வைத்தியர் குறித்திருக்கிறார்.

---

1 Gargle. 2 Distill. 3 Stimulant. 4 Perfume. 5 Water-bath. 6 Diarrhoea. 7 Chronic Dysentery. 8 Leucorrhoea. 9 Tonic. 10 Atonic.

(44) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

## ஸ்தைரகாசியங்கள்.

## STYRACACEAE.

### சாம்பிராணி மரம். BENZOIN TREE.

வாசம். போணியு, யாவம். சுமத்திறம், சியாம் தேசங்களில் இது உண்டாகும்.

வாகடபத்தி. சாம்பிராணி. இது வாசனையுள்ள குங்குலியம் போன்ற ராளம். மரத்தின் பட்டையிற் கீறி வடியும் நீரை இறுகவிட்டு எடுப்பார்கள். சியாம் சுமத்திறம் என்ற இடங்களிலிருந்து இது பிறித்தனுக்கு ஏற்றப்படும். இது குமைந்த வாலுண்டைகள் அல்லது கபிலப்புள்ளிகளுள்ள திரளைகள் அடங்கிய கட்டிகளாக வரும். கட்டிகளில் வெண்மையான வாலுண்டைகள் அமைந்திருப்பதுமுண்டு. இவைக்குச் சுவை சொற்பம். நற்கந்தமுண்டு. சூடுகொட்டப் பெஞ்சோயிக்கமில[1] புகை வீசும். திட்டசீதிலும்[2] பதாசிநீரிலுங்[3] கரையும். இதிலே ராளம் 100 க்கு 76 முதல் 80 பங்கு வீதமாயிருக்கும். அதை விட ஓர் அத்திரஎண்ணெய்யும்[4] பெஞ்சோயிக்கமிலமும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது ஸ்திமுல[5], எக்ஸ்பெக்தறம்[6]. தாணிகமாயிட்டால் ஸ்திமுலமாகும்.

உபயோகம். நாட்பட்ட இருமலுக்கும் சுவாசப்பையின் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கும் இதையுண்ணலாம். புகையாகவும் வழங்கப்படும். மேலும் பைரோசி[7] சலப்பையழற்சி முதலியவற்றுக்கும் இது வழங்கப்பட்டது. இந்த வகுப்பைச் சேர்ந்த மற்று மருந்துகளே பெரும்பாலும் இதற்குப் பதிலாகத் தெரிந்துகொள்ளப்படும்.

தேயம். பத்து முதல் இருபது கிறேன் கொடுக்கலாம். இதைத் தனியே கொடுப்பதரிது.

ரசிதங்கள். பெஞ்சோயின்கூட்டிராஞ்சம். Compound Tincture of Benzoin. கொள். பெஞ்சோயின் பருக்கன்தூளாக இரண்டு அன்சு; பூதஸ்தைரக்சு[8], ஒன்றரை அன்சு; தொலூபல்சம்[9] அரைஅன்சு; சொகோத்திரசகை[10], நூற்றறுபது கிறேன்; திட்டசீது அரைநாழி. எல்லாவற்றையும் மூடிய பாத்திரத்தில் ஏழுநாள் ஊறவிட்டு இடைக்கிடை குலுக்கி வடித்து, அரைநாழிக்குக் குறைந்தால், அதற்குத் தக்கதாய்த் திட்டசீது சேர்க்கவும்.

தேயம். அரைத்திரும் முதல் ஒருதிருங் கொடுக்கலாம். காயங்கள் விரணங்கள் முதலியவற்றுக்கு ஸ்திமுல பூச்சாக வெகுகாலம் பேர்கேட்டிருந்தது. இதற்கு பிருயர் பல்சம்[11] என்று பேர்.

பெஞ்சோயஸ் லாடு. Benzoated Lard. கொள். பூதலாடு[12], ஒருஇருத்தல்; பெஞ்சோயின் பருக்கன் தூளாக நூற்றறுபது கிறேன். லாட்டை நீர்மத்திகத்[13]தின் சூட்டில் உருக்கி பெஞ்சோயினையுஞ் சேர்த்து அடிக்கடி

---

1 Benzoic acid. 2 Rectified Spirit. 3 Solution of Potash. 4 Volatile oil. 5 Stimulant, 6 Expectorant. 7 Pyrosis. 8 Prepared Styrax. 9 Balsam of Tolu. 10 Socotrine aloes, 11 Friars Balsam. 12 Prepared Lard. 13 Water-bath.

Digitized By Roja Muthiah Research Library

கலக்கி இரண்டு மணிநேரவரையில் சூட்டிலிருக்க விட்டுக் கடைசியில் வடித்துச் சேஷமான பெஞ்சோயினை வேறுக்கவும்.

பெஞ்சோயஸ் லாடு, இப்படிப் பக்குவமாக்கப்படாத லாட்டைப்போற் சுறுக்குப் பழுதாகாது. அதைப்போலவே இதுவும் வழங்கப்படும்.

**பெஞ்சோயிக்கமிலம்.** Benzoic acid. இதைக் குறிக்குஞ் சின்னம் ஜகா₇ ஐ₅ அ₂. இது சாம்பிராணியிலிருந்து புடஞ்செய்[1]தெடுக்கப்படும். இது மெல்லிய இறகுபோன்ற கிரிஸ்தற்[2]தகடுகளாகவும் ஊசிகளாகவும் வரும். வளையக்கூடியது; நிறமற்றது; சாம்பிராணியைப் போன்ற நல்ல சுகந்த வாசனையுடையது. தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும்; திட்டசீதிற் சுறுக்குக் கரையும். மேலும் காரமான அல்கலை[3]நீர்களிலும் சுண்ணநீர்களிலுங் கரைந்திருந்து ஐருதுலோறிக்கமிலஞ்[4]சேர்க்கப் பிரிந்தடையும். மெத்த வீறு குறைந்திருந்தால் அடையாது. 248 பாகை சூட்டில் உருகி 462 பாகையிற் பொங்கும். பொங்குஞ் சூட்டில் ஆவியாய்ப் பறக்கச் சொற்ப சேஷமாத்திரமிருக்கும்.

**தன்மை.** இது ஸ்திமுலந்[5] விசேஷமாய்ச் சளிச்சவ்வை அருட்டும். இப்புரிக்கமில[6]மாகச் சிறுநீர்வழியாய்க் கழியும்.

**உபயோகம்.** இது லிதிக்கமில[7]செறிவு என்ற நோய்க்கு மருந்தாகுமென்று உத்தேசித்தும் அனுகூலப்படவில்லை. சிறுநீரிலுண்டாகும் பாஸ்வசுக்[8]கற்களுக்கு நல்லதாகக் காணப்பட்டது. செங்கண்மாரிக்கும் குழந்தைகளிலுண்டாகும் சலவொழுக்குக்கும் இது நல்லது.

**தேயம்.** பத்துமுதற் பதினைந்து கிறேன் கொடுக்கலாம்.

பூரக்கூட்டிரஞ்சர[9], அமோனவினிரஞ்சம்[10], அமோனபெஞ்சோவசு[11] இவைகளில் பெஞ்சோயிக்கமிலம் ஓர்கூறாகச் சேருகின்றது.

## ஒலியாசியங்கள்.

## OLEACEAE.

### ஒலீவமரம். OLIVE TREE.

**வாசம்.** இது சின்ன ஆசியம், தென்யுரோபம், மத்தித்திராணித்தீவுகள், வடஆபிரிகம் என்ற பகுதிகளில் உண்டாகும்.

**வாகடபகுதி.** எண்ணெய். இது செம்பழத்திற் பிழிந்தெடுக்கப்படும். இது வெண்மஞ்சள்நிறமானது; ஏறக்குறைய மணமற்றது. காரமற்றது. 36 பாகை காங்கையிற் கொஞ்சம் உறையும். 20 பாகையில் ஒலீயின்[12] என்ற நீராகவும் மாகரின்[13] என்ற முத்துப்போன்ற கட்டியாகவும் பிரியும். இவைகளின் வீதம் 72க்கு 28 போலிருக்கும்.

**தன்மை.** இது மெல்லிய விரேசனி. குடல்நோய்களுக்குப் பிரயோகிக்கப்படும் எனீமங்க[14]ளில் சாந்தன[15] கூறாக இது வழங்கப்படும். மேலும் நஞ்சுதின்றவர்களில் இரைப்பையில் அந்நஞ்சு பிடியாமற் போர்த்துக் காப்பதற்குக் கொடுக்கப்படும். லினிமென்சள்[16] மற்றும்பூச்சுமருந்துகளுக்கு

1 Sublime. 2 Crystal. 3 Alkali. 4 Hydrochloric acid. 5 Stimulant. 6 Hippuric acid. 7 Lithic acid. 8 Phosphate. 9 Compomal Tincture of Camphor. 10 Ammoniated Tincture of opium. 11 Benzoate of Ammonia. 12 Oleine. 13 Margarine. 14 Enema. 15 Emollient. 16 Liniment.

Digitized By Roja Muthiah Research Library

அனுமருந்தாக மெத்தவழங்கப்படும். சருமரோகங்களில் எரிவைத் தணிப்பதற்கும் வேக்காட்டுக் காயங்கள் தோல் வழுந்தல்களிற் பரமாணு தாவாமற் காப்பதற்குமாக இது இடப்படும். இதை மேனியிற் பூசிக்கொண்டால் பிளேக்கு[1]நோய் வராமற் காக்குமென்று நினைத்திருக்கிறார்கள்.

தேயம். விரேசனியாக ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு கொடுக்கப்படும். ஆயினும் இது விரேசனியாக வழங்கப்படுவதரிது.

கொப்புளத்தாள்[2], லீனப்பாப்பை[3], இரசவமுனீயகப்லாஸ்தர்[4], சபுசிறுதுப்[5]பிலாஸ்தர் இரசபிலாஸ்தர், பிர்சுப[6]பிலாஸ்தர், ஈயபிலாஸ்தர்[7], மக்னீசிசல்வசெனீமம்[8] அமோனலினிமென்[9], சுண்ண[10]லினிமென், பூர[11]லினிமென், கந்தாரிசன்கென்[12], இரசகூட்டன்கென்[13], இரசநீதுரசன்கென்[14], விருத்தி[15]யன்கென், அகனீத[16]வன்கென் என்றகூட்டு மருந்துகளில் ஒலீவெண்ணெ[17]ய் ஓர்கூறுகச் சேருகின்றது.

ரசிதங்கள். வன்சபு. Hard Soap. இது கஸ்தீல்சபு[18] என்றுஞ் சொல்லப்படும். ஒலீவெண்ணெய்யோடு சோடஞ்[19]சேர்த்து இது செய்யப்படும். இது நரை வெண்மை நிறமும் காய்வுமானது; மணமற்றது; சீதளமில்லாதவிடத்திற் சேமித்திருந்தால் கடினமும் லேசில் பொடியாகக்கூடியதுமாகும். சூடுபட லகுவிற் பசையக்கூடியதாகும். திட்டசீதி[20]ற் கரையும். கடுதாசியிற் பட்டாலும் நெய்ப்பிடிப்புக் காட்டாது. இதைப் பஸ்மமாக்கினால் வரும் சாம்பல் ஈரம்பிடியாது.

வன்சபுவின் ரசிதங்கள். சபுலினிமேன். Soap Liniment. கொள். வன்சபு சிறிதாய் வெட்டி இரண்டரை அன்சு; பூரம் ஒன்றேகால் அன்சு; ரோஸ்மரித்தேல் மூன்று திரும்; திட்டசீது பதினெட்டு அன்சு; தண்ணீர் இரண்டு அன்சு. தண்ணீரைச் சீதுடன் கலந்து, ரோஸ்மரித்தேல்[21], சபு, பூரம் மூன்றையுங் கூட்டவும். 70 பாகைக்கு மேற்படாத சூட்டில் ஏழுநாள் ஊறவைத்து இடைக்கிடை குலுக்கி வடிக்கவும்.

வாதத்துக்கும் மற்று ரோகங்களுக்கும் பூசும்மருந்துகளுக்கு இது நல்ல கூட்டு. அவின்லினிமெ[22]னில் இது ஓர் கூறுகச்சேருகின்றது.

சபுபிலாஸ்தர். Soap Plaster. கொள். வன்சபு, ஆறு அன்சு; ஈயப்பிலாஸ்தர் இரண்டேகால் இறுத்தல்; குங்குலியம், ஒரு அன்சு. ஈயப்பிலாஸ்தரை மென்சூட்டில் உருக்கி சபுவையுங் குங்குலியத்தையும் முதலே நீராக்கிச் சேர்த்து, ஓயாமற் கலக்கித் தகுந்த பதமாய் வறட்டிக்கொள்ளவும். இது பிரதானமாய்ப் பொருத்துகளின் ரோகங்களுக்குகளுக்குஆதரவாயிடப்படும்.

சபுசிறதுப்பிலாஸ்தர். Soap Cerate Plaster. கொள். வன்சபு, தூளாக, பத்து அன்சு; மெழுகு, பன்னிரண்டரை அன்சு; ஒலீவெண்ணெய் அரைநாழி; ஈயவக்சிரம்[23] பதினைந்து அன்சு; காடி[24] ஒருகலன்[25]. காடியையும் ஈயவக்சிரத்தையும் ஸ்தீம்மத்திகத்[26]தில் ஒருமிக்கக் காய்ச்சி ஈயவக்சிரம் காடியிற் கரையுந்தனையும் ஓயாமற் கலக்கி, பிற்பாடு சபுவைச்சேர்த்து ஈரிப்பு வற்றுந்தனையுங் காய்ச்சிக் கடைசியில் மெழுகையும் எண்ணெய்யையும்

---

1 Plague. 2 Blistering paper 3 Linseed Poultice. 4 Plaster of Ammoniacum with Mercury. 5 Soap Cerate. 6 Pitch. 7 Lead plaster. 8 Enema of sulphate of magnesia. 9 Liniment of ammonia, 10 Lime, 11 Camphor 12 Ointment of cantharidis. 13 Compound ointment of Mercury. 14 Nitrate of Mercury ointment. 15 Veratria. 16 Aconite. 17 Olive oil. 18 Castile soap. 19 Soda. 20 Rectified Spirit. 21 Rosemary oil. 22 Liniment of opium. 23 Oxide of Lead. 24 Vinegar. 25 Gallon. 26 Steam bath.



Digitized By Roja Muthiah Research Library

ஒன்றுயுருக்கினபின் சேர்த்து முழுவதையும் ஓயாமல் ஒன்றாய்க்கலக்கி ஈர ம்வற்றிப் பிலாஸ்தர்ப்பதமாய் வருந்தனையுஞ் சூடுநிற்கப்பண்ணவும்.

இரானப்பிலாஸ்தர்[1], சபுபிலாஸ்தர்[2], கலுசிந்துக்கூட்டுசிறுத்து[3], பதாசிய வியோதிரசபுலினிமென்[4], சபுலினிமென், பபாடுசகைக்குளிகை[5], சகை[6]யி ங்குக்[7]குளிகை, மக்கிக்[8]கூட்டுக்குளிகை, வரியாத்து[9]க்கூட்டுக்குளிகை, சபு க்கூட்டுக் குளிகை, ஸ்குவிற்கூட்டுக்குளிகை என்ற கூட்டு மருந்துகளில் வன்சபு ஓர் கூறாகச் சேருகின்றது.

**மேன்சபு.** Soft Soap. இது ஒலிவெண்ணெய்யும் பதாசியுஞ் சேர்த் துச் செய்யப்பட்டது. மஞ்சட் பச்சை நிறமுள்ளது; மணமற்றது; இறுகி ன களிப்பதமானது; திட்டசீதிற் கரையும்; கடுதாசியிற் பட்டாலும் நெய் ப்பிடிப்புக் காட்டாது. இதைப் பஸ்மமாக்கினால் பரமாணுவிற் கரையத்த க்க சாம்பலாகும்.

**தன்மை உபயோகம்.** இது இமாலியம்[10], சுத்திசெய்வது. பொடுகுக்கு ம் மற்றுஞ் சருமநோய்களுக்கும் வெளியில் பூசப்படும். விசேஷமாய் சிவ்லிசு[11]க் கரப்பன்களுக்குத் தோயமாய் வழங்கப்படும். தார்ப்பந்தீன் லினி மென்[12]னில் இது ஓர் கூறாகச் சேருகின்றது.

**கிலேசரின்.** Glycerine. இது திர[13]வெண்ணெய்கள் நிணங்களிலிருந்து எடுக்கப்படும் இனிப்பான நிறமற்ற தெளிந்த பாணி. இதைக் குறிக்குஞ் சின்னம் $கா_3$ $ஐ_8$ $அ_3$. இதின் விசேஷகிருவிதம் 1.25. தொட எண்ணெய் போலிருக்கும், மணமில்லை. தண்ணீரிலும் அலக்காலி[14]லும் தாராளமாய்க் கரையும். சூட்டினாற் கூறுகளாகப் பிரியும்போது கடுங் காரமான ஆவிக ளைக் கக்கும்.

**தன்மை உபயோகம்.** இது நல்ல இமாலியம். மாவியய்[15], இயோதம்[16], முதலியவற்றைச் சுறுக்குக் கரைக்குமாகையால் பூச்சுமருந்துகளுக்கு நல்ல அனுமருந்தாகும். காதுக்குள்ளே ஒழுக்கிவிட்டால் சிலவகையான செவி ட்டைக் கொஞ்சக்காலத்துக்கு மாற்றும். கசரோகத்தில் மறுவித்தே[17]லுக்கு ப்பதிலாக இதைக்கொடுக்கலாமென்று சிலர் நியாயமின்றிச் சொல்லியிருக் கிறார்கள்.

**தோயம்.** ஒரு திறும் முதல் இரண்டு திறுங் கொடுக்கலாம்.

காபலிக்கமில[18]கிலேசரின், கலிக்கமில[19]கிலேசரின், தனிக்கமில[20]கிலேசரி ன், அமைல[21]கிலேசரின், வெண்கார[22]கிலேசரின், பதாசியவியோதிர சபுலினி மென் என்னுங் கூட்டுமருந்துகளில் கிலேசரின் ஓர் கூறாகச் சேருகின்றது.

## பூவஷ்மரம். FLOWERING ASH.

## வட்டவிலையஷ்மரம். ROUND LEAVED ASH.

**வாசம்.** இது தென் யுரோபத்தின் மலைகளிலும் விசேஷமாய்க் கல்பி றியம் சிசிலி என்ற இடங்களிலும் உண்டாகும்.

**வாகடபகுதி.** மரத்திற் கீற வடியும் இறுகின இனிப்பானபொசிவு. இது

1 Resin plaster. 2 Soap plaster. 3 Compound extract of colocynth. 4 Liniment of Iodide of Potassium and soap. 5 Pills of Barbadoes Aloes. 6 Aloes. 7 Assafoetida. 8 Gamboge. 9 Rhubarb. 10 Emollient, சாந்தனி. 11 Syphilis 12 Liniment of Turpentine. 13 Fixed. 14 Alcohol. 15 Morphia. 16 Iodum 17 Oleum Morrhui. 18 Carbolic acid. 19 Gallic, 20 Tannic. 21 Amylum, 22 Borax,

Digitized By Roja Muthiah Research Library

மன்னு[1] எனப்படும். இது ஒரு இஞ்சு முதல் ஆறு இஞ்சு நீளமும் இரண்டொரு இஞ்சு அகலமுமாய் ஒப்பமற்றுக் கண்ணறையுள்ளதாய் ஒருபக்கம் வளைந்த நொருக்கலான துண்டுகளாக வரும். வெண்மஞ்சள் நிறமும், சற்றே உவட்டிப்பான மணமும் இனிய சுவையுமுள்ளது. இதிலே கா₃ ஐ₇ அ₃ என்ற சின்னத்தையுடைய மன்னிதம்[2], சர்க்கரையும் எசிருத்திவு[3]ம் அடங்கியிருக்கும். மன்னுவிலே மன்னிது 100க்கு 60 முதல் 80 பங்கு வீதமாயிருக்கும். கொதிக்திற திட்டசீதில்[4] மன்னுவைக் கரைத்து ஆறவிட மன்னிது நிறமற்ற மினுக்கமான கிரிஸ்தல்க[5]ளாகப் பிரியும். இது கரைவதற்கு ஐந்து பங்கு தண்ணீர் வேணும். இந்தக் கரையிலே யீஸ்து[6]ப் படும்போது நொதிக்காது.

தன்மை உபயோகம். இதோர் மெல்லிய விரேசனி. இது இனிப்பாயும் செயலிற் சாந்தியானதாயுமிருப்பதாற் பிள்ளைகளுக்கு உவந்தது. நிலவாகை, உப்பு விரேசனிகளின் உவட்டிப்பான சுவையை மறைத்து அவைளுக்கு உதவியாவதற்கு இது நல்ல துணைமருந்து. நிலவாகை கொடுபடும் நோய்களுக்கு இதைக் கொடுக்கலாம்.

தேயம். பிள்ளைகளுக்கு ஒரு திரும் முதல் மூன்றுதிருமும், வளர்ந்தோருக்கு ஒரு அன்சு முதல் இரண்டு அன்சுங் கொடுக்கலாம்.

## ஜஸ்மினியங்கள்.

## JASMINAE.

அவாகடச்சரக்கு. Non-Officinal.

மல்லிகைப்பூ. Jasminum Sambac. மல்லிகைக்கொடி, வாசனையான பூவுக்காக இந்துதேசமடங்கலும் வளர்க்கப்படும். இதின் பூக்கள் விக்கிரகங்களுக்குச் சாத்தப்படும். பிரசவஸ்திரிகளில், ஸ்தனங்கள் வீங்கி உபாதிகொண்டிருக்கையிற் பாலூறுவதைத் தடுத்து வற்றப்பண்ணுவதற்கு மல்லிகைப்பூக்கள் சித்திக்குமென்று வுட்டர் சொல்லியிருக்கிறார். இரண்டு மூன்று சிறங்கை பூக்களைத் தண்ணீர் விடாமல் அரைத்து ஒவ்வொரு முலைக்கும் அணைத்து நாள் இரண்டொருமுறை புதுப்பிக்கவேண்டும். பாலூறுதல் சிலவேளை ஒருநாளைக்குள் ஒழிந்துபோகும். பெரும்பாலும் இரண்டுமூன்றுநாட் செல்லும். சென்னையில் இதுகாரியத்தை நன்றாயறிந்திருக்கிறார்களென்று வுட்டர் சொல்லுகிறார்.

## அபாசனியங்கள்.

## APOCYNEAE.

### *ஏழிலைப்பாலை. ALSTONIA SCHOLARIS.

வாசம். இந்துதேசமடங்கலுஞ் சோலைகளில் இது உண்டாகும்.

வாகடபகுதி. பட்டை. இது லேசில் முறியத்தக்கதான தடித்த திருகின துண்டுகளாக வரும். முரணுன நரைத் தோலும் வெளிறலான கறு

1 Manna. 2 Mannite. 3 Extractive. 4 Rectified spirit. 5 Crystal. 6 Yeast.

Digitized By Roja Muthiah Research Library

வாநிறப்பட்டையுஞ் சேர்ந்தது. உட்பக்கம் இன்னும் வெண்மையாயும், மெதுவாயும், மணமின்றிக் கடுங்கைப்புச்சுவையுள்ளதாயுமிருக்கும்.

**தன்மை.** துவரானதொணிகம்[1], அநதெல்மிந்தி[2], அந்திபிருடி[3].

**உபயோகம்.** காலிக[4] தியரீயம்[5], திசந்தெரி[6]யின்பிற்கூறுகளுக்கு இதுஉபயோகமானதாய்க் காணப்பட்டது. (45) காய்ச்சல்கள், உடம்பிற் கேட்கும் மற்றும் வியாதிகளின் பின் காணும் பெலவீனத்தில், உடம்பையும் இரைப்பையையும் பெலப்படுத்துவதற்கு இது அனுகூலமானது.

**தேயம்.** பட்டைத் தூளில் மூன்றுமுதல் ஐந்து கிறேனைக் குடல்நோய்களுக்குத் தனித்தாவது, சிறுதேயமான இபிகாக்கு[7] சென்சனெசிருத்[8]தோடு கலந்தாவது கொடுக்கலாம்.

**ரசிதங்கள். ஏழிலைப்பாலைரஞ்சம்.** Tincture of Alstonia. கொள். ஏழிலைப் பாலைப்பட்டை இடித்து, இரண்டரை அன்சு; புரூவுசீது[9] அரை நாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி, வடித்து, அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும். அல்லது களும் பிரஞ்சத்தைப்போலச் சியந்தனித்தும்[10] எடுக்கலாம்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திருங் கொடுக்கலாம்.

**ஏழிலைப்பாலையின்லூசம்.** Infusion of Alstonia. கொள். ஏழிலைப் பாலைப்பட்டை இடித்து அரைஅன்சு; கோதிநீர் பத்து அன்சு. மூடின பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவைத்து இறுத்தெடுக்கவும்.

**தேயம்.** இதில் ஒரு அன்சு முதல் இரண்டு அன்சை நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். இது ஓர் நல்ல தொணிகம்.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

**கசப்புவெட்பாலை. Holarrhena antidysenterica.** இது இந்துதேசமடங்கலுமுள்ள சிறிய மரம். இதின் பட்டை வெகுகாலமாகப் பேர்பெற்றது. முன்னே தெல்லிச்சேரிப் பட்டையென்று யுரோபத்துக்கு ஏற்றப்பட்டது. இது கண்ணறை நிறைந்த, கறைநிறமுள்ள, கசப்புச்சுவையையுடைய பட்டை. இது தொணிகமாகவும்,சுரக்கினி[11]யாகவும் பேர்பெற்றிருந்தாலும் திசந்தெரிவகையான கழிச்சல் வியாதிகளுக்கு நல்ல மருந்தென்று கீர்த்திபெற்றது. இத்தன்மையில் இது அனுகூலமானதென்பதற்கு மன்றோ, ஐவீசு வைத்தியர்கள் சாட்சியிட்டிருக்கிறார்கள். இதை அனேகருக்குக் கொடுத்துச் சித்திபெற்றதென்பதற்கு அ. ச. டதர் என்ற உதவிச் சத்திரீகன் பெலப்பான சாட்சியிட்டிருக்கிறார். பவுசர், பலனுதடசர் முதலியவர்களுடைய எழுத்துகளிலும் இது நயப்பென்று குறிக்கப்பட்டிருக்கின்றது. திசந்தெரியால் வருந்தின பதினைந்துமாசக் குழந்தையொன்றுக்கு இபிகாக்கினாலும் வாடிக்கையான மற்றும் பரிகாரங்களாலும் நயங்காணுதபின் இந்த மருந்தாற் சுகமானதென்று உதவிச் சத்திரீகன் கஸ்தகிரியர் பிரசுரப்படுத்தியிருக்கிறார். அவர் இந்தப் பட்டையில் இரண்டு அன்சை ஒரு நாழி தண்ணீரிற் போட்டு அரைநாழியாய் வற்றுந்தனையும் அவித்து அந்தத் திகாத்தத்தை நாலு திரும் தேயமாக நாள் நாலு முறை ஒவ்வொரு துளி லாடன[12]மும் கூட்டிக் கொடுத்தார். இதைச் சுரக்கினியாக வெகுவாய்க்

---

1 Tonic. 2 Anthelmintic. 3 Antiperiodic. 4 Chronic. 5 Diarrhoea. 6 Dysentery. 7 Ipecac. 8 Extract of Gentian. 9 Proof spirit. 10 Percolate. 11 Febrifuge. 12 Laudanum.

(45) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

கொடுத்தேனென்று கிப்சன் பண்டிதருஞ் சொல்லுகிறார். இந்துவிலுள்ள உத்தமமருந்துகளுள் ஒன்றாகிய இத்துடன்,வெட்பாலையரிசி[1]யென்ற இதின் பெயரை உடையதும், இதின் தோற்றத்தையுடையதுமாகிய செயலற்ற இன்னொரு மரத்தின் பட்டை பெரும்பாலும் மாற்றப்படுவதால் இதின் பெயர் கெட்டுப்போயிற்றென்று எலியற்று பண்டிதர் சொல்லியிருக்கிறார். (46) இந்தப் பட்டையையும் இதின் தன்மைகளையும் இனிமேல் பரிசோதனைகாரர் ஆராய்வது நல்லது. இதில் எட்டு அன்சை ஒருநாழி தண்ணீரில்போட்டு அரைநாழியாய் வற்றுந்தனையும் அவித்து அந்தக் கஷாயத்தை ஒன்றரை அன்சு இரண்டு அன்சு தேயமாக நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். ஆயினும் வேர்ப்பட்டையைத் தண்ணீரில் ஊறவைத்துச் செய்த எகிருத்து[2] நல்லதென்று அ. ச. டதர் சொல்லுகிறார். அதில் மூன்று கிறேன் வரைக்கு அரைக்கிறேன் அவினோடு சேர்த்துக் கொடுபபதே முறை. திரண்டு நீண்டொடுங்கிக் கூரான இதின் விரையும் திசந்தெரிக்கு[3] நல்ல மருந்தென்று சுதேசிகளால் மெத்த மதிக்கப்படுகின்றது. இது ஏறக்குறைய அரை இஞ்சு நீளமானது; கறுவாப் போலக் கபிலநிறமுடையது. ஒருபக்கங் குவிந்து, மறுபக்கம் கவிந்து, வெளிறலான நெடும் வரி யுள்ளதுமாயிருக்கும். லகுவில் நொருங்கும். கைப்புச் சுவையும் மெத்த நாற்றமுங்கொண்டது. இதின தோற்றத்தை உடைய வெட்பாலை விரையோடு இது பெரும்பாலும் மாறிக்கொள்ளும். வறுத்த இக்கொட்டையின் கஷாயம் குடல்நோய்களுக்கு நல்ல லேசான கயராகுமென்றும் வாந்திபேதியில் வாந்தியைத் தணிப்பதற்குக் கொடுக்கப்படுகின்றதென்றும் ஏன்ஸ்லி சொல்லியிருக்கிறார். மூலமுளையாற் பாயும் இரத்தத்தைத் தடுப்பதற்கு இந்தக் கஷாயம நல்லதென்று தலீவுசெறீவு என்ற நூல் சொல்லுகின்றது. இக்கொட்டைக்குக் கிருமியைக்கொல்லுந் தன்மையுமுண்டாம். வங்காளத்தில் ஓர் பகுதியில் மாட்டு மாரகநோய்க்கடுத்த மருந்தென்று இது அதிகமாய் வழங்கப்பட்டது. நயநட்டஞ் சொல்லப்படவில்லை.

சுணைக்குளப்பாலை. Holarrhena pubescens. இது மேலே கண்டகசப்புவெட்பாலையிலோர் இனம். இந்துவின் அனேக பகுதிகளிலுள்ள இந்தச் செடியின் கொட்டை,திசந்தெரிக்கும் மற்றுங் குடல்நோய்களுக்கும் நல்ல மருந்தென்று சுதேசிகள் வழங்குவார்கள். இதின்பட்டைக்குத் துவர்த்தன்மை தொணிகத்[4]தன்மைகள் உண்டு. இது சுரங்களுக்குக்கொடுக்கப்படும். சுதேசிகளே இதைப்பற்றிச் சாட்சியிட்டிருக்கிறவர்கள்.

பால்வள்ளி. Ichnocarpus frutescens. இது வடக்கிந்துவில் வங்காளம், அசம், குமையுன் முதலிய பகுதிகளிலுள்ள செடி. இதின் வேருக்கு அல்திறவ[5] தொணிகத்தன்மையிருப்பதால் சீமை நன்னாரி[6]க்குப் பதிலாக வழங்கப்படுகின்றது.

வெள்ளலரி. Exile Oleander. இதோர் மேற்கிந்தச்செடி. இந்துவிலும் வளர்க்கப்படுகின்றது. இதற்கு அந்திபிருடித்[7]தன்மையுண்டென்று தெல்கூடிசர் கவனித்தார். பிதி, சாற்று பண்டிதர்கள் இக்கருத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். பலவகையான முறைச்சுரங்களில் அவர்கள் இதைக் கொடுத்துப் பார்த்த சோதனைகளால் இது சத்துள்ள மருந்தென்பது சந்தேகமறவிளங்குகின்றது. காய்ந்த புதிய பட்டையில் ஒரு அன்சை ஐந்து

1 Wrightia tinctoria. 2 Extract. 3 Dysentery. 4 Tonic. 5 Alterative. 6 Sarsaparilla. 7 Antiperiodic.

(46) அனுபந்தம் பார்,

Digitized By Roja Muthiah Research Library

அன்சு திட்டசித்தில்[1] எட்டுநாள் ஊறப்போட்டு வடித்த ரஞ்சம்[2] பத்துமுதல் பதினைந்து துளி தேயமாக நாளை மூன்றுமுறை கொடுக்கப்படும். முப்பதுமுதல் அறுபது துளி கொடுத்தால் காரபபான விரேசனியும் வமனியுமாகும். பின்னும் அதிகமாய்க் கொடுத்தால் கொடிய நஞ்சாய்முடியும். இதின் பருப்புக் கடுங் கசப்பு. சப்ப நாக்கிலே எரியும், சற்றே விறைப்புந்தோன்றும். பிழியத்தெளிந்த வெளுறிய அம்பர்[3]நிறமான, பிசுபிசுத்த,காரமான எண்ணெய் பிறக்கும், இதைச் சுதேசிகள் நீரடிக்கும் பேதியாகச் சிலவேளை கொடுப்பார்கள். இது கடுமையாய்ச் சத்திக்கவும் பேதிக்கவுஞ் செய்யும். ஒரு ஆளுக்கு ஒரே பருப்பு நஞ்சாய் முடிந்ததென்று பல்லூர் பண்டிதர் எழுதியிருக்கிறார். அந்த ஆள் நஞ்சினின்று மீட்கப்பட்டது. சொல்லப்பட்ட குணங்களால் இது மயக்கழற்சி[4]நஞ்சுகள் என்ற வகுப்புக்குச் சேர்ந்ததாகத் தோற்றுகின்றது. இந்தமருந்தைச் சோதிக்கும்போதெல்லாம் மெத்தச் சாவதானம் வேணடும்.

சேவ்வலரி. Sweet-scented Oleander. பூசைகளுக்காக இந்தச்செடி இந்துதேசத்தில் அதிகமாய் உண்டாக்கப்படும். வேர் முதலாய் இதின் எல்லாப்பகுதிகளும் நஞ்சு. ஆதலாற் சொலை தற்கொலைகளைச் செய்வதற்கு இதைச் சுதேசிகள் பிரயோகிப்பார்கள். ஆயினும் இந்திய வாகடங்கள் சிலவற்றில் இது குஷ்டத்துக்கும் வேறு நோய்களுக்கும் மருந்தாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதிகமாய்க் கொடுத்தாற் சீவமோசந்தானும் நேரிடுமாகையால் இதை மெத்தக் கவனமாய்ச் சோதித்துப் பார்க்கவேணும். இதால் இருவர் நஞ்சூட்டப்பட்டார்களென்று பிறவுதனர் ஓராளையும் கிறீகர் பண்டிதர் பின்னொராளையும் பற்றியெழுதியிருக்கிறார்கள். கிறீகர் சொன்ன ஆளில், அந்த நஞ்சு நரம்புமண்டலத்[5]திற் தாக்கினதால் மரணம் நேரிட்டதென்கிறார். இதின் வேர்ப்பட்டையைத் தின்றதினால் ஏர்ப்பின் குணங்கள் உண்டான ஒரு ஆளைப்பற்றிக் காமிகாயநாத ஆசிரசர் எழுதியிருக்கிறார்.

காட்டலரி. Cerbera Odollam or C. Manghas. இந்த மரம் இந்துவின் கடற்கரைகளில் நொதியான இடங்களில் உண்டாகும். இதின் பாலும் இலைச்சாறும் பேதிக்கும், வாந்தியுஞ் செய்யும் இந்தமரம் நச்சுத்தன்மையுள்ளதாகையாலும்,விக்கினமில்லாமற் பேதி சத்தி செய்யும்மருந்துகள் வேறனேகமிருப்பதாலும், இவைகளைக் கொடுக்கப்படாது.

பாம்புச்சைலம். Ophioxylon Serpentinum. இது இந்துஅடங்கலுமுள்ள படர்செடி. இதைப் பாம்புகடிக்கு நல்ல மருந்தென்று சுதேசிகள் மெத்த வழங்குவார்கள். ஆயினும் இதைப்பற்றி நம்பிக்கையான அத்தாட்சிவேணடும். மேலும் தொனிக[6]மாகவும் சுரக்கினி[7]யாகவும் இது மதிக்கப்படும். இதின் வேரில் வீறுன கசப்புக்கஷாயம் எடுக்கலாமென்றும் இது மெத்தச் சத்துள்ளதென்றும், அஷ்வீல்டர் சொல்லுகிறார். மேலும் யாவகர் இதை அந்தெல்மிந்தி[8]யாக வழங்குகிறார்களென்றும் இவரே சொல்லுகிறார். பிரசவ நோக்காட்டை அதிகப்படுத்துவதற்கு இதின் வேர்க்கஷாயங் கொடுக்கப்படுகிறதென்று பழனியாண்டி வைத்தியர் சொல்லுகிறார்.

ராசையம். Rhazya Stricta. இது சிந்து, பஞ்சாப்பு, ஆபுகானிஸ்தன் என்ற இடங்களிலுள்ள பூடு. இதின் காய்ந்த இலைகளும் தண்டுகளும்

---

1 Rectified spirit. 2 Tincture. 3 Amber. 4 Narcotico-irritant poison. 5 Nervous system. 6 Tonic. 7 Febrifuge. 8 Anthelmintic. 9 Womb.

Digitized By Roja Muthiah Research Library

சிந்துக் கடைகளில் விலைப்படும். இது நல்ல கசப்பான தொணிகமென்றும், இனிமேல் இதைச் சோதிப்பது நல்லதென்றும் ஸ்தாக்கு வைத்தியர் சொல்லுகிறார்.

## அஸ்கிலீபிரியங்கள்.

## ASCLEPIADEAE.

### நன்னாரி. INDIAN SARSAPARILLA. HEMIDESMUS.

வாசம். இது இந்துதேசமடங்கலும் உண்டு.

வாகடபகுதி. வேர். இது பல நீளமான, மஞ்சட் கபிலநிறமுள்ள, திரண்ட, திருகலான துண்டுகளாய் வரும் நெடும்பாட்டுக்கு வரிகள் உள்ளது. வளயமான வெடிப்புகள் பட்டையைப் பிரிக்கும். சுகந்த[1]மான சுய மணமும் சொற்பமான நல்ல கைப்புச் சுவையுமுடையது. இதின் சத்து ஓர் அத்திர[2]எண்ணெய்யிலும் எமிதெஸ்மின்[3]என்ற கிறிஸ்தற்பதார்த்தத்திலுமிருக்கும். (47)

தன்மை. இது சிறந்த அல்திறவ[4] தொணிக[5]ம், சுவேதணி[6], அமுரிதி.

உபயோகம். பெலவீனம், பிள்ளைகளின் காமாலை, உடம்பிற் செறிந்த சிவ்விசு[7], காலிகவாதம், சருமநோய்கள் இவற்றுக்கு இது கொடுத்து அதிநயங்கண்டிருக்கின்றது.

ரசிதங்கள். *நன்னாரியின்வூசம். Infusion of Hemidesmus. கொள். நன்னாரிவேர், இடித்து ஒரு அன்சு, கொதிநீர் பத்து அன்சு; மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். இதில் இரண்டு அன்சு முதல் மூன்று அன்சை நாள் மூன்று முறை கொடுக்கலாம்.

[குடிக்க இதுவே உத்தமமான முறை. கஷாயஞ் சூடாயிருக்கையிற் குடித்தால் அதிக சித்தியாகும். இதற்குப் பாலுஞ் சர்க்கரையுஞ் சேர்த்தால் பிள்ளைகள் பிரியமாய்க் குடிப்பார்கள். பதாசியவியோதிர[8]த்துக்கும் மற்றும் மருந்துகளுக்கும் இது நல்ல அனுபானம். வேர் புதிதாகில் சத்து அதிகம்.]

நன்னாரிச்சிறுபம். Syrup of Hemidesmus. கொள். நன்னாரி வேர் நாலு அன்சு; சுத்த சர்க்கரை இருபத்தெட்டு அன்சு; கொதிநீர் அரைநாழி. மூடிய பாத்திரத்தில் நன்னாரிவேரைக் கொதிநீரில் நாலுமணிநேர மூறவிட்டுச் சீலையில் வடிக்கவும். இந்த நீரை மண்டியடையுந்தனையும் வைத்து, தெளிந்தநீரை இறுத்தெடுத்து, சர்க்கரையைக் கூட்டி, மென்சூட்டிற் கரைத்துக்கொள்ளவும். வரும்பாணி இரண்டு இறாத்தல் பத்து அன்சு, நிறுத்து, 1.335 என்ற விசேஷகுருவிதம்[9] உடையதாயிருக்கவேண்டும்.

தேயம். ஒருதிறமுங் கூடவுங் கொடுக்கலாம். இது சுறுக்கு கொதிக்குமாகையால் உஷ்டணகாலமிடங்களில் வழங்கத்தக்கதல்ல.

எருக்கு. Mudar. (48) { பேரெருக்கு Calotropis Gigantea.<br>*சிற்றெருக்கு Calotropis Procera. }

---

1 Aromatic. 2 Volatile. 3 Hemidsmine. 4 Alterative. 5 Tonic. 6 Diaphoretic. 7 Syphilis. 8 Iodide of Potassium. 9 Specific gravity.

(47) (48) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

**வாசம்.** இந்துதேசமடங்கலும் இந்த இரண்டு இனங்களின் ஏதும் ஒன்று காணப்படும். C. Procera. என்ற சிறிய இனம் தெக்கணம், வங்காளத்தின் மேற்பகுதிகள், பஞ்சாப்பு, சிந்து என்னும் சீதளங்குறைந்த பகுதிகளில் உண்டாகும். C. Gigantea என்ற பெரிய இனம், வங்காளத்தின் கீழ்ப்பகுதி, சென்னை, மலாயநாடு இலங்கைகளில் உண்டாகின்றது.

**வாகடபகுதி.** காய்ந்த வேர்ப்பட்டை. இது தட்டையான அல்லது வளைந்த சிறுத்துண்டுகளாக வரும்; உள்ளே கபிலநிறம்; வெளியில் மஞ்சளான நரைநிறம்; தனக்குரிய சுகமணமும், வாணித்தன்மையுள்ள உவட்டான காரச்சுவையுமுடையது. முடாரின்[1] என்ற ஓர் பதார்த்தத்திலேயே இதின் சத்து இருக்கின்றதுபோலும். (49)

**தன்மை.** இது அல்திரவம்[2], தொணிகம்[3], சுவேதனி[4], பெருந்தேயத்தில் வமனி[5].

**உபயோகம்.** குஷ்டம்[6], தேகத்திற் செறிந்த சிவ்விசு[7], இரசசோகை[8], சிவ்விசுப் புண்கள், மற்றும்புண்கள், திசந்தெரி[9], தியறீயம்[10], காலிகவாதம்[11], இவற்றிற்கு இது கொடுத்து நயங்கண்டது. (50)

**ரசிதங்கள்.** எருக்கந்தூள். Powder of Mudar. சித்திரை வைகாசி மாசங்களில் மணல்நிலங்களிற் கிண்டின எருக்கம்வேரைப் போதியஅளவா யெடுத்து, மண் அசுத்தமெல்லாம் போகத்தக்கதாய்ச் செவ்வையாய்க்கழுவி, கீறும்போது பால் வடியாமல் இறுகுந்தனையுங் காற்றிற் காயவைத்து பட்டையை யெடுத்து வறட்டி மாவாக்கி, நன்றாயடைத்த சீசாக்களிற்பேணவும்.

**தேயம்.** அல்திரவதொணிகமாக மூன்று கிறேன் துவங்கிப் பத்துக்கிறேன்வரைக்கு நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். வமனியாக அரைத்திரும் முதல் ஒருதிருங் கொடுக்கலாம்.

[எருக்கு வமனத்தன்மையுடையதென்பதைத் தன்கன்வைத்தியரே முதன்முதற் தெரிவித்தார். ஓஷானசி, பனவியர், அற்சின்சன், துரூந்துமுதலியவர்களுடைய ஆராய்வுகள் அதை உறுதிப்படுத்தின. மேலும் ஷதுவாட்டு, நூற்றன், ரோசு, அ ச. டதர் முதலியவர்களுடைய எழுத்தும் இதற்குச் சார்பான சாட்சிகளாயிருக்கின்றன. பருவகாலத்திற் கிண்டியெடுத்து மேலே சொன்ன முறையாய்ச் சமைத்துக் காற்றுப்படாமற் பேணிவைக்கப்படும் வேருக்கு நல்ல வமனத்தன்மை யிருப்பது நிச்சயம் ஆயினும் மேலே சொன்ன முறை தப்பினால் வமனத்தன்மை அல்திரவ தொணிகத்தன்மையிரண்டிலுஞ் சத்துக்கெட்டுப்போகும். இதின் வேர்ப்பட்டையைப்பார்க்க வறட்டப்பட்ட இதின் பால் அதிக சத்துள்ளதென்று என்ஸ்லி எண்ணுகிறார். இந்த எண்ணத்தை உறுதிப்படுத்த அத்தாட்சியில்லை. நாள்வீதம் பன்னிரண்டு கிறேனைப் பிரித்துக் கொடுப்பதே தேயமென்கிறார்.

## *குறிஞ்சா. INDIAN IPECAC. TYLOPHORA ASTHMATICA.

**வாசம்.** இது வங்காளம் சென்னை முதலிய இந்துவின் பகுதிகளிலும், இலங்கையிலும், மணல்நிலங்களில் உண்டாகும்.

**வாகடபகுதி.** காய்ந்த இலை. இது இரண்டு இஞ்சு நீளமானது. முட்டை

1 Mudarin 2 Alterative, பரிணாமி. 3 Tonic. 4 Diaphoretic. 5 Emetic. 6 Leprosy. 7 Syphilis. 8 Mercurial Cachexia. 9 Dysentery. 10 Diarrhoea. 11 Chronic Rheumatism

(49) (50) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

வடிவானது. நுனியொடுங்கி நீண்டது. மேற்பக்கம் அழுத்தமும் கீழ்ப்பக்கம் சுணையுமானது. துவைத்தாற் கெட்ட மணம் வீசும், சுவை உவட்டானது.

தன்மை. வமனி[1], சுவேதனி[2], எக்ஸ்பெக்துறம்[3].

உபயோகம். இரையேறலிலும் வமனி வேண்டிய வேளைகளிலும் இது திறமாய்ச்சத்திக்கும். திசந்தெரி[4] கதார்[5]களுக்கும் வாடிக்கையாய் இபிகாக்கு வழங்கப்படும் மற்றும் நோய்களுக்கும் இது உபயோகமாகும்.

தேயம். காய்ந்த இலைத்தூளில் ஐந்து கிறேன் துவங்கி இருபது முப்பது கிறேனை அரைக்கிறேன் ஒருகிறேன் அந்திமனிதாத்தரக[6]த்தோடு கலந்து வமனியாகக் கொடுக்கலாம். சுவேதனி, எக்ஸ்பெக்துறமாய் மூன்றுமுதல் ஐந்துகிறேனை அவினோடாவது இந்த வகுப்பைச் சேர்ந்த மற்றும் மருந்துகளோடாவது கலந்து நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். நெருக்கமாயுங் கொடுக்கலாம்.

[குறிஞ்சாவேர் கடைகளில் வரும். இது வெளிறின நிறமுள்ள தடித்த திருகலான துண்டுகளாக விருக்கும். கைப்பும் சற்றே உவட்டுமான சுவையுள்ளது. இதற்குச் சுவேதன வமனித்தன்மைகள் உண்டென்று வெகு காலமாக அறியப்பட்டிருக்கின்றது. திசந்தெரி நோய்க்கு இது நல்லதென்று அன்றர்சன் வைத்தியர் சொல்லியிருக்கிறார். ஒஷானசி பண்டிதரும் இதை உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆயினும் காய்ந்த இலையின் செயல் சமமாயும் நிச்சயமாயுமிருப்பதால் அதையே எடுத்துக்கொள்வது உத்தமம். இபிகாக்குக்குப் பதிற் சரக்கைத் தேடுகில் இதையேகொள்வதுத்தமம்.] (51)

## அவாகடச்சரக்குகள். Non-officinal.

சேகமோனிச்செடி. Secamone emetica. இது இந்துவிற் பள்ளச் சோலைகளிலுள்ள ஓர் ஏறுகொடி. இது வாந்திக்குமென்பது சுதேசிகளுடைய எண்ணம். ஆயினும் பிதி வைத்தியர் பலமுறைகளில் இதைச் சோதித்துப்பார்த்து அச்செயலற்றதாகக் கண்டார். ஆகையால் இதின் செயல் சந்தேகமானது.

அஸ்கிலீபிக்குறசாவிகப்பூடு. Asclepias curassavica. இது இந்துவில் இடையிட்டு வந்து உண்டாகும் பூடு. இதின் வேர் வாந்திக்கும், பேதிக்கும். தேயம் வேர்த் தூளில் இருபது முதல் நாற்பது கிறேன். இலைச் சாறு அந்தெல்மிந்தியாகச் சேஷ்டிக்குமாம்.

உத்தமாகாணி. Daemia extensa. இதற்கு வமன எக்ஸ்பெக்துற தன்மைகள் உண்டென்று சுதேசிகள் சொல்லிப் பிள்ளைகளின் நோய்களுக்குப் பெரும்பாலும் வழங்குவார்கள். மைசூர்நகர விசிகத்தில், கதார்நோய்களுக்கு இது பத்துக் கிறேன் தேயமாகக் கொடுக்கப்படுகிறதென்று அஸ்வல்டு பண்டிதர் சொல்லுகிறார். இது பாம்புகடிக்கு மருந்தாகுமென்று சென்னையில் 1858 ம் ஆண்டு கவனித்தார்கள். ஆயினும் மெத்த மோசமான நிலைபரத்திலிருந்த ஒரு ஆளைச் சுகப்படுத்தின இன்னொரு பூண்டு இதுதான் என்று பூரணமாய் மட்டிடப்படவில்லை. பசும்பூக்கோயமிலையைச் சுதேசிகள் கட்டுகள் விப்புருதிக[7]ளுக்குப் பெரும்பாலும் போடுவார்கள். உத்தமாகாணியைப் போல இதற்கும் வமன எக்ஸ்பெக்துறத் தன்மைகள் உண்டென்று சுதேசிகள் சாட்சியிடுகிறார்கள்.

---

1 Emetic, வமனி. 2 Diaphoretic, திவபுறேசி. 3 Expectorant, கிசேட்டவனி. 4 Dysentery. 5 Catarrh. 6 Antimony tartarate. 7 Abscess.

(51) அனுபந்தம் பார்.



Digitized By Roja Muthiah Research Library

சிறுகுறிஞ்சா. Gymnema sylvestre. இதற்கு உத்தமாகாணிக்குச் சரியான தன்மைகள் உண்டென்று சுதேசிகள் சொல்வார்கள். பாம்புகடியில் உள்ளுக்குக் கொடுக்கவும் கடிவாய்க்குப்போடவும் இதின்வேர் நல்லதென்று மதிக்கிறார்கள். இந்தப் பூண்டிலுள்ள ஒரு விசேஷத்தை எச்சுவதர் முதன்முதற் கண்டார். இதைச் சப்பினால் சர்க்கரை இனிப்புகளின் சுவையை நாக்கு அறியக்கூடாமற்போகும். அவர்தாமே இதின் இலையைச் சப்பினவுடன் சர்க்கரை மாவை வாயிற் போட்டு அது மணல்போல இனிப்பில்லாதிருந்ததென்றும் ஒருநாளின்பின்பே சர்க்கரையின் சுவை தெரியத்தக்கதாய் வந்ததென்றுங் கண்டார்.

## லோகனியாசியங்கள்.

## LOGANIACEAE.

### காஞ்சிரமரம். NUX VOMICA.

வாசம். இது இந்துவின் மிகுதியான பகுதிகளில் உண்டாகும்.

வாகடபகுதி. கொட்டை. இது ஏறக்குறைய வட்டமும் தட்டையுமானது. முக்கால் இஞ்சு பருமையுள்ளது. ஒரு பக்கத்தின் மையத்தில் ஜிலம்[1]முள்ளது; ஒருபக்கஞ் சற்றே குவிவானது; வெளிப்பக்கஞ் சாம்பல்நிறமாய்க் குறுகிய சுணையால் அடர்த்தியாய் மூடப்பட்டிருக்கும்; உள்ளே சற்றே உருகொளியும், வைரமும் இறுக்கமுமானது; சுவை கடுங் கைப்பு; மணமற்றது. இதிலே ஸ்திரிக்னி[2] புரூசியய்[3] என்ற கிரிஸ்தற்பதார்த்தங்கள் இரண்டு இருக்கும். இவை இகசூரிக்கமில[4]த்தோடு கலந்திருக்கும்.

தன்மை. இது நல்ல சிராதொணிகம்[5], ஸ்திமுலம்[6], அதிதேயத்திற் கொடிய நஞ்சு.

உபயோகம். சோர்வு நோய்கள், நறல்சி[7] நோய்களுக்கும், அசத்துவ தியறீயம்[8], காலிகதிசர்தெரி[9]க்கும், பெருங்குடலின் திமிர்ப்பைச்சார்ந்த வாடிக்கையான மலவரட்சிக்கும், கடைக்குடல் இறங்கல், சலவொழுக்கு, விந்துக்கழிச்சல்களுக்கும், கசேரு நரம்புக[10]ளின் சேஷ்டையின்மை யல்லது பெலவீனத்தைப்பற்றிய மற்றுநோய்களுக்கும் இது உவந்த மருந்து. முறைச்சுரங்கள்,எபிலெப்சி[11],சர்க்கராமுரி[12],அனீமி[13],குலொரோசி[14]முதலிய நோய்களுக்கும் இது நயமாகும்.

தேயம். கொட்டை மாவை, இரண்டுமூன்று கிறேனிற் துவங்கிப் படிப்படியாய்க் கூட்டிப் பத்துக் கிறேன் வரையில் நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

ரசிதங்கள். காஞ்சிரவின்வூசம். *Infusion of Nux Vomica. கொள். காஞ்சிரங்கொட்டை, இடித்து இரண்டு திறும்; கொதிவெந்நீர், பன்னிரண்டு அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டு வடிக்கவும்.

தேயம். காலு திறும் தொடங்கிப் படிப்படியாய்க் கூட்டி எட்டுப் பத்துத் திறும் வரைக்கு நாள் மூன்றுமுறை கொடுக்கலாம்.

---

1 Hilum 2 Strychnia 3 Brucia. 4 Igasuric acid. 5 Nervous tonic. 6 Stimulant. 7 Neuralgia. 8 Atonic Diarrhoea. 9 Chronic dysentery. 10 Spinal nerve. 11 Epilepsy. 12 Diabetes. 13 Anaemia. 14 Chlorosis.

Digitized By Roja Muthiah Research Library

காஞ்சிராஞ்சம். Tincture of Nux Vomica. கொள், காஞ்சிரங்கொட்டை, இரண்டு அன்சு; திட்டசீது[1] அரைநாழி. காஞ்சிரங்கொட்டை நல்லாய் மெதுவாகுந்தனையும் நீராவி[2]யிற் கொதிப்பித்து, அப்பாற் சுறுக்கு உலர்த்தி, மெல்லிய மாவாக்கவும். மூடிய பாத்திரத்தில் இந்த மாவைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளுறவிட்டு இடைக்கிடை குலுக்கி, அப்பாற் சியந்தனி[3]யில் வார்த்து நீர் ஒழுகித் தீர்ந்தபின், சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து அந்தநீரைவடித்து இரண்டு நீர்களையுங் கலந்து ஒருநாழி தேறப் போதிய திட்டசீதைக் கூட்டவும்.

தேயம். ஸ்திமுல[4]மாகப் பத்துமுதல் இருபது துளிகொடுக்கலாம். தொணிகமாக ஐந்துமுதற் பத்துத்துளி கொடுக்கலாம்.

காஞ்சிரவெசிறத்து. Extract of Nux Vomica. கொள். காஞ்சிரங்கொட்டை ஒரு இருத்தல்; திட்டசீது போதியது. கொட்டை நல்லாய் மெதுவாகுந்தனையும் அதை நீராவியிற் கொதிப்பித்துச் சுறுக்கு உலர்த்தி மாவாக்கவும். இந்த மாவைச் சீதிற் கொஞ்சக் கொஞ்சப் பங்கோடு அவித்துச் சீது கைப்பில்லாமல் வருந்தனையும் திரும்பத் திரும்ப அவித்துச் சாரத்தை வாங்கவும். சாரமுள்ள இந்தச் சீதைச் சீலையில் வடித்துச் சீதைத் திஸ்திலித்துப் பிரித்துச் சாரத்தை நீர்மத்திகத்திற் சூடேற்றி மெண்களியாக வற்றப்பண்ணவும்.

தேயம். காற்கிறேன் துவங்கி இரண்டு கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். நரம்புத்ததி குறைவாயிருக்கிற குடல்நோய்களுக்கு இது விசேஷமாய் நல்ல மருந்து.

ஸ்திரிக்னி. Strychnia. இது காஞ்சிரங்கொட்டையிலிருந் தெடுக்கும் ஓர் அல்கலேவ[5]ம். இதைக் குறிக்குஞ்சின்னம் $கா_{21}$ $ஐ_{22}$ $நீ_2$ $அ_2$. இது மணம் நிறமற்ற, சதுரப் பிரிசங்க[6]ளாக இருக்கும். இதின் கடுங்கைப்புத் தண்ணீரிற்பிடிப்பதேயன்றி அதில் இது கரைவதரிது. கொதிக்கிற திட்டசீதிலும் குலோறுவாமி[7]லும் இது கரையும். கேவல அலக்காலி[8]லாவது ஈதரி[9]லாவது கரையாது. சுத்த சல்வுரிக்கமிலம்[10] இதோடு சேர்ந்து நிறமற்ற நீராகும். அந்தநீருக்குப் பதாசிதுவிகுறோமசு[11] சேர்க்கச் செந்நீல நிறமாகிச் சுறுக்குச் சிவப்பாகி, மறுபடி மஞ்சளாகும். சோதனைகள். நீதரிக்கமிலம்[12] இதை நிறப்பிக்கமாட்டாது. பரமாணுவில் எரிக்கச் சாம்பல்விழாது.

தன்மை உபயோகம். காஞ்சிரத்தைப் போலவே. இது சிறு தேயத்திற்றானும் வீறான நஞ்சாயிருப்பதால் இதைக் கொடுக்கும்போது கவனமாயும் விழிப்பாயும் பார்க்கவேண்டும். அசத்துவவகை[13]யான சோர்வுகளுக்கே இது உவந்தது. எந்தக் காரணமாயாகிலும் உண்டாகும் நரம்புக்களைக்கு இது உவந்த மருந்து. அமறோசி[14], கண்கூச்சம், கொரீயம்[15], முறைச்சுரங்கள் முதலிய நோய்களுக்கு இது நயந்ததாகக் காணப்பட்டது.

தேயம். தொணிக[16]மாக ஒருகிறேனில் ஐம்பதில் ஒருபங்கு நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். சிரா ஸ்திமுலமாக முப்பதில் ஒருபங்குகிறேன் தொடங்கிப் பன்னிரண்டில் ஒருபங்குகிறேன் வரைக்கும் படிப்படியாய்க் கூட்டிக்கொடுக்கலாம். கைகால் சொற்பமாகுதல் சுண்டி வலிக்கத்

---

1 Rectified spirit. 2 Steam. 3 Percolator. 4 Stimulant, தேவனி, 5 Alkaloid. 6 Prism. 7 Chloroform. 8 Absolute Alcohol. 9 Ether. 10 Sulphuric acid. 11 Bichromate of potash. 12 Nitric acid. 13 Atonic. 14 Amaurosis. 15 Chorea. 16 Tonic.

Digitized By Roja Muthiah Research Library

தொடங்கினால் உடனே மருந்தைநிறுத்தவேண்டும்.

**ரசிதங்கள். ஸ்திரிக்னிநீர்.** Solution of Strychnia. கொள். ஸ்திரிக்னி, கிறிஸ்தல்க[1]ளாக நாலுகிறேன்; கிருசவைருகுலோறிக்கமிலம்[2], ஆறுமினிம்[3]; திட்டசீது[4] இரண்டுதிறாம்; திஸ்திலித்த[5]நீர், ஆறு திறாம். ஐருகுலோறிக்கமிலத்தைத் தண்ணீரில் நாலுதிறாமோடு கலந்து, அக்கலவையிலே ஸ்திரிக்னியைச் சூடுகாட்டிக் கரைத்து அப்பாற் சீதையும் சேஷமான தண்ணீரையுங் கூட்டவும்.

**தேயம்.** மூன்றுமுதற் பத்து மினிம். ஒவ்வொரு மினிமிலும் ஸ்திரிக்னி தொண்ணூறில் ஒருபங்கு கிறேன் அடங்கியிருக்கும். ஆகையால் ஒன்பதுமினிமிற் பத்தில் ஒருபங்கு கிறேன் ஸ்திரிச்னியிருக்கும். இதிலும் ஸ்திரிக்னியின் மற்றும் எல்லா ரசிதங்களிலும் தொடக்கத்திற் சிறுதேயங்கொடுத்துப் படிப்படியாய்க்கூட்டுவதே புத்தி.

[சில வருஷங்களுக்கு முன்னே காஞ்சிரம்பட்டையைப் போலிக் கஸ்பாரி[6]ப்பட்டையென்றுசொல்லி யுரோபத்தில் வியாபாரம் பண்ணினார்கள். கள்ளம்வெள்ளமான இவ்விரண்டு பட்டைகளுக்குமுள்ள வித்தியாசத்தை ஓஷானசி பண்டிதரே 1837 ம் ஆண்டு காட்டினார். காஞ்சிரம்பட்டையில் ஸ்திரிக்னியும் புரூசிய[7]முமிருப்பதால் இது கொடிய நஞ்சு. இது கற்குத்தாவிற் சேம்பட்டை[8]க்குப் பதிலாக விலைப்பட்டு வழங்கினது. பட்டைகளின் உள்வளத்துக்கு நீதுரிக்கமில[9]ம் பூசுவதால் இந்த இரண்டையும் பகுத்தறியலாம். காஞ்சிரம்பட்டையிலே நீதுரிக்கமிலம் பூச அது சிவப்பாகும். சேம்பட்டையிற் பூசினாலோ அது அப்படியாகாது. ஸ்திரிக்னி செய்வதிற் காஞ்சிரங்கொட்டைக்குப் பதிலாக அதின் பட்டையை வழங்கலாமென்று கிரிஸ்திசன்பண்டிதர் எண்ணுகிறார். குஷ்டம், சிவ்விசுக்[10]கரப்பன், மற்றுங் கொடிய சரும நோய்களுக்குப் பெரும்பாலும் பூசும் பிரதான மருந்தெண்ணெயில் இது ஓர் முக்கிய கூறாகின்றது. இந்த மருந்தெண்ணெய்கள் சிலவேளை வாய்க்கிறதென்று முடீன்செறீவு சொல்லுகிறார்.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**பாம்பேட்டிச் செடி.** Strychnos colubrina. இது மலையாளம், சோழமண்டலம், தென்னிந்துவின் மற்றும் பகுதிகள், லங்கை, மொலக்கத்தீவு, முதலிய தேசங்களிலுள்ள ஏறுசெடி. பாம்பு கடிக்கும் நாகந் தீண்டினதற்குத்தானும், இதின் சிராய் வெளிக்கும் உள்ளுக்கும் வழங்கப்பட்டது. ஆயினும் இதின் சித்தியைப்பற்றி நம்பிக்கையான சாட்சியொன்றும் எழுத்தில் இல்லை. யாவகர் முறைச்சுரங்களுக்கு மருந்தாக இதை வெகுகாலமாய் வழங்கினார்களென்று காசுவீல்டர் சொல்லுகிறார். பெர்கிலு இதை மூன்றாம்முறை நாலாம்முறைச் சுரங்களில் இருபத்திரண்டுபேருக்குக் கொடுத்துப் பார்த்து நயமென்றும் மலிவான மருந்தாகையால் வறியவர்களுக்குக் கொடுக்கலாமென்றுஞ் சொல்லுகிறார். இதிலே ஸ்திரிக்னி அதிகமாயிருப்பதால், கவனமாய்க் கொடுக்கவேணும். இதற்குரிய எந்த நயமும் இந்தச்சத்தைப்பற்றியதே. இதின் வீதம் நிதானிக்கப்படாதிருப்பதாலும், பட்டையைச்சேர்க்குங் காலத்துக்குத் தக்கதாய் வீதம் மாறக்கூடியதாயுமிருப்பதால் சமவீறுள்ளதும் லகுவிற் கூட்டிக் குறைக்கப்படத்தக்கதுமான ஸ்திரிக்னியை

---

1 Crystal. 2 Dilute Hydrochloric acid. 3 Minim, துளி. 4 Rectified spirit. 5 Distilled water. 6 Cusparia. 7 Brucia. 8 Rohun Bark. 9 Nitric acid. 10 Syphilis.

Digitized By Roja Muthiah Research Library

த்தானே பட்டைக்குப் பதிலாக வழங்குவது புத்தி. நாமறிந்தவரையில் இந்தப்பட்டையை மோசமான சரக்காகவே எடுக்கவேணும். இந்துக் கடைகளில் வருவதும் நாட்டு வைத்தியத்தில் அதிகமாய் வழங்கப்படுவதுமாகிய சயப்பங்கொட்டை[1]க்கும் இப்போ சொன்ன குறிப்புகள் ஒக்கும் இதின் உபயோகங்கள் பலவற்றைப் பற்றி நாட்டுவாகடமாகிய தலீவுசெறீவு[2] கூறுகின்றது. ஸ்திரிக்னியையாவது காஞ்சிரத்தின் வாகடரசிதம் ஏதையாவது வழங்குவதால் இதின் நயமுண்டாகக்கூடுமென்றே தோன்றுகின்றது. இக்கொட்டை ஒலீவப்பழமளவு பருமையும் திரண்டதும் ஒருபக்கத்திற் குவிவும் மற்றப்பக்கத்திற் சற்றே கோணலுமானது. வெளிப்பக்கம் நீல நரைநிறங்கலந்த கபிலமானது. பருப்பு மெத்த வைரமாய் உள்ளே மூளையை அடக்கியிருக்கும்.

தேற்றுங்கோட்டை. Clearing nut. இது தட்டையான உண்டைவடிவும் மஞ்சள்நரைநிறமுமானது. அடர்த்தியான குறுகினமயிரால் மூடப்பட்ட ஓடுள்ளது. பருப்பு வைரமானது, சுவையற்றது; இதற்கு நஞ்சுத்தன்மையில்லை; இதை வமனியாகவும் சக்கராமூரி[3], கனுறீயம்[4] முதலிய நோய்களுக்கும் மருந்தாகவுஞ் சுதேசிகள் வழங்குவார்கள். மண்டித் தண்ணீரைத் தெளியப்பண்ணி அதைக் குடிக்கத் தகுந்ததாக்குவதே இதின் முதல் உபயோகம். மழைகாலத்தில் இந்துதேசத்தில் பிராணுவம் பயணம்பண்ணும்போது சொற்ப மண்டித்தண்ணீர்மாத்திரங் கிடைக்கக்கூடியதாயிருக்கையில் அதைத் தெளியப்பண்ணுவதற்கு வைத்தியத் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் இது மெத்த உபயோகமாகும். அல்புமினும்[5] கசியினும்[6] இதிலடங்கியிருப்பதினாலேயே இத்தன்மை இதற்கிருக்கிறதென்று பெரைரர்பண்டிதர் சொல்லுகிறார். இக்கொட்டையை வெட்டித் தண்ணீரில் ஊறப்போட்டால் தண்ணீர் தடித்த பாகாய் வரும். இதைக் கொதிப்பிக்க அல்புமின் திரைந்திறுகும். பிற்பாடு அசிதிக்கமிலஞ்[7]சேர்க்க கசியினும் பிரிந்துறையும். இதாற் தண்ணீரைத் தெளியப்பண்ணும் முறை மெத்த லகுவானது. கொட்டையை வெட்டியல்லது துவைத்து ஓர் பாத்திரத்தின் உள்வளத்திற் பூசி அல்லது முழுக்கொட்டையால் உள்வளம் அடங்கலும் தேய்த்துரைஞ்சியபின் அதிலே மண்டித்தண்ணீரை வார்த்துவைக்க அது சீக்கிரத்திற் தெளிந்து நன்னீராகும். இத்தன்மையை அத்தாட்சிப்படுத்துவதற்குப் பரிசோதனைகள் இன்னும் கவனமாய்ச் செய்யப்படவேண்டும்.

வாசனைவகிரீயமரம். Fagraea fragrans. இது சீனதேசம் மலாயநாடுகளில் உள்ளது. மலாக்காதேசத்தின் நச்சுக்காய்ச்சலை மாற்றுவதற்கு இதின் பட்டை சித்தியுள்ளதாய்க் காணப்பட்டது. இதை ஆராய்ந்தறியும்படி மென்கை பண்டிதர் வங்காளத்து வைத்திய அதிகாரிகளுக்கு அறிவித்தார். கனலல்டையென்பவர் இதைக் கெமிஸ்தமுறையாகச் சோதித்து இதிலே ஸ்திரிக்னி இருக்கிறதாகக் கண்டார். இம்மருந்தை இன்னும் ஆராய்வது நல்லது.

1 Saint Ignatius's Bean. 2 Taleef shereef. 3 Diabetes. 4 Gonorrhoea. 5 Albumen. 6 Casein. 7 Acetic acid.

Digitized By Roja Muthiah Research Library

# ஜேன்சியனுசியங்கள்.

## GENTIANACEAE.

### ஜேன்சன். YELLOW GENTIAN.

வாசம். இது யுரோபத்தின் மையப்பகுதி தென்பகுதிகளின்மலையடிவாரங்களில் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்த வேர். இது அரைஇஞ்சு ஒருஇஞ்சு பருமையும் சில இஞ்சு நீளமுமான துண்டுகளாக வரும். பெரும்பாலும் திருகினதாயிருக்கும். மெத்தச் சுருக்குந் திரைவுமுள்ளது. அதாவது குறுக்குப் புருவங்கள் அடர்ந்திருக்கும். வெளியிற் கபிலநிறமும் உள்ளே மஞ்சளுமானது. உரத்தது, கண்ணறைகள் உள்ளது. சுவை முதலே இனிக்கும், பிறகு மெத்தக் கசக்கும். ஜென்சனீது[1] என்ற கைப்பான எசிருத்திவி[2]லேயே இதின் செயல் தங்கும். மேலும் ஜென்சனின்[3] என்ற ஓர் கிரிஸதற்[4]பதார்த்தமும் ஓர் அத்திரத்[5]வெண்ணெய்யும் இதிலே அடங்கியிருக்கும்.

தன்மைகள். இது உத்தமமான கைப்புத்தொணிகம்[6].

உபயோகம். பெலவீனத்துக்கும் கடுமையான நோயினின்று சுகப்பட்டு வருபவர்களுக்கும் அசீரண நோய்களுக்கும் அசீரணத்துக்கும் இது சித்திபெற்ற மருந்து. முன்னே முறைச்சுரங்களுக்கும் இது பெயர்பெற்றிருந்தது.

ரசிதங்கள். ஜேன்சன்கூட்டின்வூசம். Compound Infusion of Gentian. கொள். நறுக்கிய ஜென்சன் வேர், துண்டாக்கிய கைச்சற் தோடந்தோல், வகைக்கு அறுபது கிறேன்; பச்சைலெமன்[7]தோல், துண்டாக்கி கால் அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடித்தெடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கலாம்.

ஜேன்சன்மிஸ்துர். Gentian Mixture. கொள். நறுக்கிய ஜென்சன் வேர், கால் அன்சு; துண்டாக்கிய கைச்சற் தோடந்தோல், இடித்த கொத்தமல்லி, வகைக்கு முப்பது கிறேன்; புருவுசீது[8], இரண்டு அன்சு; தண்ணீர் எட்டு அன்சு. ஜென்சன் வேர், தோடந்தோல், மல்லி மூன்றையும் புருவுசீதில் இரண்டுமணிநேரமூறப்போட்டுப் பிற்பாடு தண்ணீரைவிட்டுத் திரும்பவும் இரண்டுமணிநேரமூறவிட்டுக் காரிக்கம்புடவையில் வடிக்கவும்.

தேயம். அரை அன்சுமுதல் இரண்டன்சை நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

ஜேன்சனேசிறுத்து. Extract of Gentian. கொள். நறுக்கிய ஜென்சன்வேர், ஒரு இருத்தல்; கொதிவெந்நீர் ஒரு கலன். ஜென்சன் வேரை அந்த வெந்நீரில் இரண்டுமணிநேரமூறவிட்டுப் பதினைந்து மினி வரைக்கு அவித்து தெளித்து உறந்து சீலையில் வடிக்கவும். நீர்மத்திகத்தில் ஏற்றிக் குளிகைப்பதமாய் வறட்டவும்.

---

1 Gentianite. 2 Extractive. 3 Gentianin. 4 Crystal. 5 Volatile. 6 Tonic. 7 Lemon. 8 Proof spirit.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். இரண்டு கிறேன் முதற் பத்துக்கிறேன் கொடுக்கலாம். இது குளிகையில் பெலந்தரும் மற்றும் மருந்துகளுடன் நயமாகச் சேரும்.

ஜென்சன்கூட்டிராஞ்சம். Compound Tincture of Gentian. கொள். இடித்த ஜென்சன்வேர், ஒன்றரை அன்சு; வெட்டித் துவைத்த கைச்சற் றோடந்தோல் முக்கால் அன்சு; கோதுரித்து இடித்த ஏலக்கொட்டை கால் அன்சு; புரூவுசிது[1] அரைநாழி. மூடிய பாத்திரத்திற் சரக்குகள் எல்லாவற்றையும் பதினைந்து அன்சுசீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[2]யில் வார்த்து நீர் வடிந்தொழிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்த இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்

தேயம். அரைத்திரும் முதல் இரண்டுதிருங் கொடுக்கலாம்.

## சிரட்குச்சி. CHIRETTA.(52)

வாசம். மத்திம இமயத்திற் குமயனூருக்குக் கிழக்கே இப்பூண்டு உண்டாகும்.

வாகடபகுதி. சமூலமும், காய்க்கத்தொடங்கும்போது சேர்க்கப்படும். இந்தப் பூண்டின் லட்சணங்களாவன: தண்டு இரண்டு முழநீளமும் ஈர்க்களவு பருமையுமாய்த் திரண்டு அழுத்தமாயிருக்கும். வெண் கபிலநிறமானது; கிளைத்தது; கிளைகள் ஒன்றுக்கொன்று எதிர்நேரில் இருக்கும்; பூக்கள் சிறுத்து அனேகமாய்க் குவிந்திருக்கும். சமூலமும் கடுமையான கைப்பு. இதிலே கைப்பான ஓர் எசிருத்தி வு[3]ம், ஓர் ராளப்[4]பதார்த்தமும் இருக்கும். இவைகளிலேயே இதின் சாரம் அடங்கும்.

தன்மை. வீறான சுத்தக் கைப்புத்தொணிகம்[5].

உபயோகம். ஜென்சனைப்போலவே.

ரசிதங்கள். சிரட்குச்சியின்வூசம். Infusion of Chiretta. கொள். நறுக்கிய சிரட்குச்சி, கால் அன்சு; 120 பாகை சூடான நீர், பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் அரைமணிநேரமூறப்போட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டுஅன்சு, நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கலாம்.

சிரட்குச்சிக்கூட்டிராஞ்சம். *Compound Tincture of Chiretta. கொள், இடித்த சிரட்குச்சி ஒன்றரை அன்சு; துவைத்த தோடந்தோல் முக்கால் அன்சு; கோது நீக்கி இடித்த ஏலக்கொட்டை கால் அன்சு; புரூவுசீது அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி இறுத்துப் பிழிந்து சீலையில் வடித்து அரைநாழி தேறப் போதிய புரூவுசீதைக் கூட்டவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டுதிருங் கொடுக்கலாம். மற்றுந்தொணிகங்களுக்கு இது நல்ல துணைமருந்தாகும்.

[தென்னிந்துவில் இந்தப் பூண்டை நிலவேம்பு என்று மாறி வழங்குகிறார்கள்.]

---

1 Proof spirit. 2 Water bath. 3 Extractive. 4 Resin. 5 Tonic.

(52) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

இமயஜென்சன். Gentiana Kuroo. இமயமலையிலுள்ள இந்தப் பூண்டின் வேர் யுரோப்பஜென்சனின் கைப்பு உடையது. அதைப் போலவே இதை வழங்கலாம். அதற்கு இது உத்தம பதிலாகும். இதையுங் கூட்டின்னூசமாகச்செய்து ஜென்சன் கூட்டின்னூசத்தின் தேயமாய்க்கொடுக்கலாம்.

ஒடுக்கிலைச்சிரட்பூடு. Ophelia angustifolia. அழகுச்சிரட்பூடு. O. elegans. சடைச்சிரட்பூடு. O. densifolia. இவைகளெல்லாம் சிரட்குச்சியின் இனங்கள். இவைகளும் அதைச்சேர்ந்த மற்ற இனங்களும் இமயமலையில் உண்டாகும். இவைகளிற் சில சென்னையின் மலைகளிலும் உண்டு. இவைகள் எல்லாங் கடுங்கைப்பு உள்ளவைகள். ஆகையாற் சிரட்குச்சி கிடையாத நடுவிந்து தென்னிந்துவிலும் அது அரிதாய்க் கிடைக்கக்கூடிய நேபாளத்துக்கு மேற்குப பகுதியிலும் இவைகளை அதற்குப் பதிலாக வழங்கலாம். வங்காளத்தின் வடமேற்கு மாகாணங்களில் சிரட்குச்சிக்குப் பதிலாக இமயமலையில் ஏராளமாயுள்ள ஒடுக்கிலைச்சிரட்பூடு அதிகமாய் வழங்கப்படும். சென்னையின் மலைகளிலுள்ள அழகுச்சிரட்பூடு நெடுகநிற்கிற கடுங்கைப்புள்ளதென்று கிளேகன் வைத்தியர் சொல்லியிருக்கிறார். இதாற் சீரணஉறுப்புகள் பெலனடைந்து சுகந்தேறுவதைப் பலசோதனைகள் உறுதிப்படுத்துகின்றனவென்று அவர் சொல்லுகிறார். இதற்கு அந்திபிருடி[1]த் தன்மையுமுண்டென்று தோற்றுகின்றது. அரைநாழி தண்ணீருக்கு இதில் இரண்டு திரும் வீதமாக ஊறப்போட்டு இன்னூசமாய்க் கொடுப்பதே உத்தமமான முறை. இது வாகடத்துக்குரிய சிரட்குச்சிக்குச் சமமும்,சிலருடைய எண்ணப்படி கதிப்புமானது. கங்கன் தேச மலைகளுக்குரிய சடைச்சிரட்பூடுக்கு வாய்ப்பான பதிலாய் வம்பாயில் வழங்கப்படுகிறது. பிறவுதன் பண்டிதர் இதை விசேஷித்து விவரித்திருக்கிறார். காய்ந்தவேர் இரண்டு இஞ்சுவரைக்கு நீளமும் ஈர்க்களவு பருமையுமுள்ள நொருக்கலான துண்டுகளாக வரும்; இரண்டு மூன்று கூர்தல்கள் உள்ளதாயும் வெண் கபில நிறமான வெளித்தோலால் மூடுண்டு நெடும்பாட்டுக்குச் சுருக்குகள் விழுந்தும் உள்ளே வெண்மையாயுமிருக்குமென்று அவர் சொல்லுகிறார். இதின் தன்மை உபயோகங்கள் ஜென்சன் சிரட்குச்சியின் தன்மை உபயோகங்களுக்குச் சரியென்றும் அவைகளுக்குப் பதிலாக இதை வழங்கலாமென்றும் அவர் எண்ணுகிறார். காய்ந்த பூண்டும் இதுபோல் வழங்கப்படுகிறதுபோலும்.

சதுரேச்சகப்பூடு. துவிவன்னவேச்சகப்பூடு. Exacum tetragonum and E. bicolor. இவைகளுள் முதலாவது இமயத்திலும் வங்காளம் மத்தியஇந்துவின் மலைகள் பள்ளங்களிலும் வம்பாய் வரைக்கும் உண்டாகும். இது சமூலமுங் கடுங்கைப்புச் சுவையுள்ளதென்று ரைல் சொல்லுகிறார். தோணிகமாக இது அதிகசெயலுள்ளதுபோலும். இரண்டாவதாகிய துவிவன்னவெச்சகப்பூடு கங்கணம் குத்தாக்கு துவங்கிச் சென்னை முழுதும் உண்டு. இதின் காய்ந்த தண்டுகள் மங்களூரிலும் தென்னிந்துவின் மற்றும் பகுதிகளிலும் நாட்டு நிலவேம்பு என்று விலைப்படும். ஜென்சனுக்குரிய தோணிக ஸ்தோமாகி[2]த்தன்மைகள் இதற்கு உண்டு. கிடைக்கக்கூடியவிடங்களில் அதற்குப் பதிலாக இதை வழங்கலாம். இந்த இரண்டு பூண்டுக

---

1 Antiperiodic, சமனீகரி. 2 Stomachic, ரோசனி.

Digitized By Roja Muthiah Research Library

ளையுந் தவிர, தாளெச்சகம் E. pedunculatum என்று இன்னொரு இனம் மேல்மைசூரிலுண்டென்றும் இவைக்குரிய தன்மைகளெல்லாம் அதற்கும் உண்டென்றும் பிதிபண்டிதர் சொல்லுகிறார். அதின் கைப்புச் சிரட்குச்சியைப் போலக் கடுமையுங் கார்ப்புமல்ல. இது ஜென்சனுக்கு அதிகங்கிட்டியதாதலால் அதற்குப் பதிலாக இதைக் கொள்ளலாமென்றும் அவர்சொல்லுகிறார். பூ வாடத்தொடங்கும்போதே இப்பூண்டைப் பிடுங்கிக் கவனமாய் நிழலில் உலர்த்தி எடுக்கவேண்டுமென அவர் சொல்லுகிறார். சிரட்குச்சியின் இன்லூசம், ரஞ்சங்களின் வீறுள்ள ரசிதங்கள் செய்தே அதை உள்ளுக்குக் கொடுக்கலாம். இவைகளைத்தவிர எச்சகப்பூண்டில் இன்னும் பல இனங்கள் இந்துவில் உண்டு. அவையுள்ளஇடங்களில் அவற்றைச் சோதிப்பது நல்லது.

வெள்ளறுகு. Cicendia hyssopifolia. இது இந்துவின் மிகுதியான பகுதிகளிலே ஈரிப்பான இடங்களில் உண்டாகும். இந்த இனத்தைச் சேர்ந்த மற்றும் பல பூண்டுகளைப்போல இதுவும் கைப்புடையது. சென்னைதேசத்தார் இதை ஸ்தோமாகி[1]யாக மெத்த வழங்குகிறார்களென்றும் தொணிக[2]த்தன்மையோடு சற்றே விரேசனத்தன்மையும் இதற்கு உண்டென்றும் கிளேகன் பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

எரித்ரப்பூடு. Erythraea Roxburghii. இது மைசூர், தெக்கணம், வங்காளங்களிலுள்ள பூடு. சமூலமுங் கடுமையான கைப்பு. சுதேசிகள் இதை மெத்த மதிக்கிறார்கள். இது நல்ல தொணிகமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

## பிக்னோனியாசியங்கள்.

## BIGNONIACEAE.

### அவாகடச்சரக்கு. Non-Officinal.

Bignonia xylocarpa. இது கந்தீசு தொடங்கி மலையாளம் வரைக்குமுள்ள காடுகளிலும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் நிற்கிற சிறியமரம். சுதேசிகள் இதைக் கூர்சிங்கு (Kursing) மரம் என்பார்கள். இதின் சிராயைத் திஸ்திலித்[3]தெடுக்கும் எண்ணெய் சருமநோய்களுக்கு உத்தம மருந்தாகும். இது இவைகளுக்கு நல்ல பூச்சுமருந்தாகுமென்று கிப்சன் பண்டிதர் சொல்லுகிறார்.

## சேசாமியங்கள்.

## SESAMEAE.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

எள்ளு. Sesamum Indicum. இது இந்துதேசத்தின் எப்பகுதியிலும் பூமியின் உஷ்டணப்பகுதிகளிலும் எண்ணெய்க்காக செய்கைபண்ணப்படுகின்றது. இதைப் பிழிந்து சுத்தமாயெடுத்த எண்ணெய் மருந்துப்பிர

---

1 Stomachic, [illegible]. 2 Tonic. 3 Distill.



Digitized By Roja Muthiah Research Library

யோகங்களில் ஒலிவெண்ணெய்[1]க்குச் சரியாகுமென்று வங்காள டிஸ்பென்சதறி[2] என்ற வாகடங் கூறுகின்றது. காயங்கள், விரணங்கள் முதலியவற்றின் பரிகரிப்பில் எண்ணெய் இடுவது திறமென்று பேண் வைத்தியர் விதந்துபேசுகிறார். அவர் தமது ஆஸ்பிதல்[3]களிலே சுத்தஎண்ணெய்யைச் சீலையிற் றோய்த்து எவ்வகைக் காயங்கள் புண்களுக்கும் இடுவது வழக்கமென்கிறார். எவ்வகையான புண்களுக்கும் விசேஷமாய் உஷ்டண காலங்களில் இந்த எண்ணெய் உத்தமமென்றது அவரது எண்ணம். இந்த நூலைப் பிரகரஞ்செய்தவர் சுண்ணலினிமென்[4] செய்வதில் ஒலிவெண்ணெய்க்குப் பதிலாக இதையே வெகுவருஷங்களாக வழங்கிவந்து மிகத் தகுந்ததென்று கண்டார். சுதேசிகள் இதை அதிகமாய்ச் சாப்பாட்டுக்குச் சேர்ப்பார்களன்றி வழக்கமாய்த் தலைக்கும் பூசுவார்கள். எள்ளுக்கு வீறுண எம்மெனகக்குத்[5]தன்மைஉண்டாம். அதை அதிகமாய்த் தின்றாற் கருவையழிக்குமென்று சுதேசிகளும் இந்துபிறித்தரும் நினைக்கிறார்கள். ஒரு சிறங்கை எள்ளைத்துவைத்து, வெந்நீரில் ஊறவிட்டு அதற்குள்ளே நோயாளியை இருத்தத் தீட்டுண்டாகுமென்பதற்குப் போதிய அத்தாட்சியுண்டு. தீட்டை ஒழுக்குந்தன்மை இக்கொட்டைக்கு உள்ளதோ அல்லவோவென்று இன்னும் பார்ப்பது நல்லது. எள்ளிலை வாகடத்துக்குரியதென்று அமரிகவாமகுபீய[6]த்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த இலையிலே பிசுபிசுப்பான தடித்த பாணி நிறையவுண்டு. இது சுறுக்குத் தண்ணீரிற் கரையும். வட அமரிகத்தின் தென்பகுதிகளில் இந்த இன்பூசத்தை திமல்சம்[7] வேண்டிய எந்தநோய்களுக்கும் வழங்குவார்கள். முற்றின இரண்டொரு பச்சை இலையைக் கால்நாழி தண்ணீரில் ஊறப்போட்டால் சுறுக்குத் தகுந்த பிசுபிசுப்பாய் வரும். இலை காய்ந்ததானால் அதற்கு வெந்நீர்வேண்டும். சாந்தன[8] பாப்பை செய்வதற்கும் இலைகள் உதவும். இந்துவிலுள்ள எள்ளிலைகளை இதற்கெவ்வளவாய் வழங்கலாமென்று இனிமேல் நிதானிக்கவும்.

பெருநெருஞ்சி. Pedalium Murex. இது சென்னையின் பல பகுதிகளில் விசேஷமாகக் கடலருகில் உண்டாகிற பூடு. பச்சையான இலைகளுந் தண்டுகளுமிட்டுக் கலக்கப்பட்ட தண்ணீர் ஏறக்குறையக் கோழிமுட்டையின் வெள்ளைக்கருவளவு தடிப்புள்ள மணஞ்சுவையற்ற பாணியாகும். இப்படிச்செய்த இன்பூசத்தைக் கனாரீயம்[9], திசூறி[10] என்னுநோய்களுக்கு உத்தம மருந்தாகத் தெற்கிந்துவின் சனங்கள் மதிக்கிறார்கள். இந்த நோய்களுக்கு இது நயந்த மருந்தென்றும் அமூரிதி[11]யாக வழங்க இதின் செயல் சீக்கிரந் தோன்றுமென்றுஞ் சந்தேகமற விளங்குகின்றது. இந்தப் பூண்டின் உபயோகத்தைப் பற்றி ஐவீசு பண்டிதரும் மெத்த நயந்து பேசுகிறார். வேறு மருந்தின் உதவியின்றி இந்த மூசிலாகு[12] கனாரீயத்தை மாற்றினதென்று அவர் சாட்சியிட்டிருக்கிறதுமன்றி தமஸ் பண்டிதரும் அவ்வாறு சாட்சியிட்டிருக்கிறார். பாணியான தண்ணீர் மறுபடி சுறுக்குத் தடிப்பற்றுப்போகுமாகையால் கொடுக்கும் ஒவ்வொருமுறையும் அதைப் புதுக்கச் செய்துகொள்ளவேண்டும். இதின் செயல் தன்மைகளைப்பற்றி இன்னும் ஆராய்வது நல்லது. இந்துக் கடைகளில் இதின் பழங்கள் வரும். அவை நாற்கோணமும் அரை இஞ்சு நீளமுமானவைகள்; முள்ளுள்ளவை

1 Olive oil. 2 Dispensatory, சிகிச்சைநூல். 3 Hospital. விசிகம். 4 Linimentum calcis. 5 Emmenagogue. 6 U. S Pharmacopoeia. 7 Demulcent, சமனி. 8 Emollient. 9 Gonorrhoea. வெட்டை. 10 Dysuria, சலக்கடுப்பு. 11 Diuretic. 12 Mucilage.

Digitized By Roja Muthiah Research Library

கள், மணஞ் சுவையற்றவைகள். இவைக்குத் திமல்ச[1]அமுரிதித் தன்மைகள் உண்டென்று எண்ணிச் சுதேசிகள் இவற்றை அதிகமாய் வழங்கிவருகிறார்கள்.

## கன்வல்வுலாசியங்கள்.

## CONVOLVULACEAE.

### ஜலப்பு. JALAP PLANT.

வாசம். இது மெக்சிகுவின் மலைச்சோலைகளில் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்த கிழங்கு. இது கடுக்காய் முதல் மாங்காயளவு பருமையுள்ளது; முட்டை வடிவானது; பருங் கிழங்குகள் பெரும்பாலும் கீறுண்டிருக்கும்; கபில[2]நிறமான மெல்லிய சுருக்கு விழுந்த தோலால் மூடுண்டிருக்கும். வெட்டும்போது மஞ்சள் நரைநிறமுள்ளதாயும் மையத்தை நோக்கிய கருங் கபிலநிறமுள்ள வளையங்களாகவும் தோற்றும்; சொற்ப நாற்றமுள்ளது. சுவை முதலில் இனிப்பும் உவட்டுமோய்ப் பிறகு கார்ப்பாகும். இதின் சத்து கீழே குறிக்கப்படும் ராளமே.

தன்மை. இது விரேசனி, அந்தெல்மிந்தி[3].

உபயோகம். மலக்கட்டுக்கும் நீர்க்கோவை நோய்களுக்கும், சுள்ளாப்பான விரேசனந் தேவையான மற்று நோய்களுக்கும் இது கைகண்ட மருந்து. விசேஷமாய்ப் பின்வரும் முறைப்படி கூட்டுச் சூரணமாய்க் கொடுத்தால் வாய்க்கும். இது சிறுபிள்ளைகளில் கீரைப்பாம்பைக் கழற்றுவதற்கே விசேஷித்த அந்தெல்மிந்தி.

தேயம். கிழங்கு மாவிற் பத்து முதல் முப்பது கிறேன் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு இரண்டு முதல் ஐந்து கிறேன் கொடுக்கலாம்.

ரசிதங்கள். ஜலப்புக்கூட்டுச்சூரணம். Compound powder of Jalap. கொள். ஜலப்புத்தூள், ஐந்து அன்சு; பதாசியமிலதாத்தரசு[4], ஒன்பது அன்சு; சுக்குத்தூள், ஒரு அன்சு; நன்றாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக் கடைசியில் குழியம்மியில் இட்டு மெல்ல அரைக்கவும்.

தேயம். இருபது கிறேன் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம். ஜலப்பைக் கொடுப்பதற்கு இதுவே உத்தமமான முறை.

ஜலப்பிரஞ்சம். Tincture of Jalap. கொள். ஜலப்புக்கிழங்கு பருக்கன்தூளாக, இரண்டரை அன்சு; புரூவுசீது[5], அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஜலப்புத்தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கி, அப்பாற் சியந்தனி[6]யில் வார்த்து, நீர் வடிந்தொழிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். பின்பு சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். அரைத்திரும் முதல் ஒருதிருங் கொடுக்கலாம். விரேசனபானங்களுக்கு இது விசேஷமாய் அனுமருந்தாக வழங்கப்படும்.

---

1 Demulcent சமனி. 2 Brown. 3 Anthelmintic. 4 Acid Tartrate of potash. 5 Proof spirit. 6 Perculator.

Digitized By Roja Muthiah Research Library

ஜலப்பேசிறத்து. Extract of Jalap. கொள். ஜலப்புக்கிழங்கு பருக்கன்தூளாக ஒரு இறுத்தல்; திட்டசீது[1] இரண்டுநாழி; தண்ணீர் ஒருகலன்[2]. ஜலப்புத்தூளைச் சீதில் ஏழுநாளூறவிட்டு அந்த ரஞ்சத்தைப் பிழிந்து வடித்து, அதைத் திஸ்திலித்துச்[3] சீதை அகற்ற, மெதுவான எசிறுத்து வரும். அப்பாற் சக்கையைத் தண்ணீரில் நாலுமணிநேரமூறப்போட்டுப் பிழிந்து கம்பளியில் வடித்து, மெதுவான எசிறுத்தாய் வருந்தனையும் நீர்மத்திகத்[4]தில் வறட்டவும். இரண்டு எசிறுத்துக்களையுங்கலந்து, குளிகைக்குத் தகுந்த பதமாய் வருந்தனையும் 140 பாகைக்கு மேற்படாத சூட்டில் வறட்டவும்.

தேயம். ஐந்து முதற் பதினைந்து கிறேன் கொடுக்கவும்.

ஜலப்பிராளம். Resin of Jalap. கொள். ஜலப்புக்கிழங்கு, பருக்கன்தூளாக எட்டுஅன்சு; திட்டசீது போதியது; தண்ணீர்போதியது. மூடிய பாத்திரத்திலே ஜலப்புத்தூளைப் பதினைந்து அன்சுசீதில் ஒருநாளைக்குமென்சூட்டில் ஊறப்போட்டு அப்பாற் சியந்தனியில் வார்த்து ரஞ்சம் வடிந்தபின், சத்து முழுவதையும் வாங்குந்தனையும் திரும்பத் திரும்பச் சீதைவிட்டு வடிக்கவும். இந்த ரஞ்சத்துக்கு நாலு அன்சு தண்ணீர் கூட்டி நீர்மத்திகத்திற் திஸ்திலித்துச் சீதை அகற்றவும். சேஷமான மண்டியைச் சூடாயிருக்கையில் எடுத்து, திறந்தவோர் பாத்திரத்திலிட்டு ஆறவிடவும். மிதக்கு நீரை ராளத்தை விட்டுத் தெளித்து, ராளத்தை வெந்நீரால் இரண்டு மூன்றுமுறை கழுவிப் பீங்கான் தட்டில் வைத்து அடுப்பின் சூட்டிலாவது நீர்மத்திகத்திலாவது உலர்த்தவும். லட்சணங்கள். இது கருங்கபிலமும் மங்கலுமான நொருக்கற் துண்டுகளாக வரும்; விளிம்புகள் உருவொளியாயிருக்கும்; ராளம்போல் ஒடியும்; வெண்கபில மாவாக லகுவில் அரைபடும்; இனிய மணமுடையது; தொண்டையிற் கரிக்கும்; திட்டசீதிற் சுறுக்குக் கரையும்; ஈதரிற்[5] சொற்பமாய்க் கரையும்; தர்ப்பந்தீன்[6] எண்ணெயிற் கரையாது.

தேயம். இரண்டு கிறேன் முதல் ஐந்துகிறேன் வரைக்குக் கொடுக்கலாம். கூடவுங் கொடுக்கலாம். இது விக்கினமற்ற சித்தியான விரேசனி.

[இந்துக்கடைகளிற் பெரும்பாலும் பூச்சி தின்றதாய் வரும் ஜலப்புக்கிழங்கிலே சிராய் பூச்சியாற் தின்னப்பட்டும் ராளம் எடுபடாமலிருப்பதால் இந்த ராளம் செய்வதற்குப் பூச்சிதின்ற கிழங்கு புதுக்கிழங்கைப்போலத் திறமல்லாதிருந்தாலும் உதவும்.]

## ஸ்கமுனிக்கோடி. SCAMMONY PLANT.

வாசம். இது கிரேக்கு, சின்னாசியம், சூரிய தேசங்களில் உண்டாகும்.

வாகடபதந்திகள். 1 காய்ந்த வேர். 2 பிசினிராளம். இது வேரிற் கீறுமிடத்து வடியும். நரைநிறமான ஒப்பரவற்ற அமாவத் துண்டுகளாக வரும். புதுக்க ஒடிந்தவிடத்துக் குங்குலியம்போற் சிம்புசிம்பாயும் மினுக்கமாயுமிருக்கும். காய்ந்தாற் கருமையாகும். சுவை மணங் கேசுபோலிருக்கும். சப்பும்போது தொண்டையின் பின்வளத்திற் சற்றே உறைக்கும். பிசங்கலான நரைநிறத் தூளாக இலகுவில் அரைபடும். தண்ணீ

---

1 Rectified spirit. 2 Gallon, நாலுநாழி. 3 Distill. 4 Water-bath. 5 Ether. 6 Turpentine.

Digitized By Roja Muthiah Research Library

ரோடு சேர்ந்து நல்ல இமல்ச[1]மாகும். ஐருகுலோறிக்கமில[2]த்தோடுசேரும்போது நுரையாது. இதின் மாவைக் கொதிவெந்நீரிற் போட்டுக் குலுக்கி, ஆறவிட்டு வடித்து, இயோதரஞ்சத்[3]தோடு கலந்தால், நீலமாகாது. 100க்கு 80 முதற் 90 பங்கு ராளத்தை ஈதர் கரைக்கும். சேஷமாயிருப்பதில் மிகுதியான பகுதி சொற்ப ஈரிப்புடன் கூட்டி வந்த பிசின். பின்சொல்லப்படும் ஸ்கமுனிராளமே இதின் சத்து.

**தன்மை.** இது விரேசனி, அந்தெல்மிந்தி.

**உபயோகம்.** ஜலப்பைப்போலவே.

**தேயம்.** ஐந்துமுதற் பத்துக்கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். இச்சரக்குப் பெரும்பாலும் அசுத்தங் கலந்ததாகில் பதினைந்து கிறேன் வரைக்கும் அதிகமாயுங் கொடுக்கவேண்டிவரும்.

**ரசிதங்கள். ஸ்கமுனிக்கூட்டுச்சூரணம்.** Compound Powder of Scammony. கொள். ஸ்கமுனித்தூள், நாலு அன்சு; ஜலப்புத்தூள், மூன்று அன்சு; சுக்குத்தூள், ஒருஅன்சு. திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக் கடைசியில் குழியம்மியில் இட்டு மெதுவாய் அரைக்கவும்

**தேயம்.** வளர்ந்தோருக்குப் பத்துமுதல் இருபதுகிறேன்வரையிற் கொடுக்கலாம். பத்துவயசுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஆறுமுதல் எட்டுக்கிறேனும் குழந்தைகளுக்கு மூன்றுமுதல் ஐந்துகிறேனுங் கொடுக்கலாம்.

**ஸ்கமுனிலேகியம்.** Confection of Scammony. கொள். ஸ்கமுனிமா, மூன்று அன்சு; சுக்குமா, ஒன்றரை அன்சு; கறுவித்தேல்[4] ஒருதிறும்; கராம்புத்தேல், அரைத்திறும்; சிறூபம்[5] மூன்று அன்சு; சுத்த தேன் ஒன்றரை அன்சு. மாவிரண்டையும் சிறூபத்தோடும தேனோடும் சேர்த்து ஒன்றாயரைத்துத் தேல்களையுங் கூட்டிச்சேர்க்கவும்.

**தேயம்.** பத்துமுதல் முப்பது கிறேன் அளவு கொடுக்கவும்.

**ஸ்கமுனிராளம்.** Resin of Scammony. கொள். ஸ்கமுனிவேர், பருக்கன்தூளாக, எட்டு அன்சு; திட்டசீது[6], போதியது; திஸ்தில்நீர்[7] போதியது. மூடிய பாத்திரத்திலே ஸ்கமுனிவேரைப் பதினாறு அன்சு சீதில் மென்சூட்டில் ஒருநாளூறப்போட்டு அப்பாற் சியந்தனி[8]யில் வார்த்து ரஞ்சம் வடிந்தபின் இன்னும் சீதுவிட்டு, வேரின் சத்து வாங்கப்படுந்தனையும் மெல்ல மெல்ல வடியவிடவும். அந்த ரஞ்சத்துக்கு நாலு அன்சு தண்ணீர் சேர்த்து நீர்மத்திகத்திற்[9]திஸ்திலித்துச் சீதை அகற்றி மீந்த மண்டியைச் சூடாயிருக்கையில் எடுத்துத் திறந்தவோர் பாத்திரத்தில் வைத்து ஆறவிடவும். மிதக்கும் நீரை ராளத்தைவிட்டுத் தெளித்து ராளத்தை வெந்நீரால் பலமுறை கழுவிப் பீங்கான் தட்டில் வைத்து அடுப்பின் சூட்டிலாவது, நீர்மத்திகத்திலாவது, உலர்த்தவும். ஸ்கமுனி என்ற ராளப்பிசினிலிருந்தும் இதை இப்படியே செய்யலாம். **லட்சணங்கள்.** இது உருவொளியும் கபிலமுமான நொருக்கற்துண்டுகளாக வரும்; ஒடிவு குங்குலியம் போன்றது; வேரிற் செய்ததாகில் இனிய சுகந்தமுடையதாகும். இது தனியே தண்ணீரிற் கரைந்து இமல்சமாகமாட்டாது. இதின்ரஞ்சம் பச்சையான புடேதுக்கிழ[10]ங்கின் வெட்டுவாயை நீலமாக்கமாட்டாது. ஈதர்[11]இதை முற்றாய்க் கரைக்கும்.

---

1 Emulsion. 2 Hydrochloric acid. 3 Tincture of Iodine. 4 Oil of caraway. 5 Syrup. 6 Rectified spirit, 7 Distilled water, 8 Percolotor. 9 Water bath. 10 Potatoe. 11 Ether.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். மூன்று முதல் எட்டுக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். கலவையாய்க் கொடுப்பதே உத்தமம்.

[வாடிக்கையாய்வரும் ஸ்கமுனியைப்பார்க்க இந்த ராளம் சுத்தமாயிருப்பதாலும் கொடுத்தபின் அது நிச்சயமாயும் ஒரே சரியாயுஞ் சேஷ்டிப்பதாலும விரேசனத்துக்கு இதுவே உத்தமமானது.]

ஸ்கமுனிமிஸ்துர். Scammony Mixture. கொள். ஸ்கமுனிராளம், நாலுகிறேன்; பால் இரண்டு அன்சு. பாலிற் கொஞ்சத்தை விட்டு ஸ்கமுனிராளத்தை அரைத்து படிப்படியாய் மிச்சப் பாலையும் விட்டு நல்ல இயல்சமாய் வருந்தனையும் அரைக்கவும்.

தேயம். பிள்ளைகளுக்கு அரை அன்சு முதல் இரண்டு அன்சுவரையிலுங் கொடுக்கலாம். இதற்குக் கெட்ட சுவையில்லையாதலாற் பிள்ளைகளுக்கே உவந்தது.

கலுசிந்துக்கூட்டுக்குளிகை[1], கலுசிந்தயசியமசுக்குளிகை[2], கலுசிந்துக்கூட்டெசிருத்து[3], என்ற ரசிதங்களில் ஸ்கமுனி சேருகின்றது.

## *ஜிரிகிவிரை. KALADANA.

வாசம். இது இந்துவடங்கலும் உண்டாகும்.

வாகடபகுதி. விரை. இது கறுப்பு முனையுள்ளது. நீளம் கால் இஞ்சு அல்லது மேற்படவிருக்கும். ஒவ்வொன்றும் அரைக்கிறேன் வரைக்கு நிறுக்கும். தோடஞ்சுளை வடிவானது. இனித்துப் பிறகு காருகிற சுவையும் அதிக மணமுமுடையது. பின்னே சொல்லப்படும் வாபீதிசின்[4] என்ற ராளமே இதின் சத்து.

தன்மை உபயோகம். இது சித்தியுள்ள விரேசனி. மோசமற்றது. வாகட ஜலப்பின், தன்மை உபயோகங்களுக்குச் சரியானது. அதைப்போல் இது சுள்ளாப்பானதல்லாதிருந்தாலும் அதற்காக இதை வழங்கலாம்.(53)

தேயம். விரைத்தூளில் முப்பது கிறேன்முதல் ஐம்பது கிறேன்வரையிற் கொடுக்கலாம்.

ரசிதங்கள். ஜிரிகியெசிறுத்து. Extract of Kaladana. கொள். ஜிரிகிவிரை, பருக்கன்தூளாக, ஒரு இருத்தல்; திட்டசீது[5] இரண்டு நாழி; தண்ணீர் நாலுநாழி. ஜிரிகி விரையைச் சீதிலே ஏழுநாளூறப்போட்டு, ரஞ்சத்தைப் பிழிந்து பிற்பாடு வடித்து, சீதத் திஸ்திலித்[6]தகற்ற, மெதுவான எசிருத்து வரும். அப்பாற் சக்கையைத் தண்ணீரில் நாலுமணிநேரம் ஊறப்போட்டு, பிழிந்து கம்பளியில் வடித்து மெதுவான எசிருத்தாய் வருந்தனையும் நீர்மத்திகத்[7]தில் வறட்டவும். இரண்டு எசிருத்துகளையுங் கலந்து குளிகைக்குத்தகுந்தபதமாய் வருந்தனையும் 140 பாகைக்கு மேற்படாத சூட்டில் வறட்டவும்.

தேயம். ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்குக் குளிகையாய்க் கொடுக்கலாம். இப்படிக் கொடுத்தால் இதின்செயல் சீக்கரமாயும் நிச்சயமாயுங் காணும். வயிற்று முறுக்காவது சத்தியாவது உண்டாவதரிது.

ஜிரிகிரஞ்சம். Tincture of Kaladana. கொள். ஜிரிகிவிரை, இரண்டரை அன்சு, புரூவுசீது[8] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாளூறப்

1 Compound pill of colocynth. 2 Pill of colocynth and Hyoscyamus. 3 Compound extract of Colocynth. 4 Pharbitisin. 5 Rectified spirit. 6 Distill. 7 Water-bath. 8 Proof-spirit.

(53) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

போட்டு இடைக்கிடை குலுக்கி வடித்து, அரைநாழிக்குப் போசிய திட்டசீது சேர்க்கவும். ஜலப்பிரஞ்சகு செய்வதுபோற் சியந்தனித்தும் இதைச்செய்யலாம்.

தேயம். இரண்டு மூன்று திரும். விரேசன பானங்களுக்கு இது நல்ல துணைமருந்து.

ஜிரிகிக்கூட்டுச் சூரணம். Compound Powder of Kaladana. கொள். ஜிரிகிவிரை, மாவாக, ஐந்து அன்சு; பதாசியமிலதாத்சரசு[1], ஒன்பது அன்சு; சுக்குமா ஒரு அன்சு. நன்றுயரைத்து மெல்லிய அரிப்பெட்டியில் அரிக்கவம்.

தேயம். ஐம்பது அறுபது கிறேன். ஜலப்புக்கூட்டுச் சூரணத்துக்கு இது நல்ல பதில்.

ஜிரிகிராளம். Resin of Kaladana. கொள். ஜிரிகிவிரை, பருக்கன் தூளாக, எட்டு அன்சு; திட்டசீது போதியது; தண்ணீர் போதியது. ஜலப்பிராளஞ் செய்வதுபோல இதையுஞ் செய்யவும். வாபீதிசின்[2] என்றதும் இதுதான்.

தேயம். ஐந்து முதல் எட்டுக் கிறேன் வரைக்கும். இது மோசமற்றதும் சித்தியுள்ளதுமான ஓர் விரேசனி,

[இந்த ராளம் பிதிலைவத்தியரால் வைத்தியத்திற் சொண்டுவரப்பட்டது. இது கட்டியிற் கபிலம். மாவில் நரையானது. இனிமையும் மணமுமுடையது.]

## அவாகடச் சரக்குகள். Non-Officinal.

சிவதை. Turbith root. இது இந்து அடங்கலுமுண்டு. இதின் வேர் விரேசனியென்று ஆசியர் வெகுகாலமாய் வியக்கிறுர்கள். இதின் தன்மை உபயோகங்களைப்பற்றி வாலிக்கர், கிளாசர், கோடன் முதலியவர்கள் சொல்லியிருப்பதற்கிணங்க ரக்சுபேகர் விபரித்திருக்கிறுர். ஆயினும் யுரோப வைத்தியத்தில் இது முழுதும் வழங்காமற் போயிற்று. இதின் செயல் மெத்தச் சந்தேகமென்று ஒஷானசியர் கண்டு வாமகுபீய[3]த்ச்ற்சேருவதற்கு இது தகாததென்றுர். வேர்த்தூளின் தேயம் அரைத்திரும் முதல் ஒரு திரும்; எசிறுத்தின் தேயம் பத்து முதல் இருபது கிறேன். இதிலே ராளம்[4] 100 க்கு 10.20 வீசமாயிருக்கிறதென்றும் வேரின் விரேசனத்தன்மை அந்த ராளத்திலேயே இருக்கிறதென்றும் அன்றுஞடர் சோதித்துக்கண்டார். ஜலப்பிராளத்தை எடுக்கு முறையாய் இந்த ராளத்திற் பொதியவளவாய்எடுத்துநோயாளருக்குக் கொடுத்துப்பார்ப்பது நல்லது.

சேம்விரை[5]. Laldana. வங்காளம் வடச்கு நாடுகளின் கடைகளில் சார்புசுண்டு[6] என்று விலைப்படுவதாகிய ஓர்வகைச் ஜிரிகிவிரையைப்பற்றிக் கனிலல்டே என்பவர் சொல்லுகிறுர். ஒவ்வொரு காயிலும் மயிர் அடர்ந்து கருஞ் சிவப்பு நிறமுள்ள மூன்று கொட்டை இருக்கும். கொட்டைகளைத் தண்ணீரில் ஊறப்போட அவைகள் பொருமிப் பாணியைக் கக்கும். கொட்டையை வெய்யிலிற் காயவைத்து மாவாக்கி இருபது கிறேன் முதல் முப்பது கிறேன் வரைக்கு உள்ளுக்குக் கொடுக்க மெதுவாய் விரேசிக்கும். இத்துடன் தோல் வியாதிகளுக்கு அல்திரவ[7]மாகும். இது ஜிரிகிவிரையைப்

1 Acid Tartrate of potash. 2 Pharbitisin. 3 Pharmacopoeia. 4 Resin. 5 Probably a species of Pharbitis. 6 Shapussundo. 7 Alterative பரிணமி.

Digitized By Roja Muthiah Research Library

போல நல்ல விரேசனி என்று தூரக்குசந்தலார்யென்பவர் சொல்லுகிறார். இந்த இரண்டும் குறுத்த கருமையான மயிரால் மூடுண்ட இபுமீயசைமோஸி[1]க்கொடி இபுமீபசெபியாரிக்[2]கொடி என்ற இருகொடிகளின் கொட்டைகளாயிருக்கவேண்டும். இவை இரண்டும் இந்து அடங்கலும் உண்டாகும்.

சமுத்திரப்பச்சை. Argyreia speciosa. இது இந்துவிலுள்ள பொதுவான பூடு. இதின் இலைகளைப் புறம்பு ஸ்திமுல[3]மாகவும் ருபிவாஷ[4]மாகவும் சுதேசிகள் வழங்குகிறார்கள். ஒரு ஆளில் இவை கடுமையாய்க் கொப்பளங்கொள்ளப்பண்ணினதை வைற்று வைத்தியர் கண்டார்.

## போறகினேசியங்கள்.

## BORAGINACEAE.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

பெரியநறுவிலி. Cordia Myxa. சிறியநறுவிலி. Cordia latifolia இந்த மரங்கள் இரண்டும் இந்துவின் அ[illegible]னகம் பகுதிகளிற் பொதுவாயுண்டாகும். பழத்தின் பருமையில் மாத்திரமே இவைக்கு வித்தியாசமுண்டு. முற்கால யுரோப பதார்த்தசாரத்தில் இவைகளைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். பெரிய நறுவிலிப்பழம் கொட்டைப்பாக்களவு பருமை; சிறிய நறுவிலிப்பழம் இலந்தைப் பழமளவு பருமையானது. இவை கறுப்பும் முட்டை வடிவுமானவைகள்; மணமில்லை; இனிய பாணிச்சுவை உடையவைகள்; இமாலியம்[5], திமல்ச[6]மாக இவைகள் பேர்பெற்றிருந்தன. விசேஷமாய்ச் சுவாசப்பையின் நோய்களிலும் சனன சலஉறுப்புகளின் நோய்களிலும் அப்படிப் பெயர்பெற்றிருந்தும் இப்போவோ யுரோப வைத்தியத்தில் இவை வழங்கவில்லை. ஆயினும் இந்துக் கடைகளில் வந்து இன்னும் மருந்தாகக் கொள்ளப்படும். இதின் சதை பத்துப் பன்னிரண்டு திறாங் தேயத்தில் இளம்பேதியாய்ச் சேஷ்டிக்கும். பட்டை யாவகருக்குள்ளே சுரமுதலிய நோய்களுக்கு விசேஷமான மருந்தாய் வழங்கப்படுகிறதென்று அஷ்வில்டர் சொல்லுகிறார். இது லேசான தோணிகம்போலும்.

ஒடுக்கிலை நறுவிலி. Cordia angustifolia. இம் மரத்தின் பட்டை தொண்டை அலம்புகிறதற்குத் துவர்நீராகி வழங்கப்படும்.

இந்துத்திரிகுடெஸ்மம். Trichodesma Indicum. இது இந்துதேசத்திற் பாம்புகடிக்குப் பேர்பெற்ற மருந்து. இம் மருந்தைக் கொடுத்து மக்சுவல் வைத்தியர் ஒரு ஆளைச் சுகப்படுத்தினரென்ற சங்கதி எழுத்தில் இருக்கின்றது. என்றாலும் இதின் நயத்தைப்பற்றி வேறொரு சாட்சியுமில்லையாதலால் அது சந்தேகமானது. இதின் பாணியுள்ள இலைகளையும் லங்கைத்திரிகுடெஸ்மத்தினது பாணியுள்ள இலைகளையும் சாந்தியான பாப்பைசெய்வதற்குத் தெக்கணதேசத்துச் சனங்கள் வழங்குவார்கள்.

எட்டியச்செடி. Ehretia buxifolia. இதுசோளமண்டலக்கரையிலும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் பாழ் நிலங்களில் உண்டாகும். இதின் பச்சைவேர் இனிதுஞ் சற்றே கார்ப்புமான சுவையையுடையது. இதை இந்து

---

1 Ipomoea cymosa. 2 I. Sepiaria. 3 Local stimulant, தானிக தீவனி. 4 Rubefacient, சேவுணதி. 5 Emollient, சாந்தனி. 6 Demulcent, சமனி.

வைத்தியர் அல்திரவ[1]மாக வழங்குவார்கள். வேரில் இரண்டு அன்சுக்குத் தண்ணீர் அரைநாழியாகச் சேர்த்துச் செய்த கஷாயத்தைத் தேகத்திலேறிய சிவ்விசு[2] நோய்க்கு இரண்டு அன்சு தேயமாகக் கொடுத்து மெத்த நயங்கண்டதாக ரோசு வைத்தியர் எழுதியிருக்கிறார்.

தேட்கோடுக்கி. Tiaridium Indicum. அனேகவிடங்களிலுள்ள இந்தப் பூண்டின் இலை, காயங்கள், விரணங்கள் தாளித தாபிதங்களுக்கு நல்ல மருந்தென்று பூமியின் பல இடங்களிலும் மதிக்கப்படும். இதின் செயல் இமாலியம்[3]போலும். இதற்கு அமுரிதி[4]த்தன்மையு முண்டென்று லூனராற் குறிக்கப்பட்டது.

எகியப்பூடு. Echium. இதின் இலையும் காம்பும் பூவும் குசபான்[5] என்ற பெயருடன் இந்துக்கடைகளில் விலைப்படும். இந்திய பதார்த்தசார வாகடங்கள் பலவற்றில் இது ககாலிக்கிலேனி[6] என்ற மரத்திலுண்டாகிறதென்கிறது தவறு. சிவ்விசு, குஷ்டம்[7], வாதநோய்களுக்கு இந்தச் சரக்கு அல்திரவதொணிக[8]மென்று சுதேச வைத்தியரால் வெகுகாலம் போற்றி வழங்கப்பட்டது. ஒஷானசி முதலியவர்களும் அதற்கு இத்தன்மையுண்டென்று சொல்லுகிறார்கள். இதை அல்திறவ தொணிகமாய் மாத்திரமல்ல, திமல்சய்[9] அமுரிதியாகவும் முடீன்செறீவு போற்றுகிறார். தான் இதை அதிகமாய் வழங்கினதென்றும், பரைரக்கொடி, நன்னாரி என்ற மருந்துகள் கொடுக்கவேண்டிய எந்த நோய்க்கும் இதைக் கொடுக்கலாமென்றும் அவர் சொல்லுகிறார். துவைத்த இலை ஒரு அன்சுக்குக் கொதிநீர் அரைநாழி வீதமாகப் போட்டு இரண்டு மணிநேர ஊறவிட்டு வடித்த திகாக்த[10]த்தை இரண்டு அன்சு முதல் நாலு அன்சு வரைக்கு நாள் இரண்டுமுறையாகவும் இன்னும் நெருங்கவுங் கொடுக்கும்படி குறிக்கிறார். இதை இன்னும் சோதிப்பது நல்லது. இந்த இலைகளை மட்டிடுவது லகு. இவை தோற்றமான அனேக வெள்ளைப்புள்ளியும் வழவழப்பும் உடையவைகள். காய்ந்த இலைக்குச் சொற்ப மணம் மாத்திரமுண்டு. பச்சை இலைக்கோ கோனியத்தைப் போன்ற மணம் அதிகமாய் வீசும்.

## ஸ்கிறவுலரியாசியங்கள்.

## SCROPHULARIACEAE.

### திச்சிதாலிஸ்பூடு. DIGITALIS PURPUREA.

வாசம். இது பிறித்தனிலும் யுரோபத்தின் மற்றும் பகுதிகளிலும் விசேஷமாய் மணல்நிலம், மக்கி நிலங்களில் உண்டாகும். இந்துவின் மலைச்சார்புகளிலும் திறமாயுண்டாகும்.

வாகடபகுதி. இலை. பூக்கள் மூன்றிலிருபங்கு மலர்ந்திருக்கையில் இலைகளைக் கொய்யவேணும். திச்சிதாலிஸ்பூடு உண்டான இரண்டாம் வருஷத்தில், முற்றின முழு இலைகளைப் பிடுங்கி மட்டான சூட்டில் உலர்த்தவேணும். காய்ந்த இலைகளையும் இலைத்தூளையும் காற்று வெளிச்சம்படாமல்

---

1 Alterative, பரிணமி. 2 Syphilis. 3 Emollient, சாந்தனி. 4 Diuretic. திபுதீசம். 5 Gouzaban. 6 Cacalia Kleinia. 7 Lepra. 8 Alterative tonic. 9 Demulcent, சமனி. 10 Decoction.



Digitized By Roja Muthiah Research Library

கன்ருயடைத்த சீசாக்களிற் போட்டுவைக்கவேணும். நெடுக வைத்திருப்பதாற் சத்துக் கெட்டுப்போகுமாகையால், வருஷந்தோறும் புதுக்கத் தேடவேண்டும். காய்ந்த இலைகள் மங்கலான பச்சைநிறமும், சொற்பமணமும் கைப்பான உவட்டுச் சுவையுமுடையன. பச்சை இலைகள் ஒடுக்க முட்டைவடிவானவைகள். குறுங் காம்பும் சுருக்குகளும் மென்மயிருமுடையன. நிறம் மங்கலான பச்சை; கீழ்ப்பக்கம் வெளிறல். ஓரங் கருக்குப் போன்றது. சொற்ப மணமும் கைப்பான உவட்டுச் சுவையுமுண்டு. இலையின் சத்து அதற்கே யுரித்தான திச்சிதாலின்[1] என்ற கைப்புப் பதார்த்தமே.

**தன்மை.** செரநீவம்[2]; விசேஷமாய் இதயத்தின் துடிப்பைச் சாந்தமாக்கும். அமுரிதி[3]. சிறுதேயமாக நெடுகக் கொடுத்தால் உடம்பிற் கூடிச் சடுதியில் நச்சு வீறு காட்டுமே; அல்லது மரணமாய் முடியும். இதினாலுண்டாகும் மோசத்தைப்பற்றிப் பருப்பித்துப் பேசியிருக்கக்கூடுமாயினும் இதைக் கொடுக்கும்போது மெத்தக் கவனமாய்க் கொடுப்பது புத்தி. பெருந்தேயத்தில் இது மயக்கழற்சிநஞ்சு.

**உபயோகம்.** நீர்க்கோவை வியாதிகளுக்கு விசேஷமாய் அவைகள் இதயநோய்களோடு கூடிநின்ருல் இது நயந்த மருந்து. இதயநோய்களிற் பகுத்தறிவின்றி இது கொடுக்கப்படுகின்றது. ஆயினும் இதயத்தின் துடிப்புப் பெலப்புமிஞ்சியிருக்கிற இதய வியாதிகளில் இது நல்ல மருந்து. மற்றும் வியாதிகளுட் சலசீடம்[4], ஈளை[5], புறங்கீது[6], கசம், பைத்தியம், வெறிப்பைத்தியம், இரத்த இருமல், எபிலெப்சி[7], குறாப்பு[8], மெனுறீயம்[9], மற்றும் வகையான கருப்பை இரத்தப் பெருக்குகளுக்கு இது நயமென்று கொடுக்கப்படும்.

**தேயம்.** இலைத் தூளில் அரைக் கிறேன் முதல் ஒரு கிறேன் வரைக்கு ஆறு எட்டு மணிக்கொருமுறை செரநீவமாய்க்கொடுக்கலாம். அமுரிதியாய்க் கொடுக்கவேணுமாகில் இன்வூசம்[10]மே திறம். எப்படிக் கொடுத்தாலும் அதின்செயலை விழிப்பாய்ப் பார்க்கவேணும்.

**ரசிதங்கள். திச்சிதாலிசின்வூசம்.** Infusion of Digitalis. கொள். காய்ந்த திச்சிதாலிசிலை முப்பதுகிறேன்; கொதிநீர் பத்து அன்சு. மூடியபாத்திரத்தில் ஒரு மணிநேரமூறவிட்டுச் சீலையில் இறத்தெடுக்கவும்.

**தேயம்.** இரண்டுமுதல் நாலு திறும் வரையில் ஆறு மணிக்கொருமுறை கொடுக்கலாம். எதின்பரு தபுளின் பார்மகுபீயத்[11]திற் சொல்லிய இன்வூசத்திலும் இது அரைவீறுள்ளது.

**திச்சிதாலிசிரஞ்சம்.** Tincture of Digitalis. கொள். திச்சிதாலிசிலை பருக்கன் தூளாக இரண்டரை அன்சு; புருவுசீது[12] அரைநாழி. அடைத்த பாத்திரத்திற் திச்சிதாலிசிலைத் தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[13]யில் வார்த்து நீர் வடிந்தொழிந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டுநீர்களையுங் கலந்து அரைநாழி தேறப் புருவுசீது கூட்டவும்.

**தேயம்.** செரநீவம் அமுரிதியாகப் பத்து மினிம் தொடங்கிப் படிப்படியாய்க் கூட்டி முப்பது மினிம் வரைக்குக் கொடுக்கலாம். எபிலெப்சிக்கும்

1 Digitalin. 2 Sedative, சாந்தனி. 3 Diuretic, நீருரி. 4 Hydrocephalus. 5 Asthma. 6. Bronchitis. 7 Epilepsy. 8 Croup. 9 Menorrhoea. 10 Infusion. 11 Pharmacopoeia, ஔஷதபாடம், 12 Proof spirit. 13 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

வெறிப் பைத்தியத்துக்கும் அதிதேயங் கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயினும் இதினால் வரக்கூடிய நயமானது நேரிடக்கூடிய மோசத்துக்குச் சமமாகுமோவென்பது சந்தேகம்.

திச்சிதாலின். Digitalin. இது திச்சிதாலிசிலையின் சத்து. இது கண்ணறையுள்ள சிறுக் கட்டிகளாக அல்லது சின்னச் செதில்களாக வரும். வெள்ளையானது, மணமற்றது, கடுங் கைப்பானது. சீதிலே சுறுக்குக் கரையும், தண்ணீரிலுஞ் சுத்த ஈதரி[1]லுங் கரைவதரிது. அமிலங்க[2]ளிற் கரையும். ஆயினும் அவைகளோடு தடஸ்தகலவைக[3]ளாகச் சேராது. ஐருகுலோறிக்கமிலத்[4]திற் கரைந்தால் சொற்ப மஞ்சள்நிறமாயிருந்து சுறுக்குப் பச்சையாகும். இது நாசித்துவாரங்களைக் கடுமையாய் அழற்றும். இது வீறுன நஞ்சு. இதைப் பரமாணுவில் எரித்தாற் சேஷமிராது.

தேயம். கிறேனில் அறுபதிலொருபங்கு முதல் முப்பதிலொருபங்குவரைக்கு அலக்கால்[5] அல்லது அசிதிக்கமிலத்திற்[6] கரைத்தாவது குளிகையாக்கியாவது கொடுக்கலாம். இதின் தன்மை உபயோகங்கள் திச்சிதாலிசிலையைப்போலவே. இது காமவிகாரத்தைக் குறைக்குமாதலால் விந்துக்கழிச்சலுக்கு நயமாகக்கண்டது. இது வீறுன நஞ்சாகையால் இதை மெத்தச் சிறுதேயத்திற் கொடுக்கும்போதுதானும் அதிக கவனம்வேண்டும்.

## அவாகடச் சரக்குகள். Non-Officinal.

கைச்சல்த்தண்டான்பூடு. Picrorrhiza kurroa. இது வடக்கிந்துவில் உள்ள பூடு. இதின் வேர் கடுங்கைப்புள்ளதுஎன்றும் சுதேசிகள் அதை மருந்தாக வழங்குகிறார்கள் என்றும் றோயில் சொல்லுகிறார். தொணிக[7]மாக இது வழங்கப்படுகிறதென்று ஏர்வின் சொல்லுகிறார். இது நொருக்கலுங் கருமையுமான கறுத்த வேர்த்துண்டுகளாக வரும். சில முறுகியிருக்கும். மேற்றலைப்பிற் தென்னீர்க்களவு பருமையாய் கீழ்நோக்கிச் சிறுத்துப்போயிருக்கும். கீழ்ப்பகுதியில் வேர்க்கூந்தல்களும் மேற்பகுதியில் இலைக்காம்புகளும் அடர்ந்திருக்கும். இது மெத்தக் கைப்புச் சுவையுள்ளது. இந்தவேரையும் இதின் தன்மைகளையும்பற்றி இன்னும் அறிவது நன்று. கடுகுரோகணி என்று கடைகளில் விலைப்படும் வேர் பார்வை லட்சணங்களில் இதைப்போன்றது. அது இப் பூண்டுவகுப்பில் ஓர் இனமாயிருக்கவேணும். ஆயினும் அதின் வரலாறு தெரியவில்லை. இப்பூண்டு சென்னை தேசத்தில் உண்டாகிறதென்றும் தான் அதைக் காணவில்லையென்றும் மூடீன்செறீவர் சொல்லுகிறார். இது காரேலிபர் வேரென்று என்ஸ்லியரும் அவருக்குப்பின் எழுதின சிலரும் எண்ணுகிறார்கள். என்றாலும் பல இலட்சணங்களில் அதற்கு மெத்த வித்தியாசம். இது நீரடிக்கும் சுள்ளாப்பான பேதியாகும். திறீப்பு வைத்தியர் இதற்கு அந்திபிறுடி[8]த்தன்மையுண்டென்கிறார்.

நீர்ப்பிரமி. Herpestis Monniera. இது பூமியின் உஷ்டணமான பகுதிகள் எல்லாவற்றிலும் உண்டாகும் ஓர் சிறிய படர்கொடி. இது கடுமையான அமுரிதி[9]யென்றும் பேதியென்றும் இந்துக்கள் மதிப்பார்கள். ஆயினும் இத்தன்மைகள் உண்டென்பதற்கு நம்பிக்கையான சாட்சியில்லை. இலைச்சாற்றை மண்டைலத்தோடு கலந்து வாதநோய்க்கு இந்துக்கள் பூசுவார்கள்

1 Ether. 2 Acid. 3 Neutral compound. 4 Hydrochloric acid. 5 Alcohol. 6 Acetic acid. 7 Tonic. 8 Antiperiodic. 9 Diuretic, தியூரிசி

Digitized By Roja Muthiah Research Library

என்று ரக்சுபேகர் சொல்லியிருக்கிறார். இந்தப் பூச்சால் வரும் நயம் அதி ற்சேர்ந்த மண்டைடலத்துக்கே யுரியது.

செல்சிப்பூடு. Celsia Coromandeliana. இது இந்துதேசத்தின் பலபகுதிகளிலும் மாரிகாலத்திற் தோட்டங்களிலுஞ் செய்கைபூண்டநிலங்களிலும் மிகுதியாயுண்டாகும் ஓர் களை. சற்றுசியென்ற உதவிச்சத்திரீகன் இதைக்கூறினார். இலையின் இறுகின சாற்றைத் தீவிர[1] காலிக[2] திசந்தெரி[3]க்கு அவர் கொடுத்து நயங்கண்டார். இதின் செயல் துவருஞ் சாந்தமும்போலே. தேயஞ் சொல்லப்படவில்லை.

## அகந்தாசியங்கள்.

## ACANTHACEAE.

### *நீலவேம்பு. KARIYAT.

வாசம். இது இந்துதேசமடங்கலும் நிழலான இடங்களில் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்த தாளும் வேரும். வேரோடிருக்கிற தாள் முக்காலமுழம் ஒரு முழம் நீளமான துண்டுகளாக வரும். சதுரமானது. சற்றே கபிலநிறமுள்ளது. நெடுங் கைப்புச் சுவையையுடையது.

தன்மை. இது கைப்பான தொணிகம்[4], ஸ்தொமாகி[5], குவசிக்குச்[6] சரியானது.(54)

உபயோகம். பெலவீனத்துக்கும், காய்ச்சலில்நின்றுசுகப்படும்போதும் திசந்தெரியின் பிற்கூற்றிலும், இது உதவும்.

ரசிதங்கள். நீலவேம்புக்கூட்டின்வூசம். Compound Infusion of Kariyat. கொள். இடித்த நிலவேம்பு, அரை அன்சு, துவைத்த தோடந்தோல், மல்லி, வகைக்கு அறுபது கிறேன்; கொதிநீர் பத்து அன்சு; மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒன்றரை அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கும் நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

நீலவேம்புக்கூட்டிரஞ்சம். Compound Tincture of Kariyat. கொள். நன்றாக நறுக்கின நிலவேம்புவேர், ஆறு அன்சு; சசம்[7], சகை[8], பருக்கன்தூளாக வகைக்கு, ஒருஅன்சு; பிரண்டி[9] ஒருநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கி, சீலையில் வடித்து ஸ்திரேனித்[10]துப் பிழிந்து வடிதாளூடே வடியவிட்டு ஒருநாழிதேறப் பிரண்டி சேர்க்கவும்.

தேயம். ஒரு திரும் முதல் நாலு திருங் கொடுக்கவும். இது தொணிகம், ஸ்திமுலம்[11], மெல்லிய விரேசனி. அசீரண நோய் சிலவற்றுக்கும் மலசுத்தி சுணங்கலுக்கும் இது உவந்தது.

[பச்சை இலைகளைப் பிழிந்தெடுத்த சாற்றைப் பிள்ளைகளின் கழிச்சலுக்கு வாடிக்கையான மருந்தாய்ச் சுதேசிகள் வழங்குவார்கள். இதைக் கொடுப்பதற்கு இதின் கடுங் கசப்பே தடை. இதற்குப் பதிலாக முகிர்ச்சியெ

1 Acute. 2 Chronic. 3 Dysentery. 4 Tonic. 5 Stomachic, சீரணி. 6 Quassia. 7 Myrrh. 8 Aloes. 9 Brandy. 10 Strain. 11 Stimulant.

(54) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

ன்பவர் இரண்டு அன்சு பச்சை இலையை முக்கால்நாழி தண்ணீரிற் போட்டு ஆறு அன்சாய் வருந்தனையும் வற்றக் காய்ச்சி அதை ஒரு அன்சு தேயமாய் இரண்டு மூன்று மணிக்கொருமுறை கொடுப்பார். இது கொடுத்துப் பரிசரித்த நோயாளரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆயினும் அத்தோடு மாவியர்[1] கடுகுப்பற்று முதலிய மருந்துகளும் வழங்கப்பட்டனவாதலால் நிலவேம்பைப்பற்றி உண்டான சுகம் எவ்வளவென்று சொல்லக்கூடாது.]

## அவாகடச்சாக்குகள். Non–Officinal.

நீர்முள்ளி. Hygrophila spinosa. இது இந்துவின் அனேக பகுதிகளில் ஈரமான இடங்களில் உண்டாகும். இதற்கு நல்ல அமுரிதி[2]த்தன்மை உண்டென்று சுதேசிகள் சொல்லுகிறார்கள். நீர்க்கோவைகாரருக்கு இதைக் கொடுத்தேனென்றும் நல்ல அமுரிதித்தன்மை இதற்கு நிச்சயமாயுண்டென்றும் கெர்ச்பதிரிக்கு சொல்லியிருக்கிறார் கிப்சன் பண்டிதரும் இதைச்குறித்துச் சாட்சியிடுகிறார். ரோசு வைத்தியரும் ஐயாசுவாமியென்ற சுதேசசத்திரீகனும் இதைப்பற்றி நயப்பாய்ச் சொல்லியிருக்கிறார்கள். கனலல்டேயென்பவர் இதைக்கொடுப்பதற்குப் பின்வரும் இரண்டுமுறையைக் கூறுகிறார் தீகாக்ஷம். கொள். நீர்முள்ளி வேர் ஒரு அன்சு; தண்ணீர் அரைநாழி. பதினாலு அன்சு ஆகுந்தனையும் வற்றக் காய்ச்சிச் சீலையில் வடித்து நாளுக்கொருமுறை ஒரு அன்சுமுதல் ஒன்றரை அன்சு தேயமாகக் கொடுக்கவும். காடி. கொள் புதுக்கக் காய்ந்த நீர்முள்ளியிலை இரண்டு அன்சு; திஸ்திலித்த காடி, பதினாறு அன்சு; மூன்றுநாள் ஊறவிட்டுப் பிழிந்து சீலையில் வடிக்கவும். தேயம் அரை அன்சுமுதல் ஒரு அன்சு. காய்ந்த நீர்முள்ளியை எரித்துச் சாம்பலை வெருகடிதேயத்தில் நாள் இரண்டுமூன்றுமுறை கொடுப்பது சுதேசிகளுக்குள் ஒருமுறை.

கருநொச்சி. Justicia Gendarussa. மலாயர் இதைச்சுரக்கினி[3]யாய்வழங்குவார்கள். யாவதேசத்தில் இதற்கு வமனத்[4]தன்மையுண்டென்று அவ்ஷீல்டர் சொல்லியிருக்கிறார். இலைகளையும் இளந் தளிர்களையுந் துவைக்க, வீறும் சற்றுச் சுகந்தமுமான மணம் வீசும். காலிகவாதத்துக்கு இது திகாக்தமாய் வழங்கப்படுகிறதென்று என்ஸ்லி சொல்லியிருக்கிறார். இதின் செயல் சுவேதனி[5]போல விளங்குகின்றது. நாம் இதைப்பற்றியறிந்தவைகளெல்லாம் விசேஷமாய்ச் சுதேசிகள் சாட்சிமூலந்தான்.

ஆடாதோடை. Justicia Adhatoda. இது இந்துவின்மிகுதியான பகுதிகளிலுள்ள ஓர் செடி. இதற்கு அந்திஸ்பச[6] எக்ஸ்பெக்துற[7]த் தன்மைகள் உண்டென்று சுதேசிகள் சொல்லி, இருமல், ஈளை. முறைச்சுரம் முதலிய நோய்களுக்கு இதைக் கொடுப்பார்கள். இந்த அவுஷத தன்மைகளைப்பற்றி ஜச்சன் பண்டிதரும் உதவிச் சத்திரீகன், ஓ. ச. டதரும் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து நற்சாட்சி கூறுகிறார்கள். இவர்கள் இதைக் காலிகபுறங்கீது[8], ஈளை, மற்றுஞ் சுவாச, கதார்[9]நோய்களுக்குக் காய்ச்சல் கூடி நில்லாதவேளையிற் கொடுத்து நயங்கண்டார்கள். இது கபத்தை வெட்டுகின்றதாதலால் கசத்திலும் நயங்காட்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதின் சாற்றை வறட்டியெடுக்கும் சலவெசிறுத்தின்[10]தேயம் நாலுமுதற் பத்துக் கி

---

1 Morphia. 2 Diuretic. 3 Febrifuge. 4 Emetic. 5 Diaphoretic. 6 Antispasmodic, கருசக்கினி 7 Expectorant, கிட்டேவன. 8 Chornic Bronchitis. 9 Catarrh. 10 Aqueous extract.

றேன். இது சுறுக்குப் பழுதாகக்கூடியது. இந்த எகிருத்தை அலக்கா[1]லிற் கரைத்துச்செய்யும் ரஞ்ச[2]மே திறமானது. இதின் தேயம் அரைமுதல் ஒருகிறும். அலக்காலெகிருத்தும் பழுதாகாமலிருக்கும். அதின் தேயம் மூன்று கிறேன் வரைக்கு. இதற்குத் திப்பலி சேர்க்கச் செயல்கூடும். இந்த மருந்தின் கயத்தை அறிவதற்கு இன்னும் பரிசோதனைகள் செய்வது நல்லது. இம் மருந்தைப் பற்றிய விவரத்தோடு கதார்,புறங்கீது,கசங்களில் இதின் செயலை விளக்குகிற உதாரணங்களை ஒ. ச. டதர் பிரசுரஞ் செய்திருக்கிறார்.

நாகமல்லி. Rhinacanthus Communis. இந்தப் பூண்டின் கொட்டை படர்தேமலுக்கு உத்தமமான பூச்சுமருந்தென்று மதிக்கப்படும். இதின் கயத்தைவிட்டு ரோயில் என்பவர் சாட்சிகூறுகிறார். பச்சை வேரை அரைத்து எலுமிச்சஞ் சாற்றோடு கலந்து பூசினுற் சருமநோய்களுக்கு உசிதமருந்தாகுமென்பது சுதேசிகள் எண்ணம் என்று ஐன்ஸ்லி சொல்லுகிறார். இச்சாட்சிகள் எவ்வளவுதூரஞ் சரியென்று அறியவேண்டியது.

## வெர்பிஞசியங்கள்.

## VERBENACEAE.

### அவாகடச்சாக்குகள். Non-Officinal.

வெண்ணொச்சி. Vitex Negundo. நீர்நொச்சி. V. Trifolia. இந்து தேசமடங்கலும் அதிகமாயுள்ள இச்செடிகள் இரண்டும் சுதேச வைத்தியத்தில் வெகுகாலமாகப் பேர்பெற்றவைகள். இரண்டும் ஒத்ததன்மையுடையவைகளாய் விகற்பமின்றி வழங்கப்படுமாயினும் சிறுநொச்சியே அதிகவீறுள்ளதென்று கொள்ளப்படும். பொர்ந்தியுஸ் என்பவர் சிறுநொச்சிக்கு லகொண்டிஎன்ற மலாயப்பெயரைச்சொல்லி,அதை மெத்தவும்விதந்து இது அனுடைனும்[3], அமுரிதியும்[4],எம்மெனகக்கு[5]மாயிருக்கிறதென்றுசொல்லுகிறார். பெரிபெரி[6] என்ற சோர்விலும் கால்எரிவு என்று சுதேசிகள் சொல்லும் சிலநோயிலும் இச்செடியிற்செய்த வமன்ருஷமும்[7] தோயங்க[8]ளுங் காண்பிக்கும் கயத்தைப்பற்றியும் அவர் சாட்சியிட்டிருக்கிறார். வெள்ளைநொச்சியையுஞ் சுதேசிகள் இவ்வளவாய் மதிப்பார்கள். தாம் அறிந்த சீத் தாவரத்தைப்பார்க்க வெள்ளைநொச்சியிலேயே சோதக்கினி[9]யென்றபெயருக்கு உரித்தானதென்று விளெமிங்கு பண்டிதர் சொல்லி, பொருத்தின்வாதவீக்கங்களைக் கரைப்பதிலும் வெட்டை கட்டுண்டதாலுண்டான பீசவீக்கத்தை மாற்றுவதிலும் இதின் செயலை விதந்துகொள்ளுகிறார். இதை வழங்கும் முறை வருவானது. பச்சை இலையைச் சட்டியிற்போட்டு நெருப்பில்வைத்து தாங்கக்கூடியசூடாக்கி நோய்த்த இடத்தில் அப்பிக் கட்டிவிடுவார்கள். வீக்கம் மாறுந்தனையும் நாள் மூன்றுநாலுதரம் இப்படிச்செய்வார்கள். விளெமிங்குபண்டிதரும் இந்துவிலிருந்த யுரோபவைத்தியர் சிலருஞ் செய்த முறை இதுவே. மைசூர்ச் சனங்கள் காய்ச்சல், கதார்[10],வாதநோய்

---

1 Alcohol. 2 Tincture. 3 Anodyne. 4 Diuretic, திவுரீசம், 5 Emmenagogue. 6 Beri-beri. 7 Fomentation. 8 Bath. 9 Discutient. 10 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

களுக்கு நொச்சியிலையை அவித்து வேதுப்பிடிக்கும் முறையைப்பற்றி இங்கில்து வைத்தியர் விபரித்திருக்கிறார். இந்துக்கள் நொச்சியிலையை அவித்துப் பிரசவஸ்திரிகளுக்குக் குளிக்கவார்ப்பார்கள். மசமதியர் தலையிடி சதார்களுக்குக் காய்ந்த இலையைப் புகைப்பார்களென்று ஏன்ஸலி சொல்லியிருக்கிறார். இதின் நெற்று கிருமிகொல்லியாம். வெள்ளைநொச்சியைப் பேர்ற் சுதேசிகளுக்குள்ளே அதிகமாய்ப் பிரயோகிக்கப்படும் பூண்டு இன்னென்றிருப்பது அரிது.

நிலக்குமிழ். Gmelina parvifolia. இச் செடியின் இலைகளிலும் இளந்தளிர்களிலுந் தடித்த பிசுபிசுப்பான பாணி நிரம்ப உண்டு. அது தண்ணீரிற் கரையும். இது கரைந்து ஊறின தண்ணீரை வெட்டைநோயிற் சலக்கடுப்பை மாற்றுவதற்குச் சுதேசிகள் வழங்குவார்கள். ஆனை நெருஞ்சி[1] யிலைகள் தளிர்களைத் தண்ணீரிற் கலக்கினால் அவையும் இதைப்போலச் சுறுக்கிற் பாணியாய் வருமாயினும் சீக்கரம் அவற்றின் பாணித்தன்மையற்று முன்போலத் தண்ணீராகும். நிலக்குமிழ் இலை போட்ட நீரோ கூறுபடல் தொடங்கும்வரைக்கும் பாணியாகவேயிருக்கும். செங்குமிழ் Gmelina Asiatica என்ற பூண்டின் வேர், போர்த்துக்கீசரால் முன்னே மெத்த மதிக்கப்பட்டது. அவர்கள் அதற்கு Rais Madre de Deos என்று பேரிட்டிருந்தார்கள். இதற்கு ஏதுஞ் செயல் உண்டோ அல்லவோ இப்போ அறியப்படவில்லை. இந்து வைத்தியர் இதைத் திமல்சம்[2] அல்திரவம்[3] என்று எண்ணுகிறார்களென்று மாத்திரம் ஏன்ஸலி சொல்லுகிறார்.

சிறுதேக்கு. Clerodendron serratum, இது இந்துவின் அனேக பகுதியில் மலைநாடுகளிலுள்ள செடிப்பூண்டு இதின் வேருக்கு ஏன்ஸலியென்பவர் கந்துப்பிருங்கு Gantu Bharangi என்று பேரிட்டிருக்கிறார். இது மருந்தாக விசாகபட்டினத்திலிருந்து அதிகமாய் ஏற்றப்படுமென்று ஏலியற்றுபண்டிதர் சொல்லியிருக்கிறார். சுதேசிகள் இதைக் காய்ச்சல் சதார்[4] நோய்களுக்கு வழங்குவார்கள். இது பருக்கன் நூல் முதல் ஈர்க்களவு பருமையுள்ள நொருக்கலான துண்டுகளாக வரும். இடைக்கிடை உண்டையான காய்போற் பொருமியிருக்கும். இதற்கு மணம் சுவையில்லை. மருந்துக்கு இது நயந்ததல்ல. கைப்புக்கிலுறடென் Clerodendron infortunatum என்ற செடியின் இலை சிரட்டுச்சி[5]க்குப் பதிலாக மலிவான நல்ல தொணிக[6]மும் அந்திபிருடி[7]யுமாகுமென்று பலஹதபோசர் சொல்லுகிறார். இதைப்பற்றி அவர் எழுதின விபரம் இந்நூலாராய்ச்சியாருக்குக் கிடைக்கவில்லை. இதின் பச்சிலைச்சாற்றைக் கிருமிகொல்லி[8]யாகவும் நச்சுக்காய்ச்சல்களில் விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கு உண்டாகும் நச்சுக்காய்ச்சல்களிற் கைப்பான தொணிகமாகவும் சுரக்கினி[9]யாகவும் சுதேசிகள் வழங்குவார்களென்று கனலல்டே என்பவர் சொல்லுகிறார்,

தேக்கமரம். Teak tree. இந்த மரத்தின் அவுஷத தன்மைகளைப் பற்றி ரம்பியசு, அஷ்வீல்டர் முதலியவர்கள் சொல்லியிருப்பவைகள் மிகச் சந்தேகத்துக்கு இடமானவைகள். ஆயினும் இதின் சிராயைச் சொற்ப தண்ணீர் விட்டுக் கல்லில் உரைத்துப் பசையாக்கிப் பூசப் பிரமதேசக் கறுப்புவாணி[10]சைப் பரிமாறினதினாலுண்டான வருத்தமும் தாபிதமும்[11] தணிவது கவனிக்கப்படத்தக்ககாரியம். இதின் உபயோகத்தைப்பற்றிப் பேணியென்பவர்

---

1 Pedalium murex. 2 Demulcent, சமனி. 3 Alterative. 4 Catarrh. 5 Chiretta.
6 Tonic. 7 Antiperiodic. 8 Anthelmintic. 9 Febrifuge.
10 Black varnish. 11 Inflammation.

Digitized By Roja Muthiah Research Library

சில நல்ல குறிப்புகளைப் பிரசுரஞ்செய்திருக்கிறார். சேங்கொட்டை1, கா ட்டுமுந்திரிக்கொட்டை2யாலுண்டான தாபிதங்களில் இதைப்பூசிப்பார்ப்ப து நல்லது. பழுத்த நசுக்கி அடிவயிற்றில் அப்ப சிறுநீர் அதிகப்பட்ட தை இரண்டுபேரிற் கண்டித்தேனென்று கிப்சன் பண்டிதர் சொல்லுகிறார். இனிமேல் சோதனைசெய்பவர்கள் இதைக் கவனிப்பது நல்லதென்கிறார்.

# லபியாதியங்கள்.

# LABIATAE.

## லவந்தர்ப்பூடு. LAVENDER.

**வாசம்.** இது தென் யுரோபத்துக்குரிய பூடு. யுரோபத்தின் எப்பகுதித் தோட்டங்களிலுஞ் செய்கைபண்ணப்படும்.

**வாகடபகுதி.** பூக்களைத் திஸ்திலித்3தெடுக்கும் எண்ணெய். இது நிறமற் றதாய் அல்லது வெண்மஞ்சள்நிறமாயும் லவந்தர்க்குரிய விசேஷ நல்மண முடையதாயும், கார்ப்புங்கைப்புமுள்ள சுகந்த4 சுவையுடையதாயுமிருக்கும்.

**தன்மைஉபயோகம்.** இது காமினதி5, அந்திஸ்பசி6. லவந்தர்க்கூட்டிர ஞ்சமாய் மாத்திரமன்றி மற்றும்படி இது உள்ளேகொடுக்கப்படுவதரிது. அன் னெண்7கள் முதலாஞ் சில மருந்துகளினது கெட்ட நாற்றத்தை மறைப்பதற் கு இது வழங்கப்படும். பூரக்கூட்டுலினிமெ8ணில் இதுவும் ஓர் கூறாகச் சேருகின்றது.

**தேயம்.** இரண்டு முதல் ஐந்துதுளி.

**ரசிதங்கள். லவந்தர்சீது.** Spirit of Lavender. கொள். லவந்தர் தேல் ஒருஅன்சு; திட்டசீது9 நாற்பத்தொன்பது அன்சு. கரைக்கவும்.

**தேயம்.** முப்பது மினிம்10 முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம். 1864 ம் ஆண்டு பிரசுரஞ்செய்த பிரித்தன் வாமகுபீயத்திற்11 சொன்ன லவந் தர்சீதிலும் இது ஐந்திலொருபங்கு பெலனுள்ளது.

**லவந்தர்க்கூட்டிரஞ்சம்.** Compound Tincture of Lavender. கொ ள். லவந்தர்த்தேல், ஒன்றரைத்திரும்; ரோஸ்மரித்தேல், பத்துமினிம்; இடி த்த கறுவாப்பட்டை, இடித்த சாதிக்காய், வகைக்கு நூற்றைம்பது கிறேன்; செஞ்சந்தனச் சிராய் மூந்நூறுகிறேன்; திட்டசீது ஒருநாழி. கறுவாப்பட் டை, சாதிக்காய், செஞ்சந்தனச்சிராய் மூன்றையும் அடைத்தபாத்திரத்திலே சீதில் ஏழுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பால் சீலையி ல் வடித்துப் பிழிந்து தேல்களைக் கரைத்து, வடித்து, ஒருநாழி தேறப் போ திய திட்டசீது சேர்க்கவும்.

**தேயம்.** அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம். இது நல்ல ஸ்திமுலம்12. சிரா நோய்கள், ஸ்தேரி13 நோய்களுக்கும் ஆரம்ப மூர்ச்சைக்கும்14 வாயுப்பொருமல் வலிகளுக்கும் பெரும்பாலும் இது கொடு க்கப்படும்.

---

1 Marking nut. 2 Cashew nut. 3 Distill. 4 Aromatic. 5 Carminative. 6 Antispasmodic. 7 Ointment. 8 Compound Liniment of Camphor. 9 Rectified spirit. 10 Minim. 11 Pharmacopoeia. 12 Stimulant. 13 Hysteria. 14 Syncope. சிங்குபி.

Digitized By Roja Muthiah Research Library

## பெப்பமிந்துப்பூடு. PEPPERMINT.

வாசம். யுரோபம், ஆசியம், அமரிகத்தின் பல பகுதிகளில் ஈரமான இடங்களில் இது உண்டாகும். மிக்கத்திலும் மற்றுமிடங்களிலுஞ் செய்கை பண்ணப்படும்.

வாகடபகுதி. எண்ணெய்; பூடு பூத்திருக்கையிற் பிடுங்கி அதைத் திஸ்திலித்து[1] எடுக்கப்படும். இது வெண்மஞ்சள் நிறமானது. பெப்பமிந்துக்குரிய மணமுடையது. சுவை முதலில் வெஞ்சுகந்தமாகி, பிறகு குளிர்மை போலாகும். இதிலே இரண்டு இசமிற்[2]தேல்கள்[3] அடங்கியிருக்கும். அவைகளிலொன்று நீரானது, மற்றது உரமுங் கிரிஸ்த[4]லுமானது. இவற்றிற் பிந்தினது, பெப்பமிந்துப் பூரம் அல்லது பெப்பமிந்துத் தேலின் ஸ்தியரப்தின்[5] எனப்படும்.

தன்மை. நல்ல காமினதி[6], ஸ்தொமாகி[7], அந்திஸ்பசி[8].

உபயோகம். வாயுப்பொருமலுக்கும், அதாற் கிளம்பும் வலிக்கும், உவட்டுக்கும், குடலின் ஸ்பச[9] நோய்களுக்கும் இது பேர்பெற்ற மருந்து. பிரசவசுரப் பரிகரிப்பில், உவட்டான தார்ப்பந்தின் எண்ணெய்க்குப் பதிலாக இது கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டது. (55)

தேயம். இரண்டுமுதல் ஐந்து துளியைச் சர்க்கரையில் விட்டாவது மூசிலாகில்[10] விட்டாவது கொடுக்கலாம்.

ரசிதங்கள். பெப்பமிந்துநீர். Peppermint water. கொள். பெப்பமிந்துத் தேல், ஒன்றரைத்திரும்; தண்ணீர் ஒன்றரைக் கலன். திஸ்திலித்து ஒரு கலன் எடுக்கவும்.

தேயம். ஒரு அன்சுமுதல் மூன்று அன்சுவரைக்குக் கொடுக்கலாம். வாயுப்பொருமலுக்கும் குடலின் மற்றும் ஸ்பசநோய்களுக்குங் கொடுக்குங் காமினதி மருந்துகளுக்கு இது நல்ல அனுபானமாகும். சுகந்த அயக்கலவை[11]யில் இது ஓர் கூறுகச் சேருகின்றது.

பெப்பமிந்துச்சீது. Spirit of Peppermint. கொள். பெப்பமிந்துத்தேல், ஒரு அன்சு; திட்டசீது[12], நாற்பத்தொன்பது அன்சு. சேர்த்துக் கரைக்கவும்.

தேயம். முப்பது மினிம்[13] முதல் அறுபது மினிம் வரைக்குக் கொடுக்கலாம். 1864 ம் ஆண்டு பிரசுரஞ்செய்த பிறித்தன்வாமகுபீய[14]த்திற் சொல்லிய பெப்பமிந்துச் சீதில் இது ஐந்திலொருபங்கு பெலனுள்ளது.

## ஸ்பீர்மிந்துப்பூடு. SPEARMINT.

வாசம். யுரோபம், ஆசியம், அமரிகத்திற் சேற்றுநிலங்களில் இது உண்டாகும்.

வாகடபகுதி. எண்ணெய். இப்பூடு பூத்திருக்கும்போதே அதைப் பிடுங்கித் திஸ்திலித்து எண்ணெய் எடுப்பார்கள். அது நிறமற்றது, அல்லது வெண்மஞ்சள் நிறமானது; ஸ்பீர்மிந்துக்குரிய மணமுடையது; அனலுங் கார்ப்பும் வெஞ் சுகந்தமுமான சுவையுள்ளது.

---

1 Distill. 2 Isomeric. 3 Oil. 4 Crystal. 5 Stearoptene. 6 Carminative, வாயுக்கினி. 7 Stomachic, கோசனி. 8 Antispasmodic, ஸ்பசக்கினி. 9 Spasmodic. 10 Mucilage. 11 Aromatic mixture of iron. 12 Rectified spirit. 13 Minim. 14 British Pharmacopoeia.

(55) அனுபந்தம்பார்.



Digitized By Roja Muthiah Research Library

தன்மை உபயோகம். பெப்பமிந்தைப் போன்றிருப்பினும் அதைப்பார்க்க இது செயல் குறைந்தது.

தேயம். இரண்டு துளி முதல் ஐந்து துளி வரைக்குச் சர்க்கரையிலாவது இமல்சத்தி[1]லாவது விட்டுக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். ஸ்பீர்மிந்துநீர். Spearmint water. கொள், ஸ்பீர்மிந்துத் தேல் ஒன்றரை அஞ்சு; தண்ணீர் ஒன்றரைக் கலன். திஸ்திலித்து[2] ஒரு கலன் எடுக்கவும்.

தேயம். ஒரு திரும் முதல் மூன்று திரும் கொடுக்கலாம். பிரதானமாய் மற்றும் காமினதி மருந்துகளுக்கு அனுபானமாய் இது சேர்க்கப்படும்.

## ரோஸ்மரிச்செடி. ROSEMARY.

வாசம். தென் யுரோபத்திலும், வட ஆபிரிகத்திலும், சின்ன ஆசியத்திலும் இது உண்டாகும். இங்கிலந்திற் தோட்டங்களிற் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. எண்ணெய். இது பூத்தளிர்களிலிருந்து திஸ்திலிக்கப்படும். இது நிறமற்றது. ரோஸ்மரிக்குரிய மணமும் காரப்பான சுகந்த சுவையுமிதற்குண்டு.

தன்மை உபயோகம். காமினதி[3]. ஆயினும் உள்ளே கொடுக்கப்படுவது அரிது. சிர மொட்டைக்குப் பூசும் தீவன தைலங்களில் ஓர் கூறாக இது வழங்கப்படும்.

தேயம். இரண்டு முதல் ஐந்து துளி வரைக்குக் கொடுக்கலாம். லவந்தர்க்கூட்டிரஞ்ச[4]த்திலும் சபுலினிமெ[5]ன்றிலும் இது ஓர்கூறாகச் சேருகின்றது.

ரசிதங்கள். ரோஸ்மரிச்சீது. Spirit of Rosemary. கொள். ரோஸ்மரித்தேல், ஒருஅஞ்சு; திட்டசீது[6] நாற்பத்தொன்பது அஞ்சு. சேர்த்துக் கரைக்கவும்.

லோஷன்[7]களாதி வெளிமருந்துகளுக்கு மணங்கொடுப்பதற்காக இது பிரதானமாய்ச் சேர்க்கப்படும். 1864 ம் ஆண்டு பிரசுரஞ்செய்த பிறித்தன்வாயருபீய[8]த்திற் சொல்லப்பட்ட ரோஸ்மரிச்சீதில் இது ஐந்திலொருபங்கு பெலனுள்ளது.

## அவாகடச்சரக்குகள். Non Officinal.

துளசி. Ocimum sanctum. திருநீற்றுப்பச்சை. O. Basilicum. இவைகளும் இவைகளின் வகுப்பைச் சேர்ந்த மற்றுமினங்களும் இந்துதேசம் அடங்கலும் உண்டு. இவைகள் எல்லாவற்றுக்கும் கர்ப்பூரம்போன்ற வாசனையான மணமும் காரப்பான சுகந்த சுவையுமுண்டு. ஸதிமுல[9]சுவேதன[10] எக்ஸ்பெக்துற[11]த்தன்மைகள் இவைக்குஉண்டென்றுசொல்லிச் சுதேசிகள் அவைகளை வழங்குவார்கள். ஆயினும் யுரோப வைத்தியத்தில் இவை மெத்தக் கவனிக்கப்படத் தகுந்தவைகளாய்த் தோற்றவில்லை. வங்காளிகள் துளசியிலையைக் காயவைத்து மாவாக்கி அங்கே உண்டாகும் பீனசம் என்ற நாசிப்புழுவுக்குப் பொடியாக வழங்குவார்கள். புழுக்களைக் கொட்டுவதற்கும்

1 Emulsion. 2 Distill. 3 Carminative, வாயுக்கினி. 4 Compound tincture of Lavender. 5 Soap liniment. 6 Rectified spirit. 7 Lotion. 8 British pharmacopoeia 9 Stimulant. 10 Diaphoretic. 11 Expectorant.

Digitized By Roja Muthiah Research Library

இது சித்தியானமருந்தென்று சொல்லியிருக்கிறார்கள். மயிர்த்துளசி O. Pilosum. என்ற துளசி வகையின் கொட்டையைத் தண்ணீரில் ஊறப்போட அது பாணியாகுமென்றும் அப்பாணி கதார்க[1]ளுக்குத்திமல்ச[2]மாகவும் பிரசவத்திற் பின்னோக்காட்டைத் தணிப்பதற்கு உபயோகமாகவும் சுதேசிகளால் வழங்கப்படுகிறதென்றும் விளெமிங்குபண்டிதர் சொல்லியிருக்கிறார். எலுமிச்சந்துளசியினது O. Gratissimum. பிசுபிசுப்பான கொட்டையின் கஷாயம், பிறசில் தேசத்தில் வெட்டைநோய்க்குப் பேர்பெற்ற மருந்தாகிறதென்று மர்தியசு சொல்லியிருக்கிறார். வெற்சு என்பவர் எலுமிச்சந் துளசிக்கு தாவுஞ்செலாசு[3] என்ற மலாயப்பெயர்கொடுத்து பிள்ளைகளுக்குஉண்டாகும் அக்கரத்துக்கு வாடிக்கையான யுரோப மருந்துகள் எல்லாம் சித்தியாதவிடத்தில் இதின் பெலனான கஷாயஞ் சித்தியாயிற்றென்று சொல்லுகிறார். இது சேர்த்துச் செய்த சுகந்த தோயத்தை அபோஷத்துக்கு வழங்கும்படி அவர் சொல்லுகிறார். மொரீசுத்தீவில் வாதம் சோர்வுகளின் பரிகரிப்பில் இந்தப் பூண்டிற் செய்த தோயமும் புகைகளும் வழங்கப்படும்.

இந்துப் பெப்பமிந்துப்பூடு. Micromeria capitellata. இது நீலகிரி, மகாபிளெசுவா மலைகளிலுள்ள சிறுப்பூடு. தல்செல் என்பவர் மறுபிய மல்குமியானம்[4] என்ற பெயரால் முதல்முதல் இதை வெளியாக்கிப் பெப்பமிந்துக்குரிய சுகந்த காமினதித் தன்மைகள் எல்லாம் இதில் அடங்கியிருக்கின்றனவென்று சாதிக்கிறார்.

பேய்மருட்டி. Anisomeles Malabarica. தென்னிந்துவிற் சுதேச வைத்தியத்தில் இதைப் போல மதிக்கப்படுகிறதும் இதைப் போல மிகுதியாய் வழங்கப்படுகிறதுமான ஓர் பூண்டு அரிது. சுகந்தமுங் கைப்புமான இதின் இலையின் இன்வூசம்[5]இரைப்பை குடல்களின் நோய்களுக்கும் கதார்நோய்களுக்கும் முறைச்சுரங்களுக்கும் வாடிக்கையாய்க் கொடுக்கப்படும். சுரங்களில் இதை உள்ளுக்குக் கொடுப்பார்களன்றி நோயாளர்க்கு அதிக வெயர்வை உண்டாகத்தக்கதாய்ச் சூடான இன்வூசத்தின் ஆவியை அவர்களைக் கொண்டு உறிஞ்சுவிப்பார்கள் என்றும் வைற்று பண்டிதர் சொல்லியிருக்கிறார். இலையின இன்வூசம் நல்ல சுவேதனி[5] என்றும் சுதேசிகளுக்குண்டாகிப் பெலனைக் கெடுக்கும் விடாச்சுரத்துக்கு மெத்த உவந்ததென்றும் ரோசு வைத்தியர் அறிவித்திருக்கிறார். இலைகளிலிருந்து திஸ்திலித்[7]தெடுக்கப்படும் எண்ணெய் வாதத்துக்குச் சித்தியான பூச்சு மருந்தென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பூண்டின் நயங்களைப்பற்றி இன்னும் ஆராய்வது நல்லது. அனிசுமேலிசோவாதப்பூடு, Anisomeles ovata. என்ற பூண்டுக்கு இப்பூண்டின் சடதன்மைகள் உண்டு. இதைப்போல் அதையும் சோதிப்பது நல்லது. இலங்கையில் இதிலிருந்து திஸ்திலித்த எண்ணெய் கருப்பைநோய்களுக்கு உபயோகமானதென்று பெர்மன் சொல்லியிருக்கிறார்.

சுகந்தகோலீயஸ் பூடு. Coleus aromaticus. இது மொலக்காவக்குரிய பூடு. இந்துவின் பல பகுதிகளிற் தோட்டங்களிலுண்டாக்கப்படும். நல்ல சுகந்த மணமும் கார்ப்பான சுவையுமுடையது. ஈளை, நாட்பட்ட இருமல், எபிலெப்சி[8], மற்றும் ஸ்பச[9] நோய்களுக்கு இது கொச்சின் சீனத்தில் வழங்கப்படுகிறதென்று லூறியு சொல்லியிருக்கிறார். இது வீறான சுகந்த காமினதியென்றும், பிள்ளைகளின் குடல்வலிக்குக் கொடுக்கப்படுகிறதென்

---

1 Catarrh. 2 Demulcent. 3 Daunselasse. 4 Marrubium malcolmianum.
5 Infusion. 6 Diaphoretic. 7 Distill. 8 Epilepsy. 9 Spasm.

Digitized By Roja Muthiah Research Library

றும்,பிழிந்த சாறு, சர்க்கரை முதலிய எதும் அனுபானத்தோடு கலந்து கொடுக்கப்படுகிறதென்றும், வைற்றுபண்டிதர் சொல்லியிருக்கிறார். ஓர் யுரோபஸ்திரி சுதேசிகள் சொன்ன முறையாய்த் திஸபெப்சி என்ற அசீரணத்துக்கு இதை உட்கொண்டபோது நயங்கண்டாலும் வெறியுண்டுபெட்டபடியால் அதை நிறுத்தவேண்டியிருந்ததைத் தனது பரீட்சையிற் கண்டோமென்றும் அவர் சொல்லுகிறார். இதைப்பற்றி இன்னும் ஆராய்ந்தறிவது நல்லது. இதின் வெறித்தன்மையை லாங்கென்பவருங் கவனித்தார். வங்காளத்துச் சனங்கள் இதைக் குடல்வலிக்கும் குன்மத்துக்கும் வழங்குகிறார்கள் என்றுஞ் சொன்னார்.

இந்த வகுப்பைச் சேர்ந்த பூண்டுகளுள் பின்வருவன சுதேசிகளுக்குள்ளே பேர்பெற்றிருப்பவைகளாயினும் மெத்த முக்கியமானவைகளல்ல. அவையாவன: அழகுரோயிற்பூடு. Roylea elegans, இது சுரக்கினியாய் வழங்கப்படும். பாம்புத்தலைப்பூடு. Dracocephalum Royleanum. இதின்கொட்டைகளைத் தண்ணீரிற் போட்டுப் பாணியாக்கிக் குடிப்பார்கள். வங்காளமெரியாண்டப்பூடு. Meriandra Bengalensis. ஸ்திறோபிலிமெரியாண்டப்பூடு. M. Strobilifera. இவை இரண்டும் கர்ப்பூர மணமும் கைப்புச் சுவையுமுடைய பூண்டுகள். சல்வியப்[1] பூண்டின் தன்மைகள் எல்லாம் இவைக்கு உண்டு. இவற்றின் இலைகள் கர்ப்பூர இலைகளென்று சொல்லிச் சுதேசவைத்தியத்தில் அதிகமாய் வழங்கப்படும். அக்கரத்துக்கு[2]ம் தொண்டைநோவுக்கும் இந்த இலைகளின் இன்வூசம்[3] நல்லதென்று, ராமசேண்போசர் சொல்லியிருக்கிறார். பாலூறுதலைக் குறைக்கிற அல்லது மறிக்கிற தன்மையும் இவைக்குண்டென்று சொன்னது சரியென்று அவர் கவனித்தார் நிலச்செனியுஸ்போறப்பூடு. Geniosporum Prostratum. இது புதுச்சேரியிலே சுரக்கினி[4]யாய் வழங்கப்படும். அங்கே நசல்நாயகி என்ற தமிழ்ப்பெயரால் இது வழங்கும். கர்ப்பூரவள்ளி. Anisochilus Carnosum. ஸ்திமுலம்[5],சுவேதனி[6], எக்ஸ்பெக்துறய[7]. இது தன்சிற்றப[8]த்துக்கு வழங்கப்படும். திருவாளங்கோட்டிலே, சுதேசவைத்தியர் இதைக் கதார்[9] நோய்களுக்கு வழங்குவார்கள். இது சாந்தமான தீவனி, எக்ஸ்பெக்துறமென்றும், பிள்ளைகளின் இருமல்களுக்கு விசேஷமாய் உபயோகமானதென்றும் பிதி வைத்தியர் சொல்லியிருக்கிறார். இதின் தன்மைகள் இதின் அத்திர[10] எண்ணெய்யிலேயே இருக்கும். சோறிலூகஸ் Leucas aspera. இது பாம்புகடிக்கு மாற்று என்று அஸ்லென் என்பவராற் சொல்லப்படினும் அவர் சொன்னதற்குப் போதிய சாட்சியில்லை. இதனிலைச்சாறு சிரங்குக்கும் மற்றுங் குட்டைகளுக்கும் பூச நல்லதென்று சாற்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். பச்சூலிப்பூடு. Pognostemon Patchouli. இது சைலெற்றுமலாக்காய் என்ற தேசங்களிலுண்டாகின்றது. இதின் காய்ந்ததுளிரே பச்சூலித்துளிரென்று வியாபாரத்தில் வருவது. இது மருந்துக்குபயோகமாகாமல் வாசனைப்பொருளாய்ப் பெரும்பாலும் வழங்கப்படும்.

## பிளம்பச்சினியங்கள்.

## PLUMBAGINEAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

செங்கோடிவேலி. Plumbago rosea. இது இந்து அடங்கலுமுள்ள

1 Salvium. 2 Aphthus. 3 Infusion. 4 Febrifuge. 5 Stimulant. 6 Diaphoretic. 7 Expectorant, கட்டேவனி 8 Tonsilitis. 9 Catarrh. 10 Volatile.

Digitized By Roja Muthiah Research Library

பூடு. இதின் வேருக்குக் கொப்புளிக்குந் தன்மை உண்டு. பெர்மன், ரம்பியசு முதலிய முற்கால ஆக்கியோர் அத்தன்மையைக் கவனித்தார்கள். ஆயினும் ஒஷானசியென்பவரே இதை முறைமையாய் ஆராய்ந்தார். அவர் வேர்ப்பட்டையைத் தண்ணீர்விட்டரைத்துச் சொற்ப அரிசிமாவுஞ் சேர்த்துப் பசையாக்கித் தோலில் அணைக்க. ஐந்துமினிட்[1]க்குள்ளே எரிவு துவங்கி, வரவர அதிகப்பட்டுப் பதினைந்துமினிக்குள்ளே ஒரு கொப்புளப்பற்றுப் போட்டதுபோலாகுமென்றும், முந்நூறு நானூறு பேர்வரையிற் தாங் கண்ட அனுபவத்தின் பேறு இதுவென்றும் சொல்லியிருக்கிறார். அந்தப் பசையை அரைமணிநேரத்துக்குள்ளே எடுத்துப்போடப் பன்னிரண்டு பதினெட்டுமணிக்குள்ளே வசாரீர்[2] நிறைந்த பெரிய கொப்புளங் கிளம்பும். கொப்புளித்த புண்ணுமோ தொல்லையின்றிச் சுறுக்கு ஆறும். கந்தாரிசு[3]ப் பற்றைப்பார்க்க இது லகுவானதென்றும், அதைப்போல் இது சனனசல உறுப்புகளை அழற்சிப்படுத்தாதாதலால் அதிலும் திறமானதென்று அவர் எண்ணுகிறார். ஆயினும் வாறிங்கு பண்டிதர் இதைச் சோதித்தவரையிற் கண்டபேறுகள் அவ்வளவு திருத்தியல்ல. கந்தாரிசுப்பற்றாலுண்டாகுமெரிவைப்பார்க்க இதாலுண்டாகுமெரிவு மெத்தக் கடுமையென்றும் கொப்புளித்த புண்மட்டாவதுமில்லைச் சுறுக்கு மாறுவதுமில்லையென்றும் அவர் கண்டார். எப்படியும் இது வீறான கொப்புளமருந்து. கந்தாரிசு கிடையாதவிடத்தில் இதை வழங்கலாம். உட்கொண்டால் இது காரமான ஸ்திமுலஸ்மாகவும் பெருந்தேயத்தில் மயக்கழற்சிநஞ்சாகவுஞ் சேஷ்டிக்கும். வங்காளத்தார் இதை நஞ்சாகப் பலவேளைகளிலும் வழங்குவார்கள். இது விசேஷமாய்க் கருப்பையிற் சேஷ்டிக்கும். கருவழிப்பதற்குச் சுதேசிகள் வழங்கும் மருந்துகளுள் இதுவுமொன்றென்று வேப்பு பண்டிதர் சொல்லியிருக்கிறார். சுறண்டின வேர்ப்பட்டையைக் கருப்பைவாயுட் செலுத்துவார்கள். காரமான இந்த வேரை இப்படிச் செலுத்துவதால், கருப்பையிலும், வயிற்றின் உள்ளுறைச்சவ்விலும் தாபிதம்[5]சுறுக்குக் கிளம்பப் பலமுறையும் மரணமாய் முடியும். இதை உள்ளுக்குக் கொடுத்தும் கருப்பைவாயிலிட்டும் தென்னிந்தியிலுள்ள பெண்கள் கருவழிப்பதற்கு இதை வழங்குகிறார்களெனச் சாற்று வைத்தியர் தமது எழுத்திற் குறித்திருக்கிறார். உள்ளே கொடுப்பதற்குப் பசையாக அரைத்த பச்சை வேரின் தேயம் ஒன்றுமுதல் இரண்டு கிறுமாகும். வேரைக் காரமில்லாத எதும் எண்ணெய்யில் ஊறப்போட்டு வாதங்கள்சோர்வுகளுக்குப் பூசுவார்கள். யாவகர் பற்கொதிக்கு இந்த வேரை அடசுவார்கள். அப்போ இது உமிழ்நீரை வடியப்பண்ணும். சாரங் குறைந்தாகியகாய்ந்தவேர்,தென்னிந்துவிலே உபசிவ்விசு[6]க்கும் குஷ்டத்[7]துக்கும் மருந்தாக மெத்த மதிக்கப்படும். இதைக் கொடுப்பதில் மெத்தக் கவனம்வேணும். வெண்கொடிவேலி P. Zelanica. இது செங்கொடிவேலியின் தன்மைகளையுடையதாயினும் அதிலுஞ் சாந்தமான செயலுள்ளதுபோலும். வேர்ப்பட்டையினிரஞ்சம்[8] அந்திபிருடி[9]யாக வழங்கப்படும். முறைச்சுரத்துக்கு இதைக்கொடுத்து நயங்கண்டேனென்று அஷ்வெல்டு வைத்தியர் சொல்லுகிறார். இது வீறான சுவேதனி[10]யாய்ச் சேஷ்டிக்கின்றது. இந்த இரண்டு இனங்களின் சத்தும் பிளம்பசின்[11] என்ற கிரிஸ்தற்[12] பதார்த்தத்திலேயேஇருக்கின்றது. இவைகளை இன்னுஞ் சோதிப்பது நன்று.

---

1 Minute. 2 Serum. 3 Cantharides. 4 Stimulant. 5 Inflammation. 6 Secondary syphilis. 7 Leprosy. 8 Tincture. 9 Antiperiodic. 19 Diaphoretic. 11 Plumbagin. 12 Crystalline.

Digitized By Roja Muthiah Research Library

## சல்வடுருசியங்கள்.

## SALVADORACEAE.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

களர்வா. Salvadora Wightiana. சிலர் இதிலே சிறுகளர்வா[1] பெருகளர்வா[2]என்ற இரண்டு இனங்களைக் குறிக்கிறார்கள். இந்தமரம் இந்து அடங்கலுமுள்ளது. ஆயினும் மெத்த மிகுதியல்ல. பீலூ3என்ற இந்துஸ்தானிப் பேரால் பெரும்பாலும் இது வழங்கும். இதின் இலை, பட்டை, கொட்டைகள் எல்லாவற்றுக்கும் ஓர்வகையான கார்ப்பான மணமும் சுவையுமுண்டு. வேர்ப்பட்டை மெத்தக் கார்ப்பானது. அதை மாவாக்கித் தோலில் அணைக்க, கொப்புளமுண்டாகும். ஏர்வின் பண்டிதர் இதை இப்படி வழங்கினார். பட்டையை அசத்துவ[4] சுரங்களுக்கும் அமெனுறீய[5]த்துக்கும் இந்துவைத்தியர் வழங்குவார்களென்று என்ஸ்லி சொல்லுகிறார். சிந்துவிற் பாம்புகடியைப்பற்றி இம்லக்கு பண்டிதர் எழுதிய பத்திரத்திலே பீலூக்கொட்டையை உள்ளே கொடுத்ததால் நயப்பட்ட பலஉதாரணங்கள் அட்டவணையாகக் குறிக்கப்பட்டன. இக் கொட்டை நல்ல விரேசனமுமாகும். இந்த மரத்தின் பகுதிகள் எல்லாவற்றுக்கும் விசேஷமாய் வேர்ப்பட்டைக்குக் கார்ப்பான ஸ்திமுல[6]த்தன்மைஉண்டென்பதற்கு மிகச்சந்தேகமில்லை. ரக்சுபேகர் இது உபயோகமான மருந்தாகுமென்கிறார். கிப்சன் பண்டிதர் எண்ணமுமிதுவே. இந்த மரத்தின் தன்மைகளும் பெருங்களர்வா சிறுகளர்வா என்ற இரண்டினது தன்மைகளும் இனிமேல் ஆராயப்படத் தகுந்தனவென்பது ஒஷானசியர் எண்ணம். பெருங்களர்வாவின் கார்ப்புத்தன்மை சிறுகளர்வாவின் அத்தன்மையைப் பார்க்கக் குறைவாம். வடக்கிந்துவின் சனங்கள் பல்லை விளக்கிப் பற்களையும் ஈறுகளையும் பெலப்பிக்கிறதற்கு இதின் கிளைகளைக் குச்சியாக வழங்குவார்களாகையால் இது பற்குச்சிமரம் என்று பெயர்பெறும்.

## சோலனேசியங்கள்.

## SOLANACEAE.

### அத்திரோபபெலடனப்பூடு. ATROPA BELLADONNA.

வாசம். யுரோபம் மேற்காசியங்களின் சோலைவேலி முதலிய நிழலான இடங்களில் இது உண்டாகும்.

வாகடபகுதி. 1. இலைகள். சாய்கொண்டபின்னே இலைகள் சேர்க்கப்படும். இவை மூன்று முதல் ஆறு இஞ்சு நீளமும் அயில் வடிவும் கூரும் அழுத்தமும் அறவற்றதுமாய் ஒன்றைவிட்டொன்று மாறியிருக்கும். ஆகமேலிலைகள் சோடாயும் சமவீனமாயுமிருக்கும். பச்சையாயிருக்கையில் சொற்ப கசப்பும், அற்ப கார்ப்புமான சுவையுடையதாய் துவைக்கும்போது நாற்றம் வீசும். இதின் சாற்றையாவது இன்வூச[7]த்தையாவது கண்ணுக்கு

---

1 Salvadora Persica, 2 S. Indica, 3 Pilu, 4. Adynamic, 5 Amenorrhoea. 6 Stimulant. 7 Infusion.

Digitized By Roja Muthiah Research Library

ள்ளே ஒழுக்கிவிட நயனத்துவாரம்[1] விரியும். 2 காய்ந்தவேர். இது இரண்டொரு அடி நீளமும் இரண்டொரு இஞ்சு தடிப்புமுள்ள, கவரான சுருக்கு விழுந்த வெண் கபிலநிறத் துண்டுகளாக வரும். இதின் இன்னூசத்தைக் கண்ணுக்குள்ளே ஒழுக்க நயனத்துவாரம் விரியும். இலை வேர் இரண்டின் சத்தும் அத்திரோபியம்[2]என்ற அல்கலைவத்திலேயே இருக்கும்.

தன்மை. இது வீறான செரதீவம்[3] அனுடைன்[4], அந்திஸ்பசி[5], லக்திவூச்சு[6]. இந்த வகுப்பைச் சேர்ந்த வேறுஞ் சில பூண்டுகளைப் போல உள்ளே தின்றாலென்ன, கண்ணில் இட்டாலென்ன இது நயனத் துவாரத்தை விரிவிக்குந் தன்மையுள்ளது. மிஞ்சிய தேயத்தில் வீறான நஞ்சாகும்.

உபயோகம். அந்திஸ்பசியாக இது குக்கல், ஸ்பசஈளை[7], கூவுஞ்சுவாசம்[8], கொரீயம்[9], எபிலெபசி[10]யென்ற நோய்களுக்கும், சலபாதையின் ஸ்பசஒடுக்குக்கும் நல்ல மருந்து. செரதீவம் அனுடைனாக பலவகை நறல்சி[11], வாதம், ஏர்ப்பு, ஐருவோபி[12], வெறிப்பைத்தியம்என்ற நோய்களுக்கும் திஸ்மெனுறீயம்[13] வருத்தமான மற்றுங்கருப்பைநோய்களுக்கும், கன்சர்ப்புண்க[14]ள் வருத்தமான மற்றும் புண்களுக்கும் இது நல்லது. காசநோயி[15]லும், சிருங்கை[16]யின் ஆழியபுண் முதலிய கண்வியாதிகளில் நயனத்துவாரத்தை[17]விரிவிக்கவேண்டியதாய் அல்லது வருணி[18]யின் ஓரங்களை ஒட்டாமற் பேணவேண்டியதாயிருக்கும்போதும் சத்திரவைத்தியஞ்செய்வதற்கு இது உத்தமதுணை மருந்தாகும். வாதம், ஸ்துரூம நோய்கள் காரணமாயுண்டான வருணித்தப[19]த்தில் இதால் மெத்தச் சகாயமுண்டாகும். ஸ்காலதீனம்[20] வராமற் காக்குந் தன்மை இதற்குண்டென்பதைப்பற்றி இன்னும் ஆராயவேண்டும்.

தேயம். இலைத்தூளில் ஒரு கிறேனிற் துவங்கிப் படிப்படியாய்க் கூட்டி இரண்டு கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். அதிகமாயுங் கொடுக்கலாம். பின்வரும் ரசிதங்களில் ஒன்றைக் கொடுப்பதே உத்தமமான முறை.

இலையின் ரசிதங்கள். பெலடனரஞ்சம். Tincture of Belladonna. கொள். பெலடன இலை, பருக்கன்தூளாக ஒரு அன்சு; புரூவுசீது[21]அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் இலைத்தூளைச் சீதிற் பதினைந்து அன்சில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[22]யில் வார்த்து நீர் ஒழுகித் தீர்ந்தபின் மிச்சமான ஐந்து அன்சு சீதையும் வார்த்துவடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைச் கலந்து அரைநாழிதேறப் புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். ஐந்து முதல் இருபதுமினிம். லண்டன் தபுளின்வாமகுபீயத்[23]திற் சொல்லிய பெலடனரஞ்சத்திலும் இது அரைவாசி பெலனுள்ளது.

பெலடனவெசிறத்து. Extract of Belladonna. கொள். பச்சையான பெலடனை இலைகளும் இளங்கொப்புகளும், நூற்றுப் பன்னிரண்டு இருத்தல். இவைகளைக் குழியம்மியிற் துவைத்துச் சாற்றைப் பிழிந்து 130 பாகை சூட்டுக்கு வருந்தனையும் படிப்படியாய்க் காய்ச்சிப் பச்சையான நிறப்பதார்த்தத்தைக் காரிக்கம்புடவையில் வடித்து வேறாயெடுக்கவும். வடித்த நீரை அல்புமின்[24]உறைவதற்கு 200 பாகை சூட்டுக்குவரக் காய்ச்சி, மறுபடியும்

---

1 Pupil. 2 Atropia. 3 Sedative, சாந்தனி 4 Anodyne, அனுசக்கினி. 5 Antispasmodic, ஸ்பசக்கினி. 6 Lactifuge. 7 Spasmodic asthma. 8 Crowing Inspiration 9 Chorea. 10 Epilepsy. 11 Neuralgia. 12 Hydrophobia. 13 Dysmenorrhoea. 14 Cancer. 15 Cataract. 16 Cornea. 17 Pupil. 18 Iris, இரிசு. 19 Iritis, இரிசுத்தபம். 20 Scarlatina. 21. Proof spirit. 22 Percolator. 23 Pharmacopoeia. 24 Albumen.

Digitized By Roja Muthiah Research Library

வடிக்கவும். அப்பால் வடித்த நீர் மெல்லிய பாணியாய் வருந்தனையும் நீர்மத்திகத்[1]தில் வறட்டி, முதலே வேறெயெடுத்துவைத்திருந்த பச்சையான நிறப்பதார்த்தத்தையும் சேர்த்து முழுவதையுந் திறமாய்க் கலக்கி, குளிகைக்குத் தகுந்த பதமான எசிருத்தாய் வருந்தனையும் 140 பாகைக்குக் கதிக்காத சூட்டில் வரட்டவும்.

**தேயம்.** காற்கிறேன் துவங்கி செயல்தோன்றுந்தனையும் படிப்படியாய்க் கூட்டி ஒரு கிறேன் வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். நயன ரோகங்களில் இது கண்ணுக்குப் பெரும்பாலும் இடப்படும்.

**பேலடனவன்கேன்.** Ointment of Belladonna. கொள். பேலடன வெசிருத்து எண்பதுகிறேன்; பூதலாடு[2] ஒருஅன்சு. எசிருத்துக்குச் சிலதுளி தண்ணீர் விட்டு அரைத்திளக்கி அப்பால் லாட்டைக் கூட்டித் திறமாய்ச் சேர்க்கவும்.

வாதம், நறல்சி[3] நோய்களுக்கும் வருத்தமான மற்று நோய்களுக்கு இது நல்ல பூச்சு. சிசிஞேத்தை[4], மூலமுளை, சலப்பையின் நோய்களுக்கு இது விடபத்திற்[5] பூசப்படும்.

**பேலடனபற்று.** Belladonna Plaster. கொள். பேலடனவெசிருத்து, இராளப்பற்று[6] வகைக்கு மூன்று அன்சு; திட்டசீது[7] ஆறு அன்சு. எசிருத்தையுஞ் சீதையுங் குழியம்மியில் இட்டு ஒன்றாயரைத்து, கரையாப்பதார்த்தம் அடைந்தபின் தெளிந்த நீரை இறுத்து சீதைத் திஸ்திலித்[8]தகற்றி பிறப்பதாகிய அலக்காலெசிருத்தை[9] நீர்மத்திகத்தில் முதலே உருக்கின ராளப்பற்றோடு கலந்து பற்றுக்குத் தகுந்தபதமாய் வருந்தனையும் ஓயாமற் கலக்கிக் காய்ச்சவும்.

ஈளை, அஞ்சீனபெக்தசு[10], காலிகபுறங்கீது[11] என்றநோய்களிலும் மற்றுஞ் சுவாச நோய்களிலும் இப் பற்று நெஞ்சுக்கு இடப்படும். வாத வீக்கம் வருத்தமான மற்றும் வீக்கங்களில் பொருத்துகளுக்கு இடப்படும்.

**வேரின் ரசிதங்கள். பேலடன லினிமேன்.** Liniment of Belladonna. கொள். பேலடனவேர், பருக்கன் தூளாக, இருபது அன்சு; பூரம் ஒரு அன்சு; திட்டசீது போதியது. வேர்த்தூளைச் சொற்பசீதால் நனைத்து அடைத்தபாத்திரத்தில் மூன்றுநாளூறவைத்து அப்பாற் சியந்தனி[12]யில் இட்டு, இன்னுஞ் சீதுவார்த்து பூரம் அமைந்த பாத்திரத்துக்குள்ளே அரைநாழிஒழுகுந்தனையும் வடிக்கவும்.

பேலடனவன்கேனை வழங்கக்கூடிய நோய்களுக்கு இதை வழங்கலாம்.

**அத்திரேபியம்.** Atropia. இது பேலடன வேரிலிருந்தெடுக்கப்படும் ஓர் அல்கலைவம்[13]. இதைக் குறிக்குஞ் சின்னம் கா$_{17}$ ஐ$_{23}$ நீஅ$_{3}$. லட்சணங்களாவன: இது நிறமற்ற, ஊசிபோன்ற கிரிஸ்தல்க[14]ளாகவிருக்கும். தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும். அலக்கால்[15] ஈதர்க[16]ளிற் சுறுக்குக் கரையும். தண்ணீரிற் கரைவுஅல்கலைத்தன்மையுள்ளதாய், பொன்திரிகுலோறிர[17]த்தோடு சேரும்போது வெண்மஞ்சள் அடையல்விழும். நயனத் துவாரத்[18]தை நல்லாய் விரிக்கும். பரமாணுவில் எரிக்கச் சாம்பல் உண்டுபடாது. இது ஓர் வீருன நஞ்சு.

---

1 Water-bath. 2 Prepared Lard. பூதஙெடீயம். 3 Neuralgia. 4 Chordee. 5 Perinaeum. 6 Resin plaster. 7 Rectified spirit. 8 Distill. 9 Alcoholic extract. 10 Angina pectoris. 11 Chronic Bronchitis. 12 Percolator. 13 Alkaloid. 14 Crystal, 15 Alcohol 16 Ether. 17 Terchloride of gold. 18 Pupil.

Digitized By Roja Muthiah Research Library

தன்மை உபயோகங்கள். பெலடனத்தைப் போலவே. ஆயினும் அதைப்பார்க்க இது மெத்த வீறுள்ளது. தேயம் கிறேனில் ஐம்பதிலொருபங்குமுதல் இருபதிலொருபங்கு வரைக்குக் கொடுக்கலாம். உள்ளே கொடுப்பதரிது. இது வீறுள்ளதாகையால் உள்மருந்தாகப் பெலடனத்துக்கு இளப்பாகும். நயன ரோகங்களிற் கண்ணுக்கு இடவோ நயந்தது.

அத்திறேபியத்தின் ரசிதங்கள். அத்திறேபியநீர். Solution of Atropia. கொள். அத்திறேபியம், கிறிஸ்தல்க[1]ளாக, நாலுகிறேன்; திட்டசீது[2], ஒருதிறாம்; திஸ்திலித்த தண்ணீர்[3] ஏழுதிறாம்; அத்திறேபியத்தைச் சீதிற்கரைத்து அதைப் படிப்படியாய்த் தண்ணீரோடு கலந்து ஒன்றாய்க் குலுக்கவும். ஒரு அன்சு நீரில் நாலுகிறேன் அத்திறேபியம் இருக்கும். தேயம் இரண்டு துளிமுதல் ஐந்து துளி. இது சிலவேளைகளிற் தோலுக்கடுக்க உள்ளேபுகட்டப்படும். நயனத்துவாரத்தை விரியப்பண்ணுவதற்கு இரண்டு துளிமுதல் ஐந்துதுளியைக் கண்ணுக்குள்ளே விடலாம். இந்த மருந்தைக் கவனத்தோடு வழங்கவேண்டும்.

அத்திறேபியவன்கேன். Ointment of Atropia. கொள். அத்திறேபியம், எட்டுக்கிறேன்; திட்டசீது அரைத்திறாம்; பூதலாடு[4], ஒரு அன்சு. அத்திறேபியத்தைச் சீதிற் கரைத்து லாட்டைக் கூட்டி நன்றாய்க் கலக்கவும். நறல்சி[5]க்கும் வருத்தமான மற்றுநோய்களுக்கும் வீறான பூச்சு.

அத்திறேபியசல்வசு. Sulphate of Atropia. கொள், அத்திறேபியம், நூற்றிருபது கிறேன்; திஸ்திலித்த தண்ணீர், நாலுதிறாம்; கிருச சல்வுரிக்கமிலம்[6], போதியது. அத்திறேபியத்தைத் தண்ணீரிற் கலந்து, அமிலத்தைப் படிப்படியாய்ச்சேர்த்து அந்த அல்கலோவங்[7]கரைந்து நீர் தடஸ்த[8]மாகுந்தனையுங் கலக்கவும். அப்பால் அதை 100 பாகைக்கு மேற்படாத சூட்டில் உலரவரட்டவும். அப்போது நிறமற்ற மாவாக வரும். இது தண்ணீரிற் கரையக்கூடியது. தண்ணீர்க்கரைவு சோதனைத்தாளுக்குத் தடஸ்தமாய் நிற்கும். அதைக் கண்ணில் விட, அத்திறேபிய நீரைப்போல் நயனத்துவாரத்தை விரியப்பண்ணும். இந்தமாவைப் பரமாணுவில் எரிக்கச் சாம்பல் விழாது.

இது வெளிப்பிரயோகத்துக்கே கூடியது. வீறான நஞ்சு.

அத்திறேபிய சல்வசுநீர். Solution of the sulphate of atropia. கொள். அத்திறேபிய சல்வசு, நாலு கிறேன்; திஸ்திலித்த தண்ணீர், ஒரு அன்சு. கரைக்கவும்.

அத்திறேபியநீரைப் போலவே இதை வழங்கலாம்.

## ஸ்திருமுனிப்பூடு. STRAMONIUM.

வாசம். இது யுறோபம் அடங்கலும் இமயமலை வரைக்குஞ் செய்கையற்ற நிலங்களில் உண்டாகின்றது. வட அமரிக்கத்திலுமுண்டாகின்றது.

வாகடபகுதி. 1 இலை. இது பருத்து வட்டித்து நெழிந்து விளிம்பில் ஆழிய பள்ளங்கள் உள்ளதாயிருக்கும். கடுமையான மணமுடையது. இலை வாடும்போது அதிக மணம் வீசும். அருவருப்பும் சொற்ப கைப்பும், உவட்டுமான சுவையுள்ளது. பூடு பூத்திருக்கையில் இலைகளைச் சேர்க்கவேணும்.

1 Crystal. 2 Rectified spirit. 3 Distilled water. 4 Prepared Lard. 5 Neuralgia. 6 Dilute sulphuric acid. 7 Alkaloid. 8 Neutral.



Digitized By Roja Muthiah Research Library

2 கோட்டை. இது கருங் கபில நிறமும் கொள்ளுவடிவும், தட்டையும் முரணுமானது. சுவை சொற்ப கைப்பும் அருவருப்புமானது. துவைத்தாலன்றி மணம் இல்லை. துவைக்க ஓர்வகையான கடுமணம் வீசும். இலை கொட்டை இரண்டினதுஞ் சத்து தற்யூறியம்[1] என்ற ஓர் அல்கலைவ[2]ப்பதார்த்தத்திலேயே இருக்கும்.

தன்மை. அனுடைன்[3], அந்திஸ்பசி[4], அதிதேயத்திற் கொடிய நஞ்சு.

உபயோகம். பெலடனத்தைப் போலவே. ஆயினும் இதின் செயல் அதைப்போல் நன்றாய் ஆராயப்படவுமில்லை, நிதானிக்கப்படவுமில்லை. ஸ்பசஈளையிலும் கசத்திலுண்டாகும் முட்டுத்தொய்விலும் சுவாசப்பையின் எம்விசீமத்தி[5]லும் சிலவகையான காலிக கதா[6]ரிலும் காய்ந்தஇலைத்தண்டுகளைப் புகைத்தல் அவதியான குணங்களைத் தணித்துக் கபத்தை வெட்டும். ஆயினும் இதை வழங்குவதிற் கவனம்வேண்டும். இதைக் கண்ணுக்கு இட்டாலும் அதிதேயமாய் உட்கொண்டாலும் நயனைத்துவாரம்[7] விரியும்.

தேயம். இலைத் தூளில் ஒரு கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். காய்ந்த இலைத்தண்டுகளிற் பத்துமுதல் முப்பது கிறேன் வரைக்குப் புகைக்கலாம். இரண்டுமுறையிலுஞ் சிறுதேயத்திற் துவங்கிப் படிப்படியாய்க் கூட்டுவதே புத்தி.

ரசிதங்கள். ஸ்திறமுனியேசிறத்து. Extract of Stramonium. கொள். ஸ்திருமுனிச்கொட்டை பருக்கன்தூளாக, ஒரு இறாத்தல்; ஈதர்[8] அரைநாழி அல்லது போதியது, திஸ்திலித்ததண்ணீர்[9], புரூவுசீது,[10]வகைக்குப் போதியது. ஈதரைச் சீசாவிலே கால்நாழி தண்ணீரோடு விட்டுக் குலுக்கி ஈதர் பிரிந்தபின் அதை வேறாய் இறுத்துக்கொள்ளவும். ஸ்திருமுனித்தூளைச் சியந்தனி[11]யில் இட்டுக் கழுவின ஈதரை அதின்மேல் மெல்ல மெல்ல வார்த்துத் தூளிலுள்ள எண்ணெய்யை நீக்கவும். சியந்தனியிலிருந்து ஒழுகிய ஈதரை எடுத்து அகற்றியபின் சியந்தனியில் சேஷமாயிருக்கிற ஸ்திருமுனித் தூளின் மேலே, சீதை வார்த்துத் தூளின் சாரம் வாங்கப்படுந்தனையும் மெல்ல மெல்ல ஒழுகவிடவும். இந்த ரஞ்சத்திலுள்ள சீதின் மிகுதியான பங்கைத் திஸ்திலித்தகற்றி, சேஷம் குளிகைக்குத் தகுந்தபதமாய்வருந்தனையும் அதை நீர்மத்திகத்தில்[12] வறட்டவும்.

தேயம். காற்கிறேனிற் துவங்கிப் படிப்படியாய்க்கூட்டி இரண்டு கிறேன்வரைக்குக் கொடுக்கலாம். இதை நாலுமடங்கு நிறையுள்ள லாட்[13]டோடுசேர்த்தால், காலிகவாதத்துக்கும், மற்றும் வருத்தமான நோய்களுக்கும் நல்ல, அனுடைன் பூச்சாகும்.

ஸ்திறமுனிரஞ்சர். Tincture of Stramonium. கொள். ஸ்திருமுனிக்கொட்டை இடித்து, இரண்டரை அன்சு; புரூவுசீது அரைநாழி. ஸ்திருமுனியைப் பதினைந்து அன்சு சீதில் அடைத்த பாத்திரத்தில் இரண்டுநாளூறப்போட்டு இடைகிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனியில் இட்டு நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழி தேறப் புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். பத்துமுதல் முப்பது மினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

---

1 Daturia. 2 Alkaloid. 3 Anodyne. அனுகககினி. 4 Antispasmodic. 5 Emphysema. 6 Catarrh. 7 Pupil. 8 Ether. 9 Distilled water. 10 Proof spirit. 11 Percolator. 12 Water bath. 13 Lard.

Digitized By Roja Muthiah Research Library

## *ஊமத்தை. DHATURA.

வாசம். இது இந்து அடங்கலும் தரிசு நிலங்களில் உண்டாகும். இதை வெள்ளூமத்தை என்றுஞ் சொல்வார்கள்.

வாகடபகுதி. இலையுங் கொட்டையும். 1 இலை வட்டிப்பாயும் கூரான நுனியுள்ளதாயும் சொற்பங் கருக்கான ஓரமுடையதாயுமிருக்கும். அடியிற் சமவீனமாய்ச் சுணையுமுள்ளது. கடுமையான நாற்றங்கொண்டது. கசக்கும்போதே நாற்றம் அதிகமாய் வீசும். 2 கொட்டை காலே அரைக்கால் இஞ்சு நீளமும் கொள்ளுச் சாங்கமும் தட்டை வடிவமுமாய்க் கருங் கபிலநிறமுள்ளது. கெட்ட கசப்பும் சற்றே காரமுமான சுவையுள்ளது. இலைகள் கொட்டைகள் இரண்டின் சத்து தற்றூரியம்[1] என்ற ஓர் அல்கலேவு[2] பதார்த்தத்திலேயே இருக்கும்.

தன்மை. உபயோகம். தேயம். ஸ்திருமுனியைப் போலவே. துவைத்த இலைப்பூச்சுகளும், இடித்த கொட்டையை ஊறப்போட்டெடுத்த எண்ணெய்களும், வாதவீக்கம், கட்டுக் கழலைகள் குல்மங்க[3]ளின் வருத்தங்களைத் தணிப்பதற்கு மிக நயமாகும். பெருந்தேயத்தில் இது நஞ்சு. ஆதலாற் சுதேசிகள் சிலவேளை கொலைசெய்யும்நோக்கத்துக்காக இதைவழங்குவார்கள். (56)

ரசிதங்கள். ஊமத்தை ரஞ்சம். Tincture of Dhatura. கொள். ஊமத்தங்கொட்டை, இடித்து இரண்டரைஅன்சு; புரூவுசீது[4]அரைநாழி. அடைத்தபாத்திரத்தில் ஏழுநாளைக்கு ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கி, பிற்பாடு சீலையில் வடித்துப் பிழிந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும். அல்லது ஸ்திருமுனி ரஞ்சத்தைப்போற் சியந்தனி[5]க்கவும்.

தேயம். பத்துமினி[6]மிற் தொடங்கிப் படிப்படியாய்க் கூட்டி இருபது முப்பது மினிம் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம்.

[வாறிங்கு பண்டிதர், இந்துதேசவிசிகங்களில் ஊமத்தை ரஞ்சத்தைச் சிலவருஷங்களாகக் கொடுத்து அவினுலுண்டாகக்கூடிய செரதீவ[7]நாகதிக[8] தன்மைகள் எல்லாம் இதனாலுமுண்டாகிறதென்று கண்டார். அவின் விலைபெற்ற சரக்காதலாலும் இந்த ரஞ்சத்தைச் சொற்ப செலவோடு செய்துகொள்ளலாமாதலாலும் இதைப் பாவிப்பதாற் செலவு மிகக் குறையும். இதின் தேயமோ அந்தந்தஆளுக்குத்தக்கதாய் பிரமாணப்படுத்தப்படவேண்டும். சிறு தேயத்திற் துவங்கிக் காரியத்துக்குத்தக்கதாய்க் கூட்டிக்கொடுப்பது நல்லது. இதில் இருபதுதுளி, அவினில் ஒரு கிறேனுக்குச் சரியென்றுங் காணப்பட்டது.]

ஊமத்தையேசிறுத்து. Extract of Dhatura. கொள். ஊமத்தங்கொட்டை பருக்கன் தூளாக, ஒரு இருத்தல்; ஈதர்[9] அரைநாழி அல்லது போதியது; புரூவுசீது, திஸ்திலித்த தண்ணீர்[10], வகைக்குப் போதியன. ஸ்திருமுனியெசிறுத்துச் செய்வதுபோல் இதையுஞ் செய்யவும்.

தேயம். காற்கிறேனிற் துவங்கிப்படிப்படியாய்க் கூட்டி ஒன்றரைக்கிறேன்வரைக்கு நாள்மூன்றுமுறைகொடுக்கலாம். பெலடனவெசிறுத்[11]துக்கு இது பதிலாகும்.

[கொட்டைகளிலன்றி இலைகள் தளிர்களிலும் அயசியமசெசிறுத்தைப்

1 Daturia. 2 Alkaloid. 3 Node. 4 Proof-spirit. 5 Percolate. 6 Minim. 7 Sedative. 8 Narcotic. 9 Ether. 10 Distilled water. 11 Extract of Belladonna.

(56) அனுபந்தர்பார்.

Digitized By Roja Muthiah Research Library

போலும் ஓர் எசிறுத்தைச் செய்து வழங்கலாமென்று பிதி வைத்தியர் சொல்லியிருக்கிறார். இந்த எசிறுத்தில் அவர் பல மாதிரிகள் செய்து அவற்றில் ஒரு மாதிரியைச் சென்னைபட்டண சாதாரண விசிகத்துக்கும் அனுப்பினார். அங்கிருந்த பிளக்லக்கு வைத்தியர் அதை இரண்டு கிறேன் தேயமாகக் கசரோகத்துக்குக் கொடுத்து அதினால் முட்டுத்தணிந்ததென்றும், பெலடனவெசிறுத்தில் மூன்றிலொருபங்கு கிறேன் போலவே இது சேஷ்டிக்கிறதென்றும் அறிவித்தார். இந்த மருந்தின் செயலைப்பற்றிப் பிளக்லக்கு வைத்தியர் கண்ட அனுபவத்தைத் தனது சுய அனுபவம் நிச்சயப்படுத்துகிறதென்றும் பிதி வைத்தியர் சொல்லி, வாகடத்துக்குரிய எசிறுத்தைப்பார்க்க இதை அதிதேயத்திற் கொடுக்கக்கூடியதாயிருப்பது நல்லதென்றும், அறிவித்திருக்கிறார்.]

**ஊமத்தம்பற்று.** Dhatura Plaster. கொள். ஊமத்தையெசிறுத்து, மூன்று அன்சு; சபுப்பற்று[1], ராளா[2]ப்பற்று வகைக்கு ஒன்றரை அன்சு. பற்றுகளை ஸ்தீமின்[3] சூட்டிலாவது, நீர்மத்திகத்தி[4]லாவது உருக்கி, பிறகு ஊமத்தையெசிறுத்தைக் கூட்டி நன்றாய்ச் சேர்க்கவும்.

வாதநோய்க்கும் காலிகமான வருத்தமுள்ள மற்றுநோய்களுக்கும், இது நல்ல பூச்சுமருந்து. ஈளையிலும் காலிக சுவாச வியாதிகளிலும் நெஞ்சுக்குப் பூசவும் உத்தமமாம்.

**ஊமத்தம்பாப்பை.** Dhatura Poultice. கொள். துவைத்த பச்சை ஊமத்தமிலையிலும் அரிசிமாவிலும் சமபங்கு. அவற்றைப் பாப்பையாக்குவதற்குத் தண்ணீர் போதியது.

குல்மம்[5] பொருத்திலுண்டாகும் வாத வீக்கங்கள், வருத்தமான கழலைகள், வெளிமூலமுளைக்கு இட நல்ல மருந்து. இப்பூண்டின் நஞ்சான சத்தை உறிஞ்ச மோசம்நேரிடுமாகையால் தோல் வழுந்தப்பட்ட அல்லது புண்பட்ட இடங்களுக்கு இதை இடப்படாது.

### அவாகடச்சரக்குகள். Non-officinal.

**கருவூமத்தை.** Dhatura fastuosa. இது தாவர இலட்சணங்களில் மாத்திரமல்ல அவுஷததன்மையிலும் வெள்ளூமத்தையைப் போன்றது. அதிலும் இது வீறு கூடினதென்று எண்ணப்பட்டாலும் அதற்கு அத்தாட்சியில்லை. இவைகள் இரண்டுஞ் சமமான நாகதிகம்[6], அனுடைன்[7] களாக இருக்கவேண்டும். ஆயினும் இதை உறுதிப்படுத்துவதற்கு ஆராய்வுகள் தேவை. கருவூமத்தை யிலையைப் புகைக்க, ஈளை நோயின் முட்டும் அவதியும் உடனே தீருகிறதைக் கண்டோமென்று அஸ்வல்டு பண்டிதர் அறிவித்திருக்கிறார்.

[தென்னிந்துவின் கடைகளில் விலைப்படுகிற சில நெற்றுகளையும் சிறுக்கொட்டைகளையும் மராடிமொக்கு[8] என்ற தமிழ்ப் பெயரால் ஏன்ஸ்லி என்பவர் விபரித்திருக்கிறார். அவைக்குச் செரதீவ[9]தன்மையும் சற்றே வெறித்தன்மையுமுண்டாம். வைற்று பண்டிதர் அவைகளைச் சோதித்து அவை ஊமத்தையின் மலராத பூவுக்குள்ளடங்கிய பகுதிகள் என்று கண்டார்.]

---

1 Soap plaster. 2 Resin. 3 Steam. 4 Water-bath. 5 Nodes. 6 Narcotic. 7 Anodyne. 8 Maratia Mooghoa. 9 Sedative

Digitized By Roja Muthiah Research Library

## அயசீயமசுப் பூடு. HYOSCYAMUS, HENBANE.

**வாசம்.** இது யூரோபம் அடங்கலும் மேற்காசியத்தில் மேற்கிமையமலைவரைக்குந் தரிசுநிலங்களில் உண்டாகும் மருந்துக்காக இந்துவிற் செய்யப்படுட. (57)

**வாகடபகுதி.** காய்ந்த இலை. பூக்கள் மூன்றத்திருபங்கு மலர்ந்திருக்கையில் இலை சேர்க்கப்படும். இதின் நிறம் மங்கலான வெண் பச்சை. விளிம்பில் அறவுள்ளது; பசைப்பும் சுணையுமுடையது. பச்சைப்பூடு கெட்ட மணமும் சற்றே காரப்பான சுவையுமுடையது அது காய மணமும் சுவையுங் குறைந்துவிடும். பச்சைச் சாற்றைக் கண்ணுக்குள்ளே ஒழுக்கிவிட நயனை[1]த்துவாரம் விரியும். அயசீயமீன்[2] என்ற அல்கலைவ[3]த்திலேயே இதின் விசேஷ சத்திருக்கும்.

**தன்மை.** செரதீவம்[4], அனுடைன்[5], அந்திஸ்பசி[6].

**உபயோகம்.** நரம்பழற்சி மனக்கிளர்ச்சி, நித்திரையின்மைகளுக்கும், பெலவீனம் அல்லது ஸ்தேரி[7] யோடு கூடிய நெஞ்சிடிப்புகளுக்கும் இது நயந்தது. மேலும் நுறல்சி[8] நோய்கள் வாத நோய்களுக்கும் வருத்தமுள்ள கோளவீக்கங்களுக்கும், அழன்ற கன்சர்ப்[9] புண்கள் மூலமுளைகளுக்கும் இது வெளிக்கு அணைக்கப்படும். நயன ரோகங்களில் இதைக் கண்ணுக்குளிட நயனைத்துவாரத்தை விரிவிக்குமாகையால் அவைக்கு இது உபயோகமானது.

**தேயம்.** இலையை மாவாக்கி ஐந்து கிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

**ரசிதங்கள். அயசீயமசிரஞ்சம். Tincture of Hyoscyamus.** கொள். அயசீயம்இலை, பருக்கன் தூளாக, இரண்டரை அன்சு; புரூவுசீது[10] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் அயசீயமசிலைத் தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[11]யில் இட்டு நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். பிறகு சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழி தேறப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** இருபது மினிம் தொடங்கி அறுபது மினிம் வரைக்குக் கொடுக்கலாம். தேவைக்குத் தக்கதாய்த் திரும்பத் திரும்பக் கொடுக்கலாம்

**அயசீயமசேசிறத்து. Extract of Hyoscyamus.** கொள். பச்சையான அயசீயமசிலையும் இளங்கொப்புகளும் நூற்றுப் பன்னிரண்டு இறாத்தல். குழியம்மியிற் துவைத்துச் சாற்றைப் பிழிந்து, மெல்ல மெல்ல 130 பாகை வரைக்குக் காய்ச்சி, காரிக்கம்புடவையில் வடித்துப் பச்சையான நிறப்பதார்த்தத்தை வேறுயெடுத்துக்கொள்ளவும். வடித்த நீரிலுள்ள அல்புமின்[12]உறையத்தக்கதாய் அதை 200 பாகை வரைக்குக் காய்ச்சி வடித்து, வடித்தநீர் மெல்லிய பாணியாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில் வறட்டி முன்னமே வேறுயெடுத்துவைத்திருந்த பச்சையான நிறப்பதார்த்தத்தையுங்கூட்டி முழுவதையுந் திறமாய்க் கலக்கி, அந்த எசிறுத்துக் குளிகைக்குத் தகுந்தபதமாய் வருந்தனையும் 140 பாகைக்கு மேற்படாத சூட்டில் வறட்டவும்.

**தேயம்.** ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். வரு

---

1 Pupil. 2 Hyoscyamin. 3 Alkaloid, 4 Sedative, சாந்தனி. 5 Anodyne, அனுசக்கினி. 6 Antispasmodic. 7 Hysteria. 8 Nuralgia 9 Cancer. 10 Proof spirit. 11 Percolator. 12 Albumen.

(57) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

த்தமான நோய்கள் பலவற்றுக்கு இது நல்ல அணைப்பு. இதைக்கட்புருவத்தி ற் பூச அல்லது தண்ணீரிற் கரைத்துக் கண்ணுக்குள்ளே விட நயனத்துவா ரம் விரியும்.

[அயசீயமசுக் கொட்டை, குராசானியோமம் என்ற நாமத்துடன் தென் னிந்துவின் கடைகளில் வரும். இது துருக்கைதேசத்திலிருந்து வருகிற தாம். விசாதம்[1]என்ற பைத்தியத்தில் மனதைச் சாந்தப்படுத்தி நித்திரையை வருவித்து மலமிளகச்செய்வதற்கு மகமதிய வைத்தியர் அதைக் கொடுப் பார்கள்.]

## புகையிலை. TOBACCO.

**வாசம்.** உஷ்டண அமரிகத்தில் இது உண்டாகும். பூமியின் உஷ்ட ண பகுதிகள் எங்கும் இது செய்கைபண்ணப்படும்.

**வாகடபகுதி.** காய்ந்த இலை. இது பருத்துப் புள்ளிவிழுந்து கருமைநி றமாயும் நீளவட்டமாய் நுனியிலொடுங்கியும் குறுஞ் சுணைகள் நிறைந்ததா யுமிருக்கும். ஒருவகையான கடுமணமும் உவட்டிப்பும் கார்ப்புமான கை ச்சற்சுவையுமுடையது. பதாசி[2]நீரிற்போட்டுத் திஸ்திலிக்க[3] ஓர் அல்கலை[4]நீர் பிறக்கும். அதின் மணம் நிகுதின்[5] மணம்போன்றிருக்கும். பிலாடின துவிகுலோறிர[6]மும், மாசக்காயிரஞ்ச[7]முங் கூட்ட அடையல் விழும். புகை யிலையின் சத்து நிகுதின் என்ற நீர் அல்கலைவ[8]த்திலும் நிகுதியானின்[9] என்ற அத்திர[10] எண்ணெயிலுமே இருக்கும்.

**தன்மை.** வீறுன செரதீவ[11]மும், அந்திஸ்பசி[12]யும். அதிதேயத்தில் மயக்க முற்றி நஞ்சு.

**உபயோகம்.** ஏர்ப்பு (58) வயிற்றுநீர்க்கோவை, ஸ்பசநோய்கள், சல அடைப்புகளுக்கு இது கொடுக்கப்படும். மேலுந் தசையை நுகையப்பண் ணி, இறுகினவளி[13]யைத் தள்ளிவிடுவதற்கும்,விலகினபொருத்தை எடுத்துவி டுவதற்கும் இது துணையாகக் கொள்ளப்படும். ஆயினும் இதால் நரம்புமண் டலத்தில் அதி களையுண்டாவதால் உள்ளே கொடுக்கப்படுவதற்கு இது உவ ந்ததல்ல. மேலும், வாத வீக்கம், சிவ்லிசு[14] வீக்கம், சருமரோகங்களின் அழ ற்சியையும் வருத்தத்தையும் தணிப்பதற்கு இது அணைக்கப்படும். ஆயினும் இதை வழங்குவதற்கு இதின் நாற்றந் தடையாகும். இதிலும் நயந்த சமவீ றுள்ள வேறு மருந்துகள் உண்டு. ஈளை, ஸ்பச இருமல், நரம்பழற்சி நித்தி ரையின்மைகளில் புகையிலையைப்புகைப்பதால் சிலவேளை நயமுண்டாகும்.

**ரசிதங்கள்.** புகையிலையேனிமம். Enema of Tobacco. கொள். பு கையிலை, இருபது கிறேன்; கொதிநீர் எட்டு அஞ்சு. மூடிய பாத்திரத்தில் அரைமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

இறுகின வளிநோயிலும்,வயிற்றிலுண்டாகும் ஸ்பச[15]நோய்களிலும்,ஸ்பச சுருக்காலுண்டான சலஅடைப்பிலும் மாத்திரமே இது அரிதாய் வழங்கப் படும். வழங்கும்போது மெத்தக் கவனம்வேண்டும். தொடக்கத்திற் கிறே ன் இருபதுக்குக் கூடக் கொடுக்கப்படாது.

---

1 Hypochondriasis. 2 Liquor potash. 3 Disti. 4 Alkali. 5 Nicotin. 6 Bichloride of platinum. 7 Tincture of galls. 8 Alkaloid. 9 Nicotianin. 10 Volatile. 11 Sedative. 12 Antispasmodic. 13 Strangulated hernia. 14 Syphilis. 15 Spasmodic.

(58) அனுபர்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

## துல்சமாரம். DULCAMARA.

வாசம். இக்கொடி யுரோபத்திலும் மத்திம ஆசியத்திலும் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்த இளங் கொப்புகள். இலைகள் உதிர்ந்தபின் இவைகள் சேர்க்கப்படும். திரண்டு லேசாயும் உள்ளே குழாயாயும் தென்னீர்க்களவு பருமையாயுமிருக்கும். முதற் கசந்து பிறகு இனிக்கும்.

தன்மை. இது அல்திறவம்[1], அமுரிதி[2], சுவேதனி[3]யாகும்.

உபயோகம். காமாலைத் தேகத்தோடு சேர்ந்த சிவ்விசு[4]க் கும் காலிசவாதத்துக்கும், விசேஷமாய்ச் சொறிபசி[5], குஷ்டம், எக்சீமா[6] முதலிய அடங்காத சருமரோகங்களுக்கு இது கொடுக்கப்படுமாயினும் நயஞ் சந்தேகம்.

ரசிதம். துல்சமாரவின்வூசம். Infusion of Dulcamara. கொள் துவைத்த துல்சமாரம், ஒரு அன்சு; கொதிநீர், பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் மூன்று முறையும் நெருக்கியுங் கொடுக்கலாம்

[பச்சையான நன்னாரிவேருள்ள இந்துதேச வைத்தியனுக்கு இச்சரக்குத் தேவையில்லை]

## மிளகாய். CAPSICUM.

வாசம். பூமியின் உஷ்டணப்பகுதி எங்கும் இது உண்டாக்கப்படும்.

வாகடபகுதி. மிளகாய்ச் செத்தல். இது ஐந்து முதல் எட்டு லீன் நீளமும், இரண்டு லீன் பருமையுமானது; நேரியது; அடி விசாலமும் நுனிகூருமானது. அழுத்தமும் மினுக்கமுமாய்ச் சற்றே சுருக்குவிழுந்திருக்கும். தோல் சவ்வு போன்றது. வெண் சிவப்புநிறமும் கடுமையான கார்ப்புச்சுவையுமுடையது. இதின் சத்து கப்சிசின்[8] என்ற ராளப்[9]பதார்த்தத்திலேயே இருக்கும்.

தன்மை. கார்ப்பான ஸ்திமுலம்[10], தாளிகமாயிட்டால் ருபிவாஷன்[11].

உபயோகம். அசத்துவகுன்ம[12]த்திலும் நாறலான அல்லது சீரணியாத பதார்த்தம் குடலிலிருப்பதாலுண்டாகும் கழிச்சலிலும், பித்த சுரத்திற் தோன்றும் வாந்தியிலும் இதால் நயங்காணுகின்றது. மேற்கிந்து தீவகளில் ஸ்காலதினா[13]த்துக்கு இது பேர்பெற்றிருக்கின்றது. பலவகையான சைனன்கியென்ற தொண்டை நோயிலும் குரல்நாண்கள் இளகுவதைப்பற்றியுண்டாகும் குரற்கம்மல் குரலின்மைகளிலும் கார்கில்களுக்கு இது நல்ல கூட்டு. மிளகாய்ச் செத்தலைக் களியாய் அரைத்து எதிரழற்சியாயும் ருபிவாஷனாகவும் இட்டாற் சீக்கரத்திற் சேஷ்டிக்கும். கடுகுப்பற்றுக்குச் சேர்க்க அதின் சத்து மெத்தக்கூடும்.

தேயம். ஒரு கிறேன் முதல் நாலுகிறேன் வரைக்குக் கொடுக்கலாம். இதைத் தனியே கொடுப்பதரிது.

ரசிதங்கள். மிளகாயிரஞ்சம். Tincture of Capsicum. கொள். இடித்த மிளகாய்ச் செத்தல், முக்கால் அன்சு; திட்டசீது அரைநாழி. அடை

---

1 Alterative, பரிணாமி. 2 Diuretic, திடிபுநேசி. 3 Diaphoretic. 4 Syphilis. 5 Psoriasis. 6 Eczema. 7 Line. 8 Capsicine. 9 Resinous. 10 Stimulant, தீவனி. 11 Rubifacient, சோணதி 12 Atonic. 12 Scarlatina.

த்த பாத்திரத்தில் மிளகாயைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப் போட்டு இடைக்கிடை கலக்கவும். அப்பாற் சியந்தனியிலே இட்டு அடைசி, நீர் ஒழுகித்தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிய விடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரை நாழிக்குப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

**தேயம்.** பத்து முதல் இருபது மினிம். ஸ்திமுல கார்கில்[1]களுக்கும் மற்றுங் கார்கில்களுக்கும் இது நல்ல கூட்டு. உதாரணமாக மிளகாயிரஞ்சம் ஒருதிறும்; சின்கனதிகாக்தம்[2], ஆறு அன்சு,கல.

## அவாகடச் சரக்குகள். Non-Officinal.

**மலையயசீயமஸ்பூடு.** Hyoscyamus insanus. இது பெலுகிஸ்தானில் உண்டாகும் ஓர் பூடு. அங்கே இது குசீபுங்கு[3] அல்லது மலைக்கஞ்சா[4]என்று வழங்கும். இது வீறுன நஞ்சு. அமார்க்கமான பக்கிரிகள் இதைச் சுருக்கமாய்ப் புகைப்பார்களாம். கொலைக்கும் வழங்கப்படுமாம். தொண்டை வரட்சியும் இறுக்கமும் வேகமான அலட்டுமே இதாலுண்டாகும் பிரதான குணங்கள். இந்தப் பூண்டையும் இதின் தன்மைகளையும் பற்றி இன்னும் அறிவது நலம்.

**ஸ்கபோலிப்பூடு.** Scopolia lurida. இது இமய மலையிலுள்ளது. 1824 ம் ஆண்டு யுரோபத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே தோட்டங்களில் உண்டாக்கப்படுகின்றது. வெண்பச்சை நிறமான இதின் இலைகள் புகையிலை மணமுடையன. கசக்கினல் மணம் அதிகம். ஒரு பங்கு இலையை எட்டுப்பங்கு அலக்கா[5]வில் ஊறப்போட்டுச் செய்த ரஞ்ச[6]த்தைச் சில நோயாளருக்கு உள்ளே கொடுத்தபோது கண்ணின் நயனைத்துவாரம்[7] மெத்தவிரிந்தது. இரண்டு பேருக்குச் குருடுண்டாகி, இந்த மருந்தை நிறுத்த மாறிப் போயிற்று. ரஞ்சத்தில் இருபது துளியே ஒரு நாள்வரையிற் கொடுக்கப்பட்ட பெருந்தேயம். இதைப்பற்றிய ஆராய்வு இன்னும் வேண்டும்.

**கண்டங்கத்தரி.** Solanum Jacquini. இது இந்துக்களுக்குள்ளே அதி கீர்த்திபெற்ற மருந்துப்பூடுகளுள் ஒன்று. எக்ஸ்பெக்துறம்[8], அமுரிதி[9], முதலிய தன்மைகள் இதற்குண்டாம். கதார்[10] காய்ச்சல் நோய்களுக்கும், ஈளை, கசம் முதலியவற்றுக்கும் அதிகமாய்க் கொடுக்கப்படும். வில்சன் பண்டிதர் சொல்லியிருக்கிறபடி இதின் பூ, காய், தண்டுகள் எல்லாம் கைப்புள்ளனவன்றி காமினதியுமாம். நீர்ப்பருவோடு கூடிய கால் எரிவுக்கு இதுகொடுக்கப்படுகிறது. இதின் கொட்டையை எரித்துக் காட்டும்புகை பற்கொதியை மாற்றுமென்று பெருங் கீர்த்தியாய்ப் பேசப்படுகிறது. சுதேசிகள் இதை வழங்கும் முறையைப்பற்றி மூறெட்டு வைத்தியர் விபரமாய்ச் சொல்லியிருக்கிறார். இது உமிழ்நீரை அதிகமாய்ப் பெருகப்பண்ணிப் பற்கொதியைத் தணிக்கிறதுபோலும்.

**கறுப்புமணத்தக்காளி.** Solanum nigrum. இப்பூண்டின் இலையிற் செய்த நிகாக்தத்தையும் நீரெசிறுத்தையும் பற்றி முடீன்செறீவு பேசியிருக்கிறார். நீரெசிறுத்தைத் திறும் தேயத்தில் நாள்மூன்றுமுறையாக நீர்க்கோவைநோய்களுக்குக் கொடுத்து நயங்கண்டதாம். இதின் செயல் அமுரிதியும் விரேசனியுமே. **சோலானவிஞ்சேட்டப்பூடு,** Solanum incertum.

---

1 Gargle. 2 Decoction of Cinchona. 3 Kohi-bung. 4 Mountain hemp. 5 Alcohol. 6 Tincture. 7 Pupil. 8 Expectorant, கிசேட்கனி. 9 Duiretic. 10 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

இதின் இலைச்சாறு குழந்தைகளின் அக்கரத்துக்கு உத்தமமான மருந்தென்று சாற்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். சொலானப்பூண்டிலே மூள்ளி S. Indicum, தூதுளை S. Trilobatum, மலைச்சுண்டை S. Verbascifolium, ஆனைச்சுண்டை S. Ferox. என்று வேறுஞ் சில இனங்களைச் சுதேசிகள் மருந்தாக வழங்குகிறார்களென்று, ஏன்ஸலி, துறூறி முதலியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் இவைகள் முக்கியமானவைகளல்ல.

புனீர்ச்செடி. Withania coagulans. இது பெலுக்கிஸ்தானிலும் சிந்துவிலும் மேட்டுநிலங்களில் வழக்கமாயுள்ள சிறுச்செடி. அங்கே இது புனீர்[1]என்று சொல்லப்படும். இது கற்றைகளாக இருக்கிற நுண்ணிய புள்ளடிச்சாங்கமான மயிரால் மூடப்பட்டிருக்கும். முழுச்செடிக்கும் இச் சாம்பல் நரைநிற மயிர் போர்வையாகும். இந்தச் சாம்பல்நிறத்தினாற் செடியைத் தூரத்தில்நின்று மட்டிடலாம். இளந் தளிர்களோ நீலநிறமாய்த் தோற்றும். செடியின் எப்பகுதியிலாவது பச்சைநிறந் தோற்றாது. பழங் கபிலமும் மினுக்கமுமானது. பச்சையாயிருக்கையில் அது வாந்திமருந்தாக வழங்கப்படும். காய்ந்த வற்றல்கள் சிந்துவின் கடைகளில் புனீரேலம்[2] என்னும் பேரோடு விலைப்படும். அரபி பார்சிய பதார்த்தசார ஆக்கியோர் கக்கிஞ்சு[3] என்று சொல்லியிருப்பது இதைத்தானென்று ஸ்தாக்சு வைத்தியர் எண்ணுகிறார். இந்த வற்றல்கள் அசீரணத்துக்கும் வாயுக்குத்துக்கும் குடலின் மற்றும் வியாதிகளுக்கும் வழங்கப்பட்டு சிந்து, பெலுகிஸ்தான், அபுகானிஸ்தான்களில் வெகு கீர்த்திபெற்றன. இதைத் தனியவாவது சிந்துவிலுள்ள உத்தமமான கைப்புத்தொணிகமான ராசையதாவரத்தின் இலைகள் தளிர்களோடாவது ஊறப்போட்டு இன்பூசமாக்கிக் கொடுப்பார்கள். பழவற்றல்கள் பெலுகிஸ்தான், அபுகானிஸ்தான் அடங்கலும் மிகுதியாய்ப் பாலை உறையப்பண்ணும் பிரையாக வழங்கப்படும்.

அமுக்கிரா. Withania somnifera. இது இந்துவின் மிகுதியான பகுதிகளிலுள்ள பூடு. இதற்கு நாகதிக[4] அமூரிதி[5]முதலிய தன்மைகள் உண்டென்பார்கள். இதின் கிழங்கு தென்னிந்துவில் அமூலங்கிழங்கு என்று விலைப்படும். இது ஜென்சன்[6]னின் தோற்றமுடையது. ஆயினும் இதற்குச் சுவை மணம் மெத்த இல்லை. கிழங்கைத் தண்ணீர் விட்டு அரைத்தும் இலையைத் துவைத்தும் பிளவை, புண்கள், நோவான வீக்கங்களுக்கு அப்புவார்கள். வாத நோய்களுக்கும் வாயுப்பொருமலோடுகூடிய குன்மத்துக்கும் இக்கிழங்கு நல்லதென்பது ராசபுத்தர்களுடைய எண்ணம். இக்கிழங்கு கனலானதென்றும், விசர்க்கங்கள் எல்லாவற்றையும் அதிகப்படுத்தக்கூடியதென்றும் மேலே சொன்னவைகளை ஆராய்ந்தெழுதின ஏர்வின் பண்டிதர்தாமே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். இது விசேஷமாய்ப் பிருக்கங்க[7]ளை அருட்டிவிடுமாம். ஆயினும் தாம் பரீட்சித்தஅளவில், இதின் அமூரிதித்தன்மை மெத்தவல்லவென்று அஸ்வல்டு பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

---

1 Punir. 2 Punir Cardamoms. 3 Kakinj. 4 Narcotic. 5 Diuretic. 6 Gentian. 7 Kidneys.



Digitized By Roja Muthiah Research Library

## பிளாந்தச்சினியங்கள்.

## PLANTAGINEAE.

### *இஸ்பகூல்ச்செடி. ISPAGHUL.

வாசம். பார்சியம்; இந்துவிலும் செய்யப்படும்.
வாகடபகுதி. விரை. இது நீள வட்டமும், கவிவும், அரைக்கால் இஞ்சு நீளமும், சாம்பல்நிறமுமானது. தண்ணீரிற் போடச் சுவையற்ற பாணியை அதிகமாய்க் கக்கும்.
தன்மை. நிமல்சம்[1], சொற்ப துவர்.
உபயோகம். சுரநோய்கள், கதார்[2]நோய்கள், பிருக்க[3] நோய்களுக்கு இது உதவும். ஆயினும் தியரீயம்[4], திசந்தெரி[5]களுக்கு இது உவப்பானது. இந்தக் கொட்டையை இடித்துத் தண்ணீரிற் குழைத்தால் சாந்தமான நல்ல களியாகும்.
தேயம். இரண்டு மூன்று திரும்.
ரசிதம். இஸ்பகூல்த்திகாக்தம். Decoction of Ispaghul. கொள். இஸ்பகூல் விரை, இடித்து இரண்டு திரும்; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி வரைக்கு அவித்துச் சீலையில் வடிக்கவும்.
தேயம். இரண்டு முதல் நாலு அன்சு வரைக்கு நாள் மூன்று நாலுமுறை கொடுக்கலாம்.
[கதார் நோய்கள் பிருக்க நோய்களுக்கு இந்தத் திகாக்தம்[6] உவந்தது. தியரீயம், திசந்தெரிகளுக்கோ, காலஞ்சென்றுபோன துவைனிங்குவன்பவரால் சொல்லப்பட்ட பின்வருமுறை நயந்தது. அவர் சொல்வதாவது; வெகு காலமாக இந்துவில் வசித்த யுரோப்பருக்கு உண்டாகுங் காலிக[7]தியரீயத்துக்கு நிமல்சங்களும் அவைக்குப் பின் மெல்லிய தொணிகங்க[8]ளும் கொடுப்பதால் நயங்காணும். இதற்கு மற்றெந்த மருந்தைப்பார்க்க இஸ்பகூல் விரை உத்தமம். வளர்ந்தவர்களுக்கு இதில் இரண்டரைத்திருமை அரைத்திரும் கற்கண்டோடு கலந்து கொடுப்பதே தேயம். இந்தக் கொட்டைகளை முழுதாயும் விழுங்கலாம். அவை குடல்நெடுகச் செல்லுகையில் தண்ணீரை உறிஞ்சிப் பொருமிக் குடலின் நடுப்பகுதி கீழ்ப்பகுதிகளுக்குச் செல்லுகையில் ஓர் பாணியைக் கக்கும். இறுதியிற் செல்லும்வரைக்கும் பிசுபிசுப்புத் தன்மையுள்ளவைகளாகவே இருக்கும். கழிச்சலின் நெருக்கத்தை அனுடைன்[9]எனீமத்[10]தாலும் உணவைச் சொற்பமாய்க் கொடுப்பதாலும் மறித்துக்கொண்டால் இந்தக் கொட்டைகளின் பாணித்தன்மை திறமாய்த் தெரியும். சொற்பமாய்க் கருக வறுப்பதால் இவை சற்றே துவர்த் தன்மையும் தொணிகத்தன்மையுமடையுமாம். யுரோப்பருக்கும் சுதேச பிள்ளைகளுக்குமுண்டாகும் நெடுகின கழிச்சலில் வேறனேக மருந்துகள் வாயாமற்போக இந்த மருந்தாற் சிலவேளை சுகமுண்டாகும்.

1 Demulcent. 2 Catarrh. 3 Kidney. 4 Diarrhoea. 5 Dysentery. 6 Decoction. 7 Chronic. 8 Tonic. 9 Anodyne. 10 Enema.

Digitized By Roja Muthiah Research Library

## வைதுலக்காசியங்கள்.

## PHYTOLACCACEAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

மணற்கீரை. Gisekia pharnaceoides. இது இந்துவின் மழை ஒறுத்த பகுதிகளிற் கருநாடகந் தொடங்கிப் பஞ்சாப்பு, அயோத்தி வரைக்கு முள்ள பூண்டு. இது நீனிய[1]ப்புழுவைக் கொல்ல நல்ல மருந்தென்று கற்பித்தான் லவுதர் கண்டறிவித்தார். இலை குழை காய் சமூலத்திலும் பச்சையாய் ஒரு அன்சு எடுத்துப் பானமாய் வரக்கூடிய அளவு தண்ணீர் விட்டு அரைத்துக் கொடுக்கட்டாம். இதை நாலுநாளுக்கொருதரம் மூன்று முறையாக வெறுவயிற்றிற் கொடுக்கவேணும். இதை லவுதர் கற்பித்தான் மெத்த மதிக்கிறார். ஆயினும் இதின் தன்மையைப்பற்றி வைத்தியசாட்சி இன்னும் அகப்படவில்லை.

## சல்சுலாசியங்கள்.

## SALSOLACEAE.

அவாகடச் சரக்குகள். Non-Officinal.

பேருமரி. Salicornia Indica. சிற்றுமரி. S. Brachiata. நீருமரி. Suaeda nudiflora. இப்பூண்டுகள் இந்துவின் கடற்கரைகளில் மிகுதியாயுண்டு. இவற்றை எரிக்க,பரில்லம்[2] என்ற அசுத்தமான சோடம்[3] அதிக அளவாய் வரும். இது உலகம் முழுவதற்கும் சவுக்காரமும் கண்ணாடியும் செய்யப் போதியதென்பது ரோயில் என்பவரது எண்ணம். ஆயினும் இந்துவிற் செய்த பரில்லமானது மலிவில் யுரோபத்திற் செய்ததற்குச் சரிநிற்குமோவென்பதைப்பற்றி ஓஷானசி பண்டிதர் சந்தேகிக்கிறார். கார்சூசி Khar suji என்ற பேருடைய ஓர் அசுத்த சோடமானது சிந்துவிலிருந்து வந்து சவுக்காரம் கண்ணாடிகள் செய்வதில் வழங்கப்படுகிறதென்றும் கழலைகள் வற்றும்படி பூச்சுமருந்தாய் இடப்படுகிறதென்றும் ஏர்வின் எழுதின பதார்த்த சாரத்தில் சொல்லப்பட்டது. இது நிலவுமரி[4]ப் பூண்டிலிருந்து எடுபடுமோம். சாசிமித்தி Saji-mati என்று இந்துக் கடைகளில் விலைப்படும் அசுத்தமான சோடத்தின் மிகுதியான பங்கு வங்காளத்தின் சில பகுதிகளில் அதிகமாய் எடுக்கப்படுகிற மினிறற்[5] பதார்த்தமேயாகும்.

## அமரந்தாசியங்கள்.

## AMARANTACEAE.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

முட்கீரை. Amarantus spinosus. இதுவும் நுதீயம்[6]என்ற தொகுதிப் பேருள்ளடங்கிய வேறினங்களும் பாணித்தன்மையுடையவைகள். இலை

---

1 Taenia. 2 Barilla. 3 Soda. 4 Salsola Indica. 5 Mineral. 6 Nutiya.

Digitized By Roja Muthiah Research Library

யைத் துவைத்துண்டாக்கின களி வங்காள சிகிச்சா வாகடத்துக் குரியதாகும். வேறனேக இமாலிய[1]ங்களுக்கு இது குறைந்ததாகையால் அவசியமானதல்ல. மொறீசுத் தீவில் இவ்விலைகள் வேரின் கிகாத்தம்[2] அமுரிதி[3]யாக உள்ளே கொடுக்கப்படும்.

நாயுருவி. Achyranthes aspera. இது இந்துவின் மிகுதியான பகுதிகளில் உள்ள பூண்டு. துவர்த்தன்மை அமுரிதித்தன்மை இதற்குண்டாம். துவராக இது மெனுறீயம்[4] தியறீயங்க[5]ளுக்குச் சித்தியோடு வழங்கப்பட்டாலும் இதின் நயத்தைப்பற்றி மெத்தத் தெரியாது. இதின் அமுரிதித்தன்மையைப்பற்றிச் சாணிஷ் வைத்தியர் சார்பாகச் சொல்லியிருக்கிறார். அவர் வாறிங்கு பண்டிதருக்கு எழுதின கடிதத்திற் தாம் இதை நீர்க்கோவைக்கு அதிகமாய் வழங்கி மெத்த நயங்கண்டோமென்று சொல்லியிருக்கிறார். சிமிது, சாற்று என்ற வைத்தியர்களும், கனிலல்டே முதலியவர்களும் எழுதின எழுத்துக்களிலும் நீர்க்கோவைக்கு இது நயமானதாகக் கண்டிருக்கிறது. பச்சைப்பூண்டில் இரண்டு அன்சை முக்கால் நாழி வெந்நீரிற் போட்டு அரைநாழியாய் ஊறுந்தனையும் வற்றக் காய்ச்சிச் சீலையில் வடித்து இரண்டு அன்சு அல்லது கூடிய தேயமாகச் சிறுநீர் கதிக்குந்தனையும் கொடுப்பதே முறை. முழுப்பூண்டையும் எரித்துச் சாம்பலாக்கினால் அதிகமான பதாசி[7]வரும். ஆகையால் இச்சாம்பல் சீலைவெளுப்பில் வழங்கப்படுவதையிட்டுச் சமஸ்கிருதத்தில் அபாமார்க்கம் என்றபெயர் இதற்குண்டு. இந்தச் சாம்பலைச் சுக்குக் கஷாயத்தோடு சேர்த்தால் நீர்க்கோவை நோய்களுக்கு நல்லதென்று மதிக்கப்படும். பூக்கும் கதிர் மட்டைத்தேளைச் சோரப்பண்ணுமென்றும் அதற்குக் காவலாகுமென்றும் அயோத்தியிலும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் பேசிக்கொள்வார்கள். தேள் பாம்பு முதலிய விஷமுள்ள செந்துகளின் கடிக்கும் இது மாற்றுமருந்தென்றும் நம்பிக்கை உண்டு. தேட்கடிக்கு இதைப் பூசி மாற்றினேனென்று சாற்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். பாம்புகடிக்கும் இது மருந்தாகுமென்று தேணர் வைத்தியர் சொன்னார்.

## நிக்தச்சினசியங்கள்.

## NYCTAGINACEAE.

### அவாகடச்சரக்துகள். Non-Officinal.

பத்தறசு. Mirabilis Jalapa. இந்தப் பூண்டு இந்துவடங்கலுந் தோட்டங்களிற் செய்யப்படும். நாலு மணி நேரத்தில் பூ மலருகிறபடியால் நாலு மணிப்பூ எனப்படும். வியாபாரத்தில் வரும் ஜலப்பு[8] இதிலெடுக்கப்படுவதென்று முன்னே எண்ணியிருந்தும் அந்த எண்ணம் இப்போ தள்ளப்பட்டது. இதின் கிழங்கு சாந்தியான நல்ல விரேசனி, ஜலப்புக்குச் சரியானதென்று தலீச்செறீவிற் சொல்லப்பட்டது. சூல்பிறெட்டு, அந்தர், ஏண்ஸ்லி, ஓஷானசி பண்டிதர்கள் இதைக் கொடுத்துச் சோதித்தவரையில்

---

1 Emollient. 2 Decoction. 3 Diuretic. 4 Menorrhoea. 5 Diarrhoea. 6 Potash. 7 Jalap.

Digitized By Roja Muthiah Research Library

விரேசனிச்செயல் இதற்கில்லையென்றும் இது பின் எதுக்குங் கூடியதல்லவென்றுங் கண்டார்கள். கட்டுகள், விப்புருதி[1]களை நெக்கப்பண்ணுவதற்குச் சுதேசிகள் இதின் இலையைத் துவைத்து அணைப்பார்கள். ஒருமுறை ஓர் துரைசாணி சுதேசியொருவனுடைய புத்திப்படி இந்த இலையைத் துவைத்துக் கட்டுக்கு அணைத்ததால் வருத்தமும் தாபித[2]மும் அதிகரித்ததை வாறிங்கு பண்டிதர் கண்டார்.

மூக்குரட்டை. Boerhaavia diffusa. இது இந்துவடங்கலுமுள்ள செடி. இது நல்ல எக்ஸ்பெக்றற[3]மென்றும்,சிலவேளைகளில் ஈளைக்குக் கொடுத்த நயங்கண்டேனென்றும் உதவிச்சத்திரீகன் சட்டசீ எழுதியிருக்கிறார். அவர் இதைத் தூளாகவும் திகாச்த[4]மாகவும் இன்வூச[5]மாகவும் வழங்கினார். தேயங்கள் வீதங்களோ சொல்லப்படவில்லை. அதிகமாய் உட்கொண்டால் வாந்திக்கும்.

## போலிக்கனுசியங்கள்.

## POLYGONACEAE.

### வரியாத்து. RHEUM. RHUBARB.

வாசம். இது திபேத்து தாத்தாரி தேசங்களில் உண்டாகும்.

வாகடபகுதி. தோலுரித்துக் காய்ந்தகிழங்கு. இது சதுரமான திரண்ட துண்டுகளாக, சீனத்திபேத்து, தாத்தாரி தேசங்களிலிருந்து யுரோபத்துக்கு ஏற்றப்படும். பெரும்பாலும் ஒரு துளையுள்ளதாயிருக்கும். வெளியில் மஞ்சள்நிறம், உள்ளே நரையுஞ் சிவப்புமான நுண்ணிய வரிகள் தோன்றும். சடிக்க நுண்ணிய மணலுள்ளதுபோற் கறகறக்கும். சொற்ப கயர்ப்பான சுகந்த சுவையும் சுய மணமுமுடையது. உக்கியாவது, பூச்சிபரித்தாவது இராது. மஞ்சளான வெளிப்பகுதியைப் பொறசிக்கமிலம்[6] கபிலமாக்கமாட்டாது. இக்கிழங்கு தனக்கே யுரிய ரீயின்[7] என்ற தடஸ்த[8] பதார்த்தத்தையும் தனிக்கமிலங்[9] கலிக்கமிலங்க[10]ளையும் கைப்பான ஓர்எசிறுத்திவை[11]யும் அடக்கியிருக்கும். இவைகளுள் முதலாவது இதின் சத்து என்றெண்ணப்பட்டது.

தன்மை. முதலாவதாய் சாந்தியான நல்ல பேதி. இரண்டாவதாய்த் துவர். சிறுதேயத்தில் ஸ்தோமாகி[12]யுந் துவருமாகும்.

உபயோகம். இது சாந்தமான செயலுள்ளதாகையால் பிள்ளைகள் குரத்தப்[13]பெண்கள் குவாதரோகி[14]கள்,பிரசவஸ்திரிகளுக்குண்டாகும் மலவரட்சிக்கு மெத்த உவந்தது. சீரணியாத உணவு அல்லது அழற்றுமுணவு குடலிலிருப்பதால் உண்டான கழிச்சலுக்கு இது உச்சிதமானது. சிலவகையான குன்மத்துக்கு இதைத் தனித்தாவது வேறு மருந்துகளோடு கலந்தாவது கொடுப்பது அதிக உபயோகமாகும்.

---

1 Abscess. 2 Inflammation. 3 Expectorant. 4 Decoction. 5 Infusion. 6 Boracic acid. 7 Rheine. 8 Neutral. 9 Tannic acid. 10 Gallic. 11 Extractive, 12 Stomachic, Gரசனி. 13 Anaemia. 14 Gout.

Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** விரேசனியாக இருபது முதல் நாற்பது கிறேன் வரைக்கும் ஸ்தொமாகி[1]யாக மூன்றுமுதல் எட்டுக் கிறேன் வரைக்குங்கொடுக்கவும்.

**ரசிதங்கள்.** Preparations. **வரியாத்தின்ஷூசம்.** Infusion of Rhubarb. கொள். வரியாத்துக் கிழங்கு மெல்லிய சீவலாக, கால் அன்சு; கொதிநீர், பத்து அன்சு; மூடிய பாத்திரத்தில் ஒரு மணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு.

**வரியாத்தேசிறுத்து.** Extract of Rhubarb. கொள். சீவிய அல்லது இடித்த வரியாத்துக்கிழங்கு, ஒரு இறுத்தல்; திட்டசீது[2] பத்து அன்சு; திஸ்திலித்த[3]தண்ணீர், இரண்டரைநாழி. சீதையுந் தண்ணீரையுங் கலந்து, அக்கலவைநீரிலே வரியாத்தை நாலுநாளூறவிட்டுத் தெளித்துப் பிழிந்து கரையாப் பதார்த்தம் அடையத்தக்கதாய் நிற்கவிடவும். தெளிந்த நீரை இறுத்துச் சேஷத்தை வடித்து, நீர்களைக் கலந்து, குளிகைக்குத் தகுந்த பதமாய்வருமட்டும் 160 பாகைக்கு மேற்படாத சூடுள்ள நீர்மத்திக[4]த்தில் வறட்டவும்.

**தேயம்.** ஸ்தொமாகியாக மூன்று முதல் எட்டுக் கிறேன் வரைக்கும். விரேசனியாக பத்து முதல் இருபது கிறேன் வரைக்குங் கொடுக்கலாம்.

**வரியாத்திரஞ்சம்.** Tincture of Rhubarb. கொள். வரியாத்துக்கிழங்கு பருக்கன்பொடியாக இரண்டு அன்சு; கோதுரித்து இடித்த ஏலக்கொட்டை[5],இடித்த மல்லி[6], குங்குமப்பூ[7], வகைக்குக் கால்அன்சு; புருவுசீது[8]அரைநாழி. இடித்த உரமான சரக்குகளெல்லாவற்றையும் மூடிய பாத்திரத்திலே, பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[9]யில்இட்டு அடைசி, நீர் ஒழுகினபின், சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கூட்டி, அரைநாழி தேறப் புருவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** ஸ்தொமாகியாக ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம். விரேசன பானங்களுக்கு இது நல்ல அனுபானம்.

**வரியாத்துவைன்.** Wine of Rhubarb. கொள். வரியாத்துக்கிழங்கு பருக்கன்தூளாக, ஒன்றரை அன்சு; வெண்கனெலப்பட்டை[10]பருக்கன் தூளாக, அறுபது கிறேன்; செரிவைன்[11], அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி அப்பாற் சீலையில் வடித்துப் பிழிந்து கடுதாசியில்வடித்து அரைநாழிக்குப்போதிய செரிவைன்சேர்க்கவும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டுதிரும்.

**வரியாத்துச் சிரூபம்.** Syrup of Rhubarb கொள். வரியாத்துக் கிழங்கு பருக்கன்தூளாக, மல்லி பருக்கன்தூளாக, வகைக்கு இரண்டு அன்சு; சுத்த சர்க்கரை இருபத்துநாலு அன்சு; திட்டசீது எட்டுஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் இருபத்துநாலு அன்சு. வரியாத்தையும் மல்லியையுங் கலந்து சியந்தனியில் அடைசி. முன்னமே ஒன்றுகக் கலந்த தண்ணீரையுஞ் சீதையும் அதின்மேல் வார்த்தொழுகவிடவும். இப்படி ஒழுகின நீரைப் பதின்மூன்று அன்சாய் வற்றப்பண்ணி வடித்தபின் அதிலே சர்க்கரையை மென்சூட்டிற் கரைக்கவும்.

---

1 Stomachic. 2 Rectified Spirit. 3 Distilled water. 4 Water-Bath. 5 Cardamoms. 6 Coriander. 7 Saffron. 8 Proof-spirit. 9 Percolator. 10 Canella bark. 11 Sherry wine.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒரு திரும் முதல் நாலுதிரும்.

வரியாத்துக்கூட்டுக்குளிகை. Compound Rhubarb Pill. கொள். வரியாத்துக் கிழங்குமா, மூன்றுஅன்சு; சொகோத்திரசகை[1],மாவாக, இரண்டேகால்அன்சு; சசய்[2], வன்சபு[3], மாவாக வகைக்கு ஒன்றரை அன்சு; பெப்பமிந்துத்[4]தேல் ஒன்றரைத்திரும்; இக்குப்பாணி[5] நிறைப்படி நாலு அன்சு. மாக்களைத் தேலோடு கலந்து, அப்பால் இக்குப்பாணியைக் கூட்டி முழுவதையும் ஒரே சரியான திரளையாக்கவும்.

தேயம். ஐந்து முதற் பத்துக்கிறேன்.

வரியாத்துக்கூட்டுச் சூரணம். Compound Powder of Rhubarb. கொள். வரியாத்துமா இரண்டு அன்சு; அபாரமக்னீசி[6], ஆறு அன்சு; சுக்குமா[7], ஒரு அன்சு. திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக்கொள்ளவும்.

தேயம். வளர்ந்தோருக்கு இருபது முதல் அறுபது கிறேன் வரைக்கு பிள்ளைகளுக்கு ஐந்து முதற் பத்துக் கிறேன்வரைக்கு. இந்த மருந்து வீட்டு வைத்தியத்திற் "கிரெக்குரிச்சூரணம்" என்ற நாமத்தோடு வெகுகாலமாகக் கீர்த்திபெற்றது.

## அவாகடச்சாக்கு. Non-Officinal.

இமயவரியாத்து. Himalayan Rhubarb. இமயத்தின் உயர்ந்தபகுதிகளில் உண்டாகிற எமோதியவரியாத்து Rheum Emodi மூர்குரோவ்வரியாத்து R. Moorcroftianum வெபுவரியாத்து R. Webbianum என்ற இனமான பூண்டுகளின் கிழங்கே இப்பேரிலடங்கிய மிகுதியானபங்கு. இவ்வினங்களெல்லாம் பரிது சிறிது என இரண்டாய் வகுக்கப்படும். 1 பரிது. சுருக்கு விழுந்து பல பருமையுஞ் சாங்கமுமாய்த் திருகின அல்லது திரண்ட துண்டுகளாக வரும். தலைப்பிற் சாய்வாய் வெட்டப்பட்டிருக்கும். ஏறக்குறைய நாலு இஞ்சு நீளமும், ஒன்றரை இஞ்சு பருமையுமானது. கருங் கபிலநிறமும் சொற்ப அளவாய் வரியாத்தின் மணமும் கைப்பான துவர்ச்சுவையுமுடையது. தன்மையில் மெதுவும் விகடீ[8]முமானது. முறித்தால் வரியாத்துக்குரிய வரிகள் தோற்றுவதில்லை. மாவாக்குவது வில்லங்கம். இதின் மா மங்கற்கபிலமான மஞ்சள் நிறமுடையது. 2 சிறிது, குறுத்த துண்டுகளாக வரும். கருங் கபிலநிறமானது. ஏறக்குறைய மணமற்றது. மெத்தக கைப்பான துவர்ச்சுவையுள்ளது. இரண்டு இனங்களும் இலட்சணங்களில் மெத்த விகற்பமுள்ளன. இந்தக் கிழங்கை ரோயில் பண்டிதரும் துவைனிங்கு பண்டிதருஞ் சோதித்தவரையில் கண்டபேறுகள் திருத்தியானவைகள். ஸ்தொமாகித் தொணிக[9]மாக இது இறக்குமதியான வரியாத்திலுந்திறமென்றது துவைனிங்கு பண்டிதர் எண்ணமாயினும் பிந்தின சோதனைகளோ இவ்வெண்ணத்தை உறுதிப்படுத்தவில்லை. கடைகளில் விலைப்படும் நாட்டு வரியாத்தைப் பார்க்கப் பிறவூரால் ஏற்றிவரும் வரியாத்தே உத்தமமென்பது இவற்றைப்பற்றி இந்துவிலிருந்தெழுதப்பட்ட எழுத்துகளின் பொழிப்பாம். இமயவரியாத்தைப் பற்றி நயப்பான காரியங்களை எழுதியிருக்கிற கிளேகாண் என்பவர் நாட்டுக்கு வருகிற கிழங்கு

---

1 Socotrine Aloes. 2 Myrrh. 3 Hard soap. 4 Oil of Peppermint. 5 Treacle, தெரீயகம். 6 Light Magnesia. 7 Ginger powder. 8 Radiate. 9 Stomachic Tonic.

கீழ்த்தரமானதென்றும், புதுக் கிழங்கைத் தாம்சோதித்தவரையில் அதின் செயல் ருசிய வரியாத்தின் செயல்போலிருந்ததென்றுஞ் சொல்லுகிறார். இம யவரியாத்தைக் கவனமாய்ச் செய்கைபண்ணினால் சீன, துருக்க வரியாத்துக்குச் சரியான நயந்த கிழங்கு எடுக்கலாமென்று நம்ப நியாயமுண்டு.

## தைமேலாசியங்கள்.

## THYMELACEAE.

### மேசீரியம். MEZEREUM.

**வாசம்.** யுரோபம்.

**வாகடபகுதி.** காய்ந்த பட்டை. இது பல நீளமுள்ள கீலங்கள் அல்லது சுருள்களாக வரும். உரப்பானது, வசையத்தக்கது, சிராயுள்ளது, வெளியிற் கபிலநிறம்; உள்ளே வெண்மை. சற்றே உவட்டுமணமும், காரமான உறைத்த சுவையுமுடையது. இதின் சத்து அதின்கார்ப்பான ஓர் ராளத்திலும்[1], அத்திரதேலிலும்[2] இருக்கும். இவற்றுடன் தவ்னியம்[3] என்ற தடஸ்த[4]மான கிரிஸ்தற்[5] பதார்த்தமும் இதில் அடங்கியிருக்கும்.

**தன்மை.** ஸ்திமுலம்[6], சுவேதனி[7], அமுரிதி[8]. தோலில் அணைத்தால் ருபிவாஷ[9]னும், வெசிக[10]னுமாகும். வெசிகனைக் கொப்புளங்கொள்ளப்பண்ணுவதற்கு இப்பட்டையைச் சூடான வின்னாரியிற் போட்டு இளக்கித் தோலோடணைத்துக் கட்டவேண்டும். கொப்புளித்த புண்ணைப் பரிகரிப்பதில் இது சபீனவன்கெ[11]னுக்குப் பதிலாகுமென்றுஞ் சொல்லப்பட்டது.

**உபயோகம்.** சிவ்லிசு[12]நோய்கள், வாதநோய்களுக்கும், பலவகையான சருமநோய்களுக்கும் இது வழங்கப்பட்டது. நயமோ சந்தேகம்.

**தேயம்.** பத்துப் பன்னிரண்டு கிறேனை இன்ஃவூச[13]மாக்கி, நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம். ஆயினும் இது தனியே கொடுக்கப்படுவதரிது, சார்ச[14]கூட்டுத் திகாக்தத்தில் இது ஓர் கூறாகின்றது.

**ரசிதங்கள். Preparations.** மேசீரியவீதரேசிறத்து. Ethereal Extract of Mezereum. கொள். மெசீரிய பட்டை, நறுக்கி, ஒரு இருத்தல்; திட்டசீது[15] நாலு நாழி; ஈதர்[16] அரைநாழி. மெசீரிய பட்டையை மூன்று நாழி சீதில் மூன்றுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கிச் சீலையில் வடித்துப் பிழியவும். சக்கைக்குச் சேஷமான சீதைவிட்டுத் திரும்பவும் இடைக்கிடை குலுக்கி மூன்றுநாள் ஊறவிட்டுச் சீலையில் வடித்துப் பிழியவும். வடித்த நீர்களைக் கலந்து திஸ்திலித்து[17], சீதில் மிகுதியான பங்கைச் சேர்க்கவும். சேஷத்தை மெல்லிய எகிருத்தாய் வறட்டி, அடைத்தவோர் பாத்திரத்திலிட்டு அத்துடன் ஈதர் சேர்த்து, இடைக்கிடைகலக்கி, ஒருநாளூறவிட்டு

---

1 Resin. 2 Volatile oil. 3 Daphnea. 4 Neutral. 5 Crystal. 6 Stimulant. 7 Diaphoretic. 8 Diuretic. 9 Rubefacient, சோணதி. 10 Vesicant, விஸ்பொடி. 11 Unguentum Sabinae. 12 Syphilis. 13 Infusion 14 Sarsae, 15 Rectified spirit. 16 Ether. 17 Distil.

Digitized By Roja Muthiah Research Library

இந்த ஈதர்விலயனத்தை இறுத்துத் திஸ்திலிப்பதால் ஈதரிற் சேர்க்கக்கூடிய பங்கைச் சேர்த்துச் சேஷத்தை மெல்லிய எசிமுத்தாய் வறட்டிக்கொள்ளவும்.

இதை மேனியிற் பூச அழற்றும். இது கடுகுக்கூட்டு வினிமெனில் ஓர் கூறுகச் சேருகின்றது.

## மைறிஸ்திசியங்கள்.

## MYRISTICEAE.

### சிடமரம். NUTMEG TREE.

வாசம். இது மொலக்கத்தில் உள்ளது. மலாயநாடு, இலங்கை, மலையாளம் முதலிய பகுதிகளிலும், உஷ்டண அமரிகத்தின் சிலபகுதிகளிலும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. சாதிக்காய் எனப்படும் இதின் கொட்டை. இது வட்டிப்பும் ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமுமானது. வெளிப்பக்கத்திற் பின்னல் போல வரிகளுடையது. உள்ளே கருங்கபில நிற வரிகளும் கரைச் சிவப்புநிறமுமுள்ளது. தனக்கே உரிய வீறுன மணமுங் கைப்பான சுகந்த சுவையுங்கொண்டது. இதின் சாரம் ஓர் அத்திரதேலில் இருக்கும்.

தன்மை. இது ஸ்திமுலம்[2], காமினதி[3], பெருந்தேயத்தில் நாகதிகம்[4].

உபயோகம். அசத்துவ தியறீயம், வாயுப்பொருமல் வலி, சிலவகைக் குன்மங்களுக்கு இது கொடுத்து நயங்கண்டது. ஆயினும் இது விசேஷமாய் மற்றும் மருந்துகளுக்குத் துணைமருந்தாக வழங்கப்படும். அதிகமாய்த் தொடுசுவைக்கு வழங்கப்படும்.

தேயம். பத்து முதல் இருபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

காசுக்கட்டிக் கூட்டுச்சூரணம்[5], கிரீதச் சுகந்தபற்பம்[6], அமுறுசிக்கூட்டுச் சீது[7], லவந்தர்க்கூட்டிரஞ்சம்[8], இவைகளிற் சாதிக்காய் ஓர் கூறுகச் சேருகின்றது.

ரசிதங்கள். சிடஅத்திரதேல். Volatile Oil of Nutmeg. சாதிக்காயைத் திஸ்திலித்தெடுக்குமெண்ணெய். இது நிறமற்றது அல்லது வெண்மஞ்சள்நிறமுள்ளது. சாதிக்காயின் மணம் சுவைகொண்டது.

தேயம். ஒரு மினிம்[9] முதல் ஐந்துமினிம். பற்கொதியை மாற்றுவதற்குப் பல்லுக்கு இடப்படும். சிடச்சீது[10] அமோனசுகந்தசீது[11]களிலும் சொகோத்திரசகைக் குளிகை[12]யிலும் இது ஓர் கூறுகச் சேருகின்றது.

சிடச்சீது. Spirit of Nutmeg. கொள். சிட அத்திரதேல், ஒரு அன்சு. திட்டசீது[13] நாற்பத்தொன்பது அன்சு. கரைக்கவும்.

தேயம். முப்பது முதல் அறுபது மினிம் வரைக்கு.

ஊற்றின சிடத்தேல். Expressed Oil of Nutmeg. இது சாதிக்காயைச் சுடுகொட்டிப் பிழிந்தெடுக்கும் தடித்த எண்ணெய். செம்மஞ்சள்நிறமும், இறுக்கமும், சாதிக்காயைப் போல நறு மணமுமுள்ளது. தன்னிலும் நாலு

---

1 Solution. 2 Stimulant, தீவனி. 3 Carminative, வாயுக்கினி. 4 Narcotic, கிராகி. 5 Compound powder of catechu. 6 Aromatic powder of chalk. 7 Compound spirit of Armoracia. 8 Compound tincture of Lavender. 9 Minim. 10 Spirit of nutmeg. 11 Aromatic spirit of ammonia. 12 Pill of socotrine Aloes. 13 Rectified spirit.



Digitized By Roja Muthiah Research Library

மடங்கு நிறையுள்ள கொதி அலக்கா[1]லிலும்அதில் அரைப்பங்கு அளவான ஈத[2]ரிலுங் கரையும்.

வாதம், சோர்வு, சுளுக்குகளுக்கு இது நல்ல பூச்சு. காரமற்ற எதும் எண்ணெய்களோடாவது சபுலினி[3]மெனோடாவது, கலந்து பூசவேண்டும், இது பிற்சுப்பற்று[4] வெம்பற்று[5]களில் ஓர் கூறுகச் சேருகின்றது.

[சாதிபத்திரி Maceயென்று விலைப்படுஞ் சரக்கு இச் சாதிக்காயைச் சூழும் கம்பியான தகடு. இது தட்டையாய் ஒற்றையல்லதுஇரட்டையிதழ்களாகச் சமவீனமாய்ப் பிளந்து, அழுத்தமாகி, சற்றே வளையக்கூடியதாய், அல்லது நொருக்கலாயிருக்கும். வெண்மஞ்சள் அல்லது பொன்மஞ்சள் நிறமுஞ் சாதிக்காயைப் போன்ற மணஞ் சுவையுங் கொண்டது. இதைத் திஸ்திலிக்க ஓர் அத்திர எண்ணெய் வரும். இதின் கூட்டு, செயல், உபயோகமெல்லாம் சாதிக்காய் எண்ணெய்யைப் போலவே. இது விசேஷமாய்த் தொடுசுவைக்கு வழங்கப்படும்.]

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**மலையாளச் சிடம். Myristica Malabarica.** இது மலையாளத்திலும் திருவாளங்கோட்டிலுஞ் சோலைகளில் உண்டாகும் மரம். இதிலே சாதிக்காயைப் பார்க்கப் பருத்ததும் மெத்த நீண்டதுமான ஓர்வகைக் காய் காய்க்கும். அதற்குரிய நற்கந்தமாவது உறைப்பான சுகந்தசுவையாவது இதற்கு மெத்த இல்லை. இதை இடித்து அவித்தால், சாதிக்காயிற்பிழிந்த எண்ணெய்யைப் போன்ற மஞ்சள்நிறமான உறைந்த எண்ணெய் கனமாய் வரும். மந்தமான கெட்ட புண்களுக்கு இதை இட்டால் அவற்றைச் சுத்தமாக்கி வருத்தத்தைத் தணித்து மாறப்பண்ணுமாகையால் உத்தமமான மருந்தென்று வாறிங்கு பண்டிதருக்குக் காட்டப்பட்டது. இதை இப்படிப் போடும்போது காரமற்ற எண்ணெய்யிற் சொற்பங் கலந்து உருக்கிக்கொள்ளவேண்டும். வாதத்துக்குப் பூசுவதற்கும் இது உதவக்கூடும்.

# லோருசியங்கள்.

# LAURACEAE.

## கருப்பூரமரம். CINNAMOMUM CAMPHORA.

வாசம். சீனம், சப்பங்கி, கொச்சின் சீனங்களிலுள்ளது. யாவக தேசத்துக்குங் கொண்டுபோகப்பட்டது.

வாகடபதார்த்தி. இம் மரத்திலிருந்து புடஞ்செய்து எடுக்கப்படுகிற இறுகின அத்திரதேல். இதுவே கர்ப்பூரம். இது கிரிஸ்தற் தன்மையான உருவொளிகொண்ட வெண் கட்டிகளாக வரும். ஊடுருவக்கூடிய வீறுய்க் கமழும் மணமும் கார்ப்பான பிறகு குளிருகிற சுவையுமுடையது. தண்ணீரில் மிதக்கும். வாடிக்கையான காங்கையிற் தாமதமாய் ஆவியாகும். தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும்; திட்டசீதி[6]லும், ஈதரிலும், தாராளமாய்க் கரையும். உரப்பானது; இலகுவில் மாவாகாது; பிரவையாய்ச் சுவாலித்து

---

1 Alcohol. 2. Ether. 3 Soap liniment. 4 Pitch plaster. 5 Warm plaster. 6 Rectified spirit.

Digitized By Roja Muthiah Research Library

எரியும். சூடேகாட்டினுல் முற்ருய்ப் பஸ்மமாகும். அசுத்தமான கர்ப்பூரம், சீனம், சப்பங்கி தேசங்களிலிருந்து பிழித்தனி தேசத்துக்கு ஏற்றப்படும்.

தன்மை. இதின் முதற்செயல் செறியும் ஸ்திமுல[1]மும், சுவேதன[2]முமே. இரண்டாஞ்செயல் செரதீவம்[3], அனுடைன்[4], அந்திஸ்பசி[5]களின் தன்மையே. பெருந்தேயத்தில், மயக்கழற்றி நஞ்சாகும்.

உபயோகம். கர்ப்பூரத்தை அதிகமாய்க் கொடுத்து மெத்த நயங்கண்ட ஏராளமான நோய்களுட் சுரங்கள் தாபிதங்களின் முற்றிய பருவங்களும், அசத்துவ[6]வகைகளும், பைத்தியம், பிரசவபைத்தியம், ஈளை, அஞ்சினபெக்துசு[7],குக்கல்க[8]ளும், இதயகிபோஷு[9]த்தோடு கூடிய நெஞ்சிடிகளும், சனனசல உறுப்புகளின் நோய்களாகிய திஸ்மெனுறீயம்[10], நிம்வுமானியம்[11],ஸ்பமதறீயம்[12], கருப்பைக்கன்சர்[13],கருப்பையழற்சி, சிசினேத்தை[14],சலவொழுக்கு, இஸ்தேரி[15]என்பவைகளும்; வாதம்,கோதம்[16] குவாதங்க[17]ளுமே முக்கியமானவைகள். ஸ்திரிக்னி[18] நஞ்சுக்கு இது மாற்ருகவழங்கப்பட்டாலும், நயமோ சந்தேகம். மேலும் இது தைலமாய், வாதம், சுளுக்குகள் மற்றுநோக்களுக்கும், இடைப்புண் வராமற் காப்பதற்கும், தோல்வியாதிகளிற் சொறிவைத் தணிப்பதற்கும் பூச்சு மருந்தாகும்.

தேயம். ஒரு கிறேன் தொடங்கி ஐந்து கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கொடுக்கலாம். தேவையாகில் இரட்டத்தனையாயுங் கொடுக்கலாம்.

ரசிதங்கள். Preparations. பூரநீர். Camphor water. கொள். பூரம், அரை அன்சு; தண்ணீர் நாலு நாழி. பூரத்தைச் சீலைப்பையொன்றுட்போட்டு, பையை ஓர் கண்ணடித் தடியிற் கட்டி தண்ணீர்ச் சீசாவுட் தாழ்த்து, ஆடித்தடியின் மற்றத் தலைப்பைச் சீசாவின் சடையோடு தொடுத்தபடி நிற்கவிட்டுச் சீசாவை மூடிவைக்கவும். இரண்டுநாளாகுதல் ஊறினபின் தேவையான வேளைகளில் நீரைத் தெளித்தெடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கும். பிரதானமாய் இது மருந்துகளுக்கு அனுபானமாய் வழங்கப்படும்.

பூரச்சீது. Spirit of Camphor. கொள். பூரம் ஒரு அன்சு; திட்டசீது[19]ஒன்பது அன்சு. கரைக்கவும்.

தேயம். பத்து மினிம்[20] முதல் முப்பதுமினிமைப் பாணியில் மிதக்கவிட்டுக் கொடுக்கவும். பிரதானமாய்ச் சுளுக்குகளுள், நசிவுகள், இமாரம்[21], காலிகவாதம், சோர்வுகளுக்கு இது பூசப்படும்.

பூரக்கூட்டிரஞ்சம். Compound Tincture of Camphor. கொள். அவின் பருக்கன் தூளாக, நாற்பது கிறேன்; பெஞ்சோயிக்கமிலம்[22],நாற்பது கிறேன்; பூரம் முப்பது கிறேன்;அனீசுத்தேல்[23], அரைத்திரும்; புருவுசீது[24]அரைநாழி. மூடிய பாத்திரத்திலிட்டு இடைக்கிடை குலுக்கி, எழுநாளூறிய பின் வடித்து, அரைநாழிக்குப் போதிய புருவுசீது சேர்க்கவும்.

தேயம். பதினைந்து மினிம் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம்; கூடவுங் கொடுக்கலாம். திருமொன்றிற் காற்கிறேன் அவின் இருக்கும். பெரிகாறிக்கு[25] என்னும்பெயருடன் செரதீவமாக இம்மருந்து வெ

---

1 Stimulant. 2 Diaphoresis. 3 Sedative, சாந்தனி. 4 Anodyne. 5 Antispasmodic. 6 Adynamic. 7 Angina pectoris. 8 Hooping cough. 9 Hypertrophy 10 Dysmenorrhoea. 11 Nymphomania. 12 Spermatorrhoea, விந்துசலே. 13 Cancer. 14 Chordee, சிசினவளைவு. 15 Hysteria. 16 Gangrene. 17 Gout. 18 Strychnia. 19 Rectified spirit. 20 Minim. 21 Chilblains. 22 Benzoic acid. 23 Oil of Anise. 24 Proof spirit, 25 Paregoric.

Digitized By Roja Muthiah Research Library

குாலமாகப் பெயர்பெற்றிருந்தது. இருமற்கலவைகளில் இது பெரும்பாலுஞ் சேரும்.

**பூரலினிமேன்.** Liniment of Camphor. கொள். பூரம், ஒரு அன்சு; ஒலீவுத்தேல், நாலு அன்சு. பூரத்தை எண்ணெய்யிற் கரைக்கவும்.

**பூரக்கூட்டு லினிமேன்.** Compound Liniment of Camphor. கொள். பூரம் இரண்டரை அன்சு; லவந்தர்த்தேல்[1], ஒரு திரும்; அமோனகரநீர்[2], ஐந்து அன்சு; திட்டசீது, பதினைந்து அன்சு. பூரத்தையும் லவந்தர்த்தேலையுஞ் சீதிற் கரைத்து, அமோனநீரைப் படிப்படியாய்க் கூட்டித் தெளிந்தநீராய் வருந்தளையுங் குலுக்கவும்.

இந்த லினிமெனும் இதற்கு முன்சொன்ன பூரலினிமெனும் வாதத்துக்கும் மற்றுரோவுகளுக்கும் நல்ல பூச்சு.

வாகடத்துக்குரிய அனேக லினிமென்களில் பூரம் ஓர் கூறுகச் சேருகின்றது. மேலும் வங்கவதவசிதசுக்கூட்டன்கெ[3]னிலும்,இரசகூட்டன்கெ[4]னிலும் இது ஓர் கூறுகின்றது.

[சுமாத்திரம், பர்ணியு, யாவகம் என்ற தீவுகளில் உத்தரம் 1 பாகை 10 கலைக்கும், 2 பாகை. 10 கலைக்குமிடையில்உண்டாகிற பூரதிரையுபலனச்சு[5] என்ற காட்டு மரச்சிராயிலே பூரம் வெண்மையான கிரிஸ்தற் கட்டிகளாய் விளையும். அதைச் சேர்க்கும் வகையாதியைப்பற்றிய விபரம் திவிறீசர்வைத்தியராற் பிரசுரமாயிருக்கிறது. அதின் தன்மை உபயோகங்களைப் பற்றிய குறிப்புகளும் மற்லி என்பவரால் எழுதப்பட்டன. தன்மை உபயோகங்களில் வாகடக் கர்ப்பூரத்துக்கு இது மெத்த அதிகப்பட்டதல்ல. விலையோ அதிகம். மற்றும் பூண்டுகளிலும் கர்ப்பூரம் கொஞ்ச அளவாக உண்டு. தெனசீம் நாடுகளில் பேர்ப்புளுமீயம்[6] என்ற மரத்திலிருந்து அதிகஅளவாய் அது சேர்க்கப்படும்.]

## சசுவிரஸ் மரம். SASSAFRAS OFFICINALE.

**வாசம்.** இது வட அமரிகத்தின் சோலைகளில் கனடம்தொடங்கி, விளறிடம் வரைக்கும் உண்டாகும்.

**வாகடபகுதி.** காய்ந்த வேர். இது கவைத்த துண்டுகளாக வரும். சில அடியில் எட்டு இஞ்சு பருமையாயிருக்கும். பட்டையின் வெளிப்பக்கம் நரைக் கபிலநிறம், உட்பக்கம் கறைக் கபிலநிறம்; நல்ல மணமும் உறைப்பான சுகந்தசுவையுமுடையது. சிராய் இலேசும்,கண்ணறைநிறைந்ததும், நரை மஞ்சள் நிறங்கொண்டதுமாய், மணஞ் சுவையிற் பட்டையிற் குறைந்ததாயிருக்கும். இது சீவல்களாகவும் வரும். இதிலே ஓர்அத்திரஎண்ணெ[7]ய்யும், ரானமும்[8], சசுவிரின்[9] என்ற விசேஷபதார்த்தமும் அடங்கியிருக்கும்.

**தன்மை.** இது அல்திறவதொணிகம்[10],சுவேதனி[11].

**உபயோகம்.** காலிகவாதம், உபசிவ்லிசு[12],ஸ்கேவி[13]சருமநோய்களுக்கு இது கொடுக்கப்பட்டது. இதின் வகுப்பைச் சேர்ந்த சார்சம்[14],குவயகம்[15], முதலிய மருந்துகளுடன் பெரும்பாலும் இது கலந்துகொடுக்கப்படும்.

---

1 Oil of Lavender. 2 Strong solution of Ammonia. 3 Compound ointment of subacetate of Lead. 4 Compound ointment of Mercury. 5 Dryobalanops camphora. 6 Blumea grandis. 7 Volatile. 8 Resin. 9 Sassafrin. 10 Alterative tonic. 11 Sudorific. 12 Secondary syphilis. 13 Scurvy. 14 Sarsae. 15 Guaiacum.

Digitized By Roja Muthiah Research Library

சார்சகூட்டுத் திகாக்தத்[1]திற் சசுவிரஸ்வேர் ஓர் கூறாகச் சேருகின்றது. [சசுவிரஸ் சிராயைத் திஸ்திலித்தெடுக்கும் அத்திரதேல், இரண்டுதுளிமுதற் பத்துத்துளி தேயத்தில் ஸ்திமுல[2]மும் காமினதி[3]யுமாகும். சுவேதனி[4]யென்றும் பெயர் பெற்றது. இதுவும் சோற்றியும் ஐக்கமரிகபார்மகுபீயத்தில்[5] வாகடத்துக்குரியதாகின்றன. சோற்றியிற் பிசுபிசுப்பான பிசின் மெத்தவுண்டு. திமல்சந்[6]தேவையான நோய்களில் இது இன்னூசமாய் வழங்கப்படும்.]

## நேக்தண்ட மரம். NECTANDRA RODIAEI.

வாசம். பிறித்தனிக் கியான தேசத்தில் இது உண்டாகும்.

வாகடபகுதி. பட்டை. இது பிபேரிப்பட்டையென்றுஞ் சொல்லப்படும். இது இரண்டோரடி நீளமும், இரண்டு இஞ்சு முதல் ஆறு இஞ்சு அகலமும் கால் இஞ்சு தடிப்புமுள்ள பருத்த கனத்த அகலத் துண்டுகளாகவரும். வெளிப்பக்கம் நரைக் கபிலநிறம். உள்ளே கருங் கபிலநிறம். சுவை துவர்ப்புக் கூடி நெடுக நிற்கிற கடுங் கைப்பு.

தன்மை உபயோகம். இது துவரான தொணிகம்[7]. இதிலிருந்தெடுக்கப்படும் அல்கலோவ[8]மாகிய பிபேரிய சல்வசுவுக்காக மாத்திரமே இது வாகடத்துக்குரியதாகின்றது.

ரசிதம். பிபேரியசல்வசு. Sulphate of Beberia. இதைக் குறிக்குஞ் சின்னமாவது; கா$_{35}$ ஐ$_4{}^0$ நீ$_2$ அ$_6$ ஐ$_2$ கெஅ$_4$. இது உருவொளியுள்ள கருங் கபிலநிறமான மெல்லிய செதிள்களாக இருக்கும். மாவானால் மஞ்சள்நிறமடையும்; கடுமையான கைப்புச்சுவையுள்ளது; தண்ணீரிலும் அலக்கா[9]விலுங் கரையக்கூடியது; தண்ணீரிற் கரைத்துப் பாரிய குலோறிரஞ்[10] சேர்க்க வெண்ணடையல்விழும்; காரச் சோடஞ்[11]சேர்க்க மஞ்சள்வெண்மையான அடையல் விழும். இக்கலவைக்கு ஈதரை[12] இருமடங்காய்ச் சேர்த்துக் குலுக்க, மஞ்சள் வெண்ணடையல் கரைந்துபோம். ஈதர்க்கரைவைச் சிறிய கண்ணடிக் குழலாற் பிரித்து வறட்டினால், கிருசஅமிலங்க[13]ளில் முற்றாய்க் கரையக்கூடிய உருவொளியான மஞ்சட்சேடம் விழும். பிபேரியசல்வசு, சூட்டுக்கு முற்றாயழிந்துபோம். தண்ணீர் சேர்த்தாற் தெளிந்த கபிலநிற நீராகும்.

தன்மை. தொணிகம்[14], அந்திபிறுடி[15].

உபயோகம். முறைச்சுரங்கள், ரிமீஷ[16] சுரங்களிலும்,நறல்சி[17],முக நறல்சிகளிலும்,இடைவிட்டு வரும் மற்று நோய்களிலும், கினியசல்வசு[18]க்குப்பதிலாக இது கொடுக்கப்படும். ஆயினும் அதற்கு இது மெத்தக் குறைவானது.

தேயம். தொணிகமாக ஒரு கிறேன் முதல் ஐந்து கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். அந்திபிறுடியாக ஐந்துமுதற் பத்துக்கிறேன் வரைக்கு நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். இதைக் கிருசசல்வுரிக்கமில[19]த்துளி சிலவற்றுடன் தண்ணீரிற் கரைத்துக் கொடுப்பது வசதி.

---

1 Compound decoction of sarsae. 2 Stimulant. 3 Carminative. 4 Diaphoretic, 5 U. S. Pharmacopoeia, 6 Demulcent. 7 Tonic. 8 Alkaloid. 9 Alcohol. 10 Chloride of Barium, 11 Caustic soda. 12 Ether. 13 Dilute acid. 14 Tonic. 15 Antiperiodic 16 Remittant. 17 Neuralgia. 18 Sulphate of Quinia. 19 Dilute Sulphuric acid.

Digitized By Roja Muthiah Research Library

## கறுவா மரம், CEYLON CINNAMON TREE.

வாசம். இது இலங்கையிலுள்ளது. இந்து, யாவக முதலிய பகுதிகளி லும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. இளங் கொப்புகளின் உட்பட்டை. இது இறுகச் சுருட்டின சுருள்களாக வரும். இவை ஏறக்குறைய நாலு லீன்[1] பருமையாய் உள்ளே சிறிய சுருள்கள் சிலவற்றை அடக்கியிருக்கும். இப்பட்டை வெண்மஞ்சளான கபிலநிறமுந் நற்கந்தமும் காரப்பான இனிய சுகந்த சுவையுமுடையது. சிராயாக முறியும். இதின் சத்து விசேஷமாய் ஓர் அத்திர[2] எண்ணெய்யிலேயே இருக்கும். எண்ணெய்யைத் தவிர தனக்கே உரிய சினமிக்கமிலம்[3] என்ற ஓர் அமிலத்தையும் தனிக்கமில[4]த்தையும் இது அமைத்திருக்கும்.

தன்மை. இது சுகந்த[5]மானது, ஸ்திமுலம்[6], காமினதி[7].

உபயோகம். வாயுப்பொருமல், வாயுவலி, குடலின் ஸ்பச[8] நோய்கள், அசத்துவ[9]கழிச்சல், இரைப்பை அழற்சிகளை இது பெரும்பாலும் மாற்றும். கருப்பையின் தசை இழைகளை இது அருட்டுமென்ற எண்ணத்தினால், மெனுரீய[10]த்துக்கும், கருப்பைச் சேஷ்டைக் குறைவைப்பற்றிய கஷ்ட பிரசவங்களுக்கும், கொடுக்கப்படும். காய்ச்சல்களின் பிற்காலங்களில், இதின் வருப்பைச் சேர்ந்த மற்று மருந்துகளோடு ஸ்திமுலமாய்க் கொடுக்கப்படும்.

தேயம். பட்டையை மாவாக்கி, அதில் ஐந்து கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். இதைத் தனியே கொடுப்பதரிது.

ரசிதங்கள். கறுவா நீர். Cinnamon Water. சொள். இடித்த கறுவாப்பட்டை, இருபது அன்சு; தண்ணீர் எட்டுநாழி. திஸ்திலித்து நாலுநாழி எடுக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்குக் கொடுக்கலாம். பிரதானமாய் மற்று மருந்துகளுக்கு அனுபானமாக வழங்கப்படும். கிரீத மிஸ்தர்[11], குவையக[12]மிஸ்தர், பிரண்டி[13]மிஸ்துர்களில் இது சேருகின்றது.

கறுவாத்தைலம். Oil of Cinnamon. இது கறுவாப்பட்டையைத் திஸ்திலித்தெடுக்கும் எண்ணெய். புதிதாயிருக்கையில் மஞ்சள் நிறமாயிருந்து படிப்படியாய்ச் சிவப்பாகும். கறுவாப்பட்டையின் மணமுஞ் சுவையும் இதற்குண்டு. இது தண்ணீரிற் றாழும்.

தேயம். இரண்டுமினிம்[14] முதல் ஐந்து மினிம் வரைக்குக் கொடுக்கலாம். இது நல்ல ஸ்திமுல காமினதி[15]. காய்ச்சலின் பிற்கூறுகளில் மற்றும் ஸ்திமுலங்களோடு கூட்டிக்கொடுக்கப்படும். இரண்டொரு துளியைக் கோறைப்பல்லுக்குளிடப் பற்கொதி சிலவேளை தணியும். கன்னத்திற் பூசத் தலையிடி பெரும்பாலுந் தணியும்.

கறுவாரஞ்சம். Tincture of Cinnamon. சொள். கறுவாப் பட்டை பருக்கன் தூளாக இரண்டரை அன்சு; புரூவுசீது[16] அரைநாழி. மூடியபாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதில் கறுவாவைப் போட்டு இடைக்கிடை

---

1 Line. 2 Volatile. 3 Cinnamic acid. 4 Tannic acid. 5. Aromatic. 6 Stimulant. 7 Carminative, வாயுக்கினி. 8 Spasmodic. 9 Atonic. 10 Menorrhoea, பெரும்பாடு. 11 Chalk mixture. 12 Guaiacum. 13 Brandy. 14 Minim. 15 Stimulant Carminative. 16 Proof spirit.

Digitized By Roja Muthiah Research Library

குலுக்கி, இரண்டுநாளூறவிட்டு, அப்பாற் செயந்தனி[1]யில் ஏற்றி நீர் ஒழுகித் தீர்ந்தபின், சேஷமான ஐந்து அன்சு சீனையும்விட்டுச் செயந்தனிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழிக்குப் போதிய புருவுசீது கூட்டவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைச்சுக் கொடுக்கலாம். ஸ்திமுல காமினதிக் கலவைகளுக்கு இது நல்ல கூட்டு.

கறுவாக்கூட்டுச்சூரணம். Compound Cinnamon Powder. கொள். கறுவாப்பட்டை மா, ஏலக்கொட்டை மா, சுக்குமா, வகைக்கு ஒரு அன்சு. திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்து குழியம்மியில் இட்டு மெல்ல அரைத்து மூடிய சீசாவிற் பேணிவைக்கவும்.

தேயம். மூன்று முதற் பத்துக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

கறுவாப்பட்டை காசுக்கட்டியின் ஊசம்[2], எமதக்சிலதிகாக்தம்[3],சுகந்த சல்வுரிக்கமிலம்[4], காசுக்கட்டிக் கூட்டுச் சூரணம், கிரீத[5] சுகந்த சூரணம், கீனு[6]க்கூட்டுச் சூரணம், ஏலக்கூட்டிரஞ்சம்[7] காசுக்கட்டி ரஞ்சம், லவந்தர்க்[8]கூட்டிரஞ்சம், அவின்வைன்[9] என்பவைகளில் ஓர் கூறாகச் சேருகின்றது.

[இலங்கையில் கறுவா இலையைக் கடற்றண்ணீரில் ஊறப்போட்டு பிற்பாடு திஸ்திலித்து ஓர் எண்ணெய் எடுப்பார்கள். அது கருமஞ்சள் அல்லது கபிலநிறமும் கராம்பைப்போன்ற மணமுஞ் சுவையுமுடையது. ஸ்தெனோசு வைத்தியர் அதைச் சோதித்துக் கராம்பெண்ணெய்யைப் போல அது கா20, ஐ16, என்ற சின்னத்தையுடைய யுசெனிக்கமிலமும்[10]ஓர் தடஸ்த[11] ஐருகாப[12]னுங் கூடிய கலவையென்று கண்டார். ஆயினுஞ் சொற்ப அளவான பெஞ்சொயிக்கமிலம்[13] இதிற் காண்பது ஆச்சரியம். அவுஷத தன்மை உபயோகங்களில் இது கராம்பெண்ணெய்க்கு மெத்தக் கிட்டினது ]

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

சீனக் கறுவா மரம். Cinnamomum Aromaticum. இது சீன தேசத்திலுள்ளது. இம் மரப்பட்டையைத்தான் இலவங்கப்பட்டை என்பார்களாம். சீனத்திலிருந்து சிங்கப்பூர்வழியாய் யுரோபத்துக்கும், இந்துவுக்கும் ஏற்றப்படும் பட்டையும் இதுதான், பெரிய லவங்கப்பட்டை மலையாளக்கரைக்குரியதென்பதும் நிச்சயம் போல. ஆயினும் இதின் மரம் ஏதென்பது நிதானமாகவில்லை. ஒருவேளை கறுவாமரமாக இருக்கலாம். கறுவாமரம், திருவாளங்கோடு மலையாளங்களிலும் சென்னை மேற்குக் கரையிலுள்ள மற்றும்பகுதிகளிலும் வாடிக்கையாயுண்டு. காட்டுக் கறுவாவின் உட்பட்டை பச்சையாயிருக்கையில் வீறான கறுவாமணமுஞ் சுவையுமுடையது. கவனமாய்க் காய்ச்சி ஆயத்தப்படுத்தினால் நல்ல பேரிலவங்கப்பட்டையாகும். (58) பேரிலவங்கப்பட்டை ஒற்றைச் சுருள்களாக வரும். இரணைச் சுருள்களுக்கு அதிகமாய் வருவது அரிது. கறுவாப்பட்டையைப் பார்க்கத் தடிப்பானது; வெளிப்பக்கங் கறுவாப்பட்டையைப் பார்க்க, கருமையுங் கருங்கபிலமும், மங்கலுமானது. உட்பங்கின் முறிவு அதிக நொருக்கலும் நார்க்குறைவுமானது. மா அதிலுங் கருங் கபில நிற

1 Percolator. 2 Infusion of Catechu. 3 Decoction of Hematoxylum. 4 Aromatic Sulphuric acid. 5 Chalk. 6 Kino, 7 Compound tincture of Cardamom. 8 Lavender. 9 Wine of opium. 10 Eugenic acid. 11 Neutral. 12 Hydro Carbon, 13 Benzoic acid.

(58) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

மானது. அதிகமாய் இதின் மணமுஞ் சுவையுங் கறுவாவைப் போன்றதா யினும் சுவை அவ்வளவு இனிப்பற்றதும் அதிக காரமுமாய்ப் பிறகு கைக்கும். மணம் அதைப்போல் நல்ல மணமல்ல. இதைத் திஸ்திலிக்க ஓர் அத்திர எண்ணெய்வரும். அதின் தன்மை உபயோகங்கள் கறுவாஎண்ணெய்யைப்போலிருக்கும். ஏதோவகைக் கறுவாவின் மலராத பூக்களாகிய இலவங்கப்பூ, விசேஷமாய்ச் சீனத்திலிருந்து கொண்டுவரப்படும். திருவாங் கோட்டுக் கடைகளில் வந்த ஓர்வகையான இலவங்கப்பூவை காட்டுக்கறுவாப்பூவென்று வாறிங்குபண்டிதர் கண்டார். அந்த ஊரார் இதைப்பல வகையாகக் கலந்து தியறியம்[1], திசந்தெரி[2], இருமல்களுக்குக் கொடுப்பார்கள். கறுவா இலவங்கங்கங்களுக்குரிய காமினதித்தன்மை இதற்கும்உண்டு.

தமாலக்கறுவாமரம். Cinnamomum Tamala. யுகலிப்தடுக் கறுவாமரம். C. eucalyptoides. இந்த இனங்கள் இரண்டும் தாளிசம் என்றுஞ் சொல்லப்படும். இவைகளின் இலைகளும் ஒருவேளை இந்துவுக்குரியஅல்லது அங்கே வளர்க்கப்பட்ட வேறு இனங்களின் இலைகளுமே தாளிசபத்திரியென்று சொல்லப்படும். இதற்குரிய ரோசன[3],சுவேதன[4] தன்மைகளைப்பற்றி இது முன்னோருக்குள்ளே கீர்த்திபெற்றது. இந்து பதார்த்தசாரத்தில் இது ஓர் சரக்காகும். கறுவாவுக்குரிய சுகந்தம், கார்ப்பு ஒருவேளை காமினதித் தன்மை தானும் இதற்குண்டு. இவை விசேஷமானதல்ல.

பார்தேனச்சிலக் கறுவாமரம். Cinnamomum parthenoxylon. இது பிணங்கு சுமத்திறம் யாவதீவுகளின் சோலைகளிலுள்ள மரம். இதின் பழம் நல்ல பல்ச[5]மணமுடையது. அதிலே ஒரு எண்ணெய் வரும். அது வாத நோய்களுக்கு மெத்த உவந்ததாம். வேரின் இன்பூச[6]மானது, சசுவிரஸ்[7]வாடிக்கையாய்க் கொடுக்கப்படும் நோய்களுக்கு வழங்கப்படும். இதுதான்கீழ்த்தேச சசுவிரஸ் என்று ஜக்கென்பவர் உத்தேசிக்கிறார். இந்த எண்ணஞ் சரியானால் தெனசரிம் நாடுகளில் வளர்ந்து பிரமரால் குமாந்தென்[8] என்று அழைக்கப்படுகிற லொறூசி[9]மரங்களுக்கு இம்மரம் சரியாயிருக்கவேணும். இதின் வேர் தச்சுவேலை வீட்டுக்கட்டுகளில் மிகுதியாய் வழங்கப்படும். மணம் சசுவிரஸைப் போன்றது. வாறிங்கு பண்டிதரால் அதற்குப் பதிலாக இது வழங்கப்பட்டாலுங் கண்டபேறுகள் திருத்தியானவல்ல. வாகடச்சசுவிரசுக்குப் பதிலாகுமென்றெண்ணப்பட்ட நிபால் சசுவிரஸ்பட்டை கிளாண்டுலிவிக[10] கறுவா மரத்தின் பட்டையே. இந்த மரம், நிபால், சிக்கிம், புதான், கசியதேச மலைகளில் உள்ளது. இதைப்பற்றி வாலிக்கு பண்டிதர் விபரம் எழுதியிருக்கிறார். இதுவரையில் ஆராய்ந்ததைவிட, இன்னும் இதைப்பற்றி ஆராய்வது நல்லது.

## சந்தலாசியங்கள்.
## SANTALACEAE.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

சந்தனக்கட்டை. Sandal wood. இது கீழ்த்தேச பதார்த்தசாரத்தில் ஒரு சரக்கு. சுரங்கள், அசீரணம், நெஞ்சிடி, முதலிய அனேக நோய்களில் வழங்கப்படும். சந்தனக் கட்டையைக் கழியாயரைத்து, எரிசிப்பிலசு[11],

1 Diarrhoea. 2 Dysentery. 3 Stomachic. 4 Sudorific. 5 Balsam. 6 Infusion. 7 Sassafras, 8 Humanthen. 9 Lauraceous tree. 10 Cinnamomum glanduliferum. 11 Erysipelas.

Digitized By Roja Muthiah Research Library

தாளிக தாபிதங்களுக்கும், காய்ச்சல்களிற் கன்னச் சுளிகளுக்கும், சரும நோய்களில் எரிவு சொறிவைத் தணிப்பதற்கும் பூசுதல் என்ற வகுப்பான சுதேசிகளுக்குள்ளேயும், தற்காலத்தில் மெத்த வாடிக்கை. ரோசு வைத்தியர் சந்தனக்கட்டையை மாவாக்கியும் க்வாத[1]மாக்கியுங் கொடுத்துப் பார்த்து, ஸ்திமுல[2]மாக அதின் செயல் சொற்பமென்றும், இரத்தோட்டத்தைக் குறைக்குந் தன்மையை இதிற் கவனித்தோமென்றும், சிலரில் உவட்டிப்பை உண்டாக்கினதென்றும் எழுதியிருக்கிறார், ரிமீஷ[3] சுரங்களுக்கு இதைக் கொடுத்தபோது, இது சுவேதனியாய்ச் சேஷ்டித்து இதயத் துடிப்பின் பெலனைக் குறைக்காமல் அதின் கெதியைக் குறைத்தது. இக் கட்டையைத் திஸ்திலிக்க[4] இதின் வாசனையையுடைய வெண்மஞ்சள் நிறமான அத்திர[5]எண்ணெய் நூற்றுக்கு இரண்டு மூன்று பங்கு வரும். (59) இந்துவில் இந்த எண்ணெய் விசேஷமாய் வாசனைக்காகவே வழங்கப்படும். ஆயினும் கனோறீய[6]த்துக்கு இது மருந்தாகுமென்று கிளஸ்கு நகரத்திலுள்ள என்றேசன் வைத்தியர் காட்டியிருக்கிறார். ஐந்துவருஷத்தில் நூற்றுக்கதிகமானபேருக்கு இதைக் கொடுத்து மெத்த நயங்கண்டேனென்று அவர் வாறிங்து பண்டிதருக்கு அறிவித்திருக்கிறார். அவர் இதில் முப்பது மினிம்[7]முதல் நாற்பது மினிம் வரைக்கு மும்மடங்கான திட்டசீதி[8]ற்கரைத்து கறுவா அல்லது லவங்கத்தைலையும் வாசனைக்காகச் சேர்த்து நாள் மூன்றுமுறை கொடுப்பார். சிலருக்கு இரண்டுநாளைக்குள் நயங்காணும். வால்மிளகு, கபேவம்[9] கொடுத்து நயங்காணாத சிலருக்கு இது வாய்க்கிறதாக அவர் கண்டு அவற்றுக்கு இது பெரும்பாலும் மேலானதென்று எண்ணுகிறார். இது நல்ல சுவையும் வாசனையுமுடையதாகையாலும் கபேவத்திலும் திறமாகும். இதற்குச் சிறுநீர் நாற்றம் வீசுவது கவனிக்கப்படவில்லை. என்றேசன் வைத்தியர் இம்மருந்திற் சித்திகண்டிருப்பதால் சொற்ப செலவோடு அதிகமாய் இதைச் சம்பாதிக்கக்கூடிய இந்துதேசத்தில் இன்னும் இதைக்கொடுத்துச் சோதிப்பது சரி.

## அரிஸ்துலோகியசியங்கள்.

## ARISTOLOCHIACEAE.

### சேபந்தாரி. SERPENTARY.

வாசம். வட அமரிகம்.

வாகடபகுதி. காய்ந்த வேர். இது ஏறக்குறைய மூன்றுஇஞ்சு நீளமும் ஏராளமான நுண்ணிய கூந்தல்களையும் உடைய திரண்ட சிறுத்த வேர். இது மஞ்சள்நிறமும் நல்ல பூர மணமும் கார்ப்புங் கைப்புமுள்ள பூரச் சுவையுமுடையது. இதிலே ஓர் அத்திரஎண்ணெய்யும் கைப்பான எசிறுத்திவுமிருக்கும்.

தன்மை. ஸ்திமுலம், தொணிகம்[10], சுவேதனி[11].

---

1 Decoction. 2 Stimulant. 3 Remittant Fever. 4 Distil. 5 Volatile. 6 Gonorrhoea. 7 Minim. 8 Rectified spirit. 9 Copaiva. 10 Tonic, ஓசதி. 11 Diaphoretic.

(59) அனுபர்தம்பார்.

**உபயோகம்.** காய்ச்சலின் பிற்காலிலும் அசத்துவ[1]வகைகளிலும் இது உதவும். விஷமுள்ள பாம்புக்கடிக்கு இது மருந்தென்று முன்னே கீர்த்தி பெற்றது. சிலவகையான குன்மம், குவாதம்[2], சருமநோய்களுக்கும் வழங்கப்பட்டது. பலவகையான தொண்டைநோய்களுக்குக் கார்கி[3]லாகவும் வழங்கப்பட்டது.

**தேயம்.** காய்ந்த வேரிற் பத்து முதல் முப்பது கிறேன் வரைக்கு இன்னூசமாக்கிக் கொடுக்கவும்.

**ரசிதங்கள். சேபந்தாரியின்னூசம்** Infusion of Serpentary, கொள். சேபந்தாரி வேர் கால் அன்சு; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டுமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் மூன்று நாலுமுறை கொடுக்கவும்.

**சேபந்தாரிரஞ்சம்.** Tincture of Serpentary. கொள். சேபந்தாரி வேர் இடித்து, இரண்டரை அன்சு; புரூவுசீது[4] அரைநாழி. சேபந்தாரிவேரை, அடைத்த பாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதில், இரண்டு நாளூறப் போட்டு இடைக்கிடை குலுக்கி அப்பாற் சியந்தனி[5]யில் வார்த்து, நீர் ஒழுகித்தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்குக் கொடுக்கலாம். ஸ்திமூல சுவேதன கலவைகளுக்கு இது நல்ல கூட்டு.

சின்கனகூட்டிரஞ்சத்திற் சேபந்தாரிவேர் ஓர் கூறுகச் சேருகின்றது.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**ஈச்சுரமூலி.** Aristolochia Indica. பெருமருந்தென்றுஞ் சொல்லப்படும் இந்தப் படர்செடி, இந்துவடங்கலுமுள்ளது. மெத்தக் கைப்பான இதின் வேரை, ஸ்திமூலம், தொனிகம், எம்மெனகக்கு என்று சுதேசிகள் மெத்த மதித்து முறைச்சுரங்களுக்கும் வேறு நோய்களுக்கும் கொடுப்பார்கள் இதின் செயலைப்பற்றி நிச்சயமாய் ஒன்றும் அறியப்படவில்லை. ஆயினும் சுரக்கினியாக இதின் தன்மைகளை ஆராய்தல் தகுமென்று கெர்ப்பாத்திரிக்கு வைத்தியர் சொல்லியிருக்கிறார். வேரின் சுகந்த கைப்பைப் பிடித்துக் குன்மத்துக்கு இது உதவுமென்று விளமிங்கு பண்டிதர் எண்ணுகிறார். வயிற்று நோய்களுக்கு நல்லதென்றது கிப்சன் பண்டிதர் எண்ணம். இது தோற்றமான செயல்களுள்ளதாயிருப்பதாலும், சுதேசிகள் இதை மெத்த மதிப்பதாலும் இன்னும் இதை ஆராய்வது நல்லது. இது நாகபாம்பு கடிக்கு மாற்று என்று பேர்பெற்றது. நாகபாம்பின் கடிக்கு இதுமாற்று என்ற எண்ணத்தைப்பற்றியே ஆதியிற் குடியேறின போட்டுக்கீசர் இதற்கு நாகவேர்[6]என்று பேரிட்டார்கள். இலையும் இலைச்சாறும் இதற்கு நல்லதென்று லவதரும் பிற்காலத்திற் காட்டியிருக்கிறார். அவரது சாட்சி மெத்தப் பெலப்பு. (60) ஆயினும் பாம்புகடியையும் அதற்கு மாற்று என்பதையும்

---

1 Adynamic. 2 Gout. 3 Gargle. 4 Proof spirit. 5 Percolator. 6 Raiz de cobra.

(60) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

பற்றி அனேக சந்தேகங்கள் இருக்கின்றனவாதலால் இதின் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் அத்தாட்சி வேண்டும்.

ஆடுதின்னுப்பாலை. Aristolochia bracteata. இது இந்துதேசம் அடங்கலுஞ் சாதாரணமாயுள்ள பூடு. இதற்குக் கெட்ட கைச்சற் சுவையிருப்பதில் இதுவும் முர்தின இனங்களை ஒத்திருக்கின்றது. இதற்குக் கிருமிகொல்லித் தன்மை உண்டென்ற எண்ணத்தினாலும் ஒருவேளை கிருமிகளைக் கொல்லுவதற்காக, இதின் இலைச்சாறு கெட்ட புண்களுக்கு இடப்படுவதினாலும் இது இந்துஸ்தானிப் பாஷையில் கீரமார்[1] எனப்படும். இதின் இலைக்குக் கிருமிகொல்லித் தன்மை உண்டென்ற நம்பிக்கை சுதேசிகளுக்குள்ளே இருந்தாலும் அத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு யுரோப வைத்தியருடைய அநுபவத்தைக் கொண்ட அத்தாட்சி தேவை. இது முறைச்சுரங்களுங்கு அந்திபிருடி[2]யாகப் பெயர்பெற்றிருக்கின்றது என்று தல்செல் கிப்சன் என்பவர்கள் எழுதிய வம்பாய் விலோறம்[3] என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு எம்மெனகக்குத்தன்மை[4]யுமுண்டாம். சிந்துதேசத்திலே பிரசவநோக்காட்டை அதிகப்படுத்துவதற்கு இதின் காய்ந்த வேரில் ஏறக்குறைய ஒன்றரைத்திருமைத் தூளாகவாவது இன்வூச[5]மாயாவது கொடுப்பார்களென்று நூற்றன் பண்டிதர் அறிவித்திருக்கிறார்.

பிறகந்திவலிச்சிச் செடி. Bragantia Wallichi. இது மலையாளக் கரையிலுள்ள சிறுச்செடி. அங்கே அல்பம்[6]என்ற பெயரால் அது வழங்கும். இதின் இலைச்சாறு இந்த வகுப்பைச் சேர்ந்த வேறும் பல பூண்டுகளின் சாற்றைப் போலப் பாம்பு விஷத்துக்கு, விசேஷமாய் நாகபாம்பின் விஷத்துக்கு மாற்றும். உடம்பில் அல்பம் ஏறினசணமே விஷம் இறங்கும் என்ற கருத்துள்ள ஓர் பழமொழி மலையாளிகளுக்குள்ளே வழக்கம். ரோமப்பிருகந்திச்[7]செடி என்றது கடுங் கசப்புள்ளது. காசுவீல்டர் சொல்லுகிறபடி யாவகர் இதை எம்மெனகக்காய் வழங்குவார்கள்.

## யுவார்பியாசியங்கள்.

## EUPHORBIACEAE.

### கஸ்கரிலம். CASCARILLA.

வாசம். பகாமத்தீவுகள்.

வாகடபதுதி. பட்டை. இது இரண்டு மூன்று இஞ்சு நீளமும் இரண்டு லீன்[8] முதல் ஐந்து லீன்பருமையுமுள்ள சுருள்களாக வரும். மங்கற் கபிலநிறமானது. வெளியில் வெண்மையான தேமல் படர்ந்திருக்கும்; குறுகின ராளமுறிவாக ஒடியும். உறைப்பான கைப்புச்சுவையுள்ளது; எரிக்க

1 Kiramar, 2 Antiperiodic. 3 Flora of Bombay. 4 Emmenagogue. 5 Infusion. 6 Alpam. 7 Bragrantia tomentosa, 8 Line.

Digitized By Roja Muthiah Research Library

வாசனை வீசும்; அதிலே அத்திர[1]எண்ணெய்யும் தனினும்[2] கஸ்கரிலின்[3]என்ற கைப்புள்ள கிரிஸ்தற்[4] பதார்த்தமும் அடங்கியிருக்கின்றது.

தன்மை. இது சுகந்தமும் கைப்பும் தொணிக[5]முமானது.

உபயோகம். இது தேக பெலவீனத்துக்கும், அசத்துவ[6]குன்மத்துக்கும், திசந்தெரி[7] தியறீயங்களின்[8] பிற்காலங்களுக்கும், உபயோகமானது. முற்காலத்தில் முறைச்சுரங்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் தற்காலத்தில் அதற்கு வழங்கப்படுவதில்லை. காய்ச்சல்களினின்று சகாயப்பட்டுத் தேறுகிறவர்களுக்கு இது உத்தமமான தொணிகமாகும்.

தேயம். பட்டையைத் தூளாக்கி அதிற் பத்துக் கிறேன் முதல் முப்பது கிறேன்வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். கஸ்கரிலவின்வூசம். Infusion of Cascarilla. கொள். கஸ்கரிலபட்டை பருக்கன் தூளாக ஒரு அன்சு; கொதிநெந்நீர் பத்துஅன்சு. மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

கஸ்கரிலரஞ்சம். Tincture of Cascarilla. கொள். இடித்த கஸ்கரிலபட்டை, இரண்டரை அன்சு; புரூவசீது[9]அரைநாழி. மூடிய பாத்திரத்தில் கஸ்கரில பட்டையைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப் போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[10]யில் வார்த்து நீர் ஒழுகித்தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவசீது சேர்க்கவும்.

தேயம். ஒரு திராம் முதல் இரண்டு திராம் வரைக்குக் கொடுக்கலாம். தொணிகக் கலவைகளுக்கு இது நல்ல அனுமருந்து.

## நேர்வாளச்செடி. CROTON TIGLIUM.

வாசம். இது இந்து இலங்கை மொலக்கத்தில் உண்டாகும்.

வாகடபதத்தி கொட்டை. இது கோப்பிக்கொட்டையளவு பருமையும் வட்டிப்பும உண்டையுமானது. ஓடு கருமையாயும் வரிகள் ஓடியதாயுமிருக்கும். போர்வைச்சவ்வு மெல்லிதும் நொருக்கலுமாய்ச் சொற்பமணங்கொண்டிருக்கும். பருப்பு மஞ்சள்நிறமுள்ளஅல்புமினே[11]. அதற்குள்ளே இலையை உடைய பெரிய துவிகதிலீத[12]முளை இருக்கும். பருப்புக்கு மணமில்லை. சுவை முதற் சாந்தம்; பிறகு கார்ப்பும் உறைப்புமானது.

தன்மைஉபயோகங்கள். இது கடுமையான நீரடிக்கும் பேதி. மிஞ்சிய தேயத்தில் மயக்கஎழற்சி[13]நஞ்சாகும். வெளியிற் பூசினால் அழற்றி, ஸ்துமுல[14]மும் ருபிவாஷ[15]னுமாகும்.(61)

ரசிதங்கள். வாளதேல். Croton oil. இது நேர்வாளக்கொட்டையைப் பிழிந்தெடுக்குமெண்ணெய். சற்றே பிசுபிசுப்புள்ளது; கபிலமான மஞ்சள்நிறமுங் கார்ப்பான சுவையும், சொற்பமான உவட்டுமணமுமுடையது. சோதனை. சமபருமமான அலக்கா[16]லோடு குலுக்கிச் சொற்பசூடுகாட்ட, தெ

---

1 Volatile, 2 Tannin. 3 Cascarilline. 4 Crystal. 5 Tonic, 6 Atonic. 7 Dysentery. 8 Diarrhoea. 9 Proof spirit. 10 Percolator. 11 Albumen. 12 Dicotyledon. 13 Narcotico-irritant. 14 Stimulant. 15 Rubefacient. 16 Alcohol.

(61) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

ளிந்த நீராகும். இது ஆறும்போது ஏறக்குறைய முக்கால்வாசி எண்ணெய்பிரியும்.

தன்மை. இது கடுமையாய் நீரடிக்கிற பேதி. வெளியிற் பூசினால் எரிவுகண்டு ருபிவாஷ[1]னும் எதிரழற்சியுமாகும்.

உபயோகம். நீர்க்கோவை வியாதிகளுக்கும், கடுமையான மலக்கட்டுக்கும், விசேஷமாய்ப் பைத்தியமாதி மூளைநோய்களோடு கூடிய மலக்கட்டுக்கும், அபுபிலெக்ஸி[2]க்கும், சுறுக்காயுந் திறமாயும் பேதிபண்ணவேண்டிய மற்றும் நோய்களுக்கும் இதைக் கொடுப்பது நலம்.

தேயம். அரைத்துளி தொடங்கி இரண்டு மூன்று துளி வரைக்கும், அப்பத்துண்டோடு சேர்த்துக் குளிகையாக்கிக் கொடுக்கலாம். அபுபிலெக்ஸியிலும் மூடத்திலும் நோயாளி விழுங்க எலாதிருக்கிற மற்றுநோய்களிலும் இந்த எண்ணெய்யை அடிநாவிலிட்டாற் போதும். கடுமையாய்ப் பேதிபண்ணினால் எலுமிச்சஞ்சாற்றையாவது வின்னாரியையாவது தண்ணீரோடு கலந்து தாராளமாய்க் குடிக்க நிற்கும்.

வாளதேலலினிமேன். Liniment of Croton oil. கொள். வாளதேல் அரைஅன்சு; ஒலீவெண்ணெய் மூன்றரை அன்சு. கலக்கவும்.

காலிக[4]வாதம், சோர்வுகள், பொருத்துநோய்களுக்கும், கசம், காலிகபுறங்கீது[5], மற்றுஞ் சுவாச நோய்களில் நெஞ்சுக்கும் பூச இது நல்ல ஸ்திமுலந்[6] பூச்சு. பூச நீர்ப்பருக்கள் தோன்றும்.

பலியாண்டவாளம். Croton Polyandrum. பவானவாளம். C. Pavana. நேட்டிலைவாளம். C. Oblongifolius. என்ற மூன்று செடிகளின் கொட்டைக்கும் நேர்வாளத்துக்குரிய விரேசனத்தன்மையுண்டு. இந்தச்செடிகள் இந்துவடங்கலுமுண்டு.]

## ஆமணக்கு. CASTOR OIL PLANT.

வாசம். இது பூமியின் மத்திம உஷ்டண பகுதிகளெங்கும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. கொட்டை. (62) இது சற்றுத் தட்டையான நீண்டவட்டிப்பு வடிவுடையது. ஏறக்குறைய நாலு லீன் நீளமும், மூன்று லீன் அகலமுமானது. நிறை இரண்டு கிறேன் முதல் எட்டுக் கிறேன் வரைக்கிருக்கும். வெளிப்பக்கம் நரையான அல்லது செங்கபிலமான அல்லது கருங்கபிலமான புள்ளிகளும் வரிகளுமுள்ளது. கொட்டை மெல்லிய அழுத்தமான தோலால் போர்க்கப்படும். இத்தோலில் இரண்டுபடலமுண்டு. வெளிப்படலம் தடித்தது, கருமையானது. உட்படலம் மெல்லிது, வெளுறினது. பருப்பு எண்ணெயுள்ள அல்புமினே[7]. அதற்குள்ளே பருத்த, துவிகதிலீத[8], இலையுள்ள முளையிருக்கும்.

தன்மை உபயோகங்கள். இது விரேசனி. பருந்தேயத்தில் மயக்கமுற்சி நஞ்சு கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதினாலேயே அது வாகடத்துக்குரியதாகின்றது.

ரசிதம். ஆமணக்கெண்ணெய். Castor oil. இது ஆமணக்கங்கொட்டையிலிருந்து பிழியப்படும். பிசுபிசுப்பானது; நிறமற்றது, அல்லது

---

1 Rubefacient 2 Apoplexy. 3 Vinegar. 4 Chronic. 5 Bronchitis. 6 Stimulant. 7 Albumen. 8 Dicotyledon.

(62) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

வெண்மஞ்சள் நிறமுள்ளது. சற்றே உவட்டுமணமும் சொற்பங் கார்ப்பான சுவையுமுடையது. சமபங்கு அலக்கா[1]லிலும் இரட்டிப்பங்கு திட்டசீதி[2]லும் முற்றாய்க் கரையும்.

**தன்மை உபயோகங்கள்.** இது இலேசான நல்ல பேதி. பிள்ளைகளுக்கு உவந்தது; பிரசவ ஸ்திரிகளுக்கும், குடல்களின் தாபித[3]த்தில் விரேசனங் கொடுக்கக்கூடியதாயிருக்கையிலும் சனனசல உறுப்புகளின் தாபிதத்துக்கும் உவந்தது. சிலவகையான குன்மத்திலும்,குடல்களின் ஸ்பச[4]நோய்களிலும் இதால் நயமுண்டாகும்.

**தேயம்.** வளர்ந்தோருக்கு ஆறு கிறாம் முதல் பத்துக் கிறாம் வரைக்குக் கொடுக்கலாம். பிள்ளைகளுக்கு ஒரு கிறாம் முதல் இரண்டு கிறாங் கொடுக்கலாம்.

சவட்கலோடியம்[5],கடுகக்கூட்டுலினிமென்[6], கலமற்[7]கூட்டுக் குளிகை என்பவற்றில் ஆமணக்கெண்ணெய் ஓர் கூறாகச் சேருகின்றது.

[பாலை ஊறப்பண்ணுந் தன்மை ஆமணக்கமிலைக்கு உண்டு. இலையை அவித்தாவது அதின் சாற்றைப் பிழிந்தாவது உள்ளே கொடுக்க அதுஊறும். இலையை அவித்து மென்சூட்டோடு ஸ்தனங்களுக்கு வமன்றுஷம்[8] பிடிப்பதும், பாப்பையாய் அணைப்பதும் உண்டு. இலையை வாட்டித் தனங்களுக்கு அணைத்தாலுங் காரியஞ் சித்தியாகுமென்று சாற்றுவைத்தியர் எழுதியிருக்கிறார்.]

## கமாலம். KAMALA.

**வாசம்.** இது இந்துவடங்கலும் மலைநாடுகளில் உண்டாகும்.

**வாகடபகுதி.** கோதை மூடியிருக்கிற நுண்ணிய கோளங்களான மா. இது கருஞ்சிவப்புநிறமும் மெல்லிதும் பருபருக்கையுமானது. இதைத் தண்ணீரோடு கலப்பது வில்லங்கம். அலக்காலிற் போட்டுக் காய்ச்ச மிகுதியான பங்கு அதிலே கரைவதால் சிவந்த நீராகும். மிகுதியானபங்கை ஈதர்[9] கரைக்கும். கரையாமற் சேஷமாயிருப்பது மிகுதியாய்க் கற்றையான மயிரே. இதில் மணலாவது மண்வகையாவது கலவாமல் இருக்கப் பார்க்க வேண்டும்,

**தன்மை உபயோகங்கள்.** இது கிருமிகொல்லியும் விரேசனியுமாகும். விசேஷமாய்த் தீனியப்புழுவை[10]க் கழற்றுவதற்கு உவந்தது. (63)

**தேயம்.** இரண்டு கிறாம் முதல் மூன்று கிறாம் வரைக்குக் கொடுக்கலாம். இந்தப் பிரமாணத்திற் குடலிற் கிறமாய்ச் சேஷ்டித்துப் பெரும்பாலும் உவட்டிப்பையும் முறுக்கையும் உண்டாக்கும். கிருமிகள் பலமுறையும் மூன்றாம் நாலாங் கழிச்சலிற் செத்து விழும்.

**ரசிதம். கமாலரஞ்சம்.** Tincture of Kamala. கொள். கமாலம்,ஆறு அன்சு; திட்டசீது[11] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் எழுநாளூறவிட்டு, இடைக்கிடை குலுக்கி; அப்பால் சீலையில் வடித்துப் பிழிந்து வடித்த அரைநாழி சேற திட்டசீது சேர்க்கவும்.

---

1 Alcohol. 2 Rectified spirit. 3 Inflammation. 4 Spasmodic. 5 Flexible collodium. 6 Linimentum sinapis compositum. 7 Calomel. 8 Fomentation. 9 Ether 10 Taenia. 11 Rectified spirit.

(63) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். அரை அன்சைச் சுகந்தமான தண்ணீர் கொஞ்சத்தில் விட்டுஇரண்டு சமதேயமாக்கி, மூன்றுமணிக்கொருமுறை கொடுக்கவும். மாவைப்பார்க்க இது அதிக சாந்தமாய்ப் பேதிபண்ணி கிருமிகளில் அதைப்போலச் சரியாய்ச் சேஷ்டிக்கும்.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

நாட்டக்ரோடு. Aleurites triloba. மொலக்கத்திலிருந்து பெயர்க்கப்பட்டு இந்துவின் பல பகுதிகளிற் செய்கைபண்ணப்படுகின்ற இந்த மரத்தின் கொட்டைப் பருப்பைப் பிழிய அதிக அளவான திரவெண்ணெய்[1] வரும். இது வருணம் பூசல் முதலியவற்றுக்கு லீன[2] வெண்ணெய்யைப்பார்க்கத் திறமானதென்று சென்னைமருந்து ஆராய்ச்சியாரால் தீர்க்கப்பட்டது. இதின் அவுஷத தன்மையை ஒரேருக்கி வைத்தியர் ஆராய்ந்து, ஒரு அன்சு, இரண்டு அன்சு தேயத்தில் இது சாந்தமான நிச்சய விரேசனியாய்ச் சேஷ்டித்துக் குடித்த மூன்று மணிமுதல் ஆறு மணிக்குள்ளே, பித்தநீரைத் தாராளமாய்க் கழிக்கிறதென்றும் உவட்டு வலிப்பு முதலிய கெட்ட குணங்கள் இதாலுண்டாகாதென்றுங் கண்டார் சாந்தமான செயலிலுஞ் சேஷ்டிக்கு நிச்சயத்திலும் இது ஆமணக்கெண்ணெய்க்கு ஏறக்குறையச் சரியானதாய்க் காணப்பட்டது. மேலும் சுவை மணமற்றதாய், இருக்கிறபடி கொடுத்தாலென்ன, இமல்ச[3]மாய்க் கொடுத்தாலென்ன, உவட்டைக் கிளப்பாமற் பேதிக்கப்பண்ணுகிறபடியால் அதிலும் இது நயந்தது. இன்னும் இதை ஆராய்தல் நல்லது.

காட்டாமணக்கு. Jatropha Curcas. இது பூமியின் உஷ்டண பகுதிகளெங்கும் உண்டாகும். இதின் கொட்டையைப் பிழிய, மெத்தச் சலனமுள்ள நிறமற்ற அல்லது வெண்மஞ்சள் நிறமான திரவெண்ணெய் நூற்றுக்கு முப்பது பங்கு வீதமாய் வரும். இது 24 பங்கு அலக்கா[4]லிற் கரையாமல் மெத்தச் சொற்பமாய் மாத்திரங் கரைவதில் ஆமணக்கெண்ணெய்க்கு வித்தியாசமானதென்று கூபேட்டர் சொல்லுகிறார். இதிலே பன்னிரண்டு துளிமுதல் பதினைந்து துளி வரைக்கு உள்ளே கொடுக்க அவ்வளவு நிச்சயமாய்ச் சேஷ்டியாதிருந்தாலும் ஒரு அன்சு ஆமணக்கெண்ணெய்யைப் போலச் சேஷ்டித்ததென்று கிரிஸ்திசன் பண்டிதர் பரீட்சித்துக் கண்டார். இது எப்போதும் ஒரே மாதிரியாய்ச் சேஷ்டியாததைப்பற்றி எதின்பரு டிஸ்பென்சதுறி[5]யில்விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. விரேசனியாய் வழங்குவதற்கு இது பெரிய தடையாகும். கொட்டைகள் அதிதேயத்தில் மயக்கழற்சி[6]நஞ்சாகச் சேஷ்டிக்கும், கிருச[7]வெண்ணெய் காலிகவாதத்துக்கு நல்ல பூச்சாகும். ஆமணக்கமிலையைப் போலப் பாலை ஊறப்பண்ணுவதற்கு இதன் இலைகளைக் கஷாயமாகவும் பாப்பையாகவும் ஸ்தனங்களுக்கு இடுதல் வேடைல் முனையில் பெருவழக்கம். சீமையாமணக்குக் J. Multifida கொட்டைகள் வாளத்தைப் பார்க்கக் கடுமையானவிரேசனியாம். ஒரு ஆளுக்கு மூன்று கொட்டைகள் நஞ்சாய் முடிந்ததை வாறிங்கு பண்டிதர் கண்டார். கடுமையான வாந்திபேதியும் இரைப்பையிலே கடிய குத்தும் எரிவும் சீவ தத்துவங்கள் குன்றலுமே பிரதானமாய் இதாற் கண்ட குணங்

---

1 Fixed 2 Linseed oil. 3 Emulsion. 4 Alcohol, 5 Edinburgh Dispensatory. 6 Narcotico irritant 7 Diluted.

Digitized By Roja Muthiah Research Library

கள். தண்ணீர் கலந்த எலுமிச்சஞ்சாறும் ஸ்திமுலங்க[1]ளுங் கொடுத்ததால் வாலிபனான அந்த நோயாளி சுகமடைந்தான். கிளைமுருங்கை[2]யைப்போற் தோற்றுவதால் முருங்கைப்பூடு என்ற பெயருடன் இது இந்துவிலுள்ள யுரோபருடைய தோட்டங்களில் அநேகரால் உண்டாக்கப்படும். ஊதாளை J. Glandulifera. என்பது ஆதியில் ஆபிரிக்கத்திலுள்ளதுபோலும். ஆனாலும் இப்போ இந்துவடங்கலுங் குளங்களுக்குக் கிட்ட மிகுதியாயுண்டு. இதின் கொட்டையைப் பிழிய ஓர் திரதேல்[3]வரும். இது வாதம் சோர்வுகளுக்கு நல்ல தீவன பூச்சென்று இந்துக்கள் மதிப்பார்கள்.

சதுரக்கள்ளி. Euphorbia Antiquorum. திரிகள்ளி. E. Tirucalli. நிவுலியக்கள்ளி. E. Nivulia. இந்துவிலுள்ள இந்த மூவகைக்கள்ளிகளிலும் பால் நிரம்பவுண்டு. இப்பால் பச்சையாயிருக்கையில் கடுங் கார்ப்பானது, விரேசன, கிருமிகொல்லித் தன்மைகளும் வேறுந் தன்மைகளும் இதற்குண்டென்று சுதேசிகள் சொல்லுகிறார்கள். ஆயினும் இவற்றைப்பற்றி நம்பிக்கையாய் அறியப்பட்டது சொற்பம். கடைகளில் வரும் யுவாபியம்[4]என்ற சரக்கு நெடுங்காலமாய்ச் சதுரக்கள்ளியின் பேறு என்று எண்ணப்பட்டதை அமில்தன் என்பவர் தவிர்த்திருக்கிறார். திரிகள்ளிப் பால் காய்களை மாற்ற நல்ல பூச்சாகும். இது மற்றுங் கள்ளிப் பால்களைப் போலவே காரமற்ற எதும் எண்ணெய்களோடு கலந்து வாதத்துக்குப் பூசப்படும். இறுகின பால்போன்ற சாறு முற்காலத்தில் சிவ்விசு[5] நோய்களுக்கு மருந்தென்று இந்துவிலே பேர்பெற்றிருந்தது. இந்த நோய்க்கு அந்தி சந்தி ஐந்துகிறேன் தேயத்தில் இது உத்தமமான அல்திறவ[6]மானதைக் கண்டேனென்று சாற்று வைத்தியர் அறிவித்திருக்கிறார். நீர்க்கோவை நோயுள்ள ஒரு ஆளுக்கு நிவுலியக்கள்ளி[7]என்ற கள்ளிச்சாற்றை அமுரிதி[8]யாகச் சில கிறேன் தேயத்திற் கொடுத்துச் சகாயந் தோன்றினதென்று காசுவீல்டர் சொல்லியிருக்கிறார்.

இலைக்கள்ளி. Euphorbia nerifolia. இந்துவின் அநேக பகுதிகளில் சுதேசிகள் சர்ப்பதேவியாகிய முன்சாவே இதற்கு ஆதிதேவதையென்று எண்ணுகிறார்களாம். இதின் வேர் பாம்புகடிக்கு மருந்தென்று மெத்தக் கீர்த்திபெற்றது. ஆயினும் நம்பிக்கையான அத்தாட்சியில்லை. இலையிற் பிழிந்தெடுத்த சாறு ஸ்பச[9] ஈளையை மாற்றுவதில் மெத்தச் சித்தியுள்ளதாம். இதால் ஆறுபேருக்கு நல்ல சகாயமுண்டானதென்று வங்காள வைத்திய உத்தியோகத்திலிருந்த அமெஸ்பரி வைத்தியர் குறித்திருக்கிறார். இதின் வகுப்பைச்சேர்ந்த பூண்டுகள் காரமுள்ளவைகளாதலால் இதைக் கவனமாய் வழங்கவேணும்.

நெல்லி. Phyllanthus Emblica. இந்த மரம் இந்துவடங்கலுமுண்டு. பச்சையாயிருக்கையில் இதின் காய் திரண்டு கடுக்காயளவாய் ஆறுபுடையுடையதாய் வட்டிப்பாயிருக்கும். சதை புளிப்பும் விரேசனமுமான சாற்றையுள்ளது. வெள்ளையுங் கோணமுமான கொட்டைகள் அதிலே அடங்கியிருக்கும். காய்ந்து வற்றலானபின்போ அக்காய்கள் வட்டிப்பாகி, வற்றிச் சுருங்கி, கருமையான நரைநிறங்கொண்டு சற்றே சுகந்த மணமும் புளிப்பான கயர்ச்சுவையுமுள்ளதாயிருக்கும். தோற்பதனிட[10] இவ்வற்றல்

---

1 Stimulant. 2 Coral. 3 Fixed oil. 4 Euphorbium. 5 Syphilis. 6 Alterative. பரிஞம். 7 Euphorbia nivulia. 8 Diuretic. 9 Spasmodic Asthma. 10 Tanning.

Digitized By Roja Muthiah Research Library

வழங்கப்படும். குடல்நோய்களுக்குத் துவராக மெத்த மதிக்கப்படும். பற்ருவியாவின் விசிகங்க[1]ளில் தியறீய[2], திசந்தெரி[3]களின் பரிகாரிப்பில் இதாலுண்டான நயத்தைப் பற்றிப் பந்தியசென்பவர் சாட்சியிடுகிறார். மக்நாபுவைத்தியர் இது ஸ்கேவி[4]க்கு மாற்றென்கிறார், ஆயினும் இதுகாரியத்தில் இதற்கு யாதொரு விசேஷ தன்மையில்லையென்பதும் புளிப்பான மற்றுந்தாவர துவர்களுக்கு இது மேலானதல்லவென்பதும் ஏர்வின் பண்டிதர் எண்ணம். அவர் இதிலே அதிக வீதமான கலிக்கமிலம்[5] இருக்குமெங்கிறார். நெல்லிப்பூவுக்குக் குளிர்ந்த விரேசனத்தன்மை உண்டென்று இந்துவைத்தியர் அதை வழங்குவார்கள். பட்டையும் பழத்தின் துவர்த்தன்மையையுடையது. நெல்லிவேரை அவித்து வரட்டிக் காய்ச்சுக்கட்டிக்குச் சரியான தன்மையுள்ள துவரான ஓர் எசிருத்தைச்[6]செய்தோமென்று ரோசுவைத்தியர் அறிவித்திருக்கிறார். மேலும் அதின் சிராயை அல்லது சிறுக்கொப்புகளைச் சேற்றுத் தண்ணீரிற் போட அத்தண்ணீர் தெளியும். ஆகையாற் சுதேசிகள் நெல்லிமரக் குற்றிகளாற் கிணறுகளைக் கட்டிக்கொள்வார்கள். ஆயினும் அவைகளில் மருந்துக்கு உதவுஞ் சத்து மெத்தக் காணப்படுகிறதில்லை. இதுகாரியத்தைப்பற்றி இன்னும் விசாரிப்பது நல்லது.

கீழ்காய்நெல்லி; Phyllanthus Niruri. சிவப்புநெல்லி. P. Urinaria. இந்த இரண்டுபூடுகளும் இந்துவடங்கலும் உண்டாகும். அமுரிதி[7]த்தன்மையுடையனவென்று சுதேசிகள் அவற்றை மதிப்பார்கள். நீர்க்கோவை[8] நோய்களுக்கும் வெட்டைக்கும் சனனசல உறுப்புகளின் நோய்களுக்கும் வழங்குவார்கள். காசவீல்டரும் மற்றும்பேரும் இதற்குச் சார்பாய்ப் பேசியிருக்கிறார்கள். கீழ்காய்நெல்லிச் சாற்றைப் பாலோடு கலந்து செங்கண்மாரிக்குக் குடிக்கக் கொடுப்பார்கள். நோயின் தொடக்கத்திற் கொடுத்தாற் பெரும்பாலும் நயமுண்டாகின்றது.

குப்பைமேனி. Acalypha Indica. இது இந்துவடங்கலுமுள்ள ஓர்பூண்டு. இதைப் பற்றிப் பிதிவைத்தியர் எழுதியிருக்கிறதாவது: இதின் இலைச்சாறு பிள்ளைகளுக்குப் பதனமும் நிச்சயமும் தெதியுமான வமனி[9]யென்று மதிக்கப்படும். இபிகாக்கை[10]ப் போலவே இதற்கும் பேதிச்குந் தன்மையாவது சீவசத்துவங்களைத் தாழ்த்துந்தன்மையாவது மெத்த இல்லை. சுவாசஉறுப்புகளின் விசர்க்கங்க[11]ளாகிய, சளி கபங்களை இது அதிகப்படுத்தும். இதின் சத்தெல்லாம் காய்ந்த இலையின் இன்வூச[12]த்தில் அல்லது பச்சைப்பூண்டிற் செய்த எசிருத்திலே இருக்கவேண்டும். பிழிந்த சாற்றின் தேயம் பிள்ளைகளுக்கு ஒரு சிறுதேய்க்கரண்டி. எக்ஸ்பெக்றற[13]மாகஇதின் உபயோகத்தைப்பற்றி ரோசு வைத்தியர் விதந்து பேசி, இத்தன்மையில் செனிக[14]த்தோடு இதை வகுக்கிறார். குழந்தைகளின் புறங்கிது[15]க்கு இது உவப்பானதென்றும் அவர் கண்டார். மேலும் இலைக்களியைச் சிவ்லிசு[16]ப் புண்களுக்கு இடலாமென்றும் அது விஷப் பூச்சிக் கடிகளின் வருத்தம் அழற்றியைத் தணிக்குமென்றும், அவர் சொல்லுகிறார். வேருக்கு விரேசனத்தன்மை உண்டென்று என்ஸ்லி சொல்லியிருக்கிறார். வேர் இலைகளின் பிழிந்தசாற்றைப் பிள்ளைகளுக்கு விரேசனமாகக் கொடுத்ததனால் பஃதிடு வைத்தியரும் அப்பேச்சை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

---

1 Hospital. 2 Diarrhoea. 3 Dysentery. 4 Scurvy. 5 Gallic acid 6 Extract. 7 Diuretic, 8 Dropsy. 9 Emetic. 10 Ipecac. 11 Secretion 12 Infusion. 13 Expectorant. 14 Senega. 15 Bronchitis, 16 Syphilis.



Digitized By Roja Muthiah Research Library

# பைபராசியங்கள்.

# PIPERACEAE.

## மிளகு. BLACK PEPPER.

வாசம். இது இந்துவிலுள்ள கொடி. மேற்கிந்து தீவுகளிலுஞ் செய்கை பண்ணப்படும்.

வாகடபகுதி. காய்ந்த காய். இது சிறுத்தது, உண்டையானது, சுருங்கினது; இதின் தோல் கபிலக் கறுப்புநிறம். அதற்குள்ளே நரை மஞ்சள் நிறமான உருண்ட கொட்டை இருக்கும். இதின் மணம் சுகந்தமும், சுவை கைப்பான காரமுமானது. இதிலே ஓர் அத்திர[1]எண்ணெய்யும் காரமான ராளமும், பைபெரின்[2] என்ற கிறிஸ்தற்[3] பதார்த்தமும் அடங்கியிருக்கும்.

தன்மை. ஸ்திமுலம்[4],காமினதி[5], அந்திபிறுடி[6]; வெளியிற் பூசினால் ருபிவாஷன்[7].

உபயோகம். அரிச[8] நோய்கள், முறைச்சுரங்கள், வாந்திபேதி, வெட்டை முதலிய நோய்களுக்கு இது வழங்கப்படும். பலவகையான தொண்டைநோய்களுக்கு இது கார்கி[9]லாகும்.

தேயம். பத்து முதற் பதினைந்து கிறேன் வரைக்கு. இதிற் கூடவுங் கொடுக்கலாம். பைபெரினை அந்திபிறுடியாக ஆறு முதற்பத்துக் கிறேன் வரைக்கு நாள் இரண்டுமுறை கொடுக்கலாம்.

ரசிதம். மிளகுலேகியம். Confection of Pepper. கொள். மிளகுதூளாக, இரண்டு அன்சு; கறுவிக்கொட்டை[10].மாவாக மூன்று அன்சு; சுத்த தேன் பதினைந்து அன்சு. குழியம்மியில் இட்டு நன்றாயரைத்துக்கொள்ளவும்.

தேயம். ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். முதியோர் பெலவீனருடைய அரிசநோய்க்கு இது உவந்தது. கடைக்குடல் நுகைந்து இறங்குதலுக்கும் இது உபயோகமானது.

அவின் லேகியம்[11] அவின்கூட்டுச்சூரணங்க[12]ளிலும் மிளகு ஓர் கூறாகச் சேருகின்றது.

## வால்மிளகு. CUBEB.

வாசம். யாவகமும் மொலக்கமும்.

வாகடபகுதி. காய்ந்த காய். இது மிளகளவு பருமையும் உண்டையுமாய்ச் சுருங்கிக் கறுத்துத் தன்னிலும் நீளமான காம்பிற் றொடுத்தபடியிருக்கும். காரமான கர்ப்பூரச் சுவையும், ஓர்வகையான சுகந்த மணமுமுடையது. இதின் ஓட்டுக்குள்ளே வன்மையும், வெண்மையும், உண்டையுமான

---

1 Volatile. 2 Piperine 3 Crystal. 4 Stimulant, 5 Carminative. 6 Antiperiodic. 7 Rubifacient. 8 Haemorrhoid. 9 Gargle. 10 Caraway fruit. 11 Confection of Opium, 12 Compound powder of opium.

Digitized By Roja Muthiah Research Library

நெய்ப்புள்ள கொட்டையிருக்கும். அதிலே ஓர் அத்திரதேலும்[1], காரமான ராளம்[2]மும், பைபெரி[3]னுக்குச் சரியான குபெபின்[4] என்ற கிறிஸ்தற்பதார்த்தமும், அமைந்திருக்கும்.

தன்மை. ஸ்திமுலம்[5]. இது விசேஷமாய்ச் சளிச்சவ்[6]விற் சேஷ்டிக்கும். அதிலும் சனனசல உறுப்புகளின் சளிச்சவ்விலேயே பிரதானமாய்ச் சேஷ்டிக்கும்.

உபயோகம். கனுறீயா[7]நோய்க்கு இது கைகண்ட மருந்து. மேலும் லுகறீயம்[8], சிஸ்திறீயம்[9], புரஸ்தகோளம்[10]த்தின் காலிகதாபிதம்[11], அரிசம்[12], காலிகமான சுவாச[13]நோய்கள், சுவாசக்குழல்நோய்களுக்கு இதைக்கொடுத்து நயங்கண்டது.

தேயம். முப்பது கிறேன்[14] முதல் இரண்டுதிறும்[15]வரைக்கு நாள் மூன்று நாலுமுறை கொடுக்கலாம்.

ரசிதம். வால்மிளகுத்தேல். Oil of Cubebs. வால்மிளகைத் திஸ்திலித்தே இது எடுக்கப்படும். இது நிறமற்றது; அல்லது வெளுறின பச்சை மஞ்சள் நிறமும் வால்மிளகுக்குரிய மணம் சுவையுமுடையது.

தேயம். ஐந்து முதல் இருபது மினிம் வரைக்கு.

வால்மிளகிரஞ்சம். Tincture of Cubebs. கொள். வால்மிளகு, தூளாக இரண்டரை அன்சு; திட்டசீது[16] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் வால்மிளகை பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி அப்பாற் சியந்தனி[17]யில் வார்த்தடைசி, நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழி தேறத் திட்டசீது சேர்க்கவும்.

தேயம். முப்பது மினிம்[18] முதல் இரண்டு திறும் வரைக்குக் கொடுக்கலாம்.

## மதிகச்செடி. MATICO PLANT.

வாசம். பெருதேசம்.

வாகடபகுதி. காய்ந்த இலை. இது இரண்டு இஞ்சு முதல் எட்டு இஞ்சுவரைக்கு நீளமானது. மேற்பக்கம் நாளங்களும் பல கோடுகளுமுள்ளது. கீழ்ப்பக்கம் மயிருள்ளது; சுகந்தமான சற்றே துவர்ச்சுவையும் நல்ல சுகந்த மணமுமுடையது.

தன்மை. துவர். தானிக[19]மாயிட்டால் வீறுன ஸ்திப்திகு[20].

உபயோகம். இரத்தவாந்தி[21], இரத்தாமுரி[22], இரத்தஇருமல்[23], பெரும்பாடுகளுக்கும்[24]சபல[25]வகையானமற்றும் இரத்தப்பெருக்குகளுக்கும், லுகறீயம் அசத்துவ[26] கழிச்சலுக்கும், இது கொடுக்க நயங்காணும். வெளியான காயங்களினின்று பெருகும் இரத்தத்தைத் தடுப்பதற்கும் இது சித்தியுள்ளது.

---

1 Volatile oil. 2 Resin. 3 Piperine. 4 Cubebin. 5 Stimulant. 6 Mucous membrane. 7 Gonorrhoea. 8 Leucorrhoea. 9 Cystirrhoea. 10 Prostate Gland. 11 Chronic. 12 Inflammation. 13 Piles. 14 Grain. 15 Drachm. 16 Rectified Spirit. 17 Percolator. 18 Minim. 19 Local. 20 Styptic. 21 Haematemesis. 22 Haematuria. 23 Haemoptysis. 24 Menorrhoea. 25 Passive. 26 Atonic.

Digitized By Roja Muthiah Research Library

இரத்தத்தைத் தடுப்பதற்கு இலையின் கீழ்ப்பக்கத்தையாவது இலை மாவையாவது அது பெருகுமிடத்துக்கு அணைக்கவேண்டும்.

தேயம். இலையை மாவாக்கி, அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதம். மதிகவின்வூசம். Infusion of Matico. கொள். மதிகவிலை, தூளாக வெட்டி, அரை அன்சு; கொதிநீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் அரைமணிநேரம் ஊறப்போட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் நாலு அன்சு வரைக்குக் கொடுக்கலாம்.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

திப்பிலி. Long Pepper. இது இந்துதேசப் படர்செடி. காய்க்காக வங்காளத்திலும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் இது செய்கைபண்ணப்படுகின்றது. காய் ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமானது; திரண்டது; நரைக் கபிலநிறமும், சொற்ப சுகந்த மணமும், கார்ப்பான மெத்த உறைத்த சுவையுங்கொண்டது, மிளகைப்போல் இதிலேயும் ஓர் அத்திரதே[1]லும் கார்ப்பான ராள[2]மும், பைபெரி[3]னும் அடங்கியிருக்கும். அதைப்போலவே இதுவும் ஸ்திமுல[4]வாயுக்கின[5] தன்மைகளுடையதாயினும் அதிலும் அதிக வீறுள்ளது. பிரதானமாய்த் தொடுசுவையாக வழங்கப்படுவதே இதின் முக்கிய உபயோகம். பேரிபெரி[6]என்ற நோய்ப் பரிசரிப்பில் மகமதியருக்குள் வழங்கப்படும் பின்வரும் மருந்தைப்பற்றிக் கொர்குலற்சு வைத்தியர் நயப்பாய்ப் பேசுகிறார். கொள். திப்பிலி இடித்து நாலு அன்சு; மிளகு, சுக்கு, வகைக்கு அரைஅன்சு; அரக்கு[8] இருபது அன்சு. எழுநாளூறப்போட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு திரும் நாள் இரண்டுமூன்றுமுறை. இது வீறுன ஸ்திமுலம். கவனிக்கப்படத்தக்க வேறு விசேஷம் இதற்கில்லை. வேர், இந்துக்களுக்குள்ளே மெத்தப் பேர்பெற்றது; தலீச்செறீவி[9]லே பிப்பலிமூலம்[10]என்றுசொல்லப்பட்டது இதுதான். அதிலே இதைக் கைப்பு ஸ்தொமாகி[11],ரோசனியென்றும் சீரணத்தை நயப்படுத்துமென்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது. திருவாளங்கோட்டிலே ஸ்திரிகள் பிரசவித்தபின் அனைய[12]த்தை விழுத்துவதற்கு இந்த வேர்க்கஷாயங் கொடுக்கப்படும். காய்க்குரிய ஸ்திமுல தன்மைகள் இதற்குக் கொஞ்சமாயுண்டுபோலும். தென்னிந்துவிலே தேசாவரய்[13]என்ற பூண்டின் மூடிச்சுள்ள சுகந்தமான வேரைக் குன்மத்துக்குக் கொடுக்கிறார்களென்று என்ஸ்லி சொல்லியிருக்கிறார்.

வெற்றிலை. Betle leaf. இலைக்காகவே இந்துதேசமடங்கலும் இக்கொடி செய்கைபண்ணப்படும். இவ்விலையைப் பாக்குஞ் சுண்ணும்புஞ் சேர்த்து மிகுதியான சனங்கள் சப்புவார்கள். வெற்றிலைச்சாறு நல்ல ஸ்தொமாகியாகக் கொள்ளப்படும். தென்னிந்துவிலுள்ள இந்துபிறித்தர் பொதுவாய் சுதா[14]ருக்கும் சுவாச நோய்களுக்கும், விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கு, வெற்றிலையை வாட்டி எண்ணெய் பூசி நெஞ்சிலே படைபடையாய்ப் போடுவார்கள். தாங் கண்ட அளவில் சூட்டினாலும் பரமாணு படாமல் மூடுவதாலும் இதின் ருபிவாஷ[15]த்தன்மையினாலும் அனேகருக்குண்டாகக்

1 Volatile oil 2 Resin. 3 Piperine. 4 Stimulant, தீவனி. 5 Carminative. 6 Beri-beri. 7 Long pepper. 8 Arrack. 9 Taleef Shereef. 10 Peep'a mool. 11 Stomachic 12 Placenta. 13 Piper dichotomum. 14 Catarrh. 15 Rubifacient.

Digitized By Roja Muthiah Research Library

கூடிய சகாயத்தைப்பார்க்க இருமல் முட்டுத்தொய்வில் இதால் அதிக சகாயங் காண்கிறதென்று வாறிங்கு பண்டிதர் சாட்சியிடுகிறார். இச் சாட்சிக்குச் சாட்சியாய் ஈரற் கஞ்செஸ்தத்[1]திலும் மற்று நோய்களிலும் இதை யிட்டதாற் சகாயந்தோன்றினதைச் கண்டோமென்று கிப்சன் பண்டிதர் கூறுகிறார். வெற்றிலையை நெருப்பில் வாட்டிப் படைபடையாய் ஸ்தனங்களுக்கு இட்டால், பாலூறுதல் தடைப்படுமென்று வுட்டர் அறிவித்திருக்கிறார். இதற்குச் சார்பாய்ச் சாற்று வைத்தியரும் எழுதியிருக்கிறாரன்றிக் கோளவீக்கங்களைக் கரைப்பதற்கும் இது இடப்படுமென்கிறார்.

சாப்பு. Chavica Officinarum. இது மொலக்கதீவிலுள்ள ஓர் பூடு. காய்க்காக இந்துவிற் செய்கைபண்ணப்படும். இந்துப் பதார்த்தசாரத்தின் ஜாப்பம்[2] எனப்படுவது இதுவே. மிளகு திப்பிலிகளுக்குரிய ஸ்திமுலம்[3] காமினதி[4]த் தன்மைகள் இதற்கிருந்தாலும் கவனிக்கப்படத்தக்க வேறு விசேஷம் ஒன்றும் இதற்கில்லை. அரிச[5]நோய்களில் இதினாலுண்டாகும் உபயோகத்தைப்பற்றித் தலீச்செறீவு[6] நூலிற் சொல்லப்பட்டது.

## குபுலிவிரங்கள்

## CUPULIFERAE.

### குவேகஸ்மரம். QUERCUS ROBUR. OAK.

வாசம். இது யுரோப்பத்தின் சோலைகள் வேலிகளில் உண்டாகும் பெருமரம்.

வாகடபகுதி. சிறுக் கொப்புகள், இளந்தண்டுகளின் காய்ந்த பட்டை, இது முன் கோடையிற் சேர்க்கப்படும். இது ஒரு அடிமுதல் இரண்டு அடி நீளமுள்ள துண்டுகளாய் ஈரைநிறமுள்ள மினுக்கமானதோலால் மூடுண்டிருக்கும். உட்பக்கம் கறுவா நிறமுடையது; நாருள்ளது; நொருக்கலானது. எறக்குறைய மணமற்றது; வீறான துவர்ச்சுவைகொண்டது. தனிக்கமிலம்[7] கலிக்கமிலங்க[8]ளே இதின் சத்தான கூறுகள்.

தன்மை. இது கடுந்துவர்.

உபயோகம். காலிக தியறியத்தி[9]லும், திசந்தெறி[10]யின் பிற்கூறுகளிலும் முறைச் சுரங்களிலும் உபயோகமாகும். ஆயினும் இது பிரதானமாய் திகாக்த[11]மாக்கப்பட்டுப்பூச்சாகவும், லுகறீயம்[12],சபலமெனுறீயம்[13],கருப்பைப்பிதுக்கங்களுக்குப்புகட்ட[14]லாகவும், கடைக்குடல் இறங்கல், அரிசநோய்க[15]ளுக்கு எனீம[16]ாகவும் உண்ணாக்கு[17]லசுணங்க[18]ளின் நுகைவுக்கும், முரசு மெதுவாதல்புண்படல்களுக்குக்கார்கி[19]லாகவும்வழங்கப்படும். மேலும் பட்டைமாவைக் களியாக்கி,அழுகின கெட்ட புண்களுக்குக்கட்டுவதும் நலம்.

தேயம். பட்டையை மாவாக்கி அதில் அரைத்திறும் முதல் ஒருதிறும்வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதம். குவேகஸ் திகாக்தம். Decoction of Quercus. கொச். குவே

---

1 Congestion, சஞ்சயம். 2 Chaab. 3 Stimulant. 4 Carminative. 5 Piles. 6 Taleef Shereef. 7 Tannic acid. 8 Gallic acid. 9 Diarrhoea. 10 Dysentery. 11 Decoction. 12 Leucorrhoea. 13 Atonic menorrhoea. 14 Injection. 15 Haemorrhoides. 16 Enema. 17 Uvula. 18 Tonsil. 19 Gargle.

Digitized By Roja Muthiah Research Library

கஸ் பட்டை, இடித்து, ஒன்றேகால் அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திலிட்டுப் பத்துமினி[1]நேரம் அவித்துச் சீலையில் வடித்து, வடித்தநீர் அரைநாழியாய் வரத்தக்கஅளவு திஸ்தில[2]நீரைச் சக்கையில் வார்த்து, வடித்துக்கொள்ளவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்குக் கொடுக்கலாம். இது பிரதானமாய் வெளிமருந்தாய் வழங்கப்படும்.

## மாசக்காய். GALLS.

வாசம். இந்தமரம் பார்சியதேசம்மட்டும் சின்னஆசியத்தில் உண்டாகும்.

வாகடபந்தி. காய்; திப்புலேபி[3]என்ற ஈ முகையிற் குற்றித் தன் முட்டையை இடுவதால் இது உண்டாகும். இது வன்மையுங் கனத்ததுமான உண்டை. பருமை அரை இஞ்சு முதல் முக்கால் இஞ்சுவரைக்கிருக்கும். வெளிப்பக்கத்தில் முளைகள் காணும். முளைகளும் அவைக்கிடைவெளிகளும் அழுத்தம். வெளிப்பக்கம் நீலமான பச்சைநிறம். உள்ளே வெண்மஞ்சள்நிறம். மையத்திலே ஒரு சிற்றறை காணப்படும். மெத்தத் துவரானது. தனிக்கமிலம்[4] கலிக்கமிலங்க[5]ளே இதின் சத்தான கூறுகள்.

தன்மை. இது துவர், தொணிகம்[6], அந்திபிருடி[7]. (64)

உபயோகம். குவேகஸ் பட்டையைப் போலவே. எமீதியத்தை[8]யும், அல்கலேவங்க[9]ளையும் அவின் அகனீதம்[10]முதலிய அல்கலேவச்சத்தை அடக்கிய தாவரங்களையும் நஞ்சாகத் தின்றவர்களுக்கு இதின் திகாக்தம்[11]மாற்றாகக் கொடுக்கப்படும். அந்திமனிதாத்தரக[12]த்துக்கும் இது மாற்றாகுமென்று சொல்லப்பட்டிருந்தாலும் இன்னும் இதைத் சோதித்தறியவேண்டும்.

தேயம். மாசக்காயை மாவாக்கி அதிற் பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்கு நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம்.

ரசிதங்கள் *மாசக்காய்த் திகாக்தம். Decoction of Galls. கொள். மாசக்காய் இடித்து ஒன்றேகால் அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி நேரங் காய்ச்சிச் சீலையில் வடித்து, வடித்த நீர் அரைநாழியாய் வரத்தக்க அளவு திஸ்தில நீரைச் சக்கையில் வார்த்து வடித்துக் கொள்ளவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்குக் கொடுக்கலாம். விசேஷமாய்த்துவர்க்கார்கில்[13], எனீமம்[14], புகட்டல்[15], லோஷன்க[16]ளாக இது வழங்கப்படும். மேலே சொன்ன நஞ்சுகளுக்கு மாற்றாகத் தாராளமாய் இதைக் கொடுக்கலாம்.

மாசக்காயிரஞ்சம். Tincture of Galls. கொள். மாசக்காய், இடித்து, இரண்டரைஅன்சு; புருவுசீது[17] அரைநாழி. மூடிய பாத்திரத்தில் மாசக்காயைப் பதினைந்து அன்சு சீதில், இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனியில் வார்த்து, நீர் ஒழுகினபின், சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து, வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிதேறப் புருவுசீது சேர்க்கவும்.

---

1 Minute of time. 2 Distilled. 3 Diplolepis. 4 Tannic acid. 5 Gallic acid. 6 Tonic, ஔஷி. 7 Antiperiodic. 8 Emetia. 9 Alkaloid. 10 Aconite. 11 Decoction. 12 Antimony tartarate. 13 Gargle. 14 Enema. 15 Injection. 16 Lotion, தாவனி. 17 Proof spirit.

(64) அனுபக்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். அரைத் திறும் முதல் இரண்டு திறும் வரைக் கக் கொடுக்கலாம். தண்ணீரோடு கலந்து, துவர் லோஷன்களாக்கிச் சிலவேளை இது வழங்கப்படும்.

மாசக்காயன்கென். Ointment of Galls. கொள். மாசக்காய், மாவாக்கி எண்பது கிறேன்; பெஞ்சோயஸ்லாடு[1] அல்லது தனியன்கென்[2] ஒரு அன்சு. செவ்வையாய்க் கலக்கவும்.

மாசவவினன்கென். Ointment of Galls with Opium. கொள். மாசக்காயன்கென், ஒரு அன்சு; அவின், மாவாக முப்பத்திரண்டு கிறேன். திறமாய்க் கலக்கவும்.

இந்த இரண்டு தைலங்களும் விசேஷமாய் மாசவவினன்கென், மூல மூளைகளுக்குக் கைகண்ட பூச்சு.

தனிக்கமிலம். Tannic Acid. இது மாசக்காயிலிருந்து எடுக்கப்படும். இதைக் குறிக்குஞ் சின்னமாவது; கா27 ஐ22 அ17. இது வெண்மஞ்சள் நிறமுள்ள பருபருக்கையான கட்டிகளாயாவது, மினுக்கமுள்ள மெல்லிய செதிள்களாயாவது இருக்கும். கடுமையான துவர்ச்சுவையும் அமிலச்செயலு[3] முள்ளது. தண்ணீரிலும் திட்டசீதி[4]லும் தாராளமாய்க் கரையும். ஈதரிற்[5] சொற்பங் கரையும். தண்ணீர்க்கரைவு செலத[6]நீரை வெண்மஞ்சளாக அடையப்பண்ணும். அயபிரவுப்புக[7]ளைநீலக்கறுப்பாக அடையப்பண்ணும். இதைத் திறந்தபடி எரிக்க ஒன்றும் எஞ்சாது.

தன்மை. வீறுன கயர்.

உபயோகம். சுவாசப்பை, இரைப்பை, கருப்பை, பிறுக்கங்க[8]ளினின்று பாயும் சபல[9]வகையான இரத்தப்பெருக்குக்கு இது உபயோகமான உள்மருந்தாகும். முரசு உதிரக்கழலைகள், நாசிகளில் நின்று பாயும் இரத்தப்பெருக்குகளுக்கு இரத்தம் பொசியுமிடத்தில் தனிக்கமிலத்தை இட அது பெரும்பாலுந்தடைப்படும். இதை உள்ளேகொடுப்பதால் அசத்துவ[10]குன்மம்[11], தியறீயம்[12], புறங்குறீயம்[13], கசம், குக்கலின் பிற்பாதம், லுசறீயம்[14], நரம்புக்களை[15], முறைச்சுரங்கள் முதலான அனேகநோய்கள் நயமடையும். கசத்திற்காணும் கடும் வெயர்வையையும் கழிச்சலையும் மாற்றுவதற்காகவும் இது கொடுக்கப்படும். கண்ணோ[16], மற்று நயன ரோகங்கள், விரணங்கள்[17], நீர் அதிகமாய்ப் பாயுஞ் சருமநோய்கள், ஈறு மூலமுளை[18]கள், அபானப்பிதுக்கம், வெடிப்புகள், கனுறீயம்[19], கிலீற்று[20], உமிழ்நீர்ப் பெருக்கு, பல்லீற்றிளக்கம், முலைப் புண்கள், வெடிப்புகளைவிசேஷமாய் மாற்றுவதற்கே இது உபயோகமாகும்.

தேயம். இரண்டு கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு மாவாயாவது குளிகையாயாவது தண்ணீரிற் கரைத்தாவது, நாள் மூன்று நாலுமுறை கொடுக்கலாம். நெருக்கமாயுங் கொடுக்கலாம்,

தனிக்கமிலராசிதங்கள். தனிக்கமிலசப்பாசிதுறி. Tannie Acid suppository, கொள். தனிக்கமிலம் முப்பத்தாறு கிறேன். பெஞ்சோயஸ்லாடு நாற்பத்துநாலு கிறேன். வெண்மெழுகு பத்துக்கிறேன்; தியுபுறோமதேல்[21], தொண்ணூறு கிறேன். மெழுகையும் தியுபுறோமதேலையும்மென்சூட்டில் உருக்கி, தனிக்கமிலத்தையும் பெஞ்சோயஸ் லாட்டையும் முன்னமே குழி

---

1 Benzoated Lard. 2 Simple ointment. 3 Acid reaction. 4 Rectified spirit. 5 Ether. 6 Gelatine. 7 Persalt of iron. 8 Kidneys. 9 Passive. 10 Atonic. 11 Dyspepsia. 12 Diarrhoea. 13 Bronchorrhoea. 14 Leucorrhoea. 15 Nervous exhaustion. 16 Ophthalmia. 17 Ulcer. 18 Piles. 19 Gonorrhoea. 20 Gleet. 21 Oil of Theobroma.

Digitized By Roja Muthiah Research Library

யம்மியில் ஒன்றாக அரைத்து, இவற்றோடு சேர்த்து எல்லாவற்றையும் நீர்ப்பாய்க் கலந்துகொள்ளவும். இக்கலவையை, நீர்த்திருக்கையிற் பதினைந்து கிறேன் கொள்ளத்தக்க தகுந்த குகைகளில் வார்க்கவும். அல்லது அதை ஆறவிட்டுப் பன்னிரண்டு சமபங்குகளாகப் பிரித்துச் சப்பாசிதுறிக்குத் தகுந்த சாங்கமாக்கிக் கொள்ளவும்.

கடைக்குடலின் சளிச்சவ்வும் அயற்பகுதிகளும் நுகைவதாலுண்டான நோய்களுக்கு இடுவதற்கு இது உவந்தது. ஒவ்வொரு சப்பாசிதுறியிலும், இரண்டு கிறேன் தனிக்கமிலம் அடங்கியிருக்கும்.

**தனிக்கமில வில்லை.** Tannic Acid Lozenges. கொள். தனிக்கமிலம், முந்நூற்றறுபது கிறேன்; தொலூரஞ்சம்[1] அரைஅன்சு; சுத்தசர்க்கரை,மாவாக இருபத்தைந்து அன்சு; அகசிப்பிசின்[2],மாவாக ஒருஅன்சு; அகசிமுசிலாகு[3] இரண்டு அன்சு; திஸ்திலித்த[4]தண்ணீர் ஒருஅன்சு. தனிக்கமிலத்தைத் தண்ணீரிற் கரைத்துக்கொண்டு இதை முன்னமே முசிலாகோடு கலந்த தொலூரஞ்சத்தோடும், முன்னே சர்க்கரை மாவோடு கலந்த பிசினோடுஞ் சேர்க்கவும். முழுவதையுஞ் சரியான திரளையாக்கி 720 வில்லைகளாகத் தட்டி வெப்பமான அறையில் உலர்த்தவும்.

ஒவ்வொரு வில்லையிலும் தனிக்கமிலம் அரைக்கிறேன் இருக்கும்.

துவர்மருந்து இடப்படவேண்டியதாய் வாய் தொண்டையிலுண்டாகும் பலவகையான நோய்களில் இந்த வில்லைகளை வாயிலிட்டு மெல்லக் கரையவிடுவது நலம். உள்மருந்தாக இவைகளில் நாள்வீதம் இருபது முப்பது வரைக்குத் தின்னலாம்.

**தனிக்கமில கிலைசரின்.** Glycerine of Tannic Acid. கொள். தனிக்கமிலம், ஒரு அன்சு; கிலைசரின் நாலுஅன்சு. குழியம்மியில் இட்டு நன்றாயரைத்தபின்பு ஓர் பீங்கான் பாத்திரத்தில் வார்த்து, நன்றாய்க் கரையுந்தனையும் மென் சூடு காட்டவும்.

இது ஓர் நயந்த சயரான வெளிப்பூச்சு.

**கலிக்கமிலம்.** Gallic Acid. இது மாசக்காயிலிருந்தெடுக்கப்படும் கிரிஸ்தலான[5] அமிலம். ஐ$_3$ கா$_7$ ஐ$_3$ அ$_5$ ஐ$_2$ அ. என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இது சற்றுப் பளபளப்பும் மெல்லிதுமான ஊசிபோன்ற கிரிஸ்தல்களாக இருக்கும். சிலவேளை எறக்குறைய வெண்மையாயும் பெரும்பாலும் வெண்மஞ்சள் நிறமாயுமிருக்கும். இது நூறுபங்கு தண்ணீரிலும் மூன்றுபங்கு கொதிகெந்நீரிலுங் கரையும். திட்டசீதி[6]லுங்கரையும். இதைத் தண்ணீரிற் கரைத்து, ஐசிங்கிளாசு[7]க்கரைவோடு சேர்த்தால் அடையல்விழாது. அயபிரவுப்[8]போடுசேர்த்தால் நீலக்கருமையான அடையல்விழும். கிரிஸ்தலான இந்த அமிலத்தை 212 பாகை சூட்டில் உலர்த்தினால் அதின் நிறையில் நூற்றுக்கு 9.5 பங்கு வீதமாய்க் குறையும். இதைத் திறந்தபடி எரிக்க ஒன்றும் எஞ்சாது.

**தன்மை உபயோகம்.** தனிக்கமிலத்தைப் போலவே. இரத்தோட்டத்திற் செல்லுகையில் தனிக்கமிலமானது, கலிக்கமிலமாயும் திராட்சசர்க்கரை[9]யாயும் மாற அதிலோர்பங்குமாத்திரம் துவராய்ப் பிடிக்குமாகையால் இத்தன்மையில் கலிக்கமிலம் சமபங்கான தனிக்கமிலத்தைப்பார்க்க வீறன்னதாகும்.

---

1 Tincture of Tola. 2 Gum Acacia. 3 Mucilage. 4 Distilled. 5 Crystal. 6 Rectified Spirit. 7 Isinglass. 8 Persalt of Iron. 9 Grape Sugar.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். இரண்டு கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கும் நாள் மூன்றுநாலுமுறையுங் கூடவுங் கொடுக்கலாம்.

ரசிதம். கலிக்கமில கிலசரின். Glycerine of Gallic Acid. கொள். கலிக்கமிலம் ஒரு அன்சு; கிலசரின் நாலு அன்சு. இவற்றை உரலில் இட்டு ஒன்றுயரைத்துப் பின்பு ஓர் பீங்கானில் வார்த்துச் செவ்வையாய்க் கரையுந்தனையும் மென்சூடு காட்டவும்.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

ஆற்றுப்பாலை. Salix tetrasperma. இது இந்துவின் வடபகுதி மையப்பகுதிகளிலுள்ள சிறப்பான சிறுமரம். இதின் பட்டை கொஞ்ச அளவிற் சுரக்கினி[1]யாகுமென்று தல்செல் கிப்சன் என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பட்டையிலிருந்து ஓர் தொணிக[2]ப்பதார்த்தம் வருமென்று லாங்கு என்பவர் சொன்னார். யுரோப்பத்திலுள்ள சலிக்சு[3] என்ற இனமான மரங்களினின்று எடுக்கப்படும் கிறிஸ்தற் பதார்த்தமாகிய சலிசைன்[4] என்பது இது தான் என்றதே அவர் எண்ணமாகில் அவ்வெண்ணந் தவறாகும். ஒஷானசி பண்டிதர் இப் பட்டையைக் கவனமாய்ச் சோதித்து அதிலே இது சொற்பமும் இல்லையென்று கண்டார். Salix Caprea. இம்மரம் இந்துஸ்தானி பாஷையிற் கிலாவு மரம் Khilaf எனப்படும். இதின் பூவிலிருந்து சுகந்தமும் தீவனமுமான நீரை வடிக்கிறார்கள். சிலவகையான நோய்களுக்கு இது நல்லதென்று பெயர்பெற்றிருக்கிறது. இந்த மரத்தின் சாம்பலை இரத்த இருமலுக்கு மருந்தாகக் கொள்வார்கள்.

## உல்மாசியங்கள்.

## ULMACEAE.

### உல்மஸ்மரம். ULMUS.

வாசம். இது யுரோப்பத்திலும் மத்திம ஆசியத்திலுமுண்டாகும்.

வாகடபதார்த்தி. காய்ந்த உட்பட்டை. இது கபில மஞ்சள் நிறமும், உரப்பும், அரை லீன்[5] தடிப்புமானது; மணமற்றது. சுவை வாணித்தன்மையும் சற்றே கைப்பும் துவருமானது. இதின் திகாக்த[6]த்துக்கு அயபிரகுலோறிரஞ்[7]சேர்க்கப் பச்சையாகும். செலத[8]நீர் சேர்க்க அடையல் விழும். மேற்சொன்ன சோதனைகள் காட்டுகிறபடி இதிலே தனின் இருப்பதன்றி உல்மின்[9] என்ற ஓர் வகைப் பிசின் பதார்த்தமும் இருக்கும்.

தன்மை. இது அல்திறவ[10] தொணிகமும் திமல்ச[11]முமாகும்.

உபயோகம். காலிகமான சரும நோய்களுக்கு விசேஷமாய், குஷ்டம், சொறியசி[12], ஏர்பிசு[13]என்ற நோய்களுக்கு இதாற் சகாயமுண்டாகுமாம்.

ரசிதம். உல்மஸ்திகாக்தம். Decoction of Ulmus. கொள். உல்மஸ் பட்டை சிறிதாய் நறுக்கி இரண்டரை அன்சு; தண்ணீர் அரைநாழி. மூடிய பாத்திரத்திற் பத்துமினி நேரமாக அவித்துச் சீலையில் வடித்து அரைநா

1 Febrifuge. 2 Tonic. 3 Salix. 4 Salicine. 5 Line. 6 Decoction. 7 Perchloride of iron. 8 Gelatine. 9 Ulmin. 10 Alterative. 11 Demulcent. 12 Psoriasis. 13 Herpes.



Digitized By Roja Muthiah Research Library

ழிக்குப் போதிய தண்ணீரைச் சக்கையில் வார்த்து வடித்துக்கொள்ளவும்.
**தேயம்.** இரண்டு அன்சு முதல் நாலு அன்சு.

## ஏர்திசியங்கள்.

## URTICEAE.

### லுப்புலஸ்கோடி LUPULUS, Hop plant.

**வாசம்.** யுரோபத்திலும் மத்திம ஆசியத்திலும் இது வாடிக்கையாயுண்டாகும். மத்திம யுரோபத்திலும் ஐக்கமரிகத்திலும் அதிகமாய்ச் செய்கை பண்ணப்படும்.

**வாகடபகுதி.** பெண்கொடியின் காய்ந்த காய்கள். இவை பச்சை மஞ்சன்நிறமான செதில்களாக வரும். செதிலடியில் ஒட்டுந்தன்மையுள்ளபொன்மஞ்சள் நிறமான தூள் பிடித்திருக்கும். இதுவே லுப்பிலின்[1] எனப்படும். மணம் சுகந்தம், சுவை கைப்பு. இவற்றில் ஓர் அத்திரதே[2]லும் லுப்பிலீது[3] என்ற ஓர்வகைப் பதார்த்தமும் அடங்கியிருக்கும்.

**தன்மை.** தோணிகம்[4], ஸ்தொமாகி[5], சொற்பநாகதிகம்[6]. லுப்பிலின் காமத்தைக் குறைக்குந் தன்மையுடையது.

**உபயோகம்.** இதால் நயங்கண்டநோய்களுள், அபலகுன்மம்[7], நித்திரையின்மையோடு கூடிய சிரநோய்கள், இஸ்தேரி[8], முறைச்சுரங்கள், வாதம் என்பனவே விசேஷமானவைகள். சனனசல உறுப்புகளின் சில அழற்சி நிலைமையில் உதாரணமாக ஸ்பமதுறீயம்[9], சலவொழுக்கு, காடீ[10] என்ற சிசினவளைவு முதலியவற்றில் லுப்புலின் மெத்த நயஞ்செய்யும்.

**தேயம்.** லுப்புலினில் ஆறு கிறேன் முதற் பன்னிரண்டு கிறேன் வரைக்குக் குளிகையாக்கிக் கொடுக்கவும்.

**ரசிதங்கள். லுப்புலசின்வூசம்.** Infusion of Lupulus. கொள். லுப்புலஸ்காய், அரை அன்சு; கொதிவெந்நீர் பத்துஅன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டுமணிநேரமூறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்குக் கொடுக்கலாம்.

**லுப்பிலசிரஞ்சம்.** Tincture of Lupulus. கொள். லுப்புலஸ் காய் இரண்டரை அன்சு; புரூவுசீது அரைநாழி. மூடிய பாத்திரத்தில் லுப்புலசைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கி அப்பாற் சியந்தனி[11]யில் வார்த்து, நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து அரைநாழி தேறப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** அரைத் திருாம்முதல் இரண்டு திருாம்வரைக்குக் கொடுக்கலாம்.

---

1 Lupn'ine, 2 Volatile oil. 3 Lupulite. 4 Tonic. 5 Stomachic. 6 Narcotic. 7 Atonic Dyspepsia. 8 Hysteria. 9 Spermatorrhoea, 10 Chordee. 11 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

## பூஷம். MULBERRY TREE.

வாசம். இது மேற்காசியத்திலுள்ளமரம். பூமியின் மத்திமபகுதிகள் அடங்கலுஞ் செய்கைபண்ணப்படுகின்றது.

வாகடபகுதி. கனிந்த பழத்தின் சாறு. இது கருஞ்சிவப்புநிறமும் சொற்ப மணமும் புளிப்பான இனிய சுவையுமுடையது.

தன்மை. உபயோகம். இது நிறக்கும் பொருளாக மாத்திரம் வழங்கப்படும்.

ரசிதம். பூஷச்சிரூபம். Syrup of Mulberries. கொள். பூஷச்சாறு அரைநாழி; சுத்த சர்க்கரை இரண்டு இருத்தல்; திட்டசீது,இரண்டரை அன்சு. பூஷச் சாற்றைக் கொதிக்கக் காய்ச்சி, ஆறினபின் அதை வடிக்கவும். வடித்த நீரைச் சொற்ப சூடாக்கி, அதிலே சர்க்கரையைக் கரைத்துச் சீதைக் கூட்டவும். இந்தக் களி 1.33 என்ற விசேஷகிருவிதம்[2] உடையதாயிருக்கவேண்டும்.

தேயம். ஒரு திரும். இது சுறுக்கு நொதித்துப் பழுதாகுமாகையால் உஷ்டண தேசங்களில் வழங்கத் தகுந்ததல்ல. காக்கணங்[3]கொடிப் பூவிற் செய்தவோர் சிறூபம் இதற்குப் பதிலாகுமென்று சொல்லப்பட்டது.

## சீமையத்தி. FIG.

வாசம். ஆசியம், தென்யுரோபம்.

வாகடபகுதி. பழவற்றல். இது சுருங்கி மெதுவானதாய் உரப்பும் கபிலநிறமுமாய் சர்க்கரை போன்ற பொருக்கால் மூடுண்டிருக்கும். பிசுபிசுப்பான இனித்த பாணியையும் ஏராளமான சிறுத்த வைரக் கொட்டைகளையும் அடக்கியிருக்கும்.

தன்மை, உபயோகம். இமாலியம்[4], திமல்சம்[5], விரேசனி, போஷணி[6]. இது நிலவாகை லேகியத்திலோர் கூறுகுமன்றி மருந்தாய் வழங்கப்படுவது அரிது.

சுதேச ஆச்சியோர் சொல்லுகிறபடி இதின் அவுஷத தன்மையைப்பற்றிய முழு விபரமும் தாகஸ்தா என்பவராற் குறிக்கப்பட்டிருக்கின்றது.

## கஞ்சா. INDIAN HEMP.

வாசம். பார்சியத்தில் மேற்கு இமயம் வரைக்கும் இது வளரும். அதிகமாய்ச் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. இந்துவில் வளரும் பெண்செடியிற் பாணி வடியாமற் பூக்கிற சாய்ந்த தலைப்பு. இலட்சணங்கள். தலைப்புகளானவை பூக்கள் சிற்றிலைகள், முற்றிய காய்களின் சேடத்தை தாங்கி மாறிமாறியிருக்கிற இரண்டொரு கிளைகள் பொருந்தியிருக்கும். ஏறக்குறைய இரண்டு இஞ்சு நீளமான திரளைகளாகச் சேர்ந்து முரணும் கரும்பச்சை நிறமாயும், தனக்

---

1 Rectified spirit, 2 Specific gravity. 3 Clitoria ternatea. 4 Emollient. 5 Demulcent. 6 Nutritive.

Digitized By Roja Muthiah Research Library

கேயூரிய மணங்கொண்டிருக்கும். கைப்புங் காரமுமான ஓர் ராளம்[1]மே இதின் சத்து.

தன்மை. ஸ்திமுல[2]மே இதின் முதற் தன்மை. இரண்டாவதாய் அனுடைனும்[3], செடதீவ[4]மும், அந்திஸ்பசி[5]யுமாகும். நாகதிக[6]அமூரிதி[7]த்தன்மைகளும் பிரசவ நோக்காட்டைக் கிளப்புந்தன்மையும் இதற்குண்டென்று சொல்லப்பட்டது. ஆயினும் இதற்குப் போதிய அத்தாட்சியில்லை.(65)

உபயோகம். ஏர்ப்பு, ஐதுரோவோபி[8], வெறிப்பைத்தியம் வெறிகளுக்கும், குழந்தைகளின் வலிப்புகளுக்கும்,பலவகையான நுறல்சி[9],சிரா[10]நோய்களுக்கும், இது கொடுத்து நயங்கண்டது. மேலும் வாந்திபேதி மெனுறீயம்[11], கருப்பை இரத்தப்பெருக்கு,வாதம், அருவிச்சுரம்[12], ஈளை, இதயத்தின் கரணப்பிசகுகளுக்கும், மெத்த வருத்தம், சொறிவுடன் கூடிய சரும நோய்களுக்கும், இது வழங்கப்படும். கருப்பையின் செயலின்மையைப் பற்றி நெடுகநிற்கும் பிரசவத்தில் நோக்காட்டைக் கிளப்புவதற்காகவும் இது கொடுக்கப்படும்.

ரசிதங்கள். கஞ்சாவெசிறத்து. Extract of Indian Hemp. கொள். கஞ்சா பருக்கன்தூளாக ஒரு இருத்தல்; திட்டசீது[13], இரண்டுநாழி. கஞ்சாவைச் சீதில் ஏழுநாளூறப்போட்டு அந்த ரஞ்சத்[14]தைப் பிழிந்தெடுத்து, சீதின் மிகுதியான பங்கைத் திஸ்திலித்[15]தகற்றி, சேஷத்தை இளக்கமான எசிறுத்துப் பதமாய் வரத்தக்கதாய் நீர்மத்திக[16]த்தில் வரட்டிக்கொள்ளவும்.

தேயம். அரைக்கிறேன் முதல் இரண்டுகிறேன். கூடவுங்கொடுக்கலாம்.

கஞ்சாரஞ்சம். Tincture of Indian Hemp கொள். கஞ்சாவெசிறுத்து, ஒரு அன்சு; திட்டசீது அரைநாழி. கரைத்துக்கொள்ளவும்.

தேயம். ஐந்து முதல் இருபது மினிம்[17] வரைக்கு. செயல்கண்டு திருப்பிக்கொடுக்கவும்.

[இந்து தேசத்திலே கஞ்சா பிரதானமாய் மூன்று வகையாய் வரும். 1 ராளம் எடுக்கப்படாத காய்ந்த செடி. இது கஞ்சம்[18] எனப்படும். 2 இலை, தாள், பூக்களில் நின்று வடியும் ராளம். இது சுருசு[19]என்று சொல்லப்படும். 3 இலையும், காயும். இது பாங்கி[20] எனப்படும். இவைகளை விட மாசூன்[21] என்ற லேகியமும் ஒன்று உண்டு. இது இலை, காய்களோடு, வெண்ணெய் சர்க்கரை, மா, பால், சேர்த்துச் செய்த கூட்டு. கஞ்சாவையும் அதின் ரசிதங்களையும் பற்றிய கவனமான கெமிஸ்தசோதனை அவசியம் வேண்டும் ]

## அவாகடச்சாக்கு. Non-Officinal.

ஆல். Banyan Tree. ஆலமரத்தில் வடியும் வெள்ளையான பால், இந்துக்களின் உள்ளங்காலில் உண்டாகும் தொல்லையான வெடிப்புக்கு மெத்தச் சித்தியான பூச்சாம். யுரோப மருந்துகள் இந்த நோய்க்குப் பலமுறையும் வாயாதபடியால் இந்தப் பாலைச் சோதிக்கலாம். ஆலம் பட்டைக்கு நல்ல தொணிக[22]த்தன்மையுண்டென்று சுதேசிகள் கொள்ளுகிறார்களென என்ஸ்லி சொல்லியிருக்கிறார். இதற்கு வேறு சாட்சியில்லை.

பேயத்தி. Ficus oppositifolia. இது வங்காளம், சோழமண்டலத்தி

1 Resin. 2 Stimulant. 3 Anodyne 4 Sedative. 5 Antispasmodic. 6 Narcotic. 7 Diuretic. 8 Hydrophobia. 9 Neuralgia. 10 Nervous disease. 11 Menorrhoea, 12 Hay fever. 13 Rectified spirit. 14 Tincture. 15 Distil. 16 Water bath. 17 Minim. 18 Gunjah. 19 Churrus. 20 Bang 21 Majoon. 22 Tonic.

(65) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

லும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் ஆற்றங்கரைகளில் உண்டாகிற சிறுமரம். மூடீன்செறீவர் எழுதியிருக்கிறபடி இதின் பழமும், கொட்டையும், பட்டையும், வீறுன வமனத்தன்மையுடையன. பழக் கொட்டையே வமனத்துக்கு உவந்தது. காய்ந்தபின் ஈரம் படாதபடி நன்றாயடைத்த சீசாக்களிற் பேணிவைத்த கொட்டையே வாய்ப்பு. தேயம் ஏறக்குறைய ஒருகிறாம். இவ்வளவும் செயலில் நாலு ஆறு பழத்துக்குச் சரியாகும். பட்டையின் வமனத்தன்மையோடு பேதியும் பெரும்பாலுங் காணும். பட்டையின் தேயம் நாற்பது முதல் அறுபது கிறேன்வரைக்காகும். பட்டையைப் பதினைந்து கிறேன் முதல் முப்பதுகிறேன் வரையில் நாள் மூன்று நாலு முறை கொடுக்க அந்திபிருடி[1]யாகிறதென்றும், இதில் அரைவாசிப்பிரமாணத்தில் நல்ல தொணிகமாகிறதென்றுஞ் சொல்லியிருக்கிறது. சிறிய பேயத்தி. F. polycarpa. மூடீன் செறீவருடை பரீட்சையின்படி பேயத்தியின் அவுஷத தன்மைகள் எல்லாம் இதற்குமுண்டு. இந்த இரண்டு மரங்களின் தன்மைகளைப்பற்றி இன்னுமதிகமாயறிவது நல்லது.

அத்தி. Ficus Racemoza. Country fig tree. இதின் பால் துவர். அதை வெண்ணெய்யில் கலந்து இரத்தப்பெருக்கு, சர்க்கராமூரி, இரத்தாமூரி, இவைகளுக்குக் கொடுப்பது நாட்டு வைத்தியம். அத்திப்பிஞ்சு பத்தியத்துக்குதவும். அத்திக்கள்ளுத் தொணிகம், அல்திறவமாக வழங்கப்படும்.

நேட்டாவில் மரம். Antiaris saccidora. இது இந்துவின் மேற்குப் பகுதியிற் சோலைகளிலுள்ள மரம். அங்கே அதற்கு சுசூக்கிரை[2] என்றும் குர்வுட்டு[3] என்றும் நாமமிட்டிருக்கிறார்கள். பெலப்பும் இறுக்கமுமான சிராயுள்ள இதின் பட்டைக்காகவே இது விசேஷமாய் மதிக்கப்படும். இப்பட்டையை லகுவிற் பெயர்க்கலாம். கடுங் கைப்புள்ள இதன் கொட்டைகளுக்காகவே இது இங்கே குறிக்கப்பட்டது. இக்கொட்டையிலே அவுஷதத்துக்கு ஏற்ற ஓர் சத்து அடங்கியிருக்கிறதென்று நிம்மூ என்பவர் சொல்லியிருக்கிறார். இக் கொட்டையின் தன்மையைப் பற்றி இன்னும் ஆராய்வது நல்லது.

## மிரைசியங்கள்.

## MYRICEAE.

### அவாகடச்சரக்குகள். Non-officinal.

மருதமரம். Myrica Sapida. இது சற்லெச்சு[4] தொடங்கி சில்கெற்று[5] வரைக்கும் இமயமலையிலுள்ளது. இதின் பட்டை பற்னவுக்கும் பதிந்த தேசங்களுக்கும் ஏற்றப்படும். அங்கே சுகந்த ஸ்திமூல[6]மென்று இது மெத்தப் பேர்பெற்றிருப்பதால் ருபிவாஷ[7]ணாகவும் நாசிப்பொடியாகவும் அதை வழங்குவார்கள். வாந்திபேதியால் வருந்தும் ஆளின் நாடித்துடிப்பைக் கிளப்புவதற்கு மருதம்பட்டையையும் சுக்கையும் மாவாக்கிக் கலந்து தேய்ப்பது உத்தமமென்று ஏர்வின் பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

---

1 Antiperiodic. 2 Juzoogry. 3 Kurwut. 4 Sutlej. 5 Silhet. 6 Aromatic stimulant. 7 Rubefacient,

Digitized By Roja Muthiah Research Library

**சவுக்குமரம்.** Casuarina muricata. இது அரக்கன் மலாக்காகளிலுள்ள மரம். இந்துவிலும் அதிகமாய் வளர்க்கப்படும். இதின் பட்டை காலிகாதியரீயம்[1] திசந்தெரி[3]யின் பரிகாரிப்பிற் சுறுக்குச் சம்பாதிக்கக்கூடிய உத்தமமான துவர் மருந்தென்று கிப்சன் பண்டிதர் சொல்லியிருக்கிறார். இவ்வகுப்பான நோய்களுக்கு இது வழங்கப்படுவதைப் போதன் என்பவரும் குறித்திருக்கிறார்.

## கோனிவ்விரங்கள்.

## CONIFERAE.

### கனடபல்சமரம். BALM OF GILEAD FIR.

**வாசம்.** வட அமரிகத்தில் கனடம் நவஸ்கஷம் தொடங்கி சறுலீனம் வரைக்கும் இது உண்டாகும்.

**வாகடபகுதி.** தண்டிற் கிற வடியுந் தர்ப்பந்தீன்[4]. இது கனடபலசம்[5] எனப்படும். இது மெல்லிய தேன்பதமும் வெண்மஞ்சள் நிறமுமுள்ள, மெதுவான தேலராளமாய் வரும். தனக்கேயுரிய ஓர்வகை நல்மணமும் சற்றே கைப்புங் கார்ப்புமான சுவையும் இதற்குண்டு. திறந்தபடி வைத்துவிட்டால் மெல்ல வரண்டு உருவொளியுள்ள, ஒட்டத்தக்க வாணிசாய் வரும். இதையும் இதின் நிறையில் ஆறிலொருபங்கு அளவான மக்னீசி[7]யையுங்கலக்க இறுகும்.

**தன்மை. உபயோகம்.** இது, ஸ்திமுலம்[8]. விசேஷமாய்ச் சளிச்சவ்வி[9]லே சேஷ்டிக்கும். உள்மருந்தாய் வழங்கப்படுவதரிது. கொப்புளத்தாளிலும் சவட்கலோடிய[10]த்திலும் இது ஓர் கூறுகின்றது.

**தேயம்.** இருபது தொடங்கி முப்பது கிறேன்வரைக்கு.

### பேர்கன்றிராள[11]மரம். SPRUCE FIR.

**வாசம்.** நோர்வே, ருசியம், ஜேர்மனி, சுவிற்சலந்து தேசங்களிலும் யுரோபத்தின் மற்றும் பகுதிகளிலும் ஆசியத்தின் வடபகுதிகளிலும் இது உண்டாகும். இங்கிலந்தில் வாடிக்கையாய் வளர்க்கப்படும்.

**வாகடபகுதி.** அடிமரத்தில் வடியும் ராளம். இது உருக்கி வடிக்கப்படும். இதுவே பெர்கன்றிராளம். வன்மையும் நொருக்கலுமானது. ஆயினும் படிப்படியாய் அது விடப்பட்டிருக்கும் பாத்திரத்தின் சாங்கமாய்ப் படியும். மங்கலானது. நிறத்தில் விகற்பமடையக்கூடியதாயினும் பெரும்பாலும் மங்கலான செங்கபிலநிறமாயிருக்கும். ஓர்வகையான புகைத்த நறுமணமும் சுகந்த[12]மான சுவையுமுடையது. கைப்பற்றது. வாயுக் குமிழ்க[13]ளில்லை. சூடாக்க நீராவியைக் கக்காது.

**தன்மை. உபயோகம்.** இது ஸ்திமுலம், ருபிவாஷன்[14], பற்றுக மாத்திரம் வழங்கப்படும்.

---

1 Chronic. 2 Diarrhoea. 3 Dysentery. 4 Turpentine. 5 Canada Balsam. 6 Oleo-resin. 7 Magnesia 8 Stimulant. 9 Mucous membrane. 10 Flexible collodium. 11 Burgundy pitch. 12 Aromatic. 13 Vesicle. 14 Rubefacient.

Digitized By Roja Muthiah Research Library

ரசிதம். பிற்சுப்பிலாஸ்தர். Pitch Plaster. கொள். பெர்கன்றி ராளம், இருபத்தாறு அன்சு; தெறிபிந்தம்[1], பதின்மூன்று அன்சு; குங் குலிய[2]மும், செம்மெழுகும், வகைக்கு நாலரை அன்சு. பிழிந்த சிடத் தேலம்[3], ஒரு அன்சு; ஒலீவதேலம்[4] இரண்டு அன்சு; தண்ணீர் இரண்டு அ ன்சு. தெறிபிந்தம், பெர்கன்றிராளம், குங்குலியம், மெழுகு இந்த நாலையு ம் முன்னமே உருக்கி, அவற்றோடு எண்ணெய்களையும் தண்ணீரையுஞ் சே ர்த்து, ஓயாமற் கலக்கித் தகுந்த பதத்துக்கு வறட்டிக்கொள்ளவும்.

நாட்பட்ட இருமல்கள் மற்றுஞ் சுவாசநோய்களில் நெஞ்சுக்கு இடுவத ற்கும், இடுப்பு வலியில் இடுப்புக்கு இடுவதற்கும் இது சொற்ப தீவனியான பற்று.

அயபற்றில் இது ஓர் கூறாகச் சேருகின்றது.

## சதுவற்பைன் மரம். SWAMP PINE.

## குந்துருப்பைன்மரம். FRANKINCENSE PINE.

வாசம். வட அமரிகத்தின் தென் நாடுகளில் இது உண்டாகும்.

வாகடபகுதி. உறைந்த பாணி. இது தெறிபிந்தம் எனப்படும். இது மெதுவும் நன் மஞ்சள் மங்கலுமான கட்டி. ராளத்[5]தன்மை கொண்டதாயி னும் உரத்தது. தார்ப்பந்தீனின்[6]மணமுடையது.

தன்மை உபயோகம். இது ஸ்திமுலம், உள்மருந்தாகக் கொடுப்பதில் லை. இது பிற்சுப்பிலாஸ்த[7]ரில் ஓர் கூறாகச் சேருகின்றது.

ரசிதம். தெறிபிந்துத்தேலம். தார்ப்பந்தீன். Oil of Turpentine. இது மேலே சொன்ன இரண்டு மரங்களில் நின்றும், சிலவேளை பினஸ்தர்[8]என்ற பைன் மரத்தினின்றும் வடிகிற தேலராளத்தைத் திஸ்திலித்[9]தெடுக்கும் எண் ணெய். இது நிறமற்றதும், தெளிந்ததும், லேசிற் சுவாலிக்கக் கூடியதுமான நீர். தனக்கேயுரிய வீறுன மணமுங் கார்ப்பான சுவையுங் கொண்டது. தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும். அலக்காலில்[10] மட்டாய்க் கரையும். ஈ தரிற்[11] கெதியாய்க்கரையும். திர எண்ணெய்[12]களில் எந்தவீதமாயுங் கலக்கு ம். குங்குலியங்களையும் பிணங்களையும் கூச்சுக்கை[13]யும் இது கரைக்கும். 0.86 என்ற விசேஷகுருவிதம்[14] உடையது. பரமாணுவில் வைத்தால் அக் சித[15] வாயுவை உறிஞ்சி சாடையான மஞ்சள்நிறமுஞ் சற்றே தடிப்புமாய் வ ரும். சுத்தமாயிருக்கையில் சோதனைத்தா[16]ளுக்குத் தடஸ்தமாய் நிற்கும்.

தன்மை. ஸ்திமுல[17]மே இதின் முதலான தன்மை. பிரதானமாய்ச் சளி ச்சவ்[18]விலும் அதிலும் விசேஷமாய்ச் சனனசல உறுப்புகளின் சளிச்சவ்வி லும் இது சேஷ்டித்துச் சிறுநீரை அதிகப்படுத்தித் தன் சுயமணத்தையும் அ தற்குவிடும். இரண்டாவதான தன்மை, செரதீவ[19]மும்,அந்திஸ்பசி[20]யுந் துவ ருமே. பெருந்தேயத்தில் விரேசனியும் கிருமிகொல்லியுமாகும். தானிக மாய் அணைத்தால் நல்ல ருபிவாஷ[21]னும் எதிரழற்சி[22]யுமாகும்.

உபயோகம். சன்னிச்சுரம், சன்னிவச்சுரங்களிலும் எவ்வகைத் தொ

---

1 Common frankincense or Terebinthina. 2 Resin. 3 Oil of nutmeg. 4 Olive oil. 5 Resin. 6 Turpentine. 7 Pitch plaster. 8 Pinaster. 9 Distil. 10 Alcohol. 11 Ether. 12 Fixed oil. 13 Caoutchouc. 14 Specific gravity. 15 Oxygen. 16 Test paper. 17 Stimulant. 18 Mucous membrane. 19 Sedative. 20 Antispasmodic. 21 Rubefacient. 22 Counter irritant.

Digitized By Roja Muthiah Research Library

டக்கமுள்ள சுரங்களின் பிற்கூற்றிலும் அசத்துவ தாபிதங்களில் விசேஷமாய்ச் சுவாசப்பைத் தாபிதத்திலும் சீவசத்துவங் குன்றின மற்றுநோய்களிலும் இது உத்தம ஸ்திமூலமாகும். பிரசுவ சுரத்துக்கு இது கைகண்ட மருந்தென்று பாராட்டப்பட்டாலும் அதற்குப் போதிய அத்தாட்சியில்லை. இரத்த இருமல் முதலிய சபல இரத்தப்பெருக்குக்கும் விசேஷமாய்க் கசத்திற் காணும் இரத்தப்பெருக்குக்கும், இரத்தவாந்தி[1], இரத்தாமுரி[2], மெனுறீயங்க[3]ளுக்கும் கருப்பை, மூலமுளைகளினின்றுபாயும் இரத்தப்பெருக்குக்கும், இத்துவர் நன்றாய்ப் பிடிக்கும். இஸ்தேரி[4], எபிலெப்சி[5], பிரசவ வலிப்புகள் மற்றும் வலிப்புகள், ஏர்ப்புகளுக்கும், குடலடைப்பு, வங்கவலி[6], வாயுப்பொருமல் வலிகளுக்கும் இது உத்தம அந்திஸ்பாசி[7]யாகும். கீரைப்பாம்பு, தீனியப்புழுக்க[8]ளைக் கழற்றுவதற்கு இது நல்ல கிருமிகொல்லியாகும். மேலும் எமறெச்சுப்பெயூறம்[9], தளர்ச்சியோடு கூடிய மூளைநோய்கள் பித்தக்கற்கள் திசந்தெரி[10]யின் பிற்கூறு, கனுறீயம்[11], லுகறீயம்[12], நீர்க்கோவை வாந்திபேதிகளுக்கும், கண் வியாதிகளுக்கும், அவைகளுள் விசேஷமாய் வாதம் சிவ்விசு[13]காரணமாயுண்டான இரிசீது[14]க்கும், கர்ணி[15]யழுகலின் தொடக்கத்துக்கும் இம் மருந்து கொடுத்து நயங்கண்டது. ஈத[16]ரோடு சேர்த்துக் கொடுத்தாற் பித்தக் கல்லைக் கரைக்குமாம். வெளிமருந்தாக இது வேக்காட்டுக்காயங்கள், கோதங்கள்[17], சீர்கெட்ட மந்த விரணங்களுக்கும், காலிகவாதம் நுறல்சி[18], ஈளை[19], குறூப்பு[20] பொருத்து வீக்கங்களுக்கும் பல்லுப் பிடுங்கினபின் காணும் இரத்தப்பெருக்குக்கும் வழங்கப்படும். சீர்கெட்ட புண்களில் உள்ளுக்குங் கொடுக்கலாம்.

**தேயம்.** அமூரிதி[21], துவராக இதை எட்டுமினிம்[22] முதல் முப்பது மினிம் வரைக்கும் ஸ்திமூலம்[23] அந்திஸ்பாசியாக அரைத் திறாம் முதல் ஒரு திறாம் வரைக்கும் விரேசனி கிருமிகொல்லியாக அரை அன்சு முதல் ஒரு அன்சு வரைக்குங் கொடுக்கலாம். எதிரழற்சியாக இதை லினிமெனுக[24]வாவது அன்கெனுக[25]வாவது பூசலாம். அல்லது தர்ப்பந்தீன் தேலைச் சீலையிற் தோய்த்துத் தோலில் இட்டு அனலாக்கிய கம்பளியை மடித்து அதற்கு மேலே அணைத்துவிடலாம். இப்படி இட்டாற் சுறுக்கு நிச்சயமாய்ப் பிடிக்கும்.

**தர்ப்பந்தீனின் ரசிதங்கள்.** Preparations of oil of Turpentine. **தர்ப்பந்தீன் லேகியம்.** Confection of Turpentine. கொள். தர்ப்பந்தீன் தேல் ஒரு அன்சு; அதிமதுர வேர்த்தூள் ஒரு அன்சு; சுத்த தேன் இரண்டு அன்சு. தர்ப்பந்தீன் தேலை அதிமதுரத் தூளோடு சேர்த்து அரைத்துத் தேனைக்கூட்டிச் செவ்வையாய்க் கலக்கவும்.

**தேயம்.** ஒரு திறாம் முதல் இரண்டு திறாம் வரைக்குக் கொடுக்கலாம்.

**தர்ப்பந்தினெனீமம்.** Enema of Turpentine, கொள். தர்ப்பந்தீன், ஒரு அன்சு; தடித்த கஞ்சி பதினைந்து அன்சு. கலக்கவும்.

இஸ்தெரி வலிகள் மற்றும் வலிகளுக்கும், அங்கவிகிர்தி[26]க்கும், தர்ப்பந்தீனை வாயாலே கொடுக்கக்கூடாத வேளைகளுக்கும் இது உபயோகமானது. காய்ச்சலின் பிற்பாதங்களில் வாயுப்பொருமலைத் தணிக்க உவந்தது. கடை

---

1 Haematemesis. 2 Haematuria. 3 Menorrhoea. 4 Hysteria. 5 Epilepsy 6 Lead colic. 7 Antispasmodic. 8 Taenia. 9 Purpura Haemorrhagica: 10 Dysentery. 11 Gonorrhoea. 12 Leucorrhoea. 13 Syphilis. 14 Iritis. 15 Cornea. 16 Ether. 17 Gangrene. 18 Neuralgia. 19 Asthma. 20 Croup. 21 Diuretic. 22 Minim. 23 Stimulant. 24 Liniment. 25 Unguent. 26 Apoplexy.

Digitized By Roja Muthiah Research Library

ச்சுடலினின்று தானப் புழுவைக் கழற்றத் தகுந்தது.

தார்ப்பந்தீன் லினிமேன். Liniment of Turpentine. கொள். மென் சபு[1] இரண்டு அன்சு; பூரம்[2] ஒரு அன்சு; தார்ப்பந்தீன்[3]தேல் பதினாறு அன்சு. பூரத்தைத் தார்ப்பந்தீன் தேலிற் கரைத்துச் சபுவையுஞ் சேர்த்து இவை நீர்ப் பாய்க் கலக்குந்தனையும் அரைக்கவும்.

தார்ப்பந்தீனசிதிக்கமில லினிமேன். Liniment of Turpentine and Acetic acid. கொள். தார்ப்பந்தீன் தேல், அசிதிக்கமிலம், பூரலினிமென், வகைக்கு ஒரு அன்சு. கல.

வாதம், நறல்சி[4], மற்றும் வருத்தமான காலிக நோய்களுக்கு இந்த லினி மென்கள் இரண்டும் உவந்த ஸ்திமுலஸ்[5] ருபிவாஷ[6] பூச்சுகளாகும்.

தார்ப்பந்தீனஃன்கேன். Ointment of Turpentine. கொள். தார்ப்பந்தீன் தேல், ஒரு அன்சு; ராளம், பருக்கன் தூளாக, அறுபதுகிறேன்; செம்மெழு கு, பூதலாடு[7], வகைக்கு அரைஅன்சு. எல்லாவற்றையும் ஸ்தீம்[8]சூட்டி லாவது நீர்மத்திக[9]த்தின்சூட்டிலாவது ஒன்றாகக் கலந்து பாத்திரத்தோடு இ றக்கி, ஆறும்போது ஓயாமற் கலக்கவும்.

மந்தமான சீர்கெட்ட புண்களுக்கு இது நல்ல தீவன பூச்சாகும்.

ராளம். Resin. இது பைன், அபீஸ்[10]என்ற மர இனங்களினின்று வடி யும் தார்ப்பந்தீனைத் திஸ்திலிக்க எஞ்சும் சேடம். இது உருவொளியும் சற் றே மங்கலும் சாடையான மஞ்சள்நிறமும் நொருக்கலும் மாவாக்கப்படக் கூடியதுமானது. ஒடிவு மினுக்கமுள்ளது, மணம் சுவை சொற்பமாய்த் தார் ப்பந்தீனைப் போன்றது. லகுவில் உருகக்கூடியது. கனத்த மஞ்சள்நிறச் சுவாலைகொண்டு அதிகமாய்ப் புகைத்து எரியும். தண்ணீரிற் கரையாது. அலக்கால்[11], ஈதர்[12]களிலும் அத்திர எண்ணெய்களிலும் கரையும். மெழுகு, திரஎண்ணெய்[13]கள்,திமிநெய்க[14]ளோடு உருகிச்சேரும். இதைத் திஸ்திலிக்க, ராளத்தேல் என்ற எண்ணெய்யும் தாரும்[15] பிறக்கும்.

தன்மை உபயோகம். இது ஸ்திமுலம். வெளிமருந்தாக மாத்திரம் வழ ங்கப்படும். வாகடத்துக்குரிய பல பிலாஸ்தர்களில் இது ஓர் கூறாகச் சே ருகின்றது.

ரசிதங்கள். ராளப்பிலாஸ்தர். Resin Plaster. கொள். ராளம், அ ரை இறாத்தல், ஈயப்பிலாஸ்தர் மூன்று இறாத்தல். ஈயப்பிலாஸ்தரை மெ ன்சூட்டில் மெல்ல உருக்கிக்கொண்டு, வேறாய் உருக்கின ராளத்தை அத்து டன் சேர்த்து இரண்டுந் தீர்ப்பாய்ச் சேருந்தனையுங் கலக்கவும்.

இது தானிக ஸ்திமுலம்[16]; காயங்கள் முதலியவற்றுக்குத் தாபரமாயிடப்ப டும். அவின்பற்று, பெலடோன[17]ப்பற்று, வெம்பற்று[18], ஈயவியோதிரப்பற்று[19]க ளில் இது ஓர் கூறாகச் சேருகின்றது.

ராளவன்கேன். Ointment of Resin. கொள். ராளம் பருக்கன் மா வாக, எட்டு அன்சு; செயமெழுகு, நாலு அன்சு; லாடன்கென்[20], பதினாறு அன்சு. எல்லாவற்றையும் மென்சூட்டில் ஒன்றாயுருக்கிச் சூடாயிருக்கை யிற் கம்பளியில் வடித்து, ஆறும்போது ஓயாமற் கலக்கவும்.

மந்தமான சீர்கெட்ட புண்களுக்கும் விசேஷமாய் வேக்காட்டுப் புண்க

---

1 Soft soap. 2 Camphor. 3 Turpentine. 4 Neuralgia. 5 Stimulant. 6 Rubefacient. 7 Prepared lard. 8 Steam. 9 Water bath 10 Abies. 11 Alcohol. 12 Ether. 13 Fixed oil. 14 Spermaceti. 15 Tar. 16 Local stimulant. 17 Belladonna. 18 Warm plaster 19 Plaster of Iodide of lead. 20 Simple ointment.



Digitized By Roja Muthiah Research Library

ளுக்கும், இது தீவன தைலம். மேலும் கொப்புளித்த புண்களை ஆறாமல் நீர் பொசிந்துகொண்டிருக்கப்பண்ணுவதற்கும் இது உவந்தது.

## காட்டுப்பைன். WILD PINE.

**வாசம்.** இது ஸ்கற்லந்து, தென்மார்க்கு, நோவேயின் மேட்டுப்பகுதிகளிலும் யுரோபத்தின் மற்றும் வடபகுதிகளிலும் உண்டாகும்.

**வாகடபகுதி.** நாச திஸ்திலிப்[1]பாற் பைன் மரங்களினின்று எடுக்கும் கிசில். இது மரத்தார்[2]எனப்படும். இது தடித்த பிசுபிசுப்பான ஒட்டுநீர். கருங்கபிலநிறமும் ஓர்வகைச் சுகந்த மணமுமுடையது. தண்ணீரை இதோடு கலக்க, அத் தண்ணீர் வெண் கபில நிறமாயுங் கார்ப்பான் புகைமணங்கொண்டதாயும் அமிலத்தகை[3] உடையதாயும் வரும்.

**தன்மை.** இது ஸ்திமுலம்[4]. இதின் செயல் விசேஷமாய்ச் சளிச்சவ்விலும் தோலிலுமே விளங்கும்.

**உபயோகம்.** சருமநோய்களுக்கு இது உள்ளுக்கும் வெளிக்கும் வழங்கப்பட்டு நயங்கண்டது. மேலும் சன்னிவச்சுரத்துக்[5]கும் வாடிக்கையான மலவரட்சிக்கும், காலிக புறங்கீது[6]க்கும் வழங்கப்பட்டது. எரியுந் தாரினின்று எழும்பும் ஆவி கசரோகத்துக்கும், மற்றுங் காலிக சுவாச நோய்களுக்கும் உவந்ததாகக் காணப்பட்டது.

**தேயம்.** அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்கு கோதுமை மாவோடு சேர்த்துக் குளிகையாக்கி நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம்.

**ரசிதங்கள். தாரன்கேன். Ointment of Tar.** கொள். தார், ஐந்து அன்சு; செம்மெழுகு இரண்டு அன்சு. மெழுகை மென்சூட்டிலுருக்கித் தாரைக் கூட்டி அக்கலவை ஆறும்போது செதியாய்க் கலக்கவும்.

படர்தேம[7]லுக்கும், சொறீயசிக்கும்[8] மற்றுஞ் சருமநோய்கள் புண்களுக்கும் இது இடப்படும்.

**கிறீயசற்று. Creasote.** மரத் தாரைத் திஸ்திலிக்க வரு நீர். இது நிறமற்றது அல்லது சற்றே மஞ்சள் நிறமுடையதாய் வீறான புகைமணங்கொண்டிருக்கும். தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும். அலக்கால்[9] ஈதர்[10]களிலும் கிலாசியலசிதிக்கமில[11]த்திலும் தாராளமாய்க் கரையும். 1.071 என்ற விசேஷகிருவிதம்[12] உடையது. இது அல்புமி[13]னை உறைவிக்கும். பைன்[14] தடியை இதிற்தொட்டுப் பின்பு ஐருகுலோறிக்கமில[15]த்திற்தொட அது சற்று நேரம் பரமாணுவிலிருந்தபின் பச்சையான நீலநிறமடையும். ஊறுதாளி[16]லே ஒரு துளியை விட்டு 212 பாகை சூட்டில் பிடிக்க தெளிந்த பொட்டு, நில்லாது. போலறிச வெளிச்ச[17]கிரணத்தின் பரவையை இது வலப்பக்கத்துக்குத் திருப்பும். ஐருகுலோறிக்கமிலமும் சோடசல்வசு[18]ஞ் சேர்த்த கலவையிலுண்டாகுங் குளிரால் இது இறுகாது.

**தன்மை.** முதலாவதாய் ஸ்திமுலம், இரண்டாவதாய் செரதீவம்[19]. தாளிகமாய் இட்டால் அழற்சி[20]யும் காரமு[21]மாகும். மேலும் அல்புமினை உறைவிக்கும் தன்மையைக்கொண்டு அந்திசெப்தி[22]யாய்ச் சேஷ்டிக்கும்.

---

1 Destructive distillation. 2 Tar. 3 Acid reaction. 4 Stimulant 5 Typhoid fever. 6 Chronic Bronchitis. 7 Ring worm. 8 Psoriasis. 9 Alcohol. 10 Ether. 11 Glacial acetic acid. 12 Specific gravity. 13 Albumen. 14 Pine. 15 Hydrochloric acid. 16 Filtering paper. 17 Polarized light. 18 Sulphate of soda 19 Sedative. 20 Irritant. 21 Caustic. 22 Antiseptic.

Digitized By Roja Muthiah Research Library

உபயோகம். இரைப்பை அழற்சியிலும் குன்மத்திலும் தாபிதத்தோடுகூடாத வாந்தியிலும் இதால் மெத்த நயமுண்டாகும். மேலும் தியற்ியம்[1] விபல இரத்தப்பெருக்கு[2] கனுறியம்[3] லுகறியங்க[4]ளுக்கு இது கொடுத்துச் சித்திபெற்றது. சர்க்கராமூரி[5]க்கும் நல்லதாம். வெளிமருந்தாகச் சருமநோய்களுக்கும் காதனப்புண்[6] சயதப்புண்[7], கிடைப்புண்களுக்கும் நீவசு[8], எரிசிப்பிலசு[9], சிவ்லிசு[10]க் கழலைகளுக்கும் இது வழங்கப்பட்டது. கிறீயசற்றுத்தாவனியை[11]நாசித்துவாரங்களுக்குள்ளே நாள்தோறும் பலமுறை புகட்டுவதால் பார்சினேமம்[12] நயந்திருக்கின்றது. கோறைப்பல்லுக்குள் அடைசப் பற்கொதி பலமுறையுந் தணியும். இது உமிழ்நீரைப்பெருக்கும். இதின் ஆவியைச் சுவாசித்தல் காலிகபுறங்கிது[13]க்கும் காலிகமான மற்றுஞ் சுவாச வியாதிகளுக்கும் உபயோகமாய்க் காணப்பட்டது.

தேயம். ஒரு மினிம்[14] முதல் மூன்று மினிம் வரைக்குக்குளிகையாக்கியாவது பின்வருங் கலவையையாவது கொடுக்கலாம்.

ரசிதங்கள். கிறீயசற்றுக் கலவை. Creasote Mixture. கொள். கிறீயசற்று, பதினாறு மினிம்; கிலாசியல் அசிதிக்கமிலம்[15] பதினாறு மினிம்; சூனிபச்சீது[16], அரைத்திரும்; சிறாபம்[17] ஒருஅன்சு; தண்ணீர் பதினைந்து அன்சு. கிறீயசற்றை அசிதிக்கமிலத்தோடு சேர்த்துத் தண்ணீரைப் படிப்படியாய்க்கலந்து கடைசியாய்ச் சிறாபத்தையும சூனிபச்சீதையுஞ் சேர்க்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் மூன்றுநாலுமுறை கொடுக்கலாம். ஒவ்வொரு அன்சிலும் கிறீயசற்று ஒரு மினிம் இருக்கும்.

கிறீயசற்றன்கேன். Ointment of Creasote. கொள். கிறீயசற்று, ஒரு திரும்; லாடன்கென்[18], ஒரு அன்சு. திறமாய்க் கல.

இது சரும நோய்களுக்கும் புண்களுக்கும் ஓர் தீவன பூச்சாகும்.

கிறீயசற்றுச்சுவசனம். Inhalation of Creasote. கொள். கிறீயசற்று, பன்னிரண்டு மினிம்; கொதிநீர் எட்டு அன்சு. கலவைக்கூடே காற்றுச் செல்லத்தக்கதாக ஒரு அணியஞ்செய்து அதற்குள்ளே கிறீயசற்றையும் வெந்நீரையுங் கலந்து அதற்கூடே வருங் காற்றைச் சுவாசிக்கவும்.

## சூனிபச்செடி. COMMON JUNIPER.

வாசம். இது யுரோபம் ஆசியங்களின் வடபகுதிகளிலும் அமரிகத்திலும் உண்டாகும்.

வாகடபகுதி. பளம். இது மிளகளவு பருமையுங் கருந் தூமில[19] நிறமுமாய் வெண்பச்சை நிறமான மாவால் மூடப்பட்டிருக்கும். மேல்வளத்திற்றிரிவிகம[20] வரையையும் கீழ்வளத்தில் புள்ளடிச்சாங்கமாய் அடுக்கியிருக்கிற செதில்களையும் உடையது. தர்ப்பந்தின்[21] போன்ற இனிய சுவையும், பல்சம்[22]போன்ற நற்கந்தமுங் கொண்டது. ஓர் அத்திரதே[23]லே இதின் சத்து.

தன்மை. இது ஸ்திமுல[24]மும், அமூரிதி[25]யும், காமினதி[26]யுமாகும்.

---

1 Diarrhoea, 2 Passive Haemorrhage, 3 Gonorrhoea. 4 Leucorrhoea. 5 Diabetes. 6 Phagedenic ulcer. 7 Scrofulous. 8 Naevi. 9 Erysipelas. 10 Syphilis 11 Lotion, 12 Farcinoma, 13 Chronic bronchitis. 14 Minim. 15 Glacial acetic acid. 16 Spirit of Juniper. 17 Syrup. 18 Simple ointment. 19 Blackish purple. 20 Tri-radiate. 21 Turpentine. 22 Balsam. 23 Volatile oil, 24 Stimulant .25 Diuretic, தியுரேசி. 26 Carminative, வாயுக்கினி,

Digitized By Roja Muthiah Research Library

**உபயோகம்.** அசத்துவ[1]மான நீர்க்கோவை வியாதிகளுக்கும், வாயுப்பொருமல்[2], வாயு வலி[3]க்கும், குடலின் ஸ்பச[4]நோய்களுக்கும், காலிக[5]கனுநீயப்[6], லுகநீயங்க[7]ளுக்கும் இது உவந்ததாய்க் காணப்பட்டது.

**தேயம்.** நாற்பது கிறேன் முதல், இரண்டு திறும் வரைக்கு, இன்வூச[8]மாக்கிக் கொடுக்கலாம். அத்திரதேலாக அல்லது சீதாகக் கொடுப்பதே உத்தமமான முறை.

**ரசிதங்கள். சூனிபதேல்.** Oil of Juniper. இது காயைத்திஸ்திலிச்[9]கப் பிறக்கும் அத்திர எண்ணெய்[10]. இது நிறமற்றது. அல்லது வெண்மஞ்சள்நிறமானது. இனிய மணமும் வெம் சுகந்த[11] சுவையுமுடையது.

**தேயம்.** ஒரு மினிம்[12] முதல் ஐந்துமினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

**சூனிபசீது.** Spirit of Juniper. கொள். சூனிபதேல் ஒரு அன்சு; திட்டசீது[13] நாற்பத்தொன்பது அன்சு. இவற்றைக் கலந்து கரைக்கவும்.

**தேயம்.** முப்பது மினிம் முதல் ஒரு திறும் வரைக்கு நாள் மூன்றுநாலுமுறை கொடுக்கலாம். 1864 ம் ஆண்டு பிரசுரஞ்செய்த பிறித்தனி வாகடத்திற் சொல்லப்பட்ட சூனிப சீதைப்பார்க்க இது ஐந்திலொருபங்கு பெலனுளது.

## சபீனச் சேடி. SABINA. SAVINE.

**வாசம்.** இது யுரோபத்தின் மத்தியபகுதிகள் தென்பகுதிகளிலும் ஆசியருசியத்திலும் உண்டாகும். இங்கிலந்திலும் வளர்க்கப்படும்.

**வாகடபகுதி.** பச்சையுங் காய்ந்ததுமான துளிர்கள். இவை வசந்தகாலத்திற் சேர்க்கப்படும். **லட்சணங்கள்.** கவிந்து தண்டோடே அணைந்து நெருங்கி நாலு நிரையாயிருக்கிற நுண்ணிய இலைகளாற் கொழுந்து மூடப்பட்டிருக்கும். வீறுன ஓர்வகைக் கெட்ட மணங்கொண்டது. கார்ப்புங் கைப்புமான ராளம் போன்ற கெட்ட சுவையுள்ளது. ஓர் அத்திரதே[13]லும், கார்ப்பான ஓர் ராளமுமே இதின் சத்து.

**தன்மை.** இது கார்ப்பான ஸ்திமுல[14]மும் எம்மெனகக்கு[15]மாகும். பெருந்தேயத்தில் நஞ்சு.

**உபயோகம்.** அமெனுறீய[16]ம், லுகறீயம்[17] விபலமெனுறீயம்[18], வாடிக்கையான கருவழிவுகளுக்கும் கருப்பையின் செயற்குறைவைப்பற்றிய மற்று நோய்களுக்கும் இது கொடுத்து நயந்தது. மேலும் சிவ்லிசுக்காய்க[19]ளுக்கும் சருமநோய்களுக்கும் வெளிமருந்தாக வழங்கப்படும்.

**தேயம்.** மூன்று கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு இன்வூசமாக்கிக்கொடுக்கலாம். பிரதானமாய்ப் பின்வரும் ரசிதங்களாகவே இது கொடுக்கப்படும.

**ரசிதங்கள். சபீனத்தேல்.** Oil of sabina. பச்சையான சபீனத்துளிர்களைத் திஸ்திலித்தெடுக்குமெண்ணெய். இது தெளிந்து நிறமற்றதாய் அல்லது வெண்மஞ்சள் நிறமாய்ச் சபீனச் செடிக்குரிய மணங்கொண்டு, கைப்புங் கார்ப்புமான சுவையுள்ளதாயிருக்கும.

---

1 Asthenic. 2 Flatulence. 3 Flatulent colic. 4 Spasm. 5 Chronic. 6 Gonorrhoea: 7 Leucorrhoea. 8 Infusion. 9 Distil. 10 Volatile oil. 11 Aromatic, 12 Minim. 13 Rectified spirit 14 Stimulant. 15 Emmenagogue. 16 Amenorrhoea, 17 Passive menorrhoea. 19 Syphilis.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒரு மினிம முதல் ஐந்து மினிம் வரைக்கு. உள்ளே கொடுக்க இதுவே உத்தமமான முறை.

சபீனாஞ்சம். Tincture of sabina. கொள். காய்ந்த சபீனத்துளிர்,பருக்கன்தூளாக்கி இரண்டரை அன்சு புருவுசீது[1]அரைநாழி. மூடிய பாத்திரத்திற் சபீனத்தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளைக்கு ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[2]யில்வார்த்து நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து ஒழுகவிடவும். பிற்பாடு சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புருவுசீது அத்தோடு சேர்க்கவும்.

தேயம். இருபது மினிம் முதல் அறுபது மினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

சபீனவன்கேன். Ointment of sabina. கொள். பச்சையான சபீனத்துளிர், துவைத்து, எட்டு அன்சு; வெண்மெழுகு மூன்றுஅன்சு; பூதலாடு[3] பதினறுஅன்சு. லாட்டையும் மெழுகையும் நீர்மத்திகத்[4]திலிட்டு உருக்கிச் சபீனத்தோடு கூட்டி இருபது மினிநேரம் ஊறவிட்டு அப்பால் எடுத்துக் காரிக்கம்புடைவையில் வடிக்கவும்.

இது தீவனியான தைலம். கொப்புளித்த புண்கள் ஒடுக்களினின்று நீர் பாய்ந்துகொண்டிருக்கப்பண்ணவேண்டியிருக்கிற இடத்து இதை மிகுதியாய் வழங்குவார்கள்.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

நெட்டிலைப்பைன்மரம். Pinus Longifolia. இது இமயமலையில் 2000 அடி உயரமுதல் 6000 அடி உயரம் வரையில் உண்டாகும். வட இந்துவின் சனங்கள் இதினின்று தாரும்[5] தர்ப்பன்தீனு[6]மெடுப்பார்கள். இத்தார் யுரோபத்தில் சுத்தமாய்ச் செய்யப்படும் தாருக்குச் சரியானதாம். யுரோபத்தால் வருந் தர்ப்பந்தீனுக்கு இத் தர்ப்பந்தீனைச் சரியாக்குவதற்குச் சொற்ப மாறுதலாகவேணும். சுதேசிகள் இவற்றைச் செய்யும் முறையைப்பற்றி, வங்காள ஆசியசங்கம் என்ற புஸ்தகத்திலே விவரஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மரத்தினின்றும் உயர்பைன்[7] தேவதருபைன்[8] என்ற மரங்களினின்றும் தார் செய்யும் முறையைப்பற்றி கிளேகாண் என்பவர் நயப்பான சில குறிப்புகள் சொல்லியிருக்கிறார். இந்தத் தாரானது உத்தமமானதென்றும் சுவிதேன் தேசத்திற் செய்யப்பட்ட தாருக்குச் சரியானதென்றும் அவர் சொல்லுகிறார். இது மலிந்த சரக்காகுமாதலால் இதுகாரியத்தைக் கவனிப்பது நல்லது. இந்தப் பைன் மரத்தில் வடியுந் தர்ப்பந்தீனை, சீர்கெகுண்டு[9], பீர்சி[10],குண்டபிரோசம்[11]என்ற இந்துஸ்தானிப்பெயர்களால் ரோயில் என்பவர் குறித்திருக்கிறார். என்றாலும் கடைசியானபெயர் குந்துருக்கத்[12]துக்கே விசேஷமாய் வழங்கப்படும்.

தேவதருபைன்மரம். Pinus Deodara. இமயமலையிலுள்ள இந்த மரத்துக்குத் தேவதரு என்றும் கெலுன்[13] என்றும் பேரிட்டிருக்கிறார்கள். தம்சன் பண்டிதர் சொல்லுகிறபடி தேவன் தந்த மரம் என்ற கருத்துள்ள இந்தப் பெயர் வேறு மரங்களுக்கு வழங்குமாயினும் குமையன்[14] காசுமீரம் என்ற

---

1 Proof spirit. 2 Percolator. 3 Prepared lard. 4 Water bath. 5 Tar. 6 Turpentine. 7 Pinus Excelsa. 8 P. Deodara. 9 Cheer-ke-goond. 10 Birjee. 11 Gunda Beroza. 12 Olibanum. 13 Kelon 14 Kumaon.

Digitized By Roja Muthiah Research Library

இடங்களில் இதற்கு மாத்திரமே வழங்குகிறார்கள். சிம்லாவில் இம்மரம் கெலூன் எனப்படும். அங்கே தேவதரு என்ற பெயர் முடிச்சுச்சைபிரஸ்[1] என்ற மரத்துக்கு வழங்குமென்று மடெனர் சொல்லியிருக்கிறார். இதிலே மிக மெல்லிதான ஓர் தார்ப்பந்தீன் பிறக்கும். அது புண்கள் தோல்வியாதிகளுக்கு நல்ல பூச்சுமருந்தென்று சுதேசிகள் அதை மெத்தவும் மதிப்பார்கள். மேலும் அவர்கள் குஷ்டத்துக்குக் கொடுக்கும் மருந்துகளில் இது அதிகமாய்ச் சேர்ந்திருக்கும். பெருந்தேயத்திற் கொடுத்தால் இந்த நோய்க்கு இது வாய்க்குமென்பது கிப்சன் பண்டிதர் எண்ணம். இம் மரத்தினின்று சூடுகாட்டி எடுத்த எண்ணெய்யை உள்ளுக்கும் வெளிக்கும் பிரயோகித்துப் பரிகரிக்கப்பட்ட, கடுமையான இதரச் குஷ்ட[2]த்தில் வருந்தின ஆளைப்பற்றி ஜான்ஸ்தன் பண்டிதர் விபரமாய் எழுதியிருக்கிறார். தேவதரு எண்ணெய் இந்த ஆளில் நோயைச் சடுதியில் தடுத்து அதைச் சுறுக்கு மெத்த வாய்ப்பாய் மாற்றியதென்று அவர் குறித்திருக்கிறார். இந்த எண்ணெய்யில் நோயாளியின் இரைப்பை தாங்கக்கூடிய பெருந் தேயம் ஒருதிறாமே. இது எப்போதுஞ் சுவேதனி[3]யாகச் சேஷ்டித்ததன்றி வேறொருசெயலுங் காட்டவில்லை. இதின் செயலில் மெத்த விகற்பமுண்டு. சிலரில் ஒரு திறாம் வாந்தியை உண்டாக்க வேறு சிலரில் அரை அன்சு சொற்ப உவட்டிப்பைமாத்திரமுண்டாக்கினதாய்க் காணப்பட்டது. மற்றுஞ் சருமநோய்களுக்கும் ஜான்ஸ்தன் பண்டிதர் இதை வழங்கி நயமென்று கண்டார். தேவதருவின் இலைகளுந் தளிர்களும் மலையிலிருந்து நாடுகளுக்குக் கொண்டுவரப்பட்டுச் சுதேச வைத்தியத்தில் மெத்த வழங்கப்படுகின்றனவென்று ரோயில்பண்டிதர் சொல்லியிருக்கிறார். சொற்ப சாந்தமான, தார்ப்பந்தீன் தன்மை இலைக்கு இருக்கக்கூடும்.

---

1 Cupressus torulosa. 2 Lepra Mercurialis, 3 Diaphoretic.

Digitized By Roja Muthiah Research Library

# II வகுப்பு. ஏககதிலீதங்கள். Monocotyledons.

## ஸ்மைலாசியங்கள்.

## SMILACEAE.

### சார்சவேர். JAMACA SARSAPARILLA.

வாசம். இது நடு அமரிகத்தில் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்தவேர். இது ஜமேகத்திலிருந்து பிறித்தனிக்கு ஏற்றப்படும். வேர் பெரும்பாலும் தென்னீர்க்களவு பருமையும் பல அடி நீளமுமானது. செங்கபில நிறமுள்ளது, வேர்க் கூந்தல்களால் மூடப்பட்டு ஒரு முழ நீளமான கட்டுகளாக மடக்கப்பட்டுவரும். மணமற்றது. சுவை பிசுபிசுப்பும் சற்றே கைப்பும் சொற்ப கார்ப்புங் கொண்டது. இதிலே காரமுங் கைப்புமான சொற்பராள[1]மும் அற்பமான அத்திரதே[2]லும், ஸ்மைலாசின்[3] என்ற கிரிஸ்தற்[4]பதார்த்தமும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது அல்திறவ தொணிகம்[5].

உபயோகம். சிவ்விசு[6] நோய்கள், காலிகமான வாத[7]நோய்களுக்கு இது நெடுங்காலமாய்ப் பெயர்பெற்ற மருந்து. மேலுங் காலிகமான ஈரல் நோய்களுக்கும் நெடுகிநிற்குஞ் சருமநோய்களுக்கும் விசேஷமாய்ச் சிவ்விசுத்தன்மைகொண்ட சருமநோய்களுக்கு இது வழங்கப்படும்.

தேயம். வேரை மாவாக்கி அதிலே அரைத்திரும் முதல் ஒரு திரும் வரைக்கும் கொடுக்கலாம்.

ரசிதங்கள். சார்சதிகாக்தம். Decoction of Sarsaparilla. கொள் சார்சவேர், குறுக்கே நறுக்கி, இரண்டரைஅன்சு; கொதிநீர் முக்கால்நாழி. சார்சவேரைக் கொதிநீரில் ஒருமணிநேரமூறப்போட்டு அப்பால் பத்துமினி வரைக்கு மூடி அவித்து, ஆறினபின் சீலையில் வடிக்கவும். தேவையாகில் அரைநாழி தேற இன்னும் வெந்நீரைச் சக்கையில் வார்க்கவும்.

தேயம். இரண்டு அன்சு முதல் நாலு அன்சு வரைக்கு நாள் மூன்றுநாலு முறை கொடுக்கலாம்.

சார்சகூட்டுத் திகாக்தம். Compound Decoction of Sarsaparilla. கொள். சார்சவேர் குறுக்கே நறுக்கி இரண்டரை அன்சு; சசவிரா[8]வேர், சீவலாக கால் அன்சு. குவயகச்[9] சிராய், பருக்கன் தூளாக, கால் அன்சு; அதிமதுர வேர், துவைத்து கால் அன்சு; மெசீரிய[10] பட்டை, அறுபது கிறேன்; கொதிநீர் முக்கால் நாழி. உர கூறுகள் எல்லாவற்றையும் வெந்நீரிலே ஒரு மணிநேரம் ஊறப்போட்டு, அப்பாற் பத்துமினி[11]வரைக்கு மூடி அவித்து, ஆறினபின் சீலையில் வடித்துக் கொள்ளவும். தேவையாகில் இன்னும் வெந்நீரைச் சக்கையில் வார்த்து அரைநாழி நீர் வடித்துக்கொள்ளவும்.

---

1 Resin. 2 Volatile oil. 3 Smilacine. 4 Crystal. 5 Alterative Tonic. 6 Syphilis. 7 Chronic Rheumatism. 8 Sassafras. 9 Guaiacum wood. 10 Mezereon. 11 Minute.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். இரண்டு அன்சு முதல் நாலு அன்சு வரைக்கு நாள் மூன்று நாலுமுறை கொடுக்கலாம். முந்தின மருந்தைப்பார்க்க இது நன்றாய்ப் பலிக்கும்.

சார்சநீரேசிறத்து. Liquid Extract of Sarsaparilla. கொள். சார்சவேர் குறுக்குச் சீவல்களாக, ஒரு இருத்தல்; 160 பாகை சூடுள்ள வெந்நீர், எழுநாழி; திட்டசீது[1] ஒரு அன்சு. சார்சவேரை அரைவாசி வெந்நீரிலே ஆறு மணிநேரம் ஊறப்போட்டு நீரை இறுக்கவும். சக்கையை மிச்சமான நீரிலே அவ்வளவு நேரம் ஊறப்போட்டுப் பிழிந்து முன்னிறுத்த நீருடன் கலந்து வடித்து, அது ஏழு அன்சாய் வருந்தனையும் அல்லது 1.13 என்ற விசேஷகிருவித்து[2]முடையதாய் வருந்தனையும் நீர்மத்திகத்தில்[3] வறட்டவும். ஆறினபின் சீதைச் சேர்க்கவும். இதின் விசேஷகிருவிதம் 1.095 வரைக்கு இருக்கவேண்டும்.

தேயம். இரண்டு திரும் முதல் நாலு திரும் வரைக்குக் கொடுக்கலாம். இதுவே உத்தமமான முறை.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

அழுந்தஸ்மைலச்சுப் பூடு. Smilax Glabra. இப்பூண்டு சைலெற்றிலும் சறு அயல் நாடுகளிலுமுள்ளது. அங்கே இதற்கு கூரீன்சுக்சீனம்[4]என்று பேர்சொல்லுவார்கள். இதின் பெரிய கிழங்கைக் கஷாயமாக்கிச் சிவ்விசு நோய்க்குக் கொடுப்பார்கள். S. lanceaefolia ஒடுக்கிலை ஸ்மைலச்சு என்ற பூண்டின் கிழங்கையும் இப்படியே வழங்குவார்கள். இந்த இரண்டு கிழங்குகளும் சீனக் கிழங்குக்கு மெத்தச் சரியென்றும் அவற்றைப் பகுத்தறிவதரிதென்றும் ரக்சுபேகர் சொல்லியிருக்கிறார். சீனக் கிழங்கு சீனதேசத்தினின்று இந்துவுக்கு வரும். இது சப்சீனம்[5]என்ற பெயருடன் கடைகளிற் கிடைக்கும். பெரும்பாலும் பூச்சியரித்து உதவாததாயிருக்கும்.

மலைத்தாமரை. S. Ovalifolia. இதை வட்டிலை ஸ்மைலச்சுஎன்றும் சொல்லலாம். இது சென்னையிலும் மலாய நாடுகளிலுமுள்ள பள்ளக்காடுகளில் மிகுதியாயுண்டு. இதின் வேர் சடலட்சணங்களில் வேரகுருசிலிருந்து[6] வரும் சார்ச வேர்போலிருப்பதையிட்டு, வாறிங்கு பண்டிதர் பிரமதேசத்திலிருந்தபோது இதை விசிக வைத்தியத்தில் வழங்கினார். நயங்காணாததினால் இதைவிட்டு அதற்குப் பதிலாக திசைனவு Tseinapho என்று பிரமர் சொல்லுகிற வேறொரு கிழங்கை வழங்கினார். இதின் மாதிரி வர்த்தன ஸ்மைலச்சு[7]ப் பூண்டுக்கு மெத்தக் கிட்டினது. காலிகவாதத்துக்கும் விசேஷமாய் உபசிவ்விசோடு[8] தொடுத்த வாதத்துக்கும், கச்செச்சிக்கும்[9], கடுமையான சருமநோய்கள் சிலவற்றுக்கும் இதைக் கொடுத்தபோது மெத்த நயங் கண்டது. இரண்டரை அன்சு பச்சைக் கிழங்கை ஒருநாழி தண்ணீரில் அவித்து அரைநாழியாய் வற்றக் காய்ச்சி இரண்டு அன்சு முதல் நாலு அன்சு தேயம் வரைக்கு நாள் மூன்றுமுறையாகக் கொடுக்கப்பட்டது. காய்ந்ததினாலும் நெடுக வைத்திருந்ததினாலும் இதின்சாரங் கெட்டுப்போகுமோ தெரியாது. பிரமதேசத்திலிருக்கும் வைத்தியர் இதைப் பச்சையாயெடுக்கலாமாகையால் இது ஓர் நயந்த அல்திறவதொணிக[10]மாகுமென்பதை அவர்கள்

1 Rectified spirit. 2 Specific gravity. 3 Water bath, 4 Hurina Shuk-Chinae. 5 Chub-china. 6 Vera-Cruz. 7 Smilax prolifera. 8 Secondary syphilis. 9 Cachexia. 10 Alterative tonic.

கவனிப்பது நன்று. சீனதேசத்தாற் கொண்டுவரப்பட்டுக் கடைகளில் திசைனவு தறாப்பு[1]என்ற பிரமநாமத்தால் விலைப்படுஞ் சீனக்கிழங்கும் இதுபோற் றோற்றுமாதலால் அதை வழங்காமற் பதனம்.

## சிற்றமீனியங்கள்.

## SCITAMINEAE.

### இஞ்சி. GINGER.

வாசம். உஷ்டண தேசங்கள் எவற்றிலும் உண்டாக்கப்படும்.

வாகடபகுதி. காய்ந்த கிழங்கு. இதற்கு சுக்கு என்று பெயர். இது ஒழுங்கீனமாய்த் திரண்டதும், தோலுரிந்ததும் மூன்று நாலு இஞ்சு நீளமுமான துண்டுகளாக வரும். இடைக்கிடை ஒடுங்கியிருக்கும். வெண் மஞ்சள் நிறங்கொண்டது. வெளிப்பக்கத்தில் மாப்பிடித்திராது. முறித்தால் மாத்தெரியும். கார்ப்பான சுவையுஞ் சுகந்த மணமுமுடையது. மா வெண்மஞ்சள் நிறமானது. ஓர் அத்திரஎண்ணெய்[2]யும் மென்மையான கார்ப்புள்ள ராளமுமே இதின் சத்தாகும்.

தன்மை. இது ஸ்திமூல[3]மும்,ஸ்தொமாகி[4]யும், காமினதி[5]யுமாகும்.

உபயோகம். வாயுப்பொருமல்[6], வாயுவலி[7], குடலின் ஸ்பச[8] நோய்களுக்கும் காலிக[9] வாதத்துக்கும் இது கொடுத்து நயங்கண்டது. வெளியிற் பிரயோகித்தால் இது சிலவகைத் தலையிடி பற்கொதிகளுக்கும் பலவகையான தொண்டைநோய்களுக்கும் வருணி[10]சுருங்குந்தன்மை குறைந்ததைப் பற்றி உண்டான குறும் பார்வைக்கும் குணமான ஸ்திமூலமும் ருபிவாஷ[11]முமாகும். (66)

தேயம். சுக்குமாவிற் பத்துக் கிறேன்முதல் இருபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். சுக்கிரஞ்சம். Tincture of Ginger. கொள். சுக்கு,பருக்கன்தூளாக, இரண்டரை அன்சு; திட்டசீது[12],அரைநாழி. மூடிய பாத்திரத்திற் சுக்கைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனியில் ஏற்றி நீர் ஒழுகித்தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய திட்டசீது கூட்டவும்.

தேயம். பதினைந்து மினிம் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம். அமிலக்கின[13] வாயுக்கின பானங்களுக்கு இது நல்ல அனுமருந்து.

சுக்துக்கரஞ்சம். Strong Tincture of Ginger. கொள், சுக்கு, மாவாக, பத்து அன்சு; திட்டசீது போதியது. சுக்குமாவைச் சியந்தனி[14]யில் இறுக்கமாயடைசி அதற்கு மேலே கால்நாழி சீதைக் கவனமாய் வார்க்கவும். இரண்டு மணிநேரஞ் சென்றபின் இன்னுஞ் சீது வார்த்து அரைநாழி ரஞ்சமாகுந்தனையும் மெல்ல மெல்ல வடிய விடவும்.

---

1 Tsein-apho-taroup. 2 Volatile. 3 Stimulant. 4 Stomachic, சேரசனி. 5 Carminative, வாயுக்கினி. 6 Flatulence. 7 Colic. 8 Spasm. 9 Chronic. 10 Iris. 11 Rubefacient. 12 Rectified spirit. 13 Antacid. 14 Percolator.

(66) அனுபந்தம்பார்.



Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** ஐந்து மினிம் முதல் இருபது மினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

**சுக்குச் சிறுபம்.** Syrup of Ginger. கொள். சுக்குக்கரரஞ்சம் ஆறு திரும்; சிறுபம் பத்தொன்பது அன்சு. குலுக்கிக் கலக்கவும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம்.

***சுக்கின்லூசம்.** Infusion of Ginger. கொள். இடித்த சுக்கு, அரை அன்சு; கொதிவெந்நீர் பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் ஒருமணிநேரம் ஊறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** ஒரு அன்சுமுதல் இரண்டு அன்சு; இது நல்ல வாயுக்கினி. எப்போதுங் கிடைக்கக்கூடியதாகையால் மெத்த உபயோகமானது. கதார் நோய்கள் வாத நோய்களிற் சூடான இன்லூசத்தில் மூன்று அன்சை இரவில் உறங்கமுன் குடித்தால் நல்லாய் வெயர்க்கும். மேலும் ஸ்திமூல காரிகள்களுக்கும் இது நல்ல அனுபானம்.

அவின் லேகியம்[1], ஸ்கமுனி[2]லேகியம், நிலவாகையின்லூசம், ஸ்குவிற்[3]கூட்டுக் குளிகை, சுறுவாக் கூட்டுச் சூரணம், ஜலப்புக்[4]கூட்டுச் சூரணம், அவின் கூட்டுச் சூரணம், வரியாத்துக்[5]கூட்டுச் சூரணம், ஸ்கமுனிக் கூட்டுச் சூரணம், ரம்னஸ்[6]சிறுபம், சகை[7]வைன்[8] என்பவற்றிற் சுக்குங்கூடுகின்றது.

செறும்பெற்றிஞ்சி[9] கசுமுனுவிஞ்சி[10] என்பவற்றின் கிழங்குகளுக்குச் சுக்குரிய வாயுக்கின தன்மைகள் சொற்ப அளவாயுண்டன்றி அவற்றைப் பற்றிய வேறு விசேஷமில்லை.

## மலையாள வேலம். MALABAR CARDAMOM.

வாசம். இது சென்னையின் மேற்குக் கரையிலுள்ள மலைத்தொடரில் உண்டாகும். மலையாளத்திலுஞ் செய்யப்படும்.

வாகடபகுதி. காய்ந்த காய். இதின் அரிசி கூர்கொண்டு, சுருங்கிச் செங்கபில நிறமாயும், உள்ளே வெண்மையாயும் இருக்கும். கார்ப்பான சுகந்த நற்சுவையும் மணமுமுடையது. நீள வட்ட உண்டையும் முக்கோண வடிவுங் கொண்ட புருவமுள்ள வெண் கபில நிறமான உரத்த கோதுக்குள்ளே அடங்கியிருக்கும். இதிலே ஓர் அத்திர எண்ணெய்யும் கார்ப்பான ரானமும் செறிந்திருக்கும். இதைக் கோதோடே வைத்திருந்து தேவையான வேளைகளில் கோதை உரித்துத்தள்ளிப்போட்டு அரிசியை எடுப்பதே உத்தமம்.

தன்மை. இது ஸ்திமூல[11]மும், காமினதி[12]யுமாகும்.

உபயோகம். அசத்துவ குன்மம், வாயுப்பொருமல், குடலின் ஸ்பச[13] நோய்களுக்கும், நரம்புத் தியக்கத்துக்கும் இது உவந்தது.

தேயம். அரிசியை மாவாக்கி அதிலே பத்து முதல் இருபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். ஆயினும் பின் வரும் ரஞ்சமாயன்றி அதைக் கொடுப்பதரிது.

ரசிதங்கள். ஏலக்கூட்டிரஞ்சம். Compound Tincture of Cardamom. கொள். கோதுரித்து இடித்த ஏலரிசி, கால் அன்சு; இடித்த கறுவிக்

---

1 Confection of opium 2 Scammony. 3 Squill. 4 Jalap. 5 Rhubarb. 6 Rhamnus. 7 Aloes. 8 Wine. 9 Zingiber Zerumbet. 10 Z. Cassumunar. 11 Stimulant. 12 Carminative. 13 Spasm.

Digitized By Roja Muthiah Research Library

கொட்டை கால்அன்சு ; கொட்டை நீக்கின திராட்சப்பழவற்றல்[1], இரண்டு அன்சு ; இடித்த சறுவாப்பட்டை, அரை அன்சு ; கச்சீனில்[2] மாவாக, அறுபது கிறேன் ; புரூவுசீது[3]அரைநாழி. அடைத்த பாத்திரத்திலே உர சரக்குகள் எல்லாவற்றையும் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியர்தனி[4]யில் வார்த்து நீர் ஒழுகித் தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

தேயம். அரைத் திறும் முதல் இரண்டு திறும் வரைக்குக் கொடுக்கலாம்.

கலுசிந்துக்கூட்டெடசிறுத்து[5], கறுவாக்கூட்டுச் சூரணம்[6], கிரீத சுகந்தபற்பம்[7], ஜென்சன்கூட்டிரஞ்சம்[8],வரியாத்[9]திரஞ்சம், சகைவைன்[10] என்ற கூட்டுகளில் ஏலம் ஓர் கூறாகச் சேருகின்றது. மேலும் சகைக் கூட்டுத் திகாக்தம்[11],அயசுகந்தகலவை[12], நிலவாகைக்[13]கூட்டுக் கலவை, அயகூட்டிரஞ்சம் என்ற கூட்டுகளிலும் ஏலக்கூட்டிரஞ்சம் ஓர் கூறாகச் சேருகின்றது.

இலங்கை ஏலம். Ceylon Cardamoms. தன்மை உபயோகங்களில் வாகட ஏலத்துக்குச் சரியானது. இது நீண்டொடுங்கினதும், முக்கோணமானதுமான வளைந்த கோதுக்குள்ளிருக்கும். ஒன்றரை இஞ்சு நீளமும், மூன்றிலொருபங்கு இஞ்சு அகலமுமாய்ப் புருவமுள்ளதாயாவது தட்டையாயாவது இருக்கும். கோது உரத்த வன்சவ்வாலானது. கபில நிறமாயாவது மஞ்சள் நரைநிறமாயாவதிருந்து மூன்று அறையை அடக்கியது. கொட்டை கோணம் விழுந்தது; ஒப்பமற்றது; செம்மஞ்சள் நிறமானது. நற்கந்தமும் உறைப்பான சுவையுமுடையது. என்ஸ்லியும் அவருக்குப் பின் இந்துபதார்த்தசாரத்தை எழுதினவர்களும் பரதீசரிசி[14] என்ற பெயரை இட்டிருப்பது இந்த ஏலத்துக்குத்தானென்று எண்ணவேண்டும்,

## மஞ்சள். TURMERIC PLANT.

வாசம். இது ஆசியத்தின் உஷ்டண பகுதிகள் எவற்றிலும் செய்கை பண்ணப்படும்,

வாகடபகுதி. கிழங்கு. இது ஏறக்குறைய இரண்டு இஞ்சு நீளமும் ஒரு இஞ்சு அகலமுமான திரண்ட துண்டுகளாக வரும். ஒரு தலைப்பிற் கூராயிருக்கும்; வளையம் வளையமாக ஒடுங்கி, ஏறக்குறைய இரண்டு இஞ்சு நீளமான தேறுகளாய்ச் சற்றே திருகியுமிருக்கும். வெளியிற் பீத[15]நிறமும், உள்ளே செம் பீத நிறமுமுள்ளது. தனக்கே யுரிய சுகந்த[16]மணமும், சுகந்தசுவையுங் கொண்டது. சப்பினால் உமிழ்நீரைத் தன் நிறமாக்கும்.

தன்மை உபயோகம். இது காமினதி[17]. இதைப் பெரும்பாலுங் கறிக்குச் சேர்ப்பார்கள். இது கெமிஸ்தசோதனைக்கு[18] உதவுவதினால் மாத்திரம் வாகடத்துக்குரியதாகின்றது.

ரசிதங்கள். மஞ்சளிரஞ்சம். Tincture of Turmeric. கொள். இடித்த

1 Raisins. 2 Cochineal, இருமிஞ்சிப்புழு. 3 Proof spirit. 4 Percolator. 5 Compound extract of Colocynth. 6 Compound powder of cinnamon. 7 Aromatic powder of chalk. 8 Compound tincture of Gentian. 9 Rhubarb. 10 Wine of aloes. 11 Decoction. 12 Aromatic mixture of iron. 13 Senna. 14 Grains of Paradise. 15 Yellow. 16 Aromatic. 17 Carminative, வாயுக்கினி. 18 Chemical test.

Digitized By Roja Muthiah Research Library

மஞ்சள், ஒரு அன்சு; புருவுசீது[1] ஆறு அன்சு. மூடிய பாத்திரத்தில் ஏழு நாளூறவிட்டு வடிக்கவும்.

**மஞ்சட்தாள்.** Turmeric Paper. மஞ்சளிரஞ்சத்திற் றோய்த்துக் காற்றில் காயவைத்த கஞ்சியிடாத வெள்ளைக் கடுதாசி.

இது அல்கலைகளை[2]ச் சோதிப்பதற்கு வழங்கப்படும். அல்கலைகள் இதைச் சிவப்பாக்கும் அல்லது கபில நிறமாக்கும்.

[பின்வரும் இரண்டு முறையாயும் மஞ்சளைப் பிரயோகித்ததினால் அதிக நயமுண்டானதை வாறிங்கு பண்டிதர் கண்டிருக்கிறார். 1. சலதோஷ[3]த்துக்கு மஞ்சளை எரித்து அதின் புகையை நாசித்துவாரங்களுக்குள்ளே செல்லவிடச் சற்றே காரமான அப்புகை நாசிச் சவ்வினின்று அதிகமாய் நீர் வடியப்பண்ணினதால், வருத்தமான கஞ்செஸ்தம்[4] தணிந்தது. 2. கதார்க்கண்ணோ[5]வுக்கும் சீழ்க்கண்ணோ[6]வுக்கும் இடித்த மஞ்சளில் அரைஅன்சைப் பத்து அன்சு தண்ணீரில் அவித்து அக்கஷாயத்தாற் கண்ணைக் கழுவ அது எரிவையும்வருத்தத்தையுந் தணித்தது. இதினாற் சலதோஷத்தில் உண்டான நயத்தைப்பற்றி அந்தப் பண்டிதருங் குறித்திருக்கிறார்.]

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**கஸ்தூரி மஞ்சள்.** Curcuma aromatica. இது இந்துவின் அனேக பகுதிகளில் உண்டு. இதின் கிழங்கு உண்டையாய் அரைவாசி கால்வாசியாயும் இன்னும் சிறு துண்டுகளாகவும் வெட்டப்பட்டதாய் வரும். வெளிப்பக்கத்தில் வேர்க்கூந்தலின் சொச்சமிருக்கும். வெண்மஞ்சள் நிறம் அல்லது கபில நரைநிறமானது. காரமான கைப்புச் சுவையும் சுகந்தமணமுங்கொண்டது. இதிலே ஓர் அத்திர எண்ணெய்[7]யையும் ராளத்தையும், மாறீன் என்பவர் கண்டுபிடித்தார். இதின் சாரம் இவற்றிலேயே அமையும். இதற்கு வாயுக்கின[8] தொணிக[9]த்தன்மைகள் உண்டாம். கிச்சிலிக் கிழங்கு Curcuma Zedoaria. இந்தக் கிழங்கு சின்ன விரலளவு நீளமும், அரை இஞ்சு பருமையுமாய்ச் சற்றே வளைந்த துண்டுகளாக வரும். இது சாங்கத்தை விட மற்றெல்லா இலட்சணங்களில் கஸ்தூரி மஞ்சளை மெத்த ஒத்திருக்கும்.

**மாவிஞ்சி.** Mango Ginger. மாம்பழத்தின் மணங்கொண்டதால் இங்கிலர் இதற்கு இப்பெயரிட்டார்கள். இக்கிழங்கு வாயுக்கினியாகவும் ஸ்தொமாகி[10]யாகவும் சுதேசிகளால் வழங்கப்படும். ஆயினும் மற்றுமினங்களைப் போல் இதுவும் இஞ்சியைப்பார்க்க நயந்ததல்ல. ஆகையால் இவைகளை வழங்காமலும் விட்டுவிடலாம். ஒடுக்கிலைக் கர்கூமம்[11], செங்கர்கூமம்[12]என்ற பூண்டுகளிலிருந்து நடுத்தரமான குவாமா[13] எடுக்கப்படுகின்றது. இவை இரண்டும் இந்துவுக்கு ஆதியாயுரிய தாவரங்கள்.

**அசை வல்பீனியப்பூடு.** Alpinia nutans. இது மலாய நாடுகளில் ஆதியாயுள்ளது. இந்துவிலே தோட்டங்களில் அதிகமாய்ச் செய்கைபண்ணப்படும். இதின் வேரை அரத்தை யேரென்று மாறுவார்களாம். பேரரத்தை கலாங்க வல்பீனியப்[14] பூண்டினதும், சிற்றரத்தை சீன வல்பீனியப்பூண்டி[15]

---

1 Proof spirit. 2 Alkali. 3 Coryza. 4 Congestion, சஞ்சயம். 5 Catarrhal ophthalmia. 6 Purulent ophthalmia. 7 Volatile oil. 8 Carminative. 9 Tonic. 10 Stomachic. 11 Curcuma angustifolia. 12 Curcuma rubescens. 13 Arrowroot. 14 Alpinia galanga. 15 Alpinia Chinesis.

Digitized By Roja Muthiah Research Library

னதும் வேறாம். இவ்விரண்டும் சிங்கப்பூருக்குக் கிழக்கேயிருக்குந் தேசங்களில் உண்டாகும். அங்கிருந்து இந்துவுக்குக் கொண்டுவரப்பட்டு இந்து பதார்த்தசாரத்தில் கொலிஞ்சான்[1] என்றபேரால் வழங்கும். கிச்சிலிக் கிழங்கு கஸ்தூரி மஞ்சள் என்பவைகளாகிய செடுவார்களைப்[2] போல இவைகளும் யுரோப வைத்தியத்தில் வெகுகாலமாகத் தள்ளுபடியாய்விட்டன. இஞ்சிக்கு இல்லாத தன்மையொன்றும் இவற்றுக்கு இல்லை. சுதேசிகள் மருந்தாக வழங்கும் கச்சோலக் கிழங்கும் உண்டைக் கெம்பேரியக்[3] கிழங்கும் இப்படியே தள்ளப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு பூச்சம்பம்[4], சுண்டுமூலய்[5] என்ற இந்துப் பெயர்கள் உண்டு. சாராயத்தை அதிகமாய் வெறிக்கச் செய்வதற்குச் சுதேசிகள் அரத்தை வேரை அதிலே ஊறப்போடுவார்களென்று ஏர்வின் பண்டிதர் சொல்லியிருக்கிறார்.

இமயமலைக் கிச்சிலிப்பூடு. Hedychium Spicatum. இது இமயமலையிலுள்ள பூடு. நற்கந்தமும் சுகந்தமுமான இதின் கிழங்கே கடைகளில் வருஞ் சிற்றரத்தை. ஏன்ஸ்லி என்பவர் சிற்றரத்தை என்றது இதைத்தானென்று ரோயில் எண்ணுகிறார். மணங் குணத்தைப் பிடித்து இதற்கு ஸ்தொமாகி[6] வாயுக்கின[7] தன்மைகள் இருக்கவேணுமென்று தீர்க்கத் துணியலாம்.

மலாயுவேலம். Amomum Zanthioides. இது மலாக்காவிலுள்ளது. மலையாள ஏலத்தின் சாங்கமுள்ள சுகந்தமான இதின் கொட்டைகள் சிலவேளை லண்டன் கடைகளில் வரும். இதின் கனி நீண்டு கபிலநிறமானது. சுனையுள்ள கோதையுடையதாய்ப் படரும் காம்பிலே திரண்ட குலைகளாக இருக்கும். உள்ளே மலையாள ஏலத்தைப் போன்ற கொட்டைகளை அடக்கியிருக்கும். அதைப்போற் சுருங்கினதல்ல. அவைக்குரிய சுகந்த சுவையினாலும் மணத்தினாலும் அவைகளைப் பகுத்தறியலாம். அன்புரியென்பவர் இதைச் சோதித்துச் சியாமேலத்துக்குச் சரியென்று கண்டார். அவர் இதை விளக்கும் சேர்த்தியான படங்களைத் தீட்டியிருக்கிறார். வங்காள ஏலக்காய் வங்காளத்தின் கிழக்கெல்லையைச் சேர்ந்த பள்ளத்தாக்குகளில் சுதேசிகளாற் சேர்க்கப்படுகின்றதென்றும், அது அவ்விடத்துக்குரியதென்றும் மருந்து முதலியவற்றுக்காக மொருங்கேலாச்சி[8] என்ற நாமத்தால் விலைப்படுகிறதென்றும், ரக்சுபேகர் சொல்லியிருக்கிறார். இதின் காய் நீள வட்டமும் சாதிக்காயளவு பருமையும் தசைத்துச் சுருங்கினதுமாய் மலையாள ஏலக்கோதுக்கு வித்தியாசப்பட்டாலும் கொட்டை சாங்கத்திலும் மணத்திலும் அதற்குச் சரியென்று அவர் சொல்லுகிறார்.

## முசாசியங்கள்.

## MUSACEAE.

### அவாகடச்சாக்குகள். Non-Officinal.

வாழை. Plantain. இது உஷ்டண பூமியடங்கலும் காய் பழங்களுக்காகச் செய்கைபண்ணப்படும். இவ்விரண்டும் உத்தமமான உணவுவகையாகும். இந்துதேசத்தில் வாழைக்குருத்துக் கொப்புளித்த புண்களுக்கு

1 Kholinjan. 2 Zedoary. 3 Kaempferia rotunda. 4 Bhu champa. 5 Chundumula. 6 Stomachic. 7 Carminative. 8 Morung Elachi.

Digitized By Roja Muthiah Research Library

இடப்படுவது வாடிக்கையாதலால், இங்கே அது சொல்லப்படுகின்றது. புண்ணளவு விசாலமான வாழைக்குருத்திலே காரமற்ற ஏதும் எண்ணெய்யைப் பூசி அதற்கு இட்டுக் கட்டிவிடுவார்கள். வம்பாயிலுள்ள பெரிய விசரத்திலும் மற்றும் விசிகங்களிலும் இப்படியே வழங்கப்படுகின்றது. இது நயமென்பதைப்பற்றி அனேக வைத்தியர் சாட்சியிட்டிருக்கிறார்கள். இதற்குரிய சாந்தி செய்யுந் தன்மையினால் நாலு ஐந்து நாளுக்குள்ளே புண்செவ்வையாய் மாறும். முதல் இரண்டு நாளைக்கும் இலையின் உள்வளத்தையும் பிற்பாடு புண் மாறுந்தனையும் புறவளத்தையும் அதில் அணைப்பார்கள். பிராணிய நெய்கள் சுறுக்குப் பழுதாகும் உஷ்டண தேசங்களிற் திமிநெய் அழற்சிப்படுத்துமாகையால் அதிலும் வாழைக்குருத்துப் பெரும்பாலும் வாய்க்கும். காயங்கள் புண்களுக்குத் தண்ணீர் தோய்த்து அணைகட்டுவதிற் கற்றபேட்சத்துக்குப்[1] பதிலாக வாழை இலையை வழங்குகிறேமென்றும், அது வாய்த்ததென்றும் வஞ்சோமரின் வைத்தியர் அறிவித்திருக்கிறார். ஆசியத்தின் உஷ்டண தேசங்களில் வாடிக்கையாயுண்டாகிற பலவகையான கண்ணோவுக்கு ஒருதுண்டு பச்சை வாழை இலையாற் கண்ணை மறைத்தல் அவ்வேளைக்குக் குளிர்மையுஞ் சுகமுமாயிருக்கும். வாழைப்பழ வற்றல் நெடும் பயணக்காரருக்குப் போஷணையுள்ளதும் ஸ்கேவி[2]வராமற் காப்பதுமான உணவாகும். சரியான வற்றல் அத்திப்பழ வற்றலைப் போன்ற சுவையுடையதாய்ச் சொற்ப விலைக்குக் கிடைக்கவும் வெகுநாளைக்கு இருக்கவுங் கூடியது.

## அமரிலிடாசியங்கள்.

## AMARYLLIDACEAE.

### *விஷமூங்கில். CRINUM ASIATICUM.

வாசம். இது வங்காளம் கொங்கணம் முதலான இந்துப் பகுதிகளின் தாழ்வும் ஈரமுமான இடங்களிலும், இலங்கை, மொலக்கம், கொச்சின், சீனங்களிலும் உண்டாகும். தோட்டங்களிற் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. பச்சைக் கிழங்கு. இது பருத்தது; நுனியிலிருந்து ஸ்தோல்[3] முளை கிளம்பும். கெட்ட மயக்கு மணங் கொண்டது. இதை நெருப்பில் சுறுக்கு உலர்த்தி மாவாக்கலாம்.

தன்மை. இது வமனி[4]. சிறு தேயத்தில் அரோசியத்தையும் வெயர்வையையும் உண்டாக்கும்.

உபயோகம். ஸ்குவிலைப்[5]போலச் சேஷ்டிக்கும்.

ரசிதங்கள். விஷமூங்கிற் சாறு. Juice of Crinum. கொள். பச்சையான விஷமூங்கிற் கிழங்கு, அரை அன்சு; தண்ணீர் இரண்டு அன்சு. கிழங்கைக் கல்லுரலிற் துவைத்து, தண்ணீரைப் படிப்படியாய்ச் சேர்த்துப் பிழிந்து, காரிக்கம் புடைவையில் வடித்துப் பிழியவும்.

தேயம். இரண்டு திரும் முதல் நாலு திரும் வரைக்கு, இருபது மினிக்

1 Gutta percha. 2 Scurvy. 3 Stolon. 4 Emetic. 5 Squill.

Digitized By Roja Muthiah Research Library

கொருமுறை கொடுக்கவும். வாந்தி காணுந்தனையும் இப்படியே கொடுக்கவும்.

விஷமூங்கிற் சிரூபம். Syrup of Crinum. கொள். விஷ மூங்கிற் கிழங்கு,சீவி எட்டு அன்சு; கொதிநீர் அரைநாழி. சுத்த சர்க்கரை ஒரு இருத்தல். கிழங்கை வெந்நீரில் இரண்டு மணிநேரம் ஊறப்போட்டு உரலிற் துவைத்து, காரிக்கம் புடைவையில் வடித்துப் பிழிந்து சர்க்கரையைச் சேர்த்து இளஞ் சூட்டிற் திரும்பத் திரும்பக் கரைக்கவும்.

தேயம். இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம். தேவைக்குத் தக்கதாய்த் திரும்பவுங் கொடுக்கலாம். பிள்ளைகளுக்கு உவட்டிப்பையும் வாந்தியையும் உண்டாக்குவதற்காகக் கொடுக்கப்படும்.

[காய்ந்த விஷமூங்கிற் கிழங்குச் சீவல்களும் நல்ல வமனியாகும். பச்சைக் கிழங்கைப்பார்க்க இதை இரட்டிப்பாய்க் கொடுக்கவேண்டும். சுதேச தாபர பதார்த்தங்களுட் தாமறிந்தவரையில் வயிற்று முறுக்கு, கழிச்சல்முதலிய அவக்குணங்களை உண்டாக்காமல் தாராளமாய் வாந்தி செய்யக்கூடியது இது மாத்திரந்தானென்று ஒஷானஸி பண்டிதர் சொல்லுகிறார். அவர் வாறிங்கு பண்டிதருக்கு எழுதின எழுத்தில், இபிகாக்கு[1]க் கிடையாத வேளையில் இது நல்ல வமனி[2]யும் சுவேதனி[3]யுமாகுமென்றும், அதற்கு இதைப் பதிலாக்கிக்கொள்ளாமல் அவசரத்துக்கு மாத்திரமே வழங்கலாமென்றுஞ் சொல்லியிருக்கிறார்.]

அவாகடச்சரக்குகள். Non-officinal.

ஆனைக் கற்றாளை. Agave Americana. இது அமரிக தேசத்துக்குரிய பூண்டு. இந்துவிற் பல பகுதிகளிற் செய்கைபண்ணப்படும். இதின் கிழங்கு அமுரித[4] அல்திறவ[5]த் தன்மைகள் உண்டென்று மெக்சிகர்[6]சொல்வார்கள். ஐந்து அன்சு தண்ணீருக்கு இதில் ஒரு அன்சு வீதமாய்ப் போட்டு அவித்த கஷாயத்தை[7] ரோசு வைத்தியர் உபசிவ்விசுக்குக்[8]கொடுத்து மெத்த நயங்கண்டோமென்கிறார். அச்சின் வைத்தியர் இந்த மருந்தை இன்னுஞ் சோதிப்பது நல்லதென்றெண்ணுகிறார். மேலும் பருத்த, சதைத்த இலையின் மெல்லிய சீவலைப் பாப்பையாய் அணைக்கலாமென்றுஞ்சொல்லுகிறார்.

## கைபக்சிடியங்கள்.

## HYPOXIDEA.

அவாகடச்சரக்குகள். Non-Officinal.

நிலப்பனைக் கிழங்கு. Curculigo orchioides. இந்துவின் அனேகபகுதிகளிலுள்ள சிறிய இப்பூண்டின் கிழங்கு சுருங்கி, ஏறக்குறைய நாலு இஞ்சு நீளமுள்ளதாய்ச் சற்றே கைப்பான பிசுபிசுப்புச் சுவைகொண்டிருக்குமென்று ஏன்ஸ்லியர் விபரித்திருக்கிறார். சுதேச பதார்த்தசாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சவீர்முஸ்லி[9]என்ற கூட்டான மருந்தில் இது எம்மட்டுக்குக் கூறுகுமென்பதை இன்னும் அறியவில்லை. பெர்வுட்டு,ரோயில் பண்டிதர்கள் இந்தச்சரக்கு முர்தனியஸ்காபிவிலோறம்[10]என்றபூண்டின் கிழங்கு

---

1 Ipecac. 2 Emetic. 3 Diaphoretic. 4 Diuretic, திமூர்சி. 5 Atlerative. 6 Mexicans. 7 Decoction. 8 Secondary syphilis. 9 Safed Musli. 10 Murdannia scapifolia.

Digitized By Roja Muthiah Research Library

என்கிறார்கள். இது எத்தாவரத்தின் பேறு என்று நிச்சயித்தறிய இன்னும் ஆராயவேண்டியது. இக்கிழங்கு, சுனுநீயம்[1], திரூறி[2], மெனுநீயம்[3] முதலிய நோய்களுக்கு உத்தமமென்று திருவாளங்கோட்டு வைத்தியரால் மெத்த மதிக்கப்படுகின்றது. இந் நோய்களுக்கும் இவைக்கினமான நோய்களுக்கும் இக் கிழங்கு திறமென்று அவர்கள் எல்லாரும் இடும் சாட்சியைக் கொண்டு இது சனன சல உறுப்புகளிற் சேஷ்டிக்கிறதென்று எண்ண நியாயம் உண்டு. ஆயினும் இந் நோய்களுக்கு இது நயமென்பதைப்பற்றி யுரோப வைத்தியருடைய ஆராய்வைக்கொண்ட சாட்சியில்லை.

## இரிடியங்கள்.

## IRIDEAE.

### குங்குமப்பூ, SAFFRON CROCUS.

**வாசம்.** இது சின்னாசியத்துக்குரியது. பிரான்சு, ஸ்பேன் தேசங்களிலும் யுரோபத்தின் மற்றும் பகுதிகளிலும் காசுமீரத்திலும் செய்கைபண்ணப்படும்.

**வாகடபகுதி.** காய்ந்த பூக் காம்புகளும், முடிச்சுகளும். காம்புகள் ஒவ்வொன்றும் செங்கபில நிறமான நீண்ட மும்மூன்று முடிச்சுகளில் முடியும். முடிச்சுகளின் நுனி விசாலமானது. இவற்றிற்கு வீறான சுகந்த மணமுண்டு, நனைந்த விரலில் உரைஞ்சச் செம் மஞ்சள் நிறமான அடையாளங் காணும். வெண்மையான வடிதாளின் மடிப்புகளுக்கிடையில் அமர்த்த எண்ணெய் சுவறாது.

**தன்மை. உபயோகம்.** முன்னே இதை அந்திஸ்பசி[4]யென்றும், எம்மெனக்கு[5] என்றும், நினைத்தார்கள். தற்காலத்திலோ பிரதானமாய் நிறம் மணங்களுக்காக இது வழங்கப்படும்.

**தேயம்.** பத்துக் கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கு இன்லூசமோ[6]ய் அல்லது பொடியாய்க் கொடுக்கலாம்.

**ரசிதம். குங்குமப்பூவிரஞ்சம்.** Tincture of Saffron. கொள். குங்குமப்பூ, ஒரு அன்சு; புரூவுசிது, அரைநாழி. அடைத்த பாத்திரத்திற் குங்குமப்பூவைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். அப்பாற் சியந்தனியில் ஏற்றி, அடைசி நீர் ஒழுகித் தீர்ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

**தேயம்.** அரைத் திறாம் முதல் இரண்டு திறாம் வரைக்கு.

சகைக்கூட்டுத் திகாத்தம்[7], சகைசசக்குளிகை[8], கிரீத சுகந்தபற்பம்[9], சின்னைக்கூட்டிரஞ்சம்[10], அவினமோனரஞ்சம்[11], வரியாத்[12]திரஞ்சம் என்ற கூட்டுகளில் குங்குமப்பூ வோர்கூறாகச் சேருகின்றது.

---

1 Gonorrhoea. 2 Dysuria, சலக்கடுப்பு. 3 Menorrhoea, பெரும்பாடு. 4 Antispasmodic. 5 Emmenagogue. 6 Infusion. 7 Compound decoction of aloes. 8 Pill of Aloes and Myrrh. 9 Aromatic powder of Chalk. 10 Compouud Tincture of Cinchona. 11 Ammoniated Tincture of opium. 12 Rhubarb.

Digitized By Roja Muthiah Research Library

## லிலியாசியங்கள்.

## LILIACEAE.

### சோகோத்திரசகை. SOCOTRINE ALOES.

வாசம். இது சொகோத்திர தீவில் உண்டாகும்.

வாகடபகுதி. இறுகின இலைச்சாறு. இது செங்கபில நிறமான கட்டிகளாக வரும். விளிம்பிற் சற்றே உருவொளிகொண்டது. ஒழுங்கீனமாயாவது மினுக்கமும் அழுத்தமுமாயாவது ராளம்[1]போல் உடையும். கைப்புச் சுவையும் வீறுன நற்கந்தமுமுடையது. புருவுசீதில் முற்றாய்க் கரையும். கரையும்போது ஏராளமான நுண்ணிய கிரிஸ்தல்[2]கள் சூக்குமாட்சி[3]க்குத் தெரியும். இதின் சத்து ஓர் ராளத்திலும் அலுவின்[4] என்றவிசேஷபதார்த்தத்திலுமே இருக்கும்.

தன்மை. சிறு தேயத்தில் ஸ்தொமாகித் தொணிக[5]மாகும். பெருந்தேயத்தில் விரேசனியும், எம்மெனகக்கு[6]மாகும்.

உபயோகம். மலவரட்சிக்கும் பிரதானமாய் ஸ்தேரி[7]நோயோடாவது குடலின் அசத்துவத்தோடாவது கூடினதாய்க் காய்ச்சல் முதலிய பெலவீனப்படுத்து நோய்களிற் காணும் மலவரட்சிக்கும் இது உத்தம மருந்து. மேலும்அசத்துவகுன்மம்[8],செங்கண்மாரி[9],அமெனுறீயம்[10],குலொரேசி[11]என்னு நோய்களுக்கும் இது உவந்தது. கிலசரினிற்[12]கரைத்துப் பூசினல் சரும நோய்களுக்குத் தீவனியாய் நயஞ்செய்யும்.

தேயம். ஸ்தொமாகித்தொணிகமாக இரண்டுகிறேன்முதல் மூன்றுகிறேன்வரைக்கு இரண்டு மூன்று நாளுக்கொருமுறை கொடுக்கலாம். விரேசனியாக ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். இது பெரும்பாலும் மற்றும் மருந்துகளோடு கலந்து கொடுக்கப்படும்.

ரசிதங்கள். சோகோத்திரசகையேசிறந்து. Extract of Socotrine Aloes. கொள். சொகோத்திரசகை, சிறுத்துண்டுகளாக, ஒரு இருத்தல்; கொதிவெந்நீர் ஒரு கலன். சகையை வெந்நீரிற் போட்டுச் செவ்வையாய்க் கரையுந்தனையும் கலக்கினபின் அரை நாள் வரைக்கு வைத்துவிடவும். அப்பாற் தண்ணீரை இறுத்துச் சேஷத்தைச் சீலையில் வடித்து இரண்டு நீர்களையுங் கலந்து நீர்மத்திகத்திலாவது சூடான காற்றிலாவது வறட்டவும்.

தேயம். இரண்டு கிறேன் முதல் ஆறு கிறேன் வரைக்கு. இது சகைக்கூட்டுத் திகாக்தத்திலும் கலுசிந்துக்கூட்டெசிருத்திலும் சேருகின்றது.

சோகோத்திரசகைக் குளிகை. Pill of Socotrine Aloes. கொள். சொகோத்திரசகை, மாவாக, இரண்டுஅன்சு; வன்சபு[13], மாவாக ஒரு அன்சு; சிடவத்திரதேல்[14], ஒரு திரும்; ரோசைலேகியம்[15], ஒரு அன்சு. நன்றாய்ச் சேருந்தனையும் எல்லாவற்றையும் அரைத்துக்கொள்க.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு.

சகை சசக் குளிகை. Pills of Aloes and Myrrh. கொள். சொகோத்திர

1 Resin. 2 Crystal. 3 Microscope. 4 Aloine. 5 Stomachic tonic. 6 Emmenagogue. 7 Hysteria. 8 Atonic Dyspepsia. 9 Jaundice. 10 Amenorrhoea. 11 Chlorosis. 12 Glycerine. 13 Hard soap 14 Volatile oil of nutmeg. 15 Confection of rose.



Digitized By Roja Muthiah Research Library

சகை இரண்டு அன்சு; சசம் ஒரு அன்சு; காய்ந்த குங்குமப்பூ, அரைஅன்சு; ரோஸைலேகியம், இரண்டரை அன்சு. சகை, சசம், குங்குமப்பூ, மூன்றையும் ஒன்றாய் அரைத்துத் தெள்ளி, ரோஸை லேகியத்தைச் சேர்த்து ஒன்றாக்கிக்கொள்ளவும்.

தேயம். விரேசனி, எம்மெனகக்காக[1], ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு இதைக் கொடுக்கலாம்.

சகை யிங்குக் குளிகை. Pill of Aloes and Assafoetida. கொள். சொகோத்திரசகை, மாவாக, ஒரு அன்சு ; இங்கு, ஒரு அன்சு; வன்சபு, மாவாக, ஒரு அன்சு ; ரோஸை லேகியம், ஒரு அன்சு. நன்றாய்ச் சேருந்தணையும் இவை எல்லாவற்றையும் ஒன்றாய் அரைக்கவும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு. இஸ்தேரி[2] நோயாளருக்கு இது நல்ல அந்திஸ்பசி[3]யும், விரேசனியுமாகும்.

சகைக்கூட்டுத் திகாக்தம். Compound Decoction of Aloes. கொள். சொகோத்திரசகை யெசிருத்து, நூற்றிருபது கிறேன் ; சசம்[4], குங்குமப்பூ[5], வகைக்கு, தொண்ணூறு கிறேன் ; பதாசிகாபனசு[6], அறுபது கிறேன் ; அதிமதுரவெசிருத்து[7], ஒரு அன்சு ; ஏலக்கூட்டிரஞ்சம்[8], எட்டு அன்சு ; தண்ணீர், போதியது. சகையெசிருத்தையும் சசத்தையும் பருக்கன் மாவாக்கிப் பதாசிகாபனசு, அதிமதுரவெசிருத்துகளோடு சேர்த்து ஏற்ற ஏனத்திற் போட்டு அரைநாழி திஸ்திலித்த[9]தண்ணீர் வார்த்து மூடி, ஐந்துமினி வரைக்கு மென் சூட்டில் கொதிப்பித்து அப்பாற் குங்குமப்பூவைச் சேர்க்கவும். ஆறினபின், ஏல ரஞ்சத்தையுஞ் சேர்த்துப் பாத்திரத்தை இறுக்கமாய் மூடி இரண்டு மணிநேரம் ஊறவிட்டு அப்பாற் கம்பிளியில் வடித்து,வடித்த நீர் முப்பது அன்சாவதற்கு வேண்டிய திஸ்திலித்த நீரைச் சக்கையில் வார்த்துக் கொள்ளவும்.

தேயம். அரை அன்சுமுதல் இரண்டு அன்சு வரைக்குக் கொடுக்கலாம்.

இத் திகாக்தத்தில் ஒரு அன்சிலே சகை யெசிருத்து நாலு கிறேன் இருக்கும். ஆனாலும் 1864 ம் ஆண்டு பிரசுரஞ் செய்த பார்மகுபீயத்திற் சொல்லப்பட்டதில் 5.6 கிறேனும் லண்டன் பார்மகுபீயத்திற் சொல்லப்பட்டதில் 3.3 கிறேனுமிருக்கும்.

சகைவைன். Wine of Aloes. கொள். சொகோத்திரசகை, ஒன்றரை அன்சு ; கோது நீக்கி இடித்த ஏலரிசி, எண்பது கிறேன் ; சுக்கு பருக்கன் தூளாக, எண்பது கிறேன் ; செரிவைன்[10] ஒருநாழி. அடைத்த பாத்திரத்தில் ஏழுநாள் இவைகளை ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கிக்கொள்ளவும். அப்பால் வடித்து ஒருநாழிக்குப் போதிய செரிவைன் சேர்த்து வடிக்கவும்.

தேயம். ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம்.

சகைரஞ்சம். Tincture of Aloes. கொள். சொகோத்திரசகை பருக்கன் தூளாக, அரை அன்சு ; அதிமதுரவெசிருத்து ஒன்றரை அன்சு; புருவுசீது[11] போதியது. அடைத்த பாத்திரத்திற் சகையையும் அதிமதுரவெசிருத்தையும் பதினைந்து அன்சு சீதில் ஏழுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கி, அப்பால்வடித்து, அரைநாழிக்குப் போதிய புருவுசீது சேர்க்கவும்.

---

1 Emmenagogue. 2 Hysteria. 3 Antispasmodic. 4 Myrrh. 5 Saffron. 6 Potash Carbonate. 7 Extract of Liquorice. 8 Compound Tincture of Cardamoms. 9 Distil, 10 Sherry wine. 11 Proof spirit.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒரு கிறும் முதல் இரண்டு கிறும் வரைக்குச் கொடுக்கலாம். விரேசன பானங்கள்[1]எம்மெனகக்கு[2]ப் பானங்களுக்கு இது நல்ல அனுமருந்து.

சகையெனீமம். Enema of Aloes. கொள். சகை, நாற்பது கிறேன்; பதாசிகாபனசு[3]பதினைந்து கிறேன்; அமைல முசிலாகு[4] பத்து அன்சு. இவற்றைச் சேர்த்துக் கரைக்கவும்.

அமெனுறீயத்[5]தோடுகூடிய இஸ்தேரி[6]க்கும் கடைக்குடலினின்று தானப் புழுவைக் கழற்றுவதற்கும் இது உபயோகமானது.

வரியாத்துக் கூட்டுக் குளிகை[7], சாம்பிராணிக்கூட்டிரஞ்சம்[8], கலுசிந்துக்கூட்டெசிறுத்து[9]களிற் சொகோத்திரசகை சேருகின்றது.

## பபாடுசகை. BARBADOES ALOES.

வாசம். இந்துவிலும் மேலிந்துவிலும் வட ஆபிரிகத்திலும் தென் யுரோபத்திலும் இது உண்டாகும்.

வாகடபகுதி. இறுகின இலைச்சாறு. இது பபாடுவிலிருந்து இங்கிலந்துக்கு ஏற்றப்படும். மஞ்சட் கபிலநிறம் அல்லது கருங் கபில நிறமான மங்கற் கட்டிகளாக வரும். பள்ளந் திட்டியாய் உடையும். கைப்பான உவட்டுச் சுவையும் வீறுன கெட்ட மணமுமுடையது. புரூவுசீதில்[10] ஏறக்குறைய முற்றாய்க் கரையும். கரையும்போது ஏராளமான கிரிஸ்தல்[11]கள் சூக்குமாட்சி[12]க்குத் தோற்றும். இது சுரைக் குடுக்கைகளில் ஏற்றப்பட்டு வருவது வழக்கம். இதின் சத்து ஒரிராளத்திலும் அலுவின்[13]என்ற பதார்த்தத்திலுமே இருக்கும்.

தன்மை, உபயோகம், தேயங்கள். சோகோத்திரசகைக்குரியவைபோலவே.

ரசிதங்கள். பபாடுசகையெசிறுத்து. Extract of Barbadoes Aloes. சொகோத்திரசகை யெசிறுத்தைப் போலவே இதுவுஞ் செய்யப்படும்.

தேயம். இரண்டு கிறேன் முதல் ஆறு கிறேன் வரைக்கு.

பபாடுசகைக் குளிகை. Pill of Barbadoes Aloes. கொள். பபாடுசகை, மாவாக்கி, இரண்டு அன்சு; வன்சபு[14] மாவாக்கி ஒரு அன்சு. கறுவித்தேல்[15], ஒரு கிறும்; ரோசை லேகியம்[16], ஒருஅன்சு. செவ்வையாய்க் கலக்குந்தனையும் இவற்றை அரைக்கவும்.

தேயம். ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்கு.

சகையயக் குளிகை. Pill of Aloes and Iron. கொள். அன்னபேதி[17], ஒன்றரை அன்சு; பபாடுசகை, மாவாக்கி இரண்டு அன்சு; கறுவாக் கூட்டுச் சூரணம்[18], மூன்று அன்சு; ரோசை லேகியம், நாலு அன்சு. அன்னபேதியை மாவாக்கிச் சகையோடும் கறுவாக் கூட்டுச் சூரணத்தோடும், அரைத்து ரோசை லேகியத்தையுங் கூட்டித் திரளையாய் அரைத்துக்கொள்ளவும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கும்.

---

1 Purgative draught. 2 Emmenagogue. 3 Potash carbonate. 4 Mucilage of Amylum. 5 Amenorrhoea. 6 Hysteria. 7 Compound pill of Rhubarb. 8 Compound Tincture of Benzoin. 9 Compound extract of Colocynth. 10 Proof spirit. 11 Crystal. 12 Microscope. 13 Aloine. 14 Hard soap. 15 Caraway oil. 16 Confection of rose. 17 Sulphate of iron. 18 Compound powder of cinnamon.

Digitized By Roja Muthiah Research Library

**மற்றுமிரசிதங்கள்.** *சொகோத்திரசகையும் பபாடுசகையும் தேகத்திலே மெத்த வித்தியாசமான செயலை வருவிக்கவில்லையென்று கண்டிருக்கிறபடியாற் சொகோத்திரசகை வழங்கவேண்டிய இடங்களிலெல்லாம் இந்தப் பபாடுசகையை வழங்கலாம்.*

*மக்நிக்[1]கூட்டுக் குளிகை, கலுசிந்து[2]க்கூட்டுக் குளிகை, கலுசிந்தயசியமசுக்[3]குளிகைகளில் பபாடுசகை கூடுகின்றது.*

## ஸ்குவில். SQUILL. SCILLA.

**வாசம்** *மத்தித்தரைக் கடலின் கரைகளில் இது உண்டாகும்.*

**வாகடபததி.** *சீவிக் காய்ந்த கிழங்கு. இக் கிழங்கு நீள உண்டையானது. அரை இறுத்தல் முதற் பத்து இறுத்தல் வரைக்குக் கனம் உள்ளது. வெளிப் படலங்கள் சவ்வாயும், கபிலச் சிவப்பு அல்லது கபில வெண்மை நிறமாயும் இருக்கும். உட்படலங்கள், தடிப்பும் வெண்மையும் தசைப்பும் சாறுள்ளதுமாயிருக்கும். சுவை பிசுபிசுப்பும், கடுங் கைப்பும் சற்றே கார்ப்புமானது. காய்ந்த சீவல்கள் வெண்மையாய் அல்லது மஞ்சள் வெண்மையாயும், சற்றே உருவொளியாயும், மணமற்றதாயும், கெட்டகைப்பாயும், நொருக்கலாயும், நன்றாய்க் காய்ந்தால் லகுவில் மாவாக்கப்படக் கூடியதாயும் இருக்கும். வெளியாய் வைத்தாற் சுறுக்கு ஈரிப்படைந்து வசையக்கூடியதாகும். இதின் சத்து இதற்கேயுரிய ராளம்[4] போன்ற கார்ப்பான ஓர் எசிறுத்திவி[5]லே இருக்கும்.*

**தன்மை.** *சிறு தேயத்தில் எக்ஸ்பெக்துற[6]மும், அமுரிதி[7]யுமாகும். பெருந்தேயத்தில் வமனி[8]யும் விரேசனி[9]யுமாகும். அதிதேயத்தில் அழற்சி நஞ்சாகும்.*

**உபயோகம்.** *அசத்துவ[10]வகையான நீர்க்கோவைக்கும், காலிக புறங்கீது[11], ஈளை, கதார்[12] நோய்களுக்கும் இது உபயோகமானது. குறுப்பு[13], குக்கல்[14]களில் இதை எக்ஸ்பெத்துறமாய்க் கொடுக்கலாமாம்.*

**தேயம்.** *கிழங்கு மாவில் ஒரு கிறேன் துவங்கி மூன்று கிறேன் வரைக்கு எக்ஸ்பெக்துறம் அமுரிதியாகக் கொடுக்கலாம். பத்துக் கிறேன் துவங்கிப் பதினைந்து கிறேன் வரைக்கு வமனியாகக் கொடுக்கலாம்.*

**ரசிதங்கள். ஸ்குவிலிரஞ்சம்.** Tincture of Squill. *கொள். ஸ்குவிற் கிழங்கு, இடித்து இரண்டரை அன்சு; புருவுசீது[15] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் ஸ்குவிலைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கி, அப்பாற் சியந்தனியில்[16] எற்றி அடைசி, நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து அரைநாழிக்குப் போதிய புருவுசீது சேர்க்கவும்.*

**தேயம்.** *பத்துத் துளி முதல் முப்பது துளி வரைக்கு. இருமற் கலவைகள் அமுரிதிக் கலவைகளுக்கு இது நல்ல துணை மருந்து.*

**ஸ்குவிற் காடி.** Vinegar of Squill. *கொள். ஸ்குவிற் கிழங்கு இடி*

---

1 Gamboge. 2 Colocynth. 3 Colocynth and Hyoscyamus pill. 4 Resin. 5 Extractive 6 Expectorant கிட்டேவனி. 7 Diuretic நியுரீசம். 8 Emetic. 9 Cathartic. 10 Asthenic 11 Chronic Bronchitis. 12 Catarrh. 13 Croup. 14 Hooping cough. 15 Proof spirit. 16 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

த்து, இரண்டரை அன்சு ; கிருச அசிதிக்கமிலம்[1] அரைநாழி ; புரூவுசீது[2] ஒன்றரை அன்சு. ஸ்குவிலை அசிதிக்கமிலத்தில் ஏழுநாளூறப்போட்டு சீலையில் வடித்துப் பிழிந்து, தெளித்து அப்பால் சீதைச் சேர்த்து வடிக்கவும்.

தேயம். பதினைந்து மினிம்[3]தொடங்கி, நாற்பது மினிம் வரைக்கு.

ஸ்குவிலக்சிமேல். Oxymel of Squill. கொள். ஸ்குவிற் காடி, அரை நாழி; சுத்த தேன், இரண்டு இருத்தல். இரண்டையுங் கலந்து நீர்மத்திக[4]த்திற் காய்ச்சி, ஆறும்போது 1.32 என்ற விசேஷகிருவித[5]முள்ளதாய் வரும்படி வற்றப்பண்ணவும்.

தேயம். அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்கு.

ஸ்குவிற் சிரூபம். Syrup of Squill. கொள். ஸ்குவிற் காடி, அரை நாழி ; சுத்த சர்க்கரை இரண்டரை இருத்தல். இவற்றைச் சூட்டிற் கரைக்கவும்.

தேயம். அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்கு.

ஸ்குவிற்கூட்டுக்குளிகை. Compound Squill Pill. கொள். ஸ்குவில் மெல்லிய மாவாக, ஒன்றேகால் அன்சு ; சுக்குமா ஒரு அன்சு ; அமுனியகம்[6], மாவாக, ஒரு அன்சு. வன்சப்பு[7] மாவாக, ஒரு அன்சு ; தெறியகம்[8], நிறுத்து, இரண்டு அன்சு, அல்லது போதியது. மாவான சரக்குகள் எல்லாவற்றையுங் கலந்து, தெறியகத்தைக் கூட்டி, நல்ல திரளையாக்கிக் கொள்ளவும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு. இபிகாக் ஸ்குவிற் குளிகையிலும் ஸ்குவில் கூடுகின்றது.

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

நரிவெங்காயம். Indian Squill. இது இந்துவின் கடற்கரைகளில் உள்ளது. இதின் கிழங்கு ரச்சுபேகர் சொல்லுகிறபடி விளாம்பழமளவு பருமையும் வெண்மையும் ஸ்குவிலைப் போல உவட்டான கைச்சற் சுவையுமுள்ளது. இவ்விலட்சணங்களையிட்டு இதற்கு வீறுன அவுஷத தன்மையிருக்கவேணுமென்று அவர் நினைத்தார். ஆயினும் ஒஷானசியர் இக் கிழங்கைச் சோதித்தவரையில் அது மணம் சுவை அவுஷத தன்மைகள் அற்றதென்று கண்டார். இந்த ஒவ்வாமை முடீன் செறீவர் சொல்லியதால் தெளிவாகும். அவர் சொல்லியது இக் கிழங்கு இளசாயுஞ் சிறிசாய் எலுமிச்சம் பழத்திற் பருச்சாமலும் இருக்கையில் அதைப் பத்துப் பதினைந்து இருபது கிறேன் தேயத்திற் கொடுத்தால், ஸ்குவிலைப் பார்க்க வீறுன அமுரிதமாய்ச் சேஷ்டிக்கும். பருத்த பின்போ இத்தன்மையை இழந்து உதவாததாகும். பாகாரிலுள்ள நரி வெங்காய வகைகளை எல்லாம் அ. ச. டதர் அதிகமாய்ச் சோதித்து, அதைத் தனியே கொடுத்தபோது தானும் அவ்வளவு நயங் கண்டதால் ஸ்குவிலைத் தான் வழங்கினதருமையென்று சொல்லியிருக்கிறர். இன்னும் இதின் அவுஷத செயலைப் பற்றிக் கனிலல்டே என்பவருஞ் சாட்சியிட்டிருக்கிறர். ஆதலால் ஸ்குவிலுக்குப் பதிலாகத் தாராளமாய் இதை வழங்கலாம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் இவ்விரண்டினது சத்தும் ஒன்றுக்கொன்று எவ்வீதம் என நிதானிக்கவேண்டியது. இக்கிழங்கின் இன்பூச[10]த்தைத் தான் நீர்க்கோவைக்காரருக்குக் கொடுத்தேன்

1 Diluted Acetic acid. 2 Proof spirit. 3 Minim. 4 Water bath. 5 Specific Gravity. 6 Ammoniacum. 7 Hard soap. 8 Treacle இக்குப்பாணி. 9 Diuretic. 10 Infusion.

Digitized By Roja Muthiah Research Library

என்றும், அது கடுஞ் செயல் காட்டாதிருந்தாலும் அமுரிதியாய்ச் சேஷ்டித்ததென்றும் அஸ்வல்டர் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் புறங்கிது[1] நோய்களில் ஐந்து கிறேன் தேயத்தில் எக்ஸ்பெக்றற[2]மாயும் இதை வழங்கினார். ஆனால் உண்டான நயஞ் சொல்லப்படவில்லை.

சிறு நரிவெங்காயம். Ledebouria hyacinthoides. இப் பூண்டு இந்துவின் பல இடங்களில் மணற்றரைகளிலுள்ளது. இதின் கிழங்கு தோற்றத்தில் ஸ்குவிலேப் போன்றது. பருப்பத்தில் அதிலுஞ் சிறுத்தது. கைப்பும் உவட்டுமான காரச் சுவையுடையது. குதிரைகளுக்கு உண்டாகுங் கடுமையான சலக்கடுப்பையும், காய்ச்சலையும் மாற்றுவதற்காக இதை வட இந்துவிலுள்ள குதிரை வைத்தியர் வழங்குவார்கள். சில வருஷங்களாக வம்பாய் மருந்துச்சாலையில் ஸ்குவிலுக்குப் பதிலாக இது வழங்கப்பட்டது. ஆயினும் ஒஷானசியென்பவர் சோதித்துப் பார்த்தஅளவில் இதை நல்ல மருந்தென்று ஒப்புக்கொள்ளவில்லை.

கற்றாழை. Aloe Indica. சிறுகற்றாழை. Aloe litoralis. கற்றாழை தென்மேற்கு இந்துவின் காய்ந்த மணல் நிலங்களில் உண்டாகின்றது. சிறு கற்றாழை சென்னைத் தேசத்தின் கடற்கரையடுத்த மணல் நிலங்களில் உண்டாகும். பெரைரா சொல்லுகிறபடி கற்றாழையினின்றே இந்துச் சகை எடுக்கப்படும். கன்னியாகுமரியில் சிறுகற்றாழை மிகுதியாதலால் அவ்விடம் பிடுங்கப்பட்ட இலையிற் பிழிந்த பிசுபிசுப்பான சாற்றை 1853 ம் ஆண்டு வாறிங்கு பண்டிதர் வறட்டி அன்சுக் கணக்காக உத்தமமான சகை எடுத்தார். இது வாகட சகையின் தேயத்தில் நல்ல விரேசனியாய்ச் சேஷ்டித்தது. இப் பூண்டினின்று நல்ல சகை எடுக்கலாம் என்பதைத் திமக்குபண்டிதரும் உறுதிப்படுத்தினாரன்றி அதைப் பச்சையாயுங் காய்ந்ததாயும் தாம் கொடுத்திருக்கிறோமென்றெழுதியுமிருக்கிறார். பிறவூரால் ஏற்றிவரும் சகையின்செலவைப்பார்க்க மெத்தக்குறைந்த செலவில் இதில்நின்று நல்ல சகை எடுக்கலாம் என்பது நிச்சயம். கடைகளில் வாங்கக் கூடிய சகை மிகுதியாய்ப் பிறவூரால் வருவது. மெத்தச் சக்கட்டையானது. பச்சையாய்ப்பிழிந்த சாறு, வெளித்தாபிதம்[3] தானிக[4]தாபிதம் எல்லாவற்றுக்கும் குளிர்ச்சியான பூச்சாகப் பெரும்பாலும் வழங்கப்படும்.

கலப்பைக் கிழங்கு. Gloriosa Superba. இந்து அடங்கலும் தாழ்வான காடுகளில் உள்ள இந்தச் சிறப்பான படர்கொடிக் கிழங்கு அவுஷதசெயலுடையதாம். பெர்மனர், ரக்சுபேகர், என்ஸ்லியர் முதலியவர்கள் இதைக் கொடிய நஞ்சென்று சொல்லியிருக்கிறார்கள். சீவர் வைத்தியர் பிரசுரஞ் செய்த நஞ்சு இடாப்பில் இதுவும் சேருகின்றது. ஆயினும் அது நஞ்சென்றதற்கு ஒரு திருட்டாந்தம் ஒருவராலுங் காட்டப்படவில்லை. என்றாலும் இந்துவின் எப் பகுதிகளிலுமுள்ள சனங்களும் பொதுவாய் அதை நஞ்சென்று நம்பி வருகிறார்கள். மேலும் மைசூரிலே நாவிக்[5] கிழங்கோடு இக் கிழங்கைக் கள்ளமாய்க் கலப்பதைக் கண்டேனென்று பிதி வைத்தியர் வாறிங்கு பண்டிதருக்கு அறிவித்திருக்கிறார். இதின் தன்மைகளைப்பற்றி இன்னும் அறிவது அவசியம். திருவாளங் கோட்டிலே இக் கிழங்கை இடித்துத் திரும்பத் திரும்ப ஊறவைத்துக் கழுவி எடுத்த வெள்ளை மாவைக் கனுறீய[6]நோய்க்குப் பேர்பெற்ற ஓர் மருந்தாக வழங்கிவருகிறார்கள்.

1 Bronchitis. 2 Expectorant. 3 Inflammation. 4 Local. 5 Bikh. 6 Gonorrhoea.

Digitized By Roja Muthiah Research Library

கிளவரி. Asparagus Sarmentosus. இந்துதேசம் அடங்கலும் உள்ள இப் பூண்டின் கிழங்கு பதுமபுரிக்[1]கடைகளில் உதீசு[2]என்ற பேரால் விலைப்படும். அங்காடிகளில் வரும் அதிவடய[3]த்தில் இதுவும் ஓர் பங்கென்று நினைக்கிறார்கள். அச்சின்சன் பண்டிதருடைய எழுத்தும் இவ்வெண்ணத்தை உறுதிப்படுத்துகின்றது. ஆனாலும் இது சுவையற்றதாயும் அதிவடயம் சுத்த கடுங் கைப்புள்ளதாயும் இருப்பதால் இவற்றைப் பகுத்தறிவது லகு. இது சவீர் முஸ்லி[4] என்ற சரக்கிற் கலந்துவருமென்று எண்ண நியாயமுண்டு. சதாவரி[5] ஏறவரி[6] என்பவற்றின் கிழங்குகளும் சுதேசிகளால் மருந்தாக வழங்கப்படுமாயினும் பெறுதவை போலும்.

## மேலந்தாசியங்கள்.

## MELANTHACEAE.

### கோல்சிகப் பூடு. COLCHICUM.

வாசம். இது யுரோப்பம் அடங்கலும் புற்றரைகளில் உண்டாகும்.

வாகடபதார்த்தங்கள். 1. பச்சைக் கிழங்கு. ஆனிக் கடைசி வரையிற் கிண்டித் தோலுரித்துச் சீவல்களாக குறுக்கே வெட்டி 150 பாகைக்குக் கதிக்காத சூட்டிற் காயவைக்கப்படும், பச்சைக்கிழங்கு பாக்களவு பருமையாயும், முகையிற் தட்டையாயும், கபிலமான வெளித்தோலும் மஞ்சளான உட்டோலுமுடையதாயுமிருக்கும். உட்பகுதி வெண்மையாய் உரத்துச் சதைத்திருக்கும். வெட்டும்போது பால்போன்ற, காரமான, கைச்சற் சாறு பொசியும். காய்ந்த சீவல்கள் ஒரு லீன்[7]தடிப்பாயும் அரிதாய் இரண்டு அருகிலும் வழக்கமாய் ஒரு அருகிலும் சற்றே அறவாயும் மாப்பிடித்து உரப்பும் தட்டையும் வெண்மையுமாயுமிருக்கும். 2. விதை. பூரணமாய் முற்றினபின் இது சேர்க்கப்படும். செங்கபில நிறமும், கடுகளவு பருமையும் மெத்த வன்மையுமானது. மணமற்றது, கைப்பான காரச் சுவை கொண்டது. கிழங்கு, விதை, இரண்டினது சத்தும் கொல்சிசின்[8]என்ற கிறிஸ்தலிக்கக்[9] கூடிய பதார்த்தத்திலேயே இருக்கும்.

தன்மை. இது ஸ்திமுலம்[10], விசேஷமாய்க் குடலிலும் ஈரலிலும், சனனசல உறுப்புகளிலும் சேஷ்டிக்கும். குடலிற் சேஷ்டிக்கும்போது விரேசனியும் வமனியுமாகும். ஈரலிற் பித்தக்கினியாகும். சனனசல உறுப்புகளில் அமுரிதியாகும். குவாத[11] வாத நோய்களில் இது செரதீவ[12]மாகிறது போலும். பெருந்தேயத்தில் வீறுன மயக்கழற்சி நஞ்சாகும்.

உபயோகம். குவாத வாத நோய்களில் இது கைகண்ட மருந்து. ஆயினும் மதியோடு மட்டாய்க் கொடுக்கவேண்டும். மற்றும் நோய்களுள் நீர்க்கோவைகளுக்கு இதால் நயமுண்டாகும். பிரதானமாய் அது ஸ்காலதீனம்[13],இதயவியாதிகள்,சலப்பை, பிருக்கங்க[14]ளின் தாபிதம், சலத்திற் காணும் லிதிக்கமில[15] அடையல்களோடு கூடிய நீர்க்கோவைக்கு நயந்தது. மேலும்

---

1 Patna. 2 Utees. 3 Atis. 4 Safed musli. 5 Asparagus racemosa. 6 Asparagus ascendens. 7 Line. 8 Colchicine. 9 Crystallizable. 10 Stimulant. 11 Gout. 12 Sedative. 13 Scarlatina. 14 Kidney. 15 Lithic acid.

Digitized By Roja Muthiah Research Library

வயோதிகரிற் காணும் புரஸ்தகோள[1] வீக்கத்துக்கும், கனுறீயத்துக்[2]கும், பிரதானமாய்ச் சிசிஞேத்தையை[3] மாற்றுவதற்கும், வாதத்தைப் பற்றி யுண்டான இரிசுத்தாபிதத்துக்கும்[4], செங்கண்மாரி, கொடிய மலவரட்சி, காலிகபுறங்கீது[5], குக்கல், எரிசிப்பிலசு[6]களுக்கும் நீனியப்புழு[7]வுக்குக் கிருமிகொல்லியாகவும் இது உவந்தது.

**தேயம்.** கிழங்கை மாவாக்கி, அதில் இரண்டு கிறேன் தொடங்கி எட்டுக் கிறேன் வரைக்கு நாள் மூன்றுமுறையாவது அதிக முறையாயாவது கொடுக்கலாம். சுகந்தங்களோடு சேர்த்துக் கொடுப்பதே உத்தமம்.

**கிழங்கின் ரசிதங்கள்.** Preparations of the corm. கோல்சிகவேசிறுத்து. Extract of Colchicum. கொள். பச்சைக் கொல்சிகக் கிழங்கு, தோலுரித்து, எழு இருத்தல்; துவைத்துச் சாற்றைப் பிழிந்து, மண்டி அடையும்படி வைத்துத் தெளிந்த நீரை 212 பாகை சூட்டிற் காய்ச்சி அப்பாற் கம்பளியில் வடித்துக் குளிகைப்பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்[8]திலே 160 பாகைக்குச் சூடாக்கி வறட்டிக்கொள்ளவும்.

**தேயம்.** அரைக் கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்கு நாலு ஆறு மணிக்கு ஒவ்வொரு முறை கொடுக்கலாம்.

**கோல்சிக அசித்திகவேசிறுத்து.** Acetic Extract of Colchicum. கொள். தோலுரித்த பச்சைக் கொல்சிகக் கிழங்கு, எழு இருத்தல்; அசிதிக்கமிலம்[9], ஆறு அன்சு. கிழங்கைத் துவைத்து அசிதிக்கமிலத்தைச் சேர்த்து, சாற்றைப் பிழிந்து, மண்டி அடையும்படி வைத்துத் தெளிந்த சாற்றை 212 பாகை மட்டும் சூடாக்கி கம்பளியில் வடித்து, மெல்லிய எசிருத்தாய் வர நீர்மத்திகத்தில் 160 பாகைக்குக் கதிக்காத சூட்டில் வறட்டிக்கொள்ளவும்.

**தேயம்.** அரைக்கிறேன் தொடங்கி இரண்டு கிறேன் வரைக்கு நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம்.

**கோல்சிக வைன்.** Wine of Colchicum. கொள். கொல்சிகக் கிழங்கு, சீவிக் காயப்போட்டு இடித்து நாலு அன்சு. செரிவைன்[10], அரைநாழி. அடைத்த பாத்திரத்திற் கொல்சிகத்தை எழுநாளைக்கு வைனிலிட்டு ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கி அப்பாற் பிழிந்து காரிக்கம் புடைவையில் வடித்து அத்துடன் அரைநாழிக்குப் போதிய செரிவைன் சேர்க்கவும்.

**தேயம்.** பத்து முதல் முப்பது மினிம் வரைக்கு நாள் மூன்றுமுறை கொடுக்கவும். நெருக்கமாயுங் கொடுக்கலாம்.

**விதையின் ரசிதங்கள்.** Preparations of the Seeds. கோல்சிக விதை ரஞ்சம். Tincture of Colchicum seed. கொள். கொல்சிக விதை இடித்து, இரண்டரை அன்சு; புரூவுசீது[11] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் கொல்சிகத்தைப் பதினைந்து அன்சு சீதில் இட்டு இரண்டுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனியில்[12] ஏற்றி அடைசி நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, முன் வடித்த நீரோடு கலந்து அரைநாழி தேறப் புரூவுசீதைக் கூட்டிக்கொள்ளவும்.

**தேயம்.** பத்து மினிம் முதல் முப்பது மினிம் வரைக்கு நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம். கொல்சிகத்தை உள்ளுக்குக் கொடுப்பதற்கு

---

1 Prostate gland. 2 Gonorrhoea. 3 Chordee. 4 Iritis. 5 Chronic Bronchitis. 6 Erysipelas. 7 Taenia. 8 Water bath. 9 Acetic acid. 10 Sherry wine. 11 Proof spirit. 12 Percolator.

இந்த ரசிதம் மெத்த உவப்பு. குவாத வாத நோய்களுக்குப் பெரும்பாலும் அபாமிலிக[1]ளோடு கலந்து கொடுக்கப்படும்.

## பச்சைக் கடுரோணி. GREEN HELLEBORE.

## VERATRUM VIRIDE.

வாசம். இப் பூடு வட அமரிகத்தின் கிழக்குக் கரையிற் கனடம் துவங்கி,கருலீனம் வரைக்கும் உண்டாகும்.

வாகடபகுதி. வேர்த்தண்டு. இது பின் கோடை காலத்திற் சேர்த்துக் காயப்போடப்படும். தோலால் மூடப்பட்ட நுனியும் தடித்த உரத்த அடியும் இதற்குண்டு. அதிலே அநேக வேர்க்கூந்தல்கள் பொருந்தியுமிருக்கும். புதிதாயிருக்கையில் அதின் மணங் கெட்டதாயிருந்துங் காய அற்றுப் போகும். சுவை முதல் இனிப்பாயிருந்து பின்பு கசந்து கடைசியிற் கார்ந்து வாயில் நெடுக எரியும்.

தன்மை. வீறுன சௌதீவம்[2]. விசேஷமாய் இரத்தோட்டத்தை இது குறைக்கும். பெருந்தேயத்தில் மெனியும் வீறுன அவசாதனியுமாகும்.

உபயோகம். நுமோனி[3] முதலிய தீவிர[4] தாபிதங்க[5]ள் சிலவற்றுக்கும், தீவிரகாலிக[6]வாதங்கள், குவாதம்[7], நுறல்சி[8], ஈளைகளுக்கும், இதயத் துடிப்பின் கெதியோடு கூடிய இதய வியாதிகள் சிலவற்றுக்கும், இது உபயோகமாய்க் காணப்பட்டது. அந்திரசுர[9]த்துக்கும் கொடுக்கப்பட்டதாயினும் அதினுலுண்டான நயஞ் சந்தேகம்.

தேயம். வேர்த்தண்டுத் தூளில் ஒரு கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். ரஞ்சமாய்க் கொடுப்பதே உத்தமம்.

ரசிதம். பச்சைக் கடுரோணி ரஞ்சம். Tincture of Green Hellebore.

கொள். பச்சைக் கடுரோணி வேர்த்தண்டு பருக்கன் தூளாக, நாலு அன்சு; திட்டசீது[10] அரைநாழி. அடைத்த பாத்திரத்தில் வேர்த் தண்டுத் தூளைப் பதினைந்து அன்சு சீதில் இரண்டுநாள் ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[11]யில் இட்டு நீர் ஒழுகினபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் விட்டு வடிக்கவும். அப்பாற் சக்கையைப் பிழிந்து வடித்து, முன் வடித்த நீருடன் கலந்து அரைநாழி தேறத் திட்டசீது சேர்க்கவும்.

தேயம். ஐந்து மினிம் முதல் இருபது மினிம் வரைக்குச் செயல் காணுந்தனையும் மூன்று நாலு மணிக்கொருமுறை கொடுக்கவும். அப்பால் மருந்தை நிறுத்த அல்லது குறைக்கவேணும்.

## சபதிலம். SABADILLA.

வாசம். இப் பூண்டு மெக்சிகு தேசத்தில் உண்டாகின்றது.

வாகடபகுதி. கொட்டை. இப் பூண்டின் கனி அரை இஞ்சி நீளமானது. மெல்லிய சுவரையுடைய வெண் கபிலநிறமான மூன்று அறையுள்ளது. அவ்வறை ஒவ்வொன்றுக்குள்ளேயும் ஒன்று முதல் மூன்று கொட்டைகள் இருக்கும். கொட்டை கால் இஞ்சு நீளமும் கருங் கபில நிறமும் மினுக்கமுமானது. சொற்ப சிறையுள்ளது. கடுங் கார்ப்பும் நெடுங் கை

1 Antacid. 2 Sedative, சாந்தனி. 3 Pneumonia. 4 Acute. 5 Inflammation. 6 Chronic. 7 Gout. 8 Neuralgia, 9 Enteric fever. 10 Rectified spirit, 11 Percolator.



Digitized By Roja Muthiah Research Library

ப்புமான சுவைகொண்டது. இதின் சத்து விருத்தி[1]யென்ற இதின் அல்கலை வத்திலேயேயிருக்கும்.

தன்மை உபயோகம். இது அழற்றுந் தன்மை கொண்டது. அந்தெல்மிந்தி. வாதம், நறல்சி நோய்களுக்குக் கொடுக்கப்படும். பேனைக் கொல்லுவதற்கு வெளிமருந்தாக வழங்கப்படும். எவ்விதத்திலும் இது மோசமான மருந்தே. விருத்தியை அடக்கியிருப்பதால் மாத்திரமே இக்கொட்டை வாகடத்துக்குரியதாகின்றது.

ரசிதம். விறத்தி. Veratria. இது சபதிலக் கொட்டையில் எடுக்கப்படும் ஓர் அல்கலைவம்[2]. பூரண சுத்தமானதல்ல. லட்சணங்கள். வெண்ணரை நிறங் கொண்டது. அமாவ[3]மானது; மணமற்றது; மெத்தச் சொற்ப அளவிற்றானும் நாசித்துவாரங்களைக் கடுமையாய் அழற்றும். அதிகங்கொடிய கைப்பு; மிகக் கார்ப்புக் கொண்டது; நீரிற் கரையாது; சீது[4],ஈதர்[5]களிலும் கிருசஅமிலங்க[6]ளிலும், சொற்பங் கரையக் கபிலமான ராளப் பதார்த்தம் கரையாத அடையலாய்க் கிடக்கும். திறந்தபடி பரமாணுவில் காய்ச்ச,மஞ்சள் நிற நீராக உருகிக் கடைசியிற் சேஷமில்லாமல் எரியும். இது ஓர் வீறான நஞ்சு.

தேயம். கிறேனிற் பன்னிரண்டிலொரு பங்கு முதல் ஆறிலொரு பங்கு வரைக்குக் குளிகையாக்கிக் கொடுக்கலாம். கொடியநஞ்சாதலால் இதை உள்ளே கொடுப்பது புத்தியல்ல.

விறத்தியன்தேன். Ointment of Veratria. கொள். விருத்தி எட்டுக் கிறேன்; பூதலா[7] ஒரு அன்சு; ஒலீவ தேலம் அரைத்திரும். விருத்தியையும் தேலத்தையுஞ் சேர்த்தரைத்து லாட்டோடு அவற்றைத் திறமாய்க் கலக்கவும்.

நறல்சி[8], வாதம்[9], சோர்வு[10]களுக்கு இது நல்லபூச்சு. தேண்புல் வைத்தியர் இந்த அன்கெனை ஒரு அன்சு லாட்டுக்கு விருத்தியிற் பத்து முதல் இருபது கிறேன் வீதமாகச் சேர்த்து வழங்கினார். இதைவழங்குவதிற் கவனம்வேண்டும். கொப்புளங்கொண்ட அல்லது தோல் வழுந்தப்பட்ட பகுதிகளுக்கு இதை இட்டால் அல்லது தோலில் அதிகமாய்ப் பூசினால் தேகத்திற் சுவறி நஞ்சாகக் கூடும்.

## அவாகடச்சரக்கு. Non-Officinal.

சுரிஞ்சான். Hermodactyl. இச்சரக்கு முன்னே வாத குவாத பரிகரிப்பிற் பேர்பெற்றிருந்தது. இந்துக் கடைகள் சிலவற்றில் இது இன்னும் வருகின்றது. இதிலே இரண்டு வகை உண்டென்று ஒஷானசி பண்டிதர் சொல்லியிருக்கிறார். ஒன்று கைப்பானது, மற்றது சுவையற்றது. முதலாவதைச் சோதித்த அளவில் கொல்சிகத்தின் தன்மையெல்லாம் இதற்குண்டு என்று அவர் முடிவுகட்டினார். ஆயினும் யுரோப வைத்தியத்தில் இது வெகுகாலமாக விலக்கப்பட்டிருக்கின்றது. இதினால் உண்டாகக் கூடிய நயமெல்லாங் கொல்சிகத்தால் இலகுவாயுந் திறமாயு முண்டாகுமாகையால் இதைத் திரும்ப வழக்கத்திற் கொண்டுவருவதில் ஒரு பலனும் இல்லை. பின

1 Veratria. 2 Alkaloid. 3 Amorphous. 4 Spirit. 5 Ether. 6 Dilute acid. 7 Prepared Lard பூதக்கொழுப்பு. 8 Neuralgia, 9 Rheumatism, 10 Paralysis.

Digitized By Roja Muthiah Research Library

ஞ்சென் என்பவர் இதைப்பற்றி விஸ்தாரமாய் எழுதிய விபரத்தில் இதை வாறியக் கொல்சிகம்[1]என்று குறித்திருக்கிறார்.

## பல்மாசியங்கள்:

## PALMACEAE.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

தென்னை. Cocoanut tree. மரங்களுள் அதி நயங்கொண்டிருக்கிற இந்த மரத்தின் பிரயோசனங்களுள் இதின் பருப்பிற் பிழிந்தெடுக்கும் எண்ணெய்யே இவ்விடத்திற் சொல்லப்படவேண்டியது. புதுத் தேங்காய் எண்ணெய் வெண் மஞ்சள் நிறம் உள்ளது. மணமற்றது. சில நாள் சென்றபின் அதிக நிறமும் பாண்டல் மணமுஞ் சுவையுங் கொள்ளும். 70 பாகை சூட்டில் உறையும். இதிலே கொசின்[2]என்ற உரமான நிணமும் ஒலீயின்[3]என்ற நீரான நிணமும் அடங்கியிருக்கும். கொசின்என்பது கிலேசரீ[4]னும் கொசினிக்கமில[5]முஞ் சேர்ந்த கலவையேயாகும். இது மலிந்த பொருளாதலால் அதிகமாய் வினிமென் முதலிய பூச்சுகளுக்கு யானமாக வழங்கப்படும். ஆயினும இந்நோக்கத்துக்கு இது வேர்க்கடலைத் தேலம்[6] நல்லெண்ணெய்[7]களைப்பார்க்க இளப்பம். மயிரைப் பெலப்பிக்குந் தன்மை இதற்குண்டாம். ஆதலாற் சிர மொட்டைக்கும், காய்ச்சலின்பின்னும் பெலவீனப்படுத்தும் மற்று நோய்களின்பின்னும் தலைமயிர் கொட்டுண்டதற்கும் இது பெரும்பாலும் பூசப்படும். மறுவித்தே[8]லுக்குப் பதிலாக இதைப் பிரயோகிக்கலாமென்று தம்சன் வைத்தியர் சொல்லியிருக்கிறார். வாறன் முதலியவர்களும் அதின்பேரில் நயந்த சாட்சியிட்டிருக்கிறார்கள். இப்படி வழங்கப்படும் எண்ணெய் வியாபாரத்தில் வாடிக்கையான எண்ணெய்யல்ல. அது இங்கிலாந்துக் கடைகளிற் கட்டி கட்டியாக விருக்கும். அது கட்டியாய் உறைந்த எண்ணெய்யிலிருந்து பிழிந்து, அல்கலை[9]களால் சுத்திசெய்து, திஸ்திலித்த தண்ணீராற் திரும்பத் திரும்பக் கழுவின ஒலீயினே. இதைக் க்ஷயரோகிகள் 53 பேருக்குக் கொடுத்துப் பரிகரித்துக் கண்ட பலனைப் பற்றித் தம்சன் வைத்தியர் சொல்லியிருக்கிறார். அவைகளுள் முதற்பகுதியாரான 30 பேரில், 19 பேருக்கு மெத்த நயமுண்டானது. 5 பேருக்கு வியாதி நிலையாய் நின்றது; மிச்சமான ஆறு பேரிலும் நோய் தடங்காமல் அதிகரித்தது. இரண்டாம் பகுதியான 23 பேருள் 15 பேருக்கு மெத்த நயங்கண்டது. 3 பேரில் நோய் நிலையாய் நின்றது; 5 பேரில் அதிகரித்தது. மேலும் இது மறுவித்தேலைப் போல உடம்பின் நிறையையுங் கூட்டுமென்று காறடு வைத்தியர் காட்டியிருக்கிறார். இதை நெடுகக் குடித்தாற் சீரணக் குழப்பமும் கழிச்சலும் உண்டாகக்கூடுமென்று தம்சன், காறடு பண்டிதர்களும் இதைச் சற்றே சோதித்துப் பார்த்த வாறிங்கு பண்டிதருந் தெரிவித்திருக்கிறார்கள். இதை வழங்கி வருவது நயமென வன்சொமறின், அஸ்வலுடன் வுட்டரும் எழுதியிருக்கிறார். பெலவீனத்துக்கும் ஆரம்ப க்ஷயத்துக்கும் காமாலை நோய்களுக்கும் தேங்காய்ப்பாலை நாலு முதல் எட்டு அஞ்சு

1 Colchicum Variegatum. 2 Cocin. 3 Oleine. 4 Glycerine. 5 Cocinic acid. 6 Ground-nut oil. 7 Jinjili oil. 8 Cod-liver oil. 9 Alkali.

Digitized By Roja Muthiah Research Library

தேயமாக நான் இரண்டு மூன்று முறையாகக் கொடுத்து நயங்கண்டேன் என்று சாற்று வைத்தியர் எழுதியிருக்கிறார். இது நல்ல சுவைகொண்டதாதலாற் கோப்பித் தண்ணீரிற் பசுப்பாலுக்குப் பதிலாக இதைச் சேர்க்கலாம். பிள்ளைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். பெருந் தேயத்தில் இளம் பேதியாகும். சிலவேளை கடும் பேதியாகவுங்கூடுமாகையால் உவட்டிப்பை உண்டாக்குகிற ஆமணக்கெண்ணெய் முதலிய பேதி மருந்துகளுக்குப் பதிலாக இதைக் கொடுக்கலாமென்று வுட்டர் சொல்லுகிறார். தென்னங்கள்ளு நொதிப்பாப்பை[1]க்கு உவந்தது. பனங்கள்ளும் அவ்வாறாகும். இவ்விரண்டிலுமிருந்து சேர்க்கப்படுங் கள்ளுகளிற் சாராயமும் காடி[2]யும் வடிக்கிறார்களன்றிப் பனங்கட்டியென்ற அசுத்தசர்க்கரையுங்காய்ச்சுவார்கள்.

**பனை.** Palmyra Palm. அதி பிரயோசனமும் லட்சணமுமான இந்த மரம் இந்துவின் மிகுதியான பகுதிகளில் மணற்றரைகளில் உத்தராட்சம் 30 பாகை வரையில் உண்டாகின்றது. மருந்தாகப் பார்க்கில் இதின் பாளையில் ஊறும் சாறே மிக விசேஷித்தது. இளம் பாளைகளைத் தட்டிச் சீவி முட்டிகட்டிக் காலை மாலைகளில் அதிகமாய் இதை இறக்குவார்கள். பதநீர் என்னும் நொதிய சாறு இனிக்குமாயினும் சற்றே உவட்டிக்கும். கால் நாழியளவு சில காலை தோறுங் குடித்து வந்தால் இளம் பேதியாகும். இறக்கினபின் நெடுநேரமாய்த் திறந்தபடி வைத்தால் நொதிக்கத் துவங்கி வெறி பானங்களுளொன்றாகிய சாராயமாகும். இந்தக் கள்ளை 920 என்ற விசேஷகுருவிதம்[3] வருந்தனையுந் திஸ்திலி[4]த்தால், வாசடத்துக்குரியரஞ்சங்கள் முதலான சிகிச்சச் செயல்களில் இதையும் புரூவுசீதை[5]ப் போலவே வழங்கலாம், யீஸ்துப்பாப்பை[6]க்குப் பதிலாக மெத்த உபயோகமாய் அருட்டக் கூடிய ஓர் பாப்பையைக் கள்ளுமண்டியிற் செய்யலாம். புதிய கள்ளை அரிசி மாவில் விட்டுக் களியாய் வரக் குழைத்து நொதிக்கத் தொடங்குந்தனையும் இளஞ் சூட்டில் வைக்கப் பாப்பையாகும். இதைச் சீலையிற் பரவி அழுகற் புண்கள், பிளவைகள், மந்தமான புண்களுக்கு அணைக்க நன்றாய் அருட்டும். இதை வாறிங்கு பண்டிதர் பலமுறையில் வழங்கி நயமென்று கண்டார். வெளியான காயத்தாலாகும் இரத்தப்பெருக்கைத் தடுப்பதற்கு பனைமட்டைக் கருக்கிற் பிடித்திருக்கும் பஞ்சு போன்ற பூசைச் சிங்கள வைத்தியர் இடுவார்கள். தென்னோலை மட்டையிற் பிடித்திருக்கும் பஞ்சையும் வங்காளிகள் இந்நோக்கமாய் வழங்குவார்கள். திருவாளங்கோட்டிலும் இது இப்படியே வழங்கப்படும். இதினால் மெத்தச் சித்தியாகும். வழக்கமான மருந்து கிட்டாதவிடத்து இது தாவிளையாகும். அந்தரிப்பான இடங்களில் இடையூறுகள் சம்பவித்தால் இம் முறைகளை நினைத்திருப்பது நல்லது.

**கூந்தற்பனை.** Bastard Sago Tree. இது சென்னையின் மேற்குக் கரையிலுள்ளது. இம்மரத்திற் சேர்க்குங் கள்ளைத் திஸ்திலித்து நயந்த ஓர் சீதை[7]எடுப்பார்கள், இது சிகிச்சா செயல்களுக்கு உவப்பாகும். இம் மரத்தின் சோற்றியிற் கீழ்த்தரமான சவ்வரிசி செய்வார்கள். இதின் பதநீரில் கால் நாழியைக் காலை மாறு குடிக்க விரேசனமாகும். மலையாளிகள் இதை அதிகமாய் இப்படி வழங்குவார்கள்.

---

1 Fermenting poultice. 2 Vinegar. 3 Specific gravity. 4 Distil. 5 Proof spirit. 6 Yeast Poultice. 7 Spirit,

Digitized By Roja Muthiah Research Library

கமுகு. Areca Palm. இது ஓலையையுடைய ஓர் சிறந்த சிறுமரம். வெற்றிலை சுண்ணும்போடு பாக்கைச் சேர்த்துச் சப்புதல் கீழ்த்தேசங்களில் மெத்த வழக்கம். இது முரசைப் பெலப்பித்து, மூச்சை வாசனையாக்கி, சீரண உறுப்புகளைப் பெலப்படுத்துகிறதென்று நினைக்கிறார்கள். ஆயினுஞ் சுண்ணும்பு, பாக்கு வெற்றிலையின் நயத்தைக் கெடுத்து சீரணத்துக்கு இடைஞ்சலாகும் அல்லாமல் பலமுறையுங் கொடுப்புப் பீறி என்ற மாருத புண்ணுக்கு இடமாகின்றது. மாரின் என்பவர் பாக்கைக் கூறுபடுத்திப்பார்த்தஅளவில் அதிலே தனிக்கமிலம், கலிக்கமிலங்கள் அதிகமாய் உண்டு என்றுகண்டார். தலீவுச்செறீ[1]வில் இதைத் துவரென்று சொல்லியிருப்பது சரி. இந்துவின் சில பகுதிகளில் இதில்நின்று ஓர்வகையான காசுக்கட்டி செய்வார்கள். இக் காசுக்கட்டி இரண்டு மூன்று இஞ்சு அகலமும் அரை இஞ்சு ஒரு இஞ்சு தடிப்பும் இரண்டு மூன்று அன்சு நிறையும்உள்ள வட்டித்த தகடுகளாக வரும். உள்ளே கருங் கபில நிறங் கொண்டது. மணமற்றது. வீருன கயர் அல்லது கைப்புச் சுவை உடையது. இது வொதலை மரத்தில் நின்றெடுக்கும் வாகடத்துக்குரிய காசுக்கட்டியின் தன்மைகளை உடையது. அதைப் போலவே வழங்கப்படும். பாக்கைச் சுட்டு அரைத்த பாக்குத் தூள் உத்தமமான பற்பொடியாகும். பாக்குக்குக் கிருமிகொல்லித் தன்மை உண்டென்று சொல்லப்பட்டிருந்தாலும் இதை வாடிக்கையாய்ச் சப்புகிற இந்துக்கள் பிரமர்களுக்குக் கீரைப்பாம்பு பெரும்பாலும் உண்டாகின்றதாகையால் அத்தன்மை இதற்குண்டெனல் பொருந்தாது. பாக்கை மாவாக்கிப் பத்துப் பதினைந்து கிறேன் தேயமாக மூன்று நாலு மணிக்கொருமுறை கோடுக்க, அது பெலவீனத்தைப் பற்றி உண்டான கழிச்சலைத் தடுக்குமென்று சாற்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். காய்ந்த கமுக மடல் முறிவுகளுக்குக் கட்ட நல்ல தப்பையென்று பலஞுத போசர் சொல்லுகிறார். இந்துவடங்கலும் விசிகங்களில் வழங்குவதற்கு இது மெத்தத் திறமல்லவென்பது அவரது எண்ணம்.

## அறுவிடயங்கள்.

## AROIDEAE.

### அவாகடச் சரக்குகள். Non-Officinal.

வசம்பு. Sweet Flag. இதுவோர் நடைபடியான பூண்டு. யுரோப்பம், ஆசியம், வடஅமரிகம் அடங்கலும் ஈரிப்பான இடங்களில் வாடிக்கையாய் உண்டாகும். இதின்வேர்த்தண்டு ஸ்தொமாகி[2],தொணிக[3]மாக வெகுகாலம் மதிக்கப்பட்டது. இத் தன்மைகளில் இதை வழங்கலாமென்பதற்கு இதற்குரிய சுகந்த கைப்புத்தானே சாட்சி. இதன் காய்ந்த தேறு, சுதேச வைத்தியர் மிகுதியாய் வழங்கும் மருந்துகளில் ஒன்று. இந்துவின் எப்பகுதிக் கடைகளிலும் அகப்படும். வாயுப் பொருமலோடு கூடிய அசத்துவ[4] குன்மத்துக்கு இது உவந்தது. இது விசேஷமாய்க் குவாத[5] தேகிகளுக்குண்டாகுங் குன்மத்துக்கு உவந்ததென்று பெரைரர் வைத்தியர் சொல்லுகிறார். அங்

1 Taleef shereef. 2 Stomachic. 3 Tonic. 4 Atonic. 5 Gout.

Digitized By Roja Muthiah Research Library

திபிரூடி[1]யாக இது உதவுமென்று தம்சன்பண்டிதர் கவனித்திருக்கிறார். இந்துக்களுக்குண்டாகும் முறைச் சுரங்களுக்கு இதைப் பெரும்பாலுங் கொடுத்துச் சித்திபெற்றாரென்று ரோயில் பண்டிதர் சொல்லியிருக்கிறார். களச்சிக்காய்[2],சிரட்ருச்சி[3] முதலிய கைப்புகளோடு கலந்தே அவர் இதைக்கொடுத்தார். பெலன் குன்றின அசத்துவ காய்ச்சல்களுக்குக் கொடுக்கும் இவ்வகுப்பைச் சேர்ந்த மற்று மருந்துகளுக்கு இது தகுந்த அனுமருந்தாகும். அந்நோய்க்கு இது ஓர் உச்சிதமான ஸ்திமுல சுவேதனியென்று, ரோசுவைத்தியர் சொல்லுகிறார். அசத்துவ கழிச்சலுக்கும் வாந்திபேதியைப்போன்ற கழிச்சலுக்கும் இது உவந்ததென்றும் கூறினார். வசம்பு மாவைக் காட்டுமுந்திரிச் சீதிற்[4] குழைத்துப் பூசல் காலிகவாதத்துக்கு ஓர் நயந்த பூச்சு என்றுஞ் சொன்னார். இதால் இவற்றிற் காணும் நயத்தைப்பற்றி அவர் மெத்தவும் பாராட்டுகிறார். தெள்ளு முதலிய பூச்சிகளைக் கொல்லுந் தன்மையுங் கலைக்குந்தன்மையும் இதற்குண்டென்று இந்துவிலிருந்துவந்த எழுத்துக்கள் பலவற்றிற் கண்டிருக்கின்றது. காய்ந்த வசம்பு மாவின் தேயம் இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்குமாம். கூடவுங் கொடுக்கலாம். இன்வூசமாய்[5]க் கொடுப்பதே உத்தமம். அதற்கு வீதம் இடித்த வசம்பு ஒரு அன்சு; கொதிநீர் பத்து அன்சு. தேயம் ஒன்றரை முதல் இரண்டு அன்சு வரைக்கு. வசம்புத் தேறு பல நீளமும் பெருவிரலளவு பருமையும், தட்டையுமான துண்டுகளாக வரும். மெதுவானது. உறைபோன்ற வளையங்கள் பலவற்றை உடையது, ஓர்வகையான சுகந்த மணமுங் கைச்சலான கார்ப்புச் சுவையும் அதற்குண்டு. அதிலடங்கிய ஓர் அத்திர எண்ணெய்யில்[6] அதின்சத்து இருக்கும். லண்டன் எதின்பரு வாமகுபீயங்க[7]ளில் அது வாகடச் சரக்காயொப்புக்கொள்ளப்பட்டும்,பிரித்தன்வாமகுபீயத்திலோ விடப்பட்டது.

அத்தித்திப்பிலி. Scindapsus officinalis. இந்தப் பூண்டு இந்துவின் அனேக பகுதிகளில் உள்ளது. இதின் காய்ந்த பழச் சீவலாகிய வற்றல் இந்து பதார்த்தசாரத்தில் குச்சுப் பிப்பிலி[8] என்ற பெயரால் வழங்கும். இதற்கு ஸ்திமுல[9],சுவேதன[10],அந்தெல்மிந்தி[11]த்தன்மைகள் உண்டாம். ஆயினும் இதின்தன்மையைப்பற்றி நாம் அறிந்ததெல்லாம் முற்றாய்ச் சுதேசிகளின் சாட்சியைப்பற்றியே. சாமக்கிழங்கின் Colocasia சாற்றுக்கு ஸ்திப்திகு[12]த்தன்மை உண்டென்று பலனாதபோசர் மெத்த விதக்கிறார். நாடியாற் பெருகும் இரத்தத்தைத் தானும் இது தடுக்குமென்றும் இது இடப்பட்ட காயம் பெரும்பாலும் முதல் முறையில் ஒன்றி மாறுகிறதென்றும் அவர் சொல்லுகிறார். கருணைப்பூடு[13], பலவிலைத்திரகந்திப்பூடு[14], பெருங்கிழங்குக்கோலுகாசிப்பூடு[15],மலையலுகாசிப்பூடு[16] என்பவைகளினதும் இந்துவில் ஆதியாயுண்டாகும் இவற்றின் வகுப்பைச் சேர்ந்த சில பூடுகளினதும் கிழங்கு எல்லாம் பச்சையாயிருக்கையில் மெத்தக் கார்ப்பானவைகள். இவைகளைச் சுதேசிகள் பலவகையான நோய்களிலும் ஸ்திமுலவணைவுகளாக வழங்குவார்கள். ஆயினும் இவைகளால் உண்டாகக்கூடிய நயம் கடுகுப்பற்றாற் சுறுக்கிலுண்டாகும். இவற்றிலுள்ள கார்ப்பான சாரஞ் சுறுக்கு ஆவியாய்

---

1 Antiperiodic. 2 Bonduc nut. 3 Chiretta. 4 Cashew spirit. 5 Infusion. 6 Volatile oil. 7 Pharmacopoeia. 8 Gujpipul. 9 Stimulant. 10 Diaphoretic. 11 Anthelmintic. 12 Styptic. 13 Typhonium orixense. 14 Dracontium Polyphyllum. 15 Colocasia macrorhiza. 16 Alocasia montana.

Digitized By Roja Muthiah Research Library

ப் போகக்கூடியது. சூடுபட்டால் அல்லது காய்ந்தால் இக் கிழங்குகள் காரப்பற்று நல்ல உணவாகும். திரகந்தி[1]ப் பூண்டின் பச்சைக் கிழங்குக்கு வீருன அந்திஸ்பசத் தன்மை உண்டென்று மலையாளத்துச் சனங்கள் சொல்வார்கள்.

## சைபராசியங்கள்.

## CYPERACEAE.

கோரை. Cyperus rotundus. இப் பூண்டு இந்துவடங்கலும் ஈர நிலங்களிலுள்ளது. இதின் கிழங்கு நீள வட்டமானது. பிறு முட்டையளவு பருமையுள்ள இலைபோன்ற வேரால் இணைந்திருக்கும். உள்ளே வெண்மையும் நொருக்கலும் கண்ணறையுமானது. இனிப்புஞ் சற்றே சுகந்தமணமுமுள்ளது. சுவை கைப்பு ; காய்ந்ததானுல் ராளமும் பல்சமும் போலக்காட்டும். இதற்கு ஸ்திமுல[2] சுவேதன[3] அமுரிதித்[4] தன்மைகள் உண்டாம். மேலும் தலீவுச்செறீவிலே துவரென்றும் அந்தெல்மிந்தியென்றும் இது சொல்லப்பட்டது. சற்குத்தாவிலுள்ள சனங்களுக்குள்ளே இது வீருன தொணிகமாகக் கீர்த்திபெற்று விசேஷமாய் இரைப்பைப் பிசகுகளுக்கும் குடலழற்சிக்கும் அவர்களால் வழங்கப்படுகின்றது. இதைக் கொடுத்ததால் இரண்டுபேர் வாந்திபேதியினின்று சுகப்பட்டார்களெனக் காடுவிக்கர் எழுதியிருக்கிறார். ஆயினும் இந்நோய் இம்மருந்தால் எவ்வளவுக்கு இளகினதென்பதுசந்தேகம். முத்தக்காசுக் கிழங்கு Cyperus pertenuis க்கும் கோரைக் கிழங்கின் சுகந்ததன்மைகள் உண்டு. அது சுவேதனி, அமுரிதியென்று கொள்ளப்படும். இவ்விரண்டு கிழங்குகளும் அற்ப சரக்குகளேயாகும்.

## கிறமீனியங்கள்.

## GRAMINEAE.

### இருய்த் தானியம், RYE.

வாசம். இது யுரோபம் அமரிகம் என்ற தேசங்களின் அநேக பகுதிகளில் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. இருய்த் தானியத்தின் உமிக்குள் கட்டும் சக்காகிய செங்கிலாவிசெப்பு[5] என்ற வங்கசு[6]. இது எர்கற்று[7] எனப்படுகிறது. இதின் லட்சணங்களாவன : இது திரண்ட முக்கோணமாயும் வளைந்ததாயும் கவிந்தபக்கம் நெடுகேவோர் தவாளிப்புள்ளதாயும் இரண்டு தலையும் மழுங்கலானதாயுமிருக்கும். நீளம் இஞ்சில் மூன்றத்தொரு பங்கு முதல் ஒன்றரை இஞ்சுவரைக்கிருக்கும். வெளிப்பக்கம் செங்கபில நிறமுள்ளது, உட்பக்கம் வெண் சிவப்புநிறமுள்ளது; உரமானது; நொருங்கக்கூடியது; குறுக

1 Dracontium Polyphyllum. 2 Stimulant, தீவன. 3 Diaphoretic, தியவுறீசம். 4 Diuretic தியுறீசம். 5 Claviceps purpurea. 6 Fungus. 7 Ergot.

Digitized By Roja Muthiah Research Library

ஒடியும்; சொற்ப மணமுடையது; இதை மாவாக்கிப் பதாசி நீர்[1] விட்டு அரைத்தால் வீருன மணம் வீசும்; இதின் சத்து செகலீனம்[2] என்ற எசிருத்திவு[3]போன்ற அல்கலைவத்திலேயே[4]இருக்கும்; இதிலே ஓர் திர எண்ணெய்[5] யுமுண்டு. இது செகலீனத்தின் ஒரு பங்கை அடக்கியிருக்கிற கார்ப்பற்ற எண்ணெய்போலும், ஏர்கற்றை 212 பாகை சூட்டில் உலர்த்தி நன்று யடைத்த சீசாக்களில்விட்டு வைத்திருக்கவேண்டும்.

தன்மை. இது ஸ்திமுலம். இதின் செயல் விசேஷமாய்க் கருப்பைப் பேசித் திசுவிலும் சனன உறுப்புகளிலுமே விளங்கும். ஆகையால் பிரசவ நோக்காட்டை உண்டாக்குவதற்கும், எம்மெனகக்காகவும் இது உபயோகமானது. துவர்த்தன்மையும் இதற்குண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றது. உணவாயாவது மற்றெவ்வகையாயாவது நெடுகத் தின்றால் நஞ்சாகும். அதினால் உடம்பிற் கோத[6] ஏர்கற்றிசம்[7], ஸ்பச[8] ஏர்கற்றிசம் என்னும் இரண்டு கேடான நிலையுண்டாகும்.

உபயோகம். கருப்பைத் தசையான சுவர் சுருங்காததினால் நோக்காடு குறைந்து பிரசவம் நெடுகிநிற்பதற்குக் கொடுக்கப்பெயரான மருந்து. இக் காரணமாகவே உண்டான அிணைய மறிக்கும்[9] பிரசவத்திற் காணும் இரத்தப்பெருக்குக்கும் உவந்தது. மேலும் சனனசல உறுப்புகளின் நோய்களுள் அமெனுறீயம்[10], லுகறீயம்[11], குலொறோசி[12], அபலமெனுறீயம்[13], கருப்பை நிபோஷங்களுக்கும்[14], சலப்பையின் பேசிக்கவசம் இளகிக் குறைவாய்ச் சுருங்குதலாலாவது சோர்வினாலாவது உண்டான சல அடைப்புக்கும் சல வொழுக்கு, கனுறீயம்[15], கிலீற்று[16], ஸ்பமதுறீயங்க[17]ளுக்கும் இது கைகண்டது. மேலும் அசத்துவமான இரத்தாமுரி[18]க்கும் சபலவகையான மற்றும் இரத்தப்பொசிவு காலிக தியறீயங்க[19]ளுக்கும் கண்ணை அதிகமாய் வழங்கினதாற் பெலக்குறைவைப்பற்றியாவது இசைவுக் குழப்பத்தைப்பற்றியாவது நிற்கிற கண் வியாதிகள் சிலவற்றுக்கும் இது உபயோகமானது.

தேயம். நோக்காட்டைக் கிளப்புவதற்குப் புது ஏர்கற்றைத் தூளாக்கி அதில் இருபது கிறேன் முதல் முப்பது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். பின்னுங் கொடுக்கவேணுமாகில் இருபது முப்பது மினிவேளையால் இரண்டொருமுறை கொடுக்கலாம். எம்மெனகக்குத் துவர்களாக நாலு முதல் ஆறு கிறேனை நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்,

ரசிதங்கள். ஏர்கற்றின்வூசம். Infusion of Ergot. கொள். ஏர்கற்று பருக்கன்பொடியாக கால் அன்சு; கொதிவெந்நீர் பத்துஅன்சு. மூடியபாத்திரத்தில் அரை மணிநேரம் ஊறவிட்டுச் சீலையில் வடிக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சுவரைக்கு. ஏர்கற்றுத் தூளைப் போலவே இதையுந் திரும்பத் திரும்பக் கொடுக்கலாம். இன்வூசம் தேவையானபொழுதே அதைப் புதிதாய்ச் செய்துகொள்ளவேண்டும்.

ஏர்கற்றிரஞ்சம். Tincture of Ergot. கொள். ஏர்கற்று பருக்கன்தூளாக, ஐந்து அன்சு; புருவுசீது[20] அரைநாழி. ஏர்கற்றை மூடிய பாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதிவிட்டு இரண்டுநாள் இராப்பகலூற விட்டு இடைக்கிடை குலுக்கவும். அப்பாற் சியந்தனி[21]யில் வார்த்து நீர் ஒழுகித்தீர்

1 Liquor Potash. 2 Secalina. 3 Extractive. 4 Alkaloid. 5 Fixed oil. 6 Gangrene. 7 Ergotism. 8 Convulsive. 9 Retention of placenta. 10 Amenorrhoea. 11 Leucorrhoea 12 Chlorosis. 13 Atonic Menorrhoea. 14 Hypertrophy. 15 Gonorrhoea வெட்டை. 16 Gleet. 17 Spermatorrhoea தாதுக்கழிச்சல். 18 Haematuria, 19 Diarrhoea, 20 Proof Spirit. 21 Percolator.

Digitized By Roja Muthiah Research Library

ந்தபின் சேஷமான ஐந்து அன்சு சீதையும் வார்த்து வடியவிடவும். சக்கையைப் பிழிந்து வடித்து நீர்களைக் கலந்து அரைநாழி தேறச் சீது கூட்டவும்.

தேயம். பத்து மினிம்[1] முதல் அறுபது மினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

ஏர்கற்றுநீரோசிறத்து. Liquid Extract of Ergot. கொள். ஏர்கற்று பருக்கன் தூளாக ஒரு இறுத்தல்; ஈதர்[2] அரை நாழி, அல்லது போதியது; திஸ்திலித்த தண்ணீர், ஒன்றேமுக்கால் நாழி; திட்டசீது[3], எட்டு அன்சு. ஈதரைக் கால் நாழி தண்ணீரோடு ஒரு சீசாவில் விட்டுக் குலுக்கிப் பிரிந்தபின் ஈதரைத் தெளித்தெடுக்கவும். ஏர்கற்றுத் தூளைச் சியந்தனியில் ஏற்றி அடைசிக் கழுவின ஈதரை அதின்மேல் மெல்ல மெல்ல வார்த்து அதிலுள்ள எண்ணெய்யைக் கழற்றவும். பின்பு ஏர்கற்றை எடுத்து 160 பாகை சூடுள்ள ஒன்றரை நாழி நீரில் பன்னிரண்டு மணி நேரம் ஊறப் போட்டுப் பிழிந்து சீலையில் வடித்து அந்த நீர் ஒன்பது அன்சாய் வருந்தனையும் அதை நீர்மத்திகத்தின் சூட்டில் வற்றப்பண்ணி ஆறினபின் சீதைச் கூட்டி ஒரு மணி நேரம் ஊறவிட்டு அப்பால் வடிக்கவும். வடிந்த நீர் பதினறு அன்சாய் இருக்கவேண்டும்.

தேயம். பிரசவ நோக்காட்டைக் கிளப்புவதற்குப் பத்து மினிம் முதல் முப்பது மினிம் வரைக்கு இதிற் கொடுக்கலாம்.

[இருய்த் தானியத்தில் உண்டுபடுவது போன்ற ஓர் சக்கு இந்துவின் வட பகுதிகளிற் செய்கையாகும் வாற்கோதுமைகளில் உண்டுபடுவதைத் தலர் பண்டிதர் கண்டார். இப்படிச் சக்குப்பிடித்த தானியம் கொடிய நஞ்சானதாம். ஒற்ஸ் தானியத்திலும் சிலவேளை ஒல்கஸ்பிகாது[4] என்ற சாமையிலும் இப்படிச் சக்குப்பிடித்ததை அவர் கண்டார். நெல்லிலும் இது உண்டாகிறது.]

பிறித்தனிற் பதினைந்துக்குக் குறையாத தானிய வகைகளில் ஏர்கற்று உண்டாவதைக் குக்கென்பவர் கண்டார். இருய் ஏர்கற்றைப் பார்க்கக் கோதுமையில் உண்டாகும் ஏர்கற்றே பிரசவ நோக்காட்டைக் கிளப்புவதற்கு உத்தமமானதாம்.

## கரும்பு. SUGAR CANE.

வாசம். இது பூமியின் உஷ்டண பகுதிகள் எல்லாவற்றிலும் உண்டாக்கப்படும்.

வாகடபதந்தி. 1. சுத்தசர்க்கரை. இது கருப்பந் தடிகளின் சாற்றிலிருந்து எடுக்கப்படும். இது நல்ல வெண்மையும் இனிப்புமானதாய் மணமற்ற வைரக் கிறிஸ்தல்க[5]ளாக இருக்கும். இதின் கெமிஸ்த கூட்டைக் குறிக்குஞ் சின்னமாவது: கா$_{12}$ ஐ$_{22}$ அ$_{11}$. 2. சர்க்கரையைச் சுத்தமாக்கும்போது கிறிஸ்தலாகாமல் எஞ்சியிருக்கும் தடித்த பாணி. இது கபில நிறமானது; மெத்த இனிப்புள்ளது; நொதிக்கக் கூடியது. கிறிஸ்தலாகமாட்டாதது. ஏறக்குறைய 1.40 என்ற விசேஷகிறுவிதம்[6] உடையது. சோதனை. புகைத்த மணம் சுவையற்றது.

---

1 Minim. 2 Ether. 3 Rectified spirit. 4 Holcus spicatus. 5 Crystal. 6 Specific gravity.



Digitized By Roja Muthiah Research Library

தன்மை உபயோகம். இது திமல்சம்[1], போஷணி[2], உணவுக்கேற்றது. உவட்டு மருந்துகளின் சுவையை மறைப்பதற்கும், சிறுபங்கள், லேகியங்கள், வில்லைகள் செய்வதற்கும் இது அதிகமாய் வழங்கப்படும். குளிகை உருட்டுவதற்குக் கருப்பம் பாணி விசேஷமாய் வழங்கப்படும். குளிகை மருந்து பசைகொண்டு மெதுவாய் இருப்பதற்கும் சக்குப் பிடியாமலுஞ் சில வேளைகளிற் கெமிஸ்த மாறுதல் அடையாமலும் இருப்பதற்கும் இது உதவுகின்றது. சர்க்கரை இக்குப்பாணி இவ்விரண்டின் அவுஷத தன்மைகளும் முக்கியமல்ல.

சர்க்கரை ரசிதம். சிறுபம். Syrup. கொள், சுத்த சர்க்கரை ஐந்து இருத்தல்; தண்ணீர் ஒருநாழி. சர்க்கரையைத் தண்ணீரிலே சூட்டாற் கரைத்து ஆறவிட்டு அப்பாணி ஏழரைஇருத்தல் நிறுக்கப் போதிய தண்ணீர் சேர்க்கவும். பாணியின் விசேஷகிருவிதம் 1.330 ஆயிருக்கவேண்டும். இது பிரதானமாய்ச் சுவை ருசிக்காக வழங்கப்படும்.

## வாற்கோதுமை. BARLEY.

வாசம். இது மத்திம பூமி அடங்கலுஞ் செய்யப்படும்.

வாகடபதுதி. தீட்டின அரிசி. இது வெள்ளையாயும் உண்டையாயும் சொற்ப பிளவுள்ளதாயும் இருக்கும்.

தன்மை உபயோகம். திமல்சம். நோயாளருக்குப் போஷணை கொடுக்கும் உணவாகப் பெரும்பாலும் இது வழங்கப்படும்.

ரசிதம். வாற்கோதுமைத் தீகாக்தம். Decoction of Barley. கொள். வாற்கோதுமை அரிசி, இரண்டு அன்சு; தண்ணீர் முக்கால் நாழி. வாற்கோதுமை அரிசியை வேறு தண்ணீரில் அலம்பி யெடுத்து முக்கால்நாழி தண்ணீருடன் சேர்த்து மூடிய பாத்திரத்தில் இருபது மினி நேரமாக அவித்துச் சீலையில் வடிக்கவும். இது நல்ல திமல்ச பானம். இவ் வகுப்பான மருந்துகள் தேவையான போதெல்லாம் விரும்பிய அளவுக்கு இதிற் குடிக்கலாம்.

## கோதுமை. WHEAT.

வாசம். இது பூமியின் மத்திம பகுதிகள் அடங்கலுஞ் செய்கைபண்ணப்படும்.

வாகடபதுதி. 1. இடித்துத் தெள்ளியெடுத்த அரிசிமா. 2. தானியத்தில் இருந்தெடுத்த அமைலம்[3]. இது வெண்மையான கட்டைக் கம்பிகளாக இருக்கும், இதைக் குழி அம்மியிற் போட்டுச் சுத்த தண்ணீர் சொற்பமாய் விட்டு அரைத்துச் சோதனைத்தாளைப் போட்டுப்பார்த்தால் அமிலமா[4]யாவது அல்கலை[5]யாயாவது தோன்றாது. அதிலே வடிந்த நீரில் இயோத[6]நீரை விட்டால் அது நீலமாகாது. வெந்நீரோடு கலந்து ஆறினபின் இயோத நீரை விட அது கருநீலமாகும்.

தன்மை உபயோகம். இது திமல்சமும் போஷணியுமானது. கோதுமைமா, எரிசிப்பிலசு[7]க்கும் மற்றும் வெளித் தாபிதங்க[8]ளுக்கும் சாந்தியான

1 Demulsion. 2 Nutritive. 3 Amylum or starch. 4 Acid. 5 Alkali. 6 Iodine. 7 Erysipelas. 8 Inflammation.

Digitized By Roja Muthiah Research Library

மருந்தாகும். வெந்து தோலுரிந்த இடங்களைப் பரமாணு படாமற் காப்பதற்காக அவைகளிற் தூவப்படும். மேலும் இரசம், செம்பு, துத்தம், வெள்ளி, தகரம், இயோது[1]ரசிதங்க[2]ளின் நஞ்சுண்டவர்களுக்குக் கோதுமை மாவைத் தண்ணீரிற் கரைத்து கெமிஸ்த[3] மாற்றாக உள்ளே கொடுப்பார்கள். லீனக் களி[4]யிலும் மற்றுங் களிகளிலும் இது ஓர் கூறாகின்றது. குளிகை செய்வதிற் கோதுமை அப்பம் வழங்கப்படும். மேலும் அதைத் தண்ணீரில் நனைத்துக் களியாகவும் கட்டுவார்கள்.

ரசிதங்கள். அமைலமூசிலாகு. Mucilage of Amylum. கொள். அமைலம், நூற்றிருபது கிறேன்; தண்ணிர் பத்து அன்சு. அமைலத்துக்குத் தண்ணீரைப் படிப்படியாய்க் கூட்டி யரைத்துப் பிற்பாடு ஓயாமற்கலக்கிச் சிலமினி நேரமாகக் காய்ச்சவும்.

இது நிமல்சமானது; திசந்தெரி[5]க்கும் மற்றுங் குடல்நோய்களுக்கும் மருந்துகளைப் புகட்டுவதற்கு நல்ல யானமாகும்.

அமைலகிலைசரின். Glycerine of Amylum. கொள். அமைலம் ஒரு அன்சு; கிலைசரின், எட்டு அன்சு. நன்றாய்ச் சேருந்தனையும் அவைகளை அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வார்த்துப் படிப்படியாய் 240 பாகை வரைக்குச் சூடேற்றி அமைல அணுக்கள் முற்றாய்க் கரைந்து உருவொளிப்பாணியாய் வருந்தனையும் ஓயாமற் கலக்கவும். சரும நோய்கள், வழுந்தல்கள், மற்றுந் தானிக நோய்களுக்கு இது நல்ல நிமல்ச அணையாகும்.

## *நெல்லு. RICE.

வாசம். இது உஷ்ண தேசம் அடங்கலும் செய்கைபண்ணப்படும்.

வாகடபகுதி. 1. அரிசி. இது ஒரு லீன் முதல் மூன்று லீன் வரைக்கு நீளமுள்ளது; வெண்மையும் சற்று உருவொளியுமானது; திரண்டது; தவாளிப்புகளுடையது; இரு தலைப்பும் ஒடுங்கினது; நொருக்கலானது. 2. மா. இது நெல்லரிசியை இடித்துத் தெள்ளி எடுக்கப்படும்.

தன்மை உபயோகம். கோதுமையைப் போலவே. உஷ்ண தேசங்களில் அதிலும் இது கிட்டடியில் மலிவாய்க் கிடைக்கக் கூடியதாயிருப்பது இதின் ஒரு விசேஷம்.

ரசிதங்கள். நெல்லரிசித் திகாக்தம். கஞ்சி. Decoction of Rice. கொள். நெல்லரிசி ஒரு அன்சு; தண்ணீர் ஒருநாழி மூடிய பாத்திரத்தில் இருபது மினிநேரம் கொதிப்பித்துக் காய்ச்சிச் சீலையில் வடித்தெடுக்கவும்.

காய்ச்சல் தாபித நோய்களிலும், சலக்கடுப்பிலும் இந்த வகுப்பு மருந்துகள் வேண்டிய மற்று நோய்களிலும், இது நல்ல நிமல்சக் குளிர்த்தியான பானமாகும். உப்புப் போட்டுக் குடித்தாற் சுவைகொடுக்கும். எலுமிச்சம் புளியும் சர்க்கரையும் சேர்க்க அதிக ருசியாகும். யுறோபர் எலுமிச்சம் புளியும் சர்க்கரையும் சேர்த்துக் குடிப்பார்கள்,

நெல்லரிசிப் புற்கை. Poultice of Rice. கொள். நெல்லரிசிமா, போதியது. அதைத் திறந்த பாத்திரத்திற் போட்டு நெருப்பின்மேல் வைத்துப் படிப்படியாய்த் தண்ணீர் சேர்த்துத் தகுந்த பதமான களியாய்வருந்தனையும் ஓயாமற் கிளறவும்.

இந்து வைத்திய சாலைகளில் இப் புற்கை அதிகமாய் வழங்குகின்றது.

1 Iodine. 2 Preparations. 3 Chemical. 4 Linseed poultice. 5 Dysentery.

Digitized By Roja Muthiah Research Library

லீனமாப் புற்கை[1] வேண்டிய நோயாளர்களுக்கெல்லாம் வாறிங்கு பண்டிதர் இதை வெகுகாலமாகப் பிரயோகித்து வந்தார். அதற்குப் பதிலாக இதை வழங்கல் நயமென்று சாட்சியுமிடுகிறார்.

## *காமாக்ஷிப் புல். LEMON GRASS. (67)

வாசம். இது இந்து தேசத் தோட்டங்களிற் பெரும்பாலும் உண்டாக்கப்படும். இலங்கையிலும் இதின் அத்திரதே[2]லுக்காக அதிகமாய் உண்டாக்கப்படும்.

வாகடபகுதி. அத்திரதேல். இது பச்சைப் புல்லினின்று திஸ்திலித்து எடுக்கப்படுவது; வெண் சிவப்பு நிறங் கொண்டது; உருவொளியானது; மெத்த உறைப்பான சுவையுடையது. எலுமிச்சை போன்ற வாசனை உள்ளது.

தன்மை. இது ஸ்திமுலம்[3], காமினதி[4], அந்திஸ்பசி[5], சுவேதனி[6]. தானிகமாயிட்டால் ருபிவாஷ[7]ணும்.

உபயோகம். குடல்களில் உண்டாகும் வாயுப் பொருமலுக்கும் ஸ்பச நோய்களுக்கும், இரைப்பை அழற்சிக்கும் இது நயந்த மருந்து. வாந்திபேதியிலும் வார்தியைத் தணிப்பதற்கு மாத்திரமல்ல, ஆனா அருட்டித் தேற்றுவதற்கும் உபயோகமானது. மேலும், காலிகவாதம், நறல்சி[8], சுளுக்கு முதலிய வருத்தங்களுக்குப் பூசுவதற்குஉவந்தது. (68)

தேயம். மூன்று துளி முதல் ஆறு துளி வரைக்குச் சர்க்கரையிலாவது, இமல்சத்தி[9]லாவது, விட்டுக் கொடுக்கலாம். வெளிப் பூச்சுக்கு இரண்டு மடங்கான எதும் மென்னெண்ணெயோடாவது சபுலினிமேனோ[10]டாவது கலந்துகொள்ளவேண்டும்.

## *மாந்தப் புல். CITRONELLE.

வாசம். இது சென்னையிலும் இலங்கையிலும் உண்டாகும்.

வாகடபகுதி. பச்சைப் புல்லிலிருந்து திஸ்திலித்தெடுக்கும் அத்திரதேல்[11]. இங்கிலந்தில் வாசனைப் பொருட்களை விற்பவர்களுக்கு இந்த எண்ணெய் இலங்கையிலும் சென்னையிலும் இருந்து அனுப்பப்படும். இலட்சணம் தன்மை உபயோகங்களில் இது காமாக்ஷிப்புல் எண்ணெயை ஒத்தது.

## *மோக்கிலாமிச்சைப்புல். ANDROPOGON PACHNODES.

இதின் தேல் அத்திரமானதாய்க் காமாக்ஷிப் புல்லினதும் மாந்தப் புல்லினதும் தேலை ஒத்தது. இது வட நடு இந்துவில் வடிக்கப்படும். இது இந்துஸ்தானியில் ரூசகாதெல்[12] எனப்படும். இது ஓர்வகை வாசனைப் புல்.

---

1 Linseed poultice. 2 Volatile oil. 3 Stimulant. 4 Carminative. 5 Antispasmodic. 6 Diaphoretic, திவேதிசி. 7 Rubefacient. 8 Neuralgia. 9 Emulsion. 10 Soap liniment. 11 Volatile oil. 12 Rusa-ka tel.

(67) (68) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

இது வாதம், நறல்சி முதலிய வருத்தங்களில் அணைவு மருந்தாக வழங்கப் படும். (69)

## அவாகடச்சரக்குகள். Non Officinal.

இலாமிச்சை. Andropogon muricatus. இப்புல் இந்து அடங்கலும் உண்டு. வாசனை உள்ள அதின் வேருக்காக மெத்த விரும்பப்படும். இதற்கு வெட்டி வேர் என்றும் பேர். இவ்வேர் யுரோப தேசத்துக்கு ஏற்றப்பட்டு அங்கே வாசனைப் பண்டமாக வழங்கப்படும். அந்திஸ்பச, சுவேதன, அமுரித, எம்மெனகக்குத் தன்மைகள் இதற்குண்டாம். ஆயினுஞ் சொற்ப நீவன சுவேதனியாய் இருப்பதன்றி, மருந்தாகக் கொள்ளப்படத் தகுந்ததல்ல. யுரோப தேசத்தில் இது வழங்கப்படும் வகைகளைக் குறித்துப் பெரைரா் வைத்தியர் சொல்லியிருக்கிறார். சுதேசிகளுக்குள்ளே வழங்கப்படும் வகையைக் குறித்து தலீவுச்செறீவு என்ற நூல் கூறுகின்றது. கைகர் என்பவர் இதைக் கூறுபடுத்தி இதிலே ஓர் ராளமும் கைப்பான எசிறுத்திவும் அத்திரதேலும் அடங்கியிருக்கின்றனவென்று கண்டார். வேர்த்தூளின் தேயம் இருபது கிறேன் வரைக்கு. இதில் இடித்த வேர் இரண்டு திறாமைப் பத்து அன்சு கொதி வெந்நீரில் ஊறப்போட்டு இன்வூசமாக்கி[1] அதிலே ஒரு அன்சு வரைக்குக் கொடுக்கலாம். இதுவரையில் அறிந்த அளவில் இது முக்கியமான ஓர் மருந்தல்ல.

மூங்கில். Bambusa arundinacea. உஷ்டண தேசங்களில் மூங்கில் அனேக பிரயோசனம் உடையதாய் இருப்பதன்றி இந்துப் பதார்த்தசாரத்தில் ஓர் விசேஷமான சரக்குமாகின்றது. இதின் நயங்களைப்பற்றி தலீவுச்செறீவு வாகடம் விபரமாய்க் கூறுகின்றது. எம்மெனகக்குத்[2] தன்மை மூங்கில் இலைக்கு உண்டென்ற எண்ணம் இந்துக்களுக்குள்ளேயும் சீனருக்குள்ளேயும் உண்டு. என்றாலும் இந்த நோக்கத்துக்காவது வேறெந்தநோக்கத்துக்காவது இது மருந்தென்று எடுக்கப்பட நியாயங் காணவில்லை. முறிவுகளைக் கட்டுவதற்குத் தப்பைகள்[3] சம்பாதிக்க வசதியில்லாதவிடங்களில் வேண்டிய நீளமகலமுள்ள தப்பைகளை மூங்கிற்றடியில் இலேசாய்ச் செய்துகொள்ளலாம். இளமையான பச்சைத் தடி வசையும் ஆகையால் முற்றின காய்ந்த தடியே இதற்குத் திறம். மூளிகளிற் பிடித்திருக்கும் கட்டியாகிய மூங்கில் உப்பைப் பற்றி இங்கே குறிப்பாய்ச் சொல்லலாம். இதுண்டாகும் வகை தன்மை முதலியவற்றைப் பற்றிய பூரண விபரம் புரூஸ்தர் பண்டிதராற் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றது. இதின் பெயர் உபயோகம் முதலியவற்றைப் பற்றிய சில குறிப்புகளை வில்சன் பண்டிதர் சமஸ்கிருத நூல்களிலிருந்து எடுத்து அவற்றோடு அணைத்திருக்கிறார். சிமித்சன், வர்க்கிறாய், வொகிலான், யோன்; தேணர் என்பவர்கள் இதை வெவ்வேறாய்க் கூறுபடுத்திக் குறித்திருக்கிறார்கள். தம்சன் பண்டிதர் கடைசியாய்ச் செய்த சோதனையே அதி பூரணமானது. அவர் சோதனைப்படி இதில் 100 பங்கிலே சிலிசி[4] 90.5 பங்கும், பதாசி[5] 1.10 பங்கும், அயபிரவக்சிரம்[6] 0.90 பங்கும், அலுமினியம்[7], 0.40 பங்கும், தண்ணீர் 4.87 பங்கும்,

---

1 Infusion, 2 Emmenagogue 3 Splint. 4 Silica, 5 Potash. 6 Peroxide of iron. 7 Aluminia.

(69) அனுபந்தம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

நஷ்டம் 2.23 பங்கும் சேர்ந்திருக்கின்றன. சுதேச வைத்தியத்தில் ஸ்திமூலமும் அவுரீசியுமாக இது மெத்த மதிக்கப்படுகின்றது. ஆயினும் இதின் கூட்டைப் பார்க்கிறவரையில் இது மருந்தாகுஞ்சத்தற்றதென்றேநம்பவேண்டும்.

## வீலிசிகள்.

## FILICES.

### ஆண்வீலிஸ் பூடு. MALE FERN.

**வாசம்.** இது யுரோபம், ஆசியம், வட ஆபிரிகம், அமரிகம் என்ற தேசங்களின் பல பகுதிச் சோலைகள் நிழல்களில் உண்டாகும்.

**வாகடபகுதி.** காய்ந்த வேர்த்தண்டும், இலைக் காம்பின் அடிகளும் வேர்க்கூந்தல்களும் திரண்ட பங்கு. இது கோடைகாலத்திற் பிடுங்கிச் சேர்க்கப்படும். மணம் கெட்ட மண்மணம். சுவை முதலில் இனித்துப் பிறகு கசந்து உவட்டிக்கும். வேர் மாவும் வேரின் மணம் சுவையை உடையது. அது பச்சையான மஞ்சள் நிறங்கொண்டிருக்கும். அதை நன்றாயடைத்த சீசாக்களிற் போட்டு வைக்கவேண்டும். இதின் சத்து ஓர் தேல ராளத்தி[3]லேயே இருக்கும்.

**தன்மை உபயோகம்.** அந்தெல்மிந்தி[4]; தீனியப்[5]புழுவைக் கொல்லுவதற்கே விசேஷமாய் உவந்தது.

**தேயர்.** புதுக்க இடித்த வேர்த்தூளில் ஒரு திரும் முதல் மூன்று திரும் வரைக்குக் கொடுக்கலாம். பின் வரும் ரசிதமாய்க் கொடுப்பதே அதிக சித்தியாகும்.

**ரசிதம். வீலிஸ்நீரேசிருத்து.** Liquid Extract of Male Fern. கொள். ஆண் வீலிஸ் வேர், பருக்கன் தூளாக, இரண்டு இருத்தல்; ஈதர்[6] இரண்டு நாழி அல்லது போதியது. வீலிஸ் வேரைச் சியந்தனி[7]யில் இறுக்கமாய் அடைசி, ஈதர் நிறமற்றதாய் வடியுந்தனையும் அதை மெல்ல மெல்ல வார்த்து அந்த ஈதரை நீர்மத்திர[8]த்தில் வறட்டவும். அல்லது திஸ்திலித்து மறுபடி சேர்க்கவும். எண்ணெய் போன்ற எசிருத்தைப் பேணவும்.

**தேயம்.** விரேசனம்பண்ணியபின் இதில் பதினைந்து மினிம் முதல் முப்பது மினிம்வரைக்கு லேகிய[9]மாயாவது இமல்ச[10]மாயாவதுகொடுக்கலாம். கைகண்ட ரசிதமாகிய இது வீலிசீத ரெசிருத்து என்றும் வீலிசீதார்த்தேல் என்றுஞ் சொல்லப்பட்டதுண்டு.

## வங்கஸ்கள்.

## FUNGI.

### அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**புழுக்கோல்பிரமாம்பி.** Polyporus Anthelminticus. இது பிரமதேசத்தில் உண்டாகுங் காளான். பிரமர் இதை மூங்கிற் காளான் என்ற அர்

1 Stimulant. 2 Aphrodisiac. 3 Oleo-resin. 4 Anthelmintic, கிருமிகொல்லி. 5 Tenia. 6 Ether. 7 Percolator. 8 Waterbath. 9 Confection. 10 Emulsion.

Digitized By Roja Muthiah Research Library

த்தம்பட வாமூ[1] என்றும் புழுக்காளான் என்ற அர்த்தம்பட தான்மூ[2] என்றுஞ் சொல்லுவார்கள். அவர்களுள் இது கிருமிகொல்லியாகக் கீர்த்திபெற்றது. இது 1840 ம் ஆண்டில் பக்மன் வைத்தியரால் சென்னை வைத்தியவர்த்தமானியில் முதல் வெளியாக்கப்பட்டது. அதிலே ரிச்சுமந்து வைத்தியர் இதை மூன்றுபெயருக்கும் ஷா வைத்தியர் பின் ஒருவனுக்குங் கொடுத்துப் பார்த்த விவரம் இருக்கிறது. கீரைப்பாம்புக்கு[3] இதைக் கொடுத்துஞ் சோதிக்கலாம் என்றே இந்த நாலு உதாரணங்களாலும் விளங்குகின்றது. இதைக் காயவைத்துத் துருவியாவது மாவாக்கியாவது இரண்டு திறாம் தேயமாக, வசதியான ஏதும் யானத்திற் கொடுக்கலாம். இது தேகத்தில் யாதொரு செயலுங் காட்டாது. ஆயினும் மூன்றுநாட் காலமே விரேசனங் கொடுக்கக் கீரைப்பாம்பு செத்ததாக விழும். இதினால் இந்த மருந்தே அதைக் கொன்றதென்று விளங்கும். இது மணம் சுவையற்றதாகையால் பிள்ளைகள் தடையின்றித் தின்பார்கள். முதற் தேயத்துக்குக் கீரைப்பாம்பு கழலாதிருந்தால் திரும்ப மூன்றுநாலு திறாம் தேயத்திற்றானும் இரண்டு மூன்று நாளுக்கொருமுறை கொடுக்கலாம். அதிகமாய்க் கொடுத்தாலும் இதால் மோசம் உண்டாகிறதாகத் தோற்றவில்லை. இதை இன்னுஞ் சோதிப்பது நல்லது. என்றாலும் பொதுவாய் வழங்கிவருவதற்குப் போதிய அளவாய் இதைச் சம்பாதிக்கக் கூடாதுபோலும். பிரமதேசத்தாருக்குட்டானும் இதற்குப் பதிலாகச் சந்துனின்[4] சேர்ந்த ஓர் கட்டு மருந்து பிறதேசத்தால் வந்து அதிகமாய் வழங்கப்படுகின்றதென்று மார், ரீன் என்ற வைத்தியர்கள் அறிவித்திருக்கிறார்கள். இக் காளானைப் பற்றிய தாவர[5] விபரத்தை 1866 ம் ஆண்டுத் தோட்டச் சங்கதி[6]யிற் பார்க்கவும்.

## லைகேனிகள்.

## LICHENES.

### ஐசிலன் பாசி. ICELAND MOSS.

வாசம். இது யுரோப அமரிக தேசங்களின் வட பகுதிகளில் வறட்சியான மலைநாடுகளில் உண்டாகும்.

வாகடபகுதி. முழுப் பாசியும். இது இலையைப் போன்ற தகடுகளுள்ளதாய், சுருண்டு வறண்டது. முருந்து போன்றது. கபில வெண்மை நிறமுள்ளது. கீழ்வளம் வெளுத்தது. கசப்பும் வாணித் தன்மையுங் கொண்டது. இதை அதிகமாய்ப் போட்டவித்த நீர் ஆறும்போது களி[7]யாக இறுகும். இதிலே அதிக வீதமான செதிறாரின்[8] என்றும் செதிறாரிக்கமிலம்[9] என்றுஞ் சொல்லப்படும் ஓர் கைச்சற் சத்து அடங்கியிருக்கும்.

தன்மை. இது திமல்சம்[10], போஷணி, தொணிகம்[11].

உபயோகம். அதி பெலவீனத்தோடு கூடிய ஸ்துரும[12]நோய்கள், ஸ்கேவி[13]நோய்களுக்கும், தியறீயம்[14], திசந்தெரி[15] முதலிய வியாதிகளிற் காணும்

---

1 Wamo. 2 Than-mo, 3 Lumbricus 4 Santonine, 5 Botanical. 6 Gardener's chronicle. 7 Gelatine. 8 Cetrarin, 9 Cetraric acid. 10 Demulcent. 11 Tonic. 12 Struma, 13 Scurvy. 14 Diarrhoea. 15 Dysentery,

Digitized By Roja Muthiah Research Library

பெலவீனத்துக்கும் இந்தப் பாசியைத் திகாக்தம்[1]மாயாவது ஜெல்லி[2]யாயாவது கொடுத்தால் தொணிகமும் போஷணியுமாய் அது சேஷ்டித்து மெத்த நயஞ்செய்யும். க்ஷயரோகத்துக்கும் இது நல்லதாம். சிதிறாரின்[3] அந்திபிறுடி[4] யாகுமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

ரசிதம். ஐசிலன்பாசித் திகாக்தம். Decoction of Iceland Moss. கொள். ஐசிலன் பாசி ஒரு அன்சு. திஸ்திலித்த தண்ணீர் அரைநாழி. பாசியை வேறு தண்ணீரில் அலம்பிச் சுத்தமாக்கித் திஸ்திலித்த தண்ணீரில் இட்டு மூடிய பாத்திரத்திற் பத்து மினி வரைக்கு அவித்துச் சூடாயிருக்கும்போதே பிழிந்து சீலையில் வடிக்கவும். அப்பால் வடித்தநீர் அரைநாழியாய்வரப் போதிய திஸ்திலித்த[5] தண்ணீரைச் சக்கையில்வார்த்து வடித்துக்கொள்ளவும்.

தேயம். ஒரு அன்சு முதல் மூன்று அன்சு வரைக்கு நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம்.

[இதைப் போஷணியாய் மாத்திரங் கொடுக்க வேண்டுமாகில், இதிலுள்ள கைப்புப் பதார்த்தத்தை நீக்க வேண்டும். அதை நீக்க இரண்டு வகை உண்டு. 1 ஒருபங்கு அல்கலைக் காபனசு[6]ம், 375 பங்கு தண்ணீரும் சேர்த்துச் செய்த காரங் குறைந்த அல்கலை நீரில் இந்தப் பாசியின் நிறைப்படி இருபத்துநாலு பங்கெடுத்து அதில் இதை ஊறப்போடுதல். 2. திஸ்திலித்த தண்ணீரில் அதை ஊறப்போட்டு 180 பாகை சூடு வரைக்கு இரண்டொரு முறை காய்ச்சுதல். இவ்வாறு செய்தபின் அதைத் தண்ணீரிலாவது பாலிலாவது அவிக்கவேண்டும். இந்தத் திகாக்தம் போதிய சாரமுள்ளதானால் ஆறும்போது இறுகிக் களி[7]யாகும். அதற்குச் சர்க்கரை, எலுமிச்சந் தோல், வைன், சுகந்தங்கள் ஏதுஞ் சேர்த்துச் சுவையாக்கலாம். அப்போ அது நோயாளருக்கு உவந்த போஷணையாகும்.]

## லிற்மஸ்பாசி. ORCHELLA WEED. LITMUS.

வாசம். இது அத்லாந்திக் சமுத்திரத்திலுள்ள மடேரம் முதலிய தீவுகளிலும் தென்னமரிகத்திலும் கடற்கரைக் கற்பாறைகளிலுண்டாகும். இதைப் போன்ற வூசிவாமி[8]யென்ற ஒரு இனமான பாசி, இந்துவிலும் இலங்கையிலும் ஆகியாய் உள்ளது.

வாகடபகுதி. பாசி முழுவதும். இதின் கஷாயத்திற் சோடம்[9] அல்லது பதாசி[10]யின் செயலால் லிற்மஸ் என்ற நிறப் பொருள் செய்யப்படும்.

தன்மை உபயோகம். இந்த லிற்மஸ், கெமிஸ்த சோதனைக்கு மாத்திரம் உரியதாயிருப்பதாலே வாகடத்துக்குரியதாகின்றது.

ரசிதங்கள். லிற்மசிரஞ்சம். Tincture of Litmus. கொள். லிற்மஸ் மாவாக ஒரு அன்சு; புருவுசீது[11] பத்து அன்சு. மூடிய பாத்திரத்தில் இரண்டொநாள் ஊறப்போட்டு வடிக்கவும்.

நீல லிற்மஸ்தாள். Blue Litmus Paper. லிற்மசிரஞ்சத்திற் தோய்த்து காற்றில் உலர்த்திய பசையிடாத கடதாசியே.

அமிலம் அமில உப்புகள் இருக்கிறதோ அல்லவோ என்பதைத் தெளிவதற்கு இது வழங்கப்படும். அவை இதைக் கூடக்குறையச் சிவப்பாக்கும்.

1 Decoction. 2 Jelly. 3 Cetrarin. 4 Antiperiodic. 5 Distilled. 6 Alkaline carbonate 7 Gelatine. 8 Fusiformis. 9 Soda. 10 Potash. 11 Proof spirit.

Digitized By Roja Muthiah Research Library

சிவத்த லிற்மஸ் தாள். Red Litmus Paper. பசையிடப்படாத கடுதாசியைச் சொற்ப அளவான சல்வுரிக்கமிலஞ்[1] சேர்த்துச் சிவப்பாக்கப்பட்ட லிற்மசிரஞ்சத்திற் றோய்த்துப் பரமாணுவில் உலர்த்துவார்கள்.

இது அல்கலைகளைச் சோதிப்பதற்கு வழங்கப்படும். அவைகள் இக்கடுதாசியை லிற்மசுக்குரிய நீலநிறமாக மாற்றும்.

[படர்தேமலுக்கு நல்ல மருந்தென்று இந்துவின் சில பகுதிகளிற் பேர்பெற்றிருக்கின்ற 'கோவைத்தூள்[3]" என்ற கட்டு மருந்திலே லிற்மஸ் பாசித் தூளும் அதைச் சேர்ந்த இனங்களின் தூளும் சேருகின்றனவென்று கேன்ஸ் வைத்தியர் சொல்லியிருக்கிறார்.]

அவாகடச்சரக்குகள். Non-officinal.

வட்டுக்கற்பாசி. Parmelia perlata. இது சென்னையின் அனேக பகுதிக் கற்பார்களில் உண்டாகும். சில வருஷங்களுக்கு முன்னே இதை அமுரிதியென்று கவனித்துத் தண்ணீரில் அவித்துக் களியாக அரைத்து இடுப்பில் அணைப்பார்கள். நீர்க்கோவை நோய்க்கு இது நயமென்பதைப் பற்றி ஸ்தீவென்சன், ராட்வடு முதலியவர்கள் சாட்சியிடுகிறார்கள். இவர்கள் சாட்சிப்படி கற்பாசிக் களியை இடுப்புக்கு அணைக்கச் சலம் அடிக்கும். வாடிக்கையான பிரயோகங்களுக்கு மாறு நீர்க்கோவை நோய்கள் இதால் மாறியிருக்கின்றன. ராச்சர் பண்டிதரோ சென்னை விசிகமொன்றில் இதைத் தாம் அதிகமாய்க் கொடுத்துப் பார்த்தோமென்றும் ஒருவரிலாகுதல் சலம் அதிகப்பட்டதைக் காணவில்லையென்றுஞ் சொல்லியிருக்கிறார். இதைச் சோதித்தறிவதற்கு நீர்க்கோவை நோயாளரிற் சிலருக்குக் கற்பாசிக் களியையும் வேறு சிலருக்கு லினக்களி அல்லது அரிசிமாக்களியையும் அணைத்துப் பார்க்கவேண்டும். ஒருவேளை இவைகளை நெடுக அணைப்பதால் உண்டாகும் அனலும் ஈரிப்புமே சலம் விடலில் ஏறக்குறைய ஒரே சரியான செயல் காட்டும்.

## அல்கங்கள்.

## ALGAE.

### *இலங்கைக் கடற்பாசி. CEYLON MOSS.

வாசம். இது இலங்கையிலும் மற்றும் இந்துத் தீவுகளிலும் கடற்கரையில் உண்டாகும்.

வாகடபகுதி. காய்ந்த பாசி. இது வெண் மஞ்சள் நிறமும் ஒரு இஞ்சு முதல் பல இஞ்சு வரைக்கு நீளமுமான கிளைக் கூந்தல்களாக வரும். பருங் கூந்தல்களின் அடி ஈர்க்களவு பருமையும் சிறுக் கூந்தல்களின் அடி நூலளவு பருமையுமாய் இருக்கும். முருந்துபோல் உரப்பானது. கடற்பாசியின் மணமும் உவர்ப்பான சுவையும் உடையது. இதின் சத்து பெத்தின்[4] என்ற இதின் பாணியிலேயே இருக்கும். அதின் வீதம் 100 க்கு 37 முதல் 78 வரைக்கு இருக்கும். (70)

---

1 Sulphuric acid. 2 Alkali. 3 Goa Powder. 4. Pectin.

(70) அனுபந்தம்பார்.



Digitized By Roja Muthiah Research Library

**தன்மை உபயோகம்.** இது திமல்சம்[1], போஷணி. நோயாளிகள் பிள்ளைகளுக்கு இது சுறுக்கிற் சீரணிக்கும் லேசான உணவு. திசந்தெரி[2]க்கும் குடலழற்சியை உடைய மற்று நோய்களுக்கும் உவந்தது.

**ரசிதம். இலங்கைக் கடற்பாசித் திகாக்தம்.** Decoction of Ceylon Moss. **சொள்.** இலங்கைக் கடற்பாசி மாவாக்கிக் கால் அன்சு; தண்ணீர் ஒரு நாழி. இருபது மினி நேரமாக அவித்துச் சீலையில் வடிக்கவும்.

**தேயம்.** விரும்பிய அளவுக்குக் குடிக்கலாம்.

[இப் பாசியைத் தண்ணீருக்குப் பதிலாகப் பாலில் அவித்தால் அதிக சுவையும் போஷணியுமாகும். மேலும் அதற்குக் கறுவா முதலிய ஏதும் சுகந்தம் சேர்த்தால் இன்னும் இதமாகும். பாசியின் வீதத்தை அரை அன்சாய்ப் போட்டு அவித்து வடித்தால், வடித்த நீர் ஆறும்போது இறுக்கமான களியாகும். அதற்குச் சொற்ப வைன், சர்க்கரை, சுகந்தங்கள்சேர்க்க, தேறு நோயாளருக்கும் நோய்த்த பிள்ளைகளுக்கும் உத்தமமான மெல்லிய உணவாகும்.]

## அவாகடச்சரக்குகள். Non-Officinal.

**இனியப்படலப்பாசி.** Gillur ka putta. இது இந்துஸ்தானிப் பெயரால் வடக்கிந்துவில் வழங்கும். காய்ந்த இலை போன்றது. புறங்குசி[3]லுக்குப் பேர்பெற்ற மருந்தென்று கொள்ளப்படுகிறது. இது ஓர் கடற்பாசியே. அதை இரவிற் தண்ணீரில் ஊறப்போட்டுக் கஷாயமாக்கிக் காலமே வெறு வயிற்றிற் குடிப்பார்கள். கோப்பென்பவர் அதைப்பற்றி விபரமெழுதியிருக்கிறார். மாதிரிக்காக அதிற் கொஞ்சத்தைத் தம்சன் பண்டிதரிடத்தில் அவர் அனுப்பினார். பிறித்தன் தொடங்கிச் சப்பங்கி வரைக்கும் மத்திம தேசக் கடல்களிலுள்ள பாசியென்று அவர் இதை எண்ணுகிறார். அழூர்ஆற்றுப் பகுதிகளில் நின்று பஞ்சாப்புக்கு இது வருகிறதென்கிறார். இதின் குணம் இதில் அடங்கிய இயோத[4]த்தைப்பற்றியதாம்.

1 Demulcent. 2 Dysentery. 3 Bronchocele, 4 Iodum.

Digitized By Roja Muthiah Research Library

# நொதிப்புத்திஸ்திலிப்புகளாற்பிறக்கும்

## பதார்த்தங்கள்.

## PRODUCTS OF FERMENTATION AND DISTILLATION.

### பீர் யீஸ்து. BEER YEAST.

*இது பீர் என்ற நீரை நொதிப்பிக்கும்போது பிறக்கும் பொருள். இது பிசுபிசுப்பான பாணிபோல் இருக்கும். நுரைக்கும். சூக்குமாட்சி[1]யாற் பார்க்கும்போது கம்பேவடுச் செல்கள்[2] அதிலே தோற்றும். இவை தொருலசெரிவிசி[3] எனப்படும். ஆயினும் உள்ளபடி இவை பெனிசிலி[4] முதலிய சில சக்குகள் அச்சமயம் கொண்டிருக்கும் நிலைமையே.*

தன்மை உபயோகம். *இது ஸ்திமுலம்[5]; அசத்துவ[6]வகையான காய்ச்சல், திசந்தெரி[7]களுக்கு உபயோகமானது. பிரதானமாய் வெளி ஸ்திமுலமாகக் களியாய் வழங்கப்படும்.*

தேயம். *அரை அன்சு முதல் ஒரு அன்சு வரைக்கு.*

ரசிதம். **யிஸ்துப் பாப்பை,** Yeast Poultice. *கொள். பீர் யீஸ்து, ஆறு அன்சு; கோதுமை மா பதினாலு அன்சு; 100 பாகை சூடான வெந்நீர் ஆறு அன்சு. யீஸ்தை வெந்நீரோடு கலந்து மாவைப் போட்டுக் கிளறிப் பொங்குந்தனையும் நெருப்புக்குக் கிட்ட வைக்கவும்.*

*நாற்றமான அழுகற் புண்களுக்கும், கன்சர்ப் புண்களுக்கும் இது நல்ல பாப்பை.*

*[யீஸ்துக் கிடையாத இந்துதேசத்திற் கள்ளுமண்டிப் பாப்பையை இதற்குப் பதிலாக வழங்கலாம். இதைப் பற்றிப் பனைமரத்தைக் குறித்த விபரத்தில் 260 ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறது.]*

### சேரிவைன். SHERRY WINE.

*இது திராட்சப் பழச் சாற்றிலிருந்து நொதிப்பால் எடுக்கப்படுகின்ற ஸ்பானிய வைன். வெண் மஞ்சட் கபில நிறமானது. இதிலே அலக்கால் 100 க்கு பதினேழு பதினெட்டுப் பங்கு வீதமாய் இருக்கும்.*

தன்மை உபயோகங்கள். *இது செறியும் ஸ்திமுலம். பல வகையான பெலவீனங்களுக்கு உவந்தது. வாகடத்துக்குரிய வைன்கள் எல்லாஞ் செய்வதில் இதுவே வழங்கப்படும்.*

### பிரண்டி. BRANDY.

*இது பிரான்சிய வைனைத் திஸ்திலித்தெடுக்கப்படுஞ் சீது. இது வெண்*

---

1 Microscope. 2 Confervoid cells. 3 Torula Cerevisiae. 4 Pennicillia. 5 Stimulant 6 Adynamic. 7 Dysentery.

Digitized By Roja Muthiah Research Library

மை அல்லது சற்றுக் கபில மஞ்சள் நிறமும் ஓர்வகையான சுகந்த வைன் மணமுமுடையது.

தன்மை உபயோகங்கள். இது செறியும் ஸ்திமுலம். பின் வருங் கலவையாகக் கொடுப்பதே உத்தமம்.

நசிதம். பிறண்டிக்கலவை. Brandy Mixture. கொள். பிரண்டி, கறுவாநீர், வகைக்கு நாலு அன்சு ; கோழிமுட்டை இரண்டின் மஞ்சட்கரு; சுத்த சர்க்கரை, அரை அன்சு. மஞ்சட் கருவையுஞ் சுத்த சர்க்கரையையும் சேர்த்தரைத்துக் கறுவாநீரையும் பிரண்டியையுஞ் சேர்க்கவும்.

தேயம். இரண்டொரு அன்சு. காரியங்கண்டு நெருக்கமாய்க் கொடுக்கலாம். காய்ச்சலின் பிற்கால்கள் அசத்துவ[1]வகைகளுக்கும் கருப்பை இரத்தப்பெருக்கு மற்றும் இரத்தப் பெருக்குகளாலுண்டாகும் ஆயாசத்துக்கும் சீவகரணக் குறைவுகளுக்கும் இது நல்ல ஸ்திமுல[2]மும் உயிர்ப்பிக்கு மருந்துமாகும்.

## அலக்கால். ALCOHOL.

இது தமி அலக்கால். Absolute Alcohol. இது திட்டசீதைச் சுண்ணும்போடு சேர்த்துத் திஸ்திலித்தெடுக்கும் ஓர் அத்திர நீர். இதைச் குறிக்குங் கெமிஸ்த சின்னம் $C_2H_6O$. இதின் லட்சணங்கள் சோதனைகளாவன: இது நிறமற்றது ; புகைமணமற்றது ; விசேஷகிருவிதம்[3] 0.795 சூட்டுக்கு முற்றாய்க் குடிபோகும். தண்ணீர் கலக்க மங்கலாகாது. அநீர[4]துரிசி[5]யிற் படும்போது அதை நீலநிறமாக்காது. இது கெமிஸ்தஅனுவிசு[6]க்கு வழங்கப்படும்.

## திட்டசீது. RECTIFIED SPIRIT.

இது $C_2H_6O$ என்ற சின்னத்தையுடைய அலக்காலும் அதோடு 100க்குப் பதினாறு பங்கு வீதமாய்த் தண்ணீருஞ் சேர்ந்த நீர். இனிப்பான நொதிக்கு நீர்களிலிருந்து திஸ்திலித்து எடுக்கப்படும். லட்சணங்களாவன: நிறமற்றது, தெளிந்தது, அதி சலனமுள்ளது, எரியக்கூடியது, சுறுக்கு நெருப்புப் பற்றிப் புகையாமல் நீலச் சுவாலைகொண்டு எரியும். சோதனைகள். 0.838 என்ற விசேஷ கிருவிதம் உடையது. திஸ்திலித்த தண்ணீரைச்சேர்க்கத் தெளிந்தபடியே இருக்கும். சுத்த அலக்காலுக்குரிய மணஞ் சுவை உடையது. இதில் நாலு அன்சை வெள்ளிநீதுரசு[7]ப் பருமவிலயன[8]த்தில் முப்பது கிறேன் அளவோடு கலந்து ஒருநாளாகப் பிரபையான வெளிச்சத்தில் வைத்து அதில் அடையுங் கருமையான தூளை வேறாக்கியபின் மறுபடியும் அந்தச் சோதனைநீரிலே கலந்து வெளிச்சத்தில் வைத்தால் திரும்ப யாதொரு மாறுதலுமடையாது.

இது பார்மசியில்[9],ரஞ்சகங்கள் செய்வதற்கு வழங்கப்படும்.

## புரூவுசீது. PROOF SPIRIT.

கொள். திட்டசீது, இரண்டரை நாழி ; திஸ்திலித்ததண்ணீர் ஒன்றரை

---

1 Adynamic. 2 Stimulant. 3 Specific Gravity. 4 Anhydrous. 5 Sulphate of copper. 6 Chemical Analysis. 7 Nitrate of Silver. 8 Volumetric solution. 9 Pharmacy.

Digitized By Roja Muthiah Research Library

நாழி. கல. சோதனை. விசேஷகிருவிதம்[1] 0.920. மற்றுஞ் சோதனை கள் திட்டசீது[2]க்குப் போலவே.

தன்மை உபயோகங்கள். வீருன செறியுமிஸ்திமூலம், அதிதேயத்தில் நஞ்சு. ஆறு மடங்கு எட்டு மடங்கு தண்ணீர் கலந்த புருவுசீது[3] நல்ல குளிர்ச்சியான லோஷ[4]னுகும். இது காய்ச்சல் தாபிதம் முதலிய நோய்களுக்கு அதிகமாய் இடப்படும். புருவுசீது தனியே உள் மருந்தாகக் கொடுக்கப்படுவதில்லை.

அகனீதம்[5], ஆணிகம்[6], இங்கு, பெஞ்சோயின்[7], கஞ்சா, மிளகாய், கஸ்தூ[8], வால்மிளகு, அயபிரகுலோறிரம்[9], அயவசிதசு[10], இயோதம்[11], கீனு[12], லவந்தர், சசம், காஞ்சிரம், அவினமோனம்[13], பைரீதிரம்[14], தொலூ[15], பச்சைக்கடுரோணி, சுக்கு இவற்றினிரஞ்சம் மாத்திரம் திட்டசீதிற் செய்யப்படும். இவற்றைத் தவிர்ந்த மற்றும் வாகட ரஞ்சங்களெல்லாம் புருவுசீதிற் செய்யப்படும். திட்டசீதும் புருவுசீதும் மற்றுஞ் சிகிச்சை முகாந்தரங்களுக்கும் வழங்கப்படும்.

[திட்டசீதுக்குரிய 0.838 என்ற விசேஷகிருவிதமுடைய சீதும், புருவுசீதுக்குரிய 0.920 என்ற விசேஷகிருவிதமுடைய சீதும் இந்தவிலே பனங்கள்ளுந் தென்னங்கள்ளுகளிலிருந்து வடிபடும் அரக்கு என்ற சீதிலிருந்தும் சீனர் நெல்மணியிலிருந்து வடிக்கும் சம்சூ[16]என்ற சீதிலிருந்தும் செய்யப்படக்கூடியது. காட்டிலுப்பைப்பூவினின்று திஸ்திலித்தெடுக்கப்படும் சீது மணத்தினிமித்தம் உதவாததாம்.]

## ஈதர். ETHER.

இது அலக்காலிலிருந்து செய்யப்பட்டு 100 க்கு 92 பங்கு குறையாத வீதமாய்ச் சுத்த ஈதரை அடக்கியிருக்கிற அத்திர[17] நீர். சுத்த ஈதரின் கெமிஸ்தசின்னம் $கா_4$ $ஐ_{10}$ அ. லட்சணங்கள். இது நிறமற்றதும் சுறுக்குக் குடிபோகக்கூடியதும் லேசில் நெருப்புப் பற்றிச் சுவாலிக்கக்கூடியதுமான நீர். தனக்குரிய வீருன மணத்தை வீசும். 105 பாகைக்குக் குறைந்த சூட்டிற் கொதிக்கும். சோதனைகள். விசேஷகிருவிதம் 0.735. ஐம்பது பங்கு ஈதரைச் சமபங்கு தண்ணீரோடு கலக்கினல் அத் தண்ணீர் 100 க்கு 10 பங்கு வீதமாய் ஈதரை உறிஞ்சுவதால் அது 45 பங்காகும். சேஷமின்றி ஆவியாய்ப்போகும்.

தன்மை. இது வீருன செறியுமிஸ்திமூல[18]மும் அந்திஸ்பசி[19]யுமாகும். இதின் ஆவியை உறிஞ்ச அறிவு மயங்கும். இதை மேனியில் அணைத்துப் பறவாமல் அடைக்கத் தோல் சிவக்கும். தண்ணீர் கலந்தணைக்க அது ஆவியாகி குளிர்ச்சியான லோஷனுகும்.

உபயோகம். ஈளைக்கும், குடலின் ஸ்பசச[20]நோய்களுக்கும், வாயுப் பொருமல் வலிக்கும், வாந்திபேதியின் தியக்கத்துக்கும், காய்ச்சல்களின் பிற்காலங்களுக்கும், பெரும்பாலும் சீவதத்துவக் குறைவுகளுக்கும் இது உபயோகமானது. மயக்கு மருந்தாக இதின் பிரயோகம் குலோறுவா[21]மைப் போலவே. உள்ளுக்கு இதை ஈதர்ச் சீதாகக் கொடுப்பதே உத்தமம்.

---

1 Specific Gravity. 2 Rectified spirit. 3 Proof spirit. 4 Lotion. 5 Aconite. 6 Arnica. 7 Benzoin. 8 Castor. 9 Perchloride of Iron. 10 Acetate of Iron. 11 Iodum. 12 Kino. 13 Ammoniated opium. 14 Pyrithra. 15 Tolu. 16 Shumshoo. 17 Volatile. 18 Diffusible Stimulant. 19 Antispasmodic. 20 Spasmodic. 21 Chloroform.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். இருபது மினிம் முதல் அறுபது மினிம் வரைக்கு அதிகமான தண்ணீரோடு கலந்து கொடுக்கவும்.

கலோடியம்[1], சவட்[2]கலோடியம், கொப்புளநீர்[3], ஈதர்ச்சீது என்ற மருந்துக ளைச் செய்வதற்கு ஈதர் வழங்கப்படும்.

ரசிதம். ஈதர்ச்சீது. Spirit of Ether. கொள். ஈதர் பத்து அன்சு; திட்டசீது[4] அரைநாழி. கல. இதின் விசேஷகிருவிதம்[5] 0.809.

தன்மை உபயோகங்கள். ஈதரைப் போலவே, ஆயினுஞ் செயலிற் குறைந்தது.

தேயம். முப்பது மினிம்[6] முதல் ஒன்றரைத் திரும் வரைக்குக் கொடுக் கவும். தேவை கண்டு அடிக்கடியுங் கொடுக்கலாம்.

லொபீலியீதரிரஞ்சு[7]த்தில் இது ஓர் கூறுகச் சேருகின்றது.

[சுத்த ஈதர் அதாவது அலக்கால்[8] தண்ணீர் கலவாததும் கா$_4$ ஐ$_1$ அ என்ற சின்னத்தையுடையதும் 0.720 க்கு மேற்படாத விசேஷகிருவித முள்ள துமான ஈதர் பிறித்தனி வாமகுபீய[9]த்தில் வாகடத்துக்குரியதாகின்றது. சில சிகிச்சை முகாந்தரங்களில் மாத்திரம் அது வழங்கப்படும்.]

## நீதுரோசீதர்ச்சீது. SPIRIT OF NITROUS ETHER.

இது நீதுரோசீதரின் அலக்காற் கலவை. இதைக் குறிக்குஞ் சின்னம் கா$_2$ ஐ$_5$ நீஅ$_2$. லட்சணங்கள். தெளிவானது, ஏறக்குறைய நிறமற்றது; சொற்ப மஞ்சள்நிறம் தாவியது; சுவாலித்தெரியக்கூடியது. ஓர்வகையானசுகந்தமும், இனிமையான குளிர்ந்த காரச்சுவையுமுடையது. சோதனைகள். விசேஷ கிருவிதம் 0.845. சோடதுவிகாபன[10]சிற் சொற்பத்தோடு கலக்க நுரையாது; அல்லது சொற்பமாய் நுரைக்கும். அயசல்வசு[11]நீரும், சல்வுரிக்கமில[12]த்திற் சில துளியுஞ் சேர்த்துக் குலுக்கினுல் அது கருஞ் சிவப்பு அல்லது கறுப்பா கும். இதைக் கல்சிகுலோறிர[13]பூர்த்த விலயன[14]த்தில் இருமடங்கோடு அடை த்தவோர் குழலில் விட்டுக் குலுக்கினுல் 100 ல் இரண்டு பங்கும் நீதுரோசி தரென்ற வாயுவாகப் பிரிந்து, கலவையின்மேல் நிற்கும்.

தன்மை. இது ஸ்திமூலம், சுவேதனி, அமூரிதி, அந்திஸ்பசி.

உபயோகம். சொற்பமான காய்ச்சல் நோய்கள், கதார்[15]நோய்கள், சல தோஷம், இன்வுலென்சி[16]களுக்கும், திரூறி[17]க்கும், அற்பமான நீர்க்கோவைக ளுக்கும், இது உவந்தது. இது பெரும்பாலும் மற்றும் தகுந்த மருந்துகளோ டு கலந்து கொடுக்கப்படும். உவட்டிப்பு, வாயுப்பொருமல்களை இது மாற் றக்கூடியது.

தேயம். முப்பது மினிம் முதல் இரண்டு திரும் வரைக்கு.

## குலோறுவாம். CHLOROFORM.

இது வாமைல்திரிகுலோறிரம்[18]. இதின் சின்னம் கா ஐ கு$_3$. லட்சணங்க ள். இது நிறமற்ற தெளிந்த நீர். ஈதர் போன்ற நல்ல மணமும் இனிய சுவையுமுடையது. அலக்கால் ஈதர்களில் எப்பிரமாணத்திலுங் கரையும்; தண்ணீரிற் சொற்பமாய்க் கரைந்து அதை இனிப்பாக்கும். பச்சையான

---

1 Collodion. 2 Flexible. 3 Blistering liquid. 4 Rectified spirit. 5 Specific Gravity. 6 Minim. 7 Etherial Tincture of Lobelia. 8 Alcohol. 9 British pharmacopoeia. 10 Bicarbonate of Soda. 11 Sulphate of Iron. 12 Sulphuric acid. 13 Chloride of Calcium. 14 Saturated solution. 15 Catarrh. 16 Influenza. 17 Dysuria. 18 Ter—chloride of Formyle.

Digitized By Roja Muthiah Research Library

புகைச் சுவாலைகொண்டு தாமதமாய் எரியும். சோதனைகள். விசேஷகிருவிதம் 1.49. சல்வுரிக்கமில[1]த்தோடு கலக்குவதால் நிறவாது; ஆவியாய்ப் போனபின் சேஷமாவது நாற்றமாவது இராது.

தன்மை. இதை ஆவியாக உறிஞ்சினால் அறிவை மயக்கும். குடித்தால் நாகதிகம்[2], செரதீவம்[3], அந்திஸ்பசி[4]யுமாகும். தண்ணீர் கலவாமல் மேனித்தோலில் அணைத்தால் ருபிவாஷ[5]னும் எதிரழற்சி[6]யுமாகும். தண்ணீர் கலந்து அணைத்தால் தோலை அழற்றாமல் வருத்தத்தைத் தணிக்கும்.

உபயோகம். மயக்கு மருந்தாக இதின் பிரயோகம் அனேகமும் முக்கியமுமாம். விசேஷமாய்ச் சத்திரப்பிரயோகங்களில் வருத்தந் தெரியாமற் பண்ணவும் பிரசவ வருத்தத்தைத் தணிக்கவும் விலகின பொருத்தை லேசிற் சரிப்படுத்தவும் முறிந்த எலும்பை இசைக்கவும் இறங்கினவளியை உள்ளே தள்ளிவிடவும் சலபாதை வலித்துச் சுருங்கியிருக்கையில் சலக் கம்பியைச் செலுத்தவும் தக்கதாய்ப் பேசிகளைச் சோரப்பண்ணுவதற்கு இது பிரயோகிக்கப்படும். மற்று நோய்களுள், பிரசவ வலிகள், எபிலெப்சி[7] வலிகள், கொரீயம்[8], ஏர்ப்பு[9], ஸ்பசவீளை[10],கூவுஞ்சுவாசம்[11],இலீயசு[12],மற்றும் ஸ்பச நோய்களிலும், பிருக்கக் கற்கள்[13], பித்தக் கற்கள் இறங்கும்போதும் குலோறுவாம் ஆவியால் அறிவை மயக்குதல் உபயோகமாய்க் காணப்பட்டது. மேலும் ஏற்ற கருவி வழியாய்க் குலோறுவாம் ஆவியைத் தானிகமாயிடல், கருப்பை[14], கடைக்குடல்களிலுண்டாகுங் கன்சர்[15] முதலிய வருத்தமான நோய்களின் உபாதியைத் தணிப்பதற்கு மெத்த உபயோகமாய்க்காணப்பட்டது. உவட்டிப்பு, குக்கியழற்சி, வாந்திபேதி, வங்கவலி[16], இருமல்களுக்கும் கசத்திலுண்டாகும் முட்டுத்தொய்வுக்கும் இதை உள்ளே கொடுப்பது நயம். மேலும் பலவகையான வாத நோய்கள், நுறல்சி[17]நோய்களுக்கும்,சுளுக்குகள்,நசிவுகளுக்கும், இதை லினிமெ[18]ணாகஇடல்நயமாகும்.

தேயம். உள்ளுக்கு மூன்று மினிம் முதற் பத்து மினிம் வரைக்கு, முசிலாகு[19], சிறாபம்[20], முட்டையின் மஞ்சட்கரு ஏதமொன்றுடன் சேர்த்துக் கொடுக்கலாம். ஆளை மயக்குவதற்குச் சிறு தேயத்திற்றொடங்கிப் பரமாணுவோடு தாராளமாய்க் கலந்து கொடுக்கவும். மயக்க வேண்டிய அளவுக்குத் தக்கதாய்க் கூட்டியும் நெருக்கியுங் கொடுப்பதே முறை. தொடக்கத்திற் கொடுப்பதற்கு ஒரு திருமே ஏகசகடான தேயமாகும். மயக்கக் கொடுப்பதில் மெத்தக் கவனமாயும் விழிப்பாயும் இருக்கவேண்டும். மயக்கந் தேறுவதற்கு ஆளை நிலத்தில் வளர்த்தித் தலையைத் தூங்கவிடவேண்டும்.

ராசிதம். குலோறுவாம் சீது. Spirit of Chloroform. கொள். குலோறுவாம், ஒருஅன்சு; திட்டசீது[21], பத்தொன்பது அன்சு. கரைக்கவும். சோதனை. விசேஷகிருவிதம்[22] 0.871.

தேயம். இருபது மினிம் முதல் அறுபது மினிம் வரைக்குத் தேவைகண்டால் நெருக்கமாயுங் கொடுக்கலாம். குலோறிக்கீதர்[23] என்று தவறாய்ச் சொல்லப்பட்ட இம்மருந்து உள்ளபடி கீர்த்திபெற்றிருக்கிறது. இது ஸ்திமுலம்[24], அனுடைன்[25], அந்திஸ்பசியாக மெத்த வழங்கப்படுகின்றது.

---

1 Sulphuric acid. 2 Narcotic. 3 Sedative. 4 Antispasmodic. 5 Rubefacient 6 Counter-irritant. 7 Epilepsy. 8 Chorea. 9 Tetanus. 10 Spasmodic Asthma. 11 Laryngismus stridulus. 12 Ileus அடைப்புவலி. 13 Renal calculus. 14 Womb. 15 Cancer. 16 Lead colic. 17 Neuralgia. 18 Liniment. 19 Mucilage. 20 Syrup பாணி. 21 Rectified spirit. 22 Specific Gravity. 23 Chloric Ether. 24 Stimulant. 25 Anodyne.

Digitized By Roja Muthiah Research Library

**குலோறுவாம் கூட்டிரஞ்சம்.** Compound Tincture of Chloroform. கொள். குலோறுவாம், இரண்டு அன்சு; திட்டசீது, எட்டு அன்சு; ஏலச்[1] கூட்டிரஞ்சப், பத்து அன்சு. கல.

**தேயம்.** இருபது முதல் அறுபது மினிம் வரைக்கு.

**குலோறுவாம் லினிமேன்.** Liniment of Chloroform. கொள். குலோறுவாமும் பூரலினிமென்[2]னும் வகைக்கு இரண்டுஅன்சு. கல.

இது நறல்சி[3]நோ, வாத நோக்களுக்கும் சழலைகள் மற்றுந் தானிக நோக்களுக்கும் நல்ல பூச்சு.

## குலோறல். CHLORAL.

இது சுத்தமான அநீர அலக்காலோடு குலோறவாயு கூடி நெடுநேரஞ் சேஷடிப்பதாலுண்டாகும் பதார்த்தம். குலோறமும் அலக்காலுங் கூடி யுண்டாவதால் இதற்குக் குலோறல் என்ற பெயர் வந்தது. இப்படி உண்டாகும் அசுத்தமான, எண்ணெய் போன்ற நீரை முதல் சல்வுரிக்கமிலமும் பிற்பாடு சொற்ப சுண்ணும்புஞ் சேர்த்துத் திஸ்திலித்துச் சுத்தமாக்கும்போது, எண்ணெய் போன்றதும், நிறமற்றதுமானவோர் நீர் பிறக்கும். இது அநீரகுலோறல்[4] எனப்படும். இது தண்ணீரோடு சேர்ந்து ஊசிபோன்ற கிரிஸ்தல்களாகிய கட்டிப் பதார்த்தமாகும். இது குலோறலைரசு[5] எனப்படும். இதற்குச் சின்னம் கா$_2$ ஐகு$_3$ அ.ஐ$_2$ அ = 165.5. இது தன்னிலும் குறைந்த நிறையுள்ள திஸ்திலித்த தண்ணீர், திட்டசீது அல்லது ஈதரிலும் தன்னிலும் நாலு மடங்கு நிறையுள்ள குலோறுவாமிலுங் கரையக்கூடும். அல்கலைகளாற் கூறுகளாகப் பிரிய, அதிலிருந்து சுத்தமான குலோறுவாம் பிறக்கும். உடம்பிலே இரத்தோட்டத்தில் இது செல்லும்போது இப்படிக் கூறுபட்டுக் குலோறுவாம் பிறப்பதைப்பற்றியே இதின் சில செயல்கள் உண்டாகிறதாம்.

**இலட்சணங்கள், சோதனைகள்.** இது நிறமற்ற கிரிஸ்தல்களாக இருக்கும். திறந்தபடி பரமாணுவில் வைத்தாற் கரையாது. உறைத்த மணமும் உறைத்த கைச்சற் சுவையும் உள்ளது. சொற்ப சூடு காட்டினுல் உருகி நிறமற்ற உருவொளியான நீராகும். இந்த நீர் குளிரும்போது மறுபடி 120 பாகை காங்கையளவில் உரமாகும். இதைக் கண்ணுடித் துண்டுகளோடு சோதனைக் குழலில்இட்டுக் காய்ச்சினுல், 205 பாகை காங்கையளவிற் கொதிக்கும். பிலாடினத்தகட்டில்[6] இட்டு இன்னுஞ் சொற்பமாய்க் கதித்த சூடு காட்டினுல் சேஷமின்றி ஆவியாகும். இதின் தண்ணீர்க் கரைவு சோதனைத்தாளுக்குச் தடஸ்தமாய்[7] அல்லது சொற்ப அமிலமாய்த் தோன்றும். குலோறலைரசைக் குலோறுவாமிற் கரைத்துச் சல்வுரிக்கமில[8]த்தோடு குலுக்கினுல் அது அந்த அமிலத்தை நிறப்பிக்கமாட்டாது. 100 கிறேன் குலோறலைரசை ஒரு அன்சு திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்து, அதோடு நீற்றின சுண்ணும்பிலே 30 கிறேன் கலந்து, தகுந்த அணியத்திலிட்டுக் கவனமாய்த் திஸ்திலித்தால் 70 கிறேனுக்குக் குறையாமற் குலோறுவாம் பிறக்கும்.

**தன்மை, உபயோகம்.** இது அயர்ந்த நித்திரையை வருவிக்கும். பைத்தியம், கொரீயம்[9], நித்திரையின்மை முதலிய சீரில், அவின் கஞ்சா இணங்

---

1 Cardamom. 2 Liniment of camphor. 3 Neuralgia. 4 Anhydrous Chloral. 5 Chloral Hydrate. 6 Platinum foil 7 Neutral 8 Sulphuric acid. 9 Chorea.

Digitized By Roja Muthiah Research Library

காதிருக்கும்போது இது உவந்தது. பெலவீனம், மலவரட்சி, உவட்டிப்பு முதலிய குணக் கேடுகளைத் தோற்றுவியாது. இதின் செயல் மற்றும் இதின் வருப்பைச் சேர்ந்த மருந்துகளைப்பார்க்க நெடுக நிற்கும். மேலும் ஈளை, குக்கல், வெறிப் பைத்தியம், நறல்சி முதலிய நோய்களுக்கு நல்லது. உடம்பின் சூட்டைக் குறைக்கும். சுய ஈர்ப்பில் முப்பது முதல் அறுபது கிறேன் தேயமாகக் கொடுத்து நயங்கண்டது. கன்சர் நோயில் இருபது முப்பது கிறேன் கொடுப்பது நல்லது.

தேயம். ஐந்து முதல் பத்துக் கிறேன்.

மிஞ்சிய தேயமாயாவது, நெருக்கமாயாவது கொடுத்தால், கெண்டையேறல், தலைக்கிறுதி, முகச்சினப்பு, கண்சிவப்பு, கண் மூடுதல், முதலிய அவக்குணங்கள் உண்டாகும். சிலவேளை மரணமும் நேரிடும். பிருக்கரோகத்தில் இதைக் கொடுக்கப்படாது.

மாற்று. முப்பது கிறேன் குலோறலுக்கு இருபதிலொருபங்கு கிறேன் பிக்குருதாக்சின்[1] போதிய மாற்றாகும்.

ரசிதம். குலோறற்சிறூபம். Syrup of Chloral. குலோறலைரசு எண்பது கிறேன்; தண்ணீர் அரை அன்சு; சிறூபம் அரைஅன்சு. கல.

தேயம். அரைத்திறும் முதல் இரண்டு திறும்.

## காடி. VINEGAR. ACETUM.

இது நனைத்து முளைகட்டினதும் கட்டாததுமான வாற்கோதுமையிலிருந்து அசித நொதிப்பாற்[2] செய்யப்படும் புளிப்பான நீர். லட்சணங்கள். கபிலநிறமுந் தனக்கேயுரிய ஓர்வகை மணமுமுள்ளது. சோதனை. விசேஷகிருவிதம்[3] 1.017 முதல் 1.019 வரைக்கிருக்கும். இதில் நிறைப்படி 445.4 கிறேனை அதாவது ஒரு அன்சைத் தடஸ்திப்ப[4]தற்குச் சோடபருமவிலயன[5]த்தில் 402 கிறேன் அளவாகுதல் வேண்டும். அதாவது இதில் நூறு பங்கில் 4.6 பங்கு அநீர[6]வசிதிக்கமில[7]மிருக்கும். பாரிதகுலோறிர[8]நீரிற் பத்துமினிமை ஒரு அன்சு காடியில் விட்டு ஏதும் அடையல்காணுமாகில் அதை வடித்து வேறுக்கினல் மறுபடியும் பாரித குலோறிர நீரில் கொஞ்சம் விட அடையல்காணாது. ஐருசல்வுரிக்கமிலம்[9]இதின் நிறத்தை மாற்றாது.

தன்மை. இது குளிர்ச்சியானது, செரதீவம்[10], அந்திசெப்தி[11].

உபயோகம். காய்ச்சல்கள், தாபித நோய்களுக்குத் தண்ணீர் கலந்த காடி நல்ல குளிர் உணவாகும். மேலும் விசிககோதம்[12] முதலிய அழுகல்கள், ஆரம்ப ஸ்தனவிப்புருதி, நசிவுகள், சுளுக்குகள் மற்றுந் தானிக ரோகங்களுக்கும் இது இடப்படும். அல்கலை நஞ்சுகளுக்கு இது நல்ல மாற்று. மயக்கு நஞ்சுகளைத் தின்றவர்களுக்கு வமனி மருந்து கொடுத்தாவது குக்கிரேசகி[13] வழியாயாவது இரைப்பையை வெறுமையாக்கினபின் காடியைக் கொடுக்கலாமாம். ஆயினும் காடி மாவியத்தோடு கூடி மாவியவசிதசு என்ற கரைவுப்பு உண்டாகுமாதலால் அவின் நஞ்சு தின்றவர்களுக்கு இதைக் கொடுப்பது உதவாது. காடியையுந் தண்ணீரையுங் கலந்து கொதிப்பித்து அவற்றின் ஆவியைஉறிஞ்சுதல் குவின்சி[14]யிலும் மற்றும் வகையான தோண்டைநோக்களிலும் மெத்த ஆற்றியாகும்.

---

1 Picrotoxine. 2 Acetous fermentation. 3 Specific Gravity. 4 Neutralize. 5 Volumetric solution of Soda. 6 Anhydrous 7 Acetic acid. 8 Chloride of Barium. 9 Hydro sulphuric acid. 10 Sedative. 11 Antiseptic. 12 Hospital Gangrene. 13 Stomach Pump. 14 Quinsy.



Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும்வரைக்கு. ஏதும் மென்னீரில் விட்டுக் கொடுக்கலாம். ஒருநாழி தண்ணீருக்கு இரண்டொரு அன்சு வீதமாய்க் காடி கலந்து அதைச் சுவைக்குத் தக்கதாய் இனிப்பாக்கிக் காய்ச்சல்களிற் கொடுக்க நல்ல குளிர்மையான பானமாகும். காடியை இரு மடங்கு தண்ணீரிற் கலந்தால் லோஷ[1]னாக இடலாம்.

[இந்துவிலே பனங்கள்ளுந் தென்னங்கள்ளிலும் கருப்பஞ்சாற்றிலுமிருந்து காடி அதிகமாய்ச் செய்யப்படும். அமரிகத்தில் அப்பில்[2] பழச்சாற்றில் ஏராளமாய்ச் செய்யப்படும்.]

## அசிதிக்கமிலம். ACETIC ACID.

இது விறகிலிருந்து நாசதிஸ்திலி[3]ப்பால் செய்து சுத்தமாக்கப்பட்ட புளிப்பான நீர். இதில் நிறைப்படி 100 பங்கிலே ஐகா₂ ஐ₃ அ₂ என்ற சின்னத்தையுடைய அசிதிக்கமிலம் முப்பத்துமூன்று பங்கு அடங்கியிருக்கும். அது கா₄ ஐ₆ அ₃ என்ற சின்னத்தையுடைய அநீர்[4]அசிதிக்கமிலத்திலே 28 பங்குக்குச் சரியானது. லட்சணங்கள். வீறுன அமிலத்தன்மையும் காரமான மணமுமுள்ள நிறமற்றநீர். சோதனைகள். விசேஷகிருவிதம்[5] 1.044. இதில்நிறைப்படி 182 கிறேனைத்தடஸ்தி[6]ப்பதற்குச் சோடபருமவிலயன[7]த்தில் 1000 கிறேன் அளவு வேண்டும். இதை ஆவியாக்கினுற் சேடமிராது. இதற்கு ஐருசல்வுரிக்கமில[8]மாவது, பாரிதகுலோறிர[9]மாவது, வெள்ளிநீதுர[10]சாவது கூட்ட அடையல்விழாது. இதில் ஒரு திருமோடு திஸ்திலித்த நீரில் அரைஅன்சும் சுத்த ஐருகுலோறிக்கமில[11]த்தில் அரைத்திரும் சேர்த்து ஓர் சிறுக் கண்ணுடிக் குடுக்கையிலிட்டு அத்தோடு பொடித் துத்தத்திற் சிலதுண்டுகளும் போட்டு நுரைக்கவிட்டு சுவறக்கூடிய கடுதாசியில் ஒரு துண்டை ஈயவுதவசிதச[12] நீரிற் றேய்த்து குடுக்கையின் மேற்பகுதியில் நீருக்கு மேலே ஐந்து மினி வரைக்குப் பிடிக்க அக்கடுதாசி நிறக்காது.

**தன்மை உபயோகம்.** காடியைப் போலவே.

**தேயம்.** ஐந்து துளி முதற் பதினைந்து துளி வரைக்குத் தண்ணீரிற் கலந்து கொடுக்கவும்.

**ரசிதங்கள். கிருசவசிதிக்கமிலம். Dilute Acetic acid.** கொள். அசிதிக்கமிலம், அரைநாழி; சுத்த தண்ணீர் மூன்றரை நாழி. கல. சோதனைகள். விசேஷகிருவிதம் 1.006. இதில் ஒரு அன்சைத் தடஸ்திப்பதற்குச் சோடபருமவிலயனத்தில் 313 கிறேன் அளவு வேண்டும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம்.

**அக்சிமேல். Oxymel.** கொள். சுத்த தேன், நாற்பது அன்சு; அசிதிக்கமிலம், ஐந்து அன்சு; தண்ணீர், ஐந்து அன்சு. தேனை உருக்கி அத்தோடு தண்ணீரையும் அசிதிக்கமிலத்தையுங் கலக்கவும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கொடுக்கலாம். சொற்ப கதார்[13]நோய்களுக்கு நல்ல கபம்கக்கி. காய்ச்சல்நோய்கள் தாபித[14] நோய்களில் வாற்கோதுமைக் கஞ்சியோடு கலந்து குடிக்க நல்ல குளிர்ச்சி

---

1 Lotion. 2 Apple. 3 Destructive distillation. 4 Anhydrous. 5 Specific gravity. 6 Neutralize. 7 Volumetric solution of soda. 8 Hydro sulphuric acid. 9 Chloride of Barium. 10 Nitrate silver. 11 Hydrochloric acid. 12 Solution of Subacetate of lead. 13 Catarrh 14 Inflammation.

Digitized By Roja Muthiah Research Library

யான பானமாகும். மேலுங் கார்கில்கள்[1] இருமற் கலவைகளுக்கு இது சிலவேளை ஓர் கூட்டாகின்றது.

கந்தாரிசுக் காடி[2], கொல்சிகவசிதசெசிருத்து[3], தார்ப்பந்தினசிதிக்கமிலலினிமென்[4], கொப்புளநீர்[5], அக்சிமெல்[6] இவைகளில் அசிதிக்கமிலம் ஓர்கூறுகச் சேருகின்றது. மேலும் வாகடத்துக்குரிய அசிதசு[7] என்ற உப்புகளிலும் அவைகளின் விலயனங்க[8]ளிலும் உள்ள அமிலக் கூறும் இதுவே. ஸ்குவிற் காடி[9]செய்வதில் வழங்கப்படுகிற, இருசவசிதிக்கமிலமே.

## கிலாசியலசிதிக்கமிலம். GLACIAL ACETIC ACID.

இது சாரசித்த அசிதிக்கமிலம். $கா_4$ $ஐ_6$ $அ_3$ என்ற சின்னத்தையுடைய அநீர[10]அசிதிக்கமிலத்தில் நூற்றுக்கு 84 பங்குக்குச் சரியானது. லட்சணங்கள், சோதனைகள். 34 பாகை வரைக்குக் குளிர இது கிரிஸ்தலித்து[11], மறுபடி சூடு 48 பாகை வரைக்கு ஏறுந்தனையும் கிரிஸ்தலாகவே இருக்கும். விசேஷகிருவிதம், 1.065 முதல் 1.066 வரைக்கிருக்கும். நூற்றுக்குப் பத்து வீதமாய்த் தண்ணீர் கூட்ட, கிருவிதம் அதிகப்படும். பரமாணுவின் சராசரி காங்கையில், இது காரமான புளிப்பு மணமுடைய நிறமற்ற நீராகவிருக்கும். இதிலே கிறைப்படி 60 கிறேனை ஒரு அன்சு சுத்த தண்ணீரோடு கலந்தால் அதைத் தடஸ்திப்பதற்குச் சோடபருமவிலயனத்தில் 990 கிறேனளவாகுதல் வேண்டும். இதில் ஒரு திருமோடு அரைஅன்சு திஸ்திவித்த தண்ணீரும் அரைத்திறுஞ் சுத்த ஐருகுலோறிக்கமிலமுங் கலந்து ஓர் சிறுக் கண்ணுடிக் குடுக்கையில் விட்டு அவற்றோடு பொடித்துத்தத்திற் சில துண்டுகளும் போட்டு நுரைத்துக்கொண்டிருக்கும்போது, சுவறத்தக்க கடுதாசியில் ஒருதுண்டை ஈயவதவசிதசு[12]நீரிற்றோய்த்துக் குடுக்கையின் மேற்பகுதியில் நீருக்கு மேலே ஐந்து மினி வரைக்குப் பிடித்தால் அக் கடுதாசித் துண்டின் நிறம் மாறாது.

இது மெத்தக் காரமானது; கொப்பளிக்கும்; வெளிமருந்தாக மாத்திரம் வழங்கப்படும். இது காய், சிவ்விசு[13]மூளை, நீவசு[14] என்ற பொட்டு என்பவைகளை அரித்து நீக்குவதற்கும் இலகுவிற் கேளாத தோல்வியாதி சிலவற்றை மாற்றுவதற்கும் தானிகமாய் வழங்கப்பட்டதுண்டு. இதைத் தோலில் இட்டால் சீக்கிரத்திற் கொப்புளங்கொள்ளும். ஆகையாற் கந்தாரிசின்[15]ரசிதங்கள் கிடையாத தறுவாயிலும் பிருக்க[16]நோய்கள் சிலவற்றிற் சம்பவிக்கக் கூடியது போலக் கந்தாரிசு சோஷிக்கப்பட்டு மோசமாய் முடியக்கூடுமென்ற நோய்களிலும் இதையிடலாம்.

கந்தாரிசுக்காடி[17]யிலும், கிறீயசற்றுக்கலவை[18]யிலும் இது ஓர்கூறுகச் சேருகின்றது.

## காபலிக்கமிலம். CARBOLIC ACID.

இது மரத்தாரெண்ணெ[19]ய்யிலிருந்து அமிச[20] திஸ்திலிப்[21]பால் எடுத்துப் பின்பு சுத்தமாக்கப்படுகிற ஓர் அமிலம். இதற்குக் கெமிஸ்த சின்னம்

---

1 Gargle. 2 Acetum cantharides. 3 Acetic extract of Colchicum. 4 Liniment of Turpentine and Acetic acid. 5 Blistering liquid. 6 Oxymel. 7 Acetate. 8 Solution. 9 Vinegar of squill. 10 Anhydrous. 11 Crystallize. 12 Lead subacetate. 13 Syphilis. 14 Naevus. 15 Cantharides. 16 Kidney. 17 Vinegar of Cantharides. 18 Creasote Mixture. 19 Coal tar. 20 Fractional. 21 Distillation.

Digitized By Roja Muthiah Research Library

ஐகா௳ ஐ௩ அ. லட்சணங்கள், சோதனைகள். நிறமற்ற ஊசிபோன்ற கிரிஸ்த
ல்[1]களாக இருக்கும். 95 பாகை சூட்டில் உருகித் தடித்த நீராகும். கிறீயசற்[2]
றைப் போல வீறுன மணம் சுவை உடையது. லட்சணங்கள் தன்மைகள்
பலவற்றில் அதையொத்தது. இதின் விசேஷகுருவிதம்[3] 1.065. கொதிநில
யம் 370 பாகை சூடு. கிரிஸ்தல்களில் காற்று நெடுகப் பட்டால் அவை
சுறுக்கில் ஈரிப்பை உறிஞ்சி நீராகும். ஆயினும் இந்த அமிலம் தண்ணீரில்
சொற்பமாய் மாத்திரங் கரையக்கூடியது. அலக்கால்[4] ஈதர்[5] கிலிசரின்[6] எ
ன்பவற்றிலோ இது தாராளமாய்க் கரையும். நீல லிற்மஸ் தாளை[7] இது சிவ
ப்பாக்கமாட்டாது. இதிற்றோய்த்த பைன்[8] மரச்சிராய்த் துண்டொன்றை
ஐருகுலோறிக்கமில௯த்திற் றோய்த்துக் காற்றில் உலரவிட்டால்அது பச்சை
நீலநிறமடையும். இவ்வமிலம் அல்புமினை[10]உறைவிக்கும். போலறி[11]சித்த
வெளிச்ச கிரணம் இதற்கூடே செல்வதால் அதின் போலறிச நேர் மாறுது.

தன்மை. இது எஸ்கருடி[12], ஸ்திமுலம்[13], ருபிவாஷன்[14]. மேலும் வீறுன
தியோடறிசரும்[15] திசின்வெத்து௰மாகும்.

உபயோகம். இரைப்பையழற்சியில் விசேஷமாய் அது மியாஸ்மம்[17]
சூவர்வாயு[18] என்ற நச்சுக்காற்றைச் சுவாசிப்பதாலுண்டானல் இது கிறீயசற்
றைப்போலச் சாந்திசெய்யும். தானிகமாய், அழுகுவிரணம், கன்சர்[19]ப்புண்,
சிவ்லிசுப்[20]புண்கள் முதலிய மாறுப் புண்களுக்கும் நாட்பட்ட சருமநோய்
களுக்கும் பீனசம் முதலிய நாற்றமான நீர்வடியுநோய்களுக்கும் இது உப
யோகமானது. திவ்தீரி[21]யில் இதைக் கிலிசரினிற் கரைத்து இடுவது நலம்.

தேயம். ஒரு கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்கும் தண்ணீரில் அ
திகமாய்க் கலந்து கொடுக்கவேண்டும்.

ரசிதம். காபலிக்கமிலகிலிசரின். Glycerine of Carbolic acid. கொ
ள். காபலிக்கமிலம் ஒரு அன்சு; கிலிசரின் நாலு அன்சு. அமிலங் கரை
யுந்தனையுங் குழியம்மியில் ஒன்றுயரைக்கவும்.

இது வெளிப் பூச்சுக்கு நல்ல முறை. பிள்ளைகளுக்கும் மெல்லிய தோ
லுள்ளவர்களுக்கும் கிலிசரினின் வீதத்தைக் கூட்டவேண்டும்.

## அவாகடச்சாக்த. Non-Officinal.

பெற்ரோலியம். Petroleum. இது மண்டைலம் எனப்படும். நிலத்
திலிருந்து வலியப் பொசிகின்றது. கருப்பம் பாணி போன்ற நிறமுந் தடி
ப்பும் உள்ளது; புகைமணமுள்ளது. இது ரங்கூனுக்குக் கிட்டவும் அரக்க
ன் கரையில் எரிமலைத் தீவுகளிலுமுள்ள சில வாவிகளில் மிதக்கும். கிரிஸ்
திசன், கிரேக்குரி என்பவர்களுடைய ஆராய்வுகளின்படி இந்திர பதார்த்த
ங்களிலிருந்து அதி சூட்டால் எடுபடும். பரவீன்[22], யூபியன்[23], என்ற பதார்
த்தங்கள் இதில் அடங்கியிருப்பதால் இது நாச திஸ்திலிப்[24]பால் பிறந்த பொ
ருளாயிருக்கவேண்டும். உடம்பில் இது காட்டுஞ் செயல் தெறிபிந்த[25]த்தை
தப் போன்ற ஸ்திமுலத்தின் செயலே. அத்தன்மையில் ஏறக்குறைய அரை
த்திருமை முசிலாகில்[26] விட்டு வாதம், கனுறீய[27] நோய்களுக்குக் கொடுப்

1 Crystal. 2 Creasote. 3 Specific Gravity. 4 Alcohol. 5 Ether. 6 Glycerine. 7 Litmus paper. 8 Pine. 9 Hydrochloric acid. 10 Albumen. 11 Polarized. 12 Escharotic, தகனம். 13 Stimulant. 14 Rubefacient. 15 Deodorizer, சுத்திகரி. 16 Disinfectant, அபசஞ்சாரி. 17 Miasma. 18 Sewer. 19 Cancer. 20 Syphilis. 21 Diphtheria. 22 Paraffine. 23 Eupion. 24 Destructive distillation. 25 Terebinthum. 26 Mucilage. 27 Gonorrhoea.

பார்கள். இது வீறான அமுரிதி[1]யுமாம். பெரிபெரி[2] என்ற சோர்வு நோயுண்டான ஒரு ஆளுக்கு இதை உள்ளுக்கும் வெளிக்கும் பிரயோகித்து மாற்றினதாக ஆரோக்கியம் என்பவர் எழுதியிருக்கிறார். ஆயினும் பெற்றோலியத்தால் அச் சுகமுண்டானதென்பது சந்தேகம். காலிக சரும ரோகங்களுக்கு இது நல்ல பூச்சு மருந்து. ஒரு ஆளிலே பலவகையான உள் மருந்துகள் வெளிமருந்துகளுக்கெல்லாம் எடுபடாமலிருந்த காலிக எக்சீமம்[3] இதால் மாறினதென்று முட்சு வைத்தியர் பிரசுரஞ் செய்திருக்கிறார். அவர் இதைச் சபு[4]வோடு ஒரு அன்சுக்கு ஒரு திறாம் பிரமாணமாகக் கலந்து வழங்கினார். மேலும் காலிகவாதத்துக்குப் பூச இது நல்லதென்றுங் கண்டார்.

1 Diuretic, சிறுநீசம், 2 Peri-beri. 3 Eczema. 4 Soap.

# பிராணிய பதார்த்தசாரம்.

## ANIMAL MATERIA MEDICA.

## அனெலிடங்கள். Annelida.

### அட்டை. LEECH.

வாசம். வாகடத்துக்குரிய இருவகை அட்டையாகிய பச்சை அட்டை புள்ளியட்டை யென்பவைகள் யுரோபத்திலும் வடக்காபிரிகத்தின் சில பகுதிகளிலுமுண்டு. பிரதானமாய் ஸ்பேன், பிருன்சு, இத்தலி, அங்கரி தேசங்களிலே பிடித்துப் பாவிக்கப்படும்.

வாகடவுரிமை. உயிரட்டை. அதின் லட்சணங்களாவன: உடம்பு நெடுகி இரண்டு மூன்று இஞ்சு நீளமானது; இரண்டு தலைப்பிலும் ஒடுங்கியது; தட்டைக் குவி[1]வானது; குறுக்குப்பாட்டுக்குச் சுருக்குகள் விழுந்தது; முதுகு செம்பச்சை நிறமாயும், மங்கற்சிவப்பான ஆறு நெடுவரிகளுள்ளதாயுமிருக்கும். மேற்சொல்லிய இரண்டு இனமான அட்டையில் ஒன்றுக்கு வயிற்றுப்பக்கம் பச்சை, புள்ளிஅற்றது; மற்றதுக்குப் பச்சை மஞ்சள், கரும்புள்ளி விழுந்தது.

தன்மை உபயோகங்கள். வெளித்தாபிதங்கள்[2], கஞ்செஸ்தங்களில்[3] சேர்ய்த்த இடத்தில் இரத்தம்வாங்குவதற்கே இவை வழங்கப்படும். மேலும் பிளூரீது[4], பெறிதனீது[5] முதலிய உட்தாபிதங்களில் தாபிதங்கொண்டபகுதிக்கும் தோலுக்கும் தந்துகி[6]த் தொடர்பிருக்குமிடத்து அட்டைவிடுவார்கள். மேலும் காளம் திறந்து இரத்தம்வாங்குதல் புத்தியல்லவென்று காண்கிற தாபிதங்களிலும் அட்டைவிடலாம். குழந்தைகள், சிறுவர்களுக்குண்டாகுக் தாபித நோய்களில் சிலவேளை அட்டைவிடுவது விசேஷம்.

எத்தனை அட்டை விடவேணுமென்பதை அந்தந்தக் காரியத்துக்கேற்றதாய்த் தீர்மானிக்கவேண்டும். ஒரு அட்டை ஒன்றரைத்திறும் இரண்டுதிறும் இரத்தம்வரைக்கு வாங்கும். அவ்வளவு இரத்தங் கடிவாயாலும்பாயும். இந்துவட்டை தன் நிறையிலும் நாலு ஐந்து மடங்கு இரத்தத்தைவாங்கும். (71) அட்டை கடித்த வாயினின்று இரத்தம் அதிகமாயல்லது நெடுகப் பெருகிக்கொண்டிருந்தால் அமுக்கமும் அத்துடன் மதிகு[7], சீனக்காரம்[8], காடிக்காரம்[9] அல்லது வேறேதும் ஸ்திப்திகு மருந்தும் இடலாம்.

[அட்டை இந்துதேசத்தின் மிகுதியான பகுதிகளிலும் இலங்கையிலும் மாரிகாலத்திற் குளங்கள் ஏரிகளிற் பிடிக்கலாம். தெக்கணத்திலும் இந்துவின் மற்றும் பகுதிகளிலும் கொஞ்சத் தொகையாய் வளர்க்கவும்படுகின்றன. (72) இந்து அட்டை எந்த இனத்துக்குச் சேர்ந்ததென்று இன்னும்

1 Plano-convex. 2 Inflammation 3 Congestion. 4 Pleuritis. 5 Peritonitis. 6 Capillary. 7 Matico. 8 Alum. 9 Nitrate of Silver.

(71) (72) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

நிதானிக்கப்படவில்லை. சென்னையிலிருந்து டே வைத்தியரால் கொண்டு வரப்பட்டு இந்து நூதனசாலையில் வைக்கப்பட்ட பெரிதும் சிறிதுமான இரண்டு இனங்களும் இன்னும் சாத்திரத்திற் குறிக்கப்படவில்லை. அவற்றிற் பெரியது நீலாற்றுத் தேலம்[1] என்றதைப் போன்றது. வம்பாயில் வழங்குபவைகள் சொறியட்டை[2]யை (73) ப் போன்றவைகள் என்று காட்டர் பண்டிதர் சொல்லுகிறார். இதுகாரியத்தைப்பற்றி இன்னும் ஆராய்வது நல்லது ]

# இஞ்செத்துகள். Insects.

## கோலியப்திறங்கள். COLEOPTERA.

### கந்தாரிசு. CANTHARIS.

வாசம். இவ் வண்டு யுரோபத்தின் பல பகுதிகளில் உள்ளது. காய்ந்த வண்டு, ருசியம், சிசிலி, அங்கரி என்ற தேசங்களிலிருந்து இங்கிலந்துக்கு வரும்.

வாகடவுரிமை. காய்ந்த வண்டு. அதின் லட்சணங்களாவன: எட்டுப் பத்து லீன் நீளமானது; சிறகுகளை மூடுகிற மினுக்கமான பச்சை நிறமுள்ள இரண்டு ஓடுகளையுடையது; ஓடுகளுக்குள்ளே உருவொளியுள்ள சவ்வான இரண்டு சிறகுகள் இருக்கும்; வீறான நாற்றங்கொண்டது; நரைக்க பிலநிறமான இதின் தூளுக்குள்ளே மினுக்கமான பச்சைத் துகள்கள் கிடக்கும். மீத்து[3] என்ற கிருமிகளற்றது. இதின் சத்து கந்தாரிடின்[4] என்ற பகுதியில் அடங்கியிருக்கும்.

தன்மை. உள்ளே கொடுத்தால் இது கார்ப்பான ஸ்திமுலஸ்[5] அமுரித்[6]யாகும். சனனசல உறுப்புகளின் சளிச்சவ்விலேயே பிரதானமாய்ச் சேஷ்டிக்கும். அதிலும் விசேஷமாய்ச் சலப்பைக்கழுந்திற் சேஷ்டிக்கும். அதிதேயத்தில் நஞ்சாகும். வெளிமருந்தாக இட்டால் இது நல்ல எதிரழற்சியும் வெசிக[7]னுமாகும்.

உபயோகம். கந்தாரிசு உள்ளே கொடுக்கப்பட்டு நயப்பட்ட நோய்கள் சலப்பையசத்துவத்தைப்பற்றிய சலவொழுக்கு, லூசறீயம்[8], அமெனறீயம்[9], அல்புமினூறி[10], சிலவகையான சோர்வு, எபிலெப்சி[11], அனிமி[12]யைச்சார்ந்த நீர்க்கோவை, குக்கலின் பிற்பாதமும், சிலவகையான சரும ரோகங்களுமே. அவற்றுள், குஷ்டம்[13], சொறீயசி[14] என்பவைகளே அதி விசேஷமானவைகள். வெளியிற் கொப்புளப்பற்றாக இதின் உபயோகம் அனேகமும் முக்கியமுமாகும். தீவிர[15]தாபிதத்தின்[16]பிற்கால்கள் உட்கஞ்செஸ்தங்க[17]ளிலும் சோர்வு, எபிலெப்சி, கொரீயம்[18] முதலிய சிரநோய்கள், கசேருநோய்களிலும். சியதிகம்[19]முதலிய நூறல்சி[20] நோய்களிலும் குவாதம்பற்றிய பொரு

---

1 Bdella Nelotica. 2 Hirudo Granulosa. 3 Mite. 4 Cantharidin. 5 Stimulant. 6 Diuretic, அமுரிதி. 7 Vesicant 8 Leucorrhoea. 9 Amenorrhoea. 10 Albuminuria. 11 Epilepsy. 12 Anaemia. 13 Lepra. 14 Psoriasis 15 Acute. 16 Inflammation. 17 Congestion. 18 Chorea. 19 Sciatica. 20 Neuralgia.

(73) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

த்துவீக்கங்களிலும் ஐருகெவலய்[1], ஐருபெறுகடீயய்[2], ஐருதோறகு[3], ஐராதசு[4], முதலிய நீர்க்கோவை நோய்களிலும், கண் காதுகளிலுண்டாகும் அனேக தீவிர காலிக நோய்களிலும் கொப்புளப்பற்று இடப்படும். இதைப் போடும் வகை அந்தந்த நோயின் சீர்நிருவாகங்களுக்குத் தக்கதாய் நிதானிக்கப் படவேண்டும்.

தேயம். கந்தாரிசை மெல்லிய மாவாக்கி, அதில் ஒரு கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்குக் குளிகையாக்கிக் கொடுக்கலாம். ஆயினும் ரஞ்சமாகக் கொடுப்பதே உத்தமம்.

ரசிதங்கள். கந்தாரிசிரஞ்சம். Tincture of Cantharides. கொள். கந்தாரிசு பருக்கன்பொடியாக கால் அன்சு; புரூவுசீது[5] அரைநாழி. அடைத்தபாத்திரத்தில் ஏழுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கிச் சீலையில் வடித்துப் பிழிந்து திரும்பவும் கடுதாசி முதலியவற்றில் நுட்பமாய் வடித்து அரைநாழி தேறப் போதிய புரூவுசீதைக் கூட்டவும்.

தேயம். ஐந்து முதல் இருபது மினிம் வரைக்கு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம.

கந்தாரிசுக் காடி. Vinegar of Cantharides. கொள். கந்தாரிசு, பொடியாக இரண்டு அன்சு; கிலாசியல் அசிதிக்கமிலம்[6], இரண்டு அன்சு; அசிதிக்கமிலம் பதினெட்டு அன்சு அல்லது போதியது. அசிதிக்கமிலத்திற் பதின்மூன்று அன்சைக் கிலாசியலசிதிக்கமிலத்தோடு கலந்து, அக் கலவை நீரிலே கந்தாரிசுப் பொடியை இரண்டு மணி நேரம் வரைக்கு 200 பாகை சூட்டில் ஊறப்போட்டு, அப்பால் ஆறினபின்பு முழுக் கலவையையும் சியந்தனி[7]யில் வார்த்து, நீர் ஒழுகவிட்டெடுத்தபின் அசிதிக்கமிலத்தில் இன்னும் ஐந்து அன்சைச் சியந்தனியிலுள்ள சேடத்தின்மேல் வார்க்கவும். நீர் வடிந்தபின் சக்கையைப் பிழிந்து வடித்து, நீர்களைக் கலந்து, அரைநாழிக்குப் போதிய அசிதிக்கமிலஞ்[8] சேர்க்கவும்.

இது தோலிற் கொப்புளிக்கப்பண்ணுவதற்கு மாத்திரம் வழங்கப்படும்.

கோப்புள நீர். Blistering liquid. கொள். கந்தாரிசு, பொடியாக, எட்டு அன்சு; அசிதிக்கமிலம் நாலு அன்சு; ஈதர்[9], போதியது. கந்தாரிசையும் அசிதிக்கமிலத்தையுங் கலந்து சியந்தனியில் ஏற்றி அடைசி இரண்டு நாட் சென்றபின் சியந்தனிக்குள்ளே ஈதரை வார்த்து, இருபது அன்சு நீர் சேருந்தனையும் அதை மெல்ல மெல்ல வடிய விடவும். வடிந்தநீரை அடைத்த சீசாவிற் பேணவும்.

இது வீறுன கொப்புளமருந்து. கந்தாரிசுக் காடியைப் பார்க்க இது செயலிற் சீக்கரமானது.

கோப்புளத்தாள். Blistering Paper. கொள். வெண்மெழுகு, நாலு அன்சு; திமிநெய், ஒன்றரை அன்சு; ஒலீவுதேல், இரண்டு அன்சு; குங்குலியம் முக்கால் அன்சு; கனடபல்சம் கால்அன்சு; கந்தாரிசுத் தூள் ஒரு அன்சு; திஸ்திலித்த தண்ணீர் ஆறு அன்சு. கனடபல்சத்தைத்தவிர்ந்த மற்றெல்லாக் கூறுகளையும் நீர்மத்திக[10]த்தில் இரண்டுமணித்தியாலம் ஊறப்போட்டு ஓயாமற் கலக்கி அப்பாற் சீலையில் வடித்து நீரை விட்டுப் பற்றைப் பிரித்தெடுக்கவும். பற்றையுங் கனடபல்சத்தையும் தட்டையான வோர் பா

---

1 Hydrocephalus. 2 Hydropericardium. 3 Hydrothorax. 4 Hydrarthus, உதசந்தி. 5 Proof spirit, 6 Glacial Acetic acid. 7 Percolator. 8 Acetic acid. 9 Ether. 10 Water bath.

த்திரத்தில் உருக்கி, உருகிய நீர் சூடாயிருக்கையிற் கடுதாசிக் கீலங்களின் ஒருபக்கத்தில் மெல்லிய படலம் பிடிக்க அதிற் தோய்க்கவும்.

சதுர இஞ்சுக் கோடுகளைக் காட்டத்தக்கதாய் வரியிட்ட கடுதாசியை இத ற்கு வழங்கினால் வசதி.

இதை வெதுப்பி மேனித் தோலில் அணைக்க கொப்புளங்கொள்ளும்.

கந்தாரிசுப்பற்று. Plaster of Cantharides. கொள். கந்தாரிசு, தூளாக, பன்னிரண்டு அன்சு; செம்மெழுகு,பூதச்சீபம்[1],வகையொன்றுக்கு ஏழரை அன்சு; பூதலாடு[2], ஆறு அன்சு; குங்கிலியம்,மூன்று அன்சு. மெழுகு, சீபம், லாடு மூன்றையும் நீர்மத்திகத்தில் ஒன்றாயும், குங்கிலியத்தை வேறாயு முருக்கிக் கூட்டி அப்பால் கந்தாரிசுத் தூளைப் போட்டு முழுவதையுந் திறமாய்ச் சேர்த்து அக்கலவை ஆறுந்தனையுங் கலக்கவும்.

கொப்புளிக்கப்பண்ணுவதற்கு இப்பற்றே வாடிக்கையாய் வழங்கப்படுவது. இந்த நோக்கமாய் இது வழங்கப்படும் அனேக உபயோகங்கள் கந்தாரிசின் விபரத்தில் முன்னே சொல்லியிருக்கும்.

கந்தாரிசன்கேன். Ointment of Cantharides. கொள். கந்தாரிசு, செம்மெழுகு, வகைக்கு ஒருஅன்சு; ஒலீவுதேல்[3] ஆறஅன்சு. மூடிய பாத்திரத்திலே விட்ட எண்ணெய்யில் கந்தாரிசுத் தூளைப் பன்னிரண்டு மணி நேரம் ஊறப்போட்டு, அப் பாத்திரத்தைக் கொதிநீரிற் பதினைந்து மினி நேரம் வைத்து, சீலையில் வடித்துப் பிழிந்து, முன்னமே வேறாயுருக்கின மெழுகோடு கலந்து அக்கலவை ஆறுந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

கொப்புளித்த புண்கள் சியன்னிகளை[4] அழற்றுவதற்கு இது இடப்படும்.

வெம்பற்று. Warm Plaster. கொள். கந்தாரிசு,பருக்கன் பொடியாக, ஊற்றின சிடத்தேல்[5], செம்மெழுகு, குங்கிலியம், வகைக்கு நாலு அன்சு; சபுபிலாஸ்தர்[6] மூன்றேகால் இருத்தல்; குங்கிலியப்பிலாஸ்தர், இரண்டு இருத்தல்; கொதிவெந்நீர் அரைநாழி. கந்தாரிசுப் பொடியைக் கொதிநீரில் ஆறு மணிநேரம் ஊறப்போட்டுக் காரிக்கம் புடைவையில் இறுக்கமாய்ப் பிழிந்து, பிழிந்த நீர் மூன்றத்தொரு பங்காய் வருந்தனையும் அதை நீர்மத்திகத்தில் வறட்டி, அப்பால் மற்றுங் கூறுகளைக் கூட்டி நீர்மத்திகத்தில் உருக்கி, முழுதுந் திறமாய்ச் சேருந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

மந்தமான கழலைகள் நாட்பட்ட கோள வீக்கங்கள் பொருத்து வீக்கங்களுக்கு இது நல்ல ஸ்திமுலமான அணையாகும்.

## *மைலாபிரிச் சிகுரி வண்டு.

## MYLABRIS CICHORII. TELINI FLY.

வாசம். இது தென் யுரோப்பத்திலுள்ளது. இத்தலியிலிருந்து கிரேக்கு ஊடுபோய் வழியாய்ச் சீனத்துக்குச் செல்லும். இந்துவடங்கலும் இது வாடிக்கைப்பட்டது.

வாகடபகுதி. காய்ந்த வண்டு. அதின் லட்சணங்களாவன: ஏறக்குறைய ஒரு இஞ்சு நீளமும் மூன்றிலொருபங்கு இஞ்சு அகலமுமானது. ஒடுமங்கலான மஞ்சள்நிறம். அது மூன்று பெரிய வளைந்த குறுக்குவரிகளுள்

1 Prepared suet. 2 Prepared Lard, இடியம். 3 Olive oil. 4 Issue, இசு. 5 Expressed oil of Nutmeg. 6 Soap plaster.

ளது. முதலாம் வரி முறிந்து சிலவேளை மூன்றுநாலு புள்ளிகளாய் மாத்திரமிருக்கும். இதின் சத்து கந்தாரிடின்[1].

தன்மை, உபயோகம். கந்தாரிசு வண்டைப் போலவே. வெசிக[2]னுக அதற்குப் பதிலாக இதை வழங்கலாம். கந்தாரிசிரஞ்சத்தின் பெலனுஞ் செயலும் பூரணமாய் விளங்கியிருப்பதாலும் இதின் பெலன் செயல் தெரியாதிருப்பதாலும் அதற்குப் பதிலாக இதை உள்மருந்தாக வழங்கப்படாது. கந்தாரிசைப்பார்க்க இது அதிக வீறுள்ளதாகக் கொள்ளப்படுகின்றது, (74)

[இதைவிட இந்துவின் பலபகுதிகளில் வேறு கொப்புளவண்டுகளும் உண்டு. உதாரணமாக, வடக்கிந்து மத்திய இந்துவில் மெலூவித் திரியந்திமம்[3], லித்த சிகாசு[4], லித்த வியொலாசி[5], புதுச்சேரிக்குக்கிட்ட மைலாபிரிப் பஸ்துலாது[6], மைலாப்பிரிப் பந்தம்[7] என்ற இனங்கள் உண்டு. பிந்தின இரண்டு இனங்களின் தன்மைகளைப்பற்றிக் கொலாசு பண்டிதர் எழுதிப் பிரசுரஞ் செய்திருக்கிறார். இந்த இனங்களை விட மைலாபிரி யிந்துகம்[8], மைலாபிரி மெலனூரம்[9], மைலாபிரி யுமராலி[10], மைலாபிரிப் பிருச்சிமம்[11], மைலாபிரி யோரியந்தல்[12], லித்த வசமேஞ்சி[13], எபிகோத்த நிபலேஞ்சி[14] என்னும் இனங்கள் உண்டென்று இந்துநூதனசாலையைச் சேர்ந்த மூர் என்பவர் குறித்திருக்கிறார். என்றாலும் மைலாபிரிச் சிகுரி[15] என்ற கொப்புளவண்டு இந்துவின் மிகுதியான பகுதிகளில் இருப்பதால் இந்தக் கொப்புளவண்டினங்களின் தொகையைப் பெருக்கத் தேவையில்லை.]

## கைமெனூப்திரங்கள்.

## HYMENOPTERA.

### தேனீ. HONEY BEE.

வாசம். இது பூமியின் பல பகுதிகளில் ஆதியாயுள்ளது. இப்போ மிகுதியான தேசங்களில் வளர்க்கப்படுகின்றது.

வாகடபகுதி. 1. தேன். இது தேனீயாற் கூட்டிற் சேர்த்து வைக்கப்படுகின்ற சர்க்கரையுள்ள விசர்க்க[16]மான பாணி. கூட்டிலிருந்தெடுத்தவுடன் பிசுபிசுப்பும் சற்றே உருவொளியும், கபிலமான மஞ்சள் நிறமுமுள்ள நீராகவிருக்கும். படிப்படியாய்ச் சற்றே கிரிஸ்தலித்து மங்கலாகும். இது ஓர்வகைச் சுய மணமும் நல்ல இனிப்புச் சுவையுமுடையது. இதை வெந்நீரோடு சில மினி வரைக்குக் கொதிப்பித்து ஆறவிட்டு இயோதநீரோடு சேர்த்தால் நீலமாகாது. 2. செம்மெழுகு. இது தேன்கூட்டைக் காய்ச்சி வடித்தெடுக்கப்படுவது. கட்டியாகவிருக்கும். உரப்பானது, பருபருக்கையாய் ஒடியும். மஞ்சள் நிறமும் தேன்போல் நல்ல மணமுமுடையது. தொட்டால் ஒட்டாது. 140 பாகை சூட்டுக்குக் குறைந்த சூட்டில் உருகாது. குளிர்ந்த திட்டசீதிற் கரையாது; தர்ப்பந்தீன் எண்ணெயில் முற்றாய்க் கரையும். இதைப் போட்டுக் குலுக்கின கொதிவெந்நீர் ஆறியபின் இயோதநீருக்கு நீலநிறங் காட்டாது. 3. வெண்மெழுகு. செம்மெழுகை

1 Cantharidin. 2 Vesicnnt. 3 Meloe-Trianthema. 4 Lytta gigas. 5 L. violacea. 6 Mylabris pustulata. 7 M. punctum. 8 M. Inticn. 9 M. melanura. 10 M. hu- meralis. 11 M. proxima. 12 M. orientalis 13 Lytta Assamensis. 14 Epicauta Nipalensis. 15 Mylabris Cichorii. 16 Secretion.

(71) அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

நரிப்பு, ப்ரமாணு, வெளிச்சங்களால் வெளுக்கும்போது அது வெண்மெழுகாகும். இது வட்டித்த சில்லுகளாக வரும். வன்மையும், ஏறக்குறையச் சுத்த வெள்ளையும் சற்று உருவொளியுமானது. தொட ஒட்டாது. 150 பாகைக்குக் குறைந்த சூட்டில் உருகாது.

தன்மை உபயோகங்கள். தேன் இமாலியம்[1]. சொற்பமான இளம்பேதி. இருமற் கலவைகள், கார்கில்[2]களுக்குச் சுவைக்காகச் சேர்க்கப்படும். மெழுகு இமாலியமும் திமல்சமுமாகும். திசந்தெரி[4] தியறியம்[6],கதார்க[6]ளுக்குச் சிலவேளை கொடுத்ததுண்டு. ஆயினும் அன்கென்கள்[7], பிலாஸ்தர்கள்[8], சப்பாசிதுறி[9]களில் ஓர் கூறுகச் சேர்க்கப்படுவதே இதின் விசேஷஉபயோகம்.

தேயம். வெண் மெழுகிற் பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்கு முசிலாகின்[10] துணையாற் கலவையில் நீந்தவிட்டுக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். சுத்ததேன். Clarified Honey. கொள். தேன், ஐந்து இருத்தல். தேனை நீர்மத்திகத்தில்[11] உருக்கி, அது சூடாயிருக்கையில் வேந்நீரில் நனைத்த கம்பளியில் வடிக்கவும்.

இது திமல்சம். அக்சிமெல்[12] ஸ்குவி[13]லக்சிமெல்,போறசதேன்[14], மிளகு லேகியம், ஸ்கமுனி[15] லேகியம், தர்ப்பந்தீன்[16] லேகியம், இவைகளில் தேன் ஓர்கூறுகச் சேருகின்றது.

தனியன்கேன். Simple ointment. கொள். வெண்மெழுகு, இரண்டு அன்சு; பூதலாடு[17] மூன்று அன்சு; வாதுமைத்தேல்[18] மூன்று அன்சு. மெழுகு, லாடு, எண்ணெய் மூன்றையும் நீர்மத்திகத்தில் ஒன்ருயுருக்கி, அக்கலவையை நெருப்பால் இறக்கி அது ஆறும்போது ஓயாமற் கிளறவும்.

இது புண்களுக்கு இட நல்ல அணைவு. வாசட அன்கென்கள் பலவற்றுக்கு இது அடியாக வழங்கப்படுகின்றது.

*சேறுமேல். Ceromel. கொள். செம்மெழுகு, ஒரு அன்சு; தெளித்த தேன், நாலு அன்சு. மென்சூட்டில் உருக்கிச் சேர்த்துச் சீலையில் வடிக்கவும்.

மந்தவிரணங்கள், மற்றும் விரணங்களுக்கு இது நல்ல ஸ்திமுல அணைவு. இந்துவிலும் மற்றும் உஷ்டண தேசங்களிலும் பிராணிய கொழுப்புகள் சுறுக்காய்ப் பழுதாகி உதவாமற்போய்விடுவதால் இது மிக உபயோகமானது.

[நல்ல தேனும் மெழுகும் இந்துவில் அகப்படும். அவை அபி சோசியாலி[19] அபிஸ் தருசாதம்[20], அபிஸ் நிகிரிபெனு[21], அபிஸ் பைகொலா[22] என்ற தேனீக்களினதும் ஒருவேளை வேறும் இனமான தேனீயினதும் பேறு.]

## கேமிப்திரங்கள்.

## HEMIPTERA.

### கிரிமிஞ்சிப்புழு. COCHINEAL INSECT. கக்கசு. COCCUS.

வாசம். இது மெச்சிகு தெனரீவு தேசங்களில் வளர்க்கப்படும்.

வாகடபகுதி. காய்ந்த பெண்புழு. வட்டிப்பானது; தளக்குவிவானது[23];

---

1 Emollient சாந்தனி. 2 Gargle. 3 Demulcent, சமனி. 4 Dysentery. 5 Diarrhoea. 6 Catarrh. 7 Unguents. 8 Plaster. 9 Suppository. 10 Mucilage. 11 Water-bath. 12 Oxymel. 13 Squill. 14 Mel-Boracis. 15 Scammony. 16 Turpentine. 17 Prepared Lard ஊடியம். 18 Oil of Almond. 19 Apis Socialis. 20 A. dorsata. 21 A. nigripennis. 22 A. bicolor 23 Plano convex.

Digitized By Roja Muthiah Research Library

எறக்குறைய இரண்டு லீன் நீளமுள்ளது; சுருக்குவிழுந்தது; கருமை அல்லது சாம்பல் வெண்மை நிறங்கொண்டது. நருக்கினுற் கருங் கபில நிறமான தூளாகும். வெண் நரை நிறமான புழுவை நெருப்பில் வெதுப்பச் சுறுக்காய்க் கறுக்கும்.

தன்மை, உபயோகம். இதற்கு அந்திஸ்பச[1] தன்மையும் மற்றுந் தன்மைகளுமுண்டென்று சொல்லியிருப்பதுண்டு. ஆயினும் தவறு. நிறங்கொடுக்க மாத்திரம் இது உபயோகமானது.

ரசிதம். கிருமிஞ்சிரஞ்சம். Tincture of Cochineal. கொள். கிரிமிஞ்சிப் புழு மாவாக இரண்டரை அன்சு; புரூவுசீது[2] அரைநாழி. எழு நாளூறப்போட்டு வடித்து அரைநாழிக்குப் போதிய புரூவுசீது சேர்க்கவும்.

வலக்கூட்டிரஞ்சம், சின்கன[3]க்கூட்டிரஞ்சங்களிற் கிரிமிஞ்சிப்புழு ஓர் கூறுகச் சேருகின்றது.

## மீன்கள். FISHES.

### ஸ்தேர்ச்சன் மீன். STURGEON.

வாசம். இது கஸ்பிக்கடல் கருங்கடல்களில் உள்ளது.

வாகடபகுதி. சவுண்[4] என்னும் மிதப்புப் பை. இது பக்குவமாக்கிக் கீலங் கீலமாகக் கிழிக்கப்பட்டுவரும். ஐசிங்கிளாசு[5] எனப்படுவது இது தான். இது லேசானது; தோல்போல் உரத்தது; வெண்மையானது; சற்றே உருவொளியானது; சுவை மணமற்றது; தண்ணீரிற் கரையாது; கொதிவெந்நீரிற் சுறுக்குக் கரைந்து ஆறும்போது உருவொளியான களியாகும். ஒரு அன்சு வெந்நீரைத் தடித்த இறுகின களியாக்குவதற்குப் பதினைந்து கிறேன் ஐசிங் கிளாசு போதும். வியாபாரத்திற் பலவகையான ஐசிங்கிளாசு வரும். (75) செலதீனே[6] இதின் பிரதானகூறு.

தன்மை, உபயோகம். இது திமல்சம்[7], போஷணி[8]. இது களியாக நோயாளரின் பத்தியத்துக்கு அதிகம் வழங்கப்படும். மேலுங் கலிக்கமிலத்தையும்[9], தனிக்கமிலத்தையும்[10] பகுத்தறியச் சோதனைபார்ப்பதற்கு இதை வெந்நீரிற் கரைத்து வழங்குவார்கள். தனிக்கமிலத்தோடு இதைச்சேர்க்க வெள்ளையான அடையல் விழும். கலிக்கமிலத்தோடோ அடையலுண்டுபடுவதில்லை.

### கட்மீன். CODFISH.

வாசம். இது நோர்வே, பிரான்சு, பிறித்தனி, ஈர்லன் தேசக் கரைகளில் மிகுதியாய் உண்டு. பிரதானமாய் நூவன்லந்துக் கரைகளில் அதிகம்.

வாகடபகுதி. எண்ணெய். இது பச்சை ஈரலை 180 பாகைக்கு மேற்படாத சூடு காட்டி எடுக்கப்படுவது. இதற்கு மறுவித்தேல்[11] என்று பெயர். இந்த எண்ணெய் வெண்மஞ்சள் நிறமானது; சற்றே புலால்மணமுஞ் சுவை

1 Antispasmodic. 2 Proof spirit. 3 Cinchona. 4 Sound. 5 Isinglass. 6 Gelatine. 7 Demulcent சமனம். 8 Nutritive. 9 Gallic acid. 10 Tannic acid. 11 Oleum Morrhuae.

(75 அனுபந்தம்பார்.

Digitized By Roja Muthiah Research Library

யுமுள்ளது. இதிற் சில துளியை ஓர் பீங்கான் தட்டில் விட்டு அதற்குச் சல்வுரிக்கமிலம்[1]த்திலே ஒரு துளியைக் கூட்டினால் செந் நீல[2] நிறமுண்டாகிச் சுறுக்கு மஞ்சள் நிறமாயாவது கபில[3] சிவப்பு நிறமாயாவது மாறும். இதிலே பித்த பதார்த்தங்கள் இருப்பதன்றிச் சொற்ப வீதமான இயோதம்[4], புரோமம்[5], குலோறம்[6], பாஸ்வரம்[7], பாஸ்வரிக்கமிலம்[8], சல்வுரிக்கமிலங்களும் சுண்ணம்[9], மக்னீசி[10] சோடக்க[11]ளின் சாடையும் அடங்கியிருக்கும்.

தன்மை. இது நல்ல அல்திறவம்[12], போஷணி.

உபயோகம். கசம் முதலிய ஸ்துருமம்[13]நோய்களுக்கு இது உத்தம மருந்து. மேலும் கசரோகம், ரிக்கிற்சு[14], மதியாந்திரகசம்[15], தீவிர காலிக இருகெவலம்[16], கண்ணோக்க[17]ளுக்கும் ஸ்துரும நோயாளருக்குண்டாகும் அற்றுவி[18]யென்ற மெலிவுக்கும் இது கைகண்ட மருந்து. மேலும் அனீமி[19]க்கும் விசேஷமாய் அனீமியோடு கூடிய நறல்சி[20], சியதிகத்துக்கும்[21] மாறுதசரும நோய்கள், காலிகவாதம், சர்க்கராமூரி[22]யென்றநீரழிவு, எபிலெப்சி[23], கொரீயங்க[24]ளுக்கும் துர்விபாகத்[25]தோடுகூடிய குன்மத்துக்[26]கும், இது நயந்த மருந்து.

தேயம். ஒருநிறும், நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம். நோயாளி தாங்கக் கூடிய வரைக்குங் கொஞ்சங் கொஞ்சமாய்க் கூட்டிக் கொடுக்கலாம். மிஞ்சினால் வீணிலே கழியும். விழுங்கக் கூடாதவர்களுக்கு பாயுவாலாகுதல் தோலில் பூசி உரஞ்சுவதாலாகுதல் உட்செலுத்தலாம். சாப்பிட்டவுடன் கொடுப்பதே உத்தமம்.

## *பாற்சுரு. WHITE SHARK.

வாசம். இது எல்லாச் சமுத்திரங்களிலும் உண்டு. இந்துக் கடல்களில் மிகுதி.

வாகடபகுதி. ஈரலை மென்சூட்டிற் காய்ச்சியெடுக்கும் எண்ணெய். இது வெண் மஞ்சள் நிறமுடையது. மணம் சுவை மறுவித்தேலைப் போலவே. அதிலும் வீறுனது; கெட்டது. 86 பாகை காங்கையில் நல்ல தெளிவாகும். கொஞ்ச வேளை கலக்காமல் விட்டால் ஸ்தியரின்[27] பொடியாகவும் சற்றதனமாகவும் அடையும். இது ஸ்குவாலின்[28] எனப்படும்.

தன்மை, உபயோகம், தேயம். மறுவித்தேலைப் போலவே. அதற்குப்பதிலாக இதை வழங்கலாம். இந்து வைத்திய சாலைகளில் வழங்கத் தகுந்தது. உவட்டுச் சுவையே இதை வழங்குவதற்குப் பெரியதடை. ஆயினும் அதிக கவனமாய் உண்டுபண்ணினால் ருசிக்கக்கூடும்.

[புதுச்சேரியிலிருந்த கலாசு பண்டிதர் இந்த எண்ணெய்யைப்பற்றி மெத்த வியப்பாய் எழுதியிருக்கிறார். மே பண்டிதரும் இதை நயக்கிறார். சென்னையில் குஷ்ட வைத்தியசாலையிலும் மற்றும் இடங்களிலும் இது நயப்பாய் வழங்கப்படுகின்றது. உஷ்டண தேசங்களிலே ஸ்குவாலின் நல்ல மருந்தாகுமென்பது கலாசு பண்டிதர் எண்ணம். இது புண்கள் காயங்களுக்கு நல்ல தைலமாவதுமன்றி லாட்டைப்பார்க்கத் தடிப்பாய் அதைப்போ

---

1 Sulphuric acid. 2 Violet. 3 Brown. 4 Iodum. 5 Bromum. 6 Chlorum. 7 Phosphorus. 8 Phosphoric acid. 9 Lime. 10 Magnesia. 11 Soda. 12 Alterative பரிணாமி. 13 Struma. 14 Rickets 15 Tabes Mesenterica. 16 Hydrocephalus. 17 Ophthalmia. 18 Atrophy. 19 Anaemia. 20 Neuralgia. 21 Sciatica. 22 Diabetes. 23 Epilepsy. 24 Chorea. 25 Mal assimilation. 26 Dyspepsia. 27 Stearine. 28 Squalin.

Digitized By Roja Muthiah Research Library

லப் பழுதாகாமலிருப்பதால் அதற்கு இது நல்ல பதிலாகும். ஸ்குவாலினைச் சீலையிற் பூசிப் புண்களுக்கு இடலாம். மறுவித்தைலப் பார்க்கச் சுருத்தைலிலே சில சத்துக்களின் வீதங் கூட என்று தேலாற்றர் சொல்லுகிறார் இதிலே இயோத[1]மும் பாஸ்வர[2]முங் கூடவும், புரோம[3]முங் கெந்தகமுங் குறையவுமிருக்கும். சில வருஷங்களுக்கு முன் இந்துவிலே அறுக்குளாமீனின்[4] ஈரலெண்ணெயைச் சோதித்துப்பார்த்தார்கள். நயமென்று சொல்லப்பட்டாலும் அது வழக்கத்துக்கு வரவில்லை. இந்த மீன்களின் ஈரலெண்ணெய்யைப் பற்றிப் பிதி வைத்தியர் எழுதினவைகளிலும் பார்க்கலாம். இந்த மீனெண்ணெய்களின் நாற்றமுங் கெட்ட சுவையும் மிகுதியாய் உருக்கமுன் ஈரல்கள் நாறுவதைப்பற்றி உண்டாகுமென்று அவர் நினைத்துப் புதிய ஈரல்களை வெந்நீரிற் போட்டு அவித்து எண்ணெய் எடுக்கும்படி சொல்லுகிறார்.

# பட்சிகள். AVES. BIRDS.

## கோழி. DOMESTIC COCK AND HEN.

**வாசம்.** பூமியினெப்பகுதியிலும் வீடுகளில் இது வளர்க்கப்படும்.

**வாகடபகுதிகள்.** 1. முட்டையின் வெள்ளைக்கருவாகிய அல்புமின்[5]. இது நிறம் மணம் சுவையற்ற வழுவழுப்பான நீர். சூட்டுக்கு உறையும். அசிதிக்கமில[6]த்துக்கு மாறுதல் அடையாது. 2. மஞ்சட் கரு. இது தடித்த மஞ்சள்நிறமான எண்ணெய் போன்ற நீர். மங்கலானது, மணமற்றது, காரமற்ற நற்சுவை உடையது. தண்ணீரோடு கலக்க,பால்போன்ற இமல்ச[7]மாகும்.

**தன்மை,உபயோகம்.** இது இமாலியம்[8], திமல்சம்[9], போஷணி[10]. சவ்வீரம்[11],செம்பு[12],துத்தங்க[13]ளிற் கரையக்கூடிய உப்புகள், கிறீயசற்று[14] என்ற நஞ்சுகளுக்கு வெள்ளைக்கரு, கெமிஸ்த[15] மாற்றாகும். காரமான மற்றும் லோகவுப்புகளாகிய நஞ்சுகளைத் தின்றவர்களுக்கோ, அது நஞ்சிம்மிகளை மூடி, இரைப்பை குடல்களின் சளிச்சவ்வைப் போர்த்து இப்படி மிகானிக[16]மாற்று ஆகும். மஞ்சட்கரு நோயாளருக்குப் போஷணையுள்ள உணவாயிருப்பதன்றி, இமல்சங்களை உண்டாக்கவும், எண்ணெய்கள், தைல ராளங்கள்[17], ராளங்கள் அடையாமற் காக்கவும் வழங்கப்படும்.

**ரசிதங்கள்.** அல்புமின் நீர். Solution of Albumen. கொள். கோழி முட்டையொன்றின் வெள்ளைக்கரு; திஸ்திலித்த தண்ணீர் நாலு அன்சு. குழியம்மியிலிட்டு அரைத்துத் திஸ்திலித்த தண்ணீரால் நனைத்த சணற்பஞ்சில் வடிக்கவும். இந்த நீரைப் புதிது புதிதாகத் தேவையானபொழுதே செய்துகொள்ளவேண்டும்.

இது கெமிஸ்த சோதனையாக மாத்திரம் வழங்கப்படும்.

கோழிமுட்டையின் மஞ்சட்கருப் பிரண்டிக் கலவை[18]யிலோர்கூறுகின்றது.

---

1 Iodum. 2 Phosphorus. 3 Bromum. 4 Sier Fish. 5 Albumen. 6 Acetic acid. 7 Emulsion. 8 Emollient. 9 Demulcent. 10 Nutritive. 11 Corrosive sublimate. 12 Copper. 13 Zinc. 14 Creasote. 15 Chemical 16 Mechanical. 17 Oleo resin. 18 Brandy mixture.

Digitized By Roja Muthiah Research Library

# மமலியங்கள். MAMMALIA.

## சேதசீயங்கள். CETACEA.

### ஸ்பேந் திமிங்கலம். SPERM WHALE.

வாசம். இது பசீவிச் சமுத்சிரம் இந்து சமுத்திரங்களில் வசிக்கும்.

வாகடபகுதி. செதீன்[1]. இது திமிங்கிலத்தின் தலைக்குள்ளிருக்கிற நெய்யைச் சுத்தியாக்கிக் குளிரால் உறையப்பண்ணி யெடுக்கும் வஸ்து. இது சுயமே எறக்குறையச் சுத்தமானது. முத்துப் போல வெண்மையும் மினுக்கமும் உருவொளியும் கிரிஸ்தற்[2]தன்மையுமானது. மணம் சுவை மெத்த வில்லை. திட்டசீதிற்[3] சொற்பஞ் சேர்த்து மாவாக்கலாம். தொட நெய் பிடியாது. 100 பாகைக்குக் குறைவான சூட்டில் உருகாது.

தன்மை,உபயோகம். இது திமல்சம்[4], இமாலியம்[5]. தைலமாக வெளிமருந்தாய் வழங்கப்படுவதன்றி உள்ளே கொடுக்கப்படுவதரிது.

ரசிதம். திமிநெய் யன்நேன். Spermaceti Ointment. கொள். திமிநெய், ஐந்து அன்சு; வெண்மெழுகு, இரண்டு அன்சு; வாதுமைத் தேல் அரைநாழி அல்லது போதியது. எல்லாவற்றையும் ஒன்றாய் மென்சூட்டில் உருக்கி, சூட்டாலெடுத்து ஆறுந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

புண்களுக்கும் தோலுரிந்த கொப்பளித்த இடங்களுக்கும் இது சாந்தியான தைலம்.

கொப்புளத் தாளிற் திமிநெய் ஓர் கூறாகச் சேருகின்றது.

## ருமினன்சிகள்.

## RUMINANTIA.

### கஸ்தூரிமான். MUSK DEER. MOSCHUS MOSCHIFERUS.

வாசம். இது திபெத்திலும் மத்திய இந்துவிலும் ஆதியாயுள்ளது.

வாகடபகுதி. கஸ்தூரி. இது கஸ்தூரிமானின் முன் றோற் குதவங்[6]களிலிருந்து ஊறி இறுகின காய்ந்த விசர்க்கம். இது செங்கறுப்பும் ஒழுங்கற்றதும் சற்று நெய்ப்புமான குறுமணிகளாகவிருக்கும். செறியக் கூடிய நல்ல மணமும் கைப்பும் கார்ப்பும் நற்சுவையுமுடையது. ஏறக்குறைய இரண்டு இஞ்சு பருமையான வட்டித்த சவ்வுப் பைக்குள்ளேயிருக்கும். பையின் வெளிப்பக்கம் முரணின நரை மயிரால் மூடப்பட்டிருக்கும். மயிர் மையத்திலுள்ள துவாரத்தைச் சுற்றிச் சற்றியிருக்கும்.

தன்மை. இது ஸ்திமுல[7]மும் அந்திஸ்பசி[8]யுமாகும்.

உபயோகம். சன்னிச்சுரம்[9],சன்னிவச்சுரங்க[10]ளுக்கும், மற்றுஞ் சுரநோய்களின்பிற்கூற்றுக்கும், அசத்துவ[11]நுமோனி[12],ஒதுங்கு[13]குவாதம்[14],விசாதகம்[15], அசத்துவ வகையான வேறு நோய்களுக்கும், இது ஸ்திமுலமாக நயந்தது. மேலும் ஸ்பச நோய்கள், சிரா[16]நோய்களுள், ஸ்பசஜ்வாஸ[17], கூவுஞ்சுவாசம், குக்கலின் பிற்பாதம், குழந்தைகளுக்குண்டாகும் வலிகள், எபிலெப்சி[18]

---

1 Cetine. 2 Crystal. 3 Rectified spirit. 4 Demulcent. 5 Emollient. 6 Follicle. 7 Stimulant. 8 Antispasmodic. 9 Typhus, 10 Typhoid. 11 Atonic. 12 Pneumonia. 13 Retrocedent, 14 Gout. 15 Hypochondriasis. 16 Nervous. 17 Spasmodic Asthma. 18 Epilepsy.

Digitized By Roja Muthiah Research Library

சொரீயர்[1] பலவகையான ஸ்தேரி[2]களுக்கும், விசேஷமாய் நித்திரையின்மைக்கும், இது உபயோகமானது. ஆயினும் இக்காலத்தில் இது வழங்கப்படுவதரிது.

**தேயம்.** ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்குக் குளிகையாக்கியாவது பாணிக் கலவையிற் பிசினிட்டு அடையாமற் காத்தாவது கொடுக்கலாம்.

## ஆடு. THE SHEEP.

**வாசம்.** இது எத்தேசங்களிலும் வளர்க்கப்படும்.

**வாகடபகுதி.** வயிற்றின் உட் கொழுப்பு. இது உருக்கி வடித்துச் சுத்தமாக்கப்படுவது. பூதசீபம்[3] என இது பெயர்ப்படும். இது வெள்ளையும் மெதுவும் அழுத்தமுமான உர பொருள். மணமிருக்கிற் சொற்பம். 103 பாகை சூட்டில் உருகும். இதில் மிகுதியான ஸ்தியரின்[4] ஒலியீன்[5]னும் சொற்ப மார்கரினும்[6] அடங்கியிருக்கும்.

**தன்மை, உபயோகம்.** இது இமாலியர்[7], சிலவேளை பாப்பைகளுக்குச் சேர்க்கப்படும். போஷணையாகவும் வழங்கப்படுவதுண்டு. பூதசீபம் கந்தாரிசுப்[8] பற்றிலும் இரசவன்கெனி[9]லும் ஓர் கூறாகச் சேருகின்றது.

## மாடு. THE OX.

**வாசம்.** இது பூமியின் எப்பகுதியிலும் வளர்க்கப்படும்.

**வாகடபகுதி.** பால். இது மடியிலூறுவது. மங்கலும் வெள்ளையுமான இமல்ச[10] நீர். இனிப்பான சற்றுங் கார்ப்பற்ற சுவையும் ஓர்வகையான சொற்ப மணமுமுடையது. உண்டையான நெய் இம்மிகள் ஏராளமாயுள்ளது.

**தன்மை, உபயோகம்.** இது உத்தம போஷணி. சாந்தனி. மெத்த உபயோகமான உணவு. விசேஷமாய்ச் சிலவகையான இரைப்பைப் புண்ணுக்கு உவந்தது. அழற்று நஞ்சுகள் அரிக்கு நஞ்சுகளுக்கு இது மாற்றுவதன்றி உட்பக்கங்களைச் சாந்தமாய்க் காக்கும்.

பால், ஸ்கமுனி[11]க் கலவையில் ஓர் கூறாகச் சேருகின்றது.

**ரசிதம். பாற் சீனி.** Sugar of Milk. பசப்பாலின் தயிர்த் தண்ணீரை வறட்டக் கிரிஸ்தலித்த[12] சீனி வரும். இது பெரும்பாலும் மைய வரியில் ஓர் கொடியை அல்லது தடியை உடைய இரண்டு இஞ்சு பருமையான கம்பிகளாயாவது சிறுக் கட்டிகளாயாவது இருக்கும். நரை வெண்மையானது. கிரிஸ்தற்[13] தன்மையுந் தோற்றமுங் கொண்டது. சற்று உருவொளியானது. வன்மையானது; மணமற்றது; சொற்ப இனிப்புக் கொண்டது; சப்பக் கரகரக்கும்.

இது போஷணி என்பது சந்தேகம். நயநட்டமற்றதுபோலும். பெரும்பாலும் தூள் மருந்தைச் செலுத்துகிறதற்குத் துணையாய் வழங்கப்படும்.

**சுத்தகோபித்தம்.** Purified Ox Bile. கொள். புதியகோபித்தம், அரைநாழி; திட்டசீது[14] ஒருநாழி; இரண்டையும் சீசாவில் விட்டுக் குலுக்கிச் சேர்த்து மண்டி அடையுந்தனையும் அரைநாள்வரைக்கு வைத்துவிடவும். அப்பாற் தெளிந்த நீரைத் தெளித்துப் பீங்கான் கிண்ணத்தில் விட்டுக் குளி

1 Chorea. 2 Hysteria. 3 Prepared suet. 4 Stearine. 5 Oleine. 6 Margarine. 7 Emollient. 8 Emplastrum Cantharides. 9 Mercurial ointment. 10 Emulsion. 11 Scammony 12 Crystallized 13 Crystal. 14 Rectified spirit.

Digitized By Roja Muthiah Research Library

கைக்குத் தருந்த பதமாய் வருந்தனையும் நீர்மத்திகத்[1]திலே வறட்டவும். லட்சணங்கள். இது குளிகைப் பதமான மஞ்சட் பச்சை நிறக் களியாய் இருக்கும். இனிப்புங் கைப்புங் கலந்த சுவை உள்ளது. தண்ணீரிலுஞ் சீதிலுங்[2]கரையக்கூடியது. இதில் இரண்டொரு கிறேனை எறக்குறைய ஒரு திரும் தண்ணீரிற் கரைத்து அதோடு ஒரு பங்கு சர்க்கரைக்கு நாலு பங்கு தண்ணீர் வீதமாய்க் கரைத்த சிறுபத்[3]தில் ஒரு துளியை முதற் கூட்டி அப்பால் முதல் உண்டாகும் அடையல் கரையுந்தனையும் சல்வுரிக்கமிலத்தை[4]க் கவனமாய்க் கூட்டினுல் அக் கலவைநீர் முதல் நல்ல சிவப்பு நிறமாகிப் பின்பு கருஞ் சிவப்பு, தூமிலம்[5], செந்நீலம் என்ற நிறங்களாகப் படிப்படியாய் மாறும். இதின் தண்ணீர்க்கரைவுக்குத் திட்டசீதைச்[6]சேர்க்க அடையல் விழாது.

தன்மை,உபயோகம். இளம் பேதி. குன்மம், மலவரட்சி, கழிச்சல்களிலும், பித்த நீர்க் குறைவைப்பற்றி உண்டாகும் மற்றுங் குடல்நோய்களிலும் இது பித்த நீரைச் சரிக்கட்டக் கூடியதாதலால் அவற்றிற்கு உபயோகமாய்க் காணப்பட்டது. சில வகையான செங்கண்மாரி[7], மதியாந்திரகசம்[8], விசாதகங்க[9]ளுக்கும் இது உபயோகமானதென்று எண்ணுகிறார்கள். மேலும் எபிலெப்சி[10], வெறிப்பைத்தியம்[11], சர்க்கராமுரி[12]களுக்குக்கொடுத்தாலும், இதால் நயமுண்டானது நிச்சயமல்ல. பலவகையான நிபோஷம்[13], காலிகவாதம், சுளுக்குகளுக்கும், கற்குறும்பி திரண்டு அடைத்ததால் உண்டான செவிட்டுக்கும், புதிய கோபித்தம் பூசினதால் நயமுண்டானது.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்குக் குளிகையாக்கியாவது கப்சுல்[14]களில் போட்டாவது கொடுக்கலாம். வெளியிற்பூசுவதற்கு ஆறு முதல் எட்டு மடங்கு நிறையான கார்ப்பற்ற எதும் எண்ணெய்யோடாவது பூர ரஞ்சத்[15]தோடாவது கலந்துகொள்ளவேண்டும்.

## பகிடேடமங்கள்.

## PACHYDERMATA.

### பன்றி. THE HOG.

வாசம். இது பூமியின் எப்பகுதிகளிலும் வளர்க்கப்படும்.

வாகடபகுதி. நெய். இது சவ்வுகள் நீக்கி உருக்கிச் சுத்தமாய் எடுக்கப்படுவது. இதை லாடு என்றும், கிடியம்[16] என்றும் சொல்லுவார்கள். இது மெதுவும் வெள்ளையுமான கொழுப்பு. 100 பாகை சூட்டில் உருகும். பாண்டல் மணமற்றது; ஈதரில்[17]முற்றுய்க் கரையும். இதையிட்டுக் கொதிப்பித்த திஸ்திலித்த தண்ணீரை ஆறினபின் வடித்து அதற்கு வெள்ளிநீருசைச்[18] கூட்டினுல் அடையல் விழாது. இயோத[19] நீரைக் கூட்டினுல் நீலமாகாது.

பன்றிநெய்யிலே ஒலீயின்[20] நூற்றுக்கு 62 பங்கு வீதமாயும், மாகரின்[21], ஸ்தியரின்[22], 38 பங்கு வீதமாயும் இருக்கும்.

---

1 Water bath. 2 Spirit. 3 Syrup சீனிப்பாணி. 4 Sulphuric acid. 5 Purple. 6 Rectified spirit. 7 Jaundice. 8 Tabes Mesenterica. 9 Hypochondriasis. 10 Epilepsy. 11 Delirium Tremens. 12 Diabetes 13 Hypertrophy. 14 Capsule. 15 Tincture camphor. 16 Lard. 17 Ether. 18 Nitrate of Silver. 19 Iodum. 20 Oleine. 21 Margarine. 22 Stearine.



Digitized By Roja Muthiah Research Library

தன்மை, உபயோகம். இது இமாலியம்[1]. உண் மருந்தாய்க் கொடுக்கப்படுகிறதில்லை. ஸ்காலடீனம்[2], எக்சந்திமம்[3], எரிசிப்பிலசு[4] என்ற நோய்களுக்கும் மற்றும் வெளித் தாபிதங்கள், நசிவுகள், சுளுக்குகளுக்கும் பன்றி நெய் பூசுதல் மிகுதி. முதல் மூன்று நோய்களிலும் உள்ள குணங்களை அது அதிகமாய் மாற்றுகிறதென்று எண்ணுகிறார்கள். வாகடத்துக்குரிய அன்னெண்கள் பலவற்றுக்கு இது அடியாகும்.

பென்சோயஸ் லாடு. Benzoated Lard. இதைப்பற்றி 143 ம் பக்கத்திற் சாம்பிராணி மரத்தின்கீழ்ப் பார்க்கவும்.

[இந்துதேசத்தில் வைத்தியஞ் செய்பவர்கள் பன்றியையும் அதிலிருந்தெடுக்கும் பொருள்களையும் பற்றி மகமதியர்களுக்குள்ளிருக்கும் வெறுப்பை நினைத்திருப்பது நல்லது.]

# ரோடென்சிகள்.

# RODENTIA.

## நீர்நாய். THE BEAVER.

வாசம். இது கனடாம், சிபேரி என்ற தேசங்களில் ஆதியாயுள்ளது.

வாகடபகுதி. காய்ந்த திரட்சிகளாகிய சினை நுனியின் குதுவங்களும் அவைகளில் ஊறும் விசர்க்க[5]மும். இவற்றிற்குக் கஸ்தர்[6] என்றுபேர். லட்சணங்கள். திரட்சிகள் சோடு சோடாயிருக்கும்; ஏறக்குறைய மூன்று இஞ்சு நீளம்; நீள உண்டை வடிவம்; உரப்புங் கனமுங், கபிலம் அல்லது நரைக் கறுப்பு நிறமுமானது. உள்ளே மெத்த வாசனையுள்ளது; காய்ந்த ராளம்[7]போன்ற செங்கபிலநிறமான விசர்க்கத்தை அடக்கியிருக்கும். இந்த விசர்க்கத்தின் மிகுதியான பங்கு திட்டசீதி[8]லும் ஈதரி[9]லுங் கரையக் கூடியது. இதிலே ஓர் அத்திரதேலும்[10]காரமுங் கைப்புமுள்ள ஒரிராளமும் கஸ்தரின்[11] என்ற கிரிஸ்தற்[12] பதார்த்தமும் அடங்கியிருக்கும். கஸ்தர் கட்சன் குடாக்கடற்கரையிலுள்ள நாடுகளிலிருந்து பிறித்தனுக்கு ஏற்றப்படுகின்றது.

தன்மை. சொற்ப ஸ்திமூலம், அந்திஸ்பசி.

உபயோகம். இஸ்தேரி[13] நோய்கள், சிரா[14]நோய்கள், ஸ்பசு[15]நோய்களில் இந்த வகுப்பைச் சேர்ந்த வீறுன மற்று மருந்துகளுக்கு இது நல்ல அனுமருந்தாகும். மேலும் ஈளை[16], திஸ்மெனுறீயம்[17], எபிலெப்சி நோய்களுக்கு இது நயமென்று கொடுக்கப்படும். ஆயினும் இதைத் தனியே கொடுத்தால் செயலுண்டோவென்பது மிகச் சந்தேகம்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கும் இன்னும் கூடவுங் குளிகையாய்க் கொடுக்கலாம்.

ரசிதம். கஸ்தரிரஞ்சம். Tincture of Castor. கொள். கஸ்தர் ஒரு அன்சு; திட்டசீது அரைநாழி. மூடிய பாத்திரத்தில் ஏழுநாளூறப்போட்டு இடைக்கிடை குலுக்கிச் சீலையில் வடித்துப் பிழிந்து இன்னும் வடித்து அரைநாழிக்குப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

தேயம். ஒரு திறம் முதல் இரண்டு திறம் வரைக்கு.

---

1 Emolliant சிக்கனி. 2 Scarlatina. 3 Exanthemata. 4 Erysipelas. 5 Secretion. 6 Castor. 7 Resin. 8 Rectified spirit. 9 Ether. 10 Volatile oil. 11 Castorin. 12 Crystal. 13 Hysteria. 14 Nervous. 15 Spasmodic. 16 Asthma. 17 Dysmenorrhoea.

Digitized By Roja Muthiah Research Library

## அவாகடச்சரக்குகள். Non-officinal.

நாவிப்பூனை. Civet Cat. இந்த மிருகத்தினது வாசனையான நெய்ப்புள்ள விசர்க்கம்[1], தென்னிந்துவிலுள்ள சுதேச வைத்தியரால் புனுகு என்று வழங்கப்படும். வாசனையாகவும் மருந்தாகவும் வழங்கப்படுகிற இந்த விசர்க்கத்துக்காக நாவிப் பூனைகள் திருவாளங்கோட்டிலே ராசாங்கத்தார் செலவில் வளர்க்கப்பட்டன. இப்போதும் வளர்க்கப்படுகின்றது போலும். இதற்கு நல்ல ஸ்திமுல[2], அவ்ரீச[3]தன்மைகள் உண்டென்பார்கள். ஆயினும் விசேஷமாய் இச்செயல்கள் இதற்கு இல்லைப்போலும். இந்த விசர்க்கமானது அபானத்துக்குஞ் சனன உறுப்புகளுக்கும் இடையிலிருக்கிற தட்டையான ஓர் பைக்குள்ளே கூடும். இப் பையானது கொட்டைப் பாக்களவு பருமையான இரண்டு சிறிய கோணங்களோடு தொடுத்திருக்கும். இச் சிறிய பைகளின் உள்வளத்தில் இந்த விசர்க்கம் ஊறுகிற கோளத்தோடு தொடர்பான பல சிறுத் துவாரங்கள் திறக்கும். இந்த உறுப்புகள் எல்லாவற்றையும் மூடுகிற வோர் பேசி[4],கோளங்களையும் பையையும் சுருக்கி விசர்க்கத்தைக் கழித்துவிடும். கழிந்தவுடன் இந்த விசர்க்கம் பாணிபோற் தடிப்பும் மஞ்சள் நிறமுமாகும். ஆயினுஞ் சுறுக்குத் தடித்துக் கபில[5]நிறமடையும். இது அமோனத்[6]தின் நாற்றமுங் காரப்பான உறைப்புச் சுவையுமுடையது.

---

1 Secretion. 2 Stimulant, [illegible], 3 Aphrodisiac [illegible]. 4 Muscle, 5 Brown, 6 Ammonia,

# அநிந்திரிய பதார்த்தசாரம்.

# INORGANIC MATERIA MEDICA.

## தண்ணீர். WATER.

சுத்தமான ஊற்றுத் தண்ணீரை எடுத்து, தேவையாகில் வடித்துக்கொள்ளவும். **சோதனைகள்.** மணம் சுவையற்றது; தோற்றக்கூடிய அசுத்தங்கள் அற்றது.

**தன்மை,உபயோகம்.** இது மற்றும் பதார்த்தங்களைக் கரைத்து அமைகளின் காரத்தைக் குறைக்கும்; குளிர்மையானது; உள்ளே குடித்தாலென்ன வெளியில்விட்டாலென்ன இச்செயல்கள் அதற்கு உண்டு. வைத்தியத்தில் இதின் உபயோகம் அனேகமும் முக்கியமுமாகும்.

**ரசிதம். திஸ்திலித்த தண்ணீர். Distilled Water.** இதற்குச் சின்னம் ஐ$_2$அ. கொள். சுவை மணமற்ற தண்ணீர், பத்துக் கலன்; தகரக் குழலோடு தொடுத்ததாய்ச் செம்பாற் செய்த வோர் வாலை[1]யிற் தண்ணீரை வார்த்துத் திஸ்திலித்து[2], முதல் வரும் அரைக்கலனையும் தள்ளிப்போட்டுப் பிறகு வரும் எட்டுக் கலனையும் சேர்த்துப் பேணவும். **சோதனைகள்.** இதில் ஒரு அன்சைச் சுத்தமான கண்ணாடிக் கிண்ணத்தில் வார்த்து வறட்டினால் பெத்தத் தோற்றக் கூடிய சேடமொன்றுமிராது. மேலும் ஐருசல்வுரிக்கமிலம்[3], அமோனவக்சலசு[4], வெள்ளிநீதரசு[5], பாரிதகுலோறிரம்[6], சுண்ணநீர்[7] இவைகளிலெதையும் இதில் விட்டால் யாதொரு செயலுங் காட்டாது. மருந்துகளை உண்டுபண்ணுவதில் இது அதிகமாய் வழங்கப்படும்.

## காபன். CARBON.

சின்னம், கா; அணுப்பாரம் 12: கா=12.

காபன் இயல்பிலே ஏராளமாய் உண்டுபட்டுப் பிராணி தாவர வஸ்துக்களெவற்றிலும் பெரும் பங்காய்ச் சேர்ந்திருக்கும்.

## மரக் கரி. WOOD CHARCOAL.

இது விறகை காற்றுப்படாமற் செஞ்சூட்டில் எரித்து எடுக்கப்படும். கண்ணறை நிறைந்த நொருக்கலான கரிய கட்டிகளாக வரும்: மணம் சுவையற்றது; இலேசானது. எரிந்த விறகின் சாங்கந் தன்மைகளைக் கொண்டிருக்கும். காற்றுப் படக் கனிஞ் சூட்டில் இதை எரித்தால், ஏறக்குறைய நூற்றுக்கு இரண்டு பங்கு சாம்பல் அதில் விழும்.

**தன்மை.** அந்திசெப்தி[8], தியோடறி[9], திசின்வெக்து[10].

**உபயோகம்.** மலவரட்சியோடுகூடிய குன்மத்துக்கும், கடியல்சிக்கும்[11]

---

1 Still. 2 Distill. 3 Hydrosulphuric acid. 4 Oxalate of Ammonia. 5 Nitrate of Silver. 6 Chloride of Barium. 7 Lime water. 8 Antiseptic. பூதிக்கினி. 9 Deodorizer, கந்தக்கினி. 10 Disinfectant, அபசாருசாரி, 11 Cardialgia.

Digitized By Roja Muthiah Research Library

சிலவகையான தியரீயா[1], திசந்தெரி[2]க்கும், முறைச்சுரங்களுக்கும் இது கொடுக்கப்படும். சிலவேளை நயஞ்செய்யும். பாப்பையே இதின் பிரதான பிரயோகம். பற்பொடியாகவும் இது அதிகம் வழங்கப்படும். பல்லுக் கோறையை இது தடுக்குமென்றெண்ணுகிறார்கள்.

தேயம். இருபது முதல் அறுபது கிறேன் வரைக்கும், கூடவுங் கொடுக்கலாம்.

மிசிதம். கரிப்பாப்பை. Charcoal Poultice. கொள். மரக்கரி மாவாக, அரை அன்சு; கோதுமை அப்பத் துணிக்கை, இரண்டு அன்சு; லீனமா[3], அல்லது அரிசிமா ஒன்றரை அன்சு; கொதிவெந்நீா பத்து அன்சு. அப்பத்தை வெந்நீரிற் போட்டு நெருப்புக்குக் கிட்ட வைத்துப் பத்துமினி நேரம் ஊறவிட்டு அப்பால் மசித்து லீனமா அல்லது அரிசிமாவைப் படிப்படியாய்ப் போட்டுக் கிளறிக் கிளறி மெதுவான பாப்பையாக்கிக் கரியிற் பாதியை அதினோடு சேர்த்தும் மற்றப்பாதியை அதின்மேற் தூவவும்.

இது அழுகற் புண்களின் நாற்றத்தை மாற்றி அவைகளைச் சுகப்பட அருட்டுவதற்கு நயந்த அணைவாகும்.

## சுத்த ஏணக்கரி. PURIFIED ANIMAL CHARCOAL.

ஏணக் கரியை ஐருகுலோறிக்கமிலத்திற் போட்டால் அதிலுள்ள மண்ணுப்புகள் ஏறக்குறைய முழுவதும் எடுபட்டுப் போகக் கரி சுத்தமாகும். லட்சணங்கள். இது மணமற்றதும் ஏறக்குறையச் சுவையற்றதும் கறுப்புமான பொடி. லிற்மசிரஞ்சத்தை[4] இருபது மடங்கு தண்ணீரோடு கலந்து இதோடு கலக்கி யோர் வடியில் வார்க்க அது நிறமற்றதாய் வடியும். இக் கரியைக் காற்றுப்படத் தக்கதாய்க் கடுஞ் சூட்டில் எரித்தால் சொற்ப சேஷம் மாத்திரம் அதிற் காணும்.

தன்மை, உபயோகம். இது தியோடறி[5], அந்திசெப்தி[6]. அல்கலைவா[7] நஞ்சுகளுக்கு இது மாற்றாக வழங்கப்படும். நயமோ சந்தேகம். ஏதும் நயமிருக்கில் அது இதின் மிகானிக[8]செயலைப்பற்றியதேயாம். ஸ்திரிக்னி[9], மாவியா[10] அல்லது வேறு அல்கலைவங்களில் ஒரு கிறேனுளுண்டாகும் நச்சுச்செயலைக் கெடுப்பதற்கு அரை அன்சு ஏணக்கரி வரைக்குப் போதுமென்று எண்ணுகிறார்கள். சிகிச்சம் முதலிய வேலை வித்தைகளிலும் வைத்தியத்திலும் நிறத்தை அழிப்பதற்காக இக் கரி வழங்கப்படும்.

தேயம். இருபது கிறேன் முதல் அறுபது கிறேன்.

## பாஸ்வரம். PHOSPHORUS.

சின்னம், பா; அணுப்பாரம், 31. பா=31.

இது லோகமல்லாப் பூதியம். எலும்பிலிருந்து எடுக்கப்படுகிறது. இலட்சணங்கள். இது சற்றே மெழுகு போன்ற கட்டி. உருவொளியானது. நிறமற்றது; பரமாணுப்பட வெண் புகை யெழும்பும்; இதின் விசேஷகிருவிதம் 1 83. வாடிக்கையான சூட்டில் இது மெதுவாயும்வசையக் கூடியதாயும் இருக்கும். 110 பாகை சூட்டில் உருகும். உருகு நிலயத்துக்குச் சற்றுக் கூடிய காங்கையில் பரமாணுவிற் பற்றிப் பிரவையான சுவாலைகொண்டு எரிந்து அடர்ந்த வெண் புகையைக் கக்கும். தண்ணீரிற் கரையாது.

---

1 Diarrhoea. 2 Dysentery. 3 Linseed meal. 4 Tincture of Litmos. 5 Deodorizer, நாற்றம் தகற்றி. 6 Antiseptic, பூதிக்கினி, 7 Alkaloid. 8 Mechanical. 9 Strychnia, 10 Morphia.

Digitized By Roja Muthiah Research Library

ஈதரிலும்[1] கொதிக்கிற தர்ப்பந்தீன்[2]எண்ணெய்யிலும் காபன்துவிசல்விரத்தி[3]லுங் கரையும்.

தன்மை. சிறு தேயத்தில் ஸ்திமுலம்[4]; பருந்தேயத்தில் வீருன அழற்று நஞ்சு. ஒன்றரைக் கிறேன் ஒரு ஆளைக் கொன்றதுண்டு.

உபயோகம். எபிலெப்சி[5], மூளை மெதுவாதல், கிலீபம்[6], கசம், மாருச் சருமரோய்கள், வாந்திபேதி முதலிய ரோய்களுக்கு இதைக் கொடுக்கலாமாம். ஆயினும் பதனத்திலும் நயத்திலும் இது வேறனேக மருந்துகளுக்குக் குறைந்தது.

தேயம். ஒரு கிறேனில் நாற்பதிலொருபங்கு. இதை ஈதரிலாவது ஒலீவெண்ணெயிலாவது ஒரு அன்சுக்கு நாலு கிறேன் வீதமாய்க் கரைத்து ஐந்து துளி முதல் பத்துத் துளி வரைக்கு நாள் இரண்டு மூன்று முறை கொடுப்பதே உத்தமம்.

பாஸ்வரம், கிருசபாஸ்வரிக்கமிலம்[7]என்ற அக்சிர[8]மாகவே முக்கியமாய் வழங்கப்படும்.

## கிருச பாஸ்வரிக்கமிலம். DILUTED PHOSPHORIC ACID.

இது தண்ணீரிற் கரைந்த பாஸ்வரிக்கமிலம். இதற்குச் சின்னம் ஐ₃ பாஅ₄. இதுபா₂ அ₅ என்ற சின்னத்தையுடைய அவைரு[9] பாஸ்வரிக்கமிலத்துக்கு நிறைப்படி நூற்றுக்குப் பத்துக்குச் சரியாயிருக்கும். இலட்சணங்கள். இது புளிப்புச் சுவையும் வீருன அமிலத் தன்மையுமுள்ள நிறமற்றநீர். இதின் விசேஷகிருவிதம் 1.08. இதோடு வெள்ளியமோன நீதரசை[11]ச்சேர்த்தால், அமோனத்திலும், கிருசநீதுரிக்கமிலத்தி[12]லுங் கரையக்கூடிய வெண் மஞ்சள் நிற அடையல் விழும். வறட்டினுல் சேஷம் விழும். அச் சேஷம் குறைவான செஞ்சூட்டில் உருகி, ஆறும்போது, ஐஅ, பாஅ₅ என்ற சின்னத்தையுடைய கிலாசியல்[13] பாஸ்வரிக்கமிலத்தை விடும். சோதனைகள். ஐருசல்வுரிக்கமில[14]மாவது பாரிதகுலோறிர[15]மாவது நீதுரிக்கமிலங் கலந்த வெள்ளிநீதுரசாவது, அல்புமின்[16]நீராவது இதோடு கலந்தும் அடையல்விழாது. இதைச் சுத்தமான சல்வுரிக்கமில[17]த்தோடு சமபங்காய்க் கலந்து அயசல்வசு[18] நீருக்குள்ளே விட்டால் அதைக் கருமையாக்கமாட்டாது. இரசபிரகுலோறிர[19]நீரிற் சமபங்காய்க் கலந்து, சூடாக்கினுலும் அடையல் உண்டாகாது. இதில் நிறைப்படி 355 கிறேனை ஈய வக்சிர[20] மாவில் 180 கிறேனில் வார்த்து வறட்டி, உண்டாகுஞ் சேடத்தைச் சற்றே சிவக்கக் காய்ச்சினுல் அது 215.5 கிறேன் நிறுக்கும். இச் சேடத்தில் ஈயபாஸ்வசே மிகுதியான பங்கு. ஆகையால் இந்தநீரில் ஆறுநிறும் அவைரு பாஸ்வரிக்கமிலத்தில் 35.5 கிறேனுக்குச் சரியாகும்.

தன்மை. சிறுதேயத்திற் தொணிகம்[21],குளிர்ச்சியானது, அவுரீச[22]தன்மை உள்ளது. சற்றுக் கதித்த தேயத்தில் ஸ்திமுலம்[23],விசேஷமாய் நரம்புமண்டலத்தை அருட்டும். அதிதேயத்தில் நஞ்சாகும்.

உபயோகம். சன்னிச்சுரம்[24],சன்னிவச்சுரங்க[25]ளின் பிற்பாதங்களுக்கும் ஸ்துருமம்[26],லிதீயசி[27]என்னுங் கல்லடைசல்களின் பல வகைகளுக்கும்,

---

1 Ether. 2 Turpentine. 3 Bisulphhide of Carbon. 4 Stimulant. 5 Epilepsy. 6 Impotence. 7 Dilute Phosphoric acid. 8 Oxide. 9 Anhydrous. 10 Specific gravity. 11 Ammonio-Nitrate of Silver 12 Diluted Nitric acid. 13 Glacial. 14 Hydrosulphuric acid. 15 Chloride of Barium. 16 Albumen. 17 Sulphuric acid. 18 Sulphate of iron. 19 Perchloride of Mercury. 20 Oxide of Lead. 21 Tonic. 22 Aphrodisiac. 23 Stimulant. 24 Typhus. 25 Typhoid. 26 Struma. 27 Lithiasis.

Digitized By Roja Muthiah Research Library

சர்க்கராமூரி[1], என்புமக்கல், நீர்க்கோவைகளுக்கும், கடியல்சிக்கும் இது நயமென்று கொடுக்கப்படும்.

தேயம். பத்து முதல் முப்பது மினிம் வரைக்குப் போதிய அளவு தண்ணீரிற் கலந்து கொடுக்கவேண்டும்.

[சுண்ணம்[3], பதாசி[4], சோடா[5], அமோனம்[6], அயம்[7] என்பவற்றின் அதபாஸ்வசுக்கள்[8], பாஸ்வரத்தை உள்ளுக்குக் கொடுப்பதால் உண்டாகும் அழற்சியையும் மற்றும் அவக் குணங்களையும் உண்டாக்காமல் அதின் நயந்தருணங்களையெல்லாம் உண்டாக்கும் என்ற எண்ணத்தையிட்டு மெத்த விதந்து கொள்ளப்பட்டன. க்ஷயம்[9], அனீமி[10], லூகுசைதீமி[11], குன்மம், எபிலெப்சி[12] என்ற நோய்களுக்கும், உடம்பிற் பாஸ்வசுக்கள் குறைவதாலுண்டாகிறதென்றெண்ணப்பட்ட மற்று நோய்களுக்கும் இவைகள் கொடுக்கப்படும். இவைகளை இரண்டு கிறேன் முதல் ஐந்து கிறேன் பிரமாணத்தில் ஏதுங் கைப்புக் கஷாயத்திலாவது சிறுப[13]மாயாவது கொடுக்கலாம்.]

## கேந்தகம். SULPHUR.

சின்னம், கெ; அணுப்பாரம், 32. கெ=32.

இது எரி மலைகளுள்ள சில தேசங்களில் விசேஷமாய்ச் சிசிலியில் விளைகின்றது. மேலும் இயல்பிலே லோகம் பலவற்றுடன் இணைந்த கல்வகைகளாகிய சல்விரங்களாக ஏராளமாயிருக்கும். தாவர பிராணிபபதார்த்தங்கள் அனேகத்திலும் சொற்ப பிரமாணமாயிருக்கும்.

## உச்சிக கேந்தகம், SUBLIMED SULPHUR.

இது விளை கெந்தகத்திலிருந்து புடமிட்டு எடுக்கப்படும் சுத்த கெந்தகம். லட்சணங்கள். பச்சை மஞ்சள் நிறமுள்ள சற்றே கரகரப்பான மா. சுவையற்றது. சூடாக்கினாலன்றி மணவாது. திறந்த பாத்திரத்திற் போட்டு எரித்தால் நீலச் சுவாலைகொண்டு சல்வுரோசமிலத்தை[14]க் கக்கி எரியும். சோதனைகள். சூட்டுக்கு முற்றாய் எடுபட்டுப்போம். நனைத்த லிற்மஸ் தாளைச்[15] சிவப்பாக்கமாட்டாது அமோன நீரை[16] இதோடு கலக்கி வடித்து வறட்டினால் சேஷம் விழாது,

தன்மை. சிறு தேயத்தில் அல்திறவம்[17], சுவேதனி[18] பெருந் தேயத்தில் இளம் விரேசனி.

உபயோகம். சிரங்குக்கும் மற்றும் சரும நோய்களுக்கும் இது உத்தம உண்மருந்தும் வெளிமருந்துமாம். மேலும் மற்று நோய்களுள் வங்கவலிக்கும்[19] பலவகையான ஈய நஞ்சுகளுக்கும், வாயவிதல், இரசநடுக்கம், சோர்வுகளுக்கும், காலிக[20]வாதம், ஸ்பசவீளை[21], அஞ்சினபெக்துசு[22], குக்கலின் பிற்பாதம், காலிகபுறங்கீது[23], கொரீயம்[24], ஸ்துருமம்[25], என்பவற்றுக்கும், இது உள்ளே கொடுத்து நயந்தது. மேலும் இது சாந்தமான செயலுடையதாயிருப்பதால் அரிச[26]நோய்கள், கடைக்குடலொடுக்கம், பிதுக்கம், காலிக திசந்தெரி[27]களுக்கு உவந்த பேதியாகும்.

---

1 Diabetes. 2 Cardialgia. 3 Lime. 4 Potash 5 Soda. 6 Ammonia. 7 Iron. 8 Hypophosphites. 9 Phthisis. 10 Anaemia 11 Leucocythemia. 12 Epilepsy. 13 Syrup. 14 Sulphurous acid. 15 Litmus paper. 16 Solution of Ammonia. 17 Alterative பரிணமி. 18 Diaphoretic. 19 Lead colic. 20 Chronic. 21 Spasmodic Asthma. 22 Angina pectoris. 23 Bronchitis. 24 Chorea. 25 Struma. 26 Piles. 27 Dysentery.

Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** அல்திறவம், சுவேதனியாகப் பத்துக் கிறேன், முதல் முப்பது கிறேன்வரைக்கும், விரேசனியாக ஒரு திரும் முதல் மூன்று திரும் வரைக்குங் கொடுக்கலாம். மேலும் நீர்த்தோயமாகவும் ஆவித்தோயமாகவும் கெந்தகம் பலமுறையும் அதிகமாய் வழங்கப்படும்.

**ரசிதங்கள்.** **கெந்தக லேகியம்.** Confection of Sulphur. கொள். உச்சிகசெந்தகம், நாலு அன்சு; பதாசியமிலதாத்தாசு[1]. மாவாக ஒரு அன்சு; தோடந்தோற்சிறுபய்[2], நாலு அன்சு. சேர்த்து நன்முய் அரைக்கவும்.

**தேயம்.** ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்கு நாள் இரண்டொரு முறை கொடுக்கலாம்.

**கெந்தக வன்கேன்.** Ointment of Sulphur. கொள். உச்சிக கெந்தகம், ஒருஅன்சு; பெஞ்சோயஸ் லாடு[3] அல்லது பூத லாடு[4] நாலு அன்சு. திறமாய்க் கலக்கவும்.

இது சிரங்குக்கு உத்தமமான பூச்சு மருந்து. அடுத்தடுத்து இரண்டுநாளைக்குக் காலை மாலை பூசித் திறமாய்த் தேய்த்துவிட வேண்டும். இதைப் பூசியிருக்கையில் குளிர்பிடியாமல் உடம்பைத் திறமாய்ப் போர்த்துக்கொள்ள வேண்டும். மூன்றுநாள் சவுக்காரமாதியால் மருந்தைக் கழற்றி வெந்நீரில் குழிக்கச் சிரங்கு மாறிப்போம். சிலருக்கு மூன்றுநாளும் பூசவேண்டியதாயிருக்கும்.

## அடை கெந்தகம். PRECIPITATED SULPHUR.

இது கல்சியசல்விரத்தை[5] ஐருகுலோறிக்கமிலத்தாற்[6]கூறுபடுத்தி வரும் அடையல். இது கழுவி உலர்த்தி எடுக்கப்படும். **இலட்சணங்கள்.** நரை மஞ்சள் நிறமும் கரகரப்பற்ற மெதுவுமான பொடி. இதற்கு ஐருசல்வுரிக்கமிலத்துக்[7]குரிய கூழ் முட்டை மணமில்லை. திறந்த பாத்திரத்தில் வேக நீலச் சுவாலை விட்டுச் சல்வுரோசமிலத்தை[8]க் கெட்ட நாற்றமாய்க் கக்கும். **சோதனைகள்.** சூட்டுக்கு முற்றும் ஆவியாய்விடும். சூக்குமாட்சியில் பார்க்கிறவிடத்து கிரிஸ்தல்க[9]ளல்லாத மங்கலான சூறு முண்டைகளால் உண்டுபட்டிருக்கிறதாய்த் தோற்றும். மற்றும்படி உச்சிக்கெந்தகத்தை ஒத்தது.

**தன்மை, உபயோகம், தேயம்.** உச்சிக கெந்தகத்தைப் போலவே.

## கந்தியியோதிரம். IODIDE OF SULPHUR.

இது நாலு பங்கு இயோத[10]த்தையும் ஒரு பங்கு கெந்தகத்தையும் ஒரு குடுக்கைக்குள்ளே போட்டு அவை உருகுந்தனையுங் காய்ச்சுவதாலுண்டாகும் ஓர் கூட்டு. **இலட்சணங்கள்.** கிரணித[11]மான கிரிஸ்தற்தோற்றமுடைய கரைக் கறுப்பான கட்டி. இது மணத்திலும் தோலிற் பூசும்போது அதை நிறப்பிக்குந் தன்மையிலும் இயோதத்தை ஒத்தது. ஏறக்குறைய அறுபதுபங்கு கிலிசரி[12]னிற் கரையும். தண்ணீரிற் கரையாது தண்ணீரோடு காய்ச்சும்போது கூறுபடும். **சோதனை.** 100 கிறேனைத் தண்ணீரோடு திறமாய்க்காய்ச்ச இயோதம் ஆவியாய்ப் பறந்துவிடும். ஏறக்குறைய 20 கிறேன் கெந்தகம் எஞ்சும். அடைத்த சீசாவில் இதைப் பேணவேண்டும்.

---

1 Acid Tartrate of Potash. 2 Syrup. 3 Benzoated Lard. 4 Prepared Lard. 5 Sulphuret of Calcium. 6 Hydrochloric acid. 7 Hydrosulphuric acid. 8 Sulphurous acid. 9 Crystal. 10 Iodum. 11 Radiated விகமமான. 12 Glycerine.

Digitized By Roja Muthiah Research Library

தன்மை, உபயோகம். இயோதத்தைப் போலவே.
தேயம். அரைக் கிறேன் துவங்கிப் படிப்படியாய்க் கூட்டி ஐந்து கிறேன்வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம். இதைப் பின் வரும் ரசிதமாய் வெளியிற் பூசுவதன்றி உள்ளே கொடுப்பதரிது.
கந்தியியோதிரவன்கேன். Ointment of Iodide of Sulphur. கொள்: கந்தியியோதிரம், முப்பது கிறேன்; பூதலாடு[1]ஒரு அன்சு. கந்தியியோதிரத்தைப் பீங்கான் உரலில் அரைத்து மாவாக்கி, லாட்டைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கூட்டி சேர்வை சற்றும் கரகரப்பில்லாமல் நன்றாய்ப் பசையுந்தனையும் அரைக்கவும்.
எக்சீமம்[2], குஷ்டம்[3], சொறீயசி[4], சைகோசி[5] முதலிய நாட்பட்ட தோல்வியாதிகளுக்கு இது உத்தம தைலமாகும்.

## சல்வுரிக்கமிலம். SULPHURIC ACID.

இது கெந்தகத்தை எரித்து வரும் சல்வுரோசமிலத்தை[6] நீதுரோசாவி[7]யால் அக்சிரிக்கப்[8] பிறக்கும் அமிலம். இதிலே ஐ$_2$ கெஅ$_4$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற சல்வுரிக்கமிலம் நிறைப்படி நூற்றுக்கு 96.8 வீதமாய் அடங்கியிருக்கும். கெஅ$_3$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற அவைரு[9] சல்வுரிக்கமிலத்தில் நூற்றுக்கு 79 பங்குக்குச் சரியாகும். இலட்சணங்கள். இது எண்ணெய்யின் தோற்றமும் கடுங் காரமும் புளிப்புமுள்ள நிறமற்ற நீர். சோதனைகள். விசேஷகிருவிதம்[10] 1.843. இதோடு தண்ணீர் கூட்ட மெத்தச் சூடு பிறக்கும். இப்படியே தண்ணீர் கலந்தபின் பாரித குலோறிரஞ்[11] சேர்க்க,கன அடையல் விழும். நிறைப்படி 50.6 கிறேனை ஒரு அன்சு திஸ்திலித்த[12]தண்ணீரோடு கலந்தால் அதைத்தடஸ்திப்ப[13]தற்குச் சோடா பரும விலயனத்தில்[14] 1000 கிறேன் அளவு வேண்டும். ஓர் பிலாடினக்[15]கிண்ணியில் இதை வறட்டினால் சேஷம் விழுகிற் சொற்பம் விழும். அன்னபேதி[16]நீரை இதின்மேல் பதனமாய் வார்த்தால் இரண்டு நீர்களுஞ் சந்திக்குமிடத்து தூமிர[17] நிறமுண்டாகாது. இரு மடங்கு திஸ்திலித்த தண்ணீரோடு இதைக் கலந்து ஐருசல்வுரிக்கமிலஞ்[18] சேர்க்கும்போது அடையல் விழாது.

தன்மை,உபயோகம். இது வீறுன எஸ்கருட்டி[19]. இதாற் தொட்ட உடற்பகுதி முதல் வெண்மையாகி, மறுபடி கபிலக் கறுப்புநிறமடையும். குடித்தால் வீறுன அரிக்கு நஞ்சாகுமாகையால் உண்மருந்துக்குச் சற்றும் இது உதவாது. எஸ்கருட்டித்தன்மையில் நீதுரிக்கமிலத்துக்கு[20]இது குறைந்தது.
ரசிதங்கள். கிருச சல்வுரிக்கமிலம். Diluted Sulphuric acid. கொள். சல்வுரிக்கமிலம் ஏழு அன்சு; திஸ்திலித்த தண்ணீர் போதியது. அமிலத்தை 77 அன்சு தண்ணீரோடு கலந்து, அக்கலவை குளிர்ந்து 60 பாகைக்கு வந்தபின்பு அது 83½ அன்சு அளக்கத் தக்கதாய் இன்னுந் தண்ணீர் சேர்க்கவும். சோதனைகள். விசேஷகிருவிதம், 1.094. நிறைப்படி இதில் 359 கிறேனை அதாவது 6 திருமைத் தடஸ்திப்பதற்குச் சோடாபரும விலயனத்தில் 1000 கிறேன் அளவு வேண்டும். இது அவைருசல்வுரிக்

1 Prepared Lard. 2 Eczema. 3 Lepra. 4 Psoriasis. 5 Sycosis. 6 Sulphurous acid. 7 Nitrous Vapour. 8 Oxidize. 9 Anhydrous. 10 Specific gravity. 11 Chloride of Barium. 12 Distilled. 13 Neutralize. 14 Volumetric solution of soda. 15 Platinum. 16 Sulphate of Iron 17 Purple. 18 Hydrosulphuric acid 19 Escharotic, நதலி, 20 Nitric acid,



Digitized By Roja Muthiah Research Library

கமிலத்தில் நூற்றுக்கு 10.14 பங்குக்குச் சரியாகும். ஆகையால் இதில் ஆறு திரும், அவைரு அமிலத்தில் 40 கிறேனுக்குச் சரியாகும்.

**தன்மை.** இது குளிர்ச்சியானது, துவர், தொணிகம்[1].

**உபயோகம்.** வங்கவலிக்கும்[2], பொதுவாய் ஈய நஞ்சுகளுக்கும், இது நல்ல காவல் மருந்தும் மாற்றுமருந்துமாகும். இரைப்பை, சுவாசப்பை, பிருக்கங்க[3]ளில் நின்று வரும் விபல இரத்தப்பெருக்குக்கு[4] இது உவந்தது. விசேஷமாய்க் கலிக்கமிலத்[5]தோடு கலந்து கொடுத்தால் வாய்ப்பு. பலவகையான கழிச்சல்களுக்கும் கசத்திற் காணும் அதி வெயர்வைக்கும் வைசூரி, கொப்புளிப்பான், சின்னமுத்து முதலிய எக்சந்திம[6]ங்களுக்கும், விடாச்சுரங்களின் பிற்பாதங்களுக்கும், தோல் வியாதிகள் சிலவற்றிற்கும், சிவ்விசு[7] நோய்களுக்கும் இது கொடுத்து நயங்கண்டது. ஸ்கால[8]தீனத்துக்கும் மற்றும் வகையான தொண்டை நோக்களுக்கும் வழங்கும் கார்கில்[9]களுக்கு இது நல்ல கூட்டாகும்.

**தேயம்.** ஐந்து மினிம் தொடங்கி முப்பது மினிம் வரைக்குக் கன தண்ணீரிற் கலந்து ஒருநாளிற் பலமுறை கொடுக்கலாம். பல் அரிக்கப்படாமல், உடனே பச்சைத் தண்ணீரால் வாயை அலம்பவேண்டும்.

**சுகந்த சல்வுரிக்கமிலம். Aromatic Sulphuric acid.** கொள். சல்வுரிக்கமிலம், மூன்று அன்சு; திட்டசீது[10] ஒருநாழி; கறுவாப்பட்டை, பருக்கன் பொடியாக, இரண்டு அன்சு; சுக்கு, பருக்கன் தூளாக, ஒன்றேகால் அன்சு. சல்வுரிக்கமிலத்தைப் படிப்படியாய்ச் சீதோடு கூட்டி, கறுவா, சுக்குத் தூள்களைப் போட்டு ஏழுநாளூறவிட்டு இடைக்கிடை குலுக்கி அப்பால் வடிக்கவும். **சோதனைகள்.** விசேஷகுருவிதம் 0.927. இதில் நிறைப்படி 304.2 கிறேனை அதாவது 6 திருமைத் தடன்திப்பதற்குச் சோடபரும விலயனத்தில் 330 கிறேன் அளவு வேண்டும். இது அவைரு சல்வுரிக்கமிலத்தில் நூற்றுக்கு 10.91 பங்குக்குச் சரி. ஆகையால் இதில் ஆறு திரும், அவைரு அமிலத்தில் 33.2 கிறேனுக்குச் சரியாகும்.

**தேயம்.** ஐந்து மினிம்[11]முதல் முப்பது மினிம் வரைக்குப் போதுமான தண்ணீரிற் கலந்து கொடுக்கவேண்டும். விபல கழிச்ச[12]லுக்கும், கசத்தில் உண்டாகும் வெயர்வைக்கும், பெலவீனப்படுத்தும் மற்று நோய்களுக்கும் இது நல்ல இணக்கமான சுகந்த தொணிகம்.

## சல்வுரோசமிலம். SULPHUROUS ACID.

$SO_2$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற சல்வுரோசமில வாயு தண்ணீரிற் கரைந்து அதில் நிறைப்படி நூற்றுக்கு 9.2 பங்காயிருக்கும். **இலட்சணங்கள்.** இது காரமான கெந்தக நாற்றமுடைய நிறமற்ற நீர். **சோதனைகள்.** விசேஷகுருவிதம் 0.41. இத்தோடு பாரிதகுலோறிரத்தை[13]க் கூட்டும்போது அடையல் தோன்றுது. தோன்றினால் மிகச் சொற்பமாய்த் தோன்றும். குலோறநீரையுங்[14] கூட்டினாலோ கன அடையல் உண்டாகும். இதில் நிறைப்படி 34.7 கிறேனைத் திஸ்திலித்த தண்ணீர்[15] ஒரு அன்சோடும் அமைலமுசிலா[16]கிற் கொஞ்சத்தோடுங் கலந்தால் இயோதபருமவிலயன[17]த்

---

1 Tonic, 2 Lead colic 3 Kidney. 4 Passive Hemorrage. 5 Gallic acid. 6 Exanthemata 7 Syphilis. 8 Scarlatina. 9 Gargle. 10 Rectified spirit. 11 Minim. 12 Passive diarrhoea. 13 Chloride of Barium. 14 Solution of chlorine. 15 Distilled water. 16 Mucilage of Amylum. 17 Volumetric solution of Iodine.

Digitized By Roja Muthiah Research Library

தில் 1000 கிறேன் அளவு கூட்டும்வரைக்கும் அது நிலையான நீலநிறங் கொள்ளாது. வறட்டினல் சேஷமிராது.

தன்மை,உபயோகம். இது தாவரவந்தை[1]களை அழிக்குந் தன்மை உடையதாதலால் தாவரவந்தைகளைப் பற்றி உண்டாகிற படர்தேமல் முதலிய தோல் வியாதிகள் பலவுக்கும் வழங்கப்படும். இவ்வமிலத்தை இரண்டு மூன்று மடங்கு தண்ணீரோடு கலந்து துணியிற் தோய்த்து நோய்த்த பகுதிக்கு அணைக்கலாம். அல்லது சமபங்கு கிலசரி[2]னுேடு கலந்து பூசலாம். இதின் ஆவி மூர்ச்சை அடைக்குமாதலால் அதிக தண்ணீரோடு கலக்கப்பட்டாலன்றி உள்ளே கொடுக்க உதவாது.

தேயம். முப்பது மினிம் முதல் ஒரு திரும் வரைக்கு.

## குலோறம். CHLORUM. CHLORINE.

சின்னம், கு; அணுப்பாரம் 35.5.

இது அங்கிர பொருள்களில் ஏராளமாயுள்ளது. லோகங்களோடு கூடிக் குலோறிரங்கள்[3] என்ற உப்புகளாகும். உதாரணமாக இது சோடம் என்ற லோகத்தோடு கூடுவதாற் சோடகுலோறிரம்[4] என்ற கறியுப்பு உண்டாகும். மேலும் இது பிராணிகள் தாவரங்களிற் குலோறிரங்களாகவும் இருக்கும். வாடிக்கையான காங்கையிலும் அமுக்கத்திலும் இது மஞ்சட் பச்சை நிற வாயுவாக இருக்கும். மூச்சை அடைக்கக்கூடிய கார்ப்பான மணமும் துவர்ச் சுவையுமுள்ளது.

தன்மை, உபயோகம். இது தியோடறிசர்[5], நிசின்வெக்து[6], அந்திசெப்தி[7]யாகப் பிரயோசனமான தன்மைகள் உடையது. ஐருசல்வுரிக்கமிலம் ஐருசையனிக்கமில நஞ்சுகளை உட்கொண்டார்க்கு இது நயந்த மாற்றாகும். கசம், காலிகபுறங்கிது[8], ஈரல் வியாதிகளுக்கு, வீறு குறைந்த குலோறவாயுவை ஏற்ற இயந்திரம் வழியாய்ச் சுவாசித்தல் வழக்கம். (கல்சிகுலோறகம் பார்.)

ரசிதம். குலோறநீர். Solution of Chlorine. இது தண்ணீரிற் கரைந்த குலோற வாயு. லட்சணங்கள். வீறுன குலோற மணமுடைய மஞ்சட் பச்சைநிற நீர். தண்ணிர் அதிகமாய்க் கலந்த இந்திகுசல்வசு[9] நீருடன் இதைக கலக்க அதின் நிறத்தைச் சட்டென அழிக்கும். சோதனைகள். விசேஷகிருவிதம்[10] 1.003. வறட்டினுற் சேஷம்விடாது. பதாசியவியோதிரத்தில்[11]இருபது கிறேனை ஒரு அங்சு திஸ்திலித்த[12] தண்ணீரிற் கரைத்து 439 கிறேன் அல்லது ஒரு அங்சு குலோறிர நீரோடு சேர்க்க, அக் கலவை நீர் கடுஞ் சிவப்புநிறமடையும். இந்நிறத்தைக் கெடுப்பதற்குச் சோடவதசல்விசு[13]ப்பருமநீரில் 750 கிறேன் அளவு வேண்டும். இது 2.66 கிறேன் குலோறத்துக்குச் சரி.

தன்மை. காரமானது, அழற்று நஞ்சுத் தன்மை கொண்டது. கன தண்ணீரோடு கலந்தால் ஸ்திமுலம்[14], அல்திறவ[15]மாம். பெரும்பாலும் வெளி மருந்தாகவே வழங்கப்படும்.

உபயோகம். ஸ்காலதீனத்[16]துக்கும், சன்னிச்சுரத்துக்கும், காலிகமான

---

1 Vegetable parasite. 2 Glycerine. 3 Chlorides. 4 Chloride of Sodium. 5 Deodorizer, கந்தக்கினி. 6 Disinfectant, அபசஞ்சரி. 7 Antiseptic, பூதிக்கினம். 8 Chronic Bronchitis. 9 Sulphate of Indigo. 10 Specific Gravity. 11 Iodide of Potassium. 12 Distilled. 13 Hyposulphite of soda. 14 Stimulant, தீவனி. 15 Alterative, பரிணமி. 16 Scarlatina.

Digitized By Roja Muthiah Research Library

ஈரல்நோய்களுக்கும் இது கொடுக்கப்பட்டது. நயந்தசோவென்பது சந்தேகம். எட்டு மடங்குக்கு அதிகமான தண்ணீரோடு கலந்து தொண்டைத்தாபிதம், அக்கரம், வாய்த்தாபிதம், வாய்ப்புண், உமிழ்நீர்ப் பெருக்குக்கு வாயலம்ப உதவும். மேலும் தொல்லையான சிலவகைச் சரும நோய்களுக்கும் அழுகற் புண்களுக்கும் இடப்படும், அழுகற்புண்களுக்கு இட்டால் அவற்றின் நாற்றத்தை மாற்றி அருட்டிச் சுகப்படுத்தும்.

**தேயம்.** பத்து முதல் முப்பது மினிம் வரைக்கும் அதிக தண்ணீரிற் கலந்து கொடுக்கலாம்.

## ஐருகுலோறிக்கமிலம். HYDROCHLORIC ACID.

இது ஐரு என்ற சின்னத்தாற் குறிக்கப்படுவது. தண்ணீரிலே நிறைப்படி நூற்றுக்கு 31.8 பங்கு வீதயாய்க் கரைந்திருக்கும். **லட்சணங்கள்.** இது ஏறக்குறைய நிறமற்ற, வீறுன அமிலநீர். காரமான மணத்தையுடைய வெண்மையான ஆவியைக் கக்கும். **சோதனைகள்.** விசேஷகிருவிதம் 1.16. வறட்டினுற் சேஷம் விடாது. வெள்ளிநீதுர[1]சோடு கூடினுல் மிஞ்சிய அமோனா[2]த்திற் கரையக்கூடியதும் நீதுரிக்கமில[3]த்திற் கரையமாட்டாததுமான தயிர் போன்ற அடையலுண்டாகும். நிறைப்படி 114.8 கிறேனை அரைஅன்சு திஸ்திலித்த தண்ணீரோடுகலந்தால், அதைத் தடஸ்திப்பதற்[4]குச் சோடபரும விலயன[5]த்தில் 1000 கிறேன் அளவு வேண்டும். நாலு மடங்கு திஸ்திலித்த தண்ணீரோடு கலந்து பாரித குலோறிர[6] நீரையாவது, ஐருசல்வுரிக்கமில[7] வாயுவையாவது சேர்க்கும்போது அடையல்விழாது. மினுக்கமான செம்புத் தகட்டை இதற்குள்ளிட்டு அவித்தால் அது மங்கி நிறம் மாறமாட்டாது. இந்த அமிலத்தில் ஒரு திருமை அரை அன்சு திஸ்திலித்த தண்ணீரோடு கலந்து ஓர் சிறுக் குடுக்கைக்குள்ளே விட்டு அத்தோடு சில துண்டு துத்தமும் போட்டு, நுரைத்துக்கொண்டிருக்கும்போது ஈயவதவசிதசு[8] நீரில் நனைத்த ஒரு துண்டு ஊறுதாளை அக் குடுக்கையின் மேற்பகுதியில் நீருக்கு மேலே ஐந்து மினி வரைக்குப் பிடித்திருந்தால் அக் கடுதாசியின் நிறம் மாருது.

**தன்மை,உபயோகம்.** இது வீறுன எஸ்கருட்டி[9]; அழற்று நஞ்சு. அழுகுபுண்களுக்கும், அழுகல் வாய்த்தபத்துக்கும், வாய்ப்புண்ணுக்கும், காய்களுக்கும், சிலவேளை எஸ்கருட்டியாக இடப்படும். உள்மருந்தாகத் தண்ணீர்கலந்த கிருசஅமிலம் மாத்திரங் கொடுப்படும்.

**ரசிதம்.** **கிருசவைருதலோறிக்கமிலம். Diluted Hydrochloric acid.** கொள். ஐருகுலோறிக்கமிலம், எட்டு அன்சு; திஸ்திலித்த தண்ணீர், போதியது. அமிலத்தோடு பதினாறு அன்சு தண்ணீர் கலந்து அப்பால் 60 பாகை காங்கையில் அது இருபத்தாறரை அன்சு அளக்கத்தக்க போதிய தண்ணீர் சேர்க்கவும். **சோதனைகள்.** விசேஷகிருவிதம் 1.052, இதில் 345 கிறேனை அதாவது ஆறு திருமைத் தடஸ்திப்பதற்குச் சோடபருமவிலயனத்தில் 1000 கிறேன் அளவு வேண்டும். இது தண்ணீர் கலவாத அமிலத்தில் நூற்றுக்கு 10.58 பங்குக்குச் சரியாகும். ஆறு திரும் கிருசவமிலத்திலே

---

1 Nitrate of silver 2 Ammonia. 3 Nitric acid. 4 Neutralize. 5 Volumetric solution of soda 6 Chloride of Barium 7 Hydro-sulphuric acid. 8 Subacetate of Lead. 9 Escharotic, தகனி.

Digitized By Roja Muthiah Research Library

ஜ[1]கு என்ற சின்னத்தையுடைய ஐருகுலோறிக்கமிலத்தில் ஒரு மொல்குல் அதாவது 36 5 கிறேன் அடங்கியிருக்கும்.

**தன்மை.** இது அல்கலே[2]யைக் கெடுக்கும். ஸ்திமுலம்[3], தொணிகம்[4].

**உபயோகம்.** சன்னிச்சுரம்[5], சன்னிவச்சுரங்க[6]ளுக்கும், பிள்ளைகளுக்குண்டாகும் விடாச்சுரத்துக்கும், ஸ்காலதீனத்துக்கு[7]ம், சில வகையான குன்மத்துக்கும், கல்லடைசல்களுக்கும். விசேஷமாய் அக்சலிக்கமிலர்கல்[8], பாஸ்வரக்[9]கற்களுக்கும், சிவ்லிச[10] நோய்க்கும் குக்கலின் காலிகபருவங்களுக்கும் இது உபயோகமானது. கசத்தில் மற்று மருந்துகளுக்கு இது மெத்தஉதவியானது. பலவகையான சைனன்கி[11]யிலும், சொற்ப அருட்சி தேவையான தொண்டைநோய் மிடற்று நோய்களிலும் கார்கில்[12] மருந்துகளுக்குஇது நல்ல துணையாகும். இதாற் பல்லுக் கெட்டுப் போகாமற் பேணுவதற்கு இதைக் குடிக்கும் ஒவ்வொருமுறையும் தண்ணீராலாவது காரமில்லாத அல்கலேநீராலாவது வாயைச் செவ்வையாய் அலம்பவேண்டும்.

**தேயம்.** பத்து முதல் முப்பது மினிம் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவேண்டும்.

## இயோதம். IODUM. IODINE.

சின்னம் இ; அணுப்பாரம், 127.

இயோதம் ஓர் நிர் லோகமான பூதியம். இது பெரும்பாலும் கடற்பாசிச் சாம்பலிலிருந்து எடுக்கப்படுவது. தகடான கிரிஸ்தல்களாக இருக்கும். ஓர்வகை மணமும், கருமை நிறமும், லோகத்துக்குரிய மினுக்கமும் இதற்குண்டு. சூடேற்றும்போது சிறந்த செந்நீல நிறமான ஆவியைக் கக்கும். தண்ணீரில் மெத்தச் சொற்பமாய்க்கரையும்; அலக்கால்[13], ஈதர்க[14]ளிலும், பதாசியவியோதிர[15] நீரிலுமோ தாராளமாய்க் கரையும். இது கரைந்திருக்குந் தண்ணீரில் அமைலத்தை[16]யிடக் கரு நீலநிறம் பிறக்கும். **சோதனைகள்.** சூடேற்ற இது சேஷம்விடாமல் ஆவியாகும். முதலெழும்பும் பங்கிலே காரமான மணமுடைய நிறமற்ற மெல்லிய கிரிஸ்தல்கள் ஒன்றுமிராது. 12.7 கிறேன் இயோதத்தை 15 கிறேன் பதாசியவியோதிரங் கரைத்த ஒரு அன்சு தண்ணீரிற் கரைத்தால் அதின் நிறத்தை முற்றாய் அழிப்பதற்குச் சோடவதசல்விசின்[17]பருமவிலயனத்தில் 1000 கிறேன் அளவு வேண்டும்.

**தன்மை.** சிறு தேயத்தில் அல்திறவ[18]மும் தொணிகமுமாகும். பெருந்தேயத்தில் அழற்றி நஞ்சாகும். நெடுகக் கொடுத்தால் இயோதனம் என்ற அழற்சிக் குணங்கள் தொடர்பாயுண்டாகும். வெளிமருந்தாக இட்டால் ஸ்திமுலமும் எதிரழற்சி[19]யுமாகும். அமைலத்தோடு கூடும்போது கருநீல நிறமாகுமாகையால் இதை அமைலத்துக்குச் சோதனையாகக் கெமிஸ்தர் வழங்குவார்கள்.

**உபயோகம்.** ஸ்துருமம்[20] நோய்க்கும் அதைப்பற்றிஉண்டாகிற பிறநோய்களுக்கும் சோஷணக்கிரந்திக[21]ளின் வீக்கம் விப்புருதிகள்[22]புண்களுக்கும் ஸ்துருமத் தன்மை கொண்டவர்களுக்குண்டாகிற கண்ணோய், என்புமக்கல், பொருத்து வீக்கங்களுக்கும் இது உத்தமமான உண்மருந்தும் வெளி

---

1 Molecule. 2 Alkali. 3 Stimulant, தீவனி. 4 Tonic, ஓசதி. 5 Typhus. 6 Typhoid. 7 Scarlatina. 8 Oxalic acid. 9 Phosphate. 10 Syphilis. 11 Cynanche. 12 Gargle. 13 Alcohol. 14 Ether. 15 Iodide of Potassium. 16 Amylum. 17 Hyposulphite of soda. 18 Alterative, பரிணமி. 19 Counter-irritant. 20 Struma. 21 Lymphatic Gland. 22 Abscess.

Digitized By Roja Muthiah Research Library

மருந்துமாம். இதின் ஆவியை உறிஞ்சல் கசத்துக்கு உபயோகமாம்· மற்று நோய்களுள் புறங்குசில்[1], கபாலநீர்க்கோவை, பொருத்துநீர்க்கோவை, மற்று நீர்க்கோவைகளுக்கும், சினைப்பைவியாதிகள், திஸ்மெனுறீயம்[2], புரஸ்த கோளவீக்கம்[3], குரண்டங்க[4]ளுக்கும் ஈரல்வியாதிகள்[5] பிளிகைவியாதிக[6]ளுக்கும் வாதம், வாததுவாதம்[7] எரிசிப்பிலசு[8], உபசிவ்லிசு[9] அதைப்பற்றிய புண்கள், சருமநோய்களுக்கும் இது கொடுத்து நயங்கண்டது.

**தேயம்.** அரைக்காற் கிறேன் முதற் காற்கிறேன் வரைக்குத் துவங்கிப் படிப்படியாய் ஒரு கிறேன் வரைக்கு இன்னுங் கூடவுங் கூட்டித் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம். இதைத் தனியே கொடுப்பதரிது. பதாசியவியோதிரத்[10]தோடு கலந்துகொடுப்பதே திறமென்று காணப்பட்டது.

**ரசிதங்கள். இயோத ரஞ்சம்.** Tincture of Iodine. கொள். இயோதம், அரைஅன்சு; பதாசியவியோதிரம் கால் அன்சு; திட்டசீது[11] அரைநாழி. இயோதத்தையும் பதாசியவியோதரத்தையும் சீதிற் கரைக்கவும்.

**தேயம்.** ஐந்து மினிம் முதல் இருபது மினிம் வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். இதில் நாற்பது மினிமிலே ஒரு கிறேன் இயோதமும் அரைக்கிறேன் பதாசியவியோதிரமும் அடங்கியிருக்கும்.

**உபயோகம்.** பருத்த கோளங்கள் நோய்த்த பொருத்துகளுக்கும், காவிக சருமநோய்கள் சுவாச நோய்களுக்கும வெளிமருந்தாக இதை இறகாற் பூசுவது உத்தமம. மேலும் இதை மும்மடங்கு தண்ணீரோடு கலந்து குரண்டத்துக்குப் புகட்டுவார்கள்.

**இயோத நீர்.** Solution of Iodine. கொள். இயோதம் இருபது கிறேன்; பதாசியவியோதிரம், முப்பது கிறேன்; திஸ்திலித்த தண்ணீர் ஒரு அன்சு. கரைக்கவும்.

**இயோத லினிமேன்.** Liniment of Iodine. கொள். இயோதம் ஒன்றேகால் அன்சு; பதாசியவியோதிரம் அரை அன்சு; பூரம் கால் அன்சு. திட்டசீது பத்து அன்சு. முதல் மூன்று கட்டிச் சரக்குகளையும் திட்டசீதிற் கரைக்கவும்.

இது புறங்குசில், கழலைகள், முதலிய வீக்கங்களுக்குப் பூசப்படும். கொப்புளிக்கப்பண்ணுவதும் வீறுன எதிரழற்சியாவதுமே இதின் செயல்.

**இயோத வன்கேன்.** Ointment of Iodine. [இது 1864 ஆண்டிற் பிரசுரமான பிறித்தனிச் சிகிச்ச வாகடத்திற் சொல்லப்படுவது.] கொள். இயோதம், பதாசியவியோதிரம், வகைக்கு முப்பத்திரண்டு கிறேன், புரூவுசீது, ஒரு திரும்; பூதலாடு[12] இரண்டு அன்சு. இயோதம், பதாசியவியோதிரம் இரண்டையும் பீங்கான் உரலிலாவது, கல்லுரலிலாவது போட்டு சீதையும் விட்டு நன்றாய் அரைத்து லாட்டைப் படிப்படியாய்ச் சேர்த்துச் செவ்வையாய்க் கலக்கவும்.

முந்தின மருந்துகள் இரண்டும் வழங்கப்படும் நோய்களுக்கே இதுவும் பூச்சுமருந்தாக உதவும்.

**இயோத வினலாசம்.** Inhalation of Iodine. கொள். இயோதரஞ்சம் ஒரு திரும்; தண்ணீர் ஒரு அன்சு. இவைகளைக் கலந்து ஏற்ற பாத்திரத்தில் விட்டுச் சொற்ப சூடேற்றினபின் கிளம்புமஆவியைச் சுவாசிக்கவும்.

---

1 Bronchocele. 2 Dysmenorrhoea. 3 Prostate Gland. 4 Hydrocele. 5 Liver 6 Spleen. 7 Rheumatic gout. 8 Erysipelas. 9 Secondary syphilis. 10 Iodide of Potassium. 11 Rectified spirit. 12 Prepared Lard, இடியம்.

Digitized By Roja Muthiah Research Library

## புரோமம். BROMUM. BROMINE.

சின்னம், பு; அணுப்பாரம், 80.

இது கடற்றண்ணீரிலும் சவுருற்றுகளிலுமிருந்து எடுக்கப்படும் லோகமல்லா நீர்ப் பூதியம். இது கருமையான கபிலச் சிவப்புநிறமானது, சுறுக்கில் ஆவியாய்ப் போகும்; வீறான நாற்றங்கொண்டது. இதின் விசேஷகுருவிதம்[1] 2.966. பரமாணுவின் வாடிக்கையான காங்கையில் இது சிவப்பாய்ப் புகையும். 145¼ பாகையிற் கொதிக்கும். சோதனை. இந்த நீர் சற்றே அல்கலை[2]யாய் நிற்கத்தக்க அளவான சோடநீரை[3] இத்தோடு சேர்த்துக் குலுக்கினால் இது நிறமற்ற நீராகும். அதோடு இன்னுஞ் சொற்ப அளவான புரோமம் சேர்த்து நிறக்கச்செய்து பிற்பாடு சூடற்ற அமைல்[4]நீர் கூட்டினால் அது செம்மஞ்சள் நிறமான கலவையாகும்.

தன்மை. சுத்தமாயிருக்கையிற் காரமும்[5] அழற்றி[6]யுமாகும். தண்ணீரோடு முறையாய்க் கலந்து சிறுதேயமாய்க் கொடுத்தாற் தொணிக[7]மும் தியுறீசமும்[8] அல்திறவ[9]மும் ஆகும். இதின் செயல் விசேஷமாய்ச் சோஷணிக[10]ளிலேயே செல்லும். செயலில் இது இயோதத்தைப் போன்றது. மேலும் இது தியோடறிசரும்[11] திசின்வெக்து[12]மானது.

உபயோகம். ஸ்துருமத்துக்கும்[13] அதை யடுத்த நோய்களுக்கும் இது உள்மருந்தாகக் கொடுக்கப்படும். அழுகற்புண்கள், எரிசிப்பிலசு[14] தொல்லையான சரும நோய்களுக்கு வெளிமருந்தாயிடப்படும்.

தேயம். ஒரு பங்கு புரோமத்தை 40 பங்கு தண்ணீரோடு கலந்து அதிலே ஆறு மினிம் முதல் எட்டு மினிம் வரைக்கு உள்ளே கொடுக்கலாம். வெளிமருந்தாக இடுவதற்கு இதில் ஐந்து முதற் பதினைந்து கிறேனை ஒரு அன்சு லாட்டிற் சேர்த்துப் பூசலாம். அமோனதபுரோமிரம்[15] பதாசியபுரோமிரம்[16] என்ற மருந்துகளில் புரோமமே அதி சத்தான கூறாய்ச்சேர்ந்திருக்கும். அதைச் செலுத்துவதற்கு இவைகள் உத்தமம்.

## நீதுருசம். NITROGEN.

சின்னம், நீ; அணுப்பாரம், 14.

நீதுருசம் என்பது நிறம், மணம், ருசியற்ற ஓர் வாயு. இது பரமாணுவிலே நூற்றுக்கு 77 பங்கு வீதமாய்ச் சேர்ந்திருக்கின்றது. பிராணியபதார்த்தங்களெல்லாவற்றிலும் தாவர பதார்த்தங்கள் பலவற்றிலும் ஓர் கூறாகின்றது. இதை அதிகமாய் அடக்கியிருப்பவைகள் அதி போஷணையுள்ள உணவாம். இது வேறு பூதியங்களோடு சேர்ந்து நீதுரிக்கமிலம்[17], அமோனம்[18], முதலியவை போன்ற முக்கியமான அனேக கலவைகளாகின்றது.

## நீதுரிக்கமிலம். NITRIC ACID.

இது வெடியுப்போடாவது இந்துப்போடாவது சல்வுரிக்கமிலமும்[19] தண்ணீருங் கலந்து திஸ்திலிக்கப்[20] பிறக்கும் அமிலம். இதிலே ஐநீஅ$_3$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுவதாகிய நீதுரிக்கமிலம் அளவின்படி நூற்றுக்கு

---

1 Specific Gravity. 2 Alkali. 3 Soda. 4 Amylum. 5 Caustic. 6 Irritant. 7 Tonic 8 Diuretic. 9 Alterative. 10 Lymphatic. 11 Deodorizer, சுத்திகினி. 12 Disinfectant, அபசஞ்சாரி. 13 Struma. 14 Erysipelas. 15 Bromide of Ammonium. 16 Bromide of Potassium. 17 Nitric acid. 18 Ammonia. 19 Sulphuric acid. 20 Distil.

Digitized By Roja Muthiah Research Library

70 பங்கு வீதமாய் அடங்கியிருக்கும். அது நீ$_2$ அ$_5$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுவதாகிய அவைரு[1]நீதுரிக்கமிலத்தில் நூற்றுக்கு 60 பங்குக்குச் சரியாகும். லட்சணங்கள். இது நிறமற்ற நீர்; விசேஷகிருவிதம்[2] 1 42, பரமாணுவிலே திறந்துவைத்தால் காரமான அரிக்குமாவியாகப் புகையும். சோதனைகள். இதைச் செப்புப் பொடியின்மேல் வார்த்தால் உடனே அடர்த்தியான சிவந்த ஆவி உண்டாகும். இந்த அமிலத்தைச் சம அளவு தண்ணீரோடு கலந்தபின் செம்பிற் சேர்ந்தாலோ நிறமற்ற வாயுஉண்டாகும். இந்த வாயு பரமாணுவோடு கலக்கும்போது வெண்சிவப்பு நிறமடையும். இதை அன்னபேதி நீரோடு கலந்தால் அது கருங் கபிலநிறமாகும். நீதுரிக்கமிலம் 250 பாகை சூட்டிற் கொதிக்கும். இதைத் திஸ்திலித்தால் முடியுந்தனையும் பிறக்கும் ஆவி ஒரே தன்மையாகவேயிருக்கும். முற்றாய் வறட்டினாற் சேஷமிராது. இதை அளவின்படி ஆறுமடங்கு திஸ்திலித்த நீரோடு சலந்து பாரிதகுலோறிர[3]மாவது வெள்ளி நீதுர[4]சாவது சேர்க்க அடையல் உண்டாகாது. இதில் நிறைப்படி தொண்ணூறு கிறேனை அரை அன்சு திஸ்திலித்த நீரோடு கலந்தால் அதைத் தடஸ்திப்ப[5]தற்குச் சோடபருமவிலயனத்[6]தில் 1000 கிறேன் அளவு வேண்டும்.

தன்மை. வீறான எஸ்கருட்டி, காரம். இதைத் தோலிற்பூசினால் அது நிலையான மஞ்சள்நிறமடையும். அதில் அல்கலைநீர் இட்டால் அந்நிறங் கதிக்கும். முழுப் பெலனான நீதுரிக்கமிலத்தைக் குடித்தால் அது கொடிய அபூற்றுநஞ்சாய்ச் சேஷ்டிக்கும்.

உபயோகம். முக்காதனியாகிய வாயில் அழுகற்புண்கள், மூலமுளைகள், சிவ்விசு[7]ப் புண்கள், காய்கள் முதலியவற்றைச் சாரமான நீதுரிக்கமிலத்தாற் கருக்கினால் அது அவற்றை அழித்துச் சுகப்படுத்தும். மற்றுமினிறமிலங்க[8]ளெவற்றிலும இதுவே இவற்றிற்கு உவந்தது.

ரசிதங்கள். கிருசநீதுரிக்கமிலம். Diluted Nitric acid. கொள். நீதுரிக்கமிலம், ஆறு அன்சு; திஸ்திலித்த[9] தண்ணீர், போதியது; அமிலத்தை இருபத்துநாலு அன்சு தண்ணீரோடு கலந்து, அது 60 பாகை காங்கையில் முப்பத்தொரு அன்சு அளக்கத்தக்கதாய்ப் பின்னுந் தண்ணீர் கூட்டவும். லட்சணங்கள், சோதனைகள். நிறமற்றது; விசேஷகிருவிதம், 1.101. இதில் நிறைப்படி 361.3 கிறேனை, அதாவது ஆறுதிருமைத் தடஸ்திப்பதற்குச் சோடபருமவிலயனத்தில் 1000 கிறேனளவு வேண்டும், இதிலே அவைரு நீதுரிக்கமிலம்[10] நூற்றுக்கு 14.95 பங்கு உண்டென்று விளங்குகிறது. ஆகையால் ஆறுதிருமும் அவைரு அமிலத்தில் ஐம்பத்துநாலு கிறேனுக்குச் சரி.

தன்மை. அபால்கலை[11], தொணிகம்[12], அல்திறவம்[13], குளிர்ச்சியானது. வெளியிலிட்டால் ஸ்திமுலம்[14].

உபயோகம். சிவ்விசுக்கும் அதைப்பற்றிய நோய்களுக்கும் இரசபாண்டு[15], ஈரல், பிளிகைகளின் காலிகநோய்கள், கல்லடைசல்களுக்கும், விசேஷமாய்ப் பாஸ்வசுக்[16] கல்லடைசுஞ் சார்புள்ளவர்களுக்கும் சலப்பைத்தாபிதம், சிஸ்துறீயங்க[17]ளுக்கும் இது நயந்த மருந்து. மற்று நோய்களுள் நீர்க்கோவை விசேஷமாய் ஈரல்வியாதியைப் பற்றியாவது இரசத்தை நெடுகத்

---

1 Anhydrous. 2 Specific gravity. 3 Chloride of Barium. 4 Nitrate of silver. 5 Neutralize. 6 Volumetric solution of soda. 7 Syphilis. 8 Mineral acid, 9 Distilled water. 10 Nitric acid. 11 Ant-alkaline. 12 Tonic. 13 Alterative. 14 Stimulant. 15 Mercurial cachexia 16 Phosphate. 17 Cystirrhoea,

Digitized By Roja Muthiah Research Library

தின்றதினலாவது உண்டான நீர்க்கோவைக்கும், சர்க்கராமூரி[1], குக்கலின் பிற்பாதம், வாந்திபேதி, அதைப் போன்ற கழிச்சல், கடியல்சி[2], காலிகவாதங்களுக்கும் இது சித்தியாகக் கொடுக்கப்படும். நாட்பட்ட புண்கள், என்புமக்கல், தொல்லையான சருமரோய்களுக்கு இதைக் கன தண்ணீரோடு கலந்து லோஷ[3]னக இடுவது நலம்.

தேயம். பத்துத் தொடங்கி முப்பது மினிம்[4] வரைக்குக் கன தண்ணீரிற் கலந்து நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம், இதைக் குடிக்கும் ஒவ்வொருமுறையும் பல்லிற் கேளாதபடி வீறுகுறைந்த ஏதும் அல்கலே[5] நீரால் வாயை அலம்பவேண்டும். லோஷனக வெளியிலிடுவதற்கு இரண்டு முதல் நாலு திரும் அமிலத்தை அரைநாழி தண்ணீரிற் கலந்துகொள்ளவேண்டும்.

கிருசநீதுருவைருதலோறிக்கமிலம். Diluted Nitro-hydrochloric acid. கொள். நீதுரிக்கமிலம், மூன்று அன்சு; ஐருகுலோறிக்கமிலம்[6], நாலு அன்சு: தின்திலித்த தண்ணீர்[7] இருபத்தைந்து அன்சு. அமிலங்களைக் கலந்து சீசாவில் வார்த்து அதின் வாயைக் கொஞ்சம் மூடியபடி ஒருநாள் நிற்கவிட்டுப் பிற்பாடு தண்ணீரைப் படிப்படியாய்க் கூட்டிக் கூட்டும் ஒவ்வொருமுறையும் சீசாவை நன்ருய்க் குலுக்கவும். அடைத்த சீசாவிலே இக்கலவையைப் பேணவும். லட்சணங்கள், சோதனைகள். நிறமற்றது; விசேஷகிருவிதம்[8] 1.074. இதிலே 352.4 கிறேனை அதாவது ஆறு திருமைத் தடஸ்திப்பதற்குச்[9] சோடபருமவிலயன[10]த்தில் 920 கிறேன் அளவு வேண்டும்.

தன்மை. கிருச நீதரிக்கமிலத்தைப்[11] போலவே.

உபயோகம். நாட்பட்ட ஈரல் வியாதிகளுக்கும், அவைகளைப் பற்றிய திசந்தெரி[12]க்கும், செங்கண்மாரி[13]க்கும் ஈரல் வியாதியையாவது பிளிகை[14]வியாதியையாவது பற்றி உண்டான நீர்க்கோவைக்கும், இதை உள்ளே கொடுக்கவும். தோயம்[15], லோஷன், எபிதெம்[16] என்ற ஏதும் வகையாய் வெளியிலிடவும் உத்தம மருந்து. மேலும் அக்சலிக்கமிலபகவம்[17] சிஸ்திக்கக்சிற[18]பவகமுள்ளவர்களுக் குண்டாம் கல்லடைசலுக்கும் காலிகபுறங்கீது[19] சுவாசப்பை அழுகல், ஸ்காலதீனம்[20], சன்னிச்சுரம்[21], சன்னிவச்சுரம்[22], உபசிவ்விசு[23] நோய்களுக்கும் இது உவந்தது.

தேயம். ஐந்து மினிம் முதல் இருபது மினிம் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம். தோயங்களுக்கும், வெளிப் பூச்சுக்கும், ஆறு அன்சு முதல் எட்டு அன்சு வரையில் நாலுநாழி தண்ணீரிற் கலப்பதே வாடிக்கையான பிரமாணம்.

## அமோனம். AMMONIA.

சின்னம், நீஐ; அணுப்பாரம் 17.

இது தனித்தாவது கலந்தாவது இந்திர அநிந்திர பதார்த்தங்கள் அடங்கலும் மெத்தச் செறிந்திருக்கும். பரமாணுவிற் சொற்பமாயிருக்கின்றது,

---

1 Diabetes. 2 Cartialgia. 3 Lotion. 4 Minim. 5 Alkali. 6 Hydrochloric acid. 7 Distilled water. 8 Specific gravity. 9 Neutralize 10 Volumetric solution of soda. 11 Diluted Nitric acid. 12 Dysentery. 13 Jaundice 14 Spleen. 15 Bath. 16 Epithem. 17 Oxalic acid diathesis. 18 Cystic oxide. 19 Chronic Bronchitis. 20 Scarlatina. 21 Typhus. 22 Typhoid. 23 Secondary syphilis.



Digitized By Roja Muthiah Research Library

மறுவஷ சிறுநீரின் கூறுகளுள் இதுவுமொன்று. அதிலே பாஸ்வரிக்கமிலம்[1] ஐருகுலோறிக்கமிலம்[2], லிதிக்[3]கமிலங்களோடு இது கலந்திருக்கும். அழுகும் பிராணியபதார்த்தங்களிலிருந்தும் இது பிறக்கும். இது வீறுன மணமும், காரமான அல்கலேச்[4] சுவையுமுள்ள நிறமற்ற உருவெளியான வாயு. மஞ்சட்டாளை[5] இது சிவப்பாக்கும். அதைப் பரமாணுவில் வைக்க அது மறுபடி முந்தின நிறத்தை அடையும். இது ஐருகுலோறிக்கமில ஆவியோடு அணையும்போது வெண் புகையைக் கக்கும். இதின் விசேஷகிருவிதம்[6] 0.59.

## அமோனகர நீர். STRONG SOLUTION OF AMMONIA.

நீஜ$_3$ என்ற அமோன வாயு தண்ணீரிற் கரைந்து அதிலே நூற்றுக்கு 32.5 பங்காயிருக்கும், லட்சணங்கள். இது நிறமற்ற நீர். தனக்கேயுரிய மெத்தக் காரமான மணமும் வீறுன அல்கலேத் தன்மையுமுடையது. சோதனைகள். விசேஷகிருவிதம், 0 891. இதில் நிறைப்படி 52.3 கிறேனைத் தடஸ்திப்பதற்கு[7] அக்சலிக்கமில பருமவிலயனத்தில்[8] 1000 கிறேனளவு வேண்டும். இதில் ஒரு திருமிலே நீஜ$_3$ என்ற அமோனம் 15.83 கிறேன் இருக்கும். இதை நாலுமடங்கு திஸ்திலித்த தண்ணீரோடு கலந்தால் சுண்ணநீராவது அமோனவக்சலசு[9] அமோனதசல்விரம்[10] செம்பமோனசல்வசு[11] என்பவற்றில் ஏதும் ஒன்று கரைத்த நீராவது சேர்க்கும்போது அடையல் தோன்றாது. மிஞ்சிய நீதுரிக்க[12]மிலஞ் சேர்த்தால், வெள்ளிநீதுரசு[13]க்காவது பாரிதகுலோறிரத்துக்[14]காவது கலங்கலாகாது.

**தன்மை.** பெலனுள ஸ்திமுலமும்[15], அழற்றியும்; தானிகமாயிட்டால் காரம்; கொப்புளிக்கப்பண்ணும். இதின் ஆவியும் வீறுன ஸ்திமுலம். அதிதேயத்தில் நஞ்சாகும்.

**உபயோகம்.** பின்னே வரும் அமோன நீரைப் போலவே.

**தேயம்.** மூன்று மினிம் முதற் பத்து மினிம் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவேண்டும்.

**ரசிதங்கள். அமோனநீர்.** Solution of Ammonia. கொள். அமோனகர நீர், அரைநாழி; திஸ்திலித்த தண்ணீர் ஒருநாழி. கலந்து கண்ணடிச் சடையுள்ள சீசாவில் அடைத்துப் பேணவும். சோதனைகள். விசேஷகிருவிதம், 0.959. இதில் நிறைப்படி எண்பத்தைந்து கிறேனைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமிலபருமவிலயனத்தில் 500 கிறேன் அளவு வேண்டும். இது நிறைப்படி நீஜ$_3$ என்ற அமோனத்தில் நூற்றுக்கு 10 பங்குக்குச் சரியாகும். இதில் ஒரு திருமிலே 5.2 கிறேன் அமோனம் அடங்கியிருக்கும்.

**தன்மை.** இதை உள்ளே கொடுத்தாலென்ன, வெளியிலே வழங்கினுலென்ன ஆவியாய்ப் பிரயோகித்தாலென்ன நல்ல ஸ்திமுலமாகும்.

**உபயோகம்.** காய்ச்சல் தாபித நோய்களின் பிற்கூற்றிலும், வாந்திபேதி முதலிய நோய்களிற் சீவகரணங்கள் குன்றியிருக்கும்போதும் கொடுக்க இது உத்தம ஸ்திமுலமாகும். விசேஷமாய் இவ்வகுப்பைச் சேர்ந்த மற்று மருந்துகளோடு கலந்து கொடுப்பதே உத்தமம். விஷப்பாம்பு விஷப்பூச்சி

---

1 Phosphoric acid. 2 Hydrochloric acid. 3 Lithic. 4 Alkali. 5 Turmeric paper. 6 Specific gravity. 7 Neutralize. 8 Volumetric solution of oxalic acid. 9 Oxalate of Ammonia. 10 Sulphide of ammonium. 11 Ammonio-sulphate of copper. 12 Nitric. 13 Nitrate of silver. 14 Chloride of Barium. 15 Stimulant.

Digitized By Roja Muthiah Research Library

கடித்தவர்களுக்கு உள்ளே கொடுக்கவும் வெளியிலிடவும் இது கைகண்ட மருந்து பெலவீனத்தோடு தொடுத்த சிராநோய்க[1]ளுக்குப் பெரும்பாலும் உவந்தது. சின்குபி[2]க்கும், அஸ்விக்சிக்கும்[3], இதின் ஆவியை வீறுகுறைக்கக் காற்றுடன் கலந்து மணக்கக் கொடுப்பது மெத்தநயம்

தோயம். பத்து முதல் முப்பது துளி வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவும்.

அமோனலினிமேன். Liniment of Ammonia. கொள். அமோனநீர், ஒரு அன்சு; ஒலீவுத்தைல்[4] மூன்று அன்சு. குலுக்கிக் குலுக்கிக் கலக்கவும்.

இது நல்ல ஸ்திமுலமும் ருபிவாஷனுமாகும்[5].

அமோனசுகந்த ஸ்பிறிது[6] இங்கமோனஸ்பிறிது[7], பூரக்கூட்டுலினிமென்[8] இரசலினிமென்[9], அவினமோனரஞ்சம்[10], என்ற வாகட ரசிதங்களில் அமோனநீர் ஓர் கூறாகச் சேருகின்றது.

## அமோனகாபனசு. CARBONATE OF AMMONIA.

இதற்குச் சின்னம் நீ$_4$ ஜ$_{16}$ கா$_3$ அ$_8$. இது குடிபோகக்கூடிய கார்ப்பான அமோன உப்பு. அமோனசல்வசை[11]யாவது, அமோனதருலோறிரத்தை[12]யாவது சுண்ணகாபனை[13]சோடு கலந்து, புடஞ்செய்து, இது எடுக்கப்படும்.

லட்சணங்கள். இது சற்றே உருவொளியான கிரிஸ்தற் கட்டி[14]. கார்ப்பான அமோன மணமும் அல்கலி[15]த் தன்மையுமுடையது. தண்ணீரிற் கரையும். சீதிற்[16] சொற்பமாய்க் கரையும். சூடுகாட்ட முற்றாய்ப் பறந்துபோகும். அமிலங்களிற் போட உடனே நுரைகொண்டு கரையும். சோதனைகள். இதற்குக் கிருசநீதுரிக்கமில[17]த்தைச் சற்று மிஞ்சக் கூட்டிக்காய்ச்சி றற்பாரிதருலோறிர[18]மாவது, வெள்ளிநீதுரசாவது[19]சேர்க்க அடையல் காணாது. ஐம்பத்தொன்பது கிறேனை ஒரு அன்சு திஸ்திலித்த[20] தண்ணீரிற் கரைத்துத்தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில[21]பருமவிலயனத்தில்[22] 1000 கிறேனளவு வேண்டும்.

தன்மை. இது அபாமிலி[23] ஸ்திமுலம்[24], சுவேதனி[25], எக்ஸ்பெக்துறம்[26]; பருந்தேசத்தில் வமனி[27]; மிஞ்சிய தேயத்தில் நஞ்சு.

உபயோகம். கடியல்சியையும்[28]குக்கிக்கேதத்தையும்[29] இது சுறுக்குத் தணிக்கும். ஸ்காலதீனம்[30], சின்னமுத்து, எரிசிப்பிலசு[31], எட்டிகாறி[32]என்ற நோய்களுக்கும் சில சரும நோய்களுக்கும், விசேஷமாய், குஷ்டம், சொரீயசிக்தம்[33] இது உத்தம மருந்து. காலிக[34]மத்திம[35]சுவாச நோய்களுக்கு இது ஸ்திமுலஎக்ஸ்பெக்துறமாய்உபயோகமானது. விசேஷமாய்செனிகவேரோடு[36] கூட்டிக் கொடுத்தால் அப்படியாகும். மற்றுநோய்களுள் இஸ்தேரி[37] எபிலெப்சி[38], பிரசவபைத்தியம், சோர்வு[39], பார்சினோமம்[40], விலெக்மாசியல்பம்[41]

1 Nervous affections. 2 Syncope, 3 Asphyxia. 4 Olive oil. 5 Rubefacient. 6 Aromatic spirit of Ammonia. 7 Fetid spirit of Ammonia. 8 Compound Liniment of camphor. 9 Mercurial liniment. 10 Ammoniated tincture of Opium. 11 Sulphate. 12 Chloride. 13 Carbonate of lime. 14 Crystal. 15 Alkali. 16 Spirit. 17 Diluted Nitric acid. 18 Chloride of Barium. 19 Nitrate of Silver. 20 Distilled water. 21 Oxalic acid. 22 Volumetic solution. 23 Antacid. 24 Stimulant. 25 Diaphoretic. 26 Expectorant. 27 Emetic. 28 Cardialgia 29 Gastrodynia. 30 Scarlatina. 31 Erysipelas. 32 Urticaria. 33 Psoriasis. 34 Chronic. 35 Sub-acute. 36 Senega. 37 Hysteria. 38 Epilepsy. 39 Palsy. 40 Farcinoma. 41 Phlegmasia Alba.

Digitized By Roja Muthiah Research Library

ஈளை யென்பவற்றுக்குக் கொடுத்து நயங்கண்டது. சர்க்கராமூரிக்கும்[1] இது அவுஷதம் என்று சொல்லப்பட்டது. கடுங் குளிர், வாதங்களுக்குப் பிரயோகிக்கப்படும் வெந்நோயத்துக்கு இது நல்ல கூட்டாகும். சின்கு பி[2], அஸ்விக்சிக்கு[3] இதின் ஆவி மெத்த உவர்ந்தது.

**தேயம்.** ஐந்து முதற் பதினைந்து கிறேன் வரைக்குக் கரைத்துக்கொடுக்கவும். முப்பது கிறேன் தேயத்தில் இது வமனியாகும்.

**ரசிதங்கள். அமோனசுகந்த ஸ்பிறிது.** Aromatic Spirit of Ammonia. கொள். அமோனகாபனசு எட்டுஅன்சு; அமோனகரநீர் நாலு அன்சு; சிடவத்திரதேல்[4] நாலுதிரும்; சபபங்தேல்[5] ஆறுதிரும்; திட்டசீது[6] மூன்றுநாழி; தண்ணீர் ஒன்றரைநாழி. கலந்து திஸ்துலித்து மூன்றரைநாழி எடுக்கவும். **சோதனை.** விசேஷகுருவிதம், 0.870.

**தன்மை, உபயோகம்.** இந்த மருந்து அத்திர லவண ஸ்பிறிது[7] என்ற பெயருடன், சின்குபி, இஸ்தேரி[8], நரம்புப் பெலவீனம், வாயுவலி முதலியவற்றிற்கு ஸ்திமுலமாய் வெகுகாலம் பெரும்பெயர்பெற்றிருந்தது. இதின் சுவை மணம் நல்லதாயிருப்பதால் அமோனநீருக்குப் பதிலாக இதையே பெரும்பாலும் எடுத்துக்கொள்வார்கள். அதிலும் இது பெலன்குறைந்ததாயினும் தன்மையில் அதற்கு நிகரானது.

**தேயம்.** முப்பது முதல் அறுபது மினிம் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவும்.

குவயகவமோனரஞ்சம்[9], வலீரியன மோனரஞ்சங்களில்[10] இது ஓர்கூறாகச் சேருகின்றது.

**இங்கமோனஸ்பிறிது.** Fetid Spirit of Ammonia. கொள். இங்கு[11] ஒன்றரை அன்சு; அமோனகர நீர் இரண்டு அன்சு; திட்டசீது போதியது. இங்கை நொருக்கி மூடிய பாத்திரத்திற் பதினைந்து அன்சு சீதில் ஒருநாள் ஊறப்போட்டு அப்பாற் சீதைத் திஸ்திலித்து[12] எடுத்து அதை அமோன நீருடன் கலந்து, அரைநாழியாகப் போதிய திட்டசீது சேர்க்கவும்.

**தன்மை.** இது நயந்த ஸ்திமுலம்[13] அந்திஸ்பசி[14].

**தேயம்.** அரைத் திரும் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கவும்.

## அமோனவசிதசு நீர்.

## SOLUTION OF ACETATE OF AMMONIA.

இது நீஐ$_4$ கா$_2$ ஐ$_3$ அ$_2$ என்ற சின்னத்தையுடைய அமோனவசிதசைத்[15] தண்ணீரிற் கரைத்த நீர். கொள், அசிதிக்கமிலம்[16] பத்து அன்சு; அமோனகாபனசு[17] மூன்றேகால் அன்சு அல்லது போதியது; திஸ்திலித்த தண்ணீர் ஒன்றேகால் நாழி. அமோனகாபனசை மாவாக அரைத்து அதைப் படிப்படியாய் அசிதிக்கமிலத்தோடுதடஸ்தவிலயன[18]மாகுந்தனையுங்கூட்டி அப்பாற் தண்ணீரைச் சேர்க்கவும்.

**தன்மை.** இது குளிர்மையானது, சுவேதனி.

**உபயோகம்.** சுரநோய்களிலும் தாபித[19]நோய்கள் கதார்[20]நோய்களிலும்,

---

1 Diabetes. 2 Syncope. 3 Asphyxia. 4 Volatile oil of nutmeg. 5 Lemon oil. 6 Rectified spirit. 7 Spirit of sal Volatile. 8 Hysteria. 9 Ammoniated Tincture of Guaiac. 10 Ammoniated Tincture of Valerian. 11 Assafoetida, பெருங்காயம். 12 Distil. 13 Stimulant. 14 Antispasmodic. 15 Acetate of Ammonia. 16 Acetic acid. 17 Carbonate of ammonia. 8 Neutral solution. 19 Inflammation 20 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

குளிர்ந்த, சுவேதனக்கலவைகளுக்கு இது நல்ல துணைமருந்தாகும். தண்ணீரோடு கலந்து வெளிமருந்தாக, தானிக[1]தாபிதங்களுக்குக் குளிர்ந்த லோஷனாக[2] இடப்படும். சிலவகையான கண்ணோய்களுக்குக் கலூறிய[3]மாய் விடப்படும்.

தேயம். இரண்டு திரும் முதல் ஆறுதிரும் வரைக்குத் தண்ணீரோடு முறையாய்க் கலந்து மூன்று நாலு மணி நேரத்துக்கொருமுறை கொடுக்கவும்.

## அமோனசிதிறசு நீர்.
## SOLUTION OF CITRATE OF AMMONIA.

இது 3நீஐ$_4$ கா$_6$ ஐ$_5$ அ$_7$ என்ற சின்னத்தையுடைய அமோன சிதிறசைத் தண்ணீரிற் கரைத்த நீர். கொள். சிதிறிக்கமிலம்[4], மூன்று அன்சு; அமோன சாரநீர்[5]இரண்டே முக்கால் அன்சு, அல்லது போதியது; திஸ்திலித்த தண்ணீர் அரைநாழி. சிதிறிக்கமிலத்தைத் தண்ணீரிற் கரைத்து அது சோதனைத்தாளுக்குத்[6] தடஸ்த[7]நீராய் வருந்தனையும் அமோன நீரைக் கூட்டவும்.

தன்மை, உபயோகம், தேயம். அமோனவசிதசு நீரைப் போலவே. இதின் ருசி அதிலும் நயந்தது.

## அமோனபேஞ்சோவசு.
## BENZOATE OF AMMONIA.

இதற்குச் சின்னம், நீஐ$_4$ கா$_7$ ஐ$_5$ அ$^3$. இதைச்செய்யுமுறையாவது: கொள். அமோன நீர் மூன்று அன்சு அல்லது போதியது. பெஞ்சோயிக்கமிலம்[8], இரண்டு அன்சு; திஸ்திலித்த தண்ணீர் நாலு அன்சு; அமோனநீர் மூன்று அன்சைத் தண்ணீரோடு கலந்துகொண்டு அக்கலவையிலே பெஞ்சோயிக்கமிலத்தைக் கரைத்து அமோனம் சற்று மிஞ்சியிருக்க மெஞ்சூட்டில்வறட்டிக் கிறிஸ்தல்கள்[9] விளையத்தக்கதாய் வைத்துவிடவும். லட்சணங்கள். நிறமற்ற தகட்டுக் கிறிஸ்தல்களாய் இருக்கும். தண்ணீரிலும் அலக்காலிலும்[10] கரையக்கூடும். அயபிரவுப்பு[11]களோடு கூடினால் மொத்தமான மஞ்சள் நிற அடையலைவிழுத்தும்; தண்ணீரிற் கரைத்துக் காரப்பதாசி[12]யோடு காய்ச்சினால் அமோனத்தைக் கக்கும். கொஞ்சத் தண்ணீரிற் கரைத்து, ஐதருலோறிக்கமிலத்தாற்[13] புளிப்பாக்கினால், பெஞ்சோயிக்கமிலம் அடையும். சோதனை. சூடு ஏற்றினால் சேஷமில்லாமற் குடிபோகும்.

தன்மை. இது ஸ்திமுலம். விசேஷமாய்ச் சனனசல உறுப்புகளின் சளிச்சவ்வை அருட்டும்.

உபயோகம். சலப்பையின் காலிக[14]தாபிதங்க[15]ளுக்கும், சிறுநீரிலுண்டாகும் பாஸ்வரக்[16] கல்லடைசலை மாற்றுவதற்கும் இது கொடுத்து நயந்தாம்.

நேயம். பத்து முதல் இருபது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்து நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

## அமோன பாஸ்வசு.
## PHOSPHATE OF AMMONIA.

இதற்குச் சின்னம் (நீஐ$_4$)$_2$ ஐபாஅ$_4$. கொள். கிருசபாஸ்வரிக்கமிலம்[17]

---

1 Local. 2 Lotion 3 Collyrium. 4 Citric acid. 5 Strong solution of Ammonia. 6 Test paper. 7 Neutral. 8 Benzoic acid. 9 Crystal. 10 Alcohol. 11 Persalt of Iron 12 Caustic Potash. 13 Hydrochloric acid. 14 Chronic. 15 Inflammation. 16 Phosphate. 17 Diluted Phosphoric acid.

Digitized By Roja Muthiah Research Library

இருபது அஞ்சு; அமோனகர[1] நீர் போதியது. பாஸ்வரிக்கமிலஞ் சற்றே அல்கலைத் தன்மைகொள்ளுந்தனையும் அதற்கு அமோனநீரைக் கூட்டி, அப்பால் அக்கலவையை வறட்டி இடைக்கிடை அமோனநீரை மிஞ்சச் சேர்த்து ஆறிக் கிறிஸ்தல்கள் விளையும்போது அவைகளை கண்ணறைத் தட்டின் மேல் வைத்த ஊறுதாளில் சுருக்கு உலர்த்திக் கண்ணடிச் சடையுள்ள சீசாவில் இட்டு அடைத்துவைக்கவும். லட்சணங்கள். இவை உருவொளியான நிறமற்ற பிரிசங்கள்[2]. தண்ணீரிற் கரையும். திட்டசீதிற்[3] கரையாது. காரப்பதாசி[4]யோடுகாய்ச்சும்போது, அமோனம் பறியும். தண்ணீரிற் கரைத்து அத்தோடு காடிக்காரஞ்[5]சேர்க்க, மஞ்சள்நிற அடையல் விழும். சோதனைகள். இந்த உப்பில் இருபது கிறேனைத் தண்ணீரிற் கரைத்து அதற்கு மக்னீசியமோனசல்வசு[6]நீரைக் கூட்டினால் கிறிஸ்தலான[7] அடையல்விழும். இந்த அடையலை வடியில்[8]இட்டுச் சமபங்கு தண்ணீரோடு கலந்த அமோனநீரால் நன்றாய்க் கழுவி, உலர்த்திச் சிவக்கக் காய்ச்சினால் 16.8 கிறேன் மக்னீசியபைறுபாஸ்வசு[9] எஞ்சும்.

தன்மை. இது ஸ்திமுலசு[10]. இதின் செயல் விசேஷமாய்ச், சல உறுப்புகளிலேயே தோற்றும்.

உபயோகம். லிதிக்கமில[11]பவகத்தோடு[12]தொடுத்த தீவிரகாலிக நோய்களுக்கும் விசேஷமாய்ச் சிலவகையான குவாதத்[13]துக்கும் இதுகொடுத்து நயக்கது.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேன் வரைக்கு நாள் மூன்றுமுறை கொடுக்கலாம்.

## அமோனத குலோரிரம். நவச்சாரம்.
## CHLORIDE OF AMMONIUM.

இதற்குச் சின்னம் நீஐ₄ கு. ஐருகுலோறிக்கமிலத்தை[14] அமோனத்தாற்[15] திஸ்தித்து உலர்த்த இது வரும். கரிவாயுவும்[16]எணைக்கரியும்[17] செய்யும்போது பிறக்கும் அசுத்தமான அமோன நீர்களிலிருந்து இது விசேஷமாய்ச் செய்யப்படும். லட்சணங்கள். நிறமற்றது; மணமற்றது; உருவொளியானது; கூந்தலுள்ள கட்டியாயிருக்கும். உரப்பானது; மாவாக்குவது பிரயாசம். தண்ணீரிலும் திட்டசீதிலுங் கரையக்கூடியது. சோதனைகள். இதைத் தண்ணீரிற் கரைத்துக் காரப்பதாசியோடு காய்ச்ச அமோனம் பிறக்கும். காடிக்காரஞ் சேர்க்க தயிர் போன்ற கன அடையலுண்டாகும். காய்ச்சும் போது கூறுபடாமலும் சேஷம்விடாமலும் ஆவியாகும்.

தன்மை. சிறு தேயத்தில் நெடுகக் கொடுத்தால் அல்திறவம்[18]. பெருந் தேயத்தில் ஸ்திமுலசு. இது விசேஷமாய்ச் சோஷணிகளிலுங்[19] கோளங்களிலுஞ்[20] சேஷ்டிக்கும்.

உபயோகம். சுவாசப்பை, ஈரல், பிளிகைகளின் காலிக நோய்களுக்கும், ஈரல் நோய்கள், சினைப்பை நோய்களைப் பற்றிய நீர்க்கோவைக்கும், விபல[21]இரத்தப்பெருக்குக்கும் விசேஷமாய் இரத்த இருமலுக்கும், முகத்திலு

1 Strong solution of Ammonia. 2 Prism. 3 Rectified spirit. 4 Caustic potash. 5 Nitrate of silver. 6 Ammonio-sulphate of magnesia. 7 Crystal. 8 Filter. 9 Pyro-phosphate of magnesia. 10 Stimulant. 11 Lithic acid. 12 Diathesis. 13 Gout. 14 Hydrochloric acid. 15 Ammonia. 16 Coal gas. 17 Animal charcoal. 18 Alterative. 19 Absorbent. 20 Gland. 21 Passive.

Digitized By Roja Muthiah Research Library

ண்டாகும் நறல்சி[1], வாத நோய்களுக்கும், சிலவகையான சிரத்தலைவலிக்கும், நீட்டின்மைக்கும், குக்கலுக்கும், முறைச்சுரம் விடாச்சுரங்களுக்கும் இது உண்மருந்தாய் நயந்தது. வெளியில் மந்தக்கழலைகள், வீங்கின கோளங்களுக்கும் ஆரம்பமான ஸ்தன விப்புருதி[2]க்கும், குரண்டத்துக்கும்[3], சுளுக்குகள் நசிவுகள் சிலவகையான சருமநோய்களுக்கும், இதைத் தண்ணீர் சீதிற் கரைத்து இடுவார்கள்.

தேயம். நாட்பட்ட நோய்களுக்கு ஐந்து முதற் பதினைந்து கிறேன் வரைக்கு தண்ணீராதியிற் கரைத்து நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். கடுமையான நறல்சி நோ வாதநோக்களைத் தணிப்பதற்கு இதில் இரண்டு சிறும் உள்ளே செல்லுமட்டும் மூன்று நாலு மணி நேரத்துக்கொருமுறை அரைத்திருங் கொடுப்பதே உத்தமம். வெளியிலிடுவதற்கு அரை அன்சு முதல் ஒரு அன்சு வரைக்குப் பத்து அன்சு தண்ணீரிற் கரைத்து இடுவது வாடிக்கை. இந்த உப்பில் ஐந்துஅன்சையும் வெடியுப்பில் ஐந்து அன்சையும் பதினாறு அன்சு தண்ணீரிற் கரைக்க ஓர் விரீசுக்கலவை[4] உண்டாகும். ஐசு[5] கிடையாதவிடத்தில் இது உவப்பு.

[நவச்சாரம் என்று தமிழில் சொல்லப்படும் இச்சரக்கு மணமற்றது. காரமான கைச்சற்சுவையுள்ளது. தடித்த கூந்தல்களுள்ள உருவொளியான தகட்டுக் கட்டிகளாக இது இந்துக் கடைகளில் வரும். எருவறட்டியை விசேஷமாய் ஒட்டக எருவறட்டியை விறகாகப் போட்டுச் சுட்ட செங்கற்சூளையில் எரியாமல் எஞ்சிய அடிப்படையிலிருந்து இந்த நவச்சாரம் எடுக்கப்படும். இது அசுத்தமானது. இதை மருந்துக்குச் சேர்க்கில் வெந்நீரிற் கரைத்துக் காரிக்கம்புடைவையில் வடித்து வறட்டிக் கிரிஸ்தல்க[6]ளாக எடுக்கவேண்டும்.]

## அமோனத புறோமிரம்.
## BROMIDE OF AMMONIUM.

சீதற்குச் சின்னம். நீஐ₄ பு. இது நிறமற்ற கிரிஸ்தல்களாக இருக்கும். பரமாணுபடுவதாற் சற்றே மஞ்சள்நிறமடையும். காரமான உப்புச் சுவை உடையது இதைக் கூறுபடாமல் சூடேற்றி, அதின் தன்மையை மாற்றுமற் புடஞ்செய்யலாம். தண்ணீரிற் சுறுக்குக் கரையும். சீதிற்[7]சொற்பமாய்க் கரையும். சோதனை. இந்த உப்பைத் தண்ணீரிற் கரைத்து அமைலமுசிலாகு[8]டன் கலந்து அத்தோடு குலோறநீரில்[9] ஒரு துளியைக் கூட்டினால் நீலநிறந் தோன்றுமற் செம்மஞ்சள் நிறந் தோன்றும்.

தன்மை. இது உத்தமமான அல்திறவம்[10].

உபயோகம். கோள வீக்கங்கள், ஸ்துருமக் கண்ணோய், குக்கலுக்கும், நரம்புக்கிரந்தி மையங்களின் தொழிற் பிசகுபட்டிருக்கிற நோய்கள் பலவற்றிற்கும் இதைக் கொடுப்பது நயம்.

## பதாசியம். POTASSIUM.

சின்னம், ப; அணுப்பாரம். 39.

இது பதாசி[11] என்ற அக்சிரத்துக்குத்[12] தாரகமாகிய லோகம். பதாசிக்குச்

1 Neuralgia. 2 Mammary abscess 3 Hydrocele. 4 Freezing mixture. 5 Ice. 6 Crystal. 7 Spirit. 8 Mucilage of amylum. 9 Solution of Chlorum. 10 Alterative. 11 Potash. 12 Oxide.

Digitized By Roja Muthiah Research Library

சின்னம் பா.அ.=94. இப்படியே பதாசி என்ற அக்கிரமாக இந்த லோகமானது அமிலங்கள்[1], மண்களோடு கலந்ததாய் இந்திர அதிந்திர பதார்த்தங்களில் அதிகஞ் செறிந்திருக்கும்.

## காரப்பதாசி. CAUSTIC POTASH.

இது பதாசியையரசு[2] எனப்படும். சின்னம், பஜஅ. பதாசி நீரை வெள்ளிப் பாத்திரம் அல்லது இரும்புப் பாத்திரத்தில் விட்டு எண்ணெய்த்தடிப்பாய் வருந்தனையுங் காய்ச்சி, குகைகளில் வார்த்து வைரமான வெள்ளைக் கம்பிகளாக எடுப்பார்கள். இது லகுவிற் கரையக்கூடியது. வீறுன அல்கலையும் காரமுமாகும். அதைத் தண்ணீரிற் கரைத்து நீதுரிக்கமிலம்[3] விட்டுப் புளிப்பாக்கினால் பிலாடினபிரகுலோறிரம்[4] சேர்க்கும்போது மஞ்சணிற அடையல் உண்டாகும். வெள்ளிநீதுரசு[5], பாரிதகுலோறிரஞ்[6] சேர்க்கும்போது சொற்ப வெண்ணடையல் விழும். சோதனைகள். ஐம்பத்தாறு கிறேனை தண்ணீரிற் கரைத்தாற் சொற்ப அடையல்மாத்திரங் காணும். இதைத் தடஸ்திப்பதற்கு[7] அக்சலிக்கமில[8] பருமலிலயன[9]த்தில் 900 கிறேனளவாகுதல் வேண்டும். இதைத் திறந்தபடி வைத்தாற் கரையுமாதலால் கண்ணாடிச் சடையால் நன்றாயடைத்த சீசாக்களில் வைக்கவேண்டும்.

**தன்மை.** இது வீறுன காரம், எஸ்கருட்டி[10]. உட்கொண்டால் அழற்றுநஞ்சாகும்.

**உபயோகம்.** விசிக கோதத்துக்கு[11] இடுவதற்கும், பிறப்புவாசியாய் வெளியிலுண்டாயிருக்கும் நீவசைக்[12] கெடுப்பதற்கும் விஸ்தார நாளங்களை[13] அழிப்பதற்கும் சலத்துவாரத்திலுண்டாயிருக்கும் நிலையான ஒடுக்கைத் திறப்பதற்கும் விந்துருமம்[14] விப்புருதி[15] களை வெட்டுவதற்கும் இக் காரப்பதாசியை வழங்குதல் நயம். திரியேற்றுவதற்கும் இது வழங்கப்படும். சுறுக்கிற் கரையுந் தன்மையே இதை வழங்க நேரிடுந் தடை.

[காரப்பதாசியையும் சுண்ணத்தையும் சமபங்காய்க் கலந்த ஓர் கலவை காரப்பதாசியைப் போல நயந்தது. இக்கலவை காரப்பதாசியைப் போல இலகுவிற் கரையாதாதலால் அதிலும் மேலானது. இது சீதிற் குழைத்த பசையாக வழங்கப்படும், இதற்குச் சுண்ணப்பதாசி[16] யென்று பெயர்.]

## பதாசிநீர். LIQUOR POTASH.

நீறின சுண்ணத்தில்[17] அரைப்பங்கை, பதாசிகாபனசில்[18] 1 பங்கோடு சேர்த்து 12 பங்கு தண்ணீரிற் கரைத்துக் காய்ச்சப் பதாசிநீர் பிறக்கும். இது ஆறினபின் நீரை இறுத்துச் சுண்ணகாபனசை வேறாக்கலாம். லட்சணங்கள். இது நிறமணமற்ற நீர். மெத்தக் காரமான சுவையுள்ளது; உருவொளியானது, வீறுன அல்கலை; விரல்களிற் தொட்டுப் பூச, சவுக்காரம் போல வழுவழுக்கும். பிராணி தாவர பதார்த்தங்களை அரிக்கும்; விசேஷ குருவிதம் 1.058. சோதனைகள். இதில் நிறைப்படி 462.9 கிறேனை அதாவது ஒரு அவுன்சைத் தடஸ்திப்பதற்கு 482 கிறேனளவு அக்சலிக்கமில

1 Acids. 2 Hydrate of potash. 3 Nitric acid. 4 Perchloride of Platinum. 5 Nitrate of silver. 6 Chloride of Barium. 7 Neutralize. 8 Oxalic acid. 9 Volumetric solution. 10 Escharotic, தகனி. 11 Hospital gangrene 12 Naevus. 13 Varicose Veins. 15 Struma. 15 Abscess. 16 Potassa cum calce. 17 Slaked lime. 18 Carbonate of Potash,

Digitized By Roja Muthiah Research Library

பருமவிலயனம் வேண்டும். இது பஐஅ என்ற சின்னத்தையுடைய பதாசியைரசில் நிறைப்படி நூற்றில் 5.84 பங்குக்குச்சரியானது. மிஞ்சிய கிருசவைருகுலோறிக்கமிலல[1]த்தோடு இதைச்சேர்க்கும்போது இது நுரைக்காது. சமஅளவான திஸ்திலித்த[2] தண்ணீரோடு இதைக் கலந்து சுண்ணநீராவது[3] அமோனவக்சலசாவது[4] கூட்டும்போது அடையல் உண்டாகாது. கிருச நீதுரிக்கமிலத்தை[5]மிஞ்சக் கூட்டி வறட்டும்போதுண்டாகுஞ் சேடத்தைத் தண்ணீரிற் கரைத்தால் அது ஏறக்குறையத் தெளிவான நீராகும். இதற்குப் பாரிதகுலோறிர[6]மாவது வெள்ளிநீதுர[7]சாவது சேர்க்கச் சொற்ப அடையலுண்டாகும்; அதற்கு அமோனஞ்[8] சேர்த்தாலோ மெத்த மாறாது. இதில் ஒரு அன்சிலே 27 கிறேன் பதாசியைரசு இருக்கும். இது பரமாணுவிலிருந்து காபனிக்கமிலத்தைச்[10] சுறுக்கு உறிஞ்சுவதாலும் பிளினுடியை[11] அரிப்பதாலும் பச்சைக் கண்ணுடிச் சீசாக்களிலே விட்டு நன்றாய் இதை அடைத்து வைக்கவேண்டும்.

தன்மை. இது முதலாவது அபாமிலி[12], இரண்டாவது அல்திறவம்[13], தியுறீசம்[14]. அதிதேயத்தில் நஞ்சு.

உபயோகம். இரைப்பை குடல்களின் புளிப்பைப் பற்றி யுண்டான கடியல்சி[15]யும் தீவிரகாலிக வாதங்களும், துபேகுல[16] நோய்கள் விசேஷமாய்க் கசமும் விதிக்கமிலபவகம்பற்றிய கல்லடைசல்களும், புறங்குசில்[17] நீர்க்கோவை நோய்களும் காலிகமான சருமநோய்கள் விசேஷமாய்ச் சொறீயசி[18] குஷ்டங்களும்[19] அசுகக் கஞ்செஸ்தம்[20] கதார்[21]களும் நுமோனி[22]யின் பிற்கால்களுமே இம் மருந்தால் நயப்படக்கூடிய விசேஷ நோய்கள்.

தேயம். பதினைந்து மினிம் முதல் அறுபது மினிம் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்துகொடுக்கவும்.

## பதாசிகாபனசு. CARBONATE OF POTASH.

இதற்குச் சின்னம் $ப_2$ கா$அ_3$. இதிலே கிரிஸ்தல்[23]நீர் நூற்றுக்கு ஏறக்குறைய 16 பங்கு சேர்ந்திருக்கும். வியாபாரத்தில் வரும் அசுத்த பதாசிகாபனசாகிய பேளசைச்[24] சமநிறையான சுத்த தண்ணீரிற் கரைத்துக்கெதியாய்க் கலக்கிக் கலக்கி வற்றப்பண்ணிச் சுத்தமான பதாசிகாபனசை எடுப்பார்கள். மரச் சாம்பலைச் சாரநீரிறக்கலால் பேளசு எடுக்கப்படும். லட்சணங்கள். பதாசிகாபனசு வெண்மையான கிரிஸ்தல்[25]மா; சுவைக்கு அல்கலை[26]யாயும் காரமாயுமிருக்கும்; பரமாணுவில் வைக்கச் சுறுக்குக்கரையும்; தண்ணீரிற் சீக்கரமாய்க் கரையும்; சீதிற்[27]கரையாது; கிருசவைருகுலோறிக்கமிலஞ் சேர்க்க நுரைக்கும். இக் கலவையிலே பிலாடின[28]பிரகுலோறிர[29]த்தைப் போட மஞ்சள்நிற அடையல் விழும். சோதனைகள். செஞ்சூடேற்ற நூற்றுக்கு ஏறக்குறையப் பதினுறு பங்கை இழக்கும். நீதுரிக்கமிலத்[30]தால் அதி பூர்த்தித்து[31] வறட்ட, வரும் சேஷம் தண்ணீரில் ஏறக்குறைய

1 Diluted hydrochloric acid. 2 Distilled. 3 Lime water. 4 Oxalate of Ammonia. 5 Dilute nitric acid. 6 Chloride of barium. 7 Nitrate of silver. 8 Ammonia. 9 Hydrate of potash. 10 Carbonic acid. 11 Flint glass. 12 Antacid. 13 Alterative. 14 Diuretic சுவேதனி. 15 Cardialgia. 16 Tubercular. 17 Bronchocele 18 Psoriasis. 19 Lepra, வெப்பிறம். 20 Bronchial congestion. 21 Catarrh. 22 Pneumonia. 23 Water of crystallization. 24 Pearlash. 25 Crystal. 26 Alkali. 27 Spirit. 28 Platinum. 29 Perchloride. 30 Nitric acid. 31 Supersaturate.



Digitized By Roja Muthiah Research Library

முற்றாய்க் கரையச் சொற்ப சிலிசி[1] மாத்திரங் கரையாமலிருக்கும். இந்த நீருக்குப் பாரிதகுலோறிரம்[2] வெள்ளிநீதிரசு[3] கூட்டச் சொற்ப அடையல் மாத்திரமுண்டாகும். இதிலே எண்பத்துமூன்று கிறேனைத் தடஸ்தி[4]ப்பதற்கு அக்சலிக்கமில[5] பருமவிலய[6]னத்தில் 980 கிறேனளவாகுதல் வேண்டும். பரமாணு படச் சுறுக்கிற் கரையுமாதலால் இதைக் கண்ணாடிச் சடையால் நன்றாயடைத்த சீசாக்களில் வைக்கவேண்டும்.

**தன்மை, உபயோகம்.** *பதாசி நீரைப் போலவே. ஆயினும் தேகத்தில் இதின் செயல் குறைவதால் அதைப் பார்க்க மோசமின்றி இதை நெடுகக் கொடுக்கலாம். அரைநாழி தண்ணீருக்கு அரைத்திறாம் வீதமாக இதைக் கரைத்தாற் சரும நோய்கள் பலவற்றுக்கு உபயோகமான அல்கலை லோஷன்[7]ஆகும்.*

**தேயம்.** *பத்து முதல் முப்பது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம். அல்லது தாவரஅமிலங்க[8]ளோடு சேர்த்து நுரைபானமாய்க் கொடுக்கலாம்.*

*[இந்துவின் சிலபகுதிகளிலே ஓலைகள் வாழைச்சருகுகளை எரித்து அசுத்தமான ஓர் பதாசிகாபனசு செய்வார்கள். அது சுத்தியாக்கப்படாமல் மருந்துக்கு உதவாது. நாயுருவிச் சாம்பலிற் பதாசி அதிகமாயுண்டாம்.]*

## பதாசிதுவிகாபனசு. BICARBONATE OF POTASH.

*இதற்குச் சின்னம் பஜ கா அ3. பதாசிகாபனசைத் தண்ணீரிற் கரைத்து அதற்கூடே காபனிக்கமில வாயுவை[9]த் தாரையாய்ப் பூர்த்தியாய்ச் செலுத்திப் பதாசிதுவிகாபனசாக்குவார்கள். கிருசவைருகுலோறிக்கமில[10]த்தை மாபிள்[11] என்ற கல்லின் துண்டுகளில் விடக் காபனிக்கமில வாயுப் பிறக்கும்.* **லட்சணங்கள்.** *இது நிறமற்றதாய் நேரிரம்பப் பிரிசங்க[12]ளாகக் கிரிஸ்தலிக்கும்; பரமாணுவிற் கரையாது; உவரான சற்றே அல்கலைச்[13]சுவையுள்ளது; அரிக்கமாட்டாது. இத்தோடு கிருசவைருகுலோறிக்கமிலம் சேர்க்கப்பெலனாய் நுரைக்கும். இக் கலவை நீரோடு பிலாடின பிரகுலோறிரஞ்[14] சேர்க்க மஞ்சள்நிற அடையல் தோற்றும்.* **சோதனைகள்,** *இதிலே ஐம்பது கிறேனை எடுத்துச் சொற்ப அளவான செஞ்சூடு ஏற்ற வெண்மையான செஷம் முப்பத்துநாலரைக் கிறேனுக்கு இருக்கும்: இதைச் சரியாய்ப் பூர்த்திப்பதற்கு அக்சலிக்கமில பருமவிலயனத்தில் 500 கிறேனளவு வேண்டும்.*

**தன்மை, உபயோகம்.** *பதாசிகாபனசைப் போலவே. அதிலும் இதின் செயல் குறைவு.*

**தேயம்.** *பத்து முதல் நாற்பது கிறேன் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம். நுரைபானஞ் செய்வதற்குப் பதாசிதுவிகாபனசில் இருபது கிறேன், சிதிறிக்கமிலத்திற்[15] பதினாறு கிறேனுக்குச் சரி; அல்லது தாத்தரிக்கமிலத்தில்[16] பதினைந்து கிறேனுக்குச் சரி.*

**ரசிதம்.** **பதாசிநுரைநீர்.** Effervescing solution of Potash. *கொள்· பதாசிதுவிகாபனசு, முப்பது கிறேன்; தண்ணீர் அரைநாழி. பதாசிதுவி*

---

1 Cilica. 2 Chloride of barium. 3 Nitrate of silver. 4 Neutralize. 5 Oxalic acid. 6 Volumetric solution. 7 Alkaline lotion. 8 Vegetable acid. 9 Carbonic acid gas. 10 Dilute hydrochloric acid. 11 Marble. 12 Prism. 13 Alkali. 14 Perchloride of platinum. 15 Citric acid. 16 Tartaric acid.

Digitized By Roja Muthiah Research Library

காபனசைத் தண்ணீரிற் கரைத்து, வடித்து அதற்குள்ளே ஏழு பரமாணுவின் அமுக்கத்தில் வைத்திருக்கக் கூடிய சுத்தமாய்க் கழுவிய காபனிக்கமில வாயுவைச்[1] செல்லவிடவும். மேலே சொல்லிய முறையாயாவது சல்வுரிக்க[2]மிலத்தைக் கிரீதத்திற்[3] சேர்ப்பதாலாவது காபனிக்கமில வாயுவை எடுக்கலாம். நீரைச் சீசாக்களில் விட்டு, அமுக்கப்பட்ட வாயு பறிந்துபோகாமல் இறுக்கமாய் அடைத்துவைக்கவும். லட்சணங்கள். சீசாவைத் திறந்தவுடன், காபனிக்கமில வாயு பறிய, நீர் செதியில் கொதிக்கும். இந்த நீர் தெளிந்தது, தளதளக்கும், புளிப்பான நற்சுவை கொண்டது. சோதனைகள். இதிற் பத்து அன்சை ஐந்துமினி நேரமாகக் கொதிப்பித்தபின் தடஸ்திப்பதற்கு[4] அக்சலிக்கமில[5] பருமவிலயன[6]த்தில் 150 கிறேன் அளவு வேண்டும். ஐந்து அன்சை ஒரு அஞ்சாய் வறட்டியதற்கு தாத்தரிக்கமிலத்திலே பன்னிரண்டு கிறேனைச் சேர்க்க கிரிஸ்த[7]லான ஒரு அடையல் விழும். இந்த அடையலை வறட்டும்போது பன்னிரண்டுகிறேனுக்குக் குறையாமல் நிறுக்கும்.

## பதாசிசல்வுகம். SULPHURATED POTASH.

பதாசிகாபனசையும் உச்சித கெந்தகத்தையும் உருக்கி இச் சல்வுகம் எடுக்கப்படும். லட்சணங்கள். வைரமான பச்சை நிறத் துண்டுகளாகவிருக்கும்; முறித்தவுடன் கபில நிறங் காட்டும்; அல்கலையானது; காரமான சுவையுள்ளது; தண்ணீரிலே சுறுக்குக் கரைந்து மஞ்சள் நிறமடையும்; இந்த நீர் ஐருசல்வுரிக்கமில[8]வாயுவின் மணமுடையது; அதிலே ஐருகுலோறிக்கமிலத்தை[9]மிஞ்ச விட்டால் இவ்வாயு தாராளமாய்ப் பறியக் கெந்தகம் அடையும். இந்த அமில நீரைக் காய்ச்சி வடித்தபின் பிலாடினபிரகுலோறிரஞ்[10] சேர்த்தால் மஞ்சளாகும். பாரிதகுலோறிரஞ்[11]சேர்த்தால் வெண்மையாகும். சோதனைகள். இதிலே நிறைப்படி முக்காற்பங்கும் திட்டசீதிற்[12] கரையும்.

தன்மை. ஸ்திமுலம்[13]; இது விசேஷமாய்த் தோலிற்சேஷ்டித்துச் சுவேதனி[14]யாகும். சுவாசக்குழற் சளிச்சவ்விற் சேஷ்டித்து எக்ஸ்பெக்துற[15]மாகும். பெருந்தேயத்தில் இது மயக்கமழற்சி நஞ்சாகும்.

உபயோகம். தொல்லையான சருமநோய்களுக்கும், காலிக[16]புறங்கிது[17], கதார்[18]நோய்களுக்கும், குறுப்பு[19], அசத்துவ[20]குன்மம்[21], காலிகவாதங்களுக்கும் இது நல்ல உண்மருந்து. சிரங்குக்கும் மற்றுஞ் சருமநோய்களுக்கும், தோயம்[22] லோஷன்[23], அன்கென்[24]என்றமாதிரியாகஇட நயந்தவெளிமருந்து.

தேயம். மூன்று கிறேன் முதல் ஐந்து கிறேன் வரைக்கும் படிப்படியாய்க் கூட்டிப் பத்துக் கிறேன் வரைக்கும் அதிற் கூடவும் தண்ணீரிற் கரைத்தாவது சபுவோடு[25]கூட்டிக் குளிகையாயுருட்டியாவது கொடுக்கலாம். லோஷனுக்கு வீதம் அரைநாழி தண்ணீருக்கு ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்கு. தோயத்துக்கு வீதம் முப்பதுகலன்[26] தண்ணீருக்கு மூன்று நாலு அன்சு.

---

1 Carbonic acid. 2 Sulphuric acid 3 Chalk. 4 Neutralize. 5 Oxalic acid. 6 Volumetric solution. 7 Crystal. 8 Hydrosulphuric acid. 9 Hydrochloric acid. 10 Perchloride of platinum. 11 Chloride of Barium. 12 Rectified spirit. 13 Stimulant. 14 Diaphoretic. 15 Expectorant, கிசேட்டனி 16 Chronic. 17 Bronchitis. 18 Catarrh. 19 Croup. 20 Atonic. 21 Dyspepsia, 22 Bath. 23 Lotion. 24 Ointment, தயிலம். 25 Soap. 26 Gallon.

Digitized By Roja Muthiah Research Library

**ரசித்ம். பதாசிசல்வுகவன்கேன்.** Ointment of Sulphurated Potash. **கொள்.** பதாசிசல்வுகம், முப்பது கிறேன்; பூதலார்[1] ஒரு அஞ்சு. பதாசிசல்வுகத்தைப் பீங்கானுரலில் அரைத்து லாட்டைப் படிப்படியாய்க் கூட்டி அன்கென் பருபருக்கையில்லாமல் அழுத்தமாய் வருந்தனையும் நன்றாய் அரைக்கவும். வழங்கும் ஒவ்வொருமுறையும் இந்த அன்கெனை புதிதாய்ச் செய்துகொள்ளவேண்டும்.

## பதாசிசல்வசு. SULPHATE OF POTASH.

பதாசிசல்வசுக்குச் சின்னம் ப௨ கெஅ௪. நீதுரிக்கமிலச்[2]செய்கையில் வருஞ்சுவதாகிய அசுத்தமான பதாசிதுவிசல்வசைப்[3]பதாசிகாபனசாற்[4] தடஸ்தித்து[5] இதை எடுப்பார்கள். அநிர்ஜீர இந்திர பதார்த்தங்களில் இது இயல்பாயுள்ளது. லட்சணங்கள். இது நிறமற்ற வன்மையான அறுபுசபிரிசங்களாக[6] இருக்கும். அந்தங்கள் அறுபுசசிகரங்க[7]ளாய் முடியும். சூடேற்றப் படபடென்று வெடிக்கும். தண்ணீரில் அரிதாய்க் கரையும். அலக்காலிற்[8] கரையாது. சோதனைகள். இதைத் தண்ணீரிற் கரைத்து ஐருகுலோறிக்கமிலத்தாற்[9]புளிப்பாக்கி பாரிதகுலோறிரஞ்[10]சேர்க்க வெண்ணடையல் விழும். பிலாடின பிரகுலோறிரஞ் சேர்க்க மஞ்சள் அடையல் விழும். சோதனைத் தாளுக்குத் தடஸ்தமாய் நிற்கும். இதின் கரைவு அமோனவக்சலசுக்கு[12]மாறுதலடையாது.

தன்மை. இளம் விரேசனி. பாலூறச்செய்யுமாம். மிஞ்சிய தேயத்தில் நஞ்சு.

உபயோகம். குன்மநோய், ஈரல் நோய்களுக்கும், விசேஷமாய்ச் செங்கண்மாரிக்கும் இரைப்பையைப்பற்றிய ரிமீஷ[13]சுரங்களுக்கும், அல்புமினூறிக்கும்[14], அரிசமூலை[15]க்காரருக்கும், இதுசாந்தமான செயலையுடையதாதலால் நல்ல இளம் பேதி. ஆயினும் இவ் வகுப்பைச் சேர்ந்த மற்று மருந்துகளுக்கு இது மேலானதல்ல.

தேயம். பதினைந்து கிறேன் முதல் அறுபது கிறேன் வரைக்கும். பெரும்பாலும் வரியாத்துடன்[16] கலந்து கொடுக்கப்படும்.

இபிகாக்[17]கூட்டுச் சூரணம், கலுசிந்துக்[18]கூட்டுக்குளிகை, கலுசிந்தயசீயமசுக்[19]குளிகைகளில் பதாசிசல்வசு ஓர்கூறாகச் சேருகின்றது.

## பதாசிகுலோறசு. CHLORATE OF POTASH.

இதற்குச் சின்னம் பகுஅ௩. இதையெடுக்குமுறையாவது; பதாசிகாபனசு[20], நீற்றின சுண்ணும்பு, தண்ணீர் மூன்றையுங் கலந்துவைத்துக்கொண்டு, மங்கனீச காரக்சிரத்தின்[21]மேல் ஐருகுலோரிக்கமிலத்தை வார்த்து அதிற் பிறக்குங் குலோறவாயுவை[22] இக் கலவைக்கூடே தாரையாகச் செல்லவிட்டுப் பிறகு அந்த நீரைக் காய்ச்சி வடித்து வறட்ட, இந்த உப்புச் கிறிஸ்தல்க[23]ளாக விளையும். லட்சணங்கள். இது நிறமற்ற சதுரக் கிறிஸ்தற் தகடுகளாகவிருக்கும்; குளிர்மையான உப்புச் சுவை கொண்டது. தண்ணீரிற்

---

1 Prepared lard, இடியல். 2 Nitric acid. 3 Bisulphate. 4 Carbonate. 5 Neutralize. 6 Prism. 7 Pyramid. 8 Alcohol. 9 Hydrochloric acid. 10 Chloride of barium. 11 Perchloride of platinum. 12 Oxalate of ammonia. 13 Remittent fever. 14 Albuminuria. 15 Haemorrhoides. 16 Rhubarb. 17 Ipecac. 18 Colocynth. 19 Hyosciamus. 20 Carbonate. 21 Black oxide of manganese. 22 Chlorine gas. 23 Crystal.

Digitized By Roja Muthiah Research Library

சொற்பமாய்க் கரையும். கெந்தகத்தோடு சேர்த்தரைக்கும்போது படபடென்று வெடிக்கும். சோதனைகள். சூட்டுக்கு உருகி, அச்சித[1] வாயுவைக் கக்கி வெண்மையான சேடத்தை விடும். அது பதாசியகுலோறிரம்[2]. அது தண்ணீரிற் கரைந்து தடஸ்தவிலயனமாகும். அத்தோடு வெள்ளிநீதுரசு[3] சேர்க்க வெண்ணடையலுண்டாகும். பிலாடின பிரகுலோறிரஞ்[4] சேர்க்க மஞ்சள்நிற அடையல் உண்டாகும்.

தன்மை. இது குளிர்மையானது, சுவேதனி, அல்திறவம்.

உபயோகம். சன்னிச்சுரம்[5], ஸ்காலதீனய[6], பொதுவாய் ஏக்சந்திம[7] சுரங்களுக்கும், பிறகுண்டாகும் நீர்க்கோவைகளுக்கும் இது உத்தம மருந்து. மற்றும் வியாதிகளுட் காலிகபுறங்கிது[8], கசம், வாந்திபேதி, அதின் தன்மையான கழிச்சல், செங்கண்மாரி[9], இரசகச்செக்சி[10], சிவ்லிசுக்[11]கச்செக்சி, திவ்திரி[12], ஸ்கேவி[13] என்பவற்றுக்கு இதை உண்மருந்தாய்க் கொடுப்பது நலம். வெளிமருந்தாக வாய்ப்புற்று[14], அக்கரம்[15], அக்கரப்புண்[16], பலவகையான சைனன்கி[17], உமிழ்நீர்ப்பெருக்கு, சயதபுண்கள்[18], சிவ்லிசு புண்களுக்கும், கனுறீயம்[19] லுசுறீயங்களுக்கும்[20] புகட்டல்களாகவும் இது நயஞ்செய்யும்.

தேயம். பத்து முதல் இருபது கிறேன் வரைக்குக் கரைவாக்கிக் கொடுக்கலாம். காய்ச்சல்களிற் குளிர்ந்த பானமாய்க் குடிப்பதற்கு இதில் ஒரு திருமை அரை நாழி தண்ணீரிற் கரைத்துக்கொள்ளவும். வெளிமருந்தாயிடுவதற்கு இதில் ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்கு அரைநாழி தண்ணீரிற் கரைத்துக்கொள்ளவும்.

ரசிதம். பதாசி குலோறசு வில்லை. Chlorate of Potash Lozenges.
கொள். பதாசிகுலோறசு மாவாக மூவாயிரத்தறுநூறு கிறேன்; சுத்தசர்க்கரை. மாவாக இருபத்தைந்து அன்சு; அகசிப்பிசின்[21], மாவாக ஒரு அன்சு; அகசிமுசிலாகு[22] இரண்டு அன்சு; சுத்த தண்ணீர் ஒரு அன்சு, அல்லது போதியது. மாவான முதல் மூன்று மருந்துகளையுங் கலந்து சரியான பதமாய் வரத்தக்கதாய் முசிலாகையும் தண்ணீரையுங் கூட்டியரைக்கவும். 720 வில்லைகளாகத் தட்டி சூடான பரமாணுவுள்ள அறையில் மட்டான சூட்டில் உலர்த்தவும். ஒவ்வொரு வில்லையிலும் பதாசிகுலோறசு ஐந்து கிறேன் இருக்கும்.

தேயம். ஒன்று துவங்கி ஆறு வில்லை வரைக்கும்.

## பதாசிநீதுரசு. வேடியுப்பு. NITRATE OF POTASH.

இதற்குச் சின்னம் பநீஅ3. இது வியாபாரத்தில் வரும் அசுத்தமான வெடியுப்பிலிருந்து கரைத்து வறட்டிச் சுத்தமாய் எடுக்கப்படுவது. வெடியுப்பு இந்துவின் அனேக பகுதிகளிலும் மற்றுந் தேசங்களிலும் நிலத்தில் விளைந்திருக்கும். இது வெண்மையான கிரிஸ்தற் கட்டிகளாக அல்லது துண்டுகளாக வரும். வரியுள்ள அறுபுச பிரிசங்க[23]ளாயிருக்கும். நிறமற்றது; ஓர்வகையான குளிர்ந்த உவர்ப்புச் சுவையுள்ளது. நெருப்பிலிட்டாற் படபடென்று வெடிக்கும். சோதனைக்குழலிலே செம்புப் பொடியோடும்

1 Oxygen. 2 Chloride of potassium. 3 Nitrate of silver. 4 Perchloride of platinum. 5 Typhoid fever. 6 Scarlatina. 7 Exanthemata. 8 Chronic Bronchitis. 9 Jaundice. 10 Mercurial cachexia. 11 Syphilis. 12 Diphtheria. 13 Scurvy. 14 Cancrum oris. 15 Aphthae. 16 Apthous ulcer. 17 Cynanche. 18 Scrofulous ulcer. 19 Gonorrhoea. 20 Leucorrhoea. 21 Gum acacia. 22 Mucilage. 23 Prism.

Digitized By Roja Muthiah Research Library

சல்வுரிக்கமிலத்[1]தோடும் காய்ச்சினுற் சிவந்த புகையைக் கக்கும். தண்ணீரிற் கரைத்து ஐருகுலோறிக்கமிலத்தாற்[2]புளிப்பாக்கிப் பிலாடினபிரகுலோறிரஞ்[3]சேர்த்தால் ஓர் மஞ்சள்நிற அடையல் உண்டாகும். இதின் கரைவு பாரிதகுலோறிரத்தா[4]லாவது வெள்ளிநீதுரசா[5]லாவது மாறுதலடையாது.

தன்மை. இதைத் தாராளமாய்த் தண்ணீரிற் கரைத்துக் கொடுத்தால் குளிர்மையும், அமுரிதியும், சுவேதனியுமாகும். கட்டியாய்க் கொடுத்தால் அல்லது சொற்ப தண்ணீரிற் கரைத்துக் கொடுத்தால் அழற்றும், பிந்தின வகையிற் பெருந்தேயமாய்க் கொடுத்தால் நஞ்சாகும். கரைத்து வெளிமருந்தாயிட்டாலுங் குளிர்மையானது.

உபயோகம். சுர நோய்கள் தாபித[6]நோய்களுக்கும்,காலிக[7]தீவிர[8]வாதத்துக்கும்,தசிரக் கிளர்ச்சியோடு கூடிய இரத்தப்பெருக்குக்கும்,ஸ்கேவி[9], எமறெச்சுப்பெபூறம்[10],நீர்க்கோவைநோய்கள்,திஸ்மெனுறீயம்[11], கனுறீயம்[12], லுகறீயம்[13], சிலவகையான குன்மங்களுக்கும் இது உள்ளே கொடுக்கப்படும். வெளிமருந்தாக. தீவிரவகையான கண்ணோவுக்குக் கலூறியமாய்[14]இடப்படும். சைனன்கிக்குக்[15] கார்கிலாக[16] வழங்கப்படும். சமபங்கு அமோனத குலோறிரத்தோடு[17]கலந்து தண்ணீரிற் கரைத்து குளிர்ந்த லோஷனு[18] இடப்படும். வெடியுப்பைப் பூர்த்தியாய்க் கரைத்து அதிலே கடுதாசியைத் தோய்த்துக் காயவைத்து, எரித்து, அதிலெழும்பும் புகையைச் சுவாசிப்பதால் ஈளையும் ஸ்பச[19]இருமல்களும் பெரும்பாலுஞ் சகாயப்படும்.

தேயம். பத்து முதல் முப்பது கிறேனே ஒரு அன்சுக்கு எட்டுக் கிறேன் வீதமாய் ஏதும் காரமற்ற நீரிற் கரைத்துக் கொடுக்கவும்.

[இந்துக் கடைகளில் வரும் வெடியுப்புப் பெரும்பாலும் அசுத்தமானது. அதை உண்மருந்தாய் வழங்கவேண்டில் முதல் வெந்நீரிற் கரைத்து நுரையைத் தள்ளிப்போட்டு அடையவிட்டுப் பின்பு சணற்புடைவையில் வடித்து கிறிஸ்தலிக்க வைத்துச் சுத்தமாக்கிக்கொள்ளவேண்டும். சுத்தி செய்யும் முறையைப்பற்றி ஸ்தீவென்சன் பண்டிதர் விபரமாயெழுதியிருக்கிறார்.]

## பதாசிபிரமங்கனசு. PERMANGANATE OF POTASH.

இதற்குச் சின்னம் பமங்அ[4]. இது கருஞ் சிவப்பு நிறமான மெல்லிய பிரிசக்[20] கிறிஸ்தல்க[21]ளாகஇருக்கும்; மணமற்றது; இனிமையானதுவர்ச்சுவை உடையது; தண்ணீரிற் கரையக்கூடியது. ஒரு அன்சு[22]தண்ணீரை நல்ல சிவப்புநிறமாக்குவதற்கு ஓரேயொரு சிறிய கிறிஸ்தற் துண்டு போதும். அந்த நீரைத் திட்டசீதிற்[23] சொற்பத்தோடு கலந்து காய்ச்ச, அது மஞ்சட் கபிலநிறமாகும். இக் கிறிஸ்தல்களைச் சிவக்கக் காய்ச்சினுற் படபடென்று வெடித்து, அக்சித[24]வாயுவைக் கக்கிச் கறுப்பான சேடத்தை விடும். இச் சேடத்தினின்று தண்ணீர் பதாசியை வாங்கும். அத் தண்ணீரின் அல்கலைத்[25]தன்மையினுலும் அதை ஐருகுலோறிக்கமிலத்தாற் புளிப்பாக்கிப் பிலாடின பிரகுலோறிரஞ் சேர்க்க, மஞ்சளடையலுண்டாவதாலும் அதிலே பதாசியிருப்பதைப் பகுத்தறியலாம். சோதனே. தண்ணீரில் முற்றுய்க்

1 Sulphuric acid. 2 Hydrochloric acid. 3 Perchloride of Platinum. 4 Chloide of Barium. 5 Nitrate of silver. 6 Inflammation. 7 Chronic. 8 Acute. 9 Scurvy. 10 Purpura haemorrhagica. 11 Dysmenorrhoea. 12 Gonorrhoea. 13 Leucorrhoea. 14 Collyrium. 15 Cynanche. 16 Gargle. 17 Chloride of ammonium. 18 Lotion. 19 Spasmodic. 20 Prism. 21 Crystal, 22 Ounce. 23 Rectified spirit, 24 Oxygen gas. 25. Alkali.

Digitized By Roja Muthiah Research Library

கரையும். ஐந்து கிறேனைத் தண்ணீரிற் கரைத்தால் அதின் நிறத்தைக் கெடுப்பதற்கு இரண்டு திரும் கிருசசல்வுரிக்கமில[1]த்தாற் புளிப்பாக்கப்பட்ட அயசல்வசுப்[2]பொடியில் நாற்பத்துநாலு கிறேன் கரைக்கப்பட்ட நீர் வேண்டும்.

தன்மை. அல்திறவம்[3], வீருன கந்தக்கினி[4], பூதிக்கினி[5].

உபயோகம். சர்க்கராமுரிக்கு இது உள்ளே கொடுக்கப்படும். பயமோ சந்தேகம். மேலும் கீழே வரும் லோஷனுக[6]வும்,சமபங் கு கிரீதி[7] மாவோடு கலந்து தூளாகவும், சீர்கெட்ட புண்களுக்கும் சளிச்சல்விலூறு நீர்களின் நாற்றத்தை மாற்றுவதற்கும், தொண்டை தன்சில்களின்[8] புண்ணுக்குக் கார்கி[9]லாகவும் வெளிமருந்தாய் வழங்கப்படும்.

தேயம். ஒரு கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவும்.

ரசிதம். பதாசி பிரமங்கனசு நீர். Solution of Permanganate of Potash. கொள். பதாசிபிரமங்கனசு, நாலுகிறேன்; திஸ்திலித்த தண்ணீர் ஒரு அன்சு. கரைக்கவும்.

இந்த நீர் கன்றியர் நீரிலும்[10] வீறு குறைந்ததானாலும் அதற்கு ஒப்பானது. இது நல்ல கந்தக்கினி. ஆயினும் இதால் நயமுண்டாவதற்கு இது நாற்றமான பொருளிற் படவேண்டும். வெளிமருந்தாய் வழங்குவதற்குப் பத்து அன்சு தண்ணீருக்கு இதிலே ஒரு திரும் முதல் இரண்டு திரும் வரைக்குக் கலக்கவேண்டும்.

தேயம். இரண்டு திரும் முதல் நாலு திரும் வரைக்கு.

## பதாசிதாத்தரசு. TARTRATE OF POTASH.

இதற்குச் சின்னம் ப₂ கா₄ ஐ₄ அ₆. பதாசியமிலதாத்தரசைப்[11]பதாசிகாபனசால் தடஸ்தித்துப்[13] பதாசிதாத்தரசு எடுக்கப்படும். இது நிறமற்ற சிறிய நாலு ஆறு பக்கமுள்ள பிரிசங்களாக[14]இருக்கும். சல்வுரிக்கமிலத்[15]தோடு காய்ச்சினால் கறுப்பான தார்[16] போன்ற நீராகி எரியக் கூடியவாயுவையும், காய்ச்சிய சர்க்கரையின் மணத்தையும் வீசும். இந்த உப்பைத் தண்ணீரிற் கரைத்து அதற்குச் சல்வுரிக்கமிலத்தைச் சொற்பமாய்க் கூட்டினால் கிரீம் தாத்தர்[17] என்ற வெண்மையான கிரிஸ்தல் அடையல் பிரியும். சோதனைகள். சமநிறையான தண்ணீரிலே முற்றாய்க் கரையும். வாயுகக்குதல் ஒழியுந்தனையும் 113 கிறேனைச் சிவக்கக்காய்ச்சினால் அல்கலையான[18] ஓர் சேடம் மிஞ்சும். இதைச் சரியாய்ப் பூர்த்திப்பதற்கு அக்சலிக்கமில[19]பருமவிலயனத்தில்[20] 1000 கிறேனளவு வேண்டும்.

தன்மை. சிறு தேயத்தில் அமுரிதி[21],பருந்தேயத்தில் விரேசனி.

உபயோகம். சொற்ப காய்ச்சல் கூடிய குன்ம நோய்கள், ஈரல் நோய்களுக்கு இதை விரேசனியாய்க் கொடுப்பது நலம். லிதியசியில்[23] சிறுநீரை அல்கலையாக்குவதற்காக இது கொடுக்கப்படும்.

---

1 Dilute sulphuric acid. 2 Sulphate of iron. 3 Alterative. 4 Deodorizer. 5 Antiseptic. 6 Lotion 7 Chalk. 8 Tonsil, லசனம். 9 Gargle. 10 Condy's fluid. 11 Acid tartrate of potash, 12 Carbonate of potash. 13 Neutralize. 14 Prism, 15 Sulphuric acid 16 Tar. 17 Cream tartar. 18 Alkali, 19 Oxalic acid, 20 Volumetric solution, 21 Diuretic, 22 Lithiasis.

Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** அமுரிதியாக நாற்பது கிறேன் முதல் ஒன்றரைத் திரும் வரைக்கும், விரேசனியாக இரண்டு திரும் முதல் அரை அன்சு வரைக்கும் அல்லது கூடவும் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம்.

## பதாசியமிலதாத்தரசு. ACID TARTRATE OF POTASH.

இதற்குச் சின்னம் ப ஐ கா[4] ஐ$_1$ அ$_6$. இது ஓர் அமில உப்பு. திராட்சப் பழச்சாறு கொதிக்கும்போது அடைந்து காயும் ஒடான அடையலிலிருந்து இது எடுக்கப்படும். லட்சணங்கள், இது கரகரப்பான வெள்ளை மாவாயாவது, ஒரு பக்கத்திற் கிரிஸ்தலித்த தகட்டுத் துண்டுகளாயாவது இருக்கும். நல்ல புளிப்புச் சுவை கொண்டது. தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும்; சீதிற் கரையாது. குகையில் இட்டுக் காய்ச்சினல் எரியக் கூடியவாயுவையும் காய்ச்சிய சர்க்கரையின் மணத்தையும் வீச, காபனையும்[1] பதாசி[2] காபனசையும் அடக்கிய கறுப்பான சேஷம் எஞ்சியிருக்கும். கிருசவை ருகுலோறிக்கமிலஞ்[3] சேர்க்க இது நீரைத்துக் கலவையாகும். இக் கலவையை வடித்துப் பிலாடின பிரகுலோறிர[4]ஞ்சேர்க்கும்போது மஞ்சள்நிற அடையல் விழும். அமோன[5]த்தாற் தடஸ்தித்து அக்சலிக்கமிலஞ் சேர்க்க அது சற்றே கலங்கலாகும். சோதனை. இதிலே 188 கிறேனை வாயுக் கக்குதல் ஒழியுந்தனையும் சிவக்கக் காய்ச்சி வரும் அல்கலைச் சேடத்தைத் சரியாய்ப் பூர்த்திப்பதற்கு அக்சலிக்கமிலபருமவிலயனத்தில் 1000 கிறேனளவு வேண்டும்.

**தன்மை.** இது குளிர்மையானது. அமுரிதி, இளம் விரேசனி, பெருந் தேயத்தில் நீரடிக்கும் பேதி.

**உபயோகம்.** சுரநோய்கள், தாபித[6] நோய்களுக்கு ஒரு அன்சுக்கு ஒரு கலன் வீதமாய் இதைத் தணணீரிற் கரைத்துச் சுவைப்படுத்திக் குடித்தால் உவப்பாயிருக்கும். நீர்க்கோவை நோய்களுக்கும், விசேஷமாய் அவை தீவிர சபல[7] தன்மையாயிருக்கும்போதும், அல்புமினூறி[8], சூரற்றபம்[9], திசந்தெரி[10], பெரிபெரி[11], அரிச மூளைக[12]ளுக்கும் மற்றும் விரேசன அமுரித மருந்துகளோடு இது நல்ல அனுமருந்தாகும்.

**தேயம்.** இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்குக் கன தண்ணீரிற் கரைத்துக் கொடுத்தால் நல்ல குளிர்மையும் அமுரிதியுமாகும். ஒரு திரும் இரண்டு திரும் கொடுத்தால் இளம் பேதியாகும். மூன்று திரும் முதல் ஆறு திரும் வரைக்குக் கொடுத்தால் கடும் பேதியாகும்.

ஜலப்பு[13]க்கூட்டுச் சூரணத்திலும், கெந்தக லேகியத்திலும் பதாசியமிலதாத்தரசு ஓர் கூறுகச் சேருகின்றது.

## பதாசிசித்திறசு. CITRATE OF POTASH.

இதற்குச் சின்னம் ப$_3$ கா$_6$ ஐ$_5$ அ$_7$. பதாசிகாபனசைச்[14]சித்திறிக்கமிலத்[15]தால் கூறுபடுத்த இது பிறக்கும். லட்சணங்கள். இது வெள்ளையானது; உவர்ப்பான சொற்ப புளிப்புச் சுவையுள்ளது; பரமாணுவில் வைத்தால் நீரை உறிஞ்சிக் கரையும். தண்ணீரிற் சுறுக்குக்கரையும். சல்வுரிக்கமில[16]

1 Carbon. 2 Potash. 3 Dilute hydrochloric acid. 4 Perchloride of platinum. 5 Ammonia. 6 Inflammation. 7 Acute. 8 Albuminuria. 9 Hepatitis. 10 Dysentery. 11 Beri beri. 12 Haemorrhoid. 13 Jalap. 14 Carbonate of potash. 15 Citric acid. 16 Sulphuric acid.

Digitized By Roja Muthiah Research Library

த்தோடு கலந்து காய்ச்சினுற் கபிலநிறமான நீராகி, எரியக்கூடிய வாயுவைக் கக்கி, அசிதிக்கமிலத்தின்[1] மணத்தை வீசும். இதின் கரைவைக் கல்சிகு லோறிர[2]நீரோடு கலந்தாற் கொதிக்கக் காய்ச்சுந்தனையும் அது தெளிவாயிருக்கும். கொதிக்கவோ அசிதிக்கமிலத்திற் சுறுக்காய்க் கரையக்கூடிய வெண்ணடையல் பிரியும். இதின் கரைவை ஐருகுலோறிக்கமில[3]த்தாற் புளிப்பாக்கிப் பிலாடினபிரகுலோறிரஞ்[4] சேர்க்க, மஞ்சள்நிற அடையலுண்டாகும். சோதனை. இதில் 102 கிறேனை வாயுக்கக்குதல்ஒழியுந்தனையும் வெக்கக் காய்ச்சி வரும் அல்கலைச் சேஷத்தைச் சரியாய்ப் பூர்த்திப்பதற்கு அக்சலிக்கமில[5] பருமவிலயன[6]த்தில் 1000 கிறேனளவு வேண்டும். பரமாணுபட்டாற் கரையுமாதலால் கண்ணுடிச்சடையால் அடைத்த சீசாக்களிற் போட்டு வைக்கவேண்டும்.

தன்மை, உபயோகம். சுர நோய்கள், தாபித[7]நோய்களுக்குக் கொடுக்க இது உத்தமமான குளிர்மையும், அமுரிதியுமான மருந்து. இதைக் குடிக்கச் சிறுநீர் அல்கலை[8]யாகுமாதலால் லீதியசிக்கும்[9], சிறுநீரின் அமில நிலைமைக்கும் இது உவந்தது.

தேயம். இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்து நாள் மூன்றுநாலுமுறை கொடுக்கலாம்.

## பதாசியசித்சு. ACETATE OF POTASH.

இதற்குச் சின்னம் பகா[2] ஐ[3] அ[2]. பதாசிகாபனைசை அசிதிக்கமிலத்தாற் கூறுபடுத்த இது பிறக்கும். லட்சணங்கள். வெண்மையானது; பட்டுருத்திரளையாலான படலம் போன்றது. பரமாணுவிற் சுறுக்குக் கரையக்கூடியது. இதைத் தண்ணீரிற் கரைத்துத் தாத்தரிக்கமிலஞ்[11] சேர்த்தால் கிறிஸ்தலான அடையலுண்டாகும்; சல்வுரிக்கமிலஞ்[12] சேர்த்தாலோ அதினின்று அசிதிக்கமிலம் பறியும்; சாரங் குறைந்த அயபிரகுலோறிர கரைவைச் சேர்த்தால் இரத்தம்போற் சிவப்பாகும். சோதனைகள். சோதனைத் தாளுக்குத்[13] தடஸ்தமாய்[14] நிற்கும்; திட்டசீதிலே[15] முற்றாய்க் கரையும். இதின் விலயனம் அமோனதசல்விரத்தால்[16] மாறுதலடையமாட்டாது,

தன்மை. இது அல்திறவம்[17], அனுகூலமான அமுரிதி; பெருந்தேயத்திற் பேதி; ஆனால் அப்படிக் கொடுப்பதரிது.

உபயோகம். நீர்க்கோவை[18]நோய்கள்,தீவிர[19]வாதம்,காலிக[20]சருமநோய்கள்,கனுறீயம்[21],குடல்வீக்கம்,கோளவீக்கங்களுக்கு இது அதிஉபயோகமானது.

தேயம். அமுரிதி அல்திறவமாக இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கு நாள் மூன்று நாலு முறை கொடுக்கலாம். விரேசனியாக இரண்டு மூன்று திருங் கொடுக்கலாம்.

## பதாசியவியோதிரம். IODIDE OF POTASSIUM.

இதற்குச் சின்னம் பஇ. இது நிறமற்றது. பெரும்பாலும் மங்கலாய்க் கன வடிவக் கிறிஸ்தல்களாகவிருக்கும். தண்ணீரிற் சுறுக்குக் கரையும்;

---

1 Acetic acid. 2 Chloride of calcium. 3 Hydrochloric acid. 4 Perchloride of Platinum. 5 Oxalic acid. 6 Volumetric solution. 7 Inflammation. 8 Alkali. 9 Lithiasis, அமுரிக்கல். 10 Carbonate of potash. 11 Tartaric acid. 12 Sulphuric acid. 13 Test paper. 14 Neutral. 15 Rectified spirit. 16 Sulphide of Ammonium. 17 Alterative. 18 Dropsy. 19 Acute. 20 Chronic. 21 Gonorrhoea.



Digitized By Roja Muthiah Research Library

சிறிற் கொஞ்சங் கரையும். இதற்குப் பெரும்பாலும் சொற்ப அல்கலைத் தன்மையுண்டு. இதைத் தண்ணீரிற் கரைத்து அமைலம்[1]முசிலாகுடன்[2] கலந்து குலோறம்[3]நீரிற் சொற்பங் கூட்டினால் வெண்மஞ்சள் நிறங் காட்டும். தாத்தரிக்கமிலஞ்[4] சேர்க்கக் கிறிஸ்தலான அடையல் காணும். சோதனைகள். இதைத் தண்ணீரிற் கரைத்துத் தாத்தரிக்கமிலமும் அமைலமுசிலாகுஞ் சேர்க்க நீலநிறந் தோன்றாது. தாத்தரிக்கமிலங்கூட்டக் கபிலமாகாது. வெள்ளிநீதரசை[5] மிஞ்சக் கூட்டினால் வெண் மஞ்சள் நிற அடையலுண்டாகும். இந்த அடையலை அமோனத்[6]தோடு குலுக்கினால் அமையும்போது தெளிந்த நீராகும். இதை நீதரிக்கமிலங்[7] கரைக்கமாட்டாது. இந்த உப்பின தண்ணீர்க்கரைவுக்கு இனிப்பான சுண்ணநீரைக் கூட்டச் சொற்ப அடையல் மாத்திரந் தோன்றும்.

தன்மை. உச்சித அல்திறவம், அமுரிதி, சோஷணிகளை அருட்டும்; தாளிகமாயிட்டால் அழற்றும்.

உபயோகம். இயோதத்தைப் போலவே. உபசிவ்விசு[8]நோய்க்கும் விசேஷமாய் எலும்பையும் அதின் உறையையும் பற்றியதற்கும், ஸ்துருமம்[9]நோய்க்கும் பிரதானமாய்க் கண்ணைப்பற்றியதற்கும், தாபிதத்தின்[10]பிற்கூற்றில் பொசிந்த நீர்கள் வைப்புகளை வற்றப்பண்ணுவதற்கும் இது நயந்தது. மற்று நோய்களுட் காலிசதாபிதம்,ஈரலின்[11] காலிகதாபிதமான வீக்கம். பிளீகை[12] வீக்கம், நீர்க்கோவைகள், பொருத்துநீர்க்கோவை, கபாலநீர்க்கோவை, குவாதம்[13],வாதம்,காலிகபுறங்கீது[14],மசியாந்திரகசம்[15], புறங்குசில்[16],செறியுநஞ்சுகள், ஈயம், இரசநஞ்சுகளுக்கும், சிலவகையான நறல்சி[17]நோய்கள், சிரா[18] நோய்களுக்கும், விசேஷமாய் இவை சிவ்விசுக் கறையைப் பற்றியிருக்கும்போது இது உபயோகமானது. வெளிமருந்தாயிட்டால் பொசிந்த நீர்கள் வைப்புகளை வற்றப்பண்ணுவதில் உள்ளே கொடுத்ததற்கு உதவியாகிப் பலவகையான சருமநோய்கள் தொல்லையான புண்களை மாற்றும்.

தேயம். இரண்டு கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்து நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

ரசிதங்கள். பதாசியவியோதிரவன்கென். Ointment of Iodide of Potassium. கொள். பதாசியவியோதிரம் அறுபத்துநாலு கிறேன்; பதாசிகாபனசு[19] நாலு கிறேன்; தண்ணீர் ஒருதிரும்; பூதலாடு[20] ஒருஅன்சு. பதாசியவியோதிரத்தையும் பதாசிகாபனசையுந் தண்ணீரிற் கரைத்து லாட்டோடு திறமாய்ச் சேர்க்கவும்.

இயோத[21]லினிமென்[22], இயோதநீர், இயோதரஞ்சம்[23],இயோதவன்கென்களிற் பதாசியவியோதிரம் ஓர் கூறுகச் சேருகின்றது.

பதாசியவியோதிரசபுலினிமென். Liniment of Iodide of Potassium and Soap. கொள். வன்சபு, சிறுக வெட்டி, பதாசியவியோதிரம், வகைக்கு ஒன்றரை அன்சு; கிலைசரின்[24] ஒரு அன்சு; லெமன்[25]தேல் ஒருதிரும்; தண்ணீர் பத்துஅன்சு. சபுவை எழு அன்சு தண்ணீரில் நீர்மத்திகத்[26]தின் சூட்டிற் கரைத்துப் பதாசியவியோதிரத்தையும் கிலைசரினையும் சேஷ

---

1 Amylum. 2 Mucilage. 3 Chlorum. 4 Tartaric acid. 5 Nitrate of silver. 6 Ammonia. 7 Nitric acid. 8 Secondary syphilis. 9 Struma. 10 Inflammation. 11 Liver. 12 Spleen 13 Gout. 14 Bronchitis 15 Tabes mesenterica. 16 Bronchocele. 17 Neuralgia. 18 Nervous. 19 Carbonate of Potash. 20 Prepared Lard. 21 Iodum. 22 Liniment. 23 Tincture. 24 Glycerine. 25 Lemon oil. 26 Water bath.

Digitized By Roja Muthiah Research Library

மான தண்ணீரிற் கரைத்து, இரண்டு நீர்களையும் ஒன்றாகக் கலந்து அக்க லவை ஆறியபின் லெமன் தேலைக் கூட்டி முழுவதையும் சிறமாய்க் குலுக் கவும்.

பதாசியவியோதிரத்தை வெளிமருந்தாய் வழங்குவதற்கு மேற்கண்ட இ ரண்டு ரசிதங்களும் தகுதியானவைகள்.

## பதாசியபுறோமிரம். BROMIDE OF POTASSIUM.

இதற்குச் சின்னம், பபு. இது நிறமற்ற கன வடிவக் கிரிஸ்தல்களாகவி ருக்கும்; மணமற்றது; காரமான உவர்ப்புச் சுவையுள்ளது; தண்ணீரி ற் சுறுக்குக் கரையும்; சீதிலே சொற்பங் கரையும்; இதின் தண்ணீ ர்க்கரைவுக்குத் தாத்தரிக்கமிலஞ்[1] சேர்க்க வெண்மையான கிரிஸ்தல்கள் அடையும். இதின் தண்ணீர்க்கரைவைச் சொற்ப குலோறத்[2]தோடு கலந்து அத்தோடு ஈதரைக்[3]கூட்டிக் குலுக்கினல் அந்த ஈதர் மேலாய் வரும்போ து சிவத்த நிறங் காட்டும். சோதனைகள். இந்த உப்பிலே பத்துக் கிறே னைப் பூரணமாய்க் கூறுபடுத்துவதற்கு வெள்ளிநீதுரசுப்[4] பருமவிலயனத்[5]தி ல் 840 கிறேனளவு வேண்டும். இந்த உப்பின் விலயனத்தை அமைலமு சிலாகுடன்[6] கலந்து குலோறநீரிலே ஒரு துளியை அதற்குள்ளே விட்டா ல் நீலநிறங் காட்டாமற் செம்மஞ்சள் நிறங் காட்டும்.

தன்மை. பதாசியவியோதிர[7]த்தின் தன்மை போலவே. ஆயினும் இது சனன உறுப்புகளிலும் சனனத் தொழிலிலும் வீறுன சாந்தன[8]செயல் கா ட்டும். மேலும் இது சளிச்சவ்விலும் விசேஷமாய்த் தொண்டை குரல்வ ளை[9]களின்சளிச்சவ்விலும் உணர்ச்சியின்மையை உண்டாக்கும். ஆகையா ல் குரல்வளையைச் சோதிப்பதற்கும் அதிற் சத்திரமிடுவதற்கும் ஆளை ஆய த்தப்படுத்துவதற்கு இது உவந்தது. வெளிமருந்தாயிட்டால் இது ஸ்திமு ல[10]மாகும்.

உபயோகம். நிம்வுமானியை[11], பிரீயபிசம்[12],பங்குரம்[13]என்றநோய்களு க்கும் சிலவகையான ஸ்பமதுறீயம்[14], மெனுறீயம்[15],என்பவற்றுக்கும், காமக் கிளர்ச்சியைப்பற்றிய எபிலெப்சி[16], இஸ்தேரி[17] நோய்களுக்கும், இது உத்த ம மருந்து. மேலும் ஸ்துரூம[18]நோய்களுக்கும் ஈரல் பிளிகைகளின் வீக்க த்துக்கும் அமெனுறீயம்[19], சனுறீயம்[20],பிள்ளைகளிலுண்டாம் சலவொழுக்குக் கும்,ஈளை, ஸ்பச இருமல்களுக்கும்[21], இதயகிபோஷம்[22], தொல்லையான சரு மநோய்களுக்கும் இது கொடுக்கப்படும்.

தேயம். ஐந்து முதல் முப்பது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரை த்தாவது குளிகையாக்கியாவது கொடுக்கலாம்.

## சோடதம். SODIUM.

சின்னம், சோ; அணுப்பாரம். 23.

சோடதம் என்பது சோடத்[23]துக்குத் தாரக[24]மாகியலோகம். இது மெழுகு போல் மெதுவானது; பலகையாய் அடிபடக் கூடியது. வெள்ளிபோல்

1 Tartaric acid. 2 Chlorum. 3 Ether. 4 Nitrate of Silver. 5 Volumetric solution. 6 Mucilage of starch. 7 Iodide of Potassium. 8 Sedative. 9 Larynx. 10 Stimulant. 11 Nymphomania. 12 Priapism, 13 Chordee. 14 Spermatorrhoea. 15 Menorrhoea. 16 Epilepsy. 17 Hysteria. 18 Struma, 19 Amenorrhoea. 20 Gonorrhoea. 21 Spasmodic cough. 22 Hypertrophy of heart. 23 Soda, 24 Base.

Digitized By Roja Muthiah Research Library

மினுக்கமுடையது; பரமாணுவிலே வைத்தாற் சுறுக்கு அக்சிரித்துப்[1] பிர பையான மஞ்சட்சுவாலை கொண்டு எரியும். 207.7 பாகையில் உருகும். இதின் விசேஷகிருவிதம்[2] 0.97. இது தண்ணீரைக் கூறுகளாகப் பிரித்து ஐருதம்[3] வாயுவை விட்டுக் காரச் சோடமாகிக் கரையும். இது சோத என்ற சின்னத்தையுடைய சோடதகுலோறிரம்[4] என்ற கறியுப்பாக இயற்கை யில் அதிகமாயுண்டு. பிராணியநீர்கள் அனேகத்தில் இதுவுமோர் கூறு.

## காரச் சோடம். CAUSTIC SODA.

இதற்குச் சின்னம், சோஐஅ. இதைச் சோடவைரசு என்றும் சொல்வா ர்கள். சோட நீரை வெள்ளிக் கலத்திலே வற்ற வறட்டி மறுபடி உருக்கிக் காரச் சோடத்தைச் சொற்ப அசுத்தங் கலந்ததாயெடுப்பார்கள். லட்சண ங்கள். வன்மையாய் நரை வெள்ளை நிறமான தகட்டுத் துண்டுகளாகவிரு க்கும். மெத்த அல்கலை[5]யானது. அரிக்கக்கூடியது. இது சுவாலைக்கு ம ஞ்சள்நிறங் கொடுக்கும். இதைத் தண்ணீரிற் கரைத்து நீதுரிக்கமிலத்தால்[6] புளிப்பாக்கினால் இதிலே அசுத்தங்களிருப்பதால் வெள்ளிநீதுரசை[7]யாவது, பாரியகுலோறிரத்தை[8]யாவது சேர்க்கும்போது சொற்ப வெண்ணடையல் காணும். பிலாடின பிரகுலோறிரஞ்[9] சேர்த்தாலோ அடையல் காணாது. சோதனை. இதிலே நாற்பது கிறேனைத் தண்ணீரிற் கரைத்தால் அதிலே ம ண்டிவிடுவதரிது. இவ்வளவையுந் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில[10]பருமவிலயனத்தில்[11] 900 கிறேனளவு வேண்டும். பரமாணுவில் வைத்தால் இது கரைந்துபோகுமாதலால் பச்சைக்கண்ணுடிச் சீசாவில் இட்டு கண்ணுடிச் சடையால் நன்றாயடைத்து வைக்கவேண்டும்.

தன்மை, உபயோகம். இது காரம். தகனி. காரப் பதாசியைப் போல அது வழங்கும் நோய்களுக்கே இதுவும் வழங்கப்படும். அதைப் போல இது சுறுக்கு உருகாதாகையால் அதிலும் இதை வழங்குவது இலகு.

## சோட நீர். SOLUTION OF SODA.

சோடகாபனசைத் தண்ணீரிற் கரைத்துக் காய்ச்சிக் கொதிக்கும்பொழு து நீறின சுண்ணும்போடு கலக்க அடையும் மண்டி சுண்ணகாபனசாகு ம்; அதிலே தெளிந்த நீர் சோடநீராகும். லட்சணங்கள். இது தெளிந் த உருவொளியானதாய் மணமற்ற வீறுன அல்கலைச் சுவையுள்ள நீர். சோதனைகள். விசேஷகிருவிதம் 1.047. இதிலே ஒரு அன்சைத் தடஸ் திப்பதற்கு அக்சலிக்கமிலபருமவிலயனத்தில் 470 கிறேனளவு வேண்டும். இதை மிஞ்சிய கிருசவைருகுலோறிக்கமிலத்[12]தோடு கூட்டும்போது நுரைக் காது. சுண்ணநீரோடாவது அமோனவக்சலசு[13]நீரோடாவது கூட்டும்போ து அடையல்தோன்றுது. இதை மிஞ்சிய கிருசநீதுரிக்கமிலத்தோடு[14] கலந் த முற்றும் வறட்டி அடையும் சேடத்தைத் தண்ணீரிற் கரைத்தால் தெளி ந்த நீராகும், அதிலே அசுத்தங்கள் இருப்பதால் பாரியகுலோறிரமாவது, வெள்ளிநீதுரசாவது சேர்க்கக் கலங்கலாகும். அமோனத்துக்கோ கலங்காது. இதில் ஒரு அன்சிலே சோடவைரசு 18.8 கிறேன் அடங்கியிருக்கும்.

1 Oxydize. 2 Specific gravity. 3 Hydrogen. 4 Chloride of sodium. 5 Alkali. 6 Nitric acid. 7 Nitrate of silver. 8 Chloride of Barium. 9 Percholoride of Platinum. 10 Oxalic acid. 11 Volumetric solution. 12 Dilute Hydrochloric acid. 13 Oxalate of Ammonia. 14 Dilute Nitric acid.

Digitized By Roja Muthiah Research Library

இதைப் பச்சைச் சீசாக்களிலிட்டுக் கண்ணாடிச்சடையால் நன்றாய் அடைத்துவைத்திருக்கவேண்டும்.

தன்மை, உபயோகம். பதாசி நீரைப் போலவே. பித்தக் குழப்பத்தோடு கூடிய சிலவகைக் குன்மத்துக்கு இது விசேஷமாய் உவர்ந்தது.

தேயம். பத்துத் துளி முதல் ஒரு திரும் வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்துகொடுக்கவும்.

கராச் சோடம் செய்வதிற் சோடநீர் வழங்கப்படும்.

## சோடகாபனசு. CARBONATE OF SODA.

இதற்குச் சின்னம் சோ$_2$ கா அ$_3$ 10ஐஅ. இது கடற் பூண்டுகளின் சாம்பலிலிருந்து எடுக்கப்படும். அல்லது சோடசல்வசைக்[1] கெமிஸ்த முறையாய்க் கூறுபடுத்தி எடுக்கப்படும். லட்சணங்கள். உருவொளியான நிறமற்ற சதுபுச கிரிஸ்தற் தகடுகளாக விருக்கும். பரமாணுவில் வைத்தாற் தூளாகும். கார்ப்பான அல்கலேச்[2] சுவையும் அல்கலேத் தன்மையுமுடையது. இது சுவாலேக்கு மஞ்சள் நிறங் கொடுக்கும். கிருசவைருகுலோறிக்கமிலத்திற் போட்டால் நுரைகொண்டு கரையும். அக் கரைவுசகுப் பிலாடினபிரகுலோறிரஞ்[4] சேர்த்தால் அடையலுண்டாகாது. சூட்டுக்குக் கரைந்துருகிக் காய்ந்து தன் நிறையில் நூற்றுக்கு அறுபத்துமூன்று பங்கை இழக்கும். சோதனைகள். நீதுரிக்கமிலத்தை[5] மிஞ்சக் கூட்டிஞற் பாரியகுலோறிர[6]மாவது வெள்ளிநீதுரசாவது[7]சேர்க்கும்போது சொற்ப அடையல்மாத்திரமுண்டாகும், இதிலே நூற்று நாற்பத்துமூன்று கிறேனைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில[8]பருமவிலயனத்தில் 960 கிறேனளவாகுதல் வேண்டும்.

தன்மை, உபயோகம். சோடதுவிகாபனசைப் போலவே. அதிலும் இது காரமானது.

தேயம். ஐந்து கிறேன் முதல் முப்பது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கவும். நுரைபானங்கள் செய்வதற்கு இதில் இருபது கிறேனே, சிதிறிக்கமிலத்தில்[9] ஒன்பதேமுக்காற் கிறேனும் தாத்தரிக்கமிலத்திற்[10] பத்தரைக் கிறேனும் எலுமிச்சம் பழச்சாற்றில் இரண்டரைத்திரும்பும் பூர்த்திக்கும்.

ரசிதம். வறுத்த சோடகாபனசு. Dried carbonate of Soda. கொள். சோடகாபனசு, எட்டு அன்சு. சோடகாபனசை மணல் மத்திகத்திற்[11] போட்டு நல்ல மணற் சூட்டில் வறுத்து முதல் உருகு நீர் வற்றி இறுகுந்தனேயும் வறுத்து அதை மாவாக அரைத்துக் கண்ணாடிச் சடையால் அடைத்த சீசாக்களிற் போட்டு வைக்கவும்.

தேயம். மூன்று கிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்குங்கொடுக்கலாம்.

[இந்துவில் பிருக்கிச் சலிகோனிப்பூடு[12], நுடிவிலோரச் சுவீதப்பூடு[13], உமரியென்றவைகளேயும் ஒருவேளே இவைபோன்ற மற்றும் பூடுகளேயும் சாம்பலாக்கி அச் சாம்பலிலிருந்து அசுத்தமான சோடகாபனசை அதிகமாய் எடுப்பார்கள். இது இந்துஸ்தானிப் பாஷையில் காரச்சர்ச்சி[14] எனப்படும். வங்காளத்தில் மன்கேர்[15] முதலிய சில பகுதிகளில் நிலத்திலிருந்து ஒரு வகையான மண் எடுக்கப்படும். இவ்விரண்டையும் மாறிவழங்கப்படாது.

---

1 Soda sulphate. 2 Alkali. 3 Dilute Hydrochloric acid. 4 Perchloride of Platinum. 5 Nitric acid. 6 Chloride of Barium 7 Nitrate of Silver. 8 Oxalic acid. 9 Citric acid. 10 Tartaric acid. 11 Sand bath. 12 Salicornia Brachiata. 13 Suaeda nudiflora. 14 Khar-suji, 15 Monghyr.

Digitized By Roja Muthiah Research Library

இந்த மண்ணிலே நூற்றுக்கு 40 முதல் 50 பங்கு வீதமாய்ச் சோடகாபனகம், அற்ப அளவான சோடசல்வகம், இந்திர பதார்த்தம், களிமண், மணல், இரும்புக் கறைகளும் அடங்கியிருக்கும். இதிலிருந்து சோடகாபனக செய்யுமுறையை வங்காள சிகிச்சா வாகடங் கூறுகின்றது. ஆயினும் இங்கிலந்திலிருந்து வரும் சரக்கைப்பார்க்க மலிவாய் இதிலிருந்து செய்யக்கூடுமென்பது சந்தேகம். பரமகால் என்ற இடத்திலுள்ள சோடமண்ணிலங்களைப் பற்றி கம்பெல் தனகர்த்தன் விவரித்திருக்கிறார்.]

## சோடதுவிகாபனக. BICARBONATE OF SODA.

இதற்குச் சின்னம் சோ ஐ கா அ3. மாபிட் கற்றுண்டுகளிலே ஐருகுலோறிக்கமிலத்தை வார்த்து அங்கெழும்பும் காபனிக்கமில[1]வாயுவை ஒரு பங்கு சோடகாபனகம் ஒன்றரைப்பங்கு வறுத்த சோடகாபனகங் கலந்த கலவைக்கூடே தாரையாகச் செல்லவிட்டுப் பூர்த்திக்கச் சோடதுவிகாபனக பிறக்கும். லட்சணங்கள். இது வெள்ளை மாவாக அல்லது மங்கற் செதில்களாக இருக்கும்; உவர்ப்புச் சுவைகொண்டது; சுவாலைக்கு மஞ்சள்நிறங் கொடுக்கும்; கிருசவைருகுலோறிக்கமில[2]த்திலே மெத்த நுரைத்துக் கரையும்; இக்கரைவிலே பிலாடின பிரகுலோறிரம்[3] யாதொரு அடையலுமுண்டாக்காது. சோதனைகள். இதைத் தண்ணீரிற் கரைத்து நீதுரிக்கமிலத்தாற்[4] புளிப்பாக்கினுற் பாரியகுலோறிர[5]மாவது வெள்ளிநீதுர[6]சாவது அதிலே அடையலைத் தோற்றுவிப்பதரிது, எண்பத்துநாலு கிறேனைச் செஞ்சூட்டில் வைத்தால் ஐம்பத்துமூன்று கிறேன் அல்கலே[7] மிஞ்சும். அவ்வளவையும் நடஸ்தி[8]ப்பதற்கு அக்சலிக்கமில[9]பருமவிலயன[10]த்தில் 1000 கிறேனளவு வேண்டும்.

தன்மை. முதலாவது அபாமிலி[11], இரண்டாவது அல்திறவம்[12].

உபயோகம். சிரணபாதையிலுண்டாகும் புளிப்புக்கும், கடியல்சி[13], தியறியம்[14], வாயுப்பொருமல், அவற்றைச் சார்ந்த வாந்திக்கும், இது உத்தம மருந்து. லிதியசி[15], வாதம், அல்புமினூறி[16], ஏமறெச்சுப்பெயூறம்[17], என்றநோய்களுக்கும் இது உபயோகமானது. நாட்பட்ட சருமநோய்கள், சிலவற்றுக்கு விசேஷமாய்ப் பருக்கள், செதில்கள் வகையைச் சேர்ந்த சருமநோய்களுக்கு இது உள்மருந்தாயும் தோயம்[18], லோஷன்[19], அன்கென்[20] என்றவகையான வெளிமருந்தாயும் சித்தியாய் வழங்கப்படும்.

தேயம். பதினைந்து கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும்.

ரசிதங்கள். சோடநுரைநீர். Effervescing solution of soda. கொள். சோடதுவிகாபனக, முப்பது கிறேன்; தண்ணீர் அரைநாழி. சோடதுவிகாபனகைத் தண்ணீரிற் கரைத்து வடித்துவைத்துக்கொண்டு, சல்வுரிக்கமிலத்தைக்[21] கிரீதத்தின்[22]மேல்வார்த்து அதிலுண்டாகுங் காபனிக்கமில வாயுவைச் சுத்தியாகக் கழுவி அந்த நீருக்குள்ளே ஏழு பரமாணுவின் அமுக்கத்தோடு செலுத்தவும். அமுக்கப்பட்ட வாயு பறிந்துபோகாதபடி அந்த

---

1 Carbonic acid. 2 Dilute. 3 Percholoride of Platinum. 4 Nitric acid 5 Chloride of Barium 6 Nitrate of silver. 7 Alkali. 8 Neutralize. 9 Oxalic acid. 10 Volumetric solution. 11 Antacid. 12 Alterative. 13 Cardialgia. 14 Diarrhoea. 15 Lithiasis. 16 Albuminuria. 17 Purpura Haemorrhagica. 18 Bath. 19 Lotion. 20 Ointment. 21 Sulphuric acid. 22 Chalk.

Digitized By Roja Muthiah Research Library

நீரைக் கண்ணாடிச் சடையால் நன்றாயடைத்த சீசாக்களிற் பேணிவைக்க வும். லட்சணங்கள். இந்நீரை அடக்கிய சீசாவைத் திறந்தவுடன் காப னிக்கமில வாயுப் பறிய நீர் பெலனாய்க் குமிழித்துப் பொங்கும். இந்த நீ ர் தெளிந்தது; குமிழிக்கும்; உவப்பான புளிச் சுவையுள்ளது. சோத னைகள். இதிற் பத்து அன்சை ஐந்துமினி நேரமாகக் காய்ச்சினபின் அ தைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில[1] பருமவிலயனத்தில்[2] 178 கிறேனள வு வேண்டும்.

இது பேர்பெற்ற அபால்கலையும்[3] குளிர்மையுமானது. வாடிக்கையான பேச்சில் சோடநீர்[4] என்று சொல்லப்படுவதாகிய காபனிக்கமிலமும் தண் ணீருஞ் சேர்ந்த நீர் என்று இதை எடுத்துக்கொள்ளப்படாது.

நுரைசோடசித்திறுதாத்தரசு. Effervescent citro-tartrate of soda. கொள். சோடதுவிகாபனசு, மாவாக, பதினேழு அன்சு; தாத்தரிக்கமில ம்[5] மாவாக எட்டு அன்சு; சித்திறிக்கமிலம்[6] மாவாக ஆறு அன்சு. மாக்களை த்திறமாய்க் கலந்து, 200 பாகைக்கும், 220 பாகைக்குமிடையான சூடு கொள்ளக் காய்ச்சத் தகுந்த பாத்திரத்தில் இட்டு, மாவின் இம்மிகள் திரள த் துவங்கின நேரந் தொடங்கி, அவை சிற்றுண்டையாகுந்தனையும் கெதியா ய்க் கலக்கி, ஒரே பருமையும் வசதியான அளவுமான உண்டைகளைத் தகு ந்த அரிப்பெட்டியாற் பிரித்து, நன்றாயடைத்த சீசாக்களில் இட்டு வைக் கவும்.

தன்மை. இது நல்ல குளிர்மையானது.

தேயம். அரைத்திறாம் முதல் இரண்டு திறாம் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கவும்.

சோடதுவிகாபனசு வில்லை. Bicarbonate of soda Lozenges. கொ ள். சோடதுவிகாபனசு, மாவாக, மூவாயிரத்தறுநூறு கிறேன்; சுத்தசர்க்க ரை மாவாக, இருபத்தைந்து அன்சு; அகசிப் பிசின்மா[7] ஒரு அன்சு; அக சிமுசிலாகு[8] இரண்டு அன்சு; திஸ்திலித்த தண்ணீர் ஒரு அன்சு. மாக்க ள் எல்லாவற்றையுஞ் சேர்த்து தகுந்த பதம் வரத்தக்கதாய் முசிலாகையும் தண்ணீரையுஞ் சேர்த்து 720 வில்லையாகத் தட்டி வெப்பமான அறையில்[9] மட்டான அனலிற் காயவைக்கவும்.

தேயம். ஒன்று முதல் ஆறு வில்லை வரைக்கு. ஒவ்வொரு வில்லையி லும் ஐந்து கிறேன் சோடதுவிகாபனசு இருக்கும்.

## சோடதுவிபோறசு. வெண்காரம்.

## BIBORATE OF SODA. BORAX.

இதற்குச் சின்னம் சோ$_2$ போ$_4$ அ$_7$ 10ஜ$_2$ அ. திபெத்திலும் மற்றும் ஆசியத்தின் உஷ்டண பகுதிகளிலுமுள்ள வாவிக்கரைகளிற் தண்ணீர் வ விய வற்றுவதால் அசுத்தமான வெண்காரம் விளைகின்றது. மேலும் சோ டகாபனசைப்[10] போறசிக்கமில[11]நீரிற் தகுந்த பிரமாணமாய்க் கரைத்துக்கா ய்ச்சி இது உண்டாக்கப்படும். லட்சணங்கள். இது உருவொளியான நிறமற்ற கிறிஸ்தல்களாக இருக்கும். பரமாணுவில் வைத்தாற் சில்வேளை

1 Oxalic acid. 2 Volumetric solution. 3 Antalkaline. 4 Soda water. 5 Tartaric acid. 6 Citric acid. 7 Gum Acacia. 8 Mucilage. 9 Hot air chamber. 10 Carbonate of soda. 11 Boracic acid.

Digitized By Roja Muthiah Research Library

சற்றே பூக்கும். சொற்ப அல்கலை[1]த்தன்மை கொண்டது. திட்டசித்த[2]த்தில் கரையாது; 12 பங்கு தண்ணீரிலும் அரைப்பங்கு வெந்நீரிலுங் கரையும். இதை வெந்நீரிற் பூர்த்தியாய்க் கரைத்து, ஏதும் மினிறலமிலத்தால்[3] புளிப்பாக்கினுல், ஆறும்போது செதிலான கிரிஸ்தல்கள் அடையும். இவ்வடையல் போறசிக்கமிலம். அதைச் சீதிலேகரைத்தால் அக்கரைவு பச்சைச்சுவாலைகொண்டு எரியும். சோதனைகள். இதில் 191 கிறேனைப் பத்து அன்சு திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்தால் அதைப் பூர்த்திப்பதற்கு[4] அக்சலிக்கமில[5] பருமவிலயனத்[6]தில் 1000 கிறேனளவு வேண்டும்.

தன்மை. குளிர்மையானது, அமூரிதி[7], எம்மெனகக்கு[8], பிரசவநோக்காட்டை உண்டாக்கக்கூடியதாம். சலக்கல்லைக் கரைக்கக்கூடியது; தானிகமாயிட்டால் ஸ்திமூலம்[9].

உபயோகம். குலொறேசி, அமெனுறீயம், திஸ்மெனுறீயம் என்ற நோய்களுக்கும், சிலவகையான கருப்பை இரத்தப்பெருக்குக்கும் இது நயமென்று கொடுக்கப்பட்டதுண்டு. மேலும் நீர்க்கோவை நோய்கள், எபிலெப்சி, பிரசவக் கழிச்சல், பிரசவ நோய்களுக்கும், அலுப்பான பிரசவங்களிற் பிரசவ நோக்காட்டைக் கிளப்புவதற்கும் இது உள்ளே கொடுக்கப்படும். ஆயினும் இந்த நோய்களுக்கெல்லாம் வீறுன வேறு மருந்துகளோடு இது கலந்து கொடுக்கப்படுவதால் இதாலுண்டாகு நயத்தை நிதானிப்பது பிரயாசம். இதிற் கொஞ்சத்தைத் தண்ணீரிற் கரைத்துச் சலப்பைக்குட் புகட்டினுல் லிதிக்கமில[10] கற்களைக் கரைக்கும். தானிக மருந்தாக அக்கரம்[11], அக்கரப் புண்கள், வாயவியல், மூலைச்காம்புப் புண்கள், வெடிப்புகள், கோதம்[12] பலவகையான சருமநோய்களுக்கு இது உவந்தது. சருமநோய்களிற் சொறிவைத் தணிப்பதற்கு இது உத்தமமானது.

தேயம். இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கு.

ரசிதங்கள். வெண்காரதேன். Borax Honey. கொள். வெண்காரம் மாவாக, அறுபத்துநாலு கிறேன்; சுத்ததேன், ஒரு அன்சு. கலக்கவும். அக்கரத்துக்கும் வாயிலுண்டாகும் வேறும் சில நோய்களுக்கும் பூசுவதற்கு இது நல்ல மருந்து.

போறசகிலைசரின். Glycerine of Borax. கொள். வெண்காரம், மாவாக, ஒருஅன்சு; கிலைசரின்[13] நாலு அன்சு. குழியம்மியிலிட்டு வெண்காரம் கரையுந்தனையும் அரைக்கவும்.

சருமநோய்கள் சிலவற்றுக்கு இது நல்ல பூச்சுமருந்து.

[இந்துக் கடைகளிலிருக்கும் வெண்காரம், திபெத்து, அசம், நேபாளம் என்ற தேசங்களிலிருந்து வரும். அதைச் சுத்திசெய்யவேண்டுமாகில் அதிலொரு இருத்தலை ஒரு திரும் சுண்ணும்பும் ஒன்றரைநாழி தண்ணீரும் சேர்த்துக் காய்ச்சிச் சீலையில் வடித்து வற்றவைத்துக் கிரிஸ்தலாக்கி எடுக்கலாம்.]

## சோடபாஸ்வசு. PHOSPHATE OF SODA.

இதற்குச் சின்னம் சோ$_2$ ஐபாஅ$_4$ 12ஐ$_2$ அ. இது இந்திர அங்கிந்திர பதார்த்தங்களில் சுயமாயுள்ளது. மருந்துக்கு இதை எடுக்கவேண்டுமாகில்

---

1 Alkali. 2 Rectified spirit. 3 Mineral acid. 4 Saturate. 5 Oxalic acid. 6 Volumetric solution. 7 Diuretic. 8 Emmenagogue. 9 Stimulant. 10 Lithic acid. 11 Apthae. 12 Gangrene, அழுகல். 13 Glycerine.

Digitized By Roja Muthiah Research Library

எரித்த எலும்புத் தூளிலே[1] சல்வுரிக்கமிலத்தை[2] வார்த்து அதிற் பிறக்கும் சுண்ணவதிபாஸ்வசைத்[3] தண்ணீரிற் கரைத்துச் சோடகாபனசார்[4] தடஸ்தித்து எடுக்கலாம். இது உருவொளியான நிறமற்ற நாலு பக்கமுள்ள கூரையுடைய ரம்பப் பிரிசங்களாக[5] இருக்கும். இது பரமாணுவிலே பூக்கும். கறியுப்பைப் போன்ற சுவைகொண்டது. சோதனைகள். சுவாலைக்கு இது மஞ்சணிறங் கொடுக்கும். இதைத் தண்ணீரிற் கரைத்து வெள்ளிநீதரசு[6] கூட்டவுண்டாகும் மஞ்சணிற அடையல் அமோனா[7] நீரிலும் நீதுரிக்கமிலத்திலும்[8] கரையும். பாரிய குலோறிரஞ்[9] சேர்த்தால் நீதுரிக்கமிலத்திற் கரையக்கூடிய வெண்ணடையல் பிறக்கும். சற்றே சிவக்கக் காய்ச்சினால் இதிலே நிறைப்படி நூற்றில் அறுபத்துமூன்று பங்கும் இழந்துபோக எஞ்சுஞ் சேடத்தைத் தண்ணீரிற்கரைத்துப் பாரிய குலோறிரஞ் சேர்க்கக் கிருச[10] நீதுரிக்கமிலத்திற் கரையக்கூடிய வோர் அடையல் தோன்றும். ஐருகுலோறிக்கமிலத்தாற்[11] புளிப்பாக்கி ஐருசல்வுரிக்கமிலஞ்[12] சேர்த்தாலோ அடையல் தோன்றாது.

தன்மை. இது வாய்ப்பான இளம் பேதி. சிறுதேயத்தில் அல்திறவம்[13].

உபயோகம். சுர நோய்கள், தாபித நோய்களுக்கும், மலவரட்சிக்கும் இது உவந்த விரேசன மருந்து. செயலில் இது இளக்கமாயும் சுவையில் மெத்தப்பழுதற்றதாயுமிருப்பதாற் பிள்ளைகளுக்கு விசேஷமாய் உவந்தது. மேலும் சர்க்கராமூரியென்ற நோயுள்ளவர்களுக்கு மெத்தஉவந்ததாம். இது விதிக்கமில கற்களைக் கரைக்குந் தன்மை உடையதாதலால் இவ்வகையான கல்லடைசலுக்குங் கொடுக்கப்படும். வாந்திபேதிக்கும் இது நல்ல மருந்தாகும்.

தேயம். விரேசனியாய் இரண்டு திரும்முதல் ஒருஅன்சுவரைக்கும், அல்திறவமாய் இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்குங் கொடுக்கலாம். இதின் சுவை கறியுப்பின் சுவைக்கு மெத்த வித்தியாசமில்லாதிருப்பதால் அதைப்போலவே இதையுங் கஞ்சி ஆணம் முதலிய உணவிற் போட்டுக் கொடுக்கலாம்.

## சோடத குலோறிரம். கறியுப்பு.

## CHLORIDE OF SODIUM. COMMON SALT.

கறியுப்பாகிய சோடதகுலோறிரத்துக்குச் சின்னம் சோத. இது இந்திர அநிந்திர கணங்கள்[14] இரண்டிலும் சுயமாய் மெத்தவுண்டு. கடற்றண்ணீரில் நூற்றுக்கு 2.5 பங்கும் இதுவே. மேலும் கல்லுப்பு[15] எனப்பட்டு நிலத்திலே மெத்த நீளம் அகலமான பெரிய பாராகவிருக்கும். உவரூற்றுகளிற் கரைந்திருக்கும். இவைகளிலிருந்து இது பலவகையாய் எடுக்கப்படும். லட்சணங்கள். இது சிறிய வெள்ளையான கிரிஸ்தற் தூளாகவாவது உருவொளியான கன வடிவக் கிரிஸ்தற் கட்டிகளாகவாவது இருக்கும். சுத்த உவர்ப்புச் சுவைகொண்டது; சுவாலைக்கு மஞ்சணிறங் கொடுக்கும்; தண்ணீரிற் கரையும். இதின் கரைவுக்குப் பிலாடின பிரகுலோறிரம்[16]

---

1 Bone ash. 2 Sulphuric acid. 3 Super phosphate of lime. 4 Carbonate of soda. 5 Prism. 6 Nitrate of silver. 7 Ammonia, 8 Nitric acid. 9 Chloride of Barium. 10 Dilute. 11 Hydrochloric acid. 12 Hydro sulphuric acid. 13 Alterative, 14 Kingdoms, 15 Rock salt. 16 Perchloride of platinum.



Digitized By Roja Muthiah Research Library

சேர்த்தால் அடையல் தோன்றுது; வெள்ளிநீதுரசு[1] சேர்த்தாலோ வெண்ணடையல் விழும். இந்த அடையல் அமோனா[2] நீரிற் கரையும், நீதுரிக்கமிலத்திலோ[3] கரையாது.

நன்மை. இதைச் சிறுதேயத்தில் கொடுக்கக்கொடுத்தால் பசியைத் தூண்டிச் சீரண விபாகத்[4] தொழில்களுக்குத் துணைசெய்யும். பெருந்தேயத்திற் கரைத்துக்கொடுத்தால் வாந்திசகும் பேதிக்கும். மேலும் இது கிருமிகொல்லி. தானிகமாயிட்டால் ருபிவாஷ[5]ணுகும்.

உபயோகம். சிலவகையான குன்மத்துக்கும், குழந்தைகளுக்குண்டாகுங் கழிச்சலுக்கும், முறைச்சுரங்கள், இரத்த இருமல், ககரோகங்களுக்கும், கறியுப்பு நயமென்று கொடுக்கப்படும். வாந்திபேதி நோயில் லவண பரிகாரம் என்றதில் இது முக்கியமான மருந்தாகின்றது. வெள்ளிநீதுரசை நஞ்சாகத் தின்றவர்களுக்கு இது கெமிஸ்த மாற்று. உப்பை வறுத்து ஸ்துருமம்[6] கோள வீக்கங்களுக்கும்[7] பொருத்து வியாதிகளுக்கும் அணைவாகக் கட்டுதல் நயமாகக் காணப்பட்டது.

தேயம். சீரணியாகப் பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்கும் இன்னுங் கூடவுங் கொடுக்கலாம். விரேசனியாக அரைஅன்சு ஒரு அன்சு கொடுக்கலாம். வமனியாக ஒன்றரை அன்சு முதல் இரண்டு அன்சை இளவெந்நீரில் கரைத்துக் கொடுக்கலாம். கடற்றண்ணீரின் வீறுள்ள தோயங்கள் செய்வதற்கு மூன்று கலன் நீருக்கு ஒரு இருத்தல் உப்பு வீதமாகக் கரைக்கவேண்டும்.

[இந்துக்களுக்குள்ளே வெகுவாய்ப் பேர்பெற்றிருக்கிற கறுப்புப்பு என்பது அயசல்வுரெற்று[8] சொற்பமாய்க்கலந்த அசுத்த கறியுப்பேயன்றி வேறல்ல. அது செய்யும் முறை தலீவுசெறீவு என்ற வாகடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. சுதேசிகளுக்குள்ளே அதின் பிரயோகம் அனேகம். இதன்பேரில் என்றேசன் துவைனிங்கு என்பவர்கள் சொல்பவைகளால் நச்சுக்காற்றுக் காரணமாய்ப் பிளீகை ஈரல்களிலுண்டாகுங் காலிகவீக்கங்களுக்கு இது நயமென்று நம்ப நியாயமுண்டு. அக்கஷ் என்பவர் இதைச் சிலவருஷங்களுக்கு முன் பரும்படி கூறுபடுத்தியிருக்கிறார். வாறிங்கு பண்டிதர் இதற்கு வேறும் அவுஷத பேறும் உண்டு என்று சொல்லுகிறார்.

## சோட குலோறக நீர்.

## SOLUTION OF CHLORINATED SODA.

இது சோடதகுலோறிசு[9], சோடதகுலோறிரம்[10], சோடதுவிகாபனசு[11] என்ற மூன்று உப்புங் கலந்த நீர். மணமற்றது; அல்கலைத்தன்மையுள்ளது; துவர்ச் சுவையும் சொற்ப குலோற[12] மணமுமுடையது. சோதனைகள். இந்திகுசல்வசின்[13]நிறத்தைக் கெடுக்கும். ஐருகுலோறிக்கமிலத்[14]தோடு சேர்த்தால் இது நுரைத்துக் குலோறம் காபனிக்கமிலம்[15] என்ற வாயுக்களைக் கக்கும். இந்த நீருக்குப் பிலாடினபிரகுலோறிரஞ்[16] சேர்த்தால் அடையல் தோன்றுது. விசேஷகிருவிதம் 1.103. பதாசியவியோதிர[17]த்தில் இருபது கிறே

1 Nitrate of silver. 2 Ammonia. 3 Nitric acid. 4 Assimilation. 5 Rubefacient. 6 Struma. 7 Glandular swelling. 8 Sulphuret of iron. 9 Hypochlorite of soda. 10 Chloride of sodium. 11 Bicarbonate of soda. 12 Chlorum. 13 Sulphate of indigo. 14 Hydrochloric acid. 15 Carbonic acid. 16 Perchloride of platinum. 17 Iodide of Potassium.

Digitized By Roja Muthiah Research Library

லை நாலு அன்சு தண்ணீரிற் கரைத்து அத்தோடு சோட குலோறக நீரில் நிறைப்படி எழுபது கிறேனைக் கூட்டி ஐருகுலோறிக்கமிலத்தில் இரண்டு துளிருஞ் சேர்த்துப் புளிப்பாக்கினுல், இக் கலவையின் கபில நிறத்தைக் கெடுப்பதற்குச் சோடவுதசல்விசுப்[1] பருமவிலயனத்தில்[2] 500 கிறேனளவு வேணடும். இது அமோனவக்சலசுக்கு[3] அடையல் காட்டாது.

தன்மை. இது ஸ்திமூலம்[4], தொணிகம்[5], அந்திசெப்தி[6]. வெளியிலிட்டால் ஸ்திமுலம், துவர், தியோடறிசர்[7].

உபயோகம். சன்னிச்சுரம்[8], சன்னிவச்சுரங்க[9]ளுக்கும், ஸ்காலதீனத்துக்கும்[10], சுரநோய்கள், தாபித நோய்களின் பிறகூற்றுக்கும், பொதுவாய் வக்சந்திமங்களுக்கும்[11], இவைகள் அசத்துவ[12] கோலங்கொள்ளும்போது கொடுக்க இது உத்தம மருந்து. முறைச்சுரங்களுக்கும் பிள்ளைகளுக்குண்டாகும் மதியாந்திர[13] நோய்களுக்கும் இது நயமென்று கொடுக்கப்படும். இடுமருந்தாக இது வாயில் உண்டாகும் அக்கரம், ஸ்கேவி[14], இரசபுண்களுக்கும், பலவகையான சைனன்கி[15]க்கும், விசேஷமாய் ஸ்காலதீனத்தோடு கூடி வருவதற்கும், யோனி, கேள்வித்துவாரம் முதலியவற்றினின்று நாற்றமான நீர் பொசிவதற்கும், தொல்லையான சருமநோய்களுக்கும், விசேஷமாய்ச் சிவ்விசை[16]ப்பற்றி உண்டாகிற நோய்களுக்கும் அழுகும் புண்களுக்கும் இது உவந்தது. அழுகற் புண்களின் நாற்றத்தை மாற்றுவதற்குமாத்திரமல்ல அவற்றைச் சுகசீருக்கு வர அருட்டுவதற்கும் இது உதவும். ஐருசல்வுரிக்கமிலம்[17], ஐருசல்விரங்கள்[18], ஐருசையனிக்கமிலம்[19] என்ற நஞ்சுகளுக்கு இது மாற்று.

தேயம். பத்து முதல் முப்பது மினிம்[20]வரைக்குக் கன தண்ணீரிற் கலந்து கொடுக்கவும். கார்கிலாக[21] வழங்க இதைப் பதினைந்து மடங்கு தண்ணீரோடும் லோஷனுய்[22] வழங்கப் பத்துப் பதினைந்து மடங்கு தண்ணீரோடுங் கலந்துகொள்ள வேண்டும்.

ரசிதம். குலோறப் புற்கை. Chlorine Poultice. கொள். சோட குலோறக நீர் இரண்டு அன்சு; நெல்லரிசி மா, நாலு அன்சு; கொதிவெந்நீர், எட்டு அன்சு. அரிசிமாவை வெந்நீரிற் கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவி ஓயாமற் கிளறி, அப்பாற் சோடகுலோறக நீரைச் சேர்க்கவும்.

காதனப் புண்கள், நாற்றமான புண்கள், தொல்லையான சரும ரோகங்களுக்கு இது உவந்த புற்கை.

## சோடவாசெனசு.

## ARSENIATE OF SODA.

இதற்குச் சின்னம் சோ$_2$ ஐஆஅ$_4$· 7ஐ$_2$ அ. ஆசெனோசமிலம்[23] 10 பங்கை சோடநீதுரசு[24] $8\frac{1}{2}$ பங்கோடும், சோடகாபனசு[25], $5\frac{1}{2}$ பங்கோடும் கலந்து காய்ச்சி, உருகின கட்டி ஆறினபின் அதற்குத் தண்ணீர் விட்டு வைக்கச் சோடவாசெனசு அந்த நீரை விட்டுக் கிரிஸ்தல்களாகப் பிரியும். இது நிறமற்ற உருவொளியான பிரிசங்க[26]ளாக இருக்கும். தண்ணீரிற் கரையும். அத்தண்ணீர் அல்கலை[27]த்தன்மை கொண்டது. அதற்குப் பாரியகுலோறிரம்[28],

1 Hyposulphite of soda. 2 Volumetric solution. 3 Oxalate of Ammonia. 4 Stimulant. 5 Tonic. 6 Antiseptic. 7 Deodorizer. 8 Typhus. 9 Typhoid. 10 Scarlatina 11 Exanthemata. 12 Adynamic 13 Mesentery. 14 Scurvy. 15 Cynanche. 16 Syphilis. 17 Hydrosulphuric acid. 18 Hydrosulphides. 19 Hydrocyanic acid. 20 Minim. 21 Gargle. 22 Lotion. 23 Arsenious acid. 24 Nitrate of soda. 25 Carbonate of soda. 26 Prism. 27 Alkali. 28 Chloride of Barium.

Digitized By Roja Muthiah Research Library

கல்சிகுலோறிரங்க்ஸ்[1] கூட்ட வெண்ணடையல்விழும்; வெள்ளிநீத்துரசு[2]சேர்க்கக் கபிலநிற அடையல் விழும். இவ்வடையல் நீதுரிக்கமிலத்திற்[3] கரையும். இதை ஐருகுலோறிக்கமிலத்தாற் புளிப்பாக்கி ஐருசல்வுரிக்கமிலஞ் சேர்த்தாற் கொதிக்கும்போது மஞ்சணிற அடையல் விழவேண்டும். சோதனைகள். இதை 300 பாகைக்கு வரக் காய்ச்சினுல் தன் நிறையில் நூற்றுக்கு 40.38 பங்கை இழந்துவிடும். இச்சேஷத்திற் பத்துக் கிறேனைத் தண்ணீரிற் கரைத்துச் சோடபரும விலயனத்தில் 53 கிறேனளவைக் கூட்டி வெள்ளிநீதுரசுப் பருமவிலயனத்தில் படிப்படியாய் 1613 கிறேனளவு வரைக்குச் சேர்த்தால் அடையல் உண்டாகிக்கொண்டிருக்கும்.

தன்மை உபயோகம். அல்திறவ தொணிகம்; ஆசெனேசமிலம் ஆசெனிக நீர் என்பவற்றைப் போலவே. அழற்றுந் தன்மையில் இது அவைகளிலுங் குறைந்தது.

தேயம். கிறேனிற் பதினறிலொருபங்கு முதல் எட்டிலொருபங்கு வரைக்குக் கொடுக்கலாம். பின் வரும் ரசிதமாகக் கொடுப்பதே உத்தமம்.

ரசிதம். சோடவாசேனசுநீர். Solution of arseniate of soda. கொள். சோடவாசெனசு, 300 பாகைக்கு மேற்படாத சூட்டில் உருக்கி, நாலு கிறேன்; திஸ்திலித்த தண்ணீர் ஒரு அன்சு. கரைக்கவும்.

தேயம். ஐந்து மினிம் முதற் பத்து மினிம் வரைக்கும் படிப்படியாய்க் கூட்டிக்கொடுக்கலாம். ஒவ்வொரு திருமிலுங் அவைரு[4]சோடவாசெனசு அரைக்கிறேன் அடங்கியிருக்கும்.

## சோடவசிதசு. ACETATE OF SODA.

இதற்குச் சின்னம். சோ கா$_2$ ஐ$_3$ அ$_2$ 3ஐ$_2$ அ. சோடகாபனசை[5] அசிதிக்கமிலத்தாற்[6]கூறுபடுத்தச் சோடவசிதசு பிறக்கும். லட்சணங்கள். இது உருவொளியான நிறமற்ற கிரிஸ்தல்களாக இருக்கும்; தண்ணீரிற் கரையும், அக்கரைவு சோதனைத்தாளுக்குத் தடஸ்த[7]மாய் நிற்கும். சோதனைகள். கரைவு வீறு குறைந்ததானுல் பாரியகுலோறிரஞ்[8]சேர்க்க அடையல் விழாமல் வெள்ளிநீதுரசு[9],இரசவதநீதுரசு[10]சேர்க்க அடையல் விழும்; அயபிரகுலோறிரஞ்[11]சேர்க்க அதிகபிலச் சிவப்புநிறமாகும்.

தன்மை. இது சிறு தேயத்தில் அமுரிதியும், பெருந்தேயத்தில் விரேசனியுமாகும்.

உபயோகம். பதாசியசிதசைப்[12] போலவே. அதைப்போல் இது பரமாணுவிற் கரையாதாதலால் அதிலும் இது நயம்.

தேயம். அமுரிதியாக இருபது முதல் நாற்பது கிறேன் வரைக்கும்; விரேசனியாக ஒரு திரும் முதல் நாலுதிரும் வரைக்குங் கொடுக்கலாம்.

## சோடசல்வசு. SULPHATE OF SODA.
## GLAUBER'S SALT.

சோடசல்வசுக்குச் சின்னம் சோ$_2$ கேஅ$_4$ 10ஐ$_2$ அ. ஐருகுலோறிக்கமில[13]செய்கையில் எஞ்சுஞ் சேடத்தைச் சோடகாபனசாற் தடஸ்தித்துத்[14] தண்ணீரிற் கரைத்து வறட்டச் சோடசல்வசு கிரிஸ்தல்களாக விளையும். லட்

1 Chloride of Calcium. 2 Nitrate of silver. 3 Nitric acid. 4 Anhydrous. 5 Carbonate of soda. 6 Acetic acid. 7 Neutral. 8 Chloride of Barium. 9 Nitrate of silver. 10 Subnitrate of Mercury. 11 Perchloride of iron. 12 Acetate of potash. 13 Hydrochloric acid 14 Neutralize.

Digitized By Roja Muthiah Research Library

தணங்கள். இது உருவொளியான சாய்பிரிசங்களாக[1] இருக்கும்; உவர்ப்பான கைப்புச் சுவைகொண்டது. பரமாணுவில் வைக்க மாவாகும். தண்ணீரிற் கரையும்; சிதிற்[2] கரையாது. பீங்கான் குகையிலிட்டுக் காய்ச்ச அதிலடங்கிய நூற்றுக்கு 55.9 வீதமான தண்ணீர் அற்றுப்போகும். பதாசிநீரோடு[3]காய்ச்சினால் அமோனா[4]மணம் வீசாது. பிலாடினபிரகுலோறிரஞ்[5] சேர்க்க அடையல் விழாது. சுவாலைக்கு மஞ்சள் நிறங் கொடுக்கும். சோதனைகள். இதில் ஐம்பது கிறேனைத் திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்து, ஐருகுலோறிக்கமிலத்தாற்[6] புளிப்பாக்கிப் பாரியகுலோறிரஞ்[7] சேர்க்க ஓர் வெண்ணடையல் விழும். இந்த அடையலைக் கழுவி உலர்த்தும்போது 72.2 கிறேன் நிறுக்கும்.

தன்மை, உபயோகம். இது விரேசனி, மக்னீசி சல்வசுக்கு நிகரானது.

தேயம். கிரிஸ்தலான இந்த உப்பில் அரை அன்சு முதல் ஒரு அன்சு வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம். மாவாயிருக்கும் அவைரு உப்பில் இப் பிரமாணத்திற் பாதி போதும்.

[அயோத்தியிலும் இந்து தேசத்தின் வேறனேக பகுதிகளிலும் சோடசல்வசு நிலத்தில் விளைகின்றது. அது மங்கற்கபிலநிறமான கட்டியாய்க் கடைகளில் விலைப்படும். அதைப்பற்றிய விபரமும் அதைச் சுத்தமாக்கி மருந்துக்கு எடுக்கும் வகையும் ஸ்பிரை என்பவராற் குறிக்கப்பட்டிருக்கின்றது. சுத்தியாய் எடுப்பதற்கு அதைக் கொதிவெந்நீரிற் கரைத்துக் காரிக்கம்புடைவையில் வடித்து வறட்ட அது கிரிஸ்தல்களாக விளையும். இந்துவின் வடமேற்குப் பகுதியிலுள்ள மேட்டுப் பகுதிகள் சிலவற்றில் நிலத்திலே ஓர்வகை உப்புப் பூர்க்கும். அதிலே இரண்டு வகையை மெதிகற்று பண்டிதர் சோதித்து ஒன்றிலே சோடசல்வசு நூற்றுக்கு 96 பங்கும் சோடகுலோறிரம் 4 பங்கும்அடங்கியிருந்ததென்றும் மற்றதிலே 76 பங்கும் 24 பங்குமாய் அவை அடங்கியிருந்ததென்றுங் கண்டார்.]

## சோடதாத்தரகம். TARTARATED SODA. ROCHELLE SALT.

இதற்குச்சின்னம் சோ ப கா$_4$ ஐ$_4$ அ$_6$ 4ஐ$_2$ அ. பதாசியமிலதாத்தரகைச்[8] சோடகாபனசாற் தடஸ்திக்கச் சோடதாத்தரகம் பிறக்கும். லட்சணங்கள். இது நிறமற்ற உருவொளியான பிரிசங்களாக இருக்கும். அல்லது எண்பக்கப் பிரிசங்களின் பாதிகளாக இருக்கும். தறியுப்பின் சுவைகொண்டது. சோதனைகள். இதைச் சல்வுரிக்கமிலத்தோடு[9] காய்ச்சினால் அது சுவாலிக்கக் கூடிய வாயுக்களையும் காய்ச்சின சர்க்கரையின் மணத்தையும் கக்கிக் கறுக்கும். சுவாலைக்கு மஞ்சள்நிறங் கொடுக்கும். தண்ணீரிற் சுறுக்குக் கரையும். வீறான இதின் கரைவுக்குச் சொற்ப அசிதிக்கமிலமாவது[10]ஐருகுலோறிக்கமிலமாவது கூட்ட ஓர் கிரிஸ்தலடையல் விழும். வாயு கக்குதல் ஒழியுந்தனையும் 141 கிறேனைச் சிவக்கக் காய்ச்சினால் உண்டாகும் அல்கலைச்[11]சேடத்தைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமிலபருமவிலயனம் 1000 கிறேனளவு வேண்டும்.

தன்மை. இது சிறு தேயத்தில் அமுரிதி[12], பெருந்தேயத்தில் விரேசனியாகும்

1 Prism. 2 Spirit. 3 Liquor of potash. 4 Ammonia. 5 Perchloride of platinum. 6 Hydrochloric acid. 7 Chloride of Barium. 8 Acid Tartarate of potash. 9 Sulphuric acid. 10 Acetic. 11 Alkali. 12 Oxalic acid. 13 Diuretic.

Digitized By Roja Muthiah Research Library

**உபயோகம்.** இது சுக விரேசனியாகையாற் சுரநோய்கள் தாபிதநோய்களுக்கும் பிரசவ ஸ்திரிகளுக்கும் உவந்தது. இது சிறுநீரிலே அல்கலைச் செயல் காட்டுவதால் வாத குவாத[1] நோய்களுக்கும் கல்லடைசலுக்கும் உபயோகமானது.

**தேயம்.** அமுரிதியாக இருபது கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கும் விரேசனியாக இரண்டு திரும் முதல் ஒரு அன்சு வரைக்குங் கொடுக்கலாம். இதைத் தனியே தண்ணீரிற்கரைத்தாவது இதில் இரண்டுதிருமை நாற்பது கிறேன் சோடாதுவிகாபனசோடு[2] கால்நாழி தண்ணீரிற் கரைத்து முப்பது கிறேன் தாத்தரிக்கமிலமுங்[3] கூட்டி நுரைக்கும்போதாவது குடிக்கலாம். இந்த உப்புகள் மருந்துக் கடைகளில் சைதிலிற் பற்பம்[4] என்னும் பெயராற் தனித்தனிச் சரைகளாக வாடிக்கையாய் விற்கப்படும்.

## சோடவலீரியனசு. VALERIANATE OF SODA.

இதற்குச் சின்னம் சோகா$_5$ ஐ$_9$ அ$_2$. சல்வுரிக்கமிலத்தை[5]ப் பதாசிதுவிகுரோமசு[6], புசெல்த்தேலம்[7] என்பவற்றோடு கூட்டித் திஸ்திலித்துப்[8] பிறகும் வலீரியனிக்கமிலத்தைச்[9] சோடநீரிற்பூர்த்திக்க சோடவலீரியனசு உண்டாகும். இது வறண்ட வெண் கட்டிகளாக வரும்; அல்கலைத் தன்மையற்றது; திட்டசீதில்[10] முற்றாய்க் கரையும். கிருச[11]சல்வுரிக்கமிலஞ் சேர்க்க வீறான வலீரியன்[12] மணம் வீசும்.

**தன்மை, உபயோகம்.** இது ஸ்திமுலம்[13], அந்திஸ்பசி[14]; செயலில் வலீரியனை ஒத்தது. அது கொடுக்கப்படும் நோய்களுக்கே இதுவும் உவந்தது.

**தேயம்.** அரைக் கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். துத்தவலிரியனசு[15] என்ற மருந்து செய்வதற்கன்றி மற்றும்படி இதை வழங்குவதரிது.

## லிதியம். LITHIUM.

சின்னம், லி; அணுப்பாரம், 7.

இது லிதி[16]யென்ற அல்கலைக்குத்[17]தாரகமாகிய[18] லோகம். அநிந்திரபதார்த்தங்களில் மாத்திரமே இருக்கும் மினிறல்[19] நீர்கள் அநேகத்தில் இது கூறாகச் சேர்ந்திருக்கின்றது. இது வெண்ணிற லோகம், 356 பாகை சூட்டில் உருகும். விசேஷகிருவிதம்[20] 0.59.

## லிதிகாபனசு. CARBONATE OF LITHIA.

இதைக் குறிக்குஞ் சின்னம், லி$_2$ கா அ$_3$. இது வெண் மாவாக அல்லது நுண்ணிய கிறிஸ்தற் பொடிகளாக இருக்கும். அல்கலைத் தன்மை கொண்டது. 100 பங்கு தண்ணீரிற் கரையும்; அலக்காலிற்[21]கரையாது. சோதனைகள். இது ஐருகுலோறிக்கமிலத்தில்[22] நுரைத்துக்கொண்டு கரையும். இக்கரைவிலே லிதியகுலோறிரம்[23] என்ற சேடங் காணும். அச் சேடம் சீதிவிளக்கின் சுவாலைக்குத் தூமிரச் சிவப்பு[24] நிறங் கொடுக்கும். இச் சேடத்தை மறுபடி தண்ணீரிற் கரைத்துச் சோடபாஸ்வசைக்[25] கூட்டினால் ஓர்

---

1 Gout. 2 Bicarbonate of soda. 3 Tartaric acid. 4 Seidlitz powders. 5 Sulphuric acid. 6 Bichromate of potash. 7 Fousel oil. 8 Distil. 9 Valerianic acid. 10 Rectified spirit. 11 Dilute. 12 Valerian. 13 Stimulant. 14 Antispasmodic. 15 Valerianate of zinc 16 Lithia. 17 Alkali. 18 Base. 19 Mineral. 20 Specific gravity. 21 Alcohol. 22 Hydrochloric acid. 23 Chloride of Lithium. 24 Purple red. 25 Phosphate of soda.

Digitized By Roja Muthiah Research Library

அடையல் தோன்றும். இந்த உப்பிற் பத்துக்கிறேனைச் சல்வுரிக்கமிலத்தாற் தடஸ்தித்துப் பிறகு சிவக்கக்காய்ச்சினால் வறண்ட லிதிசல்வசு[1] 14.86 கிறேன் மிஞ்சும். அதை மறுபடி திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்து அமோன வக்சலசாவது[2] சுண்ணநீராவது கூட்டினால அடையல் தொன்றாது.

தன்மை. இது அமுரிதி, சிறுநீரை அல்கலையாக்கும் வீறுள்ளது. லிதிக்கமிலக்[3]கற்களைச் சுறுக்கிற் கரைக்கும்.

உபயோகம். குவாதத்துக்கும்[4], லிதிக்கமில பவகத்தைச் சார்ந்ததாயுண்டாகும் மற்றும் நோய்களுக்கும் இது கொடுத்து நயங்கண்டது.

தேயம். மூன்று கிறேன் முதல் ஆறு கிறேன் வரைக்குத் தண்ணீரிலாவது குமிழித்த தண்ணீரிலாவது தாராளமாய்க் கலந்து கொடுக்கலாம்.

ரசிதம். லிதிநுரைநீர். Effervescing Solution of Lithia. லிதிகாபனசு[5] பத்துக் கிறேன்; தண்ணீர் அரைநாழி. தகுந்த இயந்திரத்திற் கலந்துகொண்டு கிரீதத்தின்[6]மேற் சல்வுரிக்கமிலத்தை[7]வார்த்து அதில்நின்று எழும்புஞ் சுத்த காபனிக்கமில வாயுவில்[8] ஏழு பரமாணுவின் அமுக்கத்தால் அக்கலவை நீருக்குட் செலுத்தக் கூடியளவு வாயுவைச் செலுத்தவும். அமுக்கப்பட்ட வாயுப் பறிந்துபோகாதபடிக்கு அந்த நீரை இறுக்கமாய் அடைத்த சீசாக்களில் விட்டு வைக்கவும். லட்சணங்கள். சீசாவைத் திறந்தவுடன் காபனிக்கமில வாயுப் பறிய, நீர் பெலத்து நுரைக்கும். இந்நீர் தெளிந்தது; குமிழிகொள்ளும்; நல்ல புளிப்புச் சுவைகொண்டது. சோதனை. இதிற் கால்நாழி நீரை முற்றாய் வறட்டினால் வெண்மையான உலர்சேடம் ஐந்துகிறேன்வரும். அது லிதிகாபனசின் சோதனைகளுக்குச்சரியாய்நிற்கும்.

தேயம். ஐந்து அன்சு முதற் பத்து அன்சு வரைக்குக் குடிக்கலாம்.

## லிதிசிதிறசு. CITRATE OF LITHIA.

இதற்குச் சின்னம் லி₃ கா₆ ஐ₅ அ₇. லிதிகாபனசைத் தண்ணீரிற் கரைத்து அத்தோடு சிதிறிக்கமிலத்[9]தைக் கூட்ட லிதிசிதிறசு பிறக்கும். லட்சணங்கள். இது வெண்மையான அமாவத்[10]தூள். பரமாணுவில் வைக்கக் கரையும்; தண்ணீரிற் சேஷமில்லாமற் கரையும். சிவக்கக் காய்ச்சினாற் சுவாலிக்கக் கூடிய வாயுவைக் கக்கிக் கறுக்கும். சேடத்தை ஐருகுலோறிக்கமிலத்தால்[11] தடஸ்தித்துத்[12] திட்டசீதிற்[13] கரைத்தால் அக்கரைவு தாமிரச் சிவப்புச் சுவாலைகொண்டு எரியும். சோதனைகள். இந்த உப்பில் இருபது கிறேனைப் பரமாணுவிலே சொற்ப சிவப்புநிறத்திற்காய்ச்சினால் வெண்மையான சேடம் 10.6 கிறேன் மிஞ்சும்.

தன்மை, உபயோகம். லிதிகாபனசைப் போலவே. அதிலும் இதின் செயலில் அழற்சி குறைவாம்.

தேயம். ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்கு.

## கல்சியம். CALCIUM.

சின்னம், க; அணுப்பாரம். 40.

இது பூமியிலுள்ள மண்கற்களின் பங்காகிய அல்கலை[14]ச் சுண்ணும்புக்குத் தாரகமான[15] லோகம். மஞ்சள்நிறமுள்ளது. இது மினிறல்[16],தாவரம், பிரா

1 Lithia sulphate. 2 Oxalate of Ammonia, 3 Lithic acid. 4 Gout. 5 Carbonate of Lithia. 6 Chalk. 7 Sulphuric acid. 8 Carbonic acid gas. 9 Citric acid. 10 Amorphous 11 Hydrochloric acid, 12 Neutrallize, 13 Rectified spirit. 14 Alkali. 15 Base 16 Mineral,

Digitized By Roja Muthiah Research Library

ணிகன் என்ற மூவகைப் பதார்த்தத்திலும் கலந்திருக்கின்றது. இதின் விசேஷகுருவிதம்[1] 1.578. செஞ்சூட்டில் உருகும்.

## கல்சியகுலோறிரம். CHLORIDE OF CALCIUM.

இதற்குச் சின்னம், க தூ$_2$. இதைச் செய்வதற்கு ஐருகுலோறிக்கமிலத்தை[2] சுண்ணகாபனசாற்[3] தடஸ்தித்து வடித்து ஸவரமாய் வருந்தனையும் வறட்டி வரும் உப்பை 400 பாகை சூடு வரையில் உலர்த்த வேண்டும். இது காய்ந்து திரண்ட கட்டியாக இருக்கும். பரமாணுவிற் சுறுக்காய்க் கரையக்கூடியது. ஐருகுலோறிக்கமிலத்தைச் சேர்க்க குலோறினையாவது அதகுலோறசமிலத்தை[4]யாவது கக்குவதில்லை. தன்னிலும் இருமடங்கு நிறையான தண்ணீரில் முற்றாய்க் கரையும்; அலக்கா[5]லிலுங் கரையும். சோதனைகள். இதின் தண்ணீர்க் கரைவுக்குச் சுண்ணநீர் கூட்டினால் அடையல் உண்டாவதில்லை.

தன்மை. இது ஸ்திமுலம்[6]. விசேஷமாய்ச் சோஷணக்கிரந்தி மண்டலத்திற் சேஷ்டிக்கும். பெருந்தேயத்தில் மயக்கழற்சி நஞ்சாகும்.

உபயோகம். ஸ்துருமா[7]நோய்களுக்கும் காட்பட்ட சருமநோய்களுக்கும் விசேஷமாய் லூபசு[8] எக்சீமம்[9], இம்பெதிகு[10] என்பவைகளுக்கும், சினைப்பை நோய்கள் சிலவற்றுக்கும் இதால் நயங்கண்டது.

தேயம். பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம்.

## கல்சி. சுண்ணம். சுண்ணாம்பு.
## CALX. LIME. QUICK-LIME.

இதற்குச் சின்னம் கஅ இது சில அசுத்தங்களையும் அடக்கிய அல்கலை[11] மண். கிரீதத்தை[12]யாவது சிப்பிகளையாவது எரித்து அதிலுள்ள காபனிக்கமிலத்தை[13] யகற்றச் சுண்ணாம்பு பிறக்கும். இது முதலில் வெண்மைநிறமான வைரக் கட்டியாயிருக்கும். சுறுக்குத் தண்ணீரை உறிஞ்சும். சம நிறையிலுங் குறைவான தண்ணீரை வார்க்க அது வெடித்து நீறிக் கன சூட்டைக் கக்கி மாவாகும். இப்படி நீற்றின சுண்ணாம்பைச் சுத்த தண்ணீரோடு கலக்கி வடித்தால் தெளிந்த நீராய் வரும். இது அல்கலைத் தன்மையுள்ளது; அமோனவக்சலசைக்[14]கூட்ட ஓர் வெண்ணடையல் உண்டாகும். சோதனைகள். நீறின சுண்ணாம்பு கிருச[15]வைருகுலோறிக்கமிலத்திலே சேடம்மெத்த இல்லாமலும் நுரையாமலுங் கரையும். இக் கரைவு நீரை உலர வறட்டிச் சேடத்தை மறுபடி தண்ணீரிற் கரைத்துச் சுண்ணநீர் சேர்த்தால் மெத்தச் சொற்ப அடையல் மாத்திரம் உண்டாகும்.

ரசிதங்கள். புட்பித்த சுண்ணம். Slaked Lime. இது கல்சியைரசு[16] எனப்படும். இதற்குச் சின்னம் கஐ$_2$ அ$_2$. இதைச் செய்யும் முறையாவது, கொள். புதுக்கச் சுட்ட சுண்ணாம்பு இரண்டு இறாத்தல்; தண்ணீர் அரைநாழி. சுண்ணாம்பை ஒரு லோகப் பாத்திரத்திலிட்டு அதின்மேற் தண்ணீரை வார்த்து ஆவிபறிதல் ஒழிந்தபின்பு பாத்திரத்தை அதின் மூடியால்

---

1 Specific gravity. 2 Hydrochloric acid. 3 Carbonate of Lime. 4 Hypochlorous acid. 5 Alcohol. 6 Stimulant. 7 Struma. 8 Lupus. 9 Eczema. 10 Impetigo. 11 Alkali. 12 Chalk. 13 Carbonic acid. 14 Oxalate of ammonia. 15 Dilute. 16 Calcis Hydras.

Digitized By Roja Muthiah Research Library

மூடி ஆறும்படியாக வைக்கவும். ஆறினபின், புட்பித்த சுண்ணும்பை இரு ம்புக் கம்பி அரிப்பெட்டியிற் போட்டு மெதுவாய் ஆட்டி மெல்லிய மாவை அரிப்பெட்டிக்கூடே செல்லவிட்டுச் சேடத்தைத் தள்ளிப்போடவும். அரித்த மாவை நன்ருய் அடைத்த சீசாவுக்குட் போட்டுக் கூடியளவு பரமாணு படாதபடி வைக்கவும். புட்பித்த சுண்ணும்பை உடனுக்குடன் செய்து கொள்ள வேண்டும். அது கரைவதற்கு 700 பங்கு தண்ணீர் வேண்டும்.

தன்மை. இது காரம்,தகனி[1]; காரப்பதாசி[2]யோடன்றி மற்றும்படி வழங்கப்படுவதரிது. உட்கொண்டால் அழற்று நஞ்சாய் முடியும். ஆசியதேசத்தின் உஷ்டண பகுதியெங்குமுள்ள எவ்வகுப்பான சனங்களும் சுண்ணும்பை வெற்றிலை பாக்கோடு சப்புதல் வழக்கம். வெகுகாலம் சப்பினுல் இது வாய்ச் சளிச்சவ்வின் தன்மையை மாற்றி ரோக நிதானத்தை மயக்கத்தக்கதாய் நாவின் தோற்றத்தையுங் கெடுக்கும். சொற்பமாய் வழங்கினுல் இது உடம்பைக் கெடுக்கமாட்டாது. மட்டுக்கு மிச்சமாய் வழங்கினுல் இரைப்பை குடல் முதலிய உள்ளுறுப்புகள் நோய்ப்பதற்கு ஏதுவாகும். இது காரணமாய் அனேகரில் கொடுப்புப் பீறி தொண்டையடைப்பு என்ற மாரு வியாதிகளுண்டாகும்.

சுண்ணநீர். Lime Water. கொள். புட்பித்த சுண்ணும்பு இரண்டு அன்சு. தண்ணீர் நாலுநாழி. தண்ணீரைக் கண்ணுடிச்சடையுள்ள சீசாவுக்குள்ளே விட்டு அதற்குள்ளே சுண்ணும்பையும் போட்டு இரண்டு மூன்று மினிநேரமாக நன்ருய்க் குலுக்கவும். மிஞ்சிய சுண்ணும்பு பன்னிரண்டு மணி நேரத்தின் பின் அடையும். அப்போ தெளிந்த நீரை சைபன்[3] வழியாய் கண்ணுடிச் சடையுள்ள பச்சைச் சீசாவுள் விட்டுப் பரமாணு புகாமல் நன்ருய் அடைத்து வைக்கவும். சோதனை. இதிலே பத்து அன்சைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில[4] பருமவிலயனத்[5]தில் 200 கிறேனை வாகுதல் வேண்டும்.

தன்மை. அபாமிலி[6], அல்திறவம்[7], துவர்.

உபயோகம். இரைப்பை குடல்களின் புளிப்புக்கும்[8] குன்மத்துக்கும்[9] அதோடுகூடிய கழிச்சலுக்கும் இது பேர்பெற்ற மருந்து. இரைப்பைப்புண்ணிலும் ஸ்துருமம்[10],கசம்[11] என்ற நோய்களிலும் பாலோடு கொஞ்சச் சுண்ணநீர் சேர்த்து ஆகாரமாகக் கொள்ளுதல் மெத்த நயமாய்க் காணப்பட்டது. சலக் கற்களைக் கரைப்பதற்கு இது முற்காலத்தில் பேர்பெற்றிருந்தது. ஆயினும் லிதிய[12] உப்புகளுக்கு இது இழப்பானது. மினிறமிலங்கள்[13]அக்சலிக்கமிலத்தையும் நஞ்சாகக் குடிப்பார்க்கு இது கெமிஸ்த முறையான மாற்ருகும். பலவகையான புண்கள் சருமநோய்களுக்கு இது தானிக[14]மருந்தாயிடப்படும்.

தேயம். ஒரு அன்சு முதல் நாலு அன்சு வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். பாலிற் கொடுப்பதே உத்தமம். இதை நெடுநாளாக வழங்கப்படாது.

சுண்ணச் சீனிநீர். Sacharated Solution of Lime. கொள். புட்பித்த சுண்ணும்பு, ஒரு அன்சு; சுத்த சீனி மாவாக இரண்டு அன்சு; திஸ்திலி

1 Escharotic. 2 Caustic Potash 3 Syphon. 4 Oxalic acid. 5 Volumetric solution. 6 Antacid. 7 Alterative. 8 Acidity. 9 Dyspepsia. 10 Struma. 11 Consumption. 12 Lithia. 13 Mineral acid. 14 Local.



Digitized By Roja Muthiah Research Library

த்த தண்ணீர் அரைநாழி. சுண்ணும்பையும் சீனியையும் குழியம்மியில் இடித்து, அக் கலவையைத் தண்ணீரோடு ஓர் சீசாவுக்குள்ளிட்டு அடைத்து இடைக்கிடை சில நாழிகை வரைக்குக் குலுக்கவும். கடைசியிற் தெளிந்த நீரைச் சைபன்[1]என்னும் வளைகுழலாற் பிரித்து கண்ணாடிச் சடையுள்ள சீசாவில் விட்டு வைக்கவும். சோதனைகள். விசேஷகுருவிதம்[2], 1 052. இதில் ஒரு அன்சைத் தடஸ்திப்பதற்கு அக்சலிக்கமில பருமவிலயனத்தில் 25¼ கிறேனளவு வேண்டும். ஒரு அன்சு சுண்ணச் சீனிநீர் 7.11 கிறேன் சுண்ணும்புக்குச் சரியாகும்.

தன்மை, உபயோகம். சுண்ணநீரைப் போலவே. குவாதம்[3] தேகிகளுக்குண்டாகும் தொல்லையான குன்மத்துக்கும் பிள்ளைகளுக்குண்டாகும் காலிக கழிச்சலுக்கும் இது உவந்ததாம்.

தேயம். பதினைந்து மினிம்[4]முதல் அறுபது மினிம் வரைக்குத் தண்ணீரில் விட்டு நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

சுண்ண லினிமென். Liniment of Lime. கொள். சுண்ண நீர், இரண்டு அன்சு; ஒலீவுத்தேல் இரண்டு அன்சு. குலுக்கிக் குலுக்கிக் கலக்கவும்.

காறன்தேல்[5] என்று வழக்கமாய்ச் சொல்லப்படுகிற இந்தஎண்ணெய் வேக்காட்டுக் காயங்கள் வழுந்தல்களுக்கு இட நல்ல மருந்து. கொப்பளித்த புண்களைக் சுறுக்கு மாற்றுவதற்கும் சில வகையான சரும நோய்களுக்கும் இது இடப்படும்.

## அதக சுண்ணகாபனசு.

## PRECIPITATED CARBONATE OF LIME.

சுண்ணகாபனசுக்குச் சின்னம், க, கா அ௩. சோடகாபனசைக்[6] கல்சியகுலோறிரத்[7]தோடு சேர்க்கச் சுண்ணகாபனசு உண்டாகும். லட்சணங்கள். இது வெண்மையான அமாவத்[8] தூள். தண்ணீரிற் கரையமாட்டாது. ஐருகுலோறிக்கமிலத்தில்[9] நுரைகொண்டு கரையும். இக் கரைவை அமோனத்தாற்[10] தடஸ்தித்து[11]அமோனவக்சலசை[12]அதற்குக்கூட்டக் கள அடையல்விழும். சோதனை. இதைக் கிருசநீதரிக்கமிலத்திற்[13] கரைக்கத் தெளிந்த நீராகும். இது பூரண தடஸ்தமாகி, காய்ச்சுவதால் அதிலுள்ள காபனிக்கமிலம் அகற்றப்பட்டால், சுண்ணச் சீனி நீரை மிஞ்சவாவது காடிக்கார[14] நீரையாவது கூட்டும்போது, அடையல் தோன்றுது.

தன்மை, உபயோகம். சுண்ண நீரைப் போலவே. பிஸ்முதவில்லையில் இதோர் கூறுகச் சேருகின்றது.

தேயம். பத்து முதல் அறுபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

## பூதகிரீதம். PREPARED CHALK.

தொருக்கலான சுண்ணகாபனசாகிய சீமைச் சுண்ணும்பைக் கழுவி பூதகிரீதம் எடுப்பார்கள். இதைப் பெரும்பாலும் கூருள்ள சிறு கட்டிகளாகக் காய வைப்பார்கள். லட்சணங்கள். இது வெண்மையான அமாவத்

---

1 Syphon. 2 Specific Gravity. 3 Gout. 4 Minim. 5 Carron oil. 6 Carbonate of soda 7 Chloride of Calcium. 8 Amorphous. 9 Hydrochloric acid. 10 Ammonia. 11 Neutralize. 12 Oxalate of Ammonia. 13 Dilute Nitric acid. 14 Nitrate of silver.

Digitized By Roja Muthiah Research Library

தூள்; அமிலங்கள் கூட்ட, நுரைக்கும்; இருகவைருகுலோறிக்கமிலத்திற்[1] சொற்ப சேஷமாத்திரம் இருக்கக் கரையும். இக் கரைவை அமோன நீரால் அதி பூர்த்தித்து[2] அமோனவக்சலசை[3] அதற்குக் கூட்ட வெண்மையான அடையல் உண்டாகும். சோதனை. பூதக்கிரீதத்தை இருகுலோறிக்கமிலத்திற் கரைக்கும்போதுண்டாகும் உப்பை வறட்டி மறுபடி தண்ணீரிற் கரைத்துத் தடனதமாக்கினால் சுண்ணச் சீனிநீர் கூட்டும்போது சொற்ப அடையல் மாத்திரம் விழும்.

தன்மை. அபாமிலி[4],துவர்,அப்சாபென்[5].

உபயோகம். இரைப்பைக் குடல்களின் புளிப்பைச் சார்ந்த கழிச்சலுக்கும், கன வெயர்வை, கழிச்சல் கூடிய புறங்கீதின்[6]பிற்பருவங்களுக்கும், இது உபயோகமானது. பின் வரும் கிரீதக் கலவையாகவே இது விசேஷமாய் வழங்கப்படும். கிரீதத்தை மெல்லிய மாவாக்கிக் கெட்ட நீர் பாயும் புண்கள் வேக்காட்டுக் காயங்கள் வழுந்தல்கள், சருமநோய்கள் முதலியவற்றுக்குத் தூவினால் அது நீரை உறிஞ்சி நோய் பரம்பாமற் தடுத்து நயஞ்செய்யும். நோய்த்த பகுதியைச் சாந்தியான புற்கையால் மூடவும் வேண்டும்.

தேயம். பத்துக் கிறேன் முதல் அறுபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம், கூடவுங் கொடுக்கலாம்.

கிரீதக் கலவை. Chalk Mixture. கொள். பூதக்கிரீதம், கால் அஞ்சு; அகசிப் பிசின்[8] மா, கால் அஞ்சு; சிறாபம்[9] அரை அஞ்சு. கறுவா நீர் ஏழரை அஞ்சு. கிரீதத்தையும் பிசினையும் கறுவா நீர் விட்டரைத்துச் சிறாபத்தையுங் கூட்டிக் கலக்கவும்.

தேயம். ஒரு அஞ்சு முதல் இரண்டு அஞ்சு வரைக்குக் கொடுக்கலாம், கிரீத சுகந்த பற்பத்தைக் கூட்டுவதால் இதின் செயல் அதிகப்படும்.

கிரீத சுகந்த பற்பம். Aromatic Chalk Powder. கொள். கறுவாப் பட்டை மா, நாலு அஞ்சு; சாதிக்காய் மா, குங்குமப் பூ மா, வகைக்கு மூன்று அஞ்சு; கராம்பு மா, ஒன்றரை அஞ்சு; ஏலக்கொட்டைமா, ஒரு அஞ்சு; சுத்த சீனி மாவாக, இருபத்தைந்து அஞ்சு; பூதக்கிரீதம், பதினொரு அஞ்சு. இவற்றைத் திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்துக் கடைசியாய்க் குழியம்மியிலிட்டு மெல்ல அரைத்துக் கண்ணாடிச் சடையுள்ள சீசாவிற் போட்டு வைக்கவும்.

தேயம். பத்துத் தொடங்கி அறுபது கிறேன் வரைக்கு. பிள்ளைகளுக்கு ஐந்து முதற் பத்துக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

கிரீதவவின்சுகந்த பற்பம். Aromatic Chalk Powder with Opium. கொள். கிரீதசுகந்த பற்பம் ஒன்பதேமுக்கால் அஞ்சு; அவின் மா, கால் அஞ்சு. திறமாய்க் கலந்து மெல்லிய அரிப்பெட்டியில் அரித்து கண்ணாடிச் சடையுள்ள சீசாவிற் சேமிக்கவும்.

தேயம். ஐந்து முதல் நாற்பது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். கொடுக்கவேண்டிய அவினின் பிரமாணத்தை அறிந்து இதைக் கொடுக்கவேண்டும். இதிலே நாற்பது கிறேனுக்கு ஒரு கிறேன் அவின் இருக்கும்.

---

1 Dilute Hydrochloric acid. 2 Supersaturate. 3 Oxalate of Ammonia. 4 Antacid. 5 Absorbent. 6 Bronchitis 7 Chalk mixture. 8 Gum Acacia. 9 Syrup.

Digitized By Roja Muthiah Research Library

## சல்சிகுலோறகம். CHLORINATED LIME.

புட்பித்த சுண்ணும்பு குலோறவாயுவை உறிஞ்சுந்தனையும் அதை அவ் வாயுவிலே வைக்க,கல்சிகுலோறகம் உண்டாகும். இதற்கு வெளுச்குந்த ன்மையும் கந்தக்கிள தன்மையுமுண்டு. இது சொற்ப குலோறின் மணத்தை உடைய மங்கல் வெண்மையான தூளாகவிருக்கும். இதின் சாரமான பங்கு தண்ணீரிற் கரையக் கூடியது. அக் கரைவுக்கு அக்சலிக்கமிலங்கூட்ட அது குலோறவாயுவை மிகுதியாய்க் கக்கிச் சுண்ணவக்சலைச அடையவிடும். சோதனைகள். இதிற் பத்துக்கிறேனைப் பதாசியயியோதிரத்தில்[1] முப்பது கிறேனுடு கலந்து நாலு அன்சு தண்ணீரிற் கரைத்து ஐருகுலோறிக்கமிலத்தில்[2] இரண்டு திரும் விட்டுப் புளிப்பாக்கும்போது சிவந்த நீராகும். அந்த நிறத்தை மாற்றுவதற்குச் சோடவதசல்விசுப்[3] பருமவிலயனத்தில் 850 கிறேனளவாகுதல் வேண்டும். அவ்வளவும் ஐருகுலோறிக்கமிலத்தால் கக்கப்பட்ட நூற்றுக்கு 30 பங்கு குலோற வாயுவுக்குச் சரியாகும்.

**தன்மை உபயோகம்.** இது நல்ல ஸ்திமுலம், அந்திசெப்தி, கந்தக்கினி. சோடகுலோறக நீர், குலோற நீர்கள் வழங்கப்படும் நோய்களுக்கே இதுவும் வழங்கப்படும்.

**தேயம்.** ஒரு கிறேன் தொடங்கி ஐந்து கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம். வெளிமருந்தாயிடுவதற்கு ஒரு அன்சு லாட்டுக்கு இகல் இருபது முதல் நாற்பது கிறேன் வரைக்குக் கூட்டி அன்கென் செய்யலாம்; அரைநாழி தண்ணீருக்கு நாற்பது கிறேன் முதல் அரை அன்சு வீதமாய்க் கரைத்து லோஷன் செய்யலாம்; அரைநாழி தண்ணீருக்கு ஒன்றரைத் திரும் முதல் இரண்டுதிரும் வீதமாய்க் கரைத்துக் கார்கில் செய்யலாம். கரைத்த நீர்களை வடிக்கவேண்டும்.

**ரசிதங்கள். கல்சிகுலோறகநீர்.** Solution of Chlorinated Lime. கொள். கல்சிகுலோறகம் ஒரு இறாத்தல்; திஸ்திலித்த தண்ணீர் ஒரு கலன். கல்சிகுலோறகத்தையும் தண்ணீரையும் பெரிய குழியம்மியில் இட்டரைத்துச் கலந்து பிற்பாடு கண்ணுடிச்சடையுள்ள சீசாவுக்குள்ளிட்டு மூன்று மணித்தியாலமாக செவ்வையாய்க் குலுக்கவும். அப்பால் அதை ஓர் காரிக்கம்புடவையில் வடித்துச் கண்ணுடிச்சடையுள்ள சீசாவில் விட்டு நன்ருய் அடைத்துவைக்கவும். சோதனைகள். விசேஷகிருவிதம் 1.035. இகல் ஒரு திருமை இருபது கிறேன் பதாசியயியோதிரத்தோடு கலந்து நாலுஅன்சு தண்ணீரிற் கரைத்து இரண்டு திரும் ஐருகுலோறிக்கமிலம் விட்டுப் புளிப்பாக்கினுற் சிவந்த நீராகும். அந்த நிறத்தைச் கெடுப்பதற்குச் சோடவதசல்விசுப்பருமவிலயனத்தில் 500 கிறேனளவு வேண்டும்.

**தன்மை உபயோகம்.** சோட குலோறக நீரைப்[4]போலவே.

**தேயம்.** பத்து முதல் முப்பது துளி வரைக்குத் தண்ணீரிற் தாராளமாய்க் கலந்து கொடுக்கவும்.

**குலோறசுவாசனம்.** Inhalation of Chlorine. கொள். கல்சிகுலோறகம், இரண்டு அன்சு; தண்ணீர் போதியது. மாசுவை ஏற்ற வோர் ஜைத்துட் போட்டு அதைத் தண்ணீரால் நனைத்து அதிலிருந்தெழும்பும் ஆவியைச் சுவாசிக்கவும்.

பறங்கிகிலுரி[5], ஈரல்நோய்களிலும் இச் சுவசனம் வழங்கி நயந்தது.

---

1 Iodide of Potassium. 2 Hydrochloric acid. 3 Hyposulphite of soda 4 Solution of Chlorinated soda. 5 Bronchitis.

Digitized By Roja Muthiah Research Library

## கல்சிபாஸ்வசு. PHOSPHATE OF LIME.

இதற்குச் சின்னம் க$_3$ பா$_2$ அ$_8$. எலும்புநீற்றை[1] ஐருகுலோறிக்கமிலத்தில்[2] கரைத்து அமோனத்தால்[3] அடையப்பண்ணி 212 பாகைக்கு அதிகப்படாத சூட்டில் உலர்த்தக் கல்சிபாஸ்வசு வரும். லட்சணங்கள். இது பாரமற்ற வெள்ளையான அமாவத்[4]தூள்; தண்ணீரிற் கரையாது; கிருசநீதுரிக்கமிலத்திலே[5] நுரையாமற் கரையும். இக் கரைவுக்குச் சோடவசிதசை[6]மிஞ்சச் கூட்டினால் அது தெளிவாய் நிற்கும். அமோனவக்சலசு[7]. அயபிரகுலோறிரம்[8] என்பவற்றிற் சொற்பமாய்க்கூட்டினாலோ வெள்ளையான அடையல் விழும். சோதனைகள். இதிற் பத்துக்கிறேன், கிருசவைருகுலோறிக்கமிலத்தில் நுரையாமற் பூரணமாய்க் கரையும். இக் கரைவுக்கு அமோனத்தைக் கூட்டினால் ஓர் வெண்ணடையல் உண்டாகும். அந்த அடையல், கொதிக்கிற பதாசிநீரிற் கரையாது. அதைக் கழுவிக் காயவிட்டால் பத்துக் கிறேன் நிறுக்கும்.

தன்மை. இது அல்திறவம்[9], அமிலக்கினி[10].

உபயோகம். ஸ்துரூமம்,ஸ்துரூம[11] நோய்களுக்கும், ரிக்கிற்சு[12] என்பு மெதுவாதலுக்கும், பொருந்தா முறிவுகளுக்கும், முறைச் சுரங்களுக்கும், காலிகசிவ்லிசு[13]ப் புண்களுக்கும் இது வழங்கப்பட்டது நயமோ சந்தேகம்.

தேயம். பத்து முதல் இருபது கிறேன் வரைக்கு. அந்திமினி[14] பற்பத்தில் இதோர்கூறாகச் சேருகின்றது.

## மக்னீசியம். MAGNESIUM.

சின்னம் ம. அணுப்பாரம், 21.

மக்னீசியம் என்பது மக்னீசி என்ற மண்ணுக்குத் தாரக[15]மாகிய லோகம். இது மினுக்கமும் வெள்ளிபோல் வெண்மைநிறமுமுள்ளது. தகடாய் அடிக்கப்படக் கூடியது; வன்மையுங் கம்பியாக இழுபடக்கூடியதுமானது. விசேஷகுருவிதம் 1.743. பரமாணுவிலாவது அசசிதவாயுவிலாவது பிரபையான வெளிச்சமாய் எரிந்து மக்னீசியாக மாறும். சல்வுரிக்கமிலத்தோடு சேர்ந்து கடற்றண்ணீரிலும் அனேக மினிறல்[16] நீரூற்றுகளிலும் ஓர் கூறுகின்றது. சுண்ணாம்புக் கற்களிலும் இது அதிகம் இருக்கும். பிராணிய உரங்கள்[17] நீர்களிலும் விசேஷமாய்ச் சிறுநீரிலும் சொற்பமிருக்கும். தாவரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டது.

## மக்னீசி. MAGNESIA.

இதற்குச் சின்னம் மஅ. மக்னீசிகாபனசுக்குப் போதிய சூடேற்றி அதிலடங்கிய காபனிக்கமிலத்தை அகற்ற மக்னீசி வரும். லட்சணங்கள். இது ஓர் வெள்ளை மா. தண்ணீரிற் கரையமாட்டாது. அமிலங்களிலோ நுரையாமற் சுறுக்குக் கரையும். இதை ஐருகுலோறிக்கமிலத்திற் கரைத்து, அமோனத்தாற் தடஸ்தித்து, அமோனகுலோறிர[18]நீரோடுகலந்து சோடபாஸ்வசை[19]க்கூட்டும்போது கிரிஸ்தலான கன அடையல் உண்டாகும். சோதனை.

---

1 Bone ash. 2 Hydrochloric acid. 3 Ammonia. 4 Amorphous. 5 Dilute Nitric acid. 6 Acetate of soda. 7 Oxalate of Ammonia. 8 Perchloride of Iron. 9 Alterative. 10 Antacid 11 Struma. 12 Richets. 13 Syphilis. 14 Antimony. 15 Base. 16 Mineral 17 Solids. 18 Chloride of Ammonium. 19 Phosphate of soda.

Digitized By Roja Muthiah Research Library

இதை நீதுரிக்கமிலத்திற்[1]கரைத்து, அமோனத்தாற் தடஸ்தித்து, அமோனகுலோறிர நீரோடு கலந்து, அமோனவக்சலசாவதுமெ பாரியகுலோறிரமாவது[3] கூட்டுமபோது அடையல்உண்டாகாது.

தன்மை. இது அமிலக்கினி[4]; சுகவிரேசனி;

உபயோகம். சீரண உறுப்புகளின் புளிப்புக்கும், கடியல்சி[5], இரைப்பையழற்சிக்கும் இது சுயர்தது பிள்ளைகளில் புளிப்போடு கூடி உண்டாகும் கழிச்சலுக்கும், ருவாத தேகிகளுக்குண்டாகும் குன்மத்துக்கும் உபயோகமானது. மினிறலமில[6] அக்சலக்கமில[7]நஞ்சுகளை உண்டார்க்கு இது கேமிஸ்த மாற்று.

தேயம். அமிலக்கினியாய்ப் பத்து முதல் இருபது கிறேன் வரைக்கும், விரேசனியாய் ஒரு திரும் முதல் மூன்று திரும் வரைக்குங் கொடுக்கலாம். இதை எதுஞ் சுகந்தமான நீரிற் கொடுப்பதே உத்தமம்.

## அபாரமக்னீசி. LIGHT MAGNESIA.

இதைக் குறிக்குஞ் சின்னம் மஅ. அபாரமக்னீசிகாபனசிலுள்ள காபனிக்கமிலத்தை அகற்றப போதிய சூடேற்ற அது அபாரமக்னீசியாய்வரும். இது பொலிவான வெண்மா. கனக்குறைவே இதற்கும் மக்னீசிக்கும் உள்ள வித்தியாசம். இரண்டிலும் ஒரே நிறையை எடுத்தால் அவற்றின்பருமை ஒன்றுக்கு மூன்றரைவீதமாயிருக்கும்.

தன்மை, உபயோகம், தேயம். மக்னீசியைப் போலவே. அபாரமக்னீசி, வரியாத்துக்கூட்டுச் சூரணத்தில் ஓர் கூறுகச் சேருகின்றது.

## மக்னீசிகாபனசு. CARBONATE OF MAGNESIA.

இதற்குச் சின்னம், 3 (மகாஅ$_3$) மஅ$_5$ஐ$_2$அ. இது இயல்பிலேயுள்ள கல்வகைகளில் ஒன்றாய் இருக்கும். மக்னீசி சல்வசைச் சோடகாபனசு[8]நீராற் கூறுபடுத்த அடையவிட்டு மருந்துக்கு எடுப்பார்கள். லட்சணங்கள். இது மெதுவானவெள்ளைமா; கிருசமினிறலமிலங்களிலே நுரைத்துக்கொண்டு கரையும். அக்கரைவகளுக்கு முதல் அமோனத குலோறிரஞ்[10]சேர்த்து அமோன நீரை மிஞ்சக் கூட்டினாற் கலங்காது; சோடபாஸ்வசைச்[11] கூட்டினாலோ கிரிஸ்தலான சன அடையல் உண்டாகும். சோதனைகள். இதை மிஞ்சியஐருகுலோறிக்கமிலத்தோடு[12]கலந்தால் தெளிந்த கரைவாகும். அதிலே பாரியகுலோறிரம் யாதொரு அடையலேயும் விழுத்தாது. அக்கரைவில் இன்னொரு பங்கை அமோனத்தால் அதி பூர்த்தித்து[13] அக்சலிக்கமிலங் கூட்டினால் அடையல்விழாது. ஐம்பது கிறேனைச் செஞ்சூட்டில் நீற்றினால் இருபத்திரண்டு கிறேனாகும்.

தன்மை, உபயோகம். மக்னீசியைப் போலவே.

தேயம். அமிலக்கினியாக ஐந்து கிறேன்முதல் இருபதுகிறேன் வரைக்கும், இளக்பேதியாக இருபது கிறேன்முதல் அறுபது கிறேன் வரைக்குங் கொடுக்கலாம்.

பசிதம். மக்னீசிகாபனசு நீர். Solution of Carbonate of Magnesia, Fluid Magnesia. மக்னீசிகாபனசைத் தண்ணீரிற் கரைத்துக் காபனிக்

---

1 Nitric acid. 2 Oxalate of Ammonia. 3 Chloride of Barium 4 Antacid, 5 Cardialgia. 6 Mineral acid. 7 Oxalic acid. 8 Carbonate of soda. 9 Dilute. 10 Chloride of Ammonium, 11 Phosphate of soda. 12 Hydrochloric acid. 13 Supersaturate.

Digitized By Roja Muthiah Research Library

கமில வாயு[1]வாற் பூர்த்ததுவே இந்நீர். இது கைப்புச் சுவையில்லாத நிறமற்ற தெளிந்த நீர். சோதனை. இதிலொரு அன்சை வறட்டினால் வெண்மையான உலர்சேடம் வரும். அதை நீற்றினால் ஐந்து கிறேனுக்குக் குறையாமல் நிற்கும். இச்சேடம் தண்ணீரிற் கரையாது; மக்னீசிக்குரிய சோதனைகளுக்கு நிற்கும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு. மக்னீசியை அமிலக்கினியாய்க் கொடுப்பதற்கு இதுவே வசதியானது.

பின்முதவில்லையில் மக்னீசிகாபனசு ஓர் கூறாகச் சேருகின்றது.

## அபார மக்னீசிகாபனசு.

## LIGHT CARBONATE OF MAGNESIA.

இதற்குச் சின்னம், 3 (மகா$_3$) மஅ$_5$ஐ$_2$அ. லட்சணங்கள். இது மெத்த லேசான மா; சூக்குமாட்சியாற் பார்க்கும்போது சற்றே அமாவமாயும்[2] நுண் பிரிசங்கள்[3] கலந்ததாகவுங் காணப்படும், மற்றும் லட்சணங்களும் சோதனைகளும் மக்னீசிகாபனசு போலவே.

தன்மை, உபயோகம், தேயம். மக்னீசிகாபனசைப் போலவே.

## மக்னீசிசல்வசு. SULPHATE OF MAGNESIA.

இதற்குச் சின்னம், மநேஅ$_4$ 7ஐ$_2$அ, இது கடற்றண்ணீரிற் கரைந்திருக்கின்றது. எப்சம் என்ற இடத்திலுள்ள ஊற்றுகள் போன்ற அனேக மினிறல் ஊற்றுகளிலும்[4] அவைகளைப் போன்ற மினிறல் நீரூற்றுகளிலுமிருக்கும். ஆகையால் இதை எப்சம் உப்பென்று சொல்வது வழக்கம். இது வாடிக்கையான பேதியுப்பே. கறியுப்பெடுத்தபின் சேஷமாயிருக்கும் கடற்றண்ணீரிலிருந்தும், மக்னீசிக்கல்லைப் பொடிபண்ணி அதிற் சல்வுரிக்கமிலம்[5]விடுவதினாலும், மக்னீசிசல்வசு எடுக்கப்படும். லட்சணங்கள். இது கைப்பான நுண்ணிய நிறமற்ற, உருவொளியான சதுபுசப் பிரிசங்களாக இருக்கும். தண்ணீரிற் சுறுக்குக் கரையும். இக் கரைவு பாரியகுலோறிரத்தோடாவது[6], அமோனம்[7], அமோனதகுலோறிரம், சோடபாஸ்வசு[8] மூன்றுங் கரைத்த நீரோடாவது கூடும்போது வெண்மையான கன அடையல் உண்டாகும். சோதனைகள். இதின் நீர்க்கரைவு வாடிக்கையான காங்கையில் அமோனவக்சலசோடு[9] கூடும்போது அடையல் விழாது. இந்த உப்பில் நூறு கிறேனைத் தண்ணீரிற் கரைத்துக் கொதிக்கக் காய்ச்சி அதோடு சோடகாபனசு சேர்க்கும்போதுண்டாகும் அடையலை நன்றாய்க் கழுவி, உலர்த்திச் சிவக்கக் காய்ச்சினால் அது 16.26 கிறேன் நிறுக்கவேண்டும்.

தன்மை. இது விரேசனி, குளிர்மை, அமுரிதி.

உபயோகம். இது குளிர்ந்த சாந்தன விரேசனியாகையால், சுரநோய்கள், தாபிதநோய்களுக்கும், தசிரக்கிளர்ச்சியோடு கூடிய மலவரட்சிக்கும், விசேஷமாய் உரத்த இரத்த நிறைவான ஆட்களுக்குண்டாகும் மலவரட்சிக்கும் உவந்தது. ஈயவுப்புகள், பாரித[10]வுப்புகளாகிய நஞ்சுகளுக்கு இது மாற்று.

தேயம். விரேசனியாக இரண்டு திறும் முதல் ஒரு அன்சு வரைக்கும்

---

1 Carbonic acid 2 Amorphous 3 Prism. 4 Mineral spring. 5 Sulphuric acid. 6 Chloride of Barium, 7 Ammonia. 8 Phosphate of soda. 9 Oxalate. 10 Baryta.

Digitized By Roja Muthiah Research Library

எதும் சுகந்தநீரிலாவது, ரோசை[1]க்கூட்டின்ஊசத்திலாவது[2], நிலவாகையின் ஊசத்திலாவது கரைத்துக்கொடுக்கவும்.

ரசிதம். மக்னீசல்வசேனீமம். Enema of Sulphate of Magnesia. கொள். மக்னீசிசல்வசு ஒரு அன்சு. ஒலீவுத்தேல்[3] ஒரு அன்சு; கஞ்சித்தெளிவு பதினைந்து அன்சு. மக்னீசிசல்வசைக் கஞ்சித்தெளிவிற் கரைத்து எண்ணெய்யையுங் கூட்டிச் கலக்கவும்.

இது நல்ல விரேசன எனீமம்.

நிலவாகைக் கூட்டுக் கலவையிலும் மக்னீசிசல்வசு ஓர் கூறுகச் சேருகின்றது.

## அலுமினியம். ALUMINIUM.

சின்னம், அலு. அணுப்பாரம்=27 5.

அலுமினியம்என்பது, அலுமினி[4]என்ற மண்ணுக்குத் தாரகமாகியலோகம். அலுமினியென்பது அலுமினியத்தின் அச்சிரம். அதற்குச்சின்னம் அலு$_2$ அ$_3$. அது கிளேய் என்னும் களிமண்ணில் சிலிசியோடு கலந்தும் இன்னும் பல மண் கல்வகையாய் இயற்கையில் ஏராளமாயிருக்கும். மேலும் கருங்கல்லு வெல்ஸ்பா போவிறி என்ற கற்களிலும் வரையில்லாத பழைய கற்பார்களிலும், சீனக்காரஞ் செய்யும் சிலேற்று வகைகளிலும் இது ஓர் கூறுகச் சேர்ந்திருக்கின்றது. அலுமினியம் தகடாய் அடிபடக்கூடிய வெண்மையான லோகம். அதின் விசேஷகிருவிதம் 2.6.

## அமோனவலும். AMMONIA ALUM.

இது அமோனசல்வசு[5] அலுமினிசல்வசுஞ் சேர்ந்த இரணைச் சல்வசு. இதைக் குறிக்குஞ் சின்னமாவது நீஐ$_4$ அலு(கேஅ$^4$)$_2$ 12ஐ$_2$அ. இது அலுமினி சேர்ந்த சேலு[6] என்ற கல்வகையிலிருந்து பலவிதமாய்ச் செய்யப்படும். இது நிறமற்ற உருவொளியான எண்புசக் கிறிஸ்தல்களாக இருக்கும். புளிப்பும் இனிப்பும் துவர்ப்பும் சேர்ந்த சுவை உடையது. இதைத் தண்ணீரிற் கரைத்துக் காரப்பதாசியைச்[7] சேர்க்க, வெண்ணடையல் விழும். காரப்பதாசியை மிச்சமாய்க் கூட்ட அந்த அடையல் கரைந்துபோம். அக் கலவையைக் காய்ச்சினல் அமோனம் பறியும். சோதனை. இதின் தண்ணீர்க் கரைவுக்குப் பாரியகுலோறிரஞ்[8] சேர்த்தவுடனே அடையல் விழும். இரும்புச் சீனக்காரமாகிய அயவலுமுக்குப் பதாசிபீதபுருகியசு[9] கூட்ட நீலநிறமடையும். அமோன சீனக்காரமோ அப்படியாகாது. பதாசிச் சீனக்காரத்திலே அமோனத்துக்குப் பதிலாகப் பதாசி சேர்ந்திருக்கும்.

தன்மை. துவர், ஸ்திப்திகு[10], அந்திசெப்தி[11].

உபயோகம். விபல[12] இரத்தப்பெருக்கு, அசத்துவ[13] கழிச்சல், பிள்ளைகளுக்குண்டாகும் வாந்திபேதிக்கும், இரைப்பையின் கதார்[14]நோய்களுக்கும், பித்தோனகோலிக்கு[15], குக்கல், புறங்குநீயம்[16], என்னு நோய்களுக்கும் இது உள்ளே கொடுத்து நயந்தது. மேலும் வெளிமருந்தாய் இது கதார்க்கண்

---

1 Rose. 2 Infusion. 3 Olive oil. 4 Alumina. 5 Sulphate of Ammonia. 6 Shale. 7 Caustic Potash. 8 Chloride of Barium. 9 Yellow Prussiate of Potash. 10 Styptic. 11 Antiseptic. 12 Passive. 13 Atonic. 14 Catarrh. 15 Colica pictonum. 16 Bronchorrhoea.

Digitized By Roja Muthiah Research Library

ணோய், சீழ்க்கண்ணோய், நிமைக்கண்ணோய், கன்றல் என்பவற்றுக்குக் கலூ ரியமாகவும்[1], பலவகையான சைனன்கி[2], உண்ணாக்குநீட்சி, ஸ்கேவியிற் காணும் பல்லீற்றுப் புண்ணுக்குக் கார்கிலாகவும்[3], லுகரீயம்[4], கனூரீயம்[5], மெனூரீயம்[6], கருப்பை, கடைக்குடல்களின் பிதுக்கங்களுக்குப் புகட்டல்களாகவும், புண்கள், விசேஷமாய், கனமாய் நீர் பாயும் புண்கள், தசை மிஞ்சி அரும்பும் புண்கள், விசிககோதம்[7] என்பவற்றுக்கு லோஷன்[8] அல்லது தூவு மருந்தாகவும் வழங்கப்படும்.

தேயம். பத்து முதல் இருபது கிறேன் வரைக்கு. இதைச் சுகந்தங்களோடு கூடக் கொடுப்பதே உத்தமம். வெளிமருந்தாயிடுவதற்கு, ஒரு அன்சு தண்ணீருக்கு நாலு கிறேன் முதற் பத்துக் கிறேன் வீதமாய்க் கரைத்துக் கொள்ளலாம்.

ரசிதம். வறுத்த சீனக்காரம். Dried Alum. கொள். சீனக்காரம் நாலு அன்சு. பீங்கான் பாத்திரத்திலாவது வேறேதுந் தகுந்த ஏனத்திலாவது போட்டு உருகுந்தனையும் வறுத்து அப்பால் நீராவி பறிதலொழிந்து நிறையில் நூற்றுக்கு 47 பங்கு குறையுந்தனையும் வறுக்கவும். சேடத்தை மாவாக அரைத்துக் கண்ணாடிச்சடையுள்ள சீசாவில் பேணி வைக்கவும்.

தன்மை. சீனக்காரத்தைப் போலவே. அதிலும் இது சத்துள்ளது. இது மெல்லிய கார[9]மாகும்.

தேயம். ஐந்து முதற் பதினைந்து கிறேன் வரைக்கு.

இந்துக்கடைகளில் மிகுதியானவைகளில் இந்துஸ்தானிபாஷையில் விற்கார்[10]எனப்படும் பதாசிச்சீனக்காரம்[11]சற்றே சுத்தமானதாய் விலைப்படும். அதைத் தண்ணீரிற் கரைத்து, கிரிஸ்தல்க[12]ளுண்டாகத்தக்கதாய் வறட்டினால் மருந்துக்குச் சேர்க்கலாம். நேபாளத்திலுள்ள சீனக்காரமண்ணில் அயபிரவக்சிரம்[13] கூடியசீனக்காரமே பிரதானகூறு. சீனக்கார மண் சுதேச பதார்த்த சாரத்தில் ஓர் பிரதான சரக்காகும். அது ஓர்வகையான இரும்புச் சீனக்காரமாம். இச் சரக்கையும் அதின் உபயோகத்தையும்பற்றி வாலிங்கு பண்டிதர் எழுதியிருக்கிறார். இன்னொரு வகையான சீனக்கார மண்ணைச் சிந்துவிலிருந்து ஸ்தக்சு பண்டிதர் எடுத்துச் சோதித்து அது ஓர்வகையான இரும்புச் சீனக்காரமென்று நிதானித்தார். அந்த இடத்திற்றானே உள்ள இன்னொரு வகையான சீனக்கார மண்ணை ஏல்ஸ் பண்டிதர் சோதித்து அதிலே நூற்றுக்கு 13.16 அலுமினி[14]யென்றும் 17.80 பங்கும் அயபிரவக்சிரம் என்றும் கண்டார். இந்துதேசத்தில் அனேக பகுதிகளில் நிலத்திலே சீனக்காரம் அதிகமாயுண்டு. குச்சு, சிந்து, பஞ்சாப்பு, பாகாரிலும் மற்றுந் தேசங்களிலும் அது வியாபாரத்துக்குச் சுத்தியாக்கப்படும்.

## ஆசேனிகம். ARSENICUM.

சின்னம் ஆ; அணுப்பாரம் 75.

ஆசெனிகம் என்பது பாஷாணத்துக்குத் தாரகமான லோகம். இது இயல்பில் செந்தகத்தோடு சேர்ந்து, அரிதாரம்[15], செவ்வரிதாரம்[16] என்ற உப்புக

1 Collyrium. 2 Cynanche. 3 Gargle. 4 Leucorrhoea. 5 Gonorrhoea, 6 Menorrhoea. 7 Hospital gangrene. 8 Lotion. 9 Escharotic. 10 Phitkari. 11 Potash alum. 12 Crystal. 13 Peroxide of iron. 14 Alumina. 15 Orpiment. 16 Realgar



Digitized By Roja Muthiah Research Library

ளாகவிருக்கும். அக்சிதம்[1]வாயுவோடு கலந்து ஆசெனோசமில[2]மாகவும், லோகங்களோடு கலந்து ஆசெனிரங்[3]களாகவும் இருக்கும். வியாபாரத்தில் வரும் பாஷாணமாகிய ஆசெனோசமிலமானது ஆசெனிரங்கள் என்ற கல் வகைகளை மடக்குலையிற் காய்ச்சப் பிறக்கும். ஆசெனோசமிலத்திலுள்ள அக்சிதத்தை அகற்றுவதால் ஆசெனிகத்தை லேசாய் எடுக்கலாம். ஆசெனிகம் கருமை நிறமுள்ளது. 365 பாகை சூட்டில் உருகாமல் ஆவியாகும். இதின் விசேஷகுருவிதம்[4] 5.85.

## ஆசேனோசமிலம். ARSENIOUS ACID.

இதற்குச் சின்னம் ஆ[2] அ[3]. இது ஓர் அவைரூ[5] அமிலம். ஆசெனிகத்தை அடக்கிய ஆகரிகளைச் சுட்டுப் புடமிட்டுச் சுத்தியாக்கி இது எடுக்கப்படும். இது பாரமுள்ள வெள்ளை மாவாக அல்லது கட்டிகளாக இருக்கும். கட்டியிற் பல படைகளிருப்பதால் அது பெரும்பாலும் வரிகளுள்ளதாய்த் தோன்றும். அப்படலங்கள் தோற்றத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகும். கண்ணாடிக் குழலிலே தாமதமாய்ப் புடமிட்டால் இது தண்ணியபிரவையான உருவொளியுள்ள, எண்புசக் கிரிஸ்தல்களாக வரும். இது தண்ணீரிற் சொற்பமாய்க் கரையும். அக்கரைவுக்கு வெள்ளி அமோன நீதுரசைக்[6] கூட்டினாற், தண்ணீரிற் கரையமாட்டாததும், அமோனம், நீதுரிக்கமிலங்களிற்[7] சுறுக்காய்க் கரையக்கூடியதுமான வெண்மஞ்சள் நிற அடையல் விழும். சிவந்த சூடுள்ள கரியிற் தெளித்தால் உள்ளி மணம் வீசும்.

சோதனைகள். 400 பாகைக்கு மேற்படாத சூட்டில் முற்றாய் ஆவியாகும். நாலு கிறேனைக் கொதிவெந்நீரிற்கரைத்து அத்தோடு சோடதுவிகாபனசில்[8] எட்டுக்கிறேன் கூட்டினால் இயோத[9]பருமவிலயனத்தில்[10] 808 கிறேனளவின் நிறத்தைக் கெடுக்கும்.

தன்மை. இது அல்திறவம்[11], தோணிகம்[12], அந்திபிருடி[13]; பெருந்தேயத்தில் வீறான நஞ்சு.

உபயோகம். வெள்ளைப் பாஷாணம் கொடுத்து அதி சித்திபெற்ற நோய்கள், இடைவிட்டு வருகிற குலைப்பன்காய்ச்சல் நறல்சி[14] முதலிய நோய்களும் பாட்டம் பாட்டமாய் வருகிற முக நறன்சி, ஒருத்தலைவலி, கொரீயம்[15] எபிலெப்சி[16], குக்கல், ஸ்பசநளை[17], குஷ்டம் நாட்பட்ட சருமரோய்கள், என்பவைகளுமே. மேலும் காலிகவாதம், கன்சர்[18] கருப்பைக் கஞ்செஸ்தம்[19], மெனுறீயம்[20], பாம்புகடி, காலிக கதார்[21] ரோய்கள், தலைக்கனம், இறுதியோடு கூடிய பிளெதுறம்[22] என்பவற்றுக்குங் கொடுத்து வந்தது. கன்சர்ப் புண் மற்றும் உக்கிரப் புண்களுக்குத் தானிகமாயிடப்படுமாயினும் இந்த நஞ்சு உடம்பிற் சுவறுமாகையால் அப்படியிடல் புத்தியல்ல.

தேயம். அல்திறவமாகக் கிறேனில் இருபதிலொருபங்கு முதற் பன்னிரண்டிலொருபங்கு வரைக்கும், அந்திபிருடியாகக் கிறேனிற் பன்னிரண்டிலொரு பங்கு முதல் எட்டிலொரு பங்கு வரைக்குங் கொடுக்கலாம். எப்போதுஞ் சிறு தேயத்திற் தொடங்கிக் காரியங் கண்டு பேணமாய்க் கூட்டி

---

1 Oxygen. 2 Arsenious acid. 3 Arsenide. 4 Specific gravity. 5 Anhydrous. 6 Ammonio nitrate of silver. 7 Nitric acid. 8 Bicarbonate of soda. 9 Iodum. 10 Volumetric solution. 11 Alterative. 12 Tonic. 13 Antiperiodic. 14 Neuralgia. 15 Chorea. 16 Epilepsy. 17 Spasmodic Asthma. 18 Cancer. 19 Congestion. 20 Menorrhoea. 21 Catarrh. 22 Plethora.

Digitized By Roja Muthiah Research Library

க்கொடுப்பதே புத்தி. இம் மருந்தைப் பெரும்பாலும் பின்வரு நீர்களக்கொடுப்பதே உத்தமம்.

ரசிதங்கள். ஆசேனிக நீர். Arsenical solution. கொள். ஆசெஞ்ஞசமிலம், எண்பது கிறேன்; பதாசிகாபனசு[1], எண்பதுகிறேன், லவந்தர்க்கூட்டிரஞ்சம்[2], ஐந்துதிரும்; திஸ்திலித்த[3] தண்ணீர் போதியது. ஆசெஞ்ஞசமிலத்தையும் பதாசிகாபனசையும் பத்து அன்சு தண்ணீரோடு ஓர் குடுக்கையிலிட்டு, தெளிந்த நீர் வருந்தனையுஞ் சூடேற்றவும். ஆறினபின் லவந்தர்க்கூட்டிரஞ்சத்தையும் அரைநாழிக்குப் போதிய தண்ணீரையுங் கூட்டவும். லட்சணங்கள். இது செந்நிறமான நீர்; சோதனைத்தாளுக்கு அல்கலையாய்[4] நிற்கும்; லவந்தர் மணங்கொண்டது. சோதனைகள். விசேஷகிருவிதம்[5] 1 009. இதை ஐருகுலோறிக்கமிலத்தால்[6] புளிப்பாக்கி ஐருசல்வுரிக்கமிலத்தைச்[7]சேர்த்தால். மஞ்சள் நிற அடையல் விழும். ஆசெனிக நீரை முன்னமே தண்ணீரோடு கலந்தால், இந்த அடையலின் நிறங் கதித்திருக்கும். ஆசெனிக நீரில் நிறைப்படி 441 5 கிறேனை அதாவது ஒரு அன்சைச் சோடதுவிகாபனசிற்[8] பத்துக் கிறேஞ்ஞடு ஐந்துமினி நேரமாகக் காய்ச்சி, ஆறினபின், சொற்ப அளவான அமைல முசிலாகு[9]சேர்த்த் ஆறு அன்சு தண்ணீரோடு கலந்தால் இயோதபருமவிலயனத்தில்[10] 808 கிறேன் கூட்டுந்தனையும் நிலையான நீல நிறந் தோன்ருது. ஒரு அன்சு ஆசெனிகநீரில் நாலு கிறேன் ஆசெஞ்ஞசமிலம் அடங்கியிருக்கும் என்று இதால் விளங்குகிறது.

தன்மை, உபயோகம். ஆசெஞ்ஞசமிலத்தைப் போலவே.

தேயம். ஐந்து துளியைத் தண்ணீரிற் கலந்து நாள் மூன்றுமுறை நீஞேடாவது தின்றவுடனவது கொடுக்கலாம். பாஷாணத்தைக் கொடுப்பதற்கு இதுவே பெரும்பாலும் உத்தம முறை. ஆசெனிகநீர் ஒவ்வொரு திருமில் அரைக்கிறேன் ஆசெஞ்ஞசமிலம் அடங்கியிருக்கும்.

ஆசேனிக வைரு குலோறிக நீர். Hydrochloric solution of Arsenic. கொள். ஆசெஞ்ஞசமிலம், மாவாக எண்பது கிறேன்; ஐருகுலோறிக்கமிலம், இரண்டு திரும்; திஸ்திலித்த தண்ணீர் போதியது. ஆசெஞ்ஞசமிலத்தை ஐருகுலோறிக்கமிலத்தோடும் நாலு அன்சு தண்ணீரோடுங் கரையுந்தனையும் கொதிக்கக் காய்ச்சி அப்பால் அரைநாழிக்குப் போதிய திஸ்திலித்த தண்ணீர் சேர்க்கவும். லட்சணங்கள். இது அமிலத்தன்மையுள்ள நிறமற்ற நீர். சோதனைகள். விசேஷகிருவிதம் 1·009. ஐருசல்வுரிக்கமிலத்தைக் கூட்டினவுடன் நல்ல மஞ்சள்நிற அடையல் விழும். இந்த நீரிலே நிறைப்படி 44 1.5 கிறேனை அதாவது ஒரு அன்சைச் சோடதுவிகாபனசில் இருபது கிறேஞ்ஞடு ஐந்துமினி[11] நேரமாகக் கொதிப்பித்துப் பிற்பாடு சொற்ப அளவான அமைலமுசிலாகு சேர்த்த ஆறு அன்சு திஸ்திலித்த தண்ணீரோடு கலந்தால் இயோதபருமவிலயனத்தில் 808 கிறேனளவைக் கூட்டுந்தனையும் நிலையான நீலநிறந் தோன்ருது. ஆகவே இந்த நீரில் ஒரு அன்சு ஆசெஞ்ஞசமிலத்தில் நாலு கிறேனுக்குச் சரியென்று காண்கிறது.

தன்மை, உபயோகம். ஆசெஞ்ஞசமிலத்தைப் போலவே.

தேயம். இரண்டு மினிம் முதல் எட்டு மினிம் வரைக்குக் கொடுக்கலாம்.

சோடவாசேனசு. Arseniate of soda, சோடம் பார்.

---

1 Carbonate of potash. 2 Compound Tincture of Lavender. 3 Distilled. 4 Alkali 5 Specific gravity. 6 Hydrochloric acid. 7 Hydrosulphuric acid. 8 Bicarbonate of soda. 9 Mucilage of Amylum. 10 Volumetric solution of soda. 11 Minute.

Digitized By Roja Muthiah Research Library

அயவாசேனசு. Arseniate of Iron. அயம்.பார்.

[வெள்ளைப் பாஷாணம், பொன்னரிதாரம் (76.) செவ்வரிதாரம் என்று மூன்று வகையான பாஷாணம் இந்துக்கடைகளில் இருக்கும். பாஷாணத்தை இந்துக்கள் குஷ்டம், முறைச்சுரம் முதலிய நோய்களுக்குக் கொடுத்தல் பண்டுதொட்ட வழக்கமாயிருந்தது. மேலும் அடாத நோக்கங்களுக்கு இடலும் பெரு வழக்கம். செவர் பண்டிதர் வங்காள வைத்திய வியவகாரநூலில் இதைப்பற்றி எழுதியிருக்கிற கருத்துள்ள விபரத்தைப் பார்க்கவும். கற்குத்தாவுக்கு வரும் வெள்ளைப் பாஷாணத்தில் மிகுதியான பங்கு பார்சிக்குடாக்கடலிலிருந்தும் சொற்பபங்கு மாத்திரம் யுரோபத்திலிருந்தும் வரும், பொன்னரிதாரத்தில் உத்தம வகை அயோத்தியிலிருந்தும் குறைந்தவகை இறங்கூனிலிருந்தும், செவ்வரிதாரம் அயோத்தியிலிருந்தும் வரும். இவ் வியாபாரத்தைச் சுதேசிகளே முற்றாய் நடத்துவார்கள். 1850 ம், 1855 ம் ஆண்டுகளுக்கிடையான ஐந்து வருஷங்களிற் கற்குத்தாத் துறைமுகத்தால் வந்த பாஷாணம் 7860 இறுத்தலாம்.

## அந்திமனி. ANTIMONY.

சின்னம், அந்; அணுப்பாரம். 122.

இது நொருக்கலும் நீல வெண்மையும் மினுக்கமுமான ஓர் லோகம். விசேஷகிருவிதம் 6.715. இது 842.0 பாகை சூட்டில் உருகும். லோகக்கலவைகள் செய்வதில் அதிகமாய் வழங்கப்படும். இது கெந்தகத்தோடாவது அக்சிதத்தோடாவது கலந்ததாய்ப் பூமியின் அனேக பகுதிகளில் இருக்கும். கெந்தகத்தோடு கலந்த சல்விரமாகப் பிரதானமாய் காணுவல், அங்கேரியின் சில பகுதிகள், பிரான்சு, போணியு என்ற இடங்களில் இருக்கும். அக்சிதக் கலவையாகிய அந்திமனியக்சிரம் பொஹீமி, சக்சனியில் இருக்கும்.

## காரந்திமனி. BLACK ANTIMONY.

காரந்திமனியென்பது அந்திமனிசல்விரமே. இதைக் குறிக்குஞ் சின்னம் அந்$_2$ கே$_3$, இது சிலிசி[1] யிலிருந்துபிரிக்கப்பட உருக்கப்பட்டுப் பின்பு மாவாக்கப்படும். அப்போ அது நரைக்கறுப்பான கிரிஸ்தல் மாவாக வரும். அது கொதிக்கிற ஐருகுலோறிக்கமிலத்தில்[2] ஏறக்குறைய முற்றாய்க் கரைந்து அந்$_3$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற அந்திமனிகுலோறிர[3] மாகி, ஐருசல்வுரிக்கமிலத்தைக் கக்கும்.

அந்திமனிசல்வுகம்[4], அந்திமனிகுலோறிர நீர் என்ற மருந்துகள் செய்வதற்கு மாத்திரம் காரந்திமனி வழங்கப்படும்.

## அந்திமனியக்சிரம். OXIDE OF ANTIMONY.

இதற்குச் சின்னம் அந்$_2$ அ$_3$.

அந்திமனிகுலோறிரநீருக்குத் தண்ணீர் சேர்த்து வரும் அடையலுக்குச் சோடகாபனசைச்[5] கூட்ட அந்திமனியக்சிரம் பிரியும். லட்சணங்கள். இது வெண் நரைநிறமான மா. சொற்ப சூட்டில் உருகும்; தண்ணீரிற் கரையாது; ஐருகுலோறிக்கமிலத்திற் சுறுக்குக் கரையும். சோதனைகள்.

---

1 Silica. 2 Hydrochloric acid. 3 Chloride of Antimony 4 Sulphuret of Antimony. 5 Carbonate of soda.

Digitized By Roja Muthiah Research Library

இதின் விலயனத்துக்கு ஐருசல்வுரிக்கமிலத்தைக்[1] கூட்ட அது செம்மஞ்சள் நிறம் அடையும்; நிஸ்தில்த்த தண்ணீருக்குள்ளே அதைத் துளிதுளியாக விட்டால் வெண்ணடையல் விழும். தாரதரிக்கமிலத்திலே[2] முற்றாய்க் கரையும்.

தன்மை. இது வமனி, இளம் விரேசனி, சுவேதனி, எக்ஸ்பெக்துறம்.

உபயோகம். சுர நோய்கள், தாபித[3] நோய்கள், கதார்[4] நோய்களுக்கும், காலிகமான சருமநோய்களுக்கும் இது நயந்த மருந்து.

தேயம். ஒரு கிறேன் முதல் நாலு கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

ரசிதம். அந்திமனிபற்பம். Antimonial Powder. கொள். அந்திமனியக்சிரம்[5] ஒரு அஞ்சு; சுண்ணபாஸ்வசு[6] இரண்டு அஞ்சு. நிறமாய்க் கலக்கவும்.

தன்மை, உபயோகம். அந்திமனியக்சிரம் போலவே.

தேயம். மூன்று கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.

அந்திமனிதாத்தரகம் செய்வதற்கும் அந்திமனியக்சிரம் வழங்கப்படும்.

## அந்திமனிசல்வுகம்.
## SULPHURATED ANTIMONY.

இது அஞ்சனக் கல்லென்றுஞ் சொல்லப்படும். இதிலே அந்₂ கே₃ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுவதாகிய அந்திமனிசல்விரத்தோடு[7] அந்₂ அ₃ என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற அந்திமனியக்சிரம் விகற்ப அளவாய்ச் சேர்ந்திருக்கும் லட்சணங்கள். இது செம்மஞ்சள் நிறமான தூள். பதாசிநீர்[8] சோடா நீர்களில்[9] சுறுக்குக் கரையும். ஐருகுலோறிக்கமிலத்திலுங்[10] கரைந்து ஐருசல்வுரிக்கமில்வாயுவைக்கக்கிச் சொற்ப கெந்தகத்தைப் பிரித்துவிடும். பதாசியமிலதாத்தரசோடு[11] தண்ணீரிற் போட்டுக் கொதிப்பித்தாற் பிறக்கு நீருக்கு ஐருசல்வுரிக்கமில வாயுவைக் கூட்டச் செம்மஞ்சன்நிற அடையல்விழும். சோதனைகள். இம் மருந்தில் அறுபது கிறேனை ஐருகுலோறிக்கமிலத்திற் கரைத்துத் தண்ணீருக்குள் விட்டால் வெண்ணடையல் உண்டாகும். அதைக் கழுவி உலர்த்தினால் ஏறக்குறைய 33 கிறேன் நிறக்கும்.

தன்மை. இது அல்திறவம்[12], சுவேதனி, வமனி.

உபயோகம். காலிகசருமநோய்கள், கோளவீக்கங்கள், உபசிவ்விசு[13] காலிகவாதங்களுக்கு இது அல்திறவமாகவும், சுவேதனியாகவும் கொடுக்கப்படுமாயினும் சித்தியோ சந்தேகம்.

தேயம். அல்திறவமாக ஒரு கிறேன் முதல் ஐந்து கிறேன் வரைக்கும். வமனியாகப் பத்து முதல் இருபது கிறேன் வரைக்குங் கொடுக்கலாம்.

கலமற்கூட்டுக்குளிகையில் அந்திமனிசல்வுகம் ஓர்கூறாகச்சேருகின்றது.

[இச் சரக்கு இந்துக் கடைகளில் அஞ்சனக் கல்லென்று விலைப்படும். பூர்வகாலம் போலவே இக்காலமும் கீழைத் தேசப் பெண்கள் தங்கள் கண்ணிமைகள் கண்மடல்களுக்கு இதால் மைதீட்டுவார்கள். அது உள்ளே கொடுக்கப்படுவதுமில்லை, நஞ்சாக ஊட்டப்படுவதுமில்லை. நோயில் பண்டி

---

1 Hydro sulphuric acid. 2 Tartaric acid. 3 Inflammation. 4 Catarrh. 5 Oxide. 6 Phosphate of lime. 7 Sulphide. 8 Liquor potash. 9 Caustic soda. 10 Hydrochloric acid. 11 Acid tartarate of potash. 12 Alterative, பரிணமி. 13 Secondary Syphilis.

Digitized By Roja Muthiah Research Library

தர் ஓர்வகை ஈயச்சல்விரம், சூர்மி[1]யென்றுபேர்ப்படுமென்று எண்ணுகிறார். இப்பெயர்ப்பட்ட ஓர் சரக்கை சென்சு பண்டிதர் ஆராய்ந்து ஸ்திருந்தி[2]சல்வசு என்று கண்டார். லேசும் மெதுவுமான இன்னொன்றைச் சோதித்தவிடத்து அது கார்ஜிப்சம்[3] எனக் காணப்பட்டது.

## அந்திமனி திரிகுலோறிர நீர்.

## SOLUTION OF TERCHLORIDE OF ANTIMONY.

இது காரந்திமனியை ஐருகுலோறிக்கமிலத்திற்[4] கரைத்த நீரேயாகும். லட்சணங்கள். இது மஞ்சட் சிவப்புநிறமுள்ள கனத்த நீர். இதிற் சொற்பத்தைத் தண்ணீருக்குள்ளே விட்டால் ஓர் வெண்ணடையல் விழும். அது அந்திமனியக்சிகுலோறிரம்[5]. முன்னே இது அல்கரதுபற்பம்[6]என்று பேர்ப்பட்டது. இதிலே ஐருசல்வுரிக்கமில[7]வாயுவைச் செல்லவிட்டால் செம்மஞ்சள் நிறமடையும். சோதனைகள். விசேஷகுருவிதம்[8] 1.47. கால் அன்சு தாத்தரிக்கமிலத்தை[9] காலு அன்சு தண்ணீரிற் கரைத்துக்கொண்டு, இந்த அந்திமனிதிரிகுலோறிர நீரில் ஒரு திருமை கூட்டினால் தெளிந்த நீராகும். இதிலே ஐருசல்வுரிக்கமில் வாயுவைச் செல்லவிட்டாற் செம்மஞ்சள்நிற அடையல் விழும். இந்த அடையலைக் கழுவி 212 பாகை சூட்டில் உலர்த்தினால் 22 கிறேனளவாகுதல் நிறுக்கும்.

தன்மை. இது வீறான காரம், தகனி, உள்ளே கொடுக்கப்படுவதில்லை. அந்திமனியக்சிரஞ்[10]செய்வதற்கு இது வழங்கப்படும்.

## அந்திமனிதாத்தரகம்.

## TARTARATED ANTIMONY.

இது அந்திமனிதாத்தரசும்[11] பதாசி[12]தாத்தரசுஞ் சேர்ந்த இணைஉப்பு. இதற்குச் சின்னம் பஅந்கா$_4$ஐ$_4$அ$_7$ஐ$_2$அ. அந்திமனியக்சிரத்தையும் பதாசியமிலதாத்தரசையும்[13] தண்ணீரிற் கரைத்துக் கொதிப்பிக்க இது பிறக்கும். லட்சணங்கள். இது முக்கோண முகப்பைக் காட்டுகிற நிறமற்ற உருவொளியான கிரிஸ்தல்களாக இருக்கும். தண்ணீரிற் கரையும். புருவுசீதிற்[14] குறைவாய்க் கரையும். சூடு காட்டப் படபடென்று வெடித்துக் கறுக்கும். தண்ணீரிற் கரைத்து ஐருகுலோறிக்கமிலத்தைக் கூட்டினால் ஓர் வெண்ணடையல் உண்டாகும். தாத்தரிக்கமிலத்தை முன்னமே கூட்டினால் அடையல் உண்டாகாது. சோதனைகள். இதில் இருபது கிறேன், 60 பாகை குளிர் திஸ்திலித்த தண்ணீர் ஒரு அன்சிலே சேஷமில்லாமற் கரையும். அக்கரைவோடு ஐருசல்வரிக்கமிலங்கூட்டினால் செம்மஞ்சள்நிற அடையலுண்டாகும். அதைக் கழுவி 212 பாகை சூட்டில் உலர்த்த 9.91 கிறேன் நிறுக்கும்.

தன்மை. இது வமனி, சுவேதனி, எக்ஸ்பெக்துறம்; சிறுதேயத்தில் அல்திறகம்[15]. பெருந்தேயத்திலாவது நெடுகவாவது கொடுத்தால் நஞ்சு. தானிகமாயிட்டால் எதிரழற்சி.

உபயோகம். சுரநோய்கள், தாபிதநோய்களில்[16] தசிரக் கிளர்ச்சியைக்

---

1 Surmi. 2 Strontia. 3 Fibrous Gypsum. 4 Hydrochloric acid. 5 Oxychloride of Antimony. 6 Powder of Algaroth. 7 Hydrosulphuric acid. 8 Specific Gravity. 9 Tartaric acid. 10 Oxide of antimony. 11 Tartrate of Antimony. 12 Potash. 13 Acid Tartrate of potash. 14 Proof spirit. 15 Alterative, பரிணமி. 16 Inflammation.

Digitized By Roja Muthiah Research Library

குறைப்பதற்கு இது உத்தம மருந்து. சுவாசப்பைகள், நெஞ்சுறுப்புகளின் தாபிதங்களுக்கும், குறூப்பு[1], லறிஞ்சீது[2],குக்கலின் தொடக்கம், கதார்கள்[3], இன்வுலென்சி[4], எபதீது[5], தீவிரஜுருகெவலம்[6] தீவிரவாதம், ஐராதுரேசி[7], திலீரியந்திரிமன்சு[8],எபிலெப்சி[9]என்னும்நோய்களுக்கும், பிளெதறத்[10]தைச்சார்ந்த மற்றநோய்களுக்கும் சீழ்க்கண்ணோய்க்கும் தாபிதம்பற்றிய மற்றும் கண்வியாதிகளுக்கும் இது மெத்த உவந்த மருந்து. மேலும் இரைப்பை நிறைந்திருக்கையிற் சத்திக்கப்பண்ணுவதற்கும் இது வாய்ப்பானது.

தேயம். அல்திறவமாகப் பதினாறிலொரு பங்கு முதல் எட்டிலொருபங்கு கிறேன் வரைக்கும், சுவேதனி எக்ஸ்பெக்துறமாக எட்டிலொருபங்கு முதற் காற்கிறேன் வரைக்கும், வமனியாக, ஒரு கிறேன் முதல் நாலுகிறேன்வரைக்குங் கரைத்துக் கொடுக்கலாம்.

ரசிதங்கள். அந்திமனி வைன். Antimonial wine. கொள். அந்திமனி தாத்தரகம், நாற்பது கிறேன்; செரிவைன், அரைநாழி. கரைக்கவும்.

தேயம். சுவேதனி, எக்ஸ்பெக்துறமாகப் பத்து முதல் முப்பது துளி வரைக்கும்; உவட்டிப்பதற்கு ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்கும், வமனியாக அரைஅன்சு தேயமாவது இரண்டு திறும் தேயமாய் வாந்திக்குந்தனையும் பத்துமினிக்கொருமுறையாயாவது கொடுக்கலாம். பிள்ளைகளுக்கு வமனியாக முப்பது துளிமுதல் அறுபது துளி வரைக்குக் கொடுக்கலாம். ஆயினும் பெரும்பாலும் குழந்தைகளுக்கு இபிகாக்குக்கொடுப்பது உத்தமம். இதிலொரு அன்சிலே அந்திமனிதாத்தரகம் இரண்டு கிறேன் இருக்கும்.

அந்திமனிதாத்தரகவன்கேன். Ointment of Tartarated Antimomy. கொள். அந்திமனிதாத்தரகம், மாவாக, கால் அன்சு; திமியன்கென்[11] ஒரு அன்சு. திறமாய்ச் சேர்க்கவும்.

இது நயந்த எதிரழற்சி; சிலதரம் பூசினபின், பூசின இடத்திற் பருக்கள் தோன்றும். காலிகபுறங்கீது[12], ஈளை, கசம், மற்றுஞ் சுவாசநோய்கள், தீவிர மெனிஞ்சீது[13],ஐராதுரேசி,பொருத்திலுண்டாகும் மற்றுங் காலிகநோய்கள், முகநறல்சி[14],மற்றும்வகையான நறல்சி, என்ற நோய்களுக்கு இது பூச்சுமருந்தாகும். சிலவகைச் சோர்வ, குக்கலின் பின்பருவங்களில் இது பெரும்பாலும் முன்னெலும்பிற் பூசப்படும். இது தோலிற் கடுமையாய்ப் பிடிக்குமாகையாலும் உடம்பிலுறிஞ்சப்பட்டு மோசத்துக்கு ஏதுவாகுமாகையினாலும் இதைப் பூசும்போதெல்லாம் மெத்த விழிப்பாயிருக்கவேண்டும்.

## பிஸ்முதம். BISMUTH.

சின்னம், பி; அணுப்பாரம் 210.

பிஸ்முதம் பெரும்பாலும் சுத்த லோகமாயிருக்கும்; கெந்தகம் அக்சிதங்க[15]ளோடு கலந்திருக்கும். இது பூமியின் பல பகுதிகளில் விசேஷமாய் காணுவல், சக்சனி, பொகீமி, ஐக்கமரிகத்தின் சில பகுதிகளில் உண்டு.

## பூதபிஸ்முதம். PURIFITD BISMUTH.

இது கிரிஸ்தலான செவ்வெள்ளைநிற லோகம். வெடியுப்போடு சேர்த்துருக்கிச் சுத்தமாயெடுக்கப்படும். 507 பாகை சூட்டில் உருகிப் பெரிய

1 Croup. 2 Laryngitis. 3 Catarrh. 4 Influenza. 5 Hepatitis. 6 Hydrocephalus. 7 Hydarthrosis. 8 Delirium tremens. 9 Epilepsy. 10 Plethora. 11 Simple ointment. 12 Bronchitis. 13 Meningitis. 14 Neuralia. 15 Oxygen.

Digitized By Roja Muthiah Research Library

குழாயான கனவடிவக் கிறிஸ்தல்களாகும்[1]. சோதனைகள். நீதுரிக்கமிலத்தை[2]யும், நிஸ்திலித்த[3] தண்ணீரையும் சம பங்காய்க் கலந்து இந்தக் கலவையிற் கரைத்தால் பிஸ்முத நீதுரசு[4]நீராகும். அந்த நீரை எறிட்ட நிறமற்ற கிறிஸ்தல்கள் உண்டாகும். தண்ணீர் சேர்க்க அக் கிறிஸ்தல்கள் கரைந்து வெண்ணடையலாகும். கிறிஸ்தல்களை விட்டுத் தாய்நீரை வேறெடுத்து அதற்கு அமோனகாபனசு[5]நீரைக் கூட்டினால், உண்டாகுமடையல் நிறமற்றதாய் அல்லது நிறங் குறைவாய் வரும்.

பிஸ்முதம் பின்வரும் ரசிதங்களுக்கு அடியாவதால் மாத்திரம் வாகடத்துக்குரியது.

## பிஸ்முதவதநீதுரசு. SUBNITRATE OF BISMUTH.

இதற்குச் சின்னம், பி நீஅ[4] ஐ[2] அ. பிஸ்முதநீதுரசைத் தண்ணீரிற் கரைக்கப் பிஸ்முதவதநீதுரசு பிறக்கும். லட்சணங்கள். இது பாரமான வெள்ளைமா. நுண்ணிய கிறிஸ்தல்கள் போன்ற செதில்களாலானது. ஐருசல்வுரிக்கமிலம்[6]படக் கறுக்கும். சோதனைகள். இது தண்ணீரிற் கரையாது. அரைப்பங்கு நிஸ்திலித்த தண்ணீரோடு கலந்த நீதுரிக்கமிலத்திலோ கரையும்; இக்கரைவைத் தண்ணீருக்குள்ளே வார்த்தால் ஓர் வெண்ணடையல் உண்டாகும். இச் சரக்குத் தாத்தரிக்கமிலத்திற்[7] கரையாது. ஐருசல்வுரிக்கமிலத்துக்குக் கறுக்கும். சல்வுரிக்கமிலத்திற் கரைத்து சம அளவான தண்ணீருஞ் சேர்த்துஅந்தநீருக்கு அயசல்வசைக் கூட்ட அது கபிலமாகும்.

தன்மை. துவர், செரநீவம்[9], அல்திறவம்[10].

உபயோகம். அசத்துவகுன்மம்[11], கஸ்திறல்சி[12], கஸ்திறடைன்[13], பைரோசி[14], இரைப்பைப் புண், அசத்துவக் கழிச்சல் என்ற நோய்களுக்கும், திசந்தெரி[15]யின் முற்றிய பாதத்துக்கும் இது பெரும்பாலும் உவந்த மருந்து. மேலும் வெளிமருந்தாய் இது காட்பட்ட சருமநோய்களுக்கும், அபானம், முலைக்காம்பு, உதடு முதலிய பகுதிகளிற் காணும் வெடிப்புக்கும், தாவப்படுவதன்றி, லுசறீயம்[16] கிலீற்று[17]களுக்கும் வழங்கப்படும்.

தேயம். ஐந்து கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்கு நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம்.

ரசிதங்கள். பிஸ்முதவில்லை. Bismuth Lozenges. கொள். பிஸ்முதவதநீதுரசு, ஆயிரத்துநானூற்று நாற்பது கிறேன்; மக்னீசிகாபனசு[18], நாலு அன்சு; அதகசுண்ணகாபனசு[19] ஆறு அன்சு; சுத்தசர்க்கரை இருபத்தொன்பது அன்சு; அகசிப்பிசின்மா[20], ஒருஅன்சு; அகசிப்பிசின் முசிலாகு[21], இரண்டு அன்சு; ரோசை நீர் போதியது. உலர்சரக்குகளெல்லாவற்றையுங் கலந்து, அப்பால் முசிலாகைக் கூட்டி. ரோசைநீரிலுஞ் சேர்த்து முழுவதையுந் தகுந்தபதமாய் அரைத்து 720 வில்லைகளாகத் தட்டி மட்டான சூடுள்ள காற்றறையில் உலர்த்தவும்.

வில்லை ஒவ்வொன்றிற், பிஸ்முதவதநீதுரசு இரண்டு கிறேன் இருக்கும்.

தேயம். நாளொன்றுக்கு மூன்று முதற் பத்து வில்லை கொடுக்கலாம்.

---

1 Crystal. 2 Nitric acid. 3 Distilled. 4 Nitrate of Bismuth. 5 Carbonate of Ammonia. 6 Hydrosulphuric acid. 7 Tartaric acid. 8 Sulphuric acid. 9 Sedative 10 Alterative. 11 Atonic Dyspepsia, 12 Gastralgia. 13 Gastrodyne, 14 Pyrosis. 15 Dysentery 16 Leucorrhoea 17 Gleet. 18 Carbonate of Magnesia. 19 Precipitated carbonate of Lime, 20 Gum acacea 21 Mucilage.

Digitized By Roja Muthiah Research Library

பிஸ்முதவதநீதுரசன்கேன். Ointment of Subnitrate of Bismuth.

கொள். பிஸ்முதவதநீதுரசு, இரண்டு திறும்; தமியன்கென்[1], ஒரு அன்சு. திறமாய்க் கலக்கவும்.

பிஸ்முதவதநீதுரசு மாவை வெளிமருந்தாக வழங்கும் நோய்களுக்கு இது வும் நன்றாய் உதவும்.

## பிஸ்முதகாபனசு.
## CARBONATE OF BISMUTH.

இதற்குச் சின்னம் $2(\text{பி}_2\text{கா}\ \text{அ}^5)\text{ஐ}_2\text{அ}_2$ பூத பிஸ்முதத்தை நீதுரிக்கமிலத்தி[2] ற் கரைத்து அநோடு அமோனகாபனசைக்[3] கலக்க, பிஸ்முதகாபனசு பிறக் கும். லட்சணங்கள். இது வெள்ளை மா; ஐருசல்வுரிக்கமிலம்[4] படக் கறு க்கும்; தண்ணீரிற் கரையாது; நீதுரிக்கமிலத்திலோ நுரைத்துக்கொண்டு கரையும். சோதனைகள். இந்திகுசல்வசால்[5] நிறத்த சல்வுரிக்கமிலத்துக்கு[6] இதைக் கூட்டினால் அந்த நிறம் மாறாது. அரைப்பங்கு திஸ்திலித்த தண் ணீர் கலந்த நீதுரிக்கமிலத்துக்குப் பிஸ்முதகாபனசை கரையத்தக்க அளவா ய்க் கூட்டி இக் கரைவில் ஒருபங்கை இருபதுபங்கு தண்ணீருக்குள்ளே வார்த்தால், ஓர் வெண்ணடையல் உண்டாகும். பிஸ்முதகாபனசை நீதுரி க்கமிலத்திற் கரைத்துக் கிருசசல்வுரிக்கமிலமாவது வெள்ளிநீதுரசு[7]நீராவது கூட்டினால் அடையல் உண்டாகாது.

தன்மை உபயோகங்கள். பிஸ்முதவதநீதுரசைப் போலவே.

தேயம். ஐந்து முதல் இருபது கிறேன் வரைக்கு.

## பிஸ்முதவமோனசித்திறசு நீர்.
## SOLUTION OF CITRATE OF BISMUTH AND AMMONIA.

கொள். பூதபிஸ்முதம் நானூற்று முப்பது கிறேன்; நீதுரிக்கமிலம், இரண்டு அன்சு; சித்திறிக்கமிலம்[8], இரண்டு அன்சு; அமோனநீர்[9], திஸ்தி லித்த நீர்[10] வகைக்குப் போதியது. நீதுரிக்கமிலத்தை ஒரு அன்சு திஸ்திலித் ததண்ணீரோடு கலந்து, பிஸ்முதத்தைப் படிப்படியாய்க் கூட்டவும். நுரை ஒழிந்தபின் பொங்குஞ் சூட்டுக்குச் சொற்பங் குறைந்த சூட்டைப் பத்துமி னி நேரமாக ஏற்றி அப்பால் அந்த நீரைத் தெளித்து அதில் ஏதுங் கரையாப் பதார்த்தமிருந்தாற் பிரிக்கவும். தெளித்த நீர் இரண்டு அன்சாய் வற்றுந்த னையும் அதை வறட்டி, சித்திறிக்கமிலத்தை முன்னமே நாலு அன்சு திஸ்திலி த்த நீரிற் கரைத்து அதற்குச் சேர்த்து, அப்பால் உண்டான அடையல் மறு படி கரைந்து அந்தநீர் சோதனைத்தாளுக்குத்[11] தடஸ்தமாய்[12] அல்லது சொற்ப அல்கலையாய்[13] வருந்தனையும் அமோனநீரைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கூ ட்டவும். அப்பால் அரைநாழிக்குப் போதிய திஸ்திலித்த தண்ணீர் கூட் டவும். லட்சணங்கள். இது உவர்ப்புஞ் சற்றே லோகச்சுவையுங்கொண் ட நிறமற்ற நீர். விசேஷகிருவிதம், 1.122. சோதனைத்தாளுக்குத் தடஸ்த மாய் அல்லது சற்றே அல்கலையாய் நிற்கும். தண்ணீரோடு மாறுதலின்றிக் கலக்கும். பதாசி[14]நீரோடுகாய்ச்சினால் அமோனத்தைக்[15]கக்கி ஓர் வெண்ண டையல் விழுத்தும். சோதனைகள். இதற்கு ஐருகுலோறிக்கமிலத்[16]தைக்

---

1 Simple ointment. 2 Nitric acid. 3 Ammonia carbonate. 4 Hydrosulphuric acid. 5 Sulphate of Indigo. 6 Sulphuric acid. 7 Nitrate of silver. 8 Citric acid. 9 Liquor ammonia. 10 Distilled water. 11 Test paper. 12 Neutral. 13 Alkaline. 14 Potash. 15 Ammonia. 16 Hydrochloric acid.



Digitized By Roja Muthiah Research Library

கூட்டினுல் ஓர் வெண்ணடையலுண்டாகும். அமிலத்தை இன்னுங் கூட்ட அந்த அடையல் கரையும். இந்த நீரில் மூன்று திருமை ஒரு அன்சு திஸ்திலித்த தண்ணீரோடு கலந்து அதற்கு ஐருசல்வுரிக்கமிலத்தை[1] மிஞ்சச் சேர்த்தால், ஓர் கறுப்படையலுண்டாகும். அந்த அடையலைச் சேர்த்துக் கழுவி உலாத்திஞல் 9.92 கிறேன் கிறுக்கும்.

தேயம். முப்பது மினிம் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கவும். ஒருதிருமிற் பிஸ்முதவக்சிரம்[2] மூன்று கிறேன் இருக்கும்.

## துத்தம். சிங்கு. ZINC.

சின்னம், துঃ அணுப்பாரம், 65. துத்தம் வன்மையும் நீல வெள்ளையுமான லோகம். இது மினிறல்[3]களுட் பலவகையாய்க் கலந்திருக்கும். பிரதானமாய்க் கெந்தகத்தோடு கலந்து பிளென்று[4]எனப்படும் துத்தசல்விர[5]மாகவும், காபனிக்கமிலத்தோடு கலந்து கலமின்[6] என்ற துத்தத்தின் அசுத்த காபனசாகவுமிருக்கும். இது விசேஷமாய்ப் பிறித்தனில் மென்றிபுமலை[7] அல்ஸ்தன்மூர்[8] என்ற பகுதிகளிலும்,பெல்சியம்[9],சிலிசியம்[10]என்ற தேசங்களிலும் எடுக்கப்படும். மேலும் இந்த சீனங்களிலுமுண்டு. இந்தலோகம் 773 பாகை சூட்டில் உருகும். மிகுதியான அமிலங்களிற் கரையும். இதின் விசேஷகிருவிதம் 6.8 முதல் 7 வரைக்கு இருக்கும்.

## கிறனுலதுத்தம். GRANULATED ZINC.

வியாபாரத்தில் வரும் துத்தத்தை உருக்கி அதைத் தண்ணீருக்குள்ளே சிறுத்தாரையாக வார்க்க பரும் பொடியான துத்தம் வரும். இது கிறனுலதுத்தம் எனப்படும். துத்த குலோறிரம்[11], துத்தசல்வசு[12]செய்வதில் இது வழங்கப்படும்.

## துத்தவக்சிரம். OXIDE OF ZINC.

துத்தவக்சிரம், துஅ, என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். துத்தகாபனசிலுள்ள[13] காபனிக்கமிலம்[14] முழுவதும் பறியுந்தனையும் அதைச் சிவக்கக் காய்ச்சத் துத்தவக்சிரமாகும். லட்சணங்கள். இது சுவை மணமற்ற மெதுவான வெள்ளை மா. சுட்டால் வெண் மஞ்சள் நிறமாகும். கிருசசல்வுரிக்கமிலத்தில்[15] இதைக் கரைத்தால் அக்கரைவு ஐருசல்வுரிச்கமிலத்துக்கு அடையல் விழுத்தாமல் அமோனத சல்விரத்துக்கோ[16], வெண்ணடையலை விழுத்தும். சோதனைகள். இது கிருசநீதுரிக்கமிலத்திலே[17] நுரையாமற் கரையும். இக் கரைவு நீர் பாரிதகுலோறிரத்துக்[18]காவது வெள்ளிநீதுரசுக்காவது மாறுதலடையாமல் அமோனகாபனசுக்கு[19] வெண்ணடையலை விழுத்தும். அமோனகாபனசை இன்னும் மிஞ்சக் கூட்டவோ இவ்வடையல் நிறங்காட்டாமற் கரையும்.

---

1 Hydrosulphuric acid 2 Oxide of Bismuth. 3 Mineral. 4 Blende. 5 Sulphuret of Zinc. 6 Calamine. 7 Mendip Hills. 8 Alston Moor. 9 Belgium, 10 Silesia. 11 Chloride. 13 Sulphate. 13 Carbonate. 14 Carbonic acid. 15 Dilute sulphuric acid. 16 Sulphide of Ammonium. 17 Dilute nitric acid. 18 Choiride of Barium. 19 Carbonate of Ammonia.

Digitized By Roja Muthiah Research Library

தன்மை. இது தொணிகம்[1], செரதீவம்[2], அந்திஸ்பசி[3]. பெருந்தேயத்தில் வமனி, விரேசனி. தானிகமாயிட்டாற் றுவர்.

உபயோகம். துத்தசல்வசைப்[4] போல. வெறிப்பைத்தியத்திற் காணும் சிராகுணங்களைத்[5] தணிப்பதற்கு இது உத்தமமாம்.

தேயம். இரண்டு கிறேன் முதல் நாலு கிறேன் வரைக்கு. படிப்படியாய்க் கூட்டிப் பத்துக் கிறேன் வரைக்கும், இன்னுங் கூடவுங் கொடுக்கலாம்.

ரசிதம். துத்தவன்கேன். Ointment of zinc. கொள். துத்தவக்சிரம் மாவாக, எண்பது கிறேன்; தமியன்கென்[6], ஒரு அன்சு. தமியன்கெனை முதலே மென்சூட்டில் உருக்கி, துத்தவக்சிரத்தைப் படிப்படியாய்க் கூட்டி ஆறுந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

நாட்பட்ட சருமரோய்கள், கிடைப்புண்கள், வழுந்தல்கள், கண்ணோய், ஸ்துரூமசலதோஷம், பீனசம் முதலியவற்றுக்குப் பூச இது நல்ல மருந்து.

## துத்தகாபனசு.

## CARBONATE OF ZINC.

துத்தகாபனசு து கா அ$^3$ 2(து அ) 3ஐ$_2$ அ. என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். துத்தசல்வசு என்னும் வெண்டுத்தத்தைச் சோடகாபனசாற்[7] கூறுபடுத்தித் துத்தகாபனசு எடுக்கப்படும். லட்சணங்கள். இது வெண்மையானது; சுவை மணமற்றது; தண்ணீரிற் கரையமாட்டாது; கிருசநீதுரிக்கமிலத்தில்[8] நுரைத்துச் சேடமில்லாமற் கரையும். இக்கரைவுக்கு அமோனதசல்விரத்தைக்[9] கூட்ட வெண்ணடையல் உண்டாகும். சோதனைகள். இதைக் கிருசநீதுரிக்கமிலத்திற் கரைத்தால் அக்கரைவு பாரியகுலோறிரத்துக்[10]காவது வெள்ளிநீதுரசு[11]க்காவது அடையல் காட்டாது. அமோனகாபனசு[12]க்கோ, வெண்ணடையல் காட்டும். அந்த அமிலத்தை மிச்சமாய்க் கூட்ட அடையல் நிறமில்லாமல் முற்றாய்க் கரையும்.

தன்மை உபயோகம். துத்தவக்சிரத்தைப்போலிருக்கும். இது மாவாயேனும் அன்கெனுயேனும் வெளிமருந்தாகவே பிரதானமாய் வழங்கப்படும்.

தேயம், இரண்டு கிறேன் முதல் எட்டுக் கிறேன் வரைக்கும்.

ரசிதம். துத்தகாபனசன்கேன். Ointment of Carbonote of Zirc. கொள். துத்தகாபனசு, இரண்டுதிறும்; தமியன்கென், பத்துத்திறும். திறமாய்க் கலக்கவும்.

இது லண்டன் வாமகுபீயத்திற்[13] கலமின்சேர்வைக்குப்[14] பதிலாகச் செய்யப்பட்டது. வேக்காட்டுக் காயங்கள், அவியல்கள், வழுந்தல்கள், ஆழமற்ற புண்களுக்கு இது நல்ல அணைவு.

துத்தவக்சிரமும்[15], துத்த வசிதசுஞ்[16] செய்வதற்குத் துத்தகாபனசு வழங்கப்படும்.

---

1 Tonic. 2 Sedative. 3 Antispasmodic. 4 Sulphate of zinc. 5 Nervous Symptom. 6 Simple ointment. 7 Carbonate of soda. 8 Dilute nitric acid. 9 Sulphide of ammonium. 10 Chloride of barium. 11 Nitrate of silver. 12 Carbonate of Ammonia. 13 Pharmacopoea. 14 Calamine cerate. 15 Oxide. 16 Acetate.

Digitized By Roja Muthiah Research Library

## துத்தவசிதசு. ACETATE OF ZINC.

*துத்தவசிதசைக் குறிக்குஞ் சின்னம், து2 (கா$_2$ ஐ$_3$ அ$_2$) 2ஐ$_2$ அ. துத்தகாபனசில் அசிதிக்கமிலத்தின் செயலால் துத்தவசிதசு பிறக்கும்.* லட்சணங்கள். இது மெல்லிய, உருவொளியுள்ள, நிறமற்ற, கிரிஸ்தற் தகடுகளாய் முத்துப்போல் மினுக்கமாயிருக்கும்; *கார்ப்பான கெட்ட சுவைகொண்டது; தண்ணீரிற் கரையும்;* ஐருசல்வுரிக்கமிலவாயு[1] பட்டால், வெண்ணடையலுண்டாகும். *சல்வுரிக்கமிலத்தாற்[2]கூறுபடுத்தும்போது அசிதிக்கமிலத்தை[3]க் கக்கும்.* சோதனைகள். *இதைக் கன தண்ணீரிற் கரைத்துப் பாரியகுலோறிரமாவது[4], வெள்ளிநீதுரசாவது[5]கூட்ட யாதொரு மாறுதலுமுண்டாகாது. அதை ஐருகுலோறிக்கமில[6]த்தாற் சற்றே புளிப்பாக்கினால், ஐருசல்வுரிக்கமிலத்துக்கு அடையல் தோன்றாது. இதைச் சொற்ப நீதுரிக்கமிலத்தோடு[7]சில மினி நேரமாகக் கொதிப்பித்தால் அமோனத்தைக்[8] கூட்ட வெண்ணடையல் தோன்றும் அமோனத்தை மிஞ்சக் கூட்டினால் இவ்வடையல் நிறமில்லாமல் முற்றாய்க் கரையும்.*

தன்மை உபயோகம். *சுத்த சல்வசைப் போலவே.* விசேஷமாய் ஒரு *அன்ச தண்ணீருக்கு இரண்டு கிறேன் முதல் நாலு கிறேன் வீதமாய்க் கரைத்துக் கனூறியம்[9], கிலீற்று[10], லுகறிய[11]நோய்களுக்குப் புகட்டலாகவும்[12], எக்சிமத்துக்கும்[13] நாட்பட்ட மற்றும்சருமநோய்களுக்கும் லோஷனாகவும்[14], கண்ணோய்க்கு விசேஷமாய் குழந்தைகள் பிள்ளைகளுக்குண்டாகும் கண்ணோய்க்குக் கலூறியமாகவும்[15] வழங்கப்படும்.*

தேயம். *தொனிகம்[16], அந்திஸ்பசியாக[17] ஒருகிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்குப் படிப்படியாய்க் கூட்டிக் கொடுக்கலாம்.* வமனியாகப் *பத்துக் கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம்.*

## துத்தவலீரியனசு.
## VALERIANATE OF ZINC.

*இதற்குச் சின்னம், து 2(கா$_5$ ஐ$_9$ அ$_2$). துத்தசல்வசைச்[18] சோடவலீரியனசாற்[19]கூறுபடுத்தத் துத்தவலீரியனசு பிறக்கும்.* லட்சணங்கள். இது *பளபளப்பான முத்துப்போன்ற வெண் தகட்டுக் கிரிஸ்தல்களாக இருக்கும். சொற்ப வலீரியனிக்கமில[20]மணமும், லோகச்சுவையுங்கொண்டது. தண்ணீரிலாவது ஈதரிலாவது[21]கரைவதரிது. வெந்நீரிலும் அலக்காலிலும்[22] கரையும். திறந்த குகையிலே சிவக்கக் காய்ச்சினால் சேஷமிருக்கும். அச்சேஷத்தைக் கிருச[23]சல்வுரிக்கமிலத்திற் கரைத்து, அமோனத்தைக் கூட்டினால் ஓர் அடையல் காணும். அந்த அமிலத்தை மிச்சமாய்க் கூட்ட அடையல் முழுதுங் கரையும். இக்கரைவுக்கு அமோனதசல்விரத்தைக்[24]கூட்ட ஓர் வெண்ணடையல் உண்டாகும்.* சோதனைகள். *இதின் வெந்நீர்க்கரைவு பாரியகுலோறிரத்துக்கு அடையாது. இதைக் கிருசசல்வுரிக்கமிலத்தோடு காய்ச்சி ஆவியாக்கி அடர்த்தியெடுக்கும் நீரைச் செம்பசிதசு[25] நீரோடு*

---

1 Hydrosulphuric acid. 2 Sulphuric acid. 3 Acetic acid. 4 Chloride of barium. 5 Nitrate of silver. 6 Hydrochloric acid. 7 Nitric acid. 8 Ammonia. 9 Gonorrhoea. 10 Gleet. 11 Leucorrhoea. 12 Injection. 13 Eczema. 14 Lotion. 15 Collyrium. 16 Tonic. 17 Antispasmodic. 18 Sulphate of zinc. 19 Valerianate of soda. 20 Valerianic acid. 21 Ether. 22 Alcohol. 23 Dilute. 24 Sulphide of ammonium. 25 Acetate of copper.

Digitized By Roja Muthiah Research Library

கலந்தால் அந்நீரின் உருவொளித்தன்மை உடனே கெடாமலிருக்கச் சற்று வேளையால் நெய்த்துளிகளுண்டாகிப் படிப்படியாய் நீல வெண்மையான திரிஸ்தலடையலாகும்.

தன்மை. இது சிராதொணிகம்[1]. அந்திஸ்பசி[2].

உபயோகம். எபிலெப்சி[3], கொரீயம்[4], இஸ்தேரி[5], நறல்சி[6]யென்ற நோய்களுக்கு இது பிரதானமாய்க் கொடுக்கப்படும்.

தேயம். அரைக் கிறேன் தொடங்கி ஒரு கிறேன் வரைக்கும்; படிப்படியாய்க் கூட்டி மூன்று கிறேன் வரைக்கும், நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

## துத்த குலோறிரம்.
## CHLORIDE OF ZINC.

இதற்குச் சின்னம் துகு₂. கிறனுல[7]துத்தத்தில் ஐருகுலோறிக்கமிலத்தை[8] விட்டு குலோறின்[9] கரைத்த நீரையும் துத்தகாபனசு[10] கரைத்த நீரையுஞ் சேர்த்து அக்கரைவைச் சுத்தமாக்கி வறட்ட துத்தகுலோறிரம் உரப்பொருளாக வரும். லட்சணங்கள். இது நிறமற்ற மங்கற் தோல்களாயாவது தகடுகளாயாவது இருக்கும். சுறுக்காய் நீரை உறிஞ்சி உருகக்கூடியது, காரமானது; தண்ணீரிலும் அலக்காலிலும்[11] ஈதரிலும்[12] ஏறக்குறைய முற்றுய்க் கரையும்; இதின் தண்ணீர்க் கரைவுக்கு அமோனதசல்விரம்[13] அல்லது வெள்ளிநீதிரசைக்[14] கூட்ட வெண்ணடையலுண்டாகும். ஆயினும் முதலே ஐருகுலோறிக்கமிலத்தாற் புளிப்பாக்கினுல் ஐருசல்வுரிக்கமிலத்துக்கு[15] மாறுதலடையாது. சோதனைகள். இதின் தண்ணீர்க்கரைவு பாரியகுலோறிரத்துக்காவது[16], அமோனவக்சலசுக்காவது[17] மாறுதலடையாது. பதாசிபீதபுரூயசுக்காவது[18], பதாசிசெம்புரூசியசுக்காவது[19] நீலமாகாது. அமோனம் இதிலொரு வெண்ணடையலை விழுத்தும். அமோனத்தை மிஞ்சக் கூட்ட முற்றுய்க் கரையும்.

தன்மை. இது வீறுன தகனி. சிறு தேயமாய்க் கன தண்ணீரிற் கரைத்து உள்ளே கொடுத்தால் நரம்புத்தொணிகமாகுமென்று எண்ணப்பட்டாலும் கொடுப்பதரிது. சுத்தமான துத்தகுலோறிரம் அரிநஞ்சு[20]. கந்தக்கினி[21]யாக இதின் தன்மை மெத்த.

உபயோகம். கன்சர்[22]முதலிய உக்கிரப்[23]புண்களுக்கு இது காரமாயிடப்படும். ஆயினும் இவ் வகுப்பைச் சேர்ந்த மற்றுங் காரங்களிடுவதாலுண்டாகும் நயத்தைப் பார்க்க இதை இடுவதால் விசேஷமில்லை. கனுறீயத்துக்கும்[24] கனுறீயக் கண்ணோய்க்கும்[25]இது காரமில்லாமல் ஒரு அன்சு தண்ணீருக்கு ஒரு கிறேன் வீதமாய்க் கரைத்துத் தாணிகமாயிடப்படும்,

தேயம். அரைக் கிறேன்முதல் ஒருகிறேன் வரைக்கும் இன்னுங் கூடவுங் கன தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும்.

ரசிதம். துத்தகுலோறிர நீர். Solution of Chloride of Zinc கொள் கிறனுலதுத்தம், ஒருஇறுத்தல்; ஐருகுலோறிக்கமிலம் நாற்பத்துநாலு அன்சு;

---

1 Nervine tonic. 2 Antipasmodic. 3 Epilepsy. 4 Chorea. 5 Hysteria. 6 Neuralgia. 7 Granulated. 8 Hydrochloric acid. 9 Chlorine. 10 Carbonate of zinc. 11 Alcohol. 12 Ether. 13 Sulphide of ammonium. 14 Nitrate of silver. 15 Hydrosulphuric acid. 16 Chloride of barium. 17 Oxalate of ammonia. 18 Yellow prussitate of potash. 19 Red prussiate of potash. 20 Deodorizer. 21 Corrosive. 22 Cancer. 23 Malignant. 24 Gonorrhoea. 25 Opthalamia.

Digitized By Roja Muthiah Research Library

குலோறநீர்[1] போதியது; துத்தகாபனசு[2] அரைஅன்சு, அல்லது போதியது; டிஸ்திலித்த தண்ணீர்[3] அரைநாழி. ஐருகுலோறிக்கமிலத்தையும் தண்ணீரையும் பீங்கான் பாத்திரத்திற் கலந்து, துத்தத்தைக் கூட்டி வாயு கக்குதலொழியுந்தனையும் செயல் அதிகரிப்பதற்கு மென்சூடேற்றவும். ஆவியாய்ப் பறிந்த தண்ணீருக்குப் போதிய தண்ணீர் சேர்த்து அரைமணி நேரமாகக் கொதிப்பித்து ஆறவிடவும். அப்பாற் சீசாவுக்குள்ளே வடித்துவிட்டு அது குலோறின்[4] மணத்தை நிலைபரமாய் அடையுந்தனையும் குலோறநீரைப் படிப்படியாய்க் குலுக்கிக் குலுக்கிக் கூட்டவும். நீரை ஓர் பீங்கான் பாத்திரத்தில் வடித்து அது ஒரு நாழியளவாகுந்தனையும் வறட்டவும்.

பேணற்றின்வெக்து நீர்[5] என்று வாடிக்கையாய்ச்சொலலப்படுகிற இந்த நீர் நல்ல கந்தக்கினி[6] தண்ணீர் கலவாமற் குடித்தால் வீறுன அரி[7] நஞ்சு அழற்று நஞ்சாய் முடியும்.

## துத்தசல்வசு. வெண்டுத்தம்.
## SULPHATE OF ZINC.

வெண்டுத்தமாகிய துத்தசல்வசு துகேஅ$_4$ 7ஐ$_2$அ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். **லட்சணங்கள்.** இது நிறமற்ற உருவொளியான பிரிசக்[8] கிரிஸ்தல்களாக[9] இருக்கும். வீறுன லோகத்துவர்ச் சுவை கொண்டது. இதைத் தண்ணீரிற் கரைத்துப் பாரியகுலோறிரமாவது[10] அமோனதசல்விரமாவது[11] சேர்க்க, வெண்ணடையலுண்டாகும். **சோதனைகள்.** இதின் நீர்க்கரைவு மாசக்காயிரஞ்சத்தால்[12] தாமிர[13]நிறமடையாது. சல்வுரிக்கமிலத்தா[14]லாவது ஐருகுலோறிக்கமிலத்தாலாவது[15] புளிப்பாக்கினால் அது ஐருசல்வுரிக்கமிலத்துக்கு[16] அடையலைக்காட்டாது. அமோனம்[17] அமோனகாபனசு[18]களுக்கு ஓர் வெண்ணடையலைக் காட்டும். அமோனத்தையாவது அமோனகாபனசையாவது மிச்சமாய்க் கூட்ட அந்த அடையல் நிறமில்லாமல் முற்றாய்க் கரையும்.

**தன்மை.** தொணிகம்[19], துவர், அந்திஸ்பசி[20], நயர்தவமனி; பெருந்தேயதில் நஞ்சு. தானிகமாயிட்டால், துவரும், ஸ்திமுலமும்[21]; காய்வான அவைரு[22] நிலைமையிற் காரமாகும்,

**உபயோகம்.** கொரீயம்[23], எபிலெப்சி[24], ஸ்பசமீளைகளுக்கும்[25], குக்கலின் பிற்பாதம், அஞ்சினபெக்துசு[26], முறைச்சுரம், பெலவீனத்தோடுகூடிய இஸ்தேரி[27], காலிகதிசந்தெரி[28], தியறீயம்[29], அசத்துவமெனுறீயங்களுக்கும்[30], இது கொடுத்துநயந்தது. வெளிமருந்தாக இதைத் தண்ணீரிற்கரைத்துக் கனுறீயம்[31] லுகறீயங்க[32]ளுக்குப் புகட்டலாம். பலவகையான கண்ணோய்க்குச் சலூறியமாகவும்[33], புண்களுக்கும் காலிக சருமநோய்கள்சிலவற்றுக்கும் லோஷ[34]னாகவும் இடலாம். மேலும் அக்கரத்துக்கும் வாய் தொண்டைகளிலுண்டாகும் மற்றும் புண்களுக்கும் லேகியமாய் வழங்கப்படும்.

---

1 Solution of chlorine. 2 Carbonate of zinc, 3 Distilled water. 4 Chlorine. 5 Burnet disinfectant fluid. 6 Deodorizer. 7 Corrosive. 8 Prism. 9 Crystal. 10 Chloride of barium. 11 Sulphide of Ammonium. 12 Tincture of galls. 13 Purple. 14 Sulphuric acid. 15 Hydrochloric acid. 16 Hydrosulphuric acid. 17 Ammonium. 18 Carbonate. 19 Tonic. 20 Antispasmodic. 21 Stimulant, 22 Anhydrous, 23 Chorea. 24 Epilepsy. 25 Spasmodic asthma. 26 Angina pectoris. 27 Hysteria. 28 Chronic dysentery. 29 Diarrhoea. 30 Menorrhoea. 31 Gonorrhoea. 32 Leucorrhoea. 33 Collyrium. 34 Lotion.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஒருகிறேன் இரண்டு கிறேனிற் துவங்கிப் படிப்படியாய் ஐந்து கிறேன் வரைக்குங் கூட்டித் தொணிகம், அந்திஸ்பசியாய்க் கொடுக்கலாம். வமனியாகப் பத்துக் கிறேன் முதல் முப்பது கிறேன் வரைக்குக் கொடுக்கலாம். இது ஆளைப் பெலவீனப்படுத்தாமற் சுறுக்கிற் சேஷ்டிக்குமாகையால் நஞ்சுண்டார்க்கு உவந்த வமனியாகும்.

[துத்தமும் அதின் சிலஉப்புகளும் ஆசியத்தின் உஷ்டணபகுதியாருக்குள் அறியப்பட்டிருந்ததாயினும் மருந்தாய் மெத்த வழங்கப்படவில்லை. வியாபாரத்தில் வழங்கும் சீனத் துத்தத்துக்குத் துத்தநாகமென்று சொல்வார்கள். அச் சொல் தமிழிலும் சீனத்திலும வழங்கும். துத்தமென்ற சொல் இந்துவிலும் பார்சியத்திலும் வழங்கும். இது பார்சியத்திலிருந்து வரும் துத்தவாகரிக்குப் பெயர். துத்தத்திலிருந்து துத்தநாகபஸ்மம் என்ற ஓர் உப்பைச் சுதேசிகள் செய்வார்கள். செய்யும் முறையைப்பற்றி ஜனர் என்பவர் கூறுகிறார். அந்தப் பஸ்மத்தைக் கனுறீயம், ஸ்பமதறீயம்[1], லுசறீயம், அரிசம்[2], என்ற நோய்களுக்கு மெத்த நம்பிக்கையோடு கொடுப்பார்கள். அதின்தேயம் ஒரு கிறேன் முதல் நாலு கிறேன் வரைக்குப் போலும். இதை வலீரியம்[3]னோடு கலந்து கடுமையான எபிலெப்சிக்குத்[4] தாம்கொடுத்து மெத்த நயங்கண்டதென்று ஜனர் என்பவர் சொல்லியிருக்கிறார். அது அசுத்த துத்தவக்சிரம்[5]மாயிருக்கவேண்டும்.

## கட்மியம். CADMIUM.

சின்னம், கட்; அணுப்பாரம் 112.

இது இயற்கையிற் கட்மிய சல்விரமாகத்[6] துத்தவாகரிகள்மிகுதியானவைகளில் இருக்கும். துத்தத்தை நீக்கியெடுத்தால் இது வெள்ளைலோகம். தகடாய் அடிக்கவும் கம்பியாய் நீட்டவுங் கூடியது. 442 பாகையில் உருகும். 8.7 என்ற விசேஷ கிருவிதத்தை உடையது.

## கட்மியவியோதிரம்.
## IODIDE OF CADMIUM.

இது கட் இ$_2$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இயோதத்தையும்[7] கட்மியத்தையும் தண்ணீர் விட்டுக் கலக்க இக் கலவை உண்டாகும். லட்சணங்கள். இது தட்டையான அப்பிரகம்[8] போன்ற கிரிஸ்தல்களாக[9] இருக்கும். வெள்ளையும் முத்துப்போல் மினுக்கமுமானது. 600 பாகை சூடுவரைக்கு ஏற்ற, உருகி அம்பர்[10]நிறமான நீராகும். மங்கற் சிவப்பான சூட்டுக்கு வரச் செந்நீலநிறமான ஆவியைக் கக்கும். இது அவைருவானது. பரயாணுவில் நீரை உறிஞ்சிக் கரையாது. தண்ணீரிலுந் திட்டசீதிலும்[11] தாராளமாய்க் கரையும். இக் கரைவுநீர் லிற்மஸ்தாளைச்[12] சிவப்பாக்கும். சோதனைகள். இதின் தண்ணீர்க் கரைவிலே ஐருசல்வுரிக்கமிலமாவது[13] அமோனதசல்விரமாவது[14] பட ஓர் மஞ்சளடையலுண்டாகும். அவ்வடையல் அமோனதசல்விரத்தை அதிகஞ் சேர்த்தாலும் கரையாது. மேலும் இதின் தண்ணீர்க்கரைவுக்குப் பதாசிநீரை[15]மிச்சமாய்க் கூட்ட வெண்மையான செலதின்[16] போன்ற அடையலுண்டாகும். அந்த அடையலை வடித்துப் பிரித்து

1 Spermatorrhoea 2 Piles. 3 Valerian, 4 Epilepsy. 5 Oxide. 6 Sulphide. 7 Iodine or Iodum. 8 Mica, 9 Crystal. 10 Amber. 11 Rectified spirit. 12 Litmus paper. 13 Hydrosulphuric acid. 14 Sulphide of ammonium, 15 Solution of potash, 16 Gelatine.

Digitized By Roja Muthiah Research Library

வடிநீருக்கு அமோனதசல்விரஞ் சேர்த்தால் அது யாதொரு மாறுதலுமடையாது. பத்துக் கிறேனைத் தண்ணீரிற் கரைத்து அதற்கு வெள்ளிநீதரசை[1]யிஞ்சக் கூட்டும்போதுண்டாகும் அடையலைத் தண்ணீரிற் கழுவிப் பிறகு அரைஅவுசு அமோனநீரிற் கழுவி உலர்த்தினால் அது 12.5 கிறேன் கிறக்கும்.

**தன்மை உபயோகம்.** இது உள்ளே கொடுக்கப்படுவதில்லை. வெளியிலிட்டால் ஸ்திமூலமாய்ச் சேஷ்டிக்கும். வங்கவியோதிரம்[2] வழங்குநோய்களுக்கு இதை வழங்கலாம். அதைப்போல் இது தோலை மஞ்சணிக்கப் பண்ணமாட்டாது.

**ரசிதம். கட்மியவியோதிரவன்கேன்.** Ointment of Iodide of Cadmium. கொள். கட்மியவியோதிரம் மாவாக, அறுபத்திரண்டு கிறேன்; தமியன்கென்[3]. ஒரு அவுசு. திறமாய்க் கலக்கவும்.

ஸ்துருமம்[4] கோளவீக்கங்களுக்கும் தொல்லையான சருமநோய்கள் சிலவற்றிற்கும் இது சயந்த பூச்சு மருந்து.

## ஈயம். LEAD.

சின்னம், ஈ; அணுப்பாரம் 207.

ஈயம் பலவகையாய் ஆகரிகளிற் கலந்திருக்கும். பிரதானமாய் ஈயச்சல்விரமாகக் கெந்தகத்தோடு கலந்து கலீனம்[5] என்ற கல்லாயிருக்கும். ஈயம் நீல வெண்மையான லோகம்; மெதுவானது; தகடாய் அடிபடக் கூடியது. 617 பாகை சூட்டில் உருகும். இதின் விசேஷகுருவிதம் 11.36. நீதரிக்கமிலமே இதைக் கரைப்பனவைகளுள் விசேஷம்.

## ஈயவக்சிரம். OXIDE OF LEAD.

ஈயவக்சிரத்துக்குச் சின்னம் ஈஅ. உருக்கிய ஈயத்திலே சூடாக்கிய பரமாணு நெடுகப்பட்டு வீசவிடுவதால் ஈயவக்சிரம் உண்டாகும். லட்சணங்கள். இது வெளிறின செங்கல்நிறமான கனத்த செதில்களாக இருக்கும். கிருசநீதரிக்கமிலம்[6] அசிதிக்கமிலங்களிற்[7] கரையும். இக்கரைவிலேதென்றாலும் தடஸ்த[8]மாயிருக்கையிற் பதாசியவியோதிரத்தைக்[9] கூட்டினால் மஞ்சள்நிற அடையல் கனமாயுண்டாகும். சோதனைகள். இது கிருசநீதரிக்கமிலத்தில் நுரையாமற் கரையும். அக் கரைவை அமோனத்தால்[10] அதி பூர்த்தித்து, வடித்துத் தெளிவாயெடுத்தால் நீல நிறங் காட்டாது.

**தன்மை.** இதின் தன்மை திறமாயறியப்படவில்லை. அழற்றியானதென்பதே எண்ணம். இதின் ஆவியை ஓயாமற் சுவாசித்தால் நஞ்சாய் முடியும். இது ஈயப்பற்றாக வெளிமருந்தாக மாத்திரம் வழங்கப்படும்.

**ரசிதம். ஈயப்பற்று.** Lead Plaster. கொள். ஈயவக்சிரம், மாவாக நாலு இறுத்தல்; ஒலீவுதேல்[11] நாலுநாழி; தண்ணீர் ஒன்றேமுக்கால்நாழி. எல்லாவற்றையும் ஸதீம்மத்திகத்தின்[12] சூட்டில் மெதுவாய்க் கொதிப்பித்து, பற்றுக்குத் தகுந்த பதமாய் வருந்தனையும் நெடுகக் கலக்கிக் கலக்கி மென்சூடேற்றவும். கொதிப்பிக்கும்போது தண்ணீர் தேவையானாற் கூட்டிக் கொள்ளலாம்.

---

1 Nitrate of silver. 2 Iodide of Lead. 3 Simple ointment. 4 Struma. 5 Galena. 6 Dilute nitric acid. 7 Acetic acid. 8 Neutral 9 Iodide of Potassium. 10 Ammonia. 11 Olive oil. 12 Steam bath.

Digitized By Roja Muthiah Research Library

காயங்களின் ஓரங்களைச் சந்துசெய்வதற்காகவும் வேறு நோக்கங்களுக்காகவும் இப்பற்று இரணவைத்தியத்தில் வாடிக்கையாய் வழங்கப்படும்.

இது இராளப்பிலாஸ்தர்[1], சபுபிலாஸ்தர்[2], அயபிலாஸ்தர், கல்பனப்[3]பிலாஸ்தர், இரசபிலாஸ்தர் என்னும் பற்றுக்களில் ஓர் கூறாகச் சேருகின்றது.

## ஈயகாபனசு. CARBONATE OF LEAD.

இது மெதுவான கனத்த வெள்ளை மா; ஐருசல்வுரிக்கமிலப்[4] பட்டால் கறுக்கும், தண்ணீரிற் கரையாது, கிருச அசிதிக்கமிலத்தில்[5] நுரைத்துக் கரையும், அக் கரைவுக்குப் பதாசியவியோதிரம்[6] கூட்ட மஞ்சளடையல் உண்டாகும், சல்வுரிக்கமிலம்[7] கூட்ட வெண்ணடையலுண்டாகும். சோதனைகள். இது சேஷமில்லாமல் அசிதிக்கமிலத்திற் கரையும்; அக்கரைவுக்கு ஐருசல்வுரிக்கமிலத்தை மிச்சமாய்க் கூட்டிக் கொதிப்பித்து வடித்தால் அமோனவக்சலசு[8] கூட்ட அடையல் தோன்றாது.

தன்மை, உபயோகம். வழுந்தல்கள், ஆழமற்ற புண்கள், மற்றுஞ் சருமரோகங்களுக்கு மாவாயென்கிலும் அன்கெனுயென்கிலும் தானிகயாயிட்டால் இது துவராகும். உள்ளே கொடுப்பதில்லை.

ரசிதம். ஈயகாபனசன்கென். Ointment of Carbonate of Lead. கொள். ஈயகாபனசு, மாவாக அறுபத்திரண்டு கிறேன்; தமியன்கென்9 ஒரு அன்சு. திறமாய்க் கலக்கவும்.

## ஈயவசிதசு. ACETATE OF LEAD.

ஈயவசிதசு ஈ 2 (கா$_2$ ஐ$_3$ அ$_2$) 3ஐ$^2$அ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். ஈயவக்சிரத்தை[10] அசிதிக்கமிலத்தில்[11] கரைத்து வறட்ட, ஈயவசிதசு கிரிஸ்தற் கட்டிகளாக விளையும். லட்சணங்கள். இது வெள்ளையான கிரிஸ்தற் கட்டிகளாக இருக்கும். பரமாணுவில் வைக்கச் சற்றே பூக்கும். காடி மணமும் இனிப்பான துவர்ச்சுவையுங் கொண்டது. இதின் தண்ணீர்க்கரைவு லிற்மஸ்தாளைச்[12] சற்றே சிவப்பாக்கும். அதற்குப் பதாசியவியோதிரத்தைக் கூட்ட மஞ்சள்நிற அடையலுண்டாகும். சல்வுரிக்கமிலத்துக்கு வெண்ணடையலுண்டாக அசிதிக்கமிலம் விடப்படும். சோதனைகள். இதைத் திஸ்திலித்த நீரிற் கரைத்தால் அக் கரைவு தெளிந்ததாயிருக்கும் அல்லது சற்றே பால்போல் மங்கலாகும், அசிதிக்கமிலத்தைக் கூட்ட மங்கல் மாறும். முப்பத்தெட்டுக் கிறேனைத் தண்ணீரிற் கரைத்தால் அதைப் பூரணமாய் அடையப்பண்ணுவதற்கு அக்சலிக்கமில[13]பருமவிலயனத்தில்[14] 200 கிறேனளவு வேண்டும்.

தன்மை. துவர், செரதீவம்[15]. பெருந்தேயத்தில் நஞ்சாகும்.

உபயோகம். இரத்தஇருமல்[16], இரத்தவாந்தி[17], இரத்தமூரி[18], மெனுறீயங்களுக்கும்[19] மற்றும் உள்ளிரத்தப் பெருக்குக்கும் இது மெத்தச் சத்துள்ள மருந்து. மேலும் பலவகையான தியறீயம்[20], விசேஷமாய் வாந்திபேதி போன்

---

1 Resin Plaster. 2 Soap plaster. 3 Galbanum. 4 Hydrosulphuric acid. 5 Dilute acetic acid. 6 Iodide of potassium. 7 Sulphuric acid. 8 Oxalate of Ammonia. 9 Simple ointment. 10 Oxide of lead. 11 Acetic acid. 12 Litmus paper. 13 Oxalic acid. 14 Volumetric solution. 15 Sedative. 16 Haemoptysis, ஸம்துசி. 17 Haematemesis. 18 Haematuria. 19 Menorrhoea. 20 Diarrhoea.



Digitized By Roja Muthiah Research Library

றவை, திசந்தெரி[1]யின் பிற்காலங்கள், இரைப்பைப் புண், புறங்குறீயம்[2] என்ற நோய்களுக்கும் உகந்தது. மேலும் கண்டரைஅனுரிசம்[3], இதயகிபோஷம்[4], எபிலெப்சி[5], இறுகியவளி[6] நோய்களுக்கும் இது வழங்கப்படும். வெளிமருந்தாகத் தண்ணீரிற் கரைத்திட்டால் தாபிதங்கொண்ட அல்லது வழுந்தின இடங்களுக்கும், சருமநோய்களுக்கும் சிலவகையான கண்ணோவுக்கும் சாந்தன துவராகும். கனுறீயம்[7], கிலீற்று[8], லுகறீயங்களுக்கு[9] இது அந்த நோக்கமாய்ப் புகட்டப்படும்.

**தேயம்.** ஒரு கிறேன் முதல் ஐந்து கிறேன் வரைக்கும், இன்னுங் கூடவுங் குளிகையாக்கிக் கொடுக்கலாம்.

**ரசிதம். ஈயவவின் குளிகை.** Pill of Lead and Opium. கொள். ஈயவசிதசு, மாவாக, முப்பத்தாறு கிறேன்; அவின் மாவாக, ஆறு கிறேன்; ரோசை லேகியம்[10] ஆறு கிறேன். திறமாய் அரைத்துச் சேர்க்கவும்.

**தேயம்.** நாலு கிறேன் முதல் எட்டுக் கிறேன வரைக்கு. இதில் எட்டுக் கிறேனில் ஒரு கிறேன் அவின் இருக்கும்.

**ஈயக்கூட்டுச்சப்பாசிதுறி.** Compound Lead Suppositories. கொள். ஈயவசிதசு, முப்பத்தாறு கிறேன்; அவின் மா, பன்னிரண்டு கிறேன்; பெஞ்சோயஸ்லாடு[11] நாற்பத்திரண்டு கிறேன்; வெண்மெழுகு, பத்துக் கிறேன்; தியுபுறோமதேல்[12], எண்பது கிறேன். மெழுகையும் தியுபுறோம தேலையும் மென் சூட்டில் உருக்கி, மற்றுஞ் சரக்குகளை முன்னமே குழியம்மியிலிட்டு அரைத்து இவற்றோடு கூட்டித் திறமாய்க் கலந்து அக்கலவை நீராயிருக்கையில், பதினைந்து கிறேன் கொள்ளத்தக்க தகுந்த குகைகளில் வார்க்கவும்; அல்லது அக்கலவையை ஆறவிட்டுப் பன்னிரண்டு சமபங்குகளாகப் பிரித்து, ஒவ்வொருபங்கையும் சப்பாசிதுறிக்கு வசதியானசாங்கமாக்கிக்கொள்ளவும். ஒவ்வொரு சப்பாசிதுறியில் ஒரு கிறேன் அவின் இருக்கும். திசந்தெரிக்கும் துவர்களும் அவினும் வேண்டிய மற்றும் அடி வயிற்று நோய்களுக்கு இது நல்ல மருந்து.

**ஈயவசிதசன்கேன்.** Ointment of Acetate of Lead. கொள். ஈயவசிதசு, மாவாக, பன்னிரண்டு கிறேன்; பெஞ்சோயஸ் லாடு அல்லது தமியன்கென்[13], ஒரு அன்சு. திறமாய்ச் சேர்க்கவும்.

அழற்சிகொண்ட சருமநோய்களுக்கு இது நல்ல பூச்சு மருந்து.

## ஈயவதவசிதசு நீர்.

## SOLUTION OF SUBACETATE OF LEAD.

இது ஈயவதவசிதசைத் தண்ணீரிற்கரைத்த நீர். ஈயவதவசிதசுக்குச் சின்னம் ஈ கா$_2$ ஐ$_3$ அ$_2$. லட்சணங்கள். இது தடித்த தெளிந்த நிறமற்ற நீர், அல்கலேத்[14] தன்மையும் இனிய துவர்ச் சுவையுங்கொண்டது, பரமாணு பட்டாற் கலங்கலாகும், அகசி முசிலாகு[15] கூட்ட மங்கலான வெள்ளைநிறக் களி[16]யாகும், சல்வுரிக்கமிலத்தை[17] மிச்சமாய்க் கூட்டினால், அசிதிக்கமிலம்[18] விடுதலையாக ஓர் வெண்ணடையலுண்டாகும். சோதனைகள்.

1 Dysentery. 2 Bronchorroea. 3 Aneurism of Aorta. 4 Hypertrophy of heart. 5 Epilepsy. 6 Strangulated Hernia. 7 Gonorrhoea 8 Gleet. 9 Leucorrohea. 10 Confection of rose. 11 Benzoated Lard. 12 Oil of theobroma. 13 Simple ointment. 14 Alkali. 15 Mucilage of Acacia. 16 Jelly. 17 Sulphuric acid, 18 Acetic acid

Digitized By Roja Muthiah Research Library

இதின் விசேஷகிருவிதம் 1.26. இதில் நிறைப்படி 413.3 கிறேனை அதாவது அளவின்படி ஆறுதிருமைப் பூரணமாய் அடையப்பண்ணுவதற்கு அக்சலிக்கமில[1] பருமவிலயனத்தில்[2] 813 கிறேனளவு வேண்டும்.

தன்மை. இது செரதீவம்[3], துவர். உள்ளே கொடுக்கப்படுவதில்லை.

உபயோகம். பின்னே வரும் கிருச ஈயவதவசிதசு நீர், தாபிதம்[4] உதர்த்தங்[5]கொண்ட தோற்பகுதிகளுக்கும் தாபித்த கோளங்கள், நோக்கொண்ட நசிவுகள் சுளுக்குகளுக்கும் தாபிதங்கொண்ட அரிசமுளைகள்[6] அல்குற்றினவுகளுக்கும் தசிரக் கிளர்ச்சியோடு கூடிய மற்றும் வெளிநோய்களுக்கும் நல்ல இடுமருந்தாகும்.

ரசிதங்கள். கிருச ஈயவதவசிதசு நீர். Dilute solution of subacetate of Lead. கொள். ஈயவதவசிதசு நீர், இரண்டு திரும்; திட்டசீது[7] இரண்டு திரும்; திஸ்திலித்த[8]தண்ணீர் பத்தொன்பதரை அன்சு. இவைகளைக் கலந்து கடுதாசியில் வடிக்கவும். வடித்த தெளிவான நீரைச் சீசாவில் அடைத்துவைக்கவும்.

ஈயவதவசிதசன்சேன். Ointment of subacetate of Lead. கொள். ஈயவதவசிதசு நீர், ஆறு அன்சு; பூரம் அறுபது கிறேன்; வெண்மெழுகு எட்டு அன்சு; ஒலீவுதேல்[9] அரைநாழி. மெழுகைப் பதினாறு அன்சு எண்ணெயோடு நீர்மத்திகச்[10]சூட்டிலுருக்கிப் பாத்திரத்தைச் சூட்டைவிட்டெடுத்து அக்கலவை தடிக்கத் தொடங்கினவுடன் ஈயவத வசிதசு நீரைப் படிப்படியாய்க் கூட்டி அக்கலவை ஆறுந்தனையும் ஓயாமற் கலக்கி பூரத்தைச் சேஷமான எண்ணெயிற் கரைத்துக் கூட்டித் திறமாய்க் கலக்கவும்.

மேலே சொன்ன நோய்களுக்குப்பூச இது நல்ல குளிர்ச்சியான அணைவு.

## ஈயநீதுரசு.

## NITRATE OF LEAD.

இது ஈ2 (நீ அ$_{3}$) என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். ஈயவக்சிரத்தின்[11] மேல் நீதுரிக்கமிலத்தை[12] வார்க்க ஈயநீதுரசு உண்டாகும். இது நிறமற்ற ஏறக்குறைய மங்கலான எண்புசச் கிறிஸ்தல்களாக[13] இருக்கும். பரமாணுவில் மாறாமல் நிலையாயிருக்கும். இனிப்பான துவர்ச்சுவை கொண்டது. தண்ணீரிலும் அலக்காலிலும்[14] கரையும். சோதனை. இதின் தண்ணீர்க்கரைவுக்கு ஐருசல்வுரிக்கமிலஞ்[15] சேர்க்க கருமடையலுண்டாகும், கிருச சல்வுரிககமிலஞ்[16] சேர்க்க வெண்ணடையலுண்டாகும், பதாசியவியோதிரஞ்[17] சேர்க்க மஞ்சள்நிற அடையலுண்டாகும். இந்திகு சல்வசில்[18]விட அதின் நிறத்தைப் போக்கும்.

தன்மை, உபயோகம். இது உள்ளே கொடுக்கப்படுவதில்லை. இதை ஒரு அன்சு தண்ணீருக்குப் பத்துக்கிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கும் வீதமாகக் கரைத்தால் முலைக்காம்புப் புண்கள் வெடிப்புகள் வழுந்தல்களுக்கும் மற்றுஞ்சருமநோய்களுக்கும் உவந்த துவர் லோஷ[19]னாகும். இதை ஒரு

---

1 Oxalic acid. 2 Volumetric solution. 3 Sedative, சாந்தனி. 4 Inflammation. 5 Erysipelas. 6 Piles. 7 Rectified spirit. 8 Distilled water. 9 Olive oil 10 Water-bath. 11 Oxide of lead. 12 Nitric acid. 13 Crystal. 14 Alcohol. 15 Hydrosulphuric acid. 16 Dilute sulphuric acid. 17 Iodide of potassium. 18 Sulphate of Indigo. 19 Lotion.

Digitized By Roja Muthiah Research Library

அஞ்சு தண்ணீருக்கு ஒருதிரும் வீதமாகக் கரைத்தால் லீடோயர் திரின் வெத்து நீராகும்[1]. அது கந்தக்கினி[2]யாகச் சற்று வீறுள்ளது. ஈயவியோ திரஞ் செய்வதற்கு ஈய நீதுரசு வழங்கப்படும்.

## ஈயவியோதிரம்.

## IODIDE OF LEAD.

இது ஈ இ[2] என்ற சின்னத்தாற் குறிக்கப்படும்.

ஈய நீதுரசைப்[3] பதாசிய வியோதிரத்தாற்[4] கூறுபடுத்த ஈயவியோதிரம் எடுக்கப்படும். இது செம்பொன்னிறத் தூளாகவாவது பளபளப்பான மஞ்சள் நிறச் செதில்களாயாவது இருக்கும், மணஞ்சுவையற்றது; தண்ணீரில் மெத்தச்சொற்பமாய்க் கரையும், வென்னீரிற் சுறுக்குக்கரையும், அசிதிக்கமிலத்திலும்[5] அலக்காலிலுங்[6] கரையும். சோதனை. சூடேற்றினால் இது முதல் மஞ்சள் நிற ஆவியையும் பிறகு செங்கீல ஆவியையுங் கக்கி ஓர் சேஷத்தை விடும். அச் சேஷத்தை நீதுரிக்கமிலத்திற் கரைத்த நீர், ஈய நீரின் லட்சணங்கள் எல்லாவற்றையும் உடையதாகும்.

தன்மை. இது அல்திறவம்[7]; வெளியிட்டால் ஸ்திமுலம்[8].

உபயோகம். ஸ்துருமா[9] நோய்கள், பிளிகை[10] வீக்கம், மற்றும் பிளிகை நோய்களுக்கும் இது கொடுத்து நயந்தது; ஆயினும் இது உள்ளே கொடுக்கப்படுவதரிது. கோளக்கழலைகள், சருமநோய்களுக்கு இடுவதே இதின் பிரதான உபயோகம். இது வெளித்தோலை மஞ்சள் நிறமாக்கும்.

ரசிதங்கள். ஈயவியோதிரப் பிலாஸ்தர். Iodide of Lead Plaster. கொள். ஈய வியோதிரம், ஒரு அஞ்சு; சபுபிலாஸ்தர்[11], ராளப்பிலாஸ்தர்[12], வகைக்கு நாலு அஞ்சு. பிலாஸ்தர்களை முன்னமே உருக்கிக்கொண்டு, ஈயவியோதிரத்தை மாவாக்கிக் கூட்டித் திறமாய்க் கலக்கவும்.

ஈயவியோதிரவன்கேன். Ointment of Iodide of Lead. கொள். ஈய வியோதிரம், மாவாக, அறுபத்திரண்டு கிறேன்; தமியன்கென், ஒரு அஞ்சு. திறமாய்க் கலக்கவும்.

## இரும்பு. அயம். IRON.

சின்னம் இரு அணுப்பாரம், 56. இரும்பு இந்திர அதிந்திர பதார்த்தங்களிற் செறிந்ததாய் இயற்கையில் மெத்தவுண்டு. இது மிகுதியானபடி அனிந்திரகணத்திலுள்ளது. பிரதானமாய் அக்சிதத்தோடு[13] கலந்து, எமதிற்று[14] காந்தக்கல் முதலியனவாகவும் கெந்தகத்தோடு கலந்து அயபுலிங்கி[15]யாகவும், அயபுரகாபனசாரவும்[16] இருக்கும்.

## வியுக்தவயம்.

## REDUCED IRON.

இது விகற்ப அளவான அயகாந்த வக்சிரத்தோடு[17] கூடிய இரும்பே. சிவக்கக்காய்ச்சிய துப்பாக்கிக் குழலுக்குள்ளே போட்ட அயவக்சிரத்துக்

1 Ledoyen's disinfectant fluid. 2 Deodoriser. 3 Nitrate of lead. 4 Iodide of potassium. 5 Acetic acid. 6 Alcohol. 7 Alterative. 8 Stimulant. 9 Struma. 10 Spleen. 11 Soap plaster. 12 Resin plaster. 13 Oxygen. 14 Haematite. 15 Iron pyrites. 16 Protocarbonate, 17 Magnetic oxide of Iron.

Digitized By Roja Muthiah Research Library

கூடே ஐருதவாயுவைச்[1] செல்லவிட்டு இதையெடுப்பார்கள். லட்சணங்கள். இது நுண்ணிய நரைக்கறுப்பான தூள். காந்தம் இதைப் பெலனாய் இழுக்கும். இதைக் குழி அம்மியில் இட்டு அமுக்கி அரைத்தால் லோகவரிகள் தோன்றும். ஐருகுலோறிக்கமிலத்திற்[2] போட்டால் இது ஐருதவாயுவை கக்கிக்கொண்டு கரையும். அக்கரைவுக்குப் பதாசிபீதபுரூசியசைக்[3]கூட்ட வெண்ணீல நிறமான அடையலுண்டாகும். சோதனை. இயோதத்தில்[4] ஐம்பது கிறேனையும், பதாசிய வியோதிரத்தில்[5] ஐம்பது கிறேனையுந் தண்ணீரில் கரைத்து அதற்கு வியுக்தவயத்திற் பத்துக்கிறேனைக் கூட்டிச் சின்னக் குடுக்கையில் இட்டு மென் சூட்டிற் காய்ச்சினால் கரையாமல் இருக்கும் சேஷம் ஐந்து கிறேனுக்கு மிஞ்சாது. இச்சேஷம் ஐருகுலோறிக்கமிலத்திலே முற்றாய்க்கரையவேண்டியது.

நன்மை. இது உத்தம தொணிகம்[6]. மற்றும் அயமருந்துகளைப்போலவே இதுவும் விசேஷமாய் இரத்தத்திற் பிடிக்கும். இதைச் சாப்பிடும்போது இரத்தத்திலுள்ள எமதின்[7], கிளபுலின்[8] என்ற கூறுகளின் வீதம் அதிக்கும். மேலும் இது எம்மெனகக்கு[9]மாகும்.

உபயோகம். அனீமி[10], குலொரோசி[11], அமெனுறீயம்[12], கொரீயம்[13], பிளிகை வீக்கங்களுக்கும் அனீமியையச்சார்ந்த மற்றுநோய்களுக்கும் இது உசிதமருந்து.

தேயம். ஒரு கிறேன் முதல் ஐந்து கிறேன் வரைக்கு, நாள் இரண்டு மூன்று முறை, தீனோடாவது தின்றவுடனாவது கொடுக்கவும்.

ரசிதம். வியுக்தவயவில்லை. Reduced Iron Lozenges. கொள், வியுக்தவயம், எழுநூற்றிருபது கிறேன்; சுத்த சர்க்கரை மாவாக இருபத்தைந்து அன்சு; அகசிப்பிசின்மா[14] ஒரு அன்சு; அகசிப்பிசின் முசிலாகு[15], இரண்டு அன்சு; திஸ்திலித்ததண்ணீர்[16] ஒரு அன்சு அல்லது போதியது. அயம், சர்க்கரை, பிசின்மா மூன்றையுங் கலந்து தகுந்தபதமாய் வரப் போதிய முசிலாகையும் தண்ணீரையுங் கூட்டி 720 வில்லைகளாகத் தட்டி மட்டான சூடுள்ள அறையில் உலர்த்தவும்.

ஒவ்வொரு வில்லையிலும் வியுக்தவயம் ஒரு கிறேன் இருக்கும்.

## அயகாந்தவக்சிரம்.

## MAGNETIC OXIDE OF IRON.

அயகாந்தவக்சிரம் இரு$_3$ அ$_4$ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இது ஏறக்குறைய நூற்றுக்கு இருபதுபங்கு ஐரச தண்ணீரோடு[17] கலந்ததாய்ச் சொற்ப அயபிரவக்சிரத்தை[18] அடக்கியிருக்கும். லட்சணங்கள். கபிலக் கறுப்பு நிறமானது; சுவையற்றது; காந்தத்தாற் பெலனாய் இழுக்கப்படும். அரைப்பங்கு தண்ணீரோடு கலந்த ஐருகுலோறிக்கமிலத்திலே இது நுரைக்காமற் கரையும். இக்கரைவுக்குப் பதாசிபீதபுரூசியசையாவது பதாசிசெம்புரூசியசை[19]யாவது கூட்ட நீலநிற அடையலுண்டாகும். அயகாந்தவக்சிரத்திற் சொற்பத்தைக் காய்ந்த சோதனைக்குழலிலிட்டு விளக்குச் சுவாலையிற் காய்ச்சும்போது, அக்குழலின் குளிரான பங்கிலே ஈரம் பிடிக்கும். சோதனைகள். இருபது

1 Hydrogen gas. 2 Hydrochloric acid. 3 Yellow prussiate of potash. 4 Iodum. 5 Iodide of potassium. 6 Tonic. 7 Haematin. 8 Globulin. 9 Emmenagogue. 10 Anaemia. 11 Chlorosis. 12 Amenorrhoea. 13 Chorea. 14 Gum acacia. 15 Mucilage. 16 Distilled water. 17 Water of hydration. 18 Peroxide of Iron. 19 Red prussiate of potash.

Digitized By Roja Muthiah Research Library

இறேனை ஐருதுலோறிக்கமிலத்திற் கரைத்துத் பதாசிசெம்புரூசியசைக் கூட்டினால் பதாசிதுவிகுரோமசு[1]ப்பருமவிலயனத்தில்[2] எண்பத்துமூன்று இறேனைக் கூட்டுந்தனையும் ஓர் நீலநிற அடையல் உண்டாகிக்கொண்டிருக்கும்.

**தன்மை, உபயோகம்.** வியுக்தவயத்தைப் போலவே.

**தேயம்.** ஐந்துஇறேன்முதற் பத்துக்இறேன் வரைக்கு.

## அயவைரசுப்பிரவக்சிரம்.

## HYDRATED PEROXIDE OF IRON.

இது இரு$_2$ அ$_3$ ஐ$_2$ அ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும் ஈரமான அயபிரவக்சிரத்தைப் பாரங்குறையுந்தனையும் 212 பாகைக்கு மேற்படாத சூடேற்றி மாவாக அரைத்து இது எடுக்கப்படும். **லட்சணங்கள்.** இது செங்கபில நிறமான தூள்; சுவையற்றது; காந்தத்தால் இழுக்கப்படாது. **சோதனைகள்.** அரைப்பங்கு தண்ணீர் கலந்த ஐருதுலோறிக்கமிலத்தில் இதைப் போட்டுச் சூட்டிற் பிடிக்க, தாமதமாயும் பூரணமாயுங் கரையும். இக்கரைவுக்குப் பதாசிபீதபுரூசியசைக் கூட்ட கனஅடையல் உண்டாகும்; பதாசிசெம்புரூசியசுக்கோ அடையல் உண்டாகாது, சோதனைக்குழலிலிட்டுச் சற்றே சிவக்கக் காய்ச்சினுல் ஈரிப்பைக் கக்கும்.

**தன்மை.** இது தொணிகம்[3], எம்மெனகக்கு[4], அந்தெல்மிந்தி[5].

**உபயோகம்.** அனீமிக்கு[6] இது உவந்த மருந்து. மேலும் பெலவீனம், நுறல்சி[7], கொரீயம்[8], குக்கலின்பிற்பாதம், லறிஞ்சிஸ்மஸ்திருலசு[9], ஸ்பசஈளை[10], இரசநடுக்கம், அமெனுறீயங்களுக்கும்[11] இது நயந்தது.

**தேயம்.** ஐந்துஇறேன் முதல் முப்பதுஇறேன் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம்.

**ரசிதம்.** அயபிலாஸ்தர். Chalybeate Plaster. கொள், அயவைரசுப்பிரவக்சிரம், மாவாக, ஒரு அன்சு; பெர்கன்றிராளம்[12], இரண்டு அன்சு; ஈயப்பிலாஸ்தர்[13], எட்டு அன்சு. பெர்கன்றிராளத்தையும் ஈயபிலாஸ்தரையும் முதலே ஒன்றாக உருக்கி, அயபிரவக்சிரத்தைக் கூட்டி அக்கலவை ஆறி இறுகுந்தனையும் ஓயாமற் கலக்கவும்.

இதை மெல்லிய தோலிற் பரவியிட்டால் இட்டபகுதிக்கு நல்ல தாபரமுங் காவலுமாகும்.

## அயவீரபிரவக்சிரம். MOIST PEROXIDE OF IRON.

அயவீரபிரவக்சிரம் என்பது, நூற்றுக்கு ஏறக்குறைய 86 பங்கு தண்ணீரை அடக்கிய அயவைரசுப்பிரவக்சிரமே. **லட்சணங்கள்.** இது மெதுவும்ஈரமும் பசையுமான செங்கபிலநிறத்திரளை, கிருசலவருகுலோறிக்கமிலத்திலே[14] சூடின்றிச் சுறுக்குக் கரையும். அக்கரைவுக்குப் பதாசிசெம்புரூசியசைக்[15] கூட்ட அடையலுண்டாகாது. பதாசி பீதபுரூசியசைக் கூட்டவோ நீலநிறமான கன அடையல் உண்டாகும். **சோதனை.** இதிற் சொற்பத்தைப் பாரங் குறையுந்தனையும் 212 பாகை சூட்டிற் காய்ச்சிச் சோதனைக் குழலில் இட்டுச் சற்றே சிவக்கக் காய்ச்சினுல் ஈரம் பிறக்கும்.

---

1 Bichromate of potash. 2 Volumetric solution. 3 Tonic. 4 Emmenagogue. 5 Anthelmintic. இருமிகொல்லி. 6 Anaemia. 7 Neuralgia. 8 Chorea. 9 Laryngismus stridulus. 10 Spasmodic asthma. 11 Amenorrhoea. 12 Burgundy pitch. 13 Lead plaster. 14 Dilute Hydrochloric acid. 15 Red prussiate of potash.

Digitized By Roja Muthiah Research Library

தன்மை, உபயோகம். பாஷாண நஞ்சு தின்றவர்களுக்கு இது மாற்றுக் கொடுபடும்.

தேயம். ஐந்து மினி பத்து மினிக்கு ஒருமுறை ஒரு பருஞ்சிப்பி நிறையக் கொடுக்கலாம். பாஷாணநஞ்சில் ஒருபங்குக்கு இதிற் பன்னிரண்டு பங்கு கொடுக்கவேண்டும்.

## அயகாபனசுச் சர்க்கரை.

## SACCHARATED CARBONATE OF IRON.

இது அயபிரவக்கிரமும் சர்க்கரையும் கலந்த இரு கா அ3 என்ற சின்னத்தாற் குறிக்கப்படுகிற அயகாபனசு. இக்கலப்பிலே அயகாபனசு நூற்றுக்கு ஐம்பத்தேழு பங்கு வீதமாயிருக்கும். அயசல்வசை[1] அமோனகாபனசாற்[2] கூறுபடுத்தி வரும் அடையலைக்கழுவி அதற்குச் சர்க்கரை கூட்டி உலர்த்தி இதை எடுப்பார்கள். லட்சணங்கள். நரைநிறமும் இனிப்பும் சொற்ப இரும்புச் சுவையுமுடைய சிறுத் திரளைகளாக இருக்கும். அரைப் பங்கு தண்ணீர் கலந்த இளஞ் சூடுள்ள ஐருகுலோறிக்கமிலத்திலே[3] இது நுரைத்துக்கொண்டு கரையும். அக்கரைவுக்குப் பாரியகுலோறிரத்தைக்[4] கூட்ட மெத்தச் சொற்பஅடையலுண்டாகும். சோதனைகள். தண்ணீர் கலந்த மிஞ்சிய ஐருகுலோறிக்கமிலத்திலே இதில் இருபது கிறேனைக் கரைத்துப் பதாசிசெம்புருசியசைக்[5] கூட்டினுற் பதாசி துவிக்குறோமசுப்[6] பருமவிலயனத்தில்[7] 330 கிறேனளவையாகுதல் கூட்டுந்தனையும் ஓர் நீலநிறஅடையலுண்டாகிக்கொண்டிருக்கும்.

தன்மை. உவந்த அயதொணிகம்[8]; துவர்த்தன்மையில்லாதது.

உபயோகம். அயபிரவக்கிரம் போலவே.

தேயம். ஐந்து கிறேன் முதல் இருபது கிறேன் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம்.

ரசிதம். அயகாபனசுக் குளிகை. Pill of Carbonate of Iron. கொள். அயகாபனசுச் சர்க்கரை, ஒரு அன்சு, றோசை லேகியம்[9], கால் அன்சு. நன்ருய் அரைக்கவும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு நாள் இரண்டு முறை கொடுக்கவும்.

## அயபாஸ்வசு. PHOSPHATE OF IRON.

அயபாஸ்வசு இரு[3] பா[2] அ[8] என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். அயசல்வசைச் சோடபாஸ்வசாற்[10]கூறுபடுத்த அயபாஸ்வசு பிறக்கும். லட்சணங்கள். இது கருநீலநிறமான அமாவத்[11]தூள். தண்ணீரிற் கரையாது. ஐருகுலோறிக்கமிலத்திற் கரையும். இக் கரைவுக்குப் பதாசிபீதபுருசியசு[12], பதாசிசெம்புருசியசு எதைச்சேர்த்தாலும் அடையலுண்டாகும். செம்புருசியசுக்கே கன அடையலுண்டாகும். தாத்தரிக்கமிலத்தையும்[13] மிஞ்சிய அமோனத்தையும்[14] கூட்டிய பின் மக்னீசியமோனசல்வசு[15] நீரைக் கூட்டினுல் ஓர் கிறிஸ்தலடையல் உண்டாகும். சோதனைகள். சுத்தமான வோர்

1 Sulphate of iron. 2 Carbonate of Ammonia. 3 Hydrochloric acid. 4 Chloride of barium. 5 Red Prussiate of Potash. 6 Bichromate of potash. 7 Volumetric solution. 8 Tonic. 9 Confection of rose, 10 Phosphate of soda. 11 Amorphous. 12 Yellow prussiate of potash. 13 Tartaric acid. 14 Ammonia, 15 Ammonio-sulphate of magnesia.

Digitized By Roja Muthiah Research Library

செம்புத் தகட்டின்மேல் இந்த உப்பை இட்டு அதிலே ஐருகுலோறிக்கமிலத்தை[1] விட்டு வைத்தால் அந்த லோகத் துண்டின்மேல் கருமையான அடையலுண்டாகாது. இந்த உப்பில் இருபது கிறேனை ஐருகுலோறிக்கமிலத்திற் கரைத்துப் பதாசி[2]செம்புருசியசைக்[3]கூட்டிஞற் பதாசிதுவிகுரோமசுப[4] பருமவிலயனத்தில்[5] 250 கிறேனளவைக் கூட்டுந்தனையும் நீலநிற அடையலுண்டாகிக்கொண்டிருக்கும்.

தன்மை. அயதொணிகம்.

உபயோகம். அனீமி, பொதுவான பெலவீனங்களுக்கு இதைக் கொடுப்பதன்றி, ரிக்கிற்சு[6],சர்க்கராமுரி[7] மூளைமெதுவாதல், கன்சர்[8] என்ற நோய்களுக்கும் இது நயமென்று கொடுக்கப்படும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கு. இதைச் சிறுபமாய்க் கொடுப்பதே உத்தமம்.

ரசிதம். அயபாஸ்வசுச் சிறுபம். Syrup of Phosphate of iron. கொள். கிறனுல அயசல்வசு[9], இருநூற்றிருபத்துநாலு கிறேன்; சோடபாஸ்வசு[10] இருநூறு கிறேன்; சோடவசிதசு[11], எழுபத்துநாலுகிறேன்; கிருச பாஸ்வரிக்கமிலம்[12], ஐந்தரை அன்சு; சுத்த சர்க்கரை எட்டுஅன்சு; தின்திவித் தண்ணீர்[13] எட்டு அன்சு. அயசல்வசை நாலு அன்சு தண்ணீரிற் கரைத்து, இரண்டு கலவையையும் ஒன்ருக்கித் திறமாய்க் குலுக்கிக் காரிக்கம் புடைவையில் வடித்து அடையலைத் தின்திவித்த தண்ணீராற் கழுவி அது பாரியகுலோறிரத்தால்[14] யாதொரு மாறுதலடையாமலிருக்குந்தனையும் கழுவி அப்பால் அந்த அடையலை ஊறுதாளின் இரண்டு மடிப்புகளுக்கிடையில் வைத்து அமுக்கி அதற்குக் கிருசபாஸ்வரிக்கமிலத்தைக் கூட்டவும். அடையல் கரைந்தவுடன் அக் கரைவை வடித்துச் சர்க்கரையைக் கூட்டிச் சூடில்லாமற் கரைக்கவும். வரும் பாணி சரியாய்ப் பன்னிரண்டு அன்சு நிறுக்க வேண்டும்.

தேயம். ஒரு திறும் முதல் இரண்டு திறும் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம். ஒவ்வொரு திறுமில் ஒரு கிறேன் அயபாஸ்வசு இருக்கும்.

## அயசல்வசு. அன்னபேதி. SULPHATE OF IRON.

அயசல்வசு இருகேஅ[1] 7ஐ[2] அ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இரும்புக் கம்பியைக் கிருசசல்வுரிக்கமிலத்திற்[15] கரையப்போட்டு அக்கரைவைக் காய்ச்சி ஆவியாக்கிக் கிரிஸ்தலித்து[16] அயசல்வசு எடுக்கப்படும். லட்சணங்கள். இது வெளிறின,பச்சைநீலநிறமுள்ள, சாய்ந்த,ரம்ப[17],பிரிசங்க[18]ளாகவிருக்கும். துவர்ச்சுவை உள்ளது; திட்டசீதிற்[19]கரையாது; தண்ணீரிற் கரையும். தண்ணீர்க் கரைவு தெளிந்தது. அதற்குப் பாரியகுலோறிரஞ் சேர்க்க வெண்ணடையலுண்டாகும். பதாசிசெம்புருசியசைக் கூட்ட நீலநிற அடையலும், பதாசிபீதபுருசியசைக்[20] கூட்ட வெள்ளை அல்லது வெண்ணீல நிற அடையலுமுண்டாகும். சோதனை. இதின் தண்ணீர்க்கரைவு

---

1 Hydrochloric acid. 2 Potash. 3 Red prussiate. 4 Bichromate. 5 Volumetric solution. 6 Rickets 7 Diabetes. 8 Cancer. 9 Granulated Sulphate of iron. 10 Phosphate of soda. 11 Acetate of soda. 12 Dilute phosphoric acid. 13 Distilled water. 14 Chloride of Barium. 15 Dilute sulphuric acid. 16 Crystallize. 17 Rhombic. 18 Prism. 19 Rectified spirit. 20 Yellow prussiate of potash.

Digitized By Roja Muthiah Research Library

க்கு முன்னமே கொஞ்சம் சல்வுரிக்கமிலத்தைக் கூட்டினுல் ஐருசல்வுரிக்கமில[1] வாயுவுக்கு யாதொரு அடையலுமுண்டாகாது.

தன்மை. வீருன அயதொணிகம்[2], துவர், எம்மெனகக்கு[3], அந்திபிருடி[4], கிருமிகொல்லி[5]. பெருந்தேயத்தில் நஞ்சு. தானிகமாயிட்டாற் துவர், ஸ்தி முலம்[6].

உபயோகம். அனீமி[7], அனீமிக்கோலம், குலொரோசி[8], அமெனுறீயம்[9], லுகறீயம்[10] இரைப்பைப்புண், பிளிஸைகவீக்கம், முறைச்சுரங்கள், தடவைத் தலைவலி[11], ஐபுகன்ருயசி[12], குக்கலின் பிறபாதம், தீனியம்[13], என்றநோய்களுக்கே இம் மருந்து விசேஷமாய் உள்ளே கொடுக்கப்படும். மேலும் எரிசிப்பிலசு[14], ரதிப்புண், சிந்துமூலமுளைகள், அபானப்பிதுககம், கருப்பைக் கன்சர்[15] முதலிய நோய்களுக்கு இது வெளிமருந்தாய் இடப்படும்.

தேயம். ஒரு கிறேன் முதல் ஐந்து வரைக்கும் கூடவும் நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கலாம்.

ரசிதம். வறுத்த அயசல்வசு. Dried Sulphate of Iron. கொள். அயசல்வசு, நாலு அன்சு; பீங்கான் அல்லது இரும்புப் பாத்திரத்தில் மட்டான சூட்டில் வறுத்துச் சூட்டை 400 பாகை வரைக்கு ஏற்றி,நீராவி பறிந்து தீருந்தனையும் வறுக்கவும். சேஷத்தை மாவாக அரைத்துக் கண்ணுடிச் சடையால் அடைத்த சீசாவிற் பேணவும்.

தேயம். அரைக் கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்குக் குளிகையாக்கிக் கொடுக்கலாம். இதில் மூன்று கிறேன், கிரிஸ்தலான அயசல்வசில் $4\frac{9}{10}$கிறேனுக்குச் சரி.

அயகூட்டுமிஸ்துர். Compound Iron mixture. கொள். அயசல்வசு, இருபத்தைந்து கிறேன்; பதாசிகாபனசு முப்பது கிறேன்; சசம், சுத்தசர்க்கரை, வகைக்கு அறுபது கிறேன்; சிடச்சீது[16], நாலு திறும்; ரோசைநீர், ஒன்பதரை அன்சு. சசத்தை மாவாக்கிப் பதாசிகாபனசையும் சர்க்கரையையும் கூட்டி, ரோசை நீரிலே சொற்பமாய்ச் சேர்த்து மெல்லிய பசையாக அரைத்துப் பின்னும் ரோசைநீரையும் சிடச்சீதையும் படிப்படியாய்ச் சேர்த்துப் பின்னும் அரைத்துப் பால் போன்ற நீர் எட்டு அன்சு வருந்தனையும் ரோசை நீரைப் பின்னுஞ் சேர்த்து அப்பால் எஞ்சிய ரோசை நீரிலே அயசல்வசைக் கரைத்துக் கூட்டித் திறமாய்க் கலந்து அக்கலவையைக் கூடிய அளவுங் காற்றுப்படாமற் பேணிவைக்கவும்.

தேயம். ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கு நாள் இரண்டுமூன்று முறை கொடுக்கலாம். அனீமி, அமெனுறீயம், குலொரோசி என்ற நோய்களுக்கு இது உத்தம தொணிகம்.

## கிறனுல அயசல்வசு. GRANULATED SULPHATE OF IRON.

செய்யும் விதத்தில் மாத்திரமே இந்த உப்புக்கும் வாடிக்கையான அயசல்வசுக்கும் வித்தியாசமுண்டு. இது வெளிறின பச்சை நீல நிறமான,சிறிய, பருபருக்கையான கிரிஸ்தல்களாக இருக்கும். இதின் தன்மை, உபயோகம், தேயங்கள் அயசல்வசின் தன்மை முதலியவற்றைப்போலிருக்கும்.

1 Hydrosulphuric acid. 2 Tonic. 3 Emmenagogue. 4 Antiperiodic. 5 Anthelmintic. 6 Stimulant. 7 Anaemia 8 Chlorosis. 9 Amenorrhoea. 10 Leucorrhoea. 11 Periodic headache. 12 Hypochondriasis. 13 Taenia. 14 Erysipelas. 15 Cancer. 16 Spirit of nutmeg.



Digitized By Roja Muthiah Research Library

## அயபிரசல்வசு நீர்.

## SOLUTION OF PERSULPHATE OF IRON.

கொள், அயசல்வசு, எட்டு அன்சு; சல்வுரிக்கமிலம்[1], நீதுரிக்கமிலம்[2], வகைக்கு ஆறு திரும்; திஸ்திலித்த[3] தண்ணீர், பன்னிரண்டு அன்சு அல்லது போதியது. சல்வுரிக்கமிலத்தைத் தண்ணீரிற் பத்து அன்சோடு கூட்டி அக்கலவையிலே அயசல்வசைச் சூட்டிவிட்டுக் கரைக்கவும். நீதுரிக்கமிலத்தை மிச்சமான இரண்டு அன்சு தண்ணீரோடு கலந்து அக்கிருச அமிலத்தை அயசல்வசு கரைத்த நீரோடு கலக்கவும். சிவப்பு நிறமான ஆவி சடுதியிற் பறிந்து நீர் கருமை கெட்டுச் சிவப்படையுந்தனையும் அதைக் காய்ச்சிச் சாரதிக்கவும்[4]. அப்பால் இந்த நீரில் ஒரு துளியைப் பதாசிசெம்புருசியசைக்[5]கொண்டு சோதித்து நீலநிற அடையலுண்டானால் நீதுரிக்கமிலத்திலே பின்னுஞ் சில துளியைக் கூட்டி அதிலுள்ள அயசல்வசு முழுவதும் அயபிரசல்வசாய் மாறத்தக்கதாய்த் திரும்பவுங் காய்ச்சவும். நீர் ஆறினபின் வேண்டுமாகிற் திஸ்திலித்த தண்ணீரைக் கூட்டி அளவைப் பதினொரு அன்சாக்கிக் கொள்ளவும். லட்சணங்கள். இது கருஞ்சிவப்பு நிறமான கனத்த நீர். மணமற்றது; மெத்தத் துவர்கொண்டது; அலக்கால்[6], தண்ணீர்களோடு எந்த வீதத்திலுங் கலக்கும். பத்துமடங்கு தண்ணீரோடு கலந்தால் பாரியகுலோறிரத்துக்கு[7] வெண்ணடையல் உண்டாகும்; பதாசிபீதபுருசியசுக்கு[8] நீலநிற அடையல் உண்டாகும்; பதாசிசெம்புருசியசுக்கோ அடையல் தோன்றாது. சோதனை. விசேஷகிருவிதம் 1.441. இதிலொரு திருமைத் திஸ்திலித்த தண்ணீரில் இரண்டு அன்சோடு கலந்து, அமோன நீரை[9] மிச்சமாய்க்கூட்டி, உண்டாகுமடையலை நன்றாய்க்கழுவி பஸ்மமாக்கினால் 11.44 கிறேன் நிறுக்கும்.

தன்மை உபயோகம். இது வீருன துவர், உள்ளே கொடுக்கப்படுவதில்லை. அயவமோனசிதிறசு[10], அயகினியசிதிறசு[11], அயகாந்தவக்சிரம்[12], அயவீரபிரவக்சிரம்[13], அயதாத்தரகம்[14], அயவசிதசிரஞ்சம்[15] என்ற மருந்துகள் செய்வதற்கு இது வழங்கப்படும்.

ரசிதம். அயவசிதசிரஞ்சம். Tincture of Acetate of Iron. கொள். அயபிரசல்வசுநீர், இரண்டரை அன்சு; பதாசியசிதசு[16], இரண்டு அன்சு; திட்டசீது[17] போதியது. பதாசியசிதசைப் பத்து அன்சு திட்டசீதிற் கரைத்து, அயபிரசல்வசுநீரைச் சீதில் எட்டு அன்சோடு கூட்டி இரண்டு நீர்களையும் ஒருநாழி கொள்ளத்தக்க ஓர் சீசாவிற் கலந்து திறமாய்க் குலுக்கி ஒருமணி நேரவரையிற் பலமுறை குலுக்கவும். இப்படி உண்டான ரஞ்சத்தையும் அடையலையும் ஓர் வடியில் வார்த்து, நீர் ஒழுகித்தீர்ந்தபின் அது அரைநாழியாகப் போதிய திட்டசீதை வடியின்மேல் வார்க்கவும்.

தேயம். ஐந்து மினிம் முதல் முப்பது மினிம் வரைக்கு.

---

1 Sulphuric acid. 2 Nitric acid. 3 Distilled water. 4 Concentrate. 5 Red prussiate of potash. 6 Alcohol. 7 Chloride of barium. 8 Yellow prussiate of potash. 9 Solution of ammonia. 10 Ammonio-citrate of iron. 11 Citrate of iron and quinine. 12 Magnetic oxide of iron. 13 Moist peroxide of iron. 14 Tartarated iron. 15 Acetated tincture of iron. 16 Acetate of potash. 17 Rectified spirit.

Digitized By Roja Muthiah Research Library

## அயபிரகுலோறிரகரநீர்,
## STRONG SOLUTION OF PERCHLORIDE OF IRON.

இது இரும்புக்கம்பியை ஐருகுலோறிக்கமிலத்திற்[1] கரையவிட்டு வரும் அயபிரகுலோறிரத்தைத்[2] தண்ணீரோடு கலந்த நீர். லட்சணங்கள். இது வீறுன துவர்ச்சுவையை உடைய மஞ்சட்கபில நீர். தண்ணீர், அலக்கால்[3]களில் எந்த வீதங்களிலும் கலக்கும். தண்ணீரிற் கலந்தால் வெள்ளிநீத்திர சுக்கு[4] வெண்ணடையல் உண்டாகும்; பதாசிப்பீதபுரூசியசுக்கு[5] நீலநிற அடையல் உண்டாகும்; பதாசிசெம்புரூசியசுக்கோ அடையல் உண்டாகாது. சோதனைகள். விசேஷகிருவிதம் 1.338. இதில் ஒரு திருமை இரண்டு அஞ்சு தண்ணீரோடு கலந்து அமோனநீரை மிச்சமாய்க் கூட்டி உண்டாகுஞ் செங்கபிலநிற அடையலை நன்றாய்க் கழுவிப் பஸ்மமாக்கினால் அது 15.62 கிறேன் நிறுக்கும்.

தன்மை. வீறுனதுவர், ஸ்திப்திகு.

உபயோகம். அனுரிசம்[6], நாளவிஸ்தாரம், நீவசு[7], முதலியவற்றுக்கு இந்த நீரைப் புகட்ட அவை சுகமானதுண்டு. இப்பரிகாரம் மோசமற்றதல்ல. மேலும் விசிகசோதம்[8], வங்கசு[9] கழலைகள், கருப்பைப்பீடம், அரிசம்[10], சீழ்க்கண்ணோ, நகச்சுற்றுகளுக்கும், இரத்தப்பெருக்கைத் தடுப்பதற்கும் இந்த இடுதல் நயம். உள்ளேகொடுப்பதற்குத் தண்ணீர் கலந்தநீர் அல்லது ரஞ்சம் திறம்.

தேயம். இரண்டு துளி முதல் ஆறு துளிவரைக்குச் சிறுபத்திலாவது தண்ணீரிலாவது விட்டுக்கொடுக்கவும்.

ரசிதங்கள். அயபிரகுலோறிர நீர். Solution of Perchloride of Iron. கொள், அயபிரகுலோறிரகரநீர், ஐந்து அஞ்சு; திஸ்திலித்த தண்ணீர் பதினைந்து அஞ்சு கல.

தேயம். பத்து முதல் முப்பது மினிம் வரைக்கு.

அயபிரகுலோறிரரஞ்சம். Tincture of Perchloride of Iron. கொள், அயபிரகுலோறிர நீர் ஐந்து அஞ்சு; திட்டசீது[11] பதினைந்து அஞ்சு. கலந்து சீசாவில் விட்டு நன்றாய்அடைத்துவைக்கவும். சோதனை. விசேஷகிருவிதம் 0.992. தபுளின் சிகிச்சவாகடத்திற் சொல்லிய அயபிரகுலோறிர ரஞ்சத்தைப் பார்க்க இது நால்வாசி பெலன் உள்ளது.

தன்மை. அயபிரகுலோறிர நீரைப்போலவே. உள்ளே கொடுத்தால் இது உத்தம தொனிகமும்[12], அமூரிதி[13]யுமாகும்.

உபயோகம். அசத்துவ[14] இரத்தப்பெருக்கு, நாட்பட நின்று பெலவீனப்படுத்துங் கழிச்சல்கள், சர்க்கராமூரி[15], சலவொழுக்கு, சலத்துவாரத்தின் ஸ்பச[16] எடுக்கினால் உண்டாகுஞ் சல அடைப்பு, அல்புமினூறி[17] திவ்தீரி[18], எரிசிப்பிலசு[19], ஏமறெச்சுப்பெபூறம்[20] கசத்திற்[21] காணும் அதிவெயர்வை இவற்றிற்குக்கொடுத்து இது நயந்தது. அட்டைகடி முதலியவற்றிற் காணும இரத்தப்பெருக்கைத் தடுப்பதற்கும் கெட்டபுண்களை அருட்டுவதற்கும் இது இடப்படும்.

---

1 Hydrochloric acid. 2 Perchloride of iron. 3 Alcohol. 4 Nitrate of silver. 5 Yellow prussiate of potash. 6 Aneurism. 7 Naevus. 8 Hospital gangrene. 9 Fungus. 10 Piles. 11 Rectified spirit. 12 Tonic. 13 Duirectic. 14 Atonic. 15 Diabetes. 16 Spasmodic. 17 Albuminuria. 18 Diptheria. 19 Erysipelas. 20 Purpura Haemorrhagica. 21 Phthisis.

Digitized By Roja Muthiah Research Library

**தேயம்.** பத்து மினிம்[1] முதல் முப்பது மினிம் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம்.

[அயபிரகுலோறிரரஞ்சத்தைச் செய்வதற்குப் பிறித்தனிவாமகுபீயத்திற்[2] சொன்ன முறை மேலே குறிக்கப்பட்டதுவே. ஆயினும் இந்த ரஞ்சத்தில் எப்போதும் ஓர் கபிலநிற அடையல் உண்டாகும் ஆதலால் இது உதவாதென்று சென்னபட்டினத்திலுள்ள மருந்துச்சாலைக்கு அதிபதி அறிவித்திருக்கிறார். லண்டன் வாமகுபீயத்திற் சொன்னமுறையாய்ச் செய்த ரஞ்சமோ உஷ்டண தேசங்களிற் பழுதாகாமல் இருக்கும் ஆகையால் அதுவே உத்தமமானது. அதைச் செய்யுமுறையாவது; கொள், அயவைரசுபிரவக்கிரம்[3], ஆறு அன்சு; ஐருகுலோறிக்கமிலம்[4], அரைநாழி; திட்டசீது[5] ஒன்றரைநாழி. அயவைரசுப்பிரவக்கிரத்தை ஐருகுலோறிக்கமிலத்திற் போட்டு அடிக்கடி குலுக்கி மணல்மத்திகத்தில்[6] வைத்து மெல்லெனக்காய்ச்சிக் கரைத்துக் கடைசியில் கலவைநீர் ஆறினபின்பு சீதையுங்கூட்டிச் சீலையில் வடிக்கவும். இதின் தேயம் பிறித்தனிவாமகுபீயத்திற் சொன்ன இப்பெயர்ப்பட்ட ரஞ்சம் போலவே.]

## அயவியோதிரம். IODIDE OF IRON.

அயவியோதிரத்துக்குச் சின்னம் இருஇ[2]. இதிலே கிறிஸ்தல் நீர் ஏறக்குறைய நூற்றுக்கு 18 பங்கும், சொற்ப அயவக்சிரமும் சேர்ந்திருக்கும். **லட்சணங்கள்.** இது கபிலநிறஞ் சாடிய பச்சைநிறக் கிறிஸ்தல்களாக இருக்கும்; மணமற்றது; பரமாணுவில் உருகி நீராகும்; தண்ணீரிற் கரைந்து சொற்ப பச்சைநிறமுள்ள நீராகும். அதிலே ஓர் கறைநிற அடையல் படிப்படியாய் உண்டாக, அது சிவப்புநிறங்கொள்ளும். **சோதனை.** இதோடு பதாசிசெம்புருசியசைக்[7] கூட்ட நீலநிற அடையல் உண்டாகும். அமைலமுசிலாகைக்[8] கூட்டிச் சொற்ப அளவான குலோறத்தைச்[9] சேர்த்தாலும் அப்படி அடையல் உண்டாகும்.

**தன்மை.** இது உத்தம அல்திறவ தொணிகம்[10], எம்மெனகக்கு[11].

**உபயோகம்.** பொதுவாய் ஸ்துருமம்[12] நோய்கள், துபேகுல[13]நோய்களுக்கும், விசேஷமாய் அவை அனீமி[14]யோடு கூடிநிற்கும்போது இது உவந்தமருந்து. மேலும் அமெனுறீயம்[15], திஸ்மெனுறீயம்[16], லூகறீயம்[17], குலொறோசி[18], சர்க்கராமூரி[19], உபசிவ்விசு[20] நோய்களுக்கும் இது நயந்தது.

**தேயம்.** இரண்டு கிறேன் முதல் ஐந்துகிறேன் வரைக்குங் கூடவுங் கொடுக்கலாம்.

**ரசிதம்.** அயவியோதிரசிறூபம். Syrup of Iodide of Iron. கொள், மெல்லிய இரும்புக்கம்பி ஒரு அன்சு; இயோதம்[21], இரண்டு அன்சு; சுத்தசர்க்கரை இருபத்தெட்டு அன்சு; திஸ்திலித்த தண்ணீர், பதின்மூன்று அன்சு. சர்க்கரையைப் பத்து அன்சு தண்ணீரிலே சூடேற்றிக் கரைத்துப் பாணியாக்கிக்கொண்டு இயோதத்தையும் இரும்புக்கம்பியையும் ஓர் குடுக்கைக்

1 Minim. 2 British pharmacopoeia. 3 Hydrated peroxide of iron. 4 Hydrochloric acid 5 Rectified spirit. 6 Sand bath. 7 Red prussiate of potash. 8 Mucilage of starch. 9 Chlorum. 10 Alterative tonic. 11 Emmenagogue. 12 Struma. 13 Tubercular. 14 Anaemia. 15 Amenorrhoea. 16 Dysmenorrhoea 17 Leucorrhoea. 18 Chlorosis. 19 Diabetes. 20 Secondary syphilis. 21 Iodum.

Digitized By Roja Muthiah Research Library

குள்ளே சேஷமான மூன்று அஞ்சு தண்ணீரோடுபோட்டு எழும்பும் நுரை வெண்மையாகுந்தனையும் மென்சூட்டிற் கரைத்து அந்த நீர் சூடாயிருக்கை யில் அதைச் சர்க்கரைப்பாணி[4]க்குள்ளே வடித்து விட்டுக் கலக்கவும். கல ந்த பாணி இரண்டு இறுத்தல் பதினொரு அஞ்சு நிறுக்கவேண்டும். அதற்கு விசேஷகுருவிதம் 1.385 இருக்கவேண்டும்.

தேயம். அரைத்திறும் முதல் ஒரு திறும் வரைக்கு. ஒரு திறுமிலே அய வியோதிரம் நாலரைக்கிறேன் இருக்கும்.

அயவியோதிரக்குளிகை. Pill of Iodide of Iron. கொள். இரும் புக்கம்பி, நாற்பது கிறேன்; இயோதம்[1], எண்பது கிறேன்; சுத்தசர்க்கரை, மாவாக. எழுபது கிறேன்; அதிமதுரவேர்த்தூள், நூற்றுநாற்பது கிறேன்; ஜலஸ்திலித்த தண்ணீர், ஐம்பது மினிம் இரும்புக் கம்பி, இயோதம், தண் ணீர் மூன்றையும் பெலனுடைத்த அஞ்சுக்குப்பி யொன்றுக்குள்ளே இட்டு நுரைவெண்மையாகுந்தனையும் குலுக்கவும். சர்க்கரையைக் கல்லு ரலில் போட்டு அதின்மேலே நீரை விட்டுக் கெதியாய் அரைத்து அதிமதுரத் தூளைப்படிப்படியாய்ச் சேர்க்கவும்.

தேயம். மூன்றுகிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்குங் கூடவுங் கொ டுக்கலாம். இதில் மூன்றுகிறேனில் அயவியோதிரம் ஒரு கிறேன் இருக்கும்.

## அயபிரநீத்ரசுநீர்.

## SOLUTION OF PERNITRATE OF IRON.

இரும்புக்கம்பியை நீதிரிக்கமிலத்திற்[3] கரைத்துத் திஸ்திலித்த தண்ணீருங்[4] கலந்து அயபிரநீத்ரசுநீர் செய்யப்படும். லட்சணங்கள். இது செங்கபிலநிற மானதெளிந்தநீர்; சற்றேபுளிப்பும் துவர்ப்புமான சுவைஉடையது. பதாசிபீத புருசியசை[5] இதோடு சேர்க்க நீலநிற அடையலுண்டாகும். இந்நீரிற் சொற் பத்தை ஓர் சோதனைக்குழலுள் விட்டு அதோடு அதிலும் அரைப்பங்கு சுத்த சல்வுரிக்கமிலத்தைக்[6] கூட்டி அயசல்வசு நீரிலே கொஞ்சத்தை அதற்குள் வார்த்தால் முழுவதுங் கருங்கபில நிறமடையும். சோதனை. விசேஷ குருவிதம். 1. 107. இந் நீரில் ஒருதிறுமோடு அமோனா[7] நீரை மிஞ்சக்கூட் டும்போதுண்டாகும் அடையலைக்கழுவி உலர்த்திப் பஸ்மமாக்கினால் அது 2. 6 கிறேன் நிறுக்கும். இதோடு பதாசி செம்புருசியசைச் சேர்த்தால் அடையலுண்டாகாது.

தன்மை. உபயோகம். அயபிரகுலோறிர நீரைப்போலவே. விசேஷ மாய்க் கழிச்சலுக்கு இது உவந்த துவர்.

தேயம். பத்து முதல் நாற்பது மினிமை[8]த் தண்ணீரிற் தாராளமாய்க் கல ந்து கொடுக்கவும்.

## அயவாசேனசு,

## ARSENIATE OF IRON.

அயவாசெனசு 3 இரு அ, ஆ, அ5, என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இது கொஞ்ச அளவுக்கு பிரவக்சிரிக்கப்[9]பட்டிருக்கிறது. அயசல்வசைச்[10]

---

1 Iodide of iron. 2 Iodum. 3 Nitric acid. 4 Distilled water. 5 Yellow prussiate of potash. 6 Sulphuric acid. 7 Ammonia. 8 Minim. 9 Peroxidized. 10 Sulphate of iron.

Digitized By Roja Muthiah Research Library

சோடவாசெனசாற்[1] கூறுபடுத்த அயவாசெனசு பிறக்கும். லட்சணங்கள் இது பச்சைநிறமான சுவையற்ற அமாவத்[2]தூள். தண்ணீரிற் கரையாது. ஐருகுலோறிக்கமிலத்திற்[3] சுறுக்குக் கரையும். இக் கரைவுக்குப் பதாசிபீத புருசியசைக்[4] கூட்ட வெண்நீல நிறமான அடையல் கனக்க உண்டாகும். பதாசிசெம்புருசியசைக்[5] கூட்ட, அதிலும் அளவுநிறங் கதித்த அடையலுண் டாகும். இதிலே சொற்பத்தைமிஞ்சிய காரச்சோடத்[6]தோடுகாய்ச்சி வடித்து நீதுரிக்கமிலத்தால் சரிபாய்த் தடஸ்தித்து[7] வெள்ளிநீத்திரசு[8] நீரைச்சேர்க்க செங்கற் சிவப்பு நிறமான அடையலுண்டாகும். சோதனை. இதை ஐருகுலோறிக்கமிலத்திற் கரைத்து, தண்ணீர் கலந்து, பாரிய குலோறிரத்தைக்[9] கூட்டினுல் அடையலுண்டாகாது. இருபது கிறேனை மிஞ்சிய ஐருகுலோறிக்கமிலத்திற் கரைத்துத் தண்ணீர்கலந்து, பதாசி செம்புருசியசைக் கூட்டினுல் பதாசிதுவிதுரோமகப்[10] பசுமவிலயனத்திற் பதினேழு அளவையாகுதல் கூட்டுந்தனையும் ஓர்நீல நிறமான அடையலுண்டாகிக்கொண்டிருக்கும்

தன்மை. இது அலதிறவதோணிகம்[11]. இரும்பு ஆசெனிகம் இரண்டின் தன்மையும் இதிற் கூடி இருக்குமாம்.

உபயோகம். காலிகமான சருமரோகங்களுக்கு விசேஷமாய் ஏர்பிசு[12] வகை செதில்வகைக்கு இது சத்துள்ள மருந்து. மேலும் எலிபந்தீபசி[13], குஷ்டம், கன்சர்[14] லூபசு[15] என்ற நோய்களுக்கும் இது வழங்கப்படும்.

தேயம். பதினறிலொருபங்கு கிறேன் முதல் அரைக்கிறேன் வரைக்குக் குளிகையாக்கிக் கொடுக்கலாம். மேலும் ஒரு அன்சு லாடன்கெனுக்கு இருபதுகிறேன் வீதமாகச் சேர்த்துத் தைலமாக்கிப் பூச்சுமருந்தாகக் கொள்ளலாம்.

## அயவமோனசித்திரசு.

## CITRATE OF IRON AND AMMONIA.

இது அயபிரவக்சிரமும்[16], அமோனமும்[17] சித்திறிக்கமிலமும்[18] கூடியகலப்பு. லட்சணங்கள். இது கருஞ்சிவப்பு நிறமானமெல்லிய உருவொளியுள்ள செதில்களாக இருக்கும். சற்றே இனிய துவர்ச்சுவை கொண்டது. லிற்மசுத்தாளைச்[19] சொற்பமாய்ச் சிவப்பாக்கும். தண்ணீரிற் கரையக்கூடியது. திட்டசீதிற்[20] கரையவதரிது. பதாசி[21]நீரோடு இதைக்காய்ச்ச, அமோனம்கக்கும், அயபிரவக்சிரம் அடையும். அல்கலைக்கரைவினின்று அயத்தைப் பிரித்தெடுத்தபின் அதை அசிதிக்கமிலத்தாற்[22] சற்றே அதிபூர்த்தித்தால் யாதொரு கிரிஸ்தலடையலுண்டாகாது. சோதனை. பரமாணுவில் வைத்துப் பஸ்மமாக்கினுல் அயபிரவக்சிரம நூற்றுக்கு இருபத்தேழு பங்குக்குக் குறையாமல மிஞ்சும்.

தன்மை. இது சாந்தமான உத்தம அயத்தோணிகம்[23].

உபயோகம். இது சாந்தமான அழற்று மருந்தாதலால் கடுமையான நோய்களின்பின் காணும்பெலவீனத்துக்கும் பிள்ளைகளுக்குண்டாம் அனீமிக்கும்[24] மதியாந்திரகசம[25], பொதுவாய் துபேகுல[26]நோய்களுக்கும் உவந்தது.

---

1 Arseniate of soda. 2 Amorphous. 3 Hydrochloric acid. 4 Yellow prussiate of potash. 5 Red prussiate of potash 6 Caustic soda. 7 Neutralize. 8 Nitrate of silver. 9 Chloride of barium. 10 Bichromate of potash. 11 Alterative tonic. 12 Herpes. 13 Elephantiasis. 14 Cancer. 15 Lupus. 16 Peroxide of iron. 17 Ammonia. 18 Citric acid. 19 Litmus paper. 20 Rectified spirit. 21 Potash. 22 Acetic acid. 23 Tonic. 24 Anaemia, 25 Tabes mesenterica. 26 Tubercular.

Digitized By Roja Muthiah Research Library

தேயம். ஐந்துகிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்கு நாளிரண்டு மூன்று முறை கொடுக்கலாம.

ரசிதம். அயசிதிறசுவைன். Wine of Citrate of Iron. சொல். அயவமோனசிதிறசு, நூற்றறுபது கிறேன்; செரி[1]வைன் அல்லது தோடம் வைன் அரைநாழி. கரைத்து அடைத்த பாத்திரத்தில் விட்டு இடைக்கிடை குலுக்கி மூன்று நாள் வைத்திருந்து பிறகு வடிக்கவும.

தேயம். ஒரு திறும் முதல் நாலு திறும் வரைகு.

## அயகினியசிதிறசு.

## CITRATE OF IRON AND QUINIA.

இது சிதிறிக்கமிலமும்[2] அயபிரவக்சிரம்[3], அயபுரவக்சிரங்களும்[4] கினியமுஞ்[5] சேர்ந்த கலப்பு. லட்சணங்கள். இது பச்சைதாவிய பொன்மஞ்சள் நிறமான மெல்லிய செதில்களாக இருக்கும். பரமாணுவிற் சற்றே உருகும். தண்ணீரில் முற்றாய்க்கரையும். இக் கரைவு சொற்ப புளிப்பாயிருக்கும், சோட[6]நீர் அதிலே செங்கபில அடையலைவிழுத்தும், அமோன[7]நீர் வெண்ணடையலை விழுத்தும்; பதாசி[8],செம்புரூசியசும்[9]. பதாசிபீத[10]புரூசியசும் நீலநிற அடையலை விழுத்தும்; தனிக்கமிலம்[11] நரைக்கருமையான அடையலை விழுத்தும். கைப்பான அயச்சுவைகொண்டது. சோதனைகள். இதைக்காற்றுப்பட எரித்து உண்டாகும் சேஷத்தைத் தண்ணீரால் நனைத்தால் அது சோதனைத்தாளுக்கு அல்கலை[12]யாயிராது. ஐம்பதுகிறேனை ஒரு அன்சுதண்ணீரிற் கரைத்து அமோனத்தைச் சற்றே மிஞ்சக்கூட்டி உண்டாகும் வெண்ணடையலை ஒர்வடியின்மேற் சேர்த்து வறட்டினல் அதுஎட்டுக்கிறேன் நிறுக்கும். இந்தஅடையல் சுத்த ஈதரில்[13] ஏறக்குறைய முற்றாய்க் கரையும். அதை எரித்தால்சொற்ப சேஷம் மாத்திரம் இருக்கும்.

தன்மை உபயோகம். அயவமோன சிதிறசைப் போலவே. ஆயினும் இது அதிலும் வீறுன தொணிகம், அந்நிபிருடி[14]; பிளிகை[15] வீக்கங்களுக்கு உவந்தது.

தேயம். ஐந்துகிறேன் முதல் பத்துக்கிறேன் வரைக்கு நால் இரண்டு முறை கொடுக்கலாம். இன்னும் நெருக்கியுங் கொடுக்கலாம்,

## அயதாத்தரகம்.

## TARTARATED IRON.

இது அயபிரவக்சிரமும் பதாசியும் தாத்தரிக்கமிலமுஞ் சேர்ந்த கூட்டு. லட்சணங்கள். இது கருஞ்சிவப்பான மெல்லிய உருவொளியுள்ள செதில்களாக இருக்கும், சற்றே இனிய துவர்ச்சுவை கொண்டது. தண்ணீரில் கரையக்கூடியது. சீதிலே[16] சொற்பமாய்க்கரையும். தண்ணீர்க் கரைவை ஐருகுலோறிக்கமிலத்தாற்[17]புளிப்பாக்கிப் பதாசிபீதபுரூசியசைக் கூட்டினல் நீல நிற அடையல் கனமாய் உண்டாகும்; பதாசிசெம்புரூசியசுக்கோ அடையல் தோன்றுது. இந்த உப்பைச் சோடநீரோடு காய்ச்ச, அய

1 Sherry. 2 Citric acid. 3 Peroxide of iron. 4 Protoxide. 5 Quinia. 6 Soda. 7 Ammonia 8 Potash. 9 Red prussiate. 10 Yellow. 11 Tannic acid. 12 Alkali. 13 Ether. 14 Antiperiodic, சாமபீகாரி. 15 Spleen. 16 Spirit. 17 Hydrochloric acid.

Digitized By Roja Muthiah Research Library

பிரவக்சிரம் பிரியும், அமோனம் கக்காது. அந்த நீரை வடித்து அசிதிக் கமிலத்தால்[1] சற்றேபுளிப்பாக்கினுல், அது ஆறும்போது கிரிஸ்தலான அடையலுண்டாகும். சோதனைகள். ஐம்பது கிறேனைச் செஞ்சூட்டிற் பஸ்மமாக்கிச் சேஷத்தைத் திஸ்திலித்த தண்ணீரால் கழுவி மறுபடியும் பஸ்மமாக்கினுல் 15 கிறேன் நிறையுள்ள அயபிரவக்சிரம் எஞ்சும்.

தன்மை, உபயோகம். அயவமோன சிதிறதைப்போலவே. இது கிருமி கொல்லியுமாகும்.

தேயம். ஐந்து கிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்குத் தண்ணீரிற் கரைத்துக் கொடுக்கலாம்.

## அயசுகந்தமிஸ்துர்.

## AROMATIC MIXTURE OF IRON.

கொள் வெண்சின்கனப்பட்டை[2], மாவாக்கி ஒரு அன்சு; களும்புக்கிழங்கு[3], பருக்கனா தூளாக அரை அன்சு; இடித்தகராம்பு, கால் அன்சு; மெல்லிய இரும்புக்கம்பி, அரை அன்சு; ஏலக்கூட்டிரஞ்சம்[4] மூன்று அன்சு; தோடந்தோல் ரஞ்சம், அரை அன்சு; பெப்பமிந்து நீர்[5], போதியது. சின்கனப்பட்டைத்தூள், களும்புத்தூள், கராம்புத்தூள், இரும்பு நாலையும் அடைத்த பாத்திரத்தில் பன்னிரண்டு அன்சு பெப்பமிந்துநீரில் மூன்றுநாளைக்கு ஊறப்போட்டு இடைக்கிடை குலுக்கி அப்பால் வடித்து வடிந்த நீர் பன்னிரண்டரை அன்சு அளக்க போதிய பெப்பமிந்து நீரை விட்டு ரஞ்சங்களையுங் கூட்டி கலவையை நன்றுயடைத்த சீசாவிற்பேணவும்.

தேயம். சாந்தமான அயதொணிகமாய் இதை ஒரு அன்சு முதல் இரண்டு அன்சு வரைக்கும் நாள் இரண்டு மூன்று முறை கொடுக்கவும்.

## அயவைன். WINE OF IRON.

கொள், மெல்லிய இரும்புக்கம்பி, ஒரு அன்சு; செரிவைவின், அரை நாழி. அடைத்த பாத்திரத்தில் இரும்புக்கம்பியை வைனில் முற்றுய்த்தாழாமல் நிற்கத்தக்கதாய் இட்டு முப்பது நாளுறப்போட்டு இடைக்கிடை குலுக்கித் திறந்து விட்டு அப்பால் வடிக்கவும்,

தேயம். ஒரு திறும் முதல் நாலுதிறும் வரைக்குக் கொடுக்கலாம். இது பிள்ளைகள் பெண்களுக்கு மெத்தச்சாந்தமான அயதொணிகமாகும்.

[இந்துவிலுள்ள சனங்கள் இரும்பைப் பலமுறையாய் மருந்தாக்குவார்கள். அவைகளில் இரண்டு வகையை ஜனர் பண்டிதர் குறித்திருக்கிறூர். அவைகளிலொன்றுங் கவனிக்கப்படத்தகுந்ததல்ல. இரண்டு முறையாய்ச் செய்தமருந்தும் அசுத்த அக்சிர[6]மாய்த் தோற்றுகின்றது. அவற்றின் சத்து நன்றுய் அறியப்பட்டிருக்கும். அன்னபேதி யென்ற அசுத்தமான அய சல்வசு[7] எக்கடைகளிலுக் விலைப்படும். அதைச் சல்வுரிக்கமிலஞ்[8] சொற்பமாய்க்கலந்த தண்ணீரிற்கரைத்து வடித்துக் கிரிஸ்தலாக்கினுல் மருந்துக்கு உதவும்.]

---

1 Acetic acid. 2 Pale cinchona bark. 3 Calumba root. 4 Compound tincture of cardamoms, 5 Peppermint water. 6 Oxide. 7 Sulphate of iron. 8 Sulphuric acid.

Digitized By Roja Muthiah Research Library

## செம்பு, கூப்றம். COPPER, CUPRUM.

சின்னம், கூ. கூ.=63.5.

*செம்பு ஆகரிக்கணத்தில் பல இடங்களில் மிகுதியாய் உண்டு. இது சிலவேளை சுத்த லோகமாக விளையும். பெரும்பாலுமோ செம்புப்புலிங்கி[1] செம்புக்கிளாஞ்சு[2] என்ற கற்களாக கெந்தகத்துடனும் செவ்வக்கிரம்[3] காரக்கிரம்[4] என்ற கற்களாக அக்சிதத்துடனும் கூடியிருக்கும். அரிதாய்க்காணும் திதனியத்தை[5]விட இது மாத்திரமே லோகங்களுள் சிவப்பானது. இது கம்பியாய் நீட்டப்படவுந் தகடாய் அடிக்கப்படவுங் கூடியது. இதின் விசேஷகுருவிதம் 8.9; 1996 பாகை சூட்டில் உருகும். நீதரிக்கமிலமே[6] விசேஷமாய் இதைக்கரைப்பது. சுத்தமான செம்புப்பத்திரம் பாஷாணம், வெள்ளி நீதரசு[7], இரசங்களுக்குச் சோதனையாக வழங்கப்படும்.*

## செம்புசல்வசு, துருசி.—SULPHATE OF COPPER.

*செம்புசல்வசு, கூ கே அ₄ 5 ஐ₂அ. என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். செம்பைச் சல்வுரிக்கமிலத்தோடு[8] சேர்த்துக் காய்ச்சி வரும் பதார்த்தத்தை வெந்நீரிற்கரைத்து அந்தநீரை வரட்ட, அது ஆறும்போது, செம்புசல்வசு, கிரிஸ்தல்களாக விளையும். லட்சணங்கள். இது சாய்ந்த, ரம்ப பிரிசங்க[9]ளான நீலநிறக் கிரிஸ்தலுப்பு[10]; தண்ணீரிற் கரைந்து வெளிறின நீலநீராகும். இந்த நீர் லிற்மஸ்தாளை[11] அதிகமாய்ச் சிவக்கப்பண்ணும். இக்கரைவுக்குப் பாரியகுலோறிரஞ்[12]சேர்க்க ஐருகுலோறிக்கமிலத்திற்[13]கரையமாட்டாத வெண்ணடையல் உண்டாகும்; பதாசிபீதபுரூசியசைச்[14]சேர்க்கக் கருஞ்சிவப்பு நிற அடையல் உண்டாகும். சோதனை. இந்த உப்பைத் தண்ணீரிற் கரைத்து இருமடங்கு குலோறநீருங்[15]கலந்து அமோனநீரைக்[16]கூட்டினால், அமோனநீரை முதற் கூட்டும்போது உண்டாகும் அடையலானது அந்த நீரை இன்னும் போதிய அளவாய்க் கூட்டுவதாற் கரைய, யாதொரு அடையலும் இல்லாத செந்நீலநிறமான நீருண்டாகும்.*

தன்மை. *இது தொணிகம்[17], துவர், வமனி; பருந்தேயத்தில் அழற்றுநஞ்சு. தோலுரிந்த, அல்லது தசை அரும்புகிற இடத்துக்குக் கட்டியாய் இட்டால், மெல்லிய காரமும் துவருமாகும். கரைத்து இட்டால் ஸ்திமுல[18]மாகும்.*

உபயோகம். *காலிக திசந்தெரி[19], தியறீயங்[20]களுக்கு இது உத்தமமருந்து. கொரீயம்[21], எபிலெப்சி[22], கடுமையான இஸ்தேரி[23]களுக்கும் இது நல்லது. தாணிகமாய்க் கனுறீயம்[24],லுகறீயம்[25]சீழ்க்கண்ணோய்,காலிகசருமநோய்களுக்கும் மந்தமான அபல அழல் விரணங்களுக்கும் வெளியான இரத்தப்பெருக்குக்கும் முசகாதனி[26],அக்கரப்புண்கள் மிஞ்சிய தசை வளர் புண், கிறனுலக் கண்ணோய்[27]களுக்கும் இது கட்டியாக இடப்படும்.*

---

1 Copper pyrites. 2 Copper glance. 3 Red oxide. 4 Black oxide. 5 Titanium. 6 Nitric acid. 7 Nitate of silver. 8 Sulphuric acid. 9 Rhombic prism. 10 Crystal. 11 Litmus paper. 12 Chloride of barium. 13 Hydrochloric acid. 14 Yellow prussiate of potash. 15 Chlorine. 16 Ammonia. 17 Tonic. 18 Stimulant. 19 Chronic dysentery. 20 Diarrhoea. 21 Chorea. 22 Epilepsy. 23 Hysteria. 24 Gonorrhoea. 25 Leucorrhoea. 26 Cancrum oris. 27 Granular ophthalmia.



Digitized By Roja Muthiah Research Library

தேயம். தோணிகம் துவராகக் காற்கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்கும், வமனியாக, நாலு கிறேன் முதற் பன்னிரண்டு கிறேன் வரைக்குங் கொடுக்கலாம். கலூறியம்[1]அல்லது புகட்டலாக[2] வழங்குவதற்கு ஒரு அன்சு தண்ணீரில் இரண்டு கிறேன் முதற் பத்துக்கிறேன் வரைக்குங் கரைத்துக்கொள்ளலாம்.

[இந்து வைத்தியர் பருமட்டாய்ச் செய்த செய்புப்புகள் சிலவற்றில் மெத்த நம்பிக்கை வைப்பார்கள். செம்புக்குப் பழப்புளி, எலுமிச்சம்புளி முதலிய தாவர புளிகள் இட்டு இந்த உப்புகள் செய்யப்படும். இவைகள் ஒன்றுங் கவனிக்கப்படத் தகுந்தவைகளல்ல. மிருதியான கடைகளிலிருக்குந் துருசி பெரும்பாலும் நல்லது. அதை இன்னுஞ் சுத்தமாக்கவேண்டுமாகில் தண்ணீரிற் கரைத்துக் கடுதாசியில் வடித்து வற்றடிக் கிறிஸ்தலாக்கியெடுக்கலாம்.]

## இரசம். MERCURY.

சின்னம், ர; ர=200.

இரசம் இயல்பிலே சுத்தமாயிருக்கும். ஆயினும் பவளமஞ்சிலை[3] என்னும் பிரசல்விரமாக இருக்கும். வாடிக்கையான காங்கையில் நீராயிருக்கிற லோகம் இது மாத்திரமே. பளபளப்பானது; இலகுவிற் சிறுச்சிறு உண்டைகளாகப் பிரியும். 662 பாகை சூட்டிற் கொதிக்கும். தோற்றக்கூடிய செஞ்சூட்டுக்குக் குறைந்த சூட்டிற் சேஷமில்லாமல் ஆவியாய்ப் போகும். விசேஷகிருவிதம் 13.59. பிரதானமாய் நீதுரிக்கமிலம் சல்வுரிக்கமிலங்கள் இதைக் கரைக்கும்.

தன்மை. இரசத்தை லோகமாய் விழுங்கினுற் பெரும்பாலும் யாதொரு செயலுந் தோன்றாது. ஆயினுஞ் சிலவேளை குடல் நீர்கள் அதிற் கலக்க, வீறுன செயல்களுள்ள கலப்புகளுண்டாகும். இரச ஆவி ஆட்களில் நெடுங்காலமாக அதிகமாய்ப்பட்டால் அவர்களுக்கு ஓர்வகையான சிராநோய்கள்[4]உண்டாகிச் சிலவேளை சீவமோசமாய் முடியும். மேனித் தோலுட் தேய்த்துச் செலுத்திவிட்டால் அல்லது நுண் கூறுக்கித் தின்றால் இது உடம்பிற் பெலனுய்ப் பிடிக்கும். அதால் எப்போதும் முரசு[5]வீங்கிப் புண்படஅத்தோடு உமிழ்நீரும் பெருக்கெடுத்து, மூச்சும் ஓர்வகையாய் நாறும். இக்குணங்கள் கடுமையானால் இரசவாயவிதல் எனப்படும். இரசத்தைப் பொதுவாய், அல்திறவம்[6], பித்தக்கினி, விரேசனி, உமிழ்நீர்ப்பெருக்கி எனலாம். ஆயினும் இத்தன்மைகள் உபயோகங்களைப்பற்றி அந்தந்த இரசரசிதத்துடன் சொல்லப்படும்.

ரசிதங்கள். இரசகுளிகை. Mercurial pill. கொள். இரசம், இரண்டு அன்சு; ரோசை லேகியம்,[7] மூன்று அன்சு ; அதிமதுர வேர்த் தூள், ஒரு அன்சு. இரசத்தை ரோசை லேகியத்தோடு சேர்த்து நுண்ணுண்டைகள் அற்றுப்போகுந்தனையும் அரைத்து அப்பால் அதிமதுரத்தூளைச் சேர்த்து முழுவதையும் நன்றாய்க் கலக்கவும்.

தன்மை. நல்ல அல்திறவம், பித்தக்கினி, விரேசனி.

உபயோகம். சிவ்லி[8]சுக்கும் அதைப்பற்றிய நோய்களுக்கும் சீக்கிரத்தில்

1 Collyrium. 2 Injection. 3 Cinnabar. 4 Nervous. 5 Gum. 6 Alterative. 7 Confection of Rose. 8 Syphilis,

Digitized By Roja Muthiah Research Library

வீறுகொள்ளாமல் இரசங் கொடுக்கவேண்டிய நோய்களுக்கும் இது உவந்தது. ஈரற் பிசகோடு கூடிய குன்மத்துக்கு, மற்றும் பித்தக்கினிகள் விரேசனிகளோடு கொடுக்க இது நல்ல அனுமருந்து.

தேயம். அல்திறவமாக இரண்டு மூன்று கிறேன், நாள் இரண்டு மூன்றுமுறை கொடுக்கலாம். விரேசனியாக ஐந்து முதல் எட்டுக்கிறேன் கொடுக்கலாம். மூன்று கிறேன் குளிகையில் ஒரு கிறேன் இரசம் இருக்கும்.

இரசகிரீதம். Murcury with chalk. கொள். இரசம் நிறைப்படி ஒரு அன்சு; பூசகிரீதம்[1], இரண்டு அன்சு. இரசத்தையும் கிரீதத்தையும் பீங்கான் உரலிலிட்டு இரச உண்டைகள் கண்ணுக்குத் தெரியாமற்போய்க் கலவை ஏகத்துக்கொரேமாதிரியான நரைநிறத் தூளாக வருந்தனையும் அரைத்துக்கொள்ளவும். லட்சணங்கள். இது வெண்நரைநிறமான தூள். மணற்சுவையற்றது. தண்ணீரிற் கரையாது. ஐருகுலோறிக்கமிலம்[2] கிரீதத்தை நுரைப்போடு கரைக்க இரசம் நுண்ணிய மாவாக எஞ்சும். சோதனைகள். ஐருகுலோறிக்கமிலக் கரைவு தகர குலோறிரஞ்[3]சேர்க்க அடையாது.

தன்மை, உபயோகம். இரச குளிகையைப்போலிருக்குமாயினும் இது சாந்தமானது. குழந்தைகளுக்கு இரசங் கொடுக்கவேண்டிய நோய்களுக்கு இது உவந்தது.

தேயம். வளர்ந்தோருக்கு ஐந்து கிறேன் முதற் பதினைந்து கிறேன் வரைக்கும், குழந்தைகளுக்கு இரண்டு கிறேன் முதல் நாலு கிறேன் வரைக்குங் கொடுக்கலாம். பெரும்பாலும் மற்றும் மருந்துகளோடு கூடக் கொடுக்கப்படும். மூன்று கிறேனில் ஒருகிறேன் இரசமிருக்கும்.

இரசவன்கேன். Mercurial ointment. கொள். இரசம், ஒரு இருத்தல்; பூதலாடு[4] ஒரு இருத்தல்; பூதச் சீபம்[5] ஒரு அன்சு. ஒன்றாய்ச் சேர்த்து இரச நுண்ணுண்டைகள் தோன்றாமற் போகுந்தனையும் அரைக்கவும்.

தன்மை, உபயோகம். தேக மருந்தாக இதின் செயல் இரச குளிகையைப் போலவே. செலுத்துமுறை அதைப்போலவல்ல. மேனியில் விசாலமாயாவது தோலுரிந்த இடத்திலாவது நெடுநேரமாய்ப் பூசினால் வாயவியும். ஆகையாற் சுறுக்கிலே வாயிற் கேட்கப்பண்ணுவதற்கென்று உள்ளே கொடுக்கப்படும் மற்றுமிரச மருந்துகளுக்கு இது துணையாகப் பூசப்படும். இரசம் பிரயோகிக்க வேண்டியதாயிருந்தும் இரைப்பையில் அழற்சி முதலிய காரணங்களால் அதை உள்ளே கொடுக்கக்கூடாதிருக்கும்போது இத்தைலத்தைத் தோலுட் தேய்த்துவிடலாம். தானிக மருந்தாக இது சிவ்விசு[6]ப் புண்கள், பொருத்து வீக்கங்களுக்கும், பல வகையான கழலைகளுக்கும், சோஷணிகளை[7] அருட்டி அவற்றை வற்றப்பண்ணும் நோக்கமாகப் பூசப்படும்.

இரசலினிமென், இரச சப்பாசிதறி[8], இரசகூட்டன்கென் என்ற மருந்துகளில் இதோர் கூறுகச் சேருகின்றது.

இரசகூட்டன்கேன். Compound ointment of mercury. கொள். இ

---

1 Prepared chalk. 2 Hydrochloric acid. 3 Chloride of tin. 4 Prepared lard. 5 Prepared suet. 6 Syphilis. 7 Absorbent. 8 Suppository.

Digitized By Roja Muthiah Research Library

ரசவன்கென், ஆறு அன்சு; செம்மெழுகு, ஒலீவுதேலம்[1], வகைக்கு மூன்று அன்சு; பூரம் ஒன்றரை அன்சு. மெழுகை மென்சூட்டில் உருக்கித் தேலே க் கூட்டி அக்கலவை எறக்குறைய ஆறினபின் பூரத்தை மாவாக்கிக் கூட்டி இரசவன்கெனேயும் சேர்த்து முழுவதையுந் திறமாய்க் கலந்துகொள்ளவும்.

**இரசலினிமேன்.** Mercurial Liniment. கொள். இரசவன்கென், ஒரு அன்சு; அமோன நீர்[2] ஒரு அன்சு; பூரலினிமென், ஒரு அன்சு. இரச வன்கெனேப் பூரலினிமெனில் இட்டு மென்சூட்டிலுருக்கி நீராக்கி, அப்பால் அமோனநீரைப் படிப்படியாய்க் கூட்டிக் கலக்கவும்.

**தன்மை, உபயோகம்.** இரசவன்கெனேப் போலவே. ஆயினும் இது அதிக வீரியமுள்ளது.

**இரசபிலாஸ்தர்.** Mercurial plaster. கொள். இரசம் மூன்று அன்சு; ஒலீவுதேல் ஒரு திரும்; உச்சிககந்தி[3] எட்டுக் கிறேன்; ஈயப்பிலாஸ்தர்[4] ஆறு அன்சு. தேலத்தைக் காய்ச்சி அதற்குக் கந்தியைப் படிப்படியாய்க் கூட்டி அவை ஒன்றாய்ச் சேருந்தனேயும் கலக்கி அக்கலவையோடு இரசத்தைக் கூட்டி நுண்ணுண்டைகள் அற்றுப்போகுந்தனேயும் அரைத்து அப்பால் ஈயப்பிலாஸ்தரை முன்னமே உருக்கிச் சேர்த்து முழுவதையுந் தீர்ப்பாய்க் கலக்கவும்.

பொருத்துநீர்க்கோவை, அரையாப்பு, கழலேகள், சிவ்விசு வாதங்களுக்கு இது நல்ல பற்று.

**இரசவமுனீயகபிலாஸ்தர்.** Plaster of Ammoniacum with Mercury. அமுனீயகம் பார்.

**இரச சப்பாசிதுறி.** Mercurial Suppositories. கொள். இரச அன்கென், அறுபது கிறேன்; பெஞ்சோயஸ்லாடு[5], வெண்மெழுகு, வகைக்கு இருபது கிறேன்; தியுபுறோம[6]தேல் எண்பது கிறேன். பெஞ்சோயஸ்லாடையும் மெழுகையும் தியுபுறோமதேலேயும் மென்சூட்டில் உருக்கி, இரசவன்கெனேக் கூட்டி எல்லாவற்றையும் சூடின்றித் திறமாய்க் கலந்தபின் அக் கலவை உறையமுன் பதினேந்து கிறேன் கொள்ளத்தக்க ஏற்ற குகைகளில் வார்க்கவும். அல்லது அக் கலவை நீரை ஆறவிட்டுப் பன்னிரண்டு சமபங்குகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் கோன்[7]வடிவமாயாவது வசதியான வேறேதும் சாங்கமாயாவது செய்துகொள்ளவும்.

ஒவ்வொரு சப்பாசிதுறியிலும், ஐந்து கிறேன் இரசவன்கென் இருக்கும். என்ன நியாயத்தினாலாவது இரசத்தை வாயாலே கொடுக்கக் கூடாதிருந்தால் அல்லது வாயாற் கொடுப்பதுடன் சுறுக்கிலே உடம்பிற் சேட்கப்பண்ணவேண்டுமாகில் அதை இப்படியே உடம்புட் செலுத்தலாம்.

## இரச சேவ்வக்சிரம்.

## RED OXIDE OF MERCURY.

இது ரஅ என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இரசநீதுரசைச் சூட்டாற் கூறுபடுத்தி இது எடுக்கப்படும். **லட்சணங்கள்.** இது வெண் சிவப்பு நி

---

1 Olive oil. 2 Solution of ammonia. 3 Sublimed sulphur. 4 Lead plaster. 5 Benzoated lard. 6 Oil of Theobroma. 7 Cone. 8 Nitrate.

Digitized By Roja Muthiah Research Library

றமான தூள். ஐருகுலோறிக்கமிலத்திலே[1] சுறுக்குக் கரையும். அக்கரை வுக்குக் காரப்பதாசியை[2] மிச்சமாய்க் கூட்ட வோர் மஞ்சள்நிற அடையல் உண்டாகும். அமோன நீரைக்[3] கூட்ட வெண்ணடையலுண்டாகும். சோதனை. செஞ்சூட்டுக்குக் குறைந்த சூடு காட்ட முற்றாய் ஆவியாகி இரசமும் அக்சிதமுமாய்ப்[4] பிரியும். இதைச் சோதனைக் குழலிற் செய்தால் வெண் சிவப்புநிற ஆவி தோன்றாது.

தன்மை. அழற்றி, தகனி. உள்ளே கொடுப்பதில்லை.

ரசிதம். இரச செவ்வக்சிரவன்கேன். Ointment of Red oxide of Mercury. கொள். இரசசெவ்வக்சிரம், மாவாக, அறுபத்திரண்டு கிறேன்; செம்மெழுகு, கால் அன்சு ; வாதுமைத் தேல்[5], முக்கால் அன்சு. மெழுகை மென்சூட்டிலுருக்கி அதோடு தேலைச் சேர்த்து அக் கலவை ஏறக்குறைய ஆறியிருக்க இரச வக்சிரத்தைக் கூட்டி முழுவதையுந் திறமாய்க் கலந்துகொள்ளவும்.

மந்தமான சிவ்விசு[6]ப் புண்கள், ரூபியைப்[7]புண்களுக்கும் தொல்லையான சருமநோய்கள் சிலவற்றுக்கும் கண் மடற் தாபிதம்[8] காலிககஞ்சந்திவீது[9] என்ற கண்ணோய்வகைக்கும் பூச இது நல்ல தைலம்.

## இரச சல்வசு. SULPHATE OF MERCURY.

இது ரகேஅ[4] என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இரசத்தில் சல்வுரிக்கமிலத்தின்[10] செயலால் இது உண்டாகும். இது வெண்மையும் பாரமுமான கிரிஸ்தலான[11]தூள். தண்ணீரை இதின்மேற் தெளிக்க மஞ்சள் நிறமாகும். சூட்டுக்கு முற்றாய் ஆவியாகும்.

தன்மை. தகனி; கலமல்[12] சவ்வீரம்[13] என்பன செய்வதற்கு மாத்திரம் இது வழங்கப்படும்.

## இரசவதகுலோறிரம். கலமல். SUBCHLORIDE OF MERCURY. CALOMEL.

இது ர2கு2 என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். இரசசல்வசு, இரசம், சோடதகுலோறிரம்[14] மூன்றையும் கலந்து புடஞ்செய்து இது எடுக்கப்படும். லட்சணங்கள். இது மங்கல் வெண்மையான கனத்த ஏறக்குறையச் சுவையற்ற தூள்; கல்லுரலில் இட்டு அரைக்கச் சற்று மஞ்சளாகும். தண்ணீரிலாவது சீதிலாவது[15] ஈதரிலாவது[16] கரையாது. இதைப் பதாசிநீரிற்[17]கரைத்து மென் சூடுகாட்டக் கறுப்பாகும். தெளிந்த அக்கரைவு நீரை நீதுரிக்கமிலத்தாற்[18]புளிப்பாக்கி வெள்ளிநீதுரசைச்[19]சேர்க்க வெண்மையான கன அடையலுண்டாகும். சோதனைகள். போதிய சூடேற்ற முற்றாய் ஆவியாகும். மென்சூடான ஈதரைஇதோடு ஓர் சீசாவில் விட்டுக் குலுக்கி வரட்டினுற் சேஷமிராது.

தன்மை. தாபக்கினி[20], விரேசனி, பித்தக்கினி[21]. சிறு தேயத்தில் அல்திறவம்[22], உமிழ்நீர் கக்கி, கிருமிகொல்லி.

---

1 Hydrochloric acid. 2 Caustic potash. 3 Solution of ammonia. 4 Oxygen. 5 Oil of Almond. 6 Syphilis. 7 Rupia. 8 Opthalmia tarsi. 9 Chronic conjunctivitis. 10 Sulphuric acid. 11 Crystal. 12 Calomel. 13 Corrosive sublimate. 14 Chloride of sodium, கறியுப்பு. 15 Spirit 16 Ether. 17 Potash. 18 Nitric acid. 19 Nitrate of silver. 20 Antiphlogistic. 21 Cholagogue. 22 Alterative.

Digitized By Roja Muthiah Research Library

**உபயோகம்.** பொதுவாய்த் தீவிர[1], சத்துவ[2], தாபித[3], சுர நோய்களுக்குத் தாபக்கினியாய் இது பெரும்பாலும வழங்கப்படும். இத்தன்மையையிட்டு முன்னையிலும் நம்பிக்கை குறைவென்றாலும் இவ்வகுப்பான நோய்களின் முன் பருவங்களில் விரேசனத்தன்மையினிமித்தம் இது மெத்த மதிக்கப்படும். மற்று நோய்களுள் வாந்திபெதி, செங்கண்மாரி, பித்தக்குழப்பங்கள், திசந்தெரி[4], நீர்க்கோவைகள், நறல்சி[5], ஏர்ப்பு, ஐருகெவலம்[6], அபுபிலெக்சி[7], தலையிடி, சில வகையான செவிடு, தொல்லையான சருமநோய்கள், பரியஸ்தியுதபம்[8], சிவ்விசைப்பற்றிய அனேக நோய்களுக்குக் கொடுக்கப்படும்.

**தேயம்.** அல்திறவமாய் ஒரு கிறேன் இரண்டுகிறேனை அடிக்கடி கொடுக்கலாம். விரேசனியாய் இரண்டு கிறேன் முதல் ஆறு கிறேன் வரைக்குங் கூடவும் பெரும்பாலும் வேறு விரேசனிகளோடு சேர்த்துக் கொடுக்கப்படும். இது புகை காட்டப்படுவதுண்டு. புகைகாட்ட இருபது கிறேன் முதல் முப்பது கிறேன் வரைக்கு ஏற்ற அணியத்தில் வழங்கலாம்.

**ரசிதங்கள். இரசவத குலோறிரகூட்டுக்குளிகை.** Compound Pill of Subchloride of Mercury. கொள். இரசவதகுலோறிரம், அந்திமனி சல்வுகம்[9], வகைக்கு ஒருஅன்சு; குவயகராளம்[10] மாவாக இரண்டு அன்சு; ஆமணக்கெண்ணெய் ஒரு அன்சு அல்லது போதியது. இரசவத குலொறிரத்தை அந்திமனிசல்வுகத்தோடு அரைத்துஅப்பாற் குவயகராளத்தையும் ஆமணக்கெண்ணெயையுங் கூட்டி முழுவதையும் நன்றாயரைத்துக்கொள்ளவும். சிவ்விசு நோய் ஈரல்நோய் முதலியவற்றுக்கு நாடோறும் ஐந்துகிறேன் முதற் பத்துக் கிறேன் தேயமாகக்கொடுக்க இது உத்தமமான அல்திறவம். பிளமர் மாத்திரை என்று இது வெகுகாலம் பேர்பெற்றது.

**இரசவதகுலோறிரவன்கேன்.** Ointment of subchloride of mercury. கொள். இரசவதகுலோறிரம், எண்பதுகிறேன்; பூதலாடு[11] ஒரு அன்சு. திறமாய்க் கலக்கவும்.

சருமநோய்கள் பலவற்றுக்குவிசேஷமாய்ச் சிவ்விசுநோயைப்பற்றியுண்டானவைகளுக்குப் பூச இது நல்லது.

**இரசகருலோஷன்.** Black mercurial lotion. கொள். இரசவதகுலோறிரம் முப்பது கிறேன்; சுண்ண நீர்[12] பத்து அன்சு. கல.

ரதிப்புண்களுக்கும்[13] மற்றுஞ் சிவ்விசுப் புண்களுக்கும் இது பெரும்பாலும் இடப்படும்.

## இரசபிரகுலோறிரம். சவ்வீரம்.

## PERCHLORIDE OF MERCURY. CORROSIVE SUBLIMATE.

இதற்குச் சின்னம், ரகு2. இரசசல்வசு[14], சோடகுலோறிரம்[15], மங்கனீசிகாரக்சிரம்[16] என்ற மூன்றையுங் கலந்து திஸ்திலிக்க[17] இரசபிரகுலோறிரம்

---

Acute. 2 Sthenic. 3 Inflammation. 4 Dysentery. 5 Neuralgia. 6 Hydrocephalus. 7 Apoplexy. 8 Periostitis. 9 Sulphurated antimony. 10 Gnaiacum resin. 11 Prepared lard. 12 Solution of lime. 13 Chancre. 14 Sulphate of mercury. 15 Chloride of sodium. 16 Black oxide of manganese. 17 Distil.

Digitized By Roja Muthiah Research Library

பிறக்கும். லட்சணங்கள். இது கனமுள்ள நிறமற்ற பிரிசக்[1] கிரிஸதற்[2]க ட்டிகளாக இருக்கும். அதிக காரமான லோகச் சுவை உடையது. தண் ணீரைப் பார்க்க அலக்காலில்[3] அதிகமாய்க் கரையும். ஈதரில்[4]இன்னும் அ திகமாய்க் கரையும். தண்ணீர்க் கரைவுக்குக் காரப்பதாசியைக்[5] கூட்ட மஞ்சள் அடையல் உண்டாகும். அமோனஞ்[6]சேர்க்க வெண்ணடையலு ண்டாகும். வெள்ளிநீதரசைக்[7] கூட்டத் திரண்ட வெண்ணடையலுண் டாகும். சோதனை. சூடேற்ற இது கூறுகளாகப் பிரியாமலும் சேஷம்வி டாமலும் ஆவியாயெழும்பிக் கிட்டமாகும்.

தன்மை. இதைச் சிறுதேயமாக நெடுகக்கொடுத்தால் சிறுநீர் வெயர்வை உமிழ்நீர்களை அருட்டி உத்தம அல்திறவ[8]மாகும். பெருந்தேயத்தில் இது கொடிய அழற்றுநஞ்சு. கட்டியை ஓர் இடத்திற் பூசினுற் சொற்ப காரமா கும்; கரைத்துப் பூசினுல் ஸ்திமுல[9]மாகும்.

உபயோகம். சிவ்விசு[10]நோய்,கரப்பன்கள்,எபிலெப்சி[11],கண்ணோய்,சை னன்கி[12],வாதம் அதைச்சார்ந்த மற்று நோய்களுக்கு இது கெட்டியான மரு ந்து. மற்றுநோய்களுள் ஐருகேவலம்[13]நீர்க்கோவைகள் கோள வீக்கங்கள் எமறலோபியய்[14] ஈரல் வியாதிகளுக்கு இது வழங்கப்பட்டது. தண்ணீரிற் கரைத்து கனுறியம்[15]கிலீற்று[16]லுகறியங்களுக்குப்[17]புகட்டலாகவும் பலவகை யான கண்ணோய்க்குக் கலூறியமாகவும்[18] தொல்லையான சருமநோய்கள் பல வற்றுக்கு லோஷனுகவும்[19] வழங்கப்படும். பேன் முதலியவற்றை இது கெ டுக்கும். விசாலத்தில் இதையிட்டால் இரசம் சோஷிக்கப்பட்டு மோசமாய் முடியக்கூடுமாகையால் அப்படி இடல் புத்தியல்ல.

தேயம். கிறேனிற் பதினுறிலொரு பங்கு முதல் எட்டிலொருபங்கு வ ரைக்குக் கரைத்து நாள் மூன்றுமுறை கொடுக்கலாம். வெளிமருந்தாய் இ டுவதற்கு ஒரு அன்சு திஸ்திலித்த தண்ணீருக்கு அரைக் கிறேன் முதல் இர ண்டு மூன்று கிறேன் வரைக்குக் கரைத்துக்கொள்ளலாம்.

[இந்துக்கள் இரசமருந்துகள் சிலவற்றை அறிந்து அவற்றை நோய்களுக் கு அதிகமாய் வழங்குகிறுர்கள். அவர்கள் வழங்குஞ் சரக்குகள் அவர்கள் பரும்படியாய்ச் செய்துகொண்ட அசுத்த குலோறிரங்களே. அவைகளுள் இரசபஸ்பம் சவ்வீரம் என்ற இரண்டை ஒஷானசி பண்டிதர் சோதித்து அவைகளுள் இரசபஸ்பத்தை அதகுலோறிரம்[20] என்றும்சவ்வீரத்தைப் பிரகு லோறிரம்[21] என்றுங் கண்டார். அவை மோசமானவைகள். மெத்த அழற் றியானவைகளென்று ஆராய்வால் விளங்குகின்றது. அவற்றை நோய்க்கு கொடுக்கப்படாது. இந்துக்களுக்குள் வழங்கும் இரச மருந்துகளைப்பற்றி ஒன்ஸ்லி பதார்த்தசாரம் என்ற நூலிற் காணலாம்.

ரசிதங்கள். இரசபிரகுலோறிர நீர். Solution of Perchloride of Mercury. கொள். இரசபிரகுலோறிரம், அமோனதகுலோறிரம்[22], வகை க்குப் பத்துக் கிறேன்; திஸ்திலித்ததண்ணீர்[23] அரைநாழி. கரைக்கவும்.

தேயம். முப்பது மினிம் முதல் ஒரு திரும் வரைக்குக் கொடுக்கலாம். இதிலொரு அன்சிலே இரசபிரகுலோறிரம் அரைக்கிறேன் இருக்கும்.

---

1 Prism. 2 Crystal. 3 Alcohol. 4 Ether. 5 Caustic potash. 6 Ammonia. 7 Nitrate of silver. 8 Alterative. 9 Stimulant. 10 Syphilis. 11 Epilepsy. 12 Cynanche, 13 Hydrocephalus, கபால நீர்க்கோவை. 14 Hemeralopia, 15 Gonorrhoea. 16 Gleet. 17 Leucorrhoea. 18 Collyrium. 19 Lotion. 20 Subchloride. 21 Perchloride. 22 Chloride of Ammoniam. 23 Distilled water.

Digitized By Roja Muthiah Research Library

இரசபீதலோஷன். Yellow Mercurial Lotion. கொள். இரசபிர குலோறிரம், பதினெட்டுக் கிறேன்; சுண்ணநீர்[1] பத்து அன்சு. கல. சிவ்விசு[2] நோய்கள் பலவற்றுக்கு இது நல்ல இடுமருந்து.

## இரசவமோனகம்.
## AMMONIATED MERCURY.

இது நீ ஐ$_2$ ரத என்ற சின்னத்தாற் குறிக்கப்படும். சவ்வீரத்தைக்[3] கரைத்து அதிலே அமோனத்தை[4] விட இரசவமோனகம் உண்டாகும். லட்சணங்கள். இது மங்கலான வெள்ளைத்தூள். தண்ணீராவது, அலக்கால்[5], ஈதர்[6]களாவது இதிற் சேஷ்டிக்கமாட்டா. சோதனைகள். காரப்பதாசி[7]நீரில் இதைக் கரைத்து மென்சூடுகாட்ட, அமோனத்தைக் கக்கி வெண்மஞ்சள்நிறமடையும். அந்த நீரை வடித்து நீதரிக்கமிலத்தாற்[8] புளிப்பாக்கி வெள்ளி நீதரசைக்[9]கூட்ட வோர்வெண்ணடையலுண்டாகும். தகரகுலோறிர[10]நீரோடு இதைக் காய்ச்சினுல், இரசமணிகள் குலைந்துபோவதால் நரைநிறமாகும். செஞ்சூட்டுக்குக் குறைந்த சூட்டில் முற்றாய் ஆவியாகும்.

தன்மை, உபயோகம். இது ஸ்திமுலம்[11]. இது அன்கெனுய்ப் பூச்சுக்கு மாத்திரம் வழங்கும். பெருந்தேயத்தில் நஞ்சாகும்.

ரசிதம். இரசவமோனகவன்கென். Ointment of Ammoniated Mercury. கொள். இரசவமோனகம் அறுபத்திரண்டு கிறேன்; தமியன்கென்[12], ஒரு அன்சு. திறமாய்ச் சேர்க்கவும்.

நாட்பட்ட சருமநோய்கள் கண்மடற் தாபிதம்[13]காலிககஞ்சந்திவீது[14]என்ற கண்ணோய் முதலியவற்றுக்கு இடுவதற்கு நல்லது. பேன் முதலியவற்றைக் கொல்லவும் உதவும்.

## இரசபச்சையியோதிரம்.
## GREEN IODIDE OF MERCURY.

இதற்குச் சின்னம் ர$_2$ இ$_2$. இரசம் இயோதம் இரண்டையும் கல்லுரலில் விட்டுத் திட்டசீது[15]கூட்டி இரசமணிகள் தோன்றுமற் கலவை பச்சைநிறமாகுந்தனையும் அரைக்க இரசபச்சையியோதிர முண்டாகும். இதை வடிதாளிற் பரவி இருட்டறையிலே பரமாணுவில் உலர்த்தி மங்கலான சீசாவிற் பேணவும். லட்சணங்கள். இது மங்கற் பச்சை நிறமான தூள்; தண்ணீரிற் கரையாது; வெளிச்சம்பட்டால் நிறம் கதிக்கும். சோதனைகள். ஓர் சோதனைக் குழலிலிட்டுப் படிப்படியாய்ச் சூடேற்றினுல் அதிலோர்பங்கு ஆவியாயெழும்பி மஞ்சட் தூளாகப் பிடிக்கும். இதை உரைஞ்சச் சிவப்பாகும். இரசமணிகள் சோதனைக்குழலின் அடியில் அடையும். செஞ்சூட்டுக்குக் குறைந்த சூட்டில் முற்றாய் ஆவியாகும். ஈதரோடு குழலில் விட்டுக் குலுக்கினுல் ஒன்றுங் கரையாது.

தன்மை. அல்திறவம்[16], ஸ்திமுலம்; பெருந்தேயத்தில் அழற்று நஞ்சு.

உபயோகம். ஸ்திருமம்[17]தேகிகளுக்குண்டாகும் ஆதிம[18]உப[19]சிவ்விசுக்கு இது உத்தமமருந்து. மேலும் குஷ்டம்[20], சொரீயசிசு[21], மற்றுந் தொல்லையான

---

1 Lime water. 2 Syphilis. 3 Corrosive sublimate. 4 Ammonia. 5 Alcohol. 6 Ether. 7 Caustic potash. 8 Nitric acid. 9 Nitrate of silver. 10 Chloride of tin. 11 Stimulant. 12 Simple ointment. 13 Opthalmia tarsi. 14 Chronic conjunctivitis. 15 Rectified spirit. 16 Alterative. 17 Struma. 18 Primary. 19 Secondary. 20 Lepra. 21 Psoriasis.

Digitized By Roja Muthiah Research Library

சரும நோய்களுக்கும் நூறல்சி[1], ஈரலின் காவிக நோய்களுக்கும் இது கொடுத்து நயந்தது.

தேயம். ஒரு கிறேன் முதல் மூன்று கிறேன் வரைக்குக் குளிகையாக்கிக்கொடுக்கவும். அன்கெனுக்கு, ஒரு அன்சு தமியன்கெனுக்குப் பதினைந்து கிறேன் முதல் இருபது கிறேன் வீதமாய்ச் சேர்க்கலாம்.

## இரசசேவ்வியோதிரம்.

## RED IODIDE OF MERCURY.

இதற்குச் சின்னம் ரஇ₂. சவ்வீரத்தைப் பதாசியவியோதிரத்தாற்[2] கூறுபடுத்தி இது எடுக்கப்படும். லட்சணங்கள். இது சாதிலிங்க நிறமான கிறிஸ்தல் மா. இதைக் கடுதாசித்தாளில் இட்டு விளக்கின்மேற் பிடித்து மென்சூடுகொட்ட மஞ்சள்நிறமாகும். தண்ணீரில் அரிதாய்க் கரையும். அலக்காலிற்[3] சொற்பமாய்க் கரையும். ஈதரிலும்[4] பதாசியவியோதிரங் கரைத்தநீரிலும் தாராளமாய்க் கரையும். சோதனைகள். சோடா[5]நீரோடு இதை மென்சூட்டிற் காய்ச்ச, செங்கபிலநிறமடையும். அந்த நீரைக் கடுதாசியில் வடித்துத் தெளித்து அமைலம்[6]நீரோடு கலந்து, நீதுரிக்கமிலத்தைக்[7] கூட்டிப் புளிப்பாக்க, ஓர் நீலநிறமான அடையலுண்டாகும். செஞ்சூட்டுக்குக் குறைந்த சூட்டில் முற்றாய் ஆவியாகும், ஈதரில் முற்றாய்க் கரையும்.

தன்மை, உபயோகம். இரச பச்சை இயோதிரத்தைப் போலவே. ஆயினும் அதைப்பார்க்க இது வீறுளது. சவ்வீரத்தைக் கிட்டினது. வெளிமருந்தாயிட்டால் புறங்குசில்[8], பிளிகைவீக்கம், எலிபந்தியசி[9]வீக்கங்களை வற்றப்பண்ணுவதற்கு உவந்தது.

தேயம். கிறேனிற் பதினாறிலொருபங்கிற்றொடங்கிப் படிப்படியாய்க் கூட்டிக் காற்கிறேன் வரைக்கும் குளிகையாக்கியாவது, அலக்காலிற் கரைத்தாவது கொடுக்கலாம்.

ரசிதம். இரசசேவ்வியோதிரவன்கென். Ointment of Red Iodide of Mercury. கொள். இரசசெவ்வியோதிரம், மாவாக, பதினாறு கிறேன்; தமியன்கென்[10] ஒரு அன்சு. திறமாய்க் கல.

கோளவீக்கங்கள், கழலைகள், புறங்குசில், காவிக சரும நோய்களுக்கு இது நல்ல ஸ்திமுல[11] தைலம்.

## இரசநீதுரசமிலநீர்.

## ACID SOLUTION OF NITRATE OF MERCURY.

இது, இரசம் நீதுரிக்கமிலத்திற் கரைந்துண்டாகும் நீர். லட்சணங்கள். நிறமற்றது; மெத்தப் புளிப்புள்ளது; அமிலத்தைத் தடஸ்திப்பதற்கு அதிகமாய்ப் பதாசிநீரை[12]இதற்குக் கூட்ட மஞ்சள்நிறஅடையலுண்டாகும். ஒரு துண்டு அன்னபேதியை இதற்குள்ளே போட்டாற் கொஞ்சநேரத்தால் அந்த உப்பும் அதினருகிலுள்ள நீருங் கருமையாகும். சோதனைகள்.

---

1 Neuralgia. 2 Iodide of potassium. 3 Alcohol. 4 Ether. 5 Soda. 6 Amylum 7 Nitric acid. 8 Bronchocele, வீதனம். 9 Elephantiasis. 10 Simple ointment. 11 Stimulant. 12 Liquor potash.



Digitized By Roja Muthiah Research Library

*விசேஷகிருவிதம் 2.246. இருமடங்கு தண்ணீர் கலந்த ஐருகுலோறிக்கமி லத்துக்1குள்ளே இதிற் சொற்பத்தை விட்டால் யாதொரு அடையலுமுண் டாகாது.*

**தன்மை.** *இது வீறுன காரம், தகனி. உள்ளே யொருபோதுங் கொடு ப்பதில்லை.*

**உபயோகம்.** *கன்சர்ப் புண்கள், உக்கிர புண்களுக்கும் தொல்லையான சருமநோய்கள் சிலவற்றுக்கும் இது இட்டு நயந்தது. என்றாலும் வழக்க மான நோய்களுக்கு இது மெத்த வீறுனது.*

**நசிதம். இரசநீதுரசன்கேன்.** Ointment of Nitrate of Mercury. *கொள். இரசம் நிறைப்படி நாலு அன்சு; நீதுரிக்கமிலம்2 பன்னிரண்டு அ ன்சு; பூதலாடு பதினைந்து அன்சு; ஒலீவுதேல்3, முப்பத்திரண்டு அன்சு. இரசத்தை நீதுரிக்கமிலத்தில் மென்சூட்டில் உருக்கி, லாட்டை எண்ணெ ய்யோடு ஆறு மடங்கு கொள்ளத்தக்க பீங்கான் பாத்திரத்கிலிட்டு நீர்மத்தி யிலாவது ஸ்தீம்மத்தியிலாவது உருக்கி அக்கலவை சூடாயிருக்கையில் இர சக்கலவையைச் சூடாய்க் கூட்டித் திறமாய்க் கலக்கவும். கலவை நுரை த்துப் பொங்காவிட்டால் பொங்குந்தனையும் சூடேற்றவும். ஆறியிறுகுந் தனையும் அதைக் கலக்கவேண்டும்.*

*தாபிதம் முதலிய நாட்பட்ட சரும நோய்களுக்கும் கெட்ட மந்தமான அழுகற் புண்களுக்கும் கண்மடலிலுண்டாகும் நோய்களுக்கும் இது மெ த்த நயந்த ஸ்திமுலமாகும். பிள்ளைகளுக்கும் நொய்ய தோலுடையவர்க ளுக்கும் பின் வரும் தண்மையான அன்கென் பெரும்பாலும் உத்தமம்.*

**இரசநீதுரசுத்தண்ணன்கேன்.** Milder ointment of Nitrate of Mercury. *கொள். இரசநீதுரசன்கென், ஒரு அன்சு; லாடு எழு அன்சு. திற மாய்க் கலக்கவும். வேண்டிய வேளைகளிற் புதிதாய்ச் செய்துகொள்ளவே ண்டும்.*

## வெள்ளி. SILVER.

*சின்னம்,* வெ. *அணுப்பாரம்* 108.

*வெள்ளி ஆகரிகணத்தில் அனேகவிடங்களிலுள்ளது. இது சுயமாயாவது வெள்ளிக்கிளாஞ்சு4 என்ற கல்லாய்க் கெந்தகத்தோடு சேர்ந்தாவது குலோற ம் முதலியவற்றோடு சேர்ந்தாவது பலவகையாகவே இருக்கும். தனி வெள் ளி தேகத்தில் செயலற்றதுபோலும். இது மினுக்கமான வெள்ளை லோகம். 10.53 என்ற விசேஷகிருவிதம் உடையது. 1873 பாகை சூட்டில் உருகு ம். இதைக் கரைப்பதற்கு நீதுரிக்கமிலமே பிரதானம்.*

## பூதவெள்ளி. REFINED SILVER.

*இது புடமிட்ட சுத்த வெள்ளியே.* **சோதனை.** *இதை நீதுரிக்கமிலத்தி ற் கரைத்து அமோனத்தை5 மிச்சமாய்க் கூட்டினுற் பிறக்கு நீர் திறமாவது, கலங்கலாவது காட்டாது.*

---

1 Hydrochloric acid. 2 Nitric acid. 3 Olive oil.
4 Silver glance. 5 Ammonia.

Digitized By Roja Muthiah Research Library

## வெள்ளிநீதுரசு. காடிக்காரம்.
## NITRATE OF SILVER.

இதற் தச் சின்னம், வெநீஅ3. பூதவெள்ளியை நீதுரிக்கமிலத்திற் கரைத்து வெள்ளிநீதுரசை எடுப்பார்கள். லட்சணங்கள். இது நிறமற்ற தகடானசரிகோண பிரிசங்க[1]ளாகவாவது வெண்மையான திரண்ட கம்பிகளாயாவது இருக்கும். திஸ்திலித்த[2]தண்ணீரிலும் திட்டசீதிலுங்[3] கரையும். இதின் கரைவுக்கு ஐருகுலோறிக்கமிலத்தைக்[4] கூட்டத் தயிர்போன்ற வெண்ணடையலுண்டாகும். அதிலே வெளிச்சம்பட அது கறுக்கும். அமோனநீரிலே[5]அது கரையும். ஒரு சிறுத் துண்டைக் கரியின்மேல் வைத்து ஊதுகுழலால் ஊதிக் காய்ச்ச அது உருகிப் படபடென்று வெடித்து மங்கல் வெண்மையான வெள்ளி ஆடையை மாத்திரம் விடும், சோதனைகள். பத்துக் கிறேனை இரண்டு திறாம் திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்து ஐருகுலோறிக்கமிலத்தைக் கூட்டி உண்டாகும் அடையலைக் கழுவித் திறமாய் உலர்த்தினல் அது 8.44 கிறேன் நிறுக்கும். வடித்த நீரை நீர்மத்திகத்தில் வறட்டினல் சேஷமிராது.

தன்மை. இது தொணிகம்[6], அந்திஸ்பசி[7],செரதிவம்[8], பெருந்தேயத்தில் அழற்றுநஞ்சு. கட்டியாய் மேனியிற் பூசினல் காரமும் தகனியுமாகும். கரைத்துப் பூசினல் ஸ்திமுலமாகும்[9].

உபயோகம். இம் மருந்தை உள்ளே கொடுத்து நயங்கண்ட வியாதிகளுள், முற்றிய திசந்தெரி[10],தியறீயம்[11],குத்துப்புளியேப்பத்தோடு கூடிய குன்மம், வாந்திபேதி, இரைப்பைப் புண், கொரீயம்[12],எபிலெப்சி[13],குக்கலின் பிற்பாதம்[14], ஸ்பச ஈளை, இஸ்தேரியைப்[15]பற்றிய தலையிடி,இரசச் சோர்வு என்பவைகளே பிரதானமானவைகள். வெளிமருந்தாய்ப் பொருத்துநீக்கோவை,நாட்பட்ட பொருத்து வீக்கம்,எரிசிப்பிலசு[16],ரதிப்புண்க[17]ளுக்கும்,கெட்ட நாற்றமான அழுகுபுண்களுக்கும் இது உத்தம பூச்சு. மேலும், கனுறீயம்[18], கிலீற்று[19], லுகறீயம்[20],சலப்பைக் கதார்களுக்கு[21]இது கரைத்துப் புகட்டப்படும். குறூப்பு[22], திவ்தீரி[23], அவோனி[24], அக்கரம், உதிரசைனன்கி[25], தொல்லையான சருமநோய்களுக்குக் கரைத்துப் பூசப்படும். சலவாகியிலுண்டாகும் ஒடுக்குக்கும் விந்துக்கழிவுக்கும் வைசூரியிற் தழும்புண்டாகாமற் காப்பதற்கும் இது கட்டியாக இடப்படும். பலவகையான கண்ணோய்க்கு இதைத் தண்ணீரிற் கரைத்து இடுவது நயம். மேலும் விசேதன காயங்கள்[26], விஷப்பாம்புகடி, விசர்மிருகக் கடி முதலிய விஷக்காயங்களைக் காடிக்காரக் கட்டியாற் தீர்ப்பாய்க் கருக்கினல் அது மோசம் வராமற் காக்கும்.

தேயம். கிறேனில் ஆறிலொரு பங்கு முதல் மூன்றிலொரு பங்கு வரைக்கு மெல்லிய மாவாக்கிக் குளிகையாயரைத்துக் கொடுக்கலாம். வெளிமருந்தாய்க் கரைத்து இடுவதற்கு ஒரு அன்சு திஸ்திலித்த தண்ணீருக்கு இரண்டு கிறேன் முதற் பத்துக் கிறேன் வரைக்கும் இன்னுங் கூடவுங் கரைத்துக் கொள்ளலாம்.

---

1 Prism. 2 Distilled water. 3 Rectified spirit. 4 Hydrochloric acid. 5 Ammonia. 6 Tonic. 7 Antispasmodic. 8 Sedative. 9 Stimulant. 10 Dysentery. 11 Diarrhoea. 12 Chorea. 13 Epilepsy. 14 Spasmodic. 15 Hysteria. 16 Erysipelas. 17 Chancre. 18 Gonorrhoea. 19 Gleet. 20 Leucorr hoea. 21 Catarrh. 22 Croup. 23 Diptheria. 24 Aphonia. 25 Cynanche. 26 Dissection wound.

Digitized By Roja Muthiah Research Library

## வெள்ளியக்சிரம்.

## OXIDE OF SILVER.

இதற்குச் சின்னம் வெ$_2$அ. வெள்ளிநீதுரசைச் சுண்ணநீராற் கூறுபடுத்த வெள்ளியக்சிரம் பிறக்கும். லட்சணங்கள். இது கபிலநிறமான தூள்; குறைந்த செஞ்சூட்டுக்கு இது அக்சித[1]வாயுவைக் கக்கி வெள்ளியாகும். நீதுரிக்கமிலத்திலே[2] இது யாதொரு வாயுவைக் கக்காமற் பூரணமாய்க் கரைந்து வெள்ளிநீதுரசின் தன்மையை உடைய நீராகும். சோதனை. 29 கிறேனைச் சிவக்கக் காய்ச்ச 27 கிறேன் வெள்ளி மிஞ்சும்.

**தன்மை.** வெள்ளிநீதுரசைப் போலவும்; அதைப்பார்க்க இது செயலிற் தண்மையானது. தோல் நீலம்பாரியாமல் அதிலும் இதை நெடுநாளைக்குக் கொடுக்கலாம். மேலும் இது அங்தெல்மிந்தி.

**உபயோகம்.** குன்மம், கஸ்திறல்சி[3], கஸ்திறுடைன்[4], பைறோசிஸ்[5]. இரைப்பைப் புண், இரத்த வாந்திகளுக்கு இது உபயோகமானது. அசத்துவ[6]இரத்தப்பெருக்கு, மெனுறீயங்களுக்கு[7] இது கொடுத்து நயந்தது. தானிகமாய்ச் சிவ்விசுப்[8] புண்கள் மற்றுங் தொல்லையான புண்களுக்கும், சிருங்கைப்[9] புண்பாட்டுக்கும் கண்ணோய் முதலியவற்றுக்கும் இடப்படும்.

**தேயம்.** அரைக்கிறேன் முதல் இரண்டு கிறேன் வரைக்குக் குளிகையாக்கி நாள் இரண்டுமூன்றுமுறை கொடுக்கலாம். வெளிப்பிரயோகத்துக்கு அன்கென்களை ஒரு அன்சு தமியன்கெனுக்கு இதில் முப்பதுகிறேன் முதல் நாற்பது கிறேன் வரைக்கு வீதமாக்கிச் செய்துகொள்ளலாம்.

---

1 Oxygen. 2 Nitric acid. 3 Gastralgia. 4 Gastrodyne. 5 Pyrosis. 6 Atonic. 7 Menorrhoea. 8 Syphilis. 9 Cornea.

Digitized By Roja Muthiah Research Library

# கெமிஸ்த சோதனையில் வழங்கும் பதார்த்தங்களும் நீர்களும்.

## ARTICLES AND SOLUTIONS EMPLOYED IN CHEMICAL TESTING.

அலக்கால்—Alcohol. *தமிஅலக்கால் 276 ம் பக்கங் காண.*

பெஞ்சோல்—Benzol, கா$_{6}$ ஐ$_{6}$. *இது கற்கரித்தாரினின்று எடுக்கப்படுகிற, நிறமற்ற, அத்திரநீர். 0·85 என்ற விசேஷகிருவிதமுடையது.*

போறசிக்கமிலம்—Borocic acid, ஐபோஅ$_{2}$ ஐ$_{2}$ அ. சோதனைகள். *அலக்காலிற் கரையக்கூடியது. அக்கரைவு பச்சைச் சுவாலைகொண்டு எரியும்.*

பாரியதுலோறிரம்—Chloride of Barium, பாது$_{2}$ 2ஐ$_{2}$ அ.

செம்புப்பத்திரம்—Copper Foil. *சுத்த செம்புலோகத்தின் மெல்லிய பிரவையான தகடுகள்.*

தங்கம்—Pure gold. *லோகஅசுத்தங்களில்லாத சுத்தப் பொன்.*

சோடவதசல்விசு—Hyposulphite of Soda, சோ$_{2}$ஐ$_{2}$கே$_{2}$அ$_{4}$ 4ஐ$_{2}$ அ. சோதனை. *இதில் 24.8 கிறேன், இயோதபருமவிலயனத்தில் 100 கிறேனளவின் நிறத்தைக் கெடுக்கும்.*

இந்திகு—Indigo, கா$_{8}$ஐ$_{5}$நீஅ. *அவுரிஎன்ற பூண்டினங்களினின்று எடுக்கும் ஓர் நீல வருணம்.*

ஐசிங்கிளாசு—Isinglass. 292 *ம் பக்கங்காண.*

லிற்மஸ்—Litmus. 272 *ம் பக்கம் காண.*

சுத்த அக்சலிக்கமிலம்—Purified Oxalic acid, ஐ$_{2}$கா$_{2}$அ$_{4}$, 2ஐ$_{2}$அ. கொள். *வியாபார அக்சலிக்கமிலம் ஒரு இருத்தல்; திஸ்திலித்த கொதிவெந்நீர், முப்பது அன்சு. கரைத்துக் கடுதாசியில்வடித்துக் கிரிஸ்த*[1]*லுண்டாகும்படி வைக்கவும். அப்பால் நீரைத் தெளித்தூற்றிக் கிரிஸ்தல்களைக் கண்ணறையான செங்கல்லின்மேல் வைத்த வடிதாளிற் பரவிப் பரமாணுவில் உலர்த்தவும்.* சோதனை. 320 *பாகைக்கு மேற்பட்ட சூட்டில் முற்றாய்க் கூறுபட்டு ஆவியாகும்.*

அமோனவக்சலசு—Oxalate of Ammonia. (நீஅ$_{4}$)$_{2}$ கா$_{2}$ அ$_{4}$ ஐ$_{2}$ அ. கொள். *சுத்தமான அச்சலிக்கமிலம், ஒரு அன்சு; திஸ்திலித்த கொதிவெந்நீர், எட்டு அன்சு; அமோனகாபனசு, போதியது. அக்சலிக்கமிலத்தை வெந்நீரிற் கரைத்து, அக் கரைவைக் கொதிசூட்டிற் தடஸ்தித்து அது சூடாயிருக்கையிற் கடுதாசியில் வடித்து ஆறும்போது கிரிஸதல்கள் விளையத்தக்கதாய் வைக்கவும்.*

ஜிப்சம்—Gypsum. *இது சூட்டினூற் தண்ணீர் அகற்றப்பட்ட விளைசுண்ணசல்வசு*[2]*. சின்னம் கசேஅ$_{4}$ 2ஐ$_{2}$அ.*

பிலாடினக் கறுப்பு—Platinum Black. *பிலாடினபிரகுலோறிரத்*[3]*தைத் தண்ணீரிற்கரைத்து அதற்குச் சோடகாபனசை மிச்சமாயும், சர்க்கரையைச்*

---

[1] Crystal. [2] Sulphate of Lime. [3] Perchloride of Platinum.

Digitized By Roja Muthiah Research Library

சொற்பமாயுஞ் சேர்த்துக் கருமடையலுண்டாகுந்தனையுங் காய்ச்சி, அந்த அடையலைக் கழுவி உலர்த்திக்கொள்ளவும். இதுவே நுண்ணிய மாவாகிய பிலாடினக் கறுப்பு.

பதாசிசெம்புநூசியசு—Red Prussiate of Potash, ப$_6$ இரு$_2$ கா$_{12}$ நீ$_{12}$. சோதனை. இதின் நீர்க்கரைவு அயபிரசல்வசுக்கு[1] அடையல்காட்டாது.

நீரற்ற செம்புசல்வசு—Anhydrous Sulphate of Copper. கூகேஅ$_4$. இது 400 பாகை சூட்டினால் நீரகற்றப்பட்ட துரிசி. லட்சணங்கள். இது மஞ்சள் வெண்மையான தூள்; தண்ணீரால் நனைக்க நீலமாகும்.

அயசல்விரம்—Sulphide of Iron. இருகே. கொல்லனுலையில் வெண்மைகொள்ளும்படி காய்ச்சின இரும்புக்கம்பியின் தலைப்பைக் கெந்தகத் தடியிற் தொட்டு உண்டாகும் அயசல்விரத்தைத் தண்ணீர்ப் பாத்திரத்துட் பாயவிடலாம். அல்லது மூடிய ஓர் குகையிலே 56 பங்கு அரபொடியை 32 பங்கு கெந்தகத்தோடு காய்ச்சி அதை எடுக்கலாம்.

ஐருசல்வுரிக்கமிலம்—Sulphuretted Hydrogen. ஐ$_2$கே. கொள். அயசல்விரம், அரை அன்சு; தண்ணீர் நாலு அன்சு; சல்வுரிக்கமிலம் போதியது. அயசல்விரத்தையும் தண்ணீரையும் ஓர் வாயுச் சீசாவில் விட்டு அதை இருதுவாரமுள்ள சடையால் அடைத்து அத் துவாரங்களுள் ஒன்றின்வழியாய், வாயுப்புகமாட்டாத போதிய நீளமுள்ள வோர் புனலைத் தண்ணீருள் தொடும்படி செலுத்தி மற்றதின் வழியாய் வாயு வெளிப்படுவதற்கு ஓர் குழலைச் செலுத்தவும். வேண்டியபடி ஐருசல்வுரிக்கமிலமுண்டாவதற்குச்சல்வுரிக்கமிலத்தைப் புனல்வழியாய் அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாய் விடவும்.

கிறனுலத்தகரம்—Granulated Tin. தகரத்தை உருக்கித் தண்ணீருக்குள்ளே வார்க்க அது சிறுத்துண்டுகளாகிய மணிகளாய் வரும். இதுவே கிறனுலத்தகரம்.

மஞ்சள்—Turmeric. 243 ம் பக்கங் காண.

பதாசிபீதபுநூசியசு—Yellow Prussiate of Potash. ப$_4$இருகா$_6$நீ$_6$3ஐ$_2$அ. சோதனைகள். இதின் நீர்க்கரைவுக்கு அயபிரசல்வசைக் கூட்டக் கருநீல அடையலுண்டாகும்; அதற்குச் செம்புசல்வசைக் கூட்ட, செங்கற்சிவப்பு நிற அடையலுண்டாகும்; ஈயவசிதசைக் கூட்ட வெண்ணடையலுண்டாகும்.

## சோதனைநீர்கள். TEST SOLUTIONS.

செம்பசிதசுநீர்—Solution of Acetate of Copper. கொள். வியாபாரச் செம்பதவசிதசு, மாவாக, அரை அன்சு; அசிதிக்கமிலம் ஒருஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் போதியது. அமிலத்துக்கு தண்ணீரில் அரைஅன்சைக் கூட்டி யக்கலவைநீரைக் காய்ச்சி 212 பாகைக்கு மேற்படாத சூட்டிலே செம்பதவசிதசைக் கரைத்து இடைக்கிடை கலக்கி, உலர்சேஷமுண்டாகுந்தனையுங் காய்ச்சவும். இச்சேஷத்தை நாலுமடங்கு திஸ்திலித்த கொதிவெந்நீரிற் கரைத்து, வெந்நீரிலே இன்னுங் கூட்டி, அந்த நீரை ஐந்து அன்சாக்கிக் கடுதாசியில் வடித்துக்கொள்ளவும்.

பதாசியசிதசுநீர்—Solution of Acetate of Potash. கொள். பதாசி

1 Persulphate of Iron.

Digitized By Roja Muthiah Research Library

யசிதசு, அரை அன்சு; திஸ்திலித்ததண்ணீர் ஐந்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

சோடவசிதசுநீர்—Solution of Acetate of Soda, கொள். சோடவசிதசு, அரைஅன்சு; திஸ்திலித்த தண்ணீர், ஐந்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

அல்புமின்நீர். Solution of Albumen. 294 ம் பக்கங் காண.

வெள்ளியமோனநீதுரசுநீர்—Solution of Ammonio-nitrate of Silver. கொள். வெள்ளிநீதுரசு[1], கிறிஸ்தல்களாக, கால்அன்சு; அமோனநீர்[2] அரைஅன்சு அல்லது போதியது; திஸ்திலித்த தண்ணீர்[3], போதியது. வெள்ளிநீதுரசை எட்டு அன்சு தண்ணீரிற் கரைத்து, அதிலே முதலுண்டாகுமடையல் எறக்குறைய முற்றாய்க் கரையுந்தனையும் அமோனநீரைக் கூட்டிக் கடுதாசியில் வடிக்கவும். அப்பால் திஸ்திலித்த தண்ணீரைக் கூட்டி அளவைப் பத்து அன்சாக்கிக்கொள்ளவும்.

செம்பமோனசல்வசுநீர்—Solution of Ammonio-sulphate of Copper. கொள். செம்புசல்வசு[4], கிறிஸ்தல்களாக, அரைஅன்சு; அமோனநீர் போதியது; திஸ்திலித்ததண்ணீர் போதியது. செம்புசல்வசை எட்டு அன்சு தண்ணீரிற் கரைத்து, அதிலே முதலுண்டாகு மடையல் எறக்குறையக் கரையுந்தனையும் அதற்கு அமோனநீரைக் கூட்டிக் கடுதாசியில் வடித்து, திஸ்திலித்த நீரைக் கூட்டி அளவைப் பத்து அன்சாக்கிக் கொள்ளவும்.

மக்னீசியமோனசல்வசுநீர்—Solution of Ammonio-Sulphate of Magnesia. கொள். மக்னீசிசல்வசு[5], ஒரு அன்சு; அமோனதகுலோறிரம்[6], அரைஅன்சு; அமோனநீர் அரைஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் போதியது. மக்னீசிசல்வசையும் அமோனதகுலோறிரத்தையும் எட்டுஅன்சு தண்ணீரிற் கரைத்து, நீரினளவு பத்துஅன்சாய் வரத்தக்கதாய் அமோனநீரையும் போதிய திஸ்திலித்த தண்ணீரையுங் கூட்டித் தேவையாகிற் கடுதாசியில் வடித்துக் கொள்ளவும்.

போறசிக்கமிலநீர்—Solution of Boracic acid. கொள். போறசிக்கமிலம், ஐம்பதுகிறேன்; திட்டசீது ஒருஅன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

புறோமநீர்—Solution of Bromine. கொள். புறோமம், பத்துமினிம்; திஸ்திலித்ததண்ணீர், ஐந்து அன்சு. சரியான அடைப்புள்ளவோர் சீசாவுக்குள்ளே புறோமத்தை விட்டு, அதன்மேற் தண்ணீரை வார்த்துப் பலமுறை குலுக்கவும். வெளிச்சம் படாதபடி வைக்கவும்.

அமோனகாபனசுநீர்—Solution of Carbonate of Ammonia. கொள். அமோனகாபனசு. சிறுத்துண்டுகளாக, அரைஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் பத்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

அமோனதகுலோறிரநீர்—Solution of Chloride of Ammonium. கொள். அமோனதகுலோறிரம், ஒரு அன்சு; திஸ்திலித்த தண்ணீர், பத்துஅன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

பாரியகுலோறிரநீர்—Solution of Chloride of Barium. கொள். பாரியகுலோறிரம், கிறிஸ்தல்களாக, ஒருஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் பத்துஅன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

---

1 Nitrate of silver. 2 Solution of ammonia. 3 Distilled water 4 Sulphate of copper. 5 Sulphate of magnesia. 6 Chloride of ammonium.

Digitized By Roja Muthiah Research Library

கல்சிதுலோறிரநீர்—Solution of Chloride of Calcium. கொள். கல்சிதுலோறிரம், ஒருஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் பத்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

கல்சிதுலோறிரபூர்த்தநீர்—Saturated Solution of Chloride of Calcium. கொள். கல்சிதுலோறிரம், நாலு அன்சு; திஸ்திலித்த தண்ணீர், ஐந்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

பொற்பிரதுலோறிரநீர்—Solution of Per chloride of Gold. கொள். மெல்லிய சுத்தப்பொற்பத்திரம், அறுபதுகிறேன்; நீதுரிக்கமிலம்[1], ஒன்றரை அன்சு; ஐருகுலோறிக்கமிலம்[2], ஏழுஅன்சு; திஸ்திலித்ததண்ணீர், போதியது; நீதுரிக்கமிலத்தையும் ஐருகுலோறிக்கமிலத்தில் ஆறுஅன்சையும் நாலுஅன்சு தண்ணீரோடு கலந்து ஓர் குடுக்கைக்குளிட்டு அதிலே பொற் பத்திரத்தைப் போட்டுக் கரையவிடவும். அக்கரைவுக்குச் சேஷமான ஒரு அன்சு ஐருகுலோறிக்கமிலத்தையுங் கூட்டி, அமிலஆவிபறிவதொழியுந்தனையும் 212 பாகைக்கு மேற்படாத சூட்டில் உலர்த்தி வரும்பொற்குலோறிரத்தை ஐந்து அன்சு திஸ்திலித்த தண்ணீரிற் கரைக்கவும். இந்த நீரை நன்றாயடைத்த சீசாவிற் பேணவேண்டும்.

தகரபுரதுலோறிரநீர்—Solution of Protochloride of Tin. கொள். தகரம், தூளாக ஒருஅன்சு; ஐருகுலோறிக்கமிலம், மூன்று அன்சு; திஸ்திலித்த தண்ணீர் போதியது. அமிலத்தை ஒரு அன்சு தண்ணீரோடு ஒரு குடுக்கைக்குள் விட்டு அதோடு தகரத்தைச் சேர்த்து, ஆவி கக்குதலொழியுந்தனையும் மென்சூடேற்றவும். அளவை ஐந்து அன்சாகப் போதிய தண்ணீரை அத்தோடு கூட்டி அந்த நீரையுங் கரையாத தகரத்தையும் இறுக்கமான அடைப்புள்ள சீசாவில் வார்த்துவைக்கவும்.

ஜெலதின்நீர்—Solution of Gelatine. கொள். ஐசிங்கிளாசு[3], செதில்களாக ஐம்பதுகிறேன்; திஸ்திலித்த கொதிநீர், ஐந்துஅன்சு. கலந்து நீர்மத்திகத்[4]தில் வைத்து அடிக்கடி கலக்கி அரைமணிநேரமாகக் கரைத்து திஸ்திலித்ததண்ணீரால் நனைத்த சுத்தமான சணற்பஞ்சில் வடிக்கவும்.

பதாசியயோதசுநீர்—Solution of Iodate of Potash. கொள். இயோதம், ஐம்பதுகிறேன்; பதாசிகுலோறசு, ஐம்பதுகிறேன்; நீதுரிக்கமிலம் எண்பது மினிம்; திஸ்திலித்ததண்ணீர் பத்தரை அன்சு. இயோதத்தையும் பதாசிகுலோறசையும் மாவாக அரைத்து, அக்கலவையையோர் குடுக்கைக்குள்ளே போட்டு அதின்மேலே நீதுரிக்கமிலத்தாற் புளிப்பாக்கப்பட்ட அரை அன்சு தண்ணீரை வார்த்து, இயோதத்தின் நிறமற்றுப்போகுந்தனையும் மென்சூட்டிற் கரைக்கவும். அதை ஒருமினி வரைக்குக் கொதிப்பித்து ஓர் குகையில் வார்த்து 212 பாகை சூட்டிற் பூரணமாயுலர்த்தவும். கடைசியாய்ச் சேஷத்தைப் பத்துஅன்சு திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்துக் கடுதாசியில் வடித்து சீசாவில்விட்டு நன்றாயடைத்துப் பேணவும்.

பதாசியவியோதிரநீர்—Solution of Iodide of Potassium. கொள். பதாசியவியோதிரம், ஒரு அன்சு; திஸ்திலித்த தண்ணீர் பத்துஅன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

அமோனவக்சலசுநீர்—Solution of Oxalate of Ammonia. கொள். அமோனவக்சலசு, அரைஅன்சு; திஸ்திலித்த வெந்நீர், அரைநாழி. கலந்து கடுதாசியில் வடிக்கவும்.

---

1 Nitric acid. 2 Hydrochloric acid. 3 Isinglass. 4 Water bath.

Digitized By Roja Muthiah Research Library

பிலாடினபிரகுலோறிரநீர்—Solution of Perchloride of Platinum. கொள். மெல்லிய பிலாடினத்தகடு கால்அன்சு; நீதுரிக்கமிலம்[1], போதியது; ஐருகுலோறிக்கமிலம்[2], போதியது; திஸ்திலித்த தண்ணீர், எழுஅன்சு. ஒரு அன்சு நீதுரிக்கமிலத்தை நாலுஅன்சு ஐருகுலோறிக்கமிலத்தோடும் இரண்டு அன்சு தண்ணீரோடுங் கலந்து அக்கலவையைப் பிலாடினத்தோடு ஓர் சிறுக் குடுக்கைக்குள்ளிட்டு மெலச்சூட்டிற் கரைத்து, தேவையாகில் அமிலங்களை மேற்படி வீதமாகக் கலந்து பிலாடினங் கரையுந்தனையும்விட்டு அப்பால் அக்கரைவை ஓர் பீங்கான் பாத்திரத்தில் விட்டு அதற்கு ஐருகுலோறிக்கமிலத்தில் ஒரு திறமைக் கூட்டி, அமிலவாவிபறிதலொழியுந்தனையும் நீர்மத்திகத்தில் வறட்டவும். வரும்சேஷத்தை மிச்சமான ஐந்துஅன்சு திஸ்திலித்த தண்ணீரிற் கரைத்துக் கடுதாசியில்வடித்துச் சீசாவிலடைத்துவைக்கவும்.

சோடபாஸ்வசுநீர்—Solution of Phosphate of soda. கொள். சோடபாஸ்வசு கிரிஸ்தல்களாக, ஒருஅன்சு; திஸ்திலித்த தண்ணீர் பத்துஅன்சு. கரைத்துக் கடுதாசில் வடிக்கவும்.

பதாசிசெம்புருசியசுநீர்—Solution of Red Prussiate of Potash. கொள். பதாசிசெம்புருசியசு, கிரிஸ்தல்களாக கால் அன்சு; திஸ்திலித்த தண்ணீர், ஐந்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

இந்திகுசல்வசுநீர்—Solution of Sulphate of Indigo. கொள். காய்ந்த இந்திகு, மாவாக, ஐந்துகிறேன்; சல்வுரிக்கமிலம்[3], பத்துஅன்சு. இந்திகுமாவைச் சல்வுரிக்கமிலத்தில் ஒருதிறமோடு ஓர் சிறிய சோதனைக் குழலிற் கலந்து, நீர்மத்திகத்தின்[4] சூட்டை ஒருமணிநேரமாக ஏற்றி, அந்த நீலநிற நீரை மிச்சமான அமிலத்துக்குள்ளே வார்த்துக் குலுக்கி, கரையாத இந்திகு அடைந்தபின் தெளிந்த நீரை இறுத்துச் சீசாவிலடைத்துவைக்கவும்.

அயசல்வசுநீர்—Solution of Sulphate of Iron. கொள். கிறனுல அயசல்வசு, பத்துக் கிறேன்; திஸ்திலித்த கொதிநீர் ஒரு அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும். இந்த நீரை வேண்டிய வேளைகளிற் புதிதாய்ச் செய்துகொள்ளவேண்டும்.

சுண்ணசல்வசுநீர்—Solution of Sulphate of Lime. கொள். சுண்ணசல்வசு, கால் அன்சு; திஸ்திலித்த தண்ணீர், அரைநாழி. சுண்ணசல்வசைப் பீங்கானுரலிலே இரண்டு அன்சு தண்ணீரோடு இட்டுச் சில மினி நேரமாக அரைத்து அக் கலவையை மிச்சமான தண்ணீரோடு, அரைநாழி கொள்ளத்தக்கவோர் சீசாவுக்குள் விட்டு பலமுறை திறமாய்க் குலுக்கிக் கரையாத சுண்ணசல்வசு அடையத்தக்கதாய் வைக்கவும். அடைந்தபின் கடுதாசியில் வடிக்கவும்.

அமோனதசல்விரநீர்—Solution of Sulphide of Ammonium. கொள். அமோனநீர்[5], ஐந்து அன்சு. அமோன நீரில் மூன்றுஅன்சை யோர் சீசாவுக்குள்ளிட்டு அதற்குள்ளே ஐருசல்வுரிக்கமில வாயுவை[6] அது உறிஞ்சப்படுந்தனையுந் தாரை தாரையாய்ச் செல்லவிட்டு அப்பால் மிச்சமான அமோன நீரைக் கூட்டி அந்த நீர் முழுவதையும் இறுக்கமான அடைப்புள்ள சீசாவில் விட்டு வைக்கவும்.

தாத்தரிக்கமிலநீர்—Solution of Tartaric acid. கொள். தாத்தரிக்

1 Nitric acid. 2 Hydrochloric acid. 3 Sulphuric acid. 4 Water bath.
5 Solution of ammonia. 6 Hydro sulphuric acid gas.



Digitized By Roja Muthiah Research Library

கமிலம், கிரிஸ்தல்களாக ஒரு அன்சு; டின்திலித்த தண்ணீர் எட்டு அன்சு; தி ட்டசிதா இரண்டு அன்சு. தாத்தரிக்கமிலத்தைத் தண்ணீரிற் கரைத்துத் தி ட்டசிதைக் கூட்டி அந்நீரை நன்றுயடைத்த சீசாவில் விட்டுவைக்கவும்.

பதாசிபீதபுருசியகநீர்—Solution of Yellow Prussiate of Potash. கொள். பதாசிபீதபுருசியசு, கிரிஸ்தல்களாக, கால்அன்சு. திஸ்திலித்த த ண்ணீர் ஐந்து அன்சு. கரைத்துக் கடுதாசியில் வடிக்கவும்.

## பருமமதிப்புக்குச் சோதனைநீர்கள்.

## TEST SOLUTIONS FOR VOLUMETRIC ESTIMATIONS.

பிறித்தனி நிறைகள் அளவைகளைக்கொண்டாவது மெற்று[2]நிறைகள் அள வைகளைக்கொண்டாவது பரும மதிப்புகளை அறியலாம். விலயனங்களா கிய நீர்கள் ஒரே பெலனுயிருக்கத்தக்கதாகவும் எந்த நிறை அளவுகளை வழங் கினும் சோதிக்கப்படும் பதார்த்தங்களின் பிரமாணங்களைக் குறிக்குமிலக் கங்களையாவது சோதனைக்கு வேண்டிய நீர்களைக்குறிக்குமிலக்கங்களையாவ து மாற்றவேண்டியதாய் வராதபடிக்கும் அந்த நீர்கள் ஒழுங்குபண்ணப்பட் டிருக்கின்றன.

பிறித்தனி வகையாய்ச் சோதிக்கப்படும் பதார்த்தங்களின் பிரமாணங்கள் கிறேன் என்ற படியாற் குறிக்கப்படும். சோதனைக்கு வழங்குநீர்களின் பி ரமாணமோ கிறேனளவாற் குறிக்கப்படும். கிறேனளவென்பது திஸ்திலித் த தண்ணீரில் ஒருகிறேனது பருமையேயாகும்.

மெற்றுவகையின்படி சோதிக்கப்படும் பதார்த்தங்களின் பிரமாணங்கள் கிறும்[3] என்றபடியாற் குறிக்கப்படும். சோதனையில் வழங்கு நீர்களின் பிர மாணமோ, கனசெந்திமெற்று[4] என்ற அளவாற் குறிக்கப்படும். கனசெந்தி மெற்று என்பது திஸ்திலித்த தண்ணீரில் ஒருகிறுமது பருமையேயாகும்.

கிறேனளவுக்கும் கிறேனுக்குமுள்ள சேர்மானமே கனசெந்திமெற்றுக்கும் கிறுமுக்குமிருப்பதால் ஒரு நிறையளவு வகைக்குப் பதிலாக மற்றதை வழ ங்கலாம். பிறித்தனிநிறையிலுள்ள கிறேனைப்பார்க்க கிறும் ஏறக்குறையப் பதினைந்தரை மடங்கு அதிகமானதாயிருப்பது மாத்திரமே வித்தியாசம்.

பிறித்தனி நிறையளவுக்குப் பதிலாக மெற்றுநிறையளவுகளை வழங்குவதி ல், தசமபுள்ளிகளை அரக்கி இலக்கங்களின் விலையைப் பத்திலொன்றுக்கிக் கொள்வது வசதியென்று பரீட்சையிற் காணப்படும்.

சோதனைநீர்களைச் செய்து வழங்குவதற்குப் பின்வருமணியங்கள்தேவை.

பிறித்தனிநிறையளவுகளுக்கு வேண்டியவை.

1. கழுந்திலோர்வரிமட்டுக்கு நிரப்பினல் 60° பாகை சூடான திஸ்திலித் த தண்ணீரிற் சரியாய் 10,000 கிறேன் கொள்ளத்தக்கவோர் குடுக்கை[5]. ஆ கையால் இக்குடுக்கையின் கொள்ளளவு 10,000 கிறேனளவாகும்.

2. பாகையிட்ட திரண்ட சாடி. அதை 0 என்ற வரிமட்டும் திஸ்திலி த்த தண்ணீரால் நிரப்பினல் 10,000 கிறேன்கொள்ளும். அது 100 சமப ங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

3. பாகையிட்ட கண்ணுடிக்குழல். அதை 0 என்ற வரிமட்டும் திஸ்திலி த்த தண்ணீரால் நிரப்பினல் அது 1,000 கிறேனைக்கொள்ளும். அது

Rectified spirit 2 Metre. 3 Gramme. 4 Cubic centimetre. 5 Flask.

Digitized By Roja Muthiah Research Library

100 சமபங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொருபங்கும் 10 கிறே னளவுக்குச் சரியாகும்.

மெற்றுநிறையளவுகளுக்கு வேண்டியவை.

1. கழுத்திலோர்வரிமட்டுக்கு நிரப்பினுல் 1000 கனசெந்திமெற்று[1], கொள்ளத்தக்கவோர் கண்ணாடிக்குடுக்கை.

2. பாகையிட்ட திரண்ட சாடி. அதை 0 என்ற மட்டத்துக்கு நிரப்பினுல் 1000 கனசெந்திமெற்றுக் கொள்ளும். அது 100 சமபங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

3. பாகையிட்ட குழல். அதை 0 என்ற மட்டத்துக்கு நிரப்பினுல் 100 கனசெந்திமெற்றுக் கொள்ளும். 100 சமபங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

(ஒரு கனசெந்திமெற்று, என்பது பாரனைப்படி[2] 60 பாகையான திஸ்திலித்த தண்ணீரில் ஒரு கிறும் பருமையேயாகும். 1000 கனசெந்திமெற்று என்பது முக்காலே அரைக்கால் நாழிக்குச்சரி.)

பருமவிலயனங்களை வழங்கமுன் அவை வகத்துக்கொரேசரியான பெலனுயிருக்கத்தக்கதாய் அவைகளைக் குலுக்கிக்கொள்ளவேண்டும். அவைகளை நன்ருயடைத்த சீசாக்களிற் பேணவேண்டும். அளவுகளையெல்லாம் 60 பாகையில் அளக்கவேண்டும்.

பதாசிதுவிகுறேமசுப் பருமவிலயனம்—Volumetric Solution of Bichromate of Potash. (பதாசிதுவிகுறேமசு, $ப_2$ குறே$_2$ அ$_7$=295) கொள். பதாசிதுவிகுறேமசு, 147.5 கிறேன்; திஸ்திலித்த தண்ணீர் போதியது. பதாசிதுவிகுறேமசை 10,000 கிறேன் கொள்ளுங் குடுக்கைக்குள்ளே போட்டு, அக்குடுக்கையின் அரைவாசியைத் தண்ணீரால்நிரப்பி அந்த உப்பைக் கரையவிட்டு அப்பால் அது சரியாய் 10,000 கிறேனளவு பருமையாகுந்தனையும் தண்ணீரைக் கூட்டவும். இந்த விலயனத்தில் 10,000 கிறேனளவில் பதாசிதுவிகுறேமசு 14.75 கிறேன் இருக்கும்.

சோடவதசல்விசுப்பருமவிலயனம்—Volumetric Solution Hyposulphite of Soda. (சோடவதசல்விசுக்கிரிஸ்தல், சோ$_2$ ஐ$_2$ கே$_2$ அ$^4$ 4ஐ$_2$ அ=248) கொள். சோடவதசல்விசு, கிரிஸ்தல்களாக, 280 கிறேன், திஸ்திலித்த தண்ணீர் போதியது. சோடவதசல்விசை 10,000 கிறேனளவு தண்ணீரிற் கரைத்துப் பாகையிட்டவோர் குழலை இக்கரைவால் நிரப்பி இயோதபருமவிலயனத்தில் 1000 கிறேனளவின கபிலநிறங்கெடுந்தனையும் அதற்குள்ளே இக்கரைவைக் கவனமாய் ஒழுக்கிவிடவும். இம் மாறுதலுண்டாவதற்கு வேண்டியதாயிருந்த கிறேனளவின் இலக்கத்தை n என்று குறித்துக் கொள்ளவும். அப்பால் இந்த விலயனத்தில் 8000 கிறேனைப் பாகையிட்டவோர் சாடிக்குள்ளே விட்டு இந்த அளவு $\frac{8000\times1000}{n}$ என்ற கிறேனளவாய்வருந்தனையும் அதற்குத் திஸ்திலித்ததண்ணீரைக் கூட்டவும். உதாரணமாய், n என்றது 950 க்குச்சரியானுல் 8000 கிறேனளவுக் 8,421 கிறேனளவாகுந்தனையும் அதற்குத் தண்ணீர் கூட்டவேண்டும். $\frac{8000\times1000}{950}=8421.$

இந்த விலயனத்தில் 1000 கிறேனிலே சோடவதசல்விசு 24.8 கிறேன் இருக்கும். அது 12.7 கிறேன் இயோதத்தைச் சரிக்கட்டும்.

---

1 Cubic centimetre. 2 Fahrenheit.

Digitized By Roja Muthiah Research Library

இயோதபருமவிலயனம்—Volumetric Solution of Iodine. (இயோதம், இ=127.) கொள். இயோதம் 127 கிறேன்; பதாசியவியோதிரம் 180 கிறேன்; திஸ்திலித்ததண்ணீர் போதியது பதாசியவியோதிரத்தையும் இயோதத்தையும் 10000 கிறேன்கொள்ளுங் குடுக்கைக்குள்ளிட்டு அக் குடுக்கையில் மூன்றத்திருபங்கு வரைக்குத் திஸ்திலித்த தண்ணீரால்நிரப்பி நன்றாய்க் கரையுந்தனையும் மெதுவாய்க் குலுக்கி, அக் கரைவுநீர் சரியாய் 10,000 கிறேனளவாகுந்தனையும் அதற்குத் திஸ்திலித்த தண்ணீரைக் கூட்டவும். இவ்விலயனத்தில் 1000 கிறேனில் 127 கிறேன் இயோதம் இருக்கும்.

வெள்ளிநீதுரசுப்பருமவிலயனம்—Volumetric Solution of Nitrate of Silver. (வெள்ளிநீதுரசு, வெநீஅ$_3$=170). கொள். வெள்ளிநீதுரசு 170 கிறேன்; திஸ்திலித்த தண்ணீர் போதியது; வெள்ளிநீதுரசை 10,000 கிறேனளவுகொள்ளுங் குடுக்கைக்குள்ளிட்டு அக் குடுக்கையை அரைவாசிவரைக்குத் தண்ணீரால் நிரப்பி உப்பைக் கரையும்படி விடவும் அப்பால் அந்த நீர் சரியாய் 10 000 கிறேனளவாய் வருந்தனையும் திஸ்திலித்த தண்ணீரைக் கூட்டவும். இந்த விலயனத்தை நன்றாயடைத்த மஞ்சற்சீசாவில் விட்டு வைக்கவேண்டும். இதில் 10,000 கிறேனளவிலே வெள்ளிநீதுரசு 17·0 கிறேன் இருக்கும்.

அக்சலிக்கமிலபருமவிலயனம்—Volumetric Solution of Oxalic acid. (கிறிஸ்தலான அக்சலிக்கமிலம, ஐ$_2$ கா$_2$ அ$_4$, 2ஐ$_2$அ=126.) கொள். தூளாகாமல் கல்லாய்க் காய்ந்த சுத்த அக்சலிக்கமில கிறிஸ்தல்கள் 630 கிறேன்; திஸ்திலித்த தண்ணீர் போதியது. அக்சலிக்கமிலத்தை 10 000 கிறேன்கொள்ளுங் குடுக்கைக்குட் போட்டு அக் குடுக்கையை மூன்றிலிருபங்கு வரைக்குத் தண்ணீரால் நிரப்பி அமிலத்தைக் கரையவிட்டு நீர் சரியாய் 10.000 கிறேனளவு பருமையாய் வருந்தனையும் அதற்குத் தண்ணீரைக் கூட்டவும். இந்தவிலயனம் 1000 கிறேனிலே 63 கிறேன் அக்சலிக்கமிலம் இருக்கும்.

சோடபருமவிலயனம்—Volumetric Solution of Soda. (சோடைரசு[1]. சோஐஅ=40) கொள். சோடநீர் போதியது; திஸ்திலித்த தண்ணீர் போதியது. பாகையிட்ட குழலைச் சோடநீரால் நிரப்பிக்கொண்டு சுத்த அக்சலிக்கமிலத்தில் 63 கிறேனை இரண்டு அவுன்சு தண்ணீரிற் கரைத்து அந்த அமிலம் லிற்மசுத்[2] தாளின்படி பூரணமாய்த் தடஸ்திக்குந்தனையும் சோடநீரை அதற்குள்ளே கவனமாய் ஒழுக்கிவிடவும். இப்படிவிட்ட சோடநீரின் கிறேனளவை (n) இலக்கத்தால் குறித்துக்கொண்டு சோடநீரில் 9000 கிறேனளவைப் பாகையிட்ட சாடிக்குள்ளே விட்டு அது $\frac{9000\times1000}{n}$ கிறேனளவாய் வருந்தனையும் அதற்குத் தண்ணீரைக் கூட்டவும். உதாரணமாக n என்பது 930 ஐக் குறிக்குமானால் 9000 கிறேனளவு 9 677 கிறேனளவாய் வருந்தனையும் அதற்குத் தண்ணீர் கூட்டவேண்டும். $\frac{9000\times1000}{930}=9677.$

இந்த விலயனம் 1000 கிறேனிற் சோடைரசு 40 கிறேன் இருக்கும்.

---

1 Hydrate of soda. 2 Litmus.

Digitized By Roja Muthiah Research Library

# அநுபந்தம்.

(1), 9ம் பக்கம். அகனீதக்கிழங்கு. Aconitum Napellus (சேர்க்குங்காலம்)

அகனீதக் கிழங்கைச் சேர்க்குங் காலத்தைக் குறிப்பது முக்கியமென்பது செறபதர் நடத்தின சோதனையை ஆதாரமாய்க்கொண்ட பின்னால் வருங் குறிப்பினால் விளங்கும். மரம் புட்பித்தபின் சேர்த்த பச்சைக்கிழங்கிலே எடுத்த அகனீதசத்தின் ஏகசகட்டளவு இருத்தலுக்கு 8·58 கிறேன். அக்கிழங்கு காய்ந்தபின் அதில் எடுத்தது 35·72 கிறேன். புட்பிக்குமுன் சேர்த்த கிழங்கிலே எடுத்த அகனீதசம் பச்சைக்கிழங்கிலே இருத்தலுக்கு 3·5 கிறேன்; காய்ந்ததில் 12·13 கிறேன். இதைப்பற்றி வைற் பண்டிதர் சொல்லுகிறதாவது: அகனீதக்கிழங்கு இரண்டு வருஷத்துக்கொருமுறை உண்டாவது: அதாவது இவ்வருஷத்துக்கிழங்கிலிருந்து மேலேநிற்கும் பூடு உண்டாயிருப்பது மாத்திரமல்ல பூண்டோடு தாய்க்கிழங்கு செத்தபின் அதின் வேலையை மற்றவருஷஞ் செய்வதற்கு அதனின்று இரண்டொரு கிளைக் கிழங்கு இறங்கும். கோடைகாலமுடிவிலே கிண்டியெடுத்தால் அதிலே இரண்டுபகுதியிருக்கும்; ஒன்று உரத்துக் கறுத்துச் சற்றே சுருக்கு விழுந்ததாகிய தாய்க்கிழங்கு; மற்றது வெளுறின சதைத்த, சாறுள்ள கிளைகள். இக் கிளைகள் ஒவ்வொன்றும் ஒடுங்கின கழுத்தாற் தாய்க்கிழங்கோடு தொடுத்திருக்க, மேற்தலைப்போ மற்ற வருஷப் புது முளை கிளம்புவதற்கிடமாய் அகன்றிருக்கும். இக் காரியங்களைக்கொண்டு இதை முதற் கவனித்த கிரின்கிசன் பண்டிதர் எண்ணினபடி. தாய்க்கிழங்கே சத்தை அடக்கியிருக்கிறபகுதியென்றும், கிளைகளிலே மற்ற வருஷப் புது முளைக்கு வேண்டிய போஷணை அடங்கியிருக்கிறதென்றும், அனுமானிக்கலாம். செறபதர் மேலே சொல்லியிருப்பதை இது விளங்கப்படுத்துகின்றது. தாய்க்கிழங்கிலும் கிளைக் கிழங்கிலுமுள்ள அகனீதசத்தின் வீதத்தை அறிவதற்கு அவை இரண்டையும் வெவ்வேறாய்ச் சோதிக்கவேண்டும். கோடைகாலத்தகல் நிலத்திலே தளிர் அரும்பும்போது பழங்கிழங்கு அற்றுப்போம். அப்பருவத்தில் முளை அரும்புமுன் கிழங்கைக் கிண்டிச் சோதித்தால் அதிலே அகனீதசம் இராது.

(2), 11 ம் பக்கம். நாவி. Bikh. (பயன்).

நாவியென்பது கொடிய நஞ்சு. இந்தப் பூண்டின் கிழங்குக்கும் நாவியென்ற பெயர் வழங்கும்.

(3), 11 ம் பக்கம் வீறகனீதம். Aconitum ferox. (இரண்டினங்களின் வீறு)

மெதுவான வெண்கிழங்கிலுள்ள அகனீதசத்தை உரத்தகிழங்கிலுள்ளதோடு ஒத்துப்பார்த்து வீதம் 5 க்கு 3 என்று செடலன்று பண்டிதர் கண்டார்.

(4), 11 ம் பக்கம். வீறகனீதம். Aconitum ferox. (தன்மைஉபயோகம்.)

இதின் தன்மைகளைப் பற்றிப் பரைரர் வைத்தியர் ஆராய்வுசெய்து விபரமாயெழுதியிருக்கிறார். இதின் உபயோகங்களைப்பற்றி ஔஷானசிபண்டிதர்

Digitized By Roja Muthiah Research Library

எழுதியிருக்கிறார். சுதேச வைத்தியர் இதை உபயோகப்படுத்தும் வகையை பற்றித் தலீவுசெறீவு வாகடமும் விபரமாய்க் கூறுகின்றது.

**(5), 12 ம் பக்கம். அதிவிடயம். Aconitum hetrophylum. (தன்மைகள்)**

அதிவிடயம் ஓர் அந்திபிருடி[2] என்பதற்கான அத்தாட்சி வங்காளத்தில் வைத்தியபணிவிடையாயிருந்த கெமிங் என்பவரால் கூறப்பட்டிருக்கின்றது. பலவகையான முறைச்சுரக்காரர் 400 பேருக்கு அதைக் கொடுத்துக் கண்ட அனுபவத்தைக்கொண்டே அவர் சொல்லியிருக்கிறார். அது ஓர் உத்தமமான சுதேச அந்திபிருடியென்று உவற்சன் பண்டிதர் எண்ணுகிறார். வாடிக்கையான முறைச்சுரங்களுக்கு அதை இருபது கிறேன் தேயத்திற் காலமேயாவது சுரம் விட்டிருக்கும் நேரத்திலாவது கொடுப்பது உத்தமமென்று திமக்கு வைத்தியர் சொல்லியிருக்கிறார். பல்லூர் வைத்தியர் இரண்டு வருஷக்காலமாகத் தாம அதிவிடயத்தை ஓயாமற் கொடுத்ததென்றும் அதை அரைத்திரும் தேடத்திற் சொற்பதண்ணீரோடு சேர்த்து வேர்வைப்பாதத்திற் தொடங்கி காலு ஆறு மணித்தியாலத்துக்கொருமுறை முறைச்சுரம் விட்டிருக்கிற நேரங்களிற் கொடுத்தால் மெத்த நயந்த சுரக்கினி[3]யென்றும் சொல்லியிருக்கிறார் அவர் பரிகரித்த முறைச்சுரக்காரர் 66 பேருள் 37 பேரில் அது முழுதுஞ் சித்திபெற்றது. 18 பேரில் சொற்ப நயஞ்செய்தது. 11 பேரில் வாய்க்கவில்லை. கடைகளில் விற்கும் அதிவிடயம் மெத்தப் பழுதாயிருப்பதால் நல்ல சரக்கைத் தேடித் தெரிந்து வழங்குவதவசியமென்று அவர் சொல்லுகிறார். ஒவ்வொரு கிழங்கையுங் குறுக்கே முறித்துப்பார்த்துச சுத்தவெண்மையாயிராமல் குறுகப் பசையாய் முறிவதெல்லாவற்றையும் தள்ளிப்போடவேண்டுமென்கிறார். மேலும் அவர் சொல்வது, மூன்று மாசங்களாகச் சுரத்துக்கு ஒரு கிறேன் கினியி[4]மாவது கொடாமல் எல்லாச் சுரக்காறருக்கும் காகுதினும்[5] அதிவிடயமுமே விசேஷமாய்க் கொடுத்தேன் ஆகையால் இவைகள் மேன்மையான மருந்துகளென்று விளங்கும். இவற்றை முறையாய்க் கலந்து புத்தியாய்க் கொடுக்கவேண்டும்.

மேலும் அதிவிடயமும் இந்துபாபெரியும் நச்சுக்காய்ச்சல்களுக்கு நல்ல கடைமருந்துகளென்று மூர் வைத்தியர் சொல்லியிருக்கிறார். மேலும் அதிவிடயம் செயலில் கின்கனத்துக்குச் சரிவந்த அந்திபிருடியென்று ரைத்துப் பண்டிதரும் அடோய்சண்டதரும் எண்ணுகிறார்கள். இது செயலில் நிச்சயமற்றமருந்தாகக் கண்டோமென்றும், தொந்தித்தநோய்களில் இதை நம்பிக் கொடுக்கக்கூடாதென்றும் பலஞதபோசர் சொல்லுகிறார். இவர் சொல்வது எந்த மருந்துக்குஞ் சரியே.

**(6) 12 ம் பக்கம். கப்தீஸ்பூடு. Coptis teeta (தன்மை)**

இச்சரக்கையும் இதின் தொணிகத்தன்மையையும் பற்றி ஒஷானசி முதலிய சிலர் எழுதியிருக்கிறார்கள் பஃரரர் வைத்தியர் இதை Mahmirah என்று எண்ணினர் இதைப் பீளைசாறியென்று முன் சொல்லியிருப்பதற்கு நியாயமுண்டு. பின்நடத்திய சோதனைகள் பஃரரர் வைத்தியரது எண்ணத்தை உறுதிப்படுத்தின. இதன் வேருக்கு Racine de Chynlen என்று பெயர்கொடுத்துக் கூப்பேட்டர் விபரித்திருக்கிறார்

---

1 Taleef shereef. 2 Antiperiodic 3 Febrifuge. 4 Quinine. 5 Narcotine.

(7), 17 ம் பக்கம். சீந்தில். Gulancha. (தன்மை)

இந் நூலைப் பிரசுரஞ்செய்த வாறிங்கு பண்டிதர் பிரமதேசத்திலே வாடி க்கையான நாலாஞ் சுரக்காரர் இருபதுபேருக்குச் சீந்தில்கொடுத்து வந்தார். ஒவ்வொருவரிலும் அது குலைப்பன் அதிகப்படாமற் றடுத்தது. என்றாலும் காய்ச்சல் திரும்ப வராமற் றடுக்கவில்லை. இவ் வகுப்பைச் சேர்ந்த எந்தம ருந்தைக் கொடுத்தபோதும் இந்த விசேஷத்தைக் காணவில்லை. சீந்தில் அ ந்திபிருடியாயல்ல, கயர்த்தொணிகமாய் அதிக பிரயோசனமுள்ளது. சுதே சவைத்தியத்தில் இதின் உபயோகத்தைப் பற்றித் துவான்ரங்கமால் விபர மாய்ச் சொல்லியிருக்கிறார்.

(8), 20 ம் பக்கம். இந்துபாபேரி. Indian Barberry. (தன்மை)

இந்துபாபெரியின் தன்மைஉபயோகங்கள் முதலியவற்றைப்பற்றி, ஸ்தை வன் வைத்தியர் முதலியோர் விபரமாயெழுதியிருக்கிறார்கள்.

(9), 20 ம் பக்கம். இந்துபாபேரி. Indian Barberry. (அந்திபிருடியாக)

முறைச் சுரங்களுக்கும் தடவை தடவையாய் வரும் மற்றுஞ் சுரங்களுக் கும் ஸ்தைவன் வைத்தியர் இந்த மருந்தைக் கொடுத்து வெகு சித்தியாய்ப் ப ரிகரிக்கு முறையாவது: ஒரு விரேசனங்கொடுத்துப் பேதிசெய்தபின் குலை ப்பன் தொடங்கும்போது இந்துபாபெரி ரஞ்சத்தில் நாலு திரும் முதல் ஆறு திரும் வரைக்குக் கொடுத்து நோயாளியைக் கம்பளியால் நன்றாய்ப் போர்த் து வைத்திருக்கவும். உடனே மருந்தின் செயலால் அவதியுங் கடுமையான தண்ணீர்த்தாகமும் சுத்த காற்றில் விருப்பும் உண்டாகும். நோயாளி விரு ம்பினதைக் கொடுத்தால் பரிகரிப்பு வாயாது. அல்லாவிட்டால் ஒரு மணி த்தியாலம் வரையில் உடம்பிற் சூடுகொண்டு தோல் கசியத்தொடங்கி, கடை சியில் கடுமையாய் வெயர்க்கும். இந்தச் சீர் படிப்படியாய்க் குறைந்து உ டம்பு குளிர்ந்து வருத்தமெல்லாம் மாற, மெத்தப் பெலவீனம்மாத்திரந் தோ ற்றும். அதற்குச் சவ்வரிசிக் கஞ்சியாவது கூவாக் கஞ்சியாவது கொஞ்ச மாய்க் கொடுத்தால் நோயாளி உறங்கிச் சுகமாயெழும்புவான். காய்ச்சல் திரும்ப வருவதில்லை. பிறகு சொற்ப விரேசனஞ் சேர்த்த நிலவேம்புக் க ஷாயங்கொடுப்பதே பெரும்பாலும் செய்யவேண்டிய பிரயோகம்.

(10), 20 ம் பக்கம். Rasot. (கண் வியாதிகளுக்கு)

இந்துபாபெரியின் இனங்களிற் செய்யப்படும் நீரெசிறுத்தாகிய Rasot கண்வியாதிகளுக்கு பழைய காலந் தொடங்கி இடப்படும். முன்னோர் வ ழங்கின Lycinum Indium இதுதானென்று முதன்முதற் கண்டுபிடித்தவர் ரைல் பண்டிதரே. இவை இரண்டும் ஒன்றென்பதைச் சந்தேகிப்பதற்குப் பின்செய்த ஆராய்வுகள் இடங்கொடாது. முன்னோரும் இந்துவிலுள்ள த ற்காலவைத்தியரும் கண்வியாதிகளின் பரிகரிப்பில் இதைப் பேர்பெற்றமரு ந்தாகக் கொண்டார்கள். கற்குத்தா நயன வைத்தியசாலையிலிருந்த வைஸ் வைத்தியரும் எடின்பரு வைத்தியசாலையிலிருந்த உவாக்கர் வைத்தியரும்

Digitized By Roja Muthiah Research Library

இதைப் பரிசோதனைசெய்து தத்தம் சோதனையிற் கண்ட பேறுபேற்றைச் சிம்சன் பண்டிதருக்கு அறிவிக்க இவர் அதைத் தமது பிரசுரத்திற் சேர்த்திருக்கிறார். உவாக்கர் வைத்தியர் இதைப் பிரயோகித்து மெத்தச் சித்திகண்டது மூவகைக் கண்ணோய்களிலுமே. கொஞ்ச அளவாய்ச் சித்திகண்ட நோய்கள், வாதக்கண்ணோய், கதார்க்கண்ணோய்களும் இமைக்கண்ணோயுமே. இரண்டொருபோல் புதிதாயுண்டான யோகினிக்கண்ணோய், இம்மருந்தால் சுறுக்காயும் சுத்தமாயும் மாறினதைச் சிம்சன் பண்டிதர் தமது சொந்தப் பரீட்சையிற் கண்டார். இரு கருமத்திலும் மருந்தை இடும் முறை ஒன்றே. வங்காளத்தில் வழங்கின அம்முறை லைவ்ஸ் வைத்தியரால் வெளியாக்கப்பட்டிருக்கின்றது. அதாவது பாபெரிநீரெசிருத்தாகிய Rasotஐயும் வறுத்த சீனக்காரத்தையும் சமநிறையாயும் அவினை அவற்றில் பாதிநிறையாயும் எடுத்து எலுமிச்சஞ் சாற்றில் கிரீம்பதமாய் வருந்தனையும் அரைத்து நோய்த்த கண்ணின் மடல்களையும் இமையையும் சுற்றி நாள் இரண்டுமுறை இடவும். மருந்து கண்ணில் வருத்தமான எரிவை உண்டாக்கும். இந்நூலைப் பிரசுரஞ்செய்தவர் இந்துதேசத்திலிருந்த காலத்தில் யோகினிக்கண்ணோயிருந்த பலருக்குச் சீனக்காரத்தைத் தனிய எலுமிச்சஞ்சாற்றில் குழைத்து முன்சொன்னமுறையாயிட, அந்நோய் மாறினதானபடியால் அந்தக் கூட்டு மருந்தின் நயம் எவ்வளவுக்கு Rasot ஐப் பற்றியிருந்ததென்பது சந்தேகம். பின்சொன்னமருந்தே சென்னைத்தேசத்தாருக்குள் அதிகம் வாடிக்கையானது. அது நயமற்றதல்ல.

## (11), 23 ம் பக்கம். இமயமலை அவின். Hill Opium.

கீழ்நாடுகளிற் செய்யப்படும் அவினைப்பார்க்க இமயமலையிற் செய்யப்படுவது உத்தமமென்று மக்கிறீகர் வைத்தியர் சொல்லியிருக்கிறார். வாடிக்கையான அவினின் நற்செயல்களெல்லாவற்றையும் இது உண்டாக்குமென்றும் அதாற் பெரும்பாலுமுண்டாகிற தலையிடிமுதலிய அவக்குணங்களை இது உண்டாக்காதென்றும் அவர் எண்ணுகிறார். இதின் தேயம் மூன்றுமுதல் ஆறுகிரேன். வாந்திபேதி முதலிய சில தறுவாயில் இன்னுங் கூட்டிக்கொடுத்தாலும் மோசமில்லை. மோயாற்று வைத்தியர் இதைச் சோதித்துப்பார்த்து இது மென்மையுங் கருங் கபில நிறமும் ஏகத்துக்கொரேதன்மையுமுள்ளதென்றும், வாடிக்கையான அவினின் மணம் கசப்பு இதற்கு மெத்த இல்லையென்றும் எழுதியிருக்கிறார். இதிலே உள்ள மாவியத்தின் வீதம் நூற்றுக்கு மூன்று என்று பருமட்டான சோதனையாற் கண்டிருக்கிறது. உச்சிதமான துருக்கைஅவினைப்பார்க்க கலப்பற்ற இமயமலை அவினிலே அதிக மாவியமிருக்கிறதென்றும், காசி, பர்னா தோட்டங்களினின்று ராசாங்கத்தார் வாங்கும் அவினைப்பார்க்க இதிலே இருமடங்கு மாவியமிருக்கிறதென்றும் மக்தியர் வைத்தியர் சோதித்துக் கண்டிருக்கிறார். ஆயினும் சரியான வீதமெவ்வளவென்று சொல்லப்படவில்லை. இந்த அவினைப்பற்றி இன்னும் ஆராய்வது நல்லது.

## (12). 23 ம் பக்கம். அவின். Opium. (கலப்பு)

அவினின் கள்ளக் கலப்பைக் கண்டுபிடிப்பது மெத்த முக்கியமும் வில்லங்கமுமான காரியம். இதைக் கண்டுபிடிப்பதற்கு நம்பிக்கையும் லகுவு

Digitized By Roja Muthiah Research Library

மான வழியொன்றுஞ் சொல்லப்படவில்லை. அதிலுள்ள மாவியத்தின் அள வைக் கண்டுபிடிப்பது மாத்திரமே நிச்சயமான சோதனை. ஆயினும் இது சங்கடமான நுட்ப சோதனை. மணம், சுவை, இறுக்கம்,இளக்கம் முதலிய வெளித்தோற்றங்களையும் யாந்திரிக கலப்பற்றிருப்பதையும் கொண்டே பழ க்கமுள்ள சுதேச வைத்தியர் தீர்ப்பார்கள். நெடும் பரீட்சையுள்ளவர்கள் இ வைகளைக்கொண்டு நிதானிக்கக்கூடுமாயினும் பழக்கமில்லாதிருந்தால் இச் சோதனைகள் வாயாது. இந்துதேசத்திலே அவினுக்குச் செய்யுங் கள்ளக்க லப்பைக்குறித்து ஈற்றுவல்பண்டிதர் சொல்லியிருக்கிற குறிப்பை இவ்விடந் தரல் தகுதி. அவினைச் செய்வோர் செய்யுங் கலப்புகள் பலவகை. அதின் நிறையைக் கூட்டுவதற்குக் களிமண், மணல், கரித்தூள், ஒட்டடை, சாணு கம், இடித்த கசகசா இலை, இடித்த பலவகையான கொட்டைகள் முதலிய பருக்கனுன அசுத்தங்களைக் கலப்பார்கள். சரக்கைத் தண்ணீரிற் கரைத்து க் கரையக்கூடிய லேசான பங்குகளைத் தெளித்து வேறாக்கி மண்டியை ஆ ராய்வதால் இந்த அசுத்தங்கள் எல்லாவற்றையும் லகுவிற் கண்டுபிடிக்கலா ம். இப்படிச் செய்வதால் இவ்வகையான அசுத்தங்களெல்லாம் பெரும்பா லும் தோற்றக்கூடியதாய் வரும். மாவும் இக்கலப்புகளுள் அதி வாடிக்கை யானது. அதை லகுவிற் கண்டுபிடிக்கலாம். மாக் கலந்த அவின் சுறுக்கு ப் புளிப்புக்கொள்ளும். அதை முறித்தாற் சின்னபின்னமாய்க் குறுக முறி யும். அந்தச் சரக்கைத் தண்ணீரிற் போட்டெடுத்துப் பிளிந்தால் மா வெ ளிப்பக்கத்தாற் பிளியும். மேலும் இயோத சோதனையை இட அமைலம் இ ருப்பது நிச்சயமாய் விளங்கும். அவித்த புடோதுக்கிழங்கு, வெண்ணெய், பனங்கட்டி முதலியவற்றையும் அவின்செய்கைக்காரர் அத்தோடு கலப்பார் கள். மணத்தினுலும் இறுக்கத்தினுலும் இவற்றை மட்டிடலாம். இவைக ளைத் தவிர நாகதாழிப் பழச்சாறு,புகையிலை, ஊமத்தை, கஞ்சா இவற்றின்இ றுகிய சாறு முதலிய தாவரங்களின்சாறுகள், எசிறுத்துக்கள், பாணிகள், நிற ப்பதார்த்தங்களையும் அவினுடன் கள்ளமாய்க் கலப்பார்கள். சில தாவரங் களினின்று வடியும் பிசினையுங் கலப்பார்கள். பழப்புளி வில்வங்கனி மு தலியவுங் கலக்கப்படும். சரக்குக்கு நிறங்கொடுப்பதற்கு, காசுக்கட்டி, ம ஞ்சள், இடித்த இலுப்பைப்பூ முதலியன சேர்க்கப்படும். அவினின் சுத்த த்தை நிதானிப்பதற்கு மாவியத்தின் வீதத்தை அறிவதைத் தவிர்ந்த மற்றுஞ் சோதனைகள் யாவும் நிச்சயமல்லவென்று ஈற்றுவல் பண்டிதர் சொன்னபின் மேலும் சொல்வது: தண்ணீரில் இது சுறுக்குக் கரைந்து பயற்றஞ்சாறு நிற மான கலங்கற்பாணியாகும். இது படிப்படியாயடைய மேலே தெளியும் நீர் கருமஞ்சள்நிறமாகும். இச்சரக்கைத் தண்ணீருக்குள்ளே பிடித்து விர லால் முறித்தால் அது முதலில் விரலோடு சற்றே ஒட்டினுலும் சுறுக்குக் க ரைந்துபோகும். அவினேடு பிசின் கலந்திருந்தால் அப்பிசின் விரலோடு பெலனுய் ஒட்டிக்கொண்டு வில்லங்கமாய்ச் சழலும். மேலும் குருவிப்பி சின்[1]போன்ற பொருள்களையுந் தாம் கண்டுபிடித்தோமென்கிருர். ஒருவேளை அது ஆலம்பாலாயிருக்கலாம். அப்படிப்பட்ட அவினிற் சொற்பத்தைத் தண்ணீரிற் கரைத்து அதற்கு ஈயவசிதசுலீரிற் சிலதுளியைக் கூட்டினுல் பி சங்கல் நரைநிறமான ஓர் அடையல் கனமாயுண்டாகும். அது அந்நீரளவு பருமையாயிருக்கும். அது ஈயமிகனிரம்[3]. அமோன[4]மும் இதைப்போன்ற

1 Bird's lime. 2 Solution of Acetate of lead. 3 Meconate of Lead 4 Ammonia.



Digitized By Roja Muthiah Research Library

இவ்வளவு அடையலை விழுத்தும். அதிலே ராள[1]மும் ஓர் அல்கலேவ[2]மும் அடங்கியிருக்கும். அந்த அல்கலேவத்தைப் பரமாணுவில்வைக்க அது சுறுக்குக் கருமையாகும். இயோதரஞ்சஞ்[3]செங்கல்நிறமான அடையலை விழுத்தும். அயரஞ்சம்[4] அதிலுங் கருமையான அதைப்போன்ற அடையலை விழுத்தும். இச் சோதனைகளைச் சில நொடிநேரத்துக்குள்ளே செய்துபார்த்து உண்டாகும் அடையல்களை ஒத்துப்பார்ப்பதால் சரக்கிலிருக்கிற அவினின் வீதத்தைப் பருமட்டாய் மதிக்கலாம். கனமாய்க் கள்ளங் கலந்த சரக்கிலே இச்சோதனைகள் காட்டும் அத்தாட்சி போதியதாயிருக்கும். இவற்றைத் தவிரத் தனிக்கமிலத்தைக்[5] கண்டுபிடிப்பதற்குச் செலதீநீரும்[6] பிசினை அடைவிப்பதற்கு வீருன அலக்காலும்[7] இன்னுந் தேவையான கெமிஸ்த பொருள்.

### (13) 29 ம் பக்கம். நாருதீன். Narcotine. (அந்திபிருடி[8]யாக)

நாருதினுக்கு அந்திபிருடித்தன்மை உண்டென்று ஒஷானசி பண்டிதரால் முதன்முறை காட்டப்பட்டது. அவர் தமது சொந்தச் சாட்சியுடன் இந்துவிலிருந்த ஸ்துவாட்டு, சப்மன், குடீவி முதலிய பேர்பெற்ற வைத்தியர் பலரது அனுபவசாட்சியையுங் கூறுகிறார். ரூற்சு வைத்தியர் இதை இங்கிலந்திலே சோதித்துப்பார்த்து சித்திகாணுமையால் பிற்பாடு அது அதிகமாய் வழங்கப்படவில்லை. இதற்கு நியாயம் வங்காள வாகடமுறைப்படி அதைச் சரியாய்ச் செய்துகொள்ளாததுதானென்று ஒஷானசி சொல்லுகிறார். பல்லூர் வைத்தியர் இதை ரொகில்கந்து, றங்கூன், தெல்லியிற் பரம்பின காய்ச்சலுக்கு அதிகமாய்க் கொடுத்து 1838 ம் ஆண்டு அதைப்பற்றி மெத்த நயப்பாய் அறிவித்திருக்கிறார். அவர் அதை இருபது கிறேன் தேயமாக வேர்வைப்பாதத்திற் கொடுத்து பிறகு காய்ச்சல் வருந் தடவைக்குத் தக்கதாய் ஆறுமுதற் பன்னிரண்டு மணி வேளையின்பின் திரும்பவும் அவ்வளவு கொடுப்பார். மூன்றும் முறைக்காய்ச்சலில், கடைசித்தேயம் அடுத்த காய்ச்சல்முறைக்கு இரண்டு மூன்று மணிக்கு முன் வரத்தக்கதாக ஒழுங்குபண்ணி அதின் இடையாற்றிவேளையில் மூன்று தேயங் கொடுப்பார். நாருதினைப்பெருந்தேயத்திற் கொடுப்பதால் கினியத்தைப் போல யாதொரு வருத்தமுமுண்டாகாமற் சொற்ப நடுக்கமும் விறைப்பும் தூக்கமும் உண்டாகுமென்றும் இக்குணங்களால் யாதொரு மோசம் நேரிடாதென்றும் பல்லூர் தமது பரீட்சையிற் கண்டார். சிலவேளை உவட்டும் வாந்தியும் உண்டாவதைக் கண்டார். இதினது அந்திபிருடித் தன்மையைப்பற்றி அதி பூரணமான புதிய அத்தாட்சி காடின் வைத்தியரால் கூறப்பட்டது. காசப்பூரில் 1859 ம், 60 ம் ஆண்டுகளிற்பரம்பின கடுமையான காய்ச்சலில் அவர் 684 பேருக்கு அதைக் கொடுத்து 194பேரில் அதாற்கண்டபெறுபேற்றைப்பற்றியநுட்பமானகுறிப்புகளை எழுத்தில் வைத்திருந்தார். இது கினியத்[9]துக்குச் சரிவந்ததல்லவென்றாலும் அந்திபிருடியென்ற மருந்துவகுப்பில் இது இரண்டாவதாய் நிற்கும் என்பதும் சொற்ப மருந்துச் செலவுடன் பெரும்பாலும் யாதொரு கெட்ட குணங்களைத் தோற்றுவிக்காமல் அவ்வளவு கெதியாயும் நிச்சயமாயும் சுரத்தை மாற்றக்கூடிய மருந்து கினியத்தைத் தவிர்த்தால் இதைப்போலவேறொன்றுமில்லையென்பதுமே அவர் கண்ட முடிப்பு. காடினர் பரிகரித்த 684 நோயாளருள் மரித்தவர்கள் 9 பேர். குறிப்பு எழுதிவைத்த 194 பேரில்

1 Resin. 2 Alkaloid. 3 Tincture of Iodine. 4 Tincture of Iron. 5 Tannic-acid. 6 Gelatin. 7 Alcohol. 8 Antiperiodic. 9 Quinea.

Digitized By Roja Muthiah Research Library

நூற்றுக்கு 3.6 பேரில் இம்மருந்தாற் சுகமுண்டாகவில்லை. சுரத்தை நிறுத்துவதற்கு வேண்டியிருந்த மருந்தின் அளவு 22.7 கிறேன்: காய்ச்சல் விட்டபின் 16.3 கிறேன். ஆக 39 கிறேன். வாடிக்கையான தேயம் ஒன்றரைக்கிறேன் முதல் மூன்றுகிறேன். அரிதாய் ஆறுகிறேனுங் கொடுபடும். பெருந்தேயத்தாற் சிலவேளை உவட்டிப்பு,வாந்தி, தலைக்கிறுதி உண்டாகும். நாகுதின் கொடுக்கமுன் ஓர் விரேசனங் கொடுப்பது வழக்கம்.

இந்துதேசத்தில் முன்னறப் பரிசோதித்துச் சித்திகண்ட நாகுதின், வங்காளபார்மகுபீய[1]த்திற் சொல்லியிருக்கிறபடி பின்வருமுறையே செய்யப்படும். கொள், உத்தமமான வங்காள அவின் இரண்டு இறுத்தல்; சுத்த அலக்கால்[2]இரண்டு கலன். மூன்றிலொருபங்கு அலக்காலில் அவினைக் கையாற் கரைத்துக் களியானபின் மற்றொருபங்கு அலக்காலையுஞ் சேர்த்துச் சீலையில் வடித்து நன்றாய் நசுக்கிச் சக்கையோடு சேஷமாயிருக்கும் மூன்றத்தொருபங்கு அலக்காலைக் கூட்டி நன்றாய்ப் பிசைந்து முன்போல வடித்து நசுக்கி, வடித்த நீர்களை யொன்றாக்கவும். அந்தக் கலவைநீர் சிவத்த லிற்மஸ்தாளை[3]நீலநிறமாய் மாற்றப் போதிய அளவாய் அதற்கு வீறான அமோனா[4] நீர் சேர்த்து அதிலே அடங்கிய அலக்காலில் மூன்றத்திருபங்கும் வற்றுந்தனையும் அதைத் திஸ்திலிக்கவும்[5]. அப்பால் அதை நெருப்பைவிட்டிறக்கி தெளிந்தநீரை அழுத்தமான பாத்திரத்துக்குள்ளே இறக்கவும். அப்பால் அதை அரைநாள் வரைக்குநிற்கவிட்டு, உண்டாயிருக்கிற கிரிஸ்தல்[6]களைச் சேர்த்துச் சீலையில் அடக்கி,மழைத்தண்ணீரால் நன்றாய்க் கழுவவும். கழுவினநீரை ஊற்றிவிட்டுக் கிரிஸதற்திரளையை இரண்டுநாழி தண்ணீரிற் போட்டு அதற்கு ஐருகுலோறிக்கமிலத்[7]தில் ஒரு அன்சைப் படிப்படியாய்க் கூட்டவும். நீரை ஊற்றிவிட்டு முன்போலவே திரும்பவுஞ்செய்து நீர்களைக் கலந்து அப்பால் சுத்த அமோனநீரைச் சற்றே மிஞ்சத்தக்க அளவாய்க் கூட்டவும். அப்போ வரும் அடையலைக் காரிக்கம்புடைவையில் இட்டு அதை இரண்டு மூன்றுமுறை மெல்லிய தண்ணீராற் கழுவி உண்டைகளாகத் திரட்டி அடுப்பில் இட்டு நிறையிற் குறைதலொழியுந்தனையும் 130 பாகை சூட்டில் உலர்த்தவும். நாகுதின் தண்ணீரிற் கரையாததலால் மாவியம்[8] செய்யும்போது தண்ணீரிற் கரையாதிருக்கும் அவினின் சேஷபங்கிலிருந்து அதை எடுப்பது உத்தமம். அச்சேடத்தை அசிதிக்கமிலத்தில்[9] ஊறப்போட்டு வடித்து அமோனத்தை மிச்சமாய்க் கூட்டவேண்டும். நாகுதினை ஏதும் இந்திரபதார்த்தத்[10]தோடு கலந்து நிறப்படுத்தினால் அடையும். அதை அலக்காலிற் கரைத்துப் பிராணியக்கரியாற் சுத்திகரிக்கவேண்டும்.

(14), 29 ம் பக்கம். பிரமதண்டு. Argemone Mexicana. (தன்மைகள்.)

இந்துதேசத்திலிருந்து பனவியர் அனுப்பின றிப்போட்டோடு தொடுத்தாய்,வங்காள வைத்திய உத்தியோகஸ்தர் ஏழுபேருடைய எண்ணங்கள் உண்டு. அவர்களுள் ஒருவரைத்தவிர மற்றெல்லாரும் பிரமதண்டெண்ணெய் நல்லவிரேசனி[11]யென்றும் பிரதானமாய் வயிற்றுவலி[12]க்குக்கொடுக்கஉவந்த விரேசனியென்றும் சொல்லியிருக்கிறார்கள். இதின் தன்மைகள் உபயோ

---

1 Pharmacopoeia. 2 Alcohol. 3 Litmus paper. 4 Ammonia. 5 Distil. 6 Crystal. 7 Hydrochloric acid. 8 Morphia. 9 Acetic acid. 10 Organic matters. 11 Aperient 12 Colic.

Digitized By Roja Muthiah Research Library

கங்களைப்பற்றிப் பேரம், லூனன் என்பவர்களும் விபரமாயெழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுத்துகளில் இது நாகதிக[1] தன்மை உடையதென்று சொல்லியிருப்பது, இதின் காய்களோடு சமதோற்றமுடைய ஊமத்தங்காய்களைக் கலப்பதினுலிருக்கவேண்டும். இதின் சாற்றிலே ஆர்கிமோனின்[2] என்ற மஞ்சள் நிறச் சத்தைக் கண்டுபிடித்தேனென்று ஒஷானசி பண்டிதர் சொல்லுகிறார். இதைப்பற்றி இன்னும் அறிவது நல்லது.

(15), 33 ம் பக்கம். சால்மூக்கிரம். Chaulmugra.

சால்முக்கிரதேல் குஷ்டரோகத்துக்கு[3]உள்ளே குடிக்கவும் வெளிக்குப்பூசவும் உவந்த மருந்தென்று போசர் வைத்தியர் எழுதியிருக்கிறார். இதை அரைத்திருமிற் ரெண்டுங்கி ஒரு திரும் வரைக்கும் யாதொரு நஷ்டமுமில்லாமற் கொடுக்கலாமென்று சொல்லியிருக்கிறது.

(16), 37 ம் பக்கம். சியாம் மக்கிமரம், Gamboge tree of Siam.

இதிலிருந்து பிசின் ராள[4]மாகிய நல்ல கம்போச்சு வடியும். அதை லகுவிற் சேர்க்கலாம்.

(17), 38 ம் பக்கம். இந்துமக்கிமரம். Indian Gamboge.

இதின் அவுஷத தன்மைகளைப் பற்றி வைத்தியர் ஆராய்வுசெய்திருக்கிறார்கள். இது சியாம்மக்கியளவு வீறுள்ளதல்லாதிருந்தும், நல்ல நீரடிக்கும் விரேசனி[5]யென்பதே அவர்கள் முடிப்பு. இதின் விபரத்தைப்பற்றியும் கூறுகளைப்பற்றியும் கிரிஸ்திசன் பண்டிதர் எழுதியிருக்கிறார். அவர் சோதித்தஅளவில் இதின் செயல் வாடிக்கையான மக்கியைப் போலவே இருக்கக் கண்டார். நீர்க்கோவை நோய்களுக்கு இது நலமென்று சென்னபட்டினத்திலிருந்த சொமறீன் வைத்தியர் எழுதியிருக்கிறார்.

(18), 39 ம் பக்கம். கோகமரம். Kokum Butter tree.

கோகநெய்யின் தன்மைகள், உபயோகம், செய்முறைகளைப்பற்றி வங்காள வைத்திய பத்திரிகையிலும பரைரர் வைத்தியர் வாகடத்திலுங் காணலாம்.

(19) 40 ம் பக்கம். கர்ச்சமரம். Gurjun tree. (தன்மை, உபயோகம்)

கனுறீய[6]நோயின் பரிகரிப்பில், கபேவபல்சத்துக்குப்[7] பதிலாகக் கர்ச்சபல்சத்தைக் கொடுக்கலாமென்று ஒஷானசி பணடிதர் 1838 ம் ஆண்டு காட்டினார். அதை வாறிங்கு பண்டிதர் 1852 ம் ஆண்டு சிலரிற் சோதித்து அதின் சித்தியைப்பற்றித் திருத்திபெற்றார். இதை என்றேசன்பண்டிதர் உறுதிப்படுத்தியிருக்கிறார். கபேவபல்சத்தைப் பூரணமாய்ச் சோதித்து நயங்காணாத நோயாளருக்குத் தாம் இதைக் கொடுத்து எப்போதுஞ் சித்திபெற்றோமென்றும் இதினால் யாதொரு குணக்கேடு முண்டாகவில்லையென்றும் அவர் சொல்லுகிறார். அவர் இதை ஒருதிரும்[8] தேயமாக நாள் இரண்டு

1 Narcotic. 2 Argemonene. 3 Leprosy 4 Gum resin. 5 Hydragogue Cathartic. 6 Gonorrhoea. 7 Balsam Copaiva 8 Drachm.

Digitized By Roja Muthiah Research Library

மூன்றுமுறைதனியே கொடுத்து அதிக பரீட்சையடைந்தபின்பு,கனுநீயநோயின் தீவிர[1]குணங்கள் தணிந்தபின் இதைக் கொடுப்பது கபேவபல்சத்தைக் கொடுப்பதற்குச் சரியாயிருக்குமென்கிருர். கிலீற்றுகளு[2] கபேவபல்சத்தைப்பார்க்க இது வீறுள்ளதென்று கனலல்டி குறிக்கிருர். மேலும் மந்தமான புண்களை[3]அருடடுவதற்கு இது இடப்படுகிறதென்றும் அவர் சொல்லுகிருர். கபேவத்தைப் பூசிஞல் உண்டாவது போன்ற பருக்கள் இதைப் பூசுவதாலுண்டாகக்கூடுமென்றும் தாம் அதைக் கண்டோமென்றும் மங்கமாரி வைத்தியர் சொல்லுகிருர். சாரதித்த[4] கர்ச்சதேலம்[5] வங்காள பார்மகூபீயத்[6]தில் வருகின்றது. ஆயினும் அதாலுண்டாகககூடிய நயங்களெல்லாம் சுத்தமாகக்படாத இப் பல்சத்தாலுண்டாகக்கூடும். இந்தப் பல்சத்தின் தன்மையைக் கபேவபல்சத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து, வௌ முதலிய பண்டிதர்கள் எழுதியிருக்கிருர்கள்.

(20), 54 ம் பக்கம். வில்வம்பழம். Bael Friut. (கூறுபாடு)

இதைப்பற்றி மக்னமார, பல்லக்கு பண்டிதர்கள் எழுதியிருக்கிருர்கள்.

(21), 54 ம் பக்கம். வில்வம்பழம். (தன்மை, உபயோகம்.)

குடல்நோய்களுக்கு வில்வம்பழம் உவந்ததென்பதை நீடி, பெர்மன் முதலிய பழய ஆசிரியோர் கவனித்திருந்தாலும், 1853 ம் ஆண்டு மாடின்பண்டிதர் அதைக்குறித்துக் காட்டுந்தவரையும் அது மெத்தக் கவனிக்கப்படவில்லை. சாற்று, நூற்றன் எனை வைத்தியர்கள் தாமே அதைச் சோதித்துப்பார்த்துத் திசந்தெரிக்கு[7] அது உத்தமமான மருந்தென்று மெத்த விதந்துசொல்லுகிருர்கள். கனிந்த ஒரு பழத்தின் களியைக் காலமேதோறுஞ் சாப்பிட்டால்,கடிய மலவரட்சி வாயுப்பொருமலோடுகூடி யுறுேபருக்குண்டாகுங் குன்மத்துக்கு[8] நயமாகுமென்று கிறீன் வைத்தியர் சொல்லுகிருர். மேலும் வில்வங்காயை ஆறுமணி நேரமாக அவித்தால் வீறுன துவராகுமென்றும், அதைத் திசந்தெரிக்குச் சுதேசிகள் கொடுக்கிருர்களென்றும் அவர் சொல்லுகிருர். மேலும் வாந்திபேதிநோய் கொள்ளையாய்ப் பரம்புகிற காலத்தில் வில்வம்பழத்தை நாடோறும் சாப்பிட்டுவந்தால் அந்நோய்க்குப் பாதுகாப்பாகுமென்று, போஸ் வைத்தியர் நிறுத்திப் பேசுகிருர். அப்படியான காலங்களில் மலச்சிக்காவது கழிச்சலாவது உண்டாகாமல் குடலைச் சுத்திசெய்துகொள்வதற்கு இது உபயோகமானதென்பதற்குச் சந்தேகமில்லை. இதைப்பொலொத்ததாகிய விழாம்பழத்தை ஆசுபத்திரிகளில் இதற்காகக் கொடுக்கிருர்களென்றும், அது இதைப்போல நயந்ததல்லவாதலால் இதையும் அநேகர் அசட்டைபண்ணுவதற்கேதுவாயிற்றென்றும் பிதிவைத்தியர் சொல்லுகிருர். இதின் தன்மை உபயோகங்களைப் பற்றிக் கிருன்று வைத்தியர் விபரமாயெழுதியிருக்கிருர்கள். வேறுஞ் சிலர் நயந்து எழுதியிருக்கிருர்கள்.

(22), 55 ம் பக்கம். மிளகரணை. Toddalia.

மிளகரணைவேரின் உபயோகத்தைப்பற்றிப் பெலத்த சாட்சி பிதி பண்டிதராற் கூறப்பட்டிருக்கின்றது. அவர் தாம் அதைச் சுரக்கினியாய்[9]வழங்கா

---

1 Acute. 2 Gleet. 3 Indolent ulcer. 4 Essential. 5 Gurjun oil. 6 Pharmacopoeia. 7 Dysentery. 8 Dyspepsia. 9 Febrifuge.

Digitized By Roja Muthiah Research Library

திருந்தாலும் அது ஸ்திமுலம்[1] தொனிகமாக[2] உத்தமமானதென்று தாம் சொல்லக்கூடுமென்கிறார். இப்பூண்டின் எப்பகுதியிலுங் காரமான கைச்சற்சுவையும் நல்ல சுகந்த மணமும் இருந்தாலும் வேரிலேயே இத் தன்மைகள் மிகுதி. காய்ந்த வேர்ப்பட்டை மஞ்சட்கபில நிறமுள்ளதாய் வெகுநாளைக்கு காரசாரத்தை அடக்கியிருக்கும். முழுப் பூண்டுக்கும் வீறான ஸ்திமுல, வாயுக்கின[3], தொனிகத்தன்மைகளுண்டு. மேலும் இம் மூன்று தன்மைகளும் இப்படிக் கலந்திருக்கிறதான இன்னொரு பூண்டைத் தாமறியோமென்கிறார். இது கழிச்சலுக்கு நல்ல மருந்தென்று யுரோபத்திலே பேர்பெற்ற லோபெஸ்[4]வேரென்று கீபேட்டென்பவர் நினைக்கிறபடியாலும் இது வியப்புற்றது. கன்புரியென்பவர் இவ் வேரின் நயந்த மாதிரியைச் சோதித்துக் கீபேட்டரின் எண்ணத்தை உறுதிப்படுத்துகிறார். லோபெஸ் வேரின் தன்மை உபயோகங்களைப் பற்றி மறையென்பவர் விபரமாயெழுதியிருக்கிறார்.

## (23), 60ம் பக்கம். குந்துருக்கம். Olibanum. (உபயோகம்.)

குந்துருக்கத்தின் உபயோகத்தைப் பற்றித் தெலுபண்டிதர் இக்காலத்திலே கவனித்து இச்சரக்கு அசட்டையாய் விடப்பட்டதென்றும் தொலுபல்சம்[5] பெருபல்சங்க[6]ளின் தன்மைகளுக்குச் சரியான நயந்த தன்மைகளை இது உடையது என்றும் இது மலிந்த சரக்கானபடியாலும் இரைப்பைக்கு அதிக இணக்கமானதாலும் வைத்தியசாலைகளிலே இதை அவற்றுக்காக வழங்கலாமென்றும் சொல்லுகிறார். இதை எறக்குறையப் பதினைந்து கிறேன் தேயத்தில் குளிகையாயாவது இமல்ச[7]மாயாவது கொடுக்கலாமாம். காலிக[8]வுகையான புறங்கீது[9], லறிஞ்சீது[10]களுக்கு குந்துருக்கராளத்தை நெருப்புத்தழலிற்போட்டுண்டாகும் புகையைக் காட்டுவது நலமென்கிறார். அப்புகை கபத்தை வெட்டி இருமலையும் மூச்சுமுட்டையுந் தணிக்கக்கண்டார். மேலும் பிளவைக்குக் குந்துருக்கத்தைப் பூசுவது உத்தமமென்று ரோமர் வைத்தியர் சொல்லியிருக்கிறார். இவர் சொல்லியிருப்பதை கெவாசி, தெஸ்மாடின்ஸ் முதலியோரும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இந்துதேசத்தில் இது நற்சரக்காய் மலிவாய்ச் சம்பாதிக்கலாமாகையால் அங்கேயும் இதைச் சோதித்துப்பார்ப்பார்கள். இந்துதேசத்தின் பல பகுதிகளிலுண்டாகும் சிலந்திக் கட்டுகளுக்கு இதை அருட்டும் பூச்சாய் வழங்கினதாக நூற்றன் பண்டிதர் எழுதியிருக்கிறார். கட்டு முகங்கொள்ளப்பண்ணுவதற்கு இது மற்றைப்பூச்சைப்பார்க்கிலும் உத்தமமான பூச்சென்று அவர் எண்ணுகிறார். மேலும் கனோறிய[11] நோய்க்கு இதைப் பத்துக்கிறேன் தேயமாகக் கொடுக்கிறார்களாம்.

## (24). 62ம் பக்கம், வேம்பு Margosa. (கூறுபாடு)

காணிஷ்பண்டிதர் கூறுபடுத்திக்கண்டபடி வேப்பம்பட்டையிலே ஓர் அத்திர[12]எண்ணெய்யும், கைப்பான ராளம்[13], பிசின், அமைலம்[14], இனிப்பு, நயர் என்ற பதார்த்தங்களும் மாகுசின்[15]என்ற கைப்பான கிரிஸ்தற்[16]பதார்த்தமும் அடக்கியிருக்கும். இவரால் மாகுசின் என்ற பெயரிடப்பட்ட பதார்த்தம்

---

1 Stimulant. 2 Tonic. 3 Carminative, சமினதி. 4 Lopez root. 5 Balsam Tolu. 6 Balsam. Peru. 7 Emulsion. 8 Chronic 9 Bronchitis. 10 Laryngitis. 11 Gonorrhoea. 12 Volatile, 13 Restin. 4 Amylum. 15 Margosine. 16 Crystal.

முன்னே பிடிங்றன் என்பவரால் எடுக்கப்பட்ட அசிடெரின் சல்வகசு[1] என்ற பதார்த்தத்துக்குச் சரியாயிருக்கவேணும். இது உட்பட்டையிலேயே மிகுதியாயிருக்கும். வெளிப்பட்டையிலே சயர் மிகுதியாயிருக்கும். வேப்பங்கொட்டையிற் பிழிந்த எண்ணெய்யையும் காணிஷ் பண்டிதர் சோதித்து, அதிலே ஓர் அல்கலேவ[2]மும் அமிலத்தின் தன்மைகளையுடைய ஓர் கைச்சற் பதார்த்தமும் இருக்கக்கண்டு அந்தக் கைச்சற் பதார்த்தத்துக்கு மாகுஸிக்கமிலம்[3]என்று பெயரிட்டார்.

(25), 62 ம் பக்கம். வேம்பு. Margosa. (தன்மை,உபயோகம்)

முறைச்சுரங்களின் பரிகரிப்பில், வேப்பம்பட்டையின் உபயோகத்தைப்பற்றி பர்தலோமேயு, சொனறற் முதலிய பூர்வீக ஆக்கியோர் எழுதியிருக்கிறார்கள். ஆயினும் முதன்முதல் 1813 ம் ஆண்டு இதை வெளியரங்கப்படுத்தினவர் வைற்பண்டிதரே. சின்கன[4] பட்டை கொடுக்கும்போதுண்டாகும் சுகத்துக்குச் சரியான பூரணசுகம் இதைக் கொடுப்பதாலுண்டானதை அவர் தாமே கண்டோமென்கிறார். இது ஓர் அந்திபிறுடி[5]யென்றுசொல்லப்படத்தகுமோ என்பதைக் காணிஷ், விண்டு என்ற பண்டிதர்கள் செட்டியாய் ஆராய்ந்து வேப்பம்பட்டை முறைச்சுரங்களின் பரிகரிப்புக்குப் பூர்வீகமான சின்கனம் பாஷாணம் என்பவற்றைப் போல நயமானதென்று முடிப்புக்கட்டினார்கள். வெளலிஸ் பண்டிதரும் இப்படி முடிப்புக்கட்டினார். அவர் வேப்பம்பட்டை மாவைத் திறம்[6]தேயமாய் மூன்று நாலுமணித்தியாலத்துக்கொருமுறை கொடுத்தார். பட்டையிலிருந்தெடுக்கும்மோர் எசிறுத்து[7] நயந்ததென்று ஜடபசுந்தர் குறித்திருக்கிறார். இலேசான முறைச்சுரங்களுக்கு இது அந்திபிறுடியாய்ப் பெரும்பாலும் சித்தியுள்ளதென்பதும் சுரநோய்கள் தாபித[8]நோய்களினின்று சுகப்படுபவர்களுக்கு இதுதொணிக[9]மாக மெத்த உவந்ததென்பதுமே இந்நுவிலிருந்து வரும் எழுத்துக்களின் அடக்கம். காய்ந்த வேப்பமிலைகளின் எசிறுத்தைக் குஷ்டரோகத்துக்குக் கொடுக்கலாம் என்று மக்னமார வைத்தியர் சொல்லுகிறார். இம்மரத்தின் அந்தந்தப் பகுதிகளின் தன்மை உபயோகத்தைப்பற்றி இன்னும் காணிஷ் பண்டிதருடைய எழுத்திலும் வாறிங்கு பண்டிதருடைய எழுத்திலுங் காணலாம். சுதேச வைத்தியத்தில் இதின் உபயோகத்தைப்பற்றித் தலீவு செறீவு வாகடத்தில் விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

(26), 62 ம் பக்கம். வேப்பிலைப் பாப்பை. Nim poultice.

சீர்கெட்ட அழுகற்புண்களுக்கு வேப்பிலைப்பாப்பை உசிதமானதென்று கிறன்று, டன்பார் வைத்தியர்கள் விதந்துபேசுகிறார்கள். இதின் நயத்தைப்பற்றித் தமது எண்ணத்தை இந்நூலைப் பிரசுரஞ்செய்தவர் இன்னொரு பகுதியிற் குறித்திருக்கிறார்.

(27), 63 ம் பக்கம். சேம்மரம். Soymida Febrifuga.(கூறுபாடு)

சேம்பட்டையை ஓவர்பீக்கென்பவர் கூறுபடுத்தியிருக்கிறார். அவர் அதிலே கிறிஸ்தலிக்கக்[10]கூடிய எதும் பதார்த்தத்தைக் கண்டுபிடிக்கவில்லை.

---

1 Sulphate of Azederine. 2 Alkaloid. 3 Margosic acid. 4 Cinchona. 5 Antipeirodic. 6 Drachm. 7 Extract. 8 Inflammation. 9 Tonic, 10 Crystallize.

Digitized By Roja Muthiah Research Library

மேலும் தாம் அதிலே கண்டுபிடித்த கைப்பான அமாவப்[1]பதார்த்தம் இப்பட்டைக்குரிய சத்தோ என்பதைப்பற்றியும் சந்தேகப்படுகிறார். இப்பட்டையிலிருந்தெடுத்த கைப்பான ஓர் கிரிஸ்டற்பதார்த்தத்தைப் பற்றிப் பிடிங்தன் பண்டிதர் விபரிக்கிறார். என்றாலுங் கடைகளிற் சேம்பட்டையென்று விற்கிற காஞ்சிரம்பட்டையிலேயே அவர் சோதனைசெய்தாரென்றும் அவர் எண்ணியிருந்த ரோகுனசல்வசு[2] காஞ்சிரத்தின் ஓர் உப்பென்றுங் காணப்பட்டது.

(28),63ம் பக்கம். சேம்பட்டை. Soymida Febrifuga.(தன்மை,உபயோகம்)

சேம்பட்டையின் தன்மை உபயோகங்களைப் பற்றியும் விசேஷமாய் அது ஓர் அந்திபிருடி[3]யாகுமோவென்பதைப்பற்றியும், ரச்ஸ்பேகர், டன்கன், பிரேதன், ஸ்பில்ஸ்பெரி, என்பவர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். பெருந்தேயமாய்த் தின்றால் கினிய[4]த்தைப்போல இது தலைக்கிறுதியை உண்டாக்குமென்று ஸ்பில்ஸ்பெரி கண்டார். இது சென்னை றிப்போட்டிற் சொல்லியிருப்பதை யொத்திருக்கின்றது. அநலே ஒருநாளைக்கு ஐந்து ஆறு திராமுக்கு அதிகமாய் உட்கொண்டால் தலைக்கிறுதியும் தலைப்பிசகுமுண்டாகுமென்று சொல்லப்பட்டது. இதின் அந்திபிருடித் தன்மையைப்பற்றி ஒஷானசி பண்டிதர் அற்பமாய்ப் பேசுகிறார். ஆயினும் இதைச் சோதித்துப்பார்த்துச் சொல்லாமல் தமது எண்ணத்தை மாத்திரமே வெளிவிட்டார். சேம்பட்டையிற் செய்யும் ஓர் எசிறாத்தை[5] பிரேதன் என்பவர் கடுமையான தியறீயத்துக்குப்[6] பலமுறையுங் கொடுத்து அதைப்பற்றி நயந்துபேசுகிறார்.

(29), 71 ம் பக்கம். காசுக்கட்டி. Catechu. (உபயோகம்)

கினின்ஸ் வைத்தியர் முறைச்சுரக்காரர் 175 பேருக்குக் காசுக்கட்டியைக் கொடுத்தார். அவர் அதைப் பத்துப் பன்னிரண்டு கிறேன் தேயத்தில் நிலவேம்புக் கஷாயத்தோடு கலந்து கொடுத்தார். மேலுங் காணிஷ் பண்டிதரும் இதைக் கொடுத்துப்பார்த்து முன்சொன்னவருடைய எண்ணத்தைப் பெலப்பித்தார். கடைகளில் விற்கப்படுங் காசுக்கட்டி உதவாததாகையால் கொடுக்குங் காசுக்கட்டியின் தன்மையை அறிவதவசியமென்கிறார். அந்திபிருடியாக இது கடுக்காய்க்குச் சமமாகும். ரோசு வைத்தியர் இதை ஸ்கேவிக்குப்[7] பலமுறையுங் கொடுத்துப்பார்த்து முரசை மாத்திரமல்ல உடம்பையும் பொதுவாய் நயப்படுத்துகிறதென்கிறார். ஒரு அன்சு[8] தனித் தைலத்துக்கு[9] ஒரு திராம்[10] காசுக்கட்டி வீதமாய்ச் சேர்த்துச் செய்த தைலம் பலவகையான புண்களை மாற்றுவதற்கு உத்தமமானதென்று முடீன்செறீவர் சொல்லுகிறார். இதற்கு மாறாதிருந்தால் ஒரு அன்சு தைலத்துக்குப் பதினாறு கிறேன் துருசி[11] சேர்ப்பார். மற்று மருந்துகளுக்கு மாறாத சிவ்விசுப்புண்[12], குஷ்டம்[13], வைரமான புண்களையும் மற்றும் வகையான புண்களையும் இத் தைலங்களைக்கொண்டு அவர் மாற்றியிருக்கிறாராம்.

---

1 Amorphous. 2 Sulphate of Rohuna. 3 Antiperiodic. 4 Quinea. 5 Extract. 6 Diarrhoea. 7 Scurvy. 8 Ounce. 9 Simple Ointment. 10 Drachm, 11 Sulphate of Copper. 12 Syphilis, 13 Lepra,

Digitized By Roja Muthiah Research Library

(30), 73 ம் பக்கம். புளியங்கோட்டை. Tamarind seed.

ஓடுநீக்கிய புளியங்கொட்டை குடல்நோய்களுக்கு நல்ல துவர்மருந்தென்று சுதேசிகள் மதிப்பார்கள். இது கடுமையான நியநீயம், நிசந்தெரி[1] நோய்களுக்கு உவந்த மருந்தென்று சாற்று வைத்தியர் கொடுத்துப்பார்த்து சித்திபெற்றார். புளியமிலைக் கஷாயங் கண்ணோய்க்கு மெத்த வாடிக்கையான இடுமருந்து.

(31), 77 ம் பக்கம். களற்சி. Bonduc. (கூறுபாடு)

களற்சிக்கொட்டையைப் பிடிங்றன் பண்டிதர் கூறுபாடுசெய்து எழுதியிருக்கிறார். இன்னும் பூரணமான சோதனை வேண்டும்.

(32), 77 ம் பக்கம். களற்சி. (தன்மை உபயோகம்.)

களற்சிக்கொட்டை தொணிக[2]மும் அந்திபிருடி[3]யுமாகுமென்பதற்கு அநேகசாட்சிகளுண்டு. இந்நூலைப் பிரசுரஞ்செய்த வாறிங்கு பண்டிதர் இம்மருந்தைச் சோதித்துப்பார்த்தவிடத்து அது நயப்படவில்லை. இதின் செயல் சந்தேகமென்று கொர்கபதிரிகென்பவருங் கண்டார். சிலரில் முறைக்காய்ச்சலை இம்மருந்து கினியத்தை[4]ப்போற் சீக்கரமாய் மாற்றினாலுஞ் சிலரிலோ செயலில்லாமற்போகின்றது. இம் மருந்து தொணிக அந்திபிருடித்தன்மைகளை உடையதென்பதே இந்துவிலிருந்து வரும் எழுத்துக்களின் அடக்கம். களற்சிக்கிழங்கு பத்துக்கிறேன் தேயத்தில் கொட்டையைப் பார்க்க உத்தமமான தொணிகம் அந்திபிருடியென்பதே கொர்கபதிரிகு பண்டிதர் கருத்து. இடித்த கொட்டையைப் பீசதாபிதத்துக்கு[5] கட்டலாமென்று அவர் எழுதியிருந்தாலும் அதின் நயத்தை ஒருத்தருங் கண்டதாக விளங்கவில்லை. இம் மருந்தைப் பற்றிய குறிப்புகளை இந்நூலைப் பிரசுரஞ்செய்தவர் வேறொரு கடதாசியில் எழுதியிருக்கிறார்.

(33), 82 ம் பக்கம். முருக்கு. Butea Frondosa. (பிசின்)

முருக்கம்பிசினைப்பற்றி ஒஷானசி, பரைரர், ரைல், கிறிஸ்திசன் முதலியோர் விபரமாயெழுதியிருக்கிறார்கள்.

(34), 82 ம் பக்கம். குன்றிமணி. Abrus precatorius. (தன்மை)

குன்றிமணி வேரின் தன்மைகளைப்பற்றியும் விசேஷமாய் அதிமதுரவேருக்குப் பதிலாக அதை வழங்குவதைப்பற்றியும் விளெமிங்கு, ஒஷானசி, தால்சன், கிப்சன் முதலிய பண்டிதர்கள் சுருக்கமாயெழுதியிருக்கிறார்கள். குன்றிமணி வேரினதும் மற்றும் பகுதிகளினதும் திமல்ச[6]த்தன்மைகளைப்பற்றி வாறிங்குபண்டிதர் வேறொரு பகுதியிற் குறித்திருக்கிறார்.

(35), 82 ம் பக்கம். வேர்க்கடலைத்தேல். Ground nut oil.

தெக்கணத்திலே அரசாட்சியார் தோட்டத்தில் எத்தனப்படுத்தப்பட்ட

1 Dysenterey. 2 Tonic. 3 Antiperiodic. 4 Quinia. 5 Orchitis. 6 Demulcent.

வேர்க்கடலைத் தைலப்பற்றி வின்செஸ்தர் வைத்தியரால் எழுதியிருக்கிற குறிப்பாவது. இந்த எண்ணெய் மேற்கு இந்துதேசம் முழுவதிலும் ஒலீவெண்ணெய்[1]க்குப் பதிலாக வழங்கப்படுகின்றது. இது வெண்சிவப்பு நிறமானது; மணமற்றது; சுத்த சுவையுள்ளதால் அதிலே பொரித்தமீன், நெய்யிலாவது, தேனிலாவது, பொரித்தமீன்போல உருசியாயிருக்கும். அலக்காலையும்[2]ஈதரையும்[3]கொண்டு இதைச் சோதித்துப்பார்த்தவிடத்து எதுங் கலப்பற்றதாயிருந்தது. வருஷாந்தம் அந்த இடத்திலிருந்து 1000 இருத்தல் முதல் 3000 இருத்தல் எண்ணெய் ஏற்றுமதிபண்ணப்படுகின்றது. அது நீர்ப்பாரசத்தி[4]னாற் செய்யப்பட்டு ஒலீவெண்ணெய்க்கு நல்ல பதிலெண்ணெய் என்று வைத்தியரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

(36), 103 ம் பக்கம். மாதளை. Punica granatum. (பழக்கோது.)

மாதளம்பழத் தோல் நல்ல தொணிக[5]மும் துவரு[6]மென்றும் அதைக் கராம்போடு அவித்துக்கொடுத்தால் இந்துதேசத்தின் வறிய சனங்களுக்குப் பெரும்பாலு முண்டாகும் காலிகதிசந்தெரி[7]க்கு உத்தமமருந்தாகுமென்றும் கொர்க பதிரிகு பண்டிதர் சொல்லுகிறார். அது நல்ல துவரென்பது வெகுகாலமாக அறிந்த காரியம். அதை அனேகர் வழங்கி நயங்கண்டார்கள்.

(37), 104 ம்பக்கம். கலுசிந்துக்கூட்டேசிறத்து. Compound Extract of Colocynth.

இம்மருந்து இந்துதேசத்திலே வெகு சித்தியாய்ச் செய்யப்படுகின்றது. வம்பாயிலுள்ள மருந்துச்சாலைக்கு இது அரசாட்சியாரால் வருஷாந்தம் 150 இருத்தல் தொடக்கம் 200 இருத்தல் வரைக்குக் கொடுக்கப்பட்டது. வம்பாயிலுள்ள மருந்துச்சாலைக்குப் பொறுப்பாளியாயிருந்த வின்செஸ்தர் சொல்வதாவது: மெற்கிந்துதேசச் சமவெளிகளிற் கலுசிந்து[8] என்ற பேய்க்கொம்மட்டி எவ்வளவு அதிகமாய் வளருகிறதென்பதை அறிந்தவர்கள், இம்மருந்து பட்டாளத்தில் வழங்கப்படுவதற்கு மாத்திரமல்ல பிறதேசங்களுக்கும் ஏற்றப்படுவதற்குப் போதிய அளவாய் அங்கே செய்யப்படவேண்டும் என்பதைக் காத்திருப்பார்கள். மருந்துச்சாலைக்கு அனுப்பப்பட்டது உத்தமமாயிருந்தது. மருந்துக்காரன் ஸ்கமுனி[9]யைக் கடையில் வாங்கியும் சவுக்கார[10]த்தைச் சீமையால் எடுப்பித்தும் உத்தமமாய்க் கொடுத்ததுபோலவே நாட்டிற்செய்த கலுசிந்துக்கூட்டெசிறுத்தும் சீமையால் வந்ததற்கு மெத்தச் சரியாயிருந்தது.

(38), 109 ம் பக்கம். ஓமம். Omum.

ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன்னே ஓமக்கொட்டை மருந்தாகுமென்று பேர்சிவல் பண்டிதரால் இங்கிலந்தில் அறிவிக்கப்பட்டது. ஆயினும் அது அதிகமாய் வழங்கப்படவில்லை. இது உத்தமமான வாயுக்கினியென்பதற்குச் சந்தேகமில்லை. பிதிவைத்தியர் இதைப்பற்றிச் சொல்வது: சொற்பபிரமாணமாக இது உமிழ்நீரை ஊறப்பண்ணும். குக்கிநீரூறுவதை

---

1 Olive oil. 2 Alcohol. 3 Ether. 4 Hydraulic pressure. 5 Tonic. 6 Astringent. 7 Chronic Dysentery. 8 Colocynth. 9 Scammony. 10 Soap.

Digitized By Roja Muthiah Research Library

அதிகப்படுத்தும்; ஸ்திமுலம்[1], வாயுக்கினி[2], தொணிக[3]மாகச் சேஷ்டிக்கும். தொண்டை புண்பட்டு இளகியிருப்பதற்கு இதை மற்றுந் துவர் மருந்துகளோடு சேர்த்து இடுவது நயமாகும். கெட்ட சுவையுள்ள மருந்துகளின் சுவையை மறைத்து அவைகளாலுண்டாகும் உவட்டிப்பு வயிற்றுமுறுக்கு முதலியவற்றை மாற்றுவதற்கு இதற்குச் சரிவந்த மருந்து இல்லை. இவ்வகையான சாட்சி வுட்டென்பவராலுங் கொடுக்கப்படுகின்றது. மிளகாய் அல்லது கடுகின் தீவனதன்மையோடு நிலவேம்புக்குரிய கைப்பும், பெருங்காயத்துக்குரிய அந்திஸ்பச[4]தன்மையும் இதிற் கலந்திருக்கிறதென்று அவர் எண்ணுகிறார். ஓம எண்ணெய்யைச் சபுலினிமெ[5]ஞ்டோவது காரமற்ற வேறேதுமெண்ணெய்யோடாவது கலந்து காலிகவாதத்துக்குப் பூசுவது உத்தமமென்று சொல்லப்பட்டது. ஓமநீரைத் திஸ்திலித்தெடுப்பதற்குப் போடும் ஓமக்கொட்டையின் வீதம் மிகச் சொற்பமென்பது வுட்டரது எண்ணம். அவர் மூன்று இருத்தல் ஓமக்கொட்டையை இடித்து 6 நாழி தண்ணீருக்குள்ளிட்டு அதில் நாலுநாழியைத் திஸ்திலித்தெடுக்கச் சொல்லுகிறார்.

(39), 117 ம் பக்கம். வல்லாரை. Hydrocotyle Asciatica. (தன்மை.)

இப்பூண்டு குஷ்டரோகத்[6]துக்கு மருந்தாகப் பயிலுபண்டிதராற் கொடுக்கப்பட்டதைப்பற்றிப் போதர் என்பவர் விபரமாயெழுதியிருக்கிறார். மேலும் கந்தர் என்பவரும் தாம் இப்பூண்டைச் சென்னைபட்டினக் குஷ்டரோக சாலையில் அந்நோய்க்கு மருந்தாக வழங்கினதைப்பற்றியும் அதின் கூறுபாடு உற்பத்தி முதலியவற்றைப்பற்றியும் எழுதியிருக்கிறார். சாற்று வைத்தியரும் குஷ்டரோக நோய்களுக்கு இது உச்சிதமான அல்திறவ[7] தொணிக மருந்தென்று விதந்து கூறுகிறார். இந்நூலாக்கியோனும் இதைப் பரிசோதித்தெழுதியிருக்கிறார்.

(40) 120 ம் பக்கம். சின்கனம். Cinchona.

(இது இந்துதேசத்துக்கு வந்தவகை)

கினியந்தரும் சின்கனமரத்தை இந்துவுக்குக் கொண்டுவந்து வளர்க்கவேண்டுமென்று ரோயில் என்பவர் 1835 ம் ஆண்டுவரையில் காரிய கர்த்தாக்களுக்கு அறிவித்துச் சமயம் கிடைக்கும்போதெல்லாம் அதைக்குறித்து விடாமுயற்சியாய் நினைப்பூட்டினார். டற்சுத் தாவரசாஸ்திரிகளும் யாவதேசத்தில் இம்மரங்களை உண்டாக்கவேண்டுமென்று தங்கள் அரசாட்சியாரைத் தூண்டியும் 1852 ம் ஆண்டு வரைக்கும் யாதொரு சித்தியும் பெறுமலிருந்தும் அவ்வாண்டிற்றுனே கஸ்காள் என்பவர் சில மரங்களைக் கொண்டுவரும்படியாக தென்அமரிக தேசத்துக்கு அனுப்பப்பட்டார். அவர் போய்ப் பலவகையான சின்கனமரங்களை அங்கிருந்து யாவத்துக்குக் கொண்டுவந்தார். அவைகளில் மிகுதியானவைகள் கீழ்த்தரமான மரங்களாம்.

1852 ம் ஆண்டிலும் அதின்பின் பலமுறைகளிலும் இந்துஅரசாட்சியார் கினியத்தின் விலை கடுமையென்றும் அதினுற் கினியந்தரு மரத்தைத் தாங்களே இங்கே வளர்த்துக்கொள்வது நலமென்றும் மேன்கையாருக்குக் காட்டினார்கள்.

1854 ம் ஆண்டு கியு என்னுமிடத்திலுள்ள தோட்டத்திலும் தோட்டவே

---

1 Simulant. 2 Carminative. 3 Tonic. 4 Antispasmodic. 5 Soap liniment. 6 Leprosy. 7 Alterative.

Digitized By Roja Muthiah Research Library

லைச் சங்கத்தாரிடத்திலும் வாங்கின ஆறு சின்கனக் கன்றுகளை ரோயில்பண்டிதர் இந்துவுக்கு அனுப்பினார். இக்கன்றுகள் பேர்பெற்ற பிராஞ்சிய தாவரசாஸ்திரியும் பிரயாணியும் சின்கனத்தின் இனங்களை நமக்கறிவித்தவருமாகிய வெடெல் என்பவர் 1847 ம் ஆண்டு சம்பாதித்த விதைகளின் கன்றுகளேயாம். இக்கன்றுகள் கல்சத்தாவுக்குக் கொண்டுபோய் நடப்பட்டும் முதல்மாரியின்பின் அவை பட்டுப்போயின.

முதல் முயற்சி பிரதிகூலமாய்ப் போனாலும் ரோயில் பண்டிதர் இன்னுஞ் சித்திபெறலாமென்ற விடாமுயற்சியால் சின்கனநாடுகளுக்குச் செட்டிக்காரனை ஒருவரை அனுப்புவது அவசியமென்றுஎவினார். அப்போ இந்து அரசாட்சியார் சின்கனபட்டைக்கும் கினியத்துக்குமாக வருஷாந்தம் 7000 பவுண்செலவிட்டுவந்தார்கள். சுறுக்கு அச்செலவு 12000 பவனுக்கு ஏறிவிட்டது. 1857 ம் ஆண்டு யுரோப பட்டாளம் கதிக்க, அச்செலவும் அதற்குத்தக்கதாய்க் கூடினது.

கடைசியில் இக்காரியம் இந்துவிலும் இங்கிலந்திலுமுள்ள அதிகாரிகள் பார்வையில் விசேஷமென்று தோன்றினது. 1859 ம் ஆண்டு அப்போ இந்துதேசக் காரியங்களுக்கு லிகிதராயிருந்த ஸ்தன்லி பிரபு சின்கன நாடுகளுக்குச் சிலரை அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார். அதற்கு அத்தேசத்தை முன்னமே அறிந்திருந்த மார்கம் என்பவரையே தகுந்தவரென்று தெரிவுசெய்தார். மார்கம் என்பவர் பொலீவிய தேசத்திலுள்ள கலிசாயநாடுகளுக்குத் தாமே போகத் தீர்மானித்து, அப்போ கியு என்னுந் தோட்டங்களுக்கு விசாரணைக்கர்த்தாவாயிருந்து இக்காரியத்தில் அதி விருப்பங்கொண்டிருந்த கூக்கர் பண்டிதரோடு யோசனையுஞ்செய்து, அப்போ மேல் அமசோன் தேசங்களை ஆராய்வுசெய்துகொண்டிருந்த ஸ்புரூஸ் என்பவரை ஈகுவடோர்தேசத்திலுள்ள செஞ்சின்கனக்காடுகளுக்கு அனுப்பினார். மேலும் பிரிச்செற் என்பவர் பெருதேசத்திலுள்ள நரைச்சின்கன நாடுகளுக்கு அனுப்பப்பட்டார். கன்றுகளையும் விதைகளையும் பதிப்பதற்கு மேடைகள் கியுதோட்டங்களில் ஆயத்தம்பண்ணப்பட்டன.

மார்கம் என்பவர் 1859 ம் ஆண்டு மார்கழிமாசத்தில் இங்கிலந்தை விட்டுப் புறப்பட்டுப் போய் உயிருள்ள சின்கனக் கன்றுகளைச் சேர்த்துக்கொண்டு பனமா வழியாய்த் திரும்பினார். உடனே அவர் வம்பாய்க்குப் போய் அங்கிருந்து 1860 ம் ஆண்டு கோடையில் நீலகிரியைச் சேர்ந்தார். ஸ்புரூஸ், பிரிச்சாற்றென்பவர்களாற் சேர்க்கப்பட்ட தொகையான கன்றுகளும் விதைகளும் 1861 ம் ஆண்டு முகனையில் அங்கே வந்து சேர்ந்தன. இவைகளை நாட்டி வளர்ப்பதற்கான இடங்களை மார்கம் என்பவர் மாகிவர் என்பவரது உதவியோடு தெரிந்து செய்கையை அவர் பொறுப்பிற்றானே விட்டார். மேலும் சூதானத்துக்காகப் பூண்டுகளிலும் விதைகளிலும் சிலவற்றைக் கியு என்ற இடத்தில் இட்டார்கள். அங்கே அவைகள் நன்றாய் முளைத்துச் செவ்வையாய் வளர்ந்தன. போதிய கன்றுகள் விதைகள் சம்பாதிக்கப்பட்டவுடன், இப்பரிசோதனையை இந்துதேசத்தின் மற்றும் பகுதிகளிலும் நடத்தினார்கள். இலங்கைத் தாவரதோட்டத்துக்கதிகாரியாகிய, துவேற்ஸ் என்பவரிடத்துக்கும் கற்குத்தாத் தாவரதோட்ட விசாரணைக்காரனாகிய அன்றேசன் என்பவரிடத்துக்கும், கன்றுகள்விதைகள் அனுப்பப்பட்டன. மேலும் டற்சுக்காரருடைய செய்கையைப்பற்றி ஆராய்வுசெய்யும்படியாக அன்றேசன் என்பவர் ஜாவதீவுக்கு அனுப்பப்பட்டார். துவெற்ஸ் என்பவர்

Digitized By Roja Muthiah Research Library

இலங்கையின் மத்தியமாகாணத்தின் மலைச்சாரல்களில் கன்றுகளை உண்டாக்கினார். அன்றேசன் சிக்கிமின் பல இடங்களை இச்செய்கைக்கென்று தெரிந்துகொண்டார். செய்கை எங்கும் வாய்த்தது. விதைகளிலும் கிளைகளிலுமிருந்து தொகையான கன்றுகள் உண்டாக்கப்பட்டன. அக் கன்றுகள் பெரியமரங்களாக வளர்ந்து பூர்த்துக் காய்த்தன. அவைகளிலிருந்து எடுக்கும் கினியத்தின் வீதம் அவைகளின் சொனதேசத்தில் எடுக்கப்படுமளவைப் பார்க்கக் கதித்தது. முக்கியமான இப்பரிசோதனை சந்தேகமின்றி வாய்த்தது.

தற்காலத்திலே இந்துதேசத்தூற் சின்கனச்செய்கையிருக்குஞ் சீரைப்பற்றிப் பின்வருங் காரியங்களை மார்கம் என்பவர் எழுதியிருக்கிறார்.

ஆகப் பிந்திய அறிவிப்பின்படி 1867 ம் ஆண்டில் நீலகிரி மலையிலே ராசாங்கத்தார் செய்கையிலே 17,85,303 சின்கனக்கன்றுகள் நின்றன. இவைகளில் 4,01,211 கன்றுகளும் வளர்ந்து மரங்களாய்விட்டன. இச் செய்கைக்குள்ளடங்கிய நிலம் 673 ஏக்கர். 125,747 கன்றுகள் சனங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

ஊர்ச்சனங்களும் நீலகிரி மலைகளிலேயும் குன்ற மலைகளிலேயுங் கைஞுத்து கூர்க் என்ற இடங்களிலேயும் சின்கன மரங்களை நட்டிருக்கிறார்கள். திரவங்கூர் இராசாவும் பியர்மீதிலே ஓர் சிறிய சின்கனத் தோட்டத்தை உண்டாக்குவித்திருக்கிறார்.

1862 ம் ஆண்டு பங்குனிமாதம் சின்கன கன்றுகள் தார்சிலின் என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டு அடுத்த ஆடிமாதத்திலே பரிசோதனைக்காக 211 கன்றுகள் நாட்டப்பட்டன. அடுத்த இடங்கள் சிலவற்றிலும் நாட்டப்பட்டன. 1867 ம் ஆண்டு தைமாதத்தில் அங்கே 6,25,408 கன்றுகள் நின்றன. 67,280 கன்றுகள் நிலைபரமாய் நடப்பட்டு மரங்களாய் வளர்ந்துவிட்டன. பஞ்சாப்பு தேசத்திலே கங்கிரு என்ற இடத்தில் லீஸ் தளகர்த்தர் ஓர் சின்கன தோட்டத்தை உண்டாக்கி அவ்விடத்துக்கு புதுக்கிற்றோ என்று பெயரிட்டார். மேலும் வம்பாய் இராசாங்கத்தார் பரிசோதனைக்காக விங்முல்லம் என்ற இடத்திலே யோர் தோட்டத்தையுண்டாக்கினார்கள்.

தென்னமரிசத்திலுள்ள பிரயோசனமான சின்கன மரவகைகள் எல்லாவற்றையும் இந்துதேசத்துக்குக் கொண்டுபோகவேண்டுமென்று நினைத்தார்கள். 1867 ம் ஆண்டு வரைக்கும் அவர்கள் செய்த செய்கையின் பெறுபேறாவது.

I கலிசாயசின்கனம். Cinchona Calisaya. (பீதச்சின்கனம்) சென்ற வருஷம் வரைக்கும் இந்தவகையிலே செடிமாத்திரம் கிடைத்தது. 1866 ம் ஆண்டிலோ நல்ல மரத்தின் கொட்டைகள் கனமாய் வாங்கி நன்றாய் முளைப்பிக்கப்பட்டது. 1867 ம் ஆண்டு தைமாசத்தில் நீலகிரித் தோட்டத்திலே கலிசாயசின்கனக்கன்றுகள் 40,000 நின்றன. இவைகளினால் மெத்தப் பலனுண்டாகும். அது சில வருஷத்துக்குள்ளே விளங்கும்.

II செஞ்சின்கனம். C. Succirubra. இந்த இனத்தைச் சேர்ந்த மரங்கள் இப்போ மெத்தப் பரிதாகி ஒன்றுக்கொன்று எட்டுமுழ தூரத்தில் நின்றாலும் பின்னுகின்றன. இவைகள் கடல்மட்டத்துக்கு மேலே 4,000 அடி முதல் 6,000 அடி உயரத்துக்கு வளருகின்றன. மெக்கீவர் என்பவர் மரத்தைப் போர்வையிட்டதால் பட்டை தடிப்பாய் வளர்ந்தது. ஆவாடென்பவர் அப் பட்டையைக் கூறுபடுத்தினபோது அதிலே சுரக்கின்[1] அல்கலைவஃங்கள் இரட்டத்தனை பிறந்தன. போர்வைக்குள்ளே வளர்ந்து மூன்றும்

1 Febrifuge. 2 Alkaloids.

முறையாய் வெட்டப்பட்ட பட்டையிலே கினியமும்[1] மற்றும் அல்கலைவங்களும் பின்னுற் காட்டப்படும் வீதமாய்ப் பிறந்தன.

| | | |
|---|---|---|
| கிரிஸ்தலித்த சல்வசுகள்[2] - - - | நூற்றுக்கு, | 8·45 |
| ஈதரிற்[3]கரையக்கூடிய அல்கலைவங்களாகிய | | |
| கினியமும் சின்குனிரமும்[4] - - - | " | 1·14 |
| சின்குனிசின்[5] - - - - - | " | 0·20 |
| | " | 9·79 |

போர்வையிடாத பட்டையில் நூற்றுக்கு 6 95 வீதமாய் அல்கலைவங்கள் பிறந்தன. 6 மாதமாகப் போர்வையிட்ட பட்டையிலோ நூற்றுக்கு 9 26 வீதமாய்ப் பிறந்தன. மாதிரிக்கெடுத்த இப்பட்டை நீலகிரிமரத்துக்குரியது. இரண்டுவயதுள்ளதாய் தார்சிலிங்கென்ற இடத்திலிருந்தெடுத்த பட்டையிலே நூற்றுக்கு $3\frac{1}{2}$ வீதமிருந்தது.

III சுகந்தசின்கனம். C. Officinalis. இந்த இனத்தைச்சேர்ந்த மரங்கள் சுகிர்தத்தில் செஞ்சின்கன மரத்துக்கு இரண்டாவதானவைகள்; அதிலும் இவை வன்மையானவைகள். காட்டுநிலத்தில் வளருவதைப்போல் மணல் நிலத்திலும் வளரும். காற்றுக்கு ஒதுக்குக்கட்டினுல் நீலகிரிமலையின் உயர்ந்த சாரல்களிலும் வளரும். நீலகிரி மலையில் வளர்ந்த வெண்சின்கனமரமொன்றிலே போர்வையிட்டு இரண்டாம் முறையாய் வெட்டியெடுத்த பட்டையிலிருந்தெடுத்த பதார்த்தங்களின் வீதங்களாவன.

| | | |
|---|---|---|
| கிரிஸ்தலித்த சல்வசுகள் - - - - | நூற்றுக்கு | 6·52 |
| ஈதரிற் கரையக்கூடிய அல்கலைவங்களாகிய | | |
| கினியமும் சின்குனிரமும் - - - - - | " | 1·35 |
| சின்குனிசின் - - - - - - - - | " | 0·15 |
| | " | 8·02 |

சுகந்த சின்கன மரத்தின் முதற்பட்டை 9 மாசமாகப் போர்வையிடப்பட்டிருந்தபின் நூற்றுக்கு 7·37 வீதமாக அல்கலைவங்களை ஈந்தது. அதிலே சிறிய குழற்பட்டை நூற்றுக்கு 4·73 வீதமாய் ஈந்தது.

IV நரைச்சின்கனம். C. Micrantha. C. Nitida. C. Peruviana இந்த இனங்கள் செஞ்சின்கன இனங்களைப்போலச் செளிப்பாய் வளரும். இவைகளைச் செய்கையிட்டதால் விசேஷமான நயங்கண்டது. இவைகள் சொந்தத் தேசமாகிய தென்னமரிகத்தில், சின்கனின் என்ற உதவாத அல்கலைவத்தைத் தவிர வேறொன்றையும் ஈயவில்லை. நீலகிரியில் வளர்த்த இந்த இனத்துப் பட்டையைக் கூறுபடுத்தினபோதோ சின்கனின் அந்நிலே ஏறக்குறைய முற்றுமில்லாமற்போயிற்று. நல்ல அல்கலையாகிய கினிதின்[6] அதிகவீதமாயிருந்தது.

V வெண்சின்கனம். C. Lancifolia. இந்த இனத்தைச் சேர்ந்த மரங்கள் 304 வரையில் நீலகிரி மலையிலே நிற்கின்றன. இவை யாவத்திலிருந்து கொண்டுவந்து வைத்த கன்றுகள். அக்கன்றுகள் பஸ்து என்ற இடத்துக்குச் சென்ற காஸ்தன் பண்டிதராற் சேர்க்கப்பட்ட விதைகளின் கன்றுகள். ஆயினும் இந்த இனத்தில் உத்தமமானவைகள் இவைகளல்ல. ஆதலால் இந்திய காரியங்களுக்கதிகாரியாகிய லிகிதர் Secretary of state for India.

1 Quinine. 2 Crystallized sulphates. 3 Ether. 4 Cinchonidine, 5 Cinchonicine. 6 Quinidine.

பப்பியன், பிதேயு என்னும் இடங்களுக்குக் கிட்ட வளருகிற உச்சிதமான கன்றுகள் அல்லது விதைகளைச் சம்பாதிக்கும்படியாக இன்னுமொருமுறை ஒருவரை அனுப்பத் தீர்மானித்திருக்கிறார்.

VI பதுதியனசின்கனம். C. Paludiana. இது யாவத்தைச்சேர்ந்த உத வாத இனம். இதிலே 425 மரங்கள் நீலகிரியில் நிற்கின்றன. ஆகிலும் இவை பரப்பப்படவில்லை. ஒன்பது மாசமாகப் போர்வையிட்டிருந்த பட்டையைக் கூறுபடுத்தினபோது அதிலே அல்கலேவங்கள் நூற்றுக்கு 0·761 வீதமாய் மாத்திரம் இருந்தன. நீலகிரி மலையிலே வளருஞ் சின்கன மரங்களைச் சோதித்துக் கூறுபடுத்திப் பார்க்கும்படியாக 1866 ம் ஆண்டு இந்திய காரிய விகிதர், சாதனையுள்ள கெமிஸ்த[1]ராகிய பிறவுதனரை நியமித்தார். இவர் எழுதிய முதல் அறிவித்தலிலிருந்து விசேஷமான காரியங்கள் சிலவற்றை இவ்விடந் திருப்பித்தருகிறோம்.

பிறவுதனர் 1867 ம் ஆண்டு சித்திரை மாதம் 12 ம் திகதியைக்கொண்டு எழுதின அறிவித்தலின் சுருக்கம்.

செஞ்சின்கனவைச் சோதிப்பதற்கே விசேஷமான கவனஞ் செலுத்தப்பட்டது. இந்தவிலுண்டாக்கப்பட்ட எல்லா இனங்களுக்குள்ளேயும் இந்த இனமே அதிகமாய்ச் செளித்தோங்கி வளருகின்றது. தொகையிலும் இது முக்கியமானது. மேலும் உபயோகமாய் முதற் செலவழியக்கூடியதும் இதுவே.

வளர்ந்த மரங்களைப் பார்த்தால், செஞ்சின்கன மரங்கள் தோற்றம் முதலியவற்றில் வித்தியாசங் காட்டுகின்றன. இந்த வித்தியாசத்தை மார்கம் என்பவர் கவனித்து எடுக்கும் அல்கலேவங்களின் அளவு வித்தியாசத்துக்குத் தக்கதாய் இவ்விகற்பங்கள் இருக்குமென்கிறார். இந்த எண்ணஞ் சரியென்பது நாலுமரங்களின் சாய்ந்த பட்டையைக் கூறுபடுத்தி அவைகளிலிருந்து எடுக்கும் பதார்த்தங்களின் நூற்றுவீதத்தை பின்வரும் அட்டவணைப்படி கவனிப்பதால் விளங்கும்.

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| ஐரசித்த[3] அல்கலேவங்களின் தொகை - | 4·85 | 7·00 | 6·40 | 6·4 |
| ஈதரிற்[4]கரையக்கூடிய அல்கலேவமாகிய கினியம்[5] | 3·25 | 4·25 | 4·75 | 1·7 |
| சின்குனிரினும்[6] சின்குனினும்[7] - - - | 1·60 | 2·75 | 1·67 | 4·7 |
| கிரிஸ்தலாக[8]எடுத்த கினியசல்வசு[9] - - - | 3·00 | 4·00 | 4 55 | 1·7 |

மேலே கண்ட அட்டவணையிலும் அதற்குப் பின்வந்தவைகளிலும் கினியசல்வசு கூடியளவு சுத்தமாயெடுக்கப்பட்டது.

I ம் இலக்கப் பட்டை. கிடைத்த இனங்களுக்குள்ளே இளந்ததென்றும் இருவடர் தேசத்து உத்தமபட்டைக்குச் சரியான அல்கலேவங்களை ஈந்தது. II. III. IV. என்ற இலக்கங்களாற் குறிக்கப்பட்ட பட்டைகள் அதிகம் கொழுப்பானவைகள். போர்வையிடப்படாத அவற்றின் பட்டையிலிருந்தெடுத்த அல்கலேவங்கள் நூற்றுக்கு எழு வீதமாயிருந்தது. இந்த வீதம் எனக்கு மெத்த அதிகமென்று தோன்றினபடியால் வேறுவகையாய் அவற்றைத் திரும்பத் திரும்ப நான் கூறுபடுத்திப் பார்த்தாலும் முந்தின அளவே ஒத்துவந்தது. இப்பட்டைகளின் அல்கலேவங்கள் கொழுப்பாயிருப்

1 Chemist. 2 Alkaloid. 3 Hydrated. 4 Ether. 5 Quinine. 6 Cinchonidine. 7 Cinchonine. 8 Crystal. 9 Sulphate.

Digitized By Roja Muthiah Research Library

பதைப்பற்றி இந்துப்பட்டைகளுக்குள்ளே இவை மூதற்றரமென்று சொல்லக்கூடியதாயிருந்தாலும் செய்கைபண்ணுவதற்கு இவைதான் நயந்தவைகளென்று எடுக்கக்கூடாது. அல்கலேவத்தைச் சுத்தமாயுங் கிரிஸ்தலாயுமெடுக்கும் இலகுவைப்பற்றியும் அவற்றின் நயமிருக்கும். இதுகாரியத்திற் போர்வையிடாத செஞ்சின்கன பட்டையிலிருந்து அல்கலேவத்தைச் சுத்தமாயெடுப்பது அதிகம் வருத்தமாகையால் அது வசதியானதல்ல.

மேலே கண்ட சோதனைகள் அடிமரத்திற் பட்டையிற் செய்யப்பட்டன. அடிமரத்துப்பட்டை கொம்புப் பட்டையைப் பார்க்கக் கொழுப்பானது. கொம்புப் பட்டையிலே அல்கலேவங்கள்

**கொம்புப்பட்டை.** நூற்றுக்கு மூன்று வீதமாய் வரும். அதிலே கிரிஸ்தலான சல்வசுகள் நூற்றுக்கு 1·4 வீதமாய் வரும்.

செஞ்சின்கன மரத்தின் வேர்ப்பட்டையைச் சோதித்தபோது அதிலே அல்கலேவங்கள் அதிவீதமாயிருக்கிறதென்று திவேற்சு பண்டிதர் சொன்னது மெய்ப்பட்டது. அதாவது அதிலே கினியம்[1] 2·15; சின்குனிரி[2]னும் சின்குனி[3]னும் 3·85. ஆகநூற்றுக்கு 6·0.

**வேர்ப்பட்டை.** வேர்ப்பட்டை மெல்லிதாகையாலும் அதிலே நூற்றுக்கு 74 வீதமாய்த் தண்ணீர் இருப்பதாலும் கூறுபடுத்துவது அரிதாகையாலும் அதிலே அல்கலேவங்களை நயமாய் எடுக்கக்கூடாது.

காலு இருத்தல் நிறையுள்ள இலையினின்று 3·1 கிறேன் அல்கலேவங்கள் எடுக்கப்பட்டது. அதில் ஒருகிறேனும் ஈதரிற்[4]கலரயக்கூடியது.

**இலைகள்.** அதைக் குலோற[5]நீரும் அமோனமுங்[6] கொண்டு சோதித்தவிடத்து சொற்ப கினியத்தைக் காட்டினது. கிரிஸ்தலான உப்பு ஒன்றும் அதில் எடுக்கக்கூடாது. இலையிலே கினுவின்[7] நிரம்பவுண்டு.

சசிருபுர சின்கனத்துக்கு அடுத்தாப்போற் தற்காலத்தில் இந்தவிலிருக்கிற சின்கனம் சுகந்த சின்கனமே. இதின் இனங்களினின்றே முடிப்பட்டை[8]எடுக்கப்படும். அவ்வினங்களுள் பன்பிளன்றியன் சின்கனம் என்பதே முதற்றரமானது.

**சுகந்தசின்கனம்.** அந்த இனத்தைச் சார்ந்த வோர் மரத்தின் அடிப்பட்டையிலே நூற்றுக்கு 3.6 வீதமாய் அல்கலேவங்கள் எடுக்கப்பட்டன. அதிலே கினியம் 2·8; சின்குனிரினும் சின்குனினும் 0·8. இன்னொரு மரத்தின் பட்டையிலே 3·8 வீதமாய் வந்தது. அதிற் கினியம் 3·0. சின்குனின் 0.8. இந்த இன மரத்தின் வளர்ச்சித் தாமதம், அல்கலேவக் குறைவு என்பவற்றைச் சரிக்கட்டத் தக்க சில நயங்கள் செஞ்சின்கனவைப்பார்க்க இதின் செய்கையிலுண்டு. முடிப்பட்டையிலே ராளமும்[9] நிறப்பதார்த்தமுஞ் சொற்பமாய்ச் சேர்ந்திருக்கிறபடியால் அது தன் அல்கலேவங்களை லகுவில் ஈகின்றது. இந்த இனத்துப் பட்டையோ பொலிவியத்துச் சுத்த கலிசாயப்பட்டைக்கு ஏறக்குறையச் சரியான உத்தமபட்டையே.

காலரை வருஷ வளர்ச்சியை உடைய கரைச்சின்கன மரத்தின் அடிப்பட்டையைக் கூறுபடுத்தினவிடத்து அல்கலேவம் நூற்றுக்கு 7·1 வீதமாய் வந்தது. இதிலே கினியம் 0·3. சொச்சமான 6 8 பங்கும் சின்குனின். இதை அலக்காலிற்

**கரைச்சின்கனம்.** கரைக்க, லகுவிற் சுத்தமான கிரிஸ்தலாகி 0·18 இஞ்சு நீளமான சிறந்த

1 Quinine. 2 Cinchonidine. 3 Cinchonine. 4 Ether. 5 Chlorum. 6 Ammonia. 7 Quinovin. 8 Crown bark. 9 Resin.

Digitized By Roja Muthiah Research Library

கிரிஸ்தல்களாய்வந்தது. குவன்குப் பட்டையிலே வழக்கமாய் நூற்றுக்கு 2.0 பங்கு அல்கலைவங்கள் அடங்கியிருக்கும். சின்கனம் சுரக்கினியாக வழக்கத்தில் வருமாகில் நரைச்சின்கன பட்டையிலிருந்து அதை மெத்த லகுவாயுந் தாராளமாயுமெடுக்கலாம்.

மெக்கீவர் சொன்ன முறைப்படி போர்வையிடுவதாலுண்டாகும் நயத்தைப்பற்றி ஆவாடென்பவர் சொன்னதும் ஒத்திருக்கின்றது. இப்படிச்செய்வதால் அல்கலைவங்கள் அதிகப்படுகின்றன. உயிருள்ள பட்டையில் வெயில்படுவதால் அல்கலைவங்கள் குறைகின்றதென்று அனுபவத்தாற் தோற்றுகின்றது. ஆகையாற்றான் போர்வையிடல் நயமாய் முடிகின்றது.

## (41) 121 ம் பக்கம். சின்கனஇலை. Cinchona Leaves. (உபயோகம்)

இந்துவில் வளர்ந்த சகிரூபுரசின்கனத்தின் இலையை ஆவாடர் சோதித்து அதில்நின்று முதலாவதாய் நூற்றுக்கு 0 11 வீதமான அல்கலைவம் எடுத்தார். இதிலொருபங்கு ஈதரிற் கரைந்தது; சொச்சம் வைன்சுரையிற் கரைந்தது. பிற்பாடு துவர்ப்பதார்த்தத்தோடு கலந்திருந்த வோர் அடையலை நூற்றுக்கு 0·19 வீதமாய் எடுத்தார். இந்த இலையிலிருந்து கினியம் எடுக்கக்கூடாதென்றாலும் அதைப் பச்சையிலையாய், அல்லது வெந்நீரிலாவது தண்ணீரிலாவது ஊறப்போட்டு,அத்தேசத்துக் காய்ச்சலை மாற்றுவதற்குக் கொடுக்கலாமென்று இச்சோதனையினின்று விளங்குகின்றதென்று ஆவாடர் சொல்லுகிறார். இதற்கு அவ்விலையில் நிறைவாயுள்ள கினுவிக்கமில[1]மும் உதவும். சிப்பவீல் முதலானோரும் இலையைச் சோதித்து நயமென்று கண்டார்கள். தொந்தமில்லாத இலகுவான காய்ச்சலுக்கும் மற்றுந் துவர்த் தொணிகளைப்போல இதுவும் உபயோகமாகு மென்றாலும் கினியத்துக்கு இது நிகரானதல்ல. சிப்பவீல் வைத்தியர் மூன்று முறைப்படி இலையை வழங்கினார். (1) சின்கன இலை, அன்சு $1\frac{1}{2}$; கிருசசல்வுரிக்கமிலம்[2] திறும் 2; தண்ணீர் அன்சு 20. (2) சின்கன இலை, அன்சு $1\frac{1}{2}$; கிருசசல்வுரிக்கமிலம் திறும், 2; வெந்நீர் அன்சு, 20; பத்துமினி வேளை அவித்து வடிக்கவும். (3) சின்கன இலை அன்சு, 1; தண்ணீர் அன்சு, 6; பத்து மினி வேளைக்கு அவித்து வடிக்கவும். தேயம், ஒவ்வொன்றும், மூன்று நாலு அன்சு, நாள் மூன்றுமுறை. சின்கன இலை எந்த இனத்தைச் சேர்ந்ததென்றாலும் சரியே.

## (41a) 125 ம் பக்கம் சின்கனத்தின் அல்கலைவங்கள். Cinchona Alkaloids.

சின்குனின்[3], சின்குனிரின்[4], கினிதின்[5] என்ற இந்த அல்கலைவங்களின் அந்திபிருடி[6]த் தன்மையைப் பரிசோதிக்கும்படியாகச் சென்னைத்துரைத்தனத்திலே 1866 ம் ஆண்டு கமிஷனர்[7] நியமிக்கப்பட, இப் பதார்த்தங்கள் அவர்கள் கையிற் கொடுக்கப்பட்டன. அவர்கள் அவற்றைக் காய்ச்சலுள்ள கிராமங்களிலே பலவகையான முறைக்காய்ச்சற்காரரில் 1145 பேருக்குக் கொடுத்தார்கள். 410 பேருக்குச் சின்குனியசல்வசும்[8], 359 பேருக்குச் சின்குனிரியசல்வசும், 376 பேருக்கு கினிதியசல்வசுங் கொடுக்கப்பட்டது. இப்படிப் பரிகரிக்கப்பட்ட 1145 பேருள் 4 பேர் மரணித்தார்கள். கூட

---

1 Kinovic acid. 2 Diluted sulphuric acid. 3 Cinchonine. 4 Cinchonodine. 5 Quinidine. 6 Antiperidic. 7 Commission. 8 Sulphate.



Digitized By Roja Muthiah Research Library

ஊரிலே காய்ச்சலோடு கழிச்சல், நுமோனி[1] கூடிநின்ற நாலுபேர் மரித்து விட 27 பேரில் மருந்து வாய்க்கவில்லை. இது நூற்றுக்கு 2 வீதமேயாகும். ஆகையால் மருந்தின் சித்தி மெத்தத் திருப்தியாயிருந்தது. அவர்களது எழுத்திலிருந்து தரும் பின்வருஞ் சுருக்கம் காரியத்தை மிகத் தெளிவாய்க் காட்டும். பிரயோகித்த வகையும் தேயமும் மெத்த விகற்பமாயிருந்தது. சில வைத்தியர் 15 கிறேன் 20 கிறேன் வரைக்குப் பெருந்தேயமாய்க் கொடுத்தார்கள். சிலர் எட்டுப் பத்துக் கிறேன் வரைக்கு மட்டாய்க் கொடுத்தார்கள். சிலர் இரண்டுமுதல் ஐந்துகிறேன் வரைக்குச் சிறுதேயமாய்க் கொடுத்தார்கள். பொதுவாய் நடுரோசியான தேயமாய் நாளொருமுறை கொடுத்தவர்களுக்கு வாய்த்தது. அப்படிப்பட்டவர்கள் அதிகமாக அல்லது குறைவாகச் சாப்பிட்டவர்களைப்பார்க்கச் சீக்கரத்திற் சுகமடைந்தார்கள். இம்மருந்தின் பெருந்தேயங்கள் கினியத்தாலுண்டாவதைப்போன்ற அவக்குணங்களைப் பிறப்பித்தன. அவற்றுட் தலையிற் கிண்ணிடல், காதில் இரைச்சல், செவிடு, தலைக்கிறுகியே அதி தோற்றமான குணங்கள். சத்தி, உவட்டு, கழிச்சலும் சிலரிற் கண்டது. மட்டான தேயங்களுக்கு இக்குணங்களொன்றும் உண்டாகவில்லை. அவற்றுற் பசியுஞ் சீரணமும் திருந்தின. காய்ச்சற்கட்டியும் வற்றினது. ஆயினும் ஒருமருந்து மற்றதைப்பார்க்கத் திறமென்று விளங்கவில்லை. ஒவ்வொன்றினதும் ஏகசகட்டுத் தேயம் பத்துக்கிறேன்; ஒருவேளை கினியசல்வசின் நயத்தைப்பற்றி மாத்திரமே எண்ணங்கள் மெத்த வித்தியாசப்படவில்லை. மூன்றுக்கும் அந்திபிருடிஃத்தன்மையுண்டு; அவை முறைச்சுரத்தை மாற்றக்கூடும். சின்கனியசல்வசை அதிதேயமாய்க் கொடுத்தால் மற்றவைகளைப் பார்க்க அதிகமான கெட்ட குணங்கள் உண்டாகின்றது போலும். ஆயினும் இதைப்பற்றி இன்னும் அத்தாட்சி தேவை. சிலருக்குச் காய்ச்சலை மாற்றப் போதியதற்கு அதிக அளவான மருந்து கொடுக்கப்பட்டது. இதுவரையில் உபயோகமடையாத இந்த அல்கலைவங்கள் அவுஷதமாகக் கினியத்துக்குச் சற்றுவது கீழ்த்தரமானவைகளல்லவென்பதே கமிஷனர் கண்டடைந்த முடிபு.

**(42) 126 ம் பக்கம். திசந்தேரிக்கு இபிகாக்கு. Ipecac in Deysentery.**

தீவிரவகையான திசந்தெரிக்கு இபிகாக்கைப் பெருந்தேயமாகக் கொடுக்கத்தொடங்கினவர் தக்கர் என்பவர். இவ்வியாதிப் பரிகரிப்பைப்பற்றி அதி காத்திரமான குறிப்புகளைக் காணிஷ் பண்டிதர் சென்னைப் பட்டாளத்தைச் சேர்ந்த வைத்தியரிடத்திலிருந்து பெற்று எழுதியிருக்கிறார். ஈவாற் பண்டிதரும் இக்காரியத்தைப்பற்றி விபரமாய் எழுதியிருக்கிறார். பெரும்பாலுங் கண்ட பேறு மெத்தத் திருத்தியாயிருந்தது.

**(43) 134 ம் பக்கம். தரக்சகவேசிறந்து. Extract of Taraxacum.**

தெக்கணத்திலே கிறு என்ற இடத்திலுள்ள ராசாங்கத்தார் தோட்டத்தில் வளர்த்த தரக்சகப் பூண்டிலிருந்து செய்த எசிறுத்து நயந்ததென்று வம்பாயில் மருந்துச்சாலைக்கு அதிகாரியாயிருந்த வின்செஸ்தர் பண்டிதர் எழுதியிருக்கிறார். அது வெயிலிற் காய்ந்த மாவாகச் செய்யப்பட்டுக் காற்றுப் புகமாட்டாத இறுக்கமான பெட்டிகளில் அடைத்து வருஷந்தோறும் நாற்பது ஐம்பது இறாத்தல் வரைக்கு அனுப்பப்படுகிறதென்று அவர் அறிவித்திருக்கிறார்.

---

1 Pneumonia. 2 Antiperiodic.

Digitized By Roja Muthiah Research Library

(44) 142 ம் பக்கம். தும்பிலியேசிறத்து. Extract of Diospyros.

இந்த எசிருத்துத் துவராய் உபயோகமுள்ளதென்பதற்குப் பிரதானமான சாட்சி ஒஷானசி பண்டிதரே. உபசத்திரீகளுகிய அடோய்சண்டுதராலும் இது விதந்து பேசப்பட்டது. தும்பிலிப் பழத்தின் துவரான சாற்றைச் சுதேசிகள் நசிவுகள் சுளுக்குகளுக்குப் பூசுகிறுர்களென்றும் அவற்றிற்காணும் வீக்கத்தை அது வற்றப்பண்ணுகிறதென்றும், சாற்றுவைத்தியர் சொல்லுகிறுர். வீருன துவர்த்தன்மை இதற்குண்டென்பதற்குச் சந்தேகமில்லை. துவர் என்ற சுதேச மருந்துகளுள் இதுவும் விசேஷமானது.

(45) 148 ம் பக்கம். ஏழிலைப்பாலை. Alstonia scholaris.

இதைப்பற்றிக் கிப்சன் பண்டிதர் சுருக்கமாயும் விளக்கமாயுமெழுதியிருக்கிறுர்கள். கிம்மு என்பவர் 1839 ம் ஆண்டு இதை வீருன துவரென்று காட்டி அந்திபிருடியாக இதை வழங்கலாமென்றுர். இது மெத்த உபயோகமாகக்கூடிய வோர்மருந்து. இதைப்பற்றிப் பின்னுல் வரும் சரக்கிலுங் காணலாம்.

(46) 149 ம் பக்கம். வெட்பாலை. கசப்புவெட்பாலை. ஏழிலைப்பாலை. Wrightia, Holarrhena, Alstonia.

இவற்றுள் முதலிரண்டு பூண்டுகளினதும் விதையும் மூன்றுவதின் பட்டையும் மருந்துக்கு வழங்கப்படும். இம் மூன்று பதார்த்தங்களையும் பற்றி விளக்கங்கள் மெத்த வித்தியாசப்படுகின்றது. விதைகள் இரண்டும் ஒன்று தானென்று சுதேச வைத்தியர் சிலர் சொல்லியிருக்கிறுர்கள். அது சரியல்ல. ஒன்று சுவையற்றது; மற்றது கசப்பு. ரைற் வைத்தியர் இவற்றின் விகற்பத்தை விபரமாய்க் காட்டி எழுதியிருக்கிறுர். அவர் எழுதியவற்றினின்று பின்னுல் வரும் பொழிப்பைத் தருகிறேம். இவை மூன்றும் மரம் போன்றவை. ஒவ்வொன்றினதும் பட்டை பாலுள்ளது. ஆகையாற்றுன் பாலையென்றபெயர் இவற்றிற்கு வந்தது. மூன்றினதும் பூ வெண்மை; குலக்கானது; மூன்றினதுங் காய் நீண்டது; மெல்லிது. எல்லாவற்றினதும் விதை மெல்லிய பட்டுநூல்போன்ற சுணைக்கற்றைகளை உடையது. முதலிரண்டினதும் இலை அரசம் இலைபோல் அடியில் அகன்று வட்டித்து நுனியில் ஒடுங்கிக் கூராயிருக்கும். மூன்றுவதின் இலையோ நுனியில் அகன்று அடியில் ஒடுங்கியிருக்கும். மேல் விபரத்திலிருந்து மூன்றும் பொதுவான தோற்றத்தில் ஒத்திருக்கின்றதென்றும் விகற்பப்படுங் காரியங்கள் மிக நுண்ணியவைகளென்றுலும் மெத்த யதார்த்தமென்றும், அவற்றைப் பகுத்தறிவதற்கு மெத்தக் கவனம் வேண்டுமென்றும் விளங்கும்.

அதி நிச்சயமான வித்தியாசம் விதைகளிற்றேன்றும்.

கசப்புவெட்பாலை[1] விதையிற் காம்புக்குக் கிட்டினபகுதியாகிய கீழ்த்தலையில் நுண்ணிய வெண் சுணைக்கற்றை இருக்கும்.

வெட்பாலை[2]விதையில் காம்புக்குத் தூரமானபகுதியாகியமேலந்தலையில் சுணைக்கற்றை இருக்கும்.

ஏழிலைப்பாலை[3] விதை தட்டையானது. அதின் இருதலைப்பிலுஞ் சுணை இருக்கும். நடுப்பகுதி காம்பிற்பிடிக்கும்.

1 Holarrhena. 2 Wrightia. 3 Alstonia.

Digitized By Roja Muthiah Research Library

கறுலம்[1] எனப்படும் உள்ளிதழ் அளவில், ஒன்றுக்கொன்று அதிகம் மயங்கக்கூடியவைகளாகிய கசப்பு வெட்பாலைக்கும் வெட்பாலைக்குமுள்ள விகற்பம் அவ்வளவு நுட்பமாயும் அதிகம் தெளிவாயுமிருக்கும்.

கசப்புவெட்பாலைப்புஷ்பத்தினது உள்ளிதட்குழல்கள், கலிசு[2]எனப்படும் புறவிதழைப்பார்க்க இருமடங்கு நீளமானவைகள். அதினிதழ் ஐந்து மடல்களுள்ளது. மடல்கள் விரியமுன் வலதுபக்கத்துக்குத் திரிகியிருக்கும். ஸ்தமன்கள்[3]என்ற கூந்தல்கள் கறுலத்தின் வாயிலுட் பிடித்திருக்கும். அந்தெர்கள்[4]அம்புவடிவாய்த் தழும்புகளின் சுற்றிற் பிடித்திருந்து அத்துவாரத்தினின்று முளைபோற் றுன்னிநிற்கும். இவைகளைச்சூழ்ந்ததாய்க் கூந்தலான முடியிருக்கும். இதின் குஞ்சங்கள் மடல்களிற் பாதி நீளமானவைகள். இதிலே முளைபோற் றுன்னிநிற்கிற அந்தெர்களும் கூந்தலான முடியைக்கொண்ட கறுலக்குழற்றுவாரமுமே இவ்வினத்தின் புஷ்பங்களைப் பகுத்தறியத்தக்க தோற்றமான அறிகுறிகளாகும்.

வெட்பாலைப் புஷ்பத்தின் குழல் மெல்லிது; அது புறவிதழைப்பார்க்க மூன்றுநாலுமடங்கு நீளமாய் அடியில் விசாலித்து மேலே ஒடுங்கியிருக்கும். இதழ் ஐந்து மடல்களுள்ளது. மடல்கள் விரியமுன் இடது பக்கத்துக்குத் திருகியிருக்கும். குழற்றுவாரம் கூந்தலில்லாமல் வெறுமையானது. ஸ்தமன்கள் குழலினடியில் அதின் விரிந்த பகுதியிற் பிடித்திருக்கும். இதிலே குழற்றுவாரத்திற் கூந்தல்கள் இல்லாதிருப்பதையும் ஸ்தமன்கள் குழலின் அடிப்பகுதியில் மறைந்திருப்பதையுங்கொண்டு இதைக் கசப்புவெட்பாலையல்லவென்று மெத்த லகுவில் அறியலாம்.

ஏழிலைப்பாலையை இலையைக்கொண்டு மற்ற இரண்டினத்தினின்று லேசிற் பகுத்தறியலாம். இதின் இலைகள் அகலமானவைகள். கிளைகளைச்சுற்றி வளையம் வளையமாயிருக்கும். அடி விசாலமும் நுனி ஒடுக்கமுமானவை. கறுலத்தின் குழல் குறுத்தது. உட்பக்கத்திற் சுணையுள்ளது. இதழ் ஐந்து மடல்களுள்ளது. மடல்கள் வலதுபக்கத்துக்குத் திருகியிருக்கும். ஸ்தமன்கள் நடுப்பகுதியிற் பிடித்துத் துன்றுமலிருக்கும். இதின் குதுவம் நீண்டு தூங்கும். அது கயிற்றுச் சவுக்குப்போன்றது.

## (47) 151 ம் பக்கம். எமிடேஸ்மின். Hemidesmine.

இக் கிறிஸ்தற்பதார்த்தம் முதன்முதல் காடின்என்பவராலும் பிறகு ஸ்கற்றென்பவராலும் விபரிக்கப்பட்டது. இதுவோர் ஸ்தியரப்தின[5] என்பதே கிறிஸ்திசன் பண்டிதரது எண்ணம் அவர் நன்னாரிவேரை வெந்நீரிற் போட்டுத் திலதிலித்து இதை எடுத்தோமென்கிறார். இதைப்பற்றி இன்னுமாராய்வது நல்லது.

## (48) 151 ம் பக்கம். எருக்கு. Mudar.

இது வந்த எருக்கு என்பதைப்பற்றி வெகு வித்தியாசமான எண்ணங்களுண்டு. இதை வைற்பண்டிதர் கவனமாயாராய்ந்து செவ்வெருக்கென்று தான் அவர் உத்தேசித்தாலும் அதை மிகவும் ஒத்ததான வெள்ளெருக்கு வமனி[6] சுவேதனி[7]யாக அதிகம் வீறுள்ளதென்பதற்குச் சந்தேகமில்லை.

---

1 Corolla. 2 Calyx. 3 Stamens. 4 Anther. 5 Stearopten. 6 Emetic. 7 Diaphortic.

Digitized By Roja Muthiah Research Library

### (49) 152 ம் பக்கம். மூடாரின். Mudarine.

இப்பதார்த்தமானது காய்ந்த எருக்கம்வேர்ப்பட்டையிலிருந்து டன்கன் என்பவரால் முதன்முதல் எடுக்கப்பட்டது. இது வமனியாய்ச் சேஷ்டித்ததென்று அவர் கண்டு அவ்வேரின் சத்துப்பதார்த்தம் இதுதானென்றெண்ணினார் இதைத் தண்ணீரிற் கரைத்தால் அந்த நீர் சூட்டுக்கு உறைந்து அது குளிரும்போது மறுபடி நீராகுந்தன்மை உள்ளது. டன்கன் என்பவர் எருக்கைப் பற்றிய தமது எழுத்தில் அதின் கூறுபாட்டைப்பற்றியுந் தன்மைகளைப்பற்றியும் அதிகம் பிரயோசனமான குறிப்புகள் சொல்லியிருக்கிறார். வன்சமறின் பண்டிதர் தமது எழுத்திலே எருக்கிலிருந்து எடுத்தவோர் அல்கலைவத்தை[1] வமனியாகத் தாம் வழங்கி வெகு சித்திகண்டதென்று குறித்திருப்பது இப் பதார்த்தமாய்த்தானிருக்கவேண்டும்.

### (50) 152 ம் பக்கம். எருக்கு. Mudar. (உபயோகம்.)

இது குஷ்ட[2]ரோகத்துக்கு உபயோகமானதென்பதைப் பற்றிச் சிலர் சாட்சியிட்டிருக்கிறார்கள். சிலர் கையில் இது சித்திபெறவில்லை. மேலும் சிவ்விசு[3] நோய்களுக்கும் தொல்லையான விரணிதங்க[4]ளுக்கும் நல்லதென்றும் சிலர் எழுதியிருக்கிறார்கள். நாட்டு வைத்தியர் இதை அதிகமாய் வழங்குவார்கள். சுதேசிகளுக்குண்டாம் திசந்தெரிக்கு[5] இது உவந்த மருந்தென்று துரூந்தர் மெய்ச்சுகிறார். இந்நோயில் இபிகாக்குக்கு[6] இது உத்தம பதிலாகுமென்பது அவரது எண்ணம். வளர்ந்தோர்க்கு அதிபிரமாணத்திற் றுவங்கிச் கொடுப்பார். இருபது கிறேனுக்குக் குறையாமற் கொடுக்கத் துவங்கி ஒருதிறாமுக்கு மிஞ்சாமற் கொடுப்பார். வழக்கமாய்ச் சிறுபிரமாணம் கொடுப்பதே வாசி. பிள்ளைகளுக்கு ஒருவயசுக்கு இரண்டொருகிறேனாக நாள் மூன்று நாலுமுறை கொடுப்பார் இதின் தன்மை இபிகாக்குக்குச் சரியானதாயிருக்கக் கண்டார். அதைப்போல இதையும் காரியத்துக்குத்தக்கதாய்ப் பலவகையாய்க்கலந்துகொடுக்கலாம். யுரோபருக்கு[7] இம்மருந்தை அவர் கொடுத்தறியவில்லை.

### (51) 153 ம் பக்கம். குறிஞ்சா. Indian Ipecac.

இதைப்பற்றிக் கெர்கபதிரிகு பண்டிதரது குறிப்புகள் தீர்க்கமானவைகள். வேர்ச்சூரணத்தையும் சாற்றையும் மைசூர்ச்சனங்கள் வமனியாக வழங்குகிறார்களென்று அவர் சொன்னபின்பு, தாம் இம் மருந்தை ஆயிரம்பேருக்குக் குறையாமற் கொடுத்து, மெத்த உவந்ததாகக் கண்டோமென்கிறார். திசந்தெரிக்கும் வமனியாகவும் இது இபிகாக்குக்குச் சரிவந்ததாம். தேயம் இருபதுதொடங்கி முப்பதுகிறேன்; கடுமையாய் வாந்திக்கவேண்டுமாகில் இத்துடன் அரைக்கிறேன் ஒருகிறேன் தாத்தரந்திமனியுஞ்[8] சேர்க்கலாம். திசந்தெரி முறைச்சுரத்தோடு கூடி உண்டானதாகில் அத்துடன் கினியமுங் கூட்டிக் கொடுக்கலாம். காய்ந்த இலைமாவையே தாங் கொடுக்கிறதாம். வேரை வழங்கினால் இக்கொடி சுறுக்கு அற்றுப்போம். மேலும் இலையைப்போல வேர் நயப்பானதாயிருக்கவில்லையாம். சாறு எடுப்பது தொல்லை. நாட்பட்ட கதார்[9] இருமல்களுக்கு அது உவந்தது. வமனியாகமாத்திரமல்ல

---

1. Alkaloid. 2 Leprosy. 3 Syphilis. 4 Ulcerations. 5 Dysentery. 6 Ipecac. 7 Europeans. 8 Tartarate of Antimony. 9 Catarrh.

Digitized By Roja Muthiah Research Library

திசெந்தரி, சுளே, சுதார் நோய்களுக்கு மருந்தாகவும் இது சத்துள்ளதென் பதை முடீன் செறீவர் முதலியோர் உறுதிப்படுத்துகிறார்கள். இவர் சொல் லுகிறபடி பாம்புகடிக்கு முதற் குறிஞ்சாச் சாற்றைக் கொடுத்து வாந்திசெ ய்தபின்பு செறியும் ஸ்திமுலங்கள்[1] கொடுப்பதே உத்தம பரிகரிப்பு. இந்த எண்ணங்களைப் பிதி வைத்தியரும் உறுதிப்படுத்துகிறார். இபிகாக்கு, அந் திமனிதாத்தரகம் என்பவற்றைப் போல இது சோஷிக்கப்பட்டு உரோதர ந ரம்பிற்[2] பிடிப்பதால் வாந்திசெய்கிறதென்பது இவர் எண்ணம்.

## (52) 159 ம் பக்கம். சிரட்குச்சி. Chiretta.

தென்னிந்தியின் வைத்தியசாலைகளில் வழங்கும் சிரட்குச்சியின் இனங் களைப்பற்றிக் கிளெகோண வைத்தியர் எழுதியிருக்கிறார். அதிலே மூன்று இனங்களுண்டாம்.

## (53) 166 ம் பக்கம். ஜிரிகிவிரை. Kaladana.

இதைப்பற்றி ஒஷானசி பண்டிதர் முதலானோர் எழுதியிருக்கிறார்கள். பி தி வைத்தியர் இதின் விரேசனத்தன்மையைப்பற்றிச் சாட்சியிட்டு இதிலிரு ந்து தாம் எடுத்த ராளமாகிய வாபீதிசின்[3] என்ற பதார்த்தத்திற் கொஞ்சத்தை மாதிரிக்காக வாறிங்குபண்டிதருக்கு அனுப்பியிருக்கிறார். இச் சாட்சிகளி லிருந்து மற்றும் வைத்தியரது எழுத்துக்களிலிருந்தும் இது பதனமான இள ம் விரேசனியென்றே விளங்குகின்றது. ஆயினும் வளர்ந்த ஓராளுக்கு ஒரு விரையைக் கொடுத்ததினால் கடுமையாய்ப் பேதிபண்ணினதைப்பற்றி வம் பாயிலுள்ள திமக்கு பண்டிதர் எழுதியிருக்கிறார். இதை யோர் விதிவிலக் கான காரியமென்று எடுக்கவேணடும்.

## (54) 172 ம் பக்கம். நிலவேம்பு. Kariyat.

இப் பூண்டின் தன்மை உபயோகங்களைப் பற்றி விளெமிங், என்ஸ்லி மு தலானோர் எழுதியிருக்கிறார்கள். இதின் தாவர தன்மைகளைப் பற்றி விபர மாயெழுதியிருக்கிற ரக்ஸ்பேகர், மகா கசப்பு என்று கருத்துப்பட்ட இந் தானிப் பெயரை இதற்கு இட்டு இது சாரமுள்ள மெத்தப் பெயர்பெற்ற மருந்தென்றுஞ் சொல்லுகிறார்.

## (55) 177 ம் பக்கம். பிரசவசுரத்துக்குப் பெப்பமிந்துத்தேல். Oil of Peppermint in Puerperal Fever.

தோவு என்பவர் இதைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் பிரசவசுரங்களி ல் அருவருப்பான தார்ப்பந்தீன்[4] தேலுக்குப் பதிலாக இந்த எண்ணெய்யைக் கொடுக்கலாமென்கிறார். இதைக் கொடுக்குமுன் தீவனமானவோர் விரேச னங்கொடுத்து அதின்பின் இருபத்துநாலு மணி வேளைக்குள்ளே மூப்பதுநா ற்பது துளி வரைக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுக்கலாமென்கிறார். இப்பிரயோகம் பெரும்பாலும் வாய்த்தது. மற்றெந்த அத்திரதேலும்[5] தார்ப் பந்தீனைப் போலவே சேஷ்டிக்குமென்பது அவர் கருத்து.

---

1 Diffusible Stimulant. 2 Pneumogastric nerve. 3 Pharbitisin. 4 Turpentine. 5 Volatile oil.

Digitized By Roja Muthiah Research Library

(56) 187 ம் பக்கம். ஊமத்தை. Datura. (நஞ்சு).

இந்துதேசத்திலே ஊமத்தையை நஞ்சாக ஊட்டி ஆட்களைக் கொல்லுகிற ஓர்வகுப்பான ஆட்களுண்டு. இதைப்பற்றி சேர்மன் வைத்தியர் வங்காள வைத்திய போதனியில் விபரமாயெழுதியிருக்கிறார். பால்மர், எர்விங், பண்டிதர்களும் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்.

(57) 189 ம் பக்கம். அயசீயமசேசிறுத்து.
Extract of Hyoscyamus.

அயசீயமஸ் பூடு இந்துதேசத்திற் கொண்டுவரப்பட்டுச் சமமான தரைகளிலே செளிப்பாய் வளர்க்கப்படுகின்றது. தெக்கணத்திலே கூரு என்ற ராசாங்கத் தோட்டத்திலே செய்யப்பட்டு, வம்பாய்ப் பட்டாளத்திலே வழங்குவதற்கு வருஷாந்தம், 150 தொடங்கி 200 இறாத்தல்வரைக்கு அனுப்பப்படுகிற எசிறுத்தைப்பற்றி, வின்செஸ்தர் பண்டிதர் வெகுவாய் விதந்துபேசுகிறார். மேலும் மைசூரிலே கில்போஸ் என்பவராலே அதிக அளவான எசிறுத்துச் செய்யப்படுகின்றது. இது சென்னைச் சிவில் ஆசுபத்திரியிலே சோதிக்கப்பட்டு யுரோப சரக்கைப் போலத் திறமானதென்று தீர்மானிக்கப்பட்டது. இதையும் மற்றுஞ் சரக்குகளையும் இந்துவிலே செய்பவர்களைத் தைரியப்படுத்தவேணுமென்பது மிக முக்கியம்.

(58) 190 ம் பக்கம். ஈர்ப்புக்குப்புகையிலை.
Tobacco in Tetanus.

ஈர்ப்பு வியாதியிலே புகையிலைப்பாப்பையை முள்ளந்தண்டுக்கு இடுவது நல்லதென்று திமக்கு வைத்தியர் சொல்லுகிறார். இப்பிரயோகத்தை லீத்துப் பண்டிதரே வம்பாய் ஆசுபத்திரியிற் செய்தவர். இதால் மெத்த நயங்கண்டதென்று திமக்கர் சொல்லுகிறார். இதைச் சோதித்துப் பார்ப்பது நலம்.

(58) 207 ம் பக்கம். காட்டுக்கறுவா. Cinnamomum iners.
(லவங்கப்பட்டைக்குத் தாய்.)

இந்த மரம் வடக்குக் கன்னடத்திலுள்ள பாலக்காட்டு வனங்களிலே மிகுதியாய் நிற்கிறதென்றும் ஒருமுறை பிறதேசங்களுக்கு அதிகமாய் ஏற்றப்பட்ட லவங்கப்பட்டை அந்தஇடத்திலிருந்து சேர்க்கப்பட்டதென்றும் ரோசு வைத்தியர் சொல்லுகிறார். சிறுக் கொப்புகளின் பட்டையைச் செவ்வையாய் எடுத்தால் கறுவாப்பட்டைக்குச் சரியாகும். வம்பாய் ராசாங்கத்தார் தமது புத்தியின்படி இம்மரங்களை வளர்க்கிறார்களென்றும் அதினால் வருமானமதிகப்படுகிறதென்றும் ரோசர் சொல்லுகிறார். இதைக் கறுவாப்பட்டைக்குப் பதிலாய் வழங்கலாமென்றும் அதற்கு இது குறைந்ததல்லவென்றும் அவரே சொல்லுகிறார். இதற்குக் கன்னடக் கூட்டு லவங்கம் என்று பெயர்.

Digitized By Roja Muthiah Research Library

### (59) 209ம் பக்கம். சந்தனக்கட்டை. Santalum album.

சந்தனக் கட்டையையும் அதிலிருந்து அத்திரதேல்[1] எடுக்கும் முறையையும்பற்றிப் பிதிலைத்தியர் எழுதியிருக்கிற குறிப்பு அவர் தாமே செய்த ஆராய்வுகளின் பேறுயிருப்பதால் மெத்த உபயோகமானது. அதை இவ்விடந் தருகிறோம். 'சந்தனமரம் பதினைந்து பதினாறு முழ உயரத்துக்கு மேற்படாத ஓர் சிறிய மரம். இது எங்கும் கிடையாது. மைசூரிலே இது மிகுதி. அங்கே மேற்குக் காற்றுடி மலைகளின் கிழக்குச்சாரலில் மழை நாடுகளுக்கு அப்பால் வளருகின்றது. இதை ராசாங்கத்தார் கவனமாய்க் காத்துப் பதினெட்டு வருஷம் முதல் இருபத்தைந்து வருஷம் வரைக்கு வளர்ந்து முற்றினபின்பே தறிப்பார்கள். வருஷமுடிவிலே தறித்துப் பட்டையை உரித்தபின் அந்தந்தக் கடைகளுக்குக் கொண்டுபோய்க் கட்டைகளாக வெட்டிக் கட்டையின சாதிக்குத் தக்கதாய் வகைவகையாய் வைப்பார்கள். இதுவே வியாபாரத்தில் வரும் சந்தனக்கட்டை. இது வருஷந்தோறும் ஏலத்திலே இறுத்தற்கணக்காக விற்கப்படும். கொள்ளுவதற்கு வியாபாரிகள் இந்துதேசத்தின் எப்பகுதியிலுமிருந்து வந்து கூடுவார்கள். வாசனையைக் கொடுக்கிற சந்தன எண்ணெய், மரத்தின் வைரமான கருமைகொண்ட நடுப்பகுதியிலே பிரதானமாயிருப்பதால் நேரான உள் வைரக் கட்டைகளே அதிகம் விலைபோகும். மைசூர் இராசாங்கத்தார் சந்தன எண்ணெய்யைச் செய்வதற்கும் வெகுகாலமாக முஸ்தீதுகள்பண்ணியிருந்தார்கள். எண்ணெய் கட்டைகளைப் போலவே வருஷந்தொறும் ஏலத்தில் விற்கப்படும். விசேஷமாய்ச் சீனம் அரபி தேசங்களுக்கு ஏற்றுவதற்கே இதை வாங்குவார்கள். கட்டையைத் திஸ்திலித்து எண்ணெய் எடுப்பார்கள். வேரிலிருந்து உத்தமமான எண்ணெய் அதிக அளவாய் எடுக்கலாம். திஸ்திலிக்கும் ஏனம் வட்டிப்பான வாயிலை உடைய பருத்த வோர் மட்பாண்டமே. அது 2½ அடி ஆழமாயும் 6½ அடி சுற்றளவுள்ளதாயுமிருக்கும். இதற்குள்ளே சாமான்களைப் போட்டு வாயிலை ஓர் சட்டியால் மூடி அச் சட்டியின் மையத்திலோர் துவாரம் விட்டு அதற்கூடே ஆவி புறப்படுவதற்கு ஏறக்குறைய 5½ அடி நீளமான வோர் செப்புக்குழலை இடுவார்கள். இக் குழலின் வெளித்தலைப்பை ஓர் செம்பேனத்திலிட்டு இதைத் தண்ணீருள்ள இன்னொரு பாத்திரத்துக்குள்ளே வைப்பார்கள். திஸ்திலிப்பதற்குச் சந்தனமரத்தின் வெண்மையான வெளிப்பகுதியை எடாமல் தள்ளிவிட்டு வைரமான உட்பகுதியைச் சீவல் சீவலாக வெட்டி அதிலே 50 இறுத்தலை மட்பாண்டத்துட் போட்டுச் சிராயை மூடத்தக்கதாய்த் தண்ணீரும் விட்டுப் பத்துநாள் இராப்பகலாகத் திஸ்திலித்து எண்ணெய் முழுவதையும் எடுப்பார்கள். தண்ணீர் குறையக்குறைய மென்மேலும் வார்ப்பார்கள். நல்ல சாதியான சந்தனக்கட்டையிலிருந்து 50 இறுத்தலுக்கு 20 அன்சு வீதமாய் அதாவது நூற்றுக்கு 2·5 வீதமாய் எண்ணெய் பிறக்கும். சந்தன எண்ணெய் உருவொளியும் வெண்மஞ்சளநிறமுமானது. ராளச்சுவை உடையது. நல்ல வாசனை உள்ளது. சில துளியைக் கையிலே விட்டுச் சாதிக்கும்போது வாசனையைத் திறமாய்க் கமழும். இதின் விசேஷகிருவிதம் 0·980. சந்தனக்கட்டையைச் சுதேசிகள் பலவகையாய் வழங்குவார்கள். சுகந்தமாகவும் மருந்தாகவும் வழங்கப்படும். இது குளிர்மையுள்ளதென்று எண்ணுகிறார்கள். இதில் எண்ணெய் இருப்பதால் ஸ்திமுல[2]தன்மையும் இதற்கிருக்கவேண்டும்.

1 Volatile oil. 2 Stimulant.

Digitized By Roja Muthiah Research Library

## (60), 210 ம் பக்கம். பாம்பு கடிக்கு ஈசுரமூலி.
## Aristolochia Indica for snake bites.

பாம்புகடிக்கு மருந்தை அறிவது முக்கியமென்பதை இவ்விடையூறினாற் சேமோசம் வழக்கமாய் நடக்கிற ஊர்களிலிருப்பவர்கள் மாத்திரம் அறியக்கூடும். இந்து தேசத்திலே சில ஊர்களிற் பாம்புகடியாற் சேமோசம் வாடிக்கையாயுண்டாகின்றது. உதாரணமாக சிக்கப்பூர் என்ற ஒரு ஊரிலே மாத்திரம் ஒரு காலத்திலே பாம்பினாற் கடியுண்டவர்கள் 306 பேர் என்றும், அவர்களுள் 63 பேர் அதாவது நூற்றுக்கு 20.58 வீதமாய் மரணித்தார்களென்றும் அங்கிருந்த சிவில் சத்திரீகன் இம்லாக்கென்பவர் அறிவித்தார். மற்றும் பகுதிகளைப் பற்றியும் இவர் அறிவித்திருக்கிறார். ஒரு மாகாணத்தில் ஒரு காலத்திலே இக் காரணத்தாலுண்டான மரணம் 300 க்குக் குறையாதென்றும் இவரது எழுத்திலிருந்து விளங்குகின்றது. இன்னொரு உதாரணத்தை மன்றோ என்பவரது எழுத்திலிருந்து தருகிறோம். மிதுனபுரம் என்ற ஒரு சில்லாவில் மாத்திரம் ஒரு காலத்திலே இருபத்தொரு மாசத்துக்குள்ளே 402 மரணம் பாம்புகடியாலுண்டானதென்று றிப்பொடேத்துகள் காட்டுகின்றன. இதற்கு மாற்றுமருந்து தாவரவகைகளில் எதிலாவது இருக்குமாகில் அது அரிஸ்துலோகியம்[1] என்ற வகுப்பில் இருக்கவேணுமென்பதற்கு நியாயம் இந்நூலில் பின்னொரு பகுதியிற் காட்டப்பட்டது. இதுவரையில் அறிந்தமட்டில் அமோனநீருக்கு[2] மேற்பட்ட மருந்தில்லை.

## (61), 212 ம் பக்கம். நேர்வாளக் கோட்டை. Croton Seeds.

நசுக்கின நேர்வாளக்கொட்டை யொருதிறமைச்[3] திட்டஸ்பிறிது[4] அன்சு நாலிற் போட்டு ஊறவிட்டு வடித்த வாளரஞ்ச[5] மானது எக்சீமம்[6], லைகென்[7], இக்தையோசி[8], எரிதீமம்[9] முதலிய சருமநோய்களுக்குத் தீவன பூச்சாகுமென்று வில்சன் பண்டிதர் விதந்துபெசுகிறார். அவர் அதை வீறு குறைத்து வாளரஞ்சம் திறாம் 1; றோஸ்மரிஸ்பிறிது[10] அன்சு 1; றோசை நீர் அன்சு 3. இந்த வீதமாய்க் கலந்து வழங்கினார். இந்துதேசத்திலே லேசிற் சம்பாதிக்கக் கூடிய இப்படி யொருமருந்தை அத்தேசத்தாருக்குள்ளே வாடிக்கையாயிருக்கிற தொல்லையான சருமநோய்களுக்குச் சோதிப்பது தகுதி.

## (62), 213 ம் பக்கம். ஆமணக்கு. Ricinus Communis.

இந்துதேசத்திலே இரண்டுவகையான ஆமணக்கு உண்டு. ஒன்று பெரிது. ஒன்று சிறிது. சிற்றாமணக்கே திறமென்பது பொதுவான எண்ணமாயினும், விரேசனத்தன்மையில் இரண்டுஞ் சரியெனக் கண்டோமென்று பிதிபண்டிதர் கூறுகிறார். இந்துதேசத்தின் மிகுதியான கடைகளிலிருக்கும் ஆமணக்கெண்ணெய் தடித்தது; கபிலநிறமானது. கொட்டையை வெய்யிலிற் காயவைத்து இடித்து அவித்து நசுக்கி அதை வடிப்பார்கள். இராசாங்கத்தாரது குதங்களில் வாங்கும் ஆமணக்கெண்ணெய்யைப்பார்க்க அது செயலில் மெத்த வீறானது. வாளச்செடி ஆமணக்கஞ்செடியோடு வளர்ந்து வாளக்

1 Aristolochiaceae. 2 Liquor Ammonia. 3 Drachm. 4 Rectified spirit. 5 Tincture of croton. 6 Eczema. 7 Lichen. 8 Ichthyosis. 9 Erythema. 10 Spirit of rosemary.



Digitized By Roja Muthiah Research Library

கொட்டை ஆமணக்கங்கொட்டையோடு தெரியாமற் கலந்துகொள்ளுகிறபடியால் இப்படியிருக்கிறதென்று வின்செஸ்தர் பண்டிதர் சொல்லுகிருர். முதற்றரமான ஆமணக்கெண்ணெய் இந்துதேசத்தின் பல குதங்களிலும் நசுக்கி வடிக்கப்படுகின்றது.

(63), 214 ம் பக்கம். கமாலம். Kamala. (கிருமிகொல்லி)

இதைப்பற்றி வெளியரங்கப்படுத்தினவர் மக்கினன். அவரும் இன்னும் சிலரும் எழுதியிருக்கிருர்கள். அன்றசன் பண்டிதர் இச் சரக்கின் முழு விபரமுங் கூறுகிருர். விளக்கியர் புதுவகையானவோர் கமாலத்தைப்பற்றி அறிவித்திருக்கிருர். சூக்குமாட்சியாற் சோதிக்கும்போது இவைஇரண்டுக்கும் வித்தியாசமாயிருப்பதன்றிப் புதுக்கமாலம் பழையதைப்பார்க்கக் கருமை கொண்டது; அதிகம் பருக்களுளது; அசுத்தக் கலப்புகள் அற்றது. இது இன்னொரு இனத்தின் மாவாயிருக்கவேணும்.

(64), 222 ம் பக்கம். மாசக்காய். Galls.

முறைச்சுரத்துக்கு மாசக்காய் கொடுப்பது பண்டுதொட்ட வழக்கமாயினும் அதைப் பத்துக்கிறேன் பன்னிரண்டு கிறேன் தேயத்தில் நிலவேம்பின் ஆசத்தோடு கொடுத்தால் மெத்த உபயோகமாகுமென்று காட்டி இந்துதேசத்து வைத்தியருக்கு இதை வழங்கவேணுமென்று தற்காலத்தில் கவனப்படுத்தினவர் திமின்ஸ் பண்டிதரே. கார்ணிஷ் என்பவரும் இதைச் சோதித்துப் பார்த்து அவர் எண்ணத்தை உறுதிப்படுத்தினுர். தம்முடைய நோயாளர் 101 பேரில் அரைவாசிப்பேருக்கு அதை மாவாக்கி இருபது முப்பது கிறேன் தேயத்தில் நாள் மூன்று நாலு முறை கொடுத்தார். மற்றும் பேருக்கு அரைநாழி தண்ணீருக்கு அரை அஞ்சு வீதமாய்ச் செய்த இன்ஆசத்தில் ஒன்றரை அஞ்சு முதல் மூன்று அஞ்சு வரைக்குக் கொடுத்தார். ஆயினும் இவரது கலவையை வங்காள விசிகத்தில் அதிகமாய்க் கொடுத்துச் சோதித்து நயப்படவில்லையென்றும் இம் மருந்து மற்றுஞ் சுதேச மருந்துகளுக்குச் சரிவந்ததல்லவென்ற கருத்துப்பட மக்வேசன் பண்டிதர் சொல்லுகிருர். ஒருபேதி மருந்தோடுஞ் சொற்பதவரோடுஞ் சிலநாள் வைத்தியத்திலிருந்து சுகப்படக்கூடிய லேசான சுரங்களுக்கே இது உவந்ததுபோற் தோற்றுகின்றது.

(65), 228 ம் பக்கம். கஞ்சா. Cannabis Indica. (தன்மை.)

கஞ்சாவின் உபயோகத்தைப் பற்றிக் கிரிஸ்திசன் பண்டிதர், தாம் இச்சரக்கைப் பரீட்சித்தளவிற் பின்வருங் குறிப்புகளை எழுதியிருக்கிருர். அவர் சொல்வது " கற்குத்தாவிலிருந்து இருபது வருஷத்துக்கு முன்னே எனக்கு அனுப்பப்பட்டவோர் அலக்காலெஸ்கிருத்தைச்[1] சில வருஷங்களாக நான் வழங்கிவந்தேன். அது இன்னும் வீறுள்ளதாயிருக்கின்றது. மாவியம்[2] இணங்காமல் அதை வேண்டாமென்ற சொன்னவர்களுக்குத்தானும் இது வருத்தத்தைத் தணித்து நித்திரையை வருவித்து ஸ்பசத்தை[3] மாற்றினது. இதை அதிகமாய் வழங்கிப்பார்த்த அனுபவத்தைக்கொண்டு இதைப் போதிய பிரமாணமாய்க் கொடுத்தால் அதற்கு இது உத்தமமான பதிலாகுமென்று பூரண

1 Alcoholic Extract. 2 Morphia. 3 Spasm.

Digitized By Roja Muthiah Research Library

திருப்தி கண்டேன். எசிரூத்தின் தன்மையைப் பற்றியாவது அதைச் செய்ய வழங்குங் கஞ்சாவின் தன்மையைப்பற்றியாவது செயல் பேதப்படுவது நிச்சயம். அந்த அலக்காலெசிரூத்திலே இரண்டு கிறேனை ரஞ்ச[1]மாக்கிக் கொடுக்க, பித்ததாரையிற் றடங்கிநின்ற பித்தக் கல்லா[2]லுண்டான கடுமுபாதி பூரணமாய் மாறினதாகக் கண்டேன். இது பெலஹீன அனுடைன்[3] என்பதற்கு இதைவிடச் சோதனை வேண்டியதில்லை. பெலன் நிச்சயம். வசதியெல்லாவற்றிலும் கஞ்சாவானது அவினுக்கும் அதின் சேர்வைகளுக்கும் அடுத்ததான, ஆம் அதற்குச் சரிவந்த அனுடைன், கிராகி[4], அந்திஸ்பசி[5], என்று நிச்சயித்திருக்கிறேன். கொடுப்பதற்கு அலக்காலெசிரூத்தே எவ்வகையிலும் உத்தமமென்பதும் அதைப் பழங்கஞ்சாவிலல்ல சரியான இடத்திற் பருவகாலத்தில் சேர்த்த நல்ல கஞ்சாவிற் செய்யவேண்டுமென்பதுமே அவர் எண்ணம். வாடிக்கையான லேகியம் பெரும்பாலும் அசுத்தமானது; நம்பப்படக் கூடாதது. கஞ்சாவின் செயலைப்பற்றிய பூரணமான விபரம் இச்சரக்கை முதல்முதல் வெளியரங்கப்படுத்தின ஒஷானசி பண்டிதரால் எழுதப்பட்டிருக்கின்றது. இதின் கிராகித் தன்மையைப்பற்றி விற்முலர் எழுதியிருக்கிறார். பிரசவ நோக்காட்டைக் கிளப்புமென்று கிம்சன்பண்டிதர் முதலியோர் எழுதினார்கள். சுதேச பட்டாளத்திலே கஞ்சாக்குடி எவ்வளவாய்ப் பரம்பியிருக்கிறதென்றும் அதின் கேடுகளைப் பற்றியும் லாறென்ஸ் எழுதியிருக்கிறார்.

### (66), 241 ம் பக்கம். சுக்கு. Ginger. (கண்ணோய்களுக்கு இட.)

கண்ணிலுண்டாம் நோய்களுக்குச் சுக்கு இடப்படுவதைப் பற்றித் தேண்புல் என்பவர் எழுதியிருக்கிறார். இந்நோய்களில் சுக்கு எதும் அருட்டுந்தன்மையுள்ளதோவென்பது சந்தேகம்.

### (67), 268 ம் பக்கம். புற்றேல்கள். Grass oils.

பலவகையான லேமன்[6]தேல்களை ஈகின்ற புல்வகையைப்பற்றி ஆராய்வு செய்கின்ற மன்றோ என்பவர் அதைப்பற்றிய உபயோகமான சில குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

### (68), 268 ம் பக்கம். காமாட்சிப்புல். Lemon grass.

இந்நூலைப் பிரசுரஞ்செய்தவர் இதின் எண்ணெய்யைச் சோதித்துப்பார்த்தவரையில் வாதம் முதலிய வருத்தமான நோய்களுக்கு அது நல்ல பூச்சாயிருப்பது மாத்திரமல்லாமல் உள்ளே கொடுத்தால் தீவனியும்[7] சுவேதனி[8]யுமாகுமென்று விதந்து பேச நியாயமுண்டு. தென்னிந்தியில் வசிக்கிற சுதேசிகளுக்குள்ளேயும் இந்து பிறித்தனருக்குள்ளேயும் இது வாந்திபேதிக்குப் பேர்பெற்ற மருந்தாயிருக்கின்றது. இது நிச்சயமாய் வாந்தியைத் தணித்துத் தேகக்களையை மாற்றினதை அவர் கண்டார். அவ் வியாதியின் முகனையில் இதை இன்னுங் கொடுத்துப்பார்ப்பது நல்லது. இப் புல்லில் நாலு அன்னை அரைநாழி வெந்நீரில் ஊறப்போட்டுச்செய்த இளஞ்சூடான இன்வூசம்[9]நய

---

1 Tincture. 2 Biliary calculus. 3 Anodyne 4 Narcotic. 5 Antispasmodic. 6 Lemon. 7 Stimulant. 8 Diaphoretic. 9 Infusion

Digitized By Roja Muthiah Research Library

மென்று ரோசு பண்டிதர் சொல்லுகிறார். காய்ச்சற்காரருக்கு விசேஷமாய்ப் பெலவீனருக்கு அல்லது சுரம்சன்னிவச்சுர[1]மாயிருந்தால் இதைச் சுவேதனியாகக் கொடுத்துச் சித்திகண்டோமென்று அவர் சொல்லுகிறார். விஷக்காய்ச்சலுள்ள ஊர்களில் நெடுங்காலக் காய்ச்சலின்பின்னுண்டாகும் நீர்க்கோவை வியாதிகளுக்கும் இவர் சொல்லுகிறபடி இது அதிகமாய் வழங்கப்பட்டு மெத்த உபயோகப்படுகின்றது.

### (69), 269 ம் பக்கம். ருசகாதேல். Rusakatel.

இந்த எண்ணெய்யைப்பற்றி மக்சுவல் பண்டிதரே 1825 ம் ஆண்டு அறிவித்தார். சென்னைபட்டினத்தில் இது சிலராற் பரிசோதிக்கப்பட்டவரையில் இதை வாதத்துக்குப் பூசினால் முகனையில் இதாற் சகாயமுண்டாகும். கடுமையான நாட்பட்ட வாதத்துக்கோ இதால் காணும் நயம் சொற்பம். திமக்கு முதலியோரும் இதை விதந்து பேசுகிறார்கள். சோதித்துப் பார்த்தவரையில் இதிலே யோர் சுத்தமான அத்திரஎண்ணெய்யும்[2] நீரான ராளமும்[3] கலந்திருக்கின்றன. எண்ணெய்யில் அக்சிதம்[4] சேர்ந்ததால் ராளமுண்டானது போலும்.

### (70), 273 ம் பக்கம். இலங்கைக் கடற்பாசி. Ceylon Moss.

இதை ஒஷானசி முதலானோர் கூறுபடுத்தியிருக்கிறார்கள். பரைரர் அதைச் சேர்த்துத் தன்மை உபயோகங்களையும்பற்றி விபரமாயெழுதியிருக்கிறார்.

### (71), 286 ம் பக்கம். அட்டை குடிக்கும் இரத்தத்தின் அளவு. Leeches.

இந்தஅட்டையின் இரத்தம்வாங்குந் தன்மையைப்பற்றி வீத்துப் பண்டிதர் கவனமாய்ப் பரிசோதனைபண்ணியிருக்கிறார். அட்டைகள் பொதுவாய்த் தம் நிறைக்கு நாலு ஐந்து மடங்கான இரத்தத்தைக் குடிக்குமென்று அவர் நிதானித்தார். வித்தியாசம் அட்டைகளின் தன்மைக்கும் நோயாளியின் தோலில் ஓடும் இரத்தத்துக்குந் தக்கதாயிருக்கும். நாலு ஐந்து அன்சு இரத்தம் வாங்கவேணுமாகில் நிறுத்து ஒருஅன்சு அட்டை விடும்படி சொல்வார்; பத்துப் பன்னிரண்டு அன்சு இரத்தம் எடுக்கவேணுமாகில் இரண்டரை அன்சு அட்டையும் இந்த வீதமாகவே விடச்சொல்வார் கெட்டிக்காரனான வைத்தியன் இப்படியே கொம்புவைத்தலுக்குச் சரியானநிதானத்தோடு அட்டை விட்டும் இரத்தம் வாங்கலாமென்று அவர் சொல்லுகிறார். இது கொம்பு வைத்தலிலும் மிக வாசியானது. வாங்கும் இரத்தத்தின் அளவுக்கு அட்டையின் பருமை எவ்வளவாயுமிருக்கலாமாயினும் அட்டைக் கடியின் தொகையைக் குறைப்பதால் நோயாளிக்கு அதாலுண்டாகும் வருத்தத்தையும் பிறகு சிந்திக்கொண்டிருக்கும் இரத்தத்தையும் குறைக்கலாமாகையால் பருத்த அட்டைகளை விடுவதே நல்லது. வம்பாயிலுள்ள அட்டைகள் மிகச் சிறியவைகளென்றும் அவைகளில் நூற்றெண்பது கூடி மூன்றுஅன்சு நிறுத்தனவென்றும் முதலே அட்டைக்காரனோடு ஒழுங்குபண்ணியிராவிட்டால் பன்னிரண்டு பதினெட்டு அட்டைகள் கூடி ஒரு அன்சு நிறுக்கத்தக்க பரும்

---

1 Typhoid fever 2 Volatile oil. 3 Resin. 4 Oxygen.

Digitized By Roja Muthiah Research Library

அட்டைகளை வாங்குவது பிரயாசமென்றும் லீத்துச் சொல்லுகிறார். அட்டைக்காரனுக்கு மாசாந்தஞ் சம்பளங்கொடுக்கிற ஆசுபத்திரிகளிலோ திரும்பத்திரும்ப வழங்குவதால் அட்டைகள் பருக்கிறபடியால் அங்கே பரும் அட்டைகளை வாங்குவது லகு. அட்டைக்காரனுக்குக் கண்டிதமாகவும் முன் விட்ட அட்டைகள் இரத்தங் குடித்துப் பிழியப்பட்ட களை தேற மூன்று வாரஞ் செல்லும், அதற்குமுன் அவைகளை விடாமற்றடுப்பதற்குமாக இரத்தங் குடிக்க விடுவதற்கு முன்னும் பின்னும் அவைகளை லீத்தர் நிறுப்பித்தறிவது வழக்கம். இந்தவட்டைகளைப்பற்றி லீத்தர் எழுதிய படிப்பனையுள்ள இக் குறிப்புகளுக்கு வியாக்கியானமாக, யுரோப அட்டைகளைப்பற்றி மொகின்தாண்டர் கண்ட முடிப்புகளையும் இவ்விடங் கூட்டித் தருவது நல்லது. சிறு அட்டைகள் தம்மிலும் இரண்டரை மடங்கு நிறையான இரத்தங் குடிக்கும். நடுராசியான சிறு அட்டைகள் நாலு மடங்கும், நடுராசியான பரும் அட்டைகள் ஐந்தரை மடங்குங்குடிக்கும். பெரிய அட்டைகள் ஐந்து மடங்கும் பதினொன்றிலொருபங்குங் கூடக் குடிக்கும். இவற்றின் ஏகசகடு லீத்தரது கணக்கை உறுதிப்படுத்துகின்றது.

## (72), 286 ம் பக்கம். அட்டை வளர்க்குமுறை.
## Hirudiniculture in India.

இந்துதேசத்தார் அட்டையை வளர்க்கும் முறையைப் பற்றிக் கிப்சன் பண்டிதர் முதலானோர் திறமாயெழுதியிருக்கிறார்கள். ஆயினும் வேசன் என்பவர் வழங்கியதும் அவருக்குப் பின் வேசனீர் என்று அழைக்கப்பட்டதுமான அணியமே திறமானது. அதை எவ்விடத்திலும் வழங்கலாம். அது வோர் மட்குடமே. அதின் அடிப்பகுதி அட்டை புகமாட்டாத சிறிய கண்ணறைகள் உள்ளது. அதற்குள்ளே மண்ணும் தண்ணீரும் விட்டுச் சேறாக்கி அட்டைகளை விட அவைகள் அச் சேற்றுக்குள்ளே புகுந்து கிடக்கும். குடத்தின் வாயிலே இரட்டுப் புடைவையால் மூடிக் கட்டுவார்கள். அட்டைகளைத் தூரமான இடத்துக்கு அனுப்பவேண்டுமாகில் மண்ணை இன்னும் அதிக குழையலாக்கிக் குடத்தை யோர் பிரப்பம்பெட்டியில் வைத்து அனுப்பலாம். அட்டைகளைப் பேணிவைக்கவேண்டுமாகில் அக்குடத்தை நாலு இஞ்சு வரைக்குத் தாளத் தக்கதாய்த் தண்ணீரில் வைத்துவிடலாம். தண்ணீர் குடத்துக்குள்ளே சுவறுவதால் மண்ணின் கீழ்ப்பங்கு குழைவாகும். மேற்பங்கோ காய்வாயிருக்கும். அட்டைகள் தங்களுக்குப் பிரியமான இடத்திலிருந்து வளர்ந்து பெருகும். அட்டைகளைப் பேணவும் அனுப்பவும் பெருக்கவும் இவ்வணியமே உவந்தது.

## (73), 287 ம் பக்கம். மேற்கிந்துவின் வைத்திய அட்டை.
## Medicinal Leech of Westrn India.

மேற்கிந்துவிலுள்ள வைத்தியத்தில் வழங்கும் அட்டையைப்பற்றி காட்டர் பண்டிதர் பின்னால்வரும் விபரம் சொல்லுகிறார். இரத்தம் குடித்து இளைப்பாறினபின் இது இரண்டு மூன்று இஞ்சு நீளமாயிருக்கும். அதற்குமுன் குறைவாயிருக்கும். மேனி அடங்கலும் முள்ளு அடர்ந்திருக்கும்.

1 Vayson. 2 Vaysonier.

Digitized By Roja Muthiah Research Library

முதுகு பச்சைநிறமாயும் வயிறு அதிலும் வெண்மையாயுமிருக்கும். முதுகில் எழு வரிகள் ஒழுங்காய் ஓடியிருக்கும். அவைகளுள் மையவரி மற்றவைகளிலும் அதிகந் தொடர்பாயிருக்கும். வயிற்றிற் புள்ளி இல்லை, முதுகு வயிறு இரண்டுக்குமிடையிற் பக்கத்திலே ஒவ்வொரு மஞ்சள்வரி எல்லையாயிருக்கும். தலையிற் பன்னிரண்டு கண்கள் பின்வருமொழுங்கின்படியிருக்கும். இரண்டு கண்கள் முதற்பிரிவுக்கு முன்னே நடுவரியில் ஒன்றுக்கொன்று கிட்டிக் குறுக்காயிருக்கும். நாலு முதலாம் பிரிவிலிருக்கும். இந்த நாலில் இரண்டும் முதற்சோட்டுக்குப் பின்னே அத்தோடு ஒரேநேரிலிருக்கும். அக்கம்பக்கத்தில் இரண்டு இருக்கும். நாலாம் பிரிவில் இரண்டு இருக்கும். மற்ற இரண்டும் எழாம்பிரிவில் இருக்கும். உதட்டின் விளிம்பு ஒப்பமற்றதாய் நடுவிற் சற்றே கவர்த்திருக்கும். மேலே கண்ட விபரம் இன்னுஞ் சிலருடைய விபரத்துக்கு ஒத்துப்போகின்றது.

### (74), 290 ம் பக்கம். கோப்புளவண்டு, கந்தாரிசுக்குப் பதில். Mylabris cichori substitute for Cantharides.

இயங், வாக்கர், ஒஷானசி முதலியோர் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். காடுக்கென்பவரே இதைப்பற்றி முதல் 1809 ம் ஆண்டு அறிவித்தவர். அதின்பின் அந்தர் முதலானோர் இதைப்பற்றி மெத்த விசதமெழுதியிருக்கிறார்கள். வண்டுகளை அந்திசந்தி சேர்த்துக் கொதிவெந்நீரின் ஆவியிலே அவைகளைக்கொன்று அப்பால் அவற்றை வெய்யிலில் நன்றாய்க்காயவைத்து இறுக்கமாயடைத்த சீசாக்களிற் பேணிவைக்கும்படி விளெமிங்கு பண்டிதர் சொல்லுகிறார். புரட்டாசி மாசமே இவைகளைச் சேர்ப்பதற்குத் தகுந்தகாலமென்று பிதிபண்டிதர் சொல்லுகிறார்.

### (75), 292 ம் பக்கம். அப்பிரகம். Indian Isinglass.

இந்துவின் பல பகுதிகளிலேயும் அப்பிரகம் செய்யப்படுகின்றது. ஆயினும் அது நயப்பானதல்ல. வங்காளத்திலிருந்துவருவதைச் சொல்லியென்பவர் கூறுபடுத்தி அதிலே செலதின்[1] நூற்றுக்கு 86 முதல் 92 வீதமாயிருக்கக் கண்டார். இது Polynemus teria என்ற மீனில் எடுக்கப்பட்டதென்பரே துணிவு. ஆயினும் இந்த இனத்துக்குச் சலப்பை இல்லையென்றும் ஆதலால் அதிலிருந்து அப்பிரகம் வராதென்றும் டே பண்டிதர் சொல்லுகிறார். மேற்குக் கரையிலிருந்து வருவது பலவகையான மீனில் எடுக்கப்படும்.

### (76) 356 ம் பக்கம். பொன்னரிதாரம். Orpiment.

வட இந்துவின் சில பகுதிகளிலே அந்திபிருடியாக அதிகம் பெயர்பெற்ற பொன்னரிதாரம் என்றவோர் வெள்ளைத் தூளை வங்காள வைத்திய உத்தியோகத்திலிருந்த கிளாக்கென்பவர் கண்டுபிடித்தார். அதைக் கூறுபடுத்திப் பார்த்தபோது அதிலே பாஷாணம் இல்லை. செலினீதுப்[2]பற்பமாய்க் காணப்பட்டது. சுதேசிகள் சமபங்கான செலினீதையும் சற்றாழைச் சாற்றையும் ஒன்றாயிணைத்த சிறிய மட்குகைகள் இரண்டிற் போட்டுப் பன்னிரண்டு மணிநேரமாக நெருப்பில் வைத்துப் பஸ்மமாக்கி இதைச்செய்வார்கள். இப்

---

1 Gelatine. 2 Selenite.

பஸ்பத்தைக் கிளாக் வைத்தியர் ஐந்துகிறேன் பத்துக் கிறேன் தேயமாக வளர்ந்தோருக்கும் ஒன்று முதல் மூன்று கிறேன் தேயமாகப் பிள்ளைகளுக்கும் முறைச்சுரத்திலும் தொணிக மருந்து வேண்டிய மற்றுஞ் சீரிலுங் கொடுத்தார். இது தனித்தும் மற்றும் மருந்துகளோடு கலந்தும் கினிபத்துக்கு[1] உத்தமபதிலாகுமென்று அவர் சொல்லுகிறார். பாஷாணஞ் சேர்ந்த சில மருந்துகளின் பெயரை இதற்குச் சிலர் கொடுத்திருப்பதால் நஞ்சான பாஷாணமருந்துகளுள் எதையாவது இதென்று மோசமாய் வழங்காதபடிக்கு எவரும்மெத்தச் சாவதானமாயிருக்கவேண்டும்.

1 Quinia.

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

# இந்துப்பதார்த்தசார மருந்துப்பகுப்பு.

## CLASSIFIED CATALOGUE OF INDIAN MEDICINAL PRODUCTS.

*பிறித்தனி வாகட பதார்த்தங்களுக்கு ஏறக்குறையச் சரியானவைகளாய் அவற்றிற்குப் பதிலாக வழங்கப்படக்கூடிய இந்திர பதார்த்தங்கள் இதில் வரும்.*

** பிறித்தனிபார்மகுபீயத்திலடங்கிய இந்துப்பதார்த்தங்களைக் காட்டும்.*
*† அவாகட இடாப்பில் அதிக முக்கியமானவைகளைக் குறிக்கும்.*
*=சமதன்மையுள்ள பதார்த்தங்களைக் குறிக்கும்.*

### அல்திறவங்கள், அல்திறவ தோணிகங்கள்.
### ALTERATIVES AND ALTERATIVE TONICS.

| *இந்துப்பதார்த்தங்கள்.* | *பிறித்தனி வாகடபதார்த்தங்கள்.* |
|---|---|
| **வாகட சரக்குகள்.** | |
| எருக்கு வேர்ப்பட்டை 151 ம் பக்கம்.<br>சால்முக்கிரம் (விதை) 33 ம் பக்கம்.<br>* நன்னாரி(வேர்) 151 ம் பக்கம்.<br>வல்லாரை 117 ம் பக்கம். | துல்சமாரம் 191 ம் பக்கம்.<br>சார்சவேர் 239 ம் பக்கம். |
| **அவாகடசரக்குகள்.** | |
| ஆனைக்கற்றாளை(வேர்) 247 ம் பக்கம்.<br>† ஆகாசகருடன் (வேர்) 106 ம் பக்கம்.<br>† பால்சசுவிரஸ்பட்டை 208 ம் பக்.<br>† பாதெனச்சிலக்கறுவா 208 ம் பக்.<br>சிறுதேக்குவேர் 175 ம் பக்கம். | சசுவிரஸ்வேர் 204 ம் பக்கம். |
| † எகியம் 169 ம் பக்கம். | சார்சவேர் 239 ம் பக்கம்.<br>பரைரவேர் 15 ம் பக்கம். |
| † கரிசலாங்கண்ணி(வேர்)138 ம் பக்கம். | தரக்சகவேர். |
| † எட்டியச்செடி (வேர்) 168 ம் பக்கம். | உல்மஸ் பட்டை 225 ம் பக். |
| சதுரக்கள்ளி (பால்) 216 ம் பக்கம்.<br>† நீரடிமுத்து (எண்ணெய்) 34 ம் பக்கம்.<br>பால்வள்ளி 149 ம் பக்கம். | சார்சவேர் 239 ம் பக்கம். |



Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | பிறித்தனிவாகடபதார்த்தங்கள். |
| --- | --- |
| கேபாளஜின்செங்கிழங்கு 118ம் பக்கம் | |
| †அழுத்தஸ்மைலச்சுப்பூடு, †தடுக்கிலைஸ்மைலச்சுப்பூடு, †மலைத்தாமரை, (கிழங்கு) 240 ம் ப. = | சார்சவேர் 239 ம் பக்கம். |

## கிருமிகோல்லிகள். Anthelmintics.

### வாகடசரக்குகள்.

| | |
| --- | --- |
| இந்துமக்கிமரம், மூக்கிமரம் (பிசினிராளம்) 38 ம் பக்கம். = | சியாம்மக்கி 37 ம் பக்கம். |
| * கமாலம், (மா) 214 ம் பக்கம். = | குசோ 91 ம் பச்கம். ஆண்வீலிஸ்பூடு 270 ம் பக்கம். |
| பூனைக்காலி, (மயிர்) 81 ம் பக்கம். | |
| * மாதளை (வேர்ப்பட்டை) 102 ம்பக்கம். = | ஆண்வீலிஸ்பூடு 270 ம் பக்கம். |

### அவாகடசரக்குகள்.

| | |
| --- | --- |
| எழிலைப்பாலை, (பட்டை) 147 ம் பக்கம். | |
| பாக்கு, 261 ம் பக்கம். | |
| † ஆடுதின்னாப்பாலை, (பால்) 211 ம் பக். = | குவசி 58 ம் பக்கம், |
| அஸ்கிலீபிக்குறசாவிகப்பூடு, (இலைச்சாறு) 153 ம் பக்கம். | |
| † வேப்பெண்ணெய் 62 ம் பக்கம். | |
| † முருக்கு, (விதை) 81 ம் பக்கம். † பப்பளிச்செடி (பழச்சாறு) 107 ம் பக்கம். = | சந்துனின் 132 ம் பக்கம். |
| கைப்புக்கிலுறடென், 175 ம் பக்கம். | |
| பூசணி, (கொட்டை) 106 ம் பக்கம். | |
| கும்பை 128 ம் பக்கம். | |
| † மணற்கீரை, 195 ம் பக்கம். | |
| கசப்புவெட்பாலை, கிணைக்குளப்பாலை, (விரை) 148ம், 149 ம் பக்கம். | |
| † மாங்கொட்டை, 68 ம் பக்கம். = | சந்துனின் 132 ம் பக்கம். |
| †பிரமதேசக்கறப்புவாணிஷ்மரம், 69ம் பக். | |
| மலைவேம்பு, (வேர்ப்பட்டை) 63 ம் பக்கம். | |
| பாம்புச்சைலம், (வேர்) 150 ம் பக்கம். | |
| சீமையழவணை, (விதை) 56 ம் பக்கம். | |
| † புழுக்கொல் பிரமாம்பி, 270 ம் பக்கம். | |
| ரங்கூன்மல்லி 99 ம் பக்கம். | |
| † காட்டுச்சீரகம், (விதை) 136 ம் பக்கம். = | சந்துனின் 132 ம் பக்கம். |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துபதார்த்தங்கள். | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|

## பாம்புகடி முதலியவற்றிற்கு மாற்றுகள்.
## Antidotes to snake bites &c.

### அவாகடசாக்தகள்.

காயுருவி, (பூந்தளிர்) 196 ம் பக்கம்.
† ஈசுரமூலி, (இலை) 210 ம் பக்கம்.
பிருகந்திவலிச்சிச்செடி,(சமூலம்) 211 ம் ப.
உத்தமாகாணி, (சமூலம்) 153 ம் பக்கம்.
அயப்பனை, (சமூலம்) 137 ம் பக்கம்.
இலைக்கள்ளி, (வேர்) 216 ம் பக்கம்.
சிறுகுறிஞ்சா, (சமூலம்) 154 ம் பக்கம்.
சொறிலுகஸ்பூடு, (சமூலம்) 180 ம் பக்கம்.
செண்டுநொதோனி, (தாளின்சாறு) 137ம் ப.
† கிரிபுரண்டான், (சமூலம்) 129 ம் பக்கம்.
பாம்புச்சைலம், 150 ம் பக்கம்.
களர்வா, (களி) 182 ம் பக்கம்.
பாம்பெட்டிச்செடி, (சிராய்) 156 ம் பக்கம்.
இந்துத்திரிகுடெஸ்மப்பூடு, 168ம் பக்கம்.

[குறிப்பு —இவ் வகுப்பைச் சேர்ந்த பதார்த்தங்களுக்கு பிறித்தனிபார்மகுபீயத்தில் சரியான பதில்இல்லை. ஈசுரமூலிஎன்ற ஒன்றைத் தவிர மற்றவைகள் விசேஷமானவைகளல்ல. அவையெல்லாம் செயலில் அமோனநீருக்கும் அலக்கால் ஸ்திமூலங்களுக்கும் குறைந்தவைகள்.]

## அந்திபிருடிகள். சுரக்கினிகள்.
## Antiperiodics and Feprifuges.

### வாகடசாக்தகள்.

அதிவிடயம், (வேர்) 11 ம் பக்கம்.
ஏழிலைப்பாலை, (பட்டை) 147 ம் பக்கம்.
வேம்பு, (பட்டை) 61 ம் பக்கம்.
இந்துபாபெரி, (வேர்ப்பட்டை) 19 ம் பக்.
களற்சி, (கொட்டை) 76 ம் பக்கம்.
கசகசா, (கிரிஸ்தற்சத்தாகிய காகுதின்) 21 ம் பக்கம்.
* மிளகு, 218 ம் பக்கம்.
சேம்மரம், (பட்டை) 63 ம் பக்கம்.
காஞ்சிரம், (கொட்டையும் அதின் அல்கலைவமாகிய ஸ்திரிக்கினியும்) 154ம் பக்கம்.
மிளகரணை, (வேர்ப்பட்டை) 55 ம் பக்கம்.

இப்பதார்த்தங்கள் பத்தும் சின்கனப் பட்டைக்கும் அதின் அல்கலைவங்களுக்கும் பதிலாக வழங்கப்படும். இவைகளிலொன்றும் அவைகளைப்போலச் சத்துள்ளதல்லதாயினும் மிகுதியானவைகள் நச்சுக்காற்றுக்காரணமாயுண்டாகும் தடவையான சுரங்களைக் குறைக்கவாவது போக்கடிக்கவாவது கூடும்.

### அவாகடசாக்தகள்.

வசம்பு, (வேர்த்தண்டு) 261 ம் பக்கம்.

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | பிறித்தனிவாகடபதார்த்தங்கள். |
| --- | --- |
| பப்பரப்புளி, (பட்டை) 44 ம் பக்கம். | |
| பெருமருந்து, (வேர்) 210 ம் பக்கம். = | சேபந்தாரிவேர் 209 ம் பக்கம். |
| ஆடுதின்னாப்பாலை, (வேர்) 211 ம் பக்கம். | |
| † சூமக்கு, (வேற்று) 87 ம் பக்கம். | |
| † தாணுமரம், (பட்டை) 64 ம் பக்கம். | |
| கைப்புக்கிலிறுடென்செடி,[1] (சாறு) 175ம் ப. | |
| கோவன்கறுடவிஸ்கிழங்கு[2] (கிரிஸ்தலித்தசத்து) 30 ம் பக்கம். | |
| வெட்டிலையுறுகோமமரம் (வேர்) 58 ம் ப. | |
| வாசனைவகிரியமரம் (பட்டை) 157 ம் ப. | |
| பேயத்தி (பட்டை) 228 ம் பக்கம். | |
| கிலச்செனியுஸ்போறப்பூடு 180 ம் பக்க. | |
| † குளப்பாலை (பட்டை) 149 ம் பக்கம். = | சின்கனபட்டை. |
| † உயர்சின்கனப்(பட்டை) 127ம் பக்கம். = | சின்கனபட்டை. |
| கருவொச்சி (சமூலம்) 173 ம் பக்கம். | |
| கடுகுரோகணி 171 ம் பக்கம். | |
| சம்பங்கிமரம் (பட்டை) 14 ம் பக்கம். | |
| வட்டவிலைச்சால்மரம் (பட்டை) 146 ம் பக்கம். | |
| சித்திரமூலம் (வேர்) 180 ம் பக்கம். | |
| அழகுரோயிற்பூடு (சமூலம்) 180 ம் பக்கம். | |
| ஆற்றுப்பாலை (பட்டை) 225 ம் பக்கம். | |
| பாம்பெட்டிச்செடி (கிராய்) 156 ம் பக். | |
| † வெள்ளலரி (பட்டை) 149 ம் பக்கம். | |

## அந்திஸ்காபுடிகள். Antiscorbuties.

| | |
| --- | --- |
| **வாகடசாக்துகள்.** | |
| எலுமிச்சை (பழச்சாறு) 53 ம் பக்கம். = | சம்பச்சாறு. |
| **அவாகடசாக்துகள்.** | |
| விளாத்தி (பழம்) 50 ம் பக்கம். | |
| கதலிவாழை (பழம்) 245 ம் பக்கம். | |
| நெல்லி (கனி) 216 ம் பக்கம். | |

## அந்திஸ்பஸ்மடிகள். Antispasmodies.

| | |
| --- | --- |
| **வாகடசாக்குகள்.** | |
| காமாக்ஷிப்புல் (அத்திரதேல்) 268 ம் பக். = | கயபுட்டேல். |

1 Clerodendron. 2 Corydalis govaniana.

Digitized By Roja Muthiah Research Library

| இந்துபதார்த்தங்கள். | | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|---|
| * கஞ்சா, (பூக்குங்கிளை) 227 ம் பக்கம். | | |
| ஓமம் (கனியும்அத்திரதேலும்) 109ம் பக். | = | லவந்தர்தேல், பெப்பமிந்து தேல், அணீதத்தேல், கறு வித்தேல் முதலியன. |
| வெள்ளூமத்தை கரூவூமத்தை (இலையும் விதையும்) 187 ம் பக்கம். | = | ஸ்திருமுனி 135 ம் பக்கம். பெலடனம் 182 ம் பக்கம். |
| * இங்குப்பூடு(பிசினிராளம்) 112 ம் பக். (பெருங்காயம்*) | | |
| * தபாக்கப்பூடு(இலை) 190 ம் பக்கம். | | |
| * சசகசா (இறுகினசாறு) 21 ம் பக்கம். | = | சிமிர்ணஅவின், துருக்கைஅவின் 22 ம் பக்கம். |
| **அவாகடசாக்துகள்,** | | |
| மாசிபத்திரி (சமூலம்) 136 ம் பக்கம். | | |
| பிளுமீயபல்சப்பூடு (சமூலம்) 138 ம் பக். | | |
| பலவிலைத்திரககந்திப்பூடு (சமூலம்) 262 ம் பக்கம். | | |
| † இலைக்கள்ளி (இலைச்சாறு) 216 ம் பக். | = | லொபீலி 138 ம் பக்கம். |
| † கும்பை (ராளம்) 128 ம் பக்கம். | | |
| வேளை (சமூலம்) 32 ம் பக்கம். | | |
| † மலைஅயசீயமஸ்பூடு (சமூலம்) 192 ம் பக். | | |
| † ஆடாதோடை (இறுகினசாறு) 173ம் ப. | | |
| லொபீலிகிகுதிப்பூடு (சமூலம்) 140 ம் ப. | | |
| † ஜடாமாசி (வேர்) 130 ம் பக்கம் இமயவலீரியன்பூடு (வேர்) 130 ம் பக். | = | வலீரியன் 129 ம் பக்கம். சம்புற்கிழங்கு 116ம் பக்கம். |
| காவிப்பூனை (புனுகு) 299 ம் பக்கம். | = | கஸ்தூரி 293 ம் பக்கம். |

## துவர்கள். Astringents.

| | | |
|---|---|---|
| **வாகடசாக்துகள்.** | | |
| வொதலை 71 ம் பக்கம். | = | செங்காசுக்கட்டி 127ம் பக். |
| * வில்வம் (பழம்) 54 ம் பக்கம். | | |
| முருக்கமரம் (இறுகினசாறு) 81 ம் பக்க. | = | கினு 78 ம் பக்கம். |
| தம்பிலிக்காய் (இறுகினசாறு) 142 ம் ப. | = | காசுக்கட்டி 71 ம் பக்கம். |
| * வேங்கைமரம் (இறுகினசாறு) 78 ம் ப. | | |
| மாதளை (பழத்தோல்) 102 ம் பக்கம். | = | குவேகஸ்பட்டை 221 ம் பக். |
| **அவாகடசாக்துகள்.** | | |
| † கருவேலும் அதின் இனமும் (பட்டை) 85 ம் பக்கம். | = | குவேகஸ்பட்டை 221 ம் பக். |

* பெருங்காயத்தை இந்துச்சரக்கென்று சந்தேகமாய் வருத்திருந்தாலும் நயந்தபெருங்காயம் இந்துதேசமடங்கலும் கடைகளில்உண்டு.

Digitized By Roja Muthiah Research Library

| இந்தப்பதார்த்தங்கள். | | பிறித்தனிவாகடபதார்த்தங்கள். |
|---|---|---|
| † கமுகு 261 ம் பக்கம். (கொட்டையினிறுகிய சாறு.) | = | காசுக்கட்டி 127 ம் பக்கம். |
| † சூமக்கு (நெற்று) 87 ம் பக்கம். | | |
| † வத்தேக்கு (சிராய்) 87 ம் பக்கம். | = | எமதக்கிலசிராய் 76 ம் பக்கம். |
| சவுக்குமரம் (பட்டை) 58 ம் பக்கம். | | |
| † ஆவிரை (பட்டை) 86 ம் பக்கம். | = | குவேகஸ்பட்டை 221 ம் பக்க. |
| நடுக்கிலைகறுவிலி (பட்டை) 168 ம் பக். | | |
| † செம்பிசின்மரம் (பிசின்) 78 ம் பக்கம். | = | கீனு 78 ம் பக்கம். |
| விளாத்தி (காய்) 56 ம் பக்கம். | = | வில்வம்பழம் 54 ம் பக்கம். |
| † மங்குஸ்தீன் மரம் (பழத்தோல்) 39 ம் ப. | | |
| † கசப்புவெட்பாலை, † சுணைக்குளப்பாலை (பட்டையும் கொட்டையும், 149 ம் ப.) | | |
| மருதோன்றி (இலை) 95 ம் பக்கம். | | |
| மாமரம் (கொட்டை) 68 ம் பக்கம். | | |
| மூச்செரசு (பிசின்) 43 ம் பக்கம். | | |
| நதி (பட்டை) 69 ம் பக்கம். | | |
| கெல்லி (கனியின்வற்றல்) 216 ம் பக்கம். | = | ஒக்மாசக்காய். |
| கெல்லி (சிராயின் எசிறுத்து) 216 ம் பக். | = | காசுக்கட்டி. |
| கிஞ்சக்பிஸ்தகி மரம் (அதின் மாசக்காய்) 67 ம் பக்கம். | = | ஒக்மாசக்காய் |
| வெள்ளைக்கொய்யா, சிவப்புக்கொய்யா (பட்டை) 102 ம் பக்கம். | | |
| சர்க்கடகசிங்கி 67 ம் பக்கம். | = | ஒக்மாசக்காய் |
| நாகம் (பட்டை) 102 ம் பக்கம். | | |
| புளியமரம் (கொட்டை) அனுபந்தம் No. 29. | | |
| சிறுசவுக்குமரம், சிவப்பாற்றுச் சவுக்குமரம் (மாசக்காய்) 37 ம் பக்கம். கடுமரம் (பழமும்மாசக்காயும்) 98 ம் ப. | = | ஒக்மாசக்காய், |
| கறுப்புமருதமரம் (பட்டை) 99 ம் பக்க. | | |

காமினதிகள், ஸ்தோமாகிகள். Carminatives and stomachics.

| வாகடசரக்குகள். | | |
|---|---|---|
| காமாக்ஷிப்புல்லும் அதின் இனங்களும் (அத்திரதேல்) 268 ம் பக்கம். | = | கயபுட்டேல் 100 ம் பக்கம். |
| சதகுப்பி, சோயிக்கீரை (பழம்) 111 ம் பக்கம். | = | அணீதம் 111 ம் பக்கம். |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | | பிரித்தனிவாகடபதார்த்தங்கள். |
|---|---|---|
| ஓமம் 109 ம் பக்கம். | = | கறுவி 108 ம் பக்கம். மல்லி 111 ம் பக்கம். அணீசு, அணீதர் முதலியன ஓமத்தின் அத்திரதேலம்,பெப்பமிந்து முதலிய அத்திரதேல்களுக்கு நல்ல பதிலாகும். |
| * இலவங்கமரம், (பூவரும்பாகிய கராம்பு) 100 ம் பக்கம். | = | பிமெந்தம். 101 ம் பக்கம். |
| * மலையாள ஏலம் (கனி) 242 ம் பக்கம். | | |
| பெருஞ்சீரகம் 110 ம் பக்கம். | = | பெருஞ்சீரகம் 110 ம் பக்கம். |
| * ஜடமரம் (சாதிக்காய்என்னுங்கொட்டை) 201 ம் பக்கம். | | |
| * மிளகுக்கொடி (காய்) 218 ம் பக்கம். | | |
| * இஞ்சிப்பூடு (வேர்த்தண்டு) 241 ம் பக். | | |
| **அவாகடசரக்குகள்.** | | |
| † வசம்புப்பூடு (வேர்த்தண்டு) 261 ம் பக். | | |
| அசைவல்பீனியப்பூடும் அதின் வேறினங்களும் (வேர்த்தண்டு) 244 ம் பக்கம். | | |
| வங்காள ஏலம் (காய்) 245 ம் பக்கம். மலாயு ஏலம் (காய்) 245 ம் பக்கம். | = | மலையாள ஏலம். |
| † பேய்மருட்டி (இலை) 179 ம் பக்கம். | | |
| † அனிசுமெலிசொவாதப்பூடு (சமூலமாவது அத்திரதேலமாவது) 179 ம் பக்கம். | | |
| மாசிபத்திரி (சமூலம்) 136 ம் பக்கம். | | |
| பிளுமீயபல்சப்பூடு 138 ம் பக்கம். | | |
| அசமதாகம் (பழம்) 118 ம் பக்கம். | = | கறுவி 108 ம் பக்கம். |
| வெற்றிலைக்கொடி (இலைச்சாறு) 220 ம் பக்கம். | | |
| சாப்புச்செடி (பழம்) 221 ம் பக்கம். திப்பிலி (பழம்) 220 ம் பக்கம். | = | மிளகு 218 ம் பக்கம். |
| சாமந்திப்பூடு (பூ) 138 ம் பக்கம். | = | அந்திமிஸ்பூ 131 ம் பக்கம். |
| காட்டுக்கறுவாமரம் இலங்கைக்கறுவாமரம் { உட்பட்டை 207 ம் பக்கம். | = | கறுவாப்பட்டை 206 ம் பக். |
| தமாலக்கறுவாமரம், யுகலிப்தடுக்கறுவாமரம் என்னும் தாளிசம் (இலை) 207 ம் பக்கம். | | |
| சுகந்தகொலீயஸ்பூடு (சாறு) 179 ம் பக். | | |
| வில்வம் (இலை) 54 ம் பக்கம். | | |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | | பிறித்தனிவாகடபதார்த்தங்கள். |
|---|---|---|
| பாவிஞ்சி<br>கஸ்தூரிமஞ்சள்<br>கிச்சிலிக்கிழங்கு } வேர்த்தண்டு 244 ம் பக்கம்.<br>சீரகம் 118 ம் பக்கம்.<br>முத்தகாசு<br>கோரை } (கிழங்கு) 263 ம் பக்கம்.<br>அயப்பனை (சமூலம்) 137 ம் பக்கம்.<br>வினாத்தி (இலை) 56 ம் பக்கம்.<br>இமயமலைக்கிச்சிலிப்பூடு (வேர்) 245 ம் பக்கம்.<br>கச்சோலப்பூடு<br>கெம்வேரியப்பூடு } (கிழங்கு) 215 ம் பக். | = | மல்லி 111 ம் பக்கம். அணிதம் 111 ம் பக்கம். |
| † இந்துப்பெப்பமிந்துப்பூடு (சமூலம்) 179 ம் பக்கம். | = | பெப்பமிந்து |
| கருவேம்பு (இலையும் பட்டையும்) 57 ம் பக்கம்.<br>கருஞ்சீரகப்பூடு (பழம்) 13 ம் பக்கம்.<br>கண்டங்கத்தரி (சமூலம்) 192 ம் பக்கம்.<br>காட்டுச்சீரகப்பூடு (கொட்டை) 136 ம் ப.<br>புனிர்ச்செடி (பழவற்றல்) 193 ம் பக்கம்<br>அமுக்கிராச்செடி (கிழங்கு) 193 ம் பக்.<br>சந்தச்சைலவலாதமரம்<br>சந்தச்சைலகஸ்திலிமரம்<br>சந்தச்சைலபுடுங்கமரம் } (பழம்) 56 ம் பக்கம். | | |
| சுகமுளுவிஞ்சி<br>செரும்பெற்றிஞ்சி } (வேர்த்தண்டு) 242ம் பக்கம். | = | இஞ்சி 241 ம் பக்கம். |

## திமல்சங்கள். இமாலியங்கள்.
## Demulcents and Emollients.

| வாகடசரக்குகள். | | |
|---|---|---|
| குன்றிமணி (வேர்) 82 ம் பக்கம். | = | அதிமதுரவேர், |
| இலங்கைக்கடற்பாசி 273 ம் பக்கம். | | |
| வண்டுக்காய் 42 ம் பக்கம். | | |
| நெற்பயிர் (அரிசி) 267 ம் பக்கம். | = | வாற்கோதுமையரிசி 266 ம் ப. |
| நெற்பயிர் (அரிசிமா) 267 ம் பக்கம். | = | கோதுமைமா 266 ம் பக்கம். |
| இஸ்பகூற்பூடு (விரை) 194 ம் பக்கம். | | |
| **அவாகடச்சரக்குகள்.** | | |
| முட்கீரை (இலை) 195 ம் பக்கம். | | |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|---|
| எலெமிமரம் (பருப்பு) 59 ம் பக்கம். | = | தேன்வாதுமை 91 ம் பக்கம். |
| காக்கணங்கொடி (வேர்ப்பட்டை)88 ம் ப. | | |
| சிறுநறுவிலி } (பழவற்றல்) 168 ம் பக்கம். <br> பெரியநறுவிலி } | = | புரூணம் 94 ம் பக்கம். |
| நிலப்பனை (கிழங்கு) 247 ம் பக்கம். | | |
| நிலக்குமிழ் (இலை) 175 ம் பக்கம். | | |
| மயிர்த்துளசி } (விதை) 179 ம் பக். <br> எலுமிச்சந்துளசி } | | |
| † பெருநெருஞ்சி(பூடும்விதையும்) 162 ம் ப. | | |
| குவிஞ்சு (விதை) 94 ம் பக்கம். | | |
| சவீர்மூஸ்லிக்கிழங்கு 247 ம் பக்கம். | | |
| எள்ளு (இலை) 161 ம் பக்கம். | | |
| †இந்துவாதுமை (பருப்பு) 98 ம் பக்கம். | = | தேன்வாதுமை 91 ம் பக்கம். |
| தேட்கொடுக்கி (இலை) 169 ம் பக்கம். | | |
| இந்துத்திரிகுடெஸ்மம்(சமூலம்) 168ம் ப. | | |

## திரளெண்ணெய்கள். Fixed oils.

| | | |
|---|---|---|
| **வாகடசரக்குகள்.** | | |
| வேர்க்கடலை(பருப்பின்தேலம்) 82 ம் ப. | = | ஒலீவதேலம் 144 ம் பக்கம். |
| கோகமரம் (கொட்டைநெய்) 38 ம் பக். | = | தியுபுரோமதேல் 44 ம் பக்கம். |
| **அவாகடசரக்குகள்.** | | |
| † நாட்டக்ரோடுக்கொட்டை (தேலம்) 215 ம் பக்கம். | = | லீனத்தேலம் 45 ம் பக்கம். |
| காட்டுமுந்திரி (கொட்டையின் தேலம்) 68 ம் பக்கம். | | |
| † புல்வமரம் (கொட்டையின்நெய்) 141 ம் பக்கம். | = | தியுபுரோமதேல் 44 ம் பக்கம். |
| காட்டிருப்பை(பருப்பின்நெய்) } 141ம் ப. <br> இலுப்பை (பருப்பின்நெய்) } | | |
| புன்னை (பருப்பின்தேலம்) 39 ம் பக்கம். | | |
| எலெமிமரம் (பருப்பின்தேலம்) 59 ம் ப. | = | வாதுமைத்தேல் 92 ம் பக்கம்; |
| தென்னமரம்(விதையின்தேலம்)259 ம் ப. | | |
| முருங்கைமரம்(விதையின்தேலம்)69 ம்ப. | | |
| † எள்ளுப்பூடு (விதையின்தேலம்) 161 ப. | = | ஒலீவுதேல் 144 ம் பக்கம். |
| † இந்துவாதுமைமரம் (பருப்பின்தேலம்) 98 ம் பக்கம். | = | வாதுமைத்தேல் 92 ம் பக்கம். |



Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|
| **பிசின்கள், Gums.** | |
| **அவாகடசரக்குகள்.** | |
| கருவேல் (பிசின்) 85 ம் பக்கம். | |
| பிய்வேல் (பிசின்) 85 ம் பக்கம். | |
| லெபக்ககசிமரம் (பிசின்) 85 ம் பக்கம். | |
| காட்டுமுந்திரி (பிசின்) 68 ம் பக்கம். | |
| தணகுமரம் (பிசின்) 34 ம் பக்கம். = | திரககந்துப்பிசின் 83 ம் பக்கம். |
| விளாத்தி (பிசின்) 56 ம் பக்கம். = | அகசிப்பிசின் 70 ம் பக்கம். |
| ஒதியமரம் (பிசின்) 69 ம் பக்கம். | |
| **தியவுறீசிகள். சுடரீவிகள். Diaphoretics and Sudorifics.** | |
| **வாகடசரக்குகள்.** | |
| காமாக்ஷிப்புல்லும் அதின் இனங்களும் (அத்திரதேல்) 268 ம் பக்கம். = | கயபுட்டேல் 100 ம் பக்கம். |
| இந்துபாபெரியும் அதின்இனங்களும் (வேர்ப்பட்டை) 19 ம் பக்கம். | |
| பேரெருக்கு, சிற்றெருக்கு (வேர்ப்பட்டை) 161 ம் ப. = | இபிகாக்கு 125 ம் பக்கம். |
| விஷமூங்கில் (கிழங்கு) 246 ம் பக்கம். | |
| * நன்னாரி (வேர்) 151 ம் பக்கம். | |
| * கசகசா (இறுகினசாறு) 21 ம் பக்கம். = | சிமிர்ணா, துருக்கிஅவின் 22ம்ப. |
| குறிஞ்சா (இலை) 152 ம் பக்கம். = | இபிகாக்கு 125 ம் பக்கம், |
| * இஞ்சிப்பூடு (வேர்த்தண்டு) 241 ம் பக். | |
| **அவாகடசரக்குகள்.** | |
| வசம்புப்பூடு (வேர்த்தண்டு) 261 ம் பக்க. | |
| இலாமிச்சம்புல் (வேர்) 259ம் பக்கம். | |
| † கர்ப்பூரவள்ளி (முழுப்பூடும்) 180 ம் ப. | |
| † பேய்மருட்டி, † அனிசுமேலிசோவாதப்பூடு (இலை) 179 ம் ப. | |
| பிளுமீயபல்சப்பூடு (சமூலம்) 138 ம் ப. | |
| ‡ வாலுளுவைச்செடி (விதையின்தேலம்) 64 ம் பக்கம். | |
| முத்தகாசு, கோரை (கிழங்கு) 263 ம் பக்கம். | |
| அயப்பனை (முழுப்பூடும்) 137 ம் பக்கம். | |
| கருநொச்சி (முழுப்பூடும்) 173 ம் பக்க. | |
| ஸ்திரோபிலிபெரியாண்டப்பூடு (இலை) 180 ம் பக்கம், | |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|
| முருங்கை (வேர்) 69 ம் பக்கம். = | அமுருசி 30 ம் பக்கம். |
| திருநீற்றுப்பச்சை } துளசி } (இலை) 178 ம் பக். | |
| † சித்திரமூலம் (வேர்) 180 ம் பக்கம். | |
| அத்தித்திப்பிலி (பழம்) 262 ம் பக்கம். | |

## தியுறீசங்கள். Diuretics.

| | |
|---|---|
| **வாகடசாரக்துகள்.** | |
| * பரைரக்கொடி (வேர்) 15 ம் பக்கம். | |
| விஷமூங்கில் (கிழங்கு) 246 ம் பக்கம். = | ஸ்குவில் 252 ம் பக்கம். |
| கர்ச்சமரம் (ரானதேலம்) 40 ம் பக்கம். = | கபேவம். 72 ம் பக்கம். |
| * நன்னாரி (வேர்) 151 ம் பக்கம். | |
| **அவாகடசாரக்துகள்.** | |
| † நாயுருவி (இலை) 196 ம் பக்கம். | |
| திரூலிக்கள்ளி (இறுகினபால்) 216 ம் ப. | |
| நீர்ப்பிரமி(முழுப்பூடும்) 171 ம் பக்கம். | |
| வண்டைச்செடி (காய்) 42 ம் பக்கம். | |
| † நீர்முள்ளி (சமூலம்) 173 ம் பக்கம். | |
| † சிறுநரிவெங்காயம்(கிழங்கு)254 ம் ப. = | ஸ்குவில் 252 ம் பக்கம். |
| பேய்ப்பீர்க்கம் (முழுப்பூடும்)106 ம் பக். | |
| † முருங்கை (வேர்) 69 ம் பக்கம். = | அமுருசி 30 ம் பக்கம். |
| வட்டுக்கற்பாசி 273 ம் பக்கம். | |
| † பெருநெருஞ்சி (முழுப்பூடும்) 162 ம் ப. | |
| கீழ்காய்நெல்லி (முழுப்பூடும்) 217 ம் பக். | |
| சிவப்புநெல்லி (முழுப்பூடும்) 217 ம் பக். | |
| † சந்தனக்கட்டை (அத்திரஎண்ணெய்) 208 ம் பக்கம். } = | கபேவம் 72 ம் பக்கம். |
| கண்டங்கத்தரி } கறுப்புமணத்தக்காளி } (முழுப்பூடும்) 192 பக்கம். | |
| நெருஞ்சி (பழம்) 47 ம் பக்கம். | |
| நரிவெங்காயம் (கிழங்கு) 253 ம் பக்கம். = | ஸ்குவில் 252 ம் பக்கம். |
| அமுக்கிரா (கிழங்கு) 193 ம் பக்கம். | |

## வமனிகள். Emetics.

| | |
|---|---|
| **வாகடசாரக்துகள்.** | |
| பேரெருக்கு } சிற்றெருக்கு } (வேர்பபட்டை) 151ம் பக்கம். } = | இபிகாக்கு 125 ம் பக்கம். |

Digitized By Roja Muthiah Research Library

| இந்துப்பதார்த்தங்கள். | | பிறித்தனிவாகட பதார்த்தங்கள். |
|---|---|---|
| விஷமூங்கில் (கிழங்கு) 246 ம் பக்கம். | = | ஸ்குவில். 252 ம் பக்கம். |
| இந்துக்கடுகு 32 ம் பக்கம். | = | வெண்கடுகு, கருங்கடுகு, 31 ம் பக்கம். |
| குறிஞ்சா (இலை) 152 ம் பக்கம். | = | இபிகாக்கு 125 ம் பக்கம். |
| **அவாகட சரக்குகள்.** | | |
| † குப்பைமேனி (சாறு) 217 ம் பக்கம். | | |
| காட்டிலுப்பை, இலுப்பை (அரைப்பு) 41 ம் பக். | | |
| † பேயத்திமரம் (பழமும்விதையும்) 228 ம் பக்கம். | | |
| † சிறியபேயத்தி (பழமுங்கொட்டையும்) 229 ம் பக்கம். | | |
| † சிறுநரிவெங்காயம் 254 ம் பக்கம். | = | ஸ்குவில் 252 ம் பக்கம். |
| மருக்காளஞ்செடி (காய்) 128 ம் பக்கம். | | |
| செகமோனிச்செடி (சமூலம்) 153 ம் பக். | | |
